நூல் தேட்டம் 12

என். செல்வராஜா

அயோத்தி நூலக சேவைகள் &
குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் தேட்டம்

[தொகுதி 12]

தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பெற்ற
ஈழத்துத் தமிழ் நூல்கள் பற்றிய குறிப்புரையுடனான
நூல் விபரப்பட்டியல்

என். செல்வராஜா

வெளியீடு
அயோத்தி நூலக சேவைகள்
&
குமரன் புத்தக இல்லம்
ஓகஸ்ட் 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் தலைப்பு	-	நூல் தேட்டம் (தொகுதி 12)
ஆசிரியர்	-	என். செல்வராஜா
பதிப்பு	-	முதற்பதிப்பு, 15 ஓகஸ்ட் 2018
வெளியீடு	-	அயோத்தி நூலக சேவைகள், ஐக்கிய இராச்சியம் & குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை
அச்சுப்பதிப்பு	-	குமரன் அச்சகம், கொழும்பு - 06
அட்டை வடிவமைப்பு	-	செல்வராஜா கௌதமன்
சர்வதேச தராதர நூல் பதிவெண்	-	ISBN 978-955-659-594-9
பக்கங்கள்	-	596 + xx
பதிப்புரிமை ©	-	என். செல்வராஜா, 2018
குமரன் வெ.எண்	-	782

Title	-	Nool Thettam (Volume 12) An Annotated Bibliography of 1000 Published Writings in Tamil Language by Sri Lankan Tamils, Home and Abroad.
Compiler	-	N. Selvarajah
Edition	-	First Edition, 15, August 2018
Publishers	-	Ayothy Library Services (48, Hallwicks Road, Luton, Beds, LU2 9BH, United Kingdom) and Kumaran Book House (39, 36th Lane, Colombo - 06, Sri Lanka, E.mail: kumbhlk@gmail.com)
Printers	-	Kumaran Press (Pvt) Ltd. (39, 36th Lane, Colombo - 06, Sri Lanka, Tel.: 011 2364550)
Cover Design	-	Selvarajah Gauthaman
ISBN	-	978-955-659-594-9
Pages	-	596 + xx
Price	-	£ 15.00, Euro 20.00, SLRs 2000.00

© Copyright 2018 by N.Selvarajah

All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிக்கை

திருமதி சிவபாக்கியம் நடராஜா

"தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரியக் கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திடக்கூடும்"
- கவிஞர் வைரமுத்து -

எமதன்னையின் பிறந்ததின நூற்றாண்டு

15.08.1918 - 15.8.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

நூல்தேட்டத்தின் பன்னிரண்டாவது தொகுதியை உங்கள் கரங்களில் இன்று கையளிப்பதற்குத் தோன்றாத் துணையாக இருந்த அனைவருக்கும் முதலில் நன்றிகூறுவது என் தலையாய பணியாகும்.

நூல்தேட்டம் அன்று என் மனதில் கருக்கொண்ட வேளை, தன் பல்கலைக்கழக வாழ்வின் நெருக்கடிகளுக்குள்ளும் ஓடித்திரிந்து நூல்களைத் தேடித்தந்து என்னை ஆர்வத்துடன் செயற்படவைத்து மகிழ்ந்துவிட்டு இன்று எம்மிடையே இல்லாது இளமையிலேயே காலன் வசப்பட்டு, என்றும் இளமையாக எங்கள் மனதில் நிலை கொண்டுவிட்ட எம் இனிய மருமகள் சுகந்தியையே எப்பொழுதும் முதலில் நினைவுகூர்வதுண்டு.

நான் லண்டனிலிருந்து கொழும்புக்கு வரும் வேளைகளிலெல்லாம் என்னைப் பராமரித்து, இருப்பிடம் வழங்கி, உணவூட்டி வழியனுப்பிவைப்பதுடன், இலங்கையில் வெளியாகும் நூல்களைப் பற்றிய பத்திரிகைச் செய்திகளைத் தேடிச்சேர்த்து, காலத்துக்குக்காலம் அவற்றை என் பார்வைக்கு அனுப்பிவைக்கும் அன்புச் சகோதரி திருமதி ஜீவராணி ராஜாராம் அவர்களுக்கும் அவர்களின் ஏகபுதல்வன் மாதவனுக்கும் எனது அன்பு கலந்த நன்றிகள்.

பன்னிரண்டாவது தொகுதிக்கான தேடலில் இறங்கியிருந்த வேளையில் தமது நூற்சேர்க்கையைப் பார்வையிட மனமுவந்து அனுமதியளித்தவர்கள், தமது நூல்களை பதிவின்பொருட்டு, அன்பளிப்பாக வழங்கியவர்கள், எனது பணிகள் பற்றிய கட்டுரைகளை எழுதி தாயக, புகலிட ஊடகங்களில் பதிவாக்கியவர்கள், எழுத்தாளர்களுடனான ஒன்றுகூடல்களை தன்னார்வ முனைப்புடன் ஒழுங்கு செய்தவர்கள் என்று இப்பட்டியல் நீளும். சிலரின் பெயர்கள் தவறுதலாக விடுபட்டி ருக்கலாம். மனதில் நிலைத்தவர்களை முடிந்தவரையில் இங்கு மீட்டிருக்கின்றேன்.

பதினொராவது தொகுதியை உரியகாலத்தில் அழகுற அச்சிட்டுத் தந்ததுடன், அத்தொகுதியை இலங்கையில் பரவலாக அறிமுகம் செய்யும் பொறுப்பினையும் கொழும்பு, குமரன் புத்தக இல்ல அதிபர் கணேசலிங்கம் குமரன் ஏற்றிருந்தார். பன்னிரண்டாவது தொகுதியையும் அச்சேற்றி விநியோகித்துத் தரும் பொறுப்பினையும் அவரே ஏற்றிருக்கிறார். அவருக்கு என் நன்றி.

பன்னிரண்டாவது தொகுதிக்கான நூல்தேடலுக்கான எனது இலங்கைப் பயணத்தின் ஐந்து வாரங்கள் வரையில் தனியார் நூலகங்களிலும், பதிப்பகங்களிலும் தமிழ்ச் சேர்க்கைகளைப் பார்வையிட்டு அரிய பல ஈழத்து நூல்களைப் பதிவுசெய்ய முடிந்தது. கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தின் சேர்க்கைகளே இத்தொகுப்பில் முக்கிய இடம் வகிக்கின்றன.

என்னைத் தமது வளம் மிக்க நூலகத்தினைப் பயன்படுத்த அனுமதியளித்த சங்கத் தலைவரும் எழுத்தாளருமான தம்பு சிவா (த.சிவசுப்பிரமணியம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கும், பொதுச்செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களுக்கும் எனது நன்றிகள். என்னையும் தமது நூலகத்தில் மிக முக்கிய பயனாளியாகக் கொண்டாடி, எனது தேடலுக்கு மிகவும் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் பிரதிபலன் கருதாது நாள்தோறும் உதவிய கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகர் திருமதி எஸ்.சித்தார்த்தினிக்கும், அவரது குழுவினருக்கும் எனது உளம்கனிந்த நன்றிகள். நூலகத்தில் நான் இருந்த வேளைகளில், நூலக அலுவலர்களுடனான கலந்துரையாடலை ஒழுங்குசெய்து தாமும் அதில் கலந்து சிறப்பித்த நூலக ஆட்சிக் குழுவினருக்கும் எனது நன்றிகள்.

லண்டனில் தனிப்பட்டமுறையில் அக்கறையுடன் அவ்வப்போது தமிழ் வெளியீடுகளைத் திரட்டித் தந்துவரும் தியாகராஜா திபாகரன், அம்பலவாணர் மயூரன், தம்பிராஜா ஜெயபாலன் ஆகிய இளம் உள்ளங்களுக்கும் எனது நன்றிகள்.

தாயகத்திலும், புகலிடத்திலும் காலத்துக்குக் காலம் எனது நூல்தேட்டம் தொகுப்பு முயற்சிகளுக்கு ஆதரவான செய்திகளைப் பிரசுரித்தும், விமர்சனக் கட்டுரைகளை வெளியிட்டும் எனக்கு ஆதரவை வழங்கிவரும் சிறுசஞ்சிகை ஆசிரியர்களுக்கும், தேசிய, பிராந்தியப் பத்திரிகையாளர்களுக்கும் எனது நன்றிகள்.

எனது வாழ்வின் பெரும்பகுதி நேரத்தை விழுங்கிவிடும் நூல்தேட்டம் தொகுப்புக் கடமைகளின்போது எமது குடும்பச்சுமைகளை முழுமையாகத் தாங்கி என்னைச் சுதந்திரமாக இயங்கவிட்டதுடன் எனக்குத் துணையாகவிருந்து நூலாக்கக் கடமைகளிலும் முடிந்தவரை உதவிவரும் என் அன்புத் துணைவி விஜிக்கு நன்றி செலுத்தத் தவறினால் மிக முக்கியமான பதிவொன்றினை இங்கு மேற்கொள்ளத் தவறியவனாவேன். குடும்பத்தின் நிதி நிலைமையை மிகச் சிக்கனமாகக் கையாண்டு ஒவ்வொரு நூல்தேட்டம் தொகுதிக்கும் தேவையான மேலதிக நிதியை சேமித்து வழங்கும் இமாலயப்பணியும் இவருடையதாகும்.

இறுதியாக, நிறுவனரீதியான நிதியுதவிகள் ஆதரவுகள், எதுவுமின்றி, தனிமனித முயற்சியாக மேற்கொள்ளப்படும் இந்த ஆவணப்பதிவின் அவசியத்தையும், ஆழத்தையும் புரிந்துகொண்டு, இந்நூலைக் கொள்வனவுசெய்து எனது முயற்சியின் நிதிச் சுமையைக் குறைக்கும்வகையில் தங்களாலான பங்களிப்பை நல்கிவரும் இனிய தமிழ் உறவுகளுக்கு என் மனம் கனிந்த நன்றிகள். உங்கள் ஆதரவில் நம்பிக்கைவைத்து, நூல்தேட்டத்தின் பதின்மூன்றாவது தொகுதியுடன் 13000 நூல்களைப் பார்வையிட்டுப் பதிவுசெய்த மனத்திருப்தியுடன் விரைவில் உங்களைச் சந்திப்பேன் என்ற உறுதியுடன் விடைபெறுகிறேன்.

என்.செல்வராஜா
01.4.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

நூல்தேட்டம்

ஓர் அறிமுகம்

ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல்விபரப்பட்டியலான நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதி 2002இலும், இரண்டாவது தொகுதி 2004இலும், மூன்றாவது தொகுதி 2005இலும், நான்காவது தொகுதி 2006இலும், ஐந்தாவது தொகுதி 2008 இலும், ஆறாவது ஏழாவது தொகுதிகள் 2011இலும், எட்டாவது தொகுதி 2012இலும் ஒன்பதாவது தொகுதி 2014இலும், பத்தாவது தொகுதி 2015இலும், பதினொராவது தொகுதி 2017இலும் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியான பன்னிரண்டாவது தொகுதி இதுவாகும்.

இதில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களினதும், வெளியீட்டாளர்களினதும் ஆயிரம் நூல்கள் பற்றிய அடிப்படை நூலியல் குறிப்புகளும் அதனையடுத்து நூல், நுலாசிரியர் பற்றிய சிறு அறிமுகக் குறிப்பும் இடம்பெற்றுள்ளன. தொடர் இலக்கங்கள் முதலாவது தொகுதியிலிருந்து தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் இத் தொகுதியில் இடம்பெறும் நூல்களுக்கு 11001இலிருந்து 12000வரை தொடரிலக்கமிடப்பட்டுள்ளன. 12000 நூல்களைப் பார்த்துக் குறிப் பெடுத்து, ஒழுங்கமைத்து, தட்டச்சிட்டுப் பதிவேற்றம் செய்து நூலுருவாக்குவ தென்பது தனிமனிதனாகச் செயற்படுவதென்பது இலேசான காரியமல்ல. இதன் முக்கியத்துவத்தை புரிந்துகொண்டு எனக்கு உதவ முன்வரும் தொண்டுள்ளங்களை இன்னும்தான் எமது ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தில் தேடிவருகின்றேன்.

தொகுப்பும் தவிர்ப்பும்

இது ஒரு தேர்ந்த நூற்பட்டியலன்று. இங்கு பட்டியலாக்கப்பட்டுள்ள தனி நூல் கள் (Monographs) எவையும் எவ்வித தரக்கட்டுப்பாட்டுக்கும் உட்படவில்லை. இன்று பார்வையிடக்கூடிய ஈழத்துத் தமிழ் நுல்கள் அனைத்தையும், ஒரு தொகுதிக்கு 1000 நூல்கள் என்ற எண்ணிக்கையில் பட்டியலிடுவதே நூல்தேட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். வெளியீட்டின் பௌதிகத் தன்மை கருதி சில பிரசுரங்கள் நூல்தேட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. துண்டுப்பிரசுரங்கள், வரைபடங்கள், அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதிகள், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், இறுவெட்டுகள் என்பன இத்தொகுப்பில் சேர்க்கப்படவில்லை.

பெரும்பான்மையான கல்வெட்டுகள், ஞாபகார்த்த மலர்கள், சஞ்சிகைகள், என்பனவும் இத்தொகுதியில் தவிர்க்கப்பட்டுள்ளன. ஆயினும், தனி ஆவணமாகக் கருதும்வகையில் வெளியிடப்பட்டிருக்கும் சஞ்சிகைகளின் சிறப்புமலர்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. மேலும், சில கல்வெட்டுக்களும், ஞாபகார்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்களும் தனிநூலின் வகைக்குள் அடங்கக்கூடியதான கனதியான அம்சங்களுடன் வெளிவந்திருப்பதால் அவற்றையும் இத்தொகுதியில் சேர்த்துக்கொண்டுள்ளோம்.

இதில் தொகுக்கப்பட்டுள்ள நூல்கள் எவ்வித கால எல்லைகளுக்குள்ளும் வரையறுக்கப்படவில்லை. ஒரு நூலின் பின்னைய பதிப்புகள் வெளிவரும்போது அவை புதுக்கியோ, சுருக்கியோ, வெளிவரும் வாய்ப்பிருப்பதாலும், முற்றிலும் வேறான நூலியல் தகவல்களை அவை கொண்டிருப்பதாலும் குறித்தவொரு நூலின் பல்வேறு பதிப்புகளும் இங்கு ஒரே பதிவிலக்கத்தின் கீழ் இடம்பெறுகின்றன. முன்னைய பதிவிலக்கத்தைப் பெற்ற மீள்பதிப்புக்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

பதிவுகளின் ஒழுங்கமைப்பு

நூல்தேட்டம் ஒரு உசாத்துணை நூலாகும். ஒரு நூலைப் பற்றிய நூலியல் தகவல்களைக் குறுகிய நேரத்தில் வாசகர் கண்டறிய வகைசெய்யும் வண்ணம் இத்தொகுதி மூன்று பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

முதற்பிரிவில், நூல் பற்றிய பிரதான பதிவுகள் பாடஒழுங்கில் வகைப் படுத்தப்பட்டு தொடரெண்கள் மூலம் அடையாளமிடப்பட்டுள்ளன. பாடவாரியாக ஒரு நூலைத்தேடும் வாசகர் இப்பிரிவின் மூலம் பயனடைவர். இரண்டாவது பிரிவு, தலைப்பு வழிகாட்டியாகும்.

முதற்பகுதியில் நூல்கள் பாடவாரியாக முதலில் ஒழுங்குபடுத்தப்பட்டு, பின்னர் அகரவரிசையில் காணப்படுவதால் ஒரு நூலின் தலைப்பைக் கொண்டு நூலைத் தேடவிளையும் வாசகர் இரண்டாவது பிரிவில் அகரவரிசையில் காணப்படும் தலைப்பு வழிகாட்டியின் வாயிலாக நூலின் தொடர் இலக்கத்தைக் கண்டறிந்து முதற்பகுதியில் உள்ள பிரதான பதிவைப் பார்வையிட முடியும். இங்கு தலைப்புக்கள் அகரவரிசை எழுத்தொழுங்கில் அல்லாது சொல் லொழுங்கிலேயே அகரவரிசைப் படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

ஆசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், மூல ஆசிரியர் ஆகியோரின் விபரங்களைக் கொண்டு ஒரு நூலைத்தேடும் வாசகர் மூன்றாவது பிரிவின் மூலம் பயனடைவர். இங்கு ஆசிரியர் அகர வரிசையில் நூல்களின் தொடர் எண்களைக் கண்டறிந்து அதன் மூலம் தான் தேடும் நூலைச் சென்றடைய முடியும். ஆசிரியர் அகரவரிசையில் புனைபெயர்களும் இடம்பெறுகின்றன. ஒரு நூலாசிரியர் இயற்பெயரிலும் புனைபெயரிலும் நூல்களை எழுதுவதால் புனைபெயரின் கீழ் நூலைத்தேடும் வாசகர் ஆசிரியரின் இயற்பெயரிலும் அவற்றைத் தேட உதவும் வகையில், **பார்க்க, மேலும் பார்க்க** போன்ற வழிகாட்டி அம்சங்கள் தேவை கருதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இரு ஆசிரியர்கள் ஒரே புனைபெயரில் வலம் வருவதையும் இங்கு காணமுடிவதால் புனைபெயரில் நூலைத்தேடும் வாசகர்கள் அவதானமாக இருக்க வேண்டும். வாசகரின் தேடுகை நேரத்தை குறைக்கும் வகையில் புனைபெயரிலும் இயற்பெயரிலும் எழுதும் ஆசிரியரின் பிரபல்யமான ஒரு பெயரின்கீழ் மட்டும் இயன்றவரை அவரது நூல்களின் தொடர்எண்களைக் குறித்துள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலியல் பதிவுகள்

பிரதான பகுதியில் நூல் பற்றிய தகவல் மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. முதற்பகுதியில் நூலின் தலைப்பு, உப தலைப்பு, அந்நூலின் ஆக்கத்துக்கு அதிகாரபூர்வ உரித்துடைய ஆசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர் விபரங்கள், வெளியீட்டு விபரம், பதிப்பு விபரம், ஆகியனவும் அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்ட நூலின் குறித்த பதிப்பிற்கான அச்சகத்தின் விபரமும் தரப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறுமிடத்து சர்வதேச தராதர நூல் எண்களும் இப்பகுதியில் இடம்பெறுகின்றன. ஆசிரியர் பற்றிய தகவலில் ஆசிரியரின் இயற்பெயர், புனை பெயர் பற்றிய குறிப்புகளும் அறியமுடிந்தால் தரப்பட்டுள்ளன. பதிவுக்குள்ளாகும் நூலின் உரித்தாளர் மூலநூலாசிரியராக இல்லாதவிடத்து, அவரின் பங்களிப்புப் பற்றிய தகவல் அவரது பெயரையடுத்து அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூலின் வெளியீட்டாளர் பற்றிய தகவல் குறிப்பில் வெளியீட்டாளரின் இயங்குதளம், வெளியீட்டகத்தின் பெயர், முகவரி என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு வெளியீட்டகம் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் தனது கிளைகளைப் பரப்பியிருக்கும் வேளை, பதிவுக்குள்ளாகும் நூலில், குறிப்பாக ஒரு இயங்குதளத்தை மட்டும் வெளிப்படுத்தியிருந்தாலன்றி, பதிவுத்தேவை கருதி, நூல் அச்சிடப்பட்ட நாட்டில் உள்ள வெளியீட்டகத்தின் கிளை அமைந்த ஊரே அதன் இயங்குதளமாகப் பதியப்பட்டுள்ளது. ஆசிரியரே வெளியீட்டாளராகவும் இருக்கும்போது, நூலில் காணும் ஆசிரியரின் முகவரி வெளியீட்டக முகவரியாகக் கொள்ளப்பட்டுள்ளது.

நூலின் பதிப்பு விபரத்தில், பதிவுக்குப் பெறப்பட்ட நூலின் பதிப்பு விபரமும், அப்பதிப்பு வெளியிடப்பட்ட திகதியும் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நூல் முதற்பதிப்பு அல்லாதவிடத்து முன்னைய பதிப்புகள் பற்றிய திகதி விபரங்களும் நூலில் தரப்பட்டவாறாகப் பதியப்பட்டுள்ளன. சில வெளியீட்டாளர்கள், மறுபதிப்பு நூல்களையும் முதற்பதிப்பாகக் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. குறிப்பிட்ட வெளியீட்டாளரின் முதற் பதிப்பாகவே அது கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவ்விபரங்கள் நூலியல் நேர்மை கருதி, பதிப்பு நூலில் குறிப்பிடப்படவேண்டியது அவர்களது கடமையாகும் என்பதை இங்கு வலியுறுத்துதல் அவசியமாகின்றது. பெரும்பான்மையான தமிழக மீள்பதிப்புக்களில் இத்தவறுகள் காணப்படுகின்றன.

நூலின் அச்சக விபரம் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது. இந்த விபரம் பதிவுக்குரிய நூலின் குறித்த பதிப்புக்கு மட்டும் உரியதாகும் என்பதும் கவனத்துக் குரியது.

நூலியல் பதிவின் இரண்டாவது பகுதியாக அமைவது நூலின் பௌதீகத் தகவல்களாகும். இதில் நூலின் பக்கங்கள், சிறப்பம்சங்கள், விலை, அளவு, தராதர எண் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

நூலின் பக்கங்கள் மூன்று வகையில் குறிப்பிடப்படுகின்றன. அவை ரோமன் இலக்கமிடப்பட்ட பக்கங்கள், இலக்கமிடப்படாத பக்கங்கள், அரேபிய இலக்க மிடப்பட்ட பக்கங்கள் என்பனவாகும். ரோமன் இலக்கமும், அரேபிய இலக்கமும் இடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை அவ்வவ்விலக்கங்களாலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டப்பட்டுள்ளன. இலக்கமிடப்படாத பக்கங்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன. (உதாரணம்: VII, (12), 243 பக்கம்). பெரும்பான்மையான தமிழ் நூல்களில் முகவுரைப் பக்கங்கள் இலக்கமிடப்படாவிடினும் அவை பின்னர் அரேபிய இலக்கங்களாகத் தொடர்கின்றன. அத்தருணங்களில் அவை அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்களாகவே கருதப்பட்டுள்ளன.

பக்கங்கள் பற்றிய குறிப்பை அடுத்து அமைவது சிறப்பம்சங்களாகும். இங்கு வரைபடங்கள், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், தகடுகள் பற்றிய குறிப்புகள் காணப்படும். விலை விபரம் காலவரையறைக்குட்பட்டதாக அமைவதாயினும் வரலாற்றுத்தேவை கருதி மட்டுமே நூல்தேட்டத்தில் அவை சேர்க்கப்பட்டுள்ளது. நூலில் குறிப்பிடப்படும் விலை அந்நாட்டு நாணய அலகின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை ரூபாவுக்கு மாத்திரம் நாடு குறிப்பிடப்படவில்லை. இது ஒரு வர்த்தக நூற்பட்டியல் இல்லையென்பதால் தேவைப்படுமிடத்து நூலின் தற்போதைய விலை பற்றிய தகவலை அதன் விற்பனையாளர்களிடமே வாசகர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

நூலின் பெதீக விபரங்களில் அடுத்ததாக வருவது, நூலின் அளவாகும். இது சதம மீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரிவில் இறுதியாக அமைவது நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண் (International Standard Book Number) பற்றிய தகவலாகும். ஈழத்துத் தமிழ் நூல்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்களே இவ்விலக்கத்தைத் தாங்கி வெளி வந்திருப்பினும் அதிகரித்து வரும் அதன் முக்கியத்துவம் கருதி இவ்விலக்கம் இப்பிரிவில் இடம்பெறுகின்றது. எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் பயன்பாடு கருதி ISBN பற்றிய விரிவான கட்டுரையொன்று **முதலாவது** தொகுதியில் xiv-xviii பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நூலியல் தகவலின் மூன்றாவது, இறுதிப்பிரிவு நூல்பற்றிய சுருக்கக் குறிப்பாகும். இது ஒரு திறனாய்வுக் குறிப்பாகவோ, விளம்பரமாகவோ அல்லாது நூலினதும் நூலாசிரியரினதும் சிறு அறிமுகமாக மாத்திரம் அமைவது குறிப் பிடத்தக்கது. பார்வையிடப்பட்ட நூல்களின் வைப்பிடம் பற்றிய குறிப்பு 3வது தொகுதியிலிருந்து வழங்கப்படுகின்றது. அவை பற்றிய இருப்பு விபரம் இப்பகுதியில் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

பகுப்பாக்கம்

இந்நூலின் பிரதான பகுதியில் நூல்கள் பாட ஒழுங்கில் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்கென நாம் தேர்ந்தெடுத்துள்ள பாட ஒழுங்கு வரிசை, டூவியின் தசாம்சப்பகுப்பு முறையாகும். (Dewey Decimal Classification Scheme) தென்னாசியாவிலும் ஐரோப்பாவிலும் நூலகங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் இப்பகுப்பு முறை தமிழ் வாசகர்களுக்குப் பரிச்சயமானதொன்றென்ற வகையில் இப்பகுப் பாக்கத்தைப் பின்பற்றத் தீர்மானித்தோம். இப்பகுப்பாக்கத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று பிராந்தியத் தேவைகருதி இப்பகுப்பு முறையில் தேவைப்படும் மாற்றத்தைப் புகுத்தமுடியும் என்பதாகும். ஈழத்துத் தமிழ்நூல்களின் பகுப்புத்தேவை கருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுப்பு முறை சில மாற்றங்களுடன் பயன்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பகுப்பாக்கம் அறிவுத்தேட்டத்தை முதலில் பத்துப் பெரும்பிரிவுக்குள் அடக்குகின்றது. பின்னர் ஒவ்வொரு பெரும்பிரிவும் பத்து உபபிரிவுகளாகின்றன. அந்த உப பிரிவுகள் மேலும் பத்து உபபிரிவுகளாகின்றன. இத்தகைய ஒரு தசாம்சப்பகுப்பு முறை பற்றிய விரிவான விளக்கத்தை இங்கே தரமுடியாவிடினும் வாசகரின் தேவை கருதி இந்நூலில் பயன்படுத்தும் பகுப்புத் திட்டம் சுருக்கமாக இந்த அறிமுகப் பகுதியையடுத்துத் தரப்பட்டுள்ளது.

வாழ்க்கை வரலாறு

பகுப்பாக்க ஒழுங்கில் இறுதிப்பிரிவாக அமைவது வரலாறாகும். இதில் பிரதேச வரலாற்றுடன், வாழ்க்கை வரலாற்று நூல்களும் ஞாபகார்த்த மலர்களும் இடம்பெறுகின்றன. பகுப்பாக்கத்தின் போது பன்முகத்தோற்றம் பெற்ற பெரியார்களின் வரலாற்று நூல்களைத் தரம்பிரிக்கும்போது பிரதான பதிவை ஏதாவது ஒரு பிரிவுக்குள் பதிய வேண்டிய கட்டாயத்தேவை ஏற்பட்டது. ஒருவரது ஆளுமை எத்துறையில் பிரகாசித்தது என்பதை விட குறிப்பிட்ட நூலில் அவரது பன்முகப்பட்ட ஆளுமையின் எப்பகுதி ஆய்வுக்கெடுக்கப்பட்டது என்ற அடிப்படையிலேயே அவரது நூலுக்கான பகுப்புப் பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்டது. அதனால் இப்பிரிவைப் பார்வையிடும் வாசகர்கள் தயவு செய்து பல்வேறு வாழ்க்கை வரலாற்றுப் பிரிவுகளிலும் கண்ணோட்டம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புக்கள்

இரண்டாம் தொகுதியிலிருந்து மேலதிக அம்சமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் பகுதி இதுவாகும். இன்றைய ஈழத்து இனப்பிரச்சினையின் சர்வதேசமயப்படுத்தல் காரணமாக ஈழத் தமிழரல்லாத பன்நாட்டவர்களிடையே உருவாகிவரும் ஈழத்தமிழர்சிக்கல் பற்றிய தேடலின் விளைவாக, தமிழகத்திலும் மலேசியாவிலும் ஐரோப்பாவிலும் ஈழத்தமிழர் பற்றிய நூல்களின் வரவு அதிகரித்திருப்பதைக் காணமுடிகின்றது. இவற்றில் பல தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதன்விளைவாக, நூல்தேட்டத்தில் இவ்வாக்கங்களுக்கான ஆவணமாக்கலும் அவசியம் என்று கருதியதால், தனியானதொரு பிரிவாக அவை இடம்பெறுகின்றன.

முன்னைய பதிவுகளுக்கான மேலதிக தகவல்கள்

நூல்தேட்டம், ஈழத்தமிழரின் நூலியல் முயற்சிகளில், இயன்றவரை நிறைவான ஆவணமாக்கலையே மேற்கொள்ள விழைகின்றது. முன்னைய தொகுதியில் இடம்பெற்ற ஒரு நூல் திருத்திய மறுபதிப்பாக வெளியிடப்பட்டால், அதுபற்றிய தகவலையும் இத்தொகுதியில் தந்திருக்கின்றோம். தொகுப்பு முயற்சியில் குழப்பங்களைத் தவிர்க்கும் பொருட்டு இவை கொள்கையளவில் புதிய பதிவாகக் கருதப்பட மாட்டாது. இதனால் அப்பதிவிற்குத் தனியான தொடர் இலக்கத்தை வழங்காது, அதை பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளோம். வாசகர்களின் பயன்கருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட இந்நூற்பதிவின் மூலப்பதிப்பின் தொடர் இலக்கத்தையும் குறிப்புப் பகுதியில் தந்துள்ளோம். தொகுப்பு முயற்சியின்போது முன்னைய பதிவுகளில் தவறுகள் நேர்ந்தால், அப்பதிவுகளின் திருத்திய வடிவமும் இப்பகுதியிலேயே இடம்பெறுகின்றன. நூல்தேட்டம் தொகுதிகளை இணைத்துப் பெருந்தொகுப்பாக்கி வெளியிடும் நோக்கமும் உள்ளதால், திருத்திய பதிப்பின்போது இப்பகுதியில் இடம்பெறும் பதிவுகள் பிரதான பதிவுகளுக்குள் உள்வாங்கப்படும்.

நிறைவுக் குறிப்பு

நூல்தேட்டத்தின் முன்னைய தொகுதிகளை எமது சக்திக்கெட்டியவரை சர்வதேச நூற்பட்டியல்களின் சிறப்பம்சங்களைக் கூர்ந்து கவனத்துக்கெடுத்துத் தொகுத்திருந்தோம். இத்தொகுதிகளில் காணப்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டி, காத்திரமான ஆலோசனைகளைப் பலர் வழங்கியிருந்தனர். அவற்றில் நாம் ஏற்றுக்கொண்ட பல விடயங்களை இத்தொகுதியிலும் சேர்த்திருக்கின்றோம். அடுத்து வரவுள்ள தொகுதி மேலும் சிறந்ததாக அமைய உங்கள் மேலான ஆதரவைத் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம்.

இத்தொகுதி வர்த்தக நோக்கமற்றதொரு தனிமனித முயற்சியாகும். நிறுவனரீதியில் மேற்கொள்ளப்படவேண்டிய இத்தகைய உசாத்துணை வெளியீட்டு நடவடிக்கைகள் தனிமனித முயற்சியாக மலரும்போது நிதி, காலம், நிபுணத்துவ உதவி என்பன எப்பொழுதும் வரையறைக்குட்பட்டதாகவே அமைகின்றன. இதை மனதில் கொண்டு, இத்தொகுதியின் பரந்துபட்ட அறிமுகத்திற்கும் விநியோகத்திற்கும், விற்பனைக்கும் உங்களாலான பங்களிப்பை வழங்குவீர்கள் என்று நம்புகின்றோம். இதன் விற்பனை மூலம் பெறப்படும் நிதி எமது அடுத்த தொகுதியின் துரித உருவாக்கத்துக்கு உறுதுணையாக அமையும் என்று எதிர்பார்க்கின்றோம். உலகெங்கும் பரந்துவாழும் ஈழத்தமிழர்கள் தாம் புலம்பெயர்ந்துவாழும் நாடுகளிலுள்ள நூலகங்களையும் நூல்தேட்டத்தின் அனைத்துத் தொகுதிகளும் சென்றடைவதற்குத் தங்களாலான பங்களிப்பினை நல்குவதைத் தார்மீகக் கடமையாகக் கொள்வீர்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Foreword

Noolthettam: A Gift of Myriad Possibilities

If we can put a man on the moon and sequence
the human genome, we should be able to devise
something close to a universal digital public library.
– Peter Singer

Having access to all the world's knowledge stored in books has long been a dream of mankind. And in the age of the Internet, we have perhaps come closer than ever before to seeing this dream come true: a universal digital public library, which according to the philosopher Peter Singer, should not be a difficult thing to establish. But there are important steps on the road to that reality. Before we can make all the books of mankind freely available, we first need to know which books exist. We need to make a list, of all of them, a Herculean task.

Books have always been intimately tied to the fate of a people, a nation. They record what is important to a people, its wisdom and advances, its ideals and dreams, values and beliefs. Books make peoples, nations and cultures. Therefore, many nations collect their books in a national library, the pride of a nation, and they compile catalogues and bibliographies so readers may know which books exist and where to find them. The task of recording which books exist is a fundamental task of any civilization.

Unfortunately, in the case of Sri Lanka's books written in Tamil, official efforts by government agencies and national institutions have not yet been successful in recording all books published. Fortunately, Mr. N. Selvarajah has taken up this task. He has dedicated his life to a work for which others employ entire bibliographical institutions or national libraries. He has accomplished a magnificent feat in listing more than 10,000 books over the past fourteen years with the next 1,000 in the current volume – all with detailed information and even a content summary for each book. He is a one-person *Library of Congress*. For us, his readers, the information collected in the volumes of *Noolthettam* is priceless! In the history of Tamil culture, few people have given such a gift to Tamil and Tamils all over the globe. And not only to Tamils, but to all of us readers who are interested in knowing more about Tamil books and Tamil culture.

I remember well what life was like before *Noolthettam* existed. When I was first learning Tamil as a young boy growing up in Germany in the 1990s, it was very difficult to find Tamil books to study with. My friend Rajah who had started to teach me Tamil brought me all the books he could find. A Lifco dictionary, a Thirukkural, Bharati's poems. There was no store in my small German hometown that we could go to in order to buy a Sri Lankan Tamil novel or anything else we would have liked to read. So Tamil books were very rare treasures and we collected them with the spirit of hunters or explorers of a new unknown continent. Finally,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I helped some of my Tamil friends ship a collection of Tamil books to our town for the local municipal library. If we had had a bibliography like *Noolthettam*, we would have been able to build a much better collection.

I also remember well how I first encountered the volumes of *Noolthettam* several years ago. My friend Cheran in Toronto gave me the first three volumes when I kept asking him questions about Sri Lankan Tamil books. Here you will find all the information you need, he said. He was right. Since then, hardly a day goes by when I do not look up something in the *Noolthettam* volumes. They are an indispensible tool to anyone working on Sri Lankan Tamil literature and culture, anywhere in the world. And because of their excellent summaries, they can be used not just by literary scholars but by anyone. If all Tamil books written by Sri Lankan Tamils can one day be included in that universal digital public library we dream of, it will be due to the pathbreaking efforts of Mr. Selvarajah who told us about those books.

In his book *Principles of Bibliographical Description* (1949), a classic introduction for librarians on how to compile bibliographies, the American bibliographer Fredson Thayer Bowers noted: "Descriptive bibliography is … a type of compilation which will always exist as one of the basic needs of scholarship" (p. 3). Those of us who use books for their work know that Bowers was right. Bibliographies will always exist, they are as necessary and as fundamental as books themselves. *Noolthettam* will be no exception and will prove its value to future generations.

And what would our lives be without books? The writer Alberto Manguel once described the meaning of books for our lives like this: "Books may not change our suffering, books may not protect us from evil, books may not tell us what is good or what is beautiful, and they will certainly not shield us from the common fate of the grave. But books grant us myriad possibilities: the possibility of change, the possibility of illumination". By meticulously listing all the Tamil books written by Sri Lankan Tamils, home and abroad, Mr. Selvarajah has granted us the very possibility of myriad possibilities. We shall be forever grateful for his gift.

Sascha Ebeling
Chicago, 28 September 2016

Sascha Ebeling is professor of Tamil and comparative literature at the University of Chicago. He is the author of ***C****olonizing the Realm of Words. The Transformation of Tamil Literature in Nineteenth-Century South India* (SUNY Press, 2010, and Dev Publishers, 2013) and of numerous articles on Tamil literature and culture. He has translated Tamil poetry about Sri Lanka's war into English in the two books *A Second Sunrise* (Navayana, New Delhi, 2012) and *Lost Evenings, Lost Lives* (Arc, UK, 2016). Currently, he is completing a book in English on what Tamil literature can teach us about Sri Lanka's war.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்தேட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வகுப்புப் பிரிவு

(டுவி தசாம்சப் பகுப்பை அடிப்படையாகக் கொண்டது)

பிரதான பிரிவுகள்

000-099	*பொதுப்பிரிவு*
100-199	*மெய்யியல்துறை*
200-299	*சமயங்கள்*
300-399	*சமூக விஞ்ஞானங்கள்*
400-499	*மொழியியல்*
500-599	*தூய விஞ்ஞானங்கள்*
600-699	*பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பம்*
700-799	*கலைகள், நுண்கலைகள்*
800-899	*இலக்கியம்*
900-999	*புவியியல், வரலாறுகள்*

விரிவான பிரிவுகள்

000 பொதுப்பிரிவு

000	*பொது அறிவு 11001-11005*
001	*கணனியியல் 11006-11010*
010	*நூலியல், நூல்விபரப்பட்டியல் 11011-11014*
020	*நூலகவியல், தகவல் விஞ்ஞானம் 11015-11023*
050	*பொதுப் பருவஇதழ்கள், வழிகாட்டிகள், சுட்டிகள் 11024-11025*
051	*பொதுப்பருவஇதழ் சிறப்பிதழ்கள் 11026*
053	*வழிகாட்டிகள் 11027*
060	*பொது நிறுவனங்கள் 11028-11030*
070	*ஊடகவியல், வெளியீட்டுத்துறை 11031-11040*
070.01	*ஆசிரியத் தலையங்கங்கள்/பத்தி எழுத்துக்கள் 11041-11043*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100 மெய்யியல்துறை

100	*மெய்யியல் (தத்துவவியல்) 11044*
150	*உளவியல் 11045-11047*
155.4	*குழந்தை உளவியல் 11048*
155.937	*மரணம் 11049-11050*
158.1	*மானிட மேம்பாடு 11051-11056*
158.12	*தியானம் 11057*
158.3	*உளவளத்துணை (*counseling*) 11058-11060*
160	*தர்க்கவியல் (அளவையியல்) 11061-11081*
180	*இந்து தத்துவம் (சைவ சித்தாந்தம்) 11082-11100*
190	*சோதிடம், வானசாஸ்திரம் 11101-11107*

200 சமயங்கள்

210	*பொதுச்சமயம் சார்பானவை 11108*
220	*கிறிஸ்தவம் 11109*
220.(2)	*கிறிஸ்தவ கீர்த்தனைகள், பக்திப்பாடல்கள் 11110*
294.3	*பௌத்தம் 11111-11113*
294.5	*இந்து சமயம் 11114-11140*
294.5(1)	*இந்து சமய பாடநூல்கள் 11141-11147*
294.5(2)	*இந்து நிறுவனங்கள், ஆலய வரலாறுகள் 11148-11167*
294.5(21)	*இந்து சமய ஆண்டிதழ்கள் 11168-11169*
294.5(3)	*ஆலய சிறப்பு மலர்கள் 11170-11182*
294.5(4)	*பக்தி இலக்கியங்கள் 11183-11262*
297	*இஸ்லாம் 11263-11274*

300 சமூக விஞ்ஞானங்கள்

301	*சமூகவியல் 11275-11277*
301.01	*சமூகவியல்சார்ந்த பாடநூல்கள் 11278-11280*
301.05	*சமூகவியல் சார்ந்த ஆய்விதழ்கள்/சிறப்பு மலர்கள் 11281-11288*
301.1	*பண்பாடு 11289*
305.4	*பெண்கள், பெண்ணியம், பெண்ணிலைவாதம் 11290-11292*
305.4(5)	*பெண்ணியம் சார்ந்த ஆய்விதழ்கள்/ சிறப்பிதழ்கள் 11293*
305.5	*சாதியம் 11294*
310	*புள்ளிவிபரவியல் 11295*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

320	*அரசறிவியல் 11296-11299*
323	*மனித உரிமை 11300-11302*
325	*சர்வதேச புலப்பெயர்வுகள், காலனித்துவம் 11303*
327	*சர்வதேசத் தொடர்புகள் 11304*
330	*பொருளியல் 11305-11315*
331.88	*தொழிற் சங்கங்கள் 11316-11317*
335	*சோசலிசம், அது தொடர்பான பிரிவுகள் 11318*
338.47	*சுற்றுலாத்துறை 11319*
340	*சட்டவியல் 11320-11321*
340.05	*சட்டவியல் ஆய்விதழ்கள், ஆண்டுமலர்கள் 11322*
340.59	*இஸ்லாமியச் சட்டங்கள் 11323*
344.032	*சிறுவர் பாதுகாப்புச் சட்டம் 11324*
350	*பொது நிர்வாகம் 11325-11329*
352.44	*வரி அறவீட்டு நிர்வாகம் 11330*
360	*சமூக சேவை நிறுவனங்கள் 11331*
362.292	*மதுப்பாவனையும் குடிகாரர்களும் 11332*
362.4	*மாற்றுத்திறனாளிகளும் சேவைகளும் 11333-11334*
362.7	*சிறுவர் பராமரிப்பு 11335*
363	*சுற்றாடல், சூழல் மாசுபடுதல் 11336*
364	*பொதுப் பாதுகாப்பு நடைமுறைகள் 11337*
370	*கல்வியியல் 11338-11354*
370.05	*கல்விநிறுவனங்களின் ஆய்விதழ்கள், ஆண்டு மலர்கள் 11355-11362*
370.1	*கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள், சிறப்பிதழ்கள் 11363-11366*
380.(1)	*வர்த்தகவியல்/வணிகவியல் பாடநூல்கள் 11367-11370*
392.5	*சடங்கு முறைமைகள், திருமணங்கள், மரணச் சடங்குகள் 11371-11375*
395	*நாட்டார் வழக்காற்றியல் 11376-11377*
398	*கிராமிய இலக்கியங்கள், நாட்டுக்கூத்துக்கள் 11378-11393*
398.1	*பழமொழிகளும் விடுகதைகளும் 11394*

400 மொழியியல்

491.2	*சமஸ்கிருத மொழி 11395*
494.8	*தமிழ் மொழி 11396*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

494.8(1) தமிழ் இலக்கணம் 11397-11400

494.8(2) தமிழ்ப் பாடநூல்கள் 11401-11409

500 தூய விஞ்ஞானங்கள்

500 தூய விஞ்ஞானம் 11410

500.01 பொது விஞ்ஞானப் பாடநூல்கள் 11411-11412

510 கணிதம் 11413-11417

519 பிரயோக கணிதம் 11418

530 பௌதிகம் 11419-11420

540 இரசாயனம் 11421-11429

541.3 பௌதிக இரசாயனம் 11430-11432

576.5 பிறப்புரிமையியல் 11433

590 விலங்கியல் 11434

600 பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பம்

610 மருத்துவம் 11435

614 பொதுச் சுகாதாரம் 11436-11437

616 நோய்கள் 11438-11444

618 பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம் 11445

619 கீழைத்தேய மருத்துவம் 11446

619.1 சித்த மருத்துவம் 11447-11448

630 விவசாயமும் அது சார்ந்த துறைகளும் 11449-11452

640 இல்லப் பொருளியல், குடும்பக் கலை 11453-11454

642 உணவும் பரிமாறலும் 11455

650 முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம் 11456-11460

657 கணக்கியல் 11461-11463

658.15 நிதி முகாமைத்துவம் 11464

700 கலைகள், நுண்கலைகள்

701 பொதுக்கலைகள் 11465

750 ஓவியக்கலை 11466

780 இசைக்கலை 11467-11468

791 நாட்டியக் கலை 11469

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

792 அரங்கியல், நாடகக்கலை 11470-11475

793 திரைப்படக்கலை 11476-11480

796 உடற்பயிற்சி, விளையாட்டுகள் 11481-11486

800 இலக்கியம்

800.(1) இலக்கிய அமைப்புகள் 11487-11490

801 சிறுவர் இலக்கியங்கள் 11491-11492

801.(1) சிறுவர் பாடல்கள், கவிதைகள் 11493-11500

801.(2) சிறுவர் நாடகங்கள் 11501

801.(3) சிறுவர் கவிதா நாடகங்கள், காவியங்கள் 11502

801.(4) சிறுவர் சிறுகதைகள் 11503-11507

801.(41) சிறுவர் மொழிபெயர்ப்பு சிறுகதைகள் 11508-11509

801.(5) சிறுவர் நாவல்கள் 11510-11516

801.(51) சிறுவர் மொழிபெயர்ப்பு நாவல்கள் 11517-11524

801.(6) சிறுவர்க்கான கட்டுரைகள் 11525

801.(7) சிறுவர்க்கான பலவின நூல்கள் 11526

891.2 சமஸ்கிருத இலக்கியம் 11527-11529

894.8 தமிழ் இலக்கியம் 11530-11532

894.8(01) தமிழ் இலக்கியப் பாடநூல்கள் 11533-11557

894.8(05) இலக்கிய அமைப்புகளின்/சஞ்சிகைகளின் சிறப்பிதழ்கள் 11558-11567

894.8(1) தமிழ்க் கவிதைகள் 11568-11725

894.8(11) மொழிபெயர்ப்புக் கவிதைகள் 11726-11728

894.8(2) தமிழ் நாடகங்கள் 11729-11735

894.8(21) மொழிபெயர்ப்பு நாடகங்கள் 11736-11743

894.8(3) தமிழ்க்கவிதை/இசை நாடகங்கள்-காவியங்கள் 11744-11760

894.8(31) மொழிபெயர்ப்பு இசை நாடகங்கள்-காவியங்கள் 11761-11763

894.8(4) தமிழ்ச் சிறுகதைகள் 11764-11809

894.8(41) மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் 11810-11815

894.8(5) தமிழ் நாவல்கள், குறுநாவல்கள் 11816-11851

894.8(51) மொழிபெயர்ப்பு நாவல்கள், குறுநாவல்கள் 11852-11854

894.8(6) பொது இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வு 11855-11872

894.8(621) இஸ்லாமியத் தமிழ், அரபுத்தமிழ் இலக்கியம் 11873

894.8(63) சங்க இலக்கியங்கள் தொடர்பானவை 11874-11878

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8(64) சமகால இலக்கிய ஆய்வுகள், கட்டுரைகள் 11879-11885

894.8(7) பலவினத் தொகுப்பு 11886-11891

894.8(87) அங்கதம்/நகைச்சுவை தொகுப்பு 11892-11893

900 புவியியல், வரலாறுகள்

901.(1) வரலாற்றுப் பாடநூல்கள் 11894-11895

910.01 புவியியல் பாடநூல்கள் 11896

911 பிரயாண நூல்கள், வழிகாட்டிகள் 11897-11899

920.01 துறைசாரா வாழ்க்கைவரலாறுகள் 11900

922 சமயத் தலைவர், சிந்தனையாளர் 11901-11910

923 சமூகவியல்துறை சார்ந்தோர் 11911

923.2 அரசியல் துறையினர் 11912-11916

923.5 பொது நிர்வாகத்துறையினர் 11917-11918

923.6 சமூக சேவகர்கள் 11919-11920

923.61 விடுதலைப் போராளிகள் 11921-11924

923.7 கல்வியியலாளர்கள் 11925-11930

924 மொழியியலாளர்கள் 11931

926 பிரயோக விஞ்ஞானிகள், மருத்துவர்கள் 11932

927.5 ஓவியக்கலைஞர்கள் 11933-11934

927.92 நாடகக் கலைஞர்கள் 11935

927.94 விளையாட்டு வீரர்கள், பிரமுகர்கள் 11936

928 இலக்கிய அறிஞர்கள், புலவர்கள் 11937-11949

954.93 இலங்கை வரலாறு 11950

954.93(2) இலங்கை இனப்பிரச்சினை வரலாறு 11951-11964

954.93(3) இனங்கள், மக்கள் குழுமங்கள், இன உறவுகள் 11965-11973

954.93(4) பிரதேச வரலாறு 11974-11994

999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்

999 பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள் 11995-12000

முன்னைய பதிவுகள் பின்னிணைப்பு 12A01-12A47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்தேட்டம் தொகுதி 12
வகுப்புப் பிரிவு

000 பொதுப்பிரிவு

000 பொது அறிவு

11001

கல்வி, அறிவியல்சார் வரலாற்றுப் பதிவுகள். *ஜெயலக்சுமி இராசநாயகம். யாழ்ப்பாணம்: கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம், ஜே.ஆர்.திறன், சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

(6), 277 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 650., 22x14.5 சமீ., ISBN: *978-955-7421-00-1.*

வரலாற்றில் இடம்பெற்ற மிக முக்கிய நிகழ்வுகளையும் தினங்களையும் கால ஒழுங்கில் விபரிக்கும் நூல் இது. ஜனவரி முதலாம் திகதியில் தொடங்கி, டிசம்பர் 31ம் திகதிவரை வரலாற்றுத் தகவல்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. திகதி வாரியாகத் தொகுக்கப்பட்டுள்ள இத்தகவல்கள் குறிப்பிட்ட திகதியின்கீழ் ஆண்டுவாரியாகத் தரப்பட்டுள்ளன. இலங்கை வரலாற்றுச் செய்திகளுக்கு முக்கியத்துவம் வழங்கியிருக்கும் அதே வேளையில், 2015 வரையிலான காலப் பகுதிக்கான சமகால ஈழத்து வரலாற்று முக்கியத்துவமான செய்திகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

11002

தெரியத் தெரியத் தெரியாமை தெரியும் - 1. *சதாசிவம் சச்சிதானந்தம். பாரிஸ்: ஞானா பதிப்பகம் , 1வது பதிப்பு, 2014. (அச்சிட்ட நகரம் தரப்படவில்லை: சிவராம் பிரின்டர்ஸ்).*

xxiv, *342 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.,* ISBN: *978-1-934293-06-5.*

பாரிசில் புலம்பெயர்ந்து வாழும் பேராசிரியர் சதாசிவம் சச்சிதானந்தம் தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கற்கை நெறிகளுக்கான இலங்கை மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான ஒருங்கிணைப்பாளராகப் பணிபுரிகிறார். பாரிசில் முதற் தமிழ்ப் பாடசாலையை 1983இல் நிறுவிய இவர் சர்வதேச உயர்கல்வி நிறுவனம் என்ற அமைப்பினையும் நிறுவி அதன் இயக்குநராகப் பணியாற்றுகின்றார். இந்நூலில் இவர் எழுதிய 36 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியியல் சார்ந்த தகவல்கள் ஆங்காங்கே செறிந்துள்ள இந்நூலில், சிரிப்புத் தரும் சுகம், மொழிக் குடும்பங்கள், பிரெஞ்சுப் பெண்கள், உரோமத்தின் முக்கியத்துவம், பிரெஞ்சு மொழி ஒரு ஆழ்ந்த அறிமுகம், திராவிடத் தமிழும் இலத்தீனியப் பிரெஞ்சும், பிரெஞ்சு சமுதாயமும் பாலுறவும் என இன்னோரன்ன பரந்துபட்ட தலைப்புகளில் இவரது கட்டுரைகள் இடம்பெறுகின்றன. பலரும் அறிந்திராத பல்வேறு தகவல்களை விரிவாக இக்கட்டுரைகள் வழங்குகின்றன.

11003

புதிய புத்திப் பயிற்சிமாலை. நாவலர் அச்சுக்கூடம். யாழ்ப்பாணம்: க.வைத்தியலிங்கம், அதிபர், நாவலர் அச்சுக்கூட வெளியீடு, 1வது பதிப்பு, 1948. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சுக்கூடம்).

36 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

ஐந்தாம் வகுப்பு முதல் தமிழ் ஆசிரிய பிரவேசப் பரீட்சை வரையுமான மாணவர்க்குரிய புத்திப் பயிற்சிகள் இந்நூலில் வழங்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21639).

11004

பொது அறிவு: வெற்றிக் கனி. வே.நவமோகன் (தொகுப்பாசிரியர்). தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன், த.பெ.இலக்கம் 64, 1வது பதிப்பு, மே 2004. (தெகிவளை: காயத்திரி பதிப்பகம்).

120 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18.5x13 சமீ., ISBN: 955-8741-03-5.

புலமை வழிகாட்டிகளின் ஆசிரியரான யாதுமூரான் என்ற புனைபெயர் கொண்ட வே.நவமோகனின் மற்றுமொரு தொகுப்பாக்கம் இது. உயிரினங்கள், மனித விலங்கு, தாவரங்கள், உணவுகள், நோய்கள், தினங்கள், நீர், விழாக்கள், காற்று, விளையாட்டுக்கள், பொருட்கள், இசை, கோள்கள், அளவீடுகள், இலங்கை, தமிழ், பலசொல் ஒரு மொழி, மரபுப் பெயர்கள், தாவர மரபுப் பெயர்கள், தொகை நிலைத் தொடர்கள், உலகம், கண்டுபிடிப்புகள், தந்தையர், சிறப்புப் பெயர்கள், அலங்காரங்கள், வர்ணஜாலங்கள், கருவிகள், பொதுவிடயங்கள் ஆகிய பிரிவுகளின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட பொது அறிவுக் கேள்விகளும் அவற்றுக்கான சுருக்கப் பதில்களும் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38877).

11005

பொது அறிவுக் கலசம் 1000:அறிந்ததும் அறியாததும். கே.ராஜன் (இயற்பெயர்: க.துரைராஜரெட்ணம்). திருக்கோணமலை: எக்ஸலண்ட் ஸ்டடி சென்டர், 59, வித்தியாலயம் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2015. (வவுனியா: ஸ்கை பிரின்டர்ஸ்).

(6), 106 பக்கம், விலை: ரூபா 230., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-54198-2-6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது அறிவு சார்ந்த ஆயிரம் கேள்வி-பதில்களை இந்நூல் உள்ளடக்கு கின்றது. நூலாசிரியர் திருக்கோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் ஆசிரியராவார். (இந்நூல் கொழும்புப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10067).

001 கணனியியல்

11006

கணினி வழிகாட்டி: 1. வே.நவமோகன் (தொகுப்பாசிரியர்). தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன், த.பெ.இலக்கம் 64, 1வது பதிப்பு, ஜனவரி 2002. (தெகிவளை: காயத்திரி பதிப்பகம்).

48 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 50., அளவு: 22x15 சமீ., ISBN: 955-97519-0-5.

கணினி வழிகாட்டி என்ற பல்தொகுதி கணினி அறிவியல் ஏட்டின் முதல் தொகுதி இதுவாகும். மவுசைப் பயன்படுத்துவது எப்படி என்பதிலிருந்து தொடங்கி வெப் பேஜ் ஒன்றைப் பதிவேற்றுவது எப்படி என்பது வரை 27 அடிப்படை விடயங்கள் பற்றிய ஆரம்ப அறிவை இந்நூலிலுள்ள குறிப்புகள் வழங்குகின்றன. Desk Top என்றால் என்ன? Folder களை உருவாக்குவது எப்படி? File Folder களை நகர்த்துவது எப்படி? file customising செய்வது எப்படி? Quick Launch என்றால் என்ன? Bootable Disc ஒன்றை உருவாக்குவது எப்படி? Shortcut ஒன்றை உருவாக்குவது எப்படி? Clip Board என்றால் என்ன? Screen server க்கு password கொடுப்பது எப்படி? Software ஒன்றை Install செய்வது எப்படி? New Font ஒன்றை Install செய்வது எப்படி? தொலைந்த பைல்களை தேடுவது எப்படி? Floppy Disc ஒன்றை Format செய்வது எப்படி? என்பது போன்ற கணனி தொடர்பான பயிற்சிகளை இந்நூல் வழங்கு கின்றது. இக்குறிப்புகள் முன்னர் தினகரன் வாரமஞ்சரியில் கணனி மஞ்சரி பகுதியில் வெளிவந்திருந்தன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30376).

11007

கணினி வழிகாட்டி: 2. வே.நவமோகன் (தொகுப்பாசிரியர்). தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன், த.பெ.இலக்கம் 64, 1வது பதிப்பு, மே 2002. (தெகிவளை: காயத்திரி பதிப்பகம்).

48 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 50., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-8741-00-0.

கணினி வழிகாட்டி என்ற பல்தொகுதி கணினி அறிவியல் ஏட்டின் முதல் தொகுதி இதுவாகும். Hardware என்றால் என்ன? Software என்றால் என்ன? Shut down செய்வது எப்படி? File Folder களை அழிப்பது எப்படி? Recycle Bin என்றால் என்ன? Default Printer என்றால் என்ன? Task Bar என்றால் என்ன? எழுத்துருக்களை இனம்காண்பது எப்படி? தமிழில் விசைப்பலகை (கீபோர்ட்) ஒன்றை உருவாக்குவது எப்படி? தமிழில் கீபோர்டை பயன்படுத்துவது எப்படி? Scrap File என்றால் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோல்பேப்பரை உருவாக்குவது எப்படி? பிரின்ட் ஸ்கிரீன் என்றால் என்ன? Tool Bar பயன்படுத்துவது எப்படி? Calendarஐ செட் செய்வது எப்படி? Save செய்யும்போது கவனிக்கவேண்டியவை? Disc cleanup செய்வது எப்படி? வைரசிலிருந்து Floppy Discஐ பாதுகாப்பது எப்படி? Windows என்றால் என்ன? Copy Disc என்றால் என்ன? Disc ஒன்றின் பெயரை மாற்றுவது எப்படி? Send to list இல் விரும்பியவர்களைச் சேர்ப்பது எப்படி? Scan Disc செய்வது எப்படி? Discஐ Defregment செய்வது எப்படி? Desktop இல் அசையும் படங்களைப் போடுவது எப்படி? Programmeகளை Start up இல் சேர்ப்பது எப்படி? Internet ஐ ஆரம்பிப்பது எப்படி? மின்னஞ்சலில் இணைப்புகளை அனுப்புவது எப்படி? Chating செய்வது எப்படி? ஆகிய கேள்விகளுக்கு இந்நூலில் விளக்கப்படங்களுடன் பதிலளிக்கப் பட்டுள்ளது. இக்குறிப்புகள் முன்னர் தினகரன் வாரமஞ்சரியில் கணனி மஞ்சரி பகுதியில் வெளிவந்திருந்தன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30377).

11008

கணனி வழிகாட்டி: 3. வே.நவமோகன் (தொகுப்பாசிரியர்). தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன், த.பெ.இலக்கம் 64, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2002. (தெகிவளை: காயத்திரி பதிப்பகம்).

48 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 50., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-97519-3-x.

Casing ஐத் தெரிவுசெய்வது எப்படி? My Computer என்றால் என்ன? Control Panel என்றால் என்ன? கணனி ஒன்றை வாங்கும்போது கவனிக்க வேண்டியவை, Temporary file ஒன்றை இனம்கண்டு அழிப்பது சுலபமானதா? File ஒன்றை நிரந்தரமாக அழிப்பது எப்படி? Zip செய்வது எப்படி? RAM, ROM என்றால் என்ன? UnZip செய்வது எப்படி? கணனி ஒன்றின் Hardware ஐ அறிந்துகொள்ளல், Programme ஒன்றை Install செய்வது எப்படி? Print செய்யும்போது கவனிக்கவேண்டிய விடயங்கள், My Computer Icon படத்தை மாற்றுவது எப்படி? Special Character களை பயன்படுத்துவது எப்படி? E-Mail ஐ பயன்படுத்துவது எப்படி? மின் வர்த்தகம் என்றால் என்ன? கீ போர்டை பயன்படுத்துவது எப்படி? Screen Server ஒன்றை Install செய்வது எப்படி? Microsoft Word சில குறுக்கு வழிகள், Key களும் பெயர்களும், அடொப் பேஜ்மேக்கர் 6.5 சில குறுக்கு வழிகள், Internet Explorer 5.0 சில குறுக்கு வழிகள் ஆகிய கேள்விகளுக்கு இந்நூலில் விளக்கப்படங்களுடன் பதிலளிக்கப் பட்டுள்ளது. இக்குறிப்புகள் முன்னர் தினகரன் வாரமஞ்சரியில் கணனி மஞ்சரி பகுதியில் வெளிவந்திருந்தன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30378).

11009

கணனி வழிகாட்டி: 4. வே.நவமோகன் (தொகுப்பாசிரியர்). தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன், த.பெ.இலக்கம் 64, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (தெகிவளை: காயத்திரி பதிப்பகம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 50., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: *955-97519-4-8.*

உங்கள் Desk Top *ஐ பாதுகாக்க, உங்கள் பெயரில்* Windows, File System *என்றால் என்ன? பல* Floppy *களில்* Zip *செய்வது எப்படி?* CD Auto run *ஆவதைத் தடுப்பது எப்படி?* File *வகைகளை இனம்கண்டு மாற்றங்களை செய்வது எப்படி?* Path *என்றால் என்ன?* Icon *ஒன்றை உருவாக்குவது எப்படி?* Printer *ஒன்றை தேர்வுசெய்வது எப்படி?* Document Menu *வில் உள்ளவற்றை* delete *செய்வது எப்படி?* Upgrade *செய்யும் முன் கவனிக்க வேண்டியவை?* Windows *இல் பயன்படுத்தப்படும் பொதுவான* Key*கள்?* Pack*up செய்வது எப்படி?* Desktop themes *ஐ போடுவது எப்படி? நீங்கள் விரும்பிய* Programme*ஐ திறப்பது எப்படி?* Keyboard*ஐ* Setting *செய்வது எப்படி? கணனி ஒன்றை* assemble *செய்யத் தேவையானவை? உங்கள் கணனிகளைப் பாதுகாப்பது எப்படி?* Microsoft Excel *சில குறுக்கு வழிகள்,* Winzip *சில குறுக்கு வழிகள்,* ACDC 32 *சில குறுக்கு வழிகள், ஆகிய கேள்விகளுக்கு இந்நூலில் விளக்கப்படங்களுடன் பதிலளிக்கப்பட்டுள்ளது. இக்குறிப்புகள் முன்னர் தினகரன் வாரமஞ்சரியில் கணனி மஞ்சரி பகுதியில் வெளிவந்திருந்தன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30379).*

11010

மின்கணனித் தமிழ் நெறியாள்கையும் இதயம் சகோதரர்களின் பங்களிப்பும். *ஜோர்ஜ் இதயராஜ், உவெஸ்லி இதயஜீவகருணா, எட்வேட் இதயச்சந்திரா (மூலம்), ஈழத்துப் பூராடனார் (பதிப்பாசிரியர்). கனடா: நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், தொரன்ரோ, ஒன்ராரியோ,1வது பதிப்பு, 2003. (கனடா: ஜீவா பதிப்பகம், றிப்ளக்ஸ் அச்சகம், 1183 பொரஸ்ட்வுட் டிரைவ், மிஸிஸ்சாகா, ஒன்ராரியோ* L5C 1H6*).*

133 பக்கம், புகைப்படங்கள், விலை: கனேடிய டொலர் 10., அளவு: 21x14 சமீ.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் மின்கணனித் தமிழ் சாதனை வரலாறாக எழுதப்பட்டுள்ள இந்நூல் கணனிவழித் தமிழ் அச்சீட்டின் ஆரம்பகால வரலாறு பற்றியும், ஈழத்துப் பூராடனார் என அறியப்பெற்ற க.த.செல்வராஜகோபால் அவர்களின் குடும்பத்தினரின் அரும்பணி பற்றியும் விபரிக்கிறது. மின் கணனி ஏற்றுக்கொள்ளும் தமிழ் எழுத்துக்கள், தமிழ் எண்களும் இலக்கங்களும், தொகுத்துப் பதிப்பித்தவர் உரை, Computer based Publishing in Tamil, *மின்கணனித் தமிழை நெறிப்படுத்திச் சாதனை படைத்தவரின் கருத்துக்கள், மின்கணனிப் பாவனை எழுத்துச் சீர்திருத்தம், எங்களது மென்பொருளும் விசைப் பலகையும், அச்செழுத்தும் மின்கணனி எழுத்தமைப்பும,* Implementation of Indian Languages on Computers- A Case Study of Tamil, *உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்க ஐந்தாவது மாநாட்டில் சமர்ப்பித்த கட்டுரை, கட்டுரையாசிரியரின் சிந்தனைகள், தமிழ் வளர்ச்சியில் மின்கணனித் தமிழ் அச்சமைப்பின் பங்கு, பின் உரை, ஜீவா பதிப்பகத்தாரின் எழுத்துறுப்பு இலக்கணம் மின்கணனி ஆய்வு நூல்கள் ஆகிய தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத் தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37974).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

010 நூலியல், நூல்விபரப்பட்டியல்

11011

ஆசிரியர் அதிகாரக் கோவை (தமிழ்): சுதந்திரத்திற்கு முற்பட்ட காலம். *சி.எம்.ஷ பீக், க.சிந்துஜா (தகவல் உதவியாளர்). கொழும்பு 7: தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இல. 14, சுதந்திர வழி, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 7: தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இல. 14, சுதந்திர வழி).*

(10), 28 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 28x20.5 சமீ., ISBN: *978-955-8388-98-8.*

1901-1940 காலப்பகுதிக்கான நூற்பட்டியல் தொகுப்புப் பணியினை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை முன்னெடுத்துவரும் வேளையில் ஆசிரியர் பற்றிய தகவலை குறிப்பிடும் வேளையில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். உதாரணமாக, பழைய தமிழ் நூல்களின் ஒரு நூலாசிரியரை பல்வேறு அடைமொழிகளுடன் காலத்திற்குக் காலம் குறுக்கியும் விரித்தும் குறிப்பிட்டு வருவதால் அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்களாகக் கருதிப் பதிவுசெய்யப்படும் ஆபத்து நேர்ந்து விடுவதுண்டு. உதாரணமாக, அருள்வாக்கி ஆ.பி. அப்துல் காதிறுப் புலவர் அவர்கள், ஆ.பி.அப்துல் காதிறுப் புலவர், அருள் வாக்கி அப்துல் காதிர் புலவர் என்று பலவாறாக நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளார். தேசிய நூலகத்தின் இந்நூலில் அதிகாரபூர்வமான பெயராக அப்துல் காதிர், ஆ.பி. (1866-1918) என்ற பெயரை அவர் எழுதிய அனைத்து நூல்களினதும் பட்டியலாக்கத்தின்போது பயன்படுத்த இப்பட்டியல் அதிகாரமளிக்கின்றது. நூலில் குறிப்பிடப்படும் மற்றைய பெயரை பார்க்க என்று வழிகாட்டிக் குறிப்பின் மூலம் வாசகரின் தேடலை மேலும் இலகுவாக்க முனைந்துள்ளனர். இந்நிலையில் தொகுப்பாளர்களின் வழிகாட்டியாக உதவும் வகையில் மாத்திரமன்றி, நூலகங் களில் பழைய தமிழ் நூல்களைப் பட்டியலாக்கம் செய்யும் வேளையில் உதவும் வகையிலும் இந்த ஆசிரியர் அதிகாரக் கோவை உருவாக்கப்பட்டுள்ளது. பல தவறுகள் சுட்டிக்காட்டப்படவேண்டியதாயினும், முழுமையை நோக்கிய ஒரு முயற்சியாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

11012

நூல் ஒன்றை ஒழுங்குபடுத்தும் முறை. *தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை. கொழும்பு 7: தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இல. 14, சுதந்திர வழி, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 10: பாஸ்ட் பிரின்டெரி பிரைவேட் லிமிட்டெட், இல. 165, தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை).*

viii, *9-39 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ.,* ISBN: *978-955-7544-08-3.*

நூல் ஒன்றின் ஆரம்பப் பக்கங்கள், உள்ளடக்கம், அதைத் தொடர்ந்துவரும் பக்கங்கள் போன்றவற்றை ஒழுங்குபடுத்தவதற்கானதொரு வழிகாட்டி. நுலாசிரியர் களே "நூலாசிரிய வெளியீட்டாளர்களாக" வலம்வரும் இலங்கையில் பொதுமைப்பாடெய்திய ஒரு வரைமுறை நூலியல்துறையில் வேண்டப்படுகின்ற இக்காலகட்டத்தில் இக்கைந்நூலின் வரவு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. ஒரு தேசிய நூலகம் என்ற வகையில் இவ்வமைப்பு வழங்கும் ஆலோசனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டாளர்களால் கருத்துக்கெடுக்கப்பட வேண்டியுள்ளது. ஆரம்பப் பக்கங்கள், உள்ளடக்கப் பகுதி, பின்னிணைப்புப் பக்கங்கள் எழுத்துக்களின் அளவு, பக்கங்களுக்கு இலக்கமிடல், வெளிப்புற அட்டை தயாரித்தல் ஆகிய ஆறு பிரதான இயல்களில் இந்நூல் விளக்கப்பட்டுள்ளது.

11013

நூல்தேட்டம் தொகுதி 11. என்.செல்வராஜா. ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், இணை வெளியீட்டாளர், கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xix, 562 பக்கம், விலை: ரூபா 2000., அளவு: 21.5x15.5 சமீ., ISBN: 978-955-659-548-2.

தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பட்ட ஈழத்துத் தமிழ்நூல்களுக்கான குறிப்புரையுடன் வெளிவந்துள்ள நூல்விபரப்பட்டியலின் பதினொராவது தொகுதி இதுவாகும். இத்தொகுதியில் மேலும் 1000 நூல்களுக்கான பதிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. பிரதான பதிவு தூவி தசாம்சப் பகுப்புமுறையைத் தழுவிப் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, பாடவாரியாகப் பதியப்பட்டுள்ளது. பதிவுகள் 10001-11000 வரை தொடர் இலக்கமிடப்பட்டுள்ளன. நூல் தலைப்பு வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி என்பவற்றுடன் இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் படைப்புக்களும், முன்னைய தொகுதியின் பதிவுகளுக்கான மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகும்.

11014

மகாவித்துவான் F.X.C.நடராசா: ஆக்கங்கள்:தேர்ந்த நூல்விபரப் பட்டியல். சாம்பசிவம் தவமணிதேவி (தொகுப்பாசிரியர்). செங்கலடி: சாம்பசிவம் தவமணிதேவி, உதவி நூலகர், கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1991. (மட்டக்களப்பு: புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்).

x, 55 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

தமிழறிஞர் எப்.எக்ஸ்.சி.நடராசா அவர்களின் ஆக்கங்களின் நூற்பட்டியல் தகவல்கள் ஆண்டுவாரியாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளது. முதலாவது பதிவு 1953இல் எண்ணெய்ச் சிந்து என்ற நூலின் பதிப்பாளராக இவரை இனம்காட்டுகின்றது. யாழ்ப்பாணத்திலே காரைநகரிலே பிறந்த இவர் மட்டக்களப்பிலே திருமணம் செய்து அங்கேயே தம்முடைய வாழ்க்கையின் மிகப்பெரும் பகுதியைக் கழித்து வந்தார். சைவ சமயத்தவராகப் பிறந்து கத்தோலிக்க சமயத்தவராக மாறிய இவர் கத்தோலிக்கப் பெரியார்களையும் கத்தோலிக்க இலக்கியங்களையும் பல இடங்களிலே அறிமுகப் படுத்தியுள்ளமையைக் காணலாம். சுவாமி விபுலானந்தரைக் குருவாகக்கொண்ட இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே பேராசிரியராக இருந்து திரும்பிய அவரிடம் பாலபண்டிதம் கற்றார். அதே விபுலானந்தர் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோது, தமிழ்த்துறையில் மாணவரானார். இவர் இலங்கைப் பல்கலைக் கழகத்திலே வித்துவான் பட்டம் பெறுவதற்கு முன்பும் பின்பும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலே விரிவுரையாளராக விளங்கியுள்ளார். 1952ஆம் ஆண்டிலே அரசகரும மொழித் திணைக்களத்திலே ஆராய்ச்சி உத்தியோகத்தராக நியமனம் பெற்ற இவர், மொழிபெயர்ப்புத் துறையில் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்று, 1971 வரையில் கொழும்பிலே கடமையாற்றினார். 1952ஆம் ஆண்டுக்குப் பிற்பட்டனவாகவே, இவருடைய ஆக்கங்கள் பெரும்பாலும் அமைந்துள்ளன. மட்டக்களப்புத் தமிழகத்தின் வரலாறும் தற்கால நிலைமையும் வெளிவர உதவக்கூடிய நூல்களைத் தொகுத்தும், பதிப்பித்தும் எழுதியும் இவர் பணி யாற்றியுள்ளார். மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும் என்ற நூலின் தொகுப்பாசிரியரான இவர், மட்டக்களப்பு மான்மியம், கண்ணகி வழக்குரை (வரம்பெறுகாதை), என்னும் நூல்களைப் பதிப்பித்ததோடு பல கட்டுரைகளை எழுதியும் உதவியுள்ளமையைக் காணலாம். ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு இவருடைய சிறந்த ஆக்கங்களுள் ஒன்று. வரலாறு, புவியியல் முதலிய துறைகளிலும் இவர் எழுதிவந்துள்ளார். ஐரோப்பியர் ஆட்சியின் கீழிருந்த இலங்கைபற்றி இவர் மூன்று நூல்கள் எழுதியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11087).

020 நூலகவியல், தகவல் விஞ்ஞானம்

11015

இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம்: ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி அன்னலட்சுமி சின்னராசா ஞாபகார்த்த படிப்பகம் கட்டட திறப்புவிழா சிறப்பு மலர் 2014. மலர் வெளியீட்டுக் குழு. இணுவில்: ம.ஜெயகாந்தன், செயலாளர், இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம், 1வது பதிப்பு, ஜுன் 2014. (கோண்டாவில்: அன்ரா பதிப்பகம், உப்புமடம் சந்தி).

(2), 80 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

2014 ஜுன் இரண்டாம் நாள் இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி அன்னலட்சுமி சின்னராசா ஞாபகார்த்த படிப்பகத்தின் கட்டட திறப்புவிழாவின்போது வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். ஆசியுரைகள், வாழ்த்துரைகள், மற்றும் வாழ்த்துக் கவிதைகளுக்கு முக்கியத்துவம் தந்துள்ள இம்மலரில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி (கிராமிய வளர்ச்சியில் கிராமிய சனசமூக நிலையங்களும் கிராமிய நூலகங்களும்), லண்டன்- காலிங்கராஜா திலீபன் (இணுவில் பொது நூலகமும் வெளிநாட்டு அமைப்புக் குழுக்களும்), இணுவையூர் உத்திரன் (உயிர் விதை-சிறுகதை), அமரர் அன்னலட்சுமி சின்னராசா குடும்பத்தினர் (அமரர் அன்னலட்சுமி சின்னராசா அவர்களின் நினைவுப் பதிவாக பிள்ளைகள் வழங்கும் நிறைவுரை), செயலாளர் ம.ஜெயகாந்தன் (நன்றியுரை) ஆகியோரின் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11016

இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம்: திரு- திருமதி இராசையா-இராசம்மா ஞாபகார்த்த தகவல் தொழில்நுட்ப மையம் கட்டட திறப்புவிழா சிறப்பு மலர் 24-08-2013. மலர் வெளியீட்டுக் குழு. இணுவில்: சொ.ஹரிசங்கர், தலைவர், இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம், 1வது பதிப்பு, ஒகஸ்ட் 2013. (கோண்டாவில்: அன்ரா பதிப்பகம், உப்புமடம் சந்தி).

48 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

பல்வேறு ஊர்ப் பிரமுகர்களின் வாழ்த்துச் செய்திகளையும் சு.உத்திரன் எழுதிய "அறிவு விருத்திப் பணிகளில் இணுவில் பொது நூலகம்", சண். பத்மநேசன் எழுதிய "தமிழர் புலம்பெயர்வும் கிராம மேம்பாடும்: இராசையா இராசம்மா தகவல் தொழில்நுட்ப மையம் ஒரு சமூகவியல் நோக்கு", ஞான. திருக்கேதீஸ்வரன் எழுதிய "இணுவில் பொது நூலக செயற்பாடுகள்: ஒரு நோக்கு" ஆகிய கட்டுரைகளையும் இச்சிறு மலர் கொண்டுள்ளது.

11017

இனவெறித்தீ சுட்டெரித்த பொக்கிஷம்: ஜே.ஆர்.(தார்மீக) அரசின் கொடூரம். எஸ். அருளானந்தம். யாழ்ப்பாணம்: மறுயுகம் வெளியீடு, இல. 42, சேர் பொன் இராமநாதன் வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2015. (அச்சக விபரம் தரப்படவில்லை).

32 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 19.5x11.5 சமீ.

ஜுன் 1, 1981 இல் இலங்கை அரசபடையினரால் எரித்து அழிக்கப்பட்ட யாழ்ப் பாணப் பொது நூலகத்தின் வரலாற்றைக் கூறும் இரு கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. எஸ்.அருளானந்தம், மனோஷா ஆகிய இருவரும் இக் கட்டுரைகளை எழுதியிருக்கின்றார்கள்.

11018

தூயி தசமப் பகுப்புத் திட்டம்: 23ஆம் பதிப்புக்கான கைந்நூல். அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xiv, 310 பக்கம், விலை: ரூபா 1800., அளவு: 24x17.5 சமீ., ISBN: 978-955-659-516-1.

நூலகர்களுக்கும் நூலகவியல் துறையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் பயனுள்ள வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்நூல் Dewey Decimal Classification பகுப்புத் திட்டத்தின் 23ஆவது பதிப்பை தமிழில் விரிவாக விளக்குகின்றது. அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகராகப் பணியாற்றுகின்றார். மூன்று பகுதிகளை உள்ளடக்கிய இந்நூலின் முதலாவது பகுதியில் பிரதான வகுப்புகள் என்ற முதலாவது சாராம்சமும், பிரிவுகள் என்ற இரண்டாவது சாராம்சமும், பகுதிகள் என்ற மூன்றாவது சாராம்சமும் பிரதான அட்டவணைகள் என்ற தலைப்பின் கீழ் பொருள் வகுப்புப் பகுதி, கணினி அறிவியல்-தகவல்-பொது ஆக்கங்கள், மெய்யியலும் உளவியலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம், சமூக அறிவியல்கள், மொழியும் மொழியியலும், இயற்கை அறிவியல்களும் கணிதவியலும், தொழில்நுட்பம், கலைகள், இலக்கியம், வரலாறும் புவியியலும் ஆகிய வகுப்புகளுக்கான இலக்கங்கள் தரப்பட்டுள்ளன. பகுதி இரண்டில் பகுப்பாக்கப் பணி, தூயி தசமப் பகுப்புத் திட்டமும் எண் கட்டுமானமும், துணை அட்டவணைகளும் எண் கட்டுமானமும் (நியம உப பிரிவுகள், பிரதேச அட்டவணை, இலக்கியத்தின் உப பிரிவுகள், மொழியின் உப பிரிவுகள், இன-வகுப்பு-தேசிய குழுமங்கள், மொழிகள்), சிறப்பு இணைப்பெண்களும் எண் கட்டுமானமும் ஆகிய விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. பகுதி மூன்றில் சார்புச் சொல்லடைவுகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் தரப்பட்டுள்ளன. வகுப்பெண்கள், விரிவான வகுப்பெண்கள் என்பன பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

11019

தூவி தசாம்சப் பகுப்பாய்வு. சிற்றம்பலம் முருகவேள். கொழும்பு: கொழும்புத் தமிழ்ச் சங்கம், இல. 7, 57ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(57) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

நூலகங்களில் நூல்களைப் பகுப்பாக்கம் செய்வதற்குப் பரவலாகப் பயன்படுத்தப் பட்டு வரும் தூவி தசாம்சப் பகுப்பு முறையின் தமிழ் வடிவம். சுருக்கப் பிரிவு களுடன் தரப்பட்டுள்ளது. மெல்வில் லூயிசு கோசுத் தூவி (Melville Louis Kossuth Dewey, மெல்வில் டூயி, டிசம்பர் 10, 1851-டிசம்பர் 26, 1931) ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த நூலகவியலாளராவார். தூவி தசம வகைப்படுத்தல் முறையினை அறிமுகப்படுத்தியவர் இவரே. அமரர் சி.முருகவேள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நூலகராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 53881).

11020

நூலக மரத் தளபாடங்கள். இலங்கைத் தேசிய நூலகம். கொழும்பு 7: இலங்கைத் தேசிய நூலகம், 14, சுதந்திர வீதி, 1வது பதிப்பு, 1994. (கொழும்பு 10: சதொச பிரின்டர்ஸ், 290, டீ.ஆர்.விஜேவர்த்தன மாவத்தை).

x, 28 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 50., அளவு: 18.5x25 சமீ., ISBN: 955-9011-76-6.

இலங்கையில் நூலகங்களின் உபயோகத்திற்குப் பொருத்தமான மரத்தளபாடங்களின் வடிவமைப்பைக் கொண்ட வெளியீடு இது. ஒவ்வொரு மரத் தளபாடங்களுடனும் அவற்றுக்கான வரைபடங்கள், அவற்றைத் தயாரிக்கும் விபரங்கள் போன்றன குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இதனால் வடிவமைப்புக்கு ஏற்ப மரத் தளபாடங் களைத் தயாரிப்பது பற்றித் தெளிவாக விளக்கத்தைப் பெறமுடிகின்றது. நூற் பட்டியற்கோவைப் பெட்டகம், அறிவித்தற் பலகை, நூற்காட்சிக்கான தாங்கி, நூல்களைக் காட்சிக்கு வைக்கும் தாங்கிகள், பருவ வெளியீட்டுத் தாங்கி, நூல் வழங்கும் மேசை, இரவல் வழங்கும் நூல்களின் பதிவுத்தட்டு, கைதாங்கிக் கதிரை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகரின் மேசை, சிறுவர் கதிரை, வாசிப்பு மேசை, புதினத்தாள் தாங்கி, நூற்தட்டு/ நூற்தட்டின் பின்பக்கம், பருவ வெளியீட்டுத் தாங்கி, புதினப் பத்திரிகைத் தாங்கி, கண்ணாடி அலுமாரி, நூல் தாங்கிகள், நூற்தள்ளுவண்டி, சஞ்சிகைகளுக்கான பெட்டிகள், ஒளிப்பதிவு நாடாத் தாங்கி, விசேட ஆராய்ச்சிப் படிப்பறைகள் என பல்வேறு வகையான நூலகத் தளபாடங்கள் பற்றி இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ளது.

11021

பத்தாண்டு நிறைவுவிழா மலர்: 1990-2000.தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையம். கொழும்பு 7: தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையம், இல. 14, சுதந்திர வழி, 1வது பதிப்பு, 2000. (மகரகம: தரஞ்ஜி பிரின்டர்ஸ், நாவின்ன).

72 பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ., ISBN: 955-8383-02-3.

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையம் உருவாக்கம்பெற்று பத்தாண்டுகள் கழிந்த நிலையில் நிறைவுவிழா வெளியீடாக இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தின் சார்பில் இம்மலரின் உருவாக்கத்தில் உபாலி அமரசிரி அவர்கள் பணியாற்றியுள்ளார். தமிழக்கம் செய்வதில் கமலாம்பிகை கந்தப்பு, துஷ்யந்தி டானியல் ஆகியோர் இயங்கியுள்ளனர். இம்மலரின் உள்ளடக்கமாக கௌரவ ஜனாதிபதியின் செய்தி, கௌரவ பிரதமரின் செய்தி, கௌரவ கல்வி உயர்கல்வி அமைச்சரின் செய்தி, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைத் தலைவரின் செய்தி, பணிப்பாளர் நாயகத்தின் குறிப்பு ஆகியவற்றுடன் மேற்படி ஆவணவாக்கல் மத்திய நிலையத்தின் செயற்பாடுகள் பற்றிய குறிப்புகளாக, பிரவேசம், தேசிய நூலகச் சேகரிப்பு, வாசகர் சேவை, நூற்பட்டியலாக்கச் சேவை, ஆவணவாக்கல் சேவை, தகவல் தொழில்நுட்ப சேவை, பேணல் புதுப்பித்தல் செயற்பாடு, வெளிக்களத் தொடர்புகள், கலாசாரச் செயற்பாடுகள், ஒழுங்கமைப்பின் வியூகம் ஆகிய அத்தியாயங்கள் எழுதப் பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25768).

11022

பொது நூலகங்களுக்கான நியமங்கள்.நூலகச் சங்கங்களின் சர்வதேச சம்மேளனம், எஸ்.எம்.கமால்தீன் (தமிழாக்கம்). கொழும்பு 7: ஸ்ரீலங்கா தேசிய நூலகம், சுதந்திர வழி, 1வது பதிப்பு, 1993. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(12), 64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-9011-69-3.

நூலகச் சங்கங்களின் சர்வதேச சம்மேளனத்தின் IFLA பொதுநூலகப் பிரிவு (International Federation of Library Associations section of Public Libraries) வெளியிட்ட Standards for Public Libraries என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம். இது திறமையான பொது நூலக சேவைகளைப் பராமரிப்பதற்கேற்ற ஏற்பாடுகளின் நியமங்களுக்கான அறிவுரையாகும். யுனெஸ்கோ பொது நூலகக் கொள்கை விளக்க அறிவிப்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுனெஸ்கோ கொள்கை விளக்க அறிவிப்பின் அடிப்படையிலான சில பொது விதிகள், நியமங்களின் அவசியம், நிர்வாகத்திற்கும் சேவைக்குமான அலகுகள், நூற்சேர்க்கைக்கான நியமங்கள், கட்புல-செவிப்புல சாதனங்கள், சிறப்புக் குழுக்களுக்கான நியமங்கள், அலுவலர்களுக்கான நியமங்கள், கட்டிடங்களுக்கான நியமங்கள், சிறுவர்களுக்கான நூலக சேவைகள் ஆகிய பிரிவுகளுக்குக்குக் கீழாக இந்த நியமங்கள் வகைப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16413).

11023

ஸ்ரீ லங்கா தேசிய நூலகம்: ஞாபகார்த்த மலர் 1990. M.S.U. அமரசிரி (பதிப்பாசிரியர்). கொழும்பு 7: ஸ்ரீலங்கா தேசிய நூலகம், சுதந்திர வழி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1990. (அச்சக விபரம் தரப்படவில்லை).

211 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ., ISBN: 955-9011-51-0.

இலங்கை தேசிய நூலக சேவைகள் சபை, சுதந்திர வழியில் (சுதந்திரச் சதுக்கத்தை நோக்கிய தெருவில்) தனியான புதிய கட்டிடத்தில் குடியேறிய பின்னர் ஸ்ரீலங்கா தேசிய நூலகமாகப் பெயர்மாற்றம் செய்துகொண்டமையை குறித்து 27.04.1990 அன்று நடந்த சிறப்பு நிகழ்வையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர். நூலக சேவைகள் சார்ந்து இருபது கட்டுரைகளுடன் வெளிவந்துள்ள இம்மலரில் 17 ஆங்கிலக் கட்டுரைகளும், இரண்டு சிங்களக் கட்டுரைகளும், "ஸ்ரீலங்கா தேசிய நூலகம்" என்ற தலைப்பில் ஸ்ரீலங்கா நூலக சங்கத்தின் உப தலைவராகப் பணியாற்றிய எஸ்.எம்.கமால்தீன் அவர்களின் தமிழ்க் கட்டுரையும் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20340).

050 பொதுப் பருவஇதழ்கள், வழிகாட்டிகள், சுட்டிகள்

11024

பாரதி: 1948-1950:மண்டூரிலிருந்து வெளிவந்த பாரதி சஞ்சிகைத் தொகுப்பு. சின்னத்தம்பி சந்திரசேகரம் (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: கலை இலக்கிய அவை, மண்டூர், 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxxii, 328 பக்கம், விலை: ரூபா: 800., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-7202-00-6.

இத்தொகுப்பு நூல், 1948 முதல் 1950 வரை கிழக்கிலங்கையில் மண்டூரிலிருந்து வெளிவந்த "பாரதி" என்ற சஞ்சிகையின் உள்ளடக்கத்தை கட்டுரைகள், சிறுகதைகள், குட்டிக்கதைகள், கவிதைகள், இளைஞர் பகுதி (கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள்), மங்கையர் மன்றம் (கட்டுரைகள், உரையாடல்), பாலர் பகுதி (கதைகள், கவிதைகள்), ஆசிரியர் கருத்துக்கள்-செய்திகள்-கடிதங்கள், பாரதி சஞ்சிகையின் முன்னட்டைப் பக்கங்கள் ஆகிய பிரிவுகளாகப் பகுத்து, அவ்வப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுகளுக்குள் உரிய ஆக்கங்களைப் பதிவுசெய்துள்ளனர். இதிலுள்ள படைப்புகளை சிவாஜி, அன்புதாசன், சுமாலி, ராணி, ந.குணரெத்தினம், பாஞ்சாலி, நாகேஸ்பரி, தேவகி, ந.ஜெயமணி, சியாமளா, மு.முத்தையா, எஸ்.கமலாதேவி, பு.ஜோ.ஜெயராஜ், சாவை.த.யோகநாதன், எஸ்.கே.ராஜா, சுத்தானந்த பாரதியார், மூனாக்கானா, சுபமணி, எம்.சோமசுந்தரம்பிள்ளை, ராஜாராம், ஏ.சீ.அன்புதாசன், ஜோஸ், ஜி.எம்.செல்வராஜ், ஏ.பெரியதம்பிப்பிள்ளை, பரமஹம்ஸதாசன், குட்டி, இ.தங்கம்மா, மூர்த்தி, கிரிஜா, வி.சந்திரசேகரம், என்.சாமித்தம்பி, வெண்ணிலா (இரகுநாதன்), எம்.எம்.ஸாலிஹ், வ.அ.இராசரத்தினம் ஆகியோர் எழுதியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61175).

11025

மறுமலர்ச்சி இதழ்களின் தொகுப்பு 1946-1948. கோப்பாய் சிவம், செல்லத்துரை சுதர்சன் (பதிப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீநகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 1வது பதிப்பு, 2016. (யாழ்ப்பாணம்: குரு பிரிண்டர்ஸ், 39/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

95+812+38 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 3000., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-50044-3-5.

மறுமலர்ச்சி ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் மிக முக்கியமான ஒரு சஞ்சிகை. 1946 ஆம் ஆண்டு பங்குனியில் முதல் இதழ் வெளியானது. மறுமலர்ச்சி எழுத்தாளர் தி.ச.வரதராசன் மறுமலர்ச்சி சங்கத்தினதும் மறுமலர்ச்சியினதும் மூலவர். 23 இதழ்களினதும் பிரதம ஆசிரியராகப் பணியாற்றியவர். மறுமலர்ச்சி எழுத்தாளர் அ.செ.முருகானந்தன் 1வது இதழிலிருந்து 18ஆவது இதழ் வரை இணை ஆசிரியராகப் பணியாற்றியவர். அவரைத் தொடர்ந்து மறுமலர்ச்சிப் பண்டிதர் ச.பஞ்சாட்சர சர்மா (கோப்பாய் சிவம் அவர்களின் தந்தை) அவர்கள் 18ஆவது இதழிலிருந்து 23ஆவது இதழ்வரை துணையாசிரியராகப் பணியாற்றியவர். கா.மதியாபரணம், நாவற்குழியூர் நடராசன், க.இ.சரவணமுத்து ஆகியோரும் இணைந்து மறுமலர்ச்சிச் சஞ்சிகையை வளர்த்தெடுத்தார்கள். ஐப்பசி 1948 வரை 23 இதழ்கள் வெளியாகின. 23 இதழ்கள் மாத்திரம் வெளிவந்திருந்தாலும் மகாகவி, இலங்கையர்கோன், முதலிய இலக்கிய ஆளுமை மிக்க எழுத்தாளர்கள் பலரை ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தியமை மறுமலர்ச்சி மேற்கொண்ட குறிப்பிடத்தக்க சாதனை எனலாம். மறுமலர்ச்சியில் வெளிவந்த சிறுகதைகள் செங்கை ஆழியானால் தொகுக்கப்பட்டு மறுமலர்ச்சி சிறுகதைகள் என்ற நூலாகப் பிரசுரமாகியுள்ளன. இதேபோல் மறுமலர்ச்சிக் கவிதைகளை செல்லத்துரை சுதர்சன் தொகுத்து வெளியிட்டுள்ளார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. பலரிடம் கைவசம் இருந்த மறுமலர்ச்சி இதழ்கள் கால வெள்ளத்தில் கரைந்துபோக, கோப்பாய் சிவத்திடமே எல்லா இதழ்களும் பாதுகாப்பாக இருந்தன. இன்று அவை அவருடைய முயற்சியினாலும் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் செ சுதர்சனின் முயற்சியினாலும் 945 பக்கங்கள் கொண்ட தொகுப்பு நூலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61236).

051 பொதுப்பருவஇதழ் சிறப்பிதழ்கள்

11026

தமிழர் தகவல்: 26ஆவது ஆண்டு மலர்: இளவேனில் சுவடு. எஸ்.திருச்செல்வம் (பிரதம ஆசிரியர்), Canada: Tamil's Information, Ahilan Associates, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4, 1வது பதிப்பு, பெப்ரவரி 2017. (Canada: Ahilan Associates, Printers and Publishers, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4).

192 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ., ISSN: 1206-0585.

பெப்ரவரி 1991 முதல் கனடாவிலிருந்து வெளிவரும் தமிழர் தகவல் மாத சஞ்சிகையின் 25ஆவது ஆண்டு நிறைவு மலர். அமெரிக்க, கனடியத் தமிழ் மக்களினதும், ஐரோப்பியத் தமிழர்களினதும் 100க்கும் மேற்பட்ட அறிவியல் ஆக்கங்களைத் தாங்கி இது வெளிவந்துள்ளது. தமிழர் தகவல் ஆண்டுதோறும் வழங்கும் விருதுகளைப் பெறுவோர் பற்றிய விபரங்களும் இம்மலரில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. பெப்ரவரி 2017இல் கனடாவின் ரொரன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபா மண்டபத்தில் இடம்பெற்ற ஆண்டு விழாவின்போது இம்மலர் வெளியிடப்பட்டது.

053 வழிகாட்டிகள்

11027

வரதரின் பலகுறிப்பு 1964-65. நா.சோமகாந்தன் (தொகுப்பாசிரியர்), தி.ச.வரதராசன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, மே 1964. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).

540 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

வரதரின் பலகுறிப்பு 1971. நா.சோமகாந்தன் (தொகுப்பாசிரியர்), தி.ச.வரதராசன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, 4வது பதிப்பு, மார்ச் 1971. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).

184 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

யாழ்ப்பாணத்தில் வெளிவந்த வரலாற்று முக்கியத்துவமான தமிழ் வழிகாட்டி (Directory) நூல். லேக்ஹவுஸ் நிறுவனத்தின் Ferguson Directory யின் பாணியில் ஈழத்தமிழ் மக்களுக்கு உபயோகப்படக்கூடிய பலவித விடயங்களையும் தொகுத்து வெளியிடப்பட்டது. அரசாங்கம், அஞ்சல்பகுதி விபரங்கள், புகையிரதப் பகுதி, ஊழியர் சேமநிதித் திட்டம், வரி, கல்விப் பகுதி, பத்திரிகைகள், புத்தகங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாங்கக் குறிப்பு, வரலாற்றுக் குறிப்புகள், வர்த்தக நிலையங்கள், மாநகரசபைகள், முகவரிகள் ஆகிய பிரிவுகளில் எராளமான தகவல்களை இந்நூல் தருகின்றது. இந்நூல் இற்றைப்படுத்தப்பட்டு தொடர்ச்சியாக வெளிவராது 1971இல் வெளிவந்த நான்காவது பதிப்புடன் கைவிடப்பட்டமையை அறியமுடிகின்றது. (இந்நூலின் முதற் பதிப்பு கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21564. நான்காவது பதிப்பு, நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 017228).

060 பொது நிறுவனங்கள்

11028

கிராமிய பூபாளம் 2016: சிறப்பு மலர். மலர்க்குழு. ஜேர்மனி: புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம், என்னப்பெற்றால், 1வது பதிப்பு, 2016. (ஜேர்மனி: ராஜி பதிப்பகம், Neu Str.53, 58256, Ennepetal).

52 பக்கம், வண்ணப்படங்கள், விலை: அன்பளிப்பு, அளவு: 26.5x18.5 சமீ.

புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம் ஜேர்மனியில் என்னெப்பெற்றால் பிரதேசத்தில் 1.10.2016 அன்று நடத்திய கிராமிய பூபாளம் கலைமாலைப்பொழுது நிகழ்வில் வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். மேற்படி நற்பணி ஒன்றியத்தின் பல்வேறு தாயகப் பணிகள் பற்றிய புகைப்படங்களுடன் கூடிய நிகழ்வு அறிக்கைகளுடன், ஆசியுரைகள், கட்டுரைகள் என்பனவும் உள்ளடக்கப்பெற்று இம்மலர் வெளிவந்துள்ளது. புங்குடுதீவுப் பிரதேசம் பற்றிய தமது மனப்பதிவுகளைத் தாங்கிய பல புலம்பெயர்ந்தோரின் கட்டுரைகளை இம்மலரில் காணமுடிகின்றது.

11029

கிராமிய பூபாளம் 2017: சிறப்பு மலர். மலர்க்குழு. ஜேர்மனி: புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம், என்னப்பெற்றால், 1வது பதிப்பு, 2017. (ஜேர்மனி: ராஜி பதிப்பகம், Neu Str.53, 58256, Ennepetal).

68 பக்கம், வண்ணப்படங்கள், விலை: அன்பளிப்பு, அளவு: 30x21 சமீ.

புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம் ஜேர்மனியில் என்னெப்பெற்றால் பிரதேசத்தில் 30.09.2017 அன்று நடத்திய கிராமிய பூபாளம் கலைமாலைப்பொழுது நிகழ்வில் வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். மேற்படி நற்பணி ஒன்றியத்தின் பல்வேறு தாயகப் பணிகள் பற்றிய புகைப்படங்களுடன் கூடிய நிகழ்வு அறிக்கைகளுடன், ஆசியுரைகள், கட்டுரைகள் என்பனவும், கடந்த ஆண்டு நடைபெற்ற கிராமிய பூபாளம் 2016 நிகழ்வுகளின் புகைப்படத் தொகுப்பும் இடம்பெற்றுள்ளன. புங்குடுதீவுப் பிரதேசம் பற்றிய தமது மனப்பதிவுகளைத் தாங்கிய பல புலம்பெயர்ந்தோரின் உரைகளையும் இம்மலரில் காணமுடிகின்றது. சிறப்புக் கட்டுரையாக நூலகவியலாளர் என்.செல்வராஜா எழுதிய "பிரதேச வரலாற்று மூலங்களில் புங்குடுதீவு: ஒரு நூல்வழித் தேடல்" என்ற கட்டுரை (பக்கம் 21-34) இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11030

கொழும்புத் தமிழ்ச்சங்கம்: 62,63வது ஆண்டு அறிக்கைகள் (2003-2005). *கொழும்புத் தமிழ்ச் சங்கம். கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், இல. 7, 57ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).*

64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

1942ம் ஆண்டு மார்ச் மாதம் 22ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கொழும்புத் தமிழர் முன்னேற்றக் கழகம், 1945இல் கொழும்புத் தமிழ்ச் சங்கம் எனப் பெயர் பெற்றது. 2003-2005 காலகட்டத்துக்கான இச்சங்கத்தின் ஆண்டறிக்கைகள் நூலுருவில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இக்காலகட்டத்தில் சங்கத்தின் பொதுச்செயலாளராக ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் பணியாற்றினார்கள். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36547).

070 ஊடகவியல், வெளியீட்டுத்துறை

11031

ஈழநாடு: ஒரு ஆலமரத்தின் கதை. *என்.செல்வராஜா (தொகுப்பாசிரியர்). லண்டன்: அயோத்தி நூலக சேவைகள்- ஐக்கிய இராச்சியம், 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xv, *256 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.,* ISBN: *978-0-9930143-0-7.*

ஈழத்தின் முதலாவது பிராந்தியத் தமிழ்த் தினசரியான ஈழநாடுவின் வரலாற்றை அந்த ஆலமரத்தின் விழுதுகளின் வாயிலாகவே ஆசிரியர் பதிவுசெய்திருக்கின்றார். ஈழத்தமிழரின், குறிப்பாக வடபுலத்தமிழரின் மனதில் மட்டும் வாழ்ந்துவந்த ஒரு பத்திரிகையின் வரலாற்றை உலகத் தமிழரின் பார்வைக்குக் கொண்டுசென்று சேர்ப்பதை நோக்காகக் கொண்ட ஒரு வரலாற்றுப் பதிவு முயற்சியே இதுவாகும். நூலகவியலாளர் செல்வராஜா முன்னர் யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் வரலாற்றையும் இவ்வாறு பதிவுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கே.சி.தங்கராஜா, என்.செல்வராஜா, கா.சிவத்தம்பி, கே.ஜீ.மகாதேவா, பொன்.பாலசுந்தரம், கே. குப்புசாமி, குணமணி கதிரவேலு, சீ.இரத்தினசபாபதி, எஸ்.பெருமாள், ச.அம்பிகைபாகன், பி.எஸ்.பெருமாள், ஈ.கே.ராஜகோபால், எஸ்.பி.கிருஷ்ணன், மாத்தளை ஆ.இராஜலிங்கம், செங்கை ஆழியான், எஸ்.திருச்செல்வம், அனந்த பாலகிட்னர், சு.சபாரத்தினம், ஊரெழு அ.கனகசூரியர், ம.வ.கானமயில்நாதன், எஸ்.கே.காசிலிங்கம், எஸ்.எம்.கோபாலரத்தினம், இ.கந்தசாமி, பொ.இரகுபதி ஆகியோரின் நினைவுப்பதிகைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11032

செய்தி சேகரித்தலும் அறிவித்தலும். திறந்த பல்கலைக்கழகம். நுகேகொட: பொதுசனத் தொடர்புத் துறைச் சான்றிதழ்த் திட்டம், வெகுசன தொடர்புத்துறைப் பாடநெறிக் குழு, மானிடவியல் சமூக விஞ்ஞானத்துறை, நாவல, 1வது பதிப்பு, 1992. (நுகேகொட: திறந்த பல்கலைக்கழக அச்சகம், நாவல).

(6), 96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x20.5 சமீ.

திறந்த பல்கலைக்கழகம் நடத்தும் பொதுசனத் தொடர்புத் துறைச் சான்றிதழ்த் திட்டத்திற்கான பாடவிதானத்துக்கமைய உருவாக்கப்பட்ட பாடநூல் இது. எது செய்தி?, இயங்கும் செய்தித்துறைக்கு இன்றியமையாதவை, பேச்சு, கூட்டம், பயிற்சிக் களம், மாநாடு, ஆகியவை பற்றிய செய்திகள், குற்றச் செயல்கள், வழக்கு விசாரணைகள் பற்றிய செய்தி, பத்திரிகை மாநாடுகள் அறிக்கைகள் சார்ந்த செய்தி, பாராளுமன்ற நடவடிக்கைகள் பற்றிய செய்தி, மாகாணச் செய்திகள், வானொலி தொலைக்காட்சி ஊடகச் செய்திகள், செய்தித்துறை ஊடகம் ஆகிய பத்துப் பாடங்கள் இந்நூலில் விரிவாக விளக்கப்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31434).

11033

செய்தித்துறை: செய்தித்துறைக்கு ஓர் அறிமுகம். திறந்த பல்கலைக்கழகம். நுகேகொட: பொதுசனத் தொடர்புத் துறைச் சான்றிதழ்த் திட்டம், வெகுசன தொடர்புத்துறைப் பாடநெறிக் குழு, மானிடவியல் சமூக விஞ்ஞானத்துறை, நாவல, 1வது பதிப்பு, 1992. (நுகேகொட: திறந்த பல்கலைக்கழக அச்சகம், நாவல).

(8), 89 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x20.5 சமீ.

திறந்த பல்கலைக்கழகம் நடத்தும் பொதுசனத் தொடர்புத் துறைச் சான்றிதழ்த் திட்டத்திற்கான பாடவிதானத்துக்கமைய உருவாக்கப்பட்ட பாடநூல் இது. செய்தித்துறை ஓர் அறிமுகம், செய்திகள், செய்திப் பத்திரிகை என்றால் என்ன, பத்திரிகையை உருவாக்குவோர், ஒலிபரப்புத் துறைக்கு ஓர் அறிமுகம், ஒலிபரப்பு ஊடகம், வானொலிச் செய்தி, செய்தித்துறையின் வளர்ச்சி ஆகிய எட்டு பிரிவுகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31433).

11034

புலனாய்வு அறிக்கையிடல். ரூபன் மரியாம்பிள்ளை. யாழ்ப்பாணம்: பிஷப் சவுந்தரம் பத்திரிகையியல் நிலையம், 891, ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2012. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், 360 பிரதான வீதி).

xi, 212 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 24x18.5 சமீ.

சமுதாயத்தில் நடக்கும் அனைத்து விடயங்களையும் அறியவேண்டிய உரிமை மக்களுக்கு மறுக்கப்படுகின்ற வேளையில் அல்லது மறைக்கப்படுகின்ற வேளையில் புலனாய்வு அறிக்கையிடலுக்கான களமொன்று உருவாகின்றது. ஊடகவியலாளர்கள் மறைத்து வைக்கப்படும் விடயங்கள் தொடர்பாகக் கேள்விகளை எழுப்புகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரப்படும் பதில்களின் உண்மைத் தன்மைகளை உறுதிப்படுத்துகின்றவிதமாகச் சான்றுகளைத் தேடி அலைகின்றார்கள். இதுவே புலனாய்வு அறிக்கையிடல் (Investigative Reporting) எனப்படும். இத்துறை பற்றிய விரிவான தகவல்களை ஊடகவியல்துறை மாணவர்களுக்காக இந்நூலில் 15 இயல்களில் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்கள் வழங்கியிருக்கிறார். (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 13169).

11035

பொதுசன தொடர்புத் துறையில் மொழியும் அதன் நடையும். திறந்த பல்கலைக்கழகம். நுகேகொட: பொதுசனத் தொடர்புத் துறைச் சான்றிதழ்த் திட்டம், சமூக கல்வியியல் பிரிவு, மானிடவியல் சமூக விஞ்ஞானத்துறை, நாவல, 1வது பதிப்பு, 1991. (நுகேகொட: திறந்த பல்கலைக்கழக அச்சகம், நாவல).

106 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.

திறந்த பல்கலைக்கழகம் நடத்தும் பொதுசனத் தொடர்புத் துறைச் சான்றிதழ்த் திட்டத்திற்கான, மட்டம் 2 பாடவிதானத்துக்கமைய உருவாக்கப்பட்ட பாட நூல் இது. மொழியும் நடையும், அடிப்படையிலக்கணம், வழுவின்றி எழுதுவோம், மொழிபெயர்ப்புக் கலை, செய்தி எழுதும் மொழிநடை, கட்டுரை எழுதும் முறை ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31432).

11036

பொதுசன தொடர்புத் துறையின் வளர்ச்சியும் அமைப்பும். திறந்த பல்கலைக்கழகம். நுகேகொட: பொதுசனத் தொடர்புத் துறைச் சான்றிதழ்த் திட்டம், சமூக கல்வியியல் பிரிவு, மானிடவியல் சமூக விஞ்ஞானத்துறை, நாவல, 1வது பதிப்பு, 1992. (நுகேகொட: திறந்த பல்கலைக்கழக அச்சகம், நாவல).

(7), 99 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.

திறந்த பல்கலைக்கழகம் நடத்தும் பொதுசனத் தொடர்புத் துறைச் சான்றிதழ்த் திட்டத்திற்கான பாடவிதானத்துக்கமைய உருவாக்கப்பட்ட பாடநூல் இது. அச்சு ஊடகம்-வளர்ச்சியும் அமைப்பும், இலங்கையில் பத்திரிகைகளின் வரலாறு, ஒலி ஊடகம் வளர்ச்சியும் அமைப்பும், இலங்கையில் ஒலிபரப்புக் கலையின் வளர்ச்சி, ஒளி ஊடகம் வளர்ச்சியும் கட்டமைப்பும், இலங்கையில் தொலைக்காட்சியின் வளர்ச்சி, பொதுசன தொடர்புத்துறை சம்பந்தமான தொழில்நுட்ப வளர்ச்சி ஆகிய ஏழு பாடங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31435).

11037

மின் கணனித் தமிழ் அச்சமைப்பில் உருவான 'நிழல்' எனும் முதல் தமிழ்ப் பத்திரிகையின் வரலாறு. ஈழத்துப் பூராடனார் (இயற்பெயர்: க.தா.செல்வராசகோபால்). கனடா: நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், தொரன்ரோ, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (கனடா: றீ கொப்பி, Toronto, Ontario).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

274 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: கனேடிய டொலர் 5., அளவு: 21x14 சமீ.

மின்கணனித் தமிழ் அச்சமைப்பின் பிறப்பிடம் கனடாவே, தொரன்ரொ றிப்ளக்ஸ் அச்சகம்: மின் கணனித் தமிழ் அச்சமைப்பின் முன்னோடிகள், மின் கணனித் தமிழும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தமும், கனடாவில் வளரும் தமிழ்ச் சமுதாய வரலாற்றுக் கண்ணோட்டம், கனடாவில் வளரும் தமிழ் அச்சுக்கலை வளர்ச்சியும் பொதுசனத் தொடர்பு ஊடக வளர்ச்சியும், மின் கணனித் தமிழ் அச்சமைப்பில் வெளிவந்த முதற் பத்திரிகை-நிழல் ஆகிய கட்டுரைகளின் வழியாக ஆசிரியர் அச்சுக் கலையின் புதிய பரிணாம வளர்ச்சியில் ஈழத்தின் கிழக்குக் கரையோர மட்டக்களப்பு மாநிலத்தில் உள்ள தேற்றாத் தீவு என்னும் குக்கிராமத்தில் இருந்து கனடாவில் குடியேறிய ஒரு குடும்பத்தின் அரிய முயற்சியும் கலந்துள்ளது என்பதைப் பதிவுசெய்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34203).

11038

யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகள்(1900-1915). சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

x, 92 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-509-3.

இந்நூலில் இரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. முதலாவது கட்டுரை "வட இலங்கையில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் (1900-1915) வெளியிடப்பட்ட தமிழ்ப் பத்திரிகைகளும் அவற்றினூடாக நாம் காணும் யாழ்ப்பாணமும்" என்ற தலைப்பில் 2008ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட ஆய்வுத் தொடரில் சமர்ப்பிக்கப்பட்டது. இரண்டாவது கட்டுரை "சுதேச நாட்டியம் பத்திரிகையும் (1902-1915) கல்லடி வேலனும்" என்ற தலைப்பில் ஏ.ஜே.கனகரத்தினா நினைவுப் பேருரையாக 2008ஆம் ஆண்டு வாசிக்கப்பட்டது. வட இலங்கை ஆரம்பகாலப் பத்திரிகைகள் பற்றிய ஆய்வாக இருந்தபோதிலும் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட சமூக பொருளாதார கலாசார நிலைமைகளை வெளிக்காட்டும் ஆய்வாக இது அமைந்துள்ளது. நவீன வரலாற்றைத் தன் ஆய்வுப்புலமாகக் கொண்ட திருமதி சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறையில் 35 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வருகிறார்.

11039

வீரகேசரி அன்று முதல் இன்று வரை: 1930-2010. ஆர்.பிரபாகரன் (நாளிதழ் ஆசிரியர்), வீ.தேவராஜா (வாரமலர் ஆசிரியர்). கொழும்பு 14: வீரகேசரி, எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் பிரைவேட் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 14: ENCL Commercial Printing Department, எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் பிரைவேட் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(14), 400 பக்கம், ஓவியங்கள், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 42x30 சமீ.

அமரர் பெ.பெரி.சுப்பிரமணியச் செட்டியார் அவர்களால் கொழும்பில் நிறுவப்பட்ட வீரகேசரி தனது முதலாவது இதழை 6.8.1930இல் ஆரம்பித்து வைத்தது. 80 ஆண்டுகள் கடந்த நிலையில் வீரகேசரியின் வரலாற்று முக்கியத்துவமான 400 இதழ்களின் முன் பக்கங்களின் புகைப்படப் பிரதி வடிவங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தினப் பதிப்பின் முதல் இதழ் (மலர் 1, இதழ் 1), 8 பக்கங்களில் 5 சதத்திற்கு விற்கப்பட்டுள்ளது. இந்நூலின் முதலாவது இதழ் முதல் 23.4.2010 (மலர் 80, இதழ் 220) வரையிலான 400 முதற் பக்கங்களும் இலங்கையின் பல வரலாற்றுத் தகவல்களையும் புகைப்படங்களையும் தாங்கி நிற்கின்றன. (இந் நூல் இலங்கைத் தேசிய நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 171003).

11040

வெகுசன ஊடகவியல் ஓர் அறிமுகம். *ஸ்ரீதயாளன் ஸ்ரீபிருந்திரன். கொழும்பு: காயத்திரி பப்ளிக்கேஷன்ஸ், இல. 68, டீ சில்வா வீதி, களுபோவில, தெகிவளை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2015. (தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன்ஸ், இல. 68, டீ சில்வா வீதி, களுபோவில).*

xvi, *120 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 21x14.5 சமீ.,* ISBN: *978-955-42230-0-4.*

இலங்கை ஊடகவியல் வரலாற்றில் இலத்திரனியல் ஊடகங்களின் வளர்ச்சியும் போக்கும் அத்தியாவசியமான ஒன்றாக மாறியுள்ள சூழலில், இந்நூலாசிரியர் தொலைக்காட்சியின் வரலாற்றையும், தொலைக்காட்சிசேவையில் ஈடுபட விரும்பும் இளையோருக்கான அறிவியல் தகவல்களையும் வழங்கும் கைநூலாக இதனை ஆக்கியிருக்கிறார். வெகுசனத் தொடர்பாடல், வெகுசனத் தொடர்பாடலின் வளர்ச்சி, இலங்கையில் காணொளி ஊடகங்களில் பண்பாட்டுப் பரவல், தொலைக்காட்சிச் செய்திப் படைப்பு, (தொலைக்காட்சி பற்றிய ஓர் அறிமுகம், தொலைக்காட்சி செய்தி, தொலைக்காட்சி செய்தித் தயாரிப்பில் பங்குபற்றுவோர், பணிக்கூறுகள், தொலைக்காட்சி செய்திச் சேகரிப்பு, தொலைக்காட்சி செய்தி எழுதுதல், தொலைக்காட்சி செய்திச் செம்மையாக்கல், தொலைக்காட்சி செய்தித் தயாரிப்பு), ஊடகங்களில் மகிழ்நெறி ஆகிய ஐந்து இயல்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14364).

070.01 ஆசிரியத் தலையங்கங்கள்/பத்தி எழுத்துக்கள்

11041

காலியாக்கப்பட்ட நாற்காலியில் அமர்ந்திருக்கும் புலி: அரசியல் பத்திகள். *ப.தெய்வீகன். கிளிநொச்சி: மகிழ் பதிப்பகம், 754 கனகராசா வீதி, திருநகர் வடக்கு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2017. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(12), 13-181 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x14.5 சமீ.

தமிழர்கள் அரசியலைப்பற்றிக் கதைக்கும் அளவுக்கு அரசியலை அறிவுரீதியாக அணுகுவதுமில்லை ஆராய்வதுமில்லை. மிக அபூர்வமாகவே முறைப்படியமைந்த துறைசார் நிலையிலான ஆய்வுகள் நடப்பதுண்டு. மிகக் குறைந்தளவு நூல்களே இத்துறையில் வெளியாகியுள்ளன. அப்படி வெளியான நூல்களும் பொது வெளியில் கூர்மையாக வாசிக்கப்படுவதுமில்லை, விவாதிக்கப்படுவதுமில்லை. தமிழ் அரசியல் தலைவர்களே நூல் வாசிப்பதில்லை. பிற சமூகங்களில் தங்களது அரசியல் சிந்தனைகளையும் வழிமுறைகளையும் தாம் முன்னெடுக்கும் அரசியலையும் பற்றித் தலைவர்கள் எழுதுகிறார்கள். அவை பொது வெளியில் விவாதிக்கப்படுகின்றன. தமிழில் இந்தப் பண்பு மிக அபூர்வமானது. இடதசாரிகளைத் தவிர்ந்த வேறு எந்தத் தலைவரும் தங்கள் பார்வைகளை முன்வைத்து விவாதித்ததில்லை. தங்களுடைய கோட்பாட்டை முன்னிறுத்த எவரும் உரையாடியதில்லை. ஆனால், இணையத்தளங்களிலும் அச்சு ஊடகங் களிலும் ஏராளமான அரசியல் ஆய்வுக் கட்டுரைகள் தினமும் எழுதப்படுகின்றன. இருப்பினும் தமிழ் அரசியலானது அறிவுபூர்வமானதாக வளர்ச்சியடையவில்லை. இத்தகைய பின்னணியிலேயே தெய்வீகனின் 34 அரசியல் பத்தி எழுத்துக்கள் தொகுக்கப்பெற்று நூலுருவில் வெளிவந்துள்ளன. தற்போது அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் தெய்வீகன் கடந்த 15 ஆண்டுகளாக "தமிழ் மிரர்" பத்திரிகையில் எழுதி வருகிறார். அவர் அண்மைக் காலத்தில் எழுதிய பத்திகளே இவை. இவை வெளியானபோது பரவலான வாசிப்புக்குள்ளாக்கப்பட்டு இணையத் தளங்களில் விவாதிக்கவும் விமர்சிக்கவும் பட்டன.

11042

சத்திய விஞ்ஞானம். புலவர் சிவங்கருணாலய பாண்டியனார், இ.இரத்தினம். யாழ்ப்பாணம்: அகில இலங்கை காந்தி சேவா சங்கம், 171, முதலாம் குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, ஆனி 2005. (யாழ்ப்பாணம்: அம்பாள் பிரிண்டர்ஸ், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி).

xxvii, 177 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-1224-00-0.

1948 முதல் வெளியான காந்தீயம் என்ற மாத இதழின் ஆசிரியராக 1968இல் பொறுப்பேற்ற சிவங்கருணாலய பாண்டியனாரின் ஆசிரியர் தலையங்கங்கள் சிறப்பானவை. பின்னாளில் 1969 மாசி இதழ் முதல் இவ்வாசிரியத் தலையங்கங்களைத் தொடர்ந்து எழுதியவர் இ.இரத்தினம் அவர்கள். காந்திய ஆசிரியர் தலையங்கங்களுள் 1968 முதல் 1978 தசாப்தத்தில் வெளிவந்த 75 தலையங்கங்களைத் தேர்ந்து இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. புலவர் சிவங் கருணாலய பாண்டியனார் 1903-1976 காலப்பகுதியில் வாழ்ந்தவர். இ.இரத்தினம் 1916-1981 காலப்பகுதியில் வாழ்ந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11043

தணிக்கை தகர்க்கும் தனிக்கை: ஆசிரியத் தலையங்கத் தொகுப்பு. ப.மதனவாசன் (ஏ.பீ.மதன்). கொழும்பு 2: விஜயா பப்ளிக்கேஷன்ஸ், இல. 8, ஹுணுப்பிட்டி குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, மார்ச் 2017. (மல்வானை: ஆர்.எஸ்.பிரின்டெக், இல.765/2, லேக் கிரசென்ட், வதுவேகம வீதி).

xvi, 288 பக்கம், கருத்தோவியங்கள், விலை: ரூபா 750., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-9067-20-7.

வீரகேசரி நிறுவனத்தின் வெளியீடான மித்திரன் நாளிதழுக்குப் பொறுப்பான உதவி ஆசிரியர் பணியை ஏற்று நான்காண்டுகளில் அப்பத்திரிகைக்குப் புதிய வடிவும் புது மெருகும் ஊட்டி மக்கள் மத்தியில் அதற்குச் சிறந்த வரவேற்பைப் பெற வைத்தவர் மதனவாசன். இவர் தமிழ் மிரர் பத்திரிகையின் ஆசிரியராகத் தற்போது பணியாற்றுகின்றார். அவர் அண்மைக்காலத்தில் எழுதிய 100 ஆசிரியத் தலையங்கங்களின் தொகுப்பு இதுவாகும். ஈழத்தின் சமகால அரசியல் பொருளாதார நிலைமைகளை இக்கட்டுரைகள் சமூகப் பொறுப்புடன் பதிவுசெய்கின்றன.

மேலும் பார்க்க: 11886

100 மெய்யியல்துறை

100 மெய்யியல் (தத்துவவியல்)

11044

மெய்ப்பொருள் நிலை. சே.வேல்முருகு. ஐக்கிய இராச்சியம்: சே.வேல்முருகு, மில்ட்டன் கீன்ஸ், இங்கிலாந்து, 1வது பதிப்பு, சித்திரை 1997. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(13), 47 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x13 சமீ.

இலங்கையில் மருத்துவப் பயிற்சியாளராகப் (R.M.P.) பணியாற்றிய பேரறிஞர் சே.வேல்முருகு அவர்கள் மெய்ப்பொருள் நிலை (State of Reality) பற்றி இயற்றிய மெய்யியல் தத்துவப் பாடல்கள் இவை. முன்னுரை-சொல்லுரை, மெய்யுணர்வு, நற்சிந்தனை, மனித வாழ்க்கை, துரியாதீதம், இனமுறைமை, ஞான ஊஞ்சல், இல்வாழ்க்கை நல்லறம் ஆகிய எட்டு பிரிவுகளின்கீழ் இவை தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17023).

150 உளவியல்

11045

அன்றாட வாழ்வில் அனைவருக்கும் உளவியல் - முதலாம் பாகம். எம்.எச்.எம். ஹஸன். கொழும்பு 00900: அல் ஹஸனாத் வெளியீட்டகம், 77, தெமட்டகொட வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2007. (கொழும்பு 12: கொம்ப் பிரின்ட் சிஸ்டம், எச். எல். 1/2, டயஸ் பிளேஸ்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xi, 156 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-8841-01-3.

நவீன உளவியல் ஆய்வுகளை அடிப்படையாகக்கொண்டு, மனித உள்ளம் பற்றிய ஒரு ஆக்கத்தொடராக எளிய தமிழில் ஆசிரியர் வழங்கியுள்ளார். நவீன உளவியலானது எவ்வாறு இஸ்லாத்தை நோக்கி நகர்ந்துவருகின்றது எனபதைத் தனது கட்டுரைகளின் வழியாகப் பல இடங்களிலும் சுட்டிக்காட்டுகின்றார். எண்ணமே வாழ்வு, வாழ்க்கையில் வெற்றி, உளவிருத்திப் பருவத்தினருக்கு உதவிசெய்வோம், உளவிருத்தியை இனம்காணுவது எப்படி? தாய்மை என்றால் என்ன? தனிமனித ஆளுமையில் தாய்மையின் பங்கு, குதூகலிக்கும் குழந்தைப் பருவம், குழந்தைகளின் தேவையை அறிவது எப்படி? குழந்தை வளர்தலும் குழந்தையை வளர்த்தலும், எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, தாயுடன் முரண்படும் குழந்தை, தந்தைமை, வாழ்க்கைத் தகைமைக்கு நடத்தைப் பயிற்சி, உண்மை - உண்மையிலும் உண்மை - முற்றிலும் உண்மை, பொய்யும் மெய்யும், கற்றலுக்குக் குழந்தைகளைத் தயார் செய்தல், உளவிருத்திப் பருவத்தினருக்கு எப்படி உதவலாம்? பிள்ளைகளின் உளவிருத்தியும் விருத்தி வேகமும், பிள்ளைகளின் பள்ளிப் பருவம், அடியாத மாடு படியாது, தண்டனையா பரிசா? பரிகாரம் என்ன? பிள்ளையின் ஆன்மீக வளர்ச்சியின் அடிப்படைகள், தோளுக்கு மிஞ்சினால் தோழன், பிள்ளைகளின் பண்பாட்டு விருத்திக்கான வழிகாட்டல், குதிரையை நீர்நிலைக்குக் கொண்டுவரலாம் நீர் பருக வைக்கலாமா? ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ள 26 உளவியல் கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 9356).

11046

ஆளுமைக் கொள்கைகள். இராசேந்திரம் ஸ்ரலின். பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஏப்ரல் 2015. (நெல்லியடி: பரணீ அச்சகம்).

xii, 240 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 450., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-27-5.

உளவியல்துறை விரிவுரையாளராகப் பணியாற்றிய அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் அவர்கள் எழுதிய இந்நூல், வளர்ச்சிப் பருவக் கொள்கைகள், ஆளுமை இயங்கியற் கொள்கைகள் ஆகிய இரு பிரிவுகளில் விளக்கப்பட்டுள்ளது. முதற்பிரிவில் ஜோன் பொல்பியின் பற்றுறவுக் கொள்கை, எறிக் எறிக்சனின் உள-சமூகக் கொள்கை, சிக்மன் புரொய்டின் உள-பாலியல் வளர்ச்சிக் கொள்கை, ஜீன் பிஜாயேயின் அறிகை வளர்ச்சிக் கொள்கை, லெவ் விகொட்ஸ்கியின் அறிவு வளர்ச்சிக் கொள்கை, லோறன்ஸ் கொல்பேர்க்கின் நன்னெறி வளர்ச்சிக் கொள்கை, கறொல் கல்லிகானின் நன்னெறி வளர்ச்சிக் கொள்கை, ஜேம்ஸ் பௌலரின் ஆன்மீக வளர்ச்சிக் கொள்கை ஆகியன விளக்கப்பட்டுள்ளன. ஆளுமை இயங்கியல் கொள்கைகள் என்ற இரண்டாவது பிரிவில் சிக்மன்ட் புரொய்ட்டின் உள இயங்கியல் கொள்கை, கார்ள் யுங்கின் ஆளுமைக் கொள்கை, அல்பிறெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்லரின் ஆளுமைக் கொள்கை, நடத்தையியலாளர்களின் ஆளுமைக் கொள்கை, அல்பேட் பண்டுறாவின் சமூக-உள ஆளுமைக் கொள்கை, மனிதாய உளவியலாளர் களின் ஆளுமைக் கொள்கை, ஆபிரஹாம் மாஸ்லோவின் தேவை அடுக்குக் கொள்கை, லூரவிஸ் கோல்ட்பேர்க்கின் பண்பியல் கொள்கை ஆகிய விடயங்கள் தொடர்பாக விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14366).

11047

சமய உளவியல். சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).

viii, 72 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-685-041-3.

சமயம் மனித இருப்புடன் தொடர்புடையது. இதனால் நம்பிக்கைகளினதும் உலக நோக்கினதும் ஒழுங்கமைக்கப்பட்ட தொகுதியாக சமயம் அமைந்துள்ளது. சமயம் பற்றிய கோட்பாட்டுரீதியிலான புரிதலுக்கும் ஆய்வுக்கும் இந்நூல் களமமைக்கின்றது. சமய உளவியல், சமயத்தளம், விருத்தி உளவியல், சமய நடத்தை உளவியல், சமயமும் உளப்பாதுகாப்பும், சமய மொழியின் உளவியல், நாட்டார் உளவியல் நோக்கு, நாட்டார் சமயம், அருள் நிலையியல், தொன்மங்கள், சடங்குகள், வழிபாட்டு உளவியல், மனவெழுச்சியும் சமயமும், சமயக் கற்பனை, சமய ஓவியங்களின் உளவியல், சமயக் கதைகளின் உளவியல், சமய ஆடலின் உளவியல், சமய இசையின் உளவியல், சமயஅறிவு, சமயமும் ஒழுக்கமும், சமயமும் சீர்மியமும், உளவியலும் இந்து சமயமும், பௌத்தமும் உளவியலும், இறையியலும் உளவியலும், மதமாற்றம், சமய அடிப்படைவாதம், நவீனத்துவமும் சமயமும், சமயமும் பின்னைய நவீனத்துவமும், சமயம் பற்றி மார்க்சியம், சமயமும் விஞ்ஞானமும், இறைமறுப்பு உளவியல், சமயம் கற்பித்தலின் நோக்கங்கள் ஆகிய 32 அத்தியாயங்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60862).

155.4 குழந்தை உளவியல்

11048

குழந்தை உளவியல்: விருத்தி நிலைகளும் பெற்றோர் பங்கும். றவூப் ஸெய்ன். திகறியா: அபிவிருத்திக் கற்கைகள் மையம் (Centre for Development Studies CDS), 188/12 கண்டி வீதி, திகறியா, 1வது பதிப்பு, மே 2011. (தெகிவளை: ஏ.ஜே. பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

v, 105 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ.

குழந்தைகளின் உளவியல் விருத்தி நிலைகளை நடைமுறை யதார்த்தங்களோடு ஒட்டி உறவாடும் வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அபிவிருத்தி உளவியலும் குழந்தைகளும், பிறப்புரிமைக் காரணிகளின் தாக்கம், குழந்தைகளின் மனவெழுச்சி விருத்தி, குழந்தைகளின் அறிவு வளர்ச்சி, குழந்தைகளின் ஒழுக்க வளர்ச்சி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளின் சமுதாய வளர்ச்சி, குழந்தைகளின் மொழி வளர்ச்சி ஆகிய ஏழு இயல்களில் இவ்வாய்வு விரிகின்றது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 12124).

155.937 மரணம்

11049

இறந்தபின் எங்கள் நிலை: வினா-விடை. சு.செல்லத்துரை. இளவாலை: சிவகாமசுந்தரி செல்லத்துரை நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, ஜூலை 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).

24 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 21x14 சமீ.

இளவாலை சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின் நினைவு வெளியீடாக 30.07.2016 அன்று வெளியிடப்பட்ட நினைவு மலர். நம்மைப்பற்றி நாம் அறியவேண்டும் என்பதையே சோக்கிரட்டீஸ் என்னும் கிரேக்க ஞானி "உன்னையே நீ அறிவாய்" எனச் சொன்னதை நாம் அறிவோம். அவருக்கு முன்னமே திருமூலர் இக்கருத்தை "தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை" என்ற திருமந்திரச் செய்யுள் வழியாகத் தமிழில் தெரிவித்திருக்கிறார். தன்னை அறிதல் பற்றி நம் சைவசித்தாந்த சாஸ்திரங்களும் திருமூலரை அடியொற்றி ஆழமாகவும் அகல மாகவும் இதனைச் சொல்கின்றன. அக்கருத்துகளை இலகுவாகத் தெளிவாக நாம் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இச்செய்தி கேள்வி-பதில் வடிவில் இந் நூலில் சுருக்கித் தரப்பட்டுள்ளது.

11050

மரணத்தின் பின். ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை 1: ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 53-56, பவழக்காரத் தெரு, 2வது பதிப்பு, ஒக்டோபர் 1950. (சென்னை 1: The Progressive Printers).

(4), 98 பக்கம், விலை: இந்திய ரூபா 1.00, அளவு: 17x12 சமீ.

இந்நூல் மேல்நாட்டறிஞர்கள் ஆவியுலகம் பற்றி வெளியிட்ட உளவியல், இயற்கை விஞ்ஞானக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டுள்ளது. தோற்றுவாய், ஆவியைப் பற்றிய ஆராய்ச்சி, ஆவி ஆராய்ச்சி பற்றிய வரலாற்றுச் சுருக்கம், கதவைத் தட்டிய பேய், விரிவுரை நிகழ்த்திய வேலையாள், பையனின் ஆவி, சடப்பொருள்கள் தாமே அசைதல், சில வியப்புகள், நீ யார்? இருவகை உடல், ஆவி உடல், ஆவிகளின் வடிவம், பேய்கள், ஆவிகளைப் பற்றிய சில செய்திகள், இயக்கம், ஆவிகளுடன் பேசுதல், ஆவிகள் உண்டு என்பதற்குரிய சான்றுகள், மரணம் அஞ்சத்தக்கதன்று, மரணகாலத்தில் நிகழ்வது, ஆவி உலகம், ஆவிகளுடன் பேசுதல், பெண்ணின் ஆவி கூறியவை, ஆவிகளின் நேர் பேச்சு, மீடியங்களும் ஆவியுலகப் பேச்சும், சீனர் ஆவியோடு பேச அறிந்திருந்தனர், தெளிவுக்காட்சி, கூட்டமான உயிரும் பேருயிரும் ஆகிய தலைப்புகளில் இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 1692).

மேலும் பார்க்க 11060

158.1 மானிட மேம்பாடு

11051

குடும்ப வாழ்வின் உளவியல்: திட்டமிடல், தீர்வுகள், மகிழ்ச்சிக்கான வழிகள் குறித்த உளவியல் கையேடு. *றவூப் ஸெய்ன். திஹாரிய:* Centre for Development Studies, CDS, *188/12, கண்டி வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2011. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).*

vi, *94 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ.,* ISBN: *978-955-0932-07-8.*

Psychology of family Life *என்ற ஆங்கிலத் தலைப்புடன் வெளிவந்துள்ள இந்நூல், சிறந்த குடும்ப வாழ்விற்கான திட்டமிடல், தீர்வுகள், மகிழ்ச்சிக்கான வழிகள் குறித்த உளவியல் கையேடாக மலர்ந்துள்ளது. திருமணத்திற்கு முந்திய உளவியல் ஆலோசனைகள் உள்ளிட்ட குடும்ப வாழ்வின் அனைத்துப் பரிமாணங்கள், பிரச்சினைகள், தீர்வுகள் என்பவற்றினை உளவியல் ரீதியில் அணுகும் ஒரு முயற்சியாக இந்நூல் அமைகின்றது. குடும்ப வாழ்வின் உளவியல், திருமணம் இலக்குகளும் குறிக்கோள்களும், திருமணத்திற்கு முந்திய வழிகாட்டல்களும் உளவியல் ஆலோசனைகளும், திருமணத்திற்கு முந்திய காதல், ஆண்-பெண் பொருத்தப்பாடு ஓர் உளவியல் அணுகல், தம்பதியினர் உறவு, குடும்ப வாழ்வில் அன்பின் பாத்திரம், கணவன் மனைவி தொடர்பாடல், குடும்ப வாழ்வில் பொருளாதாரம், மண வாழ்வில் தாம்பத்தியம், மகிழ்ச்சியான குடும்ப வாழ்வின் அடிப்படைகள், குடும்ப வகைகளும் உள ஆரோக்கியமும், குடும்ப வாழ்வில் ஏற்படும் முரண்பாடுகள் முகாமை செய்வது எப்படி? ஆகிய தலைப்புகளின்கீழ் இங்கு குடும்ப வாழ்வின் உளவியல் ஆராயப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 49730).*

11052

சிந்தனை எண்ணங்களும் அவற்றின் விளக்கங்களும். *ஆ.சி.முருகுப்பிள்ளை. பருத்தித்துறை: விநாயகர் தருமநிதியம், வியாபாரி மூலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1990. (பருத்தித்துறை: அபிராம் அச்சகம், அல்வாய்).*

44 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 21x14 சமீ.

விநாயகர் தரும நிதியம் அமைப்பின் தாபகரின் அனுபவச் சிந்தனைகளின் தொகுப்பு இது. சமர்ப்பணம், உங்கள் சிந்தனைக்கு, பகுத்தறிவின் விளைவு, உண்மைதான் இறைவன், உண்மையின் உண்மை, சக்தி, ஒலியும் மனமும், மிருகத்தனம், எமது எண்ணங்கள் மக்களுக்குப் பயன்படக்கூடிய அவித்தநெல் தரத்துக்கு செல்ல வேண்டும், எண்ணும் இலக்கை அடைபவனே மனிதன், உயர்வு விரும்பும் மக்கள் உணர்வு மாற வேண்டும், கடமை, கருணை, தமிழர் மதம்: மறைமலை அடிகள், தற்கால உலகம், உண்மைக்கு மாறாய் நடவாதே மனதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதி வேண்டும் ஆகிய தலைப்புகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 596 PAM).

11053

நிழலின் பின்னே மனிதன். நா.முத்தையா. நாவலப்பிட்டி: ஆத்மஜோதி நிலையம், 1வது பதிப்பு, டிசம்பர் 1982. (நாவலப்பிட்டி: ஸ்ரீ ஆத்மஜோதி நிலையம்).

(6), 62 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x12.5 சமீ.

ஆத்மஜோதி ஆன்மீகச் சஞ்சிகையின் ஆசிரியர் நா.முத்தையா அவர்களின் ஆன்மீகக் கருத்துரைகளின் தொகுப்பு. நிழலும் மனிதனும், ஆணவ நிழல், பாலைவனத்தில் கண்ட நிழல், மயிரும் நகமும், தேங்காயின் தத்துவம், நிழலின் மயக்கம், நிழலாட்டம், சினிமா, பார்வை நிலைப்பு, வாலிபனின் காதல், பளிங்கு மண்டபம், ஆயிரம் தேங்காய் உடைத்தவரின் ஆணவம், கருவில் உள்ள குழந்தை, உபநிஷதத்தில் காணப்படும் உபதேசம், மனித வரலாறு, உடலும் நிழலும், அன்பும் அறமும், உயிருக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பு, பகலும் இரவும், பாசி படர்ந்த குளம், மனம் போல வாழ்வு, உரு வெளித் தோற்றம், அக இருள், மாயையைப் பற்றிக் கபீரின் விளக்கம் ஆகிய தலைப்புகளில் இக்கருத்துரைகள் எழுதப்பட்டுள்ளன. இவை முன்னர் ஆத்மஜோதி இதழ்களில் பிரசுரமானவை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21551).

11054

மனதில் நின்றவையும் தெளிந்தவையும். எஸ்.ஸ்ரீராம். யாழ்ப்பாணம்: லலிதா வெளியீடு, கந்தசாமி கோவில், மாவிட்டபுரம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2015. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(10), 461 பக்கம், ஓவியங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 2500., அளவு: 29x20.5 சமீ., ISBN: 978-955-51001-3-7.

நீண்டகாலமாக ஆசிரியரின் மனதில் தோன்றி, மறைந்து சிந்திக்கவும் வாழ்வியலை புது வடிவில் நோக்கவும் தூண்டிய சிந்தனைகளின் அறுவடையே இந்நூலாகும். ஸ்ரீராம் ஆசிரியர் சரிவரத் தெரிந்து, அவரின் மனதில் பதிந்தவை இங்கு அழகியல் அம்சங்களுடன் பதிவாக்கம் செய்யப்பட்டுள்ளன. சொல்லிய சொல்லை மீளப்பெற முயல்வதை விட சொல்லாதிருத்தல் நல்லது, என்னால் முடியும் என்ற துணிவுடன் தொடங்குபவை வெற்றியைத் தருகின்றன என்று ஆரம்பிக்கும் ஸ்ரீராம் மகிழ்வான வாழ்க்கைக்குக் கடைப்பிடிக்கவேண்டியவற்றைச் சுட்டிக்காட்டி, உலகப் பொது மொழியாக வளரும் உடல் மொழி தொடர்பாகவும் சொல்லி, சித்திர விளக்கத்தையும் இணைத்துத் தருகிறார். இத்தகைய பல்வேறு விடயங்களை மனதில் நிலைநிறுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள நூல் இது. பொருளியல்துறை முதுமாணிப் பட்டதாரியான ஆசிரியர் புவக்பிட்டிய சீ.சீ. தமிழ் மகாவித்தியாலயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றி வருகின்றார். பொருளாதாரமொன்றின் அறிமுகம், பொருளியல் வினாவிடை உளளிட்ட பல பொருளியல் நூல்களை எழுதியவர்.

11055

மனிதன் புனிதனாக. ஷேக் ஹசன் அஸ்ஹரீ. கண்டி: இஸ்ஸத் பதிப்பகம், 67, லேடி மக்கலம் டிரைவ், 1வது பதிப்பு, 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xx, 21-320 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13 சமீ., ISBN: 955-8782-00-9.

இஸ்லாமிய மார்க்க அறிஞரான நூலாசிரியர் இந்நூலை 105 பகுதிகளாகப் பிரித்து வாழ்வியல் உண்மைகளை நயமாகவும், நியாயமாகவும் தொகுத்தும் பகுத்தும் எழுதியிருக்கிறார். தமிழ், அரபு, ஆங்கிலம், சிங்களம் முதலான மொழிகளில் உள்ள தத்துவக் கருத்துக்களைப் பகுத்தும் தொகுத்தும் இன்றைய அறிவியல் யுகத்திற்கு ஏற்றவகையில் நகைச்சுவைகலந்து சுவாரஸ்யமாக எழுதியிருக்கிறார். மனத்தெளிவு, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, சமூகத்தின் மீதான புதிய பார்வை, தன்முனைப்பு மற்றும் புத்துணர்வு தருவதாக இந்நூல் அமைந்துள்ளது. வாழ்க்கையில் வெற்றிபெற வழிதேடுவோருக்கு இந்நூல் பல நல்ல சுயமுன்னேற்றக் கருத்துக்களைத் தருகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45301).

11056

மாதா பிதா குரு தெய்வம். நா.சோமாஸ்கந்தக் குருக்கள். கொழும்பு: Modern Hindu Cultural Art Works, 1வது பதிப்பு, 2001. (கொழும்பு 13: யுனிலங்காஸ், 32, சென் அன்ரனீஸ் மாவத்தை).

iv, 20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

கலாநிதி நா.சோமாஸ்கந்தக் குருக்கள், அவுஸ்திரேலியத் திருமணப் பதிவாளராகவும், சர்வதேச இந்துமத குருபீட அவுஸ்திரேலியப் பிரதிநிதியாகவும் பணியாற்றுபவர். தாய் தந்தையரின் முக்கியத்துவத்தை அறிவுறுத்தும் பத்துக் கட்டுரைகளை இந் நூல் உள்ளடக்குகின்றது. புகலிட தேசங்களில் இளந் தலைமுறையினரிடையே பெற்றோரியம் பற்றிய அறிதலையும் புரிதலையும் வளர்க்கும் நோக்கில் அவுஸ்திரேலியாவில் தயாரித்து வெளியிடப்பெற்ற இந்நூல் இன்று தாயகத்திலும் பயன்படுத்தப்படவேண்டிய தேவையை உணர்த்துகின்றது. இதில் உள்ள கட்டுரை கள், தாய் தந்தையர்களே முதல் தெய்வம், குருவின் மகிமை, குருவின் உபதேசம், குருவை நம்பிய பால்காரி, குருவை மிஞ்சிய சீடன், அயோத சௌம்மியர், ஆலய வழிபாட்டின் அவசியம், உலகத்தின் தாய் தந்தையர், அரனை மறவேல், அன்பே இன்பம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

158.12 தியானம்

11057

தியான சாதனம். கவியோகி சுத்தானந்த பாரதியார். யாழ்ப்பாணம்: சுத்தானந்த யோக சமாசம், 1வது பதிப்பு, 1967. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).

(2), 48 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x13.5 சமீ.

ஜபமாலை தொடங்கி யோக சமாஜம் ஈறாக 57 தலைப்புக்களில் ஆன்மீகக் கருத்துரைகளை சிறு கட்டுரைக் குறிப்புகளாக சுத்தானந்த பாரதியார் இந்நூலில் வழங்கியுள்ளார். சுத்தானந்த பாரதியார் (மே 11, 1897 - மார்ச் 7, 1990) கவியோகி, மகரிஷி என்று சைவர்களால் போற்றப்பட்டவர். இவர் கவிதைகள், தமிழிசைப் பாடல்கள், உரைநடை நூல்கள், மேடை நாடகங்கள் எனப் பல நூல்களை இயற்றியவராவார். சுத்தானந்த பாரதியார் என பின்னாளில் அழைக்கப்பட்ட வேங்கட சுப்பிரமணியன், தமிழகத்தின் பனையூரைச் சொந்த ஊராகக் கொண்ட சிவிகுல ஜடாதரய்யர் காமாட்சி அம்மையார் இணையரின் நான்காவது குழந்தையாக 1897 மே 11 இல் தமிழ்நாடு சிவகங்கையில் பிறந்தார். ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது தான் "பாரத சக்தி" எனும் மகா காவியத்தைப் பாடத் தொடங்கினார். இவர் இயற்றிய நூல்களில் யோகசித்தி, கீர்த்தனாஞ்சலி, மேளராகமாலை ஆகிய கவிதை நூல்கள் பிரபலமானவை. தமிழின் வரலாற்றில் சிறப்பாக தொண்டாற்றிய இவர், தமது தொண்ணூற்று இரண்டாம் அகவையில் காலமானார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34371).

158.3 உளவளத்துணை (counseling)

11058

உளம் மகிழ: உள சமூக கட்டுரைத் தொகுப்பு. செ.யோசப் பாலா. யாழ்ப்பாணம்: மணிஓசை வெளியீட்டகம், 10/2, மத்தியூஸ் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (யாழ்ப்பாணம்: நோபல் அச்சகம், 187, வைத்தியசாலை வீதி).

viii, 198 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-1630-01-0.

உள சமூகப் பணியில் ஈடுபடுவோருக்கும், குடும்ப சமூக உறவை மாண்புடன் கட்டியெழுப்பமுனைவோருக்கும் வழிகாட்டியாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் மனக்காயங்களைப் போக்கவல்ல அரிய கட்டுரைகள் 48 தலைப்புகளில் இடம் பெற்றுள்ளன. ஆரோக்கிய வாழ்வு என்பது, உளத்தை ஆளும் வல்லமை, மௌனத்தின் மொழி புரிகின்றதா? எம் உணர்வுகளை உணர்வோமா? வாழ்வின் வெற்றிப்படி, மனம் ஆற மனம் வேண்டும், தப்பித்தல் தீர்வாகுமா? வேற்றுமையில் ஒற்றுமை ஆரோக்கிய உறவு, மகிழ்வூட்டி மகிழ்வடைதல், உணர்வுகளின் ஊற்றுக்கள், உடல் உள சொத்து உங்களிடம் உண்டா? ஆற்றுப்படுத்தலில் மகிழ்ச்சி காண, வாழ்வின் இலக்கு எது? தடைகளைத் தாண்ட வழி? உருவாக்கத்தின் தவறுகள், நல்வாழ்வுக்கு வழிகாண, பொறுப்புக்களை ஏற்போமா? வாழ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்விற்கு, வாழ்வில் இசைவாக்கம், தன்னிலை மறந்தவரா நீங்கள்?, தேடலும் தெரிவும், எண்ணங்கள் உயர்வானால், பணிவு இருக்கும் இடத்தில், உன்னுள் உன்னைக் காண, இலக்கு நோக்கி, விளையாட்டு விளையாட்டாக, தவறுகளைத் தவிர்ப்போம், ஏமாற்றத்தை வெல்ல, அனுபவம் ஒரு திருப்புமுனை, பிஞ்சு மனங்களில் நஞ்சு விதைகளா? அனுதாப அவலம், உணர்வுகள் வெளிப்பட, குதூகலமாய் வாழ, அனுபவம் ஒரு பாடம், கலைகளின் செல்வாக்கு, பார்வைகள் தரும் பதிவுகள், விடலைகளின் விசும்பல், மாலையும் மகிழ்ச்சியும், அமைதியின் சின்னங்கள், மனிதநேய காப்பரண், எதிர்கொள்ளலுக்கு நாம் தயாரா? சுயத்தை அறிதல், உங்கள் தொடர்பாடல் எப்படி? உங்கள் வாழ்வு வரலாறாகுமா? ஒரு வார்த்தை அது போதும், தூண்டியாய் செயற்படுங்கள், இருளகற்றும் ஒளிகளா நீங்கள்? மனித மாண்புகள் உயிர்ப்படைய ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14325).

11059

சிறுவர் பாதுகாப்பு. கோகிலா மகேந்திரன், ஜெகநாதன் தற்பரன், யூடி ஜெயக்குமார் (இணை ஆசிரியர்கள்), இர.சந்திரசேகர சர்மா (இணைப்பாளர்). யாழ்ப்பாணம்: சாந்திகம், 8, 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரி-நல்லூர் வீதி, 1வது பதிப்பு, கார்த்திகை 2015. (யாழ்ப்பாணம்: கரிகணன் நிறுவனம், இல. 681, காங்கேசன்துறை வீதி).

(4), 60 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-0520-02-2.

வடக்கிலும் கிழக்கிலுமுள்ள NCPA உள சமூக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான உளவளத்துணை பற்றிய பயிற்சி வகுப்பு, 12.12.2014 அன்று கிளிநொச்சியில் நடைபெற்றது. இதில் 42 NCPA உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்வு மட்டக்களப்பிலும் 15.12.2015 அன்று நடைபெற்றபோது 39 NCPA உத்தியோகத்தர்கள் பங்கேற்றிருந்தனர். பயிற்சிகளை நடத்திய வளவாளர்களின் கருத்துக்கள் கட்டுரை வடிவில் அவர்களைக்கொண்டே எழுதுவிக்கப்பட்டு இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இச்சிறுநூல் எதிர்கால வளவாளர்களுக்கும் NCPA உத்தியோகத்தர்களுக்கும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் உரிமைகள் சம்பந்தமான விடயங்களில் அக்கறை கொண்ட ஏனையோருக்கும் பயன்படும் வகையில் எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் கோகிலா மகேந்திரன் எழுதிய "சிறுவர் பாதுகாப்பு", ஜெகநாதன் தற்பரன் எழுதிய "சிறுவர் பாதுகாப்பு சம்பவங்களின் முகாமைத்துவ பயிற்சிகள்- இலங்கை", யூடி ஜெயக்குமார் எழுதிய "கட்டிளமைப் பருவம்" ஆகிய மூன்று கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 247781).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11060

மரணம்-இழப்பு-மலர்தல்: இழப்பிலிருந்து வளர்ச்சியை நோக்கி ஒரு பயணம். மீராபாரதி. கனடா: பிரக்ஞை வெளியீடு, 80, டக்ளஸ் ஹேய்க் டிரைவ், மார்க்கம் L3S 2E1, 1வது பதிப்பு, மே 2013. (தெகிவளை: தியாகு கேசவன், டெக்னோ பிரின்ட்).

168 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

மீராபாரதியின், "மரணம், இழப்பு, மலர்தல்" கட்டுரைத் தொகுதி, ஒரு வகையான பயிற்சி நூலாகும். இந்நூல், ஒரு மரணத்தை நாம் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும், அதை எவ்வாறு கடந்து செல்ல வேண்டும் என்ற வழிகாட்டுதலை எமக்கு வழங்குகிறது. வாழ்வில் அனைவரும் எதிர்கொள்ளக் கூடிய மரணம் என்னும் நிதர்சனத்தை, தவிர்க்க முடியாத யதார்த்தத்தை எவ்வாறு எதிர்கொள்வது, அதனை எவ்வாறு கடந்து செல்வது என்று யாரும் எழுத யோசிப்பதில்லை, குறிப்பாக ஈழத்துத் தமிழ்ச் சூழலில், பலர் அவ்வாறான விடயங்களை வாசிக்கவும் துணிவதில்லை. ஆனால், அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய, அதுவும் கூட்டு மரணங்களை, கொத்துக் கொத்தான இழப்புகளை எதிர்கொண்ட ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தின் ஒவ்வொருவரதும் கையேடாக இருக்க வேண்டிய நூலாக இந்நூல் உள்ளது. மீராபாரதி, இதனை அனுபவபூர்வமாக எழுதியுள்ளார். சிறு வயது முதல், தான் கண்ட, தன்னைப் பாதித்த ஒவ்வொரு மரணங்களையும், அந்த நினைவுகளையும் பிழிந்தெடுத்து, அவற்றுக்கு தனது "ஞான"ப் பார்வையை வழங்கி அதை எழுத்தாக்கி உள்ளார். இதில் உள்ள ஒரு தனித்துவம் என்னவென்றால், மரணத்தை மட்டுமல்ல, உங்களில் ஒருவரை உங்கள் தந்தையை, தம்பியை, தங்கையை, அண்ணனை, அக்காவை, நண்பரைக் கொன்ற ஒரு கொலையாளியை எவ்வாறு எதிர்கொள்வது, பழிவாங்கல் உணர்வை, அந்த அக அதிர்ச்சி (Trauma) உணர்வை எவ்வாறு கடந்து செல்வது பற்றியும் வழிகாட்டப்படுகிறது. அதுவும் வெறுமனே போதனையாக அல்ல. அவரது சொந்த அனுபவத்தினூடாக இவை விபரிக்கப்படுகின்றன. இந்தத் தொகுப்பிலுள்ள மீராபாரதியின் 23 கட்டுரைகளுக்குமான உழைப்பு இலகுவான காரியமல்ல.

160 தர்க்கவியல் (அளவையியல்)

11061

அளவையியல்-குறியீட்டு அளவையியல் பாகம் 3. க.கேசவதாசன். கொழும்பு 6: க.கேசவதாசன், இந்து மகளிர் கல்லூரி, 23 உருத்திரா மாவத்தை, 1வது பதிப்பு, 2003. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).

96 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 21.5x15 சமீ.

பெறுகைமுறை, தேற்றம், துணைப்பெறுகை, கடந்தகால வினாக்கள் என நான்கு அலகுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இவை ஜீ.சீ.ஈ. உயர்தரம், ஜீ.ஏ.க்யூ பரீட்சை வினாக்களில் முக்கியமான வினாவாகக் காணப்படுகின்றது. மேற்கூறப் பட்ட பகுதிகள் செய்கைகள், பயிற்சிகள், 22 வருடகால (கடந்தகால) வினாக்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப்பட்டுள்ளன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 7499).

11062

அளவையியல்-சிறுகுறிப்பும் உய்த்தறிவு அளவையியலும் தற்கால அணுகுமுறையும். க.கேசவதாசன். கொழும்பு 6: க.கேசவதாசன், இந்து மகளிர் கல்லூரி, 23 உருத்திரா மாவத்தை, 1வது பதிப்பு, 2003. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).

80 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14.5 சமீ.

இந்நூல் ஒழுக்கவியல், இந்திய அளவையியல், குறியீட்டு அளவையியல், பதங்கள், தொடர்புகள், சிந்தனை விதிகள், பொதுவானவை, உய்த்தறிவு அனுமானம் பற்றி தற்கால அணுகுமுறை, பயிற்சிகள் ஆகிய ஒன்பது அலகுகளின் வழியாக அளவையியலின் பல்வேறு அம்சங்களை விளக்குகின்றது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 7890).

11063

அளவையியல்-போலிகள். க.கேசவதாசன். கொழும்பு 6: க.கேசவதாசன், இந்து மகளிர் கல்லூரி, 23 உருத்திரா மாவத்தை, 1வது பதிப்பு, 2002. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).

80 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 21.5x14.5 சமீ.

போலிகள் பற்றி வாசகர்களுக்கு ஓர் அறிமுகம், நியமப் போலிகள், நியமமில் போலிகள், மாதிரி வினாக்கள் விடை எழுதும் முறையுடன், மாதிரி வினாக்கள், 2002-1981 வரையிலான கடந்தகால வினாக்கள், மாதிரி வினாக்களுக்கான விடைகள், 2002-1981 வரையிலான கடந்தகால வினாக்களுக்கான விடைகள் ஆகிய அலகுகளில் அளவையியல் பாடத்தின் ஓரம்சமான போலிகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 7474).

11064

அளவையியலும் விஞ்ஞானமுறையும். ஆறுமுகம் விக்னேஸ்வரன். தெகிவளை: ஆ. விக்னேஸ்வரன், 24, ரட்ணகார பிளேஸ், 1வது பதிப்பு, பங்குனி 2004. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).

152 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 175., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-98634-0-1.

அளவையியல் பற்றிய அறிமுகம், எடுப்புக்களும் எடுப்பு வகையீடும், எடுப்பு முரண்பாடு, எடுப்பு வெளிப்பேறு, எடுப்பு வழிப்பெறுகை, நியாயத்தொடை, வென்னின் விளக்க வரைபடங்கள், பதங்கள் ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர், கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராவார். (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 7891).

11065

அளவையியலும் விஞ்ஞானமுறையும்-1. க.கேசவதாசன். கொழும்பு 6: க.கேசவதாசன், கோபிகா பதிப்பகம், இந்து மகளிர் கல்லூரி, 23 உருத்திரா மாவத்தை, 1வது பதிப்பு, 2001. (கொழும்பு 12: பேர்பெக்ட் பிறின்டேர்ஸ், 130, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

viii, (8), 384 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 275., அளவு: 21x14 சமீ.

இந்நூல் அளவையியலின் தன்மையும் விடயமும், அளவையியல் தத்துவங்கள் பற்றிய பொதுவான ஆய்வு, சிந்தனை விதிகள், எடுப்புக்கள், உடன் அனுமானம், ஊடக அனுமானம், வகுப்பு அளவையியல், நுண்கணித வாக்கியம், வாக்கியங்களையும் வாதங்களையும் குறியீட்டாக்கம் செய்தல், பெறுகை முறைகள், உண்மையட்டவணை முறை, தர்க்கரீதியான சிந்தனை பற்றிய கல்வி, ஆகிய 12 அத்தியாயங்களையும் சிறு குறிப்புகள், பயிற்சிகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியது. வெள்ளவத்தை, இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியரான கேசவன், சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்ட் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆகியவற்றில் முன்னர் ஆசிரியராகப் பணியாற்றியவர். (இந் நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 7475).

11066

அளவையியலும் விஞ்ஞான முறையும்-2: விஞ்ஞான முறையியலும் விஞ்ஞான முறைகளும். தி.முத்தரசன். மட்டக்களப்பு: திருநாவுக்கரசு முத்தரசன், பயிலுநர், மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி, 1வது பதிப்பு, 2002. (சங்கானை: திருமொழி அச்சகம்).

(7), 74 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

அளவையியல் பயிலும் மாணவர்களின் தேவை கருதி இந்நூல் உருவாக்கப் பட்டுள்ளது. விஞ்ஞான முறையியல் (விஞ்ஞானத்தில் விஞ்ஞானிகளினதும் விஞ்ஞான முறையியலாளர்களினதும் பங்களிப்பு, விஞ்ஞான வளர்ச்சியில் விஞ்ஞானிகளது பங்களிப்பிற்கும் விஞ்ஞான முறையியலாளர்களது பங்களிப்புக்கும் இடையிலான வேறுபாடுகள்), விஞ்ஞான முறை (விஞ்ஞான முறையின் பருவங்கள், விஞ்ஞானத்தில் விஞ்ஞான முறையின் பங்கு), விஞ்ஞானத்தில் சோதனை முறைகள் (அவதானம், பரிசோதனை, கட்டுப்பாட்டுக் குழுமுறை), சமூக விஞ்ஞான ஆய்வு முறைகள் (பேட்டி, வினாக்கொத்து, தனியாள் ஆய்வு, ஏடுகளின் ஆய்வு, அகழ்வாய்வு, கள ஆய்வு, அகநோக்கு முறை, வளர்ச்சி ஆய்வுமுறை, வகைமாதிரி), விஞ்ஞானக் கண்டுபிடிப்பிற்கு உதவும் ஏனைய முறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வரைவிலக்கணம், வகையீடு, பிரிப்பு, சான்று, அதிகாரம், ஒப்பீடு, எண்ணீடு, மில்லின் பரிசோதனை முறைகள்) ஆகிய ஐந்து பிரதான இயல்களின்கீழ் 25 பாடங்களில் இந்நூல் விளக்குகின்றது. நூலாசிரியர் மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் பயிலுநராவார். (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர். 7502).

11067

அளவையியலும் விஞ்ஞானமுறையும்: பகுதி 2: பின்னிணைப்பு. எஸ்.எஸ்.மனோகரன். சுன்னாகம்: எஸ்.எஸ்.மனோகரன், உடுவில் மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, பங்குனி 2003. (யாழ்ப்பாணம்: ஐங்கரன் கிரபிக்ஸ், பிரதான வீதி, சித்தன்கேணி).

64 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 20.5x13.5 சமீ.

அளவையியலும் விஞ்ஞானமுறையும் இரு பாகங்களுக்குமான பின்னிணைப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. அளவையியலும் விஞ்ஞானமுறையும் என்னும் பாடத்தைக் கற்கும் மாணவர்களின் நலன் கருதி புதிய பாடத்திட்டத்திற்கேற்ப வினா-விடை அமைப்பு வடிவில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் இடம்பெறும் ஒவ்வொரு பகுதிக்கும் கீழே கடந்தகாலப் பரீட்சை வினாக்கள் இடம்பெற்றுள்ளன. தேவையான இடங்களில் விடைக்குறிப்புகளும் காணப் படுகின்றன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 7501).

11068

குறியீட்டு அளவையியல். வே.யுகபாலசிங்கம். யாழ்ப்பாணம்: பட்டப்படிப்புகள் கல்லூரி, 148/1, ஸ்ரான்லி வீதி, 2வது (திருத்திய) பதிப்பு, ஜூன் 1990, 1வது பதிப்பு, டிசம்பர் 1985. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

vi, 52 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 30., அளவு: 20x14.5 சமீ.

அளவையியல்துறையில் பயிலும் மாணவர்களுக்கு அத்துறையை அறிமுகம் செய்வதில் இந்நூல் பயனுள்ளதாக அமைகின்றது. பாரம்பரிய அளவைமுறை, கணித அளவை, எடுப்புகள், எடுப்புமாறிகள், அளவை மாறிலிகள், அளவை மாறிலிகளும் தமிழில் இணைக்கும் சொற்களும், மொழி வடிவங்களைக் குறியீட்டில் அமைத்தல், கருத்திற்கொள்ளவேண்டிய சில அம்சங்கள், குறியீட்டு வடிவங்களை மொழியில் பெயர்த்தல், மறுப்புமாறிகள், பொருளொத்த எடுப்பு வடிவங்கள், வாதங்களின் வாய்ப்பினைத் துணிதல், மாறிலிகளின் பெறுமானம், வலிதான மாறிலிகள், உண்மை அட்டவணை நேர்முறை, உண்மை அட்டவணை நேரில் முறை, உண்மைச் சந்தர்ப்ப பிரயோகமுறை, நற்சூத்திரங்களின் சமனையும் முரண்மையையும் அறிதல், முரண்மையை அறிதல், உண்மை அட்டவணையை வரையாமல் குறியீட்டுவாதத்தின் வாய்ப்பைத் துணிதல், பெறுகைமுறை, அனுமான விதிகள், தேற்றங்களை நிறுவுதல், நேர்ப்பெறுகை, நேரல்பெறுகை, நிபந்தனைப் பெறுகை, துணைப்பெறுகைகள், தேற்றங்கள், பிரதியீட்டுப்பேறும் விளக்கமும், பயிற்சி, தமிழில் அனுமான விதிகளைக் குறிக்கும் சுருக்க விளக்கங்கள் ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயப் பிரிவுகளின் கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் நீண்ட காலமாக யாழ்ப்பாணத்தில் அளவையியலும் விஞ்ஞானமுறையும் போதிப்பதில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர்.

11069

நவீன அளவையியல்: அளவையியலும் விஞ்ஞான முறையும் பாகம் 1. எஸ்.எஸ். மனோகரன். யாழ்ப்பாணம்: லொஜிக் வேவ்ஸ் பப்ளிக்கேஷன்ஸ், இல.11, குருசோ வீதி, சுண்டிக்குளி, 1வது பதிப்பு, ஜூலை 2013. (ஆனைக்கோட்டை: ரூபன் அச்சகம்).

304 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 700., அளவு: 20.5x14.5 சமீ.

வலுச்சமனான சூத்திரங்கள், தர்க்கப் படலைகள், உண்மை விருட்சமுறை, குறியீட்டாக்கம், தர்க்கப் போலிகள் ஆகிய ஐந்து பாடப் பரப்புகளை உள்ளடக்கி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அளவையியலும் விஞ்ஞான முறையும் என்ற பாடத்தைக் கற்கும் மாணவர்களின் நலன்கருதி புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14797).

11070

விஞ்ஞானமுறை: அளவையியலும் விஞ்ஞான முறையும் பாகம் 2. எஸ்.எஸ். மனோகரன். யாழ்ப்பாணம்: லொஜிக் வேவ்ஸ் பப்ளிக்கேஷன்ஸ், இல.11, குருசோ வீதி, சுண்டிக்குளி, 1வது பதிப்பு, ஜூலை 2014. (ஆனைக்கோட்டை: ரூபன் அச்சகம்).

219 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20x14.5 சமீ.

அளவையியலும் விஞ்ஞான முறையும் என்ற பாடத்தைக் கற்கும் மாணவர்களின் நலன் கருதி புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப இந்நூல் வெளிவந்துள்ளது. விஞ்ஞானமும் அதன் வகைகளும், விஞ்ஞான முறையின் அடிப்படைகள் மற்றும் கருதுகோள்கள், மூன்று பிரதான முறையியல்கள், சோதனை முறைகள், நிகழ்தகவு, புள்ளிவிபரவியல், அளத்தல்/அளவீடு, விஞ்ஞானப் பொதுமையாக்கங்கள், விஞ்ஞான விளக்க வகைகள், நானாவித முறையியல்கள், சமூக விஞ்ஞானமும் சமூக விஞ்ஞான முறைகளும், பொதுவானவை, விஞ்ஞான உண்மைகள், விஞ்ஞான விதிகள், விஞ்ஞானக் கொள்கைகள், விஞ்ஞான முறையியலாளர்கள், விஞ்ஞான மெய்யியலாளர்கள், சட்டங்களும் சாட்சிகளும் ஆகிய 15 தலைப்பு களின்கீழ் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14796).

11071

விஞ்ஞான முறை: பாகம் 1. க.கேசவதாசன். கொழும்பு 6: க.கேசவதாசன், இந்து மகளிர் கல்லூரி, 23 உருத்திரா மாவத்தை, 1வது பதிப்பு, 2003. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

120 பக்கம், விலை: ரூபா 185., அளவு: 21.5x15 சமீ.

அளவையியலும் விஞ்ஞானமுறையும் வினாப்பத்திரம் இரண்டுக்குரியதாகும். வினாப்பத்திரம் 2க்குரிய பாடப்பரப்பின் பொழிப்பாக இந்நூல் அமைகின்றது. விஞ்ஞானமுறை, விஞ்ஞானம், கார்ள் பொப்பரின் பொய்ப்பித்தல் கோட்பாடு, விஞ்ஞான வகைகள், சோடிப் பதங்களும் சிறுகுறிப்புகளும் ஆகிய ஐந்து பிரிவுகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. மாணவர் விடை எழுதிப் பயிற்சி பெறுவதற்கேற்ப இடைவெளிகள் விடப்பட்டுள்ளன. விடை எவ்வாறு அமையவேண்டும் என்ற குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர். 8907).

11072

விஞ்ஞான முறை: பாகம் 2. *க.கேசவதாசன். கொழும்பு 6: க.கேசவதாசன், இந்து மகளிர் கல்லூரி, 23 உருத்திரா மாவத்தை, 1வது பதிப்பு, 2004. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).*

157 பக்கம், விலை: ரூபா 185., அளவு: 21.5x15 சமீ., ISBN: *955-98605-2-6.*

இந்நூல் விஞ்ஞானிகளும் விஞ்ஞான முறையியலாளர்களும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் ஆகிய இரு பெரும் பிரிவுகளின்கீழ் ஏராளமான தகவல்களைக் கொண்டுள்ளது. மூன்றாவது பிரிவில் கட்டுரைக் குறிப்புகளும் நான்காவது பிரிவில் பொதுவான குறிப்புகளும் ஒழுக்கவியலும் என்ற பகுதியும் ஐந்தாவது பிரிவில் விஞ்ஞானத்தின் வரலாற்றுச் சுருக்கமும் காணப்படுகின்றன. வெள்ளவத்தை, இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியரான கேசவதாசன், சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்ட் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆகியவற்றில் முன்னர் ஆசிரியராகப் பணியாற்றியவர். (இந் நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர். 8908).

11073

விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புக்களும். *ச.விஜயலக்சுமி. பருத்தித்துறை: ச.விஜயலக்சுமி, லக்சுமி வெளியீடு, ஆசிரியை, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, ஆடி 1982. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).*

(6), 82 பக்கம், விலை: ரூபா 13.50, அளவு: 21x14 சமீ.

இந்நூலில் இயன்றவரை க.பொ.த. உயர்தர மாணவர்களின் அளவையியலும் விஞ்ஞான முறைகளும் பாடத்தின் வினாத்தாள் 2இன் பகுதி 3இற்கான விஞ்ஞானிகளின் விபரங்களையும் கண்டுபிடிப்புகளையும் விபரமாகக் கூறியிருப்ப தோடு மாதிரி வினாத்தாள், கடந்தகால வினாத்தாள் ஆகிய இரண்டையும் உயர்தர மாணவர் நலன்கருதிச் சேர்த்துமுள்ளார். மாணவர்கள் இந்நூலில் கூறப்பட்ட விஞ்ஞானிகளின் தர்க்கரீதியான சிந்தனைகளையும் அது அவர்களின் கண்டுபிடிப்புகளுக்கு எவ்வாறு வழிவகுத்திருக்கின்றது என்பதையும் தர்க்கரீதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்து அதன்மூலம் தமது அறிவையும் ஆர்வத்தையும் பெற்றுப் பயனடைய முடிகின்றது. அவ்வகையில், ஆக்கிமிடீஸ், கிளோடியஸ் தொலமி, நிக்கலஸ் கொப்பனிக்கஸ், ரைக்கோ டி பிராகே, கிப்பாக்கஸ், கெப்லர், கலிலியோ கலிலி, வில்லியம் ஹார்வி, சேர் ஐசாக் நியூட்டன், பெஞ்சமின் பிராங்க்ளின், லாப்லாஸ், சேர் ஹம்பரி டேவி, யுரேனசின் கண்டுபிடிப்பு, மைக்கல் பாரடே, டோல்ட்ரனது அணுக்கொள்கை, சார்ள்ஸ் டார்வின், ஜே.எஸ்.மில், லூயி பாஸ்டர், நோபெல் அல்பிரட், நெப்டியூனின் கண்டுபிடிப்பு, புளூற்றோவின் கண்டுபிடிப்பு, அலெக்சாண்டர் கிரகம்பெல், தோமஸ் அல்வா எடிசன், சிக்மண்ட் புரொய்ட், ஜோசெப் தாம்சன், ரூடால்ப் டீசல், மேரி கியூரி அம்மையார், மார்க்கோனி, அல்பெர்ட் ஐன்ஸ்ரைன், அலெக்சாண்டர் பிளெமிங், சேர். சி.வி.இராமன், ஆகிய 31 தலைப்புகளில் விஞ்ஞானிகளும் அவர்களது கண்டுபிடிப்புகளும் விபரிக்கப்பட்டுள்ளன. 32ஆவது இயலில் மாதிரி வினாத்தாள்களும் கடந்த வருட வினாத்தாள்களும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2112).

11074

விஞ்ஞானிகளும் விஞ்ஞான முறையியலாளர்களும். இ.ஜெயசுதர்சன். அச்சுவேலி: இ.ஜெயசுதர்சன், 1வது பதிப்பு, ஜுன் 2001. (யாழ்ப்பாணம்: கங்கை ஒப்செற் கொம்பியூட்டர் பிரின்டர்ஸ், நாவலர் வீதி, பிரவுண் வீதிக்கு அருகாமை).

(3), 90 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 120., அளவு: 20x14.5 சமீ.

க.பொ.த. உயர்தர, ஜீ ஏ க்யு வகுப்புகளில் அளவையியலை ஒரு பாடமாகப் பயிலும் மாணவர்களின் தேவைகருதி எழுதப்பட்டுள்ள நூல். விஞ்ஞானமுறையின் வளர்ச்சியையும் அதன் பிரயோகத்தையும் விஞ்ஞானிகள் பற்றியும் அவர்களது கண்டுபிடிப்புகள் பற்றியும் அறிய இந்நூல் வழியமைக்கின்றது. இந்தியா, கிரேக்கம், பிரான்ஸ், ஆங்கிலேயம், ஜேர்மனி, இத்தாலி, ரஷ்யா, ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து, அயர்லாந்து, டென்மார்க், இங்கிலாந்து, ஏனைய நாடுகள் என நாடுகள் வாரியாகப் பிரிக்கப்பட்டு அந்நாட்டு விஞ்ஞானிகள் பற்றிய தகவல்களை இந்நூல் வழங்குகின்றது. இந்நூலாசிரியர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆசிரியராவார். (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர். 7640).

11075

வென் வரைபடங்கள். க.கேசவதாசன். கொழும்பு 6: க.கேசவதாசன், இந்து மகளிர் கல்லூரி, 23 உருத்திரா மாவத்தை, 1வது பதிப்பு, 2002. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).

80 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 100., அளவு: 21.5x15 சமீ.

இந்நூலில் வென் வரைபடங்கள் எனும் விடயம் விரிவாக எழுதப்பட்டுள்ளது. வென் வரைபடம் பற்றிய வினாக்கள் G.C.E.A/L பரீட்சை வினாக்களிலும் G.A.Q

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைகளிலும் முக்கிய வினாவாகக் காணப்படுகின்றன. வென் வரைபடங்கள் பற்றி பல மாதிரிச் செய்கைகளுடன் பயிற்சிகளையும் இந்நூல் உள்ளடக்குகின்றது. 22 வருடகால பரீட்சை வினாக்கள் இந்நூலில் மேலதிகமாக இணைக்கப்பட்டுள்ளன. வென் வரைபடங்கள், மாதிரிச் செய்கைகள் (வென் குறியீட்டை எடுப்பாக மற்றுதல், எடுப்புகளை வென்படங்களில் காட்டுதல், வென்படங்களைக் கொண்டு எடுப்பைத் தீர்மானித்தல், வென் குறியீட்டுக்கு வென்படங்கள் வரைதல், வாதங்களை வென்வரைபடம் மூலம் வாய்ப்புப் பார்த்தல், நியாயத்தொடையை வென்வரைபடம் மூலம் வாய்ப்புப் பார்த்தல், வென் குறியீடுகளை வாதங்களாக்கி வாய்ப்புப் பார்த்தல்), வகுப்புகளின் வகைகள், பயிற்சிகள், நியாயத்தொடைசாரா வாதங்களின் வாய்ப்பு, கடந்தகால வினாக்கள் என்று ஆறு அலகுகளில் இந் நூல் விரிகின்றது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 7167).

170 ஒழுக்கவியல்

11076

அறுபதில் அறுபது சக எண்பதில். ஊரெழு வேலன் (இயற்பெயர்: சபா.வடிவேலையா). சுன்னாகம்: வேலழகன் வெளியீடு, கே.கே.எஸ்.வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (சுன்னாகம்: முத்து பிரின்டர்ஸ்).

x, 60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13.5 சமீ.

திரு. வடிவேலு அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு செப்டெம்பர் 1988இல் அறுபது நல்வாசகங்கள் அடங்கிய சிறுநூல் ஒன்று வெளியிடப்பட்டது. அரிய படிப்பினைகளாக அமையும் இக்கருத்துக்கள் அன்றாட வாழ்விய லோடு ஒட்டிய வெவ்வேறு சுவைகளைக் கொண்டவையாக அமைந்திருந்தன. இருபது வருடங்களின் பின்னர் மீண்டும் வெளியாகும் இந்நூல் அவரது 80ஆவது ஆண்டு நிறைவு வெளியீடாக, மேலும் பல தகவல்களையும் உள்ளடக்கி புதிய தலைப்புடன் வெளியிடப்பட்டுள்ளது. நூலில் இது இரண்டாவது பதிப்பாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45780).

11077

ஔவையின் மனுதத்துவம். கார்த்திகேசு சுவாமிகள். கொழும்பு 2: தத்துவஞானத் தவச்சாலை வெளியீடு, கொழும்பு அருளொளி நிலையம், 31/21, டோசன் வீதி, 1வது பதிப்பு, ஆவணி 1996. (அச்சக விபரம் தரப்படவில்லை).

76 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 17x13 சமீ.

ஔவையாரின் நீதிநூல்களான 109 ஒற்றை வரிப் பாக்களைக்கொண்ட ஆத்திசூடி, 91 ஒற்றை வரிப்பாக்களைக் கொண்ட கொன்றை வேந்தன், 30 வெண்பாக்களால் ஆக்கப்பட்ட மூதுரை, 40 வெண்பாக்களால் இயற்றப்பட்ட நல்வழி ஆகியவற்றை விளக்கங்களுடன் இந்நூலில் தொகுத்துத் தந்துள்ளனர். ஔவையாரின் நீதி நூல்கள் மாணவர்களுக்கு உரை ஆசிரியர்களின் உதவி இல்லாமல் புரியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம் அமைந்த மிகவும் எளிமையும், இனிமையும் கொண்டவை. காலத்தை வென்று தற்காலத்திற்கும், எக்காலத்திற்கும் பொருத்தமான மனுநீதிகளை உரைக்கும் தன்மையால் ஔவையின் நூல்கள் சிறப்பாகக் கருதப்படுகின்றன. ஔவையின் உவமைகள் உள்ளத்தைக் கவரும். சொல் வளம், பொருள் வளம், இசை வளம் ஆகியவைகள் அனைத்தையும் ஔவையின் பாக்களில் காணலாம். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16371).

11078

சாணக்கிய நீதிவெண்பா. சாணக்கியர் (சம்ஸ்கிருத மூலம்), அ.குமாரசுவாமிப் புலவர் (மொழிபெயர்ப்பாளர்). கொக்குவில்: ச.இ.சிவராமலிங்கையர், 1வது பதிப்பு, மாசி 1914. (கொக்குவில்: சோதிடப்பிரகாசயந்திரசாலை).

15 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13 சமீ.

சுபாஷிதம் என்பது சமஸ்க்ருதத்தில் மிகப் புராதனமான வடிவத்தில் சான்றோர் களின் அனுபவங்கள் சுலோகங்கள் போலத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. நீதிக்கோவைகள் என்று தமிழில் சொல்லலாம். ஆத்திசூடி, உலகநீதி போன்ற வடிவங்கள் எல்லாம் இதிலிருந்தே பிறந்தவை என்று கருத இடமிருக்கிறது. சமஸ்க்ருதத்தின் பர்த்ருஹரி முதலாக, காளிதாஸர், பவபூதி, சோமதேவ பட்டர், கல்ஹணர், வேதாந்த தேசிகன், சாணக்கியர் எனப் பலரும் இவ்வடிவத்தில் எழுதியிருக்கின்றனர். சம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்ட மூலநூலை யாழ்ப்பாணத்துச் சுன்னாகப் புலவர் அம்பலவாணபிள்ளை குமாரசுவாமிப் புலவர் (18.01.1855 - 23.03.1922) தமிழில் மொழிபெயர்த்து வழங்கியிருக்கிறார். இவர் இளமைக் காலத்தில் மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையிலும் அவ்வூரில் வாழ்ந்த முருகேச பண்டிதரிடமும் கல்வி பயின்றார். 1878 ஆம் ஆண்டு சி. வை. தாமோதரம்பிள்ளை ஏழாலையில் தான் நிறுவிய தமிழ்ப் பாடசாலைக்கு இவரை ஆசிரியராக நியமித்தார். சிறிது காலத்தின் பின் இவரே இப்பாடசாலையின் தலைமையாசிரியராக விளங்கினார். பின்னர் ஆறுமுக நாவலரால் நிறுவப்பட்ட வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமையாசிரியராகப் பணியாற்றினார். மேகதூதக் காரிகை, இராமோதந்தம், சாணக்கிய நீதிவெண்பா ஆகியவை இவர் சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்த்த நூல்கள். தமிழ்ப் புலவர் சரிதம், வினைப் பகுபத விளக்கம், சிசுபால சரிதம், இதோபதேசம், இலக்கியச் சொல்லகராதி, சிவதோத்திரக் கவித்திரட்டு, இரகுவம்ச சரிதாமிர்தம், ஏகவிருத்த பாரதாதி, மாவைப் பதிகம், இலக்கண சந்திரிகை, கலைசைச் சிலேடை வெண்பா - அரும்பதவுரை, கம்பராமாயணம் - பாலகாண்டம் - அரும்பதவுரை, நீதிநெறி விளக்கம் - புத்துரை, தண்டியலங்காரம் - புத்துரை, யாப்பருங்கலக்காரிகை - புத்துரை போன்றன இவர் இயற்றிய நூல்களாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2429).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11079

புதியதோர் உலகம் காணப் புறப்பாடு. புறப்படுகை நியாயந்தான். முட்டுக்கட்டைகள் நீங்குமா? இ.சண்முகராசா (மன்றச் செயலாளர்). திருக்கோணமலை: இளைஞர் அருள்நெறி மன்றம், ஞானசம்பந்தர் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1989. (கொழும்பு 12: நியூ லீலா அச்சகம்).

26 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

ஆன்மீகமும் அரசியலும் தர்மநீதியை முன்வைத்துச் செல்லவேண்டும். அதிகப் பெரும்பான்மை பலம் என்ற காரணத்தால் துன்மார்க்கங்களுக்குச் சிம்மாசனம் அமைத்துவிட்டுச் சன்மார்க்கத் திருநெறிக்குத் தூக்குமேடை அமைத்துவிடக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தும் நூல். மன்றத்தின் 24ஆவது வெளியீடாக வெளிவரும் இப்பிரசுரம் 14.01.1989 அன்று புத்தாண்டுப் பொங்கல் திருநாள் சிறப்பு வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் PAM 726/45768).

11080

பொன்மொழிகள் 1000. வே.நவமோகன் (தொகுப்பாசிரியர்). தெகிவளை: காயத்ரி பப்ளிக்கேஷன்ஸ், த.பெ.எண். 64, இல. 68, டீ சில்வா வீதி, 1வது பதிப்பு, மே 2012. (தெகிவளை: காயத்ரி அச்சகம்).

vi, 84 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x15 சமீ.

யாதுமூரான் என்ற புனைபெயரில் படைப்பாக்கங்களை வழங்கிவரும் வே. நவமோகன் தொகுத்துள்ள பொன்மொழிகள் இவை. தான் வாசித்த நூல்களில் இருந்தும் பிற ஆவணங்களில் இருந்தும் இப் பொன்மொழிகளைத் தேர்வு செய்துள்ளார்.

11081

மூதுரை. ஔவையார் (மூலம்), ஸ்ரீ சார்ள்ஸ் த சில்வா (சிங்கள மொழியாக்கம்). கொழும்பு 2: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், காப்புறுதி இல்லம், 9வது மாடி, 21, வாக்ஷோல் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1990. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

vii, 32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

ஔவையார் அருளிச்செய்த மூதுரை தமிழ் சிங்கள மொழிகளில் இந்நூலில் காணப்படுகின்றன. சிங்கள மக்களிடையே தமிழ் மொழியின் செழுமையை எடுத்துச் சொல்லும் பணியாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இச்செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11304).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

180 இந்து தத்துவம் (சைவ சித்தாந்தம்)

11082

அருணந்தி சிவாச்சாரியாரின் சிவஞானசித்தியார் (சுபக்கம்). திருநெல்வேலி ஞானப்பிரகாசமுனிவர் (உரையாசிரியர்), தி.செல்வமனோகரன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவ வித்தியாவிருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2017. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

Lvi, 270 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-7347-00-4.

1889 ஆனி மாதத்தில் சென்னை சை.இரத்தினசெட்டியார் அவர்களது மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்ட மூலநூலின் மீள்பதிப்பு இதுவாகும். திருவண்ணாமலை ஆதீனத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் சாலீவாடீபுரம் (கி.பி. 16ம் நூற்றாண்டில் திருநெல்வேலி இப்பெயரால் அழைக்கப்பட்டிருந்தது) ஸ்ரீமத் ஞானப்பிரகாச தம்பிரான் இயற்றிய உரையோடு மேற்படி ஆதினம் யாழ்ப்பாணம் வட்டுநகர் ஸ்ரீமத் சிவஞானதம்பிரானுடைய ஏட்டுப் பிரதிக்கிணங்க யாழ்ப்பாணம் வண்ணைநகர் ம.அமரசிங்கப் புலவரைக்கொண்டு பரிசோதித்து அவர் மாணாக்கருள் ஒருவராகிய மேற்படி நகரத்து சி.சண்முக ஐயரால் இந்த மூலநூல் வெளியிடப்பட்டிருந்தது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61689).

11083

ஆழ்மனதின் அனுபவங்கள். சரோஜினி பாஸ்கரன். தெகிவளை: சரோஜினி பாஸ்கரன், இல. 11, அல்பேர்ட் பிளேஸ், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2010. (சென்னை 600004: சண்முகஜெயம் அச்சகம், இல. 23, அருண்டேல் வீதி, மைலாப்பூர்).

120 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14 சமீ.

வீரகேசரி நாளிதழில் வெளிவந்த முப்பத்தியாறு கட்டுரைகளின் தொகுப்பு. ஆசிரியர் இலங்கையில் ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். மக்கள் சேவையே மகேசன் சேவை என்றுணர்த்திய மகான், துன்பத்தை வாழ்க்கையின் தவமாகக் கொண்ட அன்னை ஸ்ரீ சாரதாதேவி, பற்றற்ற வாழ்க்கை மூலமே இறைவனை அடையலாம், கீதையின் சாரம், பசித்தவனுக்கு உணவளிப்பது இறைபணிக்கு ஒப்பானது, மெய்ஞானத்தை உணரவைக்கும் குருதீட்சை, ஆன்மாவைக் கட்டுப்படுத்தும் மெய்ஞானம், மனிதனின் துயர் துடைக்கும் ஆன்மீக பயணம், குழந்தைப் பருவத்திலேயே ஆன்மீக அஸ்திவாரம் இடப்படல் வேண்டும், கலியுகத்தில் ஆன்மீகத்தின் அவசியம், கடவுளை நம்புவதற்கும் ஆழ்ந்த மனவலிமை வேண்டும், இறைவனை அடைய மனத்தெளிவே அவசியம், இறைவனை உண்மையாக நேசிப்பவனுக்கு எதுவும் கேட்காமலேயே கிடைக்கும், இறைவன் பக்தர்களை சோதிப்பது பாவங்களை களைவதற்கே, இறைவனை அடைவதே இந்துமதக் கோட்பாடு, மனிதனை மனிதனாக வாழ வைப்பதே இந்துமதம் என இன்னோரன்ன ஆன்மீகத் தலைப்புகளில் இந் நூலிலுள்ள கட்டுரைகள் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11084

உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த திருவருட்பயன் (மூலமும் தெளிவுரையும்). உமாபதி சிவாசாரியர் (மூலம்), தோகையார் (தெளிவுரை). யாழ்ப்பாணம்: மு.கணபதிப்பிள்ளை, ஸ்ரீகாந்தா அச்சகம், 213, காங்கேசன்துறை வீதி, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்).

32 பக்கம், விலை: 50 சதம், அளவு: 18.5x12.5 சமீ.

சைவ சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றான திருவருட் பயன் உமாபதி சிவாச்சாரியாரால் இயற்றப்பட்டது. இந்நூல், ஒவ்வொன்றும் பத்துக் குறட்பாக்களால் ஆன பத்து அதிகாரங்களாக வகுக்கப்பட்டுள்ளது. திருவருட் பயனின் அதிகாரங்கள் அவற்றின் உட் பொருள்களுக்கு ஏற்பப் பெயரிடப்பட்டுள்ளன. இவை, பதிமுது நிலை, உயிரவை நிலை, இருள்மல நிலை, அருளது நிலை, அருளூறு நிலை, அறியு நிலை, உயிர் விளக்கம், இன்புறு நிலை, ஐந்தெழுத்தருள் நிலை, அணைந்தோர் தன்மை என்பனவாகும். மாணவர்களின் பயன்பாட்டுக்கு ஏற்றவகையில் இந்த நூல் தோகையார் அவர்களின் தெளிவுரையுடன் கூடியதாக வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21904).

11085

காமிகாகமம் கூறும் அக்கினி வழிபாடு: சித்தாந்த அடிப்படையில் ஒரு நோக்கு. க.பாலச்சந்திர சிவாச்சாரியார். கொழும்பு: சிவஸ்ரீ க.பாலச்சந்திர சிவாச்சாரியார், ஆசிரியர், விபுலானந்த தமிழ் மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, மே 2016. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).

80 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-43223-0-1.

பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய அக்கினி, சைவ வழிபாடுகளிலும் முதன்மை பெறுகின்றது. இந்நூல், சிவாகமங்களில் முதலாவதாகக் காணப்படும் காமிகாகமம் பற்றிய தகவல்களையும் அவ்வாகமங்களில் தெளிவுபடுத்தப்படும் அக்கினி காரிய படலம் மூலமாக அக்கினி வழிபாட்டு முறைகள் பற்றிய சிந்தனைகள், அதன் அர்த்தபூர்வமான உள்ளார்த்தங்கள் என்பவற்றையும் தெளிவுபடுத்துகின்றது. 2015ஆம் ஆண்டு எம்.ஏ. சைவசித்தாந்த நெறியினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பூர்த்திசெய்து அதன் ஆய்வுக் கட்டுரையை இந்நூல்வடிவில் சிவஸ்ரீ க.பாலச்சந்திர சிவாச்சாரியார் வழங்கியிருக்கிறார். இவ்வாய்வுநூல் அக்கினி வழிபாடு பற்றிய அறிமுகம், ஆகமங்களின் தோற்றமும் சிறப்பும், சைவ சமயமும் காமிகாகமமும், காமிகாகமம் கூறும் அக்னி வழிபாடு, அக்னி வழிபாடும் வாழ்வியலும் ஆகிய ஆறு இயல்களில் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60738).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11086

காஷ்மீர சைவமும் சைவசித்தாந்தமும்.தி.செல்வமனோகரன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).

viii, 216 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-685-047-5.

பேராசிரியர் நா.ஞானகுமாரன் அவர்களின் மேற்பார்வையின்கீழ் "சைவசித்தாந்த, காஷ்மீர சைவ மெய்யியலமைப்பு-ஓர் ஒப்பீட்டாய்வு" எனும் தலைப்பில் முதுதத்துவமாணி கற்கைநெறியை மேற்கொண்டு அதனை நிறைவுசெய்த ஆசிரியர் அவ்வாய்வினையும் அதன்வழிப்பெற்ற அறிவையும் அடிப்படையாகக்கொண்டு இந்நூலை எழுதியுள்ளார். இந்திய தேசமெங்கும் பரவியிருந்த சைவம் பெருஞ் சமயமாக-தத்துவமாக அமையும் விதத்தில் தன் கட்டமைவுகளைத் தக்கவைத்துக் கொண்டது. அந்த வகையில் காஷ்மீரத்தில் நிலவிய ஒருமைவாத சைவத்தையும், தமிழ்நாட்டில் நிலவிய பன்மைவாத சைவசித்தாந்தத்தையும் ஒப்பிடுவதாக இந் நூல் அமைகின்றது. இது அறிமுகம், அறிவாராய்ச்சியியல், பதியுண்மை, பசுவுண்மை, பாசமும் அதன் வகைகளும், முக்தியும் முக்திக்கான மார்க்கங்களும், ஆகிய ஆறு பிரதான இயல்களின்கீழ் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61690).

11087

சர்வஞானோத்தர ஆகம ஞானபாத வசனம். சிவதொண்டன் சபை. யாழ்ப்பாணம்: சிவதொண்டன் சபை, 434, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1998. (கொழும்பு 11: அஷ்டலட்சுமி பதிப்பகம், 320, செட்டியார் தெரு).

vii, 90 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x13.5 சமீ.

சுத்தாத்துவித சைவசித்தாந்த சமயத்தை இக்காலநிலையில் நின்று சிந்தித்து, சமகாலத் தேவைக்கும் புரிதலுக்கும் ஏற்ப சைவசமயத்தின் முதல் நூல்களின் சிரோமணியாக விளங்கும் சர்வஞானோத்தர ஆகம ஞானபாதத்தின் தமிழ் மூல உரை இதுவாகும். சைவசித்தாந்தத்தைப் பொது வகையாகக் கூறும் காமிகம் முதல் வாதுளம் ஈறாகிய இருபத்தெட்டு ஆகமங்களையும் ஸ்ரீகண்ட பரமேசுவரன் இருடிகளுக்கும் முனிவர்களுக்கும் உபதேசித்தருளினார். சர்வ ஆகமங்களின் சாரத்தைச் சிறப்பாக எடுத்துக்கூறும் சருவஞானோத்தர ஆகமத்தை அப்பெருமான் ஸ்கந்தகுருவான சுப்பிரமணியக் கடவுளுக்கு உபதேசித்தருளினார் என்பர் ஆன்மீகப் பெரியோர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25452).

11088

சித்தாந்த ஞானக் களஞ்சியம். மலர்க் குழு. ஏழாலை: ஏழாலை இலக்கிய கலாநிதி, பண்டிதமணி மு.கந்தையா நூல்வெளியீட்டுக் கழகம், சத்தி முற்றம், 1வது பதிப்பு, ஜூன் 2003. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

400 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

பண்டிதமணி மு.கந்தையாவின் மறைவின் முதலாவது ஆண்டு நிறைவின்போது 30.6.2003இல் வெளியிடப்பட்ட நினைவுநூல். பண்டிதமணி மு.க. பற்றிய சான்றோர் நினைவுக் களஞ்சியம் (16 படைப்பாக்கங்கள்), பண்டிதமணி மு.க. பற்றிய தொடர்புசாதனச் செய்திக்களஞ்சியம் (11 படைப்பாக்கங்கள்), பண்டிதமணி மு.க. பற்றிய கவிதைக்களஞ்சியம் (9 படைப்பாக்கங்கள்), பண்டிதமணி மு.க. வின் நூற்களஞ்சியம் அறிமுகம் (14 படைப்பாக்கங்கள்), பண்டிதமணி மு.க. வின் கட்டுரைக் களஞ்சியம் (21 படைப்பாக்கங்கள்), அறிஞர்களின் ஆய்வுக் களஞ்சியம் (9 படைப்பாக்கங்கள்) ஆகிய பிரிவுகளின் கீழ் ஆக்கங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30562).

11089

சிவஞானசித்தித் தெளிவு: திருவிளங்க தேசிகர் பொழிப்புரைத் தொகுப்பு. திருவிளங்க தேசிகர் (பொழிப்புரை). யாழ்ப்பாணம்: அமரர் ஸ்ரீவரதராஜன் நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xvi, 76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாண மாவட்ட மருந்துகளின் பொறுப்பதிகாரியாகப் பதவிவகித்து இளைப்பாறிய அமரர் ஸ்ரீ வரதராஜன் அவர்களின் நினைவு வெளியீடாக 02.04.2000 அன்று வெளியிடப்பட்ட நூல். பதிப்புரையில் வெளியீட்டாளர்களின் கூற்று பின்வருமாறு அமைந்துள்ளது. "செய்யுள்களாய் அமைந்த விரிநூலாகிய, அருநந்தி சிவாசாரியாரின் சிவஞானசித்தியாரது பகுதியாகிய, சித்தாந்த உண்மைகளைத் தெளிவுபட விளக்கும் சுபக்கத்துக்கு, பின்னவரான மானிப்பாய் திருவிளங்க தேசிகர் எழுதிய பொழிப்புரைகளைத் தனியே தொகுத்து நூலாக வெளியிட்டால், செய்யுள்களால் ஏற்படும் மலைப்பு, கடின உரை கற்பதால் ஏற்படும் சிக்கல், பிறசமய கண்டனம் ஆகிய மற்றொன்று விரித்தலால் சித்தாந்தத்தைத் தொடர்ச்சியாக அறியமுடியாமல் ஏற்படும் சலிப்பு முதலியன இன்றி எல்லோரும் சித்தாந்த தத்துவத்தை எளிதாக அறியக்கூடியதாக இருக்குமெனப் பெரியோர்கள் பலரும் கூறினர். அவர்கள் கூறியதைச் செயற்படுத்தி உள்ளோம்." (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24227).

11090

சிவஞானபோத வசனாலங்கார தீபம். காசிவாசி செந்திநாதையர் (மூலம்), க. வச்சிரவேல் முதலியார் (உரையாசிரியர்). தமிழ்நாடு: அருள்நந்தி சிவம் அருட்பணி மன்றம், 78, செல்விநகர், சிந்துபூந்துறை, திருநெல்வேலி 627001, 1வது பதிப்பு, ஏப்ரல் 1996. (திருநெல்வேலி 627001: ரெக்சி Rexy பிரின்டர்ஸ்).

xiv, 158 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21x13.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848இல் குப்பிழான் என்னும் கிராமத்தில் பிறந்த செந்திநாதையர் 1924இல் சிவபதமடைந்தார். சைவசித்தாந்த ஆராய்ச்சியாளராக, மொழிபெயர்ப்பாளராக, பரமத கண்டனக்காரராக செயற்பட்ட இவரின் பணிகள், குறிப்பாக சைவத்துக்கும் சைவசித்தாந்தத்திற்குமான பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. சைவசித்தாந்தத்தை தெளிவுணர்த்தும் பழம்பெரும் நூல்களில் சிவஞானபோத வசனாலங்காரதீபம் தனியிடம் வகிக்கின்றது. 1916ம் ஆண்டு முதற்பதிப்பைக் கண்ட இந்த மூலநூல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் அனுமதியுடன், திரு.க.வச்சிரவேலு முதலியார் அவர்களால் "சிவஞானபோத உரைநடை விளக்கம்" என்ற தலைப்புடன் எழுதிவைக்கப்பட்டிருந்த நூல் அருள்நந்தி சிவம் அருட்பணி மன்றத்தினரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூல் சிவஞானபோதத்தின் உயர்வை மிகத் துல்லியமாக எடுத்துரைக்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24070).

11091

சிவநெறிப் பிரகாசம். செ.கனகசபாபதிப்பிள்ளை (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசூக்குமார்த்த போதினிப் பத்திரிகாசிரியர், வேலணை, 1வது பதிப்பு, ஆடி 1917. (யாழ்ப்பாணம்: நடராஜ அச்சியந்திரசாலை, வேலணை).

(6), 42 பக்கம், விலை: 75 சதம், அளவு: 20.5x14 சமீ.

சிவநெறிப் பிரகாசம் என்னும் நூல் 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவாக்கிர யோகிகள் என்பரால் எழுதப்பட்ட சைவசித்தாந்த நூலாகக் கருதப்படுகின்றது. இதற்கு இவரது மாணாக்கர்கள் பலர் எழுதிய சிவநெறிப் பிரகாச உரைகள் இந்த நூலின் பெருமையை நன்கு விளக்குவதாக உள்ளது. யோகிகளின் மகள் சுவானந்த நாச்சியார் தமக்குச் சிவநெறியை உணர்த்தும்படி வேண்ட அதன் பொருட்டு சிவாகமங்களிலிருந்து தெரிந்தெடுத்த செய்திகளை 1000 சுலோகங்களில் தந்துள்ள நூல் இது. வாழ்க்கை இருளில் சிவப்பேறு அடைய வழிகாட்டும் ஒளிவிளக்கு என்னும் பொருள் தருவதாய், இந்த நூலின் பெயர் "சிவநெறிப் பிரகாசம்" என்று சூட்டப்பட்டுள்ளது. இந்நூலுக்கான உரைகளிலொன்றாக இப்பிரதி அமைந்துள்ளது. செ.கனகசபாபதிப்பிள்ளையவர்கள் தனக்குக் கிட்டிய நான்கு பிரதிகளை ஒப்பிட்டு இந்நூலைப் பதிப்பித்திருக்கிறார். நான்கு பிரதிகளிலும் இந்நூலாசிரியர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்று தனதுரையில் குறிப்பிட்டுள்ளார். சைவாதீனத்திலுள்ள சிவஞானச்செல்வர் ஒருவரால் செய்யப்பட்ட நூலாகவிருக்கலாம் எனக் கருதுகின்றார். மேலும் இந்நூலிலே கடவுள் வணக்கம், அளவை பதியிலக்கணம், பசுவிலக்கணம், பாசவிலக்கணம், தத்துவவியல்பு, பஞ்சமயகோசம், மும்மாயை களினியல்புகளும் சிவதருமம் செய்வோருக்குச் சத்தினிபாதமுதிக்கும் தன்மை, தீட்சைகளின் இயல்பு, சமயபேதமும் அவரவர் கொள்கையும், முத்திக்குபாயங்கூறல், தசகாவியங்களிவையெனல், பஞ்சாட்சரவியல்பு, சிவபக்தி ஆன்மாக்களுக்கு உறுதிபயக்குமெனல் ஆகிய அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 972).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11092

சைவ சித்தாந்தச் சம்புடம். இரா.மயில்வாகனம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு: திருமதி மங்கையர்க்கரசி மயில்வகனம். 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xxiv, 188 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

அன்பே சிவம் அரனும் ஆன்மாவும் திருவுந்தியாரில், அரனும் ஆன்மாவும் திருக்களிற்றுப் படியாரில் (இரா.மயில்வாகனம்), சிவஞானபோத மலர்ச்சி (நா. செல்லப்பா), திருக்களிற்றுப் படியார் படிவம், அம்மையப்பரேயுலகுக்கு அம்மையப்பர் என்றறிக, அம்மையப்பரைத் தரிசித்துக் கூடும் முறைமை, அம்மை அப்பர் தரிசனம் அடைவிக்கும் சைவ நன்மார்க்கங்கள், சிவயோகம், இன்பமே எந்நாளுந் துன்பமில்லை, வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம், மகாவாக்கியம், ஐந்தொழில் ஆடல், பன்னிரு திருமுறைகள், (வி.சங்கரப்பிள்ளை), சுவாமி மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் ஒரு வாசகம் (மங்கையர்க்கரசி மயில்வாகனம்), நாம் இயற்கையில் காணும் அரிய சைவ சித்தாந்தங்கள் (சற்சொரூபவதி நாதன்), அரிச்சுவடி அமைப்பில் ஆன்ம ஞான வைப்பு (நாவற்குளி நடராசா), திருமூலரின் சமயச் சிந்தனைகள் (குமாரசுவாமி சோமசுந்தரம்), மெய்கண்ட சாத்திரத்தின் முற்பட்ட வைசித்தாந்தம் (தெ.ஈஸ்வரன்), சித்தாந்தத்தில் உயிர்த் தத்துவம் (செ. குணரெத்தினம்), சித்தாந்தச் சிந்தனைகள் (இ.ஜெயராஜ்), பசு பாசம் (சாந்தி நாவுக்கரசன்), பின்னுரை (இரா. மயில்வாகனம்) ஆகிய ஆக்கங்களின் தொகுப்பு இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20844).

11093

சைவ சித்தாந்தம் கைநூல். நாகேந்திரம் கருணாநிதி. லண்டன் E6 2HD: 109, Caledon Road, East Ham, 1வது பதிப்பு, 2017. (லண்டன்: ஜே.ஆர். பிரின்ட்).

122 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி, சைவசித்தாந்தத்தைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் ஐரோப்பிய சைவசித்தாந்த ரத்தினப் பயிற்சி மையமாகிய லண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தில் சூ.யோ.பற்றிமாகரன் அவர்களிடம் தான் கற்ற வேளையிலும், பின்னர் பல சைவசித்தாந்த நூல்களை வாசித்துத் தெளிந்தவேளைகளிலும் பெற்ற இன்பத்தின் அடிப்படையில் இந் நூலை எழுதியுள்ளார். சைவசித்தாந்தம் கற்க விரும்பும் மாணவர்களின் தேவைகளுக்கேற்ப எளிய நடையில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் இந்நூலில் வழங்கப்பட்டுள்ளன. சைவசித்தாந்தச் சுருக்கம், முப்பொருள் உண்மைகள், பதி (இறைவன்), நவதருபேதம், சிவலிங்கம், நடராஜ தத்துவம், திருவைந்தெழுத்து, பசு (உயிர், ஆன்மா), பாசம் (மலம் தளை), ஆணவம், கன்மம், மாயை, சைவசித்தாந்த சாத்திரங்கள் ஆகிய 13 இயல்களில் இந்நூல் விரிகின்றது. இவை லண்டனிலிருந்து வெளிவரும் "பார்வை" இதழ்களில் தொடராக வெளிவந்தவை யாகும். தாயகத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் மயிலிட்டி வீரமாணிக்கதேவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையைச் சேர்ந்த கருணாநிதி, புலம்பெயர்ந்து லண்டன் ஈஸ்ட்ஹாம் பகுதியில் வாழ்ந்து வருகின்றார்.

11094

பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியம். ஸ்ரீநீலகண்ட சிவாசாரியார் (வடமொழி மூலம்), காசிவாசி. செந்திநாதையர் (தமிழாக்கம்). தஞ்சாவூர் 613 007: தெய்வச் சேக்கிழார் சைவசித்தாந்தப் பாடசாலை, 5 D, செல்வம் நகர், 2வது பதிப்பு, மார்ச் 2005, 1வது பதிப்பு, வைகாசி 1907. (சிவகாசி: ஹேமமாலா சிண்டிகேட்).

672 பக்கம், விலை: இந்திய ரூபா 400., அளவு: 23.5x15.5 சமீ.

ஸ்ரீநீலகண்ட சிவாசாரியார் அருளிய பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியம் தெய்வச் சேக்கிழார் சைவசித்தாந்தப் பாடசாலையின் முதல் வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது.

11095

பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியம்: முதலாம் பாகம். ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியார் (வடமொழி மூலம்), காசிவாசி. செந்திநாதையர் (தமிழாக்கம்). தேவிகோட்டை: ஸ்ரீ அரு. சோமசுந்தரஞ் செட்டியார், 1வது பதிப்பு, வைகாசி 1907. (தமிழ்நாடு: செந்திநாதசுவாமி யந்திரசாலை, திருமங்கலம்).

1-184 பக்கம், விலை: இந்திய ரூபா 2-0-0., அளவு: 23.5x15.5 சமீ.

வேதகாலத்தில் பாரதத்தில் நிலவிய மதம் வைதிக நெறியாகக் கடைப்பிடிக்கப்பட்டது. சமணம், பௌத்த மதங்கள் தோன்றாத அக்காலத்தில் வேதநெறி சனாதன தர்மம் என்று போற்றப்பட்டது. பின்னாளில் இவ்வேதம் சைவம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சாக்தம், சௌரம் என ஆறு சமயங்களை உள்வாங்கிக்கொண்டது. இவற்றுள் சிவனார் வழிபாட்டைப் போற்றுவதாக சைவம் அமைந்தது. இந்தஆறு சமயங்களையும் தாண்டி அப்பால் ஒரு தனிச் சிறப்போடு ஒளிர்வதே சைவ சித்தாந்தம். ஸ்ரீநீலகண்ட சிவாசாரியார் அருளிய பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியம் சைவசித்தாந்தத்தின் சிறப்பினை வலிறுத்துகின்றது.

11096

பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியம்: இரண்டாம் பாகம். ஸ்ரீநீலகண்ட சிவாசாரியார் (வடமொழி மூலம்), காசிவாசி. செந்திநாதையர் (தமிழாக்கம்). தேவிகோட்டை: ஸ்ரீ அரு. சோமசுந்தரஞ் செட்டியார், 1வது பதிப்பு, வைகாசி 1908. (தமிழ்நாடு: செந்திநாதசுவாமி யந்திரசாலை, திருமங்கலம்).

185-400 பக்கம், விலை: இந்திய ரூபா 2-0-0., அளவு: 23.5x15.5 சமீ.

அகச்சமயங்கள் ஆறும் சைவபேதங்களேயாகும். அவை பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவ சங்கராந்த வாத சைவம், ஈசுர அவிகார சைவம், சிவாத்துவித சைவம் என்பன. இவை சைவசித்தாந்தத்தோடு மாறுபடுவது பெரும்பாலும் முத்திநிலையைப் பொறுத்தேயாகும். இவற்றுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாத்துவித சைவம் பெரிதும் வணங்கப்படுகின்ற ஒன்றாகும். இச்சைவம் இந் நூலில் பெரிதும் போற்றப்படுகின்றது.

11097

பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியம்: மூன்றாம் பாகம். ஸ்ரீநீலகண்ட சிவாசாரியார் (வடமொழி மூலம்), காசிவாசி. செந்திநாதையர் (தமிழாக்கம்). தேவிகோட்டை: ஸ்ரீ அரு. சோமசுந்தரஞ் செட்டியார், 1வது பதிப்பு, 1908. (தமிழ்நாடு: செந்திநாதசுவாமி யந்திரசாலை, திருமங்கலம்).

401-644 பக்கம், விலை: இந்திய ரூபா 2-0-0., அளவு: 23.5x15.5 சமீ.

ஸ்ரீநீலகண்ட சிவாசாரியார் சங்கராச்சாரியார், இராமானுஜாசாரியார் முதலா னோருக்கு காலத்தால் மூத்தவர். இவரது மூலநூலை தமிழாக்கம் செய்துள்ள காசிவாசி. செந்திநாதையர் 1848 ஐப்பசி இரண்டாம் திகதி யாழ்ப்பாணத்தில் குப்பிழான் என்ற சிற்றூரில் பிறந்தவர். தமிழ், வடமொழி ஆகியவற்றினை கதிர்காம ஐயரிடம் கற்றவர். 1872இல் நாவலரின் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராக நியமனம் பெற்றார். இங்கு ஆறு ஆண்டுகள் வரை கல்வி புகட்டினார். சிலகாலம் திருவனந்தபுரத்தில் தங்கியிருந்து வடமொழியில் காவியம், வியாகரணம், தருக்கம் முதலியவற்றைப் பயின்றார். 1888தொடங்கி 1898 வரை இவர் காசியில் வாழ்ந்து காசிவாசியாகினார். இவர் வரைந்த பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடிய நூலுக்கு உபநிடத உபக்கிரமணிகை, பிரமசூத்திர உபக்கிரமணிகை என இரு பெரிய ஆராய்ச்சி முகவுரைகளும் இவரால் எழுதப் பட்டன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10821).

11098

மறைஞானம் நல்கும் சிவஞான போதம். நா.செல்லப்பா. கொழும்பு 3: உலக சைவப் பேரவை, இலங்கைக் கிளை, இல.39/23, நெல்சன் பிளேஸ், 1வது பதிப்பு, கார்த்திகை 1997. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B புளுமென்டால் வீதி).

x, 46 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21.5x14 சமீ.

அப்பியாச நெறி, சன்மார்க்க நெறி, பண்ணும் பரதமும் ஆற்றும் பங்கு, தூய ஞானக்கண் தரிசனம், தன் நாமம் கெடுதல், ஆனந்த நடனம், மெய்யுணர்தல் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. சிவநடராஜ திருமூர்த்தத்தின் அற்புதங்கள், அதன் அகத்தே மறையாக ஒளித்துவைத்துக்கொண்டிருக்கும் மறைஞானத்தை அரிதாக வெளிக்கொணர்ந்து அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிய தமிழில் விளக்குகின்றார். அவ்வுருவத் திருமேனியின் அற்புத உண்மைகளை ஐரோப்பியர்கள் வளர்த்துவரும் பௌதீகத் துறையின் சமீபகாலக் கண்டுபிடிப்புகளோடு ஒப்பிட்டு ஆனந்த சிவதாண்டவம் அணுக்களுக்குள்ளும் இருப்பதை அழகுற விளக்குகின்றார். சிந்தனா நியதி பிழையாது தத்துவார்த்த விளக்கம் தர, திருவள்ளுவர், திருமூலர், மெய்கண்டார் போன்றோர் மொழியாக்கிய ஆழமான தெளிவுகளை அகப்படுத்தி, இதுவரை யாரும் அவ்வளவு தெளிவாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியிராத பரதநாட்டியத்தின் நுட்பங்களை நாதவிந்து தத்துவங்களோடு, பஞ்சகலைகட்கு வேறாகிய நிலையில் மேலான சிவகலைகளும் உண்டெனக்கண்டு விளக்குகின்றார். நாதத்தின் வெளிப்பாடாக பண்கள் இருக்க, விந்துவின் வெளிப்பாடாக நடவுகள் இருக்கின்றன என்கிறார். நடவுகளைக் கண்டு சுவைத்துப் பின் கழன்று பண்களோடு இசையும் ஆன்மா நசிப்பும் தலைப்படும் என்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 161985).

11099

விவேக சூடாமணியின் சாரம். சங்கராச்சாரிய சுவாமிகள் (மூலம்). யாழ்ப்பாணம்: கமலாசனி அச்சுநிலையம், 1வது பதிப்பு, 1935. (யாழ்ப்பாணம்: கமலாசனி அச்சு நிலையம்).

79 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

விவேக சூடாமணி என்பது ஆத்மாவின் தத்துவங்களைச் சொல்லும் நூல். ஆதி சங்கரர் எழுதிய முதலாவது ஆன்மீக நூல் இதுவாகும். இதில் அவர் பாமர மக்களுக்கும் புரியும்படி மிக எளிதாக ஆன்மீகக் கருத்துக்களை வழங்கியிருக்கிறார். இதைப் படிக்கப்படிக்க ஆன்மீக வழியை ஒரு சாமானியன் எளிதாக அடைய முடியும் என்பர். விவேகம் என்பதை அறிவு என்று பொதுவாகக் கூறுவாருளர். ஆன்மீகத்தில் விவேகம் என்பதற்கு உலகத்தில் இருந்தும் காணமுடியாத இறைவனைப்பற்றி உண்மைகளைத் தெரிந்துக்கொண்டு அதைப்பற்றிச் சிந்தித்து மேலும் பல உண்மைகளை அறிவது என்று அர்த்தம் கொள்ளப்படுகின்றது. எது தவறு எது சரியானது என்று சிந்திப்பதும் விவேகம் தான். இந்நூல் அத்தகு விவேக சூடாமணியின் சாரத்தை உள்ளடக்குகின்றது. இவ்வெளியீட்டின் ஈழத்துப் பதிப்பாசிரியர் பெயர் நூலில் குறிப்பிடப்படவில்லை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13249).

11100

வேதநூல். சுவாமி கெங்காதரானந்தஜீ. திருக்கோணமலை: சிவயோக சமாஜம், பெருந் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 1990. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 201, டாம் வீதி).

26 பக்கம், விலை: ரூபா 9.00, அளவு: 18x12 சமீ.

இந்துப் பாரம்பரியத்தின் சமய பண்பாட்டு மூலங்களான ஞான நூல்கள் பற்றிய சிறு குறிப்புகளைத் தரும் இந்நூல் இரத்தினச் சுருக்கமாக வேத நூல்களை எமக்கு அறிமுகம் செய்கின்றது. திருக்கோணமலையில் சிவயோக சமாசத்திலிருந்து 50 ஆண்டுகளுக்கும் மேலாக சைவப் பணியாற்றும் சுவாமி கெங்காதரானந்தஜீ அவர்களின் ஆன்மீக நூல்களில் இதுவும் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

190 சோதிடம், வானசாஸ்திரம்

11101

உங்கள் வாழ்நாள் பலனை நீங்களே அறிந்துகொள்ளுங்கள். கே.வி.குணசேகரம். கோப்பாய்: கே.வி.குணசேகரம், குணம் பதிப்பகம், பிள்ளையார் கோவிலடி, கோப்பாய் மத்தி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 12: பேர்பெக்ட் பிரின்டர்ஸ்).

ix, 122 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 200., அளவு: 22x14.5 சமீ.

கிரக மாற்றங்கள், தசை, புத்தி, லக்கின பலன், இராசி பலன், கோசார பலன், சந்திர ராசிப்பலன், குரு, சனி, ராகு, கேது, மாற்றப் பலன், தினப்பலன், லக்கின வீடு முதல் 12 பாவங்களில் கிரகங்கள் நிற்கும் பலன், திருமணப் பொருத்தம் போன்ற அனைத்தையும் ஆசிரியர் இந்நூலில் விளக்கியுள்ளார். சோதிடக் கலையில் ஆர்வமுள்ளவர்களின் அடிப்படை அறிவை விருத்திசெய்வதற்கு ஏற்றவகையில் இந்நூலை உருவாக்கியுள்ளார். (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14774).

11102

எண் சோதிட மறுமலர்ச்சி. K.N.நவரத்தினம், L.L.செல்வநாதன். யாழ்ப்பாணம்: பண்டிற் K.N.நவரத்தினம், 211, நாவலர் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1980. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(2), 18 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

இந்நூல் புராதன இந்துசமய மூலக்கொள்கைகளையும் விஞ்ஞானக் கருத்துக்களையும் தர்க்க சாஸ்திரக் கருத்துக்களையும் கொண்டதாக வெளிவந்துள்ளது. இந்நூலில் அமைந்த மூலக் கருத்துக்கள் இலங்கைச் சோதிட ஆய்வு மன்றத்தினால் ஆய்வுக்கு எடுக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு பிரசுரத்துக்கு அனுமதிக்கப்பட்டதாக இலங்கைச் சோதிட ஆய்வுமன்றத் தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளருமான நா.சுப்பிரமணிய ஐயர் தனது பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4300).

11103

எந்தக் கிழமையில் பிறந்தீர்கள்? என்ன அதிர்ஷ்டம் பெறுவீர்கள்? பி.கே.சாமி. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2002. (சென்னை: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

228 பக்கம், விலை: இந்திய ரூபா 55., அளவு: 18x12.5 சமீ.

பொதுவாக எண் சோதிடத்தில் பிறந்த திகதி, பிறந்த மாதம், பிறந்த வருடம் ஆகியவற்றை கூட்டிவரும் எண்ணை வைத்து ஒருவரின் பலாபலன்களைக் கூறிவந்தார்கள். இந்நூலாசிரியர் பிறந்த எண்ணுக்கும் பிறந்த ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழமைக்குமான கணிப்பினை வழங்கியிருக்கிறார். பிறந்த கிழமையை வைத்து ஒருவரின் யோகங்களைத் தெரிந்துகொள்ளலாம் என்ற உப தலைப்புடன் வெளிவந்துள்ள இச்சோதிடநூலின் ஆசிரியர் பி.கே.சாமி அவர்கள் இலங்கையில் சமாதான நீதவானாக கொழும்பில் பணியாற்றுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32370).

11104

திருமணப் பொருத்த விதிகள். எம்.என்.மகேந்திரராஜா. கனடா: எம்.என். மகேந்திரராஜா, 65, Green Crest Circuit, Apt 518, Toronto, Ontario MIG 3T9, 4வது பதிப்பு, 2012, முன்னைய பதிப்பு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 202, செட்டியார் தெரு).

44 பக்கம், அட்டவணைகள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 160., அளவு: 29.5x22 சமீ.

இந்து சமயத்தினரிடையே திருமணத்திற்கு ஜோதிட வழியில் திருமணப் பொருத்தம் பார்க்கும் நடைமுறை வழக்கத்தில் உள்ளது. திருமணத்திற்குத் தயாராய் இருக்கும் ஆண், பெண் ஆகியோர் பிறந்த நட்சத்திரம், ராசி போன்றவைகளைக் கொண்டு பன்னிரண்டு வகையான பொருத்தங்கள் பார்க்கப்படுகிறன. இவற்றில் குறிப்பிட்ட பொருத்தங்கள் இருந்தால் மட்டுமே திருமணம் செய்து வைக்கப்படுகிறது. இல்லையென்றால் ஜாதகப் பொருத்தமில்லை என்று அந்தத் திருமணம் தவிர்க்கப்படுகிறது. இந்த 12 பொருத்தங்களில் தினம், கணம், யோனி, ராசி, இரச்சு ஆகியவை இருந்தால் பொதுவாக திருமணங்கள் நிகழுகின்றன. இந்த 12 பொருத்தங்களில் தினப் பொருத்தம், கணப் பொருத்தம், மகேந்திரப் பொருத்தம், ஸ்திரீதீர்க்கம், யோனிப் பொருத்தம், இராசிப் பொருத்தம், இராசியாதிப் பொருத்தம், வசியப் பொருத்தம், ரச்சுப் பொருத்தம், வேதைப் பொருத்தம் ஆகிய 10 பொருத்தங்களே முக்கியமாகப் பார்க்கப்படுகிறது. இந்த நூலில் கிரகப் பொருத்தம், கிரக பாப விளக்கம், செவ்வாய் தோஷம், திருமண நாள் வைத்தல், நட்சத்திரப் பொருத்த அட்டவணை ஆகியன உள்ளடங்குகிறன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் உ- 13264).

11105

ப்ரஸ்ன்ன ஜோதிடம்: கிருஷ்ணமூர்த்தி பத்ததி. கே.எஸ்.கிருஷ்ணமூர்த்தி (மூலம்), மாத்தளை அருணேசர் (தமிழாக்கம்). சென்னை 600 015: Mahabala Publishers and Book Sellers, 18, பிராமணாள் வீதி, சைதாப்பேட்டை, 1வது பதிப்பு, ஜுலை 1978. (சென்னை 600 017: N.L.R.C.Printing Press, வடக்கு உஸ்மான் சாலை, தியாகராய நகர்).

x, 432 பக்கம், விளக்கப்படங்கள், விலை: இந்திய ரூபா 22., அளவு: 20.5x13.5 சமீ.

உயர்தர நட்சத்திர சோதிட முறையின்படி கணிக்கப்பெற்ற ப்ரஸ்ன்ன ஜோதிடம் பேராசிரியர் கே.எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்களால் எழுதப்பெற்று, மாத்தளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணேசர் (சோதிடமணி ஆ.சிவபாதம்) அவர்களால் தமிழாக்கம் செய்யப்பெற்று நூலுருவாகியுள்ளது. ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலின் முதலாம் பகுதியில் நூலாசிரியரைப் பற்றி, சோதிடம் ஒரு விஞ்ஞானமே, சோதிட சாஸ்திரத்தின் சரித்திரம், மூலசித்தாந்தங்கள் முழுமை பெற்றவை அல்ல, அதன் உபயோகமும் வரன்முறையும், சோதிட சாஸ்திரத்தின் பிரிவுகள், ஹோரை அல்லது ப்ரஸ்ன ஜோதிடம், ஹோரை சாஸ்திரம் ஏன் விரும்பப்படுகிறது ஆகிய ஒன்பது தலைப்புகளின் கீழ் சோதிட சாஸ்திரம் அறிமுகப்படுத்தப்படுகின்றது. இரண்டாம் பகுதியில் ஹோரை சோதிடம், ப்ரஸ்னகியானம், உத்தரகாலாமிர்தம், ஷட்பஞ்சசீகம், சினேந்திரமாலை, பத்மபிரப்பூசுரியின் பூபன தீபகம் ஆகியன விளக்கப்பட்டுள்ளன. மூன்றாம் பகுதியில் ஹோரை சோதிடத்தின் தொடர்ச்சியாக மேனாட்டு முறை, ஹோரை சக்கரம் அமைக்கும் நேரம், ஒவ்வொரு கிரகமும் குறிப்பிடுவது என்ன? ராசிகளும் இடங்களும், ராசிகள் நாடுகளும் நகரங்களும், கையாளும் முறைகள் பற்றி ஆசிரியரின் அபிப்பிராயம் ஆகிய விபரங்கள் தரப்பட்டுள்ளன. நான்காம் பகுதியில் ஹோரை சோதிடத்தில் கிருஷ்ணமூர்த்தி பத்ததியின் விஞ்ஞானத் தன்மை பற்றி விளக்கமளிக்கப்பட்டுள்ளது. ஐந்தாம் பகுதியில் ஆளும் கிரகங்கள் பற்றியும் பதினொரு பாவங்கள் பற்றியும் தனித்தனிப் பிரிவில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25465).

11106

பால எண் ஜோதிடம்: பெயர் மாற்றம்: தொடர் 2. இ.மகாதேவா. கொழும்பு 11: ஸ்ரீ இராமன் ஜோதிட நிலையம், 160, செட்டியார் தெரு, இரண்டாம் மாடி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1983. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).

(4), 30 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 21.5x14 சமீ.

அவ்வப்போது நிகழும் கிரக மாற்றப் பலன்களையொட்டி பெயர்மாற்றம் தொடர்பாக அதிர்ஷ்ட எண்ஞான முறையில், எண்ஜோதிட ரீதியில் இத்தொடர் ஆலோசனைகளை வழங்குகின்றது. குழந்தைகளுக்குப் பெயர் வைத்தல். பெரியவர்களின் பெயரை அதிர்ஷ்டம் தரக்கூடிய வகையில் மாற்றுதல் தொடர்பான ஆலோசனைகளை இந்நூல் வழங்குகின்றது. மேலும் மாற்றிய பெயருக்குரிய எண்ணின் அடிப்படையில் கிரக சக்தியை அதிகரிக்க வழிவகைகள் என்ன என்பதையும் ஆசிரியர் இந்நூலில் வழங்குகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13100).

11107

ஜோதிடமும் வானியலும். ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீநகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2014. (சுன்னாகம்: கஜாநந்த் பிரின்டர்ஸ், மானிப்பாய் வீதி, இணுவில்).

(2), 60 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல்பூர்வமாக வானியலுடன் ஜோதிடத்தை ஒப்பிட்டு ஆராயும் நூல். ஜோதிடம் சம்பந்தமான அடிப்படை விபரங்கள் அடங்கியது. ஜோதிடத்தின் நோக்கம், அதன் வரலாறு, விஞ்ஞான ரீதியில் விளக்கம், நவக்கிரகங்கள் எவை, ஜோதிடம் கூறும் நவக்கிரகங்கள், நவக்கிரகங்களின் வகை, ராகுவும் கேதுவும் கிரகங்களா?, ஜாதகக் குறிப்பு, தலைவிதியை மாற்றமுடியுமா?, பஞ்சாங்கம், கிழமைகளும் கிரகங்களும், திதிகள், பட்சங்கள் இரண்டு, நட்சத்திரங்கள் 27, இராசி மண்டலத்தின் ஆரம்பம், இராசிச் சக்கரமும் கிரகங்களும், மாதங்கள் பன்னிரண்டு, சௌரமானமும் சாந்திரமானமும், ருது-பருவகாலங்கள் ஆறு, வானியல் அடிப்படையிலான சில தகவல்கள், இலகுவான வழிபாட்டு முறைகள் என இன்னோரன்ன விடயங்களை இந்நூல் விளக்குகின்றது. நவீன கல்வித் திட்டத்தின்படி உயர்தர வகுப்புகளுக்கு உகந்ததெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (நூலின் மேலட்டையில் "வாழ்வில் சோதிடம்" என்று அச்சிடப்பட்டுள்ளது).

200 சமயங்கள்

210 பொதுச்சமயம் சார்பானவை

11108

ஹிந்து மதம், பௌத்தம், இஸ்லாம்: ஓர் ஒப்பீட்டாய்வு. *ஸீ.எம்.ஏ. அமீன். திஹாரிய: ரேஷ்மா பப்ளிஷிங் ஹவுஸ், 330/2, வரபலான வீதி, 1வது பதிப்பு, ஜுலை 2012. (கல்ஹின்ன: விங்ஸ் கிராப்பிக்ஸ், 262* A, *கண்டிவீதி).*

xvi, *322 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 22x15 சமீ.*, ISBN: *978-955-51014-4-8.*

சமயம் பற்றிய எண்ணக்கரு, இந்து சமயம்: வளர்ச்சிப்போக்கும் வரைவிலக்கணமும், இந்து சமயக் கொள்கைகளும் புனித நூல்களும், இந்து சமயத்தில் சாதிப்பாகுபாட்டு முறைமை, இந்து சமயத்தின் கடவுட்கொள்கை, இந்துசமயச் சீர்திருத்தவாதிகள், இந்து சமயமும் இஸ்லாமும், புத்தர் காலத்துச் சிந்தனா மரபுகள், கௌதம புத்தர், புத்தரின் போதனைகளும் பௌத்த சமயத் தத்துவங்களும், மனிதன், உலகம், இறைவன், பௌத்த கொள்கையின் பொதுவான இயல்புகளும் பௌத்த நூல் களும், பௌத்த சமயப் பிரிவுகள், புத்தரும் நபி நாயகம்(ஸல்) அவர்களும், இஸ்லாம் வரைவிலக்கணமும் இயல்புகளும், இஸ்லாத்தின் கடவுட் கொள்கை, முஸ்லிமின் அடிப்படை நம்பிக்கைகள், முஸ்லிமின் ஐம்பெரும் அடிப்படைக் கடமைகள், இஸ்லாம் ஒரு வாழ்க்கைத் திட்டம் ஆகிய 20 இயல்களில் இந் நூல் முச்சமயங்களையும் ஒப்பீட்டாய்வு செய்துள்ளது. விளக்கக் குறிப்புகள், துணை நூல்கள், சொல் அகராதி என்பன இறுதிப்பகுதியில் தரப்பட்டுள்ளன. (இந்நூல் இலங்கைத் தேசிய நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 196853).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

220 கிறிஸ்தவம்

11109

சமயம்-சில சிந்தனைகள்:ஆய்வுரைத் தொகுப்பு. *வாகரைவாணன் (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: கலை பண்பாட்டுக் களரி, இல.1. யேசு சபை வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1999. (மட்டக்களப்பு: ஜெஸ்கொம் ஒப்செட் அச்சகம்).*

(4), 28 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18.5x12.5 சமீ.

மட்டக்களப்பு கலை பண்பாட்டுக் களரி அமைப்பின்மூலம் அவ்வப்போது ஆய்வு நிகழ்வுகளை ஒழுங்குசெய்வதுடன் அவற்றின் கட்டுரைகளைத் தொகுத்து சிறு பிரசுரங்களாகவும் வெளியிட்டு வந்தவர் வாகரைவாணன். இந்நூல் வண.பிதா போல் சற்குணநாயகம் அவர்களின் அனுசரணையுடன், கிறிஸ்தவ மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் கருத்துக்களை தொகுத்து வழங்குகின்றது. சந்தியாப்பிள்ளை அரியரெத்தினம் எனும் முழுப்பெயரை இயற்பெயராய்க் கொண்ட தமிழ்நிதி வாகரைவாணன் சென்னைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்றவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25452).

220.(2) கிறிஸ்தவ கீர்த்தனைகள், பக்திப்பாடல்கள்

11110

கத்தோலிக்கமும் கவிஞரும்: ஞானக் களஞ்சியம் 1. *க.த.ஞானப்பிரகாசம். யாழ்ப்பாணம்: கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம், 10/2, மத்தியூஸ் வீதி, 1வது பதிப்பு, 2016. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டேர்ஸ், இல. 681, காங்கேசன்துறை வீதி).*

viii, *67 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.,* ISBN: *978-955-43475-1-9.*

நெடுந்தீவைச் சேர்ந்த அரச பொற்கிழிப் புலவர், கவிமாமணி க.த.ஞானப்பிரகாசம் அவர்களின் தேர்ந்த கவிதைகளின் தொகுப்பு இது. அவரது நூற்றாண்டு விழாவையும், பத்தாவதாண்டு நினைவு விழாவையும் ஒட்டி இந்நூல் வெளியிடப் பட்டுள்ளது. முன்னதாக வேதாகமச் சிறப்புகள், யேசுபிரானின் புதுமைகள்- உவமைகள்- பொழிவுகள், நமக்கோர் பாலன், மாமரி, புனிதர், பாப்பரசர், ஆயர் ஆகிய நூல்தொகுப்புகளில் இவரது கவிதைகள் பல இடம்பெற்றுள்ளன. 1948-1960 காலகட்டத்தில் இவரது கவிதைகள் பாதுகாவலன் பத்திரிகையை அலங்கரித்துவந்தன. இவை அனைத்திலும் இருந்தெடுத்த தேர்ந்த கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61065).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

294.3 பௌத்தம்

11111

பௌத்தமும் நிர்வாணமும் (தேரவாத பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்டது). இ.சகாயசீலன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xii, 59 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-659-540-6.

கௌதம புத்தரும் பௌத்த தத்துவமும், தேரவாத பௌத்தம் குறிப்பிடும் நிர்வாண மார்க்கம், அருகத நிலை (Arhatship), நிர்வாணம் ஆகிய நான்கு பிரதான பிரிவுகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஒப்பீட்டுச் சமயம், மெய்யியல் போன்றவற்றை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பௌத்த மெய்யியல் தொடர்பான தகவல்களைத் தேடும் ஆய்வாளர்களுக்கும் பயனுள்ள நூலாக இது அமைகின்றது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான நூலாசிரியர் ஒப்பீட்டுச் சமய சமூக நல்லுறவுக் கற்கைகள் துறையின் துறைத்தலைவராகப் பணியாற்றுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61426).

11112

வெசாக் சிரசர 1997. ராஜா குருப்பு (பதிப்பாசிரியர்), த.கனகரத்தினம் (உதவிப் பதிப்பாசிரியர்). கொழும்பு 7: பிரசுரக் கமிட்டி, அரசாங்க ஊழியர் பௌத்த சங்கம், 53/3, ஹோர்ட்டன் பிளேஸ், 1வது பதிப்பு, மே 1997. (கொழும்பு 10: ANCL, லேக் ஹவுஸ், டீ.ஆர்.விஜேவர்த்தன மாவத்தை).

(10), 98+(9) + 18, (10), 96 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இலங்கையின் வெசாக் தினத்தை முன்னிட்டு 62ஆம் ஆண்டாக அரசாங்க ஊழியர் பௌத்த சங்கத்தின் பிரசுரக் கமிட்டியால் வெளியிடப்படும் மும்மொழி மூல ஆண்டு மலர். இதில் தமிழ்ப் படைப்பாக்கங்களாக மானிடம் தழுவிய மார்க்கம் (சி.தில்லைநாதன்), தமிழ் மகா காவியம் தரும் புத்தமத தத்துவங்கள்-மணிமேகலை (த.கனகரத்தினம்), பௌத்தம் ஒரு நோக்கு (முஹம்மட் யாகூப் யெஹியா), மீண்டும் பிறந்து வரவேண்டும் புத்த பகவானே (ஜின்னாஹ் ஷெரிபுத்தீன்) ஆகிய நான்கு படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16862).

11113

வெசாக் சிரசர 1998. ராஜா குருப்பு (பதிப்பாசிரியர்), த.கனகரத்தினம் (உதவிப் பதிப்பாசிரியர்). கொழும்பு 7: பிரசுரக் கமிட்டி, அரசாங்க ஊழியர் பௌத்த சங்கம், 53/3, ஹோர்ட்டன் பிளேஸ், 1வது பதிப்பு, மே 1998. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(10), 92+(4) +10, (10), 106 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் வெசாக் தினத்தை முன்னிட்டு 63ஆவது ஆண்டாக அரசாங்க ஊழியர் பௌத்த சங்கத்தின் பிரசுரக் கமிட்டியால் வெளியிடப்படும் மும்மொழி மூல ஆண்டு மலர். இதில் தமிழ்ப் படைப்பாக்கங்களாக சிலப்பதிகாரமும் பத்தினி வழிபாடும் (புலவர் த.கனகரத்தினம்), விடிவு நோக்கி இரந்தனம் (நயீம் ஷரிபுத்தீன்), மதி மயக்கும் பொருட்களை எடுப்பதிலான இடையூறுகள் (ஒல்கொட் குணசேகர) ஆகிய மூன்று கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17148).

294.5 இந்து சமயம்

11114

அம்பிகையின் அருள்வடிவங்கள். ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீநகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 2வது பதிப்பு, ஆனி 2014, 1வது பதிப்பு, ஜுன் 2014. (யாழ்ப்பாணம்: ஷாம்பவி அச்சகம், கஸ்தூரியார் வீதி).

(2), 156 பக்கம், சித்திரங்கள், வண்ணத் தகடுகள், விலை: ரூபா 500., அளவு: 24.5x18.5 சமீ.

இந்நூல் சக்தி வழிபாட்டின் பல்வேறு பரிமாணங்களையும் எடுத்து விளக்கும் தகவல்களும், படங்களும், ஆதாரங்களும், விளக்கங்களும் அடங்கிய அருட் களஞ்சியம். இந்நூலின் முதற்பதிப்பு திருக்கோணமலை ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதமகுரு, ஆதீனகர்த்தர் சிவஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்களின் மூத்த புதல்வர் பிரம்மஸ்ரீ இ.கைலாசசங்கர் சர்மா அவர்களின் சிவாசார்யாபிஷேக வைபவத்தை முன்னிட்டு மேற்படி தேவஸ்தானத்தினரால் 01.06.2014 அன்று வெளியிடப்பட்டது.

11115

அரியவும் பெரியவும்: பெரியபுராணச் சிந்தனைகள்: 1ம் பாகம். மு.கந்தையா. தெல்லிப்பழை: துர்க்காதேவி தேவஸ்தானம், 1வது பதிப்பு, தை 1984. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xvi, 111 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

சேக்கிழார் 12ம் நூற்றாண்டில் அருளிய பெரியபுராணத்தின் அரிய சிந்தனைக் கருத்துக்கள் கொண்ட உரைகள் அடங்கிய நூல். செயற்கரிய செயல் புரிந்த திருத்தொண்டர்களின் அருமை பெருமைகளைச் சேக்கிழார் வழிநின்று நயம்பட ஆசிரியர் விரித்துரைத்துள்ளார். என்ன இது? ஏன் இது?, அம்பலத்தாடுவான், தருமந்தன் வழிச்செல்கை கடன், இனிப்பெறும் பேறொன்றில்லார், தபோதனர் தீரவே பசித்தார் செய்வதென்?, பொய்தரும் உள்ளமில்லான் பார்க்கிலன் போனான், இன்றெனக்கையன் செய்தது யார் செய்ய வல்லார்? சிறிய என் பெரும்பிழை பொறுத்தருள் செய்வீரோ? அன்பு பிழம்பாய்த் திரிவார் அவர் கருத்தின் அளவினரோ? இங்கிது தன்னாற் போதாது என்னையும் கொல்லவேண்டும்? ஆ ஆ என் குற்றேவல் அழிந்தவா, வென்றவர்தந் திருப்பெயரோ வேறொரு பேர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றார் திருநாளைப் போவாராம் மறைமுனிவர் ஆகிய 13 தலைப்புகளில் பெரியபுராணச் சிந்தனை உரைகள் இந்நூலில் எழுதப்பட்டுள்ளது. பொது வாசகர்களுடன், உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கும் இந்நூல் பயனுள்ள வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17391).

11116

அருள்மிகு அன்னை துர்க்காதேவி வழிபாடு. சி.கணபதிப்பிள்ளை. நிந்தவூர்: சி. கணபதிப்பிள்ளை, ஓய்வுபெற்ற அதிபர், அட்டப்பள்ளம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1981. (யாழ்ப்பாணம்: விபுலாநந்த அச்சகம், 248/5, காங்கேசன்துறை வீதி).

(2), 18 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

7.10.1981 துர்மதி ஆண்டு சரஸ்வதி பூசைத் தினத்தன்று, மட்டக்களப்பு-காரைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியரால் வெளியிடப்பட்டது. இந்நூல் துர்க்கை அம்மன் தோற்றம், வரலாறு, மகிடாசுரன் வரலாறு முதலியவற்றை இரத்தினச் சுருக்கமாகத் தருகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16651).

11117

இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி இரண்டு: உ-ஔ. சி.பத்மநாதன் (பிரதம பதிப்பாசிரியர்), கொழும்பு 2: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சகம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன கட்டிடம், 9வது மாடி, 21, வொக்ஷால் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (கொழும்பு 14: இம்பீரியல் அச்சகம், 315 கிரான்ட்பாஸ் ரோட்).

(14), 198 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 27.5x21.5 சமீ.

இந்து சமயத்துக்கானதொரு பல்தொகுதிகளைக் கொண்ட கலைக்களஞ்சியத்தைத் தமிழில் உருவாக்கும் முன்முயற்சியாக இலங்கையில் இத்திட்டம் மேற் கொள்ளப்பட்டது. 1990இல் வெளியான முதலாவது தொகுதியில் அ முதல் ஈ வரையிலான சைவ சமயச் சொற்களின் விளக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவ்வெளியீட்டுத் தொடரில் இது இரண்டாவது தொகுதியாகும். இதில் சிறியதும் பெரியதுமான 400 ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் எழுத்தாளர் குழுவில் பேராசிரியர் சி.பத்மநாதன், வித்துவான் க.ந.வேலன், பண்டிதர் கா.செ. நடராசா, புலவர் த.கனகரத்தினம், வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன், கலாநிதி சோ.கிருஷ்ணராசா, திரு.எஸ்.மகேஸ்வரன், திரு. ந.வேல்முருகு, திருமதி மைதிலி தயாநிதி, திருமதி சாந்தி நாவுக்கரசன், திரு. சீ. தெய்வநாயகம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11118

இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி மூன்று: க. *சி.பத்மநாதன் (பிரதம பதிப்பாசிரியர்), க.இரகுபரன், ப.யசோதா (உதவிப் பதிப்பாசிரியர்கள்), சாந்தி நாவுக்கரசன் (நிர்வாக ஆசிரியர்). கொழும்பு 7: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சகம், 98 வாட் பிளேஸ், 1வது பதிப்பு, டிசம்பர் 1996. (கொழும்பு 12: ஓட்டோ அச்சகம், 122 மத்திய வீதி).*

(15), 256 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 27.5x21.5 சமீ.

பல்தொகுதிகளைக் கொண்ட இந்துக் கலைக்களஞ்சியத்தைத் தமிழில் உருவாக்கும் முன்முயற்சியாக இலங்கையில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 1990இல் வெளியான முதலாவது தொகுதியில் அ முதல் ஈ வரையிலான சைவ சமயச் சொற்களின் விளக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவ்வெளியீட்டுத் தொடரில் இது மூன்றாவது தொகுதியாகும். இதில் சிறியதும் பெரியதுமான 149 ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் எழுத்தாளர் குழுவில் பேராசிரியர் சி.பத்மநாதன், வித்துவான் க.ந.வேலன், பண்டிதர் கா.செ.நடராசா, வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன், கலாநிதி சோ.கிருஷ்ணராசா, திருமதி ஞானா குலேந்திரன், திரு. சீ. தெய்வநாயகம், செல்வி தங்கேஸ்வரி கதிர்காமர், திரு.க.இரகுபரன், செல்வி பத்மநாதன் யசோதா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

11119

இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி நான்கு: கா-கௌ. *சி.பத்மநாதன் (பிரதம பதிப்பாசிரியர்), க.இரகுபரன், வசந்தா வைத்தியநாதன் (உதவிப் பதிப்பாசிரியர்கள்), சீ. தெய்வநாயகம் (நிர்வாக ஆசிரியர்). கொழும்பு 7: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சகம், 98 வாட் பிளேஸ், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1998. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).*

xii, *236 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 27.5x21.5 சமீ.*

பல்தொகுதிகளைக் கொண்ட இந்துக் கலைக்களஞ்சியத்தைத் தமிழில் உருவாக்கும் முன்முயற்சியாக இலங்கையில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 1990இல் வெளியான முதலாவது தொகுதியில் அ முதல் ஈ வரையிலான சைவ சமயச் சொற்களின் விளக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவ்வெளியீட்டுத் தொடரில் இது நான்காவது தொகுதியாகும். இதில் சிறியதும் பெரியதுமான 172 ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் எழுத்தாளர் குழுவில் பேராசிரியர் சி.பத்மநாதன், வித்துவான் க.ந.வேலன், பண்டிதர் கா.செ.நடராசா, வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன், கலாநிதி சோ.கிருஷ்ணராசா, எம்.வேதநாதன், திருமதி ஞானா குலேந்திரன், திரு.க.இரகுபரன், செல்வி அம்பிகை வேல்முருகு, திருமதி மைதிலி தயாநிதி, திருமதி யசோதா சுரேந்திரன், திரு. சீ. தெய்வநாயகம், செல்வி கல்யாணி நாகராஜா, செல்வி சாந்தி தெய்வேந்திரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11120

இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி ஐந்து: ச,சா. சி.பத்மநாதன் (பிரதம பதிப்பாசிரியர்), க.இரகுபரன் (உதவிப் பதிப்பாசிரியர்), சீ. தெய்வநாயகம் (நிர்வாக ஆசிரியர்). கொழும்பு 7: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சகம், 98 வாட் பிளேஸ், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(12), 212 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 27.5x21.5 சமீ.

பல்தொகுதிகளைக் கொண்ட இந்துக் கலைக்களஞ்சியத்தைத் தமிழில் உருவாக்கும் முன்முயற்சியாக இலங்கையில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 1990இல் வெளியான முதலாவது தொகுதியில் அ முதல் ஈ வரையிலான சைவ சமயச் சொற்களின் விளக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவ்வெளியீட்டுத் தொடரில் இது ஐந்தாவது தொகுதியாகும். இதில் சிறியதும் பெரியதுமான 111 ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் எழுத்தாளர் குழுவில் பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் சோ.கிருஷ்ணராசா, கலாபூஷணம் திருமதி வசந்தா வைத்தியநாதன், திரு. கே.கே.சோமசுந்தரம், செல்வி கல்யாணி நாகராஜா, திரு.க.இரகுபரன், திருமதி சாந்தி மகாசேனன், திருமதி தேவகுமாரி ஹரன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

11121

இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி ஆறு: சி-சௌ. சி.பத்மநாதன் (பிரதம ஆசிரியர்), க.இரகுபரன் (உதவிப் பதிப்பாசிரியர்), எஸ். தெய்வநாயகம் (நிர்வாக ஆசிரியர்). கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(6),vii-xiv, 310 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், விலை: ரூபா 450., அளவு: 27.5x21.5 சமீ.

இந்து சமயத்துக்கானதொரு பல்தொகுதிகளைக் கொண்ட கலைக்களஞ்சியத்தைத் தமிழில் உருவாக்கும் முன்முயற்சியாக இலங்கையில் இத்திட்டம் மேற்கொள்ளப் பட்டது. 1990இல் வெளியான முதலாவது தொகுதியில் அ முதல் ஈ வரையிலான சைவ சமயச் சொற்களின் விளக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவ்வெளியீட்டுத் தொடரில் இது ஆறாவது தொகுதியாகும். இதில் இந்து சமயம் தொடர்பான தகவல்கள் சி முதல் சௌ வரையிலான அகரவரிசையில் தரப்பட்டுள்ளன. இத்தொகுதிக்கான எழுத்தாளர் குழுவில் பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் வி.சிவசாமி, கலாபூஷணம் வசந்தா வைத்தியநாதன், திரு க.இரகுபரன், திருமதி தேவகுமாரி ஹரன், திருமதி நித்தியவதி நித்தியானந்தன், பேராசிரியர் வே. சேதுராமன், பேராசிரியர் கு.வேலுசாமி, பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா, கலாநிதி மா.வேதநாதன், கே.கே.சோமசுந்தரம், கலாநிதி இராமசேஷன், இரா.கிருஷ்ணன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.சிவாநந்தமூர்த்தி, திருமதி கல்யாணி நடராஜா, ஸ்ரீபத் சர்மா, வ.சிவராஜசிங்கம், செல்வி கே.உமாசந்திரா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இத்தொகுதியில் மொத்தம் 111 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

11122

இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி ஏழு: ஞா-தி. சி.பத்மநாதன் (பிரதம ஆசிரியர்), க.இரகுபரன் (உதவிப் பதிப்பாசிரியர்), எஸ். தெய்வநாயகம் (நிர்வாக ஆசிரியர்). கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2005. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(6),vii-xi, 328 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 27.5x21.5 சமீ., ISBN: 955-9233-07-6.

இந்து சமயத்துக்கானதொரு பல்தொகுதிகளைக் கொண்ட கலைக்களஞ்சியத்தைத் தமிழில் உருவாக்கும் முன்முயற்சியாக இலங்கையில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 1990இல் வெளியான முதலாவது தொகுதியில் அ முதல் ஈ வரையிலான சைவ சமயச் சொற்களின் விளக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவ்வெளியீட்டுத் தொடரில் இது ஏழாவது தொகுதியாகும். இதில் இந்து சமயம் தொடர்பான தகவல்கள் ஞா முதல் தி வரையிலான அகரவரிசையில் தரப்பட்டுள்ளன. இத்தொகுதிக்கான எழுத்தாளர் குழுவில் பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் வி.சிவசாமி, பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா, கலாபூஷணம் வசந்தா வைத்தியநாதன், பேராசிரியர் தி.ஞானகுமாரன், திரு க.இரகுபரன், திருமதி இந்திரா சதானந்தன், திருமதி தேவகுமாரி ஹரன், திருமதி நித்தியவதி நித்தியானந்தன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இத்தொகுதியில் மொத்தம் 205 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

11123

கந்தபுராண வசனகாவியம். சீ.விநாசித்தம்பிப் புலவர். அளவெட்டி: அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர், நாகேஸ்வரம், 2வது பதிப்பு, மார்கழி 2000, 1வது பதிப்பு, தை 2000. (யாழ்ப்பாணம்: பிள்ளையார் அச்சகம், நல்லூர்).

216 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14 சமீ.

கந்தனது பெரும்புகழ் பேசும் நூல் கந்தபுராணமாகும். இந்நூல் வசனகாவியமாக உற்பத்திக் காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தக்ஷ காண்டம் ஆகிய ஆறு காண்டங்களில் எழுதப்பட்டுள்ளது. உற்பத்திக் காண்டம் 26 படலங்களையும், அசுர காண்டம் 43 படலங்களையும், மகேந்திர காண்டம் 21 படலங்களையும், யுத்த காண்டம் 16 படலங்களையும், தேவ காண்டம் 5 படலங்களையும், தக்ஷ காண்டம் 24 படலங்களையும் கொண்டதாகப் பாடப்பட்டுள்ளன. அளவெட்டியில் வாழ்ந்த புலவர்களுள் மிக முக்கியமான ஒருவர் விநாசித்தம்பிப் புலவர். இவரை கவியோகியெனவும், அருட் கவியெனவும், வரகவியெனவும் அறிஞர்கள் பாராட்டுவர். இவர் ஒரு புலவராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்லாமல் ஒரு சோதிடராகவும், மருத்துவராகவும் பேய்பிணித் தொல்லை போக்கும் அருளாளராகவும் மக்களுக்கு நன்கு பணியாற்றியவர். அளவெட்டி தெற்கு அருணாசலம் வித்தியாசாலையில் தமிழும் அளவெட்டி ஆங்கில பாடசாலையில் ஆங்கிலமும் கற்ற இவர், ஆரம்பத்தில் கூட்டுறவுச் சங்கக்கடையொன்றில் கடமையாற்றினார். பின்னர் மலையகத்திலுள்ள தோட்டப் பாடசாலையொன்றில் ஆசிரியராகவிருந்தார். அதன் பின்னர் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையிற் பயிற்சி முடித்து பூரணத்துவம் வாய்ந்த ஆசிரியராக மலர்ந்தார். இவர் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழிலும் வல்லவர் இசைத்தமிழில் ஆசிரியர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39081).

11124

கற்போத மஞ்சரி. வண்ணைநகர் ஸ்ரீ க.வைத்தியலிங்க பிள்ளை. யாழ்ப்பாணம்: யாழ். செந்தமிழ்ப் பரிபாலன யந்திரசாலை, 1வது பதிப்பு, 1926. (அச்சக விபரம் தரப்படவில்லை).

43 பக்கம், விலை: 25 சதம், அளவு: 19x13 சமீ.

ஆலய வழிபாட்டின் மகத்துவம், விக்கிரக வணக்கத்தின் விசிட்டம், மரணத்தைக் கடக்கச் சிவத்தியானமன்றி வேறு வழியில்லை, கடவுளைத் துதித்து எக்கருமமும் புரிமின், கடவுள் கோபமுள்ளவரா?, அந்நிய சமயிகளது ஆலயங்களிற் சைவர்கள் வழிபாடு செய்யலாமா? இம்மைப்பற்று நீங்காதாரின் செயல் இறைவன் செயலாமோ? சைவப் பிரசங்க மகத்துவம், சிவவதையும் மாமிச பக்ஷணமும் செய்யலாமா? அன்னதான மகிமை, வெகுளியே பாவங்கட்கெல்லாம் வித்து ஆகிய தலைப்புகளில் இந்நூலில் பல்வேறு சைவ சமய விடயங்கள் விவாதிக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2451).

11125

சகலாகம சங்க்ரஹ மஹோத்ஸவ விதி. ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீநகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 1வது பதிப்பு, ஜனவரி 2016. (இணுவில்: கஜானந்த் பிறின்டேர்ஸ், மானிப்பாய் வீதி, கந்தசாமி கோவிலடி).

251 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17 சமீ.

புத்தூர் சிவன் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ சாமி.சோமசுந்தரக் குருக்கள் ஸ்ரீமதி ஞானேஸ்வரி தம்பதிகளின் ஷஷ்டியப்த பூர்த்திவிழாச் சிறப்பு வெளியீடு. மகோற்சவ விளக்கம், பூர்வகாரணாகமம் 141 (மஹோற்சவ விதி படலம், அஷ்டாதச தின உத்ஸவ விதி, சப்தவிம்சதி உத்ஸவ விதி, தமிழ் விளக்கம்), உத்தர காரணம் 24 (மஹோற்சவ விதி படலம், சக்தியுத்ஸவ படலம், தமிழ் விளக்கம்), உத்தர காமிகம் 4 (மஹோற்சவ விதி படலம், தமிழ் விளக்கம்), சுப்ரபேதம் 14 (சிவோத்ஸவ விதி படலம், தமிழ் விளக்கம்), மகுடாகமம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சிவோத்ஸவ விதி படலம், தமிழ் விளக்கம்), குமாரதந்திரம் 13 (ஸ்கந்தோத்ஸவ விதி படலம், தமிழ் விளக்கம்) ஆகிய ஏழு அத்தியாயங்களில் இந்நூல் வடமொழி மூலத்துடனும் தமிழ் மொழி விளக்கத்துடனும் எழுதப்பட்டுள்ளது.

11126

சண்முக கதம்பம்: முருக வழிபாடு பற்றிய வரலாறும் தகவல்களும். ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீநகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 1வது பதிப்பு, மார்ச் 2015. (இணுவில்: ஸ்ரீ வித்யா கணனி அச்சகம்).

(4), 144 பக்கம், விளக்கப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 400., அளவு: 25x17.5 சமீ.

முருகன்- வரலாறும் வழிபாடும், முருகன்- தோற்றப் பொலிவுகள், முருகன்- மந்திரங்கள், ஆறுமுகனும் அறுபடைவீடும், முருகன்- சில தகவல்கள், முருக விரதங்கள், திருமுறைகளில் திருமுருகன், திருமுருகாற்றுப்படை முருகன், சில அபூர்வமான முருகன் பிரார்த்தனைப் பாடல்கள் ஆகிய ஒன்பது இயல்களின் வழியாக முருக வழிபாடு பற்றிய வரலாறும் தகவல்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

11127

சிவசங்கர பண்டிதம். தி.செல்வமனோகரன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவ வித்தியாவிருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 2016. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

xviii, 460+47 பக்கம், விலை: ரூபா 1200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-42192-1-2.

மரபவழிக் கல்விப் புலமையாளரான நீர்வேலி சிவசங்கர பண்டிதர் (1829-1871) ஈழத்தில் சைவசித்தாந்த புலமையாளர்களில் முக்கியமானவர். தமிழ், சம்ஸ்கிருதம் ஆகிய இரண்டு மொழிகளையும் துறைபோகக் கற்றவர். நான்கு தமிழ் நூல்களையும், இரண்டு சம்ஸ்கிருத நூல்களையும் ஐந்து நூல்களுக்கு தமிழுரையும், சம்ஸ்கிருத தமிழ் அகராதியையும் ஆக்கியவர். இந்நூலில் அவர் எழுதிய சைவப்பிரகாசனம், சபிண்டீகரணச் சிரார்த்த விதி, கிறிஸ்துமத கண்டனம், சற்பிரசங்கம், மிலேச்சமத விகற்பம், பிராசாத சட்சுலோகி (உரை), தாதுமாலை ஆகிய 7 நூற்பிரதிகள் தேடித்தொகுத்து இந்நூலில் தரப்பட்டுள்ளன. அவர் பிற நூல்களுக்கு எழுதிய சிறப்புரைகளும் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன. நூன்முகமாக ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர் அவர்களது சரித்திரத்தை அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசாமிக் குருக்கள் வழங்கியுள்ளார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான தி.செல்வமனோகரன் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து மெய்யியல் சிறப்புக் கலைமாணி, முதுதத்துவமாணிப் பட்டங்களைப் பெற்றவர். அப்பல்கலைக்கழகத்தின் இந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரீகத்துறையின் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61687).

11128

சிவாலய சேவை: ஏன்? எப்படி? மு.கந்தையா. சுன்னாகம்: சைவ சமய அபிவிருத்திச் சங்கம், ஏழாலை மேற்கு, 1வது பதிப்பு, தை 1986. (சுன்னாகம்: எஸ்.பி.கே. என்ரர்பிரைஸ்).

(4), 54 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 21x14 சமீ.

சைவாலயம் வழிபடுவோர், பூசகர், நிர்வாகம் என்ற முத்திறத்தாரோடு தொடர்பு படுகின்றது. இம்மூன்று பிரிவினரும் தத்தம் பொறுப்புகளைச் சரிவரச் செய்வதன் மூலமே சிவாலய மகிமை தங்கியுள்ளது. பேரானந்தப் பெருவாழ்வளிக்கும் சிவபிரானை நெக்கு நெக்கு நினைந்து மேற்கொள்ளும் பணிகள் பயனுள்ளவையாக அமைகின்றன. அவையே சிவப்பணிகளாக மிளிர்கின்றன. அத்துடன் பூஜைக்கு வேண்டிய வசதிகளை நிர்வாகமும், பூஜைக்குத் தேவையான உதவிகளை உபயகாரரும், பூஜாக்கிரியைகளை சிவாசாரியாரும் செய்வதென்பது மாத்திரமே சிவாலய சேவை என்றாகிவிடாது. இவ்வுண்மையை நன்குணர்ந்து இப்பணியில் ஈடுபடும் அனைவரும் சிவாலய வழிபாட்டின் உண்மை நோக்கத்தினையும், வழிமுறைகளையும் அறிந்தொழுகும் சித்தாந்த விளக்கச் சீலர்களாகத் திகழவேண்டும் என்பது இந்நூலாசிரியரின் நோக்கமாயுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16349).

11129

சைவ சமய வழிபாடும் விரதங்களும். நாகேந்திரம் கருணாநிதி. லண்டன் E6 2HD: 109, Caledon Road, East Ham, 1வது பதிப்பு, 2017. (லண்டன்: ஜே.ஆர். பிரின்ட்).

vii, 92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

நூலாசிரியர் நாகேந்திரம் கருணாநிதி, சைவசித்தாந்தத்தைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் ஐரோப்பிய சைவசித்தாந்த ரத்தினப் பயிற்சி மையமாகிய லண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தில் சைவசித்தாந்த ரத்தினம் பட்டம் பெற்றவர். தாயகத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் மயிலிட்டி வீரமாணிக்கதேவன் துறையைச் சேர்ந்த இவர், புலம்பெயர்ந்து லண்டன் ஈஸ்ட்ஹாம் பகுதியில் வாழ்ந்து வருகின்றார். இந்நூலில் ஆலய வழிபாடு, ஐயம் தெளிதல், ஆலயத்தில் உள்ள விக்கிரகங்களின் தத்துவம், பஞ்சபுராணம், தத்துவமசி, தைப்பொங்கல், பிரதோஷம், அபிராமிப்பட்டர் விழா, தைப்பூசம், சிவராத்திரி, விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கேதாரகௌரி விரதம், தீபாவளி, கந்தசஷ்டி, கார்த்திகை விளக்கீடு, பிள்ளையார் பெரும்கதை விரதம், திருவெம்பாவை ஆகிய 18 தலைப்புகளின்கீழ், சைவசமய வழிபாடு பற்றியும் சைவர்கள் அனுஷ்டிக்கும் விரதங்கள் பற்றியும் விளக்க மளித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11130

சைவநாற்பாதங்கள் காட்டும்ஆலய வழிபாடு. சி.விசலாட்சி. பேலியகொடை: ஸ்ரீ பூபால விநாயகர் ஆலயம், 212, கண்டி வீதி, 1வது பதிப்பு, 1992. (கொழும்பு 11: மெய்கண்டான் அச்சகம், 161, கடற்கரைத் தெரு).

xiii, 46 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

சைவ சிகாமணி, சிவமயச் செல்வி புலவர் சி.விசாலாட்சி ஏழாலை, குப்பிளானைச் சேர்ந்தவர். கிளிநொச்சி குருகுலத்தை வாழ்விடமாகக் கொண்டவர். ஆலயம், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டும், சைவ நாற்பாதங்கள் காட்டும் ஆலய வழிபாட்டின் மூலம் அடையக்கூடிய நற்பேறுகளைப் பற்றி பெரியபுராணத்தில் அதிகமாகக் காணப்படும் தகவல்களை அடிப்படையாகக்கொண்டும் இந்நூலை எழுதியிருக்கிறார். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13483).

11131

தர்மம் அறிந்து வாழவேண்டும். மார்க்கண்டேய ரிஷி தாஸ். யாழ்ப்பாணம்: அருள்திரு மார்க்கண்டேய ரிஷி தாஸ், 1வது பதிப்பு, மார்ச் 2016. (யாழ்ப்பாணம்: கரிகணன் நிறுவனம், இல. 681, காங்கேசன்துறை வீதி).

xii, 149 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

அருள்திரு மார்க்கண்டேய ரிஷி தாஸ், மலேசியா-இஸ்கான் பிரதேசத்திலிருந்து ஹரே கிருஷ்ண இயக்கத்தினைச் சார்ந்து இயங்குபவர். அவ்வமைப்பின் தாபகரான அ.ச.பக்திவேதாந்த ஸ்வாமி ஸ்ரீல பிரபுபாதாவின் உபாசகரான இவர், ஸ்ரீமத் பாகவதத்தின் அடிப்படையில் எழுதிய 12 உரைகள் இதில் அடங்குகின்றன. தர்மம் என்றால் என்ன?, நைமித்திக தர்மம் (உடல் தர்மம்), நித்திய தர்மம் (ஆத்ம தர்மம்), இந்து மதத்தில் 16 ஸம்ஸ்காரங்கள், மனித வாழ்வில் நான்கு துன்பங்களும் அதற்கான காரணங்களும், மனிதனுக்கான ஐந்துவித கடன்களும் தோஷங்களும், வாழும் கலையும் சாகும் கலையும், உயர்ந்த பக்தியும் உன்னதமான பக்தனும், உங்கள் வெற்றி உங்கள் கையில், கலியுக தர்மம், குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை, ஸ்ரீல பிரபுபாதா ஆகிய தலைப்புகளில் இவை பதிவுசெய்யப்பட்டுள்ளன.

11132

திருத்தொண்டர் புராண வரலாறு என்னும் சேக்கிழார் நாயனார் புராணம். கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் (மூலம்), ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் (உரை யாசிரியர்), மு.கந்தையா (உரை விளக்கக் குறிப்பு). யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணம் தமிழ்நூல்கள் பதிப்பு விற்பனைக் கழகம், 411, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1967. (யாழ்ப்பாணம்: கூட்டுறவு அச்சகம், காங்கேசன்துறை வீதி).

xvi, 110 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

சேக்கிழார் புராணம் 14 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. திருத்தொண்டர் வரலாறு என்பது இந்த நூலின் மற்றொரு பெயர். உமாபதி சிவாசாரியார் என்பவர் இதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதினார். சேக்கிழார் 63 நாயன்மார்கள் வரலாற்றைத் திருத்தொண்டர் புராணம் என்னும் பெயரில் நூலாகச் செய்தவர். சேக்கிழாரின் வரலாற்றை அறிய உதவும் நூல் இது ஒன்றே இன்றுள்ளது. இது சைவ உலகில் பெரிதும் பரவி நன்கு போற்றப்பட்டு வந்தது. சேக்கிழார் புராணம் 103 பாடல்களைக் கொண்டது. அனபாய சோழன் எப்பொழுதும் சமண நூலில் மூழ்கிக் கிடந்தான் என்றும், அதனை மாற்றவே சேக்கிழார் "பெரிய புராணம்" நூலைச் செய்தார் என்றும் பெரிய புராண நூலின் வரலாற்றைச் சேக்கிழார் புராணம் விளக்குகின்றது. இந் நூல் நூலாசிரியர் உமாபதி சிவாசாரியார் வரலாறு, உரையாசிரியர் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் வரலாறு, சேக்கிழார் நாயனார் துதி, சேக்கிழார் நாயனார் புராணம் மூலம்-உரை-குறிப்பு, செய்யுள் முதற்குறிப்பகராதி, அரும்பத விஷய அகராதி ஆகிய பிரிவுகளின்கீழ் எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் தமிழ்நூல்கள் பதிப்பு விற்பனைக் கழகத்தின் முதலாவது வெளியீடு இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34388).

11133

திருத்தொண்டர் புராணம் என்று வழங்குகின்ற பெரியபுராணம்.ஆறுமுக நாவலர் (உரையாசிரியர்), சு.அருள்மொழிச் செல்வன் (பதிப்பாசிரியர்). சிதம்பரம் 608 001: டாக்டர் சு. அருள்மொழிச் செல்வன், அறங்காவலர், தவத்திரு ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை அறக்கட்டளை, 24 மாலைக்கட்டித் தெரு, 1வது பதிப்பு, 2008. (சிதம்பரம்: சுபம் ஆப்செட் பிரின்டர்ஸ்).

xvi, 332 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21x14 சமீ.

1852இல் ஆறுமுகநாவலர் உரைநடையில் முதற்பதிப்பாக வெளியிட்ட இந்நூல் தவத்திரு ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை அறக்கட்டளையினால் மீளவும் 24வது பதிப்பாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பெரியபுராணம் அல்லது திருத்தொண்டர் புராணம் என்பது சேக்கிழார் சுவாமிகளால் பெருங்காப்பிய இலக்கணங்கள் பலவும் கொண்டதாக இயற்றப்பெற்ற சைவக் காப்பியமாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டர் தொகை எனும் நூலை முதல் நூ லாக கொண்டும், சுந்தரமூர்த்தி சுவாமிகளை காப்பியத் தலைவராகக் கொண்டும், அவர் போற்றிய சைவ அடியார்களின் வாழ்க்கை வரலாற்றினை இந்நூலில் விவரிக்கிறார். அத்துடன் திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பி எழுதிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை மூலநூல்களாகக் கொண்டும், இரண்டாம் குலோத்துங்கச்சோழனிடம் அமைச்சராக இருந்த சேக்கிழார் பல ஊர்களுக்கும் சென்று திரட்டிய தகவல்களைக் கொண்டும் பெரியபுராணம் எழுதப்பெற்றுள்ளது. இரண்டாம் குலோத்துங்க சோழனின் ஆனையின்படி தில்லைக்குச் சென்றவர், அங்கிருக்கும் இறைவனான நடராஜன் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்க சேக்கிழார் உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் என பெரியபுராணத்தினை தொடங்கியதாக நம்பப்படுகிறது. இடைக்கால இலக்கியத்தில் மக்களின் வாழ்க்கை பற்றி வரலாற்றுப் போக்கில் அறிவதற்கு இந்நூல் உதவுகிறது. பெரியபுராணம் முதல் காண்டம், இரண்டாம் காண்டமென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு காண்டமாகவும், முதல் காண்டத்தில் ஐந்து சருக்கங்களையும், இரண்டாம் காண்டத்தில் எட்டு சருக்கங்களையும் உடையதாகவும் அமைக்கப்பெற்றுள்ளது. காப்பியக் கதையானது கயிலாயத்தில் தொடங்கப்பெற்று, சைவ அடியார்களின் வாழ்க்கையை விவரித்து, இறுதியாக கயிலாயத்தில் முடிகிறது. நான்காயிரத்து இருநூற்று எண்பத்து ஆறு (4286) செய்யுள்களைக் கொண்ட இப்புராணத்தில் ஆளுடையபிள்ளை எனப்படும் திருஞானசம்பந்தரின் வரலாறு மட்டும் 1256 செய்யுட்களால் விரிவாகக் கூறப்பட்டுள்ளதால் "பிள்ளை பாதி புராணம் பாதி" என்கிற பழமொழி ஏற்பட்டது. ஆறுமுகநாவலர் அவர்கள் செய்யுள் நடையில் இருந்த இவ்விலக்கியத்தை வசனநடையில் ஆக்கித் தந்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60166).

11134

நித்திய கருமவிதி. ஆறுமுக நாவலர். சிதம்பரம் 608 001: தவத்திரு ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை அறக்கட்டளை, 24 மாலைக்கட்டித் தெரு, 1வது பதிப்பு, 1993. (அச்சக விபரம் தரப்படவில்லை).

20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12.5 சமீ.

இந்நூலில் அனுட்டான விதி, சூரியநமஸ்கார விதி, கோபூசாவிதி, போசன விதி ஆகியன அடங்கியுள்ளன. சைவசமயிகள் கடைப்பிடிக்கவேண்டிய அனுட்டானங்கள் பற்றி இந்நூல் எளியநடையில் விளக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் PAM 956).

11135

நித்திய கருமவிதி சைவ அநுட்டானவிதி. க.சி.குலரத்தினம். யாழ்ப்பாணம்: க. கனகராஜா, மில்க் வைற் தொழிலகம், திருஆலவாய், 1வது பதிப்பு, 1983. (யாழ்ப்பாணம்: சாந்தி அச்சகம்).

28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

இச்சிறு நூலில் கமலை ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், பழநி ஈசான சிவாசாரிய சுவாமிகள், தேவகோட்டை தற்புருஷ தேசிகர், திருச்சிராப்பள்ளி பட்டுசுவாமி ஓதுவார் ஆகியோர் செய்த விளக்கச் சுருக்கம் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

11136

பெரியதும் சிறியதும். வ.மகேஸ்வரன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

vii, 104 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-659-500-0.

பெரியதும் சிறியதும், கணபதியும் ஜனபதியும், இன மொழி அடையாளமாக முருகன், கந்தர்சஷ்டி கவசத்தின் சமூக உள்ளடக்கம், சாத்தனும் அரிகர புத்திரனும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டேசுவரர்: சிவன் கோவில் நம்பிக்கைப் பொறுப்பாளர், இலங்கையில் சிங்கள மக்களிடையே கண்ணகி வழிபாடு: இருப்பும் நடப்பும், இந்துப் பண்பாட்டில் பெண் தெய்வங்கள்: வாழ்வும் வீழ்வும், வீரசைவ மரபும் யாழ்ப்பாணத்து வீரசைவரும், பக்தி இயக்கமும் தமிழும், ஆழ்வார்களின் பக்தி அனுபவம், சுர-அசுர யுத்தமும் துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனமும் ஆகிய 12 தலைப்புகளில் இத்தொகுதியில் உள்ள கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவை விநாயகர், சிவன், முருகன், ஐயப்பன், சண்டேசுவரர், பெண்தெய்வங்கள் ஆகிய கடவுளர் குறித்தும் கந்தசஷ்டி கவசம், திவ்விய பிரபந்தம், தேவாரம் ஆகிய பக்தி இலக்கியங்கள் குறித்தும் அமைந்துள்ளன. இவை எவ்வாறு பெருமரபிலும் சிறுமரபிலும் இணைந்துள்ளன என்பதை, பண்பாட்டு மானுடவியல் நோக்கில் பார்வையிடுகின்றன. நமது பண்பாட்டுச் சூழலில் பெரமரபு-சிறுமரபு என்ற இரு மரபுகளும் சகல தளங்களிலும் வேரூன்றியுள்ளன. இவை இரண்டுக்கும் இடையிலான இடையுறவு அநாதியானது. ஒன்றிலிருந்து ஒன்று தோற்றம் கொண்டது. பண்பாடு என்பது அவ்வாறான படிமலர்ச்சி கொள்ளும் என்பதுதான் மானுடவியலாளர்களது கருத்து. அப்பண்பாட்டுப் படிமலர்ச்சி தொடர்பான ஒருகருத்தாடலை இந்நூற் கட்டுரைகள் முன்வைக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61424).

11137

யாழ் தமிழரும் இந்துமத வழிபாடுகளும். க.இ.குமாரசாமி (புனைபெயர்: கோவைக்கிழார்). கோப்பாய்: அரவிந்த வாசம், கிளுவானை வீதி, 1வது பதிப்பு, 2005. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xii, 172 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.

இந்து சமயத்தை பொதுவாக முன்வைத்து அதன் விரிந்த பெரும்பரப்பில் சேகரித்த ஏராளமான தகவல்களை பல்வேறு குறுந்தலைப்புகளின்கீழ் தொகுத்துத் தந்துள்ளார். இலங்கையின் பூர்வீக மக்கள், திராவிடத் தோற்றம், சமணத் தாக்கம், சோழர் வருகை, ஆரியர் வருகை, கஜபாகு மன்னனும் கண்ணகி வழிபாடும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள், பன்னிரு திருமுறைகள், ஐரோப்பியர் வருகையும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களும், ஆங்கிலேயர் ஆட்சி, ஆறுமுக நாவலர், நாவலரைத் தொடர்ந்து ஏற்பட்ட விழிப்புணர்ச்சி, இலங்கையில் இந்துக்கள், உலகில் மதவழிபாடுகள், இந்துமதம், உலகின் மொத்தக் குடிசனத் தொகை, உலகின் சனத்தொகை மதரீதியாக, இந்து மதத்தின் நால்வகை வழிபாடுகள், சைவக் கடவுளர்கள், கண்ணகி, சைவக்கிரியைகளில் கும்பம் வைத்தல், ஆலய அமைப்பும் கிரியைகளும், சைவப் பண்டிகைகள், இந்தியாவில் பாடல்பெற்ற திருத்தலங்கள், இலங்கையில் பாடல்பெற்ற திருத்தலங்கள், சித்தாந்த சாஸ்திரங்கள், இறைவனின் மறைத்தல் தத்துவம், மனிதனின் தோற்றம் மூவகை உடம்பு, தமிழ்மொழியில் பூசை வழிபாடுகள், புலம்பெயர்ந்தோரின் இந்துமத வழிபாடுகள், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இந்துமத வழிபாடுகள் என இன்னோரன்ன மிக விரிவான உலகளாவிய சமய விடயங்களை குறுந்தலைப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின்கீழ் இந்நூலில் சுருக்கமாகத் தொகுத்து வழங்கி அறிமுகப்படுத்தியிருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36717).

11138

யாழ்ப்பாணத்து நீர்வேலிச் சங்கரபண்டிதர் சற்பிரசங்கம். சங்கர பண்டிதர் (மூலம்), வே.காராளபிள்ளை (தொகுப்பாசிரியர்). கொழும்பு: வே.காராளபிள்ளை, முன்னாள் கொழும்புத் திறைசேரிக் கிளாக்கர், 1வது பதிப்பு, 1910. (யாழ்ப்பாணம்: வித்தியாநுபாலன அச்சகம், வண்ணார்பண்ணை).

62 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x13 சமீ.

யாழ்ப்பாணத்து நீர்வேலி சிவ சங்கர பண்டிதர், நாவலர் காலத்தில் இருந்த தமிழறிஞர். நாவலரின் சைவத்தமிழ்ப்பணிகளில் துணைநின்றவர். நாவலரைப் போலவே இவரும் தனியாகச் சைவப் பிரசாரத்திலும் கிறிஸ்தவமதம் பரவுதலைத் தடுப்பதிலும் பேரூக்கமுடையவராக விளங்கியவர். இந்தியாவிலும் புகழ்பெற்றிருந்த முருகேச பண்டிதர், திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் சபாபதி நாவலர் ஆகியோர் இவரது மாணவர்களாவர். சிவதூஷண கண்டனம், பரபக்ஷம், பதிலக்ஷணம், பசுலக்ஷணம், பாசலக்ஷணம், பரபக்ஷகண்டனம், முத்திசாதனம், பதிவிசேஷ நிரூபணம் ஆகிய தலைப்புகளில் இவரது உரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2917).

11139

வழிபாடும் பிரார்த்தனையும். ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீநகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 1வது பதிப்பு, ஜனவரி 2016. (இணுவில்: கஜானந்த் பிறின்டேர்ஸ், மானிப்பாய் வீதி, கந்தசாமி கோவிலடி).

iv, 72 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20x14.5 சமீ.

வழிபாடு, பிரார்த்தனை ஆகிய இரு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ள இந்நூலில் வழிபாடு என்ற முதலாம் பிரிவின்கீழ் வாழ்க்கையும் வழிபாடும், இந்துசமயப் பழக்க வழக்கங்கள், விரதங்கள், மகோற்சவ விளக்கம் ஆகிய நான்கு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பிரார்த்தனை என்ற இரண்டாவது பிரிவில் சில விநாயகர் துதிப்பாடல்கள், மஹோற்சவ காலத் திருமுறைகள், திருப்பல்லாண்டு (தேர்த் திருவிழா), திருப்பொற்சுண்ணம் (தீர்த்தம்), திருக்கதவம் திறக்கும் பாடல், மார்கழிப் பாடல்கள், சிவபுராணம், திருப்பொன்னூசல், கோளறு திருப்பதிகம், நவக்கிரகத் துதி, திருவிளக்கப் பாடல், வாணிவிழாப் பாடல், கந்தசஷ்டி கவசம், ஆரத்திப் பாட்டு, பிழை பொறுத்தல் ஆகிய பிரார்த்தனைப் பாடல்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 60830).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11140

வீரபத்திரக் கடவுள். க.சிவபாதசுந்தரக் குருக்கள். யாழ்ப்பாணம்: அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சகம்).

19 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

வீரபத்திரப் பெருமானின் தோற்றமானது சைவர்களுக்குக் கூறும் அறிவுரை யாதெனில், "ஏ மனிதனே நீ அகங்காரம் கொள்ளாதே. சிவநிந்தனை செய்யாதே. இறைவனை விலக்கி இறைவனை முன்வையாத எந்தக் கருமத்தையும் செய்யாதே. அப்படிச் செய்தால் நீ தண்டிக்கப் படுவாய்" என்பதாகக் கருதப்படுகின்றது. வீரபத்திரப் பெருமானின் தோற்றம் கந்த புராணத்தில் தக்ஷகாண்டத்தில் விரிவாகக் கூறப்படுகின்றது. அதன் எளிமையான வடிவமாக இந்நூல் அமைந்துள்ளது. அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபையின் பத்தாவது வெளியீடு இது. கிரியாவித்தகர் குருமணி சிவஸ்ரீ க.சிவபாதசுந்தரக் குருக்கள் தெல்லிப்பளை மயிலிட்டி தெற்கில் வாழ்ந்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 9451).

294.5 (1) இந்து சமய பாடநூல்கள்

11141

இந்து சமய சாரம்: சிறுவர்க்கான சமயக் கட்டுரைகள். இரா.கந்தையா. கொழும்பு 7: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 98, வோட் பிளேஸ், 1வது பதிப்பு, 1996. (கொழும்பு 8: அரசாங்க அச்சகம்).

xii, 129 பக்கம், விலை: இலவச வெளியீடு, அளவு: 20.5x13.5 சமீ.

இந்து சமயம், மும்மூர்த்திகள், சிவபெருமான், அம்பாள் வணக்கம், சிவனும் உமையும், பிள்ளையார், பிள்ளையார் பெருமை, முருகக் கடவுள், முருகன் பெருமை, சிவகுமாரர்கள், ஸ்ரீ மகா விஷ்ணு, ஸ்ரீ கிருஷ்ண பகவான், மகா விஷ்ணுவும் இலக்குமியும், மகா விஷ்ணுவின் அவதாரங்கள், வேதகாலத் தெய்வங்கள், இந்துக்களின் கோவில்கள், இந்துக்களின் விரதங்கள், இந்துக்களின் விழாக்கள், நவக்கிரகங்கள், ஸ்ரீ நாரத மகாமுனிவர், அகத்தியர், இராமாயணம், ஸ்ரீ அனுமான், இராவணன், இராமரும் சீதையும், மகா பாரதம், பஞ்சபாண்டவர்கள், வீட்டுமர் அல்லது பீஷ்மர், கர்ணன், அர்ச்சுனன், கண்ணகி அம்மை, சகுந்தலை, பிரகலாதன், துருவன், அரிச்சந்திரன் கதை, நளன்-தமயந்தி, சத்தியவான் -சாவித்திரி, திருஞானசம்பந்தர், அப்பர் சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், மார்க்கண்டேயர், கண்ணப்பர், நம்மாழ்வார், ஆண்டாள் கதை, ஸ்ரீ ஆதிசங்கரர், பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், சாரதாமணி தேவியார், சுவாமி விவேகானந்தர், தியாகராஜ சுவாமிகள், இராமலிங்க அடிகள், பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், திருவள்ளுவர், ஔவையார், இராசராச சோழன், சுப்ரமணிய பாரதியார், மஹாத்மா காந்தி ஆகிய 58 தலைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அறநெறிப் பாடசாலைகளுக்கான இலவச வெளியீட்டுத் தொடர் இலக்கம் 5.

11142

சைவ சமய போதினி: நான்காம் வகுப்பு. குரும்பசிட்டி சன்மார்க்க சபை. சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 5ஆம் பதிப்பு, 1960, 1வது பதிப்பு, 1956, 2வது பதிப்பு, 1957, 3வது பதிப்பு, 1958, 4வது பதிப்பு, 1959. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(8), 60 பக்கம், சித்திரங்கள், விலை: 80 சதம், அளவு: 18x13.5 சமீ.

இலங்கை அரசாங்கத்தின் கல்வித்திட்டத்திற்கு அமைவாக சைவ சமயம் கற்பிப்பதற்காக வட இலங்கை தமிழ்நூற் பதிப்பகம் சைவ சமய போதினி என்ற தொடரில் நான்கு பாடநூல்களை வெளியிட்டது. அதில் ஒன்றாக நான்காம் வகுப்புக்கேற்ற இந்நூல் அமைகின்றது. நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலின் முதலாம் பகுதியில் சிவபெருமானை வழிபட்ட சிலந்தி, குங்கிலியக்கலய நாயனார்-1, குங்கிலியக்கலய நாயனார்-2, பாலாபிடேகஞ் செய்த சிறுவன், சிவபெருமான் தாயானமை, கிரிசாம்பாள், பொன்னனையாள், சிபிச் சக்கரவர்த்தி, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆகிய ஒன்பது பாடங்களும், இரண்டாம் பகுதியில் சிவாலய தரிசனம், சரியை வழிபாடு, கோவிலைச் சுத்தம் செய்தல், கோவிற் பூந்தோட்டம் ஆகிய நான்கு பாடங்களும், மூன்றாம் பகுதியில் திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், புராணம், திருப்புகழ் ஆகிய ஐந்து பாடங்களும், நான்காம் பகுதியில் மூதுரையுமாக மொத்தம் 19 பாடங்கள் இடம் பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13361).

11143

சைவ நெறி: ஏழாம் வகுப்பு. சொர்ணவதி மாசிலாமணி (பதிப்பாசிரியர்). கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 8வது பதிப்பு, 1988, 1வது பதிப்பு, 1976, 2வது பதிப்பு, 1981, 3வது பதிப்பு, 1982, 4வது 5வது பதிப்புகள், 1985, 6வது பதிப்பு, 1986, 7வது பதிப்பு, 1987.(கொழும்பு: திசர அச்சகம்).

x, 116 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13 சமீ.

இந்நூலில் எமது சமயம், திருக்கோயில், ஆலயத் தொண்டு, கோயிற்பூசை, திருக்கோணேச்சரம், பொன்னம்பலவாணேச்சரம், விநாயகர் வழிபாடு, முருக வழிபாடு, விரதங்கள், சைவப் பண்புகள், மெய்ப்பொருள் நாயனார், குங்குலியக் கலய நாயனார், கந்தபுராண கலாச்சாரம், ஸ்ரீ இராமகிருஷ்ணர், யோகர் சுவாமிகள், சம்பந்தர் தேவாரம், அப்பர் தேவாரம், சுந்தரர் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம், கந்த புராணம், திருப்புகழ், திருக்குறள் ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 தலைப்புகளில் சைவநெறி பற்றிய பாடங்கள் தரப்பட்டுள்ளன. பின்னிணைப்பாக இந்துசமய, பௌத்த சமய, முஸ்லிம், கிறிஸ்தவ சமயப் பண்டிகைகள், பெருநாள்கள், திருவிழாக்கள் பற்றிய விளக்கப் பட்டியல் ஒன்றும் தரப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12664).

11144

சைவ நெறி: எட்டாம் வகுப்பு. *சொர்ணவதி மாசிலாமணி (பதிப்பாசிரியர்). கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 5வது பதிப்பு, 1987, 1வது பதிப்பு, 1978, 2வது பதிப்பு, 1981, 3வது பதிப்பு, 1985, 4வது பதிப்பு, 1986. (கொழும்பு: திசர அச்சகம்).*

xi, *157 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13 சமீ.*

இந்நூலில் எமது சமயம், தோத்திரங்கள், சாத்திரங்கள், சமய தத்துவங்கள், பதி, பசு, பாசம், நடராசரும் தட்சிணாமூர்த்தியும், இந்து இல்லம், சைவ நாற்பாதங்கள், சக்தி வழிபாடு, நந்தியை விலகச்செய்த நந்தனார், நட்டமாடும் நம்பனுக்கொரு மீன், அப்பாலும் அடிச்சார்ந்தார், சம்பந்தர் தேவாரம், அப்பர் தேவாரம், சுந்தரர் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், அற்புதத் திருவந்தாதி, மெய்யடியார்களின் மாண்பு, உபநிடதச் சிந்தனை, சத்தியமே வெல்லும், திருக்குறள், நால்வர் வளர்த்த நன்நெறி, இறைபணி நிற்றல், சக்தி வழிபாட்டுப் பாடல்கள் ஆகிய 29 அத்தியாயங்களில் இப்பாடநூல் விரிந்துள்ளது. அனுபந்தமாக இந்து சமய, பௌத்த சமய, இஸ்லாம் சமய, கிறிஸ்தவ சமயப் பழக்க வழக்கங்கள் பற்றிய குறிப்பும் இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12665).

11145

சைவநெறி தரம் 11: G.C.E. O/L. *என்.பீ.ஸ்ரீந்திரன். யாழ்ப்பாணம்: வாரிவனம் இந்து இளைஞர் மன்றம், 1வது பதிப்பு, பங்குனி 2008. (யாழ்ப்பாணம்: சுரபி பதிப்பகம், நாவலர் வீதி).*

80 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 180., அளவு: 20.5x14 சமீ.

2008ஆம் ஆண்டுதொடக்கம் தரம் 11 வகுப்புக்கென நடைமுறைக்கு வந்துள்ள சைவசமய புதிய பாடத்திட்டத்தின் 5E மாதிரிக் கற்றல் கற்பித்தல் முறைக்கேற்ப, தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள், செயற்பாடுகள், நேரம் என்பனவற்றை அடிப்படையாகக்கொண்டு இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியரான சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர் என்.பீ. ஸ்ரீந்திரன் வலிகாமம் கல்வி வலயத்தின் இந்து சமயபாடச் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகப் பணி யாற்றியவர். (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் எல்- 13481).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11146

சைவ போதினி மேற்பிரிவு 1 (க.பொ.த.ப. முதலாம் வருட வகுப்புக்குரியது). நூலாக்கக்குழு. கொழும்பு: விவேகானந்த சபை, 1வது பதிப்பு, 1960. (கொழும்பு 11: ஸ்டான்காட் பிரின்டர்ஸ்).

(4), 192 பக்கம், விளக்கச் சித்திரங்கள், விலை: ரூபா 2.25, அளவு: 18x12 சமீ.

கொழும்பு விவேகானந்த சபை நடத்தும் அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சைக்குரிய புதிய பாடத்திட்டத்திற்கு உதவும் வகையில் தயாரிக்கப்பட்ட நூல். சைவசமயத்தின் தத்துவார்த்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடங்கள், நாயன்மார் சரிதங்கள், புராணக் கதைகள், சைவத் திருமுறைகள் என்பன இப்பதிப்பில் இலகுவாகப் போதிக்கப்படக்கூடிய வகையில் சைவசமயப் பொது அறிவு, திருக்குறள் (அறத்துப்பால்-துறவறவியல்), வரலாறுகளும் கதைகளும், கந்தபுராணச் சுருக்கம், அருட்பாடல்கள் ஆகிய ஐந்து பிரிவுகளில் இந்நூல் வகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16646).

11147

திருத்தொண்டர் புராணம்: திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் புராணம்: மூலமும் உரையும். தமிழவேள் (இயற்பெயர்: க.இ.கந்தசாமி). கொழும்பு 6: விஜயலட்சுமி புத்தகசாலை, 248, காலி வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 1970. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201 டாம் வீதி).

(2), 118 பக்கம், விலை: ரூபா 3., அளவு: 21x14 சமீ.

கல்விப் பொது உயர்நிலைச் சான்றிதழ் தேர்வுக்குரிய முறையில் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இப்புராணம் 128 திருவிருத்தமுடையது. இவற்றில் முன் 47 திருவிருத்தம் திருக்குறிப்புத் தொண்டருடைய தொண்டைநாட்டின் சிறப்பையும் 63 திருவிருத்தம் அவர் பிறந்து வாழ்ந்த இடமாகிய காஞ்சியம் பேரூரின் சிறப்பையும், ஏனைய 55 திருவிருத்தமும் அவரது வரலாற்றுச் சிறப்பையும் கூறுகின்றன. செய்யுள்களுக்குரிய உரை விளக்கத்தை எளிய நடையில் தமிழவேள் க.இ.கந்தசாமி அவர்கள் வழங்கியுள்ளார். சமய உண்மைகளை இலக்கிய வடிவில் இச்செய்யுள்கள் உணர்த்துகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4841).

294.5(2) இந்து நிறுவனங்கள், ஆலய வரலாறுகள்

11148

அனுமன் கட்டிய கோவில்: இரம்பொடை ஸ்ரீ பக்த அனுமன் கோவில். தெ.ஈஸ்வரன் (ஆசிரியர்). கொழும்பு 3: Chinmaya Mission of Sri Lanka, 32, 10th Lane, Off Schofield Place, 1வது பதிப்பு, டிசம்பர் 2016. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

112 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-38349-0-7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி-நுவரெலிய பிரதான வீதியில் இரம்பொடை ஸ்ரீ பக்த அனுமன் கோவில் உள்ளது. அக்கோவிலின் வரலாற்றுப் பெருமையை இந்நூல் பன்னிரு இயல்களில் பதிவு செய்கின்றது. சின்மயா மிஷன் கண்விழிக்கிறது, காக்க நீ இருக்கப் பயம் ஏன்?அனுமன் கோவில் கட்ட ஆணை தந்தான், அனுமன் கர்நாடக இசை கேட்டான், கம்பன் தரும் காட்சி, மலையகத்தில் வசூல், அனுமன் இலங்கை வந்தனன், பக்த ஆஞ்சநேயன் சிறிய உருவில் குடிகொண்டார், கேட்டால் தருவான் மாருதி, ஸ்ரீ வரதராஜ விநாயகர் வந்தார், அனுமனுக்கு குடமுழுக்கு விழா, ஆஞ்சநேயன் குடிகொண்டான் ஆகிய தலைப்புகளில் இந்நூல் இரம்பொடை ஸ்ரீ பக்த அனுமன் கோவில் எவ்வாறு கட்டப்பட்டது என்பதையும் 2001இல் கும்பாபிஷேகம் நிகழ்ந்தது வரையிலான வரலாற்றையும் பதிவுசெய்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61613).

11149

செங்கலடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வரலாற்றுப் பதிகம். பெரியதம்பிப்பிள்ளை தருமலிங்கம். செங்கலடி: பெ.தருமலிங்கம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1981. (மட்டக்களப்பு: அர்ச் செபஸ்தியார் அச்சகம்).

18 பக்கம், விலை: ரூபா 4.00, அளவு: 21x13.5 சமீ.

செங்கலடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வரலாறு, செங்கலடி ஸ்ரீ சித்திவிநாயகர் பதிகம், செங்கலடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஊஞ்சல், செங்கலடி ஸ்ரீ சித்திவிநாயகர் மங்களம் ஆகிய நான்கு தலைப்புகளின்கீழ் இச்சிறுநூல் விரிகின்றது. 1980 ஆவணி 29இல் புனருத்தாரணம் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடத்தப்பட்ட மேற்படி கோவிலின் வரலாறு ஆயுர்வேத வைத்தியர் கிருஷ்ணபிள்ளைச் சுவாமியார் வழங்கிய குறிப்புகளின் அடிப்படையில் எழுதி கட்டுரை உருவில் வெளியிடப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11072).

11150

திருக்கேதீச்சர மான்மியம் 2: பொற்பொளிர் காண்டம். மு.கந்தையா. மன்னார்: திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை, சிவானந்த குருகுலம், திருக்கேதீச்சரம், 1வது பதிப்பு, ஜுன் 1992. (யாழ்ப்பாணம்: மஹாத்மா அச்சகம், ஏழாலை).

viii, 201 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 23x15 சமீ.

திருக்கேதீச்சர மான்மியம் ஆறு காண்டங்களாக எழுதப்பட்டது. புராதன காண்டம், பொற்பொளிர் காண்டம் என்பவை திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபையால் சிவானந்த குருகுல வெளியீடாக வெளிவந்தன. கரந்துரை காண்டம், நித்திய நைமித்திய காண்டம் இரண்டம் திருப்பணிச்சபையால் வெளியிடப்பட்டன. மற்றைய இரு காண்டங்கள் பற்றிய தகவல் இல்லை. இவ்விரண்டாம் பாகத்தில் சேத மத்தியமகிமையுரைத்த படலம், மாதேவடிகள் காட்சிப் படலம், சீகாழிப்பிள்ளை திருப்பதிகப் படலம், நாவலூர் நம்பி நற்றமிழ்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படலம், புலநரவைப் படலம், இராஜராஜபுரப் படலம், இராஜராஜேஸ்வரப் படலம், கும்பாபிஷேகப் படலம், திருவிராமீஸ்வரப் படலம், சிலாசாசனப் படலம் ஆகிய இயல்களின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13304).

11151

திருச்செந்தூர். இரத்தினம் நித்தியானந்தன். லண்டன்: இரத்தினம் நித்தியானந்தன், 1வது பதிப்பு, 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).

16 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

மலேசியத் திருமுருகன் திருவாக்கு திருபீடத்தின் மூன்றாவது அனைத்துலக முருக பக்தி மாநாடு சமய ஞான வேள்வியாக தென் ஆபிரிக்கா-டர்பன் நகரில், தவத்திரு பாலயோகி சுவாமிகளின் அருட்தலைமையில் 5.8.2016 முதல் 7.8.2016 முடிய நடைபெற்றது. இக் கருத்தரங்கில் வாசித்தளிக்கப்பட்ட கட்டுரையின் நூல்வடிவம் இதுவாகும். தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் அமைந்துள்ள சுப்பிரமணிய சுவாமி கோயில் பழந்தமிழ் இலக்கியங்களிலே சேயோன் எனக் குறிப்பிடப்படுகின்ற தமிழ் கடவுளான முருகனுக்குரிய அறுபடை வீடுகளில் இரண்டாம் படை எனப் போற்றப்படும் மிகச் சிறப்புமிக்க கோயிலாகும். தூத்துக்குடி மாவட்டத்தில், மன்னார் வளைகுடாவை அண்டி அமைந்துள்ள இக்கோயில் சென்னையில் இருந்து 600 கி.மீ தொலைவில் உள்ளது. சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள இக்கோயில் 2000 ஆண்டுகள் வரை பழமை கொண்டதாகக் கருதப்படுகின்றது. முருகப்பெருமானுக்குக் கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ள ஒரு கோயில் இதுவாகும். இக்கோயில் அமைந்துள்ள இடம் "திருச்சீரலைவாய்" என முன்னர் அழைக்கப்பட்டது. திருச்செந்தூர் கோவில் பற்றிய வரலாற்றுத் தகவல்களை புகைப்படங்களுடன் இச்சிறுநூல் சுருக்கமாக வழங்குகின்றது.

11152

திருச்செந்தூர்ப் புராணம். வென்றிமாலைக் கவிராயர் (மூலம்), ஞானப்பிரகாசர் நீலகண்டர் (உரையாசிரியர்). நீர்வேலி: வித்துவான் சபாபதிப்பிள்ளை, சிவ.சங். சிவகுருநாதபிள்ளை, சு.சி.சுந்தரம்பிள்ளை, பத்திராதிபர்கள், விஞ்ஞானவர்த்தனி, 1வது பதிப்பு, 1907. (யாழ்ப்பாணம்: மெய்ஞ்ஞானப்பிரகாச யந்திரசாலை, வண்ணார்பண்ணை).

340 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x13 சமீ.

திருச்செந்தூர்ப் புராணம் வென்றிமாலைக் கவிராயரால் இயற்றப்பெற்ற நூலாகும். அவர் திருச்செந்தூர் ஆலயத்தின் மடைப்பள்ளியில் பரிசாரகராக விளங்கினார். உரிய நேரத்திற்கு சமையல் செய்து வழங்காததால் அவரை ஆலயத்தில் இருந்து புறந்தள்ளினர் என்றும் இதனால் அவர் செந்தில்வேலவர் மீது பாடிய திருச் செந்தூர்ப் புராணத்தை அன்று ஆலயத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் கர்ண பரம்பரைக் கதை உள்ளது. கிழக்கிலங்கையில் உள்ள ஆலயங்களில் பக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வமாக இப்புராணப் படிப்புப் பிரபலம் பெற்றது. வடக்கிலும் பிரபல ஆலயங்களாகிய மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், இணுவில் கந்தசுவாமி கோவில், புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்தி விநாயகர் கோவில், அச்சுவேலி உலவிற்குளம் பிள்ளையார் கோவில் முதலிய பிரபல ஆலயங்களில் இப்புராணம் கந்தசஷ்டி காலத்தில் படிக்கப்பட்டு பயன்சொல்லும் வழக்கம் இருந்தது. நீர்வை மண்ணுக்குப் புகழ் சேர்த்த புராண விற்பன்னர் ஸ்ரீ சிவ. சங்கரபண்டிதர் (1821-1870) அவர்களின் புதல்வரே சிவப்பிரகாச பண்டிதர் ((1864-1914) ஆவார். நீர்வேலியில் திண்ணைப் பாடசாலை அமைத்து அவர்கள் ஆற்றிய சமஸ்கிருதக் கல்வித் தொண்டால் அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள் உள்ளிட்ட பல சமஸ்கிருத விற்பன்னர்கள் உருவாகினர். சிவப்பிரகாச பண்டிதர் ஆக்கிய நூல்களில் திருச்செந்தூர்ப் புராண உரை நூல் முக்கியமானதாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 956).

திருச்செந்தூர்ப் புராணம். வென்றிமாலைக் கவிராயர் (மூலம்), ச.சிவப்பிரகாச பண்டிதர் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவ பரிபாலன சபை, 2வது பதிப்பு, ஐப்பசி 1969, 1வது பதிப்பு, 1907. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, வண்ணார்பண்ணை).

(4), 347 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 19.5x13 சமீ.

திருச்செந்தூர்ப் புராணம் உருவானது தொடர்பாக ஒரு ஐதீகக் கதை உள்ளது. திருச்செந்தூர் கோயில் மடைப்பள்ளியில் வேலை பார்த்தவர் வென்றிமாலை. முருக பக்தரான இவர் ஒரு நாள் பிரசாதம் தயாரிக்காமல் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். உச்சிக்கால பூஜைக்கு பிரசாதம் இல்லை என்றதும் வென்றிமாலை மடைப்பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட்டார். அவமானம் தாங்காமல் கடலில் விழப் போனார். அப்போது அவரைத் தடுத்து நிறுத்திய ஓர் அசரீரி, "சேவலூர் சாஸ்திரிகளை போய்ப் பார்" என்றது. அவரும் அப்படியே செய்தார். அவரிடம், "சம்ஸ்கிருதத்தில் உள்ள தலபுராணத்தை தமிழில் உனக்குச் சொல்லித் தர முருகன் கட்டளையிட்டிருக்கிறார்" என்றார் சாஸ்திரியார். பிறகு சாஸ்திரியார் சொல்லச் சொல்ல, செந்தூர் தல புராணத்தை மொத்தம் 899 தமிழ்ப் பாடல்களாக புனைந்தார் வென்றிமாலை. வென்றிமாலைக்கு கவிராயர் பட்டம் தந்தார் சாஸ்திரியார். திருச்செந்தூரில் அவற்றை அரங்கேற்ற வந்தபோது மீண்டும் விரட்டியடிக்கப்பட்டார் வென்றிமாலை. எழுதிய ஏடுகளை கடலில் வீசியெறிந்தார் கவிராயர். ஈழக் கடற்கரையில் கரை ஒதுங்கிய ஏடு ஒரு முருக பக்தரிடம் சிக்கியது. திருச்செந்தூர் தல புராணத்தின் புகழ் ஈழத்தில் பரவியது. எப்படியோ, மூலப் பிரதி திருச்செந்தூருக்கு மீண்டும் வந்து சேர்ந்தது. இன்றும் அக்கோயிலில் அது பாதுகாக்கப்படுகிறது. இத்தகைய பெருமைமிக்க திருச்செந்தூர்ப் புராணத்துக்கு உரையாசிரியராக விளங்கும் ச.சிவப்பிரகாச பண்டிதர் அவர்கள் நீர்வேலிச் சங்கர பண்டிதர் அவர்களின் புதல்வராவார். நாவலர் பெருமானின் வலதுகரமாகத் திகழ்ந்தவரே சங்கர பண்டிதர். இவ்வுரை சைவ பரிபாலனசபை வெளியீடாக 1907இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பைக் கண்டது. இவ்விரண்டாம் பதிப்பு கந்த சஷ்டித் திருநாளன்று 15.11.1969 வெளியிடப்பட்டுள்ளது.

11153

திருவாசகத் தேன்மலர். ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம். திருக்கேதீச்சரம்: ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம், திருவாசக மடம், 1வது பதிப்பு, 1973. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்).

22 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

திருக்கேதீச்சரம்-திருவாசக மடம் மகேசுரபூசை மண்டபம், 1972 திருவாசக விழா விபரங்கள் அடங்கிய திருவாசகத் தேன்மலர். இதில் சிறப்புக் கட்டுரைகளாக ஆரம்பகாலத்துப் பணிகள் (மு.தியாகராசா), திருவாசக மடமும் சாதனைகளும் (மு.சிவராசா), முடிவுகட்டி விடாதீர்கள் (அ.மு.பரமசிவானந்தம்), பழம் பாடல்களின் வரிகள் (சுந்தர பிரேமசம்பு) ஆகிய நான்கு ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4609/9499).

11154

நகுலகிரிப் புராணம்.கா.அப்பாச்சாமி. காங்கேசன்துறை: கீரிமலைச் சிவநெறிக் கழகம், நகுலேசுவர தேவஸ்தானம், கீரிமலை, 1வது பதிப்பு, சித்திரை 1980. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்).

xxx, 300 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 21.5x14 சமீ.

புன்னாலைக்கட்டுவன் கவிஞர் சிகாமணி, பிரம்மஸ்ரீ கா.அப்பாச்சாமி ஐயர் அவர்கள் இயற்றிய இந்நூல் விழிசிட்டி ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திரு. செ.சிவசுப்பிரமணியம் அவர்கள் எழுதிய உரையுடன் கூடியது. கடவுள் வாழ்த்து, அவையடக்கம், திருநாட்டுப் படலம், திருநகரப் படலம், பாயிரப் படலம், தலவிசேடமுரைத்த படலம், தீர்த்த விசேடமுரைத்த படலம், மூர்த்தி விசேடமுரைத்த படலம், நகுலமுனி யாத்திரைப் படலம், இராமயாத்திரைப் படலம், நளன் யாத்திரைப் படலம், அர்ச்சுனன் யாத்திரைப் படலம், மாருதப்புரவீகவல்லி யாத்திரைப் படலம் ஆகிய 13 பிரிவுகளில் இந்நூல் விரித்தெழுதப்பட்டுள்ளது. கீரிமலை இலங்கையின் வடகரையில் உள்ள தீர்த்த விசேடம் மிக்க இடம். இங்கு புராதன சிவத்தலம் ஒன்றும் உண்டு. இவ்விடத்தின் புராதன பெயர் திருத்தம்பலை. கோயில் கொண்டிருந்த பெருமானின் புராதன பெயர் திருத்தம்பலேசுவரர். கீரிமுகமுடைய முனிவர் ஒருவர் இத்துறையில் நீராடி, அருகிலுள்ள பெருமானை வழிபட்டு வந்ததினாலே கீரிமுகம் மாறப்பெற்றார். இக்காரணங் கொண்டே இவ்விடம் கீரிமலை எனப் பெயர் பெற்றது. இதனை வடமொழியில் நகுலகிரி என்பர். இங்கு இடங்கொண்ட இறைவனின் இக்காலப் பெயர் நகுலேசர் - நகுலேசுவரர். இறைவி நகுலாம்பிகை- நகுலேசுவரி. கோவில் நகுலேசுவரம். இத்தலம் ஆதிச்சோழ மன்னனாகிய முசுகுந்தன், நளன், அருச்சுனன் முதலி யோரினால் தொழப்பெற்ற ஒன்றாகும். தீர்த்த-தல யாத்திரைகளுக்குரிய புராதனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணிய இடங்களுள் கீரிமலையும் ஒன்று. வடமொழிச் சைவ புராணங்கள் பத்தினுள் கந்தபுராணம் சிறப்பானது. அதில் உள்ள சூதசங்கிதையில் நகுலேசுவரம் பழைமையான யாத்திரைத் தலங்களுள் ஒன்று எனக் குறிக்கப்பட்டுள்ளது. விசயன் இலங்கை அரசனாக இருந்த போது, இவ்வாலயத்திற்குத் திருப்பணிகள் செய்ததாகவும் வரலாறு உண்டு. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3098).

11155

நயினாதீவு நாகம்மாள்: ஒரு தொகுப்பு நூல். நாகேசு சிவராசசிங்கம். நயினாதீவு: நாகேசு சிவராசசிங்கம், முன்னாள் தலைவர், அறங்காவலர் சபை, நயினை சிறீ நாகபூசணி அம்மன் கோவில், 1வது பதிப்பு, 2003. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டேர்ஸ், இல. 424, காங்கேசன்துறை வீதி).

208 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x18.5 சமீ.

நயினை நாகபூசணி அம்மன் கோவில் தொடர்பான பல தகவல்களைக் கொண்டுள்ள இந்நூலில் நாகர் (குல.சபாநாதன்), நாக வழிபாடு (குல.சபாநாதன்), நாகர் வழிபாடு (சி.பத்மநாதன்), நயினாதீவு (குல.சபாநாதன்), நாகம்மாள் கோவில் (குல.சபாநாதன்), 1938ஆம் ஆண்டின் ஆணைக்குழு அறிக்கை, 14151ஆம் இலக்க வழக்குத் தீர்வை, நடைமுறையிலுள்ள முகாமைத் திட்டம் (தமிழாக்கம்- நாகேசு சிவராசசிங்கம்), நயினாதீவு சிறீ நாகபூசணி அம்மன் கோவில் தொடர்பில் யாருக்கு மரபுவழி நிர்வாக உரிமை உள்ளது (நாகேசு சிவராசசிங்கம்), வள்ளுவர் மடத்தின் வரலாறும் முடியிறக்குவோருக்கு இழைக்கப்பட்ட அநீதியும் (நாகேசு சிவராசசிங்கம்), நயினை ஊஞ்சல் (வண்ணை ம. அமரசிங்கப் புலவர்), சிறீ நாகபூசணி அந்தாதி மாலை (நயினை முத்துச் சுவாமிகள்), நயினாதீவு நாகேசுவரியம்மை பதிகம் (அராலி முத்துக்குமாருப்புலவர், கருத்துரை- நயினைப் பண்டிதர் நா.கந்தசாமி), இணைப்புக்கள், சுற்றுப்பிரகாரத் திருமுறைப் பாக்களும் மற்றும் பாடல்களும் என 13 தலைப்புக்களில் பல விடயங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பின்னிணைப்புகளாக அறங்காவலர் சபைக்கு 25.9.2002 நாளிட்டு நாகேசு சிவராசசிங்கம் அவர்கள் அனுப்பிய கடிதத்தின் படி, கோவில் அறங்காவலர் சபை மேற்படி கடிதத்திற்கு அனுப்பிய பதில், கோவில் அறங்காவலர்களுக்கு தனித்தனியாக முகவரியிட்டு நாகேசு சிவராசசிங்கம் அவர்கள் அனுப்பிய நினைவூட்டல் கடிதம், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நானாவிதம்/37ஆம் இலக்க வழக்கு விசாரணையும் தீர்ப்பும் தீர்வையும், நீதிமன்ற ஆணையாளர் ப.சுப்பிரமணியஐயர் நீதிமன்றுக்குச் சமர்ப்பித்த ஆங்கில அறிக்கையும் அதன் தமிழாக்கமும் அவரது 1448ஆம் இலக்க நில அளவைப் படத்தின் இவ்விடயத்தோடு சம்பந்தப்பட்ட பகுதியின் படியும், பிரசித்த நொத்தாரிசு நாகமுத்தன் விசுவலிங்கம் முகதாவில் நிறைவேறிய 83ஆம் 100ஆம் இலக்க உறுதி சாதனங்களின் படிகள், 1982 டிசம்பரில் வேலணைஉதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக நடைபெற்ற உண்ணாநோன்பு பற்றிய அறிவித்தல், முடியிறக்கல் தொண்டர் சபையின் தலைவர் சி.இராசையா 22.12.1984 நாளிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பிய கடிதமும் இணைப்புக்களும், வள்ளுவர் மடம் திறப்பு விழா அறிவித்தல் ஆகியன இணைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35665).

11156

நாகம் பூசித்த நயினை ஸ்ரீ நாகபூஷணி. ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அறங்காவலர் சபை. இலங்கை: உதயமலர்,அமரர் பரமலிங்கம் உதயகுமாரன் நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, பெப்ரவரி 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(4), 80 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவல் சபையின் வெளியீடுகளான நாகம் பூஷித்த நயினை, தோத்திரப் பாக்களின் தொகுப்பு ஆகிய நூல்கள் இவ்வெளியீட்டின் வழியாக சபையின் அனுமதியுடன் மீள்பிரசுரம் கண்டுள்ளன. பூர்வீக இலங்கை (நாகர், நாக வழிபாடு), நயினாதீவு நந்தாப் புகழ்வாய்ந்த நயினைத் தலச் சிறப்பு, நாகேஸ்வரி ஆலயம் ஆகிய மூன்று கட்டுரைகளையும், நயினாதீவு நாகேஸ்வரி அம்மை பதிகம், நயினை ஊஞ்சல், ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவில் உள்வீதி சுற்றுப் பிரகாரத் தோத்திரப் பாக்களின் தொகுப்பு ஆகிய பக்தி இலக்கியங்களையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45694).

11157

நாவலர் நூற்றாண்டு மலர், 1979. க.கைலாசபதி (பதிப்பாசிரியர்). கொழும்பு 7: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, 4, ஹோட்டன் ரெறஸ், 1வது பதிப்பு, மார்கழி 1979. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(4), 336 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் 100ஆவது குருபூசையின் நினைவாக வெளியிடப்பட்ட நாவலர் நூற்றாண்டு மலர் இது. மலர்க்குழுவின் தலைவராக பேராசிரியர் க.கைலாசபதியும், உறுப்பினர்களாக பேராசிரியர் கா.சிவத்தம்பி, கலாநிதி பொ.பூலோகசிங்கம், கலாநிதி அ.சண்முகதாஸ், திரு. ச.அம்பிகைபாகன், திரு. நா.சுப்பிரமணியம், திரு. ஆ.சிவநேசச்செல்வன் ஆகியோர் இயங்கினர். இம்மலர் பல்துறை நோக்கில் நாவலர், வழி வழி நாவலர், வரலாற்றில் நாவலர், நாவலர் திரட்டு ஆகிய நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவ்வப் பிரிவில் அடங்கும் ஆக்கங்களைக் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. இறுதிப் பிரிவில் ஆறுமுகநாவலர் தொடர்பான நூல்விபரப்பட்டியல் ஒன்றும் தரப்பட்டுள்ளது. இதனை இ.கிருஷ்ணகுமார், ஆ.சிவநேசச்செல்வன் ஆகியோர் தொகுத்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24027).

11158

புளியம்பொக்கணைத் தலபுராணம்: உரையுடன். குடாரப்பூர் வைத்தியர் செல்லப்பா கணபதிப்பிள்ளை. கிளிநொச்சி: நா.வீரகத்திப்பிள்ளை, பூசகர், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், புளியம்பொக்கணை, 1வது பதிப்பு,மே 1960 (அச்சக விபரம் தரப்படவில்லை).

64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13 சமீ.

வடபுலத்தின் கரைச்சிப் பகுதியில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் புளியம்பொக்கணை ஸ்ரீ நாகதம்பிரான்ஆலய உற்சவப் பெருமைகளையும் அங்கு பலகாலமாக மெய்யடியார்கள் வருடந்தோறும் பங்குனி மாதத்தில் பௌர்ணமியோடு கூடிய உத்தர தினத்தன்று பெரும் பொங்கல் விழாச் செய்து இறைவன் புகழ்பாடிப் பரவுதலையும் கருத்திற்கொண்டு இந்நூலை வைத்தியர் செ.கணபதிப்பிள்ளை இயற்றி 16.5.1960இல் வெளியிட்டிருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25773).

புளியம்பொக்கணைத் தலபுராணம்: உரையுடன். குடாரப்பூர் வைத்தியர் செல்லப்பா கணபதிப்பிள்ளை (மூலம்), கணபதிப்பிள்ளை குமாரசாமி (உரையாசிரியர்). கிளிநொச்சி: நா.வீரகத்திப்பிள்ளை, பூசகர், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், புளியம்பொக்கணை, 2வது பதிப்பு, மார்ச் 1994, 1வது பதிப்பு, மே 1960 (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201 டாம் வீதி).

(6), 76 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 21.5x14 சமீ.

இந்நூலின் மூலப்பிரதியை வைத்தியர் செ.கணபதிப்பிள்ளை இயற்றி 16.5.1960இல் வெளியிட்டிருந்தார். அவரது புத்திரனார் குமாரசுவாமி அவர்கள் தந்தையாரின் செய்யுள்களுக்குப் பொழிப்புரை எழுதி இந்நூலைப் புதுக்கிய பதிப்பாக வெளியிட்டிருக்கிறார். காப்பு, கடவுள் வணக்கம், பாயிரம், புராதனச் சருக்கம், வைபவச் சருக்கம், தெய்வீகச் சருக்கம், அதிசயச் சருக்கம் ஆகிய ஏழு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 42111).

11159

பேராதனை குறிஞ்சிக் குமரன். இ.குமாரசாமி சர்மா. யாழ்ப்பாணம்: இ.குமாரசாமி சர்மா, 15, பீ.ஏ.தம்பி லேன், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: லக்ஷா பிரிண்டேர்ஸ்).

68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ளதும், 27.11.1966இல் அடிக்கல் நாட்டப்பட்டு, 06.06.1968இல் மகாகும்பாபிஷேகம் கண்டதுமான குறிஞ்சிக் குமரன் ஆலயம் பற்றிய ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்துள்ள நூல். குறிஞ்சிக் குமரனின் பண்பாட்டு வரலாற்றை, அது எதிர்கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடிகளையெல்லாம் தாண்டி, நிமிர்ந்து நிற்கும் கோவிலின் மாட்சியை அதன் உயிர்ப்புடன் இணைந்திருந்த உன்னதங்களை, தனது பெறுமதியான மாணவப் பருவ மனப்பதிவுகளோடு ஆசிரியர் தந்திருக்கிறார். முருகன் திருவருட் பொலிவும் பேராதனை மாட்சியும், மாணவரின் அயராத முயற்சி, கோவிலும் சூழலும், அடிக்கல் நாட்டு வைபவம், அறுபடை வீடுடைய முருகன் வரலாறு, முருகன் அருள் பெருக்கும் திருவுலா, மஹா கும்பாபிஷேகம், ஆலய சிற்ப ஓவிய அமைப்பு, நித்திய நைமித்திய கிரியைகள், கோயில் எழுப்பினோர், கோயிலின் எதிர்காலம், இறைவனுக்குரிய நிவேதனப் பொருட்கள் விபரம், ஒரே இறைவனின் பல்வேறு தோற்றங்கள், முருகன் மீது பாடப்பட்டுள்ள பாடல்களின் தொகுப்பு ஆகிய 14 தலைப்புகளின்கீழ் இந்நூல் பேராதனை குறிஞ்சிக் குமரன் ஆலயம் பற்றிய பல்வேறு தகவல்களையும் தருகின்றது.

11160

மயூரகிரி புராணம். வேதாந்த சுப்பிரமணிய பிள்ளை (மூலம்), ந.ச. பொன்னம்பலபிள்ளை (பொழிப்புரை). ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை (விசேடவுரை). யாழ்ப்பாணம்: ம.வே. திருஞானசம்பந்தபிள்ளை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியரும் இந்து சாதனப் பத்திராசிரியரும், 2வது திருத்திய பதிப்பு, ஐப்பசி 1937, 1வது பதிப்பு, 1885. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).

viii, 204 பக்கம், விலை: ரூபா 1.75, அளவு: 22x14 சமீ.

மயூரகிரி என்பது பாண்டி நாட்டிலே தேவாரம் பாடப்பெற்ற சிவத்தலங்களுள் ஒன்றாகிய திருப்புத்தூருக்குச் சமீபத்திலுள்ள சுப்பிரமணியக் கடவுளுக்குரிய குன்றக்குடி என்ற முக்கிய திருத்தலமாகும். இம்மயூரகிரிப் புராணம் நூற்றாண்டுகளுக்கு முன்னர் மதுரையைச் சேர்ந்த சிவகங்கை வித்துவான் வேதாந்த சுப்பிரமணிய பிள்ளை என்பவரால் வடமொழி மயூரகிரி மான்மியத்தினின்றும் மொழிபெயர்த்துப் 13 சருக்கங்களுடையதாகச் செய்யுள்நடையில் இயற்றப்பட்டது. இந்நூல் கலியுகவரதனாகிய சுப்பிரமணியப் பெருமானது மகிமையையும் அவர் தம்மை மெய்யன்போடு வழிபட்ட அன்பர்களுக்கு வேண்டியவற்றை வேண்டியாங்கு ஈந்தருளிய தன்மையையும் புலப்படுத்துகின்றது. முதற்பதிப்பின் இறுதியிற் காணப்பெற்ற "தெய்வநாயகி திருமணச் சருக்கம்" வடமொழி மூலநூலிற் காணப்படாமையினாலும், யாழ்ப்பாணத்தைச் சார்ந்த அராலியில் வசித்த ஒரு பிராமணராற் புதிதாய்ப் பாடிச் சேர்க்கப்பட்டமை சந்தேகமின்றித் தெரிந்தமையாலும் வடதேயத்திலுள்ள ஏட்டுப் பிரதிகளில் இது தவிர்க்கப்பட்டமையாலும் திருத்திய இரண்டாம் பதிப்பிலும் தவிர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 958).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11161

முடிமன்னர் பதிகம். மு.க.சூரியன். கோப்பாய்: வே.மு.கந்தப்பு, நஞ்சன் வளவு, கோப்பாய் தெற்கு, 1வது பதிப்பு, தை 1961. (கொழும்பு 14: வீரகேசரி அச்சகம், எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் பிரைவேட் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி).

16 பக்கம், விலை: சதம் 30, அளவு: 21x13 சமீ.

யாழ்ப்பாணம்-கோப்பாய் தெற்கு நஞ்சன் வளவில் கோவில் கொண்டெழுந் தருளியிருக்கும் முடிமன்னர் பேரில் யாத்த பதிகம் இது. இந்நூலாசிரியர் கவிஞர் மு.க.சூரியன் கோப்பாய் தெற்கைச் சேர்ந்தவர். செய்யுள்கள் ஒவ்வொன்றிலும் சிவபெருமானின் திருவிளையாடல்களையும் காப்பியங்களின் சாராம்சங்களையும் புகுத்தித் தானும் பரவசமடைந்து படிப்பவர்களையும் பரவசமடையச் செய்ய முயன்றுள்ளார். சேர்.கந்தையா வைத்தியநாதன், பேராசிரியர் க.ச.அருள்நந்தி ஆகியோர் முறையே முகவுரையும் சிறப்புப் பாயிரமும் வழங்கியுள்ளனர். நூலாசிரியர் கல்வித்துறையில் ஆசிரியராகப் பணியாற்றியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2521).

11162

யாழ்ப்பாணப் பெட்டகம்: தொகுதி 2: வணக்கஸ்தலங்கள். மார்க்கண்டு அருள்சந்திரன். யாழ்ப்பாணம்:காவேரிக் கலாமன்றம், வன்னி நம்பிக்கை நிதியம், 1வது பதிப்பு, டிசம்பர் 2016. (யாழ்ப்பாணம்: அன்ரா பிரின்டர்ஸ்).

xiv, 186 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 2000., அளவு: 24.5x17.5 சமீ., ISBN: 978-955-41403-2-5.

கிளிநொச்சி மாவட்ட கலாசார அலுவலராகப் பணியாற்றும் மா.அருள்சந்திரன் அரங்கியல் துறையில் ஈடுபாடு கொண்டவர். யாழ்ப்பாணப் பண்பாட்டின் அடித்தளமாக இயங்கும் வணக்கஸ்தலங்களின் தகவல்களைக் கொண்ட ஆவணமாக இந்நூல் தொகுக்கப் பெற்றுள்ளது. விநாயகர் கோயில்கள், அம்மன் கோயில்கள், சிவன் கோயில்கள், முருகன் கோயில்கள், வைஷ்ணவ கோயில்கள், நாகதம்பிரான் கோயில்கள், சிறுதெய்வ கோயில்கள், கத்தோலிக்க தேவாலயங்கள், அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபைகள், மெதடிஸ்த திருச்சபைகள், இலங்கை திருச்சபைகள், விகாரைகள், பள்ளிவாசல்கள், சமாதிக் கோயில்கள், ஆகிய தலைப்புகளில் வணக்கஸ்தலங்கள் பற்றிய சுருக்க வரலாறு புகைப் படங்களுடன் இந்நூலில் தரப்பட்டுள்ளன.

11163

வவுனியா-இயங்கராவூர்பதி ஸ்ரீ விக்னேஸ்வரர் கண்ணகை அம்பிகை, வீரபத்திரக் கடவுள் நரசிங்கமூர்த்தி ஆலய வரலாறு. ப.சதாசிவம் (ஆசிரியர்), நா.சுந்தரானந்தம் (அருட் பாடல்கள்). வவுனியா: ஆலய பரிபாலன சபையினர், இயங்கராவூர், பூவரசங்குளம், 1வது பதிப்பு, 2013. (வவுனியா: வாணி கணினிப் பதிப்பகம், இல. 85, கந்தசாமி கோவில் வீதி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

வவுனியாவில் உள்ள இயங்கராவூர்பதி என்ற சிற்றூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ விக்னேஸ்வரர் கண்ணகை அம்பிகை, வீரபத்திரக் கடவுள் நரசிங்கமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த பொங்கலை முன்னிட்டு வெளிவந்துள்ள இம்மலரில் அவ்வாலயத்தின் வரலாறும், அதன் தல வரலாறும் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

11164

விவேக வாஹினி: இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமய பாடசாலையின் பொன்விழா மலர்: 1952-2002. *மலர் வெளியீட்டுக் குழு. கொழும்பு 6: இராமகிருஷ்ண மிஷன், 40, இராமகிருஷ்ண வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2002. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர். இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).*

(4), 75 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x17.5 சமீ.

இம்மலர் முன்னுரை (சுவாமி ஆத்மகனானந்தஜி), The Story of the Ramakrishna Mission Sunday Religious School (Swami Jivananandaji), *மகான்களின் உயர்வுக்கு அவர்களது பெற்றோரின் பங்களிப்பு (சுவாமி அஜராத்மானந்தஜி), பண்பாட்டுக் கல்வியில் மனதைப் பண்படுத்துவதின் முக்கியத்துவம் (ந.கிருஷ்ணமூர்த்தி), செவ்விய வாழ்வு நல்கும் சீரியதோர் கூடம் (செல்வி வ.கணபதிப்பிள்ளை), அறநெறிப் பாடசாலையில் எனது அனுபவங்கள் (செல்வி அ.காயத்திரி), கல்வி (சுவாமி விவேகானந்தர்), பண்பு (சுவாமி விவேகானந்தர்),* Reminiscences of an old boy of the Sunday Religious School (M.Sivakurunathan), *அறநெறிப் பாடசாலைகள் நெறிப்படுத்தும் உயர் விழுமியங்கள் (செல்வி கஜவதனி கந்தசாமி), மறக்கவொண்ணா நினைவலைகள் (பருத்தியூர் பாலவயிரவநாதன்), யோகக் கலை (செல்வன் பிரசாத் சண்முகநாதன்), மேலை நாகரீகத்தின் தாக்கம் (செல்வி சீரடி சு.தயாநிதி, செல்வி மோ.நிவேதிதா), சுவாமி விவேகானந்தர் காட்டிய சமுதாயக் கடமைகள் (செல்வி ரஜிலேகாஅம்பிகாவதி), அறநெறிப் பாடசாலை வாழ்க்கைக்கு வழிகாட்டும் (செல்வி கிருத்திகா சண்முகநாதன்), ஒன்றே குலம் (செல்வி சத்தியா வாமதேவன்), ஒருவனே தேவன் (செல்வி தர்ஷிகா தாமோதரம்) ஆகிய படைப்பாக்கங்களையும், மாணவர்கள் சேமித்து வழங்கிய பண விபரம், பொன்விழா போட்டிகளின் முடிவுகள், கண்காட்சி பற்றி பொதுமக்களின் கருத்துக்கள் சில, பொன்விழா ஆண்டு செயற்றிட்ட அறிக்கை ஆகியனவும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39205).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11165

ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம்: ஆன்மஞான விழா சிறப்புமலர் 1981. மலர்க்குழு. கொழும்பு: ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம், 4. சம்னர் பிளேஸ், 1வது பதிப்பு, 1981. (கொழும்பு 12: கலா பிரின்டர்ஸ்).

44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

வாழும் சுடர் (கி.வா.ஜகந்நாதன்), திருவருளும் குருவருளும் (தங்கம்மா அப்பாக்குட்டி), ஞானானந்தர் அருள்வாக்கு (வசந்தி, தபோவனம்), குரு சக சீடன் சமன் உலகம் (பித்துக்குளி முருகதாஸ்), Bhagwan Sri Gnananandagiri: a Living God on earth, திருவடி நிழல்- செய்யுள் (மீனாட்சி பொன்னுத்துரை), நான் அறிந்த தவத்திரு குருஜி ஸ்ரீ சுவாமி ஹரிதாஸ்கிரி (துகாராம்), ஞானானந்தமும் பிரதித்வனியும் (காந்தி ஆச்சிரமம் கிருஷ்ணன்) ஆகிய ஆன்மீகக் கட்டுரைகளின் தொகுப்பாக ஆன்ம ஞான விழா சிறப்புமலர் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13695).

11166

ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம்: சிறப்புமலர் 1978. பி.கிருஷ்ணசாமி (தொகுப்பாசிரியர்). கொழும்பு: ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம், 4. சம்னர் பிளேஸ், 1வது பதிப்பு, 1978. (கொழும்பு 12: சீ.என்.பீ. அச்சகம்).

130 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

சற்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள் ஜெயந்தி விழா 18.1.1978 அன்று புதன்கிழமை, கொழும்பு 4, புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற வேளை வெளியிடப்பட்ட சிறப்பு மலர். ஆன்மீகக் கட்டுரைகள், மற்றும் பல்வேறு சமாஜச் செய்திகளையும் உள்ளடக்கி வெளிவந்துள்ளது. சமாஜத்தின் ஸ்தாபக போஷகராக ஸ்ரீ சுவாமி ஹரிதாஸ் கிரி அவர்கள் இயங்குகின்றார். தெய்வீகப் பிரச்சாரங்கள், மாணவர் களையும் இளைஞர்களையும் ஆன்மீகப் பணிகளில் ஊக்குவித்தல், மருத்துவ உதவி வழங்கல், அநாதை ஆச்சிரமங்களை அமைத்துப் பராமரித்தல், சமூக தெய்வீக ஆன்மீகத் தொண்டுகள் செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்தச் சமாஜம் இயங்குகின்றது. இம்மலரில் ஞானமலை (கி.வா.ஜ), ஸ்ரீ சற்குரு மகிமை (ந.பிச்சமணி ஐயர்), தமிழ் வாழ் பழநி (புத்தனேரி ரா.நடராசன்), குஹ தத்துவம் (ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் ஞானானந்தகிரி சுவாமிகள்), சுயநலம் வாழ்க (பண்டிதர் சி.கணபதிப்பிள்ளை), எம் குருதேவர் (ஸ்வாமி ஹரிதாஸ்), கண்ணன் சொன்னதென்ன கீதையிலே, அருட்சுவை (கி.ஆ.பெ.விசுவநாதம்), ஓம் நமோ நாராயணாய, ஹரிநாமம், தோத்திரப் பிரியன் (சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி), ஸ்ரீ ஸத்குரு ஞானானந்த தசகம், THE BEACON-LIGHT AT THE THAPOVANAM (V.Sivasubramaniam), கருணையின் வடிவம், சமயம் வளர்த்த சமுதாயம் (நா.முத்தையா), காஞ்சி காமகோடி சுவாமிகளின் தெய்வத்தின் குரலிலிருந்து, இசையும் சமயமும் (திருமதி. பாலம் லக்ஷ்மணன்), இசை இன்பம் (யோகி சுத்தானந்த பாரதியார்), முருகனழகு (சுசீலா தெ.மூர்த்தி), இந்து சமய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ச்சி (வ.சிவராசலிங்கம்), நாட்டியத்தின் ஆன்மீக அடிப்படை (ஸ்ரீமதி ருக்மினி தேவி), ஆலயத்துள் நுழைவது போல (பாலசரஸ்வதி), இஸ்லாம் காட்டும் ஆத்மீக விடுதலை (K.M.P.முகம்மது காசிம்), A COMMONWEALTH OF GOD (S.Ranakrishnan), பழனி ஆண்டவர் அம்மானை (ரா.முருகேசு கவிராயர்), கீதை: ஒரு நடைமுறைத் தத்துவம் (நா.சுப்பிரமணியம்), உள்ளது ஒன்றே (பிரதிஷ்ட பூஷணம் நயினை சிவஸ்ரீ ஐ.கைலாசாநாதக் குருக்கள்), என் உள்ளத்தே எழுகின்ற ஞாயிறே போன்று (திருமதி இ.ஸ்ரீஸ்கந்தராஜா சிவயோகம்), பழனிக்குப் புதிய அழகு (கவிஞர் கண்ணதாசன்), பணிவு (சிவஞானவாரிதி கு.குருசாமி), சரணாகதித் தத்துவம் (கே.வி.எஸ்.வாஸ்), பாத மஹிமை (ஸ்வாமி பாத ஸேவாநந்தா), கந்தவேள் கருணை - திரு அருட்பா, திருப்புகழ் சிறப்பு (சே.த.இராமலிங்கம் பிள்ளை), அருள்வாய் முருகா அருள்வாயே (சௌந்தரா கைலாசம்), ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம் 1977 வரவு செலவு கணக்கு விபரம் ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13696).

11167

ஸ்ரீ ராமகான சபா: இலங்கை பிராமணர் சங்கம் 1939-2014: பவள விழா மலர். ஞானலக்ஷ்மி ஞானசேகர ஐயர் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: ஸ்ரீ ராம கான சபா, இல.57, விவேகானந்தா வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2014. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xxxiv, 116 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.

1939இல் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ ராம கான சபா இலங்கை பிராமணர் சங்கத்தின் 75ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் வகையில் வெளியிட்டுள்ள சிறப்பு மலர் இதுவாகும். நான்கு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலின் முதலாம் இயல் ஆசியுரைகளையும், இரண்டாம் இயல் தத்துவம்-வழிபாடு பற்றிய 15 கட்டுரைகளையும் உள்ளடக்கியதாகவுள்ளது. மூன்றாம் இயலில் ஜோ.சிவராமசர்மா எழுதிய ஈழத்துப் பிராமணர் வரலாறு பற்றிய வரலாற்று ஆவணமும், நான்காம் இயலில் வாழ்நாள் சாதனையாளர் பற்றிய தகவல்களும் இடம்பெற்றுள்ளன. இறுதியில் சிவானந்த விஜயம், இந்துக் கலைக்களஞ்சியம் ஆகிய வெளியீடுகளிலிருந்து சில தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இம்மலரின் பிரதான பகுதியாகிய இரண்டாம் இயலில் உள்ள கட்டுரைகள் உபாகர்மா (பிரம்மஸ்ரீ க.ஆனந்தகுமாரக் குருக்கள்), இலங்கையின் இந்து மதத்தில் விஷ்ணு வழிபாடு (சிவஸ்ரீ கி.சோமசுந்தரக் குருக்கள்), முகூர்த்த நிர்ணயம் (பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வர சர்மா), வேத மந்திரங்களுக்காக உருவான சமஸ்கிருத மொழியின் சிறப்பு (சிவஸ்ரீ பாலரவிசங்கர் சிவாசாரியார்), தர்ப்பை (சிவஸ்ரீ கருணாகர சுரேஷ்வரக் குருக்கள்), வேதத்தில் ஆயுர்வேதம் (டாக்டர் ஜெ.சுபாஜனனி), பீஜாஷரம் (பிரம்மஸ்ரீ தி.கி.சீதாராம சாஸ்திரிகள்), எம்மொழியில் அர்ச்சனை? (சுவாமி சித்பவானந்தர்), கூஷ்மாண்ட ஹோமம்: வேதம் கூறும் ஒரே ஹோமம் (ஸ்ரீ சர்மா சாஸ்திரிகள்), சமயம் கடந்த கம்பன் (திருமதி வசந்தா வைத்தியநாதன்), சைவசமய மரபில் சிவாகமங்களின் சிறப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பொது நோக்கு (கலாநிதி மஹேஸ்வரக் குருக்கள் பாலகைலாசநாத சர்மா), இன்றைய தகவல் உலகுடன் இணைந்து வாழும் மொழியாக சம்ஸ்கிருதம்: ஓர் ஆய்வு (நவநீதகிருஷ்ணன்), வைஷ்ணவ ஆகமங்கள்- ஒருநோக்கு (பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்), நித்யகர்மானுஷ்டானம் (டாக்டர் டீ.எஸ்.சண்முக சிவாச்சாரியார்), சடங்குகள்-சம்ஸ்காரங்கள் (திருமதி ஞானலக்ஷ்மி ஞானசேகர ஐயர்) ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன.

294.5(21) இந்து சமய ஆண்டிதழ்கள்

11168

இந்து தருமம் 1959-1960. ஞானா சிவசுப்பிரமணியம், சொ.கணேசநாதன் (இதழாசிரியர்கள்). பேராதனை: இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1960. (யாழ்ப்பாணம்: ஈழநாடு அச்சகம்).

(18), 48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

இந்து தர்மம் (யோகி சுத்தானந்த பாரதியார்), ஆசிரியர் எழுதுகோலிலிருந்து, அறம் (சைவப்புலவர் த.குமாரசாமிப்பிள்ளை), யாஅம் இரப்பவை (பண்டிதர் கா.பொ.இரத்தினம்), நினைவு நல்லது வேண்டும் (சி.தில்லைநாதன்), இலங்கையில் இந்து சமயம் (குல சபாநாதன்), எம்பெருமான் தூது செல்லாயோ?, மாணிக்கவாசகரின் ஆத்மீக யாத்திரை (ச.அம்பிகைபாகன்), சகலகலாவல்லி (ராஜபாரதி), மருதம் (பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை), பத்தி (ஜெ. செந்தில்நாதன்), சைவத்தின் இரு கண்கள் (அருள்), ஆதிகால மனிதனும் அவன் கண்ட சமயமும் (பண்டிதை பத்மாசனி அம்மாள் இராசேந்திரம்), மாணிக்கவாசகர் ஒரு வழிகாட்டி, உதிர்ந்த மலர், பூசலார் புதுமைக் கோயில் (ஆ.கந்தையா) ஆகிய 16 முக்கிய ஆக்கங்களுடன் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தின் ஆண்டிதழாக இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45465).

11169

இந்து தருமம் 1990-1991. மு.ரவி (இதழாசிரியர்). பேராதனை: இந்து மாணவர் சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1991. (கண்டி: செனித் அச்சகம், 192, கொட்டுக்கொடல்ல வீதி).

xii, 116 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

இம்மலரில் வழமையான ஆசிச் செய்திகளுடன் கிருஷ்ண வழிபாடு (சி. தில்லைநாதன்), ஈழமும் மரவணக்கமும் (சி.க.சிற்றம்பலம்), ஒரு பொம்மலாட்டம் நடக்கிறது (வே.சிவகுமார்), இலக்கியமும் இறைபுகழும் (துரை மனோகரன்), சைவசித்தாந்தம் பற்றிய சில அறிமுகக் குறிப்புகள் (அ.சிவராஜா), மத சுதந்திரம் (சு.சத்தியகீர்த்தி), God in Hinduism where do we stand? (T.Kugarajah), இந்துமத நிலையாமைக் கோட்பாடு (க.அருணாசலம்), வாழ்வெனும் பெருவெளி (க. அருள்நந்தி), புருடார்த்தங்கள் (பா.சோதிமலர்), தேடலும் பெறலும் (சி. கருணானந்தராஜா), இலங்கையில் இந்துப் பண்பாடும் சேர். பொன். இராமநாதனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப.கோபாலகிருஷ்ணன்), இந்துக்களின் விக்கிரக வழிபாடு (சிவராசா சுரேஷ்), அன்பே சிவம் (பா.நித்தியானந்தக் குருக்கள்), மனமும் எண்ணமும் (க. கணேசராஜா), ஒருமுனைப்படுதலும் ஈடுபடுதலும் (மகேஸ்வரி அருட்செல்வம்), அமைதிவரம் தந்தெமை ஆட்கொள வருவாய் (ஜெயகௌரி முருகேசு), இந்து தர்மமும் அக்னிஹோத்ரமும் (அருந்ததி சங்கரதாஸ்), இதயக் கோயிலிலே எம் முருகன் (சந்திராதேவி கதிரவேற்பிள்ளை), யாழ்ப்பாணம் காரைதீவு தந்த இரு கண்மணிகள் (வை.கனகரத்தினம்), 1990/91 ஆண்டுக்கான இந்து மாணவர் சங்க செயற்குழுவின் ஆண்டறிக்கை, எண்ணுக ஏற்றபடி (கே.எஸ்.பிரபாகரன்), உனை நிதம் கும்பிடுதற்காய் குறிஞ்சிவேலா (க.பரமேஸ்வரன்) ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28331).

294.5(3) ஆலய சிறப்பு மலர்கள்

11170

அருள்மிகு பறாளை ஈசுரவிநாயகர் திருக்கோவில் திருக்குடமுழுக்கு மலர். மலர்க்குழு. சுழிபுரம்: அறங்காவலர் சபை, அருள்மிகு பறாளை ஈசுரவிநாயகர் திருக்கோவில், 1வது பதிப்பு, 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

32 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இற்றைக்கு சுமார் 500ஆண்டுகளுக்கு முன்னர் சுழிபுரம்வாழ் மருதநில மக்களுக்காக அரசன் கதிர்காமசேகரன் கட்டுவித்த கோவிலே பறாளை ஈசுரவிநாயகர் கோவிலாகும். தொடர்ந்து வந்த அரச பரம்பரையினரும் 1920 வரை ஆலயத்தை சிறப்பாக நிர்வகித்து வந்தனர். மன்னராட்சி முடிவுக்கு வந்த பின்னரும்கூட சுழிபுரம் வாழ் மக்கள் தம் விளைநெல்லின் ஒரு பங்கை மேற்படி கோவிலுக்குக் காணிக்கையாகச் செலுத்திவந்துள்ளனர். சேர்.பொன் இராமநாதன் அவர்கள் 1912இல் கோவில் சார்பில் பிரபு ஆறுமுகத்துக்கு வழங்கிய ஆலய கோமுகைக்கல் இன்றும் வரலாற்றுச் சிறப்புடன் அங்கு பேணப்படுகின்றது. இத்தகைய சிறப்புமிக்க ஆலயத்தின் திருக்குடமுழுக்கு விழா 2003இல் நடந்தேறியபோது இச்சிறு பிரசுரம் வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34953).

11171

இணுவில் திருவருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் 2009. மலர்க் குழு. இணுவில்: திருநெறிய தமிழ்மறைக் கழகம், 1வது பதிப்பு, பெப்ரவரி 2009. (கோண்டாவில்: அன்ரா பதிப்பகம், உப்புமடம் சந்தி).

xxiii, 294 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: ரூபா 500., அளவு: 27x19 சமீ.

இவ்வாலயமானது இற்றைக்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த பெருமைக்குரியது. யாழ்ப்பாண அரசின் சிம்மாசனப் பெயர்களில் ஒன்றான "பரராஜசேகரன்" என்னும் பெயர்தாங்கி நிற்கின்றது. 14,15ஆம் நூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்தை ஆரியச் சக்கரவர்த்திகள் ஆண்டுவந்தனர். பரராஜசேகர மன்னன் காலம் (1478-1519) வரையாகும். அவர்களில் பதினோராம் தலைமுறையில் வந்த பரராஜசேகர மன்னன் இவ்வாலயத்தைக் கட்டினான். இதனால் இவ்வாலயத்திற்குப் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் என்னும் திருநாமம் வழங்கப்பட்டு வருகின்றது. ஆலய உட்பிரகாரத்தில் மன்னனும் பிரதானிகளும் வழிபடும் காட்சி சிற்பமாகவும், ஓவியமாகவும் வரையப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து இணுவில் நான்காவது மைல் தூரத்தில் உள்ளது. இணுவில் ஓர் அழகிய கிராமம். இருபதுக்கும் மேற்பட்ட ஆலயங்கள் அழகு செய்ய நடுநாயகமாகப் பரராஜசேகரப்பெருமான் அருள்பாலிக்க சித்தர்களும், பக்தர்களும், கலைகளும், கலைஞர்களும், வாழ்ந்த/வாழுகின்ற திருவூராக விளங்குகின்றது. இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில் 2009இல் கும்பாபிஷேகம் கண்டவேளையில் உருவாக்கப்பட்ட இம்மலரில், 82 சைவ சமயப் படைப்புக்கள், பாமாலைகள் உள்ளடங்கலாக இடம்பெற்றுள்ளன.

11172

இணுவை சிவகாமியம்மை திருச்சப்பற வெள்ளோட்ட விழா சிறப்புமலர்.ம.கேதீஸ்வரன் (மலராசிரியர்). யாழ்ப்பாணம்: இணுவை சிவகாமி அருள்நெறி மன்றம், ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் தேவஸ்தானம், இணுவில், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1992. (யாழ்ப்பாணம்: அருண் பிரின்டர்ஸ், மின்சார நிலைய வீதி).

64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x17.5 சமீ.

இணுவை சிவகாமியம்மை திருச்சப்பற வெள்ளோட்ட விழாவையொட்டி வெளியிடப்பட்ட இம்மலர், இணுவை சிவகாமி அருள்நெறி மன்றத்தின் கலா மண்டபத்தில் 05.10.1992 அன்று வெளியிட்டுவைக்கப்பட்டது. ஆசியுரைகள், ஆன்மீகக் கட்டுரைகள் என்பவற்றை உள்ளடக்கிய மலர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13280).

11173

கலாசுரபி: வித்தக விநாயகர் ஆலய நூதனபிரதிஷ்டா மகாகும்பாபிஷேகச் சிறப்பு மலர். மலர்க்குழு. யாழ்ப்பாணம்: தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2003. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x13.5 சமீ.

கோப்பாய் பிரதேசத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி நிர்வாகத்தினரால் புனராவர்த்தனம் செய்விக்கப் பெற்ற வித்தக விநாயகர் ஆலயத்தின் நூதனபிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் 31.08.2003 அன்று நடந்தேறிய வேளையில் வெளியிடப்பெற்ற சிறப்பு மலர் இதுவாகும். பலானை கண்ணகிதேவி வந்தமர்ந்த காலத்தில் தற்போது கல்வியியற் கல்லூரி அமைந்துள்ள இடமும் கோயிலின் ஏனைய சூழலும் கண்ணகி வழிபாடு செய்வோர் வந்து தங்கிய இடங்களாக இருந்தனவென்றும், வழிபாட்டாளர் முடிமன்னர் வைரவரையும் விநாயகரையும் சேர்த்து இவ்விடத்தில் வழிபட்டதாகவும் ஒரு வரலாற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பினை ஆசிச் செய்தி வழங்கிய அருட்கவி சீ.விநாசித்தம்பி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34953).

11174

காரை ஒளி: காரைநகர் சிவன்கோவில்(ஈழத்துச் சிதம்பரம்) மகா கும்பாபிஷேக மலர் 1998. நா.பொன்னையா (ஆசிரியர்). கொழும்பு 13: காரை அபிவிருத்திச் சபை, 98, விவேகானந்தா மேடு, 1வது பதிப்பு, 1998. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(18), 31 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

இம்மலரில் கோபுரங்களின் தோற்றம், காரை அபிவிருத்திச் சபையின் காப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்களின் பட்டியல், காரை அபிவிருத்திச் சபையின் ஏடான காரைஒளி ஆசிரியர் நா.பொன்னையாவின் கருத்து, தலைவர் ச.ச.இராசரத்தினம் அவர்களின் ஆசிச் செய்தி, ஈழத்துச் சிதம்பரம் (புலவர் அ.திருநாவுக்கரசு), இறைவனை நினைவூட்டும் இராஜகோபுரம் (நா.பொன்னையா), சேருதும் அமளி (இ.ஜெயராஜ்), தில்லைத்தலம் போன்ற ஈழத்துச் சிதம்பரம் (எஸ்.ஆர்.எஸ். தேவதாசன்), மனிதப் பிறவியின் மாண்பும் அதன் குறிக்கோளும் (தி.மார்க்கண்டு), திருக்குறளும் தமிழ் மொழியும் (ஆ.தருமலிங்கம்), ஈழத்துச் சிதம்பர தல புராணம், ஆலய தரிசன விதிகள், நன்றியுரை ஆகிய தலைப்புகளில் விடயதானங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39171).

11175

காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் 1990. ப.கோபாலகிருஷ்ணன் (பிரதம ஆசிரியர்). காரைநகர்: திருப்பணிச் சபை, திக்கரை முருகமூர்த்தி ஆலயம், 1வது பதிப்பு, 1990. (யாழ்ப்பாணம்: சுடரொளி அச்சகம், 121/4, மானிப்பாய் வீதி).

(93) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

இம்மலரில் வழமையான ஆசிச் செய்திகளுடன், திருப்பணிச் சபையின் செயலாளர் அறிக்கை (வே.நடராசா), காரைநகர் திக்கரை முருகன் திருத்தல வரலாறு (வே. நடராசா), திக்கைத் திரிபந்தாதி (க.வைத்தீஸ்வரக் குருக்கள்), கும்பாபிஷேக மகத்துவம் (த.அம்பிகைபாகன்), கோபுர தரிசனம் கோடி புண்ணியம் (ப. கோபாலகிருஷ்ணன்), திருமுருகாற்றுப்படையும் அறுபடை வீடுகளும் (கனகசபாபதி நாகேஸ்வரன்), அருணகிரிநாதரும் திருப்புகழும் (வண்ணை ப.கணேசலிங்கம்), ஈழத்தில் கிறிஸ்தவத்திற்கு முன்னர் நிலவிய முருக வழிபாடு பற்றிய தொல்லியல் சான்றுகள் (சி.க.சிற்றம்பலம்), இலங்கையிலே பரத நாட்டியம் (வி.சிவசாமி), ஈழத்தில் முருக வழிபாடு (சிவ.மகாலிங்கம்), காரைநகர் திக்கரை முருகன் அந்தாதிக் கீர்த்தனைகள் (ந.வீரமணி ஐயர்), திருப்பொன்னூஞ்சல் (அளவையூர் சீ.வினாசித்தம்பி), தேவஸ்தான திருவிழா உபயகாரர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேக மண்டலாபிஷேக உபயகாரர்கள் எனப் பதினாறு தலைப்புகளில் இம்மலரின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10227).

11176

காரைநகர் மணற்காடு அருள்மிகு கும்பநாயகி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்: 2ம் நாள் உற்சவ விசேட மலர் 2003. கே.கே சுப்பிரமணியம் (பதிப்பாசிரியர்). காரைநகர்: கே.கே சுப்பிரமணியம், அறுகம்புலம், 1வது பதிப்பு, மார்ச் 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

காரைநகர் திருமணற்காடு அருள்மிகு கும்பநாயகி முத்துமாரியம்மன் தேவஸ்தானம், சுங்க இலாகாவில் பணிபுரிந்து பிரபலமாகிய சைவ சமய அபிமானியும் சமூக சேவையாளருமாகிய திருவாளர் கே.கே.சுப்பிரமணியம் அவர்களின் முன்னோர்களால் பல நுற்றாண்டுகளுக்கு முன்பிலிருந்து குலதெய்வமாகப் பூசிக்கப்பட்டும் பரிபாலிக்கப்பட்டும் வந்துள்ளது. இந்த அருள்மிகு முத்து மாரியம்மன் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறுகின்ற திருவிழாவில் இரண்டாம் நாள் மகோற்சவத்தை பெருவிழாவாக அன்னாரின் முன்னோர்களும் அவர்களின் உறவினர்களும் நடாத்திவந்துள்ளனர். முன்னோர்களின் மரபைப் பின்பற்றி இந்நாட்களில் திரு.சுப்பிரமணியம் அவர்களும், அவரின் குடும்பத்தினரும் உற்சவங்களை வெகு சிறப்பாகச் செய்கின்றனர். இம்மலர் அவ்வகையில் 19.03.2003 அன்று திருவிழாவின் போது வெளியிடப்பட்டுள்ளது. திருவிழாத் தகவல்களையும், ஆசியுரைகளையும், ஆன்மீகச் செய்திகளையும் உள்ளடக்கியதாக இம்மலர் தொகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31325).

11177

சிதம்பர சுப்பிரமணியன் பன்னீராண்டு நினைவு மலர். செ.தனபாலசிங்கன் (தொகுப்பாசிரியர்). உரும்பிராய்: சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் செயற்குழுவினர், 1வது பதிப்பு, 1964. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).

(16), 78 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

இம்மலரில், வாய்மூடிக்கொண்டிருக்கட்டும் (ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்), கூட்டு வழிபாட்டின் அவசியம் (குருதேவர் ஸ்ரீ சிவாநந்த மஹரிஷி), அந்தப் புண்ணியக்ஷேத்திரம் இந்த யாழ்ப்பாணமே (பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை), கலியுகம் வேண்டிநிற்பது (பேராசிரியர் ஆ.வி.மயில்வாகனம்), ஆண்டவனை எங்கே காணலாம் (கலாநிதி க.வேலாயுதபிள்ளை), மலாயா மக்கள் பேசுகிறார்கள் (நா.தம்பித்துரை), எல்லாம் அவன் திருவுள்ளம் (ந.திருஞானசம்பந்தன்), நம்பிக்கை (கரு-மாமுண்டி), அருணகிரியார் சமரசவாதி (கலைமகள் ஆசிரியர் கி.வா. ஜகந்நாதன்), அறிவுக்கு வந்திருக்கிறது பஞ்சம் (செ.தனபாலசிங்கன்) ஆகிய கட்டுரைகளையும் செயலாளர், மேற்பார்வையாளர், பொருளாளர் ஆகியோரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கைகளையும் உள்ளடக்கி இம்மலர் வெளிவந்திருக்கிறது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10757).

11178

திருவாதிரை மலர் 1964. க.சிற்றம்பலம், க.வைத்தீசுவரக் குருக்கள் (மலராசிரியர்கள்). காரைநகர்: ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானம், 1வது பதிப்பு, 1964. (சுன்னாகம்: கலாதேவி அச்சகம்).

xii, 75 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12 சமீ.

ஜோதிடத்தின்படியும், இந்துப் பஞ்சாங்கங்களின் படியும் ஒவ்வொரு நாளும் சந்திரன் 27 நட்சத்திரங்களுள் எந்த நட்சத்திரத்திற்கு அருகில் இருக்கிறதோ அதைப் பொறுத்து அந்தநாள் அந்த மாதத்தில் அந்த நட்சத்திரத்தினுடைய நாள் ஆகும். மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திர நாள் சிவனை வணங்குபவர்களுக்கும் சிவன்கோவில்களிலும் ஒரு முக்கியமான பண்டிகை நாள். தில்லையில் திருவாதிரையில் தான் சிவபெருமான் பிரபஞ்ச நடனமாடி பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்ற இரு முனிவருக்கும் மற்றும் தேவர்களுக்கும் தரிசனம் கொடுத்தார் என்று புராணங்கள் சொல்கின்றன. தில்லையில் திருவாதிரை விழாவை 10-நாள் விழாவாகவே கொண்டாடுவார்கள். இவ்விழாவுக்கு ஆருத்ரா தரிசன விழா எனப்பெயர். ஆருத்ரா என்பது ஆர்த்ரா (ஸ்ரீ ஆதிரை) என்ற வடமொழிச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச்சொல். ஆருத்ரா தரிசனத்தன்று ஆயிரக்கணக்கான அன்பர்களும் சிவனடியார்களும் தில்லையில் குழுமியிருந்துஆண்டவனை வணங்குவர். அன்று தில்லை ஈசனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்துவைத்து பூஜைகள் செய்வர். திருவாரூரில் நடக்கும் ஆருத்ரா தரிசனவிழா தேவாரத்தில் பாடப்பட்டிருக்கிறது. திருமயிலையில் நடக்கும் ஆருத்ரா தரிசன விழா திருஞான சம்பந்தருடைய பூம்பாவைப் பதிகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதிரைத் திருவிழா சங்கத் தமிழர்களால் சிவனுடைய நட்சத்திரமாகக் கொண்டாடப்பட்டதை பரிபாடல் (71-78) பாடுகிறது. இத்தகைய சிறப்புமிக்க விழாவை ஈழத்துச் சிதம்பரமான காரைநகர் சிவன் கோவிலில் 1964 மார்கழியில் கொண்டாடிய வேளை விநியோகிக்கப்பட்ட மலர் இது. ச.கணபதீஸ்வரக் குருக்கள் (திருவூடல்), சி.சுப்பிரமணிய தேசிகர் (ஆதிரை விழாவும் அம்பாஆடலும்), க.இராமச்சந்திரன் (உயிர் நோயை அகற்றும் திருவாசகத் தேன்), மார்கழித் திருவாதிரை, சு. அருளம்பலவனார் (திருக்கோவையார்த் தலங்கள்), மு.கந்தையா (கண்களிரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதா?ஆகுமா?), புலவர் பாண்டியனார் (வாதவூரர் வரலாற்றுக் குறிப்பு), தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் (மணிவாசகர் கண்ட தில்லை), கி.வா.ஜகந்நாதன்(வானமும் வையமும்) ஆகிய ஒன்பது தமிழறிஞர்களின் கட்டுரைகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4371).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11179

புங்குடுதீவு அருள்மிகு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயம் மகா கும்பாபிஷேக மலர் 30.03.2005. தம்பிஐயா தேவதாஸ் (பதிப்பாசிரியர்). புங்குடுதீவு: மலர்க் குழு, ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், 1வது பதிப்பு, மார்ச் 2005. (கொழும்பு 13: சன்பிரின்டெக், 44 ஏ, கதிரேசன் வீதி).

(8), 136 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.

30.03.2005 அன்று இடம்பெற்ற கும்பாபிஷேக நிகழ்வின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். இம்மலரின் உள்ளடக்கம் கட்டுரைப் பகுதி, திருப்பணியாளர்கள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கட்டுரைப் பிரிவில் இராஜராஜேஸ்வரி அம்பாள் மேல் எழுந்த திருவூஞ்சல் (சி.ஆறுமுகம்), புங்குடுதீவு அருள்மிகு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய வரலாறு (சின்னத்தம்பி கோபாலபிள்ளை), புங்குடுதீவுக் கோயில்களும் பண்பாடும்: ஓர் வரலாற்றுக் கண்ணோட்டம் (வி.சிவசாமி), புங்குடுதீவு என்ற பெயர் எப்படி வந்தது (தம்பிஐயா தேவதாஸ்), தீவகம்- வரலாற்று நோக்கு (கா.குகபாலன்), சக்தி வழிபாடும் சாக்த தந்திரங்களும் (மா.வேதநாதன்), அறிவே தெய்வம் (முருக. வே.பரமநாதன்), மன்னார் முதல் மாத்தறை வரையில் பழம்பெரும் ஈஸ்வரங்கள் (த.மனோகரன்), மனம் போல வாழ்வு (தங்கம்மா அப்பாக்குட்டி), இலங்கையில் சிறுதெய்வ வழிபாடு பெறும் முக்கியத்துவம் (கி.புண்ணியமூர்த்தி), தெய்வீக வாழ்வு (நா.சோமாஸ்கந்தக் குருக்கள்), கலைகள் (த.இலங்கேஸ்வரன்), தெய்வீகத் திருத்தலங்கள் (கனகசபாபதி நாகேஸ்வரன்), இலங்கையில் இந்து சமயம் (கி. லக்ஷ்மண ஐயர்), கண்ணகியம்மன் கதை (நாகமணி சண்முகம்), கடவுளைக் காண்போமா? (ஈழத்து சிவாநந்தன்), மலர் மலர (மு.கனகசபாபதி), தேர் ஓடியது (சி.முத்துக்குமாரு) ஆகிய 18 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. திருப்பணியாளர்கள் என்ற பிரிவில் திருவிழா உபயகாரர்கள், தர்மகர்த்தாக்கள், பழைய நிர்வாக சபையினர், நடப்புக்கால நிர்வாக சபையினர், கும்பாபிஷேக புனர்நிர்மாண செயலணிக் குழு, 2005ஆம் ஆண்டிற்கான கும்பாபிஷேக ஒழுங்குபடுத்தல் குழு, வெளிநாட்டில் வாழும் ஆலய கும்பாபிஷேகப் பிரதிநிதிகள், Committee Members of the Paripaalana Sabai and Trustees ஆகிய 8 பட்டியல்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37405, 36243).

11180

புங்குடுதீவு கிழக்கு, இத்தியடிப்புலம் அருள்மிகு நாச்சிமார் தேவஸ்தான புனராவர்த்தன மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர் 2010. மலர்க்குழு. புங்குடுதீவு: இத்தியடிப்புலம் அருள்மிகு நாச்சிமார் தேவஸ்தானம், புங்குடுதீவு கிழக்கு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2011. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டேர்ஸ், இல. 424, காங்கேசன்துறை வீதி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xxxii, 163 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 250., அளவு: 24.5x18.5 சமீ.

23.08.2010இல் நடைபெற்ற கும்பாபிஷேக நிகழ்வின்போது வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். ஆசியுரைகள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றுடன், இத்தியடிப்புலம் நாச்சிமார் ஆலய வரலாறும் சக்தியின் பெருமையும், புங்குடுதீவில் நாச்சிமார் வழிபாடு, பிரதோஷ மகிமை, சிந்தனைத் துளிகள், தோத்திரப் பாமாலைகள், நிர்வாகசபை அங்கத்தினர் விபரம், கணக்கறிக்கை 2010 ஆவணி தொடக்கம் 2011 புரட்டாதி வரை, நன்றியுரை ஆகிய பத்து விடயங்களை இம்மலர் உள்ளடக்குகின்றது.

11181

ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்: வெள்ளிவிழா மலர்: 1991-2016. மலர் வெளியீட்டுக் குழு. இலண்டன் W13 9AE: ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம், 5, சப்பல் வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2016. (இலண்டன்: ஆர். எஸ்.அச்சகம்).

112 பக்கம், புகைப்படங்கள், வண்ணப்படம், சிற்ப ஓவியங்கள், விலை: இலவசம், அளவு: 29.5 x 21 சமீ.

1991ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 10ம் திகதி உருவாக்கப்பட்ட மேற்படி ஆலயத்தின் 25 ஆண்டுக் கால வளர்ச்சியை மதிப்பீடு செய்வதாக இம்மலர் அமைந்துள்ளது. இம்மலரில் கோயிலின் வளர்ச்சிப்பாதை பதிவுக்குள்ளாக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக உழைத்த அடியார்களும் நன்றியுடன் நினைவு கூரப்பட்டுள்ளார்கள். புகலிடத் தமிழர்களின் இந்துசமய உணர்வு, பணி, பண்பாடு தொடர்பான சில கட்டுரைகளும், இந்து சமயம், கோயில்கள் தொடர்பான சிறுவர்களின் ஆக்கங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

11182

ஸ்ரீ சர்வார்த்த சித்திவிநாயகர் தேவஸ்தானம்: மகா கும்பாபிஷேக மலர் 1993. ஏ.எஸ்.குணசிங்கம் (மலராசிரியர்). கொழும்பு: ஸ்ரீசர்வார்த்த சித்திவிநாயகர் தேவஸ்தானம், 1வது பதிப்பு, டிசம்பர் 1993. (கொழும்பு 12: யுனைட்டெட் மேர்ச்சன்ட்ஸ் லிமிட்டெட், 71, பழைய சோனகத் தெரு).

(58) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: அன்பளிப்பு, அளவு: 25.5x18 சமீ.

கொழும்பு, ஸ்ரீசர்வார்த்த சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் 08.12.1993 அன்று நிகழ்ந்த கும்பாபிஷேக வைபவத்தின்போது வெளியிடப்பட்டசிறப்பு மலர். வழமையான ஆசிச்செய்திகள், விளம்பரங்களுடன், கும்பாபிஷேகம் காண்போம் வாரீர் (சோ.குஹானந்த சர்மா), சிவஞானவாரிதி, சைவசித்தாந்த காவலர் ஞானசிரோன்மணி (கு.குருஸ்வாமி), விநாயகர் வழிபாடு, சிவ வழிபாடு, விநாயகர் சஷ்டி விரதம் (பெருங்கதை விரதம்), கந்தவேளைத் துதிப்போர்க்கு வல்வினை போம் (இ.சிவகுருநாதன்), காளி அம்பாள் (ஈசானசிவ சி.குஞ்சிதபாதக் குருக்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய ஆக்கங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25205).

294.5(4) பக்தி இலக்கியங்கள்

11183

அபிராமி நவநீதம். காளிதாசன் (இயற்பெயர்: க.வீரகத்தி). கரவெட்டி: க.வீரகத்தி, வாணி கலைக் கழகம், 2வது பதிப்பு, மார்ச் 1995, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1994. (கரவெட்டி: தமிழ்ப் பூங்கா அச்சகம், நெல்லியடி).

26 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

பிரபஞ்ச ஜோதி அபிராமியின் ஒளி மண்டலத்திற்குள் புகுந்து விடுவதற்குத் துடிக்கும் ஒரு அபிராமிப் பக்தனின் கவிதைகள் இவை. ஜோன் பன்யனின் சுவர்க்கப் பயணியினது தலைச் சுமையிலும் தன் சுமை அதிகம் என்று வருந்தும் இக்கவிஞர், அந்நெரிசலால் நின்றுவிடும் நிலையில் நிற்கும் தரிப்பிலிருந்து தன் வாழ்வின் பயணிப்புப் பாதையைத் திரும்பிப் பார்க்கிறார். சாதனைச்சுவடுகள் தூர்ந்திருப்பதைக் காண்கிறார். ஐந்தாறு வீதமான வேதனைச் சுவடுகள் துலாம்பரமாகத் தென்படுகின்றன. அவற்றில் ஒன்று கவிஞரை பெரிதும் நெருடுகின்றது. துயரமும் துன்பமும் அலைமோதுகின்றன. அந்த வேதனைக்கான காரணமும் தானே என உணர்கிறார். அந்த வேதனை தன்னுடன் நில்லாது அப்பாலும் சென்றடைந்து விட்டதை உணர்கிறார். அப்பாலும் சென்றடைந்த ஜீவனை அன்னை அபிராமியிடம் பாதுகாப்புச் செய்தும் விடுகின்றார். சிறகுகள் ஒடிந்துவிட்ட சடாயுவாய் நின்று அன்னை அபிராமியை வேண்டிப் பாடுகின்றார். பண்டிதர் க. வீரகத்தி வடமாகாணத்தில் கரவெட்டி கிழக்கில் வசித்தவர். தமிழ் இலக்கண ஆசிரியர். கவீ என்ற புனைபெயரில் மரபுக் கவிதைகள் எழுதியவர். தங்கக் கடையல் என்பது அவருடைய முதலாவது கவிதை நூல். கணியன் பூங்குன்றனார் செப்பிய யாதும் ஊரே யாவரும் கேளிர் என்கிற ஓர் உலகத்தினை, இன வாதங்களினால் சிதிலமடைந்து கொண்டிருக்கும் இலங்கையில் வாழ்ந்துகொண்டே, சாத்தியமாக்கலாம் என்ற எண்ணத்தில் "ஒருலகம்" (One World Movement) என்ற இயக்கத்தினை நடத்தியவர். தனது வாணி கலைக் கழகம் என்ற கல்விச்சாலை ஊடாக ஏராளமான மாணவர்க்கு, தமிழ் இலக்கியமும், இலக்கணமும் போதித்தவர். 1968ல் திருநெல்வேலி சைவ சித்தாந்தக் கழகம் நடாத்திய திருவள்ளுவர் தினப்போட்டியில் "பரி உரையில் இலக்கணக் குறிப்புகள்" எனும் இவரது கட்டுரை பரிசு பெற்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14496).

11184

அல்வாய் அரசடி விநாயகர் பக்திப் பாடல்கள். சுந்தரம்பிள்ளை திருப்பரங்குன்றன். லண்டன்: ஸ்லீ வெளியீடு, 607, Whitton Avenue West, Greenford, Middlesex, UB6 0DZ, 1வது பதிப்பு, ஆனி 2015. (லண்டன்: அச்சக விபரம் தரப்படவில்லை).

14 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்வாய் அரசடி விநாயகர் ஆலயத்தின் மூலமூர்த்தியின் பேரிற் பாடப்பெற்ற ஒன்பது பக்திப் பாடல்களின் தொகுப்பு. நூலாசிரியர், மூத்த கவிஞர் அமரர் காரை சுந்தரம்பிள்ளை அவர்களின் மகனாவார்.

11185

அறுபது சில்லரைக் கோர்வை. சரஸ்வதி புத்தகசாலை. கொழும்பு: சரஸ்வதி புத்தகசாலை, 175, செட்டியார் தெரு, 4வது பதிப்பு, 1964. (கொழும்பு: மெய்கண்டான் அச்சியந்திரசாலை, 161, செட்டியார் தெரு).

267 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 13.5x11 சமீ.

கையடக்கப் பிரசுரமாக வெளிவந்திருக்கும் இந்நூலில், நடராஜப் பத்து, பரமசிவன் தோத்திரம், அவனாசிப் பத்து, அருணாசலேசுரர் பதிகம், உண்ணாமுலையம்மன் பதிகம், வேமனானந்த சுவாமி பதிகம், ஸ்ரீராமர் தோத்திரம், ஸ்ரீராமர் பதிகம், திருநாமப் பதிகம், கெருடப்பத்து, கஜேந்திரமோட்ச கீர்த்தனை, திருநீற்றுப் பதிகம், சுப்பிரமணியர் விருத்தம், ஆறுமுக சுவாமி விருத்தம், மேற்படி ஆசிரிய விருத்தம், தணிகாசலர் பஞ்சரத்தினம், ஆறுமுக சுவாமி பஞ்சரத்தினம், சண்முகக் கடவுள் பஞ்சரத்தினம், வடிவுடையம்மன் ஆசிரிய விருத்தம், காமாட்சியம்மன் விருத்தம், அங்காளம்மன் பதிகம், துரோபதையம்மன் விருத்தம், சூரிய நமஸ்காரப் பதிகம், அழுகணிச் சித்தர் பாடல், குதம்பைச் சித்தர் பாடல், சனிபகவான் தோத்திரம், நவக்கிரக தோத்திரம், திருச்செந்தூர் பதிகம், பழனிவேலவர் ஆசிரிய விருத்தம், கதிர்காமவேலவர் செந்திமாலை, கதிர்காம ஆசிரிய விருத்தம், ஸ்ரீ பஞ்சாதீஸ்வரர் கீர்த்தனை, முருகன் புகழ், மாதப் பதிகம், வாரப் பதிகம், கும்பிடு பத்து, தரிசனைப் பத்து, கழுகுமலைப் பத்து, தோத்திரப் பத்து, கந்தர் சரணப் பத்து, கதிரேசப் பத்து, பஞ்சரத்தினத் திருப்புகழ், ஸ்ரீராமர் தாலாட்டு, ஸ்ரீ ரங்கநாயகர் திரு ஊசல், வேல் பாட்டு, கோலாட்டப் பாட்டு, கோலாட்டக் கும்மி, வடபழநி ஆண்டவர் அருள்வேட்டல், திருமுருகாற்றுப்படை தோத்திரம், சரவணப் பத்து, ஸ்ரீபால தண்டாயுதபாணி விருத்தம், பழநிவேலவர்செந்தி மாலை, கதிர்காம ஆசிரிய விருத்தம், பழநிவேலவர் பேரில் விருத்தம், பழனிவேலவர் மாலை, தணிகைமயில் பத்து, தணிகைசேவற் பத்து, தணிகை வேல் பத்து, தணிகைசீர்பாத பத்து, தணிகை மலைப் பத்து ஆகிய பக்திப் பாமாலைகளின் தொகுப்பாக இக்கையடக்க நூல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 959).

11186

இணுவில் அரசோலை கற்பனை விநாயகர் திருப்பொன்னூஞ்சல். வை.க.சிற்றம்பலம். இணுவில்: முருகேசு வேலாயுதபிள்ளை, விநாயகர்பதி, மஞ்சத்தடி, 1வது பதிப்பு, தை 1990. (அளவெட்டி: ஸ்ரீமகள் பதிப்பகம்).

10 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தின் இணுவையம்பதியின் கிழக்கேயமைந்த அரசோலைப் பகுதியில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் கறபனை விநாயகர் (அரசோலைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பக விநாயகர் எனவும் அழைப்பர்) பேரில் பாடப்பெற்ற திருப்பொன்னூஞ்சல் இதுவாகும். முதுபெரும்புலவர் வை.க.சிற்றம்பலம் இணுவில் கிராமத்தில் 1914ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16ம் திகதி பிறந்தவர். இணுவிலில் பிறந்தாலும் அளவெட்டி மண்ணில் மணம் முடித்து அளவெட்டியிலேயே நிரந்தரமாக வாழ்ந்துவந்தவர். புலவர் அவர்களுக்கு 2002ம் ஆண்டு இலங்கை அரசின் இந்து கலாச்சாரத் திணைக்களம் கலாபூசணம் விருது வழங்கி கௌரவித்தது. இவர் தனது 101ஆவது வயதில் 02.11.2015 இல் அமரத்துவமடைந்தார். அவரது வாழ்நாட்காலத்தின் பின்னரைப் பருவத்தில் பல்வேறு பக்தி இலக்கியங்களையும் வடித்துத் தமிழுக்குப் பெருமைசேர்த்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12666).

11187

இணுவில் சிவகாமியம்மன் பேரில் பாடிய இடர்களை பதிகமும் திரு வருக்கமாலையும். வை.க.சிற்றம்பலம். இணுவில்: புலவர் வை.க.சிற்றம்பலம், 1வது பதிப்பு, 1997. (இணுவில்: சாயி அச்சகம்).

12 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 20.5x13.5 சமீ.

இணுவில் சிவகாமியம்மன் பேரில் புலவர் வை.க.சிற்றம்பலம் அவர்கள் பாடிய பக்தி இலக்கியங்களான இடர்களை பதிகமும் திரு வருக்கமாலையும் சிறு நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளன. முதுபெரும்புலவர் வை. க. சிற்றம்பலம் இணுவில் கிராமத்தில் 1914ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16ம் திகதி பிறந்தவர். இணுவிலில் பிறந்தாலும் அளவெட்டி மண்ணில் மணம் முடித்து அளவெட்டியிலேயே நிரந்தரமாக வாழ்ந்தவர். ஆரம்பத்தில் தமிழ் ஆசிரியராக இவர் கடமை புரிந்தார். தமிழ்மொழியில் திறமை வாய்ந்தவராக இருந்த போதும் அவர் செய்யுள் இயற்றும் வன்மையுடையார் என்பது அவரது முதுமைக்காலம் வரை இலைமறைகாயாகவே இருந்து வந்துள்ளது. ஓய்வுபெற்ற பின் சிற்றம்பலம் அவர்கள் செய்யுள் இலக்கணத்தையும் பாட்டியல் இலக்கணத்தையும் நன்கு கற்று செய்யுள் இயற்றலில் தீவிரமாக ஈடுபட்டார். ஓசைநயம், பொருள்நயம், இலக்கணநயம் அமைந்து இவரது செய்யுள்கள் சிறப்புற விளங்குகின்றன. இவர் செய்த சுவாமி விபுலானந்தர் நான்மணி மாலை மற்றும் நல்லூர் இரட்டை மணிமாலை என்பன கொழும்புத் தமிழ்ச் சங்கத்தாரின் முதற்பரிசினையும் இவருக்கு பெற்றுக்கொடுத்தது. இவர் பாடல்கள் தமிழறிவு குறைந்தவர்களுக்கும் இலகுவாக விளங்கும் தன்மை வாய்ந்தவை. புலவர் அவர்களுக்கு 2002ம் ஆண்டு இலங்கை இந்து கலாச்சார திணைக்களம் கலாபூசணம் விருது வழங்கி கௌரவித்தது. முதுபெரும்புலவர், கலாபூஷணம், புலவர்மணி, கவியோகி, மரபுக்கவிஞர் எனப் புகழ்பெற்ற புலவர் வை.க. சிற்றம்பலம் தனது 101 வயதில் 02.11.2015 இல் அமரத்துவமடைந்தார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16977).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11188

இணுவையம்பதி அருள்மிகு சிவகாமியம்மை திருவிரட்டைமணிமாலையும் திருப்பள்ளியெழுச்சியும். வை.க.சிற்றம்பலம். யாழ்ப்பாணம்: இணுவில் இந்து மகாசபை, இணுவில், 1வது பதிப்பு, 1992. (ஏழாலை: மஹாத்மா அச்சகம்).

14 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 11.5x13 சமீ.

யாழ்ப்பாணத்திலுள்ள இணுவிலில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயில்களிலே சிவகாமி அம்மன் கோயில் முக்கியமான ஒன்று. இது கிழக்கு இணுவில் பகுதியில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்து அரசர்களின் ஆட்சிக்காலத்தில் பிரபலம் பெற்றிருந்த ஆலயங்களில் இதுவும் ஒன்று. யாழ்ப்பாண அரசு அமைந்த தொடக்க காலத்தில், நாட்டின் பல பகுதிகளுக்குப் பொறுப்பாக இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட தலைவர்களில் ஒருவன் குடியேறிய பகுதியாக, இணுவில் குறிப்பிடப்படுகின்றது. இவன் தமிழ் நாட்டின் திருக்கோவிலூரைச் சேர்ந்த பேராயிரவன் என்று யாழ்ப்பாண வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இவன் சிதம்பரத்திலிருந்து சிவகாமியம்மை திருவுருவத்தை வரவழைத்துத் தான் வாழ்ந்த இடத்தில் இச்சிவகாமியம்மை ஆலயத்தை அமைத்தான் எனவும் அவ்விடம் அதனால் சிதம்பர வளவு என அழைக்கப்பட்டதெனவும் செவிவழிச் செய்திகள் சொல்கின்றன. இரட்டைமணிமாலை என்பது பிரபந்தம் எனப்படும் தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. மணிகளைக் கோர்ப்பது போல் வெண்பா, கட்டளைக் கலித்துறை என்னும் பாவகைகளால் அல்லது வெண்பா, விருத்தப்பா என்னும் பாவகைகளால் அமையும் இந்த இலக்கியவகை அந்தாதியாகவும் அமைந்திருக்கும். இப்பக்தி இலக்கியத்தின் ஆசிரியரான முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் இணுவில் கிராமத்தில் 1914ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16ம் திகதி பிறந்தவர். இணுவிலில் பிறந்தாலும் அளவெட்டி மண்ணில் மணம் முடித்து அளவெட்டியிலேயே நிரந்தரமாக வாழ்ந்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12886).

11189

இலங்கைக் கோயில் திருப்பதிகங்கள். சந்திரா நடராஜா. திருக்கோணமலை: சந்திரா நடராஜா, 1வது பதிப்பு, 1991. (வத்தளை: வத்தளை பிரின்டர்ஸ், 17/10, நீர்கொழும்பு வீதி).

(4), 75 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக்கொண்ட செல்வி சந்திரா நடராஜா ஆன்மீக ஈடுபாடும், சமய நம்பிக்கையும் கொண்டவர். இவர் இலங்கைத் திருக்கோயில்களின் பேரில் அவ்வப்போது இயற்றிய அருட்பாடல்களின் தொகுப்பு இது. பக்தியுணர்வு பீரிட்டெழும்போது அவற்றைச் சொற்கட்டுடனும் இசை மரபுடனும் வெளிப்படுத்தி நிற்கும் பக்திப்பாடல்களாக இவை அமைகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16653).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11190

ஈழத்துக் கருகம்பனையூர் அருள்மிகு நாக இராச இராசேஸ்வரி சதகம். க.வீரகத்தி. சென்னை 600002: காந்தளகம், 4, முதல் மாடி, 834 அண்ணா சாலை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1988. (சென்னை 17: வேளாங்கண்ணி அச்சகம்).

36 பக்கம், விலை: இந்திய ரூபா 5., அளவு: 24x14.5 சமீ.

இது யாழ்ப்பாணக் குடாநாட்டின் கீரிமலை நகுலேஸ்வரத்துக்கு அண்மையில் உள்ள கருகம்பனை கிராமத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு நாகராச இராஜேஸ்வரி ஆலயத்தின் மூலதெய்வத்தின்மேற் பாடப்பெற்ற சதகம். கோபுர ஈழத்துக் கரும்பனையூர் அருள்மிகு நாக இராச இராசேசுவரி கோயில், ஓம் சக்தி காப்பு, கருணைப் பொழிவு, மஞ்சளும் குங்குமமும், பதாம்புய மோகம், ஞானப் பூஞ்சோலை, விலை வைக்கிறியே, குடமுழுக்காடும் குதூகலம், சுய வேதனையிலும் ஒரு சுகம், வெண்சங்கே முழங்கு, புதிர் போல் மறைந்தாள், கோயில் அனைத்தும் வலம்வரும் கோயில், பின்னிணைப்பு, தத்துவ மத்திய பீடம், சுகாந்த காவியம், விளக்கக் குறிப்புகள் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பண்டிதர் க.வீரகத்தி இலங்கையின் வடக்கு மாகாணத்தில் கரவெட்டி கிழக்கில் வசித்தவர். தமிழ் இலக்கண ஆசிரியர். கவீ என்ற புனைபெயரில் மரபுக் கவிதைகள் எழுதியவர். தங்கக் கடையல் அவருடைய முதலாவது கவிதை நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24632).

11191

ஈழத்துச் செட்டிபாளையம் இ.வ.கணபதிப்பிள்ளைப் புலவரின் நூற்றிரட்டு முதலாம் பகுதி. இ.வ.கணபதிப்பிள்ளை (மூலம்), க.தா.செல்வராஜகோபால் (உரையாசிரியர்), அன்புமணி இரா.நாகலிங்கம் (பதிப்பாசிரியர்). கனடா: நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், தொரன்ரோ, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, ஆடி 1990. (கனடா: ஜீவா பதிப்பகம், றிப்ளக்ஸ் அச்சகம், 1108 Bay Street, Toronto, Ontario, M5S 2B3).

xxxviii, 1261 பக்கம், xii, விலை: கனேடிய டொலர் 10., அளவு: 21x13.5 சமீ.

செட்டிபாளையம் இ.வ.கணபதிப்பிள்ளைப் புலவர் செய்யுள்நடையில் எழுதிய கதிர்காம சதகம், மாணிக்க கங்கைக் காவியம், ஸ்ரீ சங்கமன் கண்டிப் பிள்ளையார் பதிகம் ஆகிய மூன்று நூல்களினதும் திரட்டு. செய்யுள்களுக்கான உரையை ஈழத்துப் பூராடனார் அமரர் க.தா. செல்வராஜகோபால் எழுதியுள்ளார். இவர் மூலநூலாசிரியரின் பரம்பரை வழிவந்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19223).

11192

எங்கள் கதிர்காமம். சி.சின்னையா. சாவகச்சேரி: ச.கை.செல்லையா, தலைவர், கச்சாய் தமிழிலக்கிய மன்றம், கச்சாய், 1வது பதிப்பு, 1962. (யாழ்ப்பாணம்: சுதந்திரநாத அச்சகம், திருநெல்வேலி).

62 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமம் சைவமக்களின் நிர்வாகத்திற்கு உட்பட்டுப் தமிழர்க்குரிய பண்பும்-கலாசாரமும் வளரவேண்டும் என்பதே கச்சாய்ப் புலவர் சின்னையாவின் ஆதங்கமாக உள்ளது. இன்று பௌத்தர்கள் கதிர்காமத்தை நிர்வகிக்கிறார்கள். அவர்கள் நிர்வாகத்தினால் பண்பாடுகளும் சமய கலாச்சாரங்களும் தவறடைந்து விட்டன என்று கவலையுறும் இக்கவிஞர் இத்தவறுகளை நேரில் கண்டும், பிறர் சொல்லக் கேட்டும் கதிர்காமக் கந்தனை எண்ணி உள்ளம் உருகிப் பாடுகின்றார். வரலாற்று வடிவமாகச் சாதாரண விருத்தங்களையும், துதி வடிவமாகச் சந்த விருத்தங்களையும் ஆக்கியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3031).

11193

ஏகாதசிப் புராணம். சுன்னாகம் வரதராச பண்டிதர் (மூலம்), ச.சுப்பிரமணிய சாஸ்திரிகள் (குறிப்புரை). பருத்தித்துறை: ச.சோமசுந்தர ஐயர், கலாநிதி யந்திரசாலை, 1வது பதிப்பு, 1924. (பருத்தித்துறை: கலாநிதி யந்திரசாலை).

40 பக்கம், விலை: 30 சதம், அளவு: 21x14 சமீ.

ஏகாதசி புராணம் ஏகாதசி விரத நிர்ணயத்தையும் மகிமையையும் அவ்விரதம் அனுஷ்டித்தோர் சரிதங்களையும் கூறுகிறது. உருக்குமாங்கதன், வீமன் ஆகியோர் சரிதங்களை இதிற் காணலாம். சிவ விரதங்களுட் சிறந்ததாகிய சிவராத்திரி விரதத்தைக் குறித்துப் புராணம் பாடியது போலவே வரதபண்டிதர் திருமால் விரதங்களுட் சிறந்ததாகிய எகாதசி விரதத்தைக் குறித்து இப்புராணத்தைப் பாடியுள்ளார். ஏகாதசி விரத மேன்மையை, "வடநூல் சொன்ன வழிகண்டு தண்டமிழால் வகுத்தல் செய்தான் வரதராச பண்டிதன்" என இதன் பாயிரச் செய்யுள் குறிப்பிடுகின்றது. இந்நூல் காப்புச் செய்யுள் ஒன்றினையும், கடவுள் வாழ்த்துப்பாக்கள் ஐந்தினையும், அவையடக்கச் செய்யுள் ஒன்றினையும், பாயிரச்செய்யுள் ஒன்றினையும், காலநிர்ணயச் சருக்கம், உருக்குமாங்கதச் சருக்கம், வீமேகாதசிச் சருக்கம் ஆகிய மூன்று சருக்கங்களிலுள்ள 258 பாடல்களை கொண்டு விளங்குகின்றது. கால நிர்ணயச் சருக்கத்திற், கருட புராணம், சூரிய சித்தாந்த புராணம், பாகவத புராணம், கைவர்த்த புராணம், ஆஞ்சனேய புராணம், விட்டுணு ரகசிய புராணம், பவிடிய புராணம், பதும புராணம், பிரம புராணம், காந்த புராணம், காளிகா புராணம், நாரத புராணம், வராக புராணம், வாயு புராணம், மற்ச புராணம், கூர்ம புராணம், ஆதியன ஏகாதசி விரத நிர்ணயத்துக் காதாரமாகக் கொள்ளப்பட்டனவெனக் கூறப்பட்டுள்ளது. இது வரதபண்டிதர் (1656-1716) செய்த நூலாகையால், இது 18ம் நூற்றாண்டுக்குரிய தென்று கொள்ளலாம். இதனை நா. கதிரவேற்பிள்ளை முதன் முதல் 1898இல் அச்சிட்டு வெளியிட்டார். பின்னர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் அரும்பதவுரையுடன் 1924இல் அச்சிட்டார். இந்நூல் அந்தப் பதிப்பாகும். பின்னாளில் இதனைத் தொடர்ந்து ச. சோமாஸ்கந்த ஐயர் 1947ம் ஆண்டிலும், ஆ. வேலுப்பிள்ளை உபாத்தியாயர் பதவுரை எழுதி 1958ம் ஆண்டிலும் பதிப்பித்தனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2455).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11194

ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி பேரில் திருவூஞ்சல். ஐயம்பிள்ளை பொன்னையா (மூலம்), சிற்றம்பலம் முருகவேள் (பதிப்பாசிரியர்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201 டாம் வீதி, 1வது பதிப்பு, 2003. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201 டாம் வீதி).

21 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

அருளானந்த சிவம் என்னும் ஏழாலை ஐயம்பிள்ளை பொன்னையா அவர்கள் சைவமும் செந்தமிழும் தழைத்தோங்கும் யாழ். ஏழாலையம்பதியில் ஏழு கோயில்களில் ஒன்றாக விளங்கி அருள்பாலிக்கும் ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் முருகமூர்த்தி சுவாமிகள் பேரில் பாடிய திருவூஞ்சல் இவை. அமரர் ஐயம்பிள்ளை பொன்னையா (1910.10.21- 1993.07.14) வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட நல்லாசிரியர். இவரது தந்தை ஐயம்பிள்ளை தாய் பொன்னாச்சிப்பிள்ளை. இவர் நாகேஸ்வரி வித்தியாசாலை, புங்குடுதீவு சண்முகநாதன் வித்தியாசாலை, நயினாதீவு கணேச வித்தியாசாலை போன்ற பாடசாலைகளில் ஆசிரியராகவும் யாழ் குருநாத சுவாமி வித்தியாசாலை, கரம்பொன் கிழக்கு சிவகுருநாத வித்தியாசாலை, வேலணை வடக்கு ஆத்திசூடி வித்தியாசாலை என்பவற்றில் அதிபராகவும் பணியாற்றியுள்ளார். இவர் வேலணை கிராம சபை ஐந்தாம் வட்டாரப் பிரதிநிதியாகவும் வேலணை தபாலதிபராகவும் வேலணை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராகவும் பதவி வகித்துப் பல சமூக சேவைகளைச் செய்து வந்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34944).

11195

கங்கை பொங்குது: அருட்கவிதை முத்துக் குவியல். வேலணை வேணியன் (இயற்பெயர்: வை.கங்கை வேணியன்). வேலணை: வேணியன்ஸ் அசோசியேட்ஸ், சுவையகம், 1வது பதிப்பு, மே 1987. (கொழும்பு: மெய்கண்டான் அச்சகம், 161, கடற்கரைத் தெரு).

60 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 19.5x13.5 சமீ.

தெய்வ நம்பிக்கை மிகுந்த கவிஞர் வேலணை வேணியன் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக சமூக, அரசியல், கலாச்சார பொது சேவைத் திட்டங்களில் தன்னை இணைத்துக்கொண்டு சேவையாற்றி வருபவர். ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவராகவும், கொழும்பு மாநகரசபை உறுப்பினராகவும் பணியாற்றியவர். தமிழ் எழுத்தாளராகவும், கவிஞராகவும், தமிழ்த் தேவாரப் பண் பாடும் சைவப்பெரியாராகவும் நன்கு அறியப்பெற்றவர். 1980களிலிருந்து தமிழ்ப் பணியாற்றிவரும் இவர் எழுதிய சைவத் தமிழ்கூறும் அருட் கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17375).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11196

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த கந்தபுராணம்: யுத்த காண்டம் சூரபதுமன் வதைப்படலம் (மூலமும்உரையும்). கச்சியப்ப சுவாமிகள் (மூலம்), ச.சுப்பிரமணியம் (உரையாசிரியர்), ஆறுமுகம் கந்தையா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: அஷ்டலட்சுமி பதிப்பகம், 41, கண்டி வீதி, கைதடி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2000. (கொழும்பு 11: அஷ்டலட்சுமி பதிப்பகம், 320 செட்டியார் தெரு).

viii, 326 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

கந்தபுராணம், உற்பத்திக் காண்டம், அசுர காண்டம், மயேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தக்ஷண காண்டம் என்னும் ஆறு காண்டங்களாகப் பாடப்பெற்றது. 10345 செய்யுள்களைக் கொண்டது. இந்நூல் யுத்த காண்டத்திலுள்ள சூரபதுமன் வதைப்படலத்தைத் தேர்ந்து அதிலுள்ள செய்யுள்களையும் அவற்றிற்கான உரைநடை விளக்கத்தையும் வழங்குகின்றது. பாடசாலை மாணவர்களுக்கென உருவாக்கப்பட்ட இந்நூலின் உரையாசிரியர் பண்டிதர் இயற்றமிழ் வித்தகர் ச.சுப்பிரமணியம் அவர்கள் புத்தூர், ஆவரங்காலைச் சேர்ந்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27341).

11197

கச்சியப்ப சுவாமிகள் அருளிச்செய்த கந்தபுராணம் யுத்த காண்டம்: சூரபன்மன் வதைப்படலம். கச்சியப்ப சுவாமிகள் (மூலம்), வ.சிவராஜசிங்கம் (உரையாசிரியர்). பருத்தித்துறை: புலவர் ஆ.பொன்னையா, அல்வாய் மேற்கு, திக்கம், 1வது பதிப்பு, 1992. (யாழ்ப்பாணம்: மஹாத்மா அச்சகம், ஏழாலை).

x, 182 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14 சமீ.

கந்தனது பெரும்புகழ் பேசும் நூல் கந்தபுராணமாகும். அப்புராணம் சித்தாந்தப் பொருள் நிறைந்த சைவபுராணமாகும். கந்தசஷ்டித் தினங்களாகிய ஆறு நாட்களிலும், சுப்பிரமணியப் பெருமான் சூரபன்மனாகிய ஆணவமலத்தின் வேகத்தைத் தணித்து அந்த ஆன்மாவுக்கு அருள்பாலித்தார். அந்த அற்புதமான கதை கந்தபுராணத்திலே சூரபன்மன் வதைப்படலத்தில் அழகாகக் கூறப்பட்டுள்ளது. இந்நூலில் செய்யுள்களை இலக்கண விதிப்படி புணர்த்திப் பதிப்பதனால் வாசிப்பதில் மக்களுக்கு ஏற்படும் இடரை நீக்கவிரும்பி கூடியவரையில் புணர்ச்சி பிரித்து உரையாசிரியர் விளக்கியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17407).

11198

கதிர்காமத்து கந்தன் பாமாலை. க.பே.வரதராஜா. கொழும்பு 4: கதிர்காமத்தையன் பிரசுராலயம், எல் 12, 2ஆம் மாடி, அரச தொடர்மாடி மனைகள், 4வது பதிப்பு, மார்கழி 1998, 3வது பதிப்பு, 1995, 2வது பதிப்பு, தை 1995, 1வது பதிப்பு, ஜூலை 1994. (அச்சக விபரம் தரப்படவில்லை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 22x14 சமீ.

இந்நூலில் ஆசிரியர் முருகனைப் பற்றிப் பாடிய நான்கு வரிக் கந்தன் கவிதைகள் நூறு பக்திப் பாமாலையாகிப் பக்தர்களைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்துகின்றன. இப்பாமாலையில் அருணகிரிநாதரின் திருப்புகழ்களும் யோகர் சுவாமிகளின் பாடல்களும், முருகதாஸ் சுவாமிகளின் பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகன் மேல் பக்திகொண்டு கதிர்காமத்தானைத் துதித்துப் பாடிய பாமாலை இது. பிள்ளையார் காப்புடன் ஆரம்பமாகும் கந்தன் பாமாலை, முருகனைப் பல்வேறு திருநாமங்களாலும் விழித்துப்பாடுவதாக உள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34944).

11199

கதிர்காமப் பிரபந்தங்கள். சந்தனா நல்லலிங்கம். சென்னை 600008: காந்தளகம், 834 அண்ணாசாலை, 1வது பதிப்பு, வைகாசி 1995. (சென்னை 600 014: அலமு அச்சகம், ராயப்பேட்டை).

(8), 296 பக்கம், வரைபடங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x14 சமீ.

சிறந்த முருக பக்தரான சந்தனா நல்லலிங்கம், 1933 நவம்பர் 19இல் கிழக்கிலங்கையில் பிறந்தவர். வடக்கிலங்கையைப் புகுந்த வீடாக்கிப் பின் மேற்கிலங்கையை தொழில் வாய்ப்புடன் வாழ்விடமாக்கிக்கொண்டவர். மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்றவர். கொழும்பு, பம்பலப்பிட்டி திருக்குடும்பக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். கதிர்காமத் தல வரலாறு, பிரபந்த வகைகள் -ஓர் அறிமுகம், கதிர்காமப் பிரபந்தங்கள் காட்டும் நாட்டுவளமும் சமுதாய வாழ்க்கையும், கதிர்காமப் பிரபந்தங்களிற் காணப்படும் பக்தி வெளிப்பாடு, கதிர்காமப் பிரபந்தங்களிற் காணப்படும் யாப்பும் அணியும் ஆகிய ஐந்து இயல்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16665).

11200

கந்தபுராணக் கவியமுதம்(செய்யுளும் உரையும்). ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் (மூலம்), கிருபானந்தவாரி (உரையாசிரியர்). கொழும்பு: தெட்சணத்தார் ஜயந்தி நகர் (ஜிந்தும்பட்டி) சிவசுப்பிரமண்ய சுவாமி கோயில், 1வது பதிப்பு, 1959. (சென்னை 2: திருப்புகழமிர்தம் அச்சகம், 89 சிங்கண்ணசெட்டித் தெரு, சிந்தாரிப்பேட்டை).

(8), 120 பக்கம், விலை: இந்திய ரூபா 2.00, அளவு: 18x12 சமீ.

மதுரை ஆதீனம் திருவருள் தவயோக திருப்பெருந்திரு சோமசுந்தரஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் நிகழ்ந்த கந்தபுராண நல்விழா நினைவுமலர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31538).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11201

கந்தபுராணச் சிந்தனைகள். *மட்டுவில் ஆ.நடராசா. சாவகச்சேரி: மட்டுவில் ஆ.நடராசா, ஏரகம், மட்டுவில் வடக்கு, 1வது பதிப்பு, மே 1996. (கொழும்பு 13: லட்சுமி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).*

(9), 39 பக்கம், விலை: ரூபா 45., அளவு: 19.5x12 சமீ.

கந்தபுராணத்தில் கூறப்படும் சில கருத்துக்களை, சிறு கட்டுரைகளாக எழுதி அவற்றைத் தொகுத்து இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. தவத்தின் பெருமை, தவஞ்செய்த சூரபன்மன், சந்திரசாபம், தக்கயாகம், சிவன் யோகத்தில் இருந்தார், திருக்கைலாயத்திற் சூது, அகந்தைகொண்ட வீரவாகு, அன்புசெய்த அகத்தியர், பிரமோபதேசம், திருக்கைவேல் ஆகிய பத்துத் தலைப்புக்களில் இக்கட்டுரைகள் எளிய வடிவில் எழுதப்பட்டுள்ளன.

11202

கந்தபுராணச் சிந்தனைகள். *செ.தனபாலசிங்கன். கொழும்பு 6: செ.தனபாலசிங்கன், 17, 55ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 1976. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*

xxxiv, *272 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 18.5x12.5 சமீ.*

கந்தபுராணம் பற்றிய அறிவையும், அதனுள் நுழைந்து அனுபவிக்கும் இன்பம் பற்றிய ஆர்வத்தையும் தூண்டும் வகையில் எழுதப்பட்ட கட்டுரைகள் இவை. கந்தபுராணம் கற்பக தரு, மன்மதனின் தர்மசங்கடம், பார்வதி திருக்கல்யாணம், நம்முன் நிற்கும் வினாக்கள், காதற் கல்யாணம் - விதியின் விளையாட்டு, ஔவையாரின் மூன்று சொற்கள், அடாதன செய்தார் படாதன படுவார், நாம் தேடிய சொத்துக்கள், உயிர்ப்பிச்சை தந்தேன் பிழைத்துப்போ, வீரக்குரல் அறக்குரல், உண்மையான உறுதியான காதல், ஆண்டவன் படைக்க முடியாத பொருள், காலத்தாற் சிதையாத கருத்து, மகாத்மா ஆகலாம், ஆம் இதுதான் விதி, வாழ வழிகாட்டும் ஒரு பாடல், மனம் துடித்தது: மானம் தடுத்தது, நலம் பயக்கும் வளமான போர், தெய்வயானை அம்மை திருமணம், சர்ச்சை வேண்டாம், அற்புதமான தத்துவங்கள், திருநெறியின் சங்கநாதம், உயர்வு தரும் கதை, வாழ்வு வளம் பெறும்: உயிர் உரம் பெறும், கடவுளுக்கும் கையூட்டு, அழிக்க முடியாதது, காதலினால் கவலைபோகும், இது எவ்வளவு அறியாமை, வாழும்-வளரும், நான் யார், அன்பே சிவம், அறிவுக்குப் பொருந்தும், சிந்தை தெளிந்திடும் செம்மை பிறந்திடும், தோத்திரம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட ஆசிரியரின் 34 ஆன்மீகக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10204).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11203

கந்தபுராணம்: வள்ளியம்மை திருமணப் படலம். மு.தியாகராசா (விளக்கவுரை). கொழும்பு 4: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1 காலி வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2001. (கொழும்பு 11: அனுஷ் அச்சகம், 271/5, செட்டியார் தெரு).

viii, 102 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14.5 சமீ.

கந்தபுராணத்தின் மிக முக்கியமான படலமாகக் கருதப்படும் வள்ளியம்மை திருமணப்படலம் பாடல்களுக்குரிய பொருள் விளக்கத்தோடு நூல்வடிவில் திணைக்களத்தின் வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. முருகப்பெருமான் வள்ளியை மணம்புணர்ந்த வரலாற்றை இப்புராணப்பகுதி விதந்துரைக்கின்றது. சிவமுனிவனான திருமாலுக்கும் மானுருக்கொண்ட திருமகளுக்கும் பிறந்த வள்ளி, வேடுவத் தலைவனான நம்பியரசனால் வளர்க்கப்பட்டவள். பின்னர் கிழவுருத் தாங்கி வந்த முருகன் வள்ளியைத் திருமணஞ் செய்தான் என்கின்றது புராணம். இது புராண வித்தகர் திரு.மு.தியாகராசா அவர்களின் விளக்கவுரையுடன் கூடிய நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31139).

11204

கந்தர் அநுபூதி. T.A. சம்பந்தமூர்த்தி ஆச்சாரியார். சுன்னாகம்: இசைவாணர் நா.ப.பாலசந்திரன், தருமரகம், 1வது பதிப்பு, 1956. (அச்சக விபரம் தரப்படவில்லை).

x, 60 பக்கம், விலை: இந்தியக் காசு 12 அணா, அளவு: 19x11.5 சமீ.

இசை அமைப்போடு சுரதாளம் அமைத்தவர் வேலூர் T.A. சம்பந்தமூர்த்தி ஆச்சாரியார் அவர்களாவார். கந்தரனுபூதி அல்லது கந்தர் அனுபூதி என்னும் நூல் அருணகிரிநாதர் என்பவரால் பாடப்பட்டது. இவர் 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். அனுபூதி என்னும் சொல்லினை அனு + பூதி என்று பிரிக்கலாம். "அனு" என்பது அனுபவம். "பூதி" என்பது புத்தி. இது அறிவின் பூரிப்பு. அனுபவ அறிவின் பூரிப்பே அனுபூதி. எல்லாப் பாடல்களுமே "நிலைமண்டில ஆசிரியப்பா" வகையில் எழுதப்பட்டிருப்பதனை காண முடிகிறது. எனவே ஒவ்வொரு பாடலும் 4 அளவடிகள் கொண்டு, ஆசிரியச் சீர்கள் கொண்டு இயற்றப்பட்டிருக்கின்றன. இந்த நூலில் 51 பாடல்கள் உள்ளன. பாடல்கள் எதுகைத் தொடை ஓட்டத்தால் சந்தச்சுவை உடையனவாக உள்ளன. இவற்றோடு மேலும் சில பாடல்களைச் சேர்த்து 105 பாடல்கள் கொண்ட பதிப்புகளும் உள்ளன. இந்த நூல் முருகன் தனக்குக் குருவாய் வரவேண்டும் என வேண்டிக்கொள்ளும் பாடலோடு முடிகிறது. இந்த நூலில் முருகனின் திருவுரு, ஊர்தி, படை, கொடி முதலானவை கூறப்படுகின்றன. ஈதல் இந்த நூலில் வலியுறுத்தப்படுகிறது. பாசத் தளையில் கலங்கிய நிலை, மனம் அமைதி பெற்றுத் தவத்தில் ஒன்றிய நிலை, முருகன் திருவருள் பெற்ற ஞானநிலை, உபதேச நிலை என்னும் நான்கு பிரிவுகளில் பாடல்கள் அமைந்துள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 904).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11205

கந்தர் சஷ்டி கவசம். தேவராய சுவாமிகள் (மூலம்), நாக.சண்முகம் (உரையாசிரியர்). காரைநகர்: திக்கரை முருகமூர்த்தி கோவில் திருப்பணிச் சபை, 1வது பதிப்பு, நவம்பர் 1989. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்).

34 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 16x10.5 சமீ.

கந்த சஷ்டி கவசம் என்பது பால தேவராய சுவாமிகளால் முருகப் பெருமான் மீது இயற்றப்பட்ட பாடலாகும். "காக்க" என இறைவனை வேண்டிக்கொள்ளும் பாடல்களைக் கவசம் என்பர். பிற்காலத்தில் தமிழில் அச்சிடப்பட்டு வழங்கும் கவச நூல்கள் ஆறு. அவற்றில் இந்த நூல்தான் பெரிதும் போற்றப்படுகிறது. பலர் இதன் பாடல்களை மனப்பாடம் செய்து போற்றி வழிபடுகின்றனர். பழனி முருகன்மீது பாடப்பட்டது. பாடல் வரிகளில் யாருக்காக, யாரைக்குறித்து, யாரால், அல்லது பாடுபவர் பெயரை பாடல் வரிகளில் எழுதுவது அக்கால மரபு என்கின்றனர். நூலின் காலம் 16ஆம் நூற்றாண்டு. கந்த சஷ்டி கவசத்தை பால தேவராய சுவாமிகள் அரங்கேற்றிய தலம் தமிழகத்தில் ஈரோடு அருகில் உள்ள சென்னிமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில். கந்த சஷ்டி கவசத்தில் வரும் "சிரகிரி வேலவன்" எனும் வரிகள் சென்னிமலை இறைவனைக் குறிப்பவை. அருள்திரு தேவராய சுவாமிகள் இயற்றிய கந்தர் சஷ்டி கவசமும் அதற்குத் தமிழகப் புலவர் நாக. சண்முகம் எழுதிய விளக்கவுரையும், நூற்றியெட்டுப் போற்றிகளும் இணைந்ததாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள காந்தளகம் பதிப்பகம் இந்நூலின் வெளியீட்டின் விநியோகப் பொறுப்பினை ஏற்றிருந்தது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10179).

11206

கந்தர் மாவை வெண்பா. மா.குமாரசாமி. மாவிட்டபுரம்: மாவை ஆதீனம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1988. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலய முன்னாள் அதிபரும், காலஞ்சென்ற சுன்னாகம் சைவப் பிரசாரகர் குரு.சி.மாணிக்கத் தியாகராஜ பண்டிதர் அவர்களின் புத்திரனுமாகிய மாவையாதீன வித்துவான் செஞ்சொற் புலவர்- பண்டிதர் திரு. மா.குமாரசாமி அவர்கள் இயற்றிய வெண்பா வடிவிலான பக்தி இலக்கியம். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் யாழ்ப்பாண நகரிலிருந்து சுமார் ஒன்பது மைல்கள் தொலைவிலுள்ள ஒரு பழமை வாய்ந்த முருகன் கோயில் ஆகும். இலங்கையில் காணப்படும் சைவ சமயத்துத் திருத்தலங்களில் மிகவும் பழமையும் தொன்மையும் வாய்ந்த திருத்தலமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் காணப்படுகிறது. மாருதப்பிரவீகவல்லி எனும் சோழ இளவரசி முருகப்பெருமானை வழிபட்டு வரும் காலத்தில் முருகன் அருளால் அவள் குதிரை முகம் நீங்கி மகா பேரழகு பெற்றதாக வரலாறு கூறுகிறது. அதன் காரணத்தால் இவ்வூருக்கு மாவிட்டபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மா + விட்ட + புரம்) என்ற பெயர் ஏற்பட்டது என்பது ஐதீகமாகும். இதன் காரணமாக மகிழ்ச்சியடைந்த இளவரசி மதுரையில் இருந்து ஆலயத்தை நிர்மாணிப்பதற்காக சிற்பாசிரியர்களையும் பொருட்களையும் கொண்டுவந்து மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தை நிர்மாணித்தார் எனவும், விக்கிரகங்கள் உரிய முறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டு கி. பி. 1795 ஆம் ஆண்டு ஆனி உத்திர நட்சத்திரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றதெனவும் கோவில் வரலாறு கூறுகின்றது. இத்தகைய சிறப்புமிக்க மாவை முருகன்மீது பாடப்பெற்றதே மாவை வெண்பா. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34944).

11207

கந்தரநுபூதி மூலமும் உரையும். அருணகிரிநாதர் (மூலம்), க.கார்த்திகேசு யோகி (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: வழக்கம்பரை பஜனைச் சபை, வழக்கம்பரை, 1வது பதிப்பு, வைகாசி 1978. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xi, 88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி மனவியல் உண்மைகளைத் தன்னுள் அடக்கிய ஒரு மகத்தான நூல். மந்திரம், தந்திரம், அதன் பிரயோகம் என மூன்றும் கொண்டது. "கல்" போன்ற நெஞ்சுடையாரும் கரைந்துருக, தன்னை வந்து அடைந்தார்க்கு ஆறுமுகன் தயை (அருள்) புரிகின்றான் என்கிறார் அருணகிரியார். செம்மையான இலக்கியத் தமிழ்ச் சொற்களால் தொடுக்கப்பெற்ற கந்தரநுபூதி என்னும் கவிமாலையானது சைவ சமயிகளில் மிக முக்கியமான பக்தி இக்கியங்களுள் ஒன்றாகும். இத்தகைய சிறப்புமிக்க கந்தரநுபூதியை கார்த்திகேசு யோகியின் உரையுடன் யாழ்./வழக்கம்பரை பஜனைச் சபையினர் வெளியிட்டுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11101).

11208

கனகைவிநாயகர் பிள்ளைத்தமிழ் (மூலமும் உரையும்). வ.சிவராசசிங்கம் (நூலாசிரியர்), க.கணபதிப்பிள்ளை (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: பிள்ளைக்கவி வ.சிவராசசிங்கம், 1வது பதிப்பு, ஐப்பசி 2009. (கரவெட்டி: லெட்சுமி ஒப்செட் பிறின்டர்ஸ், நாவலர் மடம்).

v, 62 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x14 சமீ.

அரச மொழி கருமத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற உதவி ஆணையாளராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருகைதரு விரிவுரையாளராகவும் (ஆங்கில இலக்கியம்) பணியாற்றிய பிள்ளைக்கவி வ.சிவராசசிங்கம் படைத்துள்ள பிள்ளைத்தமிழ் இலக்கியம் இது. இச்செய்யுள்களுக்கான உரையை சிலேடைக் கவிரத்தினம் க.கணபதிப்பிள்ளை வழங்கியுள்ளார். பிள்ளைத்தமிழ் என்பது தமிழில் எழுந்த பிரபந்தங்களுள் ஒன்று. சிவனைத் தவிர்ந்த பிற தெய்வங்கள் மீதும், மக்கள் மீதும் பிள்ளைத் தமிழ் பாடுதல் மரபு. பாட்டுடைத் தலைவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையாகப் பாவித்து வெவ்வேறு பருவங்களில் அக்குழவி புரியும் குறும்பையும் ஆடல்களையும் கண்டும் கேட்டும் உணர்ந்தும் மகிழ்ந்தும் சித்திரிப்பதே இவ்விலக்கியம். அவ்வகையிலமைந்த கனகை விநாயகர் பிள்ளைத்தமிழும் காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம், சிற்றிற் பருவம், சிறுபறைப் பருவம், சிறுதேர்ப் பருவம் ஆகிய பருவங்களை முன்வைத்துப் பாடப்பெற்றுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47940).

11209

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்) பிரபந்தத் திரட்டு iv நான்காம் பாகம். செ.இரத்தினப்பிரகாசம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: செ.இரத்தினப்பிரகாசம், கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி கோவில் (புதுக்கோவில்) தொண்டர் குழு, 115/4 டபிள்யு ஏ சில்வா மாவத்தை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஜுன் 2001. (நாரஹென்பிட்டியா: ஆர்.எஸ்.ரீ. என்டர்பிரைஸ்).

viii, (10), 130 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

புதுக்கோவில் எனப் பெயர்பெற்ற கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி கோவிலின் பேரில் பாடப்பெற்ற பிரபந்தங்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இக்கோவில் 1830இல் நினைக்கமுடிச்சான் வளவு என்ற பெயர்குறிப்பிடப்பட்ட வளவில் ஆரம்பமானது. இந்நூலில் வ.சிவராஜசிங்கம் படைத்த "கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ்" நூல் முதலாவது தொகுப்பாகின்றது. இது நூலுருவில் வெளிவந்தவாறாக செ.இரத்தினப்பிரகாசம் வழங்கிய பதிப்புரை, வ.சிவராஜசிங்கம் வழங்கிய முகவுரை ஆகியவற்றோடு முதல் 50 பக்கங்களில் அடங்குகின்றது. பக்கங்கள் 51-89 வரையில் அருணகிரியார் அருளிச்செய்த சேவல் விருத்தமும் உரையும், வேல் விருத்தமும் உரையும், மயில் விருத்தமும் உரையும் இடம்பெற்றுள்ளன. உரைகளை பண்டிதர் ச.சுப்பிரமணியம் வழங்கியுள்ளார். பக்கம் 90-96இல் பழம்பாடலான "எட்டிகுடி ஏசல்" இடம்பெற்றுள்ளது. பக்கம் 97-101 வரை ச.சுப்பிரமணியம் அவர்கள் எழுதிய "கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மான்மியம்" இடம்பெற்றுள்ளது. தொடந்து பக்கம் 102-104களில் சு.நடேசபிள்ளை வழங்கிய "கதிர்காமநாதன் திருப்பள்ளியெழுச்சி"யும், பக்கம் 105-121 இல் ச.சுப்பிரமணியம் இயற்றிய "கதிர்காமக் கந்தன் பதிற்றுப்பத்து அந்தாதி"யும், பக்கம்122-128 இல் அவர் இயற்றிய "ஸ்ரீசுப்பிரமணிய புஜங்க தோத்திரம்" என்ற பக்தி இலக்கியமும் இடம்பெற்றுள்ளன. நூலின் இறுதியில் மேற்படி கோவிலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளின் பேரில் பாடப்பெற்ற பாடல்களின் அட்டவணை ஒன்றும் இரு பக்கங்களில் காணப்படுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 55536).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11210

கொக்கூர் புதுக்கோவில் பிரபந்தத் திரட்டு (முதலாம் பாகம்). செ.இரத்தினப்பிரகாசம் (பதிப்பாசிரியர்). கொக்குவில்: கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்), 1வது பதிப்பு, ஜுன் 1990. (கொக்குவில்: சோதிடப்பிரகாச யந்திரசாலை).

134 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

செ.இரத்தினப்பிரகாசம் அவர்களின் பதிப்புரையுடன் தொடங்கும் இந்நூலில் சித்திவிநாயகர் ஒருபாவொருபஃது, சித்திவிநாயகர் திருவூஞ்சற் பதிகம், கொக்கூர்க் கிருபாகர சிவசுப்பிரமணியார் பதிற்றுப் பத்தந்தாதி (செ.வேலாயுதபிள்ளை), கொக்கூர் ஸ்ரீ தண்டபாணி விருத்தம், கொக்கூர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஊசல்- எச்சரீக்கை- கீர்த்தனங்கள் (உ.வே.சாமிநாதையர்), கொக்கூர் புதுக்கோவில் வேணுகோபாலன் திருவூஞ்சல் (அ.நாகலிங்கம்), ஓமையந்தாதி (சி.சிலம்பு நாதபிள்ளை), வேணுகோபாலர் மீது பாடிய ஒருபா ஒருபஃது ஆகிய திருப்பாடல்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூல் 1990 வைகாசி மாதம் 24ம் திகதி கோவிலில் நடைபெற்ற இரதோற்சவத்தன்று வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13702).

11211

கொக்கூர்ப் புதுக்கோவில் பிரபந்தத் திரட்டு-2 (இரண்டாம் பாகம்). செ.வேலாயுதபிள்ளை (தொகுப்பாசிரியர்), செ.இரத்தினப்பிரகாசம் (பதிப்பாசிரியர்). கொக்குவில்: கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்), 1வது பதிப்பு, பெப்ரவரி 1994. (கொழும்பு 2: வெட் பிரின்ட்).

(10), 58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

செ.வேலாயுதபிள்ளை அவர்களின் முன்னுரையுடன் வெளியிடப்பட்டுள்ள இந்நூலில் இடம்பெற்றுள்ள முதல் ஐந்து பாக்களுமான கொக்கூர்ச் சித்திவிநாயகர் கலிவெண்பா: அரும்பதவுரையும் விளக்கக் குறிப்பும், கொக்கூர் குமரன் திருவெழுகூற்றிருக்கை: விளக்கக் குறிப்புகள், கொக்கூர்க் குமரன் நவமணிமாலை, கொக்கூர் சித்திவிநாயகர் தோத்திர பஞ்சம், கொக்கூர் முருகன் அட்டகம்: அரும்பத விளக்கம் ஆகியவை செ.வேலாயுதபிள்ளையினால் இயற்றிப் பாடப்பெற்றவை. தொடர்ந்து வரும் கொக்கூர்க் குமர கிருபாகரர் அருள்வேட்டல்: பஞ்சகம் (மு.சின்னத்தம்பி), குருவருள் வேண்டல் (அ.நாகலிங்கம்), கொக்கூர்ச் சிவசுப்பிரமணியர் கலிவெண்பா: விளக்கக் குறிப்புகள் (செ.வேலாயுதபிள்ளை), எட்டிகுடியேசல் (ஓர் பழம் பாடல்), திருமுருகன் தாண்டகம் (த.கிருஷ்ணபிள்ளை), புதுக்கோயில் இலச்சினை விளக்கம் (செ.வேலாயுதபிள்ளை) ஆகியவை உள்ளிட்ட 11 பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. 12.2.1994 அன்று மீள்பதிப்பாக வெளியிடப்பெற்ற இந்நூலின் முதற் பதிப்பு 07.06.1990 இல் வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13703).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11212

கொழும்பு கொட்டாஞ்சேனை அருள்மிகு வரதராஜ விநாயகர் சதகம். பண்டிதர் சி.அப்புத்துரை. கொழும்பு 13: செல்வி சுஷாந்தினி இராஜேந்திரம் அவர்கள் அமரத்துவ ஓராண்டு நிறைவு வெளியீடு, சிவானந்த வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2001. (கொழும்பு 12: நிசான் பிரின்டர்ஸ், 64 என், பீர் சாஹிபு வீதி).

x, 22 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x12.5 சமீ.

கொழும்பு மாநகரில், கொட்டாஞ்சேனை சந்தியிலிருந்து 50 மீற்றர் தொலைவிலே அமைந்துள்ளது அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம். இவ்வாலயம் 1890 ஆம் ஆண்டுக்கு முற்பட்டது. இவ்வாலயம் எல்லாள மன்னன் காலத்திற்கு முந்தியதென்றும் போர்த்துக்கேயர் காலத்தில் அவர்களது இராணுவ வீரர்கள் இந்த ஆலயத்தை அழித்து விட்டார்கள் என்றும் கருத்துக்கள் உண்டு. முதலாவது உலக மகா யுத்தம் ஆரம்பமாகவிருந்த வேளையில் இப்பகுதியில் 1913 இல் ஓர் இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்தது. அந்த முகாமில் வட இந்தியாவைச் சேர்ந்த சண்முகர்ஜீ பட்டேல் என்பவர் தலைமையை ஏற்று பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் விநாயகர் வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு உடையவர் எனவே அரச மரத்தடியில் அமர்ந்து அருள்பாலித்த வரதராஜ விநாயகப் பெருமானை வழிபடும் முறைமை அவருக்கும் உரியதாயிற்று. 1917 ஆவணியில் விநாயகரின் திருவுருவச் சிலையை பிரதிஷ்டை செய்து வழிபடும் முறைமையை சண்முகர்ஜி பட்டேல் ஏற்படுத்திக் கொடுத்தார். இந்த காலகட்டத்தில் பிக்கரிங்ஸ் வீதியில் பஞ்சலோக வேலை செய்யும் ஆசாரியர் வாழ்ந்து வந்தனர். இவர்களும் வரதராஜ விநாயகர் மீது தீவிர பக்தி கொண்டனர். 1921 இல் சண்முகர்ஜி பட்டேலுக்கு நாட்டை விட்டு போக வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர் தமக்கு உதவியாளராக இருந்த பஞ்சலோக ஆசாரியர் சமூகத்தைச் சேர்ந்த இராமகிருஷ்ணன் என்பவரிடம் ஆலயத்தை ஒப்படைத்து விட்டுச் சென்றார். இரண்டாவது உலக மகா யுத்த நெருக்கடிகளுடன் பிக்கரிங்ஸ் வீதியில் இருந்த ஆசாரியர் 1943 இடம்பெயர்ந்தனர். அதனால் விநாயகராலய பரிபாலனம் சில ஆண்டுகள் கவனிப்பார் அற்றிருந்து. 1944.08.27 இல் "எழுந்தருளி விநாயகர்" திருவுருவச் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது. கவனிப்பாரற்று ஒழுங்கற்ற முறையில் இருந்த ஆலயத்தை திருமதி சொர்ணம்மா சுப்பிரமணியம் அர்ச்சகர் ஒருவரை நியமித்து பூஜை முறைகளை ஒழுங்காக்கினார். 1951 இல் பரிபாலன சபை ஸ்தாபிக்கப்பட்டது. 1952 இல் சிவஸ்ரீ நடராசா சோமஸ்கந்தக் குருக்கள் பூசை நடைமுறைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். 1961 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 1962.07.10இல் முதலாவது மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1988 நவம்பர் 27இல் இரண்டாவது மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. இத்தகைய வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்ட மேற்படி கோவில்மீது பாடப்பெற்ற விநாயகர் சதகம் இதுவாகும். அமரர் செல்வி சுஷாந்தினி இராஜேந்திரம் அவர்கள் அமரத்துவ ஓராண்டு நிறைவு வெளியீடாக 15.08.2001 அன்று இந்நூல் வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24552).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11213

கொழும்பு செட்டியார்தெரு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் திருவூஞ்சல் பதிகம். *சு.சுப்பிரமணியம். புத்தூர்: பண்டிதர் சு.சுப்பிரமணியம், ஆசிரியர், ஆவரங்கால், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 11: ஸ்டான்கார்ட் பிரிண்டர்ஸ்).*

8 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 13.5x10.5 சமீ.

கொழும்பு ஸ்ரீ முத்துவிநாயகர் தேவஸ்தானத்தின் சார்பில் வெளியிடப்பட்ட பக்தி இலக்கியம். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24632).

11214

கொழும்பு வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் திருப்பள்ளியெழுச்சி - தோத்திரப் பாமாலை. *சி.விநாசித்தம்பிப் புலவர். கொழும்பு: வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

8 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 14x10.5 சமீ.

அளவெட்டியில் வாழ்ந்த புலவர்களில் மிக முக்கியமான ஒருவர் விநாசித்தம்பிப் புலவர். இவரை அருட்கவியெனவும், கவியோகியெனவும், வரகவியெனவும் அறிஞர்கள் பாராட்டுவர். இவர் ஒரு புலவராக மட்டுமல்லாமல் ஒரு சோதிடராகவும், மருத்துவராகவும் பேய்பிணித் தொல்லைகள் போக்கும் அருளாளராகவும் மக்களுக்கு நன்கு பயன்பட்டவர். அளவெட்டி தெற்கு அருணாசலம் வித்தியாசாலையில் தமிழும் அளவெட்டி ஆங்கில பாடசாலையில் ஆங்கிலமும் கற்றவர். ஆரம்பத்தில் கூட்டுறவுச்சங்கக் கடையொன்றில் கடமையாற்றினார். பின்னர் மலை நாட்டிலுள்ள பாடசாலையொன்றில் ஆசிரியராகவிருந்தார். அதன் மேல் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையிற் பயிற்சி முடித்து பூரணத்துவம் வாய்ந்த ஆசிரியராக மலர்ந்தார். வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்கவிநாயகர் மேல் இவர் பாடிய பக்திப் பாமாலை இதுவாகும். கையடக்கப் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10197).

11215

கோயிற் புராணம். *உமாபதி சிவாசாரியார் (மூலம்), ஆறுமுக நாவலர் (புத்துரை). சிதம்பரம்: விசுவநாதபிள்ளை, தருமபரிபாலகர், சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை, 3வது பதிப்பு, மார்கழி 1922, முதற் பதிப்பு விபரம் தரப்படவில்லை. (சென்னபட்டணம்: வித்தியாநுபாலன யந்திரசாலை).*

(6), 525 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 16.5x12.5 சமீ.

இரணிய வன்மச் சருக்கம் (142 பக்கங்கள்), திருவிழாச் சருக்கம் (215 பக்கங்கள்), நடராசச் சருக்கம் (103 பக்கங்கள்), பதஞ்சலிச் சருக்கம் (43 பக்கங்கள்), பாயிரம் (2 பக்கங்கள்), வியாக்கிரபாதச் சருக்கம் (20 பக்கங்கள்), ஆகிய ஆறு சருக்கங்களாகப் பிரித்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஆறுமுக நாவலரவர்கள் பரிசோதித்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்துரையாத்தும் புதியதாய் எழுதியும் பதிப்பித்த நூல்கள் ஏறத்தாழ அறுபத்துமூன்று எனத் தெரியவருகிறது. அவற்றுள் நிகண்டு, இலக்கிய இலக்கண நூல்கள், திரட்டுகள், நீதிநூல்கள், போன்றவையும் அடங்கும். அப்பதிப்புகளைத் தொகுப்புப் பதிப்பு, சுருக்கப் பதிப்பு, குறிப்பெதிர் பதிப்பு, என மூன்று வகைக்குள் அடக்கலாம். தொகுப்பு பதிப்பாவது ஒருவருடைய அல்லது பலருடைய படைப்புகளிலிருந்து சில பகுதிகளைத் தொகுத்துத் தருவதாகும். அகத்தியர் அருளிய தேவாரத் திரட்டு, தாயுமானவ சுவாமிகள் திருப்பாடல் திரட்டு, நீதிநூல் திரட்டு என்பன தொகுப்புப் பதிப்புகளாகும். ஒரு நூலினது மூலத்தை மட்டும் அல்லது நூற்பொதிகருத்துகளைப் பக்க அளவால் சுருக்கி வெளியிடுதல் சுருக்கப் பதிப்பாகும். இலக்கணச்சுருக்கம், இலக்கண வினா விடை, பால பாடம், போன்றவற்றைச் சுருக்கப் பதிப்பிற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். அருஞ்சொற்பொருள், இலக்கணக்குறிப்பு பாடவேறுபாடு போன்றவற்றை அடிக்குறிப்பாகத் தந்து நிற்பவை குறிப்பெதிர்பதிப்புகளாம். சேது புராணம், கந்தபுராணம், திருக்குறள், சூடாமணி போன்ற இவர்தம்பெரும்பான்மை நூல்கள் குறிப்பெதிர் பதிப்புகளேயாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 1241).

11216

சக்திப்ரதாயினி அர்ச்சனை மலர்கள் (பக்திப்பாடல்கள்). யாமினி சிவராமலிங்கம். வவுனியா: சக்திப்ரதா வெளியீடு, குடியிருப்பு, 1வது பதிப்பு, 2001. (வவுனியா: மல்ரிவிஷன் அச்சுக் கலையகம், 2ம் குறுக்குத்தெரு).

72 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 35., அளவு: 13.5x9.5 சமீ.

கடவுள் பக்தி, ஆன்மீக ஞானம் என்பவற்றை வாழ்வின் அடிப்படையாகக் கொண்ட யாமினி வவுனியா குடியிருப்பு ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபடும் ஒரு சைவாசாரக் குடும்பத்தில் பிறந்தவர். தாயார் ஒரு ஆசிரியை, தந்தையார் ஒரு தபாலதிபர். கூட்டுப் பிரார்த்தனைக்கும், பஜனை வழிபாட்டுக்கும் உகந்ததாக பிரார்த்தனைப் பாடல்களை இச்சிறு நூலில் இயற்றித் தந்துள்ளார். இவரது பாடல்களில் இறைவனைத் தந்தையாகவும் இறைவியைத் தாயாகவும் சகோதரியாகவும் மனதில் இருத்திப் பாடியுள்ளார். இனிய நடையில் எளிய சொல்லாடல்களுடன் இத்தொகுப்பு அமைந்திருக்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22998).

11217

சங்கீர்த்தன மலர். சுவாமி தந்திரதேவா. திருக்கோணமலை: இந்து சமய அபிவிருத்திச் சபை, 100/13, ஓர்ஸ் ஹில், 1வது பதிப்பு, ஜூன் 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(28) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாறை மாவட்ட அறநெறிப் பாடசாலைகள் ஒன்றியத்திற்காக வழங்கப்பட்ட பஜனைப்பாடல் தொகுப்புப் பிரசுரம். சங்கீர்த்தனத்தின் மகிமை என்ற தலைப்பில் சுவாமிஜீ தந்திரதேவா மகராஜ் வழங்கிய உரையுடன் கூடியது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25452).

11218

சிவராத்திரி புராணம். சுன்னாகம் காசி அ.வரதராஜ பண்டிதர் (மூலம்), உடுப்பிட்டி ம.குமாரசூரியப் பிள்ளை (உரையாசிரியர்). உடுப்பிட்டி: பிரம்மஸ்ரீ ச. சோமசுந்தரையர், 2வது பதிப்பு, ஆண்டு விபரம் இல்லை, 1வது பதிப்பு, 1913. (அச்சக விபரம் தரப்படவில்லை).

304 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

சிவராத்திரி புராணம் சிவராத்திரி விரத சரிதையை கூறும் நூலாகும். "நைமியசாரணியத்திலுறையும் மாதவர் வேண்டச் சூத முனிவர் கூறுவதாக" புராணம் இயங்குகின்றது. சிவராத்திரி விரதத்தின் தோற்றத்தையும், அதனை தோற்றிடும் வகையினையும் கூறிய சூத முனிவர், தொடர்ந்து சிவராத்திரி விரதத்தாற் பலனடைந்த சுகுமாரன், அங்குலன், சவுமினி, கன்மாடபாதன், விபரிசன், குபேரன், சாலிகோத்திரன் ஆகியோருடைய கதைகளை விரிந்துரைக்கும் வகையில் இந்நூல் செய்யப்பட்டுள்ளது. காப்புச் செய்யுள் ஒன்றினையும், கடவுள் வாழ்த்துப் பாக்கள் இருபதினையும், பாயிரச்செய்யுள் மூன்றினையும், சிவராத்திரி யுற்பவச் சருக்கம் முதலாகச் சாலி கோத்திரச் சருக்க மீறாகவுள்ள ஒன்பது சருக்கங்களிலுமுள்ள 691 பாடல்களையுங் கொண்டு விளங்குவதே இச்சிவராத்திரி புராணம். இந் நூலின் தற்சிறப்புப் பாயிரத்தின்படி, சிதம்பரத்திலுள்ள அறிஞர் பலரின் வேண்டு கோளை நிறைவேற்றும் பொருட்டு இது செய்யப்பட்டதெனத் தெரிகின்றது. இதற்கு முன்னரும் பலர் சிவராத்திரி புராணம் செய்திருந்த போதும், "ஆகம நூன்மொழி வழாம" லிச் சரிதை யமையவேண்டுமென்ற நோக்குடன் இது செய்யப்பட்டதாக இதன் ஆசிரியர் கூறுவார். இப்புராணத்திற்கு சின்னத்தம்பிப் புலவர் தந்த நூற்சிறப்புப் பாயிரத்திலிருந்து, இதனை இயற்றியவர் வரதபண்டிதரென்று தெரிகின்றது. 1878இல் இதன் முதற் பதிப்பு நிகழ்ந்ததென எப்.எக்ஸ்.சி.நடராசாவின் ஈழமும் தமிழும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2512).

11219

சிவாச்சாரியாரும் சிவாக்கினியும். செ.சொர்ணலிங்கம். நீர்கொழும்பு: E.A.K. சொக்கநாதன், 132 கடற்கரைத் தெரு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1997. (கொழும்பு 12: ஓட்டோ அச்சகம், 122 சென்ட்ரல் வீதி).

20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

நீர்கொழும்பு, அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் 1997ம் ஆண்டு ஆடி மாதம் நடைபெற்ற இலட்சார்ச்சனையை முன்னிட்டும், சைவப்பெருமக்கள் பயன்பெறும் பொருட்டும், திருமுறைகளில் உள்ள சில பாடல்களின் சிறப்புகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையுடன் தொகுத்து இந்நூலில் தரப்பட்டுள்ளது. உதாரணமாக ஞானசம்பந்தர் தேவாரம் ஒன்றினைத் (கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே..) தந்து சிவாக்கினி வளர்ப்போர் சிறப்பு என்ற தலைப்புடன் கீழ்க்கண்டவாறு பதியப்பட்டுள்ளது. "அதாவது நாம் வேதாகமங்களில் கற்ற நெறிபிறழாது காலை, மதியம், மாலை ஆகிய முப்போதும் எரியோம்புதல் மூலம் புறத்தில் சிவாக்கினியையும் அகத்தில் சிவக்கொழுந்தையும் தரிசிக்கும் அந்தணர்கள் அத்தகு கிரியையால் அவர் கலியின் கொடுமையை நீக்குவரெனத் தில்லைவாழ் அந்தணர் சிறப்புப் போற்றப்படுகின்றது." (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16799).

11220

சிவானந்த விஜயம்: இந்துவாக வாழ்வோம். ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீநகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 2வது பதிப்பு, டிசம்பர் 2015, 1வது பதிப்பு, ஜனவரி 2014. (இணுவில்: கஜானந்த் பிறின்டேர்ஸ், மானிப்பாய் வீதி, கந்தசாமி கோவிலடி).

320 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 700., அளவு: 24.5x17 சமீ.

ஒவ்வொரு சைவக் குடும்பத்தின் வீட்டிலும் இருக்கவேண்டியதொரு இந்து சமயக் களஞ்சியம் இது. சனாதன தர்ம நெறிமுறையில் இந்துவாக வாழ்வதற்கு வழிகாட்டும் வழிகாட்டியாகவும், தேவைப்படும் நேரத்தில் வேண்டிய தகவல்களைத் தருகின்ற களஞ்சியமாகவும் அவ்வப்போது ஏற்படுகின்ற ஐயங்களைப்போக்கும் ஆசானாகவும் அமைகின்ற இந்து சமயக் கையேடு இது. சனாதன தர்மம் இந்து சமயம் (இருப்பும் எடுப்பும்-வரலாற்றுப் பதிவுகள்), ஈடேற்றம் நல்கும் இந்து சமயம் (வணக்கமும் வழிபாடும்- சமயத்தின் அடிப்படைகள்), இல்லற வாழ்வில் இந்து சமயம் (ஆசாரமும் நெறிமுறைகளும்- வாழ்க்கை வழிகாட்டி, ஆசார விதிமுறைகள், ஆன்மீக உபதேசங்கள்), இக்கால நடைமுறையில் இந்து சமயம் (ஐயம் தெளிதல்-கேள்விகளும் பதில்களும், ஆலய தரிசனம், நித்யகர்மானுஷ்டானம், உபாசனை, நாளாந்த வாழ்வியல், ஆசௌச நடைமுறைகள்), அந்தணர்க்கு இந்து சமயம் (ஆசார ஒழுக்கங்கள்), இந்து சமய அறிவுப் பெட்டகம் (தகவல் களஞ்சியம்) ஆகிய ஆறு இயல்களை இந்நூல் கொண்டுள்ளது. பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா, ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி தம்பதிகளின் மணிவிழாச் சிறப்பு மலராக முதற்பதிப்பு 05.01.2014இல் வெளியிடப்பட்டது.

11221

சீகாளத்திப் புராணம் உரையுடன். சிவப்பிரகாச சுவாமிகள். சுன்னாகம்: தனலக்குமி புத்தகசாலை, 1வது பதிப்பு, 1936. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(8), 151 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 21x13.5 சமீ.

சிவப்பிரகாச சுவாமிகள் (துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்) ஒரு சிற்றிலக்கியப் புலவர். இவர், "கவி சார்வ பௌமா", "நன்னெறி சிவப்பிரகாசர்",

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துறைமங்கலம் சிவப்பிரகாசர்" என்று பலவாறாக அழைக்கப்பட்டவர். தமிழகத்தில் சைவசமய வளர்ச்சிக்கு வித்திட்ட சமய குரவர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரையும் குறித்த "நால்வர் நான்மணி மாலை" என்ற கவிதை நூலை இவர் எழுதியுள்ளார். தொண்டை நாட்டின் காஞ்சிபுரத்தில் வேளாளர்களின் ஞானகுருவாக விளங்கியவர் குமாரசாமி தேசிகர். இவரே சிவப்பிரகாசரின் தந்தையாவார். தன் பிள்ளைகளின் கல்விப் பருவத்திலேயே, குமாரசாமி தேசிகர் இறந்தமையால் சிவப்பிரகாசர் தம் தம்பியரோடு திருவண்ணாமலை சென்று, அங்கு தெற்கு வீதியிலுள்ள திருமடத்தில் எழுந்தருளியிருந்த குருதேவரைக் கண்டு வணங்கி அங்கேயே இருந்துகொண்டு தாம் கற்கவேண்டிய நூல்களைக்கற்று வந்தார். அங்கிருந்தவேளை, திருவண்ணாமலையை வலம்வரும் பொழுது, இறையருளால் "சோணசைலமாலை" என்னும் நூலை நூறு பாக்களாக இயற்றிப்பாடி இறைவனை வணங்கினார். இறுதியாக, நல்லாற்றூரையடைந்து, சிவநாம மகிமை, அபிசேகமாலை, நெடுங்கழிநெடில், குறுங்கழிநெடில், நிரஞ்சனமாலை, கைத்தலமாலை முதலிய நூல்களையும், சீகாளத்திப் புராணத்தில் கண்ணப்ப சருக்கம், நக்கீரர் சருக்கம் ஆகியவற்றையும் பாடி முடித்துத் தன் முப்பத்திரண்டாம் அகவையில் புரட்டாசிப் பௌர்ணமியில் இட்டலிங்கப் பரசிவத்தில் காலமானார். இந்நூல் அவரது கண்ணப்ப சருக்கம், நக்கீரர் சருக்கம் ஆகியவற்றுக்கான உரையுடன் கூடியதாக வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கங்கள் 961, 428).

11222

சைவத் திருமுறைகள் காட்டும் அறநெறி, ஆன்மீக விழுமியங்கள் சில. இ.குமரகுருபரநாதன். கொழும்பு: ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம், 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (கொழும்பு 11: மெய்கண்டான் அச்சகம், 161, கடற்கரைத் தெரு).

viii, 42 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x13 சமீ.

ஆ.குணநாயகம் அவர்களைத் தலைவராகக் கொண்டியங்கிய கொழும்பு ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றத்தின் பத்தாவது வெளியீடாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. சைவத் திருமுறைகள் பல்லவர் காலத்திலும் அதன் பின்னரும் தோன்றிய சைவ சமய நூல்களின் தொகுப்பாகும். இவை திருமுறைகள் என்றும் அறியப்படுகின்றன. இவை மொத்தம் 12 திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. 10 ஆம் நூற்றாண்டில் இராஜராஜ சோழனின் ஆட்சியின்போது, சிதம்பரம் கோயிலிலே கவனிப்பாரற்றுக் கிடந்த திருமுறைகள் பூச்சிகளால் அரிக்கப்பட்டு அழிந்தவை போக எஞ்சியவற்றை, நம்பியாண்டார் நம்பி என்பவர் திருமுறைகளாகத் தொகுத்தார். திருமுறைகள் பழந்தமிழ் இசையையொட்டிய பண்களுடன் பாடப்பட்டு வருகின்றன. சைவக் கோயில்களிலும், சைவர்கள் வீடுகளிலும், பாடசாலை முதலிய இடங்களில், சமய நிகழ்ச்சிகளின் போதும் திருமுறைகள் இன்றளவும் பாடப்பட்டு வருகின்றன. இவை பன்னிரு திருமுறைகள் என்றும் அழைக்கப்பட்டன. இத்திருமுறைகளில் பொதிந்துள்ள ஆன்மீகக் கருத்துக்களை இந்நூல் தொகுத்துத் தருகின்றது. (இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16641).

11223

சேசெல்சு அருள்மிகு நவசக்தி விநாயகர் பாமாலை. சரோஜினிதேவி சிவசுப்பிரமணியம். யாழ்ப்பாணம்: திருமதி சரோஜினிதேவி சிவசுப்பிரமணியம், 27/2, ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை, இணை வெளியீடு, Seychelles: அருள்மிகு நவசக்தி விநாயகர் கோவில், P.O.Box 88, Victoria, 1வது பதிப்பு, ஜுன் 1992. (சென்னை 600002: காந்தளகம், 834, அண்ணா சாலை).

44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

திருமதி சரோஜினிதேவி சிவசுப்பிரமணியம் அவர்கள் சீசெல்சு நவசக்தி விநாயகர் மீது பாடியருளிய பக்திப் பாமாலை. இப்பாடல்களுக்குச் சீரான வடிவமைத்து, இலக்கண அமைதிகாத்து, அச்சுப்பிழை திருத்தி, உதவியவர் தமிழகத்தைச் சேர்ந்த புலவர் வெற்றியழகன். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34953).

11224

திரு ஏஹாந்த அருள் சுடர். க.ம.செல்லத்துரை. பருத்தித்துறை: கெங்காதரன் கமலாதேவி, செந்தாமரையாள் வாசம், கரணவாய் மேற்கு, கரவெட்டி, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (பருத்தித்துறை: தமிழ்ப் பூங்கா அச்சகம், நெல்லியடி).

(8), 210 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

செய்யுள் வடிவில் அமைந்துள்ள இந்நூலில் மேல்கரணை கரவைப்பதி வாழ் அமரர் மயில்வாகனம் செல்லத்துரை தொகுத்தளித்த தெய்வீகப்பாமாலை இடம்பெற்றுள்ளது. நால்வர் தேவாரம், சிவபுராணம், கீர்த்தித் திரு அகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல், அதிசயப்பத்து, அருட்பத்து, திருப்படையாட்சி என அறுபத்துமூன்று தலைப்புகளில் நீழும் இவை பல்வேறு சைவ அருளாளர்களால் அருளப்பட்டவை. அன்னாரது மறைவின் 31ஆம்நாள் நினைவின்போது வெளியிடப்பட்டது. 4.5.1918இல் பிறந்த மயில்வாகனம் செல்லத்துரை 27.11.2007இல் அமரத்துவமடைந்தார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44618).

11225

திருக்கோணமாமலை பத்திரகாளி அம்மன் பதிகம்-கலிவெண்பா. சி.ஆ.கந்தையா (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: சி.ஆ.கந்தையா வெளியீடு, 12 ஏ, முதலாம் சப்பல் ஒழுங்கை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1974. (கொழும்பு 13: இரஞ்சனா அச்சகம், 98, விவேகானந்தர் மேடு).

18 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13 சமீ.

பழங்காலப் புலவர்களால் கலிவெண்பாவிற் பாடப்பெற்ற பதிகங்களின் தொகுப்பு. புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளையின் முகவுரையைக் கொண்டது. ஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரகாளி அம்பாள் ஆலயம் திருக்கோணமலை நகரின் மையப்பகுதியில், பேருந்து நிலையத்திற்கு மிக அருகாமையிலும் திருகோணமலை தொடருந்து நிலையத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது. மேலும் இக்கோவில் பதினெட்டு மகா சக்தி பீடங்களில் தேவியின் இடுப்புப் பகுதி விழுந்த பீடமாகவும் தந்திர சூடாமணி கூறும் 51 சக்தி பீடங்களில் தேவியின் சிலம்புகள் விழுந்த பீடமாகவும் கருதப்படுகிறது. ஒரு சிலர் உண்மையான சக்தி பீடக் கோவில் போர்ச்சுக்கீசியப் படையெடுப்பில் இடிக்கப்பட்டு விட்டதால் இந்தக் கோவிலின் அம்மன் சன்னதியே சக்தி பீடமாக வணங்கப்படுகிறது என்றும் கூறுகிறார்கள். இவ்வாலயத்தின் வரலாற்றினை திட்டவட்டமாக வரையறுத்துக் கூறமுடியவில்லை என்றாலும் இவ்வாலயத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுகள், பழைய சாசனங்கள், கர்ண பரம்பரையாக வழங்கிவரும் கதைகள், அக்கதைகளோடு தொடர்புடையதாய் தற்போது ஆலயத்திலிருக்கும் விக்கிரகங்கள், தகளி, வாகனம் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு முதலாம் இராசேந்திர சோழன் காலமாகிய பதினோராம் நூற்றாண்டில் இவ்வாலயம் சிறப்புற்றிருந்திருக்க வேண்டுமென்று சரித்திரப் பேராசிரியர் செ.குணசிங்கம் குறிப்பிட்டுள்ளார். பங்குனி உத்தரத்தைத் தீர்த்தோற்சவ நாளாகக்கொண்டு பத்து நாட்கள் மகோற்சவம் நடைபெறுகிறது. ஒன்பதாம் நாள் இரதோற்சவம் நடைபெற்று, பங்குனி உத்தரத்தன்று அம்பாள் கோணேசப் பெருமாள் எழுந்தருளியிருக்கும் கோணமலையின் அடிவாரத்திலுள்ள கடற்கரையில் அதிகாலையில் தீர்த்தமாடுவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24632).

11226

திருச்செந்தூர்ச் சிலேடை வெண்பா (மூலமும் உரையும்). க.கணபதிப்பிள்ளை. கரவெட்டி: க.கணபதிப்பிள்ளை, தமிழ்க் குடில், நெல்லியடி கிழக்கு, 1வது பதிப்பு, ஐப்பசி 2008. (கரவெட்டி: லெட்சுமி ஒப்செற் பிறின்டேர்ஸ், நாவலர் மடம்).

v, 101 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18x12 சமீ.

செய்யுட் பிரபந்தங்கள், உரை நூல்கள், ஆய்வு, தமிழ்த்திறன் என விரியும் பரப்பில் இவர் பதினேழு ஆக்கங்களை க.கணபதிப்பிள்ளை அவர்கள் எமக்கு வழங்கியுள்ளார். அவரது 18ஆவது நூல் இதுவாகும். திருமுருக கிருபானந்த வாரியாரால் செந்தமிழ்ச்செல்வர் என்ற பட்டமும், இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களால் சிலேடைக் கவிரத்தினம் என்ற பட்டமும் இவருக்குக் கிடைத்தவை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61167).

11227

திருத்தொண்டர் பெரிய புராணம். சேக்கிழார் (மூலம்), ஆறுமுக நாவலர் (பதிப்பாசிரியர்). சிதம்பரம்: முதலியார் ஜீ.சுப்பிரமணியம், தருமபரிபாலகர், சைவப்பிரகாச வித்தியாசாலை, 18வது பதிப்பு, 1953. (சென்னை: வித்தியாநுபாலன யந்திரசாலை).

46 +306 பக்கம், விலை: ரூபா 2-8-0, அளவு: 19.5x12.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணம் அல்லது திருத்தொண்டர் புராணம் என்பது சேக்கிழார் அவர்களால் பெருங்காப்பிய இலக்கணங்கள் பலவும் கொண்டதாக இயற்றப்பெற்ற சைவ காப்பியமாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகை எனும் நூலை முதல் நூலாக கொண்டும், சுந்தரமூர்த்தி சுவாமிகளை காப்பிய தலைவராகக் கொண்டும், அவர் போற்றிய சைவ அடியார்களின் வாழ்க்கை வரலாற்றினையும் இந்நூலில் விவரிக்கிறார். அத்துடன் திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பி எழுதிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை மூலநூல்களாகக் கொண்டும், இரண்டாம் குலோத்துங்கச் சோழனிடம் அமைச்சராக இருந்த சேக்கிழார் பல ஊர்களுக்கும் சென்று திரட்டிய தகவல்களைக் கொண்டும் பெரிய புராணம் எழுதப்பெற்றுள்ளது என்பது வரலாறாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11049).

11228

திருமந்திரம் சில முத்துக்கள். நாகேந்திரம் கருணாநிதி. லண்டன் E6 2HD: 109, Caledon Road, East Ham, 1வது பதிப்பு, 2017. (லண்டன்: ஜே.ஆர். பிரின்ட்).

113 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

திருமந்திரம் கூறும் கருத்துக்களில் நூலாசிரியர் தேர்ந்தவற்றை எடுத்து விளக்கும் நூல் இது. திருமந்திரம், திருமூல நாயனார் (திருமூலர்), இறைதத்துவம், குருவே சிவம், மனித நேயம், சமய தத்துவம், ஆன்ம ஈடேற்றம், உடல் கூற்று அறிவியல், தீட்டு, வானியல் அறிவியல், மருத்துவம், கல்லாமை, அறம், அட்டாங்க யோகம், ஆசனங்கள், மூச்சுப் பயிற்சி (பிராணாயாமம்), ஆதாரங்கள் (சக்கரங்கள்), கரு உற்பத்தி, பிறர்மனை நாடாமை, மது அருந்தாமை, நிலையற்ற செல்வம், நிலையில்லா இளமை, நிலையற்ற வாழ்க்கை, இறைவனை அடைவதற்குரிய வழிமுறைகள் ஆகிய 24 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் நாகேந்திரம் கருணாநிதி, சைவசித்தாந்தத்தைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் ஐரோப்பிய சைவசித்தாந்த ரத்தினப் பயிற்சி மையமாகிய லண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தில் சைவசித்தாந்த ரத்தினம் பட்டம் பெற்றவர். தாயகத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் மயிலிட்டி வீரமாணிக்கதேவன் துறையைச் சேர்ந்த இவர், புலம்பெயர்ந்து லண்டன் ஈஸ்ட்ஹாம் பகுதியில் வாழ்ந்து வருகின்றார்.

11229

திருவாதவூரடிகள் புராணம். கடவுண் மாமுனிவர் (மூலம்), ஸ்ரீமத் ம.க.வேற்பிள்ளை (விருத்தியுரை). யாழ்ப்பாணம்: ம.வே.திருஞானசம்பந்தப் பிள்ளை, தமிழ்ப் போதகாசிரியரும் இந்து சாதனப் பத்திராசிரியரும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, 3வது பதிப்பு, 1939, 1வது பதிப்பு, 1895, 2வது பதிப்பு, 1915. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).

iv, 156 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 20.5x14.5 சமீ

இந்நூலின் முதற் பதிப்பு 1895இல் ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளையின் தந்தையாரும், சிதம்பரத்திலுள்ள நாவலர் கலாசாலைத் தலைமையாசிரியருமாயிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.க.வேற்பிள்ளையினால் எழுதி வெளியிடப்பட்டது. 1915இல் வண்ணார்பண்ணை எஸ்.எஸ்.சண்முகநாதன் அவர்களது புத்தகசாலையின் வாயிலாக இரண்டாம் பதிப்பு வெளிவந்தது. இவ்விரண்டாம் பதிப்பு, அக்காலத்தில் தமிழகத்தில் வழக்கிலிருந்த பல்வேறு திருவாதவூரடிகள் புராண நூல்களிலும், உரைகளிலும் இருந்த பாடபேதங்கள், விபரீத உரைகள் என்பவற்றைக் கண்டித்தும் முன்னைய பதிப்பைப் புதுக்கியும் வழங்கியிருந்தது. இரண்டாம் பதிப்பின் மீள்பதிப்பே இந்நூலாகும். இது சிறப்புப்பாயிரம், உரைப்பாயிரம், பாயிரம், மந்திரிச் சருக்கம், திருப்பெருந்துறைச் சருக்கம், குதிரையிட்ட சருக்கம், மண் சுமந்த சருக்கம், திருவம்பலச் சருக்கம், புத்தரை வாதில் வென்ற சருக்கம், திருவடி பெற்ற சருக்கம் ஆகிய இயல்களில் விரித்து எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2449).

11230

திருவாதவூரடிகள் புராணம்: பொருளுடன். கடவுண் மாமுனிவர் (மூலம்), சி.மருதபிள்ளை (உரையாசிரியர்). யாழ்ப்பாணம் : சைவமணி சி. மருதபிள்ளை, வட்டுக்கோட்டை, 1வது பதிப்பு, 1982. (அச்சக விபரம் தரப்படவில்லை).

196 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

கடவுள் மாமுனிவர் இயற்றிய திருவாதவூரடிகள் புராணம் 545 செய்யுட்களைக் கொண்டது. அளவில் இது சிறிய நூல். சுந்தரரும், சேக்கிழாரும் மாணிக்கவாசகரைப் பாடவில்லை. பின்னர் வந்த கடவுள் மாமுனிவர் அக்குறையைச் சரி செய்யும் வகையில் மாணிக்கவாசகர் வரலாற்றைப் பாடியதாகக் கருதுவர். சைவசித்தாந்தக் கருத்துகள் இதில் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்நூல் ஒரு தலபுராணமே ஆயினும் மாணிக்கவாசகரின் பெருமையைக் கூறுவதால் பெருமை பெறுகிறது எனலாம். இது மந்திரிச் சருக்கம், திருப்பெருந்துறைச் சருக்கம், குதிரையிட்ட சருக்கம், மண் சுமந்த சருக்கம், திருவம்பலச் சருக்கம், புத்தரை வாதில் வென்ற சருக்கம், திருவடி பெற்ற சருக்கம் ஆகிய ஏழு இயல்களில் விரித்து எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10286).

11231

தெய்வீகத் தேனமுதம். சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன். சங்கானை: திருமதி.சி. பாலகிருஷ்ணன், தேவாலய வீதி, 1வது பதிப்பு, மே 2002. (கொழும்பு 13: யூ.கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு).

xiv, 141 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

இந்நூல், விநாயகப் பெருமான், முருகன், அம்மையப்பர், ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி, ஸ்ரீ ராமர், ஆஞ்சநேயர், யோகர் சுவாமிகள், திருப்புகழ் அமிர்தம், தோத்திரமாலை ஆகிய பிரிவுகளில் ஆசிரியர் இயற்றிய பக்திப்பாடல்களின் தொகுப்பு. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40912).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11232

தேவி திருமுகம். இரா.மயில்வாகனம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு: திருமதி மங்கையர்க்கரசி மயில்வாகனம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1997. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

xxix, 164 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14 சமீ.

1990முதல் சைவ நூல்களை எழுதிவரும் இரா.மயில்வாகனம் சிந்தனைக் கோவை, ஒன்பதாம் திருமுறை ஒரு நோக்கு, திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, இரண்டாம் சிந்தனைக் கோவை, சைவசமயிகள் அறியாதிருந்த வைரவ மான்மியம் போன்ற நூல்களைத் தொகுத்து வழங்கியவர். இந்நூல் இவரது ஐந்தாவது நூலாகும். பராசக்தியாகிய உமையம்மை தன் சிறப்பியல்புகளினால் ஆன்மாக்களை இரட்சிக்கும் தன்மையானது மிக விளக்கமாய் பிரதிபலிக்கும் இந்நூலில் அகங்காரம் அழிவுக்கு வித்தாகும் என்னும் கோட்பாடு விளக்கிச் செல்லப்படுகின்றது. மேலும், தேவி திருமுகம், நம பார்வதி பதி, புராண ஆரம்பம், கர்வமடக்கிய காளிகாதேவி, அருணாசலத்தில் நடந்த விளையாட்டும் வினையும், வீணாகானத்தால் வேண்டியதைப் பெற்ற விச்சாவதி, தக்கன் தவமும் தன் தவமும் ஒக்க உணர்த்திய உமை, தன்நிகரில்லா தடாதகைப் பிராட்டி, பரமனை வாங்கிய பார்வதி, பாக்கியவதியான பார்வதி, மகளின் மாப்பிள்ளையைக் காணாது மதிமயங்கி மேலே இருந்த மேனை, தேவியின் தவமும் மஹிஷனின் மதிமயக்கமும், பரமனை வாங்கிய பார்வதியும் பங்கம் விளைத்த காமனும், ரதியின் வினையை நீக்கி பயனை அடைந்த பார்வதி, வாய்கொடுத்து வார்த்தையாடிய வேதியர் தேவியோடு வீடு செல்லுதல், தேவி திருமணம், இலட்சுமி உபாக்கியானம், அறியவேண்டிய அரி அரன் பிரமேந்திராதிகள், நாநிலம் கண்டறிந்த நாரதர், மூர்த்தி விசேடம், தல விசேடம், தீர்த்த விசேடம் ஆகிய 22 தலைப்புகளில் சுவைமிகு கதைகளாக இந்நூலை வழங்கியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16771).

11233

தோத்திரத் திரட்டு. விபுலானந்த அடிகளார் (மூலம்), ஈழத்துப் பூராடனார் (உரையாசிரியர்), அன்புமணி இரா.நாகலிங்கம் (பதிப்பாசிரியர்). கனடா: ஜீவா பதிப்பகம், 1108 Bay Street, Toronto, Ontario M5S 2W9, 1வது பதிப்பு, தை 1992. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், 1365 Midway Blvd, Unit No.24, மிஸிஸாகா L5C 2J5, ஒன்ராரியோ).

xxiii, 57 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13 சமீ.

முத்தமிழ் வித்தகர் அருட்திரு விபுலானந்த அடிகளார் தன் இளமைக்காலத்தில் காரேறு மூதூர் சாமிதாச மயில்வாகனன் என்ற பெயரில் யாத்தளித்த தோத்திரத்திரட்டு இதுவாகும். இதில் கணேச தோத்திர பஞ்சகம், மாணிக்கப் பிள்ளையார் இரட்டை மணிமாலை, சுப்பிரமணியசுவாமி இரட்டைமணிமாலை, கோதண்ட நியாயபுரிக் குமரவேணவமணிமாலை ஆகியவை திரட்டித்தரப் பட்டுள்ளன. இத்தோத்திரத் திரட்டிற்கான உரையை ஈழத்துப்பூராடனார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.த.செல்வராசகோபால் எழுதியுள்ளார். சுவாமி விபுலாநந்தர் (மார்ச் 27, 1892-ஜூலை 19, 1947) கிழக்கிலங்கையில் காரைதீவில் பிறந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றியவர். இலக்கியம், சமயம், தத்துவஞானம், அறிவியல், இசை முதலிய பல துறைகளில் கற்றுத் தேர்ந்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12708).

11234

நயினை நாகபூசணி அம்மன் நான்மணிமாலை. ச.வே.பஞ்சாட்சரம். யாழ்ப்பாணம்: கஜராம், மகிழினி, காவேரி, பாவிழி, மேலைவீதி, செகராசப் பிள்ளையார் கோவில், இணுவில் மேற்கு, 1வது பதிப்பு, 2017. (கனடா: கிரபிக்லேண்ட் அச்சகம், 285 புரோகிரஸ் அவென்யு, ஸ்காபரோ).

31 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

இணுவிலைச் சேர்ந்த பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள் ஓர் அருட்கவி. இலங்கை, தமிழகம், பிரித்தானியா, சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய நாடுகளிலுள்ள பல்வேறு ஆலயங்களின் பேரில் நூற்றுக்கும் மேற்பட்ட திருப்பாமாலைகளை இயற்றிப் பாடியுள்ளார். புராணம், திருப்பள்ளி எழுச்சி, பிள்ளைத் தமிழ், தூது, துதி, அந்தாதி, பதிகம், சிந்து, வெண்பா, இரட்டைமணிமாலை, மும்மணிக் கோவை, நான்மணி மாலை, என ஐம்பதுக்கும் மேற்பட்ட இலக்கிய வடிவங்களில் இவர்களது பக்தி இலக்கியங்கள் அமைந்துள்ளன. இந்நூலில் நயினை நாகபூசணி அம்மன் பேரில் பாடிய நான்மணிமாலை என்ற பிரபந்தம் இடம்பெற்றுள்ளது. நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம், மணிமேகலை காவியம் தோன்றிய கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கும் முற்பட்ட பழமை வாய்ந்த புனிதத் தலமாகும். மணிமேகலாத் தெய்வத்துடனும் புத்தபீடிகையுடனும் புனித கோமுகித் தடாகத்துடனும் தொடர்புடையதாக மணிபல்லவம் என வழங்கப்பட்ட இத்தலம் காலம் காலமாக ஈழத்தவராலும் தமிழக மக்களாலும் வழிபாடு செய்யப்பட்டு வந்ததாக வரலாறு உள்ளது. இந்நான்மணிமாலையில் பண்டிதர் அவர்கள் பல்வேறு வரலாற்றுத் தகவல்களை விபரிக்கிறார். போர்த்துக்கீசரின் காலத்தில் ஆலயம் இடிக்கப்பட்டு அதன் கற்கள் சங்குமாவடியில் அவர்கள் கட்டிய கோட்டைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடுகிறார். கடலில் எறியப்பட்ட சிலைகளை பாதுகாக்க ஊரவர்கள் பட்ட பாடுகள் இப்பிரபந்தத்தில் உணர்வு பூர்வமாக வடிக்கப்பட்டுள்ளன.

11235

நயினை முருகன் பிள்ளைத் தமிழ். சு.சி.கதிரவேலு. வவுனியா: சு.சி.கதிரவேலு, கலாச்சாரப் பேரவை, செட்டிகுளம், 1வது பதிப்பு, 1976. (யாழ்ப்பாணம்: விபுலானந்த அச்சகம்).

xii, 80 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 18x12.5 சமீ.

ஆய்வுரை, அணிந்துரை, பதிப்புரை, நூன்முகம், சிறப்புப் பாயிரம், அவையடக்கம் என்பனவற்றைத் தொடர்ந்து நயினை முருகன் பிள்ளைத்தமிழ் 10 பருவங்களாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்துப் பாடப்பெற்றுள்ளது. காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம், சீற்றிற் பருவம், சிறுபறைப் பருவம், சிறுதேர்ப் பருவம் என இது 10 பருவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2412).

11236

நல்லூர் முருகன் இணைமணி மாலை. வை.க.சிற்றம்பலம். அளவெட்டி: கவிஞர் வை.க.சிற்றம்பலம், ஆசிரியர், 1வது பதிப்பு, 1994. (சுன்னாகம்: நீரஜா அச்சகம்).

14 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 20.5x13.5 சமீ.

சிவநெறிப் புலவர் வை.க.சிற்றம்பலம் அவர்கள் இயற்றிய இணைமணி மாலை என்ற இப்பனுவல் வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய இரண்டும் இணைந்துவரப் புனையப்பட்டது. அந்தாதித் தொகையாக அமைந்துள்ளது. நல்லூர் முருகன் மீது அவர் கொண்ட ஆரா அன்பு அவர் கவிதைக்கு ஊற்றமாக விளங்குகின்றது. நூறு பாக்கள் கொண்டு நல்லூரானைப் போற்றுகின்றார். முத்தும் பவழமும் பொருந்தப்பெற்ற இணை மணி மாலைபோன்று வெண்பாவினாலும் கட்டளைக் கலித்துறையாலும் நல்லூரானுக்கு இணைமணிப் பாமாலை புனைந்துள்ளார். குரு வணக்கமாக இரண்டு பாடல்களும் அவையடக்கமாக ஒரு பாடலும் பாடி, நூலினைத் தொடக்குகின்றார். நல்லூர் என்னும் தலைத்தின் தன்மை பற்றி முதலாவது பாடலில் கூறுகின்றார். இறைவனிடம் வேண்டுதல் செய்யும் கவிஞர் இன்று மக்கள் படும் துயரையும் எண்ணி எல்லோருக்குமாக அவனை வேண்டுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34944).

11237

நீர்கொழும்பு-தலாதுவை ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் திருவூஞ்சற் பாமாலையும் பக்திப் பதிகமும். ந.தருமலிங்கம். நீர்கொழும்பு: சி.சிவநேசன், நாதன் டெக்ஸ்டைல்ஸ், 1வது பதிப்பு, வைகாசி 2001. (நீர்கொழும்பு: சாந்தி அச்சகம், 14 சீ, பெர்னாந்து அவென்யூ).

12 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

நீர்கொழும்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள தலாதுவை கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீதேவி கருமாரி அம்மன் பேரிற் பாடப்பெற்ற திருவூஞ்சற் பாமாலையும் பக்திப் பதிகமும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24632).

11238

பக்திப் பாமாலை. தம்பு. துரைராசா. கொழும்பு 4: திருக்கேதீச்சரம் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபை, திருவாசகம், 31ஏ, ஜானகி ஒழுங்கை, பம்பலப்பிட்டி, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vii, 102 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 22x14 சமீ.

திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தின் ஸ்தாபகர் உயர்திரு சபாரத்தினம் சுவாமிகள் பற்றிய பாடல்களை முதலாவதாகவும், சைவம் வளர்த்த ஞானிகள், ரிஷிகள், மகான்களின் வாழ்வியல் செய்திகளை, அவர்களின் திருவருட்செயல்களை, ஈழத்து இந்து ஆலயங்களை சிறு குறிப்புரைகளாகவும், புகைப்படங்களாகவும், கட்டுரைகளாகவும் இந்நூலின் பிற்பகுதியில் அறிந்துகொள்ள முடிகின்றது. திருக்கேதீச்சரம் திருவாசக மடம் தாபகர் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபை சார்பாக அதன் செயலாளர் தம்பு துரைராஜா இத்தொகுப்பினை மேற் கொண்டுள்ளார். சபாரத்தினம் சுவாமிகள், வை.க.சிற்றம்பலம் சுவாமிகள், சுவாமி நிரஞ்சனானந்தர், பெரியானைக்குட்டி சுவாமிகள், சித்தானைக்குட்டி சுவாமிகள், நவநாதச் சித்தர், மகாதேவ சுவாமிகள், குழந்தைவேல் சுவாமிகள், சடையம்மா சுவாமிகள், அருளம்பல சுவாமிகள், போன்ற பல சித்தர் பெருமகான்கள் பற்றிய தகவல்கள் இந்நூலிலுள்ள கட்டுரைகளின் வாயிலாக அறியமுடிகின்றது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36709).

11239

பக்திரசம் கனிந்த கீர்த்தனாமலர்: முதலாம் பாகம்.கே.கே.கிருஷ்ணபிள்ளை. கொழும்பு: வே.பாலசுப்பிரமணியம், உரிமையாளர், கோபா மில்ஸ் லிமிடெட், 1வது பதிப்பு, 1983. (அச்சுவேலி: ராஜா அச்சகம்).

(8), 68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இரத்மலானையில் உள்ள கொழும்பு இந்துக் கல்லூரியின் இசை ஆசிரியராகப் பணிபுரியும் இந்நூலாசிரியர் தான் அப்பாடசாலயின் தியான மண்டபத்தில் சிவகாமி அம்பாள் சமேதராக வீற்றிருக்கும் நடராஜப் பெருமான் முன்னிலையில் 19 ஆண்டுகளாக பக்திரசம் கனிந்த பாடல்களைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்தும் அவர்களுடன் சேர்ந்து பாடியும் பிரார்த்தனை செய்வதை வழமையாகக் கொண்டவர். மேலும் நடராஜப்பெருமான், சிவகாமி அம்பாள், கதிர்காமம், செல்வச்சந்நிதி, நல்லூர், இன்னும் ஆறுபடை வீடுகள் என அருள்பாலிக்கும் முருகப்பெருமான் மீதும் மனமுருகிப் பாடிய பாடல்களில் ஒரு பகுதியை நூலுருவில் வெளியிட்டுள்ளார். நான், எனது என்ற செருக்கற்ற உணர்வும், ஆறுதல்தரும் ஆறுமுகத் தெய்வத்திடம் முற்றாகச் சரணடைந்த செயலும், பாடல்களைப் பொருளுணர்ந்து ஓதுவார்க்குப் புலப்படும் பொருளாழமும் சொற்றிறனும் தீந்தமிழும் பக்திச்சுவையும் பாடல்களில் பரிமளிக்கின்றன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37512).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11240

பன்முக நோக்கில் பதினொராம் திருமுறை. க.இரகுபரன், ஸ்ரீ பிரசாந்தன் (தொகுப் பாசிரியர்கள்). கொழும்பு 4: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1 காலி வீதி, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xiv, 328 பக்கம், விலை: ரூபா 800., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-955-9233-45-9.

1992 முதல் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆண்டுதோறும் ஆய்வரங்குகளை ஒழுங்குசெய்து நடத்தி வருவதுடன் அவ்வாய்வரங்கக் கட்டுரைகளைத் திரட்டி கட்டுரைகளை நூல்வடிவிலும் வெளியிட்டு வருகின்றது. அவ்வகையில் 21ஆவது ஆய்வரங்கு "பன்முக நோக்கில் பதினொராம் திருமுறை" என்னும் தலைப்பில் இடம்பெற்றது. பதினொராம் திருமுறை தொடர்பான 24 கட்டுரைகளை இந்நூலில் காணமுடிகின்றது. இவற்றை தெய்வமும் தலமும், ஆளுமையும் கோட்பாடும், ஆக்கமும் அமைப்பும் ஆகிய மூன்று பிரிவுகளில் தொகுத்து வழங்கியிருக்கின்றனர். பதினொராம் திருமுறை விநாயகர் பிரபந்தங்கள் (எஸ்.கேசவன்), பதினொராம் திருமுறையில் சிவன் (நா.வாமன்), பதினொராம் திருமுறைச் சிவத்தலங்கள் (சி.ரமணராஜா), திருமுருகாற்றுப்படையில் ஆறுபடைவீடுகள் (சாந்தி நாவுக்கரசன்), தலபுராண நோக்கில் பதினொராம் திருமுறை (ச.பத்மநாபன்), திருமுருகாற்றுப்படை வெளிப்படுத்தும் முருக வழிபாட்டு முறைகள் (வ.குணபாலசிங்கம்), சூழலியல் நோக்கில் திருமுருகாற்றுப்படை (ஸ்ரீ பிரசாந்தன்) ஆகிய கட்டுரைகள் தெய்வமும் தலமும் என்ற முதற் பிரிவின்கீழ் இடம்பெற்றுள்ளன. பதினொராம் திருமுறையும் சைவசித்தாந்தமும் (சிவ மகாலிங்கம்), பட்டினத்துப் பிள்ளையார் உலகியலும் இறையுண்மையும் (நா.ஞானகுமாரன்), நம்பியாண்டார் நம்பியின் சமய நோக்கு (தி.செல்வமனோகரன்), சேரமான் பெருமாள் நாயனாரின் பக்திநலம் (ஏ.என். கிருஷ்ணவேணி), நக்கீரதேவ நாயனாரின் சமயநோக்கு (சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்), காரைக்கால் அம்மையாரும் அவரது திருப்பதிகங்களும் (பெருமாள் சரவணகுமார்), காரைக்கால் அம்மையாரின் முத்திக்கோட்பாடு (பொ.சந்திரசேகரம்), பட்டினத்தார் பாடல்களில் அறம் (வி.பவநேசன்), ஆகிய கட்டுரைகள் ஆளுமையும் கோட்பாடும் என்ற இரண்டாவது பிரிவின்கீழ் இடம்பெற்றுள்ளன. பதினொராம் திருமுறையில் திருவிரட்டைமணிமாலைகள் (துரை.மனோகரன்), பதினொராம் திருமுறை மும்மணிக் கோவைகள் (றூபி வலன்ரீனா பிரான்சீஸ்), பதினொராம் திருமுறையில் அந்தாதி இலக்கியங்கள் (செல்வரஞ்சிதம் சிவசப்பிரமணியம்), பதினொராம் திருமுறையில் கலம்பகம் (எம்.எம்.ஜெயசீலன்), யாப்பியல் நோக்கில் பதினொராம் திருமுறை (ஈஸ்வரநாதபிள்ளை குமரன்), பதினொராம் திருமுறை அமைப்பு முறையும் நோக்கும் (செ.யோகராசா), பதினொராம் திருமுறைத் தொகுப்பும் பதிப்பும் (ம.நதிரா), பதினொராம் திருமுறையில் இலக்கிய உத்தி (சோ.பத்மநாதன்), காரைக்கால் அம்மையார் பதிகங்களின் பெயர் குறித்து நிலவும் தவறான புரிதல் (க.இரகுபரன்) ஆகிய கட்டுரைகள் ஆக்கமும் அமைப்பும் என்ற இறுதிப் பிரிவின்கீழ் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11241

பிரபந்தமாலை: ஆய்வரங்கச் சிறப்புமலர்-2016. க.இரகுபரன், தேவகுமாரி ஹரன் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 4: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1 காலி வீதி, 1வது பதிப்பு, 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).

x, 119 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18 சமீ.

1992 முதல் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆண்டுதோறும் ஆய்வரங்குகளை ஒழுங்குசெய்து நடத்தி வருவதுடன் அவ்வாய்வரங்கக் கட்டுரைகளைத் திரட்டி கட்டுரைகளை நூல்வடிவிலும் வெளியிட்டு வருகின்றது. அவ்வகையில் 21ஆவது ஆய்வரங்கு "பன்முக நோக்கில் பதினொராம் திருமுறை" என்னும் தலைப்பில் இடம்பெற்றது. திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள் தொகுத்த பதினொராம் திருமுறை பன்னிரு சான்றோர்களால் இயற்றப்பெற்ற நாற்பது சிற்றிலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டு சைவ பிரபந்தத் திரட்டாய் பொலிந்து நிற்கின்றது. ஏனைய திருமுறைகளுக்கு இல்லாத சிறப்பு ஒன்று இதற்கு உண்டு. ஆலவாய் இறைவர் இயற்றிய திருமுகப் பாசுரம் இந்த தொகை நூலின் முதலில் திகழ்கிறது. இவ்வாய்வரங்கின் முன்னோடியாக வெளிவந்துள்ள இம்மலரில் வித்துவான் க.வெள்ளைவாரணன் எழுதிய பதினொராந் திருமுறை, திருக்கயிலாய ஞானவுலா, திருமுருகாற்றுப்படை, திருவாலவாயுடையார், கோபப் பிரசாதம், கல்லாட தேவ நாயனார், கபிலதேவ நாயனார், பரணதேவநாயனார், இளம்பெருமானடிகள் ஆகிய கட்டுரைகளுடன், பதினொராந் திருமுறையில் இலக்கிய வகை (சோ.ந.கந்தசாமி), நம்பியாண்டார் நம்பி (மு.அருணாசலம்), காரைக்காலம்மையார் (க.நா.சுப்ரமண்யம்), காரைக்கால் அம்மையார் பாடல்களில் கடவுட்கொள்கை (மேகலா சிவகுமாரன்), அழியாத அன்பின் மேலீடாய் பதினொராம் திருமுறை (ச.ஹோபிநாத்) ஆகிய 14 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

11242

பிரஹ்மஸ்ரீ தாளையான் சற்குருநாதன் தோத்திரமும் உரையும். பொன்.அ.கனகசபை (உரையாசிரியர்). கொழும்பு: தாளையான் புக்கறா (சாதுக்கள்) டிறஸ்டிகள், 2வது பதிப்பு, ஒக்டோபர் 1988, 1வது பதிப்பு, ஜுன் 1967. (கொழும்பு 12: தாளையான் அச்சகம், 115 மெஸெஞ்சர் வீதி).

(8), 44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிகளில் தென் இந்தியாவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் "நம்புதாளை" என்ற ஊரில் பிரஹ்மஸ்ரீ செய்குநெய்னா முஹம்மது (தாளையான் சுவாமி) அவதரித்தார். 12 ஆண்டுகள் முத்துப்பேட்டையில் நிஷ்காமிய தவமியற்றிய பின்னர் கொழும்புக்கு வந்து இங்கே நிரந்தரமாகக் குடியேறினார். அவரை "கொழும்பாண்டவர்கள்" என்று இன மத பேதம் கடந்து மக்கள் ஆன்மீக வழியில் பின்பற்றினார்கள். அடியார்கள் சமயம் கடந்த "மோன சமரஸம்" எத்தகையதென்ற அனுபூதிவாய்க்கப் பெற்றார்கள். கொழும்பில் சாதுக்களும் பக்கீர்களும் வாழ்வதற்கென "தாளையான் அச்சகத்தை" சுவாமிகள் உருவாக்கினார். அவர் 1955 ஓகஸ்ட் 3ம் திகதி கொழும்பிலேயே மகாசமாதியை அடைந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்மலானை விமான நிலையத்திற்கு அருகாமையில் கந்தவளை என்னும் பூங்காவில் வணக்கத்துக்குரிய அவரது சமாதி உள்ளது. தாளையான் சுவாமிகளின் அடியார்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பாடிய தோத்திரப் பாக்களைத் தொகுத்து "பிரஹ்மஸ்ரீ தாளையான் சற்குருநாதன் தோத்திரம்" 1967இல் வெளிவந்தது. அதிலுள்ள பாக்களுக்கு புங்குடுதீவுப் பண்டிதர் வித்துவான் பொன். அ.கனகசபை அவர்களால் உரையெழுதப்பட்டு இரண்டாவது பதிப்பாக இந்நூல் உரையுடன் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2453).

11243

புசல்லாவை நயப்பனைத் தோட்டம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவூஞ்சற் பாமாலையும் பக்திப் பாடல்களும். ந.தருமலிங்கம். நீர்கொழும்பு: கே.பாலன், ராதிகா டெக்ஸ்டைல்ஸ், 1வது பதிப்பு, வைகாசி 2001. (நீர்கொழும்பு: சாந்தி அச்சகம், 14 சீ, பெர்னாந்து அவென்யூ).

12 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

மலையகத்தில் கம்பளைப் பிரதேசத்தின் புசல்லாவை நயப்பனை தோட்டத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமுத்துமாரி அம்மன் பேரிற் பாடப்பட்ட திருவூஞ்சற் பாமாலையும் பக்திப் பாடல்களும் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24632).

11244

போற்றி அருளுக. செ.தனபாலசிங்கன். கொழும்பு 6: செ.தனபாலசிங்கன், இல. 17, 55ஆம் ஒழுங்கை, 1வது பதிப்பு 1976. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).

xxv, (2), 125 பக்கம், விலை: ரூபா 6., அளவு: 18.5x12.5 சமீ.

ஆசிரியரின் இந்துசமய இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு. போற்றி அருளுக, சக்தியை வியந்தது, பேதித்து வளர்த்து எடுக்கும் பெய்வளை, மழை பெய்யாமல் இருக்க முடியுமா?, சிவசக்தி, சக்தி தழைக்கும் சிவம், அமாவாசையில் பூரண சந்திரன், வெற்றிச் சக்தி வீரமாகாளி, கோதையின் இலட்சியக் காதல், திருப்பாவை ஆகிய 10 தலைப்புக்களில் இவை எழுதப்பட்டுள்ளன. ஆசிரியர், திருவெம்பாவையின் இறுதிப்பாட்டில் பலமுறை வரும் "போற்றி அருளுக" என்ற தொடரை நூலின் தலைப்பாகவும் திருவெம்பாவையின் சிறப்பை எடுத்துக்கூறும் முதற் கட்டுரையாகவும் தந்துள்ளார். இறுதி இரண்டு கட்டுரைகளைத் தவிர மற்றவை அம்பிகையின் பெருமையை எடுத்துக்காட்டுவன. சக்தியை வியந்தது என்பது அம்பிகை வெவ்வேறு சக்தியாக நின்று பல்வேறு பெயர்களில் பல தொழில்களை ஆற்றுவதையும் காளிதாசன், பாரதி ஆகிய கவிஞர்கள் அம்பிகையைப் பாராட்டியிருக்கும் பாங்கையும் விளக்குகின்றார். பேதித்து வளர்த்தெடுக்கும் பெய்வளை என்ற கட்டுரையில் மாணிக்கவாசகரின் வரலாற்றை முதலிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகம், திருக்கோவையார் பாடியதை அடுத்ததாகவும் கூறி பிறகு சிவசக்தியே ஆன்மாவின் பக்குவநிலைக்கு ஏற்றபடி வேறுபட்டு நின்று தொழிற்படுதலையே "பேதித்து வளர்த்தெடுத்தல்" என்று மணிவாசகர் குறிப்பிடுவதாகத் தெரிவிக்கிறார். மழை பெய்யாமல் இருக்க முடியுமா என்ற கட்டுரை கற்புடை மகளிர் மழை வேண்டுமென்றால் பெய்யச் செய்யும் ஆற்றலுடையவர்கள் என்று பண்டை நூல்களின் வாயிலாக எடுத்தியம்பி, பின்னர் கன்னிப் பெண்கள் மழை வேண்டுவதற்காகப் பாடும் பாடல்களை திருப்பாவை, திருவெம்பாவை ஆகிய இரண்டிலும் இருந்து எடுத்தாண்டு விளக்குகின்றார். சக்தி தழைக்கும் சிவம் என்னும் கட்டுரையில் சங்க இலக்கியங்களில் சிவபெருமானையும் சக்தியையும் பற்றி வரும் கருத்துக்களையும் சக்தியின் அருட்பெருக்கத்தையும் சௌந்தர்யலஹரி யில் அம்பிகைக்குக் கூறும் ஏற்றங்களையும் விளக்குகின்றார். அமாவாசையில் பூரண சந்திரன் என்ற உரை, அபிராமிப் பட்டரின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லி அபிராமி அந்தாதியை விளக்குகின்றது. வெற்றிச் சக்தி வீரமாகாளி-நவராத்திரி வழிபாடு, மாகாளியின் தத்துவம், சிலப்பதிகாரத்தில் கொற்றவையைப் பற்றி வரும் நுட்பமான கருத்துக்களையும் பற்றிப் பேசுகின்றது. இறுதி இரண்டு கட்டுரைகள் முறையே கோதையின் இலட்சியக் காதலையும் திருப்பாவையின் சிறப்பையும் இலக்கிய நயத்துடன் விளக்குகின்றன. தமிழக அறிஞர் கி.வா. ஜகந்நாதன் அவர்களின் விரிவான 18 பக்க அணிந்துரை நூலுக்கு மேலும் அணி சேர்த்துள்ளது.

11245

மகாமாரித் தேவி திவ்விய கரணி. சி.கணபதிப்பிள்ளை (பதிப்பாசிரியர்). மட்டக்களப்பு: சி.கணபதிப்பிள்ளை, தமிழாசிரியரும் சோதிடரும், அட்டப்பள்ளம், 1வது பதிப்பு, 1971. (யாழ்ப்பாணம்: விவேகானந்தா அச்சகம்).

(28), xvi, 247 பக்கம், விலை: ரூபா 5.50, அளவு: 21.5x14 சமீ.

பூர்வகாலம் முதல் வாய்மொழிமூலமாகவும் ஓலைச்சுவடிகள் மூலமாகவும் கோவில்களில் சேமித்து வைத்திருந்த தேவ வழிபாட்டுப் பத்ததிகளிலுள்ள கிழக்கிலங்கைக் கவிதைச் செல்வங்கள் இவை. பல ஏடுகளைச் சேகரித்துப் பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் (திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)அணிந்துரையுடன் கூடியது. இத்தொகுப்பில் மாரியம்மன் சரிதை, விநாயகர் காப்பு, பிள்ளையார் பிரார்த்தனை, எக்கலாதேவி அம்மன் பிரார்த்தனை, சரஸ்வதி பிரார்த்தனை, பராசக்தி அகவல், மாரியம்மன் தவநிலை, மாரியம்மன் அகவல், மாரியம்மன் காவியம், முத்துமாரி காவியம், சிங்காரபுர மாரியம்மன் காவியம், கல்லாற்று மாரியம்மன் காவியம், பூங்காவனத் தாயார் தாலாட்டு, சிவமுத்துமாரி தாலாட்டு, மாரியம்மன் ஊஞ்சல், மாரியம்மன் திருக்குளுத்தி, மாரியம்மன் வீதியுலா, மாரியம்மன் அம்மானையாடல், மாரியம்மன் குளிர்ந்தருளல், மாரியம்மன் வாழிப்பாடல், கடல்நாச்சி அம்மன் காவியம், கடல்நாச்சி அம்மன் பள்ளு, கண்ணகை அம்மன் பிரார்த்தனை, தம்பிலுவில் கண்ணகை அம்மன் காவியம், கண்ணகை அம்மன் அகவல், அங்கணாமைக்கடவை கண்ணகை அம்மன் காவியம், வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் தோத்திரம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் காவியம், பட்டிமேட்டுக் கண்ணகை அம்மன் காவியம், பட்டிமேட்டுக் கண்ணகை அம்மன் மழைக் காவியம், பொற்புறாவந்த காவியம், தாண்டவன்வெளிக் கண்ணகை அம்மன் காவியம், கறுப்பாகி அம்மன் தோத்திரம், காமாட்சி அம்மன் தோத்திரம், மீனாட்சி அம்மன் தோத்திரம், நவகோடி சக்தி தோத்திரம், பேச்சியம்மன் துதி, பேச்சியம்மன் அகவல், பேச்சியம்மன் காவியம், பேச்சியம்மன் தாலாட்டு, திரௌபதி அம்மன் துதி, திரௌபதி அம்மன் தாலாட்டு, திரௌபதி அம்மன் புலம்பல், விஷ்ணு தியானம், ஐயனாரகவல், திரௌபதி அம்மன் காவியம், திருமகள் பிரார்த்தனை, விஷ்ணு அகவல், ஸ்ரீராமர் காவியம், ஐயனார் காவியம், நாகதம்பிரான் பிரார்த்தனை, நாகதம்பிரான் காவியம், அங்காள பரமேஸ்வரி தோத்திரம், பத்திரகாளி அகவல், காளியம்மன் காவியம், காளியம்மன் பஞ்சகம், காளியம்மன் தாலாட்டு, கடல்நாச்சி அம்மன் குளுத்தி, கடல்நாச்சி அம்மன் உலா, கடல்நாச்சி அம்மன் குளிர்ந்தருளல் ஆகிய கவிதைச் செல்வங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18354).

11246

மண்டூர்ப் பிள்ளைத்தமிழ். வி.விசுவலிங்கம். களுவாஞ்சிக்குடி: களுவாஞ்சிக்குடி பிரதேச கலாசாரப் பேரவை, 1வது பதிப்பு, மார்ச் 1988. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம்).

72 பக்கம், விலை: ரூபா 10.00, அளவு: 17.5x12.5 சமீ.

மண்டூர் முருகன்மேல் பாடிய பிள்ளைத்தமிழ். மண்டூர் முருகனைப் பிள்ளையாகக் கண்டு காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வாரானைப் பருவம், அம்புலிப் பருவம், சிறுபறைப் பருவம், சிற்றிற் பருவம், சிறுதேர்ப் பருவம் ஆகிய பத்து அத்தியாயங்களில் பிள்ளைத்தமிழ்ச் செய்யுள்கள் தரப்பட்டுள்ளன. மண்டூர் கந்தசுவாமி கோயில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு நகரின் தெற்கே சுமார் 20 மைல்கள் தூரத்தில் மண்டூர் கிராமத்தில் மட்டக்களப்பு நீர்ப்பரப்பை ஒட்டி அமைந்துள்ள ஒரு தொன்மை வாய்ந்த முருகன் கோவில். இது தில்லை மண்டூர் அல்லது சின்னக் கதிர்காமம் என்றும் சிறப்பாக அழைக்கப்படுகிறது. இக்கோவில் 1215-1248 காலப்பகுதியில் கட்டப்பட்டது. கோவில் அமைப்பு கதிர்காமம் போன்று அமைந்துள்ளது. வெளி முற்றத்தில் இரண்டு சிறிய கோயில்கள் உள்ளன. ஒன்று தெய்வயானைக்கும் மற்றையது வள்ளிக்கும் ஆகும். பிள்ளையார், மற்றும் நாகதம்பிரானுக்கும் கோயில்கள் உள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12884).

11247

மனதைக் கவர்ந்த கண்ணன். ஆர்.ஏ.கே. விஜயரெட்ணம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு: இ.ஆ.க. விஜயரெட்ணம், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 6: Fast Printers, 289 - ½ காலி வீதி).

90 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்களிலும் இதிகாசங்களிலும் காணப்படும் கதைகளையும் செவிவழியாக வழக்கிலுள்ள கண்ணன் தொடர்பான கதைகளையும் தொகுத்து இந்நூலை ஆக்கியுள்ளார். கண்ணனின் குழந்தைப் பருவ லீலைகள் முதல் பகவானின் பகவத்கீதை வரை பல விடயங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. மகாலட்சுமி தோன்றி மகாவிஷ்ணுவிற்கு மாலையிடல், சிவபெருமான் பார்வதியை மணம்புரிதல், பிரம்மனின் ஆணவம் சிவனால் அடக்கப்பட்டது, தேவர் தலைவன் இந்திரனை நல்வழிப்படுத்தல், சிவபெருமான் காப்பாற்றப்படுதல், நாராயண மந்திரத்தின் மகிமை, சனகாதியரின் சாபத்தால் இரணியன், இராவணன், கம்சனாகப் பூமியில் பிறத்தல், பூலோகத்தில் அதர்மம் அதிகரித்தலும் அதை அடக்க அவதரித்த கிருஷ்ணரும், குழந்தைக் கண்ணன் தனது வாய்க்குள் பிரபஞ்சத்தைக் காட்டுதல், உரலோடு கட்டப்பட்ட கண்ணன் இரு பெரிய மரங்களை வேரோடு சாய்த்தல், குழந்தை கண்ணனுக்கு பழம் கொடுத்தவள் கூடையில் இரத்தினக் கற்கள் இருத்தல் என இன்னோரன்ன 36 தலைப்புகளில் இக்கதைகள் இடம்பெற்றுள்ளன. கதைகளுக்கு மேலதிகமாக கீதா சுருக்கம் என்னும் பகுதி தத்துவத் துளிகளாக வழங்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46500).

11248

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம். சுவாமி மாணிக்கவாசகர். வவுனியா: வை.செ.தேவராசா, 59, வைரவர் கோவில் வீதி, வயிரவ புளியங்குளம், 1வது பதிப்பு, மார்கழி 1995. (சென்னை 600002: காந்தளகம், 834, அண்ணா சாலை).

224 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x12.5 சமீ.

திருவாசகத்தை 75 முறைக்கும் மேல் முற்றோதல் செய்ததை முன்னிட்டு இறைபணிச் செம்மல் திரு. வை.செ.தேவராசா அவர்கள் வெளியிடும் திருவாசக நூல் இது. சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல், அன்னைப் பத்து, குயிற்பத்து, திருத்தசாங்கம், திருப்பள்ளியெழுச்சி, கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் திருப்பதிகம், செந்திலாப்பத்து, அடைக்கலப்பத்து, ஆசைப்பத்து, அதிசயப்பத்து, புணர்ச்சிப் பத்து, வாழாப்பத்து, அருட்பத்து, திருக்கழுக்குன்றப் பதிகம், கண்டபத்து, பிரார்த்தனைப் பத்து, குழைத்தபத்து, உயிருண்ணிப் பத்து, அச்சப்பத்து, திருப்பாண்டிப்பதிகம், பிடித்தபத்து, திருவேசறவு, திருப்புலம்பல், குலாப்பத்து, அற்புதப்பத்து, சென்னிப்பத்து, திருவார்த்தை, எண்ணப்பதிகம், யாத்திரைப் பத்து, திருப்படையெழுச்சி, திருவெண்பா, பண்டாயநான்மறை, திருப்படையாட்சி, ஆனந்தமாலை, அச்சோப்பதிகம் ஆகிய மணிவாசகர் பதிகங்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11249

மாவைப் பிள்ளைத் தமிழ். மு.கந்தையா. மாவிட்டபுரம்: முத்தமிழ்க் கலை மன்றம், 1வது பதிப்பு, 1967. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xxiv, 168 பக்கம், தகடுகள், விலை: ரூபா 2.50, அளவு: 19x13 சமீ.

பிள்ளைத்தமிழ் என்பது தமிழில் எழுந்த பிரபந்தங்களுள் ஒன்று. சிவனைத் தவிர்ந்த பிற தெய்வங்கள் மீதும், மக்கள் மீதும் பிள்ளைத் தமிழ் பாடுதல் மரபு. பாட்டுடைத் தலைவனை குழந்தையாகப் பாவித்து வெவ்வேறு பருவங்களில் அக்குழவி புரியும் குறும்பையும் ஆடல்களையும் கண்டும் கேட்டும் உணர்ந்தும் மகிழ்ந்தும் சித்திரிப்பதே இவ்விலக்கியம். மாவிட்டபுரம் கந்தனைப் பிள்ளையாகக் கண்டு காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வாரானைப் பருவம், அம்புலிப் பருவம், சிற்றிற் பருவம், சிறுபறைப் பருவம், சிறுதேர்ப் பருவம் ஆகிய பத்து அத்தியாயங்களில் பிள்ளைத்தமிழ்ச் செய்யுள்கள் தரப்பட்டுள்ளன. முன்னதாக மாருதப்புரவீக வல்லியும் மாவிட்டபுரமும் என்ற சுருக்கமான வரலாற்றுக் கட்டுரையும் இடம் பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34108).

11250

மானிப்பாய் மருதடி விநாயகர் சதகமாலை. சிவசிதம்பரம் திருநாவுக்கரசு. இளவாலை: புலவர் சிவசிதம்பரம் திருநாவுக்கரசு, பழநி ஆனந்த இல்லம், சித்திரமேழி, 1வது பதிப்பு, 1995. (கொழும்பு 12: நியூ வீனஸ் அச்சகம்).

33 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 20x14 சமீ.

ஈழத்து நகுலேஸ்வர வட இலங்கை வலய மேழியூர் சைவப் புலவர் சிவசிதம்பரம் திருநாவுக்கரசு அவர்கள் அருளிச்செய்த பாமாலை. மருதடி விநாயகர் கோயில் சிவயோகி ஒருவரால் ஸ்தாபிக்கப்பட்டுப் பூசிக்கப்பட்ட புண்ணிய தலமாகும். இவ்வாலயம் மருதடி விநாயகர் ஆலயம் அல்லது மருதடிப் பிள்ளையார் கோவில் என வழங்கப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டம், மானிப்பாய் கிராமத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் அருகில் மருத மரங்கள் சூழ்ந்து காணப்படுவதால் இவ்வாலயம் மருதடி விநாயகர் ஆலயம் என அழைக்கப்படுகின்றது. பஞ்சமுகவிநாயக விக்கிரகமும் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. கோயில் மேற்கு நோக்கியுள்ளது. விநாயகர் மூலஸ்தானத்தில் ஆகுவாகனாகக் காட்சியளிக்கிறார். இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சவம் 18 நாட்கள் உற்சவமாக சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று இடம்பெறும் இரதோற்சவத்திற்கு அமைய இடம்பெறுவது வழமை. இக்கோவிலின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளக்கூடியதான முதல் ஆவணம் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட தாகும். உள்ளூர் மக்கள் வழிபடுவதற்காக இக்கோவிலுக்கான காணியை 1856ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணி வழங்கினார். அந்த நிலத்துக்கு பிள்ளையார் திடல் என்ற பெயரிடப்பட்டது. பிற்காலத்தில் இது தனியார் கோவில் ஆக்கப் பட்டுவிட்டது. கோயிலின் தென் திசையில் உள்ள திருக்குளம் "பிள்ளையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளம்" என வழங்கப்பட்டது. கோயிலில் உறையும் பஞ்சமுகவிநாயகர் ஐந்து தொழிலைச் செய்கின்றவரும் ஐம்பொறிகளை அடக்கி ஐந்தெழுத்தை ஓதும் அன்பர்களை ஆள்கின்றவரும் ஐந்து மூர்த்திகளுக்கும் அதிபரான பரம்பொருள் தாமே என்பதைக் குறிப்பதாக அமைந்துள்ளது. திரிபுராசுரனால் துன்புற்ற தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட சிவபெருமான் யுத்தத்திற்கு முதலில் விநாயகரைத் தியானம் செய்கிறார். விநாயகர் சிவபெருமானுடைய ஐந்து திருமுகங்களிலிருந்தும் தோன்றி பஞ்சமுக விநாயகராகக் காட்சியருளுகின்றார். சிவபெருமான் திரிபுராசுரனை அழித்தார் என ஒரு கதை விநாயக புராணத்திலுள்ளது. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் "மருதடி விநாயகர் பதிகம்" பாடியுள்ளார். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34953).

11251

முருகவேள். இ.இரத்தினம். கொழும்பு 4: பராஸ் வெளியீடு, 5 ரம்யா வீதி, இணை வெளியீடு, கொழும்பு 4: செய்யுட்களம், 18, ஆதேசு இடம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1976. (கொழும்பு 10: கவிதா பப்ளிக்கேஷன், 27, 2/2, ஜயந்த வீரசேகர மாவத்தை).

26 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

தமிழறிஞர் இளையதம்பி இரத்தினம் அவர்கள் இயற்றிய செய்யுள் தொகுதி இதுவாகும். புலவர் சிவங் கருணாலய பாண்டியனாரின் மாணாக்கரான புலவர் இ.இரத்தினம் அவர்கள் தன் குருவுடன் இணைந்து காந்தியம் இதழில் ஆசிரியப் பணியாற்றியவர். இணுவிலைச் சேர்ந்த இவர் 17.8.1916இல் பிறந்து 21.3.1981இல் இறைபதமெய்தியவர். முருக பக்தரான இவர் இணுவில் கந்தன் மீது தீராக்காதல் கொண்டவர். தன் இறுதிக்காலத்தில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்துடன் நெருங்கிய தொடர்புகொண்டு தமிழ்ப்பணியாற்றிவந்தவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 120880).

11252

யாழ்ப்பாணத்து நல்லைத் திருவருக்கமாலையும் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த சரவணைத் திருப்பள்ளம்புல யமகவந்தாதியும். சரவணையூர் ஆ.தில்லைநாதப் புலவர். வேலணை: ஆ.தில்லைநாதப் புலவர், சரவணை, 1வது பதிப்பு, 1961. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

18 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 21x14 சமீ.

சரவணையூர் ஆறுமுகம் தில்லைநாதப் புலவர் நமசிவாயம் என்ற நாகலிங்க உபாத்தியாயரிடமும், தம்பு உபாத்தியாரிடமும் பாடங்கேட்டவர். இவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளைகளின் கற்பனை வளம் நிறைந்த பாடல்களில் திளைத்து, அவற்றினை அடியொற்றிப் பல செய்யுட்களை ஆக்குந் திறமை பெற்றிருந்தார். யமகம், திரிபு, அந்தாதி, சித்திரக் கவிகளை அநாயாசமாக இயற்றிக் கொண்டிருப்பார். தில்லை, நல்லூர், கதிர்காமம், நயினை முதலிய தலங்களுக்கும் தீவுப்பகுதியில் உள்ள கோவில்கள் பலவற்றிற்கும் இவர் பதிகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியுள்ளார். ஆங்காங்கு சில தனிப்பாடல்களையும் நிந்தாஸ்துதியாகப் பாடியுள்ளமை சிறப்பாகும். இவர் இயற்றிய பிரபந்தங்களைத் தொகுத்து யாழ். இலக்கிய வட்டம் பிரபந்தத் திரட்டு என்ற காத்திரமான நூலொன்றினை வெளியிட்டுள்ளது. இவரைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்துப் பொற்கிழி வழங்கிய விழாவொன்றினை வேலணைப் பாரதி இளைஞர் கழகம் 1968 இல் எடுத்திருந்தது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2425).

11253

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பத்திரகாளி சமேத வீரபத்திரர் பாமாலை. முருகேசு சவுந்தரசண்முகநாதன். வட்டுக்கோட்டை: நாகமுத்து முருகேசு குடும்பத்தினர், மூளாய் வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).

12 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

பிட்டியம்பதியானது, சங்கரத்தையில் ஓர் புண்ணிய பூமியாகும். இது சங்கரர் வழிவந்த பெருமையினார் பரம்பரைக்குரியது. இப்பதியில் அன்றுதொட்டு இன்றுவரை ஒரு புளிய விருட்சம் நின்று வருகின்றது. இவ்விருட்சத்தில் பறவைகள் கூடியிருந்து சுற்றியுள்ள நிலங்களின் விளைபொருட்களை அழித்துவந்தன. அதனை முன்னோராகிய முதன்மையினார் கண்டு அவ்விருட்சத்தை வெட்டி வீழ்த்த எண்ணிய அக்காலத்தில், வட்டுக்கோட்டையில் கிறிஸ்தவ ஆலயம் கட்டும் வேலையில் ஈடுபட்டு நின்ற தச்சன் ஒருவனை அழைத்து அவ்விருட்சத்தைத் தறிக்கும்படி ஏவினர். அவன் அதை மறுத்தும் கேளாது தானே அவ்வேலையைச் செய்ய முயன்றார். அப்போது ஒரு நாக சர்ப்பம் அவரை எதிர்த்துத் துரத்தியது. துரத்தவே ஓடி இழைத்து ஓர் பனைமர நிழலில் நின்றார். அந்நாகம் சற்று தொலைவில் தலைதூக்கி ஆடி நின்றது. இதைக் கண்ட பெரியார் தாம் அபசாரம் செய்துவிட்டதை நினைந்து வருந்தித் தமது இல்லம் மீண்டார். அன்றிரவே அழகுமிக்க அம்மை அவர் கனவில் தோன்றி தனக்கு அவ்விடத்தில் ஓர் நிழல் இயற்றும்படி கூறி மறைந்தார். இந்நிழலிலே இன்று வளர்ந்து நாம் காணும் பிட்டியம்பதியில் கோவில் வடிவம் தோன்றியது என்பது ஓர் கர்ணபரம்பரைக் கதை. இக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் பத்திரகாளி சமேத வீரபத்திரர் பேரில் பாடப்பெற்ற பாமாலைகளின் தொகுப்பு இந்நூலாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29023).

11254

வண்ணை வைத்தீசர் ஒருதுறைக்கோவை (நாணிக்கண் புதைத்தல்). க. வைத்தியலிங்கபிள்ளை. யாழ்ப்பாணம்: க.வைத்தியலிங்கபிள்ளை, வண்ணார் பண்ணை, 1வது பதிப்பு, 1913. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சுக்கூடம், வண்ணார் பண்ணை).

(6), 8+17 பக்கம், விலை: 30 சதம், அளவு: 21x13.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒத்த குலமும், ஒத்த பருவமும், ஒத்த நலமும், ஒத்த குணமும் உடையராகிய ஒரு கோமகனும் ஒரு கன்னிகையும் தத்தம் பரிவாரஞ்சூழப் புறப்பட்டுத் தெய்வச்செயலாய் ஒரு பூஞ்சோலையை அடைந்தனர். அங்கே இருவரும் தமியராய்த் தெய்வச் செயலின்வழி எதிர்ப்பட் டொருவரையொருவர் நோக்கினர். நோக்கினவளவில் இருவர் மாட்டும் கழிபெருங் காதலுண்டாவதாயிற்று. இளங்குமரன் கண்டு இவள் தெய்வமாதோ வென்று ஐயுற்றுப் பின் மானுட மகளெனத் துணிந்து, அவள் குறிப்புணர்ந்து தன்வசமின்றிக் கலந்து, பலதுறைப்பட்ட அன்பின் செய்திகளை நிகழ்த்தினன். இருவரும் ஒருவரையொருவர் காதலித்தாராயினும், பரிவாரமறியாது களவிலொழுகுவ தன்றி வெளிப்பட வொழுகுதலைத் தவிர்த்தனர். மெய்தொட்டுப் பயிலுவர். புனைந்துரைப்பர். இடம்பெற்றுத் தழுவுவர். தலைவன் வழிபாடு செய்வன். தலைவி மறுப்பள். தலைவன் அவள் கூட்டத்தை விரும்புவன். தலைவி மறுத்து நாணத்தாற் றனது கண்களைப் பொத்துவள். இதுவே "நாணிக்கண்புதைத்தல்" என்னும் துறையாம். இத்துறைமேற் புலவர்கள் பெரும்பாலும் ஒவ்வொரு செய்யுளே பாடிப் போயினர். அமிர்தகவிராயர் நானூறு பாடினதும் இத்துறையேயாம். பாரகவி யாகிய அவர்க்கு அது அரிதன்று. நம்போல்வார்க்கு அரிதிலு மரிதேயாம். ஆயினும், யாமும் சில செய்ய முயல்வோமென முயன்று நூறு செய்தாம், செய்துமென்ன? ஆணிமுத்துக்கு முன் போலிமுத்தாயின. அமிர்தகவிராயரது அற்புத கவிகள் பின்னும் பெருமைபெறுமாறு எம் புன்கவிகளை வெளியிடுகின்றோம்." (ஆசிரியரின் முகவுரை). ஒத்த தலைவனும் தலைவியும் தெய்வத்தால் தம்முள் எதிர்ப்பட்டுக் காதல் கொண்டு, பின்பு கற்பு வாழ்க்கையில் ஒன்றி இல்லறம் நடத்தும் இனிய நிகழ்ச்சிகளைக் கோத்துத் தரும் நூலே கோவை எனப்படும். அகப்பொருள் செய்திகளை அடிப்படையாகக் கொண்டமையால் இது "அகப்பொருள் கோவை" என அழைக்கப்படும். ஐந்து திணைகளின் நிகழ்வுகளை நிரல்படக் கூறுவதால் இதனை, "ஐந்திணைக்கோவை" எனவும் அழைப்பார்கள். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3095).

11255

வண்ணையந்தாதி, வண்ணைநகரூஞ்சல், சிங்கைநகரந்தாதி, சித்திரக் கவிகள். சி.ந.சதாசிவ பண்டிதர். சிங்கப்பூர்: வண்ணை சி.ந.சதாசிவ பண்டிதர், 1வது பதிப்பு, ஏப்ரல் 1887.(சிங்கப்பூர்: சி.கு.மகுதூம் சாகிபு, தீனோதயவேந்திரசாலை).

(4), 38 பக்கம், சித்திரகவிகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

இந்நூலில் காமாட்சியம்மை பேரிற் பாடிய வண்ணையந்தாதி (பக்கம் 1-10), காமாட்சியம்மை பேரிற் பாடிய வண்ணைநகரூஞ்சல் (பக்கம் 11-16), சுப்பிரமணிய சுவாமி பேரிற் பாடிய சிங்கைநகரந்தாதி (பக்கம் 17-32), சிங்கப்பூர்ச் சுப்பிரமணிய சுவாமிகள் பேரிற் பாடிய சித்திர கவிகள் (பக்கம் 33-38) ஆகிய பெயர்களில் இயற்றப்பட்ட நான்கு பக்தி இலக்கியங்கள் இடம்பெற்றுள்ளன. சிங்கப்பூர் தேங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோட்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் 1859இல் எழுப்பப்பெற்ற கோயில் மூலவராகிய தண்டாயுதபாணியே அக்காலத்தில் சுப்பிரமணிய சுவாமிகள் என வழங்கப்பெற்றது. சிங்கப்பூரில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சுப்பிரமணிய சுவாமி எனப்படும் முருகப்பெருமானைத் தலைவனாகக் கொண்டு அவர் மீது பாடப்பெற்ற சிங்கை நகர் அந்தாதி, சித்திர கவிகள் என்னும் இரண்டு பக்தி இலக்கியங்களையும் கி.பி.1887-இல் இயற்றிய சி.ந.சதாசிவ பண்டிதர் சிங்கப்பூர் தமிழ்ப்படைப்பின் முன்னோடியாவார். இந்நூல்களுக்குச் சிறப்புப் பாயிரமாகச் சிதம்பரம் அப்பியாச மடத்தலைவராகிய ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமிகள் இயற்றிய நிலை மண்டில ஆசிரியப்பாவும், சிங்கை நகர் அந்தாதியில் பண்டிதரே பாடிய ஆக்கியோன் பெயர், அவையடக்கம் ஆகியனவும், வண்ணையந்தாதியில் பண்டிதர் பாடிய ஆசிரிய வணக்கச்செய்யுளும் வண்ணை அந்தாதியில் காணப்படும் யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகப்பெருமான் அவர்கள் மாணாக்கரும் மருமகரும் வித்வ சிரோன்மணியாகிய ஸ்ரீமத் ந.ச.பொன்னம்பலம்பிள்ளை அவர்களுடைய மாணாக்கருள் ஒருவராகிய ஸ்ரீமத் வி. செல்லையர் அவர்கள் சொல்லிய வெண்பாக்கள் இரண்டும் சதாசிவ பண்டிதர் வாழ்க்கை பற்றிய செய்திகளை சிறிதளவில் அறிய உதவுகின்றன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4086).

11256

வல்லிபுரத்திற் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமாயவப் பெருமானின் மும்மணிமாலையும் போற்றிவிருத்தமும். சிவ.பஞ்சாட்சரக் குருக்கள். யாழ்ப்பாணம்: அருணாசலம் அத்தியார், அதிபர், சைவப்பிரகாச வித்தியாசாலை, நீர்வேலி, 1வது பதிப்பு, ஆவணி 1931. (பருத்தித்துறை: சரஸ்வதி யந்திரசாலை).

(10), 22+22 பக்கம், தகடுகள், விலை: சதம் 15., அளவு: 21x14 சமீ.

யாழ்ப்பாணம் வல்லிபுரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மாயவப் பெருமானின் பேரிற் பாடப்பெற்ற பக்தி இலக்கியம். இவை யாழ்ப்பாணம் நீர்வேலிச் சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபராகிய ஸ்ரீமான் அருணாசலம் அத்தியார் அவர்களின் வேண்டுகோளின்பேரில் புலோலி கிழக்கு பிரமஸ்ரீ சிவ பஞ்சாட்சரக் குருக்கள் அவர்களால் இயற்றியருளப்பெற்றது. வல்லிபுர ஆழ்வார் கோவில் வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறைப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. துன்னாலை, புலோலி, வராத்துப்பளை, கற்கோவளம் ஆகிய கிராமங்களுக்கு அணி சேர்க்கும் வகையில், இக்கிராமங்களுக்கு மத்தியில் இக்கோவில் அமைந்துள்ளது. பருத்தித்துறையில் இருந்து கிட்டத்தட்ட 4 மைல் தொலைவில் இக்கோவில் உள்ளது. ஆர்ப்பரிக்கும் கடலோசை, வெள்ளை மணற்பரப்பு, பசுமையைக் கொடுக்கும் விருட்சங்கள் என்று இயற்கை அன்னை அரவணைக்கும் ஒரு கோவிலாக ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் விளங்குகிறது. வரலாற்றுப் பெருமை கொண்ட இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமையப்பெற்ற புராதன தலமாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25452).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11257

விநாயகப்ரபாவம். வே.கனகசபாபதி ஐயர். யாழ்ப்பாணம்: பிரம்மஸ்ரீ வே.கனகசபாபதி ஐயர், நல்லூர், 1வது பதிப்பு, 1910. (சிங்கப்பூர்: றாபில்ஸ் பிரஸ்).

(17) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x12.5 சமீ.

யாழ்ப்பாணத்து நல்லூர் சைவ உபந்நியாசகரும் சிவபுராணப் பிரசாரகருமான நூலாசிரியர், விநாயகப் பெருமான் பேரில் இயற்றியருளிய பக்தி இலக்கியம் இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 0473. அது தமிழ்நாடு, தரமணி ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்திலும் உள்ளது. பதிவு எண். 042067).

11258

வேலணை மேற்கு சங்கத்தார்கேணி ஆதி வைரவப் பெருமானின் வைரவப் பிரசாதம். இந்திரா திருநீலகண்டன். கனடா: குலசேகரம்பிள்ளை வரதராஜன், நடராஜா செல்வக்குமார், 1வது பதிப்பு, பெப்ரவரி 2014. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

108 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

வேலணை மேற்கு சங்கத்தார்கேணி ஆதி வைரவப் பெருமான் (வேலணை ஞானவைரவப் பெருமான்) கோவிலின் கும்பாபிஷேகம் 06.02.2014 அன்று நடந்தேறிய வேளையில் வெளியிடப்பட்ட நூல்.

11259

ஸ்ரீதேவி கருமாரி அம்மன் அந்தாதி மாலை. நீர்கொழும்பு ந.தருமலிங்கம். நீர்கொழும்பு: ந.தருமலிங்கம், 195, கடற்கரை வீதி, 1வது பதிப்பு, மார்கழி 2000. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

80 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 18x12 சமீ.

ஸ்ரீ கருமாரி அம்மன்மேற் பாடப்பெற்ற அந்தாதி வகை பக்தி இலக்கியம் இதுவாகும். தேவி கருமாரியம்மன் சூரியக் கடவுளுக்குக் குறி சொல்வதற்காகச் சென்றதாகவும், அவரை அடையாளம் காணாத சூரியக் கடவுள் உரிய மரியாதை தராமல் அவரை அவமதித்து விட்டதாகவும், இதனால் கோபமடைந்த தேவி கருமாரியம்மன் சூரியக் கடவுளின் இடம் விட்டகன்றவுடன் சூரியனின் ஜொலிப்பும் பிரகாசமும் மறைந்து உலகம் இருண்டு விட்டதாகவும், பின்னர் சூரியபகவான் அம்மனிடம் மன்னிப்பு கேட்டதாகவும், அதற்கேற்ப வாரத்தின் 7ஆவது நாளை தேவிகருமாரித் தினமாகக் கடைபிடிக்கும்படி அம்மன் கேட்டுக்கொண்டதாகவும் புராணக்கதை உள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39121).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11260

ஸ்ரீதேவி கருமாரி அம்மன் திருவூஞ்சற் பாமாலையும் பக்திப் பதிகமும். ந.தருமலிங்கம். நீர்கொழும்பு: சாந்தி மயில்வாகனம்,குமரன் குடில், 6, முத்துமாரியம்மன் வீதி, 1வது பதிப்பு, 2000. (நீர்கொழும்பு: சாந்தி அச்சகம், 14 சீ, பெர்னாந்து அவென்யூ).

12 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

கொழும்பு ஸ்ரீ கதிரேசன் வீதி, ஸ்ரீதேவி கருமாரி அம்மன் பேரில் பாடப்பட்ட திருவூஞ்சல் பாமாலை. சாந்தி பதிப்பகத்தினரின் 19ஆவது வெளியீடாக வெளியிடப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24632).

11261

ஸ்ரீமாமாங்க விநாயகர் பதிகம். வித்துவான் அ.சரவணமுத்தன் (மூலம்), ஈழத்துப் பூராடனார் (உரையாசிரியர்), அன்புமணி இரா. நாகலிங்கம் (பதிப்பாசிரியர்). கனடா: நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், தொரன்ரோ, ஒன்ராரியோ, 2வது பதிப்பு, 1991, 1வது மூலப் பதிப்பு, 1915. (கனடா: ஜீவா பதிப்பகம், றிப்ளக்ஸ் அச்சகம், 1108 Bay Street, Toronto, Ontario, M5S 2B3).

xix, 17 பக்கம், விலை: கனேடிய டொலர் 2., அளவு: 21x14 சமீ.

இது மட்டக்களப்பு கோட்டைமுனை ஸ்ரீமான் சாமிதாசமயில்வாகனனார் அவர்களின் மாணாக்கன் அடியார்க்கடியான் அ.சரவணமுத்தன் இயற்றிய ஸ்ரீ மாமாங்க விநாயகர் பதிகம். இதன் மூலப்பதிப்பு, 1915ம் ஆண்டு ஆனிமாதம் ஸ்ரீமான் க.பெ.செல்லையா பிள்ளை அவர்களால் யாழ்ப்பாணம் வயாவிழான் ஐயசிறீ சாரதா பீடேந்திரசாலையில் அச்சிடப்பட்டிருந்தது. அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் ஆலயம் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பிலுள்ள அமிர்தகழி எனும் இடத்திலுள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்த இவ்வாலயத்தின் கர்ப்பக்கிருகத்தில் சிவலிங்கம் உள்ளது. எனினும் விநாயகர் அங்கியுடனே சிவலிங்கம் காட்சி தருவதால் அடியார்களால் மாமாங்கப் பிள்ளையார் என்றே மூலமூர்த்தி போற்றப்படுகின்றார். கர்ப்பக் கிருகத்தோடு அந்தராளம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தம்ப மண்டபம், கொடித்தம்பம், வசந்த மண்டபம், முன் மண்டபம் என்பவற்றோடு நவக்கிரகங் களுக்கு தனியான கோயிலுடன் கம்பீரமாக இவ்வாலயம் காட்சியளிக்கிறது. மாமாங்கேஸ்வரர் ஆலயம் அடர்ந்த மரங்களின் நடுவே அமைதியான சூழலில் நெய்தல் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. ஆலயத்திற்கும் அதன் வடபுறத்தேயுள்ள அமிர்தகழி எனும் ஊர்மனைக்கும் இடையில் தாமரைப் பூக்கள் நிறைந்த மாமாங்கத் தடாகம் உள்ளது. இதுவே இவ்வாலயத்தின் தீர்த்தக் குளமாகும். இக்குளத்திலேயே ஆண்டு தோறும் ஆடி அமாவாசை தினத்தன்று மாமாங்கேஸ்வரரின் தீர்த்தத் திருவிழா இடம்பெறுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11133).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11262

ஸ்ரீலலிதா சகஸ்திரநாமம்:அன்னையின் அருட்பேராயிரம். க.வை.ஆத்மநாத சர்மா (தமிழாக்கம்). திருக்கோணமலை: செல்லையா இராமச்சந்திரன், திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன், இல. 22, கீழ் வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (திருக்கோணமலை: ஸ்ரீகணேசா அச்சகம்).

28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

ஆதிபராசக்தியை ஸ்ரீ லலிதாம்பிகை என்ற திருநாமத்தால் வாழ்த்தும் லலிதா ஸஹஸ்ர நாமம் என்னும் வடமொழி நூலினை தமிழில் ஆசிரியப்பாவாக அமைத்து மொழிபெயர்த்தவர் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ க.வை. ஆத்மநாத சர்மா அவர்களாவார். 3.5.1964இல் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலையில் வெளியிடப்பெற்ற இந்நூலின் போதிய நூலியல் தரவுகளற்ற பின்னைய மீள்பதிப்பே இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25452).

297 இஸ்லாம்

11263

ஈமானியப் பேரொளிகள். எம்.எம்.எம். நூறுல்ஹக். சாய்ந்தமருது 5: மருதம் கலை இலக்கிய வட்டம், 129 B, ஒஸ்மான் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2009. (கல்முனை: அன்-நூர் பிரின்டர்ஸ்).

xvi, 88 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-8105-02-3.

ஊடகவியல்துறையில் சிறப்புக் கல்வி பயின்ற எம்.எம்.எம். நூறுல்ஹக் பார்வை, உதயம், சங்கமம், இடி ஆகிய வார இதழ்களின் உதவி ஆசிரியராகவும், முஸ்லிம் குரல் பத்திரிகையின் பிரதி ஆசிரியராகவும், அட்டாளைச்சேனையிலிருந்து வெளிவரும் எழுவான் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றியவர். தீவும் தீர்வுகளும் (1988), சிறுபான்மையினர் சில அவதானங்கள் (2002), முஸ்லீம் பூர்வீகம் (2006) ஆகிய மூன்று நூல்களாலும் நன்கு அறியப்பெற்றவர். ஈமானியப் பேரொளிகள் என்ற இந்த இஸ்லாமிய நூலில் முஹம்மது நபி(ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் தரிசனம், அவுலியாக்கள் ஆகிய மூன்று சுடர்கள் வெளிப்படுத்தப் படுகின்றன. நபி(ஸல்) அல்லாஹ்வின் இறைநேசர்கள், அல்லாஹ்வின் தரிசனம், இவ்வொளிகள் சமூகத்தில் புரையோடியுள்ள சிந்தனைச் சிதறல்களுக்கு அல்குர் ஆன், ஹதீஸ், இஸ்மா, கியாஸ், அடிப்படையிலும் நியாயம், தர்க்கவியல் அடிப்படையிலும் தம் கருத்தை நிலைநாட்டியுள்ளன. முஹம்மது நபி(ஸல்) என்ற பகுதியில் ஆதியும் இறுதியுமான நபி என்ற தலைப்பில் தொடங்கி, ஸலவாத் ஓர் இபாதத் என்ற தலைப்பு ஈறாக பத்து உபதலைப்புகளில் விளக்கி எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11264

எதிரொலியும் மறையந்தாதியும். அப்துல் காதர் லெப்பை. கொழும்பு: துறைமுகங்கள் அபிவிருத்தி, முஸ்லீம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, புகையிரதநிலைய வீதி).

vi, 90 பக்கம், விலை குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 955-8806-07-2.

சிறந்த சிந்தனையாளரும், கவிஞருமான கவிஞர் அப்துல் காதர் லெப்பை (1913-1984) கிழக்கிலங்கையின் காத்தான்குடிக் கிராமத்தைத் தாயகமாகக் கொண்டவர். இருபதாம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க ஈழத்து முஸ்லிம் கவிஞர்களுள் ஒருவர். இவர் 1913 செப்டெம்பர் 7 ஆம் நாள் காத்தான்குடியில் பிறந்தார். 1934 ஆம் ஆண்டு பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய இவர் 1943 ஆம் ஆண்டில் தலைமையாசிரியராகப் பதவியுயர்வு பெற்றார். 1965 ஆம் ஆண்டு கிண்ணியாவில் நடைபெற்ற இஸ்லாமியக் கலை இலக்கிய விழாவில் இவருக்கு "கவிஞர் திலகம்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. உமர் கய்யாம் பாடல்களின் மொழிபெயர்ப்பான "ரூபாய்யாத்" இவருக்கு இலங்கை சாஹித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக் கொடுத்தது. 1984 அக்டோபர் 7 ஆம் நாள் அமரத்துவமடைந்த இக் கவிஞரால் எழுதப்பெற்று அச்சுருவில் வெளிவராதிருந்த எதிரொலி, மறையந்தாதி, நவீன சிந்தனைகள் ஆகியவற்றின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஒரு ஆசிரியராகப் பணியாற்றிய இவர் கல்வித்துறையினரால் பெரிதும் போற்றப்பட்டவர். அமரர் அப்துல் காதர் லெப்பை ஒரு கவிஞராகவும் ஆழமான சிந்தனையாளராகவும் விளங்கியவர். இஸ்லாமியரிடையே ஏகத்துவம் எனப்படும் தௌஹீதின் பூரணத்துவத்தை இலக்கியச் சாந்துபூசி மக்கள் மத்தியில் கொண்டு சென்றவர். மௌலானா றூமி, அல்லாமா இக்பால், ஜலாலுதீன் ஆப்கானி போன்றோரின் தௌஹீத் பற்றிய சிந்தனைகளின்பால் ஈர்க்கப்பட்டு அவற்றினைத் தன் கவிவல்லமையால் பாக்களாக "எதிரொலி" யில் வழங்கியுள்ளார். துறைமுகங்கள் அபிவிருத்தி, முஸ்லீம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் ஆதரவுடன் 2002 ஒக்டோபர் 22,23,24ஆம் திகதிகளில் கொழும்பில் நடாத்திய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் இந்நூல் வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27427).

11265

என் நோக்கில் இஸ்லாம். சு.வித்தியானந்தன். கண்டி: தமிழ்மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, ஜனவரி 1991. (சென்னை-01: புஸ்ரா ஏஜென்சீஸ்).

(8), 72 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12.5 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் இஸ்லாம் தொடர்பாக எழுதிய கட்டுரைகளும், ஆற்றிய உரைகளும் இந்நூலில் ஒன்பது இயல்களின் வழியாகப் பதிவுபெறுகின்றது. இவை அன்பின் வழி, இஸ்லாமியக் கலையும் பண்பும், இஸ்லாமியரும் தமிழிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பிரபந்த வகைகளும், இஸ்லாமிய நாடோடிப் பாடல்கள், இஸ்லாமியர் தமிழ்த் தொண்டு, நாச்சியார் மான்மியம், உயிர்நாடி-தமிழ், புத்துணர்வு, முஸ்லிம்களும் தமிழும் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன. இது கல்ஹின்ன தமிழ் மன்றத்தின் 60வது வெளியீடு. இந்நூலுடன் தன் 60வது வெளியீட்டை நினைவுகூரும் வகையில் கல்ஹின்ன தமிழ்மன்றம் வைரமலர் ஒன்றினையும் வெளியிட்டிருந்தது. பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களைக் கௌரவிக்கும் வகையில் இம்மலர் அமைந்திருந்தது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13376).

11266

காற்றில் செதுக்கிய கருவூலங்கள்: தூதர்வழித் தூய மொழி. ஆ.மு.ஷரிபுத்தீன் (மூலம்), லுணுகலை ஸ்ரீ (தொகுப்பாசிரியர்). மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 1வது பதிப்பு. மே 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xiv, 87 பக்கம், விலை: ரூபா 400., 21.5x14.5 சமீ., ISBN: 978-955-0112-03-5.

புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களின் 574 வெண்பாக்களின் தொகுப்பினை அன்னாரது 108ஆவது அகவையை முன்னிட்டு அன்னை வெளியீட்டகம் வெளியிட்டுள்ளது. ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்கள், வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் திருநபி வாய்மொழிகளை (ஹதீஸ்) செய்யுளாக எழுதியும், எழுத இயலாதபட்சத்தில் பிறரைக்கொண்டு பதிவு செய்தும் வைத்திருந்தார். இலங்கை வானொலியில் முஸ்லீம் நிகழ்ச்சிகளின்போது கூறப்படும் ஹதீஸ்களை வைத்து அன்றன்றே படுக்கைக்குப் போகும்வேளைகளில் எளிமையான செய்யுள் வடிவில் அவற்றை எழுதிவைத்துவிடுவார். அத்தகைய 1500 கருவூலங்களில் இருந்து தேர்ந்து 574 செய்யுள்களை இந்நூலாக்கத்திற்கு லுணுகலை ஸ்ரீ பயன்படுத்தியுள்ளார்.

11267

நபிகள் பெருமானார் (ஸல்). ஏ.யூ.முஹம்மது அப்துல் கரீம். கல்முனை: இஸ்லாமிய இலக்கியப் பணிமனை, வில்லா பறகத், சாய்ந்தமருது 3, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1978. (கொழும்பு 9: எஸ்.எச்.நிலாப்தீன், I.P.C.Printing Press, 320, என்.எம்.எம். ஈஷாக் மாவத்தை).

(11), 12-108 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

இஸ்லாமிய போதனையை பெருமானாரின் வாழ்க்கை வரலாற்றுடன் இணைத்து இங்கு கவிதைவடிவில் வடித்திருக்கிறார். நபிகள் பெருமான் பிறப்பு, அண்ணல் முஹம்மத் அனாதையாதல், சிந்தனையால் சிறப்படைந்த செம்மல், எழிலரசி கதிஜாவும் ஏந்தலும், வரலாறு கண்ட மணவிழா, நபியென நிரூபணம் பெறல், இறைவன் கட்டளை இறங்குகிறது, இஸ்லாத்தின் இணையற்ற போதனைகள், தொடர்ந்து வந்த துன்பங்கள், அபிசீனியாவில் அடைக்கலம் புகுதல், அபூஜஹில் அடைந்த ஆக்ரோஷம், உமர் இஸ்லாத்தில் சேரல், அபூதாலிபின் மரணம், மலர்க்கொடி கதீஜா மரணம் அடைதல், தாயிபில் பட்ட துயரம், இன்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைக்கும் இரு மணங்கள், விண்ணேற்றம் கண்ட அண்ணல், நபிகள் மதினா செல்லல், அண்ணல் இல்லத்துள் குறைஷியர், குகையின் அருகில் கொடியோர்கள், அலியாரும் மதீனா சேர்ந்தார், மதலோனைத் தொழுத முதல் பள்ளி, குறைஷியர் யுத்தம் செய்யவந்தனர், இறை கட்டளை மீண்டும் வருகின்றது, பத்றுப் போர்க்களம்-பத்றுப்போர், மரணத்திலும் வாய்மதம், பகைவர் பலம் இழந்தோடினர், வெற்றியில் திளைத்த சத்தியவேந்தர், (ரலி) பாத்திமா திருமணம், உஹத் யுத்தம், அகழியுத்தம், ஹுதைபிய்யா உடன்படிக்கை, மூத்தாயுத்தம், நபிகளார் மக்கா செல்லல், பேரரசு கண்ட பெருமானார், இறுதி ஹஜ்ஜில் எம்பெருமான், நபி பெருமான் மறைவு ஆகிய தலைப்புகளின் வழியாக கவிஞர் கரீமின் கருத்துச் செறிவான கவிதைகள் விரிந்துள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23803).

11268

நம்பிக்கை மணிகள். கவிஞர் அபூபக்கர் (இயற்பெயர்: A.M.அபூபக்கர்). காத்தான்குடி 2: முனீரா பப்ளிக்கேஷன்ஸ், 86, ஓல்ட் ரோட், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1982. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில்).

56 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 17.5x12 சமீ.

இஸ்லாமிய வாழ்வியலில் தொழுகையைக் கடைப்பிடித்து ஒழுகும் வழிகாட்டி நம்பிக்கையூட்டும் கருத்துக்களை விதைக்கும் கவிதை நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3169).

11269

நாயகமே பூமிக்கு வாருங்கள்: நெடுங்கவிதை. கவிஞர் அபூபக்கர் (இயற்பெயர்: A.M.அபூபக்கர்). சாய்ந்தமருது-5: இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகம், போஸ்தான், 62, ஒஸ்மன் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xii, 48 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x14 சமீ., ISBN: 955-96577-1-2.

அண்ணல் நபி நாயகத்தின் அருட்குணங்களையும் பெருமைகளையும் அரும்பெருஞ் செய்கைகளையும் இஸ்லாமியப் புனிதர்களின் உத்தம செயல்களையும் அவர்கள் புரிந்த அரும்பெரும் தியாகங்களையும் அவர்தம் சீரிய வாழ்வையும் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் ஆங்காங்கே வெளிப்படுத்திச் செல்லும் கவிஞர், தமது மனக் குமுறல்களையும் வாட்டிவதைக்கும் உள்ளப் புகைச்சல்களையும் நித்தமும் உறுத்திக்கொண்டிருக்கும் வேதனைகளையும் கணந்தோறும் இதயத்தைச் சுட்டெரித்துக் கொண்டிருக்கும் ஏக்கப் பெருமூச்சுகளையும் நபிகள் நாயகத்திடம் வெளிப்படுத்தி முறையிடும் பாங்கு மெய்சிலிர்க்க வைப்பதாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24242).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11270

பாலியலும் இஸ்லாமும். A.M.அபூபக்கர். காத்தான்குடி 03: நவநூர் பப்ளிஷர்ஸ், மெத்தைப்பள்ளி வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1997.(சாய்ந்தமருது: ஸ்டார் ஒப்செட் பிரின்டர்ஸ்).

viii, 118 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14 சமீ., ISBN: 955-9538-00-4.

சமூகத்தில் பாலியல் தொடர்பான புதிய கட்டமைப்புகள் சமூகவியலாளர்களை தீவிரமாகச் சிந்திக்க வைத்திருக்கின்றது. முன்னர் நான்கு சுவருக்குள் புனிதமாகப் போற்றப்பட்டுவந்த கணவன்-மனைவி பாலியல் உறவு இன்று திரையரங்குகளிலும், வீட்டுக்கொன்றாக வண்ணமயமாக காட்சிப்படுத்தும் தொலைக்காட்சிகளிலும் இடம்பெற்று மலினமாக்கப்பட்டு விட்டது. இந்நிலையில் இஸ்லாமிய மார்க்கம் பாலியல் தொடர்பாகக் கொண்டுள்ள கருத்துக்களைத் திரட்டி இஸ்லாமிய மார்க்கத்தைப் பேணும் ஆண்-பெண் இருபாலாருக்கும் விளக்கும் வகையில், பாலுணர்வும் விபசாரமும், பாலியற்கோட்டமும் இஸ்லாமும், ஆண்-பெண் பாலுறவும் இஸ்லாமும் ஆகிய மூன்று கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17238).

11271

மக்காப் பயணம். அல்லாமா ம. முஹம்மது உவைஸ். சென்னை 600001: பஷாரத் பப்ளிஷர்ஸ், 16, அரண்மனைக்காரத் தெரு, 1வது பதிப்பு, மே 1987. (சென்னை 600001: திரீயெம் பிரின்டர்ஸ், 92, அரண்மனைக்காரத் தெரு).

(8), 324 பக்கம், விலை: இந்திய ரூபா 22., அளவு: 18x12.5 சமீ.

1970ம் ஆண்டில் திருமக்கா மாநகருக்குத் துணைவியாருடன் சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றிய நூலாசிரியர் தான் அப்பயணத்தின்போது பெற்ற அனுபவங்களை தினகரன் பத்திரிகை இதழ்களிலே கட்டுரைவடிவில் எழுதினார். ஓராண்டு எழுதப்பட்ட அக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டு இங்கு நூலுருவாகியுள்ளன. ஹஜ் தொடர்பான சடங்குகள், நிறுவனங்கள் பற்றிய குறிப்புகளை இஸ்லாமிய தமிழிலக்கிய நூல்களில் விளக்கியுள்ளபடி குறிப்பிடத்தக்க வகையில் முதன்முறையாக எடுத்துக் காட்டியுள்ளார். அல்லாமா கலாநிதி ம. முஹம்மது உவைஸ், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியத் தமிழிலக்கியத்துறையின் தலைவராக விளங்கியவர். இவர் இலங்கையின் பாணந்துறையில் உள்ள கொரக்கான என்னும் கிராமத்தில் 15.01.1922 ஆம் நாள் பிறந்தார். தமது தந்தையாரிடம் அரபு மொழிக் கல்வியையும், மார்க்கக் கல்வியையும் கற்ற பின்னர், ஹேனமுல்ல அரசினர் தமிழ்ப் பள்ளியில் தமிழ் மூலம் பயின்றார். சரிக்காமுல்லையில் தக்ஸலா வித்தியாலயம் என்னும் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி பயின்ற இவர் அங்கு பயிலும் போது சிங்கள மொழியையும் பாளி மொழியையும் கற்றார். தொடர்ந்து பாணந்துறையில் புனித யோவான் கல்லூரியிலும் சேர்ந்து பயின்றார். பின்னர், அதே கல்லூரியில் பல்கலைக்கழகப் புகுமுகப் படிப்பில் சேர்ந்து தமிழ், சிங்களம், வரலாறு, ஆட்சியியல் முதலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்களைப் படித்து தேர்ச்சியடைந்தார். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் 1946 ஆம் ஆண்டு சேர்ந்த உவைசுக்கு அங்கு தமிழ்த்துறைத் தலைவராக விளங்கிய பேராசிரியர், விபுலாநந்த அடிகளாரின் வழிகாட்டலும், ஊக்கமும் பேருதவியாக அமைந்தன. தமிழில் கலைமாணிப் பட்டத்தை (இளங்கலை) 1949 ஆம் ஆண்டு பெற்ற பின்னர் தமிழ் முதுமாணிப் பட்ட (முதுகலை) பாடத்தைப் படித்து "இஸ்லாமியரின் தமிழ்த் தொண்டு" என்னும் ஆய்வேட்டையும் சமர்ப்பித்தார். "தமிழ் இலக்கியத்துக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு" என்னும் தலைப்பில் முதுமாணிப் பட்டத்திற்குரிய (முது கலைப்பட்டம்) ஆய்வைச் சமர்ப்பித்து 1951 ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் 1962 ஆம் ஆண்டு தமது முனைவர்பட்ட ஆய்வுக்காக, "தமிழ் இலக்கியத்தில் இஸ்லாமியக் காப்பியங்கள்" என்னும் ஆய்வைத் தெரிவுசெய்து முனைவர் (கலாநிதி) பட்டம் பெற்ற முதல் இலங்கை முஸ்லிம் என்ற பெருமையையும் உவைஸ் பெற்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17378).

11272

மணம் வீசும் மணிச்சொற்கள்: தொகுதி 2. எச்.எம்.மின்ஹாஜ். மாதம்பை: இஸ்லாஹிய்யா வெளியீட்டு மையம், 1வது பதிப்பு, ஜனவரி 2013. (கொழும்பு 14: ஐ.பீ.சீ. அச்சகம், 24, டி வாஸ் லேன்).

ix, 168 பக்கம், விலை: ரூபா 220., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-8966-02-0.

மணம் வீசும் மணிச்சொற்கள் என்ற நபிமொழித் தொகுப்பின் முதலாவது தொகுதி செப்டெம்பர் 2007இல் வெளிவந்தது. இது அத்தொடரின் இரண்டாவது தொகுதியாகும். கல்வியறிவு, அழைப்புப்பணி, பெண்ணுரிமை, சமூக வாழ்வு, இறைதூதரின் பன்முக ஆளுமை பற்றிய இருபத்தைந்து ஹதீஸ்களுக்கான விளக்கங்களை இந்நூல் கொண்டுள்ளது. இவை முன்னர் "அல் ஹஸனாத்" இஸ்லாமிய இலக்கியக் குரலில் மாதாந்தம் வெளிவந்த ஹதீஸ் விளக்கக் கட்டுரைகளின் தொகுப்பாகும். நபி அவர்களது ஆளுமைப் பண்புகள், சிந்தனைகள், கருத்துக்கள், வழிகாட்டல்கள், தீர்ப்புக்கள், பரிகாரங்கள் பற்றிய ஆழமான புரிதல்களை தமிழ் வாசகர்களுக்கு வழங்கும் நோக்கை இதிலுள்ள 25 கட்டுரைகளும் கொண்டுள்ளன. இந்நூலாசிரியர் அல் ஷெய்க் எச்.எம்.மின்ஹாஜ் (இஸ்லாஹி), புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியின் விரிவுரையாளராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 244932).

11273

மார்க்கத்தின் மணித்துளிகள். மௌலவி காத்தான்குடி பௌஸ் (ஷர்கி). பாணந்துறை: பாவலர் பண்ணை, 23/6, ஸைனி மன்ஸில், வத்தல்பொல வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2014. (பாணந்துறை: V4U அச்சக இல்லம், 6/1, சுற்றுவட்ட வீதி, ஹேனமுல்லை).

68 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 18x12.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணல் நபியின் அழகிய குணாதிசயங்கள், அச்சம் கொண்ட அமல் செய்யும் ரமழானில் பிச்சை கேட்டு அலைவது இஸ்லாமல்ல என்பன போன்ற இஸ்லாமிய சமூக, மத உணர்வினையும் பக்தியையும் விதைக்கும் பக்தி இலக்கியக் கட்டுரைகள் இவை. எளிய வடிவில் மார்க்க போதனைகளை கட்டுரைகளாக ஆசிரியர் இந்நூலில் தந்திருக்கின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54834).

11274

ஷரந்தீபிலிருந்து மஹ்மூத் ஸமீ அல் பரூதி. பண்ணாமத்துக் கவிராயர் (இயற்பெயர்: சய்யத் முகமத் ஃபாரூக்). உக்குவளை 21300: ப்ரவாகம் வெளியீட்டகம், சுதந்திர கலை இலக்கியப் பேரவை, இல. 9, மாத்தளை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2002. (உக்குவளை: பரடைஸ் கிராப்பிக்ஸ்).

36 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 19.5x13.5 சமீ., ISBN: 955-97597-0-1.

பண்ணாமத்துக் கவிராயர் எனப்படும் எஸ்.எம். பாரூக் (சய்யத் முகமத் ஃபாரூக்), இலங்கையின் ஒரு முக்கிய கவிஞரும் சிறுகதையாளரும் மொழிபெயர்ப்பாளருமாவார்.

இலங்கையின் மலையகத்தில் மாத்தளையில் பிறந்த இவர் 1960 ஆம் ஆண்டு முதல் ஈழத்துக் கலை இலக்கியத் துறையில் தனது பங்களிப்புகளை வழங்கி வருகிறார். ஒரு பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக இலங்கையின் பல பாடாசாலைகளில் பணிபுரிந்தவர். மறைந்த இலங்கையின் எழுத்தாளர் ஏ.ஏ. லத்தீப் நடாத்திய "இன்ஸான்" பத்திரிகையில் ஈராண்டு பணி புரிந்த இவரின் கவிதைகள், சிறுகதைகள், மொழிபெயர்ப்புக்கள் என்பன தாரகை, மலர், பாவை, அக்னி, அலை போன்ற சஞ்சிகைகளிலும், இன்ஸான், செய்தி, தினகரன், வீரகேசரி, திசை, அஷ்ஷூரா போன்ற பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. இவரது ஆங்கிலமொழிப் புலமை காரணமாக அல்லாமா இக்பால், நஸ்ரூல் இஸ்லாம், பைஸ் அகமத் பைஸ் போன்ற முக்கியமான கவிஞர்களினதும் எனப் பல முக்கிய கவிஞர்களினதும், இயக்கங்களினதும் கவிதைகளை தனது மொழிபெயர்ப்பு மூலம் தமிழுக்குத் தந்தவர். அக்னி இதழில் வெளிவந்த தாஜ்மஹால் (நவம்பர் 5, 1975) எனும் கவிதையும், அலை சஞ்சிகையில் வெளிவந்த மெயில் பஸ் தம்பதி எனும் சிறுகதையும் இவரது படைப்பாற்றலுக்கான சான்றுகள். காற்றின் மௌனம் (மொழியாக்கக் கவிதைகள், 1996, மலையக வெளியீட்டகம்), Genesis (மாத்தளை மலரன்பனின் 14 சிறுகதைகளின் மொழிபெயர்ப்பு, கொடகே நிறுவனம், 2014) ஆகிய நூல்களை வழங்கிய இவரது மற்றுமொரு மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுப்பு இதுவாகும். இவருக்கு கொடகே வாழ்நாள் விருது, 2016 இல் வழங்கப் பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27345).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

300 சமூக விஞ்ஞானங்கள்

301 சமூகவியல்

11275

அது எங்கட காலம்: நனவிடைதோய்தல் தொகுப்பு. கானா பிரபா. அவுஸ்திரேலியா: மடத்துவாசல் பிள்ளையாரடி வெளியீடு, 1வது பதிப்பு, பெப்ரவரி 2017. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

xviii, 128 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 21x15 சமீ.

கானா பிரபா, அவுஸ்திரேலியாவில் சிட்னியில் வாழும் எழுத்தாளர், ஊடகவியலாளர். மடத்துவாசல் இணையத்தளத்தினை நடத்தி வருபவர். சிட்னியில் 24 மணிநேர தமிழ் ஒலிபரப்பு நிலையமான அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஊடகவியலாளராகவும் கடமையாற்றுகின்றார். இவரிடத்தில் குடியிருக்கும் நினைவாற்றல், அவதானம், கற்றதையும் பெற்றதையும் நேயர்களுடனும் வாசகர்களுடனும் பரிமாறிக்கொள்ளும் ஆர்வம் என்பன இந்நூலில் உள்ள கட்டுரைகளின் உருவாக்கத்தின் பின்னணியாகின்றன. ஒவ்வொரு கட்டுரையும் எம்மை அவருடன் இறந்த காலத்தில் பயணிக்க வைக்கின்றது. என் இனிய மாம்பழமே, வருஷப்பிறப்பு வந்திட்டுது, செய்யது பீடியும் இந்தியன் ஆமியும், வெடி கொளுத்தி ஒரு ஊர்ப் பொங்கல், மணியண்ணையும் மேளச்சமாவும், தீவாளி வருஷங்கள், விளையாட்டுப் போட்டியும் விநோத உடைக்கூத்தும், தேரடியில் தேசிகனைக் கண்டேன், எங்களூர் வாசிகசாலைகள், தேவராசா அண்ணை குடும்பம் இருந்த வீடு, மாட்டு வண்டிச் சவாரிகள், அண்ணா கோப்பி நடராசா மாமா, எங்கட பள்ளிக்கூடம் வந்த கொம்பியூட்டர், லைப்ரரி சேர், அம்மம்மாவை நினைப்பூட்டும் மாட்டுப் பொங்கல், வரதராஜன் மாஸ்டர், மண்ணெண்ணெயில் பார்த்த படங்கள், சுந்தரப்பா, அருட்செல்வம் மாஸ்டர் வீடு, சிவராத்திரி படக் காட்சி, எங்கட கோவில் கொடியேறி விட்டுது ஆகிய 21 தலைப்புகளில் இவரது கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

11276

இரண்டாவது சுனாமி. பிரேமகுமார டி சில்வா. கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 12, சுலைமான் டெரஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ்).

24 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-1772-75-8.

இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மற்றும் தென்பகுதிகள் 2004 டிசம்பர் 26ம் திகதியன்று சுனாமிப் பேரலை கொந்தளிப்பின் முழுச்சீற்றத்தையும் எதிர்கொண்டன. தலைநகரம் கொழும்பு உட்பட பெரும்பாலான கரையோரப் பிரதேசங்கள் சுநாமி அலையின் கோரத் தாக்குதலுக்குட்பட்டன. முழுமையாக பல கிராமங்கள் தரைமட்டமாயின. சிற்றூர்களும், காலி, மாத்தறை, ஹாம்பன்தோட்டை போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்புற நகரங்களும், கிழக்கில் மட்டக்களப்பு மற்றும் திருக்கோணமலை போன்ற இடங்களும் வடக்கில் முல்லைத்தீவு உள்ளிட்ட கரையோரப் பிரதேசங்களும் கடுமையாகத் தாக்குண்டன. இந்நிலையில் தென்னிலங்கையில் பாதிக்கப்பட்ட கிராமங்களிடையே சமாதான சகவாழ்வின் இழப்பு பற்றிய ஆய்வாக கலாநிதி பிரேமகுமார டிசில்வா எழுதியுள்ள இந்நூல் வெளிவந்துள்ளது. வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இருந்து அறிவுஜீவிகளின் இவ்வாறான ஆய்வுகளின் வரவின் தேவையை இந்நூல் நமக்கு வலியுறுத்துகின்றது.

11277

குறள்சார்ந்த புதிய சிந்தனைகள்.செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 12/3, மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி வழி, 9வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2013. (சென்னை: குமரன் பப்ளிஷர்ஸ், 12/3, மெய்கை விநாயகர் தெரு).

126 பக்கம், தகடுகள், விலை: இந்திய ரூபா 60., அளவு: 18x12 சமீ.

திருக்குறளில் ஒறுத்தல், நனவும் கனவும், உயிரச்சம், ஒழுக்க வரம்புகளும் அரசும், வள்ளுவர் வாழ்ந்த காலம், குடிப்பெருக்கமும் கல்வியும், கள்ளும் காமமும், திருக்குறள் கண்ட உலகம், குறள் கூறும் உறுதிக் கருத்துக்கள், சங்க இலக்கியமும் திருக்குறளும், திருக்குறளும் தொல்காப்பியமும், திருக்குறளில் சமணம், கள்ளும் மயக்கமும், பெண்ணின் ஏற்றமும் வீழ்ச்சியும், காமமும் காதலும், வள்ளுவர் காட்டும் வர்க்க சமுதாயம், நோயும் தடுப்பும், இயற்கையும் ஊழ்வினையும், வள்ளுவரும் எதிர்மறைவாதவியலும், வள்ளுவர் கூறும் ஒப்புமைகள் ஆகிய 20 கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60609).

301.01 சமூகவியல்சார்ந்த பாடநூல்கள்

11278

குழந்தைகளுக்கான புதிய சுற்றாடற் கல்வி: ஆண்டு 4. கு.வி.பதிப்பகம். யாழ்ப்பாணம்: கு.வி.பதிப்பகம், 386 மணிக்கூண்டு வீதி, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: கு.வி.அச்சகம்).

(4), 84 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலையத்து 1987ஆம் ஆண்டுப் பாடத்திட்டத்தை முழுவதும் தழுவி எழுதப்பெற்ற புதிய பதிப்பு இது. எமது வீடும் அங்கு வசிப்போரும், எமது உணவும் ஊட்டமும், நாம் உடுப்பனவும் அணிவனவும், நமக்கு உதவுவோர், எமது தொழிலுக்குத் துணைபுரிவோர், வேற்றுமையில் ஒற்றுமை, நாம் கேட்பவைகளும் காண்பவைகளும், எமது பாடசாலையும் அதன் சுற்றாடலும், போக்குவரத்து முறைகளும் தொடர்பு முறைகளும், எமது புவியும் அதனைச் சூழ உள்ளவையும், எமது சூழலில் உள்ளவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய 11 அலகுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11215).

11279

புதிய சமூகக் கல்வி: 10-1. கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், புதிய செயலகம், மாளிகாவத்தை, 1வது பதிப்பு, 1980. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

x, 66 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

க.பொ.த. சாதாரணதரப் பாடத்திட்டத்துக்கு அமைவாக பத்தாம் தர மாணவர்களுக்காக எழுதப்பட்ட நூல். அபிவிருத்தி பற்றியஅறிவை மாணாக்கருக்குப் புகட்டுதல், அபிவிருத்திக்காக மேற்கொள்ள வேண்டிய ஆக்கபூர்வமான முயற்சிகளில் கவனம் செலுத்துமாறு மாணாக்கரை ஊக்குவித்தல், பொருளாதார அமைப்பும் வெளிநாட்டு உதவியும் பற்றிய தகவலை மாணாக்கர்களுக்கு வழங்குதல் ஆகியன இப்பாடநூலின் பிரதான நோக்கங்கள். இவை அனைத்தும் சர்வதேச வியாபாரம், அன்னிய உதவி, சனத்தொகையும் உலக உணவுப் பிரச்சினையும் ஆகிய மூன்று அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11205).

11280

மாணவர் சூழல் வாசகம்: ஐந்தாம் வகுப்பு. க.சி.குலரத்தினம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசலை, 1வது பதிப்பு, 1959. (யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம், காங்கேசன்துறை வீதி).

vii, 164 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 2.00, அளவு: 20x16 சமீ.

சூழல் பாடம் சமூகக் கலை, சமுதாய பாடம் ஆகிய பெயர்களுடைய பாடத்தைக் கற்பதன்மூலம் மாணவர்கள் தமது சுற்றாடலை, நன்கு அறிந்துகொள்கின்றனர். இந்நூல் ஒரு ஐந்தாம் வகுப்பு மாணவனின் அறிவு விருத்திக்கு ஏற்ப திசையறி கருவி, எங்கள் கிராமம், சுற்றாடலின் தரை, சுற்றாடலின் சுவாத்தியம், பருவ காலங்கள், நீர், தேடுவாரற்ற தரையில் உள்ள தாவரங்கள், கடற்கரை மணலில் வளரும் தாவரங்கள், பனை, பண்படுத்தப்படும் தரையிலுள்ள தாவரங்கள், பசளை இடுதல், தானியங்கள், நெல், காய்கறி, விலைப் பயிர்கள், சுற்றாடலில் உள்ள மிருகங்கள், சுற்றாடலில் உள்ள சிறு பிராணிகள், சுற்றாடலில் உள்ள சாதாரண பறவைகள், சுற்றாடலில் உள்ள பூச்சிகள், சுகாதாரம், யாழ்ப்பாணப் பெரியார்கள், உலகப் பெரியார்கள், விஞ்ஞானிகள், யாத்திரீகர்கள், யாழ்ப்பாணக் குடாநாடு, இலங்கைப் பிரிவுகளும் பட்டினங்களும், யாழ்ப்பாணச் சரித்திரம், இந்தியா, போக்குவரத்துச் சாதனங்கள், ஏற்றுமதியும் இறக்குமதியும், சமூகம், சனசமூக நிலையம், கிராமச்சங்கம், சந்தை, கூட்டுறவு, தபாற்கந்தோர், கைத்தொழில்கள், குடிசைத் தொழில்கள், தொழிற்சாலைகள், பூமி, வான மண்டலம், அண்டம், நட்சத்திரங்கள் ஆகிய விடயங்களை 33 அத்தியாயங்களில் விளக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13356).

301.05 சமூகவியல் சார்ந்த ஆய்விதழ்கள்/சிறப்பு மலர்கள்

11281

பிரவாதம் தொகுதி 1:ஜனவரி-ஜுன் 2002. *எம்.ஏ.நுஃமான் (ஆசிரியர்). கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 425/15, திம்பிரிகஸ்யாய வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).*

166 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x14 சமீ., ISSN: *1391-7269.*

கொழும்பு, சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் ஆய்வேடாக வருடமிருமுறை வெளிவந்த இவ்விதழின் ஆசிரியர் குழுவில் என்.சண்முகரத்தினம், சித்திரலேகா மௌனகுரு, செல்வி திருச்சந்திரன் ஆகியோர் பணியாற்றினர். இவ்விதழில் உலகமயமாக்கலும் மனித சுதந்திரமும் (என்.சண்முகரத்தினம்), உள்முற்றம்: இலங்கையில் சாதி, நீதி, சமத்துவம் பற்றி அரசியல் சொல்லாடல் (ஜயதேவ உயங்கொட), இலங்கையில் இன முரண்பாடும் சமாதானத் தீர்வு முயற்சிகளும்: ஐ.பார்த்தசாரதி முதல் எரிக் சொல்ஹெய்ம் வரை (அ.சிவராஜா), மனச்சாட்சியின் மரணமும் இனவாத அரசியலும் (செல்வி திருச்சந்திரன்), இலங்கையில் முஸ்லிம் சட்டமும் பெண்ணுரிமை விவாதங்களும் (சுல்பிகா), குடிசன மதிப்பீட்டைப் பன்மைப்படுத்துதல் (தரணி ராஜசிங்கம் சேனநாயக்க), முடிவற்ற நீதியின் அட்சரகணிதம் (அருந்ததி ராய்), அடிப்படைவாதம் பற்றிய பிரச்சினை (உம்பெட்டோ ஈக்கொ), தமிழ் மொழிபெயர்ப்பில் சிங்கள இலக்கியம் (எம்.ஏ. நுஃமான்), சாதுக்களின் படை (நிரூபமா சுப்ரமணியம்), நூல் மதிப்புரை- இனமுரண்பாடும் வரலாற்றியலும் (கா.சிவத்தம்பி), பெண்களின் கொள்கை அறிக்கை ஆகிய பன்னிரு ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25653).

11282

பிரவாதம் தொகுதி 2: ஜுலை-டிசம்பர் 2002. *எம்.ஏ.நுஃமான் (ஆசிரியர்). கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 425/15, திம்பிரிகஸ்யாய வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).*

126 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x14 சமீ., ISSN: *1391-7269.*

கொழும்பு, சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் ஆய்வேடாக வருடமிருமுறை வெளிவந்த இவ்விதழின் ஆசிரியர் குழுவில் என்.சண்முகரத்தினம், சித்திரலேகா மௌனகுரு, செல்வி திருச்சந்திரன் ஆகியோர் பணியாற்றினர். இவ்விதழில் சமாதான முயற்சியும் வட-கிழக்கு முஸ்லிம் அரசியலும் (எம்.ஏ.நுஃமான்), தாய்மொழிக் கல்விக்கான நியாயம் (சி.சிவசேகரம்), பின்நவீனத்துவம் ரஷ்யாவுக்கு வந்த பொழுது (விளாடிமீர் பிலென்கின்), சமஷ்டி முறையும் கூட்டுச் சமஷ்டி முறையும் (அம்பலவாணர் சிவராசா), வகுப்புவாதம் உருவாகிவிட்டதா? (இம்தியாஸ் அகமது), அறியாமையின் மோதல் (எட்வேர்ட் சையிட்), இலங்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடதுசாரி இயக்கம் தோல்வி கண்டுள்ளதா? (செல்வி திருச்சந்திரன்), பூகோளமயமாக்கலும் அதன் விளைவகளும் (மு.சின்னத்தம்பி), பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் அடுத்த இலக்காக பிலிப்பீன்ஸ் (அய்ஜாஸ் அகமது), குட்டித்தேவதை ஒரு வியாக்கியானம் (சித்திரலேகா மௌனகுரு) ஆகிய பத்து ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31197).

11283

பிரவாதம் தொகுதி 3: ஜனவரி-ஜூன் 2003. எம்.ஏ.நுஃமான் (ஆசிரியர்). கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 425/15, திம்பிரிகஸ்யாய வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

116 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x14 சமீ., ISSN: 1391-7269.

கொழும்பு, சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் ஆய்வேடாக வருடமிருமுறை வெளிவந்த இவ்விதழின் ஆசிரியர் குழுவில் என்.சண்முகரத்தினம், சித்திரலேகா மௌனகுரு, செல்வி திருச்சந்திரன் ஆகியோர் பணியாற்றினர். இவ்விதழில் கறுப்பு ஜூலையை நினைவுகூர்தல் (எம்.ஏ.நுஃமான்), கூகியும் ஆபிரிக்க இலக்கியமும் (எஸ்.வி.ராஜதுரை), பேனா முனைகள், துப்பாக்கி முனைகள், கனவுகள் கூகி வா தியாங்கோவுடன் பேட்டி, சிலுவையில் தொங்கும் சாத்தான் (கூகி வா தியாங்கோ), கருச்சிதைக்கப்பட்ட புரட்சி (நவால் எஸ்.ஸாதவி), நேபாள மக்கள் யுத்தத்தில் பெண்களின் தலைமைத்துவப் பிரச்சினை (பார்வதி கந்தசாமி) ஆகிய ஆறு ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31453).

11284

பிரவாதம் தொகுதி 4: ஜூலை 2005. எம்.ஏ.நுஃமான் (ஆசிரியர்). கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 12, சுலைமான் ரெறஸ், 1வது பதிப்பு, ஜூலை 2005. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

136 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x14 சமீ., ISSN: 1391-7269.

கொழும்பு, சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் ஆய்வேடாக வருடமிருமுறை வெளிவந்த பிரவாதம் இதழ் சிலகாலம் தடைப்பட்டிருந்து மீண்டும் 2005இல் நான்காவது இதழாகத் தொடர்ந்து வெளிவந்துள்ளது. இவ்விதழின் ஆசிரியர் குழுவில் மீண்டும் என்.சண்முகரத்தினம், சித்திரலேகா மௌனகுரு, செல்வி திருச்சந்திரன் ஆகியோர் பணியாற்றினர். இவ்விதழில் எட்வர்ட் சயித் சில குறிப்புகள் (எம்.ஏ.நுஃமான்), பொது வாழ்வில் எழுத்தாளர்களினதும் ஆய்வறிவாளர்களினதும் பங்கு (எட்வர்ட் சயித்), அதிகாரத்திடம் உண்மையைப் பேசுதல், பலஸ்தீனப் பிரச்சினையும் அறிவுத்துறைப் புரட்டல்களும், எட்வர்ட் சயிதின் கீழ்த்திசைவாதம் (சியாஉத்தீன் சர்தார்), மலையகக் குடும்பத் திட்டமிடல் ஒரு மதிப்பீடு (சோபனாதேவி இராஜேந்திரன்), தேசத்தையும் அரசையும் கட்டியெழுப்புதல் (அம்பலவாணர் சிவராஜா), பாப்லொ நெரூடாவின் கவிதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடு (எஸ்.வி.ராஜதுரை), சோமதேரர்: அவரது வாழ்வும் மரணமும் (ஜயதேவ உயங்கொட), அரை நூற்றாண்டு காலத்தில் முஸ்லிம் பெண் கல்வி (ஹ. ஜெஸீமா), நூல் மதிப்புரை The Colonial Economy on Track: Roads and Railways in Sri Lanka 1800-1905 (திலகா மெத்தானந்த) ஆகிய பதினொரு ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39483).

11285

மொழிதல்: ஆய்விதழ் 1. சி.சந்திரசேகரம் (பிரதம ஆசிரியர்), வ.இன்பமோகன், சு.சிவரெத்தினம் (உதவி ஆசிரியர்கள்). மட்டக்களப்பு: மொழிதல் குழுமம், 110/3, கண்ணகி அம்மன் கோவில் வீதி, 10ஆவது குறுக்கு, 1வது பதிப்பு, ஆவணி 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

82 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 24.5x18 சமீ., ISSN: 2386-1630.

தமிழியல் சமூகவியல் துறைகளில் எழுதப்பெற்ற ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவரும் இப் பல்கலை ஆய்விதழ் தனது முதலாவது இதழில், பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி: தமிழ்ப் பண்பாட்டின் அக அமைப்புக்களை நோக்கி (த.முத்துமோகன்), சங்க இலக்கியம்: உணவு உற்பத்தியும் பரிமாற்ற உறவுகளும் (ஞா.ஸ்டீபன்), ஈழத்து எழுத்து மரபுசார் வாய்மொழிப்பாடல் மரபும் அது பற்றிய புரிதல்களும் (சி.சந்திரசேகரம்), விவசாய சமூகத்தில் ஓவியம்: இலங்கையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு (சு.சிவரெத்தினம்), சிவத்தம்பியின் புலமைநெறி (பக்தவத்சல பாரதி), மட்டக்களப்பில் மாந்திரீகப் பயில்வு (வடிவேல் இன்பமோகன்), நூல் மதிப்பீடு: எல்லோரும் ஏகலைவர் தாமோ? (சி.ஜெயசங்கர்) ஆகிய ஏழு அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 58453).

11286

மொழிதல்: ஆய்விதழ் 2: எண் 1. வ.இன்பமோகன் (பிரதம ஆசிரியர்), சு. சிவரெத்தினம், சி.சந்திரசேகரம் (உதவி ஆசிரியர்கள்). மட்டக்களப்பு: சுதந்திர ஆய்வு வட்டம், 110/3, கண்ணகி அம்மன் கோவில் வீதி, 10ஆவது குறுக்கு, 1வது பதிப்பு, ஆனி 2015. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(4), 76 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 24.5x18 சமீ., ISSN: 2386-1630.

தமிழியல் சமூகவியல் துறைகளில் எழுதப்பெற்ற ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவரும் இப் பல்கலை ஆய்விதழ் தனது இரண்டாவது இதழில், மக்களின் மொழியும் மரபின் மொழியும் மொழியின் நவீனமாதலும் (சி.சிவசேகரம்), பண்பாட்டு ஆய்வுகளில் கற்பனை, நினைவுகள் மற்றும் பிரதேச உணர்வு (ந.முத்துமோகன்- ஆங்கில மூலம், இந்திரா மோகன்- தமிழாக்கம்), மட்டக்களப்பில் நாகரின் பண்பாட்டுச் சின்னங்கள் (சி.பத்மநாதன்), சிகிரியா ஓவியம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக்கப்பட்ட தமிழர் வரலாறும் அதன் அழகியலும் (சு.சிவரெத்தினம்), தத்துவ அரசியலும் தமிழ்ப் புலவர்களும் (ச.முகுந்தன்), தமிழ் இலக்கிய வரலாற்றில் பொருட்படுத்தப்படாத பெண்புலவர்கள் (செ.யோகராசா), ஈழத்துக் கண்ணகை அம்மன் இலக்கியங்கள்: இலக்கிய மீளுருவாக்கம் பற்றிய ஆய்வு (சி.சந்திரசேகரம்) ஆகிய ஏழு ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது.

11287

மொழிதல்: ஆய்விதழ் 2: எண் 2. சு.சிவரெத்தினம் (பிரதம ஆசிரியர்), வ.இன்பமோகன், சி.சந்திரசேகரம் (உதவி ஆசிரியர்கள்). மட்டக்களப்பு: சுதந்திர ஆய்வு வட்டம், 110/3, கண்ணகி அம்மன் கோவில் வீதி, 10ஆவது குறுக்கு, 1வது பதிப்பு, மார்கழி 2015. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(4), 100 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 25x17.5 சமீ., ISSN: 2386-1630.

தமிழியல் சமூகவியல் துறைகளில் எழுதப்பெற்ற ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவரும் இப் பல்கலை ஆய்விதழ் தனது மூன்றாவது இதழில், தமிழ்ச் சிந்தனை மரபில் அகப்பண்பாட்டு வெளியும் பெண்ணும் (இ.முத்தையா), உயர் கல்வியைச் சிதைக்கும் உபாயங்கள் (சி.சிவசேகரம்), பின்னைக் காலனியமும் இந்திய தத்துவங்களும் (ந.முத்துமோகன்- ஆங்கில மூலம், இந்திரா மோகன்- தமிழாக்கம்), வங்கக்கடல் புவிநடுக்க அதிர்வுகள் இலங்கையில் எற்படுத்தக்கூடிய தாக்கம் (இராஜரெட்ணம் கிருபராஜா), தமிழர் பண்பாட்டில் தொல் வாத்தியங்கள் (வடிவேல் இன்பமோகன்) ஆகிய ஐந்து ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61119).

11288

மொழிதல்:ஆய்விதழ் 3: எண் 1. சி.சந்திரசேகரம் (பிரதம ஆசிரியர்), வ.இன்பமோகன், சு.சிவரெத்தினம் (உதவி ஆசிரியர்கள்). மட்டக்களப்பு: சுதந்திர ஆய்வு வட்டம், 110/3, கண்ணகி அம்மன் கோவில் வீதி, 10ஆவது குறுக்கு, 1வது பதிப்பு, ஆனி 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(4), 77 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 24.5x17.5 சமீ., ISSN: 2386-1630.

தமிழியல் சமூகவியல் துறைகளில் எழுதப்பெற்ற ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவரும் இப் பல்கலை ஆய்விதழ் தனது நான்காவது இதழில், மேற்காசிய இசை: தொன்மையும், மரபுகளும் (எம்.எஸ்.எம்.அனஸ்), உலகளாவிய ஆய்வு முறையியல்: தமிழ்ச் சூழலுக்கான சில குறிப்புகள் (ஞா.ஸ்டீபன்), தேர்தல் சீர்திருத்தங்களும் அரசியற் சிறுபான்மையினரும் (சி.சிவசேகரம்), ஈழத்தில் இறப்புத் தொடர்பான கல்வெட்டு மரபு (க.இரகுபரன்), இந்திய தத்துவ மரபில் சடப்பொருள்வாதிகள் பற்றிய சித்திரிப்பு-ஒரு மறுமதிப்பீடு (இரத்தினசபாபதி பிரேம்குமார்), இலங்கையில் நவீனத்துவமும் ஓவியச் செல்நெறியும் (சு. சிவரெத்தினம்) ஆகிய ஆறு ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது. (இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61121).

301.1 பண்பாடு

11289

மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள். சாமித்தம்பி தில்லைநாதன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xvi, 358 பக்கம், விலை: ரூபா 975.00, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-480-5.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக உருவாக்கப்பட்ட இவ்வாய்வு விரிவாக்கப்பட்டு, மெருகூட்டப்பெற்று நூல்வடிவில் வழங்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு-ஓர் அறிமுகம் (மட்டக்களப்பின் வரலாற்றுப் பின்னணி, மட்டக்களப்பில் நிலவிய ஆட்சிகள், இலங்கை வரலாற்றில் மட்டக்களப்புத் தமிழரது இடம், மட்டக்களப்பின் வரலாற்று ஆதாரங்களான கல்வெட்டுக்கள், குலங்களும் குடிகளும்), சமயப் பண்பாடுகள் (மட்டக்களப்பில் சைவ சமயம், புராதன சைவ ஆலய நடைமுறைகள், சைவ மக்களிடையே காணப்பட்ட நம்பிக்கைகள், கிறிஸ்தவ சமயம்), சமூகப் பண்பாடுகள் (சமூக வழமைகள், உணவும் விருந்துபசாரமும், குடிமனைகள், பாவனைப் பொருட்கள், கல்வி முறை, ஆடையும் ஆபரணமும், தொழில்களும் போக்குவரத்தும்), சமூகச் சடங்குகள் (சனனச் சடங்கு, சாமர்த்தியச் சடங்கு, திருமணச் சடங்கு, மரணச் சடங்கு), கலைகள் (கூத்து, வசந்தன் ஆட்டம், கரகாட்டம், இசைகள், விளையாட்டுக்கள், மகிடி நாடகம், மருத்துவம், கட்டடக் கலையும் கண்கவர் கலையும், ஓலைச் சுவடியாக்கல்), தமிழ் மொழியும் இலக்கியமும் (தமிழ் மொழி வழக்கு, இலக்கியங்கள், தமிழ் வளர்த்த பெரியார்கள்), முடிவுரை ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

305.4 பெண்கள், பெண்ணியம், பெண்ணிலைவாதம்

11290

கட்டுடைக்கும் பெண்: பெண் படைப்புகளின் தொகுப்பு. றஞ்சி சுவிஸ், மேகலா, காசினி (தொகுப்பாளர்கள்). சுவிட்சர்லாந்து: யோகாம்பிகை எழுத்தகம், Rumiweg 40, 4900 Langenthal, 1வது பதிப்பு, 2011. (சென்னை 5: புலம் பதிப்பகம்).

144 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21x13.5 சமீ.

1985இலிருந்து சுமார் 25 ஆண்டுகள் சுவிட்சர்லாந்தில் வாழ்ந்து மறைந்த பெண்ணியலாளர் அமரர் திருமதி யோகா யோகாம்பிகை (1955-2010) அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாக வெளிவரும் நூல் இது. பெண் படைப்பாளர்களால் பெண்நிலை நோக்கில் நின்று எழுதப்பட்ட பலவினப் படைப்பாக்கங்களின் தொகுப்பு இது. எங்கே போகிறோம் (த.எலிசபெத்), Frame (பெண்ணியா), ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு (மயூ மனோ), பாடம் (கிண்ணியா எஸ்.பாயிஸா அலி), வியர்வையின் விலை (வெலிகம ரிம்சா முஹம்மத்), இன்பமின்றி வேறு இனி ஏது (தியத்தலாவ எச்.எப்.ரிஸ்னா), வாழ்தலில் (மயூ மனோ), பச்சைப் பசும் புல்வெளி (கிண்ணியா எஸ்.பாயிஸா அலி), இனி என் குழந்தைகளுக்குப் பெயரில்லை (நிலா-தர்ஷாயினி), ஓர் ஊமையின் பாடல் (வெலிகம ரிம்ஸா முஹம்மத்), வெள்ளைச் சிரிப்பினிலே (கிண்ணியா எஸ்.பாயிஸா அலி), வசீகர மொழிகாவி (கிண்ணியா எஸ்.பாயிஸா அலி), மீள வாசிக்கப்படும் வாசிக்கப்படாத மொழி (மயூ மனோ), ஆகிய கவிதைகளையும், மூளாத் தீ (ஜெயரஞ்சினி ஞானதாஸ்) என்ற நாடக எழுத்துருவையும், தாய்லாந்தின் புன்னகை அரசிகள் (சாந்தி), கணவனுக்கு எழுத முடியாத கடிதம் (குடும்ப மாது), உடலரசியலும் பெண்ணும் (புதிய மாதவி), பூவும் பொட்டும் (யாழ்.தர்மினி பத்மநாதன்), சந்திரலேகா கிங்ஸ்லியுடன் ஓர் நேர்காணல் (றஞ்சி சுவிஸ்), ஜான் தெரொய்ன்: பெண்களையும் அரசியல் பேசவிடுங்கள் (தமிழச்சி), ஆகிய கட்டுரைகளையும், மேற்கு வாசற்படிகள் (பத்மபிரபா), காகம் (நிலா-தர்ஷாயினி), கனவுகள் மறுக்கப்பட்ட நிஜங்கள் (மாதவி சிவலீலன்), உலோக ஆடை (சி.அமுதன்), Gross Mutter /அம்மம்மா (ஆனந்தி சுரேஷ்), கண்ணீர் தீயாகிறது (தியத்தலாவ எச்.எப்.ரிஸ்னா), நிழலும் நிஜமும் (பாமா), ஆகிய சிறுகதைகளையும் இத்தொகுப்பு உள்ளடக்குகின்றது.

11291

நேர்கொண்ட பாவை. கோகிலா மகேந்திரன். தெல்லிப்பழை: கலை இலக்கியக் கள வெளியீடு, 1வது பதிப்பு, ஜூலை 2015. (இணுவில்: அம்மா அச்சகம்).

xiv, 236 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-51147-7-9.

ஒரு பெண்குழந்தை முதன்முதலாகத் தாயின் கருவறையில் உதிப்பது முதல் அவளது மரணம் வரையிலான படிமுறைகளை 42 படிநிலைகளாக வகுத்து ஒவ்வொரு படிநிலையையும் கருத்தாழத்துடன் விரிவாக விபரித்து பெண்ணின் வாழ்க்கை முறையையும், அவள் எவ்வாறு நம்பிக்கை கொண்டவளாகவும் தன் வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை எவ்வாறு ஏற்றுக்கொண்டு வாழ்ந்து மறைகிறாள் என்பதையும் விளக்கியுள்ளார். ஒவ்வொரு தலைப்பின்கீழும் பொருத்தமான பாடல்வரிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இடையிடையே புராணக் கதைகள், பாடல் வரிகள் என்பவற்றைச் செருகி நூலை ஆர்வத்துடன் வாசிக்கவைத்திருக்கிறார். எந்தெந்த வயதில் பெண் குழந்தைகளை எவ்வாறு அணுகவேண்டும், எந்தெந்த வயதில் பெண்களின் மனோநிலை எவ்வாறு இருக்கும், சிறுவயதில் தாய் கூறும் அறிவுரைகள் பெண்பிள்ளைகளிடம் எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன, பெண்ணின் பார்வையில் சமூகத்தின் நோக்கு தான் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்ற தீர்மானத்தை எடுக்கும் தருணத்தில் தாயின் ஆலோசனைகள் ஏற்படுத்தும் உளவியல் பாதிப்பு என்பன பற்றியெல்லாம் சமூக உளவியல்நோக்கில் இந்நூல் 42 இயல்களில் ஆராய்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11292

மகரந்தச் சிதறல்: லண்டன்வாழ் தமிழ்ப் பெண்களின் நேர்காணல். நவஜோதி ஜோகரட்ணம். லண்டன்: அகஸ்தியர் வெளியீடு, 1வது பதிப்பு, மே 2016. (சென்னை 5: கருப்பு பிரதிகள்).

296 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 0-9547998-2-8.

லண்டன் சன்ரைஸ் வானொலியில் ஆசிரியர் மேற்கொண்ட நேர்காணல்களின் தொகுப்பு. இதில், இசைத்துறையில் ஈடுபட்டுவரும் தையல்சுந்தரம் பரந்தாமன், சரஸ்வதி பாக்கியராஜா, அம்பிகா தாமோதரம், மாதினி சிறீக்கந்தராஜா, சிவசக்தி சிவநேசன், பொன்னையா ஜெயஅழகி, துஷி-தனு சகோதரிகள் ஆகியோரின் உரையாடல்களும், நாட்டியத்துறையில் ஈடுபட்டுவரும் நளாயினி ராஜதுரை, விஜயாம்பிகை இந்திரகுமார், ராகினி ராஜகோபால், ஜெயந்தி யோகராஜா, பிரேமளா ரவீந்திரன் ஆகியோரின் உரையாடல்களும், நாடகத்துறையில் ஈடுபடும் ஆனந்தராணி பாலேந்திரா, ரோகினி சிவபாலன் ஆகியோரின் உரையாடல்களும், ஓவியத்துறையில் பிரபல்யமான அருந்ததி இரட்ணராஜா, மைதிலி தெய்வேந்திரம்பிள்ளை ஆகியோரின் உரையாடல்களும், இலக்கியத்துறையில் பிரபல்யமான ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், புனிதா பேரின்பராஜா, தமிழரசி சிவபாதசுந்தரம், யமுனா தர்மேந்திரன், றீற்றா பற்றிமாகரன், மாதவி சிவலீலன், உதயகுமாரி பரமலிங்கம் (நிலா) ஆகியோரின் உரையாடல்களும், அரசியல்துறையில் பரிணமித்த மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், நிர்மலா ராஜசிங்கம், ரதி அழகரட்ணம், சசிகலா சுரேஷ்குமார், ஆகியோரின் உரையாடல்களும், மருத்துவ நிபுணர்களான மாலா ராதாகிருஷ்ணன், மீனாள் நித்தியானந்தன், ஜெயானி நிர்மலன், வசந்தி கோபிநாத் ஆகியோரின் உரையாடல்களும், தொழிலதிபர்களான சுவர்ணா நவரட்ணம், ராஜேஸ்வரி சிவம் ஆகியோரின் உரையாடல்களுமாக மொத்தம் 33 பிரமுகர்களின் நேர்காணல்களின் எழுத்துருக்கள் இந்நூலில் பதிவுக்குள்ளாகியுள்ளன.

மேலும் பார்க்க 11331, 11317

305.4(5) பெண்ணியம் சார்ந்த ஆய்விதழ்கள்/சிறப்பிதழ்கள்

11293

நிவேதினி: பெண்நிலைவாத சஞ்சிகை. செல்வி திருச்சந்திரன் (இதழாசிரியர்). கொழும்பு 6: பெண்கள் கல்வி, ஆய்வு நிறுவனம், 58 தர்மராம வீதி, 1வது பதிப்பு, சித்திரை 1995. (கொழும்பு: கருணாரத்தின).

126 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ., ISSN: 1391-0353.

இவ்விதழில் (மலர்2: இதழ்1 சித்திரை 1995) இதழாசிரியரின் முன்னுரையுடன் கட்டுரைகள் தொடங்குகின்றன. பெண்கள் தினம் எப்படி உருவானது?, விருந்தோம்பல் பண்பாடு (ராஜம் கிருஷ்ணன்), மாயை (சுக்கிரிவி), இலக்கியத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் வெறுப்பு-ஒரு விளக்கம் (செல்வி திருச்சந்திரன்), சந்திப்பு (பவானி ஆழ்வாப்பிள்ளை), மூன்று சினிமாக்கள் (யமுனா ராஜேந்திரன்), முகாமைத்துவப் பதவிகளில் பெண்கள் அமரத் தயங்குவது ஏன்? (அன்னலட்சுமி இராஜதுரை), தமிழ்த் தினப் பத்திரிகைகள் காட்டும் மகளிர் நிலை (பாத்திமா சுல்பிகா), திருமணப்பாட்டு (புனரபி பாரதி), இலங்கைப் பாராளுமன்ற அரசியலில் பெண்கள் (ந.சரவணன்), பெண்களுடன் ஒரு பட்டறை (தமிழாக்கம் - சாரு நிவேதிதா) ஆகிய தலைப்புகளிலான பெண்ணிலை சார்ந்த படைப்புக்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11689).

305.5 சாதியம்

11294

சாதிச் சமூக வரலாற்றில் வர்க்கப் போராட்டம். ந.இரவீந்திரன். கல்கிசை: புதிய பண்பாட்டுத் தளம், 13, மவுண்ட் அவென்யூ, 1வது பதிப்பு, டிசம்பர் 2016. (வவுனியா: அகரம் பிரின்டர்ஸ், இல. 54, கந்தசாமி கோவில் வீதி).

xi, 175 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-41109-3-9.

இரட்டைத் தேசியம் சார்ந்த விவாதத்தை முன்வைக்கும் வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. சாதிச் சமூக வரலாற்றில் வர்க்கப்போராட்டம், வரலாறும் வர்க்கப் போராட்டமும், தேசியம் இனத்தேசியம், சோவியத் தகர்வும் தலித்தியவாதம் முனைப்படைதலும், ஒக்டோபர் 21 எழுச்சி, சாதி: ஒடுக்கப்படும் திணைகளும் திணை மேலாதிக்கமும், சாதிகளிடையே அதிகார மாற்றம், பண்பாட்டுப் புரட்சியில் சாதிய வர்க்கம், சமூக மாற்றக் கட்டத்தில் சாதி வர்க்கப் பிரிவினரிடையே சமநிலைக் குலைவு, முடிவுரைக்குப் பதிலாக ஆகிய பத்து இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. "ஒக்டோபர் 21" எழுச்சியின் 50ஆவது ஆண்டு நிறைவினை யொட்டி இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61338).

310 புள்ளிவிபரவியல்

11295

தொகைசார் பகுப்பாய்வில் கருதுகோள் சோதனைகள் (Hypothesis Tests in Quantitative Analysis). ப.கா. பக்கீர் ஜஃபார். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xii, 412 பக்கம், விலை: ரூபா 2000., அளவு: 25 x17.5 சமீ., ISBN: 978-955-659-503-1.

முதுமாணி, தத்துவ முதுமாணி, கலாநிதி போன்ற பட்டமேற் கற்கைகளுக்கான ஆய்வில் ஈடுபடும் தொகைசார் ஆய்வுகளில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு அனுமானப் புள்ளிவிபரவியலில் வழிகாட்டக்கூடிய வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தொகைசார் ஆய்வுகளில் கருதுகோள் சோதனை என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் முக்கியமானதாகும். அதனை மையப்படுத்தி இந்நூல் எழுதப்பட்டிருப்பினும் தொகைசார் பகுப்பாய்வில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் நுட்பங்கள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. புள்ளிவிபரவியலுக்கான அறிமுகம், மீடிறன் பரம்பல்கள், மையநிலை அளவீடுகள், மாறும் தன்மை (Variability), Z-புள்ளிகள்: புள்ளிகளின் அமைவிடமும் நியமமாக்கப்பட்ட பரம்பல்களும், நிகழ்தகவு, நிகழ்தகவும் மாதிரிகளும் மாதிரி இடைகளின் பரம்பலும், கருதுகோள் சோதனை, திசைகொண்ட சோதனைகள், உத்தேசமாக மதிப்பிடுதல், வலு, t-புள்ளிவிபரம், இரண்டு சாரா மாதிரிகளில் புள்ளிவிபரவியல் அனுமானம், தொடர்புள்ள மாதிரிகளில் புள்ளிவிபரவியல் அனுமானம், மாறற்றிறனின் பகுப்பாய்வுக்கான அறிமுகம் ANOVA, மீள்-அளவீடுகள் மாறற்றிறன் பகுப்பாய்வு, இரு-காரணி ANOVA (சாரா அளவீடுகள்), இணைபும் தொடர்புப் போக்கும், கை-வர்க்க புள்ளிவிபரம், வரிசைநிலை தரவுகளுக்கான புள்ளிவிபரவியல் நுட்பங்கள் மான்-விற்னி (Maam-Whitney) மற்றும் வில்கொக்ஸன் (Wilcoxon) சோதனைகளும் ஸ்பியர்மான் இணைபும் ஆகிய 18 பாடத்தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது.

320 அரசறிவியல்

11296

அரசியல் விஞ்ஞானம்: கட்டமைப்பு வினாக்களும் விடைக் குறிப்புகளும். எம்.ஏ.எம். பௌசர். கொழும்பு 9: இஸ்லாமிய புத்தக இல்லம், Islamic Book House, தெமட்டகொட வீதி, மருதானை, 1வது பதிப்பு, 2012. (ஐ.பீ.எச். பப்ளிக்கேஷன், 77 தெமட்டகொட வீதி, மருதானை).

134 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-0687-25-1.

முஹம்மட் அனிபா முஹம்மட் பௌசர் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சமூக விஞ்ஞானத் துறையின் கீழ் இயங்கும் அரசியல், சமாதானக் கற்கைகள் பிரிவில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். அரசியல் விஞ்ஞானச் சிறப்புப் பட்டதாரியான இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது முதுமானிக் கற்கை நெறியினை மேற்கொண்டு வருகின்றார். சமாதானக் கற்கைகளுக்கான நிலையத்தினால் நடத்தப்படும் முரண்பாடு தீர்த்தல் மற்றும் சமாதானத்திற்கு தயார்படுத்தல் டிப்ளோமா கற்கைநெறியினைப் பூர்த்திசெய்த நூலாசிரியர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்தினால் வழங்கப்படும் மனித உரிமைகள் மற்றும் சமாதானக் கற்கைகள் தொலைக்கல்வி டிப்ளோமா வினையும் பயின்று வருகிறார். அரசியல் விஞ்ஞான ஆய்விலும் கற்பித்தலிலும் மிகுந்த ஆர்வமுள்ள இவர் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு அரசியல் விஞ்ஞானத்தைப் போதிப்பதில் சுமார் 8 வருட கால அனுபவத்தைப் பெற்றிருந்த நிலையில் இந்நூலை எழுதியிருக்கிறார். (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 12748).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11297

அரசியல் விஞ்ஞானம்: பல்தேர்வு வினா-விடைகள். சிவலிங்கம் புஷ்பராஜ். தெகிவளை: காயத்திரி வெளியீட்டகம், த.பெ.எண். 64, டீ சில்வா வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2012. (அச்சக விபரம் தரப்படவில்லை).

162 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-8741-57-3.

அரசியல் விஞ்ஞானத்தை உயர்தரத்திற் கற்கின்ற மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஒரு வழிகாட்டிப் பயிற்சியை இந்நூல் வழங்குகின்றது. அரசியலும் அரசியல் விஞ்ஞானத்தை இனம்காணலும், அரசு பற்றிய கற்கை, அரசாங்கம் பற்றிய கற்கை, அரசியல் அமைப்பு மாதிரிகள், அரசாங்க செயன்முறை: அரசாங்கமும் மக்களும், பொதுத்துறை நிர்வாகம்- பொதுக்கொள்கை- முகாமைத்துவம், மோதலும் மோதல் தீர்வும், சர்வதேச அரசியல், தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் அரசியல் அமைப்பு முறை, விடைகள் ஆகிய பத்து அத்தியாயங்களில் இந்நூல் விரிகின்றது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்துறையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும் அரசியல் விஞ்ஞானப் பிரிவில் முதுமாணிப்பட்டத்தையும் பெற்ற நூலாசிரியர் கினிகத்தேனை, அம்பகமுவ பிரதேச செயலகத்தில் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தராகப் பணியாற்றுகின்றார். (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 12749).

11298

இலங்கையின் பின்காலனித்துவ அரசு. ஜயதேவ உயன்கொட (ஆங்கில மூலம்), க.சண்முகலிங்கம் (தமிழாக்கம்). கொழும்பு 4: க.சண்முகலிங்கம், 312, 5/3, ஹவ்லக் வீதி, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: ஹரே பிரின்டர்ஸ்).

60 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20x14.5 சமீ.

இலங்கை அரசுக்கு எதிரான ஆயுதம் தாங்கிய போராட்டங்கள் நடைபெற்ற வேளையில் இலங்கை அரசு ஜனநாயக முறையை முற்றாகத் தூக்கிவீசிவிட்டு சர்வாதிகார அரசாக அல்லவா மாறியிருக்கவேண்டும்? இதுவல்லவா சாதாரணமாக எதிர்பார்க்கக்கூடியது? ஆனால் இலங்கையில் ஜனநாயகம் உயிரோடு இன்றும் இருக்கின்றது. இது எவ்வாறு சாத்தியமாயிற்று என்ற புதிரை விடுவிப்பதே தனது ஆய்வின் நோக்கமென பேராசிரியர் உயன்கொட குறிப்பிடுகிறார். இலங்கையின் பின்காலனித்துவ அரசு தனது ஜனநாயக வடிவத்தை நெகிழ்ச்சியுடையதாக்கி அதனுள்ளே சர்வாதிகார நடைமுறைகளையும் இணைத்துக்கொண்டுள்ளது. இந்த அரசு சில திருத்தங்களையும் மாற்றங்களையும் செய்து ஜனநாயகத்தைத் தன்னுடன் வைத்துக்கொண்டது. அதனை முற்றாகத் தூக்கி வீசவில்லை. ஜனநாயகத்தின் நெகிழ்வுத் தன்மை காரணமாக இலங்கையில் சர்வாதிகாரம் ஜனநாயத்தோடு இணைந்து கொண்டது. ஜனநாயக நடைமுறைகளை உள்வாங்கிக் கொண்டு சமரசம் செய்துகொண்ட சர்வாதிகார அரசே இலங்கையில் இன்று நிலைபெற்றுள்ளது என்று நூலாசிரியர் முடிவுசெய்கின்றார். இலங்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகத்தை மீளவும் உயிர்ப்பிக்கக்கூடிய அமைப்பில் மாற்றங்களைச் செய்வதை இந்தச் சர்வாதிகார அரசு அனுமதிக்க மாட்டாது என்றும் குறிப்பிடுகிறார்.

11299

குடியியலும் அரசாங்கமும்: இரண்டாம் பாகம். அ.விசுவநாதன். யாழ்ப்பாணம்: அ.விசுவநாதன், 91, கண்டி வீதி, 2வது திருத்திய பதிப்பு, மார்கழி 1967, 1வது பதிப்பு, ஆடி 1962. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

xvi, 257-504 பக்கம், விலை: ரூபா 4.00, அளவு: 21x14 சமீ.

இந்நூல் பொதுத் தராதர வகுப்புக்கும் சர்வகலாசாலைப் பிரவேச வகுப்புக்கும் உரியது. இவ்விரண்டாம் பாகத்தில் இயல்கள் 9 முதல் 14 வரை இடம்பெற்றுள்ளன. ஜனநாயகப் பாதையிலே இலங்கை (அரசியல் வளர்ச்சி 1796-1931/டொனமூர் அரசியல் சட்டம்/ டொனமூர் அரசியல் சட்டத்திற்குப் பின்), சுதந்திர இலங்கை (டொமினியன் அல்லது ஆணிலப்பத அந்தஸ்து/வாக்குரிமை பிரஜாவுரிமை/ தொகுதிகள்/இலங்கைப் பாராளுமன்றம்/அரசியல்கட்சி முறை/மந்திரிசபை முறை/பாராளுமன்றம் அதனதிகாரம்), அரசாங்க நிர்வாகம், நீதி பரிபாலனம், தலதாபன அரசாங்கம், சில அரசியல் பிரச்சினைகள் (அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமா?/ குடியரசா முடியரசா?/ மேல்சபை இருத்தல் வேண்டுமா?/ நியமன உறுப்பினர்/ 29ஆவது விதியும் அரசியல் சட்டத் திருத்தமும்/அடிப்படை உரிமைகள்/இலங்கையில் பாராளுமன்ற ஜனநாயகம் நிலைத்துவிட்டதா?/ஒற்றை ஆட்சியா சமஷ்டி ஆட்சியா?) ஆகிய பாடங்கள் இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14056).

323 மனித உரிமை

11300

இலங்கையில் தமிழ் மொழி உரிமைகள். தேவநேசன் நேசையா. கொழும்பு 7: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 24/2, 28ஆவது ஒழுங்கை, ப்ளவர் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2012. (கொழும்பு: க்ளோப் பிரின்டிங் வேர்க்ஸ்).

76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-1655-85-3.

நான்கு பாகங்களில் எழுதப்பட்டுள்ள இந்நூலின் முதற்பாகம் அறிமுகமாகவும், இரண்டாம் பாகம் பரிந்துரைகள், குறுகிய கால நடவடிக்கைகள் (1999ஆம் ஆண்டின்போது எடுக்கப்படவேண்டும்), நீண்டகால நடவடிக்கைகள், அமுலாக்கமும் கண்காணித்தலும் ஆகிய விடயங்களையும் பேசுகின்றன. மூன்றாம் பாகம் மொழிக்கொள்கை, கல்வி -சம வாய்ப்புக்கள், சமாதானக் கல்வி, LLRC அறிக்கையின் மேற்கோள் பற்றிய குறிப்புரைகள் ஆகிய அம்சங்களையும், இறுதிப்பாகம் இலங்கையின் மொழி:தேசிய ஐக்கியத்துக்கான ஓர் அரசியலமைப்பு ஆகிய விடயங்களையும் பற்றிப் பேசுவதாகவும் அமைந்துள்ளன. (இந்நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61634).

11301

நம் மொழியுரிமைகள்: தனிநாயக அடிகளாரின் கருத்து. தனிநாயக அடிகள்.

கண்டி: ஆர்.யே.சிங்கம், தமிழ் உரிமை பாதுகாப்புக் கழகம், இல.105, கண்டி-பேராதெனிய வீதி, 3வது பதிப்பு, 1961, 1வது பதிப்பு, 1956.(கண்டி: நந்தன் பதிப்பகம், 8ஆம் நிர்., காசில் வீதி).

14 பக்கம், விலை: 50 சதம், அளவு: 21.5x13.5 சமீ.

தனிநாயகம் அடிகளாரின் மொழிச்சிந்தனைகள் இருவகையில் அமைந்தன. ஒன்று மொழியியல் கற்பித்தல் பற்றியதாகும். மற்றது தமிழ் மக்களது மொழியுரிமை பற்றியதாகும். 1956இல் தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்படவிருந்தவேளையில் அதனால் ஏற்படக்கூடிய தீமைகளையும், பொதுவாக மொழியுரிமைப் பண்பு களையும் பல கட்டுரைகளில் வெளியிட்டுவந்தார். அவற்றின் தொகுப்பாக இந் நூல் அமைகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 9053).

11302

ஜனநாயகமும் மனித உரிமைகளும்: கட்டுரைத் தொகுப்பு. வி.ரி.தமிழ்மாறன். கொழும்பு 8: மதுரி மலர்வகம், பூங்கா வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2010. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

200 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1162-34-4.

நூலாசிரியர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்தின் பொது மற்றும் சர்வதேச சட்டத்துறைத் தலைவராகப் பணியாற்றுகிறார். இவர் எழுதிய மனித உரிமைகள் சார்ந்த ஒன்பது கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. 21ஆம் நூற்றாண்டில் அரசுகளுக்கான சவால்கள்: ஓர் உரிமையியற் கண்ணோட்டம், மனித உரிமைகளும் சுயநிர்ணய உரிமையும்: சர்வதேசச் சட்ட நோக்கு, தனிமனித உரிமைகளும் சிறுபான்மையினர் உரிமைகளும்: தெளிவும் தேவையும், மனித உரிமைகளும் மதமாற்றத்தை விளங்கிக்கொள்ளலும்: ஒரு சட்ட நோக்கு, மனித உரிமைகளின் பாதுகாப்பும் நீதித்துறைக்கு வலுவூட்டலும், மேற்கை விஞ்சிய கிழக்கு: கிரேக்கத்தை விஞ்சிய இந்திய அரசியற் தத்துவங்கள், இந்து மதமும் சர்வதேசச் சட்டமும், திருக்குறளில் நீதி எனும் எண்ணக்கரு, மனித உரிமைகள் கல்வி: வழிகாட்டியா அல்லது வாழ்க்கையா? ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14801).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

325 சர்வதேச புலப்பெயர்வுகள், காலனித்துவம்

11303

இலங்கையில் நாடற்றவர் வீடற்றவர் பிரச்சனை. தொழிலாளர் தேசிய சங்கம். கொழும்பு 3: தொழிலாளர் தேசிய சங்கம், 618, 3/3 காலி வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1980. (மஸ்கெலியா: விக்டோரியா அச்சகம்).

22 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x11 சமீ.

19.10.1980 இல் மலையகத்தின் அட்டன் நகரில் நடைபெற்ற தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஒன்பதாவது மாநாட்டில் இப்பிரசுரம் வெளியிடப்பட்டது. மலையகத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை அனைத்துத் தமிழ் மக்களின் கவனத்திற்கு இச்சிறுநூல் கொண்டு செல்ல முனைகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2750).

327 சர்வதேசத் தொடர்புகள்

11304

நவீனத்துவத்தின் தோல்வி. றவூப் ஸெய்ன் (மூலம்), A.P.M.இத்ரீஸ் (பதிப்பாசிரியர்). வாழைச்சேனை 05: உயிர்ப்பைத் தேடும் வேர்கள், மஹ்மூத் ஆலிம் வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).

viii, 66 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 20x14 சமீ.

இருபதாம் நூற்றாண்டின் யுகசந்தியில் தோன்றிய ஐரோப்பிய மையவாத சிந்தனைகள் குறித்து ஒரு மறுவாசிப்பும் இஸ்லாமிய மாற்றுக்கான தேவை பற்றிய ஒரு கவனயீர்ப்புமாக இதிலுள்ள எட்டுக் கட்டுரைகளும் அமைகின்றன. மேற்கத்தேய ஜனநாயகம், பின் நவீனத்துவம், தகவல் பயங்கரவாதம், தகவல் துறையில் அமெரிக்காவின் ஆதிக்கம், கருத்துச் சுதந்திரம், உலகமயமாதல், நவீனத்துவத்தின் தோல்வி, மேலைத்தேய இனவாதம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36327).

330 பொருளியல்

11305

பொருளாதார அபிவிருத்தி: சிங்கப்பூரும் இலங்கையும் அரசியற் பொருளாதார ஒப்பியல் நோக்கு. செல்வரத்தினம் சந்திரசேகரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).

xv, 200 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-685-022-2.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் செ.சந்திரசேகரம் தென்னாசிய சமூகங்களின் விருத்தியை ஒப்பியல் நோக்கில் புரிந்துகொள்ளும் வகையில் இந்நூலை வழங்கியுள்ளார். அரசியல் சுதந்திரமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார அபிவிருத்தியும், பொருளாதார அபிவிருத்தியில் சிங்கப்பூரும் இலங்கையும்: இலங்கை பற்றிய லீ குவான் யூவின் குறிப்புகள், இன ஒற்றுமைக்கு சிங்கப்பூரிடம் இலங்கை கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள், சிங்கப்பூரின் பொருளாதார அபிவிருத்தியும் அவற்றின் மூலங்களும், நல்லாட்சியும் பொருளாதார அபிவிருத்தியும், சிங்கப்பூரின் அரசியல் தலைமைத்துவமும் பொருளாதார அபிவிருத்தியும்: லீ குவான் யூ பற்றிய ஒரு பார்வை, சமூக நலன்புரிக் கொள்கைகளும் அபிவிருத்தியும் ஆகிய ஏழு இயல்களின் வாயிலாக சமகாலச் சூழலில் முக்கியத்துவம் மிக்கதான பல விடயங்கள் பேசப்பட்டுள்ளன. இங்கு பேசப் பட்டுள்ள விடயங்கள் சிங்கப்பூர்- இலங்கை முதலான நாடுகளை பொருத்தப் பாடுகளுடன் நோக்குவதற்கான சிந்தனை பின்புலங்களை வழங்குகின்றது. (இந் நூல் இலங்கைத் தேசிய நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 1001416).

11306

பொருளாதார அபிவிருத்திச் செல்வழி: இலங்கையின் அனுபவத்தை ஆதாரமாகக்கொண்ட ஓர் உசாவல். ந.ரவீந்திரகுமாரன், மு.கணேஷமூர்த்தி (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 6: பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன் சேவைநலன் பாராட்டுக் குழு, 611, ஹவ்லொக் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxii, 603 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17 சமீ., ISBN: 978-955-51372-0-1.

பேராசிரியர் நா.பாலகிருஷ்ணன் அவர்கள் நான்கு தசாப்த காலத்திற்கு மேலாக கல்வித்துறைக்கு ஆற்றிய சேவையினைக் கௌரவிக்கும் முகமாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலானது பொருளாதார அபிவிருத்தியின் பரி மாணங்கள், பேரினப் பொருளாதாரக் கொள்நெறிகளின் அணுகுமுறைகள், சர்வதேசப் பொருளாதாரத்தின் செல்வாக்குகள், மோதலும் பொருளாதார அழுத்தங்களும், வறுமையின் பரிமாணங்கள், அரசியலும் பொருளாதாரமும், ஆகிய சமகால முக்கியத்துவம் கொண்ட ஆறு பிரதான தலைப்புகளின் கீழ் மொத்தம் இருபத்தி மூன்று கட்டுரைகளைத் தாங்கி வருகின்றது. கட்டுரைகள் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி என்ற குறிக்கோளின் வெவ்வேறு பக்கங்களைப் பிரதிபலிப்பதுடன் கோட்பாட்டுரீதியானதும் அனுபவரீதியானதுமான ஆய்வுகளின் பெறுபேறுகளை ஒரே நூலில் வாசகருக்குப் பயன்படும் விதத்தில் ஒழுங்குபடுத்தித் தந்துள்ளது. கார்த்திகேசு சிவத்தம்பி, வேலுப்பிள்ளை பசுபதி சிவநாதன், நல்லதம்பி பேரின்பநாதன், கணபதிப்பிள்ளை ஞானேஸ்வரன், செல்வநாயகி ஸ்ரீகணநாதன், பாலசுந்தரம் சிவாஜி, இராஜகோபால் நந்தகுமாரன், கனகசபை அருளம்பலம் விமலேந்திரராஜா, தங்கதுரை இராஜேஸ்வரன், முஸ்தபா முகம்மது தெசீம், கோபாலபிள்ளை அமிர்தலிங்கம், முத்துவடிவு சின்னத்தம்பி, அப்துல் அஸீஸ் முகம்மது நுபைல், கலைச்செல்வி ரவீந்திரகுமாரன், ஆறுப்பிள்ளை தயாபரன், முத்துக்கிருஷ்ணன் சர்வானந்தன், நவரட்ணம் இரவீந்திரகுமாரன், செல்வரத்தினம் சந்திரசேகரம், இரத்தினம் ஸ்ரீகாந்தன், சரவணமுத்து ஜெயராஜா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்துரை விஜயகுமார், சிதம்பரப்பிள்ளை அமலநாதன், விசாகலிங்கம் நித்தியானந்தம், முருகேசு கணேசமூர்த்தி, கனகையா இரகுநாதன், தனபாலசிங்கம் கிருஷ்ணமோகன் ஆகியோர் இந்நூலிலுள்ள கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

11307

பொருளாதார சிந்தனை வரலாறு. செல்வரத்தினம் சந்திரசேகரம். யாழ்ப்பாணம்: அபி பதிப்பகம், 196/23, தலுவில் ஒழுங்கை, நவாலி வடக்கு, மானிப்பாய், 1வது பதிப்பு, 2013. (யாழ்ப்பாணம்: கங்கை பிறின்டேர்ஸ், காங்கேசன்துறை வீதி).

iv, 222 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-44890-0-4.

பொருளாதார சிந்தனை வரலாறு: ஓர் அறிமுகம், புராதன பொருளாதாரச் சிந்தனை வரலாறு, வணிகவாதம், இயற்கைவாதம், அடம்ஸ் ஸ்மித், தோமஸ் ரொபர்ட் மல்தூஸ், டேவிட் ரிக்கார்டோ, ஜே.பி.சே., ஜே.எஸ்.மில், பழம் பொருளியலின் எதிர்முனை, கார்ள் மார்க்ஸ், ஜோன் மேனார்ட் கெயின்ஸ் ஆகிய 12 அத்தியாயங்களில் உலகின் பொருளாதார சிந்தனை வரலாறுகள் விபரிக்கப்பட்டுள்ளன. பொருளியல்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான நூலாசிரியரின் இந்நூல், பொருளியலைக் கற்பிப்பவர்களுக்கும், அதனை ஒரு பாடமாகக் கற்பவர்களுக்கும் மிகப்பயனுடையது. ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற பொருளாதார வரலாறுகளையும் அவைசார்ந்த பொருளியலாளர்களின் சிந்தனைகளையும் தெளிவாகக் கற்று, தமிழில் தனது பார்வையில் தொகுத்து வழங்கியிருக்கிறார். (இந்நூல் இலங்கைத் தேசிய நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 1001422).

11308

பொருளாதார முறைமைகள் G.C.E. A/L. வே.கருணாகரன். யாழ்ப்பாணம்: கே.தனேஸ்வரன், இல. 101, சட்டநாதர் வீதி, நல்லூர், 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

xiv, 104 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

சுயமாகக் கற்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்நூல் மூன்று அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள், பொருளாதார முறைமைகள், சந்தைப் பொருளாதாரங்கள், கட்டளைப் பொருளாதாரங்கள், கலப்புப் பொருளாதாரம், மாறுநிலைப் பொருளாதாரங்கள் ஆகிய ஆறு பகுதிகளின் கீழ் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியின் ஆரம்பத்திலும் அவ்வப்பகுதியில் கற்கப்போகும் விடயத் தலைப்புகள் இலக்க ஒழுங்கில் தரப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் 1973ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்த கடந்தகாலப் பரீட்சை வினாக்கள் உள்ளிட்ட பயிற்சி வினாக்கள், பல்தேர்வு வினாக்கள், கட்டமைப்பு வினாக்கள் என்ற இரு பகுதிகளாகத் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. பல்தேர்வு வினாக்களுக்குரிய விடைகள் நூலின் இறுதியில் தரப்பட்டுள்ளன. (இந்நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் எல்-10494).

11309

பொருளியல்: சந்தை அமைப்புக்கள்: காரணிச் சந்தை: வினா-விடை. வே.கருணாகரன். யாழ்ப்பாணம்: வேலாயுதம் கருணாகரன், கரன் வெளியீடு, 215 கே, நாவலர் வீதி, 1வது பதிப்பு, 2015. (யாழ்ப்பாணம்: கங்கை பிரின்டர்ஸ், 743, காங்கேசன்துறை வீதி).

48 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 90., அளவு: 20x14 சமீ.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பு மாணவர்களின் பொருளியல் பாடத்தில் சந்தை அமைப்பு என்ற பகுதியில் காரணிச் சந்தை (Factor Market) என்ற பகுதியை ஆழமாக விளக்குவதாக இந்தக் கேள்வி பதில் வாயிலாக தகவல்களை ஒழுங்கமைத்து வழங்கப்பட்டுள்ள பாடநூல் உதவுகின்றது. (இந் நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14751).

11310

பொருளியல்: பகுதி 1: பொருளாதாரமொன்றின் அறிமுகம். எஸ்.ஸ்ரீராம். கொழும்பு 13: எஸ்.ஸ்ரீராம், 111 கல்லூரி வீதி, முதலாவது பதிப்பு, மார்ச் 2011. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

viii, 405 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 490., அளவு: 21.5x14.5 சமீ.

2009இலிருந்து அமுல் படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கேற்ப 2011இலிருந்து பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான கைநூல். இந்நூலை 18 அலகுகளாகப் பிரித்து தேவையான குறிப்புகளையும் வினா-விடைகளையும் உள்ளடக்கியுள்ளதோடு மேலதிகப் பொருளியல் விடயங்களை பெட்டிக் குறிப்புகளாகவும் தந்துள்ளார். பொருளியல் அறிஞர்கள், சில பொருளியல் பதங்கள், வளப்பற்றாக்குறையும் வளப்பயன்பாடும், இலவசப் பண்டமும் பொருளியல் பண்டமும், அமையச் செலவு, பொருளியல் இலாபம் கணக்கியல் இலாபம், சர்வதேச வர்த்தகமும் அமையச் செலவும், பொருளாதார அடிப்படை பிரச்சினைகள், விலை-பொறிமுறை, மத்திய திட்டமிடல் குழு, பொருளாதார முறைமைகள், அரசாங்க தோல்வி, சந்தைத் தோல்வி, மாறுநிலைப் பொருளாதாரங்கள், உற்பத்தி வளங்கள், சந்தை, பொதுப் பண்டமும் தனியார் பண்டமும், மாறிகள், உற்பத்தி சாத்திய வளையி ஆகிய 18 அலகுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 49921).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11311

பொருளியல்: பகுதி 2: பொருளாதாரக் கொள்கை வேலையின்மை. எஸ்.ஸ்ரீராம். கொழும்பு 13: எஸ்.ஸ்ரீராம், 111 கல்லூரி வீதி, முதலாவது பதிப்பு, ஜனவரி 2010. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

78 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 180., அளவு: 20.5x14.5 சமீ.

பொருளாதாரக் கொள்கை, வேலையின்மை, கற்றல் நுட்பங்கள், பரீட்சை நுட்பங்கள் ஆகிய நான்கு பிரிவுகளின்கீழ் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நூலில் பயன்படுத்தப்படும் இலங்கை பொருளாதார தரவுகள் அனைத்தும் மத்திய வங்கி அறிக்கை, ஐம்பதாண்டு மத்திய வங்கியின் வெளியீடு, உலக வங்கியின் ஆய்வறிக்கை என்பவற்றிலிருந்து பெறப்பட்டதாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48590).

11312

பொருளியல் மாதிரி வினாத்தாள்கள்: மிக விரிவான விடைகளுடன். எஸ்.ஸ்ரீராம். கொழும்பு 13: எஸ்.ஸ்ரீராம், 111 கல்லூரி வீதி, முதலாவது பதிப்பு, ஜூலை 2011. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

(4), 146 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 350., அளவு: 30x22 சமீ.

2009இலிருந்து அமுல்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கேற்ப உருவாக்கப்பட்ட இந்நூல் 2011இல் இருந்து பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கேற்றவாறு தகவல்களை உள்ளடக்கியுள்ளது. இந்நூலாசிரியர் புவக்பிட்டிய தமிழ் வித்தியாலயத்தில் பொருளியல் ஆசிரியராகப் பணியாற்றியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 51119).

11313

மலையகம்: சமத்துவ அபிவிருத்தியை நோக்கி. எம். வாமதேவன். ஹட்டன்: பாக்யா பதிப்பகம், 4ஏ, ஸ்டார் சதுக்கம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2014. (ஹட்டன்: பாக்யா பதிப்பகம்).

xxviii, 183 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-1805-08-1.

நுவரெலிய மாவட்டத்தின் கொட்டகலைப் பிரதேசத்தைச் சேர்ந்த எம்.வாமதேவன், நிதி திட்டமிடல் அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும், வீடமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றியவர். 1960க்குப் பின்னர் தொடங்கி, 2014 வரையிலுமான காலகட்டத்தின் அனுபவங்களை இந்நூலில் கட்டுரைகளாக்கியுள்ளார். இதிலுள்ள 21 கட்டுரைகளும் கால ஒழுங்கில் தொகுக்கப்பட்டுள்ளன. முதல் 10 கட்டுரைகளும் மலையகத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல், பொருளியல், அபிவிருத்தி மற்றும் சமூக வாழ்வு பற்றியதான விடயங்களைப் பேசுகின்றன. பொருளியல் அணுகுமுறையிலான அபிவிருத்திசார் ஆய்வுக்கட்டுரைகளாக இவை காணப்படுகின்றன. மலையகத் தமிழர் என்னதான் அரசியல் உரிமைகளை வென்றெடுத்தாலும், அது அபிவிருத்தியை சமத்துவமாக அனுபவிக்கும் ஒரு தன்னிறைவு சமூகமாகத் தன்னை வளர்த்துக் கொண்டாலேயன்றி மலையகத்தை பூரண சுதந்திரம் அடைந்துவிட்டதாகக் கருத முடியாது என்ற கருத்து நூலின் முன்னைய 10 கட்டுரைகளிலும் பொதிந்துள்ளது. புரட்சிகரமான சமூகப் பொருளாதார அரசியலமைப்பின் மூலமே இது சாத்தியப்படும் என்று இந்நூல் வலியுறுத்துகின்றது. எஞ்சிய 11 கட்டுரைகளும் மலையக இலக்கியம் பற்றிப் பேசுகின்றன. அமரர் இர சிவலிங்கம் அவர்களது வாழ்க்கையோட்டம், மலையக மக்கள் நெஞ்சங்களில் மறையாதிருக்கும் ஆசான் திருச்செந்தூரன், என்.எஸ்.எம். இராமையாவின் ஒரு கூடைக் கொழுந்து- மறுபிரசுரத்துக்கான அணிந்துரை, மலரன்பனின் பிள்ளையார் சுழி சிறுகதைக்கான அணிந்துரை, லெனின் மதிவானத்தின் ஊற்றுகளும் ஓட்டங்களும் கட்டுரைத் தொகுதிக்கான அணிந்துரை, ஏ.கணபதிப்பிள்ளையின் தேயிலைக் காவியம்- மதிப்பீட்டுரை, தமிழ் மகனின் வனசாட்சி- தமிழகப் பார்வையில் ஒரு மலையக நாவல், மலையகப் படைப்புகள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும்- ஒரு மேலோட்டம், மு.சிவலிங்கத்தின் வெந்து தணிந்தது காலம்-சமகால சமூக, அரசியல் விமர்சன படைப்புகளின் தொகுப்பு, வாழ்வியல் ஓவியங்களாகும் தெளிவத்தை ஜோசப் கதைகள், சடகோபனின் கண்டிச் சீமையிலே மலையக இலக்கியப் பரப்பில் ஒரு புதிய பரிமாணம் ஆகிய 11 இலக்கியக் கட்டுரைகள் இந்நூலின் பிற்பகுதியை அலங்கரிக்கின்றன.

11314

வட இலங்கைத் தமிழர் பொருளாதாரத்தின் வரலாற்று அடிப்படைகள்: 17ஆம் நூற்றாண்டிலிருந்து 20ஆம் நூற்றாண்டு வரை. சி.அரசரத்தினம் (ஆங்கில மூலம்), க.சண்முகலிங்கம் (தமிழாக்கம்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

70 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-518-5.

The Historical Foundations of the Economy of the Tamils of North Sri Lanka என்ற தலைப்பில் பேராசிரியர் சி.அரசரத்தினம் எழுதிய சிறு நூலொன்று 1982ஆம் ஆண்டில் பிரசுரமாகியிருந்தது. அந்நூலின் தமிழாக்கம் இதுவாகும். தந்தை செல்வா நினைவுப் பேருரைத் தொடரில் நான்காவது உரையாக இது 1982இல் நிகழ்த்தப்பட்டிருந்தது. தமிழர்களின் பொருண்மிய வாழ்க்கையின் அடிப்படைகளை வரலாற்று நோக்கில் ஆசிரியர் விளக்கிக் கூறியிருக்கிறார். நான்கு நூற்றாண்டுக்காலப் பகுதியில் அந்நியர் ஆட்சியின் கீழ் வட இலங்கைப் பிராந்தியத்தின் பொருளாதாரம் எவ்வாறு அமைந்திருந்தது என்பது பற்றிய பெறுமதி வாய்ந்த தரவுகளை அவர் தொகுத்துத் தந்திருந்தார். தனது விடயப் பொருளை இரு விரிவுரைகளின் வாயிலாக இங்கு பதிவுசெய்துள்ளார். முதலாவது விரிவுரையில் 17ஆம் 18ஆம் நூற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றாண்டுகளில் வட இலங்கையின் நில உரிமை உறவுகளின் தோற்றம், வர்த்தகத்தின் வளர்ச்சி, தொழில் உறவுகள் என்பன பற்றிப் பரிசீலிக்கிறார். இரண்டாவது விரிவுரையில் 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளின் வளர்ச்சியினை இலங்கை சுதந்திரமடைந்தது வரையிலான காலம் வரை பரிசீலனை செய்கின்றார். டச்சுக்காரரும் அதனையடுத்துப் பிரித்தானியரும் இந்நாட்டை ஆட்சிசெய்த காலத்தின் ஆவணச் சான்றுகளைத் தனது விரிவுரைகளுக்கான ஆதாரங்களாக அவர் கொண்டுள்ளார். வட இலங்கையின் தமிழர் வாழ்விடத்தின் பொருளாதார சமூக வரலாற்றின் முக்கியமான பல அம்சங்கள் இவ்விரிவுரைகளில் ஆராயப்பட்டுள்ளன. நவாலிக் கிராமத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட பேராசிரியர் சின்னப்பா அரசரத்தினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்.

11315

வினா-விடை 4: ஏ.எல்.பொருளியல். வே.கருணாகரன். யாழ்ப்பாணம்: வேலாயுதம் கருணாகரன், கரன் வெளியீடு, 215 கே, நாவலர் வீதி, 1வது பதிப்பு, மே 2015. (யாழ்ப்பாணம்: கங்கை பிரின்டர்ஸ், 743, காங்கேசன்துறை வீதி).

vi, 126 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

பணம், வணிக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி, பொது விலைமட்டம், விலைச் சுட்டெண், பணவீக்கம், நிதிச் சந்தை ஆகிய விடயப் பரப்புகளை உள்ளடக்கியதாகவும் வங்கியாளர் பரீட்சைகளுக்கு உதவும் பரீட்சை நுட்பங்கள், புள்ளி வழங்கும் முறைகள் மற்றும் அறிவுறுத்தல்களையும் உள்ளடக்கியதாகவும் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 68744).

331.88 தொழிற் சங்கங்கள்

11316

தமிழ் அரச ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள். ஐ.தி.சம்பந்தன். லண்டன்: சுடரொளி வெளியீட்டுக் கழகம், 15, Rutland Road, London E7 8PQ, 1வது பதிப்பு, மார்ச் 2016. (கொழும்பு 6: குமரன் அச்சகம், 39, 36வது ஒழுங்கை).

xiv, 199 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 350., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-0-9555359-6-3.

யாழ்ப்பாணம், காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. ஐ.தி.சம்பந்தன் அவரது சமய, இலக்கிய, வெளியீட்டு, சமூகப் பணிகளுக்கும் அப்பால், ஒரு தொழிற்சங்கவாதியாகவும் அறியப்பெற்றவர். இவர் தமிழ் அரசதுறை ஊழியர்களின் அவலங்களையும் அவர்கள் இனரீதியாக ஒதுக்கப்படுவதையும் உணர்ந்து அவற்றை எதிர்த்துப் போராடுவதற்கு மொழிவழித் தொழிற்சங்கங்களுடன் இணைந்தார். தமிழ்த் தொழிற்சங்கவாதிகளான கோடீஸ்வரன், சிவஞானசுந்தரம், இராமநாதன், போன்றவர்களின் தொடர்பால் தொழிற்சங்கத்துறையில் ஆழமாக காலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதித்துக்கொண்டார். அரச கூட்டுத்தாபன ஊழியர்களின் நலன் கருதி அவரும் திரு. யேசுதாசனும் கூட்டுத்தாபன ஊழியர் சங்கத்தைக் கட்டியெழுப்பினார்கள். 1956இல் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம் அரசதுறை ஊழியர்களைப் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கியது. தமிழ் ஊழியர்களின் உரிமைக்கு மொழிவழித் தொழிற்சங்கரீதியாக போராடவேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே தொழில்வழித் தொழிற்சங்கங்கள் இணைந்து தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியை உருவாக்கினர். அதன் செயலாளர் நாயகமாகப் பொறுப்பேற்று அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் வழிகாட்டலில் "சிங்களம் மட்டும்" சட்டத்தினாலும், இனக் கலவரங்களாலும் பாதிக்கப்பட்ட தமிழ் அரச ஊழியர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுப்பதில் திரு. சம்பந்தன் தீவிரமாகச் செயற்பட்டார். 1983 ஜூலை இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட 11000 ஊழியர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்க முன்நின்று உழைத்தார். இந்தத் தொழிற்சங்க ஈடுபாட்டினால் பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் State Sector Employment and Tamils in Sri Lanka *என்ற பல்கலைக்கழக ஆய்வுக் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் வெளியிடப்பட்ட ஆதாரபூர்வமான தகவல்களையும் கொண்டு தொகுக்கப்பட்டதே பத்து அத்தியாயங்களையும் எட்டு பின்னிணைப்புகளையும் கொண்ட "தமிழ் அரச ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள்" என்னும் இந்நூலாகும்.*

11317

போராட்டம் தொடர்கின்றது: ஸ்ரீலங்கா தோட்டத் தொழிற்சங்கங்களும் பெண்களும். *மேனகா விஜயலட்சுமி கந்தசாமி (ஆங்கில மூலம்), க.விசயகுமார் (தமிழாக்கம்). கோவை 641 012: தமிழோசை பதிப்பகம், 1050, சத்தி சாலை, காந்திபுரம், 1வது பதிப்பு, ஜூலை 2008. (சென்னை 5: ஜோதி என்டர்பிரைசஸ்).*

88 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21.5x14 சமீ.

இந்நூல் இலங்கையின் தோட்டத் தொழிற்சங்கங்களில் பெண்களின் தலைமைத்துவம் உருவாகாதது ஏன் என்று மிக விரிவாக ஆராய்கின்றது. பிரச்சினைகளை மாத்திரம் கூறுவதுடன் நின்றுவிடாது மேனகா, பெண்களின் தலைமைத்துவம் என்ற அந்த இலட்சியத்தினை அடைவது எவ்வாறு என்றும் தனது ஆய்வில் கூறுகின்றார். அறிமுகம், ஸ்ரீலங்காவில் தொழிற்சங்க இயக்கத்தின் உருவாக்கம், காலனியமயமாதலும் தோட்டத் தொழில்துறை உருவாக்கமும், தோட்டத் தொழிலில் பெண் தொழிலாளர்கள், தோட்டத் தொழிற்சங்கங்கள்: உருவாக்கம், கட்டமைப்பு மற்றும் செயற்பாடு, தொழிற்சங்கங்களில் பெண்கள்: செயல் உறுப்பினர்களும் பெயரளவிலான தலைவர்களும், முடிவுகளும் பரிந்துரைகளும் ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

335 சோசலிசம், அது தொடர்பான பிரிவுகள்

11318

மதமும் மார்க்சியமும் தமிழ்ப் பண்பாட்டுப் பார்வை. ந.இரவீந்திரன். சென்னை 600 086: சவுத் விஷன், 132, அவ்வை சண்முகம் சாலை, புதிய இல. 251, கோபாலபுரம், 1வது பதிப்பு, 2006. (சென்னை 600 014: மகேந்திரா கிராப்பிக்ஸ்).

295 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 21x13.5 சமீ.

விஞ்ஞானபூர்வச் சிந்தனைகள் பூமியில் மிகத் தீவிரமாக உள்வாங்கப்பட்டுவரும் இன்றைய காலகட்டத்தில் ஆன்மீக நிறுவனமான மதமும் அதற்குச் சமமாகத் தீவிரமாக உள்வாங்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மதம், மார்க்சியம் என்ற இரண்டினதும் உண்மைச் சொரூபத்தை வாசகருக்கு உணர்த்துவதன் எத்தனிப்பாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் சிறுகதைத் தொகுதி ஒன்று உட்பட இதுவரை 8 நூல்களை வெளியிட்டுள்ளார். பண்டத்தரிப்பு தாளையடி மறுமலர்ச்சி மன்றத்தின் ஊடாகப் பொதுப்பணிக்கு வந்தவர். முதுமாணிப் பட்டதாரியான இவர் புதிய ஜனநாயகக் கட்சியைச் சார்ந்த பொதுவுடைமைவாதி. தேசியக் கலை இலக்கியப் பேரவையின் செயலாளராகவும் பணியாற்றும் இவர் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார். நுழைவாயில், மதம் குறித்த மறுமதிப்பீட்டின் அவசியம், மதங்கள், பண்பாட்டுத் தளத்தில் தமிழின் தனித்துவப் பங்களிப்புகள், மார்க்சிய நிலைப்பாட்டில் மதம், புதிய பண்பாட்டு எழுச்சி, தொகுப்புரைக்கு மாற்றாக, முடிவுரை ஆகிய எட்டு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50147).

338.47 சுற்றுலாத்துறை

11319

சுற்றுலாப் பொருளியலுக்கு ஓர் அறிமுகம். செல்வரத்தினம் சந்திரசேகரம், ஏ.எம். முகமட் முஸ்தபா, தவம் சசிவதனி. ஒலுவில்: பொருளியல் துறை, தென் கிழக்குப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2013. (காத்தான்குடி: அல் ராபா, பிரதான வீதி).

(7), 134 பக்கம், வரைபடங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-44872-0-8.

கலாநிதி செல்வரத்தினம் சந்திரசேகரம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையின் முதுநிலை விரிவுரையாளராகவும், ஏ.எம்.முகமட் முஸ்தபா ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொருளியல், வர்த்தக முகாமைத்துவபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், செல்வி தவம் சசிவதனி ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொருளியல், சமூக விஞ்ஞானங்கள் துறையின் தற்காலிக விரிவுரையாளராகவும் பணியாற்றிய வேளையில் இந்நூல் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டிருந்தது. இதில் சுற்றுலா எண்ணக்கரு விளக்கம், சுற்றுலா இலக்கு மையம், சுற்றுலாத்துறையின் நிலைத்து நிற்கும் தன்மை, விருந்தோம்பல், சுற்றுலாவின் வகைகள், உலகளாவிய ரீதியில் சுற்றுலாத்துறை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் சுற்றுலாத்துறை, இலங்கையில் சுற்றுலாத்துறையினால் ஏற்படும் பாதிப்புக்கள், இலங்கையில் சுற்றுலாத் துறைக்கான ஊக்குவிப்புகள் ஆகிய ஒன்பது இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 244257).

340 சட்டவியல்

11320

பொதுமக்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் அறிந்திருக்க வேண்டிய சட்டங்கள். முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல். மருதமுனை 3: எம்.எம்.மிஹ்லார், ஆயிஷா வெளியீட்டகம், 520/1, மசூர் மௌலானா வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2012. (கல்முனை: மொடர்ன் கிரப்பிக்ஸ்).

viii, 33 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-54169-1-7.

முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல் கல்முனை பிரதேச செயலாளராகப் பணியாற்றிய வேளையில் வெளியிடப்பட்ட நூல். இவர் தனது ஆரம்பக் கல்வியை பெரியநீலாவணை புலவர்மணி சரிபுத்தீன் வித்தியாலயத்தில் கற்று உயர்தரத்தை மருதமுனை அல் மனார் மகா வித்தியாலயத்தில் பூர்த்திசெய்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வியாபார நிர்வாகமாணிப்பட்டம் பெற்றவர். பொதுமக்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் அறிந்திருக்க வேண்டிய சட்டங்கள் என இவர் தேர்ந்த 28 சட்டங்கள் பற்றி இந்நூலில் சுருக்கமாக விளக்கியிருக்கிறார். அரசியலமைப்பு, அடிப்படைஉரிமைகள், பகிரங்க சேவை ஆணைக்குழு, ஒம்புட்ஸ் மன், சட்ட வரைபு, அட்டோர்ணித் தத்துவம், நிர்வாகச் சட்டம், அரச காணிகள், அநர்த்த முகாமைத்துவம், சிறுவர் உரிமைகள், முதியோர் உரிமைகள், பராமரிப்பு மற்றும் கட்டுக்கோப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, அனர்த்தம் மற்றும் காணாமல் போனோர் பற்றிய பதிவு, குற்றம் சம்பந்தமான விடயம், குடும்ப வன்முறை, இலங்கையில் மொழிகள், பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம், மனித உரிமைகள், இலஞ்சம் மற்றும் ஊழல், சமாதான அலுவலர், மத்தியஸ்தம் செய்தல், சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம், மாகாணசபைச் சட்டம், சுற்றாடல் தொடர்பாடல் சட்டம், சொத்துரிமைகள், தேசியக் கொடி விதிக் கோவை ஆகியவை பற்றிய பல தகவல்கள் இந்நுலில் இடம்பெற்றுள்ளன.

11321

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோர்களுக்கான சட்டம். லிலந்தி குமாரி. கொழும்பு 12: இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழு, இல. 129, மேல் நீதிமன்றக் கட்டடத் தொகுதி, 1வது பதிப்பு, 2010. (நாவல: எம்.ஜீ. பிரின்டர்ஸ் தனியார் நிறுவனம், இல. 29/2, நாரஹேன்பிட்டிய வீதி).

37 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

சமூகத்தில் பெண் உழைப்பாளிகளிடையே கணிசமானவர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பினை நம்பியவர்களாகக் காணப்படுகின்றனர். வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு செல்லும் இவர்களிடத்தில் தமக்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டபூர்வமான பாதுகாப்பு பற்றியோ வேலை வழங்குநர்கள், முகவர்கள் போன்றோரின் அராஜகப் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலான சட்ட உதவியை அவர்கள் நாடுவது தொடர்பில் அறிவற்றவர்களாகவோ காணப்படுகிறார்கள். இதனால் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளோ ஏராளம். இத்தகைய அறியாமையைப் போக்கும் வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லமுனையும் பெண்களுக்குள்ள சட்டபூர்வமான உதவிகள், ஆலோசனைகள் என்பவற்றை இந்நூல் தெளிவாக விளக்குகின்றது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14363).

340.05 சட்டவியல் ஆய்விதழ்கள், ஆண்டுமலர்கள்

11322

நீதிமுரசு 1990. மதியாபரணன் சுமந்திரன் (இதழாசிரியர்). கொழும்பு: இலங்கை சட்டக் கல்லூரி தமிழ் மன்றம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1990. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி).

(128) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

இலங்கைச் சட்டக்கல்லூரியின் சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் 1990ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலர் (16-09-1990) பல்வேறு தமிழ் ஆங்கிலக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. இன்றைய நிலைமை அரசியலமைப்பின் முன்வைத்துள்ள கேள்விகள் (வி.புவிதரன்), நாட்டிடைச் சட்டம் ஒரு சட்டமாகுமா? (எம்.லபார் தாஹிர்), இலங்கையில் அனைவருக்கும் ஒரே திருமண, திருமண நீக்கச்சட்டம் உருவாக்கப்பட்டால் என்ன? (ஐயாத்துரை ஞானதாசன்), இவர்கள் குற்றவாளிகளா? நிரபராதிகளா? (கா.மகாலிங்க சிவம்), மனிதப் படுகொலைகளும் ஐ.நா.பாதுகாப்புச் சபையும் (கண.சுபாஸ் சந்திரபோஸ்), செயல் தானே செய்யும் விதி- RES IPSA LOOUITUR (இ.மு.இஸ்ஹர்), சட்டவியலில் ஓர் நோக்கு (லிங்கேஸ்வரி காசிப்பிள்ளை), மனதில் உறுதி வேண்டும்: சிந்தனாமிர்தம் (காமில் ஹசன்), மாசற்ற பிறழ்பகர்வுக்கு எமது நீதிமன்றங்களில் நட்டஈடு கோரமுடியுமா? (ஆஷா இராமச்சந்திரன்), உலகில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் மூன்றாம் உலக நாடுகளும் (சந்திரகி சிவதாசன்), புனிதபூமி: ஒரு செவ்விந்தியத் தலைவரின் கடிதம் (சியால்த் Seattle) ஆகிய தமிழ்ப் படைப்புக்களும், The Law of Intellectual Property in Sri Lanka (V.Murugesu), An Interview with Dr. H.W.Tambiah (V.Puvitharan, N.Ratnasiva), Defamation (V.Ratnasabapathy), Tamil-a regional language or an official language throughout Sri Lanka (Neelan Tiruchelvam) ஆகிய ஆங்கிலக் கட்டுரைகளும், சட்ட மாணவர் சங்க அறிக்கைகளும், மாணவர்களின் கவிதைகளும் இவ்வாண்டு மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10798).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

340.59 இஸ்லாமியச் சட்டங்கள்

11323

இஸ்லாமியச் சட்டவியல்: ஒரு சர்வதேசப் பார்வை. வீரமன்த்ரி (இயற்பெயர்: C.G. Weeramantry), அப்த்-அல்-ஜப்பார் முஹம்மத் ஸனீர் (தமிழாக்கம்). புத்தாநத்தம் 621 310: மாற்றுப் பிரதிகள், த பாப்பிரஸ், 1205, கருப்பூர்ச் சாலை, 1வது பதிப்பு, 2009. (சென்னை 5: மணி ஆப்செட்).

319 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-908551-2-9.

Islamic Jurisprudence என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம். இஸ்லாமியச் சட்டங்களின் தோற்றம் ஷரீஆ, அரேபியக் கல்வி மறுமலர்ச்சி, இஸ்லாமியச் சட்டங்களின் மூலாதாரங்கள், சட்டவியல் குழுமங்கள், சில அடிப்படை இஸ்லாமியச் சட்டக் கருத்துக்கள், ஐரோப்பியச் சட்டங்களிலும் சட்டத் தத்துவங்களிலும் காணப்படும் இஸ்லாமியச் செல்வாக்குகள், இஸ்லாமும் மனித உரிமைகளும், இஸ்லாமிய சர்வதேசச் சட்டம், இஸ்லாமியமல்லா நாடுகளில் இஸ்லாமியச் சட்டவியலின் பெறுமதி ஆகிய ஒன்பது இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலின் பின்னிணைப்புகளாக ஆவணங்கள், இஸ்லாமிய சர்வதேச மனித உரிமைப் பிரகடனம், இஸ்லாமியக் குற்றவியல் நீதியமைப்பில் மனித உரிமைகளின் பாதுகாப்பு, இஸ்லாமியச் சட்டக் கலைச்சொற்கள் ஆகிய நான்கு ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தோப்பர் கிரகரி வீரமன்த்ரி (17.11.1926) இலங்கையின் பிரபல்யமான சட்ட அறிஞராவார். கொழும்பு ரோயல் கல்லூரி யின் பழைய மாணவரான இவர் சர்வதேச நீதிமன்றத்தின் நீதியரசராக (International Court of Justice) 1991 முதல் 2000 வரை பணியாற்றியவர். (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14067).

344.032 சிறுவர் பாதுகாப்புச் சட்டம்

11324

சிறுவர் பாதுகாப்புச் சட்டம். மகேஷா டீ சில்வா. கொழும்பு 12: இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழு, இல. 129, மேல் நீதிமன்றக் கட்டடத் தொகுதி, 1வது பதிப்பு, 2010. (ராஜகிரிய: பிரின்டெக் எஸ்டபிளிஷ்மென்ட் தனியார் நிறுவனம், இல. 41/1, A.E. பெரேரா மாவத்தை).

166 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

இலங்கையின் பிரபல சிறுவர் பாதுகாப்புச் சட்டத்தரணியான மகேஷா டீ சில்வா அவர்களினால் எழுதப்பட்டுள்ள இந்நூல் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்டமூலங்கள் பற்றியும் அதனால் சிறுவர்களுக்குக் கிடைக்கும் சட்டபூர்வமான பாதுகாப்புக் குறித்தும் விரிவாக விளக்குகின்றது. இச்சட்டம் பற்றிய விழிப்புணர்வினை பொது மக்களிடையே ஏற்படுத்தவதுடன் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துர்நடத்தை போன்றவற்றில் ஈடுபடுவோருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு எச்சரிக்கையாக இந்நூல் அமைகின்றது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14362).

மேலும் பார்க்க: 11059

350 பொது நிர்வாகம்

11325

உள்ளூர் ஆளுகையின்புதிய பரிமாணங்களும் வாய்ப்புக்களும். சிவகுருநாதன் இரங்கராஜா. கொழும்பு: ச.செந்துராசா, தலைவர், SOND, SWOAD அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2012. (அச்சக விபரம் தரப்படவில்லை).

104 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள் இலங்கையில் வட-கிழக்கில் நீண்டகாலத்தின் பின் நடந்து முடிந்து தமிழ்பேசும் மக்கள் தமது பிரதிநிதிகளை ஜனநாயக முறையில் தேர்வுசெய்தும் பல்வேறு அரசியல் காரணங்களால் இம்மன்றங்களின் சேவைகளைப் பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இம்மன்றங்களின் அதிகாரங்கள் எவை என்பதை இம்மன்ற ஆளுநர்களும் தெரிந்திருக்கவில்லை. இந்நிலையில் எமது கீழ்மட்ட உள்ளூர் நிர்வாகத்தை நாமே சிறப்பாகச் செயற்படுத்தும் வகையில் ஒரு தகவல் வழங்கும் நூலாக இது எழுதப் பட்டுள்ளது. உள்ளூராட்சி முறையின் புதிய பரிமாணம், 21ஆம் நூற்றாண்டின் உள்ளூராட்சி பற்றிய முக்கியமான புதிய கருத்துக்கள், புதிய உள்ளூர் ஆளுகைக் கருத்துக்கள் தோன்றுவதற்கான பின்னணிக் காரணங்கள், ஆளுகை நியமங்கள் பூகோளமயமாதல், இலங்கையில் உள்ளூராட்சி முறைமையும் அதிகாரப் பரவலாக்கலின் கீழ் அதன் நிலையும், இலங்கையின் தற்போதைய உள்ளூராட்சி முறைமைக்கான சட்டப்புறவுரு, வடகிழக்கு பிரதேச சமூக பொருளாதாரச் சூழல், புதிய வாய்ப்புகளைக் கைப்பற்றுவதில் உள்ள பொதுவான உத்தி முறைகள், யார் இந்த உள்ளூர் ஆளுகையாளர்கள், இணைப்புகள், நிறைவு ஆகிய 14 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் இ. 12854).

11326

பிரதேச செயலகங்களினால் வழங்கப்படும் சேவைகள்: பொதுமக்களுக்கு அவசியமான ஒரு வழிகாட்டி. முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல். மருதமுனை 3: எம்.எம். மிஹ்ழார், ஆயிஷா வெளியீட்டகம், 520/1, மசூர் மௌலானா வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2013. (மருதமுனை: அப்னா பிறின்டர்ஸ்).

xvii, 60 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-54169-4-8.

இலங்கையில் பிரதேச செயலகங்கள் 1992ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க அதிகாரங்களைக் கையளிக்கும் சட்டத்தின் மூலமும், 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் மூலமும் அதிகாரங்கள் பிரதேச மட்டத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவலாக்கம் செய்யப்பட்டு பிரதேச செயலகங்களின் மூலம் பொதுமக்களுக்கான சேவைகள் இடம்பெற்று வருகின்றன. இந்நூல் அத்தகைய சேவைகள் பற்றி தமிழ் மக்கள் அறிந்திருக்கவேண்டும் என்ற நோக்குடன் எழுதப்பட்டுள்ளது. இந்நூலில், பிரதேச செயலக செயற்பாடுகளும் அவை தொடர்பான ஏற்பாடுகளும், பிரதேச செயலகத்திலுள்ள பிரிவுகளும் அவற்றின் நடவடிக்கைகளும், கிளை ரீதியாக பொதுமக்களுக்கான சேவைகள், பிறப்பு இறப்பு மற்றும் திருமணப் பதிவு, சமூக சேவை நடவடிக்கைகள், கணக்குக் கிளை, சமுர்த்தி நடவடிக்கைகள், காணிக் கிளை, திட்டமிடற் கிளை, ஏனைய நடவடிக்கைகள் (பாவனையாளர் பாதுகாப்பு, மத்தியஸ்த சபைகளுக்கு உதவுதல், தேர்தல்கள்), கிராம உத்தியோகத்தர் களின் முக்கிய கடமைகள் ஆகிய பதினொரு பிரதான பிரிவுகளின்கீழ் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

11327

பொது நிருவாக தாபன வேலைகளுக்கான வழிகாட்டல். எம்.ஐ.சலாஹுத்தீன். அக்கரைப்பற்று 05: எம்.ஐ.சலாஹுத்தீன், 234, ஜின்னாஹ் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2014. (அச்சக விபரம் தரப்படவில்லை).

viii, 114 பக்கம், விலை: ரூபா 380., அளவு: 25.5x18 சமீ., ISBN: 978-955-42244-0-7.

அரச அலுவலகங்களில் உள்ள உத்தியோகத்தர்கள் தாபன வேலைகளைக் கையாள்வதற்கான உசாத்துணை வழிகாட்டியாகவும், வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள், பதவி உயர்வுப் பரீட்சைகள், அரச சேவையில் நுழைவுப் போட்டிப் பரீட்சைகள், என்பனவற்றில் சித்தியடைவதற்கான வழிகாட்டியாகவும் இந்நூல் அமைகின்றது. எம்.ஐ.சலாஹுத்தீன் ஒய்வுபெற்ற இலங்கை நிர்வாக சேவை சிரேஷ்ட உத்தியோகத்தராகவும், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் உதவிச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

11328

வட மாகாண பொதுச் சேவையின் பதவிகளுக்கான வழிகாட்டி நூல்-2013. பி.உமாசங்கர். கொழும்பு 9: இஸ்லாமிய புத்தக இல்லம், Islamic Book House, இல. 77, தெமட்டகொட வீதி, மருதானை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2013. (ஐ.பீ.எச். பப்ளிக்கேஷன், 77 தெமட்டகொட வீதி, மருதானை).

viii, 410 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5x14 சமீ.

வட மாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள பொதுச் சேவைகளுக்கான போட்டிப் பரீட்சைக்கு வழிகாட்டும் வகையில் பொது அறிவு விடயங்கள், உளச்சார்பு, மொழித்திறன் சார்ந்த விடயங்களும் வீதிப் போக்குவரத்து சார்ந்த விடயங்களும் கடந்தகால வினா-விடைகளும் இடம்பெற்றுள்ளன. இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் விவசாயப் போதனாசிரியர் பயிலுநர் பதவி, இலங்கை தொழில் நுட்பவியல் சேவையின் விவசாயப் போதனாசிரியர் -வகுப்பு III பதவி, காணி நிர்வாகத் திணைக்கள வெளிக்கள போதனாசிரியர் பதவி, வட மாகாணப் பொதுச் சேவையின் முகாமை உதவியாளர் சேவை வகுப்பு III பதவி, வடமாகாண பொதுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைக்கு சாரதி சேவையின் பதவி வகுப்பு III ஆகியவற்றுக்குப் பொருத்தமான வழிகாட்டி. (நல்லூர் பிரதேச சபை நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் உ 12931).

11329

வடக்கு மாகாண பொதுச்சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை வழிகாட்டி. த.தவசேகர். வட்டுக்கோட்டை: தளையசிங்கம் தவசேகர், 1வது பதிப்பு, ஏப்ரல் 2013. (யாழ்ப்பாணம்: அபி அச்சகம், நல்லூர், கல்வியங்காடு).

xxvi, 413 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20.5x14.5 சமீ.

வட மாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள பொதுச் சேவைகளுக்கான போட்டிப் பரீட்சைக்கு வழிகாட்டும் வகையில் பொது அறிவு விடயங்கள், உளச்சார்பு, மொழித்திறன் சார்ந்த விடயங்களும் வினா-விடைகளும் இடம்பெற்றுள்ளன.

352.44 வரி அறவீட்டு நிர்வாகம்

11330

இலங்கையில் வரிவிதிப்பு: கோட்பாடும் நடைமுறையும். கோ.அமிர்தலிங்கம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).

xviii, 134 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 400., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-685-019-2.

கொழும்பு பல்கலைக்கழக பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் இந்நூலின் ஆசிரியர். 1977இல் தென்னாசியாவில் முதன்முதலாக பொருளாதாரத்தைத் தாராளமயப்படுத்திய நாடாக இலங்கை இருந்தபோதிலும், 1983ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்த இன யுத்தமானது பொருளாதாரத்தின் மீது பாரிய பாதிப்பினை ஏற்படுத்தியது. விரைவான அபிவிருத்தியை நாடு வேண்டிநிற்கும் போருக்குப் பின்னரான காலகட்டத்தில் கூடுதலான படுகடன்களில் தங்கியிருக்காமல் உள்நாட்டிலேயே நிதிவளங்களைத் தேட வேண்டியது அவசியமாகும். கோட்பாடு மற்றும் பல நாடுகளின் வரி தொடர்பான அனுபவங்களை ஒப்புநோக்கி 1980ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் வரி தொடர்பான தரவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் இலங்கையின் வரி வருமானத்தினை அதிகரிப்பதற்கு எவ்விதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது பற்றி இந்நூல் விரிவாக விளக்குகின்றது. ஆறு இயல்கள் கொண்ட இந்நூலில் முதல் மூன்று இயல்களையும் வரி தொடர்பான கோட்பாடுகளுக்காகவும், இறுதி மூன்று இயல்களையும் இலங்கையில் நடைமுறையிலுள்ள வரிக் கட்டமைப்புப் பற்றியும் வரி வருமான அதிகரிப்பிற்கான வழிவகைகள் பற்றியும் விளக்குவதற்காக ஒதுக்கியுள்ளார். (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 13310).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

360 சமூக சேவை நிறுவனங்கள்

11331

வெற்றிகரமான கதை: மன உறுதியுடன் விடாமுயற்சிகொண்டது. டபிள்யூ.ஜீ. மித்ரரத்ன. அம்பாந்தோட்டை: ஜனசக்தி- மகளிர் அபிவிருத்தி ஒன்றியம், தங்கல வீதி, 1வது பதிப்பு, 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

31 பக்கம், விளக்கப் படங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21.5 சமீ.

மகளிர் அபிவிருத்தி ஒன்றியத்தின் (1989-2002) பதின்மூன்று வருட விடாமுயற்சியின் கதையாக, அதன் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய ஆவணத்தொகுப்பாக இந் நூல் உருவாக்கப்பட்டுள்ளது. மகளிர் அபிவிருத்திக்கான ஒன்றிய அமைப்பினதும் நிறுவனத்தினதும் கட்டமைப்பு, மகளிர் அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் மேற்பார்வையும் முகாமைத்துவமும், ஜனசக்தி வங்கிகளும் அவற்றின் செயற்பாடுகளும், விவசாய அபிவிருத்தி செயற்பாடுகள், மந்தை வளர்ப்பு, சிறிய அளவிலான கைத்தொழில் அபிவிருத்தித் திட்டம், சிறிய அளவிலான வியாபாரம், தாய்-சேய் பாதுகாப்பும் சத்துணவுச் செயற்பாடுகளும், சூழலைப் பேணுதல், வயோதிபருக்கு உதவுதல், சிறுவர்களின் சங்கங்கள், போதைப் பொருள் பாவனைத் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம், திவிசரண சமூக பாதுகாப்பு திட்டம் ஆகிய 13 தலைப்புகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் இலங்கைத் தேசிய நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87497).

362.292 மதுப்பாவனையும் குடிகாரர்களும்

11332

மதுவும் அடிமை நிலையும். ஆ.பேரின்பநாதன். யாழ்ப்பாணம்: வைத்திய கலாநிதி ஆ.பேரின்பநாதன், இல. 767, மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம், 1வது பதிப்பு, 2013. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டேர்ஸ், 681, காங்கேசன்துறை வீதி).

xviii, 106 பக்கம், விளக்கப்படம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-11624-6-7.

டாக்டர் ஆ.பேரின்பநாதனின் 12ஆவது நூலாக இது வெளிவந்துள்ளது. முதலாம் இயல் மதுப்பாவனையின் ஆரம்பநிலை பற்றிக் கூறுகின்றது. இரண்டாம் இயல் மதுவின் வகைகள், மதுசாரம் தயாரிப்பு முறைகள், கசிப்பு போன்ற நச்சுச் சாராய உற்பத்தி போன்ற விபரங்களைத் தருகின்றது. இயல் மூன்றில், உடலில் மதுவின் தாக்கம், அல்க்ககோலால் பாதிக்கப்படும் உறுப்புகள் பற்றிக் கூறப்படுகின்றது. இயல் நான்கு குடிகாரரின் மனப்பாங்கு, மதுவும் இதயமும், மதுபோதைக்கான பரிசோதனைகள், மதுவும் மாரடைப்பும் ஆகிய விடயங்களை உள்ளடக்குகின்றது. இயல் ஐந்தில் மதுபானத்திலிருந்து பெறப்படும் மருந்துப்பொருட்கள் மற்றும் பதநீர், பனங்கட்டி, கல்லாக்காரம் போன்றவை பற்றிய விளக்கம் தரப்படுகின்றது. ஆறாவது இயலில் மதுவை மறக்க என்ன வழி என்று ஆலோசனை தரப்படுகின்றது. ஏழாவது இயலில் மதுபானத்தால் ஏற்படும் சமூகப் பிரச்சினைகள், குடும்பச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரழிவுகள், பொருளாதாரப் பிரச்சினைகள், குடிகாரர்களின் பிள்ளைகளின் எதிர்காலம், மாணவர்களும் மதுபாவனையும் என்பனபோன்ற சமூகவியல் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இயல் எட்டு, மதுவும் அடிமைநிலையும், மதுபோதையில் ஏற்படும் நடத்தைப் பிறழ்வு மதுப்பழக்கம் ஏற்படக் காரணம் என்பனபோன்ற விடயங்கள் சொல்லப்பட்டுள்ளன. ஒன்பதாவது இயலில் மதுவால் நேரும் உளப்பாதிப்புகள், மது அடிமை நிலைக்கான சிகிச்சை முறைகள், மருந்துவகைகள், மதுப்பழக்கத்துக்கு அடிமையானவர்களுக்கு உளவள சிகிச்சை-தியானம், மனவொடுக்கம் போன்ற பயிற்சிகளை வழங்குதல் பற்றி குறிப்பிடப் படுகின்றது. பத்தாவது - இறுதி இயலில் மதுப்பாவனையை ஒழிப்பதற்கான யோசனைகள், அறிவூட்டல் செயற்பாடுகள், இளைய தலைமுறையினரின் பாதுகாப்பு என்பன போன்ற சமூக அக்கறையுடன் வெளியிடும் கருத்துக்கள் என்பன இடம்பெறுகின்றன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 12841).

362.4 மாற்றுத்திறனாளிகளும் சேவைகளும்

11333

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் AROD 21 வருட நிறுவனத்தின் வரலாறு மற்றும் செயற்பாட்டு மலர் 2011. *ரி. விஜயச் சந்திர (நிர்வாக அலுவலர்). யாழ்ப்பாணம்: வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம், 47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, 1வது பதிப்பு, 2011. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).*

xii, *53 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.*, ISBN: *978-955-1475-00-3.*

இந்நூல் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் கடந்த 21 வருடகால சேவைகளையும் செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாக வெளியிடப்படுகின்ற கைந்நூலாகும். இந்நூலில் நிறுவனத்தின் வரலாறு, நிறுவனத்தால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விபரம், அறிக்கைகள், புள்ளி விபரங்கள், புகைப்படம் என்பனவும், நிர்வாகக் கட்டமைப்பு பற்றியும், மாற்று வலுவுடையோர்கள் பற்றிய வெளிப்பாடுகள், மாற்றுவலுவுடையோர்களின் தேவைகள், புனர்வாழ்விற்காக உதவி வழங்கியவர்கள், மற்றும் கலை கலாச்சார நிகழ்வுகள் பற்றிய விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

11334

விழி: இதழ் 2-2016.*மோகனவதனி ரவீந்திரன் (பிரதம ஆசிரியர்), விஜயகுமார் விஜயலாதன் (உதவி ஆசிரியர்). சுன்னாகம்: வாழ்வகம், விழிப்புல வலுவிழந்தோர் இல்லம், சபாபதிப்பிள்ளை வீதி, 1வது பதிப்பு, 2016. (யாழ்ப்பாணம்:* Focus Printers).

(4), 36 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வகம்- கண் பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளின் வாழ்வை வளப்படுத்தும் ஒரு நிறுவனமாக 1988ம் ஆண்டு யூன் மாதம் 29ம் திகதி கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையார் அவர்களால் தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயத்திற்கு அருகில் தனியார் வீடொன்றில் 12 விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. வாழ்வக நிறுவனமானது கடந்த 29 வருடங்களாக இலங்கை வாழ் தமிழ் பேசும் விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காகவும் அதன் ஊடான வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்காகவும் அயராது பாடுபட்டு வருகின்றது. நடை முறையில் உள்ள கல்வி முறைகளுக்கமைவாக விழிப்புல வலுவிழந்த பிள்ளைகள் தமது கல்வியை பெற்றுக்கொள்ள வழி சமைத்து வரும் இந்நிறுவனமானது இலங்கையில் உள்ள ஒரேயொரு தனித்துவமான தொண்டு ஸ்தாபனமாக விளங்கி வருகின்றது. இந்நிறுவனத்தின் அதிகாரபூர்வ இதழாக மலர்ந்துள்ள விழி- வாழ்வக அன்னை துதி, வாழ்வக தாபகர் திருவுருவப்படம், தலைவரின் ஆசிச் செய்தி, வாழ்வக மாணவர் விபரம், நிர்வாகசபை அங்கத்தவர் விபரம், வருடாந்த நிகழ்வுகள், மாணவர் நலனோம்பு செயற்றிட்டங்கள், மாணவர் அடைவு மட்டம், உத்தேசத் திட்டங்கள், பதிவுகளும் பகிர்வுகளும், சிறப்புக் கட்டுரைகள் (எட்டாக் கனி, ஸ்ரீபன் ஹோக்கிங், விழியாய் வழிகாட்டிடும் சாதனங்கள், தஞ்சமான தர்மாலயம், வாழ்வகமும் நானும் - சொ.தர்மதன்), வாழ்வக கீதம் ஆகிய விடயதானங்களுடன் மலர்ந்துள்ளது.

362.7 சிறுவர் பராமரிப்பு

11335

இலங்கையில் சிறுவர் பராமரிப்பும் அபிவிருத்தியும். வேலுப்பிள்ளை சிவயோகலிங்கம். கொழும்பு 9: இஸ்லாமிய புத்தக இல்லம், Islamic Book House, இல. 77, தெமட்டகொட வீதி, மருதானை, 1வது பதிப்பு, 2014. (ஐ.பீ.எச். பப்ளிக்கேஷன், 77 தெமட்டகொட வீதி, மருதானை).

viii, 214 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 350., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-4699-62-5.

சிறுவர் பராமரிப்பில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வகிபங்கும் அவை எதிர்நோக்கும் பிரச்சினைகளும் பற்றி இந்நூல் பேசுகின்றது. இலங்கையில் சிறுவர் பராமரிப்பும் அபிவிருத்தியும், இலங்கையில் சிறுவர்கள், சிறுவர் பிரச்சினைகள், காலனித்துவ காலப் பகுதியில் சிறுவர் பராமரிப்பு நிலைப்பாடுகள், சிறுவர் பராமரிப்பில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகிய ஐந்து அத்தியாயங்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. சிறுவர் உரிமை, சிறுவர் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளை மாத்திரம் எடுத்துக் கூறிவிட்டு அத்துடன் தனது கடமை முடிந்துவிட்டதாகக் கருதாமல், இந்நூலாசிரியர் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் இந்நூலில் முன்வைத்திருக்கிறார். (இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14213).

மேலும் பார்க்க: 11059.

363 சுற்றாடல், சூழல் மாசுபடுதல்

11336

பாலைவனமாதல். எம்.ஐ.எம்.கலீல். கண்டி: குறிஞ்சி வெளியீடு, 280 ஏ, டீ.எஸ். சேனநாயக்க வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2016. (கண்டி: நேத்ரா ஒப்செட் பிரின்டர்ஸ், 280 ஏ, டீ.எஸ்.சேனநாயக்க வீதி).

ix, 88 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 450., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-51777-4-0.

உலகின் கண்டங்களிலுள்ள பாலைவனமாகுதலின் பண்புகளையும் பாதிப்பு களையும் அதனால் ஏற்படுகின்ற நிலவுருவங்களையும் பாலைவனமாகுதலுக்குரிய மானிடக் காரணிகளையும் அதனால் ஏற்படுகின்ற விளைவுகளையும் தெளிவு படுத்துவதோடு பாலைவனமாகுதலை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் இந்நூல் தெளிவுபடுத்துகிறது. பாலைவனமாதல் அறிமுகம், பாலைவனங்கள், உலகிலுள்ள பாலைவனங்கள், கண்டங்களுக்கேற்ப பாலைவனங்களின் வகைகள், பாலைவன நில உருவங்கள், பாலைவனமாதலுக்குரிய காரணங்கள், பாலைவனமாதலினால் ஏற்படும் விளைவுகள், பாலைவனமாதலைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் ஆகிய எட்டு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 61283).

364 பொதுப் பாதுகாப்பு நடைமுறைகள்

11337

இலங்கை சமூக மீட்டெழுச்சிக்கான கட்டமைப்பு. கொழும்பு 7: அனர்த்த முகாமைத்துவ நிலையம், அனர்த்த முகாமைத்துவ தேசியப் பேரவை, அனர்த்த முகாமைத்துவ மனித உரிமைகள் அமைச்சு, 120/2, வித்யா மாவத்தை, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

65 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ.

2005 மே 13ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட 2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவ தேசியப் பேரவையின் கீழ் அனர்த்த முகாமைத்துவ நிலையம் (அ.மு.நி) தாபிக்கப்பட்டது. தற்போது அ.மு.நி. அனர்த்த முகாமைத்துவ மனித உரிமைகள் அமைச்சின் செயற்பரப்பின் கீழ் தொழிற் படுகின்றது. தகுந்த அனர்த்த முகாமைத்துவத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பொருத்தமான முறைமைகளைப் பயன்படுத்தி ஆபத்து மற்றும் இடர் தொடர்பான தகவல்களை வழங்குதல் என்பது இவ்வமைப்பின் முக்கிய நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் நிகழக்கூடிய இழப்புகளுக்கான இடர் குறைப்பு உபாயங்களை வகுத்து நடைமுறைப்படுத்தலும் இவ்வமைப்பின் பல்வேறு பணிகளுள் ஒன்றாகும். நாட்டில் ஒட்டுமொத்த அனர்த்த இடர் குறைப்பு நடவடிக்கை முறையை முகாமைத்துவம் செய்வதில் அமைச்சுகள், திணைக்களங்கள், முகவராண்மைகள், அதிகார சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளுடன் தேசிய, இடைநிலை மற்றும் கிராம சேவகர் மட்டங்களிலும் இராணுவப்படைகள், பொலிஸ், சர்வதேச மற்றும் தேசிய அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுடனும் அ.மு.நி. ஒருங்கிணைப்பையும் ஒத்துழைப்பையும் மேற்கொள்ளும். அதன் பணிகளை விபரிப்பதும் அ.மு.நிலையத்தின் பணியாகும். இந்நூலில் பணிச்சட்டகத்தின் நோக்கமும், குறிக்கோளும் இலக்கு வைக்கப்படும் பங்களிப்பாளர்கள், இலங்கையில் காணப்படும் சமூக அடிப்படையிலான இடர் முகாமைத்துவ முறைமைகள், கற்றுக்கொண்ட முக்கிய பாடங்கள், சமூக மீட்டெழுச்சி பணிச் சட்டகம், பிரதான அமுலாக்கல் உபாயங்கள், மீட்டெழுச்சி மற்றும் நிலைபேற்றினை அளவிடுதல் ஆகிய ஏழு இயல்களில் தகவல் வழங்கப்பட்டுள்ளன.

370 கல்வியியல்

11338

ஆசிரிய வாண்மைத் தேர்ச்சி. பாலசுப்பிரமணியம் தனபாலன். கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2011. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டேர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி).

viii, 170 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 19x13 சமீ.

யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா புத்தக சாலையின் கல்விச் சேவையின் 75ஆவது ஆண்டு பூர்த்தியையொட்டி யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களின் தேர்ந்த 10 பாடசாலைகளுக்கு மேற்படி நிறவனத்தின் அதிபர் க.ராஜேந்திரன் அவர்கள் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை வழங்கும் புகைப்படத்தை அட்டையில் தாங்கியுள்ளதுடன் அந்த அமைப்பின் கல்விச் சேவைக்குச் சமர்ப்பணமாக இந்நூல் உருவாக்கி வழங்கப்பட்டுள்ளது. நவீன கட்டுருவாக்கக் கல்வியியலில் ஆசிரியர் வகிபாகங்கள், ஆசிரியம்- கற்பிக்கும் கலை, ஆசிரியத்துவ வாண்மை, ஆசிரிய வாண்மையில் முகாமைத்துவம், வகுப்பறை முகாமைத்துவம், வாண்மையுள்ள ஆசிரிய ஆளுமை, ஆகிய ஆறு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஏழாவது அத்தியாயமாக பின்னிணைப்பு இடம்பெறுகின்றது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 13278).

11339

ஆசிரியர் கல்வியும் மாணவர் திறன்களும். த.கலாமணி. பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, மார்கழி 2016. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6), 94 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-49-7.

இந்நூலில் ஆசிரியமும் உலகியல் மாற்றங்களினூடான அறைகூவலும், ஆசிரிய தலைமைத்துவத்தின் தேவையும் அதன் பின்னணியும், வாண்மை விருத்தியும் மென்திறன்களும், கட்டிளமைப் பருவத்தினரை விளங்கிக்கொள்ளல், கணிப்பீடும் மதிப்பீடும் பாடசாலை அடிப்படையிலானது மாணவர் அடிப்படையிலானது- சுயமதிப்பீடு, அனுபவவழிக் கற்றல், 5S அணுகுமுறை - 5S ஒழுக்கமும் அதன் தூண்களும், அளிக்கைத் திறன்கள், பாடசாலை மாணவர்களின் உற்பத்தித் திறன் மேம்பாட்டுக்கான "கைசன்", தொழிற் சூழலில் முரண்பாட்டு உணர்திறன், பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பயனுள்ள குறிப்புகள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட பதினொரு ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இந் நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61491).

11340

ஆசிரியர் கைந்நூல்: ஆண்டு 4: 1987. M.P.M.M. ஷிப்லி *(பதிப்பாசிரியர்). கொழும்பு: பாடவிதான அபிவிருத்தி நிலையம், இலங்கை கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1987. (கொழும்பு 10: இம்பீரியல் அச்சகம், 25, 1-ம் டிவிஷன், மருதானை).*

294 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19 சமீ.

ஆண்டு 4இல் ஆரம்பக் கல்விக்குரிய பாடத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் இந்த ஆசிரியர் கைந்நூலில் தரப்பட்டுள்ளன. முதன்மொழி -தமிழ், கணிதம், சுற்றாடற் கல்வி, ஆரம்ப விஞ்ஞானம், ஆக்கத் தொழிற்பாடு, அழகியற் கல்வி, உடற் கல்வி, சுகாதாரக் கல்வி, மதிப்பீடு, மதிப்பீட்டுப் படிவம் 1-கணிதம், மதிப்பீட்டுப் படிவம் 2-பொது ஆகிய 11 அத்தியாயங்களில் இக்கைந் நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16392).

11341

கல்வி உலகினருக்கான தகவல் களஞ்சியம். *திருச்செல்வம் தவரத்தினம். காரைநகர்: தி.தவரத்தினம், சடையாளி, 1வது பதிப்பு, ஜனவரி 2014. (ஆனைக்கோட்டை: றூபன் பிறின்டர்ஸ்).*

109 பக்கம், விலை: ரூபா 230., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-44445-1-5.

இலங்கையின் கல்வி வரலாறு, பொது நிர்வாகச் சுற்றறிக்கை, பாடசாலையைப் பற்றி அறிவோம், கல்வி தொடர்பான தகவல்கள் ஆகிய நான்கு பிரதான இயல்களில் கல்வி உலகினருக்கான தகவல்கள் இந்நூலில் திரட்டித் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14050).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11342

கல்விச் சமூகவியலும் நவீன செல்நெறிகளும். ஜெ.டீ.கரீம்தீன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

viii, 120 பக்கம், விலை: ரூபா 325., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-517-8.

கல்விச் சமூகவியல் அறிமுகம், கல்விச் சமூகவியலின் வளர்ச்சி, சமூகமயமாக்கல் முகவர்கள், கல்வியும் சமூக மாற்றமும், சமூக அடுக்கமைவு, கல்வியும் சமூகப் பெயர்வும், கல்வியும் நவீனமயமாக்கலும், கல்வியின் மூன்று முறையாக்கல் செயன்முறையும் நவீன மனிதனும், கல்வியும் உலகமயமாக்கலும், அறிவு மையச் சமூகம், பல்கலாசாரக் கல்வி ஆகிய 11 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தின் இடைநிலை மூன்றாம் நிலைக் கல்வித்துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றுகின்ற ஜலால்டீன் கரீம்தீன் அவர்கள் கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க அனுபவத்தைக் கொண்டவர்.

11343

கல்வியியல் கட்டுரைகள். சோ.சந்திரசேகரம். சென்னை 600 033: சூடாமணி பிரசுரம், 36-A/7, கோவிந்தன் சாலை, மேற்கு மாம்பலம், 1வது பதிப்பு, டிசம்பர் 1991. (சென்னை 600 024: கார்த்திக் பிரிண்டர்ஸ், 26-1, 2வது தெரு, பாரதீஸ்வரர் காலனி, கோடம்பாக்கம்).

116 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

வாழ்க்கை நீடித்த கல்வி-நோக்கங்களும் சிறப்பியல்புகளும், தொலைக்கல்வி, திறந்த கல்வி-நோக்கங்களும் பயன்பாடும், கல்வித் தொழில்நுட்பவியல், மரபுவழிப் பாடசாலைகளும் முற்போக்குப் பாடசாலைகளும், விஞ்ஞானக் கல்விநெறியின் சமூக அம்சங்கள், முறைசாராக் கல்வியின் சில அம்சங்கள், வளர்ந்தோரின் கற்றல் செயற்பாடு, பாடசாலை-சமூகத் தொடர்புகளும் கல்வி வளர்ச்சியும், ஆசிரியர்களின் உயர் தொழில் அந்தஸ்து, பன்மைப் பண்பாட்டுக் கல்வி ஆகிய பத்துக் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12866).

11344

கற்றலின் அளவீடும் மதிப்பீடும். செ.அருள்மொழி. மட்டக்களப்பு: கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, செங்கலடி, 1வது பதிப்பு, ஜனவரி 2009. (சாய்ந்தமருது 9: ரோயல் ஒப்செட் பிரின்டர்ஸ், பிரதான வீதி).

vii, 217 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1443-64-1.

மதிப்பீடு பற்றிய அறிமுகம் (அளவீடு, கணிப்பீடு, அளவீட்டின் வழுவும் வகையும், மதிப்பீட்டின் இயல்புகள், மாணவர் மதிப்பீட்டுச் செய்முறையின் பிரதான கட்டங்கள், மதிப்பீட்டின் வகைகள், மதிப்பீடு செய்யப்படவேண்டிய பரப்பு), கல்வியின் இலக்குகளும் நோக்கங்களும் (கல்வியின் குறிக்கோளை வரையறை செய்தல், பொருத்தமான கல்விக் குறிக்கோளினால் ஏற்படும் நன்மைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறை செயற்பாட்டில் விஷேட குறிக்கோளை ஏற்படுத்தல், கல்விக் குறிக்கோளின் பகுப்பியல்), அறிவு-எழுச்சி-உள இயக்க வளர்ச்சியினை அளவிடும் நுட்பங்கள் (அறிவசார் வளர்ச்சியினை அளவிடும் நுட்பங்கள், எழுச்சிசார் வளர்ச்சியினை அளவிடும் நுட்பங்கள், உள இயக்க வளர்ச்சியினை அளவிடும் நுட்பங்கள்), கல்வி அளவீடுகளில் பயன்படுத்தப்படும் புள்ளிவிபரவியல் முறைகள் (மையநாட்ட அளவை, விலகல் அளவைகள்) ஆகிய நான்கு பிரதான அலகுகளின் வழியே கற்றலின் அளவீடு பற்றியும் அதனை மதிப்பீடு செய்வது பற்றியும் இந் நூல் விளக்கமளிக்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61527).

11345

சுதந்திர இலங்கையில் தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சி. சபா.ஜெயராசா.

யாழ்ப்பாணம்: மா.சின்னத்தம்பி, இயக்குநர், அபிவிருத்தி நிறுவன வெளியீடு, கொக்குவில், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1988. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலட்சுமி பிரஸ்).

(6), 35 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 17x12 சமீ.

அமரர் பேராசிரியர் ப.சந்திரசேகரத்தின் மறைவின் ஓராண்டு நினைவைக் குறிக்கும் ஓர் அஞ்சலி மலராக இந்நூல் வெளிவந்துள்ளது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் நாட்டில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சி தமிழ் மக்களின் மத்தியில் எவ்வகையில் செறிந்தது எனக் காட்ட முற்படும் நூல். குடியேற்றவாதம், தேசியவாதம் என்ற காரணிகளின் தாக்கம் தமிழ் மக்களின் கல்வியில் ஏற்படுத்திய விளைவுகளை ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையின் கல்வி விரிவாக்கத்திற்குரிய காரணிகளுள் தேசிய மொழிகள் கல்வி மொழியாக்கப்பெற்றமை முதன்மை நடவடிக்கையாக விளங்கிற்று என்கிறார் ஆசிரியர். குடியேற்றவாதப் பின்னணியும் கல்வி விரிவாக்கமும், கல்வி விரிவாக்கமும் தமிழ் மக்களும், 1972ஆம் ஆண்டின் கலைத்திட்ட மாற்றங்களும் தமிழ் மக்களும், பிரத்தியேகக் கல்வி நிலையங்களின் வளர்ச்சி, 1977ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட வளர்ச்சி, மீண்டும் விருத்தி ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

11346

நவீன கல்விப் பிரயோகங்கள். சதாசிவம் அமிர்தலிங்கம். ஹற்றன்: திருமதி பாலசுசிலேன்மணி அமிர்தலிங்கம், 32/15A, 2ம் ஒழுங்கை, டிம்புள்ள வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2015. (யாழ்ப்பாணம்: ஷாம்பவி பதிப்பகம்).

iv, 151 பக்கம், xxi, அட்டவணைகள், விலை: ரூபா 300., அளவு: 20.5x14 சமீ.

கல்வியியற் புலம்சார்ந்த 16 கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. ஆசிரியர் தொழில்வாண்மை விருத்தியில் அதிபரின் வகிபாகம், தேசிய கல்வியியற் கல் லூரிகளின் எதிர்காலம், செயற்பாடு சார்ந்த கற்றல் கற்பித்தலின் போது தர உள்ளீடுகளின் பயன்பாடு, அதிபரின் வேலைப் பகிர்வும் ஆசிரியரின் ஊக்குவிப்பும், ஆசிரியரும் விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகளும், கற்றலும் வழிநடத்தலும், பாடசாலையில் அதிபரின் வகிபங்கும் பங்களிப்பும், கணிதம் கற்றலும் ஸ்கெம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவரின் கருத்துக்களும், ஆய்வும் ஆய்வை மேற்கொள்ளும் வழிமுறைகளும், ஆசிரியர் கல்வியும் அதனை வழங்கும் நிறுவனங்களும், இலங்கையின் கல்விச் சட்டப் பிரயோகங்களில் 13ஆவது திருத்தச் சட்டம், பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி (SBTD), தமிழர் வாழ்வுடன் கணிதம் ஒன்றிணைந்த விதம், ஆசிரியரது வகை கூறலின் முக்கியத்துவம், தேசிய கல்விக் கல்லூரிகளின் தேவைப்பாடுகளும் க.பொ.த. (உ/த), க.பொ.த.(சா/த) மாணவர்களும், நேர முகாமைத்துவம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ள கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது.

11347

பாடசாலையும் கலைத்திட்டமும். சபா.ஜெயராசா. யாழ்ப்பாணம்: கலாநிதி சபா.ஜெயராசா, கல்வியியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1995. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாயி அச்சகம், காங்கேசன்துறை வீதி, இணுவில்).

(4), 65 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 20.5x14 சமீ.

ஒழுங்கமைந்த கல்வியின் தோற்றம், பாடசாலைகள் தோன்றின, கல்விச் சமூகவியலும் கலைத்திட்டமும், கல்விக் கருத்தியல்கள், ஸ்கிறிம்கோவின் அணுகுமுறை, கலைத்திட்டத்தில் தொல்சீர்வகையும், உளக்கவர்ச்சி வகையும், கலைத்திட்டத்தின் தருக்கம், கலைத்திட்டத்துக்கு ஓர் அகல்விரி விளக்கம், அனைத்து மக்களுக்கும் கல்வி வழங்கும் கலைத்திட்ட ஒழுங்கமைப்பு, பாடக்கலைத்திட்டம், செயன்முறைக் கலைத்திட்டம், சமநிலைக் கலைத்திட்டம், உள்ளீட்டுக் கலைத்திட்டம், நான்கு மடிக் கலைத்திட்டம், கலைத்திட்டமும் மீக்கற்றலும், பியாசேயின் கோட்பாடும் கலைத்திட்டமும், ஒடுக்கப்பட்டவர் களுக்கான கற்பித்தலியல், புறூனரும் அமைப்பியலும், கலைத்திட்ட வடிவமைப்பில் ரெயிலர், வீலர் ஆகியோரின் இலக்குக் காட்டுருக்கள் (Objective Model), கலைத்திட்ட வடிவமைப்பில் ஸ்ரென்கவுஸ் என்பாரின் செயன்முறைக் காட்டுரு, கலைத்திட்ட வடிவமைப்பிற் சந்தர்ப்பக் காட்டுரு, கலைத்திட்ட முகாமைத்துவத்திற் பண்பாட்டுச் செல்வாக்கு, கலைத்திட்ட மதிப்பீடும் நவீன கருத்துகளும், புதிய மதிப்பீடு, கலைத்திட்ட ஆய்வு வகைகள், கலைத்திட்டம் பற்றிய இசைவுப் பிறழ்வுக் கோட்பாடு, அறநெறிக் கலைத்திட்டம், கலைத்திட்ட விருத்தியின் படிநிலைகள், உலகளாவிய எதிர்பார்ப்புகளும் புத்தாக்கப் புனைவுகளும் ஆகிய தலைப்புகளில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14500).

11348

பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் பங்கு. ஆ.பேரின்பநாதன். யாழ்ப்பாணம்: கலைமகள் கொம்பியூட்டர் பிரிண்டர்ஸ், இல. 214/23, சேர். பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

xxxii, 188 பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல், கல்வி பற்றிய மரபார்ந்த சிந்தனைகளை, கல்வியினால் எங்கள் சமூகம் கண்ட உயர்வான மேன்மைகளை அடிக்கோடிடும் அதே வேளை இன்று எமது சமூகம் எதிர்கொள்கின்ற கல்விசார் பிரச்சினைகளையும் ஆழநோக்குகின்றது. பிள்ளைகளின் சுயத்தை மதிக்கின்ற, சமூகநலன் கொண்ட ஆளுமையாக அவர்களை வளர்த்தெடுக்கின்ற வல்லமை மற்றும் மன உறுதி கொண்ட பெற்றோர்-ஆசிரியர்களைக் கொண்ட கல்வியமைப்பு இத்தகைய உயர்-தனி இலக்கைக் காத்து மேம்படுத்துவதற்கான சமூகச் சூழமைவு இவற்றினைப் படைக்கும் காலப்பணி என்பவற்றை இந்நூல் வேண்டிநிற்கின்றது. வைத்திய கலாநிதி ஆ. பேரின்பநாதனின் நான்காவது நூல் இதுவாகும். (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்-13353).

11349

பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி. ஆனந்தமயில் நித்திலவர்ணன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, யுஜீ 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).

xiv, 110 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-658-030-07.

இந்நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார். பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி என்ற முதலாவது இயலில் வடமாகாணத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான சவால்களும் அவற்றை எதிர்கொள்வதற்கான பொருத்தமான கல்வி முறைகளைக் கண்டறிதலும் என்ற விடயம் ஆராயப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மாற்றமுறும் க.பொ.த. உயர்தரக் கல்வி என்ற பிரிவில் க.பொ.த. உயர்தரத்தில் தொழில்நுட்பவியல் பாடத்துறையின் அறிமுகம், வாழ்க்கை விருத்திச் செயற்றிட்டங்கள் என்பன பற்றி தெளிவாக்கப்பட்டுள்ளன. கல்வியும் ஆசிரியர்களும் என்ற பிரிவில் ஆசிரியத்தின விழாக்களும் ஆசிரியத் தொழிலும் பற்றியும் ஆசிரியர்களும் வாண்மை விருத்தியும் என்ற விடயம் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. சமூகத்துக்கான கல்வி என்ற பிரிவில் வாசிப்பும் சமூக மேம்பாடும், இளைய சமுதாயமும் வழிகாட்டல் ஆலோசனையும் என்பன பற்றி விளக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது இயல் கல்விசார் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பற்றியதாகும். இதில் இலங்கையில் தமிழ் கற்றல்- கற்பித்தல் தற்கால நடைமுறைகளும் சவால்களும், வடமராட்சி வடக்கு பிரதேசத்தின் தற்கால கல்வி அபிவிருத்திப் போக்குகள் ஆகியன பற்றி விரிவான கட்டுரைகள் காணப்படுகின்றன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14368).

11350

மாணவர் மனதிற்கு. ரா.ப.அரூஸ். கிண்ணியா 03: கே.ஐ. ஊடகக் குழு, மஹ்ரூப் நகர், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2011. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

110 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x13 சமீ., ISBN: 978-955-52299-3-7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியதோர் சிந்தனைப் புரட்சி மாணவர்களிடமிருந்து உதயமாகுவதற்கும் அதனூடு மானிடம் எழுச்சிபெறுவதற்கும் பெரிதும் துணைபுரிய வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நிலைமை எவ்வாறு காணப்படுகின்றது என்பதையும் பிழையான கற்றலையும் கற்றல் முறையையும் மாற்றுவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்குவதாக இந்நூல் அமைந்துள்ளது. பாடசாலைகள் எதற்கு, மதிப்பிழந்து கிடக்கும் இலவசக் கல்வி, ஆசிரியர்களிடமிருந்து தப்பித்தல், நல்ல ஆசான்களை மதித்தல், வாசிப்பினால் பூரணமடைதல், மாணவப் பருவத்துத் தவறுகள், நவீன கலாச்சாரத்துக்குள் மாணவர் சமுதாயம் எப்படிச் சீரழிகின்றது, மாணவர் சமுதாயம் விழித்தெழச் செய்யவேண்டியதென்ன எனப் பல விடயங்களை இந்நூல் விவாதிக்கின்றது. திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அரூஸ் தீப்பிடித்த பூக்கள், எனது சாம்ராஜ்யம், ஏனெனில் நான் மனிதன் போன்ற 21 நூல்களை இதுவரை எழுதியுள்ளார்.

11351

மாற்றம் காணும் கல்வி உலகுடன் இணைதல். த.கலாமணி. பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஏப்ரல் 2013. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

viii, 124 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 350., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-4676-03-9.

பாடசாலையில் பிடிமானம் கொண்ட யாவருக்கும் கல்வி மாற்றங்கள் குறித்தும் கல்விப் போக்கு குறித்தும் அடிப்படை அறிவு அவசியம். இந்நோக்கிலேயே, இன்று கல்வி உலகில் நிகழும் மாற்றங்களை ஒட்டியதாய் அவ்வப்போது எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. மாற்றம் காணும் உலகுடன் இணைதல்: கல்வியியற் கண்ணோட்டம் ஒன்றுக்கான அறிமுகம், முழுத்தரக் கல்வியின் சில அடிப்படைகள், ஆசிரியவாண்மை விருத்தியில் செயல்நிலை ஆய்வின் வகிபங்கு, வாண்மை விருத்தியும் அதிபர் வகிபாகமும்: சில புதிய பிரதிமைகள், ஆரம்பப் பிள்ளைப் பருவமும் மொழித்திறன் விருத்தியும், வாழ்க்கைத் தொழில் வழிகாட்டலும் மிருதுமுறைத் திறன்களும், ஆராயும் அறிவே விஞ்ஞானமாக: விஞ்ஞானக் கல்வி பற்றிய ஓர் உசாவல், அறநெறி வழிகாட்டல், சுயகற்றல் திறன்களை மேம்படுத்தல், கணிதக் கல்வி: சில உளவியல் அடிப்படைகள், கல்விச் சீர்மியமும் பன்முக நுண்மதியும், ஆசிரியர்களும் உளநெருக்கீடும்: சில அவதானிப்புகள், பாடசாலைக் கலாசாரம், பாடசாலை மேம்பாடும் பெற்றோர் பங்களிப்பும், கணிதத்தின் முறைசார் குறியீடுகளுக்கும் அப்பால்: கணிதக் கல்வியில் மொழியின் வகிபாகம் பற்றிய சில குறிப்புகள் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. இது ஜீவநதி பதிப்பகத்தின் கல்வியியல் சார்ந்த முதலாவது நூலாகவும், 23ஆவது ஜீவநதி வெளியீடாகவும் அமைகின்றது. (நூலியல் தகவல் பக்கத்தில் 22வது பிரசுரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11352

முன்பள்ளிக் கல்வி: கலைத்திட்டமும் வழிகாட்டலும். எம்.எச்.எம்.ஹஸன். மாவனல்ல: எம்.எச்.எம்.ஹஸன், 61/5, ஸாஹிரா வீதி, 1வது பதிப்பு, 2014. (ஐ.பீ.எச். பப்ளிக்கேஷன், 77 தெமட்டகொட வீதி, மருதானை).

xvi, 130 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ.

முன்பள்ளி எண்ணக்கரு, முன்பிள்ளைப் பருவம், முன்பள்ளியின் கட்டமைப்பு, முன்பள்ளியின் முகாமைத்துவக் கட்டமைப்பு, முன்பள்ளி ஆசிரியை, விஷேட தேவையுடைய பிள்ளைகள், உடல் விருத்திச் செயற்பாடுகள், கையாக்கற் திறன் விருத்திச் செயற்பாடுகள், மொழி விருத்திச் செயற்பாடுகள், கணித எண்ணக்கரு விருத்தி, சூழல் பற்றிய தேடல், அழகியல் திறன்களை விருத்தி செய்தல், மன எழுச்சி விருத்தி, பாதுகாப்புணர்வை விருத்திசெய்தல், சமூக விருத்தியை எற்படுத்தல், முன்பள்ளிப் பிள்ளைகளின் போசாக்கு விருத்தி, பிள்ளை நேயக் கற்றல், நடத்தை உருவாக்கம், முறைசார் கல்விக்குத் தயார் படுத்தல் ஆகிய 19 அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தேசிய கல்வி நிறுவனத்தின் பிரதம செயற்திட்ட அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள எம்.எச்.எம். ஹஸன், பட்டதாரி ஆசிரியராகவும், பின்னர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பதிப்பாசிரியராகவும் பணியாற்றியவர். தேசிய கல்வி நிறுவனத்தின் செயற்திட்ட அதிகாரியாகவும் 18 ஆண்டுகள் பணியாற்றியவர். மாவனல்ல முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் தலைவராகவும் இவர் கடமையாற்றுகின்றார். (இந்நூல் கொழும்புப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 67553).

11353

விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும். தம்பிராசா சிவகுமார். சுன்னாகம்: திருமதி சியாமளா சிவகுமார், பொக்கணை வீதி, ஊரெழு மேற்கு, ஊரெழு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2007. (யாழ்ப்பாணம்: குரு பிரிண்டர்ஸ், 39/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

ix, 218 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ.

நூலாசிரியர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் விசேட கல்வித்துறை விரிவுரையாளர். விசேட தேவையுடைய பிள்ளைகளின் உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொண்டு, அதை மதித்து அவர்களுடைய ஆற்றல்களை வளர்க்கவும் ஆளுமைகளை விருத்தியாக்கவும் வழிவகுக்கும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூல் விசேட கல்வியும் விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகளும், விசேட கல்வி வரலாறும் வளர்ச்சியும், விசேட கல்வி ஆணைக்குழு அறிக்கைகள், சிறுவர் உரிமைகள் சாசனமும் விசேட கல்வியும், விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகளின் வகைப்பாடு, மீத்திறனுடைய பிள்ளைகள், மெல்லக் கற்கும் மாணவர்கள், விசேட தேவையுடைய பிள்ளைகள் எதிர்கொள்ளும் நெருக்கீடுகள், பிள்ளைகள் கற்பதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மங்கோலிய ஊனம், நுண்மதி, துறுதுறு குழந்தைகள், பார்வைக் குறைபாடுடைய குழந்தைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டல் குறைபாடுடைய பிள்ளைகள், பிள்ளை வளர்ச்சி, மன வளர்ச்சிக்குறை, மூளைவாதம், பிழையான சீராக்கம் பெற்ற பிள்ளைகள், ஆக்கத்திறனுடைய பிள்ளைகள், மனவெழுச்சி வெளிப்பாடுகள், காக்கை வலிப்பு, பேச்சுக்குறை பாடுடைய பிள்ளைகள், இலங்கையிலும் வெளிநாடுகளிலும் விசேட கல்வித் துறையில் புதிய செயற்றிட்டங்களும் செய்நிலை ஆய்வுகளும் ஆகியவை உள்ளிட்ட 31 விடயங்கள் தனித்தனி இயல்களாக இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ளன. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 8218 CC).

11354

வெற்றிகரமான வகுப்பறைக் கற்பித்தல்: பாடத்தைத் திட்டமிடல். ப.கா.பக்கீர் ஜஃபார். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 4வது பதிப்பு, 2014, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2003, 2வது பதிப்பு, நவம்பர் 2003, 3வது பதிப்பு, 2007. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

vi, 178 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 600., அளவு: 24.5x17.5 சமீ., ISBN: 978-955-659-443-0.

"வெற்றிகரமான கற்பித்தல்: பாடத்தைத் திட்டமிடல்" என்ற தலைப்பில் 2003 இல் வெளியிடப்பட்ட நூலின் மீள்பதிப்பு இது. பாட ஆயத்தம், கற்றல் மூலம் விருத்தி செய்யவிழையும் திறன்கள், திறன்களை வெளிக்காட்டும் நடத்தைகள், கற்பித்தலுக்கான நோக்கங்கள், கற்பித்தற் துணைகள், பாடத்தைத் திட்டமிடல், மாதிரிப் பாடத்திட்டங்கள், கற்பித்தல் மாதிரியுரு, புதிய கலைத்திட்டத்தில் 5E மாதிரி உரு ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தில் கல்வியியல் பேராசிரியராக விளங்கும் இந்நூலாசிரியர், தேசிய கல்வியியல் நிறவனத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றிவருகின்றார்.

மேலும் பார்க்க: 11927

370.05 கல்விநிறுவனங்களின் ஆய்விதழ்கள், ஆண்டு மலர்கள்

11355

ஆசிரியம்: தூண்டி -1, துலங்கல் -1: 1995. பெ.பிரான்சிஸ் (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: பட்டப்பின் கல்வி டிப்ளோமா மாணவர் அமைப்பு, தேசிய கல்வி நிறுவகம், யா/இந்து மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, 1995. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்).

(18+6), 56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

இவ்விதழில், அகலிக்கும் ஆசிரிய வாண்மை (ஆர்.எஸ்.நடராசா), ஆசிரிய வாண்மையை விருத்தி செய்வதில் தே.க.நிறுவகத்தின் பங்கு (பவளம் அண்ணாமலை), SHEMA உளநிரற் கோலம் (சபா.ஜெயராசா), சமகாலத்தில் கல்வியும் சமயமும் (கு.சண்முகநாதன்), இலங்கையில் அளவுரீதியான கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியும் தரமான கல்வி வளர்ச்சியும் (ஏ.சீ.ஜோர்ஜ்), விழுமியக் கல்வியினை வழங்குவதில் பாடசாலை ஆசிரியரின் பங்கு (பெ.பிரான்சிஸ்), வாண்மை என்பது (கவிதை), ஆசிரியரிடத்தே காணப்படவேண்டிய பண்புகள் (க.நடராஜா), கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் துணைச் சாதனங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் (வ.நடராசா), அபிவிருத்திப் பாதையில் செய்முறைப் பாடசாலை களின் முக்கியத்துவம் தா.அமிர்தலிங்கம்), அறிவு-திறன்-மனப்பாங்கு (தெய்வநாயகம் கிருஷ்ணபிள்ளை), ஆசிரியன் தமிழ் மரபில் (கு.பசுபதீஸ்வரன்), மாணவரின் ஆளுமையை வளர்ப்பதில்ஆசிரியரின் பங்கு (யோகேஸ்வரி கந்தையா), மூன்றாம் மண்டல நாடுகளின் பொருளாதாரத்தில் கல்வியின் பங்கு (பா.தனபாலன்), பிஞ்சின் முறிவு-சிறுகதை (தி.செம்மனச் செல்வி), விரிந்த சிறகுகள்-சிறுகதை (செல்வபாலா), சிறுவர் உளநலத்தின் சமூகப் பரிமாணங்கள் (தி.சத்தியகலா), சங்கீதாமிர்தம் (சி.பரமேஸ்வரன்), எங்கள் நெறி, நன்றியுரை (சி.சந்திரன்) ஆகிய ஆக்கங்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39810).

11356

உய்த்தறி மலர் 1. மலர் வெளியீட்டுக் குழு. கிளிநொச்சி: உயர்தர மாணவர் மன்றம், கிளிநொச்சி மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, மே 2012. (கிளிநொச்சி: வேழன் பதிப்பகம்).

x, 148 பக்கம், புகைப்படங்கள், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x20 சமீ.

மாறிவரும் உலகிற்கேற்ப தேடல் உள்ளங்கள் அனைத்தும் சகல விடயங்களையும் உய்த்தறிந்து கற்கவேண்டும் என்பது இந்நூலின் தலைப்பின் எண்ணக்கருவாகும். இம்மலரின் பொறுப்பாசிரியராக ந.ஜெயசுரேஷ் பணியாற்றியுள்ளார். இதழாசிரியர்களாக செ.நிரோஜினி, ந.பிரசாந்தன் ஆகியோர் இயங்கியுள்ளனர். தமிழர் பாரம்பரியங்களில் திருமணச்சடங்கு, சிவபூமியில் ஒரு சிவத்தலம் (திருக்கேதீச்சரம்), கணக்கீட்டு எண்ணக்கருக்கள், கணக்கீட்டு நியமங்கள், பெறுமதி சேர் வரி, கடனட்டைகள், வணிகத்துறையின் நவீன போக்கு, புதிய கம்பெனிச் சட்டத்தின் அறிமுகம், அப்பிள் பாவனையாளர்களின் அணையாவிளக்கு, கண்டங்கள் அசைகின்றன, கிரேக்க நாகரிகத்தின் சிறப்பம்சங்கள், விற்பனை நிலையமற்ற நவீனமயப்படுத்தப்பட்ட சில்லறை வியாபாரமுறைகள், இறைக் கொள்கையும் அரச நிதியும், கணக்கிட்டிற்கு ஓர் அறிமுகம், உறங்கிப்போன உறவுகள், ஈழத்து இந்துசமயப் பாரம்பரியத்தில் பௌத்தத்தின் பங்களிப்பு, பங்குச்சந்தை, கட்டுப்பாட்டுக் கணக்குகள், வாழ்க்கையின் இலட்சியம், நிதிச் சந்தைகள், ஓசோன் படைச் சிதைவுகள், புவி வெப்பமடைதலும் அதன் விளைவுகளும், இலாபநோக்கற்ற நிறுவனங்களின் நிதியறிக்கைகள், பூமி எப்பொழுது உருவானது, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், எல்லைக் கிரயக் கணக்கீடு, தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, இடப்பெயர்வுகளும் அவலங்களும், இலங்கைக் கணக்கீட்டு நியமம், கணினியின் உருவாக்கம், இன்றைய சூழலின் பெண் கல்வியின் முக்கியத்துவம், நாகரீகத்தின் வளர்ச்சி இன்றைய இளைஞர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் ஏமாற்றமா?, பிள்ளையின் ஆளுமையில் பெற்றோரின் செல்வாக்கு, சவால்களுக்கு பவுல், ஈபிஸ்னஸ், இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அனுமதி நடைமுறைகள், இலக்கியஉலா, காசுப்பாய்ச்சல் கூறு ஆகிய விரிவான தேடல்புலங்கள் சார்ந்த கட்டுரைகளை இம்மலர் உள்ளடக்கியுள்ளது.

11357

உயர்த்தறி மலர் 2. மலர் வெளியீட்டுக் குழு. கிளிநொச்சி: உயர்தர மாணவர் மன்றம், கிளிநொச்சி மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, 2013. (கிளிநொச்சி: கரிகணன் பதிப்பகம், இல. 126, ஆனந்தபுரம், ஏ9 வீதி).

ix, 238 பக்கம், புகைப்படங்கள், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

ம.கேசனாவை இதழாசிரியராகக் கொண்ட மலர்க்குழுவின் கைவண்ணத்தில் உருப்பெற்றிருக்கும் இவ்விரண்டாவது இதழில் 64 ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. பாடசாலைகள் நல்ல ஆசிரியர்களிடம் எவற்றை எதிர்பார்க்கின்றன? பாவம் (உண்மைக்கதை), உசைன் போல்ட், சூழல் மாசாக்கமும் அதனால் ஏற்படும் பாதிப்புகளும், மனித வெற்றியின் இரகசியம், பெண் சுதந்திரம் மலரவேண்டும், உயர்தரத்தில் தொழில்நுட்பத்துறை பற்றிய அறிமுகம், விந்தை மிக்க விஞ்ஞான உலகின் ஒரு புதிய நனோ தொழில்நுட்பம், தொழில்நுட்பப் புவியியல், இலங்கையின் சனத்தொகைப் பரம்பலும் அதன் விளைவுகளும், பழமொழிகள், பொதுநிர்வாகமும் தலைமைத்துவமும், நிறுவன வளர்ச்சியில் விளம்பரத்தின் பங்கு, விரிதாள் மென்பொருள்கள், முகாமைத்துவம், பரீட்சைக்கு முன், இலங்கையில் வியாபார மூலதன விருத்திக்கான சாத்தியக்கூறுகளும் சவால்களும், உயர்தர வினாத்தாள்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது, பார்வைக் குறைபாடும் புனர்வாழ்வும், குருதி, 21ஆம் நூற்றாண்டில் கதிர்வீச்சின் பங்கு, கவிதைத் தொகுப்பு, வன்னி மக்களின் விவசாயச் சடங்கு முறை, சந்தைச் சமநிலை மாற்றங்கள், இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் வந்த தமிழ் இலக்கியங்களில் ஓசோன், துணைநிலைச் சேவைகள், கவிதைத் துளி, மாணவர்களின் சுயகற்றலை ஊக்குவித்தலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள், சுமைதாங்கி, பொருளாதார இடைத் தொடர்புகள், 1978ஆம் ஆண்டு யாப்பில் மிக முக்கியத்துவம் வாய்ந்த சில சீர்திருத்தங்கள், பூகோளமயமான சந்தை, தகவற்தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் பொருளாதாரப் பங்களிப்பு, உற்பத்தி இயல்தகு எல்லை, கணக்கீடும் அதன் சூழலும், கட்டிளம் பருவத்தில் மாணவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளும் தீர்வுகளும், வியக்கவைக்கும் தொழில்நுட்பம், கிளிமண்ணே உன்பாதம் தொட்டு, ஐன்ஸ்டைன், உளநோயாளர்களும் மனிதர்களே, இலங்கையின் பிரதான உற்பத்திகளும் சேவைகளும் நடைபெறும் இடங்களும், மனித உடல் பற்றிய தகவல்கள், உலக நாடுகள் நகரங்களின் சிறப்புப் பெயர்கள், பெண்ணே இதுவே யதார்த்தம், ஸ்ரீ இராமானுஜர் வாழ்வும் பணிகளும், உலகின் உயிர்ப்பெருந்திணிவு, சர்வதேச வியாபாரம், சிந்தித்துப்பார்-சிந்தனைத்துளி, நனோ தொழில்நுட்பம், ஆங்கிலம் பயில்வோம், பணம், ஆகிய தலைப்புகளிலான ஆக்கங்களை இம்மலர் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11358

தமிழ் ஆரம் 2014. ஜனனி ஐயாத்துரை, ஹாயத்திரி சண்முகநாதன் (இதழாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: தமிழ் மன்றம், யாழ். இந்து மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, 2014. (யாழ்ப்பாணம்: அன்ரா டிஜிட்டல் பிரின்டர்ஸ், இல. 356, கஸ்தூரியார் வீதி).

xvi, 60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றத்தினரால் வெளியிடப்பட்ட "தமிழ் ஆரம்" என்ற கல்லூரி ஆண்டிதழின் முதலாவது பிரசுரம் இது. இவ்விதழில் பழந்தமிழ் இலக்கியங்களும் தமிழர் வாழ்வியல் அம்சங்களும், திருக்குறள் முத்து, மாணவரும் வாசிப்புத் திறனும், சங்ககாலப் பெண்ணியம், சந்தையில் நான் கண்ட காட்சிகள், நாட்டார் பாடல்களின் தனிச்சிறப்பு, இயற்கை தரும் இன்பம், தமிழ்மொழியின் தொன்மையும் சிறப்பும், வாசுவின் தியாகம், சர்வதேச அரங்கில் பெண், பெண்மை, தனிநாயகம் அடிகளாரின் அளப்பரிய தமிழ்ப்பணி, கிளர்ந்தெழ வேண்டியவர்கள் பெண்களே, உயர்தல் ஆவது உண்மையே, நிகழ்காலத் தோல்விகளே எதிர்கால வெற்றிகள், தந்தை தாய் பேண், ஆசான், அன்பின் மகிமை, நான் ஒரு வைத்தியர் ஆனால், இயற்கை, விஞ்ஞானமும் மனித வாழ்வும், வெகுசனத் தொடர்பு சாதனங்களால் நிகழும் நன்மை தீமைகள், நினைவுகளே, இலக்கியங்களில் பெண், மொழிப் பெருமை காப்போம், தமிழ்ச் சமூகத்தின் தொடக்ககாலத் தகவல் தொடர்பு முறைமைகள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 26 ஆக்கங்கள் இம்மலரை அலங்கரித்துள்ளன.

11359

தமிழோசை 1986. பொ.செங்கதிர்ச்செல்வன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: தமிழ் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி).

xviii, 126 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1985இல் மீளமைக்கப்பட்ட தமிழ்மன்றத்தின் ஆய்விதழாக 1986இல் தனது முதலாவது இதழை வெளியிட்டிருக்கின்றது. இவ்விதழில் மிகப்பழைய இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் மூன்று: சில குறிப்புகள் (ஆ.வேலுப்பிள்ளை), ஈழத்தில் கண்ணகி வழிபாடு பற்றிய ஆய்வில் வன்னிப் பிரதேச நாட்டார் பாடல்கள் பெறும் முக்கியத்துவம் (இ.பாலசுந்தரம்), மாற்றுவகைக் கல்வித் தத்துவங்கள் (ப.சந்திரசேகரம்), சொற்பொருள் நிலையிற் செய்யுளும் யாப்பும் (நா.சுப்பிரமணியன்), குறைவிருத்தி நாடுகளின் இறைமை: சில சிந்தனைகள் (வி.நித்தியானந்தன்), வேத உபநிடதங்களில் அறிவாராய்ச்சியியற் கருத்துக்கள் (எஸ்.கிருஷ்ணராஜா), சங்ககாலம் பற்றிய புவியியற் சிந்தனைகள் (செ.பாலச்சந்திரன்), இறை உறவில் மலரும் மறை (ஆர்.ஏ.ஜே.மத்தாயஸ்), இருக்கு வேதக் கவிதை: சில கருத்துக்கள் (வி.சிவசாமி), நம் தமிழ்மொழிக்கு வந்த சொற்களைச் செந்தமிழ் உருவிற் செப்பனிடுவோம் (கலாநிதி சண்முக நாதபிள்ளை), ஈழத்துத் தமிழ்ப் பெருங் காப்பியம் (பூ.ஹேமலதா), கெயின்ஸிய வேலைக்கோட்பாடும் குறைவிருத்தி நாடுகளின் பொருளாதாரத்தில் அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோகமும் (க.பரமசிவம்), இலங்கையின் பிரதிநிதித்துவ முறை வளர்ச்சி (ந.சுந்தரமூர்த்தி), ஓவியக் கலையிற் பெண்களின் பங்களிப்பு (அருந்ததி சபாநாதன்), சித்த மருத்துவம் (எஸ்.பவானி), திருமுறையிலே பண் (அ.சண்முகதாஸ்), தமிழ்நாட்டின் சமூக வரலாறும் இலக்கிய வரலாறும் (கா.சிவத்தம்பி), உடற் பருமனும் நீரிழிவு நோயும் (த.குகதாசன்), தமிழ்மொழி வரலாற்றில் உடம்படு மெய்யின் இடம் (பொ.செங்கதிர்ச்செல்வன்), பிரதிபலிப்புக்கள்: கவிதை (சுகந்தி சுப்பிரமணியம்), எனக்குப் பிடித்த ஒரு மாலையில் (முத்துலிங்கம் மதியழகன்) ஆகிய படைப்புக்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10795).

11360

தமிழோசை 1987. பதிப்புக்குழு. யாழ்ப்பாணம்: தமிழ் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: மேர்க்குரி அச்சகம், 40/1, நாவலர் வீதி).

vi, 128 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

1985இல் மீளமைக்கப்பட்ட தமிழ் மன்றத்தின் ஆய்விதழாக 1986இல் தனது முதலாவது இதழை பொ.செங்கதிர்ச்செல்வன் அவர்களை பதிப்பாசிரியராகக் கொண்டு வெளியிட்டிருந்தது. தொடர்ந்து 1987இல் இரண்டாவதாக இவ்விதழ் வெளிவந்துள்ளது. இவ்விதழின் பதிப்புக் குழுவில் சுப்பிரமணியம் சுகந்தி, சு.கோகுலதாசன், பொ.அருந்தவநாதன், பொ.செங்கதிர்ச்செல்வன் ஆகியோர் பணியாற்றினர். இந்த இதழில் இந்து வெளியிலிருந்து திருகோணமலை வரை தென்கீழ்த்திசை வழிவந்த பாசுபதம் (ஆ.வேலுப்பிள்ளை), நாட்டார் வழக்கியல் ஆய்வு நோக்கில் சங்ககால முருகனின் கருத்துப் படிவம் (இ.பாலசுந்தரம்), டானியல் இலக்கியங்களிற் பேச்சுமொழி (அ.சண்முகதாஸ்), "பா" இயல்பும் உருவாக்கமும் (நா.சுப்பிரமணியன்), இலக்கியக் கலையில் அறிவியற் சிந்தனைகள் (க.நாகேஸ்வரன்), பாதுகாப்புச் செலவும் பொருளாதார அபிவிருத்தியும் (ந. பேரின்பநாதன்), இலங்கையில் முஸ்லிம் மக்களின் வளர்ச்சியும் செறிவும் (கா. குகபாலன்), யாழ்ப்பாண மாவட்டக் குடிசனத்தொகை மீள்பரம்பல்-சில திற முறைகள் (பொ.பாலசுந்தரம்பிள்ளை), தமிழிலே தொன்னூற்றாறு வகை இலக்கிய வடிவங்கள் உண்டு எனும் மரபு பொருத்தமானதா? (பொ.அருந்தவநாதன்), தமிழும் கிமிழும் (ச.கலாநிதி), கண்ணன் என் காதலன் ஆண்டாளதும் நம்மாழ்வாரதும் உணர்ச்சி வெளிப்பாடுகள் (பூ.ஜெயமலர்), நாணயங்களிற் காணப்படும் இந்து விக்கிரகவியல் அம்சங்கள் (ப.கணேசலிங்கம்), பௌத்தத்தில் பிரத்யய் ஸமுத்பாதம் எனும் எண்ணக்கருவின் முதன்மையும் முக்கியத்துவமும் (அ.செல்வராதா), எழுத்துக்களின் பிறப்பு தொல்காப்பியம் நன்னூல் ஒப்பீடு (க.எழில்வேந்தன்), மெய்க்கீர்த்திப் பிரபந்த வளர்ச்சியும் அதன் தன்மைகளும் (பொ.செங்கதிர்ச்செல்வன்), AIDS (த.குகதாசன்), சங்ககாலம் பற்றிய புவியியற் சிந்தனைகள் -II (செ.பாலச்சந்திரன்), யதார்த்தங்கள்-கவிதை (சு.சுகந்தி) ஆகிய படைப்புக்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11361

நானிலம் இதழ்1: க.விஜயகரன் (இதழாசிரியர்).கிளிநொச்சி: பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, புலோப்பளை, 1வது பதிப்பு, மே 2015. (சாவகச்சேரி: கிங்ஸ் பதிப்பகம், கண்டி வீதி, புத்தூர்ச் சந்தி, மீசாலை).

(22), 134 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x20.5 சமீ.

கிளிநொச்சி மாவட்டத்தில் பளை என்னும் ஊரில் உருவாக்கப்பட்டு 388ஆவது ஆண்டில் தடம் பதிக்கும் பழம்பெரும் பாடசாலையொன்றின் சிறப்பு மலர். 1627இல் புலோப்பளை தமிழ்ப் பாடசாலை என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1888ம் ஆண்டு பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையென்று பெயர்மாற்றப்பட்டது. இந்த மலரில் மேற்படி பாடசாலையின் முழுமையான வரலாறும் பாடசாலை அறிக்கைகளும் இடம்பெற்றுள்ளன.

11362

மழலைச் சிமிழ். சு.கிருஷ்ணகுமார் (இதழாசிரியர்). பிரான்ஸ்: வீ.இரவீந்திரன், இணை வெளியீடு, மாதகல்: முகாமைத்துவக் குழு, மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளி, 1வது பதிப்பு. 2015. (அச்சக விபரம் தரப்படவில்லை).

82 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளி கட்டடத் திறப்பு விழா சிறப்பிதழாக வெளிவந்துள்ள மலர். ஆசிச் செய்திகள், பன்னாட்டு நலன்புரி அமைப்புகளின் வாழ்த்துச் செய்திகள், இதழாசிரியர் உரை ஆகியவற்றுடன், இந்நூலின் துறைசார் சிறப்புப் பதிவுகளாக சித்தி விநாயகர் முன்பள்ளி முகாமைத்துவக் குழுச் செயலாளரின் அறிக்கை, சித்தி விநாயகர் முன்பள்ளியின் வரலாறு, முன்பள்ளி சிறார்களின் புலன் விருத்தி செயற்பாடுகளுக்காக முன்பள்ளி ஆசிரியர்கள் பிரயோகிக்க வேண்டிய உத்திகள், இளம் குயில் பாடும் சோலை (கவிதை), முன்பள்ளி சிறார்களின் தனிநபர் சுகாதார பழக்க வழக்கங்களும் சுய செயற் பாட்டிற்கான உத்திகளும், மேற்கு நாடுகளில்- குறிப்பாக கனடாவில் முன்பள்ளி, முன்பள்ளி சிறார்களின் ஆளுமை விருத்தியில் ஆக்கச் செயற்பாடுகளின் அவசியம், முன்பள்ளி சிறார்களின் ஆளுமை விருத்தியில் அழகியல் கல்வி செயற்பாடுகள்- ஒரு நோக்கு, முன்பள்ளி கல்வியில் சிறுவர் இலக்கியம், Froebel's System of Kindergarten Education, முன்பள்ளி நடைமுறைகள் (முகாமைத்துவக் குழுக் கட்டமைப்பும் பொறுப்புகளும், பௌதிகக் கட்டமைப்பும் ஆரோக்கியமான சூழலும், முன்பள்ளிகளில் பேணப்படவேண்டிய ஆவணங்களும் நாளாந்த செயற்பாடுகளும், முன்பள்ளி ஆசிரியர்களின் வகிபாகம், குழந்தையொன்றின் முழு விருத்திக்கான ஆரம்ப அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஆலோசனைகள், உத்தேச பாடத்திட்டமும் பாடக் குறிப்பும்), ஆலமரம் (கவிதை), ஆகிய தலைப்புகளிலான ஆக்கங்களும், முன்பள்ளி ஆசிரியை திருமதி வே. சரோஜினிதேவி அவர்களுக்கான சேவைநலன் பாராட்டு, நன்றியுரை என்பனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 58299).

370.1 கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள், சிறப்பிதழ்கள்

11363

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் பவளவிழா மலர் 1926-2001. மலர்க் குழு. கோப்பாய்: சரவணபவானந்த வித்தியாலயம், 1வது பதிப்பு, 2002. (கோப்பாய்: ஐங்கரன் பதிப்பகம், ஏ.ஜீ.ஏ. அலுவலக ஒழுங்கை).

80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் 1926 நவம்பர் மாதத்தில் விஜய தசமியன்று ஆரம்பிக்கப்பட்டது. அதன் 75ஆண்டுக்கால வளர்ச்சியை பதிவுசெய்யும் வகையில் இப் பவளவிழா மலர் உருவாக்கப்பட்டுள்ளது. மலர்க்குழு உறுப்பினர்களாக திரு. க.இ.குமாரசுவாமி, திருமதி. ச.கனகரத்தினம், திருமதி. செ.சிவஞானரத்தினம், திருமதி பே.இரத்தினசிங்கம், திரு. செ.செல்வரத்தினம், திரு. ஐ.சிவலோகநாதன் ஆகிய அறுவரும் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28289).

11364

மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் வரலாறு: நூற்றாண்டு நினைவு வெளியீடு. முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல். மருதமுனை: ஆயிஷா வெளியீட்டகம், 520/1, மசூர் மௌலானா வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2013. (மருதமுனை: அப்னா பிறின்டர்ஸ்).

x, 66 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-54169-5-5.

1911ஆம் ஆண்டு முகலம் சுலைமாலெவ்வை போடி இப்றாலெவ்வை போடி அவர்களினால் வழங்கப்பட்ட அரை ஏக்கர் காணியில் 28.11.1912அன்று அரசினர் தமிழ் ஆண்கள் பாடசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை இது. பின்னர் 0101.1974இல் அல் மனார் மகாவித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் கண்டது. பாடசாலையின் முதல் அதிபராக (1912-1914) பி.சின்னையாவும் தொடர்ந்து ஜே.எஸ்.வேலுப்பிள்ளை (1914-1920), கே.எஸ்.வைரமுத்து (1921-1935), வீ.சாமித்தம்பி (1935-1940), யூ சின்னத்தம்பி (1940-1941), கே.இளையதம்பி (1941), ரீ.சீனித்தம்பி (1941-1943), கே.எஸ்.வைரமுத்து (1943-1948) ஆகியோரைத் தொடர்ந்து 1949 முதல் முஸ்லீம் அதிபர்களான ஏ.எம்.ஷரிபுத்தீன் (1949-1950), ஐ.எம்.எஸ். எம்.பழீல் (1950-1951), ஈ.உதுமாலெவ்வை (1951-1952), ஏ.எம்.ஷரிபுத்தீன் (1952-1957), யூ.எல்.இஸ்மாயில் (1957-1962), ஏ.அஹமது லெவ்வை (1962-1969), ஏ.எச். முஹம்மது (1969-1976), ஏ.எச்.முஹம்மது மஜீட் (1976-1992), எம்.எச் காதர் இப்ராஹீம் (1992-1994),ஏ.எல்.மீரா முகைதீன் (1994-2002), எஸ்.எல்.அப்துல் ரஹீம் (2003-2009) ஆகியோர் அதிபர்களாகப் பணியாற்றி வந்துள்ளனர். 2009 முதல் இன்றளவில் எஸ்.எம்.எம்.எஸ்.உமர் மௌலானா (2009-) அதிபராகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றுகின்றார். மருதமுனைக் கிராமத்தைச் சேர்ந்த நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வியாபார நிர்வாகமாணி சிறப்புப்பட்டம் பெற்றவர். பட்டதாரி ஆசிரியராக மருதமுனை கமு/அல்மனார் மத்திய கல்லூரி, ஷம்ஸ் மத்திய கல்லூரி போன்ற பாடசாலைகளில் சிறிதுகாலம் பணியாற்றியவர். இலங்கை நிர்வாக சேவைக்குள் உள்வாங்கப்பட்டு அட்டாளைச்சேனை, பொத்துவில், ஓட்டமாவடி பிரதேச செயலகங்களில் பணியாற்றிய பின்னர், கல்முனை பிரதேச செயலாளராகப் பணியாற்றுகின்றார்.

11365

விபுலவாணி: வாணிவிழாச் சிறப்பு மலர் 2001. மலர் வெளியீட்டுக் குழு. கொழும்பு 9: இந்து மன்றம், விவேகானந்த மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2001. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(2), 50 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

பாடசாலையில் நவராத்திர பூஜைக் காலங்களில் மாணவர்களால் தயாரிக்கப்பட்டு கன்னிப் பிரசுரமாக 26.10.2001 அன்று வெளியிடப்பட்ட சிறப்பு மலர். பாடசாலை அதிபராக திரு.தி.கணேசராஜா பணியாற்றிய காலத்தில் இத்திட்டம் செயலுருப் பெற்றது. நூல்வெளியீட்டுக் குழுவில் திருமதி சா.பிரபாகரன், சோ.முரளி, செல்வி மே.கிருஷ்ணபிள்ளை ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25452).

11366

றோயல் வெள்ளி மலர் 1990-2015. மலர்க் குழு. கிளிநொச்சி: றோயல் கல்வி நிலையம், 21/1, கனகபுரம், 1வது பதிப்பு, 2015. (கிளிநொச்சி: மல்ரி கலர் பிரிண்டேர்ஸ்).

xxii, 203 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

கிளிநொச்சி மண்ணின் புகழ்பூத்த கல்வி நிலையங்களில் ஒன்றான றோயல் கல்வி நிலையம் 27.10.2015அன்று தனது வெள்ளிவிழாவை சிறப்பாகக் கொண்டாடியது. நிலையத்தின் இயக்குனர் குமாரின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மகாண பிரதி கல்விப்பணிப்பாளர் மாரிமுத்து தேவேந்திரன் கலந்து கொண்டார். அவ்வேளையில் வெளியிடப்பெற்ற சிறப்பு மலர் இது. ச.குமார், மாரிமுத்து அகிலநாயகம், குமார் புவனேஸ்வரி, சிவபாலன் சுலோஜினி, சற்குருநாதன் சுரேசன், சுந்தரலிங்கம் லோகேஸ்வரன், குமார் பார்த்தீபன் ஆகியோர் மலர்க்குழு உறுப்பினராகப் பணியாற்றியுள்ளனர். பாடசாலை பற்றியும், கிளிநொச்சிப் பிரதேசம் பற்றியும், கற்கைநெறிகள் தொடர்பாகவும் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் எழுதப்பெற்ற 51 படைப்புகளை இம்மலர் உள்ளடக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

380. (1) வர்த்தகவியல்/வணிகவியல் பாடநூல்கள்

11367

வணிகப் புள்ளிவிபரவியல்: உயர்தர வகுப்பிற்குரியது: பாகம் 1. எம்.ரோய். கொழும்பு 13: எம்.ஜே.ஆர். பப்ளிக்கேஷன்ஸ், 75 ஏ, கல்பொத்த வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1996. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(4), 216 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

கொழும்புப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பு பீடத்தைச் சேர்ந்தவர் எம். ரோய். உயர்தர வகுப்புகளுக்குரிய வணிகப் புள்ளிவிபரம் தொடர்பான பாடத்தினை இந்நூலில் 11 அலகுகளில் தெளிவுபடுத்துகின்றார். அறிமுகம், தரவுகளின் வகைகள், மாதிரி எடுப்பு, வகைப்படுத்தலும் அட்டவணையிடுதலும், மீடிறன் பரம்பல், வரைபடங்கள், சிக்மா குறியும் நியமக் குறியீடுகளும், மையநாட்ட அளவைகள், பிரிகை அளவைகள், ஓராய அளவைகள், குடில அளவைகள் ஆகிய தலைப்புகளில் இவை விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16042).

11368

வர்த்தகமும் கணக்கியலும்: 9ஆம் தரம்: இரண்டாம் பகுதி. கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 1வது பதிப்பு, 1980. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

122 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x12.5 சமீ.

இந்நூல் 9ஆம் தரத்துக்குரியதாக, குறித்த பாடத்திட்டத்திற்கு அமைய கல்வி அமைச்சின் நெறிப்படுத்தலின்படி எழுதப்பட்டுள்ளது. இரண்டு பகுதிகளாக வெளியிடப்பட்டுள்ள இந்நூலின் இரண்டாம் பகுதியில் பொருட்களின் கொள்வனவும் விற்பனவும், வியாபாரத்திற் பயன்படுத்தப்படும் ஆவணங்கள், கொடுப்பனவு முறைகள், பிறநாட்டு வியாபாரம், தொழில் அமையங்களின் வகைகள், பணமும் வங்கிகளும், இரட்டைப் பதிவுமுறை ஆகிய ஏழு இயல்களில் எழுதப்பட்டுள்ளது. இவ்வாக்கத்தின் எழுத்தாளர் குழுவில் ஜயந்த வீரக்கோன், கருணாரத்ன மீரியகல, T.P. அந்தரவெல ஆகியோர் பணியாற்றியுள்ளனர். தமிழாக்கக் குழுவில் ஐ.தம்பிமுத்து, அ.வி.விக்டோரியா ஆகியோர் பணி யாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11207).

11369

வர்த்தகமும் கணக்கியலும்: 10ஆம் தரம்: முதலாம் பகுதி. கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1980. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

vii, 102 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் 10ஆம் தரத்துக்குரியதாக, க.பொ.த.சாதாரண தர பாடத்திட்டத்திற்கு அமைய கல்வி அமைச்சின் நெறிப்படுத்தலின்படி எழுதப்பட்டுள்ளது. இரண்டு பகுதிகளாக வெளியிடப்பட்டுள்ள இந்நூல் போக்குவரத்து, களஞ்சியப்படுத்துதல், துணைஏடுகள், காசேடு, சில்லறைக் காசேடு ஆகிய ஐந்து இயல்களில் எழுதப் பட்டுள்ளது. இவ்வாக்கத்தின் எழுத்தாளர் குழுவில் W.M. அபேரட்ண பண்டார, கருணாரத்ன மீரியகல, N.P.ரூபசிங்க ஆகியோர் பணியாற்றியுள்ளனர். தமிழாக்கக் குழுவில் கு.உதயகுமார், அ.யோ.பெனடிக்ற்பாலன், அ.வி.விக்டோரியா ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11208).

11370

வர்த்தகமும் கணக்கியலும்: ஆண்டு 11. கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 1வது பதிப்பு, ஜுன் 1987. (அம்பலங்கொடை: மஹிந்த அச்சகம்).

viii, 117 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17 சமீ.

வர்த்தகமும் கணக்கியலும் என்னும் நூல்வரிசையில் மூன்றாவது நூல் இது. 11ஆம் ஆண்டு மாணவர்களுக்காக எழுதப்பட்டது. கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையின் பாடத்திட்டத்தின் கடைசிப் பகுதியை அடியொற்றி இந்நூல் எழுதப்பட்டது. இதன்படி 9ம், 10ஆம், 11ஆம் ஆண்டுகளுக்கான இம் மூன்று நூல்களின் வாயிலாக வர்த்தகமும் கணக்கியலும் பற்றிய பாடத்திட்டம் முற்றுப்பெறுகின்றது. இந்நூலின் முதற்பகுதி வர்த்தகம் பற்றியது. அதற்குரிய நான்கு அத்தியாயங்களான தனி வியாபார அமைப்பும் பங்குடைமை வியாபார அமைப்பும், சட்ட வரைவுள்ள கம்பெனிகள், அரச கூட்டுத்தாபனங்கள்- நியாயாதிக்க சபைகள்- திணைக்களங்கள், கூட்டுறவு அமைப்பும் சங்கங்களும் ஆகியவற்றின் மூலம் பல்வேறு வியாபார அமைப்புகள் பற்றிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இறுதிப்பகுதி கணக்கியல் பற்றியதாகும். இதுவும் நான்கு அத்தியாயங்களைக் கொண்டது. செலவுகளை வகைப்படுத்தல்-வேறுபடுத்தல்-செம்மையாக்கல், வியாபார இலாபநட்டக் கணக்கும் ஐந்தொகையும், ஆக்கக் கணக்கு, கொள்ளல் கொடுத்தற் கணக்கும் வருமானச் செலவுக் கணக்கும் ஆகிய நான்கு அத்தியாயங்கள் மூலம் கணக்கியல் பாடத்திட்டத்தில் 9ஆம் 10ஆம் ஆண்டுகளில் உட்படுத்தப்படாத அலகுகள் இங்கு விளக்கப்பட்டுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11192).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

392.5 சடங்கு முறைமைகள், திருமணங்கள், மரணச் சடங்குகள்

11371

ஆன்மீக மங்கலம் அறுபது. *ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீநகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2012. (இணுவில்: கஜானந்த் பிறின்டேர்ஸ், மானிப்பாய்வீதி).*

90 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.

வழிவழியாக வருகின்ற ஆன்மீக வாழ்க்கையில் பல்வேறு நடைமுறைகள் வழக்கில் உள்ளன. சடங்குகள், சம்பிரதாயங்கள் பலவும் கைக்கொள்ளப்படுகின்றன. இவற்றின்போது பல்வகையான பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. உபகரணங்களாக, சடப்பொருள்களாக, சேதனப் பொருள்களாக, உயிர்ப்பொருள் களாக, அலங்காரப் பொருள்களாக, நுகர்பொருள்களாக என்றிவை பலதிறத்தனவாக அமைகின்றன. ஆன்மீகத்துடன் தொடர்புடைய இத்தகைய அறுபது மங்கலப் பொருள்கள் பற்றிய விபரத் தொகுப்பு இதுவாகும். பயனாளிகளின் வசதிகருதி ஆங்கிலத்தில் குறிப்புரைகளுடன் கூடியது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54842).

11372

இல்லற மங்கலம்: பூர்வக் கிரியைகள். *ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீநகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 1வது பதிப்பு, ஜனவரி 2016. (சுன்னாகம்: கஜாநந்த் பிறின்டர்ஸ், மானிப்பாய் வீதி, இணுவில்).*

(2), 100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

பிறப்பு முதல் இறப்பு வரை இந்துக்களின் சகல சடங்குகள், கிரியைகள் பற்றிய விபரங்களின் தொகுப்பாக இந்நூல் மலர்ந்துள்ளது. அந்தணர்களுக்கான சம்ஸ்காரங்கள் எனப்படும் வைதிகக் கிரியைகள் பற்றியும் அந்தணர் அல்லாதோர் இல்லங்களில் நிகழும் எல்லா மங்கல நிகழ்வுகள் பற்றியும் இந்நூலில் விரிவாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலிலுள்ள அந்தணர்க்கான கிரியா விளக்கங்கள் பலவும் மயிலணி சிவஸ்ரீ ஷ.சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களின் நூல்களிலிருந்தும் அந்தணரல்லாதோர் கிரியைகள் பற்றிய பல விடயங்கள் இந்து சமயப் பிரசாரகர் நித்திய தசிதரன் ஆக்கத்தில் வெளிவந்த வாழ்வியல் சடங்குகள் என்ற நூலிலிருந்தும் பெறப்பட்டன.

11373

தமிழ்த் திருமணம். *வே.இறைபிள்ளை. கிளிநொச்சி: கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம், 2வது பதிப்பு, ஜனவரி 2013, 1வது பதிப்பு, ஜனவரி 2007. (கிளிநொச்சி: சிவா பதிப்பகம், கனகபுரம்).*

(8), 50 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தமிழ்த் திருமணங்களை நடத்தும் திருமண முறை, மணமக்களுக்கான அறிவுரைகள், நல்வாழ்வுக் குறிப்புகள் ஆகியவை உள்ளடங்கிய திருமணப் பரிசு நூல். தமிழ்த் தாய் வணக்கம் இறை வணக்கம் (குறட்பாக்கள்)/ தமிழ்த் திருமணம்/ நம்மை இழிவுபடுத்தும் புரோகிதச் சடங்குகள்/ மறைநெறித் திருமணம், தமிழின் தன்மானத்திற்கு இழுக்கு/ மணவாழ்வுப் பொன்மொழிகள்/ மணமக்களுக்கு/ தமிழ்த் திருமண முறை/ திருக்குறள் நெறித் தமிழ் திருமணம்/ திருநாண்பூட்டியதும் பாடவேண்டிய குறட்பாக்கள்/ மணமக்கள் வாழ்த்துப் பாடல்/ மணமக்கள் உறுதிமொழி/ தமிழ்த் திருமணம் செய்து வைப்பதற்கு வேண்டியவை/ நல்வாழ்வுக் குறிப்புகள் ஆகிய இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

11374

மரணத்தின் பின் அல்லது போகுமாறெங்ஙனே வருமாறேதோ. மு.கந்தையா. யாழ்ப்பாணம்: திருவாட்டி தங்கச்சியம்மா சின்னையா முதலாண்டு நினைவு வெளியீடு, இணுவில் கிழக்கு, இணுவில், 1வது பதிப்பு, 1985. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்).

(4), 14 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

அபரக்கிரியைகளில் நம்பிக்கைவைத்து வாழும் ஒரு சமூகமான சைவர்களுக்கு இவ்வினா-விடைக் கொத்து ஒரு ஞானக் களஞ்சியமாகும். "போகுமாறெங்ஙனே வருமாறேதோ" என்ற அருள்வாக்கு சைவ சமய நெறிகளைக் கடைப்பிடிப்போரின் உள்ளத்தில் எழும் ஒரு ஐயப்பாடாகும். இந்நூல் இந்த ஐயத்தைத் தெளிவு பெறவைக்கின்றது. வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் ஆகியவற்றில் பிதிர்க்கடன் பற்றிய சிறப்பு பேசப்பட்டு வந்துள்ளது. அசுர குலத்தினராகிய இரணியன், விபூசணன் ஆகியோர்கூட நம்பிக்கைவைத்து பிதிர்க் கடனைச் செலுத்தியமை பற்றி கந்தபுராணமும் இராமாயணமும் சிறப்பித்துக் கூறுகின்றன. சீதை இராமாயணத்தில் அனுமானிடம் கூறியதாக "கங்கையாற்றங் கரையடியேற்குத் தன் செங்கையாற் கடன்செய் கென்று செப்புவாய்" என்று ஒரு கவிவரியுண்டு. தென்புலத்தார் தெய்வம் விருந்து, ஒக்கல், தான் என்ற வகையில் ஒரு இல்லறத்தானுடைய பணியை எடுத்துக் கூறுகிறார் வள்ளுவர். நமது நன்றிக்கடனான பிதிர் கரும வேளைகளில் கருத்துணர்ந்து பயனுணர்ந்து ஆன்ம உய்வுணர்ந்து தெரிந்துகொள்ள இக்கேள்விக்கொத்தும் அதற்கான பண்டிதர் மு.கந்தையா அவர்களின் விடைகளும் நமக்கு உதவுகின்றன.

11375

வைதீக அபரக்கிரியா சங்கிரகம் (ஆசௌச விளக்கமும்). ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீநகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2016. (சுன்னாகம்: கஜாநந்த் பிரின்டர்ஸ், மானிப்பாய் வீதி, இணுவில்).

(2), 124 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் வைதீக அபரக் கிரியைகளின் முக்கியத்துவம், அவற்றின் விளக்கங்கள், மற்றும் ஆசௌச விபரங்கள் என்பவற்றை உள்ளடக்கி வெளிவந்துள்ளது. முன்னோர் கடன் (ஆரம்ப உரை), அபரக் கிரியைகள்-சில விளக்கங்கள், சில முக்கியமான விதிமுறைகள், இன்னும் சில தகவல்கள், சிரார்த்த நியமங்கள், அக்னி நிர்ணயம், கர்த்ரு க்ரமம், பிறப்பு, இறப்பு, தொடர்பான தீட்டுக்கள், ஐயம் தெளிதல் (ஆசௌச நடைமுறைகள்), முத்தல யாத்திரை (காசி யாத்திரை), கோத்திர ப்ரவரங்கள், சிரார்த்தம்- மண்டப அமைப்பு, அந்தியேஷ்டி-மண்டப அமைப்பும் பொருட் பட்டியலும், சபிண்டீகரணம்- மண்டப அமைப்பும் பொருட் பட்டியலும், நன்றி நவிலல் ஆகிய பிரிவுகளில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

395 நாட்டார் வழக்காற்றியல்

11376

தமிழ் நாட்டார் வழக்காற்றியல். *க.சண்முகலிங்கம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 7: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 98, வோட் பிளேஸ், 1வது பதிப்பு, மார்கழி 1995. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).*

xviii, *354 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ.*

1993, ஆகஸ்ட், 20, 21, 22ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற தமிழ் நாட்டார் வழக்காற்றியல் மாநாட்டுக் கட்டுரைகளின் தொகுப்பு. நாட்டார் வழக்காற்றுக் கோட்பாடுகளும் அணுகுமுறைகளும் (தே.லூர்து), தமிழ்க் கதைப் பாடல்கள் அமைப்பியல் ஆய்வு (வே.தயாளன்), காமன் கூத்து-மலையக மக்களின் சமூக வாழ்க்கையில் அதன் பங்கு (பெ.வடிவேலன்), மட்டக்களப்பின் மகிடிக் கூத்துக்கள் (சி.மௌனகுரு), அடித்தள மக்கள் மீதான பாலியல் வன்முறையும், நாட்டார் வழக்காறுகளும் (ஆ.சிவசுப்பிரமணியம்), மலையக மக்களும் சிறுதெய்வ வழிபாடும் (ந.வேல்முருகு), தமிழில் நாட்டுப்புற இயல் ஆய்வின் வளர்ச்சியும் வரலாறும் (சு.சக்திவேல்), ஈழத்துத் தமிழ் நாட்டார் வழக்கியற் பரப்பும், அதில் நுண்ணாய்வுக்குட்பட வேண்டிய கூறுகளும் (அ.சண்முகதாஸ்), நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் (அ.பாண்டுரங்கன்), நாட்டார் இலக்கியத்தில் காதல் பாடல்கள் (எம்.ஏ.நுஃமான்), மலையக நாட்டார் பாடல்கள் (சாரல்நாடன்), தமிழில் "நாட்டார்" (Folk) பற்றிய தேடல் (கா.சிவத்தம்பி), பள்ளு இலக்கியத்தில் நாட்டார் இலக்கியக் கூறுகள் (துரை மனோகரன்), இசை நாடக வரலாறு (காரை.செ. சுந்தரம்பிள்ளை), யாழ்ப்பாணத்தில் அண்ணமார் வழிபாடு (என்.சண்முகலிங்கன்) ஆகிய பதினைந்து ஆய்வுக் கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது.

11377

திரிதலிலிருந்து தெரிதல்: பண்பாட்டு உரையாடல். *பாஸ்கரன் சுமன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xviii, *114 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-659-504-8.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் தேர்ந்த ஆறு ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு. ஈழத்தின் திரௌபதை வழிபாட்டின் பரவல்: சமூக பண்பாட்டியல் ஆய்வு, அரவான் களப்பலி: தமிழகத்திலிருந்து ஈழத்துக்கான பண்பாட்டுக் கடத்துகை, பட்டாணி கோயில்: ஒரு பண்பாட்டு மீட்டெடுப்பு, அர்ச்சுனன் தவம்: இதிகாசத்திலிருந்து நாட்டார் களங்களை நோக்கிய நகர்வு, பேய்ச்சி: ஒரு பண்பாட்டுப் படிமலர்ச்சி, மலையகத் தமிழர் நாட்டார் பாடல்கள்: ஒரு வரலாற்று ஆவணம் ஆகிய தலைப்புக்களில் இந்த ஆய்வுகள் பதிவுக்குள்ளாக்கப்பட்டுள்ளன. முதல் ஐந்து கட்டுரைகளும் நாட்டார் வழிபாடு சார்ந்தவையாகவும், இறுதிக் கட்டுரை நாட்டார் பாடல்கள் சார்ந்ததாகவும் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியரின் முதலாவது நூல் இதுவாகும்.

398 கிராமிய இலக்கியங்கள், நாட்டுக்கூத்துக்கள்

11378

இசை நாடக கூத்துப் பாடல்கள். எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: புத்தாக்க அரங்க இயக்கம், கோவில் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2016. (யாழ்ப்பாணம்: சீ.கே.ஜே. பிரின்ட் கிராப்பிக்ஸ்).

30 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

யாழ்ப்பாண மத்திய கல்லூரி நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.குமரனும், மானிப்பாய் இந்துக் கல்லூரி நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரனும் இணைந்து தொகுத்துள்ள நூல் இதுவாகும். மாணவர்களது செயல்முறைசார் செயற்பாட்டினை விருத்தி செய்யும் வகையில் அவர்களுடைய கற்றலை இலகுபடுத்தும் வகையில் இசை நாடகப் பாடல்கள் கூத்துப் பாடல்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பிரிவில் உள்ள செய்முறை வினாத்தாள் சார்ந்த வினாக்களின் ஒரு பகுதியைப் பூர்த்திசெய்யும் வகையில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 248576).

11379

ஈழத்தமிழர் மரபான இசையும் நடனமும். பாலசுகுமார். மட்டக்களப்பு: அனாமிகா, இல. 48, பெய்லி முதலாம் குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, 2009. (சென்னை 14: ஜப்பொனிக்கா பிரின்டிங் மீடியா, 17, ஸ்ரீபுரம் இரண்டாவது தெரு, இராயப்பேட்டை).

80 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: இந்திய ரூபா 125., அளவு: 21x14 சமீ.

ஈழத்தமிழர்களின் தனித்துவமான அடையாளங்களாகப் பேசப்படும் கலைகளில் அவர்களது நடன முறையை வெளிப்படுத்தி இருப்பது கூத்து மரபாகும். இந் நூல் ஈழத்தமிழர் கூத்து, இசை, நடனம் தொடர்பான கட்டுரைகளின் தொகுப்பாக அமைந்துள்ளது. "ஈழத் தமிழர்களின் மரபான இசையும் நடனமும்" என்ற முதலாவது கட்டுரை ஜனவரி 2008இல் பிரான்சில் வெளியிடப்பட்ட பொங்கல் மலருக்காக எழுதப்பட்டது. "ஈழத் தமிழர்தம் கூத்து மரபுகள்" என்ற இரண்டாவது கட்டுரை சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 2009 அக்டோபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்களில் நடைபெற்ற தமிழ் மரபுக் கலைகள் தொடர்பான தேசிய கருத்தரங்கில் வாசிக்கப்பட்டது. "இலங்கையின் மரபு வழித் தமிழ் நாடக அரங்கு" என்ற மூன்றாவது கட்டுரை 1995இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட நாடக மலரில் இடம்பெற்றது. அரங்கியல் நூல்களை வெளியிடும் அனாமிகா பதிப்பகத்தின் 14ஆவது வெளியீடாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

11380

ஏகலைவன்: தென்மோடிக் கூத்து. தமயந்தி. நோர்வே: உயிர்மெய் பதிப்பகம், Kaptein Linkes vei 9A, 6006 Aalesund, 1வது பதிப்பு, 2014. (தெகிவளை: ஏ.ஜே. பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

xv, 50 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ.

ஏகலைவன் மகாபாரதக் கதாபாத்திரங்களுள் ஒருவன். மகத நாட்டைச் சேர்ந்த இவன் பிறப்பினால் ஒரு வேடன். வில் வித்தையில் தேர்ந்தவனாக வர எண்ணி துரோணரிடம் சென்றான். அவன் சாதியில் தாழ்ந்த வேடுவன் என்பதால் அதை வெளிக்காட்டாமல், தனக்கு நேரமில்லை என்று சொல்லி திருப்பி அனுப்பிவிட்டார். ஏகலைவன் தன் இல்லம் திரும்பித் துரோணரைப் போல ஒரு சிலை செய்து அதையே குருவாகக் கொண்டு பயிற்சியை மேற்கொண்டான். ஒரு நாள் ஏகலைவன் மிகவும் சிரத்தையோடு வில் வித்தை கற்றுக்கொண்டிருந்தபோது நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. அவன் கவனம் சிதறியது, குரைப்புச் சத்தம் வந்த திக்கை நோக்கி அம்புகளை எய்தான், அம்புகள் எல்லாம் நாயின் வாயைச் சுற்றித் தைத்து குரைக்க முடியாதபடி செய்தது. நாய் அருச்சுனனை நோக்கி ஓடியது. நாயைக் கண்ட அருச்சுனன் அதை இழுத்துக் கொண்டு போய் துரோணரிடம் காண்பித்து "என்னை உலகிலேயே மிகச் சிறந்த வில் வீரனாக ஆக்குவேன் என்றீர்கள், இந்த அற்புதத்தைச் செய்தவன் நிச்சயம் என்னைவிடச் சிறந்தவனாக இருக்க வேண்டும். இது எப்படி சாத்தியம்" என்று துரோணரிடம் கேட்டான். அதிர்ச்சியும், ஆச்சரியமும் கொண்ட துரோணர் ஏகலைவன் இருந்த இடத்திற்கு வந்தார். அங்கே தன்னைப் போல் ஒரு சிலை இருப்பதையும் அதற்கு எதிரே ஏகலைவன் வில்லுடன் நிற்பதையும் கண்டார். துரோணர் நாயைக்காட்டி "இதை யார் உனக்கு கற்றுத் தந்தது" என்று கேட்டார். "நீங்கள் தான் ஆசி வழங்கி என்னுள் இருந்து கற்றுத் தந்தீர்கள்" என்றான் ஏகலைவன். துரோணர் ஏகலைவனிடம் கபடத்தனமாக, "என்னால் வில் வித்தை கற்றுக்கொண்டதால் எனக்கு குருதட்சணையாக உனது வலதுகைக் கட்டைவிரலைத் தா" என்றார். ஒரு கணம் கூடத் தாமதிக்காமல் தனது வலதுகைக் கட்டைவிரலை வெட்டி துரோணரின் காலடியில் வைத்தான் ஏகலைவன். ஏகலைவ பாத்திரம் என்பது அன்றைய காலத்தில் மையநிலை மனிதர்கள் விளிம்புநிலை மனிதர்களைப் பயமுறுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட படைப்பு. கற்றலைப் போல போர்க்கலைகளைக் கற்பதும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொடர்ச்சியாகத் திட்டமிட்டு மறுக்கப்பட்டுவந்துள்ளது. இதன் தொடர்ச்சியில் "மறைந்திருந்து கற்றலும் தண்டனைக்கு உரியதே" என்பதைப் புலப்படுத்துவதாகவே ஏகலைவன் பாத்திரம் அமைகின்றது. இந்நூலில் ஒரு மாற்றுப் பார்வையில் ஏகலைவன் கதை தென்மோடிக் கூத்தாக புனையப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளது. இதில் ஏகலைவன் இறுதிக்காட்சியில் கட்டைவிரலைத்தர மறுக்கிறான். "உங்கள் உள்ளெண்ணம் குரோதமானது, சதி நிறைந்தது, வரலாறு துரோணரின் துரோகத்தை இழித்துரைக்கும், என்னையும் மூடனென நகைத்துரைக்கும். நான் தரும் குரு காணிக்கையால் இந்த இரண்டு தவறுகளும் நிகழவேண்டாம். நீங்கள் சென்று வாருங்கள்" என்று மாற்று முடிவைக் கூத்துக்குத் தருகிறான். ஏகலைவன், துரோணர், அர்ச்சுனன், அஸ்வத்தாமன், எகலைவனின் தந்தை, இரண்டு கட்டியர்கள் எனக் குறைவான பாத்திரங்களுடன் இக்கூத்து உருவாக்கப்பட்டுள்ளது.

11381

கன்னங்குடா உழுதொழிற் பள்ளு (பள்ளுப் பிரபந்தம்). க.தா.செல்வராஜகோபால் (புனைபெயர்: ஈழத்துப் பூராடனார்). அன்புமணி இரா.நாகலிங்கம், சக்தி சாந்தன், க.தங்கேஸ்வரி, பரதன் கந்தசாமி (பதிப்புத் தொகுப்பாசிரியர்கள்). கனடா: நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், தொரன்ரோ, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, ஆவணி 2000. (கனடா: ஜீவா பதிப்பகம், றிப்ளக்ஸ் அச்சகம், 1109 Bay Street, Toronto, Ontario, M5S 2B3).

124 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: கனேடிய டொலர் 5., அளவு: 21x14 சமீ.

பள்ளு என்பது சிற்றிலக்கியங்களுள் ஒன்று. பள்ளு நூலினை உழத்திப்பாட்டு என்று அழைப்பதும் உண்டு. உழவுத்தொழிலுடன் தொடர்புடைய பள்ளர் இனமக்களின் வாழ்க்கையை எடுத்துரைக்கும் வண்ணம் இந்நூல் அமையும். பள்ளு நூல்கள் இறைவன், அரசன் முதலானவர்களின் பெருமையை எடுத்துரைக்கும் வண்ணம் எழுதப்பட்டுள்ளன. கன்னங்குடா என்பது ஈழத்தின் மட்டக்களப்பை அடுத்த விவசாய ஊர். கன்னங்குடா உழுதொழிற்பள்ளு நூலின் ஆசிரியர் ஈழத்துப்பூராடனார் எழுதிய கன்னங்குடா உழுதொழிற்பள்ளு, பிற பள்ளு நூல்களிலிருந்து பெரிதும் வேறுபட்டுள்ளது. கடவுளின் பெருமை, அரசனின் பெருமை கூறும் வண்ணம் பிற பள்ளுநூல்கள் இருக்க, இப் பள்ளுநூல் உழவர்களுக்கும்- உழவுத்தொழிலுக்கும் முதன்மைதரும் வகையில் எழுதப் பட்டுள்ளது. நெல்வகை, மாட்டுவகை, உழுதொழில் மக்களின் பேச்சுவழக்குகள், கூத்துவகைகள், கலையுணர்வு,காதல்வாழ்க்கை,உழவுமுறை முதலியவற்றை விளக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. சிற்றிலக்கியம் என்ற பழைய வடிவத்தை எடுத்துக் கொண்டாலும் வாழும் காலத்து வாழ்க்கையினையும் சமூக நடப்புகளையும் ஆசிரியர் இணைத்து எழுதியுள்ளார். இவ்வூரில் நூற்றுக்கும் மேற்பட்ட இருபாங்கு கூத்துகள்(தென்மோடி,வடமோடி) படைக்கப்பட்டுள்ளன. இருநூற்றுக்கும் மேற்பட்ட அண்ணாவிமார்கள் வாழ்ந்தனர். இங்கு உழவர்களே மிகுதியாக உள்ளனர். அவர்களின் வாழ்வியல் சார்ந்த செய்திகள் இந்நூலில் பதிவாகியுள்ளன. மட்டக்களப்பு மாநிலத்தின் வயல்வெளிகளில் பயன்படுத்தப்படும் வயற்களச்சொற்கள் மிகுதி. அச்சொற்கள் யாவும் உழவுத்தொழிலின் தொழில்நுட்பச் சொற்களாகும். அச்சொற்களையும், அச்சொற்களைப் பயன்படுத்தும் மக்களின் வாழ்க்கையையும் ஆவணப்படுத்தும் வண்ணம் இந்நூல் வெளிவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் வணக்கம், பாடுகளம் பற்றிய சிறப்பு, போடியார் எனப்படும் பண்ணையாரின் வீட்டு அமைப்பு, போடியாரின் வருகை, வயல்வேலை தொடங்குதல், வயல்அதிகாரி, முல்லைக்காரன் (வேலையாள்)தோற்றம், உழவர்களின் மனைவிமார் தோற்றம், கழனிக்கன்னியர் நாட்டுவளம் பாடுதல், போடியார் படியளத்தல், போடியாரிடம் மள்ளர் மாரியம்மன் சடங்கு செய்ய வேண்டுதல், மழைவேண்டிப் பூசை செய்தல், மழைபொழிதல், வெள்ளம் வடிதல், மட்டக்களப்பு வாவியின் சிறப்பு, ஆற்றுமீன்கள், வயல்வேலை தொடக்கம், மாட்டுவகைகள், போடியார் உழவைத் தொடங்குதல், கலப்பை வகை, அமைப்பு, நெல்வகை, இளைய பள்ளியின் மோகத்தால் பள்ளன் கடமை தவறல், பண்ணைக்காரன் முருகனை வினவல், இளையாள்-மூத்தாள் ஏசல், போடியார் முருகனைக் கண்டித்தல்-தண்டித்தல், இரு மனைவியரும் மன்னிக்க வேண்டுதல், முருகனை மாடு முட்டுதல், இரு மனைவியரும் புலம்பல், போடியார் பொறுப்பேற்றல், முருகன் வேளாண் வெட்டுக்கு ஆயத்தம் செய்தல், வசந்தன் கூத்து, போடியார் வீட்டு விருந்து, போடியாரின் அன்புரை, கள்ளுண்டு மகிழல், புதுப்புனலாடல், போடியாரின் புரட்சி எண்ணம் முதலியவற்றை விளக்கும் வகையில் நூல் அமைந்துள்ளது. கன்னங்குடா உழுதொழிற் பள்ளு பழைமையும் புதுமையும் கைகோர்க்கும் வண்ணம் படைக்கப்பட்டுள்ளது. சென்ற திசையில் செல்லாமல் புது திசைகளை அமைத்துள்ள ஆசிரியர் பள்ளு இலக்கிய உலகில் பழந்தமிழ்க் கலைகளையும், சொற்களையும் வெளிப்படுத்தித் தனக்கென ஒரு தனியிடம் பெற்றுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20917).

11382

கிழக்கிலங்கை மக்களின் எழுதா இலக்கியங்கள். க.தா.செல்வராஜகோபால் (புனைபெயர்: ஈழத்துப் பூராடனார்). அன்புமணி இரா.நாகலிங்கம், சக்தி சாந்தன், க.தங்கேஸ்வரி, பரதன் கந்தசாமி (பதிப்புத் தொகுப்பாசிரியர்கள்). கனடா: நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், தொரன்ரோ, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, வைகாசி 2000. (கனடா: ஜீவா பதிப்பகம், றிப்ளக்ஸ் அச்சகம், 1109 Bay Street, Toronto, Ontario, M5S 2B3).

Lii, 156 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: கனேடிய டொலர் 15., அளவு: 21x14 சமீ.

வயற்களக் கவிகள், வேளாண்மை செய்கைப் பாடல்கள், ஊஞ்சற் பாடல்கள், வழிபாட்டுப் பாடல்கள், விழாக்கோலப் பாடல்கள், தனிப்பாடல்கள் ஆகிய ஆறு வகைப்பட்ட எழுதா இலக்கியங்களான 120 நாட்டார் பாடல்கள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. ஈழத்துப் பூராடனார் திரட்டித் தொகுத்துள்ள இந்நூலின் பதிப்புக் குழுவினராக அன்புமணி இரா.நாகலிங்கம், சக்தி சாந்தன், க.தங்கேஸ்வரி, பரதன் கந்தசாமி ஆகியோர் இயங்கியுள்ளனர். கனடிய மட்டக்களப்பு சமூகத்தின் ஆதரவிலும், மட்டக்களப்பு அன்பு வெளியீட்டு ஆதரவிலும் கனடிய ஜீவா பதிப்பகத்தின் நிழல் வெளியீடாக இப்பதிப்பு வெளிவந்துள்ளது. (இந்நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20433).

11383

தர்மத்தில் பூத்த மலர்கள் (தோபியாஸ்): தென்மோடி நாட்டுக்கூத்து. ம.யேசுதாசன். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 1வது பதிப்பு, ஜுன் 2004. (யாழ்ப்பாணம்: சுரபி பதிப்பகம்).

xvi, 64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-9262-27-0.

கத்தோலிக்க கூத்துக்கள் பொதுவாக விவிலியக் கதைகளைத் தழுவியும், புனிதர்களின் வேதசாட்சிகளின் வரலாற்றைக் கொண்டும், அறநெறி உணர்த்தும் கற்பனைக் கதைகளைக் கொண்டும் படைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் விவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் உள்ள தோபியாஸ் ஆகமத்தின் தோபியாசின் வரலாற்றை இக்கூத்து பாடுபொருளாகக் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33378).

11384

பொடுபொடுத்த மழைத்தூத்தல்: கிழக்கிலங்கை நாட்டார் காதல் பாடல்கள். அனார் (தொகுப்பாசிரியர்). சென்னை 600041: க்ரியா, புதிய இல. 2, பழைய இல. 25, 17ஆவது கிழக்குத் தெரு, திருவான்மியூர், 1வது பதிப்பு, ஜனவரி 2013. (சென்னை 600017: சுதர்சன் கிராப்பிக்ஸ்).

72 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 150., அளவு: 18x14 சமீ., ISBN: 978-93-82394-02-0.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் கிராமங்கள் அடுத்தடுத்து அமைந்திருக்கும். இத்தொகுப்பிலும் இரண்டு மக்களுடைய கவிகளும் ஒன்றோடு ஒன்று கலந்திருக்கின்றன. இன்றைய உலகமயமாக்கல், அறிவுப் பெருக்கம், நாகரிக வளர்ச்சி, இலக்கிய மாற்றங்கள் அனைத்தையும் தாண்டி இன்றைக்கும் இக்கவிகளிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ள ஏதோ ஒன்று நிச்சயம் இருக்கிறது. அதுதான் நாம் இன்னும் அடைய முடியாத ஒன்றாகவும் உள்ளது. தேசம், இயற்கை, மொழி, பண்பாடு, தொன்மையான மனிதனின் நாகரிகம் போன்றவற்றை அறிந்துகொள்ள முயல்வது இன்றைய தலைமுறைக்கு மிகவும் அவசியம். முற்றிலும் இயற்கையான பசுமையுடனும் நீருடனும் காற்றுடனும் நெருப்புடனும் பறவைகளோடும் விலங்குகளோடும் பிணைந்த இன்னொரு வாழ்க்கையின் மணத்தைப் பூரணமாக உணர்ந்துகொள்ளவும் முடியும். முழுக்கமுழுக்க உணர்விலிருந்து வெளிப்படுகிற மண்ணின் பாட்டுக்கள் இவை. ஒவ்வொரு சொல்லிலும் உள்ளுறைந்திருக்கும் ஆன்மாவின் பச்சை, காதலின் அப்பழுக்கற்ற வாசனை, ஆணினதும் பெண்ணினதும் கண்களிலிருந்து காதலெனத் தெறிக்கின்றன. அந்தக் கணத்தின் குரலில் இருந்த இசையின் உயிர் ஒருபோதும் அழிவற்றது. 1990களின் நடுப்பகுதியிலிருந்து அனார் என்ற புனைபெயரில் எழுதும் இஸ்ஸத் ரீஹானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மட் அஸீம் ஈழத்து தமிழின் நவீன கவிதைகளுக்குப் புதிய முகங்களைத் தருபவராக இருக்கிறார். இவர் கிழக்கிலங்கையின் சாய்ந்தமருதுவில் பிறந்து வாழ்ந்துவருபவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54528).

11385

மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு. தி.சதாசிவ ஐயர் (தொகுத்துப் பரிசோதித்தவர்). மட்டக்களப்பு: D.E.கணபதிப்பிள்ளை, தலைவர், மட்டக்களப்பு தெற்கு தமிழ் ஆசிரியர் சங்கம், 1வது பதிப்பு, 1940. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xlvi, 111 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 1.00, அளவு: 20x13 சமீ.

கட்டியம் (நூலுக்குத் தோற்றுவாயாக அமைந்தவை), தோத்திரம் (தோத்திரரூபமாக அமைந்தவை), சரித்திரம் (சரித்திர சம்பந்தமானவை), தொழில் (கிராமத்தவரின் தொழிலோடு தொடர்பான பாடல்கள்), வேடிக்கை (வினோத சித்திரக் கவிகளும் நகைச்சுவைதரும் கவிகளும்), விளையாட்டு (கும்மி, ஊஞ்சல் முதலிய விளையாட்டுக்கவிகள்) ஆகிய ஆறு பிரிவுகளில் தொகுக்கப்பட்டுள்ள பாடல்களைக் கொண்ட நூல். இப்பாடல்கள் வரிக்கூத்துப் பாடல் வகையைச் சேர்ந்தவை. மட்டக்களப்புப் பிரதேசத்தில் வழங்கிவரும் இப்பாடல்களை அம்மக்கள் வசந்தன் அல்லது வயந்தன் என்றே வழங்குவர். இந்நூலில் 62 வசந்தன்கள் திரட்டிச் சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வசந்தன் பற்றியும் விசாரித்தறிந்த செய்திகள் அதனதன் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2429).

11386

மர்மத் தளபதி: புனித செபஸ்தியார் நாட்டுக்கூத்து. எஸ்.ஏ. மிராண்டா. மன்னார்: பேசாலை பல்கலைக்கழக மாணவர் அமைப்பு, பேசாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2002. (சில்லாலை: ஜே.எஸ்.பிரின்டர்ஸ் மற்றும் கொழும்பு: ட்ரான்சென்ட் பிரின்டர்ஸ்).

xii, 72 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x15 சமீ., ISBN: 955-8771-00-7.

புனித செபஸ்தியார் (இறப்பு சுமார். 288) என்பவர் ஆதி கிறித்தவ புனிதரும் மறைசாட்சியும் ஆவார். இவர் உரோமைப் பேரரசன் தியோக்கிளேசியன் கிறித்தவர்களுக்கு எதிராகத் தொடங்கிய கொடுமைகளின் காரணமாக இறந்தார். இவர் பெரும்பான்மையாக மரத்திலோ, தூணிலோ கட்டப்பட்டவாறு, அம்புகளால் குத்தப்பட்டு ஓவியங்களில் சித்தரிக்கப்பட்டாலும், இவர் அங்கு இறக்கவில்லை. இவரை அங்கிருந்து உரோம் நகரின் ஐரீன் என்பவர் காப்பாற்றி குணப்படுத்தினார். இதன் பின்பு தியோக்கிளேசியனின் செயல்களை இவர் சாடியதால், அரசனின் ஆணைப்படி இவரை தடியால் அடித்துக் கொலை செய்தனர். இவரின் மறை சாட்சியம் முதன் முதலில் நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த அம்புரோசு என்னும் மிலன் நகர ஆயரின் திருப்பாடல் 118இன் மறை உரைகளில் (எண் 22) காணக்கிடைக்கின்றது. இதன் படி செபஸ்தியாரின் பக்தி மிலன் நகரின் 4ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டிலேயே இருந்துள்ளது தெரிகின்றது. கத்தோலிக்க திருச்சபையில் இவரின் விழா நாள் சனவரி 20. கிழக்கு மரபுவழி திருச்சபைகள் இவரின் விழாவை டிசம்பர் 18இல் சிறப்பிக்கின்றன. புனித செபஸ்தியாரின் வாழ்க்கை வரலாற்றுப் பகுதியொன்றினை நாட்டுக்கூத்து இலக்கியமாக நூலுருவில் ஆசிரியர் வழங்கியிருக்கிறார். ஆசிரியர் மிராண்டா பேசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆசிரியப் பணியாற்றியவர். (இந்நூல் இலங்கைத் தேசிய நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84880).

11387

மரபுவழி நாடகங்கள் (வடமோடி நாட்டுக்கூத்துக்கள்).செ.செபமாலை (கலைஞர் குழந்தை). முருங்கன்: முத்தமிழ்க் கலாமன்றம், 1வது பதிப்பு, 1998. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(10), 104 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x15 சமீ.

இறைவனா புலவனா?, தமயந்தி, விடுதலைப் பயணம் (மோயீசன் வரலாறு) ஆகிய மூன்று வடமோடி நாட்டுக் கூத்துக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவை பல்வேறு காலகட்டங்களில் மேடையேற்றம் கண்டு பாராட்டுகளைப் பெற்றவை. கலைஞர் குழந்தை 1964 முதல் முத்தமிழ்க் கலாமன்றம் என்ற கலை அமைப்பை உருவாக்கி இயக்கிவருபவர். குழந்தை செபமாலை என அழைக்கப்படும் செபஸ்தியான் செபமாலை (பிறப்பு: மார்ச் 8, 1940) பிரபல்யமான ஈழத்து எழுத்தாளரும், நாடக, நாட்டுக்கூத்துக் கலைஞருமாவார். ஆசிரியர், கவிஞர், நாடகாசிரியர், நெறியாளர், பாடகர், இசையமைப்பாளர், சிறந்த சொற்பொழிவாளர் என்று பல்வேறு திறமைகளைக் கொண்டவர். மன்னார் மாவட்டம் நானாட்டான் பிரதேசத்தில் முருங்கனில் வசித்து வரும் செபஸ்தியான் செபமாலை மன்னார் முருங்கன் மகா வித்தியாலயத்தில் பாடசாலைக் கல்வியைப் பெற்றார். யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்றார். அல்லைப்பிட்டி பாடசாலை ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்து, 40 ஆண்டு சேவையின் பின்னர் ஓய்வுபெறும் போது முதலாந்தர அதிபராக பதவி வகித்து வந்தார். இவர் ஒரு பாரம்பரியக் கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரால் எழுதி, தயாரித்து மேடையேற்றப்பட்ட நாடகங்கள் பலவாகும். இலக்கியத்துறையில் ஈடுபாடு 1955 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. இவரது முதல் ஆக்கமான "அறப்போர் அறைகூவல்" எனும் கவிதை இலங்கை வானொலியில் 1963 ஆம் ஆண்டு முதலில் ஒலிபரப்பானது. இலக்கியம், கலை, நாடகம், கவிதை என இலங்கை வானொலியிலும், தேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் தொடர்ந்து எழுதி வருகின்றார். இத்தகைய இருநூற்றுக்கும் மேற்பட்ட ஆக்கங்கள் வானொலி, பத்திரிகைகளில் ஒலிபரப்பாகியும், வெளியாகியுமுள்ளன. 1998ல் அரச இலக்கிய விழாவில் இவரது பரிசு பெற்ற நாடகங்கள் என்று நூலுக்குச் சாகித்திய விருது வழங்கப்பட்டது. 1999ல் கொழும்பில் கலாசாரத் திணைக் களத்தினால் கலாபூசண விருது வழங்கப்பட்டது. 2000ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் ஆளுநர் விருது வழங்கப்பட்டு பொன்னாடை போர்த்திப் பொற்கிழியும் வழங்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு "நாடகக்கீர்த்தி" விருது வழங்கியது. 01.11.94ல் மன்னார் மாவட்டக் கலை பண்பாட்டுக்கழகம், இவருக்கு "முத்தமிழ் வேந்தர்" என்ற பட்டம் வழங்கி கௌரவித்தது. 02.09.2000 அன்று மன்னாரில் இடம்பெற்ற நாடக நிகழ்வில் "திருக்கள வேந்தன்" விருது, 2005ல் மட்டக்களப்புப் பக்கலைக்கழக நுண்கலைத் துறையின் "தலைக்கோல்" விருது என்பனவும் வழங்கப்பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54610).

11388

மாமன் மகனே: மலைநாட்டு மக்கள் பாடல்கள். ஸி.வி.வேலுப்பிள்ளை. கொழும்பு 3: மாவலிப் பிரசுரம், 618, 3/3, காலி வீதி, 1வது பதிப்பு, 1976. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம்).

x, 78 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 17x12 சமீ.

மலையக இலக்கியத்தின் முன்னோடியாகக் கருதப்படும் "மலையக மக்கள் கவிமணி" சி.வி. வேலுப்பிள்ளை ஆசிரியர், இதழாளர், கவிஞர், நாவலாசிரியர், தொழிற்சங்கத் தலைவர், அரசியல் செயற்பாட்டாளர், களப் போராளி, எழுத்தாளர் எனப் பன்முக ஆளுமையாகத் திகழ்ந்தவர். இலங்கையில் வட்டக்கொடை பூண்டுலேயா பகுதியைச் சேர்ந்த மடக்கொம்புர தோட்டத்து பெரியக் கங்காணி கண்ணப்பன் வேலு சிங்கம் - தெய்வானையம்மாள் ஆகியோருக்கு 14.09.1914 அன்று மகனாகப் பிறந்தவர் சி.வி. வேலுப்பிள்ளை. இவரது முழுப்பெயர் கண்ணப்பன் வேலுசிங்கம் வேலுப்பிள்ளை என்பதாகும். அட்டன் மெதடிஸ்ட் கல்லூரி, நுவரெலிய புனித கிருத்துவக் கல்லூரி, கொழும்பு நாளந்தா வித்தியாலயம் முதலியவற்றில் கல்வி பயின்றார். கொழும்பு நாளந்தா வித்தயாலயம், பூண்டுலேயா தாகூர் பாடசாலை, தலவாக்கலை சுமண வித்தியாலயம், அட்டன் மெதடிஸ்ட் கல்லூரி முதலியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றினார். மலைநாட்டு மக்கள் கல்வி கற்பது ஆபூர்வமாயிருந்த காலத்திலேயே கல்வி கற்று ஆசிரியராகப் பணி புரிந்தவர் சி.வி. வேலுப்பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது. மலையக மக்கள் பாடல்களைத் தேடித்தொகுத்து இங்கு இலக்கியமாக்கியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2481).

11389

வடமராட்சியில் நாட்டுக்கூத்துகள்: அறிமுகம், ஆய்வு முன்னோடி நூல். பா.இரகுவரன். பருத்தித்துறை: திருமதி ரஞ்சிதா ரகுவரன், தேடல் வெளியீடு, பிராமின் வீதி, தும்பளை, 1வது பதிப்பு, மார்ச் 2016. (பருத்தித்துறை: தீபன் பிரின்டர்ஸ்).

(4),xi, 158 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-43055-0-2.

இலங்கையில் நாட்டுக்கூத்து தோற்றமும் வளர்ச்சி மாற்றங்களும், இலங்கையில் நாட்டுக்கூத்துகளும் போக்குகளும், அண்ணாவியார் இளையதம்பி வைரமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடனான நேர்காணல், கலைப்பரிதி ஆர்.எஸ். ஆனந்தன் பருத்தித்துறை கூத்துக் கலைஞருடனான நேர்காணல், வடமராட்சி கிறிஸ்தவக் கூத்து அண்ணாவியார் கலையரசு பா.வேதநாயகம் அவர்களுடனான நேர்காணல், வடமராட்சியில் நாட்டுக் கூத்துகள், வடமராட்சியில் நாட்டுக்கூத்து அரங்குகளும் ஆற்றுகை முறைமைகளும், வடமராட்சிக் கூத்தின் பொதுவான கட்டமைப்பு, பருத்தித்துறைக் கூத்து அரங்கும் அளிக்கையும் பற்றிய அறிமுகம், பூச்சுப் பூசலும் வேசம் கட்டலும், வடமராட்சிக் கூத்துக்களில் ஆடல்கள் I, வடமராட்சிக் கூத்துக்களில் ஆடல்கள் II, நாட்டுக்கூத்தில் பாடலும் இசையும், வடமராட்சிப் பகுதியில் நாட்டுக்கூத்து சமூக வரலாற்றுரீதியிலான தாக்கங்களும் வெளிப்பாடுகளும் பற்றிய ஆய்வு ஆகிய கட்டுரைகளின் வழியாக இந்நூலில் வடமராட்சிப் பிரதேசத்தில் நிகழ்ந்த நாட்டுக் கூத்துப் பற்றிய விரிவான பல தகவல்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

11390

வாய்மொழி இலக்கியம் (நாட்டுப் பாடல்கள்). நாட்டுப்பாடல் நடன நாடகக் குழு. யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பிரதேசக் கலைமன்றம், 1வது பதிப்பு, தை 1961. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சகம்).

xvi, 51 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12 சமீ.

யாழ்ப்பாணப் பிரதேசக் கலைமன்றத்தின் முதலாவது பிரசுரமாக வெளிவந்துள்ள நூல் இது. இதில் கண்டீரோ கண்மணியை, என் செய்வாய் பெண் பனையே, திருக்கைக் கலியாணம், சீலாக் கலியாணம், உடையார் உடைந்தார், அவல் இடித்தல், பறங்கியர் காலத்துப் பாடல்கள், காகமுந் தாகமும், காகமும் சகுனமும், காகத் தூது, பட்சிகளை வினாவுதல், பிரிவாற்றாமை, துணை தேடுதல், பிறந்த அகம் போன பெண், மைத்துனன் மைத்துனி மணம், புத்தி அறிதல், யானையின் அட்டூழியம், எண்ணெய்ச் சிந்து, கப்பற்பாட்டு, ஒரு கூட்டம் ஆண்களும் பெண்களும், ஒப்பாரி, கொடும்பாவி இழுத்தல், அருவிவெட்டுப் பாடல் ஆகிய 23 தலப்புகளில் ஈழத்து நாட்டுப் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பிரதேசக் கலைமன்றமானது ம.ஸ்ரீகாந்தா அவர்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த வேளையில் அவரைத் தலைவராகவும், கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்களை பொதுச் செயலாளராகவும், சு.சத்தியலிங்கம் அவர்களை உதவிச் செயலாளராகவும், கச்சேரிக் காரியாதிகாரி ரி.பாலச்சந்திரன் அவர்களை பொருளாளராகவும் கொண்டு உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பின் உப குழுவான நாட்டுப் பாடல் நடன நாடகக் குழு முகாந்திரம் இ.பொ. இராசையாவை தலைவராகவும், க.பே.முத்தையா, ரி.தங்கராசா ஆகியோரை உபதலைவர்களாகவும் கொண்டு உருவாக்கப்பட்டிருந்தது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2504).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11391

வீரபாண்டிய கட்டப்பொம்மன் (நாட்டுக்கூத்து). நீ.மிக்கோர்சிங்கம். யாழ்ப்பாணம்: மிக்கோர்சிங்கம் அமிர்தவாசகம், 15/1, முதலாம் குறுக்குத்தெரு, பாஷையூர், 1வது பதிப்பு, மாசி 2004. (யாழ்ப்பாணம்: அன்னை அச்சகம், குருநகர்).

xvi, 77 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 20.5x14 சமீ.

வீரபாண்டிய கட்டபொம்மன், தமிழகத்தில் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாளையக்கார மன்னன். இவர் தெலுங்கு மொழி பேசும் ராஜகம்பளம் நாயக்கர் இனத்தில் பிறந்தவர். இவருடைய முன்னோர்கள் ஆந்திராவிலிருந்து விசயநகர ஆட்சிக்காலத்தில் தமிழகத்திற்கு குடிபெயர்ந்து வந்தவர்கள். அழகிய வீரபாண்டியபுரம் எனும் ஊரில் (இன்றைய ஒட்டபிடாரம்) ஆட்சிபுரிந்து வந்த ஜெகவீரபாண்டியனின் (நாயக்க வம்சம்) அவையில் அமைச்சராக பொம்மு என்கிற கெட்டி பொம்மு (தெலுங்கு) இடம்பெற்றிருந்தார். வீரமிகுந்தவர் என்ற பொருளை தெலுங்கில் உணர்த்தும் கெட்டி பொம்மு எனும் சொல் நாளடைவில் கட்டபொம்மு என்று மாறி பின் தமிழில் கட்டபொம்மன் என்ற சொல்லாயிற்று. ஜெகவீரபாண்டியனின் மறை விற்குப்பின் அரசகட்டிலில் ஏறிய கட்டபொம்மு பின் ஆதி கட்டபொம்மன் என்று மக்களால் அழைக்கப்பட்டார். இவரே பொம்மு மரபினரின் முதல் கட்டபொம்மன். இந்த பொம்மு மரபில் வந்தவர்களே (திக்குவிசய கட்டபொம்மன்) ஜெகவீர கட்டபொம்மன், ஆறுமுகத்தம்மாள் தம்பதியர். இவர்களின் புதல்வரே வீரபாண்டியன் எனும் இயற்பெயர் கொண்ட வீரபாண்டிய கட்டபொம்மனாவார். இவரது கதை நாட்டுக்கூத்து நாடகமாகப் புனைவுபெற்றுள்ளது. இந்நூல் ஜேர்மனியில் வாழும் அ.மிக்கோர்சிங்கம் மனோகரன் அவர்களால் வெளியிடப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 53030).

11392

வேடன் கண்ணப்பன்: நாட்டுக்கூத்து. ஓ.கணபதிப்பிள்ளை. மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64 கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, மார்கழி 2006. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

52 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 18.5x13 சமீ., ISBN: 955-8715-22-0.

1923ஆம் ஆண்டு செப்டெம்பர் 12ஆம் நாளில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் கல்லடி நொச்சிமுனைக் கிராமத்தில் ஒள்ளுப்போலையான்-உமையா அன்னமுத்து தம்பதியினருக்கு மூன்றாவது மகவாகப் பிறந்தவர் கணபதிப்பள்ளை. சேக்கிழார் வழங்கிய திருத்தொண்டர் புராணத்தில் வரும் கண்ணப்ப நாயனார் கதையை நாட்டுக்கூத்து வடிவத்தில் ஆசிரியர் வழங்கியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50500).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11393

வேழம் படுத்த வீராங்கனை (நாட்டுக்கூத்து). அரியான்பொய்கை கை.செல்லத்துரை. முள்ளியவளை: சமன் வெளியீடு, வற்றாப்பளை, 1வது பதிப்பு, சித்திரை 1983. (யாழ்ப்பாணம்: எஸ்.ஜே. அச்சகம், பிரப்பங்குளம் வீதி).

88 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 21.5x14 சமீ.

வன்னிப் பிரதேசத்தில் வேலைப்பணிக்கன் ஒப்பாரியாக இதுவரை காலமும் வழக்கிலிருந்த ஒரு நாட்டாரிலக்கியத்தை கூத்தாக உருவாக்கியுள்ளார் "கவிசேகரன்" செல்லத்துரை. வன்னியரின் வீரம், கற்பு, அவற்றுடன் பின்னிப் பிணைந்த வேலப்பணிக்கன் சரிதம் என ஒரு அழகிய பிரதேச நாட்டார் இலக்கியம் இங்கு அவரது சிந்தையில் உருவாகியுள்ளது. வன்னிவள நாட்டில் வன்னியரசாட்சிக் காலத்தில் ஓங்கி உயர்ந்து நின்ற எட்டு ஆலயங்களையும் இந்நாட்டுக்கூத்தில் சமயோசிதமாக நாடகசபை விருத்தத்தில் இணைத்திருக்கின்றார். குமாரபுரத்தில் சின்ன வன்னியனின் முடிசூட்டு வைபவத்தில் ஆரம்பமாகி வீராங்கனை அரியாத்தை உடன்கட்டை ஏறி வீரசுவர்க்கம் அடையும் இக் காதலர்களின் சரித்திரத்தில் வீரத்தை, தெய்வ பக்தியை, கற்பின் மகிமையை ஆசிரியரின் இலக்கிய ஆளுமை அழகாகப் பதிவுசெய்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30491).

மேலும் பார்க்க: 11749

398.1 பழமொழிகளும் விடுகதைகளும்

11394

பழமொழிப் பொக்கிஷம். எஸ்.எம்.ஜீவா. யாழ்ப்பாணம்: அன்னை புத்தகசாலை, இல.7, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2012. (யாழ்ப்பாணம்: சத்தியா பிரிண்டர்ஸ், 153/11, நாவலர் வீதி).

II, 96 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 160., அளவு: 20.5x14.5 சமீ.

பழமொழிகள் ஒரு சமுதாயத்திலே கர்ணபரம்பரையாகக் கடத்தப்பட்டு, நீண்ட காலமாகப் புழக்கத்தில் இருந்து வரும் அனுபவக் குறிப்புகள் ஆகும். பழமொழிகள் தான் சார்ந்த சமுதாயத்தினரின் அனுபவ முதிர்ச்சியையும், அறிவுக் கூர்மையையும் எடுத்து விளக்குவதாக அமைகின்றன. இவை உலகளாவியரீதியில் நாட்டுப் புறவியலின் ஒரு கூறாகவும் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. எடுத்துக்கொண்ட பொருளைச் சுருக்கமாகவும் தெளிவுடனும் சுவையுடனும் பழமொழிகள் விளங்கவைக்கின்றன. சூழமைவுக்கு ஏற்றமாதிரி பழமொழிகளை எடுத்தாண்டால் அந்த சூழமைவை அல்லது பொருளை விளங்க அல்லது விளக்க அவை உதவும். அத்தகைய பழமொழிகளின் சிறு தொகுப்பே இதுவாகும். (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 13258).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

400 மொழியியல்

491.2 சமஸ்கிருத மொழி

11395

விவிக்த பதாவலி: சம்ஸ்கிருத வகைச்சொல் விளக்கச் சொற்களஞ்சியம். ச. பஞ்சாட்சர சர்மா (தொகுப்பாசிரியர்), ப.சிவானந்த சர்மா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், கந்தசாமி கோவிலடி, இணுவில், சுன்னாகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2013. (சுன்னாகம்: சிறீ வித்யா கம்பியூட்டர் பிரஸ், கந்தசாமி கோவிலடி, இணுவில்).

32 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 24.5x17.5 சமீ.

இந்நூல் பல்வேறு தமிழ்ச் சொல்களுக்கு சம்ஸ்கிருத மொழியில் விளக்கம் தருகின்றது. இதனை கலைக்களஞ்சியம் போன்ற ஒரு சொற்களஞ்சியமாகக் கருதலாம். அகராதியில் ஒரு சொல்லுக்குப் பொருள் தேடுவதாயின் ஒருவர் தான் தேடும் சொல்லைத் தெரிந்திருக்கவேண்டும். ஆனால் சொல்லே தெரியாத நிலையில் குறித்த சொல் வேண்டுவோருக்கு இந்நூலின் பிரிவுத் தலைப்புகள் வழிகாட்டியாக அமைகின்றன. அன்றாட வாழ்வில் நமக்குத் தேவையான சம்ஸ்கிருதச் சொற்களுக்கு விளக்கம் தரும் இந்நூல் உடலுறுப்புகள், உடல் ஊனமுற்றோர், கலைஞர்கள், தொழிலாளர்கள், குணம்-செயல்களால் மாறுபட்ட மனிதர்கள், மருந்துச் சரக்குகள், அவசியமான சில ஔஷதிகள், தானியங்கள், உணவுத் தாவரங்கள், உணவுச்சரக்குகள், உலோகங்கள், மிருகங்கள், நீர்வாழ்வன, பாம்புவகை, பறவைகள், ஊர்வன, பறக்கும் சிறு பிராணிகள், வாத்யங்கள், நீர்ப்பூத் தாவரங்கள், தாவர வகைகளும் உறுப்புகளும், பல்வகைத் தாவரங்கள், வசிப்பிடம், திசைகள், பலவிதமான இடங்கள், பாடசாலை, கோவில்களும் விழாக்களும், வீடும் சூழலும், நிறங்கள், நவதானியங்கள், உறவு முறைகள், இரத்தினங்கள் ஆகிய 31 தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளது. அமரர் பிரம்மஸ்ரீ ச.பஞ்சாட்சர சர்மா அவர்களின் பத்தாவதாண்டு சிரார்த்த தினச் சிறப்பு வெளியீடாக 19.10.2013 அன்று இந்நூல் வெளியிடப்பட்டது.

494.8 தமிழ் மொழி

11396

தமிழ் அமைப்புற்ற வரலாறு. ஞானப்பிரகாசர். சுன்னாகம்: வியாபார ஐக்கிய சங்கத்தார், 1வது பதிப்பு, 1927. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்கஅச்சகம்).

xvi, 116 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

சொற்களின் உண்மைப் பிறப்பை விளக்கும் நூல். தமிழ்ச் சொற்றொகுதிகள், இடம் பற்றிய பெயரீடு, முதற்சொல்லடிகள், சொல்லர்த்தங்கள் விரிந்த விசித்திரம், பிரதிப் பெயர்கள், பெயர் விகுதிகள்-வேற்றுமை உருபுகள், காலங் காட்டும் இடைநிலைகள், செயவெனெச்சம்- வியங்கோள்-எதிர்மறை, பிறமொழிகளிற் தமிழடிகள் ஆகிய பத்து அதிகாரங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலில் வரலாறு விளக்கப்பட்ட சொற்கள் அனுபந்தமாகத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 104).

494.8(1) தமிழ் இலக்கணம்

11397

அணியிலக்கணம். விசாகப் பெருமாளையர். யாழ்ப்பாணம்: நா.பொன்னையா, ஈழகேசரி அதிபர், திருமகள் நிலையம், மயிலிட்டி தெற்கு, 1வது பதிப்பு, ஏப்ரல் 1939. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(4), 78 பக்கம், விலை: சதம் 35., அளவு: 18x12 சமீ.

அணியிலக்கணம் என்னும் இந்நூல், முதன்முதல் நன்னூற் காண்டிகையுரை இயற்றி வெளியிட்டவரும் வித்துவானுமாகிய திருத்தணிகை-விசாகப் பெருமாளையர் அவர்கள் இயற்றிய "பாலபோத இலக்கணம்" என்ற நூலின் அணியிலக்கணப் பகுதியாகும். விசாகப் பெருமாளையர் 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் சென்னைக்கு அணித்தாயுள்ள திருத்தணிகையில் பிறந்தவர். இலக்கணம் கற்கும் மாணவர்களின் இடர்ப்பாடொழிக்கும் வகையில் பஞ்ச இலக்கணங்களையும் தெளிவுபட விளக்கி "இலக்கணச் சுருக்க வினாவிடை" என்னும் நூலை வெளியிட்டிருந்தார். மாணவர் நலன் கருதி இந்நூலின் அணியிலக்கணப் பகுதியும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10563).

11398

தமிழர் இலக்கிய இலக்கணம்: ஓர் அறிமுகம். நா.வை.குமரிவேந்தன் (இயற்பெயர்: மகேந்திரராசா). கிளிநொச்சி: குமரித் தமிழ்ப்பணி மன்றம், இல. 84, வெற்றி (ஜெயந்தி) நகர், 1வது பதிப்பு, பங்கனி 2015. (வவுனியா: வாணி கணினிப் பதிப்பகம், இல. 85, கந்தசாமி கோவில் வீதி).

154 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x14.5 சமீ.

தமிழ் மொழியின் இலக்கணங்களையும் இலக்கியங்களையும் பற்றிய அறிமுகமாக இந்நூல் வெளிவந்துள்ளது. பின்னிணைப்புகளாக "வரலாற்றுத் திரிப்பின் பகரமாக" என்ற தலைப்பில் இரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவை தமிழர் வரலாற்றினைத் திரிபுபடுத்திய முயற்சிகள் பற்றிக் குறிப்பிடுகின்றன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்-14808).

11399

தொல்காப்பியம் பொருளதிகாரம்: முதற் பாகம். சி.கணேசையர் (திருத்தமும் உரை விளக்கமும்). யாழ்ப்பாணம்: நா.பொன்னையா, ஈழகேசரி அதிபர், திருமகள் நிலையம், மயிலிட்டி தெற்கு, 1வது பதிப்பு, 1948. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xxviii, 759+107 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 21x14 சமீ.

தொல்காப்பிய முனிவரால் இயற்றப்பட்ட தொல்காப்பியத்தின் பொருளதிகாரப் பிரிவின் முதற் பாகமாகிய இந்நூல் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய முன் ஐந்தியல்களும் நச்சினார்க்கினியமும் இணைந்ததாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இவை புன்னாலைக்கட்டுவன் தமிழ் வித்துவான் பிரமஸ்ரீ சி.கணேசையர் அவர்கள் ஏட்டுப்பிரதிகளோடு ஒப்புநோக்கித் திருத்திய திருத்தங்களோடும் எழுதிய உரைவிளக்கக் குறிப்புகளோடும் வெளிவந்துள்ளது. பின்னைய 107 பக்கங்களும் பின்னிணைப்புகளாகும். ப.1-35 உதாரணச் செய்யுட் குறிப்புரையையும், ப.36-54 உதாரணச் செய்யுள் முதற்குறிப்பகராதியையும், ப.55-70 அரும்பத முதலியவற்றின் அகராதியையும், ப.71-74 சூத்திர முதற் குறிப்பகராதியையும், ப.75-107 சிறுபொழுதாராய்ச்சி என்ற தலைப்பில் சி.கணேசையர் எழுதிய கட்டுரையையும் கொண்டுள்ளன. கணேசையர் எழுதிய சிறுபொழுது என்ற கட்டுரைக்கு மறுப்பாக சி.வீரபாகுப்பிள்ளை அவர்கள் சிறுபொழுதாராய்ச்சி என்ற ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அதற்கு மறுப்பும் விளக்கமும் வழங்கும் கட்டுரையாக சி.கணேசையர் இதனை எழுதிச் சேர்த்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11006).

11400

யாப்பருங்கலக் காரிகை குமாரசுவாமிப் புலவர் உரை. அமிர்தசாகரர் (மூலம்), குமாரசுவாமிப் புலவர் (உரையாசிரியர்), க.இரகுபரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 7: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இல. 98, வோட் பிளேஸ், 4வது பதிப்பு, மே 1999, 1வது பதிப்பு, 1908, 2வது பதிப்பு, 1925, 3வது பதிப்பு, 1938. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B புளுமென்டால் வீதி).

xxiv, 230 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

தமிழ் இலக்கண நூல்களிலே மிகவும் பழமையான நூலாகிய தொல்காப்பியத்திலேயே யாப்பிலக்கணம் கூறப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி அதிலே கூறப்பட்டுள்ளவை பல இன்றும் வழக்கில் இருந்துவருகின்றன. இருந்தாலும், பிற்காலத்தில் புழக்கத்துக்கு வந்த பாவினங்களிற் சில அக்காலத்தில் இல்லாதிருந்தமையால் தொல்காப்பியத்தில் இவற்றுக்குரிய இலக்கணங்கள் கூறப்படவில்லை. இதனால் பிற்காலத்தில் ஏற்பட்ட யாப்பிலக்கண வளர்ச்சிகளையும் உட்படுத்தி எழுந்த யாப்பிலக்கண நூல்களிலே யாப்பருங்கலக் காரிகை சிறப்பானது. இந்நூலே இன்று யாப்பிலக்கணம் பயில்வோரால் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நூற் பெயருக்குப் பலர் பல விதமாக விளக்கம் கூறுகின்றனர். யாப்பெனும் கடலைக் கடக்கும் தோணி போன்றது எனப் பொருள்படும் "யாப்பருங்கலம்" என்னும் நூலுக்கு உரைபோல் அமைந்ததன் காரணமாகவே யாப்பருங்கலக் காரிகை என்னும் பெயர் ஏற்பட்டதாகச் சிலர் கூறுகிறார்கள். சமண சமயம் தொடர்பான திரமிள சங்கத்தின் உட்பிரிவுகளுள் ஒன்றான அருங்கலான்வயம் எனும் பிரிவைச் சேர்ந்த இந் நூலாசிரியர் தானெழுதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களுக்கு யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை எனப் பெயரிட்டிருக்கக் கூடுமெனக் கூறுவாரும் உளர். யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்னும் இரு நூல்களையும் இயற்றியவர் "அமுதசாகரர்" என்பவராவார். இவர் சமண சமயத் துறவியாவார். அமுதசாகரரின் ஆசிரியர் பெயர் குணசாகரர் என்பதாகும். குணசாகரரே இந்நூலுக்கு உரையாசிரியருமாவார். அமுதசாகரர் பாண்டிய நாட்டில் பிறந்து வளர்ந்து, கழுகுமலையில் ஆசிரியர் குணசாகரரிடம் பயின்று, பிற்காலத்தே தொண்டை நாட்டிற்கு வந்து தங்கி வாழ்ந்திருக்கின்றார். கி.பி 1070 - 1120 வரையான காலத்தைச் சேர்ந்த முதலாம் குலோத்துங்க சோழனுடைய கல்வெட்டொன்றையும் பிற ஆதாரங்களையும் வைத்து இந் நூல் எழுதிய காலம் பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதி என்று ஆய்வாளர் கூறுகின்றனர். இந் நூல் உறுப்பியல் (செய்யுள் உறுப்புக்களான எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பன பற்றிய இலக்கணங்களைக் கையாள்கிறது), செய்யுளியல், (பாவகைகள், பாவினங்கள், அவற்றுக்குரிய ஓசைகள் முதலானவற்றின் இலக்கணங்களைக் கூறுகின்றது), ஒழிபியல் (முதலிரு இயல்களில் கூறப்படாத யாப்பிலக்கணச் செய்திகளும் நூற்பாக்களும் கூறப்படுகின்றன) ஆகிய மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

494.8(2) தமிழ்ப் பாடநூல்கள்

11401

ஆங்கிலம் மூலம் தமிழ் (Tamil Through English). செல்லத்தம்பி சிறீக்கந்தராசா. லண்டன்: இலண்டன் வித்துவான் வேலன் இலக்கிய வட்ட வெளியீடு, 66, Westrow Gardens, Ilford, Essex, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xxvii, 567 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 20., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-0210-06-0.

புலம்பெயர் நாடுகளில் தமிழ் மொழியைக் கற்க விரும்பும் தமிழரல்லாதவருக்கும், ஆங்கில மொழிக்கல்வி பயிலும் இரண்டாம் தலைமுறையினருக்கும் உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள கருவி நூல். இந்நூல் 12 பிரிவுகளாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது. எழுத்துக்களைக் கற்றல், எழுதப் பழகுதல், சொற்களை ஆக்குதல், சொற்களைத் திரட்டுதல், உச்சரிப்புப் பயிற்சிகள், உரையாடல்கள், கிரகிப்புக்கான பயிற்சிகள், சிறப்பான சொல்லாட்சிகள், மழலைப் பாடல்கள், இலக்கண விடயங்கள், மொழிபெயர்ப்புகள், பொது அறிவுச் செய்திகள், சிறிய கட்டுரைகள், ஒலிபெயர்ப்பு பற்றிய விளக்கம் என்று பல பிரிவுகளாக இவை பிரித்துத் தரப்பட்டுள்ளன. முதலாம் புத்தகம், இரண்டாம் புத்தகம் என இரு பாகங்களாக இந்நூல் பிரிக்கப்பட்டும் உள்ளது. முதல் மூன்று பிரிவுகளையும் முதலாம் புத்தகமாகவும், அடுத்த ஒன்பது பிரிவுகளையும் இரண்டாம் புத்தகமாகவும் ஆசிரியர் பிரித்திருக்கிறார். தமிழைப் படிக்க முயல்பவர்கள் தமிழ் பற்றியும், தமிழர் பற்றியும், தமிழ் இலக்கியம் பற்றியும் தமிழ் வரலாறு பற்றியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்துகொள்ள வேண்டும் என்பதால் அந்தச் செய்திகளைத் தாங்கிய கட்டுரைகளையும் உரையாடல்களையும் ஆங்காங்கே சேர்த்திருக்கிறார்.

11402

கரும்பின் ஓலை. கி.செ.துரை. டென்மார்க்: கி.செ.துரை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(3), 16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

நாவிற்கு நல்ல பேச்சுப் பயிற்சிகளாக, சங்க இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை அழகு தமிழின் பெருமையை உணரவைக்கும் செய்யுள்கள், பந்திகள், கருத்துக்கள், மனோகரா, வீரபாண்டிய கட்டபொம்மன், சாம்ராட் அசோகன் போன்ற திரைப்பட வசனங்கள் எனத் தேடித்தொகுத்து இச்சிறு நூலை ஆசிரியர் ஆக்கியுள்ளார். தமிழ்ப் பள்ளிகளில் தமிழ்ப் பேச்சுப் போட்டிகளில் கலந்து 30.6.2002க்கு முன்னர் இவற்றை மனனஞ்செய்து மேடைகளில் ஒப்புவித்துப் பரிசுபெறத் தூண்டும் வகையில் புலம்பெயர் தமிழ் சிறுவர்களுக்காக இத்தொகுப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

11403

குழந்தைகளுக்கான மழலைச் செல்வம்: பாலர் வகுப்பு முதல் முதலாம் தரம் வரை. இராசையா ஸ்ரீதரன். யாழ்ப்பாணம்: கலாபூஷணம் இ.ஸ்ரீதரன், நாச்சிமார் கோவிலடி, 1வது பதிப்பு, ஜனவரி 2015. (யாழ்ப்பாணம்: கொழும்பு பிரின்டர்ஸ், காங்கேசன்துறை வீதி).

40 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 140., அளவு: 24.5x17.5 சமீ.

சின்னஞ்சிறுவர்கள் விரும்பிக் கற்றுக்கொள்ளக் கூடியவகையில் அரிவரிக்கான பாடப் பயிற்சிகளும் பாட்டுகளும் அடங்கிய இந்நூலை திருத்திய பதிப்பாக ஆசிரியர் வெளியிட்டுள்ளார்.

11404

தமிழ் இலக்கணம்: வினா-விடை: தொகுதி 2. த.துரைசிங்கம். (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: உமா பதிப்பகம், 23 - 3/3 அருத்துசா ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜூலை 2014. (கொழும்பு 6: உமா பதிப்பகம்).

120 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-1162-56-6.

இந்நூல் 9,10,11 ஆந் தரங்களில் கற்போருக்கும் க.பொ.த.ப (சா/த) பரீட்சைக்குத் தோற்றுவோருக்கும் பயன்தரும் வகையில் கடந்தகாலப் பரீட்சை வினாக்களைத் தழுவி 500 வினா விடைகளுடன் ஆக்கப்பெற்றுள்ளது. அணிகளின் சிறப்பினை அறிந்திடும் வகையில் அணிகளைப்பற்றிய அறிமுகமும் மரபுத் தொடர் குறித்த விளக்கமும் பின்னிணைப்புகளாகத் தரப்பட்டுள்ளன. நூலாசிரியர் கவிஞர் த. துரைசிங்கம், ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளராவார். (இந்நூலின் முதலாம் பாகத்திற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5381). (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14762).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11405

தமிழ் ஏழாந்தரம். கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு 10: தமிழ் மொழிக் குழு, பாடவிதான அபிவிருத்தி நிலையம், கல்வி வெளியீட்டுத்திணைக்களம், 1வது பதிப்பு, 1973. (கொழும்பு: இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களம்).

(6), 286 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21 x14 சமீ.

கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலையத் தமிழ் மொழிக் குழுவினால் திட்டமிட்டெழுதப்பட்ட பாடநூல் இது. இக்குழுவின் தலைவராக செ. வேலாயுதபிள்ளை இயங்கியுள்ளார். கா.ஜெயராஜா, ந.சண்முகநாதன், எம்.எஸ். ஜமால், எஸ்.கே.சௌந்தரராஜா, எஸ்.மௌனகுரு ஆகியோர் நூலாக்கக் குழுவில் பணியாற்றியுள்ளனர். பழையதும் புதியதும் (மணிமேகலை, தற்கால கவிதைகள்), இயற்கையும் மனிதனும் (பூமி, மழை, மழையும் மனிதனும், காலநிலையும் மக்கள் வாழ்க்கையும்), உயிரினங்களின் உறைவிடங்கள் (குருவிகள் கூடுகட்டும் விந்தை, பறவையின் சிந்தனை, கூட்டு வாழ்க்கை), உணவும் ஊட்டமும், விளையாட்டும் பொழுதுபோக்கும் (விளையாட்டுக்கள், முத்திரை சேகரித்தல்), வாழ்வும் கலையும் (நாட்டார் பாடல்கள், தேசியப் பாடல்கள்), இங்கும் அங்கும் (குத்திலு காவியம், ஒடிசி, ஷாநாமா), மனிதனும் தொழில்களும் (இறப்பர் தோட்டத்திலே, உழவுத் தொழில், வழிகோலிகள் கட்டடங் கட்டுகிறார்கள்), முன்னேற்ற முன்னோடிகள் (மார்க்கோ போலோ கண்ட ஈழமும் தமிழகமும், ஹெலன் கெல்லர், யூரி ககாரின்) ஆகிய அலகுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11212).

11406

தமிழ்: தரம் 13. இளங்கோ (தொகுப்பாசிரியர்). கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, 1வது பதிப்பு, மே 2010. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

iv, 242 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ.

க.பொ.த. உயர்தர வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்டம் 2009ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமையத் தரம் 13இல் கற்கும் மாணவர்களுக்கான தமிழ்ப் பாடத்திற்கான பாடப்பகுதிகளாகச் சங்ககாலம் முதல் இக்காலம் வரையான 11 செய்யுட்பகுதிகளும் மூன்று கட்டுரைகளும் நான்கு சிறுகதைகளும் இந்நூலில் ஒருங்கே தரப்பட்டுள்ளன. நற்றிணை, திருக்குறள், மணிமேகலை, கம்பராமாயணம்-கைகேயி சூழ்வினைப் படலம், சீறாப்புராணம்- மழையழைப்பித்த படலம், தனிப்பாடல் திரட்டு, பாரதிதாசன் கவிதைகள், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை பாடல்-சூரியகாந்தி, முருகையன் கவிதை- மாமாடு என்ற பல.., சுபத்திரன் கவிதை- ஆண்டவன் நீதானா, குறிஞ்சித் தென்னவன் கவிதை- சம்பள நாள், தமிழ்ச் செல்வாக்கு-தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், பாரதியார்- சுவாமி விபுலாநந்தர், மனவலிமை வேண்டும்- டாக்டர் மு.வரதராசனார், யுகசந்தி-ஜெயகாந்தன், தாய்- வ.அ.இராசரத்தினம், ஒரு கூடைக் கொழுந்து- என்.எஸ்.எம்.இராமையா, ஒளி-மருதூர்க் கொத்தன், மாதிரி வினாக்கள் ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 அத்தியாயத் தலைப்புகளின் கீழ் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்-14810).

11407

தமிழ் மொழிப் பயிற்சியுந் தேர்ச்சியும்: முதற் புத்தகம். தி.சதாசிவ ஐயர். சுன்னாகம்: வட-இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், 14வது பதிப்பு, பெப்ரவரி 1954, 1வது பதிப்பு, டிசெம்பர் 1939. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

viii, 126 பக்கம், விளக்கப்படம், சித்திரங்கள், விலை: ரூபா 1.60., அளவு: 21x14 சமீ.

மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெரிதும் பயன்படுவதாகிய ஒரு சிறந்த கருவிநூலாக வெளிவந்துள்ளது. தமிழ்ப் பேச்சு, தமிழ்மொழி, இலங்கை, எங்கள் நாடு, ஒற்றுமை, செந்தமிழ் நாடு, உழவுத் தொழில், ஒரு கள்வனின் ஏமாற்றம், பொது நன்மை, நன்றிசெய்தல், நல்லவரும் தீயவரும், தோட்டம், மழைபெய்தல், தமிழ்நாட்டு மூவேந்தர், பிறர்க்கு உதவுதல், தொழில்கள், மகாத்மா காந்தி, ஆறு, பாப்பா பாட்டு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 25 பாடங்கள் பயிற்சிகளாக இந்நூலில் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14799).

11408

புதிய பாடத்திட்டம் க.பொ.த.உயர்தரம் தரம் 12: தமிழ். செ.திருநாவுக்கரசு, சு. லோகேஸ்வரன், யூசுப் எம்.அஸ்றப், எஸ்.கௌதமன், குணேஸ்வரி இரகுநாதன் (தொகுப்பாசிரியர் குழு). யாழ்ப்பாணம்: விஜயலட்சுமி திருநாவுக்கரசு, 1வது பதிப்பு, ஜனவரி 2017. (யாழ்ப்பாணம்: வந்தனம் பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்புச் சந்தி).

x, 623 பக்கம், விலை: ரூபா 1200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-52960-6-9.

2017ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்துள்ள புதிய பாடத்திட்டத்திற்கு அமைவான தரம் 12இன் தமிழ் பாடநூல் பகுதி 1 இற்குரிய முழுப் பாடத்திட்டமும் அடங்கிய நூல். சங்ககாலப் பாடல்கள் (குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு), திருக்குறள் (பொருட்பால் 5-11 அதிகாரங்கள்), சிலப்பதிகாரம் (ஊர்காண் காதை 15-61 அடிகள்), திருவாசகம் (கோவில் திருப்பதிகம்), அமலனாதிபிரான் (திருப் பாணாழ்வார்), தேம்பாவணி, கம்பராமாயணம் (குகப்படலம் கங்கைகாண் படலம்), பாரதியார் பாடல்கள் (குயிற்பாட்டு, கண்ணம்மா என் காதலி, பெண்விடுதலை, பாஞ்சாலி சபதம்), ஈழநாட்டுக் குறம் (ப.கு.சரவணபவன்), பாரதியார் (பண்டிதர் மு.நல்லதம்பி), கட்டுரைகள் (தமிழ்த்தொண்டு-சுவாமி விபுலானந்தர், தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை-புதுமைப் பித்தன், மானுடம் தழுவிய கவிஞர்கள்-பேராசிரியர் க.கைலாசபதி), சிறுகதைகள் (தியாகம்-கு. அழகிரிசாமி, தேர்-எஸ்.பொன்னுத்துரை), நாவல் (ஒரு வெண்மணற் கிராமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துக்கொண்டிருக்கிறது- வ.அ.இராசரத்தினம்), நாடகம்- இரு துயரங்கள்-இ. முருகையன்), மாதிரி வினாப்பத்திரம் ஆகிய 15 பிரிவுகளாக வகுக்கப்பட்டு பாடங்கள் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61375).

11409

பொற்காலத் தமிழ் இலக்கணம்: முதல் மூன்று பாரங்கட்கு உரியது. மா. இராசமாணிக்கம். யாழ்ப்பாணம்: ம.வஸ்தியாம்பிள்ளைஅன் சன்ஸ், சுண்டிக்குளி, 11வது மீள்பதிப்பு, மார்ச் 1948, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1932. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சுக்கூடம்).

viii, 140 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 18x12.5 சமீ.

முதல் மூன்று பாரங்களுக்கும் (Forms) உரிய தமிழ் இலக்கண அறிவை தனித்தனியே எழுத்து, சொல், சொற்றொடர், புணர்ச்சி, பரீட்சைக்குரிய வினாக்கள் எனப் பிரித்து ஆசிரியர் இந்நூலைத் தயாரித்துள்ளமை சிறப்பம்சமாகும். உதாரணங்கள் பெரும்பாலும் மாணவர்களுக்கு மிகப் பழக்கமானவையாகவே அமைக்கப் பட்டுள்ளன. இலக்கண விதிகள், பெயர் வகைகள், வேற்றுமை உருபுகள், வினை முற்றுக்கள், எச்சங்கள், புணர்ச்சி, இன்ன பிறவும் ஆங்காங்கு வேண்டிய இடங்களில் தெளிவான தடித்த எழுத்துக்களில் தரப்பட்டுள்ளன. பொருத்தமான இடங்களில் ஆங்கிலப் பெயர்களும் தரப்பட்டுள்ளன. புணரியலில் பொதுவாக இடர்ப்படும் மாணவர்களுக்காக, புணரியலைத் தெளிவுறக் கணித முறையில் (Algebraical Method) விளக்கியுள்ளதோடு, வாக்கிய வகை அவற்றின் அமைப்பு, முடிபு, தன்கூற்று, பிறர்கூற்று இன்ன பிறவும் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் சென்னையிலும் இலங்கையிலும் பாடநூலாகப் பயன்படுத்துவதற்காக பாடநூல் கமிட்டியால் தேர்வுசெய்யப்பட்டது. நூலாசிரியர் சென்னை, முத்தியாலுப்பேட்டை உயர்கலாசாலைத் தமிழாசிரியராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 127).

500 தூய விஞ்ஞானங்கள்

500 தூய விஞ்ஞானம்

11410

விஞ்ஞானத்தின் விந்தைகள். சின்னையா சிவனேசன். சென்னை 600078: டிஸ்கவரி புக் பலஸ், கே.கே.நகர் மேற்கு, பாண்டிச்சேரி விருந்தினர் விடுதிக்கு அருகாமை, 1வது பதிப்பு, ஜூலை 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

196 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21x14 சமீ.

கனடா, டொரன்டோ தமிழ் வண் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான இத்தொடர் பின்னர் கனடாவில் வெளிவரும் தங்கதீபம் பத்திரிகையில் எழுத்துருவில் பிரசுரமாகியது. அத்தொடரின் நூல் வடிவமே இதுவாகும். துறையூரான் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனைப்பெயரில் அறிமுகமாகியிருந்த இந்நூலாசிரியர் யாழ்ப்பாணம், கொழும்புத்துறை மேற்கைச் சேர்ந்தவர். கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார். இந்நூலில் போர்ணியோ காடுகள், செவ்வாய்க்குச் செல்வோமா? படம் 51இன் இரகசியம், மனித ஒட்டுண்ணிகள், ஆப்பிரிக்கப் பென்குவின்கள், பூமியின் புல்வெளிகள், பயிர் வட்டங்கள், கரும்பொன், மலேரியா, F.A.S. Foetal Alchohol Syndromme, எவரெஸ்ட் சிகரப் பயணம், பூமியின் எதிர்காலம், இயற்கையா செயற்கையா சிறந்தது? பூமிக்கப்பால் உயிரினங்கள் உண்டா? ஐரோப்பாவின் துருவப் பிரதேசம், வீட்டிலுள்ள நச்சுப் பொருட்களை அகற்றும் முறை, விமானக் கடத்தல், Katrina சூறாவளியின் கதை, கூகிளின் கதை, இருளில் விமானப் பயணம், வண்ண வண்ண வண்டுகள் ஆகிய 21 விஞ்ஞான அறிவூட்டும் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10198).

500.01 பொது விஞ்ஞானப் பாடநூல்கள்

11411

புதிய விஞ்ஞானம்: ஆண்டு 9 பகுதி 2. கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 1வது பதிப்பு, 1987. (தெகிவளை: திஸர அச்சகம்).

ix, 152 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x18.5 சமீ.

கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்ப விஞ்ஞானத்தின் தத்துவங்களை மாணவர்கள் தெளிவாக விளங்கிக்கொள்ளும் வகையில் இரண்டு பகுதிகளில் எழுதப்பட்டுள்ள நூலின் இரண்டாவது பகுதி இதுவாகும். போதிய விளக்கப்படங்களுடன் மாணவர்களின் ஆர்வத்தை விஞ்ஞானத்துறையில் ஈர்த்தெடுக்கும் வகையில் இந்நூல் விசை-வேலை-சக்தி, அன்றாடம் தேவைப் படுகின்ற சில இரசாயனச் சேர்வைகள், மண், மிதத்தல், அணுக்கள் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளன, மின்னோட்டங்கள் கடத்தப்படல், தாவரத்தின் தண்டும் வேரும், தாவரங்களினுள் பொருட்கள் கடத்தப்படல், சமிபாடு, அமுக்கம் ஆகிய அலகுகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11194).

11412

புதிய விஞ்ஞானம்: ஆண்டு 11. கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத்திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 1வது பதிப்பு, 1987. (அம்பலங்கொடை: மஹிந்த அச்சகம்).

xvii, 206 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17.5 சமீ.

1986ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் ஆண்டு 11 வகுப்பில் நடைமுறைப் படுத்தப்படும் மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்ப இந்நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிக்கப்பட்டுள்ளது. போதிய விளக்கப்படங்களுடன் மாணவர்களின் ஆர்வத்தை விஞ்ஞானத்துறையில் ஈர்த்தெடுக்கும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11200).

510 கணிதம்

11413

அக்ஷர கணிதம்: ஆறாம் ஏழாம் எட்டாம் வகுப்புகளுக்கு ஏற்றது. ச.சிதம்பரப்பிள்ளை. சுன்னாகம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 4வது பதிப்பு, 1955, 1வது பதிப்பு, 1938, 2வது பதிப்பு, 1952, 3வது திருத்திய பதிப்பு, 1953. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

viii, 236 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18x12.5 சமீ.

இது யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியரும் கேத்திரகணிதம், பரீட்சித்தலும் புள்ளியிடுதலும், New Type Revision Exercises in Physics ஆகிய நூல்களின் ஆசிரியருமான ச.சிதம்பரப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டது. ஒரு சுருக்க வழி, சுருக்குதல், அக்ஷரப் பிரயோகம், பெருக்கல், தனிச் சமீகரணங்கள், அடைப்புக்குறிகள், சயராசிகள், கழித்தல், பிரித்தல், கூட்டல்-கழித்தல்-பெருக்கல்-பிரித்தல், வாய்ப்பாடுகளை ஆக்குதல், வாய்ப்பாடுகளைப் பிரயோகித்தல், வாய்ப்பாட்டின் எழுவாய் மாற்றம், கூட்டுச் சமீகரணங்கள், பின்னங்கள், சினைகள் (பொதுச்சினை, வர்க்க வித்தியாசம், மூவுறுப்பிகள்), வர்க்க சமீகரணம், வரை படங்கள் ஆகிய பாடங்களை இந்நூல் உள்ளடக்குகின்றது. நூலின் பாடங்களிடையே மீட்டற் பயிற்சிகளும், நூலின் இறுதியில் விடைகளும் தரப்பட்டுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14076).

11414

க.பொ.த.உயர்தரம்: இணைந்த கணிதம் (தூய கணிதப் பகுதி) அட்சர கணிதம்-பகுதி 2. கார்த்திகேசு கணேசலிங்கம். கொழும்பு 6: சாயி கல்வி வெளியீட்டகம், 36/4B, பாமன்கட வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).

71 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 21x14 சமீ.

க.பொ.த. உயர்தர வகுப்புக்கான கணிதப் பாடத்திட்டத்தில் அட்சர கணிதப் பகுதியில் புதிதாகச் சேர்கப்பட்ட பகுதிகளான தாயங்கள், துணிக்கோவை ஆகிய வற்றை உள்ளடக்கி இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14835).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11415

கணிதம் ஆண்டு 9-பகுதி 1. கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், அஞ்சல்பெட்டி இலக்கம் 520, மாளிகாவத்தைச் செயலகம், 1வது பதிப்பு, 1986. (கண்டி: கண்டி ஒப்செட் பிரின்டர்ஸ், இல. 947, பேராதனை வீதி).

vii, 158 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

1986ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் ஆண்டு 9 வகுப்பில் நடைமுறைப்படுத்தப்படும் மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்ப இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. மட்டந்தட்டல், வெளிப்படையுண்மைகள், சுட்டிகள், வேலை-காலம்-பணம், புள்ளி ஒன்றில் உள்ள கோணங்கள், வட்டங்கள், அட்சரகணிதப் பின்னங்களைக் கூட்டலும் கழித்தலும், சமாந்தரம், எண்களை நியமமுறையில் எழுதுதல், மடக்கை 1, தொடைகள் 1, முக்கோணிகளின் ஒருங்கிசையல், வரைபு 1, முக்கோணி ஒன்றின் கோணங்கள், மடக்கைகள் 2, கணக்குப் பதிதல், காரணிகள், முக்கோணி-இணைகரம்-சரிவகம்-ஆகியவற்றின் பரப்பளவு, கூட்டத் தரவு, நிகழ்தகவு 1 ஆகிய பிரிவுகளில் கணித பாடம் விளக்கப்பட்டுள்ளது. இறுதியில் பயிற்சிகளுக்கான விடைகள் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11193).

11416

கணிதம் 9-1. கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 1வது பதிப்பு, 1980. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).

195 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

கல்வி அமைச்சின் 1979ஆம் ஆண்டுப் பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்ட நூல். பதிப்பாசிரியர்களாக நா.சுந்தரலிங்கம், திருமதி சி.பரமநாதன் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். பதின்மர்கொண்ட ஆசிரியர் குழுவால் உருவாக்கப்பட்ட சிங்கள மூல நூலானது, த.கனகரத்தினம், இ.முருகையன், வீ.கே.நல்லையா, நா.சுந்தரலிங்கம், திருமதி சி.பரமநாதன் ஆகியோர் கொண்ட ஐவர் குழுவினால் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்நூல் காரணிகளும் மடங்குகளும், பின்னங்கள், தசமங்கள், வர்க்கமூலங்கள், விகிதமும் விகிதசமமும், குறியீடுகள், குறிகள், கோவைகள், எளிய சமன்பாடுகள், அட்சரகணிதக் கோவைகளின் பெருக்கலும் வகுத்தலும், ஒருங்கமை சமன்பாடுகள், வரைபுகள், தளநேர்கோட்டு உருவங்கள், முக்கோணிகளின் ஒருங்கிசைவு, முக்கோணிகளின் சமமின்மை, நாற்பக்கல், ஒரு நேர்கோட்டைப் பல சமபகுதிகளாகப் பிரித்தல் ஆகிய அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11204).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11417

கணிதம் 10-2. நா.சுந்தரலிங்கம், சி.பரமநாதன் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், புதிய செயலகம், மாளிகாவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 1980. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

266 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

கல்வி அமைச்சின் 1979ஆம் ஆண்டுப் பாடத்திட்டத்தின்படி இந்நூல் தயாரிக்கப்பட்டது. திண்ம உருவங்களின் மேற்பரப்பின் பரப்பளவுகளும் கனவளவுகளும், புள்ளி விபரங்கள், தொடைகள், நிகழ்தகவு, முக்கோணிகளின் இயல்பொப்பு, திரிகோணகணித விகிதங்கள் ஆகிய பிரதான பாடங்களை இந் நூல் உள்ளடக்குகின்றது. மடக்கை அட்டவணை, சைன் அட்டவணை, கோசைன் அட்டவணை, தான்சன் அட்டவணை, கலைச்சொற்கள், விடைகள், சுட்டி என்பன பின்னிணைப்பில் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் குழுவில் டி.எஸ்.ஜே. கன்னங்கர, ஏ.ஜே.குணவர்த்தன, எஸ்.டி.டபிள்யூ குலத்திலக்க, எம்.ஏ.கூரே, என். ரி.பெர்னாந்து ஆகியோரும் தமிழாக்கக் குழுவில் நா.சுந்தரலிங்கம், ஐ.தம்பிமுத்து, சி.பரமநாதன், ந.வாகீசமூர்த்தி ஆகியோரும் பணியாற்றியிருந்தனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11202).

519 பிரயோக கணிதம்

11418

க.பொ.த.உயர்தரம்: பிரயோக கணிதம்: இயக்கவியல் பகுதி 1. கார்த்திகேசு கணேசலிங்கம். கொழும்பு 6: சாயி கல்வி வெளியீட்டகம், 36/4B, பாமன்கட வீதி, 4வது பதிப்பு, தை 2003, 1வது பதிப்பு, பங்குனி 1998, 2வது பதிப்பு, வைகாசி 1999, 3வது பதிப்பு, தை 2001. (கொழும்பு 6: எஸ்.டி.எஸ். கம்பியூட்டர் சேர்விசஸ்).

iv, 333 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 350., அளவு: 21x13.5 சமீ.

உதாரணச் செய்கை விளக்கங்களுடன் வெளிவந்துள்ள நூல். நேர்கோடொன்றில் இயக்கம், விளையுள் வேகமும் தொடர்பு வேகமும், நியூற்றனின் இயக்க விதிகள், வேலை- வலு-சக்தி, கணத்தாக்கு விசைகள்- மீள்தன்மைப் பொருள்களின் மொத்தல், எறிபொருட்கள், பலவினப் பயிற்சிகள், விடைகள் என எட்டு இயல் களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14836).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

530 பௌதிகம்

11419

உயர்தர மாணவர் பௌதிகவியல் வழிகாட்டி. அ.கருணாகரர். வெளியீட்டு விபரம், பதிப்பு விபரம், அச்சக விபரம் தரப்படவில்லை.

ii, 226 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 250., அளவு: 25x18 சமீ.

2003-2004-2005ஆம் ஆண்டுகளுக்குரிய பல்தேர்வு வினாக்கள், விளக்கங்கள், விடைகள் என்பன இப்பயிற்சி நூலின் முதலாம் பகுதியிலும், அமைப்புக்கட்டுரை வினாக்கள் விடைகளுடன் இரண்டாம் பகுதியின் முதற் பிரிவிலும், கட்டுரை வினாக்கள் விடைகளுடன் பகுதி இரண்டின் இரண்டாம் பிரிவிலும் தொகுக்கப் பட்டுள்ளன. கல்விப் பொதுத் தராதரப் பத்திர மாணவர்களுக்கேற்றது. (இந் நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 9465).

11420

க.பொ.த.(உ/த) மாணவர்களுக்கான சடப்பொருளியல் சுருக்கக் குறிப்பு: செய்முறையுடன் கடந்தகால வினாக்களும். பொன்னுத்துரை தவசிதன். திருக் கோணமலை: மாணவர் ஒளி கல்வி அபிவிருத்தி மையம், இல. 7, கடல்முக வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (திருக்கேணமலை: லெட்சுமி பதிப்பகம்).

ii, 115 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 20x14 சமீ.

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களின் விஞ்ஞான பாடங்களுள் ஒன்றான பௌதிகவியலில் சடப்பொருளியல் என்ற பிரிவைத் தனியாக இந்நூல் எடுத்து விளக்குகின்றது. செய்முறைப் பயிற்சிகளுடன் கடந்தகால பரீட்சை வினாக்களும் எடுத்தாளப்பட்டுள்ளன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 12975).

540 இரசாயனம்

11421

அசேதன இரசாயன வினாத் தொகுப்பு-1 (பண்பறி அசேதன இரசாயனவியல்). றிஸ்வான் எம். சலாஹுதீன். உடத்தலவின்ன: House of Chemistry, 11/A கலதெனிய, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, ஜூலை 2013. (மாத்தளை: ஸல்காலிங்க் ஒப்செட் பிரின்டர்ஸ், இல. 10, பிரதான வீதி).

x, 216 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 550., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-44571-0-2.

பதார்த்தங்களை இனங்காணல்/ வேறுபிரித்தறிதல் (பல்தேர்வு வினாக்கள்), சுய பயிற்சிகள் (பல்தேர்வு வினாக்கள்), பதார்த்தங்களை இனங்காணல்/ வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தறிதல் (கட்டுரை வினாக்கள்), பின்னிணைப்பு-1 (அசேதன சேர்வைகளின் நிறங்கள்), பின்னிணைப்பு-2 (கற்றயன், அனயன்களை இனங்காணும்/ வேறுபிரித்தறியும் முறைகள்) ஆகிய ஐந்து இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 13126).

11422

அடிப்படை பயிற்சிகள்: பொது இரசாயனம். அருண பண்டார ரணதுங்க (ஆங்கில மூலம்), எம்.எச்.எப்.பலீலா இக்பால் (தமிழாக்கம்). மெனிக்ஹின்ன: AB Publishers, இல. 144, நாபான, 1வது பதிப்பு, ஜனவரி 2013. (மாத்தளை: ஸல்காலிங்க் ஒப்செட் பிரின்டர்ஸ், இல. 10, பிரதான வீதி).

172 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-0753-17-8.

இந்நூல் புதிய கலைத்திட்டத்தின் பொது இரசாயனத்தின் அலகு 1, அலகு 2 ஆகியவற்றில் உள்ள விடயப் பரப்பை உள்ளடக்கிய அடிப்படைப் பயிற்சிகளாகும். அடிப்படை எண்ணக்கருக்கள், கதோட்டு கதிர்களும் அவற்றின் இயல்புகளும், அணுக்கட்டமைப்பும் உப அணுத்துணிக்கைகளும், அணுக்களால் நிறமாலைகள், அணு நிறமாலை அமைப்புக் கட்டுரை (இரண்டு இயல்கள்), சக்தி சொட்டெண்கள், சக்தி சொட்டெண்களும் அயனாக்கற் சக்தியும், அணுக்கட்டமைப்பு, அணுக்களினதும் அயன்களினதும் இலத்திரன் நிலையமைப்புகள், அயனாக்கற் சக்தியும் ஏனைய ஆவர்த்தன இயல்புகளும், மூலகங்களின் ஆவர்த்தன பாகுபாடு, இரசாயன பிணைப்புகளும் மூலக்கூற்று வடிவங்களும், மூலக்கூற்றிடை விசைகளும், சாலக ஒழுங்கமைப்பும் கலப்பாக்கமும்- விடைகள் ஆகிய 14 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14830).

11423

அணுக்கட்டமைப்பும் ஆவர்த்தன இயல்புகளும். றிஸ்வான் எம். சலாஹுதீன். உடத்தலவின்ன: House of Chemistry, 11/A கலதெனிய, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, பெப்ரவரி 2014. (மாத்தளை: ஸல்காலிங்க் ஒப்செட் பிரின்டர்ஸ், இல. 10, பிரதான வீதி).

viii, 142 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: ரூபா 385., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-44571-1-9.

அணுக்கட்டமைப்புகள், உப அணுத்துணிக்கை பற்றிய ஆய்வுப் பரிசோதனைகள், அணு மாதிரி உரு, கதிர்ப்பு, சக்தி மட்டத்தில் இலத்திரன்களின் அமைவு, அயன்களின் உருவாக்கம், ஆவர்த்தன இயல்பு, பயிற்சி வினாக்கள், விடைவிளக்கம் ஆகிய ஒன்பது இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14828).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11424

இரசாயன அவத்தைச் சமநிலை: ஏ.எல்.புதிய பாடத்திட்டம் 2013. எஸ்.சுரேஷ்குமார். யாழ்ப்பாணம்: எஸ். சுரேஷ்குமார், ஜீ.பீ.எஸ். வீதி, கல்வியன்காடு, 1வது பதிப்பு, ஐப்பசி 2013. (யாழ்ப்பாணம்: சத்தியா பிரிண்டர்ஸ், 153/11, நாவலர் வீதி).

III, 125 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 20.5x14.5 சமீ.

இரசாயன சமநிலை, திண்ம வாயு சமநிலை, இலெச்சற்றலியேயின் தத்துவம், சமநிலை விதி, கூட்டற்பிரிகை, அவத்தைச் சமநிலை, ஆவி அமுக்கமும் கொதிநிலையும், திரவமொன்றின் அவதிப்புள்ளி, நிரம்பாலி அமுக்கத்தின் வெப்பநிலையின் பாதிப்பு, கொதிநிலை, இலட்சியக் கரைசல், இலட்சியக் கரைசலை பகுதிபடக் காய்ச்சி வடித்தல், நேர்விலகல் கரைசல், நேர்விலகல் கரைசலை பகுதிபடக் காய்ச்சி வடித்தல், நேர் விலகல் கரைசலுக்கான உதாரணங்கள், எதிர்விலகல் கரைசல்கள், எதிர்விலகல் கரைசலுக்கான ஆவி அமுக்க வளையி, எதிர்விலகல் கரைசலை பகுதிபடக் காய்ச்சி வடித்தல், கொதிநீராவியைக் காய்ச்சி வடித்தலின் அனுகூலங்கள், கொதிநீராவியைக் காய்ச்சி வடிக்கும் அனுகூலங்கள், பயிற்சிகள், பங்கீட்டுக் குணகம் ஆகிய 22 பாடத் தலைப்புகளின்கீழ் இந்நூல் விளக்கி எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14826).

11425

இரசாயனக் கணிப்புகள். மயிலு செல்வரத்தினம் (ஆங்கில மூலம்), தே. தில்லையம்பலம் (தமிழாக்கம்). பேராதனை: பேராசிரியர் மயிலு செல்வரத்தினம், இரசாயனவியல் இணைப்புப் பேராசிரியர், பேராதனை வளாகம், இலங்கைப் பல்கலைக் கழகம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

x, 240 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

கணக்குகளை விடுவித்தல்-முறைகளும் முக்கியத்துவமும், கணித அறிமுகம், அணுக்களும் மூலக்கூறுகளும், இரசாயனச் சமன்பாடுகள், வாயுக்கள், கரைசல்கள், சக்தி மாற்றங்கள், பௌதிகச் சமநிலையும் இரசாயனச் சமநிலையும், அயன் சமநிலை, மின் வாயுஅழுத்தமும் மின் பகுப்பும், அயன்களின் கடத்துவலுவும் குடியேற்றமும் ஆகிய இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10105).

11426

இரசாயனம். ஸ்ரீ அ.க.சர்மா. யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1958. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

Lx, (12), 432 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 8.00, அளவு: 21.5x14 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசினர் சிரேஷ்ட தகுதிப் பத்திரத் தேர்வுப் பாடத்திட்டத்திற்கிணங்க எழுதப்பட்டது. இரசாயனம், பௌதிக இரசாயன மாற்றங்கள், சடப்பொருளின் வகை, சடப்பொருளின் அமைப்பு, மூலங்களுக்குப் பெயரிடுதல், வாயுக்களின் பௌதிகப் பண்பு, இரசாயனச் சேர்க்கை விதிகள் பொருளியைபு விதிகள், சமவலுநிறை, மூலகங்களின் வலுவளவு, சூத்திரங்களும் சமன்பாடுகளும், அவகாதரோவின் கருதுகோள், இரசாயன மாற்றங்கள், ஐதரசன், ஒட்சிசன், தாக்கவூக்கம், அமிலங்கள், உப்புமூலங்கள், மின்பகுப்பு, அமிலவலுவளவும் காரவலுவளவும், ஓசோனும் ஐதரசன் பரவொட்சைட்டும், ஒட்சியேற்றமும் தாழ்த்தலும், கந்தகமும் ஐதரசன் சல்பைட்டும், கந்தகவிருவொட்சைட்டு, கந்தகமூலவொட்சைட்டு, சல்பூரிக் அமிலம், நைதரசனும் அமோனியாவும், நைதரசன் ஒட்சைட்டுகள், நைத்திரிக் அமிலமும் நைத்திரேட்டுகளும், நைதரசனும் உலகில் உணவாக அதன் அவசியமும், உப்பாக்கிகள், புரோமீனும் அயடீனும், காபனும் காபனீரொட்சைட்டும், காபனோரொட்சைட்டு, ஐதரோகாபன் வாயுக்கள், நிலக்கரிவாயு, தகனமும் சுவாலையும், சிலிக்கன் சிலிக்கா சிலிக்கேற்றுகள், பொசுபரசும் அதன் சேர்வைகளும், நீர், உலோகங்கள், சோடியமும் பொற்றாசியமும், கல்சியம், மகனீசியமும் நாகமும், செம்பும் ஈயமும், இரும்பும் உருக்கும் ஆகிய பாடங்களை உள்ளடக்கியதாக 39 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தமிழிலே இரசாயனம், இரசாயனக் கலையை வளர்த்த சில அறிஞர்களின் வாழ்க்கைக் குறிப்புகள், மாணவர்கள் எளிதில் கற்றுக்கொள்ளச் சில ஞாபகக் குறிப்புகள் ஆகியவை இந்நூலின் பின்னிணைப்பாக உள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13358).

11427

எஸ்-பி தொகுப்பு இரசாயனம் (S-P Block Chemistry). சுதந்த லியனகே (சிங்கள மூலம்), ஏ.எச்.எம்.மர்ஜான் (தமிழாக்கம்). பேருவளை: ஆசிரியர்கள், 21, தக்கியா வீதி, மருதானை, 1வது பதிப்பு, 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

viii, 200 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 360., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-53486-2-1.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல்துறை பேராசிரியரான பேராசிரியர் சுதந்த லியனகே சிங்கள மொழியில் எழுதிய கோவை இரசாயனவியல் என்ற நூலின் தமிழாக்கத்தை வைத்திய கலாநிதி ஏ.எச்.எம்.மர்ஜான் மேற்கொண்டுள்ளார். நூலின் உள்ளடக்கத்தில் கோவை இரசாயனவியல் என்ற பதம் பயன்படுத்தப்பட்டிருப்பினும் நூலின் தலைப்பில் தொகுப்பு இரசாயனம் என்ற பதமே பயன்படுத்தப்பட்டுள்ளது. அசேதன இரசாயனம் தொடர்பாக அத்தியாவசிய அடிப்படைகளுடன் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. S-கோவை, P-கோவை (S-Block, P-Block) ஒழுங்குமுறைகள் பற்றியும் அக்கோவைகளின் மூலகங்களின் அடிப்படை இரசாயனமும் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. அறிமுகம், S-கோவை மூலகங்கள், P-கோவை இரசாயனம், 14 (IVA) கூட்ட இரசாயனம், 15 (VA) கூட்ட இரசாயனம், 16 (VIA) கூட்ட இரசாயனம், 17 (VIIA)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்ட இரசாயனம், 18(0) கூட்ட இரசாயனம் (சடத்துவ வாயுக்களின் இரசாயனம்), H-இன் இரசாயனம், S-P கோவை மூலகங்களினதும் சேர்வைகளினதும் இயல்புகள் ஆகிய 10 அத்தியாயங்களில் இந்நூல் விரிவாகவும் எளிமையான மொழிநடையிலும் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14171).

11428

சேதன இரசாயனவியல். அருண பண்டார ரணதுங்க, றிஸ்வான் எம்.சலாஹுதீன். மெனிக்ஹின்ன: AB Publishers, இல. 144, நாபான, 1வது பதிப்பு, பெப்ரவரி 2012. (மாத்தளை: ஸல்காலிங்க் ஒப்செட் பிரின்டர்ஸ், இல. 10, பிரதான வீதி).

(9), 335 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 750., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-0753-01-7.

சேதன இரசாயனவியலின் அறிமுகம் முதலாவது இயலாகவும், சேதன இரசாயனவியலின் அடிப்படை எண்ணக்கருக்கள் இரண்டாவது இயலாகவும் அமைகின்றன. இவ்விரண்டாம் இயலில் சேதன இரசாயனவியலின் அளவறி பகுப்பு, சேதன இரசாயனவியலின் பண்பறி பகுப்பு ஆகிய இரு பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. மூன்றாவதாக சேதன சேர்வைகள் என்ற பிரதான பிரிவு இடம்பெற்றுள்ளது. இப்பிரிவில் அற்கேன்கள், அற்கீன்கள், அற்கைன்கள், பென்சீன், அற்கைல் ஏலைட்டுகள், அற்ககோல்கள், பீனோல், காபனைல் சேர்வைகள் (அல்டிகைட்டுகளும் கீற்றோன்களும்), காபொட்சிலிக் அமிலங்கள், காபொட்சிலிக் அமில குளோரைட்டுகள், எசுத்தர்கள், அமைட்டுகள், அமீன்கள், அனிலீன், பென்சீன் ஈரசோனியம் குளோரைட்டு ஆகிய 15 சேதனச் சேர்வைகள் பற்றி விளக்கப்படுகின்றது. இறுதிப்பிரிவாக சமபகுதித்தன்மை பற்றி விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 13129).

541.3 பௌதிக இரசாயனம்

11429

பௌதிக இரசாயனம்: கரைசல்கள். அருண பண்டார ரணதுங்க, றிஸ்வான் எம். சலாஹுதீன். மெனிக்ஹின்ன: AB Publishers, இல. 144, நாபான, 1வது பதிப்பு, ஜனவரி 2013. (மாத்தளை: ஸல்காலிங்க் ஒப்செட் பிரின்டர்ஸ், இல. 10, பிரதான வீதி).

(7), 258 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 600., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-0753-12-3.

இந்நூல் க.பொ.த. உயர்தரத்திற்கான 2009ஆம் ஆண்டு திருத்தப்பட்ட 2011ஆம் ஆண்டின் புதிய பாடவிதானத்தில் உள்ள "சமநிலைகள்" சம்பந்தமான பாட நூலாகும். சமநிலையின் அறிமுகம், இரசாயன சமநிலை, அயன் சமநிலை, அமிலங்களும் காரங்களும், கற்றயன் பகுப்பு, அவத்தை சமநிலை ஆகிய ஆறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடப் பரப்புகளை இந்நூல் விளக்குகின்றது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 13127).

11430

பௌதிக இரசாயனம்: உயர்தரத்துக்கும் புலமைப் பரிசில் தரத்துக்கும் உரியது. L.H.அங்கஸ். கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், சிறீமதிபாயா, 58, சேர் ஏணெஸ்ட் டி சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, 1968. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

(16), 480 பக்கம், விளக்கப்படங்கள், அளவு: 21x14 சமீ.

பிரித்தானியாவின், பிளிமத்திலுள்ள, ஆண்களுக்கான டெவன்போற் உயர்நிலைப் பாடசாலையின் இரசாயனப் பிரிவின் முதல்வரான L.H.அங்கஸ் Physical Chemistry என்ற தலைப்பில் எழுதி Uiversity Tutorial Press நிறுவனத்தால் வெளியிடப்பட்ட நூலின் தமிழாக்கம். இதில் இயக்க மூலக்கூற்றுக்கொள்கை, கரைசல்கள், பரம்பல் தோற்றப்பாடு, வாயுக்களின் கரைதிறன், பழைய அணுக்கொள்கை, வெப்பக்கூட்டப் பிரிவு, இலச்சற்றலியேயின் கோட்பாடு, திணிவுத்தாக்க விதி, வெப்ப இரசாயனம், மின்னிரசாயனம்-1, அணுக்கள் மூலக்கூறுகளின் கட்டமைப்பு, மின்னிரசாயனம் -2, மின்பகு பொருட்களில் சமநிலைகள், கலங்களும் மின்பகுப்பும், கூழ்க் கரைசல்கள், ஊக்கல், அவத்தைச் சமநிலைகள் ஆகிய 14 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13359).

11431

வாயுக்களின் விந்தை. சு.சுரேஸ்குமார். வெளியீட்டு விபரம் தரப்படவில்லை, 1வது பதிப்பு, பங்குனி 2012. (வவுனியா: வாணி கணினிப் பதிப்பகம், இல. 85, கந்தசாமி கோவில் வீதி).

98 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x15 சமீ.

பௌதீக இரசாயனவியல் பாடத்திற்கான க.பொ.த. உயர்வகுப்பு 2011 ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான வழிகாட்டி. போயிலின் விதிகள், சாள்சின் விதி -1, சாள்சின் விதிக்கான மூலக்கூற்றியல் பண்பறிவிளக்கம், சாள்சின் விதி 2, இணைந்த வாயு விதி, அவகாதரோவின் விதி, மூலர் கனவளவு, PV = nRT நிறுவல், தாழ்ரனின் பகுதி அமுக்க விதி, இலட்சிய வாயுக்களும் மெய் வாயுக்களும், வாயுக்களின் சக்திப் பரம்பல் வளையி, வாயுக்களின் இயக்கவியல் சமன்பாடு, வாயுக்களின் இயக்கவியல் கொள்கை, ஒக்சிசன் வாயுவின் மூலர் கனவளவைத் துணிதல், காபனீரொட்சைட்டு வின் மூலர் கனவளவைத் துணிதல், தப்பல் வேகம், பரவல், Mgஇன் தொடர்பணுத் திணிவைத் துணிதல், 114 வினாக்களும் விரிவான விடைகளும், வாயுக்கள் தொடர்பான வரைபுகள் ஆகிய இருபது தலைப்புகளின் கீழ் 114 வினாக்களுக்கு இந்நூல்வழி விடை காணப்படுகின்றது. (இந்நூல் இலங்கைத் தேசிய நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 176911).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11432

வெப்பவியக்கவியல். அருண பண்டார ரணதுங்க (மூலம்), எம்.எச்.எப்.பலீலா இக்பால் (தமிழாக்கம்). மெனிக்ஹின்ன: AB Publishers, இல. 144, நாபான, 1வது பதிப்பு, ஜூலை 2014. (மாத்தளை: ஸல்காலிங்க் ஒப்செட் பிரின்டர்ஸ், இல. 10, பிரதான வீதி).

96 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 350., அளவு: 23x15 சமீ., ISBN: 978-955-0753-32-1.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான புதிய பாடவிதானத் திட்டத்திற்கமைவாக எழுதப்பட்ட அலகு 5 இற்கான அனுமதியளிக்கப்பட்டதொரு பாடநூல். மூல நூலாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இரசாயனவயில்துறை விரிவுரையாளராவார். பௌதிக இரசாயனத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற இவர் ஏற்கெனவே பல நூல்களை இத்துறையில் எழுதியிருக்கிறார். இந்நூலில் வெப்பவியக்கவியலுக்குரிய அறிமுகம், வெப்பமும் சக்தியும், வெப்ப உள்ளுறை, வெப்ப உள்ளுறையின் கூட்டுத்தொகைக்குரிய எசுவின் விதி, வெப்ப உள்ளுறை சக்கரங்கள், வெப்ப உள்ளுறை வரிப்படங்கள், பிணைப்பு வெப்ப உள்ளுறை , போர்ண் ஏபர் சக்கரங்கள், எந்திரப்பி, வெப்பவியக்கவியல்- பல்தேர்வு வினாக்கள், வெப்பவியக்கவியல் - கட்டுரை வினாக்கள் ஆகிய வியடங்கள் 11 இயல்களில் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 67565).

576.5 பிறப்புரிமையியல்

11433

பிறப்புரிமையியல். சுபாலினி இளங்கோ, தனுஜா செல்வராஜா, வைத்திலிங்கம் அருள்நந்தி. மட்டக்களப்பு: நூலாசிரியர்கள், கிழக்குப் பல்கலைக்கழகம், செங்கலடி, 1வது பதிப்பு, ஐப்பசி 2013. (மட்டக்களப்பு: துர்க்கா அச்சகம், கொக்குவில், கி. மா).

v, 284 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: ரூபா 750., அளவு: 24x17 சமீ., ISBN: 978-955-44964-0-8.

பிறப்புரிமையியலானது உயிரியலின் முக்கியமான ஒரு கூறாகும். இது வரலாற்றுரீதியான கொள்கைகள் முதல் நவீன மூலக்கூற்றுப் பிரயோகங்கள் வரை பரந்த பகுதிகளைக் கொண்டிருக்கும். இப்பகுதிகளை உள்ளடக்கியதாக வெளிவந்திருக்கும் இந்நூல் பிறப்புரிமையியலின் அடிப்படை விடயமான கலக்கட்டமைப்பு தொடக்கம் தற்காலத்தில் மிகவும் முக்கியமான துறையாகக் கருதப்படும் உயிர்த் தொழில்நுட்பம், மூலக்கூற்றுப் பிறப்புரிமையியல் வரை பிறப்புரிமையியல் சார்ந்த அனைத்து விடயங்களையும் சுருக்கமாகவும் மிகத் தெளிவாகவும் விளக்கி நிற்கின்றது. இவை அனைத்தும் உயிர்க்கலம், கலவட்டம், பிறப்புரிமையியல் அறிமுகமும் வரலாறும், மென்டிலியன் பிறப்புரிமையியல், நிகழ்தகவும் கைவர்க்கச் சோதனையும், மென்டிலியன் விதியிலிருந்தான விலகல்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரையலகு இணைப்பும் நிறமூர்த்தப் படங்களும், இலிங்க நிர்ணயமும் இலிங்க இணைப்பும், குடித்தொகைப் பிறப்புரிமையியல், அளந்தறி பிறப்புரிமையியல், விகாரம், கூர்ப்பு, மூலக்கூற்றுப் பிறப்புரிமையியலின் அடிப் படைகள், உயிர்த் தொழில்நுட்பவியல் பற்றிய ஒரு அறிமுகம், மரபணுப் பொறியியல், மரபணு மாற்றீட்டு உயிரினம், மரபணுச் சிகிச்சை, பிறப்புரிமைசார் ஆலோசனை வழங்கல் ஆகிய 18 அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பிறப்புரிமையியல் வரலாறு, பிறப்புரிமையியலில் முக்கியமான விஞ்ஞானிகள், பிறப்புரிமையியல் -சொற்களஞ்சியம் ஆகிய பின்னிணைப்புகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14089).

590 விலங்கியல்

11434

தவளை: உடலமைப்பியல், இழையவியல், முளையவியல் ஆகியன பற்றிய ஓர் ஆரம்ப நூல். ஏ. மில்னிஸ் மாஷல் (மூலம்), எச்.ஜீ.நியூத் (பதிப்பாசிரியர்). கொழும்பு: அரசகரும மொழித் திணைக்களம், 1வது பதிப்பு, 1966. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

xii, 272 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

தவளையை மாதிரியாகக் கொண்டு, ஆரம்ப உடலமைப்பியல், இழையவியல், முளையவியல் ஆகியனவற்றிற்குச் செயல்முறை வழிகாட்டியாக மாணவர்கட்குப் பயன்படுவதே இந்நூலின் நோக்கமாகக் குறிப்பிடப்படுகின்றது. ஆங்கில மூல நூல் 1882இல் முதற்பதிப்பைக் கண்டுள்ளது. அந்நூலின் 12ஆம் பதிப்பின் 1956ஆம் ஆண்டு மீள்பதிப்பின் தமிழாக்கமே இந்நூலாகும். தவளையின் பொதுவான உடலமைப்பியல், தவளையின் வன்கூடு, தவளையின் தசைத் தொகுதி, தவளையின் நரம்புத் தொகுதி, கண்ணும் காதும், இனம் பெருக்கும் அங்கங்களும் கழியறையும், தவளையின் விருத்தி, ஆரம்ப இழையவியல், கலப்பிரிவு - மூலவுயிர்க் கலங்களின் விருத்தி ஆகிய பத்து அதிகாரங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பாடத்தினை விளக்கும் வகையில் பல விளக்கப் படங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10104).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

600 தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்

610 மருத்துவம்

11435

மலைப்பூட்டும் மருத்துவ அறிவியலை அறிந்துகொள்வோம். எம்.கே.முருகானந்தன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2015. (சென்னை: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

iv, 156 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18x12 சமீ.

சாதாரண மக்களுக்கும் மருத்துவ அறிவு அவசியம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தனது தொடர்ச்சியான பதிவுகளை நூல்கள் வழியாகவும், கட்டுரைகள் மூலமாகவும், இணையத்தளங்களின் வாயிலாகவும் மேற்கொண்டுவருபவர் வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தன். இந்நூலில் அவர் இலகு தமிழில் எழுதிய பயன்மிக்க 18 மருத்துவக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. காதலுக்கும் கவர்ச்சிக்கும் பயன்பட்ட உதடுகள் தற்போது குற்றவாளிகளை இனங்காண உதட்டச்சு (Lip Print) என்ற வகையில் பயன்படு வதையும், காதலாலும் காமத்தாலும் மனிதர்கள் மாத்திரம் இறப்பதில்லை- மிருகங்கள் கூட இதனால் இறக்கின்றன என்பதை அன்ரகைனஸ் சுண்டெலிகளை வைத்தும் புரியவைத்திருக்கிறார். மேலும் வாடகைத் தாய்மார், ஈ.சீ.கரெட், எச்.ஐ.வி. தொற்று, புற்றுநோய், மகப்பேறு, ஸ்டெம்செல் சுண்டெலிகள், மரணப்படுக்கை தரிசனங்கள், குளோணிங், உயிரியல் கணனியின் சாத்தியப்பாடு, சோதனைக்குளாய் குழந்தை உருவாக்கத்தின் தந்தை ரொபேட் எட்வேர்ட்ஸ், ஈ சிகரெட்டின் பாதுகாப்பு என பல மருத்துவம் சார்ந்த அண்மைக்கால அறிவியல் வளர்ச்சிகளையும் தமிழ் வாசகர்களுக்கு இந்நூலில் அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

614 பொதுச் சுகாதாரம்

11436

சுகவாழ்க்கை: பாகம் 4.கா.வைத்தீஸ்வரன். கொழும்பு: கா.வைத்தீஸ்வரன், ஆற்றுப்படுத்தல் நிலையம், 7, அல்பேர்ட் பிளேஸ், தெகிவளை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2015. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).

196 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 460., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-955-97577-7-1.

சுக வாழ்க்கையினை நாம் கடைப்பிடிப்பதன்மூலம் வாழ்வில் மேன்மையுறுவது எவ்வாறு என்பதை இந்நூல் விளக்குகின்றது. இந்நூலினைப் பண்டைய உணவுப் பழக்க வழக்கங்களை அறிமுகப்படுத்துவதுடன் ஆரம்பிக்கும் ஆசிரியர், தற்காலத்தில் எவ்வாறான தவறான சுகாதாரப் பழக்க வழக்கங்களை நாம் பின்பற்றுகின்றோம் என்று சுட்டிக்காட்டி, எவ்வாறு போஷாக்கு மிக்க உணவு களைத் தயாரிப்பது, ஜீ.ஐ.உணவுகள் அதன் பெறுமானம், உடலைப் பாதுகாக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிமுறைகள், சிறுநீரகத் தொற்றைத் தவிர்க்கும் முறைகள், இல்லற தர்மம்-குடும்ப வாழ்வு, தனிமை தவிர்ப்போம், முதுமை பெருமைக்குரியது, அழுக்கில்லா அறங்கள், யோகமுத்திரையின் மகிமை, தியானம் செய்யக் கற்றுக்கொள்வோம், நற்பண்புகளை மீளாய்வு செய்வோம் என்பன போன்ற தலைப்புகளில் சுகநலச் செய்திகளை படிமுறையில் வழங்கியுள்ளதுடன் மேலும் பல இன்றியமையாத சுகாதாரத் தகவல்களையும் அள்ளி வழங்கியுள்ளார். இறுதியில் எமது வாழ்வில் நாம் கடைப்பிடிக்கவேண்டிய நற்பண்புகளையும் நமக்கு நினைவூட்டிச் செல்கிறார்.

11437

சுகாதார சேவை வழங்குநருக்கும் பெறுநருக்குமான குடும்பத் திட்டமிடல் கைநூல். வி.கோகுலன், எஸ்.சசிகாந்த், கே.சுஜந்தன், கியூ.வினுஷியா, பீ.துஷ்யந்தி. யாழ்ப்பாணம்: சுகாதார கல்விசார் தயாரிப்பு அலகு, சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை, மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2011. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டேர்ஸ், இல. 424, காங்கேசன்துறை வீதி).

iv, 50 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

குடும்பம் சமூகத்தின் கட்டமைப்பு அலகாகும். குடும்பங்கள் அடிப்படை சமூக அலகு என்ற வகையில் சமூக மாற்றங்கள் அங்கேயே ஆரம்பிக்கப்படவேண்டும். அதன் காரணமாகவே குடும்பத் திட்டமிடல் சேவைகள் குடும்ப சுகாதார சேவைகளினுள் உள்வாங்கப்பட்டுள்ளன. இம்மக்களிடையே குடும்பத் திட்டமிடல் முறைகள் பற்றிய சரியான விளக்கமின்மையும் சந்தேகங்களும் இருக்கின்றன. அதன் விளைவாக வேண்டாத கர்ப்பங்களும், இளவயதுக் கர்ப்பங்களும் இலங்கையின் சுகாதார சேவையில் மாத்திரமல்லாது, எமது சமூகப் பிரச்சினையாகவும் மாறிவருகின்றன. இந்நிலையில் மருத்துவ ரீதியான குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் பற்றிய தகவல்களை எளிய வடிவில் அவர்களுக்கு இந்நூல் விளக்குகின்றது. குடும்பத் திட்டமிடல், வாய்வழி மாத்திரை, அவசர குடும்பக் கட்டுப்பாட்டு வில்லை, ஆணுறை, கருப்பை உட்சுருள், ஊசிமூலம் புகுத்தப்படும் ஓமோன், ஓமோன் உட்செருகிகள், இயற்கையான குடும்பத்திட்ட முறை, கர்ப்பத்தடை சத்திரசிகிச்சை (நிரந்தர முறை), கருச்சிதைவும் குடும்பத்திட்ட முறைகளும் ஆகிய 10 இயல்களில் இந்நூல் விளக்குகின்றது.

616 நோய்கள்

11438

ஆஸ்துமா என்றால் என்ன?. இ.முரளீதரன். யாழ்ப்பாணம்: சுகாதார கல்விசார் தயாரிப்பு அலகு, சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை, மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2007. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டேர்ஸ், இல. 424, காங்கேசன்துறை வீதி).

32 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 20., அளவு: 20x14 சமீ.

இந்நூலில் ஆஸ்துமா பற்றிய விடயங்கள் விளக்கமான முறையில் வினா-விடை வடிவில் அமைந்துள்ளன. ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது உறவினர்களுக்கும் சந்தேகங்களை நீக்கும் நூல். ஆஸ்துமா என்பது நுரையீரலில் ஏற்படும் நீடித்த/நாட்பட்ட (chronic) அழற்சியினால் மீண்டும் மீண்டும் வரக்கூடிய (recurrent) மூச்சு எடுத்தலில்/விடுதலில் சிரமத்தைக் கொடுக்கும் மூச்சுத்திணறல்/மூச்சிரைப்பு நிலை ஆகும். இதற்கு முக்கியக் காரணம் சுவாசக் குழாய்களின் உட்படலத்தில் ஏற்படும் வீக்கத்தால் காற்று உட்சென்று வெளியேறும் பாதையில் ஒடுக்கமேற்பட்டு காற்றின் ஓட்டத்தில் ஏற்படும் வீழ்ச்சியாகும். சுவாசக் குழாய்களைச் சுற்றியிருக்கும் தசைகளில் ஏற்படும் மீளும் தன்மை கொண்ட (reversible) சுருக்கம் மற்றும் இறுக்கம் போன்றவையும், நுரையீரலில் ஏற்படும் அழற்சியினால் ஏற்படும் புண்பட்ட நிலை, வீக்கம் என்பனவும் அசௌகரியமான நிலையை ஏற்படுத்தும். இதன் தீவிரத்தன்மையும் (severity) நிகழ்வுகளுக்கிடையிலான இடைவெளியும் (frequency) மனிதனுக்கு மனிதன் வேறுபடும். இந்த நோய் எல்லா வயதினரிலும் காணப்படுவதாயினும் பொதுவாக குழந்தைகளிலேயே ஆரம்பிக்கும். இந்த நோயின் முக்கியமான அறிகுறிகளாக இழுப்பு, இருமல், நெஞ்சு இறுக்கம், விரைவான குறுகிய மூச்சு என்பன அமைகின்றன. மீண்டும் மீண்டும் இந்த நோயின் பாதிப்புக்கு உட்படுபவர்களுக்கு தூக்கமின்மை, பகலில் களைப்பு போன்றவை இருப்பதால், அவர்களால் தமது நாளாந்த செயல்களைச் சரிவரச் செய்ய முடியாத நிலை காணப்படும். உலக சுகாதார நிறுவனம் கொடுத்துள்ள 2011 ஆம் ஆண்டு மே மாத அறிக்கையின்படி, உலகில் 235 மில்லியன் மக்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரியவந்தது. ஏனைய நீடித்த/நாட்பட்ட நோய்களுடன் ஒப்பிடுகையில் இறப்பு வீதம் குறைவாக இருப்பினும், 2005 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 255000 மக்கள் இந்நோயால் இறந்திருப்பதை உலக சுகாதார நிறுவனம் உறுதிப்படுத்தியிருந்தது.

11439

காச நோய்: பிரயோக மனித உரிமை அணுகுதல். சி.யமுனானந்தா. யாழ்ப்பாணம்: வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா, மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி, மார்பு நோய்ச் சிகிச்சை நிலையம், பண்ணை, 1வது பதிப்பு, மார்கழி 2011. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டேர்ஸ், இல. 424, காங்கேசன்துறை வீதி).

vii, 89 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-54033-0-6.

காசநோய் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட இந்நூல், யாழ்ப்பாண சுகாதாரப் பகுதியின் மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரியான டாக்டர் சி.யமுனானந்தா அவர்களின் மருத்துவ நூற்படைப்பாகும். காசநோய்க் களைவில் கவனிக்கப்படவேண்டிய பிரயோக மனித உரிமை அணுகல், காசநோயும் சுவாச ஆரோக்கியமும், நுரையீரலில் ஏற்படும் காசநோய், நுரையீரல் அல்லாத பகுதிகளில் ஏற்படும் காசநோய், சிறுவர்களில் காசநோய், பெண்களில் காசநோய், காசநோயும் சலரோகமும், காசநோயும் புகைத்தலும், காசநோயும் மதுபானமும், காசநோயும் போஷாக்கும், காசநோயும் எய்ட்ஸ் நோயும், முதியவர்களில் காசநோய், மருந்திற்கு எதிர்ப்புத் தன்மையுடைய காசநோய், காசநோயினை ஆய்வுகூடங்களில் கண்டறிதல், காசநோய்க்கான சிகிச்சை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசநோய்க் கட்டுப்பாட்டில் சுகாதார உத்தியோகத்தர்களது செயற்பாடு, காசநோய் கண்காணிப்பும் கட்டுப்பாடும் சம்பந்தமான நடவடிக்கைகளை வலுவூட்டல், காசநோய் பற்றிய விழிப்புணர்வு, காசநோய் தொடர்பான பொதுவான ஐயங்களும் அதற்கான விளக்கங்களும், காசநோய் நலன்பேணலில் சமூகத்தின் பங்கு, காசநோய் தொடர்பான சமூக மாற்றத்திற்கான விற்பனைகள், ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட இந்நூலின் இறுதியில் காசநோய் விழிப்புணர்வுப் பாடல்கள் என்ற தலைப்பில் சமூகத்துக்குச் செய்தியைக் கொண்டுசேர்க்கும் விழிப்புணர்வுப் பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூலின் உள்ளடக்கத்தின் பெரும்பங்கைக் கொண்ட "காசநோய் சமூக அணுகுதல்" என்ற தலைப்பில் ஆசிரியரின் நூலொன்று மார்ச் 2011இல் 2வது பதிப்பாக வெளிவந்துள்ளது. இந்நூல் நூல் தேட்டம் பதிவிலக்கம் 9450இல் பதிவுக்குள்ளாகியுள்ளது.

11440

தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வுக் கையேடு. சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை. யாழ்ப்பாணம்: மாகாண ஆரோக்கிய விழா-2016, வடமாகாண சுகாதார அமைச்சு, 1வது பதிப்பு, 2016. (யாழ்ப்பாணம்: குரு பிரிண்டர்ஸ், 39/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

30 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறையின் 35ஆம் மருத்துவ அணியின் 6வது குழுவினர் நடாத்தும் ஆரோக்கிய வாழ்வுக்கான கண்காட்சியில் வழங்கவெனத் தயாரித்துள்ள கைந்நூல். நீரிழிவு, பாரிசவாதம் போன்ற பல நோய்கள் பற்றிய விழிப்புணர்வினை சாதாரண மக்களுக்கு ஊட்டும் வகையில் இச்சிறு கைந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. தயாரிப்பு ஆலோசகராக வைத்திய கலாநிதி திருமதி வை.உமாசுதன் பணியாற்றியிருந்தார்.

11441

பாரிசவாதம் தவிர்ப்போம். கா.வைத்தீஸ்வரன். தெகிவளை: காயத்திரி வெளியீடு, 7, அல்பேர்ட் பிளேஸ், 1வது பதிப்பு, மார்ச் 2017. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).

116 பக்கம், விலை: ரூபா 275., அளவு: 22.5x14.5 சமீ., ISBN: 978-955-44396-2-7.

பாரிசவாதம் தவிர்ப்போம், குணங்குறிகள், நோயை ஏற்படுத்தும் காரணிகள், நோய் நிர்ணயமும் அதற்கான சிகிச்சையும், நோயாளர் பராமரிப்பு, இயல்புநிலைக்குத் திரும்ப வழிகாட்டல், உடற்பயிற்சி தொடர்பான சிகிச்சையின் அவசியம், தொடர்பாடல்-சம்பாசிக்க ஊக்குவிப்போம், தொழில்சார் பயிற்சி, பாரிசவாத நோயாளிக்கான உணவுகள், ஆற்றுப்படுத்தல் அல்லது வழிகாட்டலின் அவசியம், நீண்டகாலப் பராமரிப்பு, நோய் தொடர்பான சமூகக் கண்ணோட்டம், நோயைத் தடைசெய்வதில் அப்பியாசத்தின் பங்கு, தாவர உணவின் சிறப்பு ஆகிய 15 அத்தியாயங்களில் பாரிசவாதம் பற்றிய இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப் பாக உடற்பருமன் தவிர்ப்போம்-சுயமதிப்பீடு, பாரிசவாதத்தின் தாக்கம் (Case

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Study), இதயத்தைப் பாதுகாத்தலில் நடத்தலின் பங்கு, ஆசிரியரின் ஏனைய நூல்களின் பட்டியல் என்பன இணைக்கப்பட்டுள்ளன. நலவியல் துறையில் முதிர் அனுபவம் பெற்ற நூலாசிரியர் ஓய்வுபெற்ற சுகாதாரக் கல்வியாளராவார். ஆற்றுப்படுத்தலில் நீண்டகால அனுபவம் உள்ளவர்.

11442

புற்று நோய்: பல உடல் உறுப்புகளைப் பாதிக்கும் ஒரு நோய். வீ.கே.கணேசலிங்கம். பருத்தித்துறை: இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை, பருத்தித்துறை பிரிவு, 1வது பதிப்பு, 2013. (யாழ்ப்பாணம்: ஜெயஸ்ரீ அச்சகம், 34, பிரவுண் வீதி).

120 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1264-14-7.

முகவுரை, அணிந்துரை ஆகியவற்றைத் தொடர்ந்து, இந்நூலில் புற்றுநோய், புற்றுநோய் கலங்களில் பரவும் முறை, புற்றுநோய்க் கலங்களினால் ஏற்படும் கட்டமைப்புகள், புற்றுநோய்க் கலங்களின் வளர்ச்சி, முக்கிய புற்றுநோய்கள், புற்றுநோயுடன் சேர்ந்து வரும் அறிகுறிகள், புற்றுநோய் வருவதற்கான காரணிகள், புற்றுநோய்க்கான மருத்துவப் பரிசோதனைகள், புற்றுநோயைக் கட்டுப்படுத்துவது எப்படி? புற்றுநோய் வராது தடுப்பது எப்படி? புற்றுநோய் வருவதற்கான இரசாயன வஸ்து காரணிகள், புற்றுநோயாளிகளுக்குச் சமூக சேவை, புற்றுநோயைத் தடுக்கும் மூலிகைகள், புற்றுநோயும் வாழ்க்கைப் பழக்கங்களும், புற்றுநோயைக் கண்டறிதல், புற்றுநோயாளருக்கான உடனடி நடவடிக்கைகள், புற்றுநோய் பல தன்மைகளைக் கொண்டது, புற்றுநோய் ஆராய்ச்சிகள் ஆகிய 18 அத்தியாயங்களில் புற்றுநோய் பற்றிய விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளது. இறுதியாக ஆங்கிலத்தில் சுருக்க விளக்கமும் ஆதார நூல்களின் பட்டியலும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14780).

11443

பெருமூளை வாதம்: விசேட தேவையுள்ள பிள்ளைகளின் பெற்றோர்களிற்கான கைநூல். கீதாஞ்சலி சத்தியதாஸ். யாழ்ப்பாணம்: வைத்திய கலாநிதி கீதாஞ்சலி சத்தியதாஸ், குழந்தை வைத்திய நிபுணர், சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, மார்ச் 2017. (யாழ்ப்பாணம்: அன்ரா டிஜிட்டல் பிரின்டர்ஸ், இல. 356, கஸ்தூரியார் வீதி).

v, 30 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 70., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-38062-0-8.

குழந்தைகளின் விருத்தியடையும் மூளையில் ஏற்படும் தாக்கத்தினால் உடற் செயற்பாட்டில் ஏற்படும் ஒரு பின்னடைவினால் பெருமூளைவாதம் உருவாகின்றது. இது ஒரு குழந்தை பிறக்கும் முன்னர், அல்லது பிறக்கும்போது, அல்லது பிறந்த பின்னர் ஏற்படும் அசாதாரண சூழ்நிலைகளால் ஏற்படுகின்றது. இந்நூல் சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் இந்நோயினால் பீடிக்கப்பட்ட குழந்தைகளின் மூளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்பினால் அவர்களது செயற்பாடுகளில் வெளிப்படும் மாற்றம் குறித்து பெற்றோருக்கும் ஏனையோருக்கும் தெளிவான விளக்கத்தை வழங்குகின்றது. பெற்றோர், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் பிள்ளைகளில் அக்கறை காண்பித்து பெருமூளை வாதம் எனப்படும் செரிபரல் பால்சி (Cerebral Palsy) என்ற நோயினால் பாதிக்கப்படும் பிள்ளைகளையும் அவர்களது சிறப்புத் தேவைகளை அறிந்து, ஏனைய பிள்ளைகளைப் போன்று வளர்ப்பதற்கும் இந்நூல் வழிகாட்டுகின்றது.

11444

மறதி நோய் (Dementia). வீ.கே.கணேசலிங்கம். பருத்தித்துறை: இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை, பருத்தித்துறைப் பிரிவு, 1வது பதிப்பு, 2014. (யாழ்ப்பாணம்: குரு அச்சகம், திருநெல்வேலி).

74 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1264-15-4.

இந்நூலில் முன்னுரை, மறதிநோய் (Dementia) தொடர்பாக உலக சுகாதார வரையறை, இவ்வியாதி யாரைப் பீடிக்கும்? இவ்வியாதியின் அறிகுறிகள் (ஞாபகமறதி, தொடர்பாடல் கஷ்டங்கள், நடத்தையிலும் மனநிலையிலும் மாற்றங்கள்), மறதி வியாதி தோன்றுவதற்கான ஏதுநிலைகள், இந்நோயினைத் தடுப்பதற்கான வழிகள், இவ்வியாதியினால் ஏற்படும் தாக்கங்கள், இந்நோயை மதிப்பிடுவது எப்படி? இந்நோயைத் தீர்ப்பதற்கான மருத்துவம், இந்நோயாளர்களைப் பராமரிப்பது எப்படி? மறதி நோயை ஏற்படுத்தும் மூளையின் பாகங்கள், இந்நோய் தோன்றுவதற்கு மூளையில் ஏற்படும் கட்டமைப்பு மாற்றம், இந்நோய் உண்டாவதற்கான வேறு காரணங்கள், பல்வேறு விதமான மறதிநோய், பல்வேறு மறதி நோய்களின் விரிவான விவரணம், நிறைவுரை ஆகிய 16 இயல்களில் மறதிநோய் பற்றிய விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இறுதியாக ஆங்கிலத்தில் சுருக்க விளக்கமும் ஆதார நூல்களின் பட்டியலும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14781).

618 பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம்

11445

இனப்பெருக்க சுகாதாரம்: பொதுவான தகவல்கள். எஸ்.சயந்தன், எஸ்.யதீஸ்கர், எஸ்.ஜேசுராஜன் பெரேரா, என்.சுஜீவா, வீ.ஜெனிபர். யாழ்ப்பாணம்: சுகாதார கல்விசார் தயாரிப்பு அலகு, சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை, மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, மே 2011. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டேர்ஸ், இல. 424, காங்கேசன்துறை வீதி).

iv, 28 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

தாய்ப்பாலின் மகத்துவம், குறைநிரப்பு உணவுகள், மகப்பேற்று காலத்தில் தாய்மார் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகள், இளவயதுக் கர்ப்பங்கள், கருச்சிதைவும்- ஆபத்து விளைவுகளும், பாலியல் வன்முறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன பற்றிய மருத்துவ விளக்கங்களை இந்நூலில் காணமுடிகின்றது. எட்டு அத்தியாயங்களில் பின்வரும் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மகப்பேறு, மகப்பேற்றின் பின்னரான காலங்களில் தாய்-சேய் ஆரோக்கியம்/ கர்பபகாலத்தின் பொதுவான பிரச்சினைகள்/ பிரசவகாலத்தின் பின்னரான உடற்பயிற்சிகள்/மகத்துவம் நிறைந்த தாய்ப்பால்/ ஆறாம் மாதத்தில் சோறு தீத்துவோம்/ யொவனப் பருவம்/ பால்நிலை வன்முறைகள்/ கருக்கலைப்பு.

619 கீழைத்தேய மருத்துவம்

11446

சுகம் தரும் உணவும் சுகமான வாழ்வும். ஏ.ஜி.யோகராஜா (தொகுப்பாசிரியர்). சுவிட்சர்லாந்து: யோகாம்பிகை எழுத்தகம், Rumiweg 40, 4900 Langenthal, 1வது பதிப்பு, டிசம்பர் 2015. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(4), 56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x14 சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தின் அல்வாய் வடக்கைச் சேர்ந்த அமரர் காசிநாதர் முருகதாஸ் அவர்களின் நினைவாக வெளியிடப்பட்டுள்ள நூல். அன்னார் பற்றிய நினைவுக் குறிப்புகளுடன், தமிழகத்தின் பவித்ரா இயற்கை மற்றும் யோகா மருத்துவமனை வைத்தியர் ஆர்.சுப்பிரமணியன் அவர்கள் எழுதிய எல்லோருக்கும் இனிய இயற்கை மருத்துவம் என்ற நூலின் சில பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு சுகம் தரும் உணவும் சுகமான வாழ்வும், இயற்கையும் மனிதனும், உணவு உட்கொள்ளும் முறை, தண்ணீர் எனும் இலவச உணவு அனைத்து வகையான நோய்களுக்குமான முக்கிய மருந்து, மிளகு-சீரகத் தண்ணீர் குடிப்பதால் ஏற்படும் நன்மைகள், மனித உணவில் கனிகளின் பங்கு, மனித உணவில் காய்களின் பங்கு, மனித உணவில் கீரைவகைகளின் பங்கு, சர்க்கரை நோயைக் குணப்படுத்துவதில் கனிகளின் பங்கு, ஆரோக்கிய வாழ்விற்கு விரதத்தின் முக்கியத்துவம், காய்ச்சல் ஒரு நோய் அல்ல, சளியை அகற்றும் இயற்கை மருத்துவம், தலைவலியைத் தவிர்ப்பதற்கு மாத்திரைகளைத் தவிர்க்கவேண்டும், இரத்த அழுத்தத்தை குணப்படுத்துவது, எண்ணெய் மருத்துவம், எனிமா தரும் இனிமை, உடல் ஆரோக்கியத்தில் களிமண்ணின் பங்கு, இயற்கை மருத்துவத்தில் சூரியனுக்கு முக்கியத்துவம், ஆகிய தலைப்புகளில் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

619.1 சித்த மருத்துவம்

11447

சுதேச மருத்துவ மூலிகைக் கையகராதி மூலிகை அரும்பத அகராதி. சே.சிவசண்முகராஜா. யாழ்ப்பாணம்: சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம், கைதடி, 1வது பதிப்பு, மே 1997. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

xiv, 148 பக்கம், விலை: ரூபா 87.50, அளவு: 14.5x11.5 சமீ.

சித்த வைத்திய கலாநிதி சேதுமாதவர் சிவசண்முகராஜா அவர்கள் சுதேச மருத்துவ மூலிகைக் கையகராதியையும், பரராசசேகரம், செகராசசேகரம் போன்ற நூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல்களுக்கான மூலிகை அரும்பத அகராதியையும் ஒன்றிணைத்து வெளியிட்டுள்ளார். பின்னிணைப்பாக மூலிகைகளின் தாவர விஞ்ஞானவியல் பெயர்களையும் ஆசிரியர் வெளியிட்டுள்ளார். இது இலங்கை அரசகரும மொழித் திணைக்களப் பரிசுபெற்றதொரு நூலாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16447).

11448

மருத்துவ நோக்கில் சித்தர்களும் தத்துவ சிந்தனைகளும். பொன். இராமநாதன். யாழ்ப்பாணம்: கலாநிதி பொன். இராமநாதன், கனகதாரா, தாவடிச் சந்தி, கொக்குவில், 1வது பதிப்பு, பெப்ரவரி 2009. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாயி ஒப்செற் பிறின்ரேர்ஸ், கோண்டாவில்).

xii, 246 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20x14 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ பீட மாணவருக்கான துணைப்பாட நூல். கலாநிதிப் பட்டத்திற்கு ஆசிரியரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேட்டின் சில பகுதிகளையும் உள்ளடக்கியது. கலாநிதி பொன். இராமநாதன், கைதடி சித்த மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராவார். இரு பகுதிகளைக் கொண்ட இந்நூலின் முதற் பகுதியில் சித்தர்கள் பற்றிதோர் அறிமுகம் இடம்பெறுகின்றது. சித்தர்கள், சித்தர்களின் பிரிவுகள், சித்தர்கள் காலம், பதினெண் சித்தர்கள், சித்தர்களின் சிறப்பியல்புகள் (அட்டாங்க யோகம், அட்டமா சித்து), ஈழத்துச் சித்தர்கள் ஆகிய உப பிரிவுகளைக் கொண்டதாக முதற் பகுதி அமைந்துள்ளது. இரண்டாம் பகுதி தத்துவ சிந்தனைகளை உள்ளடக்கியதாக அமைகின்றது. தத்துவ அறிவும் மருத்துவமும், சித்தாந்த அளவையும் சித்த மருத்துவமும், இந்திய தத்துவங்கள், தொன்னூற்றாறு தத்துவங்கள், ஐம்பூதக் கொள்கை, அண்டமும் பிண்டமும், தேகம் ஐம்பூதக் கூறு, ஆறு ஆதாரங்கள், பிரணாயாமமும் நரம்பு மண்டலமும், சித்தர்களின் கூர்ப்புக் கொள்கை, பரிணாம வளர்ச்சி, நால்வகைப் பிறப்பு, எழுவகைத் தோற்றம், சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மையும் அணுக் கொள்கையும், முத்தொழிலில் சீவனும் சிவனும், சித்த மருத்துவனின் இலக்கணம், சித்தர்களின் பிண்ட உற்பத்திக் கொள்கை, சித்தர்களின் மணிமகுடமாகிய முப்பு, சித்தர்களின் இரசவாதக் கொள்கை, சித்தர்களின் காயகற்ப முறைகள், எண்வகைத் தேர்வுகளில் ஒன்றான நாடி பார்த்தல், சித்தர்கள் கூறும் நாடி பற்றிய சைவசித்தாந்தக் கருத்துக்கள் ஆகிய உப பிரிவுகளைக் கொண்டதாக இப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

630 விவசாயமும் அது சார்ந்த துறைகளும்

11449

அமரர் திருமதி புவனேஸ்வரி லோகநாதன் அவர்களின் சிவபதப்பேறு குறித்த 31ம் நாள் நினைவுமலர்.(வீட்டுத் தோட்டமும் சுற்றாடல் பாதுகாப்பும்). மலர்க்குழு. வவுனியா: திரு லோகநாதன், வைத்தியசாலை சுற்றுவட்டவீதி, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

124 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், அட்டவணைகள், விலை: அன்பளிப்பு, அளவு: 27x21.5 சமீ., ISBN: *978-955-50741-0-0.*

யாழ்.மாவட்டம், மானிப்பாய், சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி புவனேஸ்வரி லோகநாதன் அவர்களின் சிவபதப்பேறு குறித்த 31ம் நாள் நினைவுமலராக 10.07.2016 அன்று வெளியிடப்பட்ட இப்பிரசுரம், "வீட்டுத்தோட்டமும் சுற்றாடல் பாதுகாப்பும்" என்ற அவரது நூலொன்றை இணைத்து வழங்குகின்றது. சுற்றாடல் மாசு அடையும் வழிகளும் சுற்றாடல் பாதுகாப்பும், மண்ணும் மண்பாதுகாப்பும், காடு அழிப்பின் தாக்கமும் காடு பாதுகாப்பும், உயிரினங்களின் பன்னிலைத் தன்மையும் அதன் பாதுகாப்பும், சேதனப் பயிர்ச் செய்கையின் முக்கியத்துவமும் சேதனப் பசளையும், சுற்றாடல் பாதுகாப்பில் வீட்டுத் தோட்டத்தின் முக்கியத்துவம், நிலையான அபிவிருத்தியும் வீட்டுத் தோட்டமும் ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அமரர் திருமதி புவனேஸ்வரி லோகநாதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றியவர்.

11450

விவசாயத் தொகுப்பு. *ஆசிரியர் குழு. கொழும்பு: பெண்கள் கைத்தொழில் வர்த்தக சபை, 1வது பதிப்பு, 1987. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

178 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

1985இல் தாபிக்கப்பட்ட பெண்களின் கைத்தொழில் வர்த்தக சபை, பெண் தொழிற்துறை உரிமையாளர்களுக்கும் பண்ணை தொழிற்றுறை உரிமை யாளர்களுக்கும் நன்மை பயக்கும் ஆற்றல்மிக்க பொருளாதார, அபிவிருத்தி சேவையொன்றினை வழங்குகின்றது. மண்ணும் நீரும், சந்தைகளும் அவற்றின் வாய்ப்பு வளங்களும், தென்னை, பழங்கள், மரக்கறிப் பெருக்கம், வீட்டுத்தோட்டம் பற்றிய தகவல், கால்நடை, கோழிப்பண்ணை ஆகிய விடயங்கள் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. சர்வதேச அபிவிருத்திக்கான நோர்வே முகவர் தாபனத் தின் நிதி உதவியுடன் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10510).

11451

வீட்டுத் தோட்டமும் சுற்றாடல் பாதுகாப்பும். *புவனேஸ்வரி லோகநாதன். வவுனியா: பிரயோக விஞ்ஞான பீடம், வவுனியா வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2007. (அனுராதபுரம்: எஸ்.எஸ். பிரின்டர்ஸ்,* Fair Road*).*

(2), vi, *97 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 28x21 சமீ.,* ISBN: *978-955-50741-0-0.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல், வீட்டுத் தோட்டம் மனிதனது அன்றாட உணவுத் தேவையில் எவ்வளவு பங்களிப்பைச் செய்கின்றது, எவ்வாறு நீர்வளம், நில வளம், வனவளம், உயிர் இனங்கள் பாதுகாக்கப்படுகின்றன, வீடுகளில் உருவாகும் பிரிகையடையக்கூடிய கழிவுப் பொருள்கள் எவ்வாறு மண்வளத்தைக் கூட்டும் பசளையாக மாற்றலாம் என்னும் பல தத்துவங்களை உள்ளடக்கியுள்ளது. இந்நூலை வாசிப்பதன் மூலம் ஒவ்வொரு தனி மனிதனும் தன்னால் இயன்றவாறு எவ்வாறு சூழல் மாசடைவதைத் தடுக்கலாம் அல்லது குறைக்கலாம் என அறிந்துகொள்ள இந்நூல் உதவுகின்றது. சுற்றாடல் மாசு அடையும் வழிகளும் சுற்றாடல் பாதுகாப்பும், மண்ணும் மண்பாதுகாப்பும், காடு அழிப்பின் தாக்கமும் காடு பாதுகாப்பும், உயிரினங்களின் பன்னிலைத் தன்மையும் அதன் பாதுகாப்பும், சேதனப் பயிர்ச் செய்கையின் முக்கியத்துவமும் சேதனப் பசளையும், சுற்றாடல் பாதுகாப்பில் வீட்டுத் தோட்டத்தின் முக்கியத்துவம், நிலையான அபிவிருத்தியும் வீட்டுத் தோட்டமும் ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 58095).

11452

வேளாண்மை விளக்கம். வே.பேரம்பலம் (தமிழாக்கம்). கொழும்பு: மா.யே.பெரேரா, பதிவாணையாளர், 421 புல்லர்ஸ் வீதி, 1வது பதிப்பு, 1959. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

vii, 500 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13.5 சமீ.

இந்நூலில் பயிர்ச் செய்கையும் அதனோடு தொடர்புடைய புவியியற் காரணிகளும், விலங்கு வேளாண்மையும் தேனீ வளர்த்தலும், பூந்தோட்டம் அமைத்தலும் இவற்றோடு தொடர்புடைய பிற விடயங்களும் சுருங்கிய முறையில் விளக்கப் பட்டுள்ளன. மண், மட்காப்பு, வளமாக்கிகளும் பசளைகளும், வடிகான் முறையும் நீர்ப்பாய்ச்சலும், பயிர்ச் செடிகளின் அமைப்பும் தொழிலும், பயிர்த் தாவரங்களின் கலவிமுறையினப் பெருக்கம், நெல், வேறு சில ஆண்டுப் பயிர்கள், பழமரங்கள், தேயிலை, இறப்பர், தென்னை, கொக்கோ, கோப்பி, தாவரங்களின் இனப்பெருக்கம், தாவர நோய்களும் தடைமுறைகளும், பயிரிடும் முறைமைகள், விளைபயிர்களிடைப் பொதுவான களைகள்: களைகளின் பரம்பல், பயிர்ச்செய்கைக் கருவிகளும் பொறிவகைகளும், உழுதலும் களைகட்டலும், விலங்கு வேளாண்மை, பறவை வேளாண்மை, வேளாண்மை விலங்குகளின் நோய்கள், தேனீ வளர்த்தல், அலங்காரத் தோட்டம் அமைத்தல் ஆகிய 24 அதிகாரங்களின் கீழ் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. விவசாயத்துறைக் கலைச்சொல் அட்டவணை யொன்றும் பக்கம் 455 முதல் 500 வரை காணப்படுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10820).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

640 இல்லப் பொருளியல், குடும்பக் கலை

11453

மனை ஒளி 2008: மனைப்பொருளியல் தின விழா சிறப்பு மலர். வி.ரவீந்திரராஜா. வவுனியா: வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, பூந்தோட்டம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2008. (வவுனியா: ஆகாஷ் கிராபிக்ஸ், இல. 111, பஸ் நிலைய மேல்மாடி).

78 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் மனைப் பொருளியல் மன்றத்தின் போஷகரான ஆசிரிய கல்வியியலாளர் திருமதி ரவீந்திரராஜாவின் தயாரிப்பில் உருவாகியுள்ள சிறப்பு மலர் இது. இம்மலரில் சிறப்பு ஆக்கங்களாக, மனையில் மனையாளின் வகிபாகம், மனைப்பொருளியலின் முக்கியத்துவம், மனைப் பொருளியல் பாடத்தின் நோக்கங்கள், மனைப் பொருளியல் பாடத்தில் கணிப்பீடு, மதிப்பீடு பற்றிய கண்ணோட்டம், கால நிர்வாகம், ஆரோக்கியத்தில் ஆன்மீகத்தின் பங்கு, என் அன்னை, மனக்கவலை ஆரோக்கியத்தின் எதிரி, இனிப்பு வகை, தாய்மார்களே குழந்தையிடம் அன்பை வெளிப்படுத்தி வளர்ப்பில் வெற்றிகாணுங்கள், கர்ப்ப காலத்தில் ஓய்வும் உடற் பயிற்சியும், மருத்துவத்திற்கு உதவும் 3D மொடல்கள், ஒரு மகனின் பார்வையில் தந்தையின் நிலை, கொழுப்பு நண்பனா பகைவனா?, உயர் குருதி அமுக்கம், இசையும் அசைவும், நீர்ப்பீடனம், தையல் கலை, இரவு உடை தயாரிப்போம், இனிமையான பொழுது போக்குகள், சுவர்மாட்டி செய்து பார்க்கலாமே, யோகாசனமும் அதன் முக்கியத்துவமும், உணவுத் தொழில்நுட்ப 1ம் 2ம் வருட ஆசிரிய மாணவர்கள் விபரம், இவ்வருடத்திற்கான செயற்பாடுகள், மனையியல் தின விழாவை ஒட்டி நடாத்தப்பட்ட கல்லூரி சமூகத்திற்கிடையிலான போட்டியில் வெற்றிபெற்றவர்கள் விபரம், போட்டியில் கலந்துகொண்டவர்களின் எண்ணவகைகள் சில ஆகியவை இடம்பெற்றுள்ளன.

11454

மனைப் பொருளியல்: தரம் 10. நிலோஜினி விஜேந்திரன். மட்டக்களப்பு: Better Way Publication, இல. 50A பிரிவு, திராய்மடு, கொக்குவில், 1வது பதிப்பு, மார்ச் 2015. (யாழ்ப்பாணம்: சுடர் நிலவு கிரபிக்ஸ், இணுவில்).

vi, 114 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 24x17.5 சமீ.

ஆசிரியர் கைநூல், மனைப்பொருளியல் பாடநூல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தரம் பத்தின் மாணவர்களுக்கு உதவும் வகையில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. மகிழ்ச்சியான வாழ்க்கைச் சூழல், மனை வளங்கள், உணவும் போசணையும், உணவு வேளைகளைத் திட்டமிடல், உணவின் தரப்பண்பைப் பேணல், உணவை ஆயத்தப்படுத்தலும் சமைத்தலும், உணவு பரிமாறல், உணவு நற்காப்பு, போசணைக் குறைபாடுகள், தையல் முறைகள், குழந்தை ஆடை, கட்டிளமைப்பருவம், ஆரோக்கியமான மகப்பேறு ஆகிய 13 அத்தியாயங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் எழுதப்பட்டுள்ளது. திருமதி நிலோஜினி விஜேந்திரன் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆயித்தியமலை அ.த.க. பாடசாலையின் ஆசிரியையாவார். (இந் நூல் கொழும்புப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 68620).

642 உணவும் பரிமாறலும்

11455

ஆரோக்கிய உடலும் உணவும். லோ.விமலேந்திரன். யாழ்ப்பாணம்: புகழ் வெளியீட்டகம், வராகி அம்மன் கோவிலடி, கொக்குவில் மேற்கு, 1வது பதிப்பு, மார்ச் 2014. (யாழ்ப்பாணம்: சுடர்நிலவு கிராப்பிக்ஸ், இணுவில்).

iv, 72 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 175., அளவு: 21x14.5 சமீ.

ஆரோக்கியக் குறிப்புகள், சமையற் குறிப்புகள் என்பன அடங்கியது. உணவுகளும் அவற்றிலுள்ள போசணைகளும், போசணைப் பொருட்களின் செயற்பாடுகள், உணவுகளும் கலோரியும், அன்றாட வேலைகளின்போது விரயமாகும் கலோரிகள், போசணைகளின் தேவை, உங்களுக்குத் தெரியுமா? உடற்திணிவுச் சுட்டி (BMI) கணித்தல், உயரத்திற்கேற்ற நிறையைப் பேணி நோய்களைத் தவிர்ப்போம், உங்கள் தொழில்களுக்கேற்ப உங்களுக்குத் தேவையான கலோரி அளவைத் தெரிந்துகொள்ளுங்கள், உங்கள் பிள்ளைகளுக்கு நிறைவான போசணை வழங்குகிறீர்களா? பிள்ளைகளின் உணவு விடயத்தில் கவனிக்க வேண்டியவை, காலையில் தயாரிக்கக்கூடிய உணவுவகை, விசேட மதிய உணவுவகைகள், கறி வகைகள், சூப் வகைகள், இரவு உணவு வகைகள், இனிப்புப் பண்டங்கள், அவண் சமையல் (Oven Cooking) ஆகிய 19 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 13479).

650 முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம்

11456

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம். செ.பத்மநாதன், இ.அருமைநாதன் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு: சு.வெற்றிவேலாயுதன், பொதுச் செயலாளர், அரசாங்க எழுது வினைஞர் சங்கம், 1வது பதிப்பு, ஜனவரி 1972. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).

(6), 112 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

அலுவலக நடைமுறை, நிருவாகப் பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகள் ஆகியவை தொடர்பாக பேராதனை விவசாயத் திணைக்கள ஊழியர்களுக்கு வழங்கிய விரிவுரைகளின் தொகுப்பு. பொது எழுதுவினைஞர் சேவையின் தரம் இரண்டிற்கான பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கு உகந்த வகையில் உருவாக்கப் பட்டுள்ளது. அலுவலக அமைப்பும் நடைமுறையும், நிருவாகம், ஒழுங்குமுறை நடவடிக்கை, இளைப்பாறல்கள் முதலியன, பொதுப்பிரமாணங்கள் ஆகிய ஐந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவாக இந்நூல் வகுக்கப்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10139).

11457

மனிதவள முகாமைத்துவம். நவநீதகிருஷ்ணன் கெங்காதரன். கொழும்பு 6: AB Creator and Publishers, Station Road, 1வது பதிப்பு, நவம்பர் 2012. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xii, 187 பக்கம், வரைபடங்கள், அட்டவணை, விலை: ரூபா 400., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-5466-30-1.

மனிதவள முகாமைத்துவத்தின் தன்மையும் பரப்பும், மனிதவளத் திட்டமிடல், வேலைப் பகுப்பாய்வு, ஆட்சேர்ப்பு, தெரிவு செய்தல், பதவியில் அமர்த்தலும் அறிமுகப்படுத்தலும், பயிற்சியளித்தலும் அபிவிருத்தியும், முகாமைத்துவ அபிவிருத்தி, செயல்திறன் முகாமைத்துவம், தொழில்முகாமைத்துவம், கொடுப்பனவு முகாமைத்துவம், வேலை மதிப்பீடு, ஊழியர் நலன்கள், ஊழியநகர்வுகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கையினை முகாமைசெய்தல், மனத்தாங்கல்களினை முகாமை செய்தல், கைத்தொழில் உறவுகள், ஊழியர் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய 17 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 13250).

11458

மனிதவளத்தை முகாமை செய்வது எப்படி?. ஏ.விஜேந்திரன். கொழும்பு: ஏ. விஜேந்திரன், 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202, 340, செட்டியார் தெரு).

(8), 99 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ.

இந்நூல் முகாமைத்துவமும் மனிதவளமும், மனிதவள முகாமைத்துவம் என்றால் என்ன?, ஆட்சேர்த்தல் நடவடிக்கைகள், ஊழியர்களுக்கான ஒழுங்குவிதிகளும் ஒழுக்காற்று நடவடிக்கைகளும், பணியாளர்களுக்கு அதிகாரம் பொறுப்புகளை ஒப்படைத்தல், ஊழியர்களின் ஆற்றல்களை விருத்திசெய்தல், ஊழியர்களின் செயல்திறனை மதிப்பிடல், ஊழியர்களை ஊக்கப்படுத்தல், ஊழியர்களின் மன அழுத்தங்களை முகாமைசெய்தல், ஊழியர்களை சேவையிலிருந்து விலக்கிக் கொள்ளுதல், முகாமையாளரும் ஊழியர்களும், பணியாளர்களும் நேர நிர்வாகமும் ஆகிய 12 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் எல்- 10190).

11459

முகாமைத்துவ நடைமுறைகள். அருணாசலம் இரவீந்திரன். மட்டக்களப்பு: திருமதி சுசீலாதேவி இரவீந்திரன், 35/3, சின்ன உப்போடை வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2013. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vi, 138 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 26x18 சமீ.

இந்நூல் அரசதுறை உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கை நூலாக வெளிவந்துள்ளது. பொது முகாமைத்துவம், அலுவலக முகாமைத்துவம், அலுவலக முறைமையும் நடைமுறையும், பொது வினாப்பத்திரம், வினாக்களும் விடைகளும், விடய ஆய்வு ஆகிய ஆறு இயல்களாக வகுக்கப்பட்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் மட்டக்களப்பு பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட கணக்காளராகப் பணியாற்றியவர். (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 13171).

11460

முகாமைத்துவத்திற்கு ஓர் அறிமுகம். க.ரகுராகவன். மட்டக்களப்பு: யுனைட்டெட் வெளியீடு, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், செங்கலடி, 1வது பதிப்பு, டிசம்பர் 1995. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).

(12), 164 பக்கம், விளக்கப்படம், அட்டவணை, விலை: ரூபா 200., அளவு: 24x18 சமீ., ISBN: 955-9429-00-0.

இந்நூலாசிரியர் முகாமைத்துவமும் அதன் இயல்பும், முகாமைத்துவ எண்ணக்கருக்களின் தோற்றமும் வளர்ச்சியும், முகாமைத்துவமும் சூழலும், சமூகப் பொறுப்பும் முகாமைத்துவ நெறிகளும் ஆகிய நான்கு பிரதான இயல்களில் முகாமைத்துவத்தை அறிமுகம் செய்கின்றார். திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், வளங்களைக் கட்டுப்படுத்தல் ஆகியவற்றின் செயற்பாட்டு முறைமையின் அடிப்படையில் முகாமைத்துவம் என்றால் என்ன என அவர் தனது நூலை ஆரம்பிக்கிறார். தொடர்ந்து இந்தச் செயற்பாட்டு முறைமை தொடர்பாகவும், பல்வேறு வலயங்கள், மட்டங்கள் தொடர்பாகவும் அமையும் வெவ்வேறு முகாமைத்துவ நிலைமைகளின் பங்களிப்புகள், தொழிற்பாடுகளை அவர் பகுத்தாய்கிறார். பண்டைய முறைமை தொடக்கம் சமகாலம் வரையிலுமான பல்வேறு முகாமைத்துவ சித்தாந்தங்கள் கோட்பாடுகள் எவை என்றும் அவற்றின் தோற்றத்தையும் ஆராய்கிறார். முகாமைத்துவ அமைப்பு, வெளிச்சுற்றாடல் ஆகியவற்றுக்கிடையேயான ஊடாட்டம் பற்றியும் பரிசீலிக்கிறார். அமைப்பின் இயல்பு, கட்டமைப்பு ஆகியவற்றினாலும், நிலவும் கலாச்சாரம், பொருளாதாரச் சூழல், தொழில்நுட்பவியல் சார்ந்த தன்மையினாலும், சட்ட அரசியல் சூழலினாலும், பொருள் வழங்குபவர்கள், நுகர்வோர், போட்டியாளர்கள் போன்றவர்களினாலும், இந்த உறவின் உயிரோட்டம் தங்கியிருக்கிறது என அவர் விதந்துரைக்கின்றார். நூலாசிரியர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதியாகப் பணியாற்றுபவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

657 கணக்கியல்

11461

உயர்தரக் கணக்கியல்.கே.ரி.இராஜகுலவீரசிங்கம். யாழ்ப்பாணம்: கா.தியாகராசா, அருளகம், கைதடி கிழக்கு, கைதடி, 1வது பதிப்பு, மார்கழி 1981. (யாழ்ப்பாணம்: ராஜா அச்சகம், சங்கானை வீதி, அச்சுவேலி).

277 பக்கம், விலை: ரூபா 22.00, அளவு: 20x13 சமீ.

புதிய க.பொ.த.ப.(உயர்தரம்), தொழில்நுட்பக் கல்லூரி, கணக்கியல், வங்கியியல் பரீட்சைகளுக்கு உகந்ததாகத் தயாரிக்கப்பட்ட நூல். இலங்கைப் பட்டயக் கணக்காளர், செலவுக் கணக்காளர் வினாப்பத்திரங்களைத் தழுவிப் பயிற்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. கணக்காளராகப் பணியாற்றும் நூலாசிரியர் பொருளியல் சிறப்புப் பட்டதாரியாவார். யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியிலும் பலாலி ஆசிரியர் கலாசாலையிலும் கற்கும் கணக்கியல்துறை மாணவர்களுக்கும் வங்கியாளர் நிறுவனப் பரீட்சைக்குத் தயார்செய்யும் மாணவர்கட்கும் பல ஆண்டுகளாக கணக்கியல் பாடத்தைப் போதித்த அனுபவ வெளிப்பாடாக இந்நூல் உருவாக்கப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11210).

11462

கணக்கியல் பங்குடைமைப் பயிற்சிகள்: க.பொ.த. உயர்தரம். சி.சிவராசா. யாழ்ப்பாணம்: வணிக வளநிலையம், கல்வித் திணைக்களம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1989. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி).

140 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

பங்குடைமை இறுதிக் கணக்குகள்-I, பங்காளர் சேர்தல், பங்காளர் விலகல், பங்காளர் சேரலும் விலகலும், பங்குடைமை இறுதிக் கணக்குகள் -II, பங்குடைமைக் கலைப்பு, பலவினப் பயிற்சிகள், செய்கைகள், விடைகள் எனப் படிமுறையாக தரப்பட்டுள்ள பயிற்சிகள் யாவும் மாணவரின் தூண்டல் திறனை அதிகரிக்கச் செய்யும் வகையில் அமைந்துள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10226).

11463

கணக்குப் பதிவியல். சி.ந.தேவராசன். கொழும்பு: இலங்கை அரசகரும மொழித் திணைக்களம், 1வது பதிப்பு, 1956. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

xii, 522 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

ஆரம்ப உரை, காசுக் கணக்கு, வங்கிகள், வங்கிக் கணக்கு, கழிவுகள், சரக்கு கணக்கு, பேரேடு, இலாப நட்டக் கணக்கு, மூலதனக் கணக்கு, பரீட்சை மீதி, பற்று வரவுக் குறிப்பேடு, சில்லறைக் காசேடு, ஒற்றைப் பதிவு, காசோலைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரக் கணக்கு, செய்கைக் கணக்கு, மூலதனமும் வரவுசெலவும், நன்மதிப்பு, ஒதுக்கல்களும் காப்புகளும், ஆழுநிதிகள், பெறுமானத் தேய்வு, முதலீடுகள், வருமான வரி, கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கக் கணக்குகள், மணாக்கர் அறியவேண்டிய குறிப்புகள், கணக்கு வைக்கும் முறையைக் கற்பித்தல் ஆகிய அத்தியாயங்களில் கணக்குப் பதிவியல் (Book Keeping) பாடம் விரிவாக விளக்கப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17306).

மேலும் பார்க்க 11368-11370

658.15 நிதி முகாமைத்துவம்

11464

அரச நிதி நடைமுறைகள்: பொது நிதி முகாமை. அருணாசலம் இரவீந்திரன். மட்டக்களப்பு: திருமதி சுசீலாதேவி இரவீந்திரன், 35/3, சின்ன உப்போடை வீதி, 2வது பதிப்பு, மே 2012, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2008. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).

117 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 330., அளவு: 25x19 சமீ.

நூலாசிரியர் மட்டக்களப்பு பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட கணக்காளராகப் பணியாற்றியவர். இந்நூலில் 30 விடயத் தலைப்புகளின்கீழ் அரசியலமைப்புச் சட்ட ஏற்பாடுகள், செலவினங்கள், பாதிட்டுக்கான வகைப்படுத்தல், பொது மதிப்பீடு, வகைமாற்ற நடைமுறை, முற்பணக்கணக்கு நடவடிக்கைகள், ஆணைச்சீட்டுகள், கட்டு நிதி, நட்டங்கள், பொதுத் திறைசேரி, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர், வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர், உள்ளகக் கணக்காய்வு, நிதிக் கடமைகளைக் கையளித்தல், வருமானம் தொடர்பான நடவடிக்கைகள், பொதுக்கணக்குகள் குழு, கணக்காய் வாளர் தலைமையதிபதி, கொடுப்பனவு, படிவங்கள், சான்றிதழ்கள், வங்கி நடவடிக்கைகள், திணைக்களங்களின் புத்தகங்கள், வெளிநாட்டு உதவிகள், பெறுகை நடைமுறைகள், களஞ்சிய நடவடிக்கைகள், அச்சிடுதல், பல்தேர்வு வினா-விடை, சுருக்க வினா-விடை, கட்டமைப்பு வினா-விடை, சிறு குறிப்புகள், கணக்குகள் ஆகிய விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 13170).

700 கலைகள், நுண்கலைகள்

701 பொதுக்கலைகள்

11465

முஸ்லிம்கள் வளர்த்த அழகியற்கலைகள். சீ.எம்.ஏ.அமீன். கலகெடிஹேன: ரேஷ்மா பதிப்பகம், 348/1, வரபலான வீதி, திஹாரிய, 1வது பதிப்பு, 1996. (கொழும்பு 13: குவிக் கிராப்பிக்ஸ் பிரின்ட், 5-1/20, சுப்பர் மார்க்கெட், கொட்டஹேன).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vii, *129 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18x13 சமீ.,* ISBN: *955-95661-2-1.*

இந்நூல் இஸ்லாமிய சட்டக்கோப்பின் வழிநின்று அழகியற் கலைகளை ஆராயவில்லை. மாறாக வரலாற்று அடிப்படையில் அழகியற் கலைகளுக்கு முஸ்லிம்கள் வழங்கிய பங்களிப்பையே ஆராய்கின்றது. அழகியற் கலைகள் பற்றிய ஒரு பொதுப் பின்னணியோடு ஆரம்பமாகும் இந்நூலில் அரபெஸ்க், அரபு எழுத்தணிக் கலை, ஓவியக்கலை, இசைக்கலை போன்ற நான்கு முக்கிய கலைகளைப் பற்றிய விபரம் இடம்பெறகின்றது. இவை பல்வேறு இஸ்லாமிய நாடுகளிலும் பல்வேறு காலகட்டத்தில் வளர்ச்சியடைந்துள்ள விதம் பற்றி எடுத்துக்கூறுகின்றது. உலக அழகியற் கலைகளின் வரலாற்றோடு தொடர்பு படுத்தப்படுகின்றது. இஸ்லாம் சிற்பக்கலையை முற்றுமுழுதாகத் தடை செய்துள்ளமையையும் இசை ஓவியம் போன்ற கலைகளின் எல்லைகளை வரையறை செய்துள்ளமையையும் இந்நூல்வழியாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. அழகியல் கலைகள், அரபெஸ்க், அரபு எழுத்தணிக் கலை, ஓவியக் கலை, இசைக் கலை, நூலட்டவணை, சுட்டி ஆகிய ஏழு தலைப்புகளின்கீழ் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32592).

750 ஓவியக்கலை

11466

முன்னைச் சிங்கள ஓவியம். *நந்ததேவ விஜயசேகரா (ஆங்கில மூலம்), ஞானகலாம்பிகை இரத்தினம் (தமிழாக்கம்). கொழும்பு 5: வெளியீட்டுப் பிரிவு, அரச கரும மொழித் திணைக்களம், 5* B *பொன்சேக்கா தெரு, 1வது பதிப்பு, 1965. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).*

xxii, *134 பக்கம்,* i-xlvi *தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18 சமீ.*

அனுராதபுரம், தம்பளை, சீகிரி, பொலநறுவை, இந்தகலை ஆகிய இடங்களில் காணப்பட்ட மிகப் புராதன சிங்களச் சுவரோவியங்கள் பற்றிய விரிவானதும் நுணுக்கமானதுமான ஓவியங்களில் காணப்படும் கலைத்துவம் பற்றி மாத்திரமல்லாது அவ்வோவியங்கள் மூலம் புலப்படுத்தப்படும் மானிடவியல் அம்சங்களும் இங்கு நுணுகி ஆராயப்பட்டுள்ளது. சிங்கள ஓவியங்களுக்கூடாக சிங்கள இனம், பண்பாடு, ஆகியவற்றின் வளர்ச்சி பற்றியும் ஆராயும் ஆய்வு இது. தோற்றுவாய் (தலங்களின் வரலாறு, கண்டுபிடிப்பு, இற்றைநாள் நிலை, சிங்கள ஓவியம் பற்றிய ஆராய்ச்சிகள், காலவரையறை), சிங்களர்-பிறநாட்டினர் உறவின் பிற்களம், இந்திய உறவு பற்றிய சிறப்பான குறிப்பு, படிவக்கலையும் சிங்கள ஓவியங்களின் பொருளும், ஓவியங்களுக்குப் பிற்களமாய் அமைந்த சமூகவியல், ஓவியங்கள், சுவர்க்கவி, படிகள் ஆகியவை பற்றிய விவரங்கள் (சிகிரி, இந்தகலை, திம்புலாகலை-புலிகொடையும் மாரா வீதியும், அனுராதபுரம் - உருவன்வலி தாகபையின் கிழக்கு வாசல்கடை, பொலந்நறுவை வடகோவில், கல்விகாரை, இலங்காதிலக), கலை நுணுக்கும் திரவியமும் - நடையும் ஓவியரும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது மலர்வு, சமகால இந்திய ஓவியங்களுடன் சிங்கள ஓவியங்களை ஒப்பிட்டாய்தல்: காலம் ஆகிய தலைப்புகளில் இந்நூல் ஆறு இயல்களில் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியரால் தன் கலாநிதிப் பட்டத்திற்காக, Early Sinhalese Painting என்ற தலைப்பில் கல்கத்தா பல்கலைக்கழகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேட்டின் நூலுரு. இதன் ஆங்கில மூலப்பதிப்பு மஹரகம, சமன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருந்தது. (இந்நூல் இலங்கைத் தேசிய நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 505).

780 இசைக்கலை

11467

கீர்த்தனாமிர்த சாகரம். ஏ.கே.ஏரம்பமூர்த்தி. மீசாலை: சங்கீதபூஷணம் அ. கி.ஏரம்பமூர்த்தி, பிருந்தாவன், பங்களா வீதி, மீசாலை மேற்கு, 1வது பதிப்பு, 2008. (சாவகச்சேரி: ரம்யன் அச்சகம், வைத்தியசாலை வீதி, மட்டுவில் வடக்கு).

(20), 167 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ.

செந்தமிழ்க் கீதமாலை (1964), தெய்வக் கீதமாலை (1970), கீர்த்தன மாலை (1998), மழலைகள் கீதமாலை (2006) ஆகிய தமிழிசைப் பாடல் நூல்களை வழங்கிய சங்கீதபூஷணம் அ.கி.ஏரம்பமூர்த்தி அவர்களின் ஆறாவது பிரசுரமாக இது வெளிவந்துள்ளது. இதிலுள்ள 172 தமிழிசைப் பாடல்களில் பெரும்பான்மையானவை இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள ஆலயங்களைக் குறித்துப் பாடப்பெற்றவை. அருளாளர்கள் அருள்நிலைநின்று ஓதிய பாடல்கள் தொடக்கம் இன்று நம்மவர்கள் ஓதி உணரும்வகையில் பல ஆலயங்களையும் ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளையும், ஆலயங்கள் அமையப்பெற்ற ஊர்கள் பற்றியும் கீர்த்தனைகள் மூலம் வெளிக்கொணர்ந்திருக்கிறார். மீசாலையூரைச் சேர்ந்த சங்கீதபூஷணம், சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், இசைக்கவிஞர், சித்த வைத்திய சோதிடப் புலமையாளர் திரு அ.கி.ஏரம்பமூர்த்தி, கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தமிழிசையாக்கங்கள், சைவக் கதாப்பிரசங்கங்கள், முதலான பல துறைகளிலே விற்பன்னராகத் திகழ்பவர். சமயப்பணியும், இசைப்பணியும் தமிழ்ப்பணியும் செய்து வருபவர். (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் எல்- 10381).

11468

தமிழ் இசை. இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம். கொழும்பு 2: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய, கலாசார அலவல்கள் இராஜாங்க அமைச்சகம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன கட்டிடம், 9வது மாடி, 21, வொக்ஷால் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1991. (அச்சக விபரம் தரப்படவில்லை).

37 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21.5x14 சமீ.

திரு. பி.பி.தேவராஜ் அவர்களின் அமைச்சுக் காலகட்டத்தில் இந்து சமய, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சகம் 1990இல் தொடங்கப்பெற்ற தமிழ் இசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்க நிகழ்ச்சிகளின்போது வாசிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். முதல் மூன்று அரங்குகளிலும் படிக்கப்பெற்ற நான்கு கட்டுரைகள் இதில் காணப்படுகின்றன. தமிழிசை பற்றிய சில சிந்தனைகள் (எஸ்.கே. பரராஜசிங்கம்), பாபநாசம் சிவன் கீர்த்தனைகளும் தமிழிசையும் (சாரதா நம்பி ஆரூரன்), தமிழிசையும் நாட்டிய பாரம்பரியமும் (சுபாஷினி பத்மநாதன்), முத்துத் தாண்டவர் கீர்த்தனைகள் (அருந்ததி ஸ்ரீரங்கநாதன்) ஆகிய தலைப்புகளில் இவை இடம்பெறுகின்றன.(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11233).

791 நாட்டியக் கலை

11469

பரதநாட்டியக் கச்சேரி முறைமை. உதயகுமார் உமாமகேஸ்வரி. யாழ்ப்பாணம்: செல்வி உதயகுமார் உமாமகேஸ்வரி, பிள்ளையார் கோவிலடி, உடுவில் தெற்கு, மானிப்பாய், 1வது பதிப்பு, 2009. (யாழ்ப்பாணம்: வைரஸ் கிரப்பிக்ஸ், இணுவில்).

xi, 120 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 275., அளவு: 20.5x14 சமீ.

தஞ்சைச் சகோதரர்களின் கலைப்பணி, பரத நாட்டியக் கச்சேரி முறைமை (தோடயமங்களம், அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், கீர்த்தனம், அஷ்டபதி, ஜவளி, தில்லானா, சுலோகம், கௌத்துவம், மல்லாரு, புஸ்பாஞ்சலி), பரதநாட்டியக் கச்சேரியில் வாசிகா அபிநயத்தின் பங்கு, பரதநாட்டியக் கச்சேரியின்போது நர்த்தகி அறிந்திருக்கவேண்டிய விடயங்கள், பரதநாட்டியக் கச்சேரியில் ஆஹார்ய அபிநயத்தின் பங்கு, ஆகிய ஐந்து பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இன்றைய பரதநாட்டியக் கச்சேரியில் நாம் பயன்படுத்துகின்ற ஒழுங்குமுறையானது இற்றைக்கு 200ஆண்டுகளுக்கு முன் தஞ்சாவூரில் வாழ்ந்த முத்தமிழ் வித்தகர்கள் சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகிய நால்வரினதும் முயற்சியால் உருவாக்கப்பட்டது. இவர்களின் இம்முயற்சி பற்றிய வரலாறு இந்நூலின் முதலிரு அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளது. இந்நூலாசிரியை இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் நான்காண்டுகள் முறைப்படி கற்று, பரதநாட்டிய நுண்கலைமாணிப்பட்டம் பெற்றவர். வட இலங்கை சங்கீத சபையால் நடாத்தப்படும் ஆசிரியர் தரப் பரீட்சையிலும் சித்தி எய்தி நாட்டியகலா வித்தகர் பட்டமும் பெற்றவர். (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் எல்- 9912).

மேலும் பார்க்க: 11098

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

792 அரங்கியல், நாடகக்கலை

11470

உடல்: உலகத் தமிழ் நாடகவிழா 2016 சிறப்பிதழ். சி.ஏ.அருள்நாயகம் (நிர்வாக ஆசிரியர்),எம்.அரியநாயகம் (ஆசிரியர்). பிரான்ஸ்: GIFT, 30, rue de Tourville 93600, Aulnaysous Bois, 1வது பதிப்பு, மார்கழி 2016. (பாரிஸ் 75010: Print Express, 41 Rue Louis Blanc).

144 பக்கம், வண்ணப் புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17 சமீ.

உலகத் தமிழ் அரங்கையும் அரங்கியலாளர்ளையும் ஒருங்கிணைக்கும் "உடல்" காலாண்டிதழ் தனது வரலாற்றுப் பதிவாக "உலகத் தமிழ் நாடகவிழா 2016" பெருவிழாவை பாரிஸ் மாநகரில் ஆர்ஜெந்தை (Salle Jeanvillar g Bd Heloise, 95100 Argenteuil) நகர மண்டபத்தில் 2016 செப்டெம்பர் 25,26ஆம் திகதிகளில் நடாத்தி முடித்தபின்னர் அந்நிகழ்வு பற்றிய அறிக்கைகளுடன் வெளியிட்டுள்ள அரங்கியல் சிறப்பிதழ் இதுவாகும். பவளவிழாக் கண்ட நம்மவர் ஏ.சீ.தாசீசியஸ் அவர்கள் (முல்லை அமுதன்), தீண்டாமேளம் என்றார்கள் தற்போது தரணி எங்கும் எடுத்துச் செல்கிறோம் (மதுவந்தி), சிற்பியின் நரகம் கவிதாவின் நரகமா? (சஞ்சயன்), உலகத்தமிழ் நாடகவிழா 2016 (அறிக்கை), பத்தண்ணா பற்றிய விருந்துரைகள்(பேராசிரியர் அரசு, ஏ.சீ.தாசீசியஸ்), தருமனும் ஏகலைவனுமாய் (பரராசா), புலம்பெயர்ந்த நாட்டில் நடனம் சார்ந்த எனது பார்வை (இவோன் ரொறிங்ரன்), ஒரு இயக்குநர் உருவாகுகின்றார் (என்.எஸ்.தனபாலசிங்கம்), தமிழ்த் திரைப்பயணத்திற்கு தனிப்பாதை வகுப்போம் (ஈழன் இளங்கோ), வானொலி நாடக நூல்கள்: சில மனப்பதிவுகள் (எஸ்.எழில்வேந்தன்), நான்காம் ஆசிரமம்: ஆர். சூடாமணியின் மூலச்சிறுகதையின் அரங்க வடிவம் (கே.எஸ்.கருணாபிரசாத்), சாதனை படைத்த பாரீஸ் உலகத் தமிழ் நாடக விழா (நயினை விஜயன்), அவுஸ்திரேலிய சிறுவர் அரங்கு (எஸ்.யோகானந்தம்) ஆகிய ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

11471

தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின் நாடகமும் பதிவுகளும். க.பாலேந்திரா. லண்டன்: தமிழ் அவைக்காற்று கலைக்கழகம், 107, Somervell Road, Harrow HA2 8TZ, இணை வெளியீடு, கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

135 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-555-0.

ஜேர்மனியரான பேர்டோல்ட் பிரெக்ட் (Bertolt Brecht 1898-1956) என்ற நாடகாசிரியர் 1930களில் The Exception and the Rule என்ற நாடகத்தை யுகதர்மம் என்ற பெயரில் தமிழாக்கம் செய்துள்ளனர். ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையே உள்ள வர்க்க முரண்பாடுகளையும் முதலாளித்துவ சமுதாய அமைப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் ஏழைகளே பாதிக்கப்படுபவர்களாகவும் குற்றமிழைத்தவர்களாகவும் உள்ள அவல நிலைமையையும் யுகதர்மம் அழுத்தமாகப் பதிவுசெய்கின்றது. பேர்டோல்ட் பிரெக்டின் கற்றலுக்கான நாடகம் என்ற "அறிவுறுத்தும் நாடகங்கள்" வகையைச் சார்ந்த நாடகம் இது. 1979இல் கட்டுப்பெத்தையில் திரு பாலேந்திரா அவர்களால் முதலில் மேடையேற்றம் கண்டது. தொடர்ந்து 29 தடவைகள் மேடையேற்றம் கண்டு, 2017இல் லண்டனில் சிறுவர்களால் நடிக்கப்பெற்று 08.10.2017 அன்று மீண்டும் மேடையேற்றம் கண்டவேளையில் இந்நூல் வெளியிடப்பட்டது. நாடக எழுத்துருவுடன், க.பாலேந்திரா, சி.ஜெயசங்கர், மு.கண்ணன், இராஜதுரை லெஸ்லி ரவிச்சந்திரா, ப.ஸ்ரீஸ்கந்தன் ஆகியோரின் நினைவுரைகளும், நாடகம் தொடர்பான பல்வேறு விமர்சனங்களும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. விமர்சனக் குறிப்புகளை அ.யேசுராசா, தெளிவத்தை யோசப், ஏ.ரி. பொன்னுத்துரை, கே.எஸ்.சிவகுமாரன், ஐ.சண்மகலிங்கம், நெல்லை க.பேரன், கலைச்செல்வன், மு.புஷ்பராஜன், சி.சிவசேகரம், எஸ்.சிவநாயகம் ஆகியோர் எழுதியுள்ளனர். பின்னிணைப்பில் பாலேந்திராவின் நாடகங்களின் வெளியீட்டுத் தகவல்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61617).

11472

தேம்ஸ் நதிக்கரையின் பூவரசம் பூக்கள். அரங்காற்றுக் குழு. லண்டன்: அரங்காற்றுக் குழு, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (லண்டன்: வாசன் அச்சகம், மிச்சம்).

64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

2004 ஜனவரி 17, 18ஆம் திகதிகளில் லண்டனில் இடம்பெற்ற நாடகவிழாவின்போது வழங்கப்பட்ட சிறப்பு மலர். ஆடுகளம், மயான காண்டம் -2, அம்மையே அப்பா ஒப்பிலா மணியே ஆகிய மூன்று நாடகங்களின் அரங்கேற்றமும் பாரிஸ் கலைஞர்களின் சாம்சன் வழங்கும் அருந்ததியின் "இன்னொரு மனிதன்" நாடகமும், ரகுநாதன் வழங்கும் தா.பாலகணேசனின் "பொற்கூண்டு" நாடகமும் அன்றைய தினங்களில் இடம்பெற்றிருந்தன. பொதுவான அரங்கியல் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதுடன் மேடையேற்றப்படவுள்ள நாடகங்களின் பின்னணி பற்றியும் தகவல்களைப் பகிர்ந்துகொள்வதாக இம்மலர் உருவாக்கப்பட்டுள்ளது.

11473

நல்லூர் நாடகத் திருவிழா 2015: கட்டுரைகள், நாடக எழுத்துருக்கள். தேவநாயகம் தேவானந்த் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: செயல்திறன் அரங்க இயக்கம், 203/5, கச்சேரி நல்லூர் வீதி, பாணன்குளத்தடி, 1வது பதிப்பு, மார்ச் 2016. (யாழ்ப்பாணம்: கரிகணன் நிறுவனம், இல. 681, காங்கேசன்துறை வீதி).

x, 228 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 23x18 சமீ., ISBN: 978-955-7664-04-0.

மீண்டும் தொடங்கும் மிடுக்காக நல்லூர் நாடகத் திருவிழா (தே.தேவானந்த்), வரலாற்றுச் சாதனையாக நல்லூர் நாடகத் திருவிழா (தே.தேவானந்த்), செயல்திறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்க இயக்கத்தின் நல்லூர் நாடகத் திருவிழா புதிய பண்பாட்டு மறுமலர்ச்சிக்கான நகர்வுகள் (மா.சின்னத்தம்பி), நல்லூரில் ஒரு நாடகத் திருவிழா: ஒரு மகிழ்வான அனுபவம் (இ.கிருஷ்ணகுமார்), யாழ்.நகரில் நடந்துமுடிந்த மகத்தான நாடக விழா (சூரியசேகரன்), சமூக அக்கறைகொண்ட ஒரு ரசிகனின் பார்வையில் செயற்திறன் அரங்கச் செயற்பாட்டாளர்களின் நாடகத் திருவிழா (பாலசிங்கம்), Give Happiness and deserve Happiness (கந்தையா ஸ்ரீகணேசன், எஸ்.காயத்திரி), நல்லூர் நாடகத் திருவிழா- ஆவணி 2015 (பா.செவ்வேள்), என் கலைப் பயணத்தின் பொக்கிஷங்கள் (பார்த்தீபன்), ஏகாந்தம்-ஒரு பார்வை (சிவ. பரமேஸ்வரி), நல்லூர் நாடகத் திருவிழா-ஒரு பார்வை (பரதன்), ஆகிய கட்டுரைகளுடன் நாடக எழுத்துருக்களாக சிரிப்பு மூடை (சிறுவர் நாடகம்), ஏகாந்தம் (வேடமுக நாடகம்), வேடதாரிகள் (நவீன நாடகம்), வெண்மை எழில் (கவிதை நாடகம்), கல்லறைக் கவிதைகள் (கவிதை நாடகம்), ஆகிய ஐந்து நாடகங்களும், பத்திரிகை வெளியீடுகள், வடக்கு மாகாண ஆளுநர் உரை என்பனவும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 250176).

11474

புலம்பெயர் நாடக எழுத்துருக்கள்: தமிழ் அரங்கின் புதிய பரிமாணம். ஏ.ஜி. யோகராஜா. தமிழ்நாடு: அன்னம், மனை எண் 1, நிர்மலா நகர், தஞ்சாவூர் 613 007, 1வது பதிப்பு, அக்டோபர் 2014. (தமிழ்நாடு: அகரம், தஞ்சாவூர் 7).

301 பக்கம், விலை: இந்திய ரூபா 300., அளவு: 24x18 சமீ., ISBN: 978-93-80342-702.

போரின் துயரம், தாய்நாடு குறித்த ஏக்கம், புலம்பெயர்ந்த அந்நியச் சூழல், இன மற்றும் கலாச்சார வேறுபாடுகள் முன்வைக்கும் நெருக்கடியான வாழ்வில், உள்ளும் புறமும் சிதைந்துபோன ஒரு சமூகம் தன்னை ஆற்றுப்படுத்த மேற்கொண்ட கலாரீதியான முயற்சிகளே இந்நாடகப் படைப்புகளாகும். இந்நூலில் நாடகப் பிரதிகளை மட்டுமின்றி, மூன்று ஆண்டுகால நாடகப் பயிற்சி நெறிகளையும் மிக நேர்த்தியான மொழிநடையில் யோகராஜா அவர்கள் பதிவுசெய்திருக்கிறார். நாடகம் பற்றிய கற்கை நெறிகளையும். பயிற்சி முறைகளையும் மிகத் தெளிவாக எடுத்துரைக்கும் இக்கட்டுரைத் தொகுப்பு, அரங்கியல் மாணவர்களுக்கான சிறந்ததொரு ஆவணமாக அமைந்துள்ளது. ஏ.சீ.தாசீசியஸ் அவர்கள் ஆசியுரையையும், அன்ரன் பொன்ராஜா அறிமுகவுரையையும், ஜெயரஞ்சனி ஞானதாஸ் முன்னுரையையும், சண்முகராஜா, வேலு சரவணன், பளைராஜன் ஆகியோர் சிறப்புரைகளையும், ஏ.ஜீ.யோகராஜா ஆசிரியருரையையும் மாதவி சிவலீலன் அணிந்துரையையும் வழங்கியுள்ளனர். ஆற்றுகைக்கான எழுத்துருக்கள் என்ற பிரதான பகுதியில், வில்லியம் தெல்-கூத்து நாடகம், காடு-சிறுவர் நாடகம், மதயானையை மடக்கிய சிற்றெறும்பு-சிறுவர் கதா நிகழ்வு, தூர விலகிச் செல்லும் நட்சத்திரங்கள்-சிறுவர் கவிதா நிகழ்வு, வெள்ளாடுகளின் தந்திரம்- சிறுவர் நாடகம், கடலம்மா, பனிமுகடுகளின் புதிய சுவடுகள்- மாணவர் நாடகம், மேற்குத் திசையில் சிவப்பு வானம்-மாணவர் நாடகம், பூவிதழ் மேனியர்-இசை நாடகம், மயான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டம்-2, O2- கொதிநிலை, Mutter Meer (கடலம்மா)- இரு மொழி நாடகம், Wilhelm Tel (வில்லியம் தெல்)- இருமொழி நாடகம், சூரியன் உதிப்பதில்லை ஆகிய 14 எழுத்துருக்களும் இடம்பெற்றுள்ளன. படைப்பாளிகள், ஆற்றுவோர், பார்ப்போர் ஆகியோரின் பார்வையில் அமைந்த யோகராஜா பற்றியும் அவர்தம் பணிகள் பற்றியுமான மனப்பதிவுகள் இந்நூலின் இறுதிப் பகுதியாக இடம்பெற்றுள்ளது. இதில் ஏ.ஜி.யோகராஜா, அ.மங்கை, அழகு குணசீலன், எஸ். புண்ணியமூர்த்தி (அரிகரபுத்திரன்-சுவிஸ்), இரா.சிவரத்தினம். வா.வி.பாஸ்கர், கே.எம்.ரீ.பாலகுமார், சக ரமணன், செ.மகோற்கடமூர்த்தி, பிரபா-சுதா, நா. கஜேந்திரசர்மா, சாமி சுரேஸ் ஆகியோரின் மனப்பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

11475

யாழ்ப்பாண நாடகப் பாரம்பரியத்தில் பெண் கலைஞர்கள்: வரலாற்றுப் பதிவின் மறுபக்கம். மார்க்கண்டு அருள்சந்திரன். தெல்லிப்பளை: பத்தினியம்மா நிதியம், 1வது பதிப்பு, ஜுன் 2014. (யாழ்ப்பாணம்: அன்ரா டிஜிட்டல் பிரின்டர்ஸ், இல. 356, கஸ்தூரியார் வீதி).

58 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-41403-0-1.

ஆசிரியர் 2010இல் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற வட மாகாணத் தமிழ் இலக்கிய விழாவில் வாசிக்கப்பட்ட "நவீன மற்றும் பாரம்பரிய நாடகங்களில் கலைஞர்களாகப் பெண்கள்" என்ற ஆய்வுக் கட்டுரையின் விரிவாக்கமாகும். நூலாசிரியர் கிளிநொச்சி மாவட்ட கலாசார உத்தியோகத்தராகப் பணியாற்றுபவர். தான் ஆர்வத்துடன் ஈடுபடும் அரங்கியல் துறையுடன் நில்லாது, காலஞ்சென்ற கலைஞர்களின் கலைப்பணிகளை வரலாற்றுநோக்கில் ஆவணப்படுத்தும் "பெட்டகம்"என்ற பெயரில் ஆவணத்தொகுப்புப் பணியினையும் மேற்கொண்டு வருகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61657).

793 திரைப்படக்கலை

11476

இலங்கை சினிமாவின் ஆரம்பம். தம்பிஐயா தேவதாஸ். கொழும்பு 13: வித்தியாதீபம் பதிப்பகம், 90/9, புதுச் செட்டித் தெரு, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 13: சன் பிரின்டெக்).

xiii, 100 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 18.5x13 சமீ., ISBN: 978-955-7252-00-1.

இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் தினக்குரல் வாரமலரிலும் வீரகேசரியின் கலைக்கேசரியிலும் சங்கமத்திலும் வெளிவந்துள்ளன. இலங்கையில் சினிமா அறிமுகம். சிங்களச் சினிமாவின் உதயம், முதலாவதாகத் தயாரிக்கப்பட்டும் நான்காவதாக வெளிவந்த படம், இலங்கைச் சினிமாவில் இந்தியக் கலைஞர்கள், சிங்களச் சினிமாவை வளர்த்த இலங்கைத் தமிழர்கள், இலங்கைச் சினிமாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை-மகன்-பேரன், எழுபதுகளில் இலங்கைச் சினிமா, இலங்கையில் உருவான ஸ்ரூடியோக்கள், இலங்கை சினிமாவை வளர்த்த எம்.மஸ்தானும், ஏ.எஸ்.ஏ.சாமியும், எம்.வி.பாலனும் அன்ரன் கிரகரியும், ஒரே கதை இரண்டு படங்கள், சிங்களப் படங்களில் தமிழ் முஸ்லீம் நடிகைகள் ஆகிய 12 தலைப்புக்களில் இவை ஒழுங்குபடுத்தித் தனி நூலாக அமைக்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் த.தேவதாஸ் யாழ்ப்பாணம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கொழும்பு கணபதி இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் இவர் ஊடகத்துறையிலும் ஈடுபடுபவர்.

11477

தமிழ்த் திரைப்படக் களஞ்சியம்: தொகுதி இரண்டு. செ.ஜோர்ஜ் இதயராஜ், நிழல் எட்வேட் சந்திரா (தொகுப்பாசிரியர்கள்). கனடா M5S 2W9: ஜீவா பதிப்பகம், ரிப்ளக்ஸ் அச்சகம், 1108, வே வீதி, தொரன்ரோ, 1வது பதிப்பு, மார்கழி 1992. (கனடா M5S 2W9: ஜீவா பதிப்பகம், ரிப்ளக்ஸ் அச்சகம், 1108, வே வீதி, தொரன்ரோ).

xxxii, 192 பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: கனேடிய டொலர் 20., அளவு: 21x14 சமீ.

தமிழ்த் திரைப்படங்களின் அறுபது ஆண்டுக்கால வளர்ச்சியும் பெயர் அகர வரிசையும் இந்நூலின் பிரதான அம்சங்களாகும். அறுபதாண்டுக் காலத்தில் தமிழில் 4000 திரைப்படங்கள் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளனவென்றும் அவற்றுள் வேற்றுமொழிப் படங்கள் 800 உள்ளனவென்றும் வருடாந்தம் 100 நேரடித் தமிழ்ப்படங்கள் சராசரியாக எடுக்கப்பட்டுள்ளனவென்றும் இந்நூலின் வழியாக அறியமுடிகின்றது. இந்நூலின் முதலாவது பகுதி தமிழ்த் திரைப்பட 60அண்டுகால வளர்ச்சி/வெள்ளிவிழாக் காலப் படங்கள்/ஒரே பெயரில் பலதடவை வெளிவந்த படங்கள்/பொன் விழாக்காலப் படங்கள்/வெள்ளியின் முடிவில் பொன்னின் ஆரம்பத்தில்/வைரவிழாக்காலப் படங்கள் என தனித்தனி இயலில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாவது பகுதியில் தமிழ்த் திரைப்படங்களின் அகரவரிசை அறையுஞ் செய்தி/ஒரே சொல்லை முதற்பெயராகக் கொண்டு வெளிவந்தவை/தமிழ் இலக்கிய இதிகாச அறிவு வளர்த்த திரைப்படங்கள்/தமிழ்த் திரைப்படங்கள் மக்களுக்குத் தந்த செய்திகள்/ தமிழ்த் திரைப்படக் காட்சிகளின் நடிகர் அட்டவணை ஆகிய இயல்களில் விபரங்கள் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13515).

11478

தமிழ்த் திரைப்படக் களஞ்சியம்: தொகுதி பதினொன்று. செ.ஜோர்ஜ் இதயராஜ், நிழல் எட்வேட் சந்திரா (தொகுப்பாசிரியர்கள்). கனடா M5S 2W9: ஜீவா பதிப்பகம், ரிப்ளக்ஸ் அச்சகம், 1108, பே வீதி, தொரன்ரோ, 1வது பதிப்பு, ஆடி 1993. (கனடா M5S 2W9: ஜீவா பதிப்பகம், ரிப்ளக்ஸ் அச்சகம், 1108, வே வீதி, தொரன்ரோ).

xxxi, 312 பக்கம், புகைப்படங்கள், விலை: கனேடிய டொலர் 20., அளவு: 20x14 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் திரைப்படப் பாடல்கள் (அகப்பாடல்கள்) உள்ளடங்கிய முதலாம் புத்தகம். இதில் 422 பாடல்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. தொகுப்பாசிரியர் அறிமுகவுரை, திரைப்படப் பாடல்களில் உள்ள செய்யுள் இலக்கிய மரபுகள், இத்தொகுதியில் இடம்பெற்ற திரைப்படப் பாடல்களின் அகரவரிசை, தொகுதியில் உள்ள அகத்திணை சார்ந்த திரைப்படப் பாடல்கள், 154 திரைப்படங்களில் இடம்பெற்ற திரைப்பாடல்களின் அட்டவணை, திரைப்படக் காட்சிப் படங்களின் அட்டவணை, திரைப்படக் காட்சிப் படங்கள் மூலமாக அறியப்படும் நடிகர்கள் ஆகிய பிரிவுகளின்கீழ் இந்நூல் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14588).

11479

நமக்கான சினிமா. மாரி மகேந்திரன். தமிழ்நாடு: வம்சி புக்ஸ், 19, டி.எம்.சாரோன், திருவண்ணாமலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை: விக்னேஷ் பிரின்ட்ஸ்).

118 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-908193-6-7.

இந்நூலில் திரைப்படத்துறை சார்ந்த 19 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. நம்முடைய அடையாளத்துடன் நம் ஈழத்துச் சினிமாவை உருவாக்கும்போது அதைத் தமிழகத்தில்கூடத் திரையிடமுடியும். நமக்கான சந்தைவாய்ப்பை உள்ளூர் தாண்டி வெளிநாடுகளிலும் பரந்துவாழும் தமிழர்களின் தேசத்தை நோக்கி திரையிட முடியும். ஈழத்துக்கு மட்டுமே அதற்கான அருகதை உண்டு. இதனை நாம் இன்னும் உணராதவர்களாக இருக்கின்றோம். இவ்வாறு வித்தியாசமான சிந்தனைகளைப் பதிவுசெய்கிறார் நூலாசிரியர். ஈழத்துத் தமிழ்ச் சினிமா சார்ந்த புரிதலும் உரையாடலும் பன்முகரீதியில் எழுச்சிபெறாத நிலையில் இந்நூல் இத்துறைசார்ந்த ஆக்க இலக்கிய மரபுக்கு புதுவளம் சேர்க்கும் நூலாகவும் அமைந்துள்ளது. மாரி மகேந்திரன் மலையகத்தின் பொகவந்தலாவை என்னும் ஊரில் 1974இல் பிறந்தவர். தமிழகத்தில் உதவி இயக்குநராகப் பணியாற்றி திரைப்பட நுட்பங்களைக் கற்ற இவரது "அறையின் தனிமை" என்ற முதலாவது குறும்படம் தமிழக குறும்பட விழாவில் சிறந்த குறும்படமாகத் தேர்வு பெற்றிருந்தது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48543).

11480

மறக்க முடியாத வில்லன்கள். ச.சுந்தரதாஸ். சென்னை 600017: கலைஞன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2014. (சென்னை 600021: எம். கே.கிராப்பிக்ஸ்).

152 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 120., அளவு: 21x14 சமீ., ISBN: 978-93-83869-07-7.

தமிழ்த் திரைப்பட உலகில் ரசிகர்களின் மனதில் இடம்பிடித்த திரைப்பட வில்லன் நடிகர்களான பி.எஸ்.வீரப்பா, டி.எஸ்.பாலையா, எம்.ஜி.சக்கரபாணி, எஸ்.ஏ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜன், டி.கே.ராமச்சந்திரன், வி.கே.இராமசாமி, எஸ்.வி.ரங்காராவ், ஓ.ஏ.கே. தேவர், பாலாஜி, எஸ்.வி.ராமதாஸ், மேஜர் சுந்தரராஜன், எம்.ஆர்.ராதா, ஆர்.எஸ். மனோகர், எஸ்.ஏ.அசோகன், எம்.என்.நம்பியார், ஸ்ரீகாந்த் ஆகிய 16 பேர்கள் பற்றிய பல்வேறு சுவையான திரையுலகச் செய்திகள் இந்நூலாசிரியரால் புகைப்படங்களுடன் முன்வைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் கலைமகள், ராணி, குங்குமம், சாவி இதழ்களில் எழுதியுள்ள ச.சுந்தரதாஸ் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவர். இலங்கையில் வெளிவந்த கதம்பம் மாத இதழில் 1975 முதல் சிறுகதை எழுத்தாளராக அறிமுகமானவர். தினகரனில் இவர் எழுதிவந்த "சுந்தர் பதில்கள்" பிரபல்யமானவை. தினகரன் பத்திரிகையின் திரைப்படத் துறைச் செய்தியாளராக பத்தாண்டுகள் வரையில் பணியாற்றியவர். தற்போது புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழ்ந்துவருகிறார்.

796 உடற்பயிற்சி, விளையாட்டுகள்

11481

இலங்கையின் கிரிக்கட் வரலாறும் புத்துயிர்ப்பும். பிரைட் புக் சென்டர். கொழும்பு 11: பிரைற் புக் சென்டர், எஸ்.27, 1வது தளம், த.பெ.எண் 162, கொழும்பு மத்திய சந்தை கூட்டுத் தொகுதி, 1வது பதிப்பு, 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xxxii, 136 பக்கம், அட்டவணை, புகைப்படங்கள், விலை: ரூபா 75., அளவு: 21x14.5 சமீ.

கிரிக்கெற் சார்ந்த 146 கேள்விகளும் அதற்கான பதில்களுமாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. முதல் 32 பக்கமும் புதிய அணித்தலைவராகும் அதிரடி ஆட்டக்காரர் பற்றிய நோக்கு யாது? சனத் ஜெயசூரியாவின் தலைமை பற்றி பழைய தலைவர் அர்ஜுன ரணதுங்கவின் கருத்து யாது? முரளிதரனின் பந்துவீச்சு முறையானதா? இலங்கை அணி புத்துயிர்பெறச் செய்யவேண்டியது யாது? இலங்கையின் புதிய பயிற்சியாளர் யார்? போன்ற இன்னோரன்ன கேள்விகளும் அதற்கான பதில்களுமாக உள்ளன. தொடரும் 136 பக்கங்களிலும் 146 கிரிக்கெற் சார்ந்த பொதுவான கேள்விகளும் அவற்றுக்கான பதில்களும் காணப்படுகின்றன. இந்நூலுக்கான நூலியல் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக தலைப்புப் பக்கம் இடம்பெறவில்லை. அதனால் நூலாசிரியர் பற்றிய அடிப்படைத் தகவல்களைப் பெறமுடியாதுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39654).

11482

உத்தியோகபூர்வ வொலிபோல் விதிமுறைகள். P.U.C.பிரியதர்ஷன். பசறை: P.U.C.பிரியதர்ஷன், ஆசிரியர், பதுளை/பசறை தமிழ் மகாவித்தியாலயம், தேசிய பாடசாலை, 1வது பதிப்பு, 2006. (பதுளை: எஸ்.கே.அச்சகம், புவக் கொடமுல்ல).

(17), 143 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14 சமீ., ISBN: 955-98092-0-2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டின் சிறப்பியல்புகளும் ஆட்டம் ஆடப்படும் முறையும், வொலிபோல் வரலாறு, இலங்கையில் வொலிபோல் ஆகிய அறிமுகப் பக்கங்களின் பின்னர் முதலாம் பகுதியான "ஆட்டம்" தொடர்கின்றது இதில் வசதிகளும் உபகரணங்களும் (விளையாடற் பிரதேசம், வலையும் கம்பங்களும், பந்துகள்), பங்குபற்றுவோர் (அணிகள், அணியினைத் தலைமைதாங்கிச் செல்வோர்), விளையாடல் ஒருங்கமைப்பு (புள்ளி ஒன்றினைப் பெறல், சுற்று ஒன்றில் வெற்றி பெறல், மற்றும் ஆட்டத்தில் வெற்றி பெறல், விளையாட்டின் அமைப்பு, வீரர்களுக்கான பிரதியீடுகள்), விளையாடற் செய்கைகள் (விளையாட்டின் நிலைமைகள், பந்தினை விளையாட்டில் ஈடுபடுத்தல், வலைக்கு அருகில் ஆடப்படும் பந்து, வலைக்கு அருகிலுள்ள வீரர், பணித்தல், தாக்குதல், தடுத்தல்), இடைநிறுத்தல்களும் தாமதங்களும் (முறையான ஆட்ட இடைநிறுத்தல்கள், ஆட்டத்தினை தாமதப்படுத்தல், விசேட ஆட்ட இடைநிறுத்தல்கள், இடைவேளைகள் மற்றும் விளையாடற் பாகங்களின் மாற்றங்கள்), லிபரோ வீரர் (லிபரோவின் கடமைகள், உபகரணங்கள், லிபரோவுடன் தொடர்புடைய விளையாடற் செய்கைகள்), பங்குபற்றுவோரின் நடத்தைகள் (நடத்தைக்குரிய தேவைகள், தவறான நடத்தை மற்றும் அதற்குரிய தண்டனைகள்) என்பன விளக்கப்பட்டுள்ளன. இரண்டாவது பகுதியில் "மத்தியஸ்தர்கள், அவர்களின் பொறுப்புகள், மற்றும் உத்தியோகபூர்வ சைகைகள்" விளக்கப்பட்டுள்ளன. பகுதி மூன்றில் "வரைபடங்கள்/ விளக்கப்படங்கள்" இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44408).

11483

மின்ரோநெற் என்ற வொலிபோல். த.ம.தேவேந்திரன். வவுனியா: உடற்கல்வி மன்றம், தேசிய கல்வியியற் கல்லூரி, 1வது பதிப்பு, மார்கழி 1997. (கொழும்பு 6: கார்த்திகேயன் பிரைவேற் லிமிட்டெட், 501/2 காலி வீதி).

(6), 56 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 60., அளவு: 20.5x15 சமீ.

ஆரம்பத்தில் Minto Net என்று அழைக்கப்பட்ட வொலிபோல் எனப்படும் விளையாட்டு பற்றிய பல்வேறு தகவல்களை இந்நூல் வழங்குகின்றது. சர்வதேச விதிமுறைகள், தேசிய சர்வதேச வரலாறு, 10ம் 11ம் ஆண்டு மாணவர்களுக்கான பாடவிதானத்துக்கு அமைவான செய்முறை, போதனா முறை என்பன இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. 6 அடி உயரத்தில் இரு கம்பங்களுக்கிடையே வலை கட்டப்பட்டு வீரர்களை இரு குழுக்களாகப் பிரித்து வலையின் இருபறமும் அனுப்பிவைத்து, வலைக்கு மேலால் 25-27 அங்குல சுற்றளவும், 21 அவுன்ஸ் நிறையும் கொண்ட பந்தை கைகளால் தட்டி எதிர்ப் பக்கங்களுக்கு அனுப்பக்கூடிய முறையில் இவ்விளையாட்டு இடம்பெறுகின்றது. 50 அடி நீளம், 25 அடி அகலம் கொண்ட மைதானத்தில் இது விளையாடப்பெறும். தமிழில் கரபந்தாட்டம் என மற்றொரு விளையாட்டும் வழக்கில் உள்ளதால் இதனை தமிழிலும் வொலிபோல் என்றே இலங்கையில் குறிப்பிடலாயினர். இந்நூலாசிரியர் வவுனியா தேசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியியற் கல்லூரியின் உடற்கல்வித் துறை விரிவுரையாளரும், வவுனியா மாவட்ட வலைபந்தாட்டச் சங்கத்தின் தலைவருமாவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39066).

11484

மெய்வல்லுநர் விளையாட்டுக்கள். த.ம.தேவேந்திரன். வவுனியா: உடற்கல்வி மன்றம், தேசிய கல்வியியற் கல்லூரி, 1வது பதிப்பு, கார்த்திகை 2007. (வவுனியா: மல்ரிவிஷன் அச்சுக் கலையகம், இல. 77, முதலாம் குறுக்குத் தெரு).

56 பக்கம், விளக்கப் படங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் (Athletics) வரலாற்றை சுருக்கமாகவும், புதிய விதிகளைத் தெளிவாகவும் இந்நூல் வழங்குகின்றது. வலைபந்தாட்ட வீரர்களின் பண்புகள், நுட்பதிட்பங்கள், அவை தொடர்பான குறிப்புகள் என்பவற்றை விளக்கப்படங்களின் உதவியுடன் வழங்குகின்றது. திறன்கள், திறன்களைப் பயிற்றுவித்தல், பயிற்சி, திட்டமிடல், போன்ற விடயங்களும் உதாரணங்களுடன் இந்நூலில் காணமுடிகின்றது. வரலாறு, சர்வதேச விதிகள் எனப் பல்வேறு விடயங்களை இந்நூல் விளக்குகின்றது. இந்நூலாசிரியர் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் உடற்கல்வித் துறை விரிவுரையாளரும், வவுனியா மாவட்ட வலைபந்தாட்டச் சங்கத்தின் தலைவருமாவார்.

11485

விசையுறு பந்தினைப்போல்(கட்டுரைகள்). சி.விமலன். பருத்தித்துறை: சின்னராஜா விமலன், உயில் வெளியீடு, திரவிய பவனம், மனோகரா, அல்வாய், 1வது பதிப்பு, மார்ச் 2014. (யாழ்ப்பாணம்: கலைமகள் ஒப்செட் பிரிண்டர்ஸ்).

108 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-44157-1-3.

அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்ட விமலன், யாழ். பண்பாட்டு அமைச்சின் விளையாட்டுத்துறை அலுவலக உதவி முகாமையாளராகவும், ஜீவநதி சஞ்சிகையின் உதவி ஆசிரியராகவும், நமது ஈழநாடு பத்திரிகையின் ஒப்புநோக்காளராகவும், பத்தி எழுத்தாளராகவும் பணியாற்றியவர். இவர் அவ்வப்போது எழுதிய 24 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சிலையும் பிழையும், காலம் தந்த பரிசு, போற்றுதலாய் அமையட்டும் தெரிவுகள், வெற்றிக்கொடி கட்டு, அர்த்தமற்ற அர்ப்பணங்கள், தன்னிலை உணர்ந்தால் முன்னிலை, ஏன் இந்த முரண்பாடு என இன்னோரன்ன தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த "நமது ஈழநாடு" பத்திரிகையில் தொடர்ந்து மூன்றாண்டுகளாக எழுதிய விளையாட்டு அரங்கம் என்ற பத்தியில் இடம்பெற்ற கட்டுரைகளில் தேர்ந்த கட்டுரைகள் இவை. சர்வதேச விளையாட்டுத் தொடர்களில் ஏற்பட்ட சர்ச்சைகள், தனிநபர் போட்டியாளர்/விளையாட்டு வீரர் குறித்தும், காலத்துக்குக் காலம் அறிமுகப்படுத்தப்படும் புதிய விதிகளின் சாதக/பாதகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்தும் எழுதிய கட்டுரைகளே இவை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 55327).

11486

வொலிபோல்: கரப்பந்தாட்டம். த.ம.தேவேந்திரன். வவுனியா: முத்தமிழ் கலாமன்றம், 1வது பதிப்பு, மார்கழி 1993. (ராகம: ஒலிம்பியாட் பதிப்பகம், Rifqa's Publishers, 1/1 St. Mary's Road, Mahabage).

(8), 60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

கைப்பந்தாட்டம் அல்லது கரப்பந்தாட்டம் (volleyball) என்பது ஒரு அணிக்கு ஆறு பேர் வீதம், வலைக்கு இருபுறமும் நின்று கைகளால் பந்தைத் தட்டி எதிர்ப்பக்கம் அனுப்பும் விளையாட்டாகும். பந்தை எதிரணியினரால் மூன்றே தட்டுதல்களில் திருப்பி அனுப்ப முயலவில்லை என்றாலோ, அவர்கள் பகுதிக்குள் தரையில் விழுந்தாலோ, மற்றைய அணிக்கு ஒரு புள்ளி வழங்கப்படும். எந்த வீரரும் கோட்டைத் தாண்டி வலையருகில் கால் வைத்தாலோ, வலையில் உடலின் எந்தப் பகுதியாவது பட்டாலோ, தப்பாட்டமாக (Foul) கருதப்படும். வலையின் மேல்மட்ட உயரம் ஆண்களுக்கு 2.43 மீட்டராகவும், பெண்களுக்கு 2.24 மீட்டராகவும் இருக்கும். முழங்கை வரையிலும், விரல்களாலும் பந்தை தட்டி மேலெழும்பச் செய்யலாம். எழும்பிய பந்தை எதிரணி பக்கம் ஓங்கி அடிக்க (Spike-அறைந்தடித்தல்) உள்ளங்கையால் அடிக்கலாம். ஒருவர் தொடர்ந்து ஒரு முறைக்கு மேல் பந்தை தட்டக் கூடாது. பந்து தங்கள் பக்கம் வந்ததும் மூன்று தட்டுதலுக்கு மிகாமல் எதிரணி பக்கம் திருப்பியனுப்ப வேண்டும். பந்தை முதலில் தட்டுதல் "சர்வீஸ்" (தொடக்க வீச்சு) எனப்படும். அது எல்லைக் கோட்டிற்கு வெளியே இருந்து வலையில் மோதாமல் எதிரணியினரின் பகுதிக்கு செலுத்த வேண்டும். எதிரணி பக்கத்தில் இருந்து வரும் பந்தை வலை அருகிலேயே தடுத்தாடல் blocking எனப்படும். கைப்பந்தாட்டம் அமெரிக்க விளையாட்டுப் பயிற்சியாளர் வில்லியம் மோர்கன் என்பவரால் 1895ல் உருவாக்கப்பட்டது. ஒலிம்பிக்கில் 1964ம் ஆண்டு இவ்விளையாட்டு, ஆண் - பெண் இரு பாலாருக்குமாக சேர்த்துக் கொள்ளப்பட்டது. பீச் வாலிபால் எனும் கடற்கரையில் ஆடும் வாலிபால் ஆட்டத்தில் ஒரு அணிக்கு இருவர் மட்டுமே ஆடுவார்கள். 1940களில் அமெரிக்காவில் ஆடப்பட்டு வந்த இவ்வகை தற்போது பல நாடுகளிலும் பரவி, ஒலிம்பிக்கில் 1996ம் ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்டது. விளையாட்டுத்துறை விரிவுரையாளரான நூலாசிரியர் வவுனியா, இரம்பைக்குளத்தைச் சேர்ந்தவர். கரப்பந்தாட்டம் பற்றிய விரிவான பயிற்சிக்கான நூலாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

800 இலக்கியம்

800. (1) இலக்கிய அமைப்புகள்

11487

சங்க வரலாறும் சைவப்புலவர் அறிமுகமும். மலர் வெளியீட்டுக் குழு. யாழ்ப்பாணம்: அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம், 125, அரசடி வீதி, கந்தர்மடம், 1வது பதிப்பு, ஜுன் 2002. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

(4), 51 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்க 42ஆவது ஆண்டு (1960-2002) நிறைவு விழா வெளியீடு. இதில் சங்கத்தின் வரலாறும் சைவப் புலவர்களின் அறிமுகமும் 15 இயல்களில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. பதிப்புரை, செயற்குழு, சைவப்புலவர் சங்க வரலாறு, சைவப் புலவர் அறிமுகம், சங்க அமைப்பு விதிகள், சைவப்புலவர் வகுப்பு, சைவப்புலவர் தேர்வுப் பாடவிதானம், தேர்வு விண்ணப்பப் படிவம், ஆய்வுக் கட்டுரையும் பட்டமளிப்பும், சைவசமய தீட்சை பெறுதல், அங்கத்தவர் விண்ணப்பப் பத்திரம், சைவப்புலவர் தொகை அட்டவணை, புராண படனப் போட்டிப் பெறுபேறுகள், கௌரவப் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றோர், சங்கத்தை வளர்த்த சான்றோர்கள் ஆகிய இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23767).

11488

முச்சங்கம். ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை 1: முத்தமிழ் நிலையம், 75 வரதா முத்தியப்பன் தெரு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1947. (சென்னை: த ரோயல் பிரின்டிங் வேர்க்ஸ்).

48 பக்கம், விலை: 8 அணா, அளவு: 17x12 சமீ.

தமிழர் வளர்த்த முச்சங்கங்கள் பற்றிய வரலாற்றை இந்நூல் தெளிவுறக் கூறுகின்றது. தோற்றுவாய், சங்க வரலாறு, பழைய வரலாற்றாசிரியர்கள் இருவகையினர், இவ்வகை வரலாறுகள் எகிப்தில் காணப்படுவதற்கும் நமது நாட்டில் காணப்படாமைக்கும் காரணம், சங்ககாலத்தைப் பற்றிய முடிவு, நூல்நிலையங்கள், இந்திய நாட்டில் நூல்நிலையங்கள், தமிழ்நாட்டில் ஆட்சிமுறை சங்க முறையாக இருந்தது, கடல்கோள், தமிழ்ச் சங்கம்-பிராமணர் வாதம், சங்கப் பலகை, பட்டி மண்டபம், தமிழ் வடமொழிவாதம், அகத்தியர், தொல்காப்பியர், சங்க நூல்கள், சில குறிப்புகள் ஆகிய 17 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 1272).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11489

வகவப் பதிவுகள்: வலம்புரி கவிதா வட்டத்தின் நிகழ்வுகளின் சுவடுகள். மேமன் கவி, என். நஜ்முல் ஹுசைன். கொழும்பு 10: வலம்புரி கவிதா வட்டம், 239/2, சித்தராம மாவத்தை, மாளிகாவத்தை, 1வது பதிப்பு, 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).

72 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-3994-00-4.

1981இல் ஆரம்பிக்கப்பட்ட வலம்புரி கவிதா வட்டம் (வகவம்) ஈழத்துத் தமிழ்க் கவிதை உலகில் புதிய பாய்ச்சலைத் தோற்றுவித்தது. தான் கடந்து வந்த பாதைகளின் சுவடுகளை ஒரு தொகுப்பாக இந்நூலில் இவ்வமைப்பு ஆவணப்படுத்தியுள்ளது. இவ்வகவப் பதிவுகளில் கவியரங்களுக்குத் தலைமை தாங்கியோர், சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டோர், அரங்குகள், கவியரங்குகளில் கவிதை வாசித்தோர், போன்ற தகவல்களையும் அவற்றுடன் தொடர்புடைய புகைப்படங் களையும் இப்பதிவுகளில் உள்ளடக்கியிருக்கின்றனர். இடைப்பட்ட சில காலத்தில் தம் பணிகளை இடைநிறுத்தியிருந்தபோதிலும் 2013 முதல் மீண்டும் முழு வேகத்துடன் இவ்வமைப்பு இயங்கத் தலைப்பட்டுள்ளது. இந்நூலின் தொகுப்புக் குழுவில் டாக்டர் தாஸிம் அகமது, ஈழகணேஷ், இளநெஞ்சன் முர்ஷிதீன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60861).

11490

விஷ்ணு புத்திரர் வெடியரசன் வரலாறு: வெளியீட்டு விழாச் சிறப்பு மலர். க.அப்புக்குட்டி, க.முத்தையா, சு.பஞ்சலிங்கம் (செயற்குழு). சுழிபுரம்: குகன் குலச் சங்கம், 1வது பதிப்பு, ஆவணி 1988. (தெல்லிப்பழை: அம்பிகா அச்சகம், குரும்பசிட்டி).

18 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

விஷ்ணு புத்திரர் வெடியரசன் வரலாறு என்ற நூல், மு.சு.சிவப்பிரகாசம் அவர்களால் 1988 இல் எழுதப்பெற்று தொல்புரம், அகில இலங்கை வெடியரசன் கலா மன்றத்தினரால் வெளியிடப்பட்டிருந்தது. இலங்கைத் தமிழரிடையே காணப்படும் ஒரு சமுதாயப் பிரிவினரான முற்குகரிடையே வழங்கி வரும் நாட்டார் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்த இந்நூல் வெளியீடு ஒரு விழாவாகக் கொண்டாடப்பெற்றது. இந்நிகழ்வினை பண்டிதர் க.சச்சிதானந்தன் தலைமையேற்று நடத்தினார். வெளியீட்டுரையை பேராசிரியர் கா.சிவத்தம்பியும், ஆய்வுரையை கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்களும் ஆற்றினர். இந்நிகழ்வின்போது வெளியிடப்பெற்ற சிறப்பு மலர் இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10342).

801 சிறுவர் இலக்கியங்கள்

11491

சிறுவர் கலை இலக்கியங்கள். சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples Park, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vi, 102 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-685-033-8.

சிறுவர் பாடலும் குழந்தைச் சந்தமும், சிறுவர் கதைகள், சிறுவர் கற்பனைகள், சிறுவர் மனவெழுச்சியைத் தூண்டும் கலையாக்கங்கள், சிறுவரும் நிறங்களும், சிறுவர் ஓவியங்கள், ஆடலும் சிறுவரும், சிறுவர் அரங்கு, சிறுவருக்கான பொம்மை அரங்கு, சிறுவர் திரைப்படங்கள், சிறுவருக்கான கார்ட்டூன் படங்கள், அனிமேசன் அழகியல், சிறுவரும் கைவினையும், சிறுவர் விளையாட்டுக்கள், சிறுவர் விளையாட்டுத் துண்டங்கள், சிறுவர் நூலகம், சிறுவர் பூங்கா, முன்பருவக் குழந்தைக் கல்வி, பெற்றோர் செயலியம், சிறுவரின் நடத்தை முகாமைத்துவம் ஆகிய 20 தலைப்புகளின் கீழ் சிறுவர் கலை இலக்கியங்கள் பற்றிய இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60865).

11492

ரண் கெகுறு: சிறுவர் கலைக் களஞ்சியம். இந்திக குடாஹெட்டி (பதிப்பாசிரியர்). என்.ராமலிங்கம், றிஸ்வான் சேகு முகைதீன் (ஆசிரியர் குழு). கொழும்பு 10: லேக் ஹவுஸ் வெளியீடு, அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனம், 35, டீ.ஆர். விஜேவர்த்தன மாவத்தை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 10: அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனம் ANCL).

200 பக்கம், சித்திரங்கள், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x21 சமீ.

லேக் ஹவுஸ் குழுமத்தினால் வெளியிடப்பட்டுள்ள சிறுவர் கலைக்களஞ்சியம் இதுவாகும். அறிவைத் தேடும் முயற்சியில் சிறுவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் கவர்ச்சிகரமான முறையில் அழகிய வர்ணக்கலவையுடன் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. மேற்படி பத்திரிகை நிறுவனத்தினால் "நவயுகய" என்ற மாதாந்தப் பத்திரிகை வெளியிடப்பட்டு வருகின்றது. அப்பத்திரிகையுடன் இணைக்கப்பட்டு 16 பக்க பின்னிணைப்பாக சிறுவர் கலைக்களஞ்சியம் ஒன்று தொடர்ந்து வெளியிடப்பட்டு வந்தது. அந்தப் பதிவுகளே பின்னர் தொகுக்கப்பெற்று இந்நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளன. அணுக்குண்டு முதல் பன்சன் சுவாலை வரையிலான 68 அத்தியாயங்களில் இக்கலைக்களஞ்சியம் விரிந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 58069).

801. (1) சிறுவர் பாடல்கள், கவிதைகள்

11493

ஆராரோ கண்ணா: சிறுவர் பாடல்கள். ஐதுரூஸ் ஏ.ஹஸன். கிண்ணியா: ஜீ பதிப்பகம், இல.21, அல்-அக்ஸா 1ம் தெரு, 1வது பதிப்பு, 2015. (கிண்ணியா 4: குளோபல் அச்சகம்).

28 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 25x17.5 சமீ., ISBN: 978-955-4841-02-4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிண்ணியாவின் பெருமையை இலங்கை முழுவதும் பரப்பிவரும் ஆற்றல்மிகு கவிஞர் கலாபூஷணம் ஹஸன்ஜியின் மற்றுமொரு சிறுவர் இலக்கியப் படைப்பாக ஆராரோ கண்ணா என்ற சிறுவர் பாடல் தொகுப்பு அமைகின்றது. ஓசை வடிவம், எதுகை மோனை, எளிமையான மொழிநடை, கருத்தியல் எனச் சிறுவர் இலக்கியத்துக்குரிய பண்புகளைத் தாங்கி நிற்கும் இந்நூல் சிறுவர்களின் சிந்தனையைப் பட்டைதீட்டும் பல கவிதைப் பாக்களைக் கொண்டுள்ளது. சிறுவர் கவிதைகள் அவர்களது உள்ளங்களில் ஆனந்த அலைகளை ஏற்படுத்தவேண்டும் என்றும் சிறிய சொற்களில் இனிய ஓசையுடன் பாடப்படும் பாடல்கள் அவர்களைக் குதூகலப்படுத்தி, சிந்தனைக்குப் பெருவிருந்தளிக்கும் எனவும் நம்பும் இக்கவிஞர் தன் படைப்புகள் மூலம் அதனை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

11494

தங்கக் கடையல்(சிறுவர் கவிதைத் தொகுதி). க.வீரகத்தி. கொழும்பு: வரையறுக்கப்பட்ட எம்.டி.குணசேன அன் கோ, 217 ஒல்கொட் மாவத்தை, 1வது பதிப்பு, 1971. (கொழும்பு: வரையறுக்கப்பட்ட எம்.டி.குணசேன அன் கொம்பனி அச்சகம், 217 ஒல்கொட் மாவத்தை).

(4), iv, 92 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18.5x12 சமீ.

பல்லினமான பொருள் தலைப்புகளில் 57 சிறுவர்களுக்கேற்ற பாடல்கள். இவை இறை வணக்கம், தமிழ், பாதிப் பாட்டிலேயே, பாப்பா என்னுயிர், பாலர் ஆடும் பந்து, பூ, வண்டு, வண்ணாத்திப் பூச்சி, ஒளி, வலிவும் வனப்பும், சாய்ந்தாடு பாப்பா, மலையோ மலை, மேகம், மழை, குமிழி, தம்பி, ஆறு, மாம்பழம், பழமும் தமிழும், அம்புலி, வான ஊர்தி அழகைப் பார், புன்னகை வேண்டும், பலூன், பச்சைக்கிளி, மைனா, புள்ளி ஆட்டுக்குட்டி, சிலந்தி, பாவை, நந்தவனத்து நாட்டியம், நுங்கு, தங்கக் கடையல், குழந்தை, கண்மணியே கேள் நீ, பூ-2, குமரலீலை, தொல்காப்பியன், பவணந்தியார், சிவஞான முனிவர், வசந்த காவியம், பங்கய மங்கை, ஈழம் எங்கள் நாடு, எல்லாம் தமிழ், சிலேடை, விதைப்பு, களைகட்டல், அறுவடை, கைத்தொழில், முற்படு புறப்படு செயற்படு, குடிகாரக் குஞ்சித்தம்பி, அப்போலோ 8, ஞானக்கறவை, தைப்பொங்கல், காந்தித் தெய்வம், மாமேதை லெனின், நாவல ஞாயிறு, ஆத்திசூடி ஆகிய தலைப்புகளில் இப்பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. பண்டிதர் க. வீரகத்தி இலங்கையின் வடக்கு மாகாணத்தில் கரவெட்டி கிழக்கில் வசித்தவர். தமிழ் இலக்கண ஆசிரியர். கவீ என்ற புனைபெயரில் மரபு கவிதைகள் எழுதியவர். தங்கக் கடையல் அவருடைய முதலாவது கவிதை நூல். கணியன் பூங்குன்றனார் செப்பிய யாதும் ஊரே யாவரும் கேளிர் என்கிற ஓர் உலகத்தினை, இன வாதங்களினால் சிதிலமடைந்து கொண்டிருக்கும் இலங்கையில் வாழ்ந்துகொண்டே, சாத்தியமாக்கலாம் என்ற எண்ணத்தில் "ஒருலகம்" (One World Movement) என்ற இயக்கத்தினை நடத்தியவர். தனது வாணி கலைக் கழகம் என்ற கல்விச்சாலை ஊடாக ஏராளமான மாணவர்களுக்கு, தமிழ் இலக்கியமும், இலக்கணமும் போதித்தவர். யாழ்ப்பாண பல்கலைகழக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா இவரது மாணாக்கராவார். 1968ல் திருநெல்வேலி சைவ சித்தந்த கழகம் நடாத்திய திருவள்ளுவர் தினப்போட்டியில் "பரி உரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணகுறிப்புகள்" எனும் இவரது கட்டுரை பரிசு பெற்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14336).

11495

துணிந்து நில் (சிறுவர் பாடல்கள்). கலாபூஷணம் பீ.ரீ.அஸீஸ். கிண்ணியா 7: பாத்திமா றுஸ்தா பதிப்பகம், இல. 46/3, பெரியாற்று முனை, 1வது பதிப்பு, டிசம்பர் 2015. (கிண்ணியா 4: என்.என்.பிரிண்டர்ஸ், பார்க் வீதி).

28 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 24.5x18 சமீ., ISBN: 978-955-0715-19-0.

சிறுவர் இலக்கியத்துறையில் பல விருதுகளை வென்ற இவ்வாசிரியர் சிறுவர்களின் மனோ இயல்புகளை மிகத் தெளிவாக அறிந்து அதற்கேற்ற விதத்தில் பாடல்களை இயற்றியுள்ளார். சிறுவர்களிடம் தன்னம்பிக்கை, துணிச்சல் என்பவற்றை வளர்க்கமுனையும் இவரது பாடல்கள் காலத்தின் தேவையாகும். இத்தொகுதியில் நிலா நிலா வா வா, விளையாடுவோம், மலரும் மொட்டுக்கள், இலங்கைத் திருநாடு, எனக்குச் சொந்தமா?, துணிந்து நில், முயல்குட்டி, ஏளனமாய் நினைத்தது, பாரில் அழிவே மிஞ்சும், துள்ளிக் குதிக்குது, வண்ணத்துப் பூச்சி, புது வரவு, சுத்தம் சுகம் தரும், கொக்கு வெள்ளைக் கொக்கு, குழந்தை எங்கள் செல்வம் ஆகிய 15 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

11496

பாலர் செந்தமிழ் பாட்டமுதம். பா.அமிர்தநாயகம். யாழ்ப்பாணம்: பா.அமிர்தநாயகம், மதிமலர் இல்லம், இல. 15, இராசாவின் தோட்டம் ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (கொழும்பு 13: ACA Publications, 55 St. Lucia's Street).

(8), 59 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 20x14.5 சமீ.

சிறுவர்களது அறிவு, அனுபவம், சூழல், என்பவற்றுடன் தொடர்புடைய 37 தலைப்புகளில் அமைந்த குழந்தைப் பாடல்களின் தொகுப்பு. குருவியும் மானும், காக்காப் பாட்டு, தவளையும் சிறுமியும், காகமும் கோழியும், நிலாவும் சிறுமியும், புள்ளிப் புள்ளி மான்குட்டி, அணிலும் மாங்கனியும், பட்டுவண்ணப் பூச்சி, கோவிலிலே மணியடிக்குது, பள்ளிக்கூடம் போவோம், பாட்டி சொன்ன கதை, எங்கள் வீட்டு நாய்க்குட்டி, கன்றுக்குட்டி சொன்ன கதை, தந்திரமுள்ள முயல், செங்கரும்புப் பொங்கல், காலைக்காட்சி, சிட்டுக்குருவி பறந்து வா, கிளியே கிளியே வந்திடுவாய், கூக்கூக் கூக்கூ குயிலாரே, வல்லவர் செய்திட்ட நல்ல கப்பல், எங்கள் வீட்டுத் தோட்டப் பூக்கள், மீயா மீயா மீயா மீயாவே, மாலை நேரம், குஞ்சம் போட்ட குடை, சிங்கத்தை ஏமாற்றிய முயல், கோச்சுக்குள்ளே கொய்யாப்பழம், தங்கத் தாத்தா, வெள்ளை நிற ஆட்டுக்குட்டி, மணிக்குயிலே மணிக்குயிலே, பட்டணம் கூட்டிப்போ சின்னமாமா, ஆனை தடவிய குருடர், தங்கக் குவியல் உனக்கேது, கொய்யாப்பழம், வேடன் பிடித்து விடுவான், பன்னிரண்டு பாரக்கா, பாட்டியும் வடையும், யாருக்கும் தீங்கு நீ செய்யாதே ஆகிய தலைப்புகளில் இப்பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29053).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11497

மழலைத் தமிழ் அமுதம்: நினைவிற்கு ஓரிதழ். சி.அப்புத்துரை (தொகுப்பாசிரியர்). கொழும்பு 5: திருமதி வாசுகி பாலச்சந்திரன், 15 B, டென் கரோலிஸ் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2003. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

62 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

பண்டிதர் சி.அப்புத்துரை அவர்களால் தேர்ந்து தொகுக்கப்பெற்ற குழந்தைகளுக்கான பாடல்கள். யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த அமரர் சின்னத்துரை பாலச்சந்திரன் அவர்களின் அந்தியேட்டி நிகழ்வின்போது 12.04.2003 அன்று வெளியிடப்பட்ட நினைவிதழ். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31014).

11498

மனதைக் கவரும் மழலைப் பாடல்கள். பேபி சுதாகரன். வவுனியா: திருமதி பேபி சுதாகரன், இல. 200/17, நாகபூஷணி வாசா, சிவன் கோவில் வீதி, தோணிக்கல், 1வது பதிப்பு, 2013. (வவுனியா: வாணி கணனிப் பதிப்பகம், இல. 85, கந்தசாமி கோவில் வீதி).

72 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 25 x17.5 சமீ.

இந்து தர்மாசிரியரும் சைவப் புலவருமான ஆசிரியை திருமதி பேபி சுதாகரன் இயற்றிய மழலைப்பாடல்கள் இவை. கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஆரம்ப கற்கைநெறிப் பிரிவைச் சேர்ந்த இவ்வாசிரியர் மழலைச் சிறார்களின் மனதைக் கவரும் ஆக்கப் பாடல்களாக பல்வேறு தலைப்புகளில் இவற்றை உருவாக்கியுள்ளார். வகுப்பறைச் செயற்பாடுகளில் ஊக்கத்துடன் ஈடுபட இப்பாடல்கள் உறுதுணையாகின்றன. இறை வணக்கம், அம்மா, அப்பா, ஆசிரியர், ஆசை, கொக்கு, ஒற்றுமை, சித்திரைப் புத்தாண்டு, நீர், காற்று, மல்லிகை, புகைவண்டி என இன்னோரன்ன ஐம்பது பாடல்களை இத்தொகுதியில் காணமுடிகின்றது.

11499

மாணவர்களுக்கு மணிக்கவிதைகள். யோகா. யோகேந்திரன். திருக்கோவில்: திருமதி யோகா. யோகேந்திரன், அதிபர், குமர வித்தியாலயம், திருக்கோவில் கல்விக் கோட்டம், 1வது பதிப்பு, 2003. (அக்கரைப்பற்று: மல்ட்டி ஒப்செற் அச்சகம்).

48 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 50., அளவு: 20.5x14.5 சமீ.

அம்மா என்ற கவிதையுடன் ஆரம்பிக்கும் இக்கவிதைத் தொகுப்பு நாற்பது மணிக் கவிதைகளை உள்ளடக்கி இறைவன் என்னும் கவிதையுடன் முடிவடைகின்றது. மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், விளையாட்டு, அன்பு, சுகாதாரம், சுத்தம், ஆரோக்கியம் முதலிய பல்வேறு விடயங்களை இக்கவிதைகள் மூலம் ஆசிரியர் மாணவர் மனதில் பதியம் வைக்கின்றார். ஒவ்வொரு கவிதையும் மாணவருக்கு ஏதோ ஒரு செய்தியை பதியவைக்க முயல்கின்றது. சில கவிதைகள் இசையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடக்கூடியவாறமைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34233).

11500

வண்ணக் கனவு: சிறுவர் பாடல். ஆரணி (இயற்பெயர்: அ.சிவபாலசுந்தரன்). வவுனியா: தமிழ்க் குடில் வெளியீடு, குருமண்காடு, 1வது பதிப்பு, ஐப்பசி 2011. (வவுனியா: வாணி கணினிப் பதிப்பகம், இல. 85, கந்தசாமி கோவில் வீதி).

22 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 19.5x13 சமீ.

அ ஆ இ ஈ, வண்ணக் கனவு, மழைக்காலம், பாபுவின் பச்சைக்கிளி, ஊஞ்சல் ஆடுவோம், தேர்த் திருவிழா, ரயில் வண்டி, கணனி, குட்டிப் பயலே எழுந்தோடு, மழை வருது ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 10 சிறுவர் பாடல்களை இந் நூல் கொண்டுள்ளது. யாழ்ப்பாணம், தீவகத்தில், சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட அம்பலவாணர் சிவபாலசுந்தரன், பாடசாலைக் காலம் முதல் கவிதைத் துறையில் ஈடுபாடுகொண்டவர். இவர் புவியியல் சிறப்புக்கலைமாணிப் பட்டம் பெற்றவர். இலங்கை நிர்வாகசேவை முதலாம் தர அதிகாரியாக செட்டிக்குளத்திலும், பின்னர் பிரதேச செயலாளராக வவுனியாவிலும் பணியாற்றியவர்.

801. (2) சிறுவர் நாடகங்கள்

11501

அமைதிப் பூங்கா: சிறுவர் நாடகங்கள். யோ.யோண்சன் ராஜ்குமார். யாழ்ப்பாணம்: திருமதி றுஜந்தா யோன்சண் ராஜ்குமார், முத்தமிழ் மன்றம், திருக்குடும்ப கன்னியர் மடம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2013. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

(3), x, 149 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-4833-09-5.

யாழ். திருக்குடும்ப கன்னியர்மட ஆசிரியரும் திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநருமான நூலாசிரியர் எழுதியுள்ள எட்டு சிறுவர் நாடகங்கள் இத்தொகுப்பிலுள்ளன. அமைதிப் பூங்கா, கடமை வீரன், உயிர்களின் நண்பர்கள், ஒற்றுமையே பலம், சிங்கத்தை வென்ற அன்பு, புத்திமான், நீலமலர், ஆமையும் நண்பர்களும் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. ஒற்றுமையை வலியுறுத்தல், உயிர்களிடத்தே அன்புகொள்ளல், கடமையைச் சரிவரச் செய்தல், ஏற்றத்தாழ்வின்றி நட்புக் கொள்ளுதல், மன்னித்து வாழுதல், அன்பினால் பகையை வெல்லுதல், ஆபத்தில் அறிவுடன் செயற்படுதல் போன்றதான சிறுவர்களுக்குரிய சிறந்த கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் இந்நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன. நாடகங்களுக்கேற்ற ஓவியங்களும் ஆங்காங்கே ஓவியர் டொமினிக் ஜீவாவின் கைவண்ணத்தில் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

801. (3) சிறுவர் கவிதா நாடகங்கள், காவியங்கள்

11502

பஞ்சாமிர்தம்: சிறுவர்களுக்கான ஐந்து இசை நாடகங்களின் தொகுப்பு. மறவன்புலோ செல்லம் அம்பலவாணர். கொழும்பு 15: செல்லம் அம்பலவாணர், இல. 478/28, அளுத்மாவத்தை வீதி, 1வது பதிப்பு, ஐப்பசி 2015. (கொழும்பு 6: கே.ஜே. என்டர்பிரைஸஸ், 63, விகாரை லேன்).

xxiii, 110 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-42626-1-4.

சிறுவர்க்கான அரங்க ஆற்றுகையையும், கிராமியக் கலைகளையும் இணைத்து உருவாக்கப்பட்ட சிறுவர் நாடகங்கள் ஐந்தின் தொகுப்பு இது. சிறுவர்களுக்குப் பரிச்சயமான "மூத்தவனுக்கா முதற்கனி" (பிள்ளையார் மாம்பழம் பெற்ற கதை), "காத்தவராயன்" (காத்தான்கூத்து), "தீர்ப்பு" (குரங்கு அப்பம் பிரித்த கதை), "கட்டைவிரல்" (எகலைவனின் கதை) போன்றவற்றையும் சிறுவர்களுக்கேயுரித்தான பேசும் மிருகங்களைப் பிரதான பாத்திரங்களாகக்கொண்டு இன்றைய கால கட்டத்தில் சிறு வயதிலிருந்து ஒவ்வொருவரும் அறிந்திருக்கவேண்டிய இயற்கைச் சமநிலையைக் கருப்பொருளாகக் கொண்ட "வாழு வாழவிடு" என்ற கற்பனைக் கருவுடனான ஆக்கம் ஆகிய ஐந்து சிறுவர் இசை நாடகங்களை இந்நூல் கொண்டுள்ளது. நாடகங்களின் இறுதியில் அந்நாடகம் கூறும் நீதியுரை, எளிமையான வகையில் இரத்தினச் சுருக்கமாக தரப்பட்டுள்ளன. காட்சிகளுக் கிடையே நெறியாழ்கை, தயாரிப்பு, காட்சியமைப்பு இன்னோரன்ன குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

801. (4) சிறுவர் சிறுகதைகள்

11503

குழந்தைகளுக்கு ஈசாப் நீதிக் கதைகள். இளங்கம்பன் (தொகுப்பாசிரியர்), குலபதி ஆறுமுகம் கந்தையா (பதிப்பாசிரியர்). கொழும்பு 11: அஷ்டலட்சுமி பதிப்பகம், 320, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 1995. (கொழும்பு 13: கௌரி பிரின்டர்ஸ், 207, ஆட்டுப்பட்டித் தெரு).

48 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 30., அளவு: 20x13.5 சமீ.

ஈசாப் கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர். கி. மு. 600 அளவில் வாழ்ந்தவர். இவர் ஒரு அடிமையாவார். இவர் கூறிய நீதிக்கதைகள் ஈசாப்பின் நீதிக்கதைகள் எனப்படுகின்றன. இந்த நீதிக் கதைகள் உலகின் பெருமளவு மொழிகளில் இன்றளவில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இந்நூலில் ஈசாப்பின் நீதிக் கதைகளுட் சில சித்திரங்களுடன் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21659).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11504

சிறுவர் கதைக் கொத்து: பாலர் தமிழ்.இராசையா ஸ்ரீதரன். யாழ்ப்பாணம்: கலாபூஷணம் இ.ஸ்ரீதரன், நாச்சிமார் கோவிலடி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2015. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ மாருதி பிரின்டர்ஸ், 555, நாவலர் வீதி).

(2), 26 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 135., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-1475-00-3.

வண்ணப் பதிப்பாகப் படைக்கப்பட்டுள்ள இந்தச் சிறுவர் இலக்கியத்தில் காகமும் வடையும், பொன் முட்டையிடும் வாத்து, சிங்கமும் எலியும், புத்தி மிகுந்த காகம், முயலும் ஆமையும், முதலையும் குரங்கும், நரியும் திராட்சையும், போகாமல் வந்தேனே, குரங்கும் தொப்பியும், உண்மையான நட்பு, பொறுமையின் பெருமை ஆகிய 11 சிறுவர் கதைகள் இடம்பெற்றிருக்கின்றன.

11505

நல்ல நல்ல கதைகள். உடுவை எஸ்.தில்லை நடராஜா. கொழும்பு 4: இந்து சமய அறநெறிக் கல்விப் பிரிவு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு, 248, 1/1 காலி வீதி, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(8), 90 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ., ISBN: 978-955-9233-39-8.

இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் கற்பித்தலை மேம்படுத்தும் பொருட்டு கதைகூறல், கற்பித்தல் ஆகிய செயற்பாடுகளை வினைத்திறனுடையதாக்கும் நோக்கத்துடன் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் மனதில் ஆழமாகப் பதியவேண்டிய நல்ல பல கருத்துக்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. ஒவ்வொரு கதையும் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் அமைந்துள்ளன. இந்த நல்ல நல்ல கதைகளை உருவாக்கிய நூலாசிரியர் சிறுவர் உளவியலைப் புரிந்துகொண்டு அவர்களை நல்வழிப்படுத்தும் நோக்குடன் அவற்றை எழுதியுள்ளார். ஆலயம் தொழுவது சாலவும் நன்று, இறைவனின் அருள், கண்கண்ட தெய்வங்கள், எல்லா உயிர்கள் மேலும் அன்பு செலுத்துதல், மூத்தோர் வார்த்தை அமிர்தம், உணவளித்தல் உயர்வானது, நேர்மையின் நன்மை, உதவி புரிதல் நல்லது, சகோதர ஒற்றுமை, பள்ளிப்பாடங்களை தினமும் வீட்டிலும் படித்தல், முளையில் தெரியும் வளரும் பயிர்கள், போட்டியில் தோற்றுப்போனவனின் கதை, கண்ணனின் சுற்றுலா, நாதனின் நண்பர்கள், தீயார் நட்பு ஆகிய தலைப்புகளில் இதிலுள்ள 15 கதைகளும் எழுதப்பட்டுள்ளன.

11506

படித்து மகிழ பயன்மிகு பத்துக் கதைகள். சோ.ராமேஸ்வரன். கொழும்பு 5: திருமதி செ.ராமேஸ்வரன், 41/2 சித்ரா ஒழுங்கை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1997. (மகரகம: தரஞ்ஜி பிரின்டர்ஸ், நாவின்ன).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 21.5x13.5 சமீ., ISBN: *955-96039-2-2.*

நற்பண்புகளை வலியுறுத்தும் சிறுவர் கதைகள். இவை, கடவுளும் கடமையும், ஒன்றுபட்டால்..., நேர்மை வெல்லும், உண்மையே நிலைக்கும், கேலி கேடு விளைவிக்கும், முன்கோபம் கூடாது, சேமிப்புக்கும் ஓர் எல்லையுண்டு, பணஆசை, பொறாமையின் விளைவு, வல்லவனுக்கு வல்லவன் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31172).

11507

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் பால பாடக் கதைகள். *ஆறுமுக நாவலர் (மூலம்), சு.செல்லத்துரை (தொகுப்பாசிரியர்). கொழும்பு 4: இந்து சமய அறநெறிக் கல்விப் பிரிவு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு, 248, 1/1 காலி வீதி, 1வது பதிப்பு, 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

47 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ.

நாவலரின் பாலபாடம் சிறுவர் நூல்களில் இரண்டாம் பாலபாடத்திருலிருந்து 22 கதைகளும் மூன்றாம் பாலபாடத்திலிருந்து ஏழு கதைகளுமாக மொத்தம் 29 கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. எப்போது கரை ஏறுவாய், விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை, பெரிய மலையை எடுப்பேன், நீ எப்படிக் கடன் தீர்ப்பாய்? வால் மட்டும் நுழையவில்லை, யோக்கியன் யார்? பாட்டனுக்கு கஞ்சி வார்த்த ஓடு பிதாவுக்கு, ஒரு சூடு போட்டால் ஒருவேளை பிழைப்பான், ஐந்து பணத்தில் வீட்டை நிரப்பவேண்டும், இராமாயணப் பிரசங்கம் ஒரு ஆட்சுமை, உடம்பில் இறகு இல்லையாம் ஆமையில் தானாம், அன்னம் வாயில் நுழைந்தால் குழந்தை பிழைக்குமா? சோடிக் காகங்களைப் பார்த்தவனுக்கு அதிக லாபம், ஐயையோ அங்கே ஆட்கொல்லி, செல்லும் செல்லாததைச் செட்டியாரிடம் கேளுங்கள், பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக்கெடும், எட்டாத பழம் புளிக்கும், கடவுள் இருக்கும் இடத்தைக் காட்டு, பல்லக்குத் தூக்குவதுதான் எங்கள் வேலை, ஒனறுபட்டால் உண்டு வாழ்வு, நான் களவெடுத்த இடத்தில் இவனைக் காணவில்லை, மெய்ம்மை, சற்புத்திரர்களே ஆவரணம், புத்தியுள்ள தீர்ப்பு, உண்மையின் பயன், பேராசை பெருந்துயர், செய்ந்நன்றி கொன்றவர் கெடுவர், கல்வியின் பயன், பொய் வேடம் ஆகிய 29 கதைகள் இந்நூலில் தொகுக்கப் பட்டுள்ளன.

801. (41) சிறுவர் மொழிபெயர்ப்பு சிறுகதைகள்

11508

கடைசிப் பயணச் சீட்டும் வேறு கதைகளும். *யுனெஸ்கோ (ஆங்கில மூலம்), ந.வாகீசமூர்த்தி (தமிழாக்கம்). பத்தரமுல்ல: யுனெஸ்கோவிற்கான இலங்கைத் தேசிய ஆணைக்குழு, கல்வி உயர்கல்வி அமைச்சு, இசுருபாய, 1வது பதிப்பு, 1993. (கொழும்பு: அரசாங்க அச்சுத் திணைக்களம்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

viii, (5), 147 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-9043-05-6.

இந்நூல் இளைஞர்களுக்கானஆசிய/பசிபிக் இலக்கியத் தொடரில் பகுதி ஒன்றாக வெளியிடப்பட்டது. ஜப்பானில் உள்ள யுனெஸ்கோவிற்கான ஆசிய பண்பாட்டு நிலையம் இளைஞர்களுக்காக வெளியிட்ட The Last Ticket and Other Stories என்ற ஆங்கிலச் சிறுகதைத் தொகுப்பின் தமிழாக்கமாகும். இந்நூலிலுள்ள 10 கதைகளும் ஆசியாவிலும் பசிபிக் பிரதேசத்திலும் உள்ள 10 நாடுகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த கதைகளாகும். இத்தொகுப்பில் காதற் கடிதங்கள் (கேற் வோக்கர்/ அவுஸ்திரேலியா), விலோ மரத்தின் இலைகள் உதிர்கின்றன (லொங் சின்ஹுவா/ சீனா), பசி பிடித்த செத்தோப்பஸ் (சத்தியஜித் ராய்/இந்தியா), ஈரா பூந்தோட்டக்காரி ஆகிறாள் (ரொயெற்றி மக்ளிஸ்/இந்தோனேசியா), கடைசிப் பயணச்சீட்டு (மினூ கறிம்சாடே/ஈரான்), உள்ளூர்ப் பிரதிநிதி (முகம்மது அலி மஜொத்/மலேசியா), சிறிய செவிகளைக் கொண்ட பெண் செம்மறி ஆடு (சென்டையின் தமின்சுறென்/ மொங்கோலியா), வானில் ஒரு பட்டம் (சையத் பற்றா அலி அன்வெரி/ பாக்கிஸ்தான்), இம்பொங் செலா (எபிபானியொ ஜீ மற்றியூஸ்/பிலிப்பீன்ஸ்), கீம்-துணிச்சல்மிக்க சிறுவன் (மா வன் காங்/வியட்நாம்) ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. அடைப்புக்குறிக்குள் கதாசிரியர்களின் பெயரும் அவர்களது நாடும் குறிப்பிடப்பட்டுள்ளன.(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24839).

11509

ஷேக்ஸ்பியர் நாடகங்களிலிருந்து கதைகள்: தொகுதி 1. அ.மயில்வாகனம். யாழ்ப்பாணம்: திருமதி அ.மயில்வாகனம், முன்னாள் அதிபர், இராமநாதன் மகளிர் பயிற்சிக் கல்லூரி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: கலாநிலையப் பதிப்பகம்).

(4), 115 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18.5x14 சமீ.

ஷேக்ஸ்பியரின் பிரபல நாடகங்களான நள்ளிரவுக் கனா (Midsummer Nights' Dream), நீ விரும்பியபடி (As You like it), றோமியோவும் ஜூலியற்றும் (Romeo and Juliet), லீயர் அரசன் (King Lear), ஒன்றுமில்லாததைப் பற்றி அதிக தொந்தரவு (Much Ado About Nothing), டென்மார்க்கின் அரசிளங்குமரன் ஹாம்லெற் (Hamlet, Prince of Denmark) ஆகிய ஆறு நாடகங்கள் இத்தொகுப்பில் ஆசிரியரால் தமிழாக்கம் செய்து கதைகளாக வழங்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 1909).

801. (5) சிறுவர் நாவல்கள்

11510

இராமன் கதை. சம்பந்தன். யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, காங்கேசன்துறை வீதி, 4வது பதிப்பு, 1993, 1வது பதிப்பு, 1949, 2வது பதிப்பு, 1953, 3வது பதிப்பு, 1956. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).

28 பக்கம், விலை: ரூபா 12., அளவு: 18x12 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதர் கதை மலர் தொடரில் வெளிவந்துள்ள இரண்டாவது நூல் இது. இந்நூலின் முதல் மூன்று பதிப்புகளையும் யாழ்ப்பாணத்திலிருந்து எஸ்.எஸ். சண்முகநாதன் அன் சன்ஸ் உரிமையாளர்கள் வெளியிட்டிருந்தனர். இந்நூலில் இராமாயணக் கதையை சிறுவர்களுக்கேற்ற வகையில் ஆசிரியர் மிகத் தெளிவாகத் தயாரித்து வழங்கியிருக்கிறார். இந்நூலின் இறுதியில் (பக்கம் 26-28) எனிற் பிளைற்றனின் "முயலாரும் தேநீர்ப் பாத்திரமும்" என்ற ஆங்கிலக் கதையின் தழுவலாக எழுத்தாளர் சொக்கன் எழுதிய சிறுவர் கதையும் இடம்பெற்றுள்ளது. பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டு, பத்திரிகைத்தாள் தட்டுப்பாடாகவிருந்த ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இந்நூல் அச்சிடப்பட்டு மாணவர்களுக்கேற்ற வகையில் விநியோகிக்கப்பட்டிருந்தது.

11511

உம்பா (சிறுவர் கதை). ஓ.கே.குணநாதன். மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64 கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, 2015. (மட்டக்களப்பு: ஓ.கே.பாக்கியநாதன் அறிஞர் சோலை).

24 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 500., அளவு: 21x22 சமீ., ISBN: 978-955-7654-08-9.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 90ஆவது வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூல், எழுத்தாளர் ஓ.கே.குணநாதனின் 32ஆவது சிறுவர் இலக்கியப் படைப்பாகும். குழந்தைக்குப் பால் கொடுக்கும் பசு தாய்க்குச் சமம். எனவே பசுவைக் கொல்வது அம்மாவைக் கொல்வது போலாகும் என்கிறார் ஆசிரியர். தாயைப் போல பசுவையும் பேணவேண்டும் என்னும் எண்ணத்தை பிஞ்சு நெஞ்சில் நடவு செய்ய இக்கதையில் முயன்றுள்ளார்.

11512

குண்டுமீனும் குட்டிமீனும். ஹேமலதா கனகலிங்கம் (கதை), ஆர்.சுரேந்திரன் (சித்திரங்கள்). இலங்கை: ரூம் டு ரீட் திட்டம், இல. 38, டாக்டர் ஈ.ஏ.கூரே மாவத்தை, கொழும்பு 6, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு: வரையறுக்கப்பட்ட எம்.டி.குணசேன அன் கொம்பனி அச்சகம், 217 ஒல்கொட் மாவத்தை).

16 பக்கம், வண்ணப் படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x25 சமீ., ISBN: 978-955-7876-01-6.

குண்டுமீனும் குட்டிமீனும் விளையாடிக்கொண்டிருந்தனர். அப்போது வந்தது ஆபத்து. குட்டிமீன் அதிலிருந்து தப்பிவிட்டது. துர்அதிர்ஷ்டவசமாக குண்டுமீன் மாட்டிக்கொண்டது. குட்டிமீன் குண்டுமீனை எப்படி ஆபத்திலிருந்து காப்பாற்றுகின்றது என்பது தான் கதை. Room to Read அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் சிறுவர்களின் எழுத்தார்வத்தை வளர்ப்பதையும் வளரும்போதே ஆண் பெண் சமத்துவத்தை வளர்ப்பதையும் நோக்காகக் கொண்டு செயற்படுகின்றது. உள்ளூர் எழுத்தாளர்களையும் ஓவியர்களையும் பயன்படுத்தி இவர்கள் தயாரிக்கும் சிறுவர் நூல்கள் பாடசாலைகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்களை உள்ளூர் சமூகம், Room to Read மற்றும் மட்சுயா கம்பெனி லிமிட்டெட் ஆகியோரின் கூட்டாண்மையால் வெளியிடப்படுகின்றன.

11513

பேசும் பேனா. உடுவை எஸ்.தில்லை நடராஜா. கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202, 340, கடற்கரைத் தெரு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் இல்லை. (கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202, 340, செட்டியார் தெரு).

8 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 29x20 சமீ., ISBN: 978-955-9396-74-1.

1947இல் உடுப்பிட்டிக் கிராமத்தில் பிறந்த உடுவை தில்லை நடராஜா, உடப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் தன் ஆரம்பக்கல்வியைப் பெற்றவர். சிறார்களுக்கான பெரிய எழுத்து கதைப்புத்தகமாக பொருத்தமான சித்திரங்களுடன் இதனை பூபாலசிங்கம் புத்தகசாலையினர் தமது 204ஆவது நூலாக வெளியிட்டுள்ளனர்.

11514

மரமனிதன். ஓ.கே.குணநாதன். மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64 கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, 2015. (மட்டக்களப்பு: ஓ.கே. பாக்கியநாதன் அறிஞர் சோலை).

48 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-7654-07-2.

குறைந்த சொற்கள், நிறைந்த காட்சி ஓவியங்கள், விரிந்த களன், சிறந்த செய்திகள் என்பதே ஆசிரியரின் சிறுவர் கதைகளின் சிறப்பு என்பதை இச்சிறுவர் கதையில் காட்டியிருக்கிறார். விஞ்ஞானச் செய்திகள், மூடநம்பிக்கைகளைத் தகர்க்கும் சொல்லாடல்கள் என்று அவரது படைப்புக்கள் சிறுவர் இலக்கியத்துக்கு முன்மாதிரியாக அமைகின்றன. எட்டு வயதில் தான் தவறுதலாக விழுங்கிய புளியம் விதை வயிற்றில் முளைத்து மரமாகித் தான் மரமனிதனாகப் போகிறேன் என்ற கவலையில் அவன் கண்ட கனவும், பின்னர் அவனது கவலைக்கு விஞ்ஞான ஆசிரியர் வழங்கிய விளக்கமும் இச்சிறுவர் கதையின் சுருக்கமாகும்.

11515

முனியன் முரளிகானன். நா.மகேசன். கொழும்பு 2: குங்குமம் வெளியீடு, 1வது பதிப்பு, பெப்ரவரி 1977. (கொழும்பு 2: குங்குமம் நாதன், அருளொளி அச்சகம்).

52 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12 சமீ.

யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பை பிறப்பிடமாகக் கொண்ட நா. மகேசன் சுகாதார அமைச்சில் கணக்காளராகப் பணியாற்றியவர். அவர் ஒரு மேடை நாடக விற்பன்னராகவும் அறியப்பெற்றவர். பல பயனுள்ள நூல்களைப் படைத்தவர். வானொலி மாமா என அழைக்கப்பெற்றவர். இவரது சிறுவர் குறுநாவல் இதுவாகும். இலங்கையில் மாத நாவல் வெளியீட்டுப் பாணியில் குங்குமம் சிலகாலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்தது. இவ்விதழில் ஆசிரியர் தலையங்கம், செய்தித்திரட்டு, வரலாறு திரும்புகிறது-சிறுகதை (குறிஞ்சில் த.மனோகரன்), நல்ல தோய்ச்சல்- கவிதை (தி.குகன்) ஆகிய படைப்பாக்கங்களுடன் இச்சிறுவர் நாவலும் பிரசுரமாகியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2102).

11516

ராகுலுக்கு ஒரு புது வண்டி. அ.ஜின்னாஹ் ஷரிபுத்தீன். மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 1வது பதிப்பு. 2008. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்).

16 பக்கம், வண்ணப்படங்கள், விலை: ரூபா 150., 25x21 சமீ., ISBN: 978-955-96932-3-9.

45 ஆண்டுகளாக இலக்கியப் பணியாற்றிவரும் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் காவியம், கவிதை, சிறுகதை, நாவல் என நூல்கள் பலவற்றை வெளியிட்டவர். சிறுவர் இலக்கியத்தில் இவரது முதலாவது வெளியீடு, கடலில் மிதக்கும் மாடிவீடு என்ற சிறுவர் பாடல் நூல். இது அவரது இரண்டாவது சிறுவர் இலக்கியமாகும்.

801. (51) சிறுவர் மொழிபெயர்ப்பு நாவல்கள்

11517

செத்துப் பிழைத்த சின்னச்சாமி. குமாரதுங்க முனிதாச (சிங்கள மூலம்), சரோஜினிதேவி அருணாசலம் (தமிழாக்கம்). கொழும்பு: வரையறுக்கப்பட்ட எம்.டி.குணசேன அன் கோ, 217 ஒல்கொட் மாவத்தை, 1வது பதிப்பு, 1972. (கொழும்பு: வரையறுக்கப்பட்ட எம்.டி.குணசேன அன் கொம்பனி அச்சகம், 217 ஒல்கொட் மாவத்தை).

xxi, 58 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 3.50, அளவு: 17.5x12 சமீ.

இது ஒரு சிறுவர் இலக்கிய நூல். மெலியார் மிடுக்கு என்ற குமாரதுங்க முனிதாசவின் சிங்கள சிறுவர் கதைநூலை தமிழாக்கம் செய்தளித்த சரோஜினிதேவி அருணாசலம் மொழிபெயர்த்து வழங்கியுள்ள மற்றுமொரு சிறுவர் கதை நூல் இது. செத்துப் பிழைத்த சின்னச்சாமியின் இக்கதை - முதலாம் பிறப்பு, இறக்கும் நாளை அறிதல், முதலாம் மரணம், இரண்டாம் பிறப்பு, இரண்டாம் மரணம், மூன்றாம் பிறப்பு, மூன்றாம் மரணம், நாலாம் பிறப்பு, நாலாம் மரணம், ஐந்தாம் பிறப்பு, ஐந்தாம் மரணம், ஆறாம் பிறப்பு, ஆறாம் மரணம், ஏழாம் பிறப்பு, இறவாதிருக்க யாகம் ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 8973).

11518

நெல்லிக்காட்டு வீரர்கள். நிமல் பண்டா (சிங்கள மூலம்), க.துரைரட்ணம் (தமிழாக்கம்). கொழும்பு 10: சூரிய வெளியீட்டகம், 614 G 13, பியதாச சிறிசேன மாவத்தை, மருதானை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1998. (கொழும்பு 9: S and S Printers, 33 School Lane).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8), 9-139 பக்கம், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 955-9348-50-7.

சிங்கள மொழியில் "நெல்லி கலே வீரயோ" என்ற தலைப்பில் தன் முதற்பதிப்பை 1990இல் கண்ட இந்நூல், தனது நான்காம் பதிப்பை 1997இல் கண்டிருந்த வேளையில் ஆங்கிலத்திற்கு மொழிமாற்றம் செய்யப்பெற்று ஆங்கிலப் பதிப்பும் 1997இல் வெளியிடப்பட்டது. பின்னர் அதன் தமிழ் மொழிபெயர்ப்பு 1998இல் வெளிவந்துள்ளது. இக்கதை இலங்கையின் மலையகக் கிராமமொன்றினைப் பின்னணியாகக் கொண்டது. தேயிலைத் தோட்டங்களால் சூழப்பெற்ற அழகிய கிராமமொன்றில் வாழும் மூன்று சிறுவர்களின் துணிகரச் செயல்கள் பற்றியது இக்கதை. ஏழைகள் அன்றாடம் படும் துன்பங்களையும் இது செவ்வனே சித்திரிக் கின்றது. மேலும் நாம் வாழ்க்கையில் மிகஅரிதாகச் சந்திக்கும் பாத்திரங்களான பிறர்க்குதவும் மனோபாவம் கொண்ட ஒரு சில பணக்காரர்களையும் இக்கதையில் காண்கிறோம். சமூக விரோதச் செயல்கள் மூலம் பணமீட்ட முயலும் ஒரு கூட்டத்தினரைப் பற்றியும் இக்கதை பேசுகின்றது. சாரணர் இயக்கம் எவ்வாறு தீயவழியில் செல்லவிருந்த சிறுவர்களை நல்வழிப்படுத்தி வீட்டுக்கும் நாட்டுக்கும் சிறந்தவர்களாக மாற்றுவதை இக்கதை கூறுகின்றது. தூய நட்பின் ஆழத்தையும், சாரணர் இயக்கம் மூலம் இனங்களுக்கிடையே ஐக்கியத்தையும் புரிந்துணர்வையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தலாம் என்பதையும் இக்கதை நன்கு உணர்த்து கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21146).

11519

பழி தீர்த்த பயங்கர ஆவி. நிஹால் குமார (சிங்கள மூலம்), தேவதாசன் ஜெயசிங் (தமிழாக்கம்). தங்கொட்டுவ: வாசனா வெளியீட்டகம், நாத்தாண்டிய வீதி, 1வது பதிப்பு, 2009. (தங்கொட்டுவ: வாசனா அச்சகம், நாத்தாண்டிய வீதி).

112 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 140., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-655-287-4.

சிங்கள மொழியில் மே 2008இல் எழுதப்பட்டு ஆங்கிலத்தில் The Avenger Ghost என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்ட இந்நாவல், இப்பொழுது 11 அத்தியாயங்கள் கொண்ட இளையோர் நாவலாகத் தமிழாக்கம் கண்டுள்ளது. முன்னதாக இவரது கானகச் சிறுவன் என்ற விறுவிறுப்பான இளையோர் நாவல் வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 49277).

11520

பூமியின் மையத்திற்கு ஒரு பயணம். ஜுல் வேர்ன் (ஆங்கில மூலம்), ஐயாத்துரை சாந்தன் (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம் (Alliance Francaisede Jaffna), 83, பலாலி வீதி, கந்தர்மடம், 1வது பதிப்பு, 2006. (யாழ்ப்பாணம்: நோபிள் பிரின்டர்ஸ், 103, பலாலி வீதி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv, 162 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

Voyage au Centre de la Terre என்ற பிரெஞ்சு நாவலின் ஆங்கில வழித் தமிழாக்கம் இது. ஜுல் வேர்ன் (1828-1905) புகழ்பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர். 19ஆம் நூற்றாண்டில் இளைஞர்களுக்கான இலக்கியம் மற்றும் விஞ்ஞானப் புனைகதை இலக்கியங்களுக்கான முன்னோடிகளுள் இவரும் ஒருவர். 1864 இல் எழுதப்பட்ட பூமியின் மையத்துக்கான பயணம் என்ற இந்நாவல் ஓர் இளைஞன் தானாக முன்வந்து ஏற்றுக்கொண்ட சோதனைகளினூடு இயற்கையின் மாபெரும் ஆற்றல்களுக்கு எதிரான சவால்களினூடு பொறுப்பும் அறிவின் முதிர்ச்சி நிலையும் காணும் ஓர் இளைஞனின் கதை இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45393).

11521

பொன்தாமரைக் குளம். கமல் பெரேரா (சிங்கள மூலம்), மடுளுகிரியே விஜேரத்ன (தமிழாக்கம்). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2012. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

xiv, 15-148 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-30-3926-2.

கமல் பெரேரா சிங்களமொழியில் எழுதிய "ரன் நெலும் பொக்குண" என்ற இளைஞர் இலக்கிய நாவலின் தமிழாக்கம் இதுவாகும். தமிழ்-சிங்கள எழுத்தாளர்களிடையே உறவுப்பாலத்தை அமைத்துவரும் கமல் பெரேரா மக்கள் வங்கியின் உத்தியோகத்தராகப் பணியாற்றி இளைப்பாறியவர். ஓய்வின் பின்னர் லேக் ஹவுஸ் நிறுவனத்தில் இணைந்து பணியாற்றி வருகிறார். ராவய பத்திரிகை மூலமாகத் தன் எழுத்துப் பணியைத் தொடங்கிய இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி "ரைய பகன் நொவி" (துயில் கொள்ளா இரவு) என்ற பெயரில் 1985ஆம் ஆண்டு வெளிவந்தது. 1985இலிருந்து இன்றுவரை ஐந்து சிறுகதைத் தொகுதிகளையும் நான்கு சமூக நாவல்களையும் இளையோர் இலக்கியத்துக்கான நூல்களையும் எழுதிவந்துள்ளார். இவரது ரன் நெலும் பொக்குண 2005இல் இலங்கை அரச சாஹித்திய விழாவில் சிறந்த நூலுக்கான விருதினைப் பெற்றது.

11522

ராஜயானை வனம். சிட்னி மாகஸ் டயஸ் (சிங்கள மூலம்), திக்குவல்லை கமால் (தமிழாக்கம்). ஆனமடுவ: தோதென்ன பப்ளிஷிங் ஹவுஸ், உஸ்வெவ வீதி, 1வது பதிப்பு, 2014. (கனேமுல்ல: ஜயன்ட் பிரின்ட் கிரப்பிக்ஸ், 51 A/1, கலஹிடியாவ).

64 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-1848-78-1. (நூலின் பின்னட்டையில் காணப்படும் கோட்டுரு இலக்கம் ISBN: 978-955-1848-75-0.)

பிள்ளைகளின் மனங்களில் சுற்றுச் சூழல்சார் நீதிக்கான ஆர்வத்தையும், அறிவுசார் விழிப்புணர்வினையும் ஏற்படுத்தும் மூல நூலாசிரியரின் ஆக்கத்திறன் அழகானது. இயற்கையோடு இயைந்த வாழ்வே நிலைபேறான மேம்பாடாகும் என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்தும் சிறுவர் நாவல் இது. இந்த உலகம் அனைத்து உயிரினங்களுக்குமானது. மனிதகுலத்தின் மேலாண்மைக்கு மாத்திரம் உட்பட்டதல்ல என்பதை இக்கதை வலியுறுத்துகின்றது. இலங்கையின் குடியேற்றத் திட்டங்களில் யானைகளுக்கும் மனிதர்களுக்குமான போராட்டம் தொடர்பாக கவலைமிகுந்த செய்திகளைப் பார்த்தும் கேட்டும் வாசித்தும் வருகிறோம். இவ்வகையான மோதல் மனிதன் சுற்றாடலோடு மேற்கொள்ளும் தவறான கொடுக்கல்-வாங்கல்களின் விளைவாகும். இதனால் மனிதன் மாத்திரமல்ல, மிருகங்களும் கஷ்டங்களுக்குள்ளாகின்றன. ராஜயானை வனம் பிள்ளைகளுக்கு யானை-மனிதன் மோதல் தொடர்பாக சுவையான கதையொன்றினை முன்வைக்கின்றது. சுற்றாடல், சகவாழ்வு தொடர்பாக எமது முன்னோர் மேற்கொண்டுவந்த விலைமதிப்பற்ற நன்மைகளையும் ஞாபகமூட்டுகின்றது. அந்த அறிவும் அதன்மூலம் எற்படுத்திக்கொள்ளும் உணர்வும், உறுதியான சுற்றாடல் ஒன்றைக் கட்டியெழுப்பி அதன்மூலம் சகவாழ்வை மேற்கொள்ள அவசியமான அறிவை சிறார்களுக்கு வழங்க முனைகின்றது. (இந்நூல் கொழும்புப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14212).

11523

வெற்றியின் பங்காளிகள். விமலதாஸ முதாகே (சிங்கள மூலம்), திக்குவல்லை கமால் (தமிழாக்கம்). ஆனமடுவ: தோதென்ன வெளியீடு, உஸ்வெவ வீதி, 1வது பதிப்பு, 2009. (கனேமுல்ல: ஜயன் பிரின்ட்கிராப்பிக்ஸ், 52 A/1, கலஹெட்டியாவ).

vi, 82 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-1848-26-2.

விமலதாச முதாகேயின் சிங்கள இளையோர் இலக்கியமான "தயாசேன போன்றோரின் வெற்றி" என்ற நாவலின் தமிழாக்கம் இதுவாகும். விமலதாஸ முதாகே காலி மாவட்டத்தைச் சேர்ந்த சிங்கள எழுத்தாளர். ஒன்பதுக்கும் அதிகமான நூல்களை எழுதியவர். இலங்கையில் சிங்கள மொழியில் முதல் ஒலிநாடாச் சஞ்சிகையை வெளியிட்டவர் என்ற பெருமையும் இவருக்குண்டு.

11524

ஸுலைமான் அரசரின் வைரச் சுரங்கம். எச்.ரைடர் ஹக்கார்ட் (ஆங்கில மூலம்), ஸீ.எம்.ஏ.அமீன் (தமிழாக்கம்). கலகெடிஹேன: ரேஷ்மா பதிப்பகம், 348/1, வரபலான வீதி, திஹாரிய, 1வது பதிப்பு, ஜூலை 2008. (கல்ஹின்ன: விங்ஸ் கிராப்பிக்ஸ், 262 A, கண்டிவீதி).

viii, 232 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 18x12 சமீ., ISBN: 978-955-51014-0-0.

புகழ்பெற்ற விக்ரோரிய அரசியின் காலத்து ஆங்கில நாவலாசிரியரான H.Rider Haggard (1837-1901) எழுதிய King Solomon's Mines என்ற புதையல் வேட்டை பற்றிய சாகசக் கதையின் தமிழ் மொழிபெயர்ப்பு. இந்நாவல் இதே தலைப்பில் 1985இல் ஆங்கிலத் திரைப்படமாகவும் வெளிவந்தது. ஸுலைமானின் புதையலைத் தேடி இரு வருடங்களுக்கு முன்னர் ஆப்பிரிக்காவின் மர்மமான உள்ளகப் பகுதிக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற ஜோர்ஜ் திரும்பி வரவில்லை. அவரது சகோதரரான ஹென்றி கேர்ட்டிஸ் இரு வெள்ளையர்களோடும் உம்பொபா என்ற ஜுலு இனஆப்பிரிக்கரோடும் ஜோர்ஜைத் தேடிச் செல்கிறார். அவர்களது பாதையிலே உயிர்குடிக்கும் பாலைவனமும், உறையவைக்கும் உறைபனி மூடிய மலைகளும் குறுக்கிடுகின்றன. சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கும் அவர்கள், கொடூரமான மன்னன் தவலாவை மட்டுமன்றி, வஞ்சனையும் சூழ்ச்சியும் படைத்த மந்திரக்காரி ககூலையும் எதிர்கொள்கின்றார்கள். ஸுலைமானின் புதையல் என்ற ஒன்று உண்மையிலேயே இருக்கின்றதா? அவர்கள் அதனைக் கண்டுபிடித்தார்களா? காணாமற்போன ஜோர்ஜ் அகப்பட்டாரா? என்ற கேள்விகளுக்கு விடையை நாவல் தருகின்றது. (இந்நூல் இலங்கைத் தேசிய நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 134649).

ஸுலைமான் அரசரின் வைரச் சுரங்கம். எச்.ரைடர் ஹக்கார்ட் (ஆங்கில மூலம்), ஸீ.எம்.ஏ.அமீன் (தமிழாக்கம்). கலகெடிஹேன: ரேஷ்மா பதிப்பகம், 348/1, வரபலான வீதி, திஹாரிய, 2வது (சுருக்கிய) பதிப்பு, டிசம்பர் 2013, 1வது பதிப்பு, ஜுலை 2008. (கொலன்னாவ: விங்ஸ் கிராப்பிக்ஸ், 2, பிரிவென வீதி).

iv, 130 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-51014-7-9.

2008இல் வெளியான முன்னைய பதிப்பின் சுருக்கிய வடிவம் இது. விலையிலும் உள்ளடக்கத்திலும் சிறிய மாற்றம் கண்டுள்ளது. தேவையற்ற விபரங்கள், வர்ணணைகள் நீக்கப்பட்டு இச்சுருக்கப் பதிப்பு மேலதிக படங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது. ஹென்றி கோர்டிஸைச் சந்தித்தேன், ஸுலைமானின் வைரச் சுரங்கம் பற்றிய கதை, ஊழியனாக வந்த உம்போபா, யானை வேட்டை, பாலைவனத்தினூடே பயணம், தண்ணீர் தண்ணீர், ஸுலைமானின் பாதை, குகுவானாலாந்தினுள் பிரவேசம், அரசன் துவலா, சூனிய வேட்டை, நாங்கள் காட்டிய அத்தாட்சி, போருக்கு முன், தாக்குதல், கிரெய்ஸ் படைப்பிரிவின் அயராத இறுதி எதிர்ப்பு, சுகவீனமுற்ற குட், இறந்தோர் புகலிடம், ஸுலைமானின் புதையல் அறை, நம்பிக்கை இழந்தோம், இன்னோஸியின் பிரியாவிடை, கண்டுபிடித்தோம் ஆகிய அத்தியாயங்களில் இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 238064).

801. (6) சிறுவர்க்கான கட்டுரைகள்

11525

மழலைச் செல்வங்கள். மூ.சிவலிங்கம். இணுவில்: அறிவாலயம், 1வது பதிப்பு, 2008. (இணுவில்: சண்சைன் கிரபிக்ஸ், காங்கேசன்துறை வீதி,

ix, 96 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

இணுவில் அறிவாலயத்தின் மூன்றாம் ஆண்டை முன்னிட்டு வெளியாகியுள்ள நூல். இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட மூ.சிவலிங்கம் சீர் இணுவைத்திருவூர், வாழ்க வளமுடன், இல்லறம் சிறந்திட வாழ்க, இறையருட் செல்வர்கள் ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களை ஏற்கெனவே வழங்கியவர். இளஞ்சிறார்களின் மனதைப் பண்படுத்தும் வகையிலும் அவர்களின் சிந்தனையை வளர்க்கும் வகையிலும் ஒழுக்கப் பண்புகளைப் பின்பற்றும் வகையிலும் சமயப் பெரியார்களின் இளமை வரலாற்று நிகழ்ச்சிகளையும் பெரியோர்களின் வரலாற்று நிகழ்ச்சிகளையும் இளமையிலேயே சாதனை புரிந்த இளம் சாதனையாளர்களின் சாதனைகளையும் எளிய நடையில் இங்கு வழங்கியிருக்கிறார். பிறந்தவுடன் உற்சாகமூட்டிய ஔவை, காலத்தை வென்ற மார்க்கண்டேயர், ஐந்து வயதுவரை வாய்பேசாத குமரகுருபரர் போன்ற வரலாற்றுப் பாத்திரங்களுடன், சமகாலத்தில் வாழந்த, வாழும் பாத்திரங்களையும் இங்கு அறிமுகம் செய்கிறார். உலகப் பிரசித்திபெற்ற தவில்மேதை தட்சிணாமூர்த்தி, ஒன்பது வயதில் சமயச் சொற்பொழிவாற்றிய வளரும் பயிர் ப.கௌரீசன், ஒன்பது வயதில் தவில் மேதையான ப.விபுர்ணன், சைவமும் தமிழும் வளர எம்மண்ணை நேசித்த இளம் சட்டத்தரணி துர்க்கா, 16 வயதினில் இசை அரங்கேறிய இந்து, பாரெல்லாம் பாய்ந்தோடும் தமிழ்(இசை)அருவி, குட்டிப் பயல் கோமல், ஒன்பது வயதில் திருக்குறளில் சாதனை படைத்த தீபா, சைவநெறித் தேர்வில் தங்கப் பதக்கங்கள் வென்ற யதுஷன், பேச்சுப் போட்டியில் இருமுறை தேசிய விருதுபெற்ற அ.உமாகரன் என்று சமகால சாதனையாளர்களையும் இவர் இந்நூலில் அறிமுகம் செய்துவைத்திருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45419).

801. (7) சிறுவர்க்கான பலவின நூல்கள்

11526

ஆராய்ச்சிமணி: நீதி தவறாத நிருபன். எம்.எஸ்.ஸ்ரீதயாளன். கொழும்பு 4: ஸ்ரீ ஜனனி பப்ளிஷர்ஸ், 137,காலி வீதி, பம்பலப்பிட்டி, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: ஜஸ்மின் பிரின்டர்ஸ், வெள்ளவத்தை).

16 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 25x17.5 சமீ.

மனதை நெகிழவைக்கும் மாண்புறு மாக்கதைகள் என்ற தொடரில் வெளிவந்துள்ள முதலாவது சிறுவர் இலக்கிய நூல். கதாப்பிரசங்கக் கலையை இளஞ்சிறார்களிடையே அறிமுகப்படுத்தும் நோக்கில் எழுதப்பட்ட இந்நூலில், மனுநீதி கண்ட சோழனின் கதையை முன்னுதாரணமாக்கி அதனை கதாப்பிரசங்க வடிவில் ஆக்கித்தந்து அதனூடாக சிறார்களிடையே கதாப்பிரசங்கக் கலை பற்றிய புரிந்துணர்வினை வளர்க்க ஆசிரியர் முற்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

891.2 சமஸ்கிருத இலக்கியம்

11527

சாகர சரிதம். கவிரத்ன விநாயகசர்மா (சம்ஸ்கிருத மூலம்), லோரன்ஸ் மோர்கன் (ஆங்கில மொழியாக்கம்), ஈழத்துப் பூராடனார் (ஆங்கில வழித் தமிழாக்கம்). கனடா: நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், தொரன்ரோ, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, ஆடி 2000. (கனடா: ஜீவா பதிப்பகம், 1108 Bay Street, Toronto, Ontario M5S 2W9).

80 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: கனேடிய டொலர் 5., அளவு: 21x14 சமீ.

ஈழத்துப் பூராடனார் (இயற்பெயர்: க.தா.செல்வராசகோபால்) அவர்கள் தமிழில் மொழிபெயர்த்து வழங்கியுள்ள வடமொழிச் செய்யுள் இலக்கியம் இது. சகரனின் உற்பத்திக் காதை (சகரனின் ஆட்சி நலம்/நாட்டின் நல்லமைப்பு), நிலமடந்தை அவதாரம் (சூரியப்பொறி சுழலும் பூமியானது/இரவு பகல் காணும் இருபக்கப் பார்/பார் மடந்தையின் பருவ காலம்/மண்மகளின் ஆயுள்கள்/மண்மகளில் உயிரினம் தோன்றுதல்), மண்மகள் மமதைக் காதை (மண்மகளை அடக்க அமரர் முயல்தல்/அரன் அரிக்கு அனுமதி அளித்தல்/மாயன் செய்த மாயம்/இல்லறம் ஒறுத்த சகரனின் அரசு/சாகரனுக்கு நேர்ந்த விதி/மன்மதன் செய்த சதி/சாகரனுக்கு மன்மதன் விடுத்த கணை/அமரர் அரசனிடம் குறையிரத்தல்/அரன் தன்னால் இயலாதென்று கைவிரித்தல்/அமரர் அரியிடம் சென்று முறையிடுதல்/அரி ஆவன செய்யப் பொருந்துதல்/உலகின் உபத்திரவம் பற்றி உரைத்தல்/அரி அமரர்க்கு அபயம் தருதல்/அரி அரனிடம் செல்லல் ... இன்னும் பிற), உபதேசப் பகுதி (உலகளந்த மாயா உபதேசம் செய்வாய்/ திருமால் சொன்ன கலவி நீதி/ மனித மனங்கள் மாறும்/ கலவியினால் உலகு நிலைக்கும்/உலகில் உள்ள உயிரினமும் கலவிக் காலங்களும்/குருதிச் சூடும் உணர்ச்சிப் பெருக்கமும்/தெய்வங்களும் வணக்க நியமமும்/ துறவறத்தின் இலக்கணம்/ காமத்தை வெறுத்தலுக்கு காரணம் உண்டோ?/உடற்கோளாறு துறவறமா/ மனக்கோளாறும் துறவறமா... இன்னும் பிற) ஆகிய நான்கு பாகங்களில் இவ்விலக்கியம் ஆக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19997).

11528

சிவானந்த ரசனாவளி:சம்ஸ்கிருத ஆக்க முயற்சிகள். ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், கந்தசாமி கோவிலடி, இணுவில், சுன்னாகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2016. (சுன்னாகம்: கஜாநந்த் பிரின்டர்ஸ், மானிப்பாய் வீதி, இணுவில்).

88 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4078-04-8.

ஆசிரியர் அவ்வப்போது சம்ஸ்கிருத மொழியில் இயற்றி வழங்கிய ஸ்தோத்திரங்கள் (செய்யுள் வடிவம்), நாமார்ச்சனைகள் (செய்யுள் வடிவம்), நிறுவன கீதங்கள் (செய்யுள் வடிவம்), வாழ்த்துப் பத்திரங்கள் (செய்யுள் வடிவம்), அழைப்பிதழ்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வசன வடிவம்), மொழிபெயர்ப்பு (செய்யுள் வடிவம்) ஆகியவற்றை இந்நூலில் தொகுத்து வழங்கியிருக்கிறார். யாழ்ப்பாணத்தின் கோப்பாயைப் பூர்வீகமாகக் கொண்ட பிரம்மஸ்ரீ சிவானந்த சர்மா "கோப்பாய் சிவம்" என அன்பாக அழைக்கப்படுபவர். பாரத்வாஜ கோத்திரத்தைச் சார்ந்தவர். சிறுவயது முதல் தமது தந்தையாராகிய சம்ஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மாவிடம் கசடறக் கற்றவர். இளமையிலிருந்தே இலக்கிய ரசனையுடையவர். எழுத்தாளர், கவிஞர், விமர்சகர். ஆக்க இலக்கிய கர்த்தாவாக சம்ஸ்கிருதம், தமிழ் ஆகிய இருமொழிப் புலங்களினூடாகப் பங்களிப்புச் செய்துவருபவர். தமது சம்ஸ்கிருத மொழிப் புலமையின் தளத்திலிருந்து தமிழ் மொழி வளத்திற்கு புதுமை படைப்பவர்.

11529

வில்ஹணீயம். வ.கணபதிப்பிள்ளை (மொழிபெயர்ப்பாளர்). தமிழ்நாடு: சே. வெ.ஜம்புலிங்கம், திருமயிலை, 2வது பதிப்பு, 1928, 1வது பதிப்பு, 1875. (சென்னை: சாது அச்சுக்கூடம்).

viii, 31 பக்கம், விலை: 3 அணா, அளவு: 18x12 சமீ.

வில்ஹணீயம் அல்லது வில்ஹண சரித்திரமென்னும் சம்ஸ்கிருத நூல் காசுமீர தேசத்தில் 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வில்ஹண கவியினால் தனது விருத்தாந்தத்தைக் கூறும் வகையில் இயற்றப்பட்டது. இதன் சுலோகங்கள் பெரும்பாலும் அலங்கார ரசம் பொருந்தியவை. 1875களில் சென்னையில் இயங்கிய திராவிட வர்த்தன சபையின் வேண்டுகோளின்பேரில் புலோலியூர் குமாரசுவாமிப் புலவரின் தமையனாரான யாழ்ப்பாணத்துப் புலோலி மகா வித்துவான் வ. கணபதிப்பிள்ளை அவர்கள் இதனைத் தமழில் மொழிபெயர்த்து 1875இல் அச்சிட்டிருந்தார். இவ்விரண்டாம் பதிப்பு மூலநூலின் வசனநடையில் சில திருத்தங்கள் செய்யப்பட்டு சே.வெ.ஜம்புலிங்கம் அவர்களால் மகா வித்துவான் வ.கணபதிப்பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றையும் இணைத்து வெளியிடப்பட்டுள்ளது. மகா வித்துவான் வ.கணபதிப்பிள்ளை நீண்டகாலம் காஞ்சீபுரத்தில் பச்சையப்ப வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதராக விளங்கியவர். அதன் பின்னர் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரிப் பிரதம தமிழாசிரியராக நியமிக்கப்பட்டார். அங்கு பணியாற்றிய வேளையில் 1895 நவம்பர் மாதம் ஏகாதசித் தினத்திலே மரணமடைந்தார். தனது வாழ்நாட் காலத்தில் வில்ஹணீயம் மாத்திரமன்றி இரகுவமிசச் சுருக்கம், வாதபுரேசர் சரிதை, இந்திரசேனை நாடகம், இரகுவமிச நேர் மொழிபெயர்ப்பு, மார்க்கண்டேய புராணம் ஆகிய வடமொழி நூல்களையும் மொழிபெயர்த்துப் பிரசுரித்திருந்தார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் Pamphlet 782).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8 தமிழ் இலக்கியம்

11530

இரகுவம்மிசு மூலமும் புத்துரையும். அரசகேசரி(மூலம்), சி.கணேசையர் (புத்துரை), உ.வே.சாமிநாதையர் (சிறப்புப் பாயிரம்), அ.குமாரசுவாமிப் புலவர் (ஆசிரிய விருத்தம்). யாழ்ப்பாணம்: சி.கணேசையர், புன்னாலைக் கட்டுவன், பதிப்பு விபரம் தரப்படவில்லை (கொக்குவில்: சோதிடப்பிரகாச அச்சியந்திரசாலை.)

(7), 363 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இரகுவம்மிசம் என்ற இந்நூலிலே திலீப மகாராசன் காமதேனுவை வழிபட்டு இரகு என்பவனை புத்திரனாக பெற்ற கதையும், இரகுவின் கதையும், இரகுவின் மகன் அயன் கதையும், அயன் மகன் தசரதச் சக்கரவர்த்தி கதையும், தசரதன் மகன் இராமன் கதையும், இராமன் மகன் குசன் கதையும் சொல்லப்பட்டுள்ளன. இரகுவம்மிசம் ஈழத்தெழுந்த முதற் காவியநடையமைந்த நூலாகும். வழமொழியில் காளிதாச மகாகவி இயற்றிய இரகுவம்சம் என்னும் காவியத்தின் தமிழாக்கமே இந்நூலாகும். இதனைத் தமிழிற் காவியமாகச் செய்து தந்தவன் அரசகேசரி என்னும் புலவனாவான். இவன் யாழ்ப்பாணத்திலிருந்து அரசோச்சிய ஆரியச் சக்கரவர்த்திகள் குலத்தவனென யாழ்ப்பாண வைபவ மாலை ஆசிரியர் மயில்வாகனப்புலவரும் சுவாமி ஞானப்பிரகாசரும் கூறுவர். கி.பி 1591 முதல் 1616 வரை யாழ்ப்பாணத்தில் அரசாண்ட எதிர்மன்னசிங்கன் என்ற எட்டாம் பரராசசேகரனின் சகோதரன் என்று போர்த்துக்கேய சரித்திர ஆசிரியர் குவேறோசும், அம் மன்னனது மருமகன் என்று யாழ்ப்பாண வைபவமாலை ஆசிரியரும் அரசகேசரியை விவரிப்பர். அம்மன்னன் வேண்டுகோட்படியே அரசகேசரி இந்நூலைச் செய்தானென்பது அதன் பாயிரச்செய்யுளிலிருந்து அறியமுடிகின்றது. இந்நூலின் காலமும் எட்டாம் பரராசசேகரன் காலமாகும். இந்நூல் பொதுக்காண்டம், சிறப்புக்காண்டம், பொதுச் சிறப்புக் காண்டம் என மூன்று பெரும் பிரிவுகளை உடையது. பொதுக்காண்டத்தில் ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், நகரப்படலம், அரசியற் படலம், குறைகூறு படலம், தேனுவந்தனப் படலம், இரகுவுற்பத்திப்படலம், யாகப்படலம், திக்குவிசயப் படலம், அயனுதயப்படலம், அயனெழுச்சிப் படலம், மாலையீட்டுப்படலம், கடிமணப் படலம், மீட்சிப் படலம், இரகு கதியுறு படலம், இந்துமதி பிறப்பு நீங்கு படலம் எனப் பதினாறு படலங்களும், சிறப்புக் காண்டத்திலே தசரதன் சாபமேற்ற படலம், திருவவதாரப் படலம், சீதை வனம்புகு படலம், இலவணன் வதைப்படலம், சம்புகன் வதைப்படலம், அவதார நீங்கு படலம் என ஆறு படலங்களும், பொதுச் சிறப்புக் காண்டத்திற் குசன் அயோத்தி செல் படலம், வாகுவலயப் படலம், முடிசூட்டுப் படலம், குலமுறைப்படலம் என நான்கு படலங்களும் உள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10699).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11531

கோவலனார் கதை. மா.சே.செல்லையா. பருத்தித்துறை: தென் புலோலியூர் மா.சே. செல்லையா, புலோலி தெற்கு, 1வது பதிப்பு, ஏப்ரல் 1962. (பருத்தித்துறை: கலாபவன அச்சகம், வியாபாரி மூலை).

vii, 297 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

யாழ்ப்பாணத்துப் புலோலியூர் மந்திகை கண்ணகையம்மன் கோயிலில் வருடந்தோறும் வைகாசி மாதத்திற் பாராயணஞ் செய்யப்பட்டுவரும் கோவலனார் கதை. இது தென்புலோலியூர் மா.சே.செல்லையா அவர்களால் பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கிச் சில திருத்தங்கள் செய்து அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. கோவலர் கண்ணகையம்மன் வரலாறு, தூரி ஓட்டம், கடலோட்டுக் கதை (வெடியரசன் போர்), நீலகேசரி புலம்பல், வீரநாரணதேவன் போர், விளங்குதேவன் போர், மணமாலை, அரங்கேற்றுக்கதை, கோவலரைப் பொன்னுக்கு மறித்த கதை, சிலம்பு கூறல், உயிர் மீட்சிக் கதை, வழக்குரை-மதுரை தகனம், குளிர்ச்சி ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10755).

11532

தஞ்சைவாணன்கோவை மூலமும் உரையும். பொய்யாமொழிப் புலவர் (மூலம்), சொக்கப்ப நாவலர் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவபரிபாலன சபை, 1வது பதிப்பு, மார்கழி 1936. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).

ii,iv, xii, vii, 383 பக்கம், அளவு: 21x13.5 சமீ.

பொய்யாமொழிப் புலவர் என்பவரால் இயற்றப்பட்ட இந்நூல் ஒரு அகப்பொருட் கோவை நூலாகும். இது பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இந்நூல் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள தஞ்சாக்கூரில் வாழ்ந்த சந்திரவாணன் என்னும் சிற்றரசனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுதப்பட்டது. தஞ்சைவாணன், பாண்டிய நாட்டை ஆண்ட குலசேகர பாண்டியனின் படைத் தலைவனாகவும் அமைச்சராகவும் இருந்தவன். மாறை என்னும் கோவை நூல்கள் அகப்பொருள் இலக்கியமாகவே எழுதப்படும் மரபுக்கு ஏற்ப இது தலைவன் தலைவியின் அகவாழ்க்கை பற்றியதாக அமைந்துள்ளது. நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம் என்னும் இலக்கண நூலை அடியொற்றி இந்த இலக்கியம் படைக்கப்பட்டு இருக்கிறது. இது, களவியல், வரைவியல், கற்பியல் என்னும் மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இம்மூன்று இயல்களிலும் உள்ள முப்பத்துமூன்று பிரிவுகளில் மொத்தம் 425 பாடல்கள் அடங்கியுள்ளன. இவற்றுள், களவியலில், 18 பிரிவுகளில் 280 பாடல்களும், வரைவியலில் 8 பிரிவுகளில் 86 பாடல்களும், கற்பியலில் 7 பிரிவுகளில் 59 பாடல்களும் அடங்குகின்றன. இந்நூல் முழுவதும் கட்டளைக் கலித்துறை என்னும் பாவகையில் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10574).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8(01) தமிழ் இலக்கியப் பாடநூல்கள்

11533

அறிவுரை மாலை. ந.சி.கந்தையாபிள்ளை (தொகுப்பாசிரியர்). சென்னை 1: ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 53-56 பவளக்காரத் தெரு, 4வது பதிப்பு, 1950, 3வது பதிப்பு 1943. (மதராஸ் 1: புரொகிரசிவ் பிரின்டர்ஸ்).

(7), 97 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 15.5x11 சமீ.

மாணவர்களுக்கான பிற பாடப் புத்தகங்களில் வராத புதிய பொருளுரைகளைத் தொகுத்து இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. இருமலையும் நிகரேயாம், நச்சினார்க்கினியர், சரித்திரம், முச்சங்கமும் இறையனார் அகப்பொருளும், எழுத்தின் வரலாறு, பழந்தமிழர் போர்முறை (நிரை கவர்தலும் நிரை மீட்டலும், நிரை மீட்டல், வீரக் கல், கல் நடுதலின் விபரம்), இசை மரபு, மொழியின் சரித்திரம், பண்டையோர் எழுத உபயோகித்த பொருள்கள், போசன்கதை, குண்டலகேசி வரலாற்றுச் சுருக்கம், நீலகேசி வரலாற்றுச் சுருக்கம், தமிழர் வாணிகம், சிந்துநதிப் பள்ளத் தாக்கில் தமிழர் நாகரிகம் ஆகிய 14 தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப் பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 741).

11534

இரகு வம்மிசம்: அயனெழுச்சிப் படலம் மூலமும் உரையும். அரசகேசரி (மூலம்), சி.கணேசையர் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: சி.கணேசையர், புன்னாலைக்கட்டுவன், 1வது பதிப்பு, 1931. (சுன்னாகம்: தனலட்சுமி புத்தகசாலை).

92 பக்கம், விலை: சதம் 75., அளவு: 20.5x13 சமீ.

அயனெழுச்சிப் படலம் என்னும் இந்நூல் யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்து அரசாண்ட பாராசசேகரனின் மருமகனாகிய அரசகேசரியினால் தமிழில் இயற்றப்பட்ட இரகு வம்மிசத்திலுள்ள ஒரு படலமாகும். இது விதர்ப்ப நாட்டரசனாகிய போஜராஜனின் சகோதரியாகிய இந்துமதியின் பொருட்டு, அஜமகாராஜன் அயோத்தியிலிருந்து விதர்ப்ப நாட்டுக்குப் புறப்பட்டுச் செல்லுதலை உணர்த்துகின்றது. அஜனாவான் சூரியகுலத்தரசனாகிய திலீபராஜன் புதல்வனாகிய இரகுராஜனின் புதல்வனாவான். Cambridge Senior and Tamil Teachers Preliminary Exam 1932 இன் பாடத் தேவைகளுக்காகச் சிபார்சு செய்யப்பட்ட நூல் இதுவாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84689).

11535

இராமோதந்தம். அ.குமாரசுவாமிப் புலவர் (மொழிபெயர்ப்பு). சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம். 6வது பதிப்பு, பெப்ரவரி 1949. 1வது பதிப்பு, ஜனவரி 1922, 2வது பதிப்பு, மே 1931, 3வது பதிப்பு, 1932, 4வது பதிப்பு, ஜனவரி 1933, 5ஆவது பதிப்பு, ஜனவரி 1940. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

iv, 64 பக்கம், விலை: சதம் 60., அளவு: 18x12.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமபிரானின் சரித்திரத்தைக் கூறும் சிறு நுல்களில் வடமொழியில் வெளிவந்த இராமோதந்தம் முக்கியமானதாகும். இலகுவும் சுருக்கமும் கொண்ட நூலாதலால் வடமொழி பயிலும் மாணவர்களின் முதற் பாடநூலாகவும் இது பயிலப்பட்டுவந்துள்ளது. இராம + உதந்தம் = இராமோதந்தம். உதந்தம் என்பது சரித்திரத்தைக் குறிக்கும் வடமொழிச் சொல்லாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10705).

11536

இலக்கிய மஞ்சரி : ஆறாம் புத்தகம். வ.நடராஜன். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பு விற்பனைக் கழகம், 2வது பதிப்பு, மே 1953, 1வது பதிப்பு, ஜனவரி 1951. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

viii, 124 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 1.10, அளவு: 18x12.5 சமீ.

இரண்டு பகுதிகளில் எழுதப்பட்டுள்ள இந்நூலின் முதற் பகுதியில் தமிழின் பெருமை, அரச நீதி, மக்களைப் பெறுதல், புலவரும் வறுமையும், தமயந்தி சுயம்வரம், பாஞ்சாலி சபதம், ஈழமண்டலச் சிறப்பு, முயல் யானையை வென்றமை, வீரப்போர், அன்னதானம், இலவுகாத்த கிளி, பாரி, உண்மையின் உயர்வு, புத்தரும் மகனிழந்த தாயும், மலைக்காட்சி, நீதிச் செய்யுள்கள் என்று 18 செய்யுட் பாடங்கள் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் பகுதி வசனபாடப் பகுதியாகும். இதில் பொய்ம்மை (ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்), ஓநாயும் வீட்டுநாயும் (ஸ்ரீ ச.சுப்பிரமணிய பாரதியார்), நான் செத்த பிறகு (நாமக்கல்.வெ.இராமலிங்கம் பிள்ளை), கொலம்பசும் இந்தியாவும் (எஸ்.சபரிராஜா), நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடிய வரலாறு, கௌதமர் அகலிகையை மணந்தாரா?, பொய்யோ? மெய்யோ (பாரதியார்), சிறுமியின் பயங்கர நினைவு (ஹீரோஷிமாவில் நடந்த அணுக்குண்டுப் பிரயோகம் (சர்வோதயம்), அழகை அநுபவியுங்கள் (நேருஜி) ஆகிய ஆக்கங்கள் இப்பகுதியில் தேர்வு செய்யப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4101).

11537

கம்பர் கவிதைக் கோவை: முதலாம் பாகம். அ.சே.சுந்தரராஜன் (பதிப்பாசிரியர்). சுன்னாகம்: அ.சே.சுந்தரராஜன், கல்லூரி அகம், இராமநாதன் கல்லூரி, 2வது பதிப்பு, ஜனவரி 1953, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1950. (தமிழ்நாடு: சாரதாவிலாச பிரஸ், கரிக்காரத் தெரு, கும்பகோணம்).

viii+xvi, (4), 204 பக்கம், விலை: ரூபா 4.00, அளவு: 21.5x14 சமீ.

கம்பராமாயணத்தின் சாரமாக வெளிவந்த நூல். கம்பராமாயணத்திலிருந்து மாணவர் விரும்பிப் படித்து இன்புறத்தக்க சில செய்யுட்பகுதிகளைத் தெரிவுசெய்து, அந்தச் செய்யுட்பகுதிகளையும் அவற்றிற்கான குறிப்புரைகளையும் இணத்து வெளிவந்தது. பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம் ஆகிய முதல் மூன்று காண்டங்களின் தேர்ந்த செய்யுள்களும் விளக்கமும் இதில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் யாழ். பரமேஸ்வரா கல்லூரித் தலைவர் சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடேசபிள்ளை அவர்களின் முன்னுரையுடன் கூடியது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44551).

11538

கம்பர் கவிதைக் கோவை: மூன்றாம் பாகம் (யுத்தகாண்டம்). அ.சே.சுந்தரராஜன் (பதிப்பாசிரியர்). சுன்னாகம்: அ.சே.சுந்தரராஜன், கல்லூரி அகம், இராமநாதன் கல்லூரி, 1வது பதிப்பு, 1952. (தமிழ்நாடு: சாரதாவிலாச பிரஸ், கரிக்காரத் தெரு, கும்பகோணம்).

x, 236 பக்கம், விலை: இந்திய ரூபா 2.50, அளவு: 21.5x14 சமீ.

கம்பராமாயணத்தின் சாரமாக வெளிவந்த நூல். கம்பராமாயணத்திலிருந்து மாணவர் விரும்பிப் படித்து இன்புறத்தக்க சில செய்யுட்பகுதிகளைத் தெரிவுசெய்து, அந்தச் செய்யுட்பகுதிகளையும் அவற்றிற்கான குறிப்புரைகளையும் இணத்து 1950இல் முதலாம் பாகம் வெளிவந்தது. முதல் மூன்று காண்டங்களின் தேர்ந்த செய்யுள்களும் விளக்கமும் அதில் இடம்பெற்றிருந்தன. இரண்டாம் பாகத்தில் கிட்கிந்தா-சுந்தர காண்டங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்நூல் இத்தொடரில் மூன்றாவது பாகமாகும். மாணவர் பயன்பாட்டிற்காக, யுத்தகாண்டச் செய்யுள்கள் இங்கு திரட்டித்தரப்பட்டுள்ளன. யாழ். பரமேஸ்வரா கல்லூரித் தலைவர் சு. நடேசபிள்ளை அவர்களின் முன்னுரையுடன் கூடியது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12653).

11539

கம்பராமாயணம் பாலகாண்டம்: மிதிலைக் காட்சிப் படலம். சம்பந்தன் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா வெளியீடு, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஆனி 1972. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).

(4), 136 பக்கம், விலை: ரூபா 3.90., அளவு: 21x13.5 சமீ.

மாணவர்களின் பயன்கருதி, எளிய நடையில் மிதிலைக் காட்சிப் படலம் எழுதப்பட்டுள்ளது. சனக மன்னனின் நாடு விதேக நாடு. அதன் தலைநகரான மிதிலையின் தோற்றத்தை இராம இலக்குவரும், விசுவாமித்திரனும் கண்ட வரலாறு கூறுவது இப்படலம். விசுவாமித்திரன் முதலான மூவரும் மிதிலை நகருள் பல காட்சிகளைக் காண்கிறார்கள். கன்னி மாடத்தில் நின்ற சீதையும் இராமனும் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்கின்றனர். இராமனது நினைவால் சீதை உற்ற துன்பநிலை - அம் மூவரும் சனகன் எதிர்கொள்ளச் சென்று மாளிகையில் தங்குதல் - இராமனுக்குச் சதானந்தர் விசுவாமித்திரரின் வரலாறு கூறுதல் - கௌசிக முனிவன் தவம் செய்தல்-தேவர்கள் கௌசிகனைப் பிரம ரிஷியாக்குதல்-சீதையின் உரு வெளிப்பாடு கண்டு இராமன் கலங்குதல் - பின் அந்த இராமன் முனிவரோடும் தம்பியோடும் சனகனது வேள்விச் சாலையை அடைதல் - சனகன் விசுவாமித்திரனை வினவல் - அவரும் விடையளித்தல் ஆகியன மிதிலைக் காட்சிப்படலத்தில் அடங்கியுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 10735).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11540

கம்பராமாயணம்-யுத்த காண்டம் கும்பகர்ணன் வதைப் படலம் செய்யுள் 1-171. *சி.கா.தம்பையா. யாழ்ப்பாணம்: பண்டிதர் சி.கா.தம்பையா, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: அர்ச்.பிலோமினா அச்சகம், 102, பெரிய தெரு).*

(8), 152 பக்கம், விலை: ரூபா 1.75, அளவு: 20x14 சமீ.

இலங்கை, கல்விப் பொதுத் தராதரப் பத்திர பரீட்சை 1957-1960 தமிழ் இலக்கியப் பாடவிதானத்தின்படி எழுதப்பட்டுள்ள நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25367).

11541

கம்பராமாயணம் யுத்தகாண்டம் -கும்பகருணன் வதைப்படலம் (செய்யுள் 1 முதல் 171 வரை). *இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா, பெ.அண்ணாமலை (உரையாசிரியர்கள்). கண்டி: கலைவாணி புத்தக நிலையம், 130, திரிகோணமலை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1956. (சென்னை: கபீர் பிரின்டிங் வேர்க்ஸ்).*

xvi, *192 பக்கம், விலை: ரூபா 2.50., அளவு: 21.5x13.5 சமீ.*

கம்ப ராமாயண நூற்சிறப்பு, கம்பநாட்டாழ்வார் வரலாறு, கதைச்சுருக்கம், நூல் -மூலமும் உரையும், பயிற்சி, செய்யுள் முதற்குறிப்பு அகராதி ஆகிய அத்தியாயங் களைக் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 310).

11542

கம்பராமாயணம்: யுத்தகாண்டம் -கும்பகருணன் வதைப்படலம் (செய்யுள் 1 முதல் 171 வரை). *ந.சுப்பையபிள்ளை (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 1வது பதிப்பு, 1956. (யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம், 351, காங்கேசன்துறை வீதி).*

xvi, *232 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 20.5x14 சமீ.*

கல்விப்பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சைக்கு 1957-1960ம் ஆண்டு களுக்குரிய இலக்கிய பாடமாகிய கம்பராமாயணம்-யுத்தகாண்டம்- கும்பகருணன் வதைப்படலம் 1-170 செய்யுள்களுக்கும் உரை எழுதப்பட்டுள்ளது. இவ்வுரைநூ ல் பதவுரை, விசேடவுரை, பாடபேதம் இவற்றோடு பிரதான இடங்களில் அந்வயமுங் கருத்துரையுங் கொண்டதாக இயற்றப்பட்டுள்ளது. இடையிடையே தேவைக்கேற்ப வரலாறுகளின் சுருக்கம், அரும்பதவுரை, சொல்நயம், பொருள்நயம், அணிகள், இலக்கணக் குறிப்புகள் என்பன சேர்க்கப்பட்டுமுள்ளன. சிற்சில இடங்களில் பொருள் கொள்ளும் வகையிலுள்ள பேதங்களும் அவற்றுக்குரிய விளக்கமும் காட்டப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் பண்டிதமணி, வித்துவான் ந.சுப்பையபிள்ளை வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமை ஆசிரியராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11543

சங்கம் முதல் சமகாலம் வரை: தேர்ந்த கவிதைகளின் தொகுப்பு. சிவகுருநாதன் கேசவன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: கதிர் வெளியீடு, 28, 5/3, 1வது சப்பல் ஒழுங்கை, 2வது பதிப்பு, ஜுன் 2012, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (கொழும்பு 6: Fast Printers, 289 ½, காலி வீதி).

288 பக்கம், விலை: ரூபா 380., அளவு: 20.5x14.5 சமீ.

2009ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் க.பொ.த. உயர்தர வகுப்புத் தமிழ்ப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தேர்ந்த கவிதைகளின் தொகுப்பு. சுய கற்றலுக்கு ஏற்ற வகையில் பாடல் அறிமுகம், கவிஞர், நூல் அறிமுகம், கதைச் சுருக்கம் என்பவற்றோடு, கடினமான சொற்களுக்கான பொருள், சந்தி பிரிப்பு, கொண்டு கூட்டல், பொருள், விளக்கக் குறிப்புகள், மாதிரி/ கற்றல் வினாக்கள், விடைக் குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கிய விரிவான பதிப்பு இதுவாகும். செய்யுள்களைக் கற்றல் என்ற முதலாவது பிரிவில் குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீபர்ப்பதம், பெரியாழ்வார் திருமொழி, சீறாப்புராணம், தேம்பாவணி, தனிப்பாடல் திரட்டு ஆகியவையும், நவீன கவிதைகளைக் கற்றல் என்ற பிரிவின் கீழ் பாரதியார் கவிதைகள், பாரதிதாசன் கவிதைகள், தேசிகவிநாயகம்பிள்ளை, உமர் கய்யாம் பாடல்கள், கம்பதாசன் கவிதைகள், பிச்சமூர்த்தி கவிதை, மஹாகவி கவிதை, நீலாவணன் கவிதை, புரட்சிக் கமால் கவிதை, முருகையன் கவிதை, சுபத்திரன் கவிதை, குறிஞ்சித் தென்னவன் கவிதை ஆகிய கவிதைகளும் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரியின் ஆசிரியராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 246743).

11544

செந்தமிழ்த் தேன். பொன்.முத்துக்குமாரன், சு.இராசநாயகம் (மூலத் தொகுப்பாசிரியர்கள்), தி.ச.வரதராசன் (புதுக்கிய பதிப்பின் தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, 3வது புதுக்கிய பதிப்பு, 1965, 1வது பதிப்பு, 1959, மீள்பதிப்பு, 1962. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).

122 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13 சமீ.

ஈழத்து அறிஞர்கள் பலருடைய கட்டுரைகளைக் கொண்டதான ஒரு நல்ல கட்டுரைத் தொகுதி, க. பொ. த. வகுப்பு மாணவர்களுக்கு, இலக்கிய பாட நூலாகத் தேவை என்ற காரணத்தால் இந்நூல் உருவாக்கப்பட்டது. வித்துவான் பொன். முத்துக்குமாரன், திரு சு இராசநாயகம் ஆகியோர் 1959இல் தொகுத்திருந்த "செந்தமிழ்த் தேன்" என்ற நூலில் இடம்பெற்ற சிறந்த பத்துக் கட்டுரைகளுடன் மேலும் சில கட்டுரைகளைத் தேர்ந்து இணைத்து மொத்தம் 19 கட்டுரைகளுடன் அதே தலைப்பில் இந்நூல் வெளிவந்துள்ளது. தெய்வப்புலவர் திருவள்ளுவர் (சி. கணபதிப்பிள்ளை), உடலும் உளமும் (க.ச.அருள்நந்தி), குட்டிப் பிசாசும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரொட்டியும் (லியோ டால்ஸ்டாய்-மூலம், தேவன் யாழ்ப்பாணம்-தமிழாக்கம்), ஞாயிற்றுப் பொட்டுக்கள் (ஆ.வி.மயில்வாகனம்), தமிழர் கண்ட சமுதாய வாழ்வு (பொன்.முத்துக்குமாரன்), சரித்திரப் பேரறிஞர் வி.கனகசபைப்பிள்ளை அவர்கள் (ச.அம்பிகைபாகன்), கடன்படல் (ஆறுமுகநாவலர்), தருமம் தலைகாக்கும் (உ.வே.சாமிநாதையர்), நமது தாய்நாடு (சி.ஆறுமுகம்), ஒத்த மரபு (கி.வா. ஜகந்நாதன்), கம்பர் கண்ட வாலி (சி.கணபதிப்பிள்ளை), ஏன் இந்தத் தயக்கம்? (மு.வரதராசனார்), இலக்கியங்களில் நகைச்சுவை (பொ.கிருஷ்ணபிள்ளை), ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் (ஆ.சதாசிவம்), அணுவினால் ஆக்கமும் அழிவும் (சி.ஜயரத்தினம் எலியேசர்), நான் விரும்பும் நாடு (பொன்.முத்துக்குமாரன்), தங்கத் தாத்தா (பொ.கிருஷ்ணபிள்ளை), கன்னன் (சுவாமி விபுலானந்தர்), மேடைநாடகத் தயாரிப்பு (க.செ.நடராசா) ஆகிய கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12950).

11545

தமிழிலக்கியம்: மூலமும் உரையும்(செய்யுட்பாகம்). நா.சுப்பையபிள்ளை. யாழ்ப்பாணம்: சைவபரிபாலன சபை, 1வது பதிப்பு, புரட்டாதி 1961. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை).

ix, 376+80 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 20.5x13.5 சமீ.

கம்பராமாயண வரலாறு, கம்பர் வரலாறு, சுந்தரகாண்டம் (அவதாரிகை), காட்சிப்படல விஷயங்கள், காட்சிப்படலம்-மூலமும் உரையும், நிந்தனைப்படல விஷயங்கள், நிந்தனைப்படலம் மூலமும் உரையும் ஆகியவை முதலாவது பிரிவின்கீழ் இடம்பெற்றுள்ளன. புதிய பக்க இலக்கங்களுடன் தொடங்கும் இரண்டாவது பிரிவில், ஸ்ரீ சி.சுப்பிரமணிய பாரதியார் வரலாறு முதலாவதாகவும் பின்னர் பாரதியார் பாடல்களின் தொகுப்பும் இடம்பெறுகின்றன. இப்பிரிவில் பாரத தேசம், நடிப்புச் சுதேசிகள், சுதந்திரப் பெருமை, சுதந்திரதேவியின் துதி, புதுமைப்பெண், தொழில், தமிழ்த்தாய், தமிழ், மூன்று காதல், வெண்ணிலா, முரசு ஆகிய 11 பாடல்கள் ந.சுப்பையபிள்ளைஅவர்களின் உரைகளுடன் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12654).

11546

திருக்குறள்: அறத்துப்பால்-இல்லறவியல்: 1-10 அதிகாரங்கள். க.சொக்கலிங்கம் (புனைபெயர்: சொக்கன்). யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 6வது பதிப்பு, 1993. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63, பீ.ஏ.தம்பி வீதி).

viii, 68 பக்கம், விலை: ரூபா 36., அளவு: 19x13 சமீ.

க.பொ.த.ப. (உயர்தரப்) பரீட்சைக்கான பாடப்பகுதி விளக்கமும் மாதிரி வினா-விடைகளும் அடங்கிய நூல். இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுதல், அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, மாதிரி வினா-விடைகள், அருஞ்சொற்பொருளகராதி ஆகிய 12 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

11547

திருக்குறள்: அறத்துப்பால்-இல்லறவியல்: இறுதிப் பத்து (15-24) அதிகாரம். ம.வே. திருஞானசம்பந்த பிள்ளை (உரையாசிரியர்), ச.சபாரத்தின முதலியார் (ஆங்கில மொழிபெயர்ப்பு). யாழ்ப்பாணம்: ம.செல்வத்துரை, வண்ணார்பண்ணை, 3வது பதிப்பு, 1921. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).

(2), 48 பக்கம், விலை: சதம் 65., அளவு: 19x13 சமீ.

இதில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியரும் இந்து சாதன பத்திரிகாசிரியருமான ஸ்ரீ ம.வே.திருஞானசம்பந்தப் பிள்ளையவர்கள் வகுத்த பதவுரை, கருத்துரை, விசேடவுரை, நூலாசிரியர் வரலாறு என்பவற்றோடு, ஸ்ரீ ச.சபாரத்தின முதலியார் செய்த ஆங்கில மொழிபெயர்ப்பும் சேர்க்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 358).

11548

திருக்குறள் ஒழிபியல் மூலமும் உரையும். தமிழவேள் க.இ.கந்தசாமி (உரையாசிரியர்). கொழும்பு 6: விஜயலட்சுமி புத்தகசாலை, 248, காலி வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).

56 பக்கம், விலை: ரூபா 3., அளவு: 21x14 சமீ.

இந்நூல் திருக்குறள்-ஒழிபியல் பற்றிய விளக்கக் குறிப்புகளையும், ஒழிபியற் பாக்களுக்குப் பதவுரை-விசேடவுரைகளையும் இலக்கணக் குறிப்புகளையும் சொல்-பொருள் நயங்களையும் வழங்குகின்றது. புதிய சமுதாய நோக்கில் ஒழிபியற் பாக்களுக்கு விளக்கம் தந்து இவ் ஒழிபியற் பகுதி மக்கள் சமுதாயத்துக்கு மிகப் பயனாவதை வலியுறுத்துகின்றது. முதலிரு இயல்களும் திருக்குறள் பற்றிய குறிப்புகள், ஒழிபியல் பற்றிய குறிப்புகள் என்பவற்றை தனித்தனியாக விளக்குகின்றன. தொடர்ந்து இயல் 3 முதல் இயல் 15 வரை, முறையே அதிகாரம் 96-குடிமை, அதிகாரம் 97-மானம், அதிகாரம் 98-பெருமை, அதிகாரம் 99-சான்றாண்மை, அதிகாரம் 100- பண்புடைமை, அதிகாரம் 101-நன்றியில் செல்வம், அதிகாரம் 102-நாணுடைமை, அதிகாரம் 103-குடிசெயல்வகை, அதிகாரம் 104-உழவு, அதிகாரம் 105-நல்குரவு, அதிகாரம் 106-இரவு, அதிகாரம் 107-இரவச்சம், அதிகாரம் 108-கயமை ஆகிய குறளதிகாரங்களை விளக்குகின்றன. இறுதியான 16ஆவது இயலில் மாதிரி வினாக்கள் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 356).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11549

திருக்குறள்: பொருட்பால்-ஒழியியல்: மாதிரி விடைகளுடன். சு.இராஜநாயகம். யாழ்ப்பாணம்: சு.இராஜநாயகம், மானிப்பாய், 1வது பதிப்பு, ஆனி 1975. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம், காங்கேசன்துறை வீதி).

iv, 102 பக்கம், விலை: ரூபா 3.75, அளவு: 21x14 சமீ.

இந்நூலிலுள்ள 13 அதிகாரங்களும் க.பொ.த. உயர்தர பரீட்சைப் பாடத்திட்டத்தில் அடங்கியுள்ளவை. மாணவர்களின் பயன்பாட்டுக்காக ஆசிரியரால் இவற்றுக்கான உரை எழுதப்பட்டுள்ளது. அவர்களின் நலன்கருதி எல்லா அதிகாரங்களுக்கும் மாதிரி விடைகள் தரப்பட்டுள்ளன. அவ்வவ்வதிகாரங்களின் திரண்ட பொருளை அறிவதற்கும் இவ்விடைகள் பயன்படும்.

11550

தேர்ந்த தமிழ்ச் சிறுகதைகள் (க.பொ.த.உயர்தர வகுப்புக்குரியது). புலவர் இளங்கோ (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, ஜுன் 2003, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1995. (கொழும்பு 12: நிசான் பிறின்ரர்ஸ்).

iv, 98 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x14 சமீ.

க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களின் பாடத் தேவைக்காக அச்சிடப்பட்ட இந்நூலில் புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன், கு.அழகிரிசாமி ஆகிய தமிழக எழுத்தாளர்களினதும் இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம் ஆகிய ஈழத்து எழுத்தாளர்களினதும் தேர்ந்த தமிழ்ச் சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. கதாசிரியர் பற்றிய குறிப்புகளும், மாதிரி வினாக்களும் மேலதிகமாகத் தரப்பட்டுள்ளன. இந்நூலில் 19 அத்தியாயங்களில் இவை தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி ஒரு நோக்கு, புதுமைப்பித்தன் -கவிதை, புதுமைப்பித்தன்-குறிப்பு, ஒரு நாள் கழிந்தது (புதுமைப்பித்தன்), புதுமைப்பித்தன் சிறுகதைகள்-ஓர பார்வை, கு.ப.ராஜகோபாலன் குறிப்பு, கு.ப.ராஜகோபாலன் கதைகள், கனகாம்பரம் (கு.ப.ராஜகோபாலன்), கு.அழகிரிசாமி-குறிப்பு, தவப்பயன் (கு.அழகிரிசாமி), கு.அழகிரிசாமியின் கதைகள், ஈழத்தில் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி, இலங்கையர் கோன் -குறிப்பு, வெள்ளிப்பாதசரம் (இலங்கையர்கோன்), இலங்கையர்கோன் சிறுகதைகள்-ஒரு நோக்கு, சி.வைத்தியலிங்கம்- குறிப்பு, பாற்கஞ்சி (சி. வைத்தியலிங்கம்), சி.வைத்தியலிங்கத்தின் சிறுகதைகள்-ஒரு பார்வை, மாதிரி வினாக்களும் விடைகளும் ஆகிய தலைப்புகளின் கீழ் எழுதப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35956).

11551

நளவெண்பா (கதை). அகளங்கன். வவுனியா: முத்தமிழ் கலாமன்றம், பம்பைமடு, 1வது பதிப்பு, ஆவணி 1989. (யாழ்ப்பாணம்: உமா பிறின்டர்ஸ், 32, நல்லூர் குறுக்கு வீதி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8), 40 பக்கம், விலை: ரூபா 12.00, அளவு: 18.5x14 சமீ.

மகாபாரதத்தின் துணைக் கதைகளுள் ஒன்றான, நிடத நாட்டை ஆண்ட நளன் என்னும் மன்னனின் கதையைத் தமிழில் கூற எழுந்ததே நளவெண்பா ஆகும். இதனை எழுதியவர் 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழேந்திப் புலவர் என்பவராவார். இதன் பெயர் சுட்டுவது போல், இந் நூல் வெண்பாக்களால் அமைந்தது. சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இந் நூலில், 405 வெண்பாக்கள் உள்ளன. இவற்றுள் 13 வெண்பாக்கள், பாயிரம், நூல்வரலாறு என்பனவாகும். சுயம்வர காண்டத்தில் 155 வெண்பாக்களும், கலிதொடர் காண்டத்தில் 147 வெண்பாக்களும், கலிநீங்கு காண்டத்தில் 90 வெண்பாக்களும் உள்ளன. மகாபாரதத்திலே கௌரவர்களுடன் சூதாடித் தோற்ற பாண்டவர்கள் தங்கள் நாட்டை விட்டுக் காட்டிலே வாழ்கின்றனர். அவர்களைப் பிரகதசுவர் என்னும் முனிவர் சென்று காண்கிறார். தமக்கு நிகழ்ந்தவற்றையிட்டுக் கவலையுடன் இருந்த தருமரைத் தேற்றுமுகமாக முனிவர் அவருக்குக் கூறியதாக இக்கதை அமைந்துள்ளது. புகழேந்திப் புலவர் எழுதிய நளவெண்பாவை சிறுவர்களுக்கு ஏற்றவண்ணம் எளிமையாக்கி வசனநடையில் அகளங்கன் வழங்கியிருக்கிறார். நிடத நாட்டின் மன்னன் நளன். அவனது மனைவியான தமயந்தி நளனை விரும்பி சுயம்வரத்தில் அவனை தேர்ந்தெடுத்து மணந்ததை இந்திரன் மூலம் கேட்டு, தமயந்தியின் சுயம்வரத்தில் கலந்து கொள்ள வந்துகொண்டிருந்த கலிபுருஷன் நளனை பழிவாங்க முடிவு செய்வதும், அதன் பின்னர் நடக்கும் சூதாட்டத்தில் நளன் நாடிழந்து, மனைவி குழந்தைகளைப் பிரிந்து சிரமப்பட்டு, பின்னர் இழந்த அனைத்தையும் திரும்பப்பெறுவதைக் கூறும் கதை இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13324).

11552

நளவெண்பா: கலிநீங்கு காண்டம். ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை (உரையாசிரியர்). யாழ்பபாணம்: சைவபரிபாலன சபை, 1வது பதிப்பு, 1956. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).

86 பக்கம், விலை: 75 சதம், அளவு: 18x12 சமீ.

புகழேந்தியார் பாடிய சிறுகாப்பியம் நளவெண்பா. இது சொற்சுவை, பொருட் சுவையுடையதாய், நிதிகளை நன்கு புகட்டுவதாய், கற்பனை மலிந்ததாய், எதுகை மோனைகளின் சிறப்பமைந்ததாய், சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் முதலாம் பத்தழகுகள் உடையதாய் விளங்கும் சிறு காப்பியமாகும். நளவெண்பாவின் இறுதிக் காண்டமாகிய கலிநீங்கு காண்டம் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் 1933இல் ஜுனியர் பரீட்சைக்குத் தமிழ்ப்பாடமாக விதிக்கப்பெற்றிருந்த நிலையில், மாணவர்களின் பயன்பாடு கருதி இப்பகுதி பதவுரை, கருத்துரை, விசேடவுரை, நூலாசிரியர் வரலாறு என்பவற்றுடன் அப்பகுதியின் ஆங்கில மொழி பெயர்ப்பினையும் சேர்த்து வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 0483).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11553

பாரதம்: உத்தியோக பருவம் கிருட்டிணன் தூது சருக்கம்: பொழிப்புரையுடன். *வில்லிபுத்தூராழ்வார் (மூலம்), ம.வே.திருஞானசம்பந்தன் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவ பரிபாலன சபை, 1வது பதிப்பு, புரட்டாதி 1934. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).*

120 பக்கம், விலை: சதம் 75., அளவு: 21.5x14 சமீ.

மகாபாரதத்தில் கிருஷ்ணபகவான் பாண்டவருக்காக துரியோதனனிடம் தூது சென்ற வரலாற்றை விளக்கும் பாகம் கிருட்டிணன் தூதுச் சருக்கமாகும். இலங்கை உயர்கல்வி மாணவர்களுக்காக திருத்தியும், விளக்கியும், புதுக்கியும் எழுதப்பட்ட பொழிப்புரையுடன் இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 319).

11554

புகழேந்திப் புலவர் இயற்றிய நளவெண்பா: கலிதொடர் காண்டம், கலி நீங்கு காண்டம் (மூலமும் உரையும்). *அ.சே.சுந்தரராஜன் (பதிப்பாசிரியர்). சுன்னாகம்: அ.சே.சுந்தரராஜன், கல்லூரி அகம், இராமநாதன் கல்லூரி, 1வது பதிப்பு, மார்ச் 1961. (தமிழ்நாடு: சாரதாவிலாச பிரஸ், 8, கரிக்காரத் தெரு, கும்பகோணம்).*

48+102 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 21x14 சமீ.

இலங்கை முன்னாள் அமைச்சர் சு.நடேசபிள்ளை அவர்களது முன்னுரையுடன் கூடிய நூல். இதில் முன்னுரை, கதைச்சுருக்கம், சிறப்பியல்புகள் என்பன முதற் பிரிவிலும், நளவெண்பா கலித்தெடர் காண்டம் 28 முதல், கலிநீங்கு காண்டம் (மூலமும் உரையும்), பொருளகராதி, உவமையகராதி என்பன இரண்டாம் பிரிவிலும் தரப்பட்டுள்ளன. முதற்பிரிவின் சிறப்பியல்புகளாக கதைப்பகுதிகளில் அமைந்த சிறப்பியல்புகள், கதாபாத்திரங்களின் குணாதிசயங்கள், வருணனைத்திறன், அடைமொழிகளை ஆளும் திறன், உவமை முதலிய அணிகள், வாழ்க்கை விமர்சனம் முதலியன ஆகிய ஆறு விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19312).

11555

மகா பாரதம்: கிருட்டிணன் தூதுச் சருக்கம் உரையுடன். *வில்லிபுத்தூராழ்வார் (மூலம்). யாழ்ப்பாணம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், சுன்னாகம், 2வது பதிப்பு, 1946. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*

xii, *168 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 21.5x13.5 சமீ.*

மகாபாரதத்தில் பாண்டவர்கள் வனவாசமும் அஞ்ஞாதவாசமும் முடித்தபின் உபப்பிலாவியம் என்னும் ஊரில் இருந்துகொண்டு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியைத் துரியோதனனிடம் தூதுசெல்ல விடுத்த பகுதி இதுவாகும். வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தினர் மாணவர் நலன் கருதி இந்நூலுக்கு எளிய உரை எழுதுவித்து வெளியிட்டுள்ளனர். உரையாசிரியர் பெயர் தரப்படவில்லை. (இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 320).

11556

மகா பாரதம்: சபாபருவம்: இராசசூயச் சருக்கம். வில்லிபுத்தூராழ்வார் (மூலம்), ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை, ந.சுப்பையபிள்ளை (உரையாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: சி.சபாரத்தினம், ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணை, 8வது பதிப்பு, சித்திரை 1926, முன்னைய பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).

iv, 95 பக்கம், விலை: சதம் 75, அளவு: 21x14 சமீ.

வில்லிபுத்தூராழ்வார் இயற்றிய மகாபாரதத்தின் சபா பருவத்து, இராசசூயச் சருக்கமே இந்நூலாகும். இது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியரும் இந்து சாதனம் பத்திரிகையின் ஆசிரியருமான ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளை, மேற்படி கல்லூரித் தமிழாசிரியரான வித்துவான் ந.சுப்பையபிள்ளை ஆகிய இருவராலும் எழுதப்பட்ட பதவுரை, விசேடவுரை, நூலாசிரியர் வரலாறு என்பவற்றையும் உள்ளடக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 315).

11557

மகா பாரதம்: சூது போர்ச் சருக்கம். வில்லிபுத்தூராழ்வார் (மூலம்), சி.கணேசையர் (உரையாசிரியர்). சுன்னாகம்: தனலக்குமி புத்தகசாலை, 1வது பதிப்பு, 1939. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xii, 191 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 21.5x13.5 சமீ.

மகாபாரதத்தில் துரியோதனனது தூண்டுதலால் சகுனியுடன் தருமபுத்திரன் ஆடிய சூதாட்டத்தைக் கூறும் பாகமே சூதுபோர்ச் சருக்கமாகும். படைகளைக்கொண்டு செய்யும் போரில் வெற்றி தோல்விகளால் இராச்சியத்தைப் பெறுதலும் இழத்தலும் நிகழ்தல்போல, காய்களைக்கொண்டு செய்யும் இச்சூதாட்டத்திலும் வெற்றி தோல்விகள் காரணமாகப் பொருள்களைப் பெறுதலும் இழத்தலும் நேர்வதனால் சூதாட்டத்தைப் போராக உருவகப்படுத்தி "சூதுபோர்" என்று குறிப்பிடப்படுகின்றது. இந்நூலின் மூல நூலாசிரியர் ஸ்ரீ வில்லிபுத்தூராழ்வார், செந்தமிழ்ப்பாரத நூலாசிரியர். 1450-1471 காலகட்டத்தில் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள சனியூரில் பிறந்து வாழ்ந்த வைஷ்ணவ அறிஞர். இந்நூலின் உரையாசிரியர் பிரம்மஸ்ரீ சி. கணேசையர். நூலாசிரியர் வரலாறு, மகாபாரதச் சுருக்கம், சூதுபோர்ச் சருக்கச் சுருக்கம், சூதுபோர்ச் சருக்கம் (செய்யுள்), மேற்படி செய்யுட்களுக்கான உரை என ஐந்து அத்தியாயங்களில் இந்நூலை எழுதியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 322).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8(05) இலக்கிய அமைப்புகளின்/சஞ்சிகைகளின் சிறப்பிதழ்கள்

11558

கரை எழில் 2012. மலர்க்குழு. கிளிநொச்சி: கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், கரைச்சி, 1வது பதிப்பு, 2012. (யாழ்ப்பாணம்: மதி பிரின்டர்ஸ், முத்திரைச் சந்தி, நல்லூர்).

xx, 193 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

2011ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வெளிவரும் பிரதேச மலரின் 2012ஆம் ஆண்டுக்கான இதழ் இதுவாகும். மலர்க் குழுவில் கோ.நாகேஸ்வரன், ச. பி.அமலராசா, கு.றஜீபன், வே.தபேந்திரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். கிளிநொச்சியின் கல்வி வளர்ச்சி, உலகமயமாக்கல்- வன்னி அபிவிருத்தி ஒரு பார்வை, இலங்கைத் தமிழ் சினிமாவில் என் பார்வை, குரிசில் நல்கும் பெறல் அரும் பரிசில், சுயதொழில்களை வெற்றிகரமாகச் செய்தல், தமிழ் மரபு போற்றும் விழாக்கள், சமூகப் பண்பாட்டுப் பின்புலத்தில் அரங்கு: ஈழத் தமிழ் அரங்கு ஒரு நோக்கு, நாட்டுப்புறப் பாடல், கிரேக்க நாடகமும் கருத்தியலும் நாடகத்தில் கரணத் தோற்றம், முதலீடு ஒன்றினை மேற்கொள்ளும்போது கவனிக்கவேண்டிய விடயங்கள், நேரமுகாமைத்துவம், காணி ஆதனம் தொடர்பான சட்டங்களும் காணிப் பதிவு நடைமுறைகளும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமிழ்மொழியின் பிரயோக எல்லை இருப்புகளின் தொன்மை நிலையைக் காட்டும் சாசன மூலங்கள், கிளிநொச்சி எப்படி இருக்கிறது? அங்கே என்ன நடக்கின்றது? கொடியேற்ற விழாவின் சைவசித்தாந்தப் பொருண்மை, முகம் மறைத்தவள்-சில குறிப்புகள், ஆட்டம், ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் குறியீடு, சைவசித்தாந்த வளர்ச்சிக்கு ஈழத்தவர்களின் பங்களிப்பு, கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி கிழக்கு பிரதேசத்தில் புத்தொளி தந்த புழுதி ஆறு நீரிணை, தமிழ்ச் சூழலில் நவீன மயமாக்கமும் பெண்களும், மனிதநேயம், கரைச்சிப் பிரதேசமும் விஷ்ணு வழிபாடும், உலகத்தின் முழுமணியாய் விளங்கும் உலகப் பொதுமறை திருக்குறள், தமிழின் செவ்வியல் இலக்கியத் தோற்றம், சங்கத்தமிழர் பண்பாடு, தமிழ்ப் பாரம்பரியத்தில் அழகியற் கல்விச் சிந்தனைகள், தமிழ்ப் பழமொழிகளில் பெண்மை, கிளிநொச்சி மாவட்ட உளநல சேவைகளின் தொகுப்பு, வாழ்க்கையை நேசிப்போம், கவிதைகள், வன்னிப்பிரதேச வயற்பண்பாடு, கிளிநொச்சியின் நாடகத் தடங்களின் வழியே ஓர் உலா, கிளிநொச்சி ஒரு பெருநகரம்- வாய்ப்புகளும் வளங்களும் பற்றிய ஒரு முன்னுணர்வு, தமிழ்க் கலாசார மாற்றங்களும் அழிவுகளும் இழப்பியலும் இழிவிரக்கமும் ஆகிய 35 படைப்புக்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

11559

கரை எழில் 2013. மலர்க்குழு. கிளிநொச்சி: கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், கரைச்சி, 1வது பதிப்பு, 2013. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், முத்திரைச் சந்தி, நல்லூர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xx, 258 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

2011ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வெளிவரும் பிரதேச மலரின் 2013ஆம் ஆண்டுக்கான இதழ் இதுவாகும். கரைச்சிப் பிரதேசம் பற்றிய ஏராளமான தகவல்களுடனும் அப்பிரதேசத்துக் கலைஞர்கள், படைப்பாளிகளின் ஆக்கங்களுடனும் இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. மலர்க் குழுவில் கோ. நாகேஸ்வரன், ச.பி.அமல்ராஜ், ப.லுரேந்திரன், கு.றஜீபன், சி.கருணாகரன், சு.பிரசாந்தன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இரணைமடுக் கலாசாரம், வளம்பெருக்கும் வாலிபர்களே, இளைஞர்களைக் கவர்ந்த கனகபுரம் படித்த வாலிபர் குடியேற்றத் திட்டம், தண்ணீருக்கான யுத்தம், வன்னிப் பெருநிலப் பிரதேசமும் பல்லினப் பண்பாடும், கிளிநொச்சி மாவட்டத்தின் மீளநிலைப் படுத்தலும் நினைவழியா நிகழ்வுகளும், போரின் பின்னரான சமூக பொருளாதார அபிவிருத்தியும் வடக்கு மக்களின் வாழ்க்கை நிலையும், இணையிலாத் தமிழ், நாகரிகம் மிக்க நாகர்கள் சைவ சமயத்தின்மீது பேரபிமானம் கொண்டவர்கள், தமிழர் பண்பாடு: இருப்பும் சவால்களும், மீண்டும் வாருங்கள் காதுகளில் ஒலிக்கும் பிஞ்சுகளின் அழைப்பு, நிலைபேறான எதிர்காலத்திற்கான சுதேச அறிவு, அக்கராயன் வட்டகை, சமயநெறி உணர்த்தும் வழிபாட்டு முறைகள், சைவசமயச் செல்நெறியில் தலயாத்திரை, தமிழ்மொழியும் இற்றைப்படுத்தலும், 1980களுக்குப் பின் வெளிவந்த ஈழத்துக் கவிதைகளில் இயற்கை, கடவுளின் ரூபம் ஆதாரம் வேதாந்த ரஹஸ்யம், முருகனின் சிறப்புக்களும் வளர்ச்சிப்போக்கும் பற்றிய ஓர் ஆய்வு, சைவசித்தாந்த வளர்ச்சிக்கு ஈழத்தவரின் பங்களிப்பு, வெற்றிகரமான வாழ்க்கை, தென்னம்பிள்ளைக்கு மங்கைப்பருவ மங்கல நீராட்டுவிழா, நவீனமயமாதலும் பண்பாட்டுப் பிறழ்வுகளும், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் நாடக நிலை, எமது உரிமைகளை நாமும் அறிவோம், முயற்சியாளரின் வெற்றிக்கு வித்திடும் சிறந்த நிதிசார் நிபுணத்துவம், மட்டக்களப்பு வடமோடிக்கூத்து ஆடலும் செந்நெறி நடனமும், கரி காசாகும்போது காசு கரியாகிறதே, கரைசேரா படகுகள், வண்ணமலர் வாரி அணைத்து, எதிர்பார்ப்பு, மலைத்தேச கலைச்சொத்து காமன்கூத்து, அரங்கினூடாக சிறுவர்களுக்கான மனோதிடம் மேம்பாடு, வணங்காமுடி வெடியரசனின் பசுத்தீவின் வரலாற்றுக் காவியம் சரித்திர நாடகம், வாய்மை காத்த மன்னன், நட்பின் இலக்கணம், கலியுகத்தில் அமைதியாய் வாழ, தமிழன் சிந்தனைகள், ஸமன் கவிதைகள், கிளையற்று அலையும் பறவையின் பெயர், போன நண்பன், ககனா கவிதைகள், கரைஎழில் விருது நூலில் இடம்பெறும் கலைஞர்கள் பற்றிய சுருக்கமான விபரக்குறிப்பு ஆகிய 43 விடயதானங்கள் இம்மலரை அலங்கரிக்கின்றன.

11560

கரை எழில் 2016. மலர்க்குழு. கிளிநொச்சி: கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், கரைச்சி, 1வது பதிப்பு, 2016. (கிளிநொச்சி: கரிகணன் பதிப்பகம், இல. 126, ஆனந்தபுரம், ஏ9 வீதி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xx, 277 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

2011ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வெளிவரும் பிரதேச மலரின் 2016ஆம் ஆண்டுக்கான இதழ் இதுவாகும். கரைச்சிப் பிரதேசம் பற்றிய ஏராளமான தகவல்களுடனும் அப்பிரதேசத்துக் கலைஞர்கள், படைப்பாளிகளின் ஆக்கங்களுடனும் இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. மலர்க் குழுவில் கோ. நாகேஸ்வரன், சிவகாமி உமாகாந்தன், ச.பி.அமலராசா, ப.லுரேந்திரன், கு.றஜீபன், வளவை வளவன், T.S.யோசுவா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். வாழ்த்துக்கள் (பொதுக்)கட்டுரைகள், சமயம், நவீன இலக்கியம், சிறுகதைகள், கவிதைகள், கல்வியியல், கலைகள், நேர்காணல், அரங்கப் படையல், பண்பாடுகள், பொதுவியல், குறும்பட மற்றும் புகைப்படப் பயிற்சி ஆகிய பரிவுகளுக்குள் அடங்கும் 50 படைப்பாக்கங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

11561

கவின்தமிழ் 2012: வடமாகாண தமிழ்மொழித் தினச் சிறப்பு மலர்.தி.தர்மலிங்கம் (மலராசிரியர்). யாழ்ப்பாணம்: தமிழ்மொழித் தினக் குழு, மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம், 1வது பதிப்பு, 2012. (யாழ்ப்பாணம்: ஈஸ்வா டிஜிட்டல் பிறஸ், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி).

xvi, 169 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x17 சமீ.

அன்பு, அன்பின் மேன்மை, தர்மம் தலை காக்கும், தமிழ்மொழி வளர்ச்சியில் இணையம், கல்வியும் பொருளாதாரமும், சரித்திரம் படைப்போம், புதியதோர் உலகம் செய்வோம், உறவு, ஏளனம், ஆழ்கடலின் அடியில், புரியாத புதிர், வெறி, செல்லிடப் பேசிகள் வரமா சாபமா, தமிழ்ப் பண்பாட்டின் மரபுகளும் மரபுச் சின்னங்களும், இனிக்கச் சுவைபடக் கற்பிக்கும் பாடம் தமிழ்-ஒரு பார்வை, தமிழில் கவிதைத் தொகுப்பு முயற்சிகளின் வரலாறு, தமிழுக்குப் பாரதி, ஈழத்துச் சதகங்கள், எங்கள் தமிழ், இசையில் இராகங்கள், இசைக்கலை, இசைக்கருவிக்கு உயிரூட்டும் மிருதங்கம்-ஓர் அறிமுகம், உலகமயமாதலில் பரதம், நாடக எழுத்துருவைப் புரிந்துகொள்ளல், கீழைத்தேய ஆடற்கலை, நம்மவர் அடையாளங்களே கூத்துக்கலை, ஒன்பான் சுவையும் உணர்ச்சிகளும், கடவுளை சிருஷ்டித்த கலைஞன் இரவிவர்மா, பேசாலைப் பாரம்பரிய உடக்குப் பாஸ் திருப்பாடுகளின் காட்சி, யாழ்ப்பாணத் தென்மோடி நாட்டுக்கூத்து ஓர் அறிமுகம், நூல்களிலும் ஏனைய வழிகளிலும் தகவல்களைத் தேடிக் குவித்தவர் அறிஞரா?, மொழியும் ஊடகமும், தமிழ் எங்கே போகின்றது?, இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகளும் அவற்றின் முக்கியத்துவமும், பட்டம் கட்டும் கலை, நெஞ்சம் முழுக்க நெருப்பு, பூவுக்கு ஆயுளை நீ கேட்கவேண்டாம், சிவத்தம்பியாய் வாழ்ந்த தமிழே, கானல், மெழுகுவர்த்திகள், மாகாண நிலைத் தமிழ்த்தினப் போட்டிகள் 2011 ஆகிய தலைப்புகளில் எழதப்பட்ட பல்வகை ஆக்கங்கள் இம்மலரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்கரிக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 53601).

11562

ஞானம் 200ஆவது இதழ்: ஈழத்துத் தமிழ் நவீன இலக்கிய வெளி: புரிதலும் பகிர்தலும் - நேர்காணல்கள். தி.ஞானசேகரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46வது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜனவரி 2017. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xx, 980 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 2000., அளவு: 25.5x18 சமீ., ISBN: 978-955-8354-70-4.

06.06.2000 அன்று தனது முதலாவது இதழை வெளியிட்டுவைத்த ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையின் 200ஆவது இதழ் ஈழத்து/ புலம்பெயர் இலக்கியவாதிகளின் நேர்காணல்களின் பெருந்தொகுப்பாக 976 பக்கங்களில் வெளிவந்துள்ளது. தாயகத்திலும் புகலிடத்திலும் வாழும் படைப்பாளிகளை எவ்வித வேறுபாடுகளுமின்றி அரவணைத்துப் பயணிக்கும் இச்சஞ்சிகையின் 200ஆவது இதழில், ஈழத்தமிழரின் கலை, இலக்கிய வாழ்வியலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எஸ். பொன்னுத்துரை, டொமினிக் ஜீவா, எம்.ஏ நுஃமான், செ.யோகநாதன், வ.அ.இராசரத்தினம், அருண் விஜயராணி, கே.எஸ்.சிவகுமாரன், பொன். பூலோகசிங்கம், கவிஞர் அம்பி, த.கலாமணி, லெ.முருகபூபதி, சி.தில்லைநாதன், வரதர், கே.கணேஷ், சிற்பி, கா.சிவத்தம்பி, நா.சோமகாந்தன், பாலசிங்கம் பிரபாகரன், சித்திரலேகா மௌனகுரு, புதுவை. இரத்தினதுரை, வீ.அரசு (தமிழகப் பேராசிரியர்), ச.பஞ்சாட்சர சர்மா, செங்கை ஆழியான், மா.அனந்தராசன், தெளிவத்தை ஜோசப், துவாரகன், உமா ஸ்ரீதரன், சபா.ஜெயராசா, வீ.தனபாலசிங்கம், மு.பொன்னம்பலம், தெ.மதுசூதனன், தி.ஞானசேகரன், ஷோபா சக்தி, குழந்தை ம.சண்முகலிங்கம், கார்த்திகா கணேசர், முல்லை அமுதன், செ.கணேசலிங்கன், சோ.பத்மநாதன், தெணியான், அ.முத்துலிங்கம், ஜின்னாஹ் ஷரிபுத்தீன், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், அகளங்கன், நூலகவியலாளர் என்.செல்வராஜா, அன்னலட்சுமி இராஜதுரை, இளைய அப்துல்லாஹ், கே.ஆர்.டேவிட், வி. ஜீவகுமாரன், அ.சண்முகதாஸ், இரா.உதயணன், துரை மனோகரன், ஆசி. கந்தராஜா, நா.சுப்பிரமணியன், சோ.சந்திரசேகரம் ஆகியோரின் நேர்காணல்கள் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்தும் ஞானம் இதழ்களில் முன்னர் பிரசுரமானவை.

11563

தமிழமுதம்: கொழும்பு வலய தமிழ்மொழித் தினச் சிறப்பு மலர்2005. தமிழ்மொழித் தின விழாக் குழுவினர். கொழும்பு 2: கொழும்பு வலயக் கல்விக் காரியாலயம், மேல்மாகாணம், 1வது பதிப்பு, 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

vi, 74 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளர்கள், கல்விப் பணிப்பாளர்களின் ஆசிச் செய்திகளுடனும் பல்வேறு இலக்கிய கவிதை/கதை/கட்டுரைகளுடனும் இம்மலர் தொகுக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் பெண்களின் நிலை: சுவாமி விபுலாநந்தர் நோக்கு (தி.தில்லைநாதன்), தகவல் தொழில்நுட்ப அறிவின் சமூகப் பயன் (சோ.சந்திரசேகரன்), வாழ்கைக்கு ஏமாப்புத் தருவன (சி.து.இராஜேந்திரம்), ஆழ்வார்களின் பக்தி அனுபவம் (வ.மகேஸ்வரன்), செந்தமிழ் மொழியின் சீரிய பெருமைகள் (கனகசபாபதி நாகேஸ்வரன்), மொழி கற்பித்தலில் இலக்கியத்தின் பங்கு (எஸ்.எம்.ஆர்.சூர்டீன்), நான் விரும்பும் பெரியார் (சு.தினேஸ்குமார்), கீழ்வானில் எழும் பொற்கதிர் (நஸ்பா நிலாப்டீன்), இயற்கையே ஏங்க வைக்காதே (றிவ்னா ஸமான்), மனம் ஊனமில்லை (பா.நிஷாந்தி), ஒழுக்கம் வாழ்வின் முன்னேற்றம் (ஜெ.ஜனகன்), வெற்றி நிச்சயம் (ஜெ.லிண்டா), தமிழ் மொழி வளர்ச்சிக்கு நவீன தொழில்நுட்ப சாதனங்களின் பங்களிப்பு (சி.செரின் நிரோஜினி), உரிமை கிடைக்கும் வரை ஓயாது (மு.கிருஷ்ணவேணி), வீழ்வேன் என நினைத்தாயோ? (கு.அனுஷா), நவீன தொடர்பு சாதனங்களும் தமிழ் மொழியும் (சி.அகிலேஸ்வரி), சுனாமியே சுந்தர இலங்கையை சிதைத்தனையோ? (தே.விஜேந்தின்), கொழும்பு வலயப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்மொழித்தினப் போட்டி முடிவுகள் 2005 ஆகிய கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36471).

11564

புதுமை இலக்கியம்: தேசிய ஒருமைப்பாட்டு எழுத்தாளர் மாநாட்டு மலர், 1975. மலர்க் குழு. கொழும்பு 5: இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க வெளியீடு, 4/44, பொல்ஹெங்கொட வீதி, 1வது பதிப்பு, மே 1975. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).

(10), 126 + 6 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x17.5 சமீ.

1975 மே 30, 31ம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டு மாநாட்டின் போது வெளியிடப்பெற்ற சிறப்புமலர் இது. இதில் தலையங்கம், தேசிய ஒருமைப்பாட்டுத் திட்டம், தேசிய இனப்பிரச்சினை (பிரேம்ஜி), எல்லாம் வோட்டாலே (மாவை. நித்தியானந்தன்), சாதிகள் இரண்டே (மருதூர்க் கொத்தன்), குறுக்கே வந்த தெய்வங்கள் (திக்கவல்லை கமால்), அறிவுத்துறை விரிவும் ஆக்க இலக்கிய வாய்ப்பும் (சபா.ஜெயராசா), தேசத்தின் விடுதலைக்கு (மருதூர்க்கனி), இ.மு.எ.சங்கமும் ஈழத்தின் தமிழிலக்கிய வளர்ச்சியும் (கா.சிவத்தம்பி), தாத்தா மாரும் பேரர்களும் (எம்.ஏ.நுஃமான்), இலக்கியத்தின் மூலம் ஒருமைப்பாடு (அ.சண்முகதாஸ்), இலக்கியம் காட்டும் தேசிய ஒருமைப்பாடு (க.கைலாசபதி), ஒரு மாலை வகுப்பு நண்பர்கள் (காந்தன்), தேசிய ஒருமைப்பாடு (இ.சிவானந்தன்), விழிப்பு (லெ.முருகபூபதி), வெள்ளைக்கார எகாதிபத்தியத்தை எதிர்த்து (எம்.எ. கிஸார்), மண்ணிலே சொர்க்கம் மலர (மு.சடாட்சரம்), தொழிலாளி வர்க்க கலை இலக்கியம் (நீர்வை பொன்னையன்), ஒரே ஒரு தேசத்தில் (கருணா பெரேரா), புதுமை எழுத்தாளர்களே (அ.இராகவன்), முற்போக்கு எழுத்தாளர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்நோக்கும் பிரச்சினை (H.M.P.முஹிதீன்), மலையகமும் தேசிய இலக்கியமும் (முத்தையன்), இஸ்லாமியத் தமிழ் இலக்கியமும் புறக் கருத்துகளும் (எம்.எம். உவைஸ்), வாருங்கள் வையகத்தை வென்றெடுப்போம் (பாலமுனை பாறூக்), இ.மு.எ.ச. வரலாறும் சாதனைகளும் (இளங்கீரன்), மரபு பற்றிய மார்க்சிய நிலை (சி.தில்லைநாதன்), வடக்கு மனிதனும் தெற்கு மனிதனும் (மௌனகுரு), லபுமல் சுவந்த நெத்த (S.M.J.பைஸ்தீன்), தேசிய ஒருமைப்பாட்டுக்கான போராட்டத்தில் இ.மு.எ.சங்கம் (என்.சோமகாந்தன்) ஆகிய ஆக்கங்கள் இம்மலரில் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 42104).

11565

மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா 1995 சிறப்பு மலர். அந்தனி ஜீவா (இதழாசிரியர்). கண்டி: மத்திய மாகாண கல்வி (தமிழ்) கைத்தொழில் கால்நடை அபிவிருத்தி உணவு வர்த்தகம் வாணிப சுற்றுலாத்துறை இந்துக் கலாசார அமைச்சு, 1வது பதிப்பு, 1995. (கண்டி: ரோயல் ஒப்செட் பிரைவேட் லிமிட்டெட், 190, கொழும்பு வீதி).

(24), 84 பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x20.5 சமீ.

மத்திய மாகாணத்தின் கலாசார அமைச்சராக கௌரவ. வீ.புத்திரசிகாமணி அவர்கள் பணியாற்றிய காலத்தில் இடம்பெற்ற தமிழ் சாகித்திய விழாவின்போது எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு விருது, கலை இலக்கிய பணியாளர்களுக்கு விருதும் பொற்கிழியும் என பல்வேறு கௌரவங்களை வழங்கிச் சிறப்பித்திருந்தார்கள். அவ்வேளையில் சாரல்நாடன், சு. முரளிதரன், கலாநிதி துரைமனோகரன் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இம்மலரும் வெளியிடப்பட்டது. ஆசியுரை, வாழ்த்துரைகளுடன் விழா நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்களும், இலக்கிய ஆக்கங்களும் இம்மலரில் இடம்பெற்றிருந்தன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22693).

11566

மல்லிகை: 45ஆவது ஆண்டு மலர். டொமினிக் ஜீவா (ஆசிரியர்). கொழும்பு 13: மல்லிகை, 201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2010. (கொழும்பு 13: லட்சுமி பிரிண்டர்ஸ்).

152 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 26.5x20.5 சமீ.

15.08.1966 அன்று ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகை உலகில் கால்பதித்து 45 ஆண்டுகளைக் கடந்துவிட்ட மல்லிகை மாத இதழின் 2010க்கான சிறப்பிதழை மா.பாலசிங்கம் அவர்களின் உதவியுடன் ஆசிரியர் டொமினிக் ஜீவா உருவாக்கியுள்ளார். இதிலுள்ள சிறுகதைகளை கொற்றை பி.கிருஷ்ணானந்தன், க.சட்டநாதன், குருதட்சணன், கம்பவாரதி ஜெயராஜ், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், தெணியான், மு.பஷீர், பரன், டொமினிக் ஜீவா, தெளிவத்தை ஜோசப், செங்கை ஆழியான், வேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதன், சந்திரகாந்தா முருகானந்தன், கெக்கிராவ சஹானா ஆகியோர் எழுதியுள்ளனர். கவிதைகளை வை.சாரங்கன், கெக்கிராவ சுலைஹா, சுமைதாங்கி, நெடுந்தீவு மகேஷ், ஈழக்கவி, சோ.பத்மநாதன் ஆகியோர் வழங்கியுள்ளனர். இவை தவிர, இலக்கியமும் மொழிபெயர்ப்பும் (க.நாகேஸ்வரன்), இலங்கை வானொலி ஆங்கில சேவையில் தமிழரின் பங்களிப்பு (கே.எஸ்.சிவகுமாரன்), துரோணாச்சாரியார் துரோகி இல்லையா? (சின்னராஜா விமலன்), அம்பேத்கரும் எம்.சி.சுப்பிரமணியமும் (ந.இரவீந்திரன்), போலித்தன அடையாளங்களை வெறுத்த போற்றத்தக்க கலைஞன் லடீஸ் (A.S.M.நவாஸ்), தமிழ்-சிங்கள மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் காலத்தின் தேவை (திக்கவல்லை கமால்), நாட்டார் இலக்கியங்கள் (இணுவில் மாறன்), மல்லிகையின் ஓராண்டுச் சிறுகதை 2008-2009 ஒரு மதிப்பீடு (எம்.எம்.மன்சூர்), பின்நவீனத்துவத்தால் மார்க்கியத்தை நிராகரிக்க முடியவில்லை (பிரகலாத ஆனந்த்), உலகத் தமிழ் எழுத்தாளர் ஒன்றுகூடும் சர்வதேச விழா (முருகபூபதி), ஈழத்தின் சிறுகதைத் தரக்கணிப்புகள் பிழையானவையா? (மா.பாலசிங்கம்), பின் காலனியம் கோட்பாடும் இலக்கியமும் (மேமன்கவி), கிழக்கிலங்கை நாட்டாரிலக்கிய ஆய்வுகள்: செய்தவையும் செய்யவேண்டியவையும் (செ.யொகராஜா), உடப்புப் பிரதேசத்தில் முனைப்புப் பெற்றுவரும் கலை இலக்கியப் போக்கும் அதன் பின்புலங்களும் (உடப்பூர் வீரசொக்கன்) ஆகிய கட்டுரைகளும் இம்மலரை அழகுபடுத்துகின்றன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60097).

11567

முத்தமிழ் விழா சிறப்பு மலர் 1995. மலர்க்குழு. மட்டக்களப்பு: கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், மண்முனை வடக்கு, 1வது பதிப்பு, 1995. (மட்டக்களப்பு: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).

64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

தொண்ணூறுகளின் பின் மட்டக்களப்பு பிரதேச நவீன கலை இலக்கிய முயற்சிகள் (செ.யோகராசா), நாடறியா ஏடுகள் இராமர் அம்மானை-இராமர் கதை (சா.இ.கமலநாதன்), கரைந்தும் கரையாத காவியங்கள் (காசுபதி நடராசா), பெண்ணியம் சில குறிப்புகள் (சகாதேவன்), ஆயுள்வேதம்- சித்தம் (க.நடராசா), பொட்டிடப்படும் பொற்குடங்கள் (நிர்மலா ஜெயராஜா), தொல்காப்பியத்தில் வாய்மொழி இலக்கியத்தின் சுவடுகள் (வ.சிவசுப்பிரமணியம்), ஒரு சிவப்புப் பாடல் (சாருமதி), உரம்-சிறுகதை (செ.குணரத்தினம்), மட்டுநகரே நீ எங்கே செல்கிறாய்? (ஆர்த்திகா ரகுநாதன்), மட்டக்களப்பு தமிழ் மக்களின் சம்பிரதாயங்கள் (சங்கீதா செலஸ்ரின்), எங்கே நாம் போகிறோம் (செ.குணரத்தினம்), இலக்கிய நிகழ்வுகள்- ஒரு பதிவு ஆகிய 13 ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. இச்சிறப்பு மலரின் மலர் வெளியீட்டுக் குழுவில் காசுபதி நடராஜா, வி.தவராஜா, இரா.துரைரத்தினம், எஸ்.தங்கவேல், சி.மௌனகுரு, கே.லோரன்ஸ் ஆகியோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றிருந்தனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28286).

மேலும் பார்க்க: 11987

894.8(1) தமிழ்க் கவிதைகள்

11568

அக்கினிக் குஞ்சு. கனிவுமதி. கொழும்பு 5: கனிதா பப்ளிக்கேஷன்ஸ், 81/2, ஹவலொக் வீதி, 1வது பதிப்பு, 2015. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(8), 86 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 17.5x11.5 சமீ., ISBN: 978-955-7815-03-9.

இந்திய தேசம் கண்ட மிகச்சிறந்த வழிகாட்டியான அப்துல் கலாமின் கனவு காணுங்கள் என்ற கூற்று உலக இளைஞர்களுக்கெல்லாம் அவரை ஆத்மார்த்த குருவாக்கியது. அப்துல் கலாமின் பிறந்த தின நினைவாக அவரது அட்டைப் படத்தைத் தாங்கி எளிமையான சொல்லாடல்களை கோர்வையாக்கி, இக்கவிதைத் தொகுதி வெளியிடப்பட்டுள்ளது. அப்துல் கலாமினால் அவர் காலடியில் பூத்த காளான் நான் என அவர் மீதுள்ள மட்டற்ற மரியாதையை கவிஞர் வெளிப்படுத்து கின்றார். மேலும் புத்தகங்கள் ஒரு நல்ல நண்பனை இழந்துவிட்டன என்னும் வரியினூடாக அப்துல் கலாமின் வாசிப்பின் மேன்மையை புலப்படுத்துகிறார். நூல் முழுவதும் கலாமின் சிறப்புக்களை எழுத்தோவியமாய் வரைந்துள்ளார் கனிவுமதி. 15.10.2015 அன்று அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 59803).

11569

அமுதம்: அமுதுவின் கவிதைகள் (முதலாம் பகுதி). இளவாலை அமுது (இயற்பெயர்: அமுதசாகரன் அடைக்கலமுத்து). யாழ்ப்பாணம்: தம்பி தமிழ் அரங்கம், பண்டத்தரிப்பு, 1வது பதிப்பு, 1992. (தமிழ்நாடு: அஸிஸி அச்சகம், நாகர்கோவில்).

(14), 162 பக்கம், விலை: இந்திய ரூபா 20., அளவு: 21.5x14 சமீ.

அமுதுப் புலவரின் தேர்ந்த கவிதைகளின் முதலாவது தொகுப்பு. அமுது என அழைக்கப்படும் அமுதசாகரன் அடைக்கலமுத்து (செப்டம்பர் 15, 1918 - அக்டோபர் 23, 2010) ஈழத்துத் தமிழறிஞரும் புலவரும் ஆவார். இளவாலை அமுது என்னும் புனைபெயரில் பல கவிதை நூல்களை எழுதியிருக்கின்றார். செவாலியே விருது, பாவேந்தர் பட்டம் எனப் பல விருதுகளைப் பெற்றுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்தது. கனடா தமிழர் தகவல் அமைப்பு சிறப்பு விருதும், தங்கப் பதக்கமும் வழங்கி கௌரவித்தது. 1984ம் ஆண்டு முதல் புலம்பெயர்ந்து லண்டனில் வசித்து வந்தார். யாழ்ப்பாணம் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அடைக்கலமுத்து (அமுது), தம்பிமுத்து-சேதுப்பிள்ளை ஆகியோரின் புதல்வர் ஆவார். யாழ்ப்பாணம் புனித சார்ல்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாலயம், யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றுப் பின்னர் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் படித்து பயிற்றப்பட்ட ஆசிரியரானார். இளவாலை என்ற ஊரில் திரேசம்மா என்பவரைத் திருமணம் முடித்தார். தகைமை பெற்ற ஆசிரியராக ஏறத்தாழ 45 ஆண்டுகள் நாட்டின் பல பாடசாலைகளிலும் பணியாற்றியிருக்கின்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டமும் பெற்றுள்ளார். இவரது முதலாவது கவிதை 1938 இல் சத்தியவேத பாதுகாவலன் என்னும் பத்திரிகையில் வெளிவந்தது. தொடர்ந்து இவரது ஆக்கங்கள் வீரகேசரி, தினகரன், சத்தியநேசன், காவலன், ஈழநாடு, உதயன், ஈழகேசரி, புதினம், அஞ்சல், தொடுவானம், ஈழமுரசு போன்ற பல்வேறு இதழ்களில் இலங்கையின் பெரும்பாலான இதழ்களில் வெளியாகியுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14097).

11570

அமுதுக் கலசம். மருதமைந்தன் (இயற்பெயர்: எம்.எஸ்.எஸ்.ஹமீட்). கொழும்பு 11: எம்.சீ.எம்.மன்சூர், 168/16, 2வது குறுக்குத்தெரு, 1வது பதிப்பு, ஜுன் 2002. (சென்னை 600001: மாஹின் பிரிண்டர்ஸ், 29, அப்பு மேஸ்திரி தெரு).

48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

பல்வேறு அறிவுரைகளை மகனுக்குத் தந்தை எடுத்தியம்பும் பாங்கில் எழுதப்பட்ட நல்லுரை நூறு என்ற கவிதைதொடரை வீரகேசரி நாளிதழ்களில் எழுதியிருந்த மருதமைந்தன் அத்தொடரையும், பின்னதாகத் தான் இறைநபியின் திருவாக்குகளைக் கருவாகக் கொண்டு மகளுக்குத் தந்தை எடுத்துச் சொல்லும் வகையில் இயற்றப்பட்ட அமுது என்ற தலைப்பிலான கவிதைகளையும் இணைத்து அமுதுக்கலசம் என்ற இக்கவிதைத் தொகுதியை நூலுருவாக்கித் தந்துள்ளார். இக்கவிதைகள் எளிய நடையான சிந்து நடையில் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28156).

11571

அல்லது யேசுவில் அறையப்பட்ட சிலுவை. கற்சுறா. நோர்வே: உயிர்மெய் பதிப்பகம், Kaptein Linkes vei 9A, 6006 Aalesund, இணை வெளியீடு, கிளிநொச்சி: மகிழ், 754 கனகராசா வீதி, திருநகர் வடக்கு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2015. (கொழும்பு: ஏஜே அச்சகம், தெகிவளை)

xii, 67 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14 சமீ.

ஈழவிடுதலைப் போராட்டத்தையொட்டி எழுந்த இலக்கியத் தடத்தில் தமிழ்பேசும் சமூகங்கள் அனைத்தையும் பொதுமைப்படுத்தி, ஒரு அரசியல் தர்க்கம் உருவாக்கப்பட்டது. சிங்கள அரசுக்கெதிரான நடவடிக்கைகளில் தங்களது பங்களிப்புக்களைச் செய்த பல அமைப்புக்களும், சமூக சக்திகளும் இருப்பினும்கூட, குறித்த ஒரு அமைப்பே - தமிழ் பேசும் மக்களுக்கான விடுதலையை பெற்றுத்தரும் என்ற ஒரு நம்பிக்கையை வளர்க்கப்பட்டது. ஏனைய அமைப்புக்களும், சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திகளும், சந்தர்ப்பங்களுக்கேற்ப "துரோகி" களாக மாற்றப்பட்டன. இலக்கிய வாதிகளில் பெரும்பாலானோர் நிச்சயமானதும், அதிகாரத்துவம் மிக்கதுமான அமைப்பை சார்ந்திருப்பது என்ற நிலைப்பாட்டை கடைப்பிடிக்க தொடங்கினர். இங்கே, சிறியளவிலான எதிர்க்குரல்கள் மேலெழுந்தாலும் துரோகிகளின் இலக்கியமாக அவை மறைக்கப்பட்டன. இந்த எதிர்க்குரல்கள் ஈழத்தில் இருந்து சாத்தியமாகாததால் புலம்பெயர்ந்தவர்களிடமிருந்தே மூர்க்கமாக எழுந்தன. அந்தத் திசையில் பல கதைசொல்லிகள் உருப்பெற்றனர். ஆனால், கவிஞர்கள் மிகக் குறைவாகவே வெளிப்பட்டனர். அப்படி உருவான கவிஞர்களில் ஒருவராக கற்சுறாவைக் குறிப்பிடலாம். ஈழத்து இலக்கியத்திற்கான தனித்த ஒரு அடையாளத்தை இந்த எதிர்க்குரல்கள் கேள்விக்குட்படுத்தின. மக்களுக்கு விடுதலை பெற்றுத்தருவதாகச் சொன்ன அந்த அதிகார சக்கதிகள் மக்களை எப்படி நடத்தின என்பதையோ, அம்மக்களின் வாழ்க்கையை எப்படி மோசமாக சிதைத்தது என்பதையோ வெளிப்படுத்த தயங்கியதை, ஈழத்தில் எழும்பிய இலக்கிய எதிர்க்குரல்கள் தங்களின் கவனத்திற்குட்படுத்தின. எவ்வளவுதான், மறைத்தாலும் - புறக்கணித்தாலும் எதிர்குரல்கள் தங்களது சிறு செயற்பாட்டினூடாக தொடர்ந்து தம்மைத் தக்கவைத்துக்கொண்டன என்பதுதான் உண்மை. அதன், சாட்சியங்கள் பல இன்றிருக்கிறன. ஆயினும், அதன் கவிதையூடான முக்கிய சாட்சியம் கற்சுறாவின் "அல்லது யேசுவில் அறையப்பட்ட சிலுவை" என்கின்ற கவிதைத் தொகுப்பாகும். இலக்கிய மையப்போக்குகளாக, கருதப்பட்ட, தனித்தனி பகுதிகளான (வடிவங்களான) நுண்காவியம், கவிதை, வசனம், உரைநடை, கதைசொல்லல் என அனைத்தையும் அளவு வித்தியாசத்தில் ஒரு பிரதியில் கலந்து அதையே கவிதை என அறிவிக்கிறார். இது ஒருவகை எதிர்ச்செயல்தான். நிலவுகிற இலக்கியப்போக்குகளை கலங்கடிக்கும் ஒரு வகை எதிர் இலக்கியச் செயல் இது. இவருடைய பிரதிகளில் பலவற்றை, வழமையாக "கவிதை" என அழைக்கும் பிரதிகளோடு இணைத்து வாசிக்க முடியாது. ஏனெனில், அந்த மைய நீரோட்ட முன்வைப்புகளை அவர் ஏற்கவில்லை என்பதுதான் அதன் மறைமுகமான பொருள். ஈழத்து தமிழ் இலக்கியம் என அழைக்கப்படுவது, பல வகையான இலக்கியப்போக்குகளின் ஒன்றிணைந்த இடம் எனக்கருதினால், அதற்குள் உருவாகிவந்த எதிர் இலக்கியச் செயற்பாட்டின் பிறிதொரு முகம்தான் கற்சுறாவின் இந்தக் கவிதைகள். (ரியாஸ் குரானா).

11572

அற்றைத் திங்கள். நக்கீரன் மகள். தமிழ்நாடு: வளரி எழுத்துக்கூடம், 32, கீழரத வீதி, மானாமதுரை 630606, 1வது பதிப்பு, ஆனி 2016. (சிவகாசி 626 123: கந்தகப் பூக்கள் அச்சகம்).

64 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 22x13.5 சமீ.

இலங்கையில் பிறந்து டென்மார்க்கில் வாழும் நக்கீரன் மகள் எழுதிய கவிதைகளின் தொகுப்பு இது. கவிதைகளின் பகைப்புலம் இலங்கையையும் புலம்பெயர் நாடுகளையும் சுற்றிச் சுழல்கின்றது. சமூக அவலங்கள் பெரும்பாலும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. வடமராட்சி கிழக்கு பொற்பதி என்னும் கிராமத்தில் பிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கவிஞர், தன் சமூகம் எதிர்கொண்ட அவலங்களையும் சவால்களையும் தனது கவிதைகளின்மூலம் உலகிற்கு வெளிப்படுத்துகின்றார். புலம்பெயர் நாடுகளில் சிற்றிதழ்களிலும் வானொலி-தொலைக்காட்சி ஊடகங்களிலும், முகநூலிலும் இடம்பெற்ற கவிதைகளில் தேர்ந்தெடுத்த கவிதைகளை ஆசிரியர் நூலாக்கியிருக்கிறார். அவரது கவிதைகளின் மொழிநடை, உணர்வுக் கூறுகள், கருத்தியல் ஆகியவை சிறப்பாக அமைந்துள்ளன. சிவமீரா என்ற தனது தங்கையின் நினைவாக இக்கவிதைத் தொகுதியை வெளியிட்டிருக்கிறார்.

11573

அன்ன யாவினும்: கவிதைகள். மன்னார் அமுதன் (இயற்பெயர்: ஜோசப் அமுதன் டானியல்). மன்னார்: மன்னார் தமிழ்ச் சங்கம், 1வது பதிப்பு, கார்த்திகை 2015. (மன்னார்: சைபர்சிட்டி அச்சுக் கலையகம்).

76 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-53168-1-1.

மன்னார் அமுதன் அல்லது கௌதமன் என்ற புனைபெயரில் அறியப்படும் ஜோசப் அமுதன் டானியல், ஈழத்துத் தமிழ் எழுத்தாளர். இவர் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் முதலானவற்றை எழுதி வருகின்றார். இலங்கையின் மன்னார் மாவட்டத்திலுள்ள சின்னக்கடையில், 1984ஆம் ஆண்டில் டானியல் ஜோசப் பிறந்தார். இவர் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் தொடக்கக் கல்வியைப் பயின்றபின், 1990இல் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென்று, விருதுநகர் மாவட்டத்தில் தனது படிப்பைத் தொடர்ந்தார். விட்டு விடுதலை காண், அக்குரோணி ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். 2011இல், தடாகம் கலை இலக்கிய வட்டம், மன்னார் அமுதனுக்கு அகத்தியர் விருதையும் கலைத்தீபப் பட்டத்தையும் வழங்கியது. பின்னர் கலைமுத்துப் பட்டத்தையும் இவர் பெற்றுள்ளார். மன்னார் அமுதனின் அண்மைக்கால கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61157).

11574

ஆணுக்குப் பெண் அடிமையா? ஒரு தேடல். முகில்வாணன். மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64 கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2015. (மட்டக்களப்பு: ஓ.கே.பாக்கியநாதன் அறிஞர் சோலை).

(4), 295 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-7654-06-5.

ஆணுக்குப் பெண் அடிமையா என்ற வினாவுடன் முகில்வாணன் முன்வைத்துள்ள இத்தொகுதியின் கவிதைகள் "என்றுமே அப்படி அடிமை இல்லை" என்ற பதிலை உரத்துச் சொல்கின்றன. தான் படித்து அறிந்த நூல்களில் இருந்தும், செய்திகளில் இருந்தும் பெண்கள் தொடர்பான பல்வேறு கருத்துக்களையும் இத்தொகுதியில் எடுத்தாள்கிறார். மரபுரீதியான இலக்கிய நோக்கில் பெண்களை விபரிக்கும் நிலையிலிருந்து விலகி நிற்கும் கவிதைத் தொகுதிகளுள் இதுவும் ஒன்று. பெண்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணவாழ்வு, கொடுமை, துயரவாழ்வு, காதல், விழித்தெழு, பெண்ணின் பெருமை, ஆதி ஆணா, மதங்களில், வேதத்தில் பெண், வேதம் ஓதியது, கல்வி மறுப்பு, தாழ்ந்த இனம், விவிலியத்தில், கற்பு, அம்மை, அம்மையப்பன், ஆணும் பெண்ணும், தாலி, மாற்றம், மாறிவரும் உலகு, புலம் பெயர்ந்த, புதிய மாது, மறுமலர்ச்சி, அன்புக்கு அடிமை, பிரிவினை, சுதந்திரம், திருமகள் என 28 தலைப்புகளின் கீழ் கவிநடையில் ஆணுக்குப் பெண் அடிமையல்ல என்பதை சங்க இலக்கியம் முதல் மு.வரதராசனார் வரை எடுத்தாண்டு தன் கருத்தை ஆணித்தரமாக முகில்வாணன் முன்வைக்கிறார். முகில்வாணன் (முகில்வாணன் இராசையா, மட்டக்களப்பு, இலங்கை) ஈழத்து தமிழ் கவிஞர். சில காலம் ஜெர்மனியில் வாழ்ந்தவர். இவர் தென் இந்தியாவில் இறையியல் டிப்ளோமா பட்டம் பெற்றவர். திருமறை போதகராகப் பணிபுரிகின்றார்.

11575

ஆதாமின் அப்பிள். ஏ.நஸ்புள்ளாஹ். கிண்ணியா 3: ஏ.நஸ்புள்ளாஹ், செல்லமே பதிப்பகம், பைசல் நகர், 1வது பதிப்பு, நவம்பர் 2014. (தெகிவளை: ஏ.ஜே. பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

48 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-7693-00-2.

கவிஞர் ஏ.நஸ்புள்ளாஹ் கிழக்கிலங்கையில் கிண்ணியாவில் பிறந்தவர். க. பொ.த.உயர்தரக் கல்விகற்ற இவர் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மானி வாசிப்பாளராகக் கடமையாற்றுகிறார். துளியூண்டு புன்னகைத்து (2003), நதிகளைத் தேடும் சூரிய சவுக்காரம் (2009), கனவுகளுக்கும் மரணம் உண்டு (2011) ஆகிய கவிதைத் தொகுதிகளையும் காவி நரகம் (2013) என்ற சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்டவர். இவரது ஐந்தாவது நூல் இதுவாகும். ஆதாமின் அப்பிள் கவிதைத் தொகுப்பின்மூலம் இலக்கியச் சூழலுக்கு ஆழ்தள உணர்ச்சிகளை, சுயேச்சையான வளர்ச்சிப் போக்கை சமூக முனைப் பண்புகளைப் பட்டிய லிட்டிருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 61242).

11576

ஆதிகளின் புதைகுழிகளிலிருந்து. மேமன்கவி. கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2017. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

(13), 14-128 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 22.5x14.5 சமீ., ISBN: 978-955-30-7894-0.

கவிஞர் மேமன்கவியின் மணிவிழாவையொட்டி 29.4.2017 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் வெளியிடப்பெற்ற கவிதைத் தொகுதி இது. கேள்விகளும் இம்சைகளும், முரண்பாடுகள், அகதிகளான பயணத்தில், ஆதிக்குரலும் இன்றைய என் இருப்பும், மனசை அறியும் பொழுதில், பார்ட்டிகள் சொன்ன கதைகள், ஒளியும் ஒலியும், அடிக்கப்போ, இந்த நூற்றாண்டின் கேள்விகள், ஏ.ஜே.என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமைமிக்க ஆகிருதி, ஒரு தினசரியும் பலசொற்கூட்டமும், ஒரு தேசத்தின் வரலாற்றுப் பிரதியாக, கருவறையும் கல்லறையும் அல்லது இல்லாது போகும் வாழ்வு, பிரார்த்தனை, புனைவெனும் நீர், மதம், இருப்பின் தோல், குடிகாரனின் சிறுநீரைப்போல், டாம் காய்கள், தன்மானக் கணக்கு, நிழலிலும், ஜோர்ஜ் புஷ்ஷும் செக்கடித்தெரு கனகு அக்காவும், இன்றைய, பேச்சொலியின் விசனங்கள், இன்றுசில காட்சிகள், குறிவைத்த போர், கத்தி சொல்ல வேண்டிய கவிதை, இது கட்டணம் செலுத்தப்படாத விளம்பரம், முதுகு சொறியும் கம்பு விற்பவனின் விளம்பரப் பாடல், வாசிக்கப்படுகிறேன் வசித்துக்கொண்டு, எதிர்நிலை, வீரியத் துளிகள், ஆதிகளின் புதைகுழிகளிவிருந்து, என் புத்தகம், முகஜாடை, வீழ்வது யாராயினும், ஒற்றுமை, காப்புக்காரனும் கேமெராமேனும், காக்கா கவிதை, கொழும்பு நகர் புறாக்கள் ஆகிய தலைப்புகளில் மேமன்கவி எழுதிப் பிரசுரமான கவிதைகள் இவை.

11577

ஆறுமுக நாவலர் கவித்திரட்டு. கு.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை (பதிப்பாசிரியர்). கொழும்பு: இந்து சமய அறநெறிக் கல்விப் பிரிவு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு, 1வது பதிப்பு, நவம்பர் 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).

32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17.5 சமீ.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பதாண்டு நிறைவையொட்டி நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மாநாட்டில் வெளியிடப்பட்ட பல்வேறு நூல்களுள் இக்கவித்திரட்டும் ஒன்று. 1914ஆம் ஆண்டில் முதன்முதலில் சிறு நூலாக வெளிவந்த இந்நூல் 1972இல் இரண்டாம் பதிப்பாக சுன்னாகம் புலவரக வெளியீடாக வெளிவந்தது. உரைநடையை நவீனத்துவ மாற்றங்களுடன் பயன்படுத்திய நாவலர் செய்யுள்நடையை தமது காலத்து மரபுச்செய்யுட் பாணியிலேயே எவ்வித மாற்றமுமின்றிக் கையாண்டுள்ளார். கடவுள்மீதும், கோவில்கள்மீதும் பாடப்பட்ட செய்யுள்கள், கீர்த்தனைகள் இராகத்தோடு பாடக்கூடியனவாக விளங்குகின்றன. பெரிதும் மானுடரைப் பாடாத நாவலர் தமது குரு சரவணமுத்துப் புலவர் மற்றும் தமது மாணாக்கர் வி. சுப்பிரமணியப்பிள்ளை ஆகியோர் மீது மட்டும் சரமகவிகள் பாடியுள்ளார். இந்நூலிலுள்ள அனைத்துப்பாக்களின் ஊடாகவும் நாவலரின் கவித்துவ உள்ளத்தினைக் காணக்கூடியதாக உள்ளது.

11578

இசைப் பாமாலை. அகளங்கன் (இயற்பெயர்: நா.தர்மராஜா). வவுனியா: நா.தர்மராசா, பம்பைமடு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1998.(வவுனியா: சுதன் அச்சகம்).

40 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 21x14 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் தமிழ்மணி அகளங்கனின் நாற்பது இசைப்பாடல்களைக் கொண்ட நூல். இவ்விசைப் பாமாலைப் பாடல்கள் யாவும் பல்கலைக்கழகம் வரை பயிலும் மாணவர்கள் வசதியான இராக தாள அமைவைக் கூட்டுவித்துப் பாடி மகிழ உகந்ததாய் உள்ளது. இந்நூலில் பல்வகைச் சந்தங்களிலும் எல்லையில்லாச் சிந்தையில் எழுந்த இசைப்பாடல்கள் வந்தனைக்கும் உகந்ததாய் அமைந்திருப்பது ஓர் தனிச்சிறப்பாகும். நாயகனே விநாயகனே, பிள்ளையார் எங்கள் பிள்ளையார், காக்கவேண்டும் நீயே, வினைகள் அகல வரம்தர வேண்டும் போன்ற பாடல்கள் வந்தனைக்குரியவையாகும். அலைகடல் மணற்பரப்பு, தாயே தமிழே, உறவுக்குக் கரம் கொடுப்போம், சலசலக்கும் ஓசையிலே போன்றவை பொது மேடைப் பாடல்களாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21085).

11579

இந்த காலைப் பொழுது (கவிதைகள்). ஏ.எம்.அஸ்கர். அக்கரைப்பற்று: பெருவெளி பதிப்பகம், 31/சீ, உப தபாலக வீதி, பதுர்நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(20), 76 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-43663-0-5.

வசந்தம் எப்.எம். அறிவிப்பாளர் அட்டாளைச்சேனை ஏ.எம்.அஸ்கர் எழுதிய கவிதைத் தொகுதி இது. நான் கவிஞன், போர் ஓய்ந்த பின்னரான வாழ்வு, நாங்கள் வெற்றி பெறுவோம், சிறு நேரம், இருப்புக்கான அழுகுரல், நினைவுகளைத் தவிர, நான் அழகானவன், பூக்களில் பரவும் தீ, நிலாவின் இருட்டு, நீ மறுக்கும் நான், இந்தக் காலைப் பொழுதும், முகவரியின் விலாசங்கள், புறப்பட்டுப் போகிறோம், உன்னைப் பாடும் என் வரிகள், விடியும் இரவு, இசைக்கும் இயற்கை, மிச்சம், நிஜமில்லா நிழலில், அடம்பிடித்தல், உணர்வுத்துளி, நீ வந்துதான் போனாய், அகதியான காதலியின் விலாசம் தேடி, கலைக்கப்படும் கோலம், வராத பொழுது, காணாமல் போனவர்கள், மீண்டும் போராடுவீர்கள், கூடு கலைந்த குருவி, விட்டுப் போன கவிதை, சுயம் மீதான இரைச்சல், எச்ச சொச்சங்களின் ஈரம், அப்பாவின் சோம்பேறி, உயிரில் பெய்த மழை, கோடு தாண்டுதல் ஆகிய தலைப்புகளில் அமைந்த 33 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்கொண்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61269).

11580

இமைப்பொழுது. மாதவி சிவலீலன். லண்டன் UB6 0DZ: ஸ்லீ பப்ளிக்கேஷன்ஸ், 607 Whitton Avenue West, Greenford, Middlesex, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2017. (சென்னை 600077: மணி ஒப்செட்).

xvi, 104 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 6.00, அளவு: 21.5x14 சமீ.

ஈழத்துத் தமிழ்க் கவிஞர் காரை செ.சுந்தரம்பிள்ளை-இந்திராவதி தம்பதியினரின் மகளான மாதவி சிவலீலனின் கவிதைகளின் தொகுப்பு இது. வாழ்க்கைத் தேடலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிதல்கள், ஆச்சரியங்கள், பதில் காணாத கேள்விகள் அனுபவங்கள் என்பவற்றைத் தாங்கிய கவிதைகளாக வெளிவரும் இந்நூலில் மாதவி சிவலீலன் அண்மைக் காலங்களில் எழுதிய 53 கவிதைகளை வாழ்தல், வலி, அவதி என்ற மூன்று பிரிவுகளாக வகுத்துத் தந்துள்ளார். வாழ்தல் என்ற பிரிவில் நான், வீடே என் வீடே, வீட்டுப் பூவரசு, வெற்றுச் சிரிப்பு, இருப்பு, அவள், பிள்ளை வரம், அம்மன், தமிழ்க் கடவுள், எனக்கான பாடல், நா காக்க, ரேஹானே ஜப்பாரி, பொம்மை, முறுவல், கொள்ளையிடப்பட்ட தருணங்கள், சொல் வலிமை, விண்மீன், மதிப்பு, நட்பு, கையசைவு, புதிர், பயணம், மங்கியும் மங்காத, கனவு, உன்னைப் போலவே, பிரகடனம், பட்டாம்பூச்சியொன்று, இரசிப்பு, வீட்டுச் சிறை, இமைப்பொழுது, கவி, இனியன் ஆகிய 32 கவிதைகளும், வலி என்ற பிரிவில் யுத்தக் காட்டேரி, இசையே எம் பிரியமே, விதி, சக்தியொன்று, அவிந்திடுமோ, என் தேசத்துத் தோழியரே, ரணம், மண், செஞ்சோலைக் குஞ்சுகளே, அழிந்தது நீங்களல்ல அம்மா, மழையும் கோடைப் புளுக்கமும், காசா மன்றில், தோழி, அழு, தெருவழி அலைதல், முள்ளிவாய்க்கால், சொல்லவேண்டும் போல ஆகிய 17 கவிதைகளும், அவதி என்ற மூன்றாவது பிரிவில் விட்டு விடுதலையாகி, நாளைய சந்ததி ஓலை தூக்குமா?, இத்தனைக்குப் பின்னும், அவதியுறும் இரவுகள் ஆகிய 4 கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

11581

இருள் மிதக்கும் பொய்கை. தர்மினி. சென்னை 600 005: கருப்புப் பிரதிகள், பி.55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்சு சாலை, 1வது பதிப்பு, மே 2016. (சென்னை600 005: ஜோதி என்டர்பிரைஸஸ்).

72 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21.5x14 சமீ.

உண்மையின் பக்கத்திலிக்கும் நல்லதொரு புனைவைப் போல இருளுடனான நீளக் கவிதையாடலை நிகழ்த்திப் பார்க்கிறது தர்மினியின் கவிதைகள். வெளிச்சத்தை எதிர்வாய் கொண்டு போர்புரிவதைத் தவிர்த்து இருளைப் பிரிய மனம் ஒவ்வாத தோழியாய், குழந்தையாய் மற்றுமொரு காதலாய் படிமங்களாய் ஆற்றலாய், புதிய கட்டுமானங்களின் பொறியமைவாய் இயல்பில் எழும் இக்கவிதைகளில் அகம் சார்ந்த முன்னெடுப்புக்கள் இதுவரையிலான தடத்தில் தம் பாதம் பதியாமல் தனக்கான மொழியின் அலகில் பயணத்தை மேற்கொள்கின்றன. (நீலகண்டன்- குறிப்புரையில்).

11582

இளசுகளின் உலகம்: கவிதைகள். யூ.எல்.அலியார், பௌஸியா அலியார். சம்மாந்துறை 4: பைத்துல் ஹிக்மாஹ், 28, கீச்சார் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2016. (சாய்ந்தமருது: எக்செலென்ட் பிரின்ட்).

(19), 120 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-95831-5-8.

கலாபூஷணம் யூ.எல்.அலியார் எழுதிய 30 கவிதைகளையும், அவரது துணைவியார் கலாபூஷணம் பௌஸியா அலியார் எழுதிய 26 கவிதைகளையும் இத்தொகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கியுள்ளது. கலாபூஷணம் பௌஸியா அலியார் அவர்கள் கவிஞர் ஈழமேகம் எம்.ஐ.எல்.பக்கீர்த்தம்பி அவர்களின் மகளாவார். இவற்றில் பல இளையோருக்கான நயம்மிகு கவிதைகளாகும். யூ.எல்.அலியார் எழுதிய கவிதைகள் முந்தை நூற்றாண்டில் முன்னோர் தாயகம், முதற்பணி மறந்ததுமேனோ?, பாராட்டு விழா, வானுயர் அபிவிருத்தி, தீவிரம் காட்டும் தீன்தாரிகள், ஏங்கிச் செத்த ஏழை விவசாயி, நாணயம் இல்லா நாணயங்கள் என இன்னோரன்ன தலைப்புகளில் அமைகின்றன. பௌஸியா அலியார் அவர்கள் எழுதிய கவிதைகள் இளசுகள் உலகம், நவயுக நிகாஹ், வைரவிழாக் கோலம், வேகமேனோ?, நீர்க்குமிழி, பதவி தரும் பாடம் என இன்னோரன்ன தலைப்புகளில் அமைந்துள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61551).

11583

இளம் நினைவுகள். நிதர்சனா ஜெகநாதன். லண்டன்: Ratnam Foundation, 179, Norval Road, North Wembley, Middlesex HA0 3SX, 1வது பதிப்பு, சித்திரை 2004. (சென்னை 33: ஜெயபாலு பிரிண்டர்ஸ், எண் 115, கோடம்பாக்கம் ரோடு, மேட்டுப்பாளையம்).

36 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண்ட் 2.50, அளவு: 21x14 சமீ.

இலண்டன் தமிழ் நிலையம் என்ற தமிழ்ப் பள்ளியின் மாணவியான மாணவக் கவிஞர் நிதர்சனா எழுதிய கவிதைகளின் கன்னித் தொகுப்பு இது. 15 வயதேயான இவ்விளம் மாணவி யாழ்ப்பாணம்-கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 2000ஆம் ஆண்டில் பெற்றோருடன் புலம்பெயர்ந்து லண்டன் வந்து சேர்ந்தவர். இளம் நினைவுகள், உறவுகள், நட்பு, நட்பும் நினைவுகளும், தாய், தமிழன், பனித்துளிகள், காதல் கவிதைகள், நான், என் மனம், உறவுகள், நிம்மதி ஆகிய தலைப்புகளில் இவரது கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. தாய்மண்ணை விட்டு என்ற கட்டுரையும் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

11584

இன்னும் விடியவில்லை: கவிதைத் தொகுப்பு. குறிஞ்சிவாணன், முல்லை வீரக்குட்டி, தம்பிலுவில் ஜெகா. தம்பிலுவில் 32415: வி.பி.எம்.வெளியீடு, 31, சாகாமம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1998. (அக்கரைப்பற்று: செலெக்ஷன் ஒப்செற் அச்சகம்).

50 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 19.5x13.5 சமீ.

குறிஞ்சிவாணன் (பி. மாணிக்கம், தெமோதரை, பதுளை மாவட்டம்) குறிப்பிடத்தக்க ஈழத்துக் கவிஞர் ஆவார். 1963 இல் எழுதத் தொடங்கிய இவர் குறிஞ்சிவாணன் என்ற புனைபெயருடன் அக்கரைப்பாமா, சாகாமம் மணியன் போன்ற புனைபெயர்களிலும் கவிதைகள் எழுதியுள்ளார். அக்கரைப்பற்றில் சிலகாலம் வாழ்ந்து தற்போது திருக்கோயில் பிரிவிலுள்ள சாகாமம் எனும் குடியேற்றக் கிராமத்தில் வசித்துவருகிறார். 23.03.1949 அன்று பிறந்த முல்லை வீரக்குட்டி தம்பிலுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தம்பிலுவில் மகாவித்தியாலயம், கல்முனை பாத்திமா கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றவர். 1968 இல் க.பொ.த.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணதரம் படித்துக்கொண்டிருக்கும் காலத்திலேயே கவிதையுலகில் பிரவேசித்த இவரின் கவிதைகளுக்கு சிந்தாமணி, வாரமஞ்சரி, தினபதி, கவிதா மண்டலம் போன்ற பத்திரிகைகள் களமமமைத்துக் கொடுத்தன. கல்முனை புதிய பறவைகள் கவிதாமண்டல அமைப்பாளருள் ஒருவரான இவர் , 1974 இல் திருமலையில் புதிய ஜனநாயக எழுத்தாளர் கலை இலக்கிய மாநாடு நடத்தவும் காரணமாயிருந்தார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கொழும்பு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்திய கலை இலக்கிய மாநாட்டில் கவிதை படிக்கவும் விமர்சிக்கவும் அழைக்கப்பட்டு பாராட்டப்பட்டுள்ளார். இவரின் கவிதைத் திறமையைப் பாராட்டி திருக்கோயில் பிரதேச செயலகம் 1996 இல் சாகித்திய விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது. ஜெகதீஸ்வரி நாதன் (23.04.1960) அம்பாறை, தம்பிலுவிலைச் சேர்ந்த ஆசிரியை, கவிஞர். இவரது தந்தை சபாரெத்தினம் தாய் நாகமணி. கலைமாணிப் பட்டதாரியான இவர், தம்பிலுவில் ஜெகா என்னும் புனை பெயரில் அறிமுகமானவர். இவர் தனது 12 ஆவது வயதில் "அன்னை" என்னும் கவிதை எழுதிப் பிரசுரமாகக் கண்டவர். 1972 முதல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் "சிறுவர் மலர்", "பூவும்பொட்டும்", "வாலிபர் வட்டம்", "ஒலிமஞ்சரி", "இளைஞர் மன்றம்" போன்ற வானொலி நிகழ்ச்சிகளில் இவரது கவிதைகள் ஒலிபரப்பாயின. இவர் கவிக்கோகிலம் என்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். இவரது கவிதைகள் கோகிலம், காற்று, தூது, இந்துமதி, இதயசங்கமம், நிறைமதி, பெண் போன்ற சஞ்சிகைகளில் வெளிவந்தன. இவர் "கோகிலம்" சஞ்சிகையின் துணை ஆசிரியராவார். இம்மூவரினதும் தேர்ந்த கவிதைகளைக் கொண்டதாக இத்தொகுப்பு வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21129).

11585

உடைந்த மழையில் நனைந்த பட்டாம்பூச்சி. ராஜகவி றாஹில். (இயற்பெயர்: ஏ. சீ.றாஹில், தொகுப்பாசிரியர்). நிந்தவூர் 05: ஆர்.கே.மீடியா வெளியீடு, 318, புதிய நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2014. (மாவனல்லை: பாஸ்ட் கிராபிக்ஸ் பிரின்டர்ஸ்).

99 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19x12.5 சமீ.

கவிஞர் றாஹில் எழதிய கவிதைகளின் தொகுப்பு இது. நிந்தவூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ராஜகவி றாஹில் ஆளுமைமிக்க புனைவாளராகவும், ஒரு சிறந்த ஒலிபரப்பாளராகவும் திகழ்கிறார்.கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நிந்தவூரில் பிறந்த இவர் நிந்தவூரில் உள்ள அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். நிந்தவூர் அல் அஷ்ரக் மகா வித்தியாலயத்தில் தனது உயர்கல்வியைப் பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதலாம் வருட மாணவனாக இருந்த போதே "தூய்மை தெய்வீகமாகிறது" என்ற இவரது முதலாவது நாவல் தினகரனில் தொடராக வெளிவந்தது. இந்த நாவல் பாடசாலை வாழ்க்கையை பிரதிபலித்த ஒரு நாவல். 1985 ல் நிந்ததாசன் என்ற பெயர் இவருக்கு பாடசாலை கலாமன்றத்தினால் சூட்டப்பட்டது. 1996 இல் தமிழகத்தில் சந்தப்பா வேந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார். 1997 இல் இலங்கையில் பல்துறைகளுக்கான ரத்னதீப விருது வழங்கப்பட்டது. தொடர்ந்து 1998 இல் சாமஸ்ரீ விருது வழங்கப்பட்டது. இதே ஆண்டு மொரிசியஸ் தூதுவர் ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்ற விழாவில் தமிழக மணிவிருது வழங்கப்பட்டது. ராஜ கவி விருது, கவிவாணன் விருதுகள் என்பனவும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன. மதுரா ட்ரவல்ஸ் அதிபர் தமிழ்நாடு வி.கே.ரி. பாலன் அவர்களால் இலக்கிய மணி விருது வழங்கி வைக்கப்பட்டது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 249524).

11586

உயிர் வலித்த கணம். வன்னியூர் செந்தூரன். ஒட்டுசுட்டான்: செந்தணல் வெளியீடு, 3வது பதிப்பு, மாசி 2015, 1வது பதிப்பு, சித்திரை 2014, 2வது பதிப்பு, மார்கழி 2014. (வவுனியா: எக்ஸ்சிடோ அச்சகம், இல. 34, மில் வீதி).

66 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 19.5x13.5 சமீ., ISBN: 978-955-41197-0-3.

2013இல் வெளிவந்த "நிலவைத் தேடும் வானம்" கவிதைத் தொகுதிக்குப் பின்னர் கிழக்குப் பல்கலைக்கழக மாணவரான சுந்தரமூர்த்தி செந்தூரன் (வன்னியூர் செந்தூரன்) வழங்கும் இரண்டாவது நூல் இது. இக்கவிதைத் தொகுதியில் 29 கவிதைகள் இடம்பெறுகின்றன. பெரும்பாலானவை போரக்கால நினைவுகளை அசைபோட்டாலும் சில கவிதைகள் காதல் நினைவுகளை மீட்டிச் செல்வதாயுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 243988).

11587

உன்னால் முடியும்: கவிதைத்தொகுதி. சு.சிவமலர். தெல்லிப்பழை: கலை இலக்கியக் களம், 1வது பதிப்பு, நவம்பர் 2015. (யாழ்ப்பாணம்: அம்மா அச்சகம், இணுவில்).

xvi, 52 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x14.5 சமீ.

சிவமலர் சுந்தரபாரதி மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபராகப் பணிபுரிபவர். இவரது முதலாவது கவிதைத் தொகுப்பு இதுவாகும். விஞ்ஞான பாடத்தை மாணவர்களுக்குக் கற்பிக்கும் கற்பித்தல் சாதனமாகப் பயன்படுத்தத்தக்க சில கவிதைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. டெங்கு தவிர்ப்போம், முதுமை காப்போம், தெய்வ அன்னை தெரேசா, வண்ணம் கொண்டு வாழ்ந்திடலாம், உளவளத்துணை காக்கும், வாழவேண்டுகிறேன், விசையும் இயக்கமும், சக்தி இழக்குது மூச்சினிலே, வரமொன்று தந்திடுவீர், ஆசிரியர் தின விழா, சுவாசத் தொகுதி, வீரர் நாமோ, விதியை வெல்வோம், நகை தவிர் நலம் பெறு, விடுகதை அவிழ்ப்பீரோ, மேன்மை பெற்றிடுவோம், வளமுயர்வுண்டாம், அடைக்கலம், பலமிகு நங்காய் பார்த்து நடப்பாய், அவனியில் வாழ்வாய், தாரிலும் நீரிலும் உயிர்காத்திடலாம், கண்ணிவெடி, கொள்ளை அழகு பாரும், தோல்வியைக் கண்டு துவழாதே, மாணவம் பேணிடுவோம், உணவைப் பேணுவோம், மணிவாசகரால் மாண்பு பெறலாம், உன்னால் முடியும், கூற்றினைத் தடுத்திடு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர் கலாம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பெற்ற கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60737).

11588

ஊர்ப்பெயர் உட்பொருள் விளக்கம்.இ.நமசிவாயம்பிள்ளை (மூலம்), நம. சிவப்பிரகாசம் (உரையாசிரியர்). மல்லாகம்: நம. சிவப்பிரகாசம், 2வது பதிப்பு, ஐப்பசி 1983, 1வது பதிப்பு, புரட்டாதி 1923. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை).

vi, (6), 20 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 21x14 சமீ.

இது யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் ஸ்ரீமத் அ.குமாரசுவாமிப் புலவர் அவர்களின் மாணாக்கர் யாழ்ப்பாணத்து மாதகல் ஸ்ரீ இ.நமசிவாயம்பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்று நூலாசிரியரின் மகனான இந்துசாதனம் ஆசிரியர் நம. சிவப்பரகாசம் அவர்களால் உரையெழுதப்பெற்று வெளியிடப்பட்டுள்ளது. மூலநூல் 1923இல் வயாவிளான் ஜயசிறி சாரதா பீடேந்திரசாலையில் அச்சிடப்பட்டு வெளிவந்திருந்தது. இலங்கையின் ஊர்ப்பெயர்களை குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஊர்ப்பெயர்களைத் தொடர்புபடுத்தியமைத்த கட்டளைக் கலித்துறைகளில் சைவ சமய உட்பொருளைப் பொதிந்து வைத்துள்ளார். இத்தகைய 27 செய்யுள்களை சிலேடைப் பொருளில் நாமாந்திரிதை வகையில் அமைத்து அழகார்ந்த கவிதை நூலாக ஆக்கியுள்ளார்.

> நாரந்தனையுடையான் பூநகரியினண்ணுடையான்
> றேருஞ்சுன்னாகமுடையானைச் சாவகச்சேரிதூரி
> வேர்வந்தளவெட்டி பச்சிலைப் பள்ளிவிளாங்குளம்போய்ச்
> சேரும்படிசெலக் காரைக்காலாள்கையிற் சிக்கினனே (8வது செய்யுள்)

இதில் நாரந்தனை, பூநகரி, சுன்னாகம், சாவகச்சேரி, அளவெட்டி, பச்சிலைப்பள்ளி, விளாங்குளம், காரைக்கால் ஆகிய ஊர்ப்பெயர்கள் காணப்படுகின்றபொதிலும், ஆழ நோக்கில் இக்கவிதையின் பொழிப்பு, கைலாசபதியாகிய சிவபெருமான் பக்திவலையில் அகப்படுவாரன்றி அகங்காரமுடையார் கண்களுக்குத் தோற்றமாட்டார் என்பதாகும்.

இச்செய்யுளின் பிரிப்பு பின்வருமாறமையும்:

நாரந்தனை உடையான் - திருப்பாற் சமுத்திரத்தையுடைய மகாவிட்டுணுவும், பூநகரியில் நண்ணுடையான் -தாமரைப்பூவாகிய கோயிலையுடைய பிரமதேவரும், தேரும் சுன்னாகம் உடையானை-ஆராயப்படுகின்ற வெள்ளியங்கைலாசமலையைக் கோவிலாகவுடைய சிவபிரானை, சாவகச்சேரி துரீ- மரணத்தை அகத்தே கொண்டிருக்கின்ற ஊர்கள் எவ்விடத்தும் தேடி, வேர் வந்து அளவெட்டி- எல்லையெட்டியதன் நிமித்தம் வேர்வைகொண்டு களைத்து, பச்சிலைப்பள்ளி விள் ஆங் குளம்போய்ச் சேரும்படி செல்ல-மகாவிட்டுணுவும் பிரதம தேவரும் முறையே பசிய ஆலிலைச் சயனத்தையும் பூக்களலருகின்ற தாமரை வாவியையுமடைய, காரைக்காலாள் கையல் சிக்கினேன்-அடியார்க்கெளியனாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் முதிர்ந்த அன்பையுடைய காரைக்கால் அம்மையார் கையிற் சிக்கி அப்பெருமாட்டிக்குத் தரிசனங் கொடுத்தார் என்ற கருத்தினை இச்செய்யுள் வழங்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13441).

11589

எரிந்த சிறகுகள் (கவிதைகள்). வெலிகம ரிம்ஸா முஹம்மத். கொழும்பு 10: எஸ். கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2015. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

(25), 26-152 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-30-6388-5.

54 கவிதைகளையும் 7 மெல்லிசைப் பாடல்களையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது. இலக்கிய ரசனைக்குள்ளும் ஆன்மீக வரையறைக்குள்ளும் யதார்த்தத்தின் வீச்சோடு நகர்கிறது எரிந்த சிறகுகள் கவிதைத் தொகுதி. சமூக அவலங்களை நுண்ணிய திறனாய்வோடு பேசும் வல்லமையில் இக்கவிஞர் வெற்றிகண்டுள்ளார். எம்மத்தியில் எரிக்கப்படாமல் படர்ந்திருக்கும் வாழ்வியல் வன்முறைகள், தாழ்நிலை சம்பிரதாயங்கள், சால்பற்ற சடங்குகள், பாழ்படுத்தும் முகமூடிகள் என்பவற்றை நேரிய நோக்கோடு கவிதை வரிகளாகக் கோர்த்து இலக்கிய நெஞ்சங்களுக்கு சமர்ப்பித்திருக்கிறார். பொசுக்கப்பட்ட மனித உணர்வுகளின் ஓசைகள், ஓலங்கள், பெண்ணியத்திற்கெதிரான அத்துமீறல்கள், மனித உரிமை துஷ்பிரயோகங்கள், தேச ஐக்கியத்தை சீர்குலைக்கும் குரோதங்கள் என்ற விடயப் பரப்பில் கவிதைகள் விரிகின்றன. புதுமையின் வாண்மையோடும், புரட்சியின் பெருமையோடும் படைப்பிலக்கியத்துக்கு பெரும் பங்களிப்பு செய்திருக்கிறார் ரிம்சா. இவரது 12 ஆவது நூலான எரிந்த சிறகுகள் கவிதைத் துறையில் அவருக்குள்ள ஆழ்ந்த ஈடுபாட்டை மேன்மைப்படுத்தியுள்ளது. தொலைந்த கவிதை, ஒப்பனைகள், சாதல் நன்றே, சொல்ல மறந்த சேதிகள், கறைகள், தொடரும் தொல்லை, வஞ்சகம், ஓலைக் குடிசையும் பாதி நிலவும், மனிதமில்லா மனிதன், காலத்தின் ஓலம், இறையோன் தந்த மாதம் போன்ற கவிதைகளில் சமூகத்திற்குகந்த அறிவுரைகளும் ஆன்மீக செய்திகளும் கூறப்பட்டுள்ளன. ஆயுள் கைதி, எதிரொலி, விளையும் நினைவுகள் போன்றவை காதலைப் பேசும் கவிதைகள்.

11590

என் கவிதைக்கு மனசென்று பெயர். முபஷ்ஷிரா நௌபர். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, உடத்தலவின்ன, 1வது பதிப்பு, நவம்பர் 2016. (உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே).

xxii, 71 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-1779-71-9.

உடதலவின்ன, செல்வி முபஷ்ஷிரா நௌபர் எழுதிய கவிதை நூல். சர்வதேச உம்மத் மற்றும் பாலஸ்தீனப் பிரச்சினை மட்டுமல்லாது வறுமை, சமூக உணர்வு, மார்க்கப்பற்று என்று விரிகின்ற முபஷ்ஷிராவின் பார்வை அதிலிருந்து விடுபட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையை ரசித்து அதனை வர்ணிக்கும் ஆற்றல்களுடன் இக்கவிதைகளில் மலர்ந்துள்ளது. சிறு நூலான போதிலும் வாசகரின் அவதானத்தை சிக்கென ஈர்க்கும் பல சிந்தனைகளைக் கொண்ட கவிதைகளால் இந்நூல் பொருநூலாக மனதில் இடம்கொள்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61646).

11591

என் பாட்டில் நான்: கோப்பாய் சிவம் கவிதைகளும் பாடல்களும். ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீநகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2016. (சுன்னாகம்: கஜாநந்த் பிரின்டர்ஸ், மானிப்பாய் வீதி, இணுவில்).

xii, 288 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4078-01-7.

எழுத்தாளர் கோப்பாய் சிவம் அவர்கள் ஈழத்து இலக்கிய உலகில் சஞ்சரிக்கத் தொடங்கிய ஐம்பதாவது ஆண்டை நினைவுகூர்ந்து வெளியிடப்பெற்றுள்ள பல நூல்களுள் இதுவும் ஒன்றாகும். ஆசிரியர் எழுதிய பல்வேறு கவிதைகளையும் ஒன்பது பிரிவுகளாக வகுத்துத் தந்துள்ளமை சிறப்பாகும். அவ்வகையில் நானிலமும் நானும் (சமூகம்சார் கவிதைகள்), அவளும் நானும் (காதற் கவிதைகள்), மழலைகளும் நானும் (குழந்தைப் பாடல்கள்), புதுக்கவியும் நானும் (புதுக்கவிதைகள்), அரங்கமும் நானும் (கவிதை நாடகம்), இசையும் நானும் (இசைப்பாடல்கள்), இறையும் நானும் (ஊஞ்சற் பாடல்கள்), நிறுவனங்களும் நானும் (நிறுவனங்களின் பாடல்கள்), சுற்றமும் நானும் (வாழ்த்துப் பாடல்கள்) ஆகிய பிரிவுகளின்கீழ் கோப்பாய் சிவத்தின் பல்வேறு கவிதைகள், பாடல்கள், செய்யுள்கள் என்பன வாசகரின் சுவைக்காக பரிமாறப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61073).

11592

என் பாடல் (கவிதைகள்). அம்பலவாணர் கௌரிதாசன். திருக்கோணமலை: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, 2015. (திருக்கோணமலை: சண் பிரின்டர்ஸ், 224, மத்திய வீதி).

xiv, 98 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4628-21-2.

திருக்கோணமலை மாவட்டம் கிண்ணியா நகரசபை மருங்கிலுள்ள ஆலங்கேணி கிழக்கினைப் பிறப்பிடமாகக் கொண்ட கௌரிதாசன் நாடறிந்த எழுத்தாளர். முப்பது ஆண்டுகளாக எழுதப்பட்ட தனது கவிதைகளில் தப்பிப் பிழைத்தவற்றைத் தொகுத்து "என் பாடலாகத்" தந்திருக்கிறார். காதற் சுவையைக் கம்பரசம் கலந்து தர முயன்றிருக்கிறார். காதல் அல்லாத சமூக சீர்திருத்த வெளிப்பாடுகளையும் விளித்திருக்கிறார். இயற்கை, காதல், சமூகம், ஆத்மீகம், அரசியல் பின்னணிகளோடு பின்னப்பட்ட கவிதைகளானாலும் தனது அனுபவங்களும் தரிசனங்களுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருளாக மிகைத்துள்ளது என்கிறார் கவிஞர். பிறிதொருவர் பெற்ற படிப்பினையைக் கூட தனதாக்கி எழுதியிருக்கிறார். கற்பனைக்குக் கணிசமான இடத்தையே வழங்கியுள்ளதால், கவிதைகள் உயிரோட்டமாக அமைந்துள்ளன.

11593

ஏவாளின் புன்னகை: கவிதைகள். ஈழக் கவி (இயற்பெயர்: ஏ.எச்.எம். நவாஷ்). அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, ஜூலை 2015. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

x, 102 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-4676-36-7.

80களில் இருந்து ஈழக்கவி என்ற பெயரில் கவிதைகள் எழுதிவரும் ஏ.எச்.எம். நவாஷ் அவர்களின் 50 கவிதைகளைத் தாங்கிய இரண்டாவது கவிதைத் தொகுதியாக ஏவாளின் புன்னகை அமைந்துள்ளது. உம்மா இல்லாத இருப்பில், என்ற கவிதை முதல், புன்னகையும் வலியும் ஈறாக இவரது ஐம்பது கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவரது கவிதைகள் பலவற்றில் கந்தகம் மணக்கின்றது. இன்னும் சில கவிதைகள் இனவாதம் பற்றிப் பேசுகின்றன. சில கவிதைகள் அசிங்கமான அரசியல் கூத்தாடிகளின் அரிதாரத்தை அழித்துத் துடைக்க முனைகின்றன. இலங்கை பதுளை மாவாட்டம் வெலிமடை பிரதேசத்தில் 10.06.1964இல் பிறந்த ஈழக்கவி நவாஷ், பேராதனைப் பல்கலைக்கழகம், மெய்யியல் துறை சிறப்பு பட்டதாரி ஆவார். இப்பட்டத்திற்கு மார்க்சிய மெய்யியலில் அழகியல் கோட்பாடு (Theory of Aesthetics in the Philosophy of Marxism) எனும் தலைப்பில் ஆய்வு செய்தவர். இவரது கல்வித் தகைமைகளும் மிக நுட்பமான அனுபவங்களும் கூர்மையான சமூகப் பார்வையும் இந்நூலிலுள்ள கவிதைகளுக்கு மெருகூட்டுகின்றன. ஏவாளின் புன்னகை, ஜீவநதி வெளியீட்டு வரிசையில் 53ஆவது நூலாகும்.(இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 247698).

11594

ஏறுவெயில் (கவிதைத் தொகுதி). மஜீத். அக்கரைப்பற்று: மூன்றாவது மனிதன் வெளியீட்டகம், இணை வெளியீடு, கொழும்பு: தேசிய கலைஞர் பேரவை, 1வது பதிப்பு, ஜனவரி 1997. (களுபோவில: டெக்னோ பிரின்ட், 83, ஆஸ்பத்திரி வீதி, தெகிவளை).

(6), 26 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18.5x12 சமீ.

பொத்துவில் கவிஞர் மஜித் அவர்களின் கவிதைத் தொகுதி இதுவாகும். கவிஞர் மஜித் அவர்கள் ஈழத்து இலக்கியத் தளத்தில் பின்நவீனத்துவ இலக்கியம்சார் படைப்பாளியாவார். ஏற்கனவே வாழ்வின் மீதான எளிய பாடல்கள், சுள்ளிக்காடும் செம்பொடையனும், ஒரு இலையின் மரணம் கவிதைகள், மஜித் கவிதைகள், கதையாண்டி குறுநாவல், உயிர் பிழியும் கவிதைகள், முள்ளிவாய்க்காலும் நிலம் பெருக்கெடுத்த சவக்குளிகள் பொன்ற படைப்பகளை வெளியிட்டவர். நோயினால் பாதிப்படைந்துள்ள நிலையிலும் தொடர்ந்து தான் சொல்லச் சொல்ல தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியின் உதவியுடன் நூலாக்கம் செய்வது குறிப்பிடத்தக்கதொன்றாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22670).

11595

ஏனிந்த தேவாசுர யுத்தம்-கவிதைகள். த.கலாமணி. பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஏப்ரல் 2013. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், முத்திரைச் சந்தி, நல்லூர்).

vi, 34 பக்கம், விலை: ரூபா 150.00, அளவு: 20x14 சமீ.

ஜீவநதி ஆசிரியர் பரணிதரனின் தந்தையார்- த.கலாநிதியின் ஐந்தாவது நூல் இது. போரின் அவலங்களை சர்வதேசத் தளத்தில் நின்று பார்க்கும் பன்னிரு கவிதைகளைக் கொண்ட இந்நூலில் ஐந்து கவிதைகள் மொழிபெயர்ப்புக் கவிதைகளாகும். புதுக்கவிதை, மரபுக்கவிதை, குறும்பா எனப் பலவடிவங்களில் இக்கவிதைகள் அமைகின்றன. வர்க்கத்தின் ஓலம் என்ற கவிதை-உழைத்து உருக்குலைந்த தொழிலாளர்கள் பற்றியது. வியப்பூட்டும் செயலென்ன என்ற கவிதை விஞ்ஞான அறிவியல் கவிதையாகும். இது ஜீவநதியின் 26ஆவது நூல் வெளியீடாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் PAM 4742).

11596

ஒளிக்கீற்று: கவிதைகள். வி.ரி.இளங்கோவன். யாழ்ப்பாணம்: நாவேந்தன் பதிப்பகம், மயூரன் இல்லம், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, 1வது பதிப்பு, மே 2015.(யாழ்ப்பாணம்: ஸ்ரீ மாருதி பிரின்டர்ஸ், 555, நாவலர் வீதி).

(12), 146 பக்கம், விலை: ரூபா 460., அளவு: 20x13.5 சமீ., ISBN: 978-955-7795-00-3.

எழுத்தாளர், பேச்சாளர், கவிஞர், விமர்சகர் எனப் பன்முக ஆளுமைகொண்ட வி.ரி.இளங்கோவன் பாரிஸ் நகரில் புலம்பெயர்ந்து வாழ்பவர். இவர் எழுதிய 96 கவிதைகளின் தொகுப்பு இது. கிராம மண்ணின் புழுதி முற்றங்களில், தோட்டங்களில், வயல்களில் குந்தியெழுந்து உறவாடி, உற்றுப்பார்த்து, உறவுகளின் கஷ்டங்களைக் கேட்டு, கவலைகளைப் பகிர்ந்து, வேதனைகளைச் சுமந்து, அணிவகுப்புகளில் நின்று, ஆர்ப்பாட்டங்களில் கலந்து, அடிபட்டு, அடைபட்டு, பெற்ற அனுபவங்களின் உணர்வுகளில் பிறந்த கவிதைகளாக இவரது கவிதைகள் காணப்படுகின்றன. மக்கள் உணர்வுகள், அவர்களின் பிரச்சினைகள், எழுச்சிகள், மக்கள் போராட்டங்கள் ஆகியவற்றைப் பேசும் இக்கவிதைகள் முற்போக்குச் சிந்தனை கொண்டமைந்தவையாகக் காணப்படுகின்றன.

11597

ஓலை: கவிதைத் தொகுப்பு. வே.புவிராஜ். யாழ்ப்பாணம்: கைதடி கலை, இலக்கிய நண்பர்கள் வட்டம், கைதடி மேற்கு, கைதடி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2015. (யாழ்ப்பாணம்: நோபிள் பிரின்டர்ஸ், பருத்தித்துறை வீதி, நல்லூர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xvi, 152 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x11.5 சமீ.

கவிஞர் புவிராஜின் கவிதைகள் எழுச்சிக்கு வித்திடுபவை. ஆனந்தமளித்து முழக்கமிடுபவை. மின்னல், இடி, முழக்கம் தரும் உணர்வினைத் தன் கவிதைகளில் காணவைக்கிறார். மற்றவர் பாடமறந்தவை இவரது பார்வைக்குள் சிக்கிக் கவிதைகளாகின்றன. கவிஞரின் அப்பழுக்கற்ற உணர்வின் வெளிப்பாட்டையும் எழுச்சியையும் கவிதை வரிகளுக்குள் காணமுடிகின்றது. தனதான ஊர், மொழி, இழப்புகள் எனப் பலவற்றையும் வீரியம் மிக்க கற்பனை வளத்துடன் பாடுகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 244346).

11598

கடல் தேடும் நதி: கவிதைத் தொகுதி. நுஸ்ரி ரஹ்மதுல்லாஹ். கண்டி: தடாகம் கலை இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, நவம்பர் 2015. (கண்டி: சி.வி.பப்ளிஷர்ஸ்).

xiv, 84 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-42674-0-4.

உயிர்முதல் என்ற கவிதை தொடங்கி சின்னச் சிதறல்கள் ஈறாகத் தனது 66 கவிதைகளை இந்நூலில் இக்கவிஞர் தொகுத்திருக்கிறார். இடையில் கோபக்காரர்கள், காலாவதித் தேதி, கறுப்பி நீ, காதலர்கள், முள்ளிவாய்க்கால், பொறாமை, திரும்பி வாங்கப்பா, கவிஞர்கள், விவசாயி, அநீதிக் கொலை, தர்மம், ஏழை வீட்டு விவகாரம், கடைக்கண் பார்வை, ஊனம், கண் தானம், புன்னகை, பூக்கள், பாலைவனக் கண்ணீர், யாரிவர்கள், நினைவின் சேமிப்பு, ஆசிரியப் பெருந்தகைகள், தவம், சீதனம், இரட்டை, கிராமக்காதல், தூரத்தில் ஓர் கண்ணீர்த்துளி, மீண்டும் மீண்டும், என் நீ, கற்றுத்தா எனப் பல்வேறு தலைப்புகளில் இவரது கவிதைகள் விரிகின்றன. என் கலைப்பயணப் பங்காளர்கள், முகநூல் நட்போடு ஆகிய பதிவுகள் இறுதியில் அமைகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61241).

11599

கண்ணகி வெண்பா. கா.வேல்நாயகம். காரைதீவு 05 (கிழக்கு மாகாணம்): கா.வேல்நாயகம், ஓய்வுபெற்ற தலைமைத் தமிழாசிரியன், இராஜஸ்தான், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை).

(4), 58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

கண்ணகியின் அறக் கற்பின் பெருமையையும் கண்ணகி வழிபாட்டின் சிறப்பையும் நுணுகி ஆராய்ந்து அந்த ஆராய்ச்சியின் பயனாய்க் கிடைத்த தத்துவக் கருத்துக்களை வெண்பாவாக இந்நூலில் வழங்கியுள்ளார். கோவலன் பிறப்பு, பாலப்பருவம் பத்து, கண்ணகி பிறப்பு- பார்வதி பரமனிடம் கூறியது, பரமேஸ்வரன் பார்பதிக்குக் கூறியது, மாங்கனி மதுரையை அடைதல், பாண்டியன் மாங்கனி பறித்தது, மீகாமன் கதை, வெடியரசன் கதை, மீகாமன் கூற்று, நீலகேசி துயர், மணி வாங்கிய கதை, வீரநாராயணன் கதை, விளங்குதேவன் கதை, மாணாக்கன் மண முகூர்த்தம் நிச்சயித்தது, மண மங்கலம், மாதவி பிறப்பு, மாதவி வனப்பு, மாதவி அரங்கேற்றம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவியும் கோவலனும், பொன்னுக்கு மறித்தது, கோவலன் மாதவி பிரிவு, மாதவி இரங்கல், சித்திராபதி மகளைத் தேற்றல், மகள் தாயை நோதல், சூரியாஸ்தனம், மாறன் கணை, சூரியோதயம், வசந்தமாலை தூது, வசந்தமாலை கூற்று, கணவன் கண்ணகியை அடைதல், கோவலன் கூறல், கண்ணகி கூறல், மதுரைக்குச் செல்லல், சிலம்பு விற்கச் செல்லுதல், சிலம்பு விலை கூறல், வஞ்சிப்பத்தன் வந்தெதிர்ப்படல், கோவலன் கொலைப்படல், வீரபத்தினியாய் வீதியில் கண்ணகி, வாயிற்காவலர் மன்னனை விழித்தல், மன்னவன் கூற்று, கண்ணகி கூற்று, மன்னன் மடிதல், கண்ணகி சினம், மதுரை எரிதல், அக்கினி கண்ணகியைப் பணிந்தது, கண்ணகி கட்டளை ஆகிய தலைப்புகளில் வெண்பாக்கள் அமைந்துள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17043).

11600

கவிதாசன் பதில்கள். மொழிவாணன். கொழும்பு 13: ஜனனி பப்ளிக்கேஷன்ஸ், 104/36, சங்கமித்த மாவத்தை, 1வது பதிப்பு, பெப்ரவரி 1999. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

x, 86 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ.

1966ஆம் ஆண்டில் வீரகேசரி நிறுவனத்தின் ஜோதி வார இதழில் மார்த்தாண்டன் என்ற பெயரில் தொடர்கதை ஒன்றை எழுதியதன்மூலம் இலக்கிய உலகில் காலடி பதித்தவர் மொழிவாணன். தொடர்ந்து மித்திரன் வார மலரிலும் இவரது மர்மக் கதைகள் பல வெளிவரலாயின. இவரது யாருக்காக என்ற நாவல் வீரகேசரி பிரசுரமாக வெளிவந்தது. "நவரசம்" என்ற வீடியோ சஞ்சிகையையும், முக்கியஸ் தர்களின் முகவரிகள் என்ற தொகுப்பினையும் முன்னோடியாக வெளியிட்டுள்ளார். தொலைக்காட்சிக்காக இவர் 13 நாடகங்கள் வரை எழுதியிருக்கிறார். "நான் உன்னைத் தேடுகிறேன்" என்ற தொடர் நாடகம் இலங்கை வானொலியில் 1986இல் 18 வாரங்கள் தொடராக இடம்பெற்றது. ஜனனி வெளியீட்டகத்தின் மாதமிருமுறை வெளியீடான ப்ரியா என்ற சஞ்சிகையில் வாசகர்களின் கேள்விகளுக்கு கவிதைரூபத்தில் பதில் அளித்துவந்த கவிதாசன் (மொழிவாணன்) இக் கேள்வி-பதில்களைத் தொகுத்து தனி நூலாக்கியிருக்கிறார். மாதிரிக்கு ஒரு கேள்வி-பதில் இவ்வாறு அமைகின்றது. "காவேரிக் கரையிருக்கு / கரைமேலே பெண் இருக்கு?" என்ற கேள்வியை பாணந்துறை நஷ்யத் பளீல் கேட்க கவிவாணன் பதிலாக "விரும்பிச் சென்றால் சுகம் இருக்கு / திரும்பி வந்ததும் எயிட்ஸ் இருக்கு" என்று முடிக்கிறார் மொழிவாணன். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24656).

11601

கவிதை மலர்கள். சந்தனா நல்லலிங்கம். கொழும்பு 3: சந்தனா, 55, டீன்ஸ்ரன் பிளேஸ், 1வது பதிப்பு, 1999. (சென்னை 600005: Fonts DTP Services, 243, 1st Floor, T.H.Road, Triplicane).

144 பக்கம், தகடுகள், விலை: இந்திய ரூபா 100., அளவு: 17.5x12 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனா நல்லலிங்கம், மட்டக்களப்பு, கோட்டைமுனையைச் சேர்ந்தவர். கொழும்பு பம்பலப்பிட்டி திருக்குடும்பக் கல்லூரியில் ஆசிரியையாகப் பணியாற்றுகின்றார். இந்நூலில் இவர் இயற்றிய பக்திப் பாடல்கள், மெல்லிசைப் பாடல்கள், நடனப் பாடல்கள், கதை-நடனப் பாடல்கள் என 41 பாடல்கள் வகைப்படுத்தித் தரப்பட்டுள்ளன. இறுதியாக பக்கம் 83 முதல் 144 வரை தெய்வப் பாடல்கள் என்ற பிரிவில் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் பாடப்பெற்றுள்ளது. இதனை காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், அமுதூட்டற் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம், சிற்றில் சிதைத்தல் பருவம், சிறுதேர் உருட்டற் பருவம், உடையவாள் செறித்தற் பருவம் என ஒழுங்குபடுத்தித் தந்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23587).

11602

கவிதைக் கன்னி (யாழ்ப்பாணன் கவிதைகள்) வே.சிவக்கொழுந்து (புனைப்பெயர்: யாழ்ப்பாணன்). பருத்தித்துறை: கலாபவனம், மேலைப் புலோலி, 1வது பதிப்பு, சித்திரை 1952. (யாழ்ப்பாணம்: விவேகானந்தா அச்சகம்).

xvi, 136 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18.5x12.5 சமீ.

நாமக்கல் கவிஞரின் முன்னுரை, இராஜாஜி, கி.வா.ஜகந்நாதன் முதலியோரின் அணிந்துரைகள், கல்கியின் விமர்சனம், க. கணபதிப்பிள்ளை (தமிழகத்தில் ஓர் புத்தொளி), பண்டிதர் பொன்.கிருஷ்ணன் (கவி ஓவியங்கள்), தி.ச.வரதராசன் (கவியும் கவிதையும்) ஆகியோரின் ஆய்வுக் கட்டுரைகள் என்பன இக்கவிதைத் தொகுதிக்கு அணிசேர்த்துள்ளன. மேற்கூறியவற்றுடன் சரஸ்வதி வணக்கம், கவிதைக் கன்னி, அந்த நாள் வாராதோ?, சூரியோதயம், நமது நாடு, இயற்கைவனக் காட்சிகள், முகில் முதலான யாழ்ப்பாணனின் 56 கவிதைகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. வே.சிவக்கொழுந்து பருத்தித்துறை, வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மாலைக்கு மாலை, முல்லைக்காடு, பாலர் பாடல்கள் மற்றும் கவிதைக் கன்னி என்பன இவரது கவிதை நூல்களாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 543).

11603

கவிதைச் சரம். அல் அஸூமத் (தொகுப்பாசிரியர்). றாகம: டொலர் ஏ.கே.எம். பப்ளிக்கேஷன்ஸ், 1/1 சென். மேரிஸ் வீதி, மஹாபாகே, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1996. (றாகம: Rifqa's A.K.M. Printers, 1/1, St. Mary's Road, Mahabage).

(36), 336 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 21x14 சமீ.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை நடத்திய நிகழ்ச்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 483 கவிஞர்களின் 568 கவிதைகளின் தொகுப்பு இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24900).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11604

கவிதையும் கவிஞனும்: கட்டுரைகளும் கவிதைகளும். எஸ்.ஆர்.தனபாலசிங்கம். திருக்கோணமலை: நீங்களும் எழுதலாம் வெளியீடு, 103/1 திருமால் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2011. (திருக்கோணமலை: அஸ்ரா பிரிண்டர்ஸ், இல. 42, திருஞானசம்பந்தர் வீதி).

83 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-53138-0-3.

கவிதை இதழாகத் தடம்பதித்த "நீங்களும் எழுதலாம்" சஞ்சிகை மார்ச்-ஏப்ரல் 2007இல் இருமாதங்களுக்கு ஒரு தடவை என்ற ஒழுங்கில் வெளிவந்து நவம்பர்-டிசம்பர் 2010 காலப்பகுதிவரை 18 இதழ்களைக் கண்டது. இச்சிற்றிதழின் வளர்ச்சியில் மூன்றாண்டுகளைக் குறிக்கும் வகையில் இந்நூல் நீங்களும் எழுதலாம் ஆசிரியரினால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் தமிழமுது சஞ்சிகையில் அமரர் கவிஞர் சில்லையூர் செல்வராசனின் கட்டுரை ஒன்றை முன்வைத்து எழுந்த கருத்தாடல்களையும் வேறு சில கட்டுரைகளையும் முன்னதாக நீங்களும் எழுதலாம் இதழில் முதலாம் ஆண்டில் வெளிவந்த ஆறு இதழ்களிலும் வெளிவந்த கவிதைகளையும் காணமுடிகின்றது. இதழ் 17 வரை மேற்படி நீங்களும் எழுதலாம் இதழுக்கு கவிவளம் சேர்த்த 206 கவிஞர்களின் பெயர்ப் பட்டியலும் காணப்படு கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50525).

11605

கன்னி மொட்டுக்கள்: கவிதைகளின் தொகுப்பு. நிதானிதாசன் (இயற்பெயர்: இம்தியாஸ் எம். ரசாக்), புரோட்வே-ஹில்மி (இயற்பெயர்: ஏ.சி.ஹில்மி காசிம்). கொழும்பு 14: புரோட்வே-ஹில்மி, இல. 166/6, லேயாட்ஸ் புரோட்வே, 1வது பதிப்பு, பெப்ரவரி 1985. (கொழும்பு: ஸ்ரீலட்சுமி பிரின்டர்ஸ்).

70 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

ஈழத்து இளங்கவிஞர் இருவரின் புதுக் கவிதைத் தொகுப்பு. போதனைகள் சோதனைகளாகும் போது, ஊர் விழிக்கிறது, சீதைகளின் வாழ்வில், அழகே உன்னை ஆராதனை செய்கிறேன் ஆகிய பிரிவுகளின்கீழ் கவிதைகள் விரிகின்றன. நிதானிதாசன் (கலாநிதி இம்தியாஸ் ஏ.ரஸாக்) 90களில் இலங்கையில் இலக்கியச் செயற்பாட்டில் ஈடுபட்டவர். "விடிவு" என்னும் சிறுசஞ்சிகை நடத்திச் சென்றவர். 90களில் சீனவில் உயர் கல்வி கற்க புலம்பெயர்ந்தவர். தற்பொழுது அமெரிக்கா டெம்பல் பல்கலைக்கழகத்தில் சீன அரசியல் மற்றும் சீன மொழியினை கற்பித்து வருகிறார். கொழும்பு 14, லேயாட்ஸ் புரோட்வேயைச் சேர்ந்த புரோட்வே-ஹில்மி எனப் புனைபெயர்கொண்டவரான கவிஞர் ஏ.சீ.ஹில்மி காசிம் ஜனாப் எம்.டீ.ஏ.காசிம் அவர்களின் மைந்தனாவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21647).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11606

கனகலிங்கம் மாமாவும் பரிமளா ஆன்ரியும்: கவிதைகளின் சங்கமம். சமரபாகு சீனா உதயகுமார். வல்வெட்டித்துறை: குபேந்திரா பதிப்பகம், கூனன் தோட்டம், சமரபாகு, 1வது பதிப்பு, ஜுன் 2016. (யாழ்ப்பாணம்: அன்றா பிறின்டேர்ஸ், 356 ஏ, லக்ஸன் பிளாசா கட்டிடம், கஸ்தூரியார் வீதி).

(4), 36 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-43151-2-9.

இக்கவிதைத் தொகுதி வித்தியாசமானது. ஊரிலும் அயலிலும் நடந்த சம்பவங்களை இருவகைப் பாத்திரங்களில் பொருத்தி கவிஞர் உதயகுமார் இலக்கியச் சுவையேற்றிக் கவிதையாக்கியுள்ளார். இதிலுள்ள சம்பவங்கள் வாசகனுக்கு நகைச்சுவை உணர்வினைத் தந்து சிரிக்கவும் சிந்திக்கவும் வகைசெய்கின்றன. நகைச்சுவைக் கவிதைகள் அருகியுள்ள ஈழத்துத் தமிழ்க் கவிதைச் சூழலில் இத்தொகுப்பு ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதிகார மமதையில் மக்களை ஏமாற்றி வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ளும் ஊழல் அதிகாரிகளுக்கு இந்நூலைச் சமர்ப்பித்திருப்பது ஆசிரியரின் தார்மீகக் கோபத்தை வெளிப்படுத்து வதாக அமைகின்றது. வேலைக்கள்ளரான கனகலிங்கம் மாமா, தன் மனைவி பரிமளாவிடம் கட்டவிழ்த்துவிடும் சாட்டுப்போக்குகள் ரசனைக்குரியவை. தன் வீட்டுக் கோழியையே விற்று ஆட்டிறைச்சி வாங்கிவரும் மாமாவின் போக்குகள் எம்மை மறந்து சிரிக்கவைக்கின்றன. வடமராட்சி மண்ணின் கிராமியப் பேச்சுவழக்கு இக்கவிதைகளில் கையாளப்பட்டுள்ளமை சிறப்பாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 250625).

11607

கனவுக் கதவுகள்: கவித்துளிகள். சர்வேஸ்வரி கதிரித்தம்பி. ஜேர்மனி: செல்வி சர்வேஸ்வரி கதிரித்தம்பி, 1வது பதிப்பு, 2012. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(64) பக்கம், ஓவியங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

லண்டன் தமிழ் வானொலியின் வழியாகத் தன் கவித்துவத்தை மெருகூட்டிக்கொண்ட செல்வி சர்வேஸ்வரி கதிரித்தம்பியின் தேர்ந்த கவிதைகளின் தொகுப்பு இது. கவிஞரின் முதலாவது கவிதைத் தொகுப்பாக 1.12.2012 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் வெளியீடு கண்டிருந்தது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54169).

11608

கனவுங் கவிதையும்: தனிப்பாடற் றொகுதி. வே.கனகசபாபதி. யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 677/9, பீச் ரோட், 1வது பதிப்பு, வைகாசி 1977. (யாழ்ப்பாணம்: சக்தி அச்சகம், 253, 1/1, ஸ்ரான்லி வீதி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

viii, (8), 75 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 18.5x12 சமீ.

15 பக்திப்பாடல்களையும் 20 சமூகக் காட்சிகளையும், 14 காதற் காட்சிகளையும், 7 இயற்கைக் காட்சிகளையும் தன் கவித்துவப் புலமையால் கவிதைகளாகப் படைத்திருக்கிறார் கவிஞர் வேலுப்பிள்ளை கனகசபாபதி அவர்கள். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2473).

11609

காதலியுடன் பேசுதல்: காதல் கவிதைகளின் சங்கமம். சமரபாகு சீனா உதயகுமார். வல்வெட்டித்துறை: குபேந்திரா பதிப்பகம், கூனன் தோட்டம், சமரபாகு, 1வது பதிப்பு, ஜுன் 2016. (யாழ்ப்பாணம்: அன்றா பிறின்டேர்ஸ், 356 ஏ, லக்ஸன் பிளாசா கட்டிடம், கஸ்தூரியார் வீதி).

(2), ii, 64 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 18x13 சமீ., ISBN: 978-955-43151-3-6.

கஜல் கவிதைகள் அரபு மொழியில் தோற்றம் பெற்றவை. "காதலியுடன் பேசுதல்" என அர்த்தம் தரும் இவ்வகைக் காதல் கவிதைகளின் பரீட்சார்த்த உருவாக்கத்தை இங்கு கவிஞர் உதயகுமார் மேற்கொண்டுள்ளார். அப்துல் ரகுமானின் "மின் மினிகளால் ஒரு கடிதம்" என்ற கஜல் கவிதைத் தொகுதியைத் தொடர்ந்து தமிழ்க் கவிதை உலகில் இவ்வகைக் கவிதைகள் பரவலாக வெளிவரத்தொடங்கியிருந்தன. இலங்கையின் போர்க்காலச் சூழலில் காதல் கவிதைகளின் வரவு மிகவும் அருகியிருந்தது. ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதன் பின்னர் ஈழத்துக் கவிஞர்களிடம் தற்போது காதல் கவிதைகள் மீள்வரவாகியுள்ளன. அவ்வகையில் இக்கவிதைத் தொகுதி முக்கியமான ஒன்றாகவுள்ளது. பக்கங்கள் தோறும் பெண்களின் புகைப் படங்களுடன் காதல் கவிதை பெசுகின்றது. ஆறு, நான்கு, எட்டு வரிக் கவிதைகளாகக் கலந்து இக் கஜல் கவிதைகள் இடம்பெறுகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 250626).

11610

கார்வான் கீதம். அப்துல் காதர் லெப்பை. பதுளை: அல்-அதான் பழைய மாணவர் சங்கம், 1வது பதிப்பு, டிசெம்பர் 1974. (பதுளை: பதுளை அச்சகம், 235, லோவர் வீதி).

30 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18.5x12.5 சமீ.

அப்துல் காதர் லெப்பை (1913.09.07 - 1984.10.07) காத்தான்குடியைச் சேர்ந்த எழுத்தாளர். இவர் 1934 இல் கண்டி உடதலவின்னை தமிழ்ப் பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கி 1939 இல் கல்முனை நற்பிட்டிமுனைப் பாடசாலையில் கல்வி கற்பித்துப் பின்னர் 1943 இல் தலைமையாசிரியராகப் பதவியுயர்வு பெற்றார். சுதந்திரப் போராட்டக் காலத்தில் தமிழகத்தில் இவர் தாருல் இஸ்லாம் பத்திரிகையில் அதான் என்னும் புனைபெயரில் விடுதலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிக் கவிதைகளை எழுதியவர். தினகரனில் ஆய்வாளன் என்னும் புனைபெயரில் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவர் கல்முனையில் முஸ்லிம் முன்னேற்றச் சங்கத்தை உருவாக்கியவர்களில் ஒருவராவார், அப்துல் காதர் லெப்பை இலங்கை முஸ்லிம் இலக்கியத்தில் குறிப்பாக கவிதைத் துறையில் ஒரு தலைசிறந்த கவிஞர். அவர் இயற்றிய "இக்பால் இதயம்" (1961), "ருபையாத்" (மொழிபெயர்ப்பு, 1965), "இரசூல் சதகம்" (1966), "மெய்நெறி" (1966), "செய்னம்பு நாச்சியார் மான்மியம்" (1967), "முறையீடும் தேற்றமும்" (1970), "நான்" (1986), "பாத்தும்மா சரிதை" (1987), "ஜாவித் நாமா" (மொழிபெயர்ப்பு, 1989), "தஸ்தகீர் சதகம்" (1990), "எதிரொலியும் மறை அந்தாதியும்" (2002), "காலம் மறவாக் கவிதைகள்" (2003) ஆகிய நூல்களும் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்த நூற்றுக்கணக்கான தனிப்பாடல்களும் அவரது கவித்திறனுக்கும் கருத்தியலுக்கும் படிமங்களுக்கும் தக்க சான்றுகளாகும். "கார்வான் கீதம்" அவர் இயற்றிய மற்றுமொரு செய்யுள் இலக்கியமாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23931).

11611

காலம் தந்த வலிகள்(கவிதைகள்). இணுவையூர் வ.க.பரமநாதன். டென்மார்க்: வ.க.பரமநாதன், கலை இலக்கியக் கழகம், 254, Boegevaenget, 7330 Brande, 1வது பதிப்பு, 2015. (யாழ்ப்பாணம்: சிவராம் பதிப்பகம்).

xx, 55 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ.

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்களினால் பட்டைதீட்டி மெருகேற்றப்பட்ட கவிஞர் வ.க.பரமநாதன், 1970களின் பின் பகுதிகளிலிருந்து பல்வேறு கவியரங்குகளில் மேடையேறி வந்துள்ளார். இவரது கவிதைகளில் மொழிப்பற்று, இனப்பற்று, மனிதாபிமானம், சமுதாயம் பற்றிய பரந்த நோக்கு என்பன மிளிர்வதை அவதானிக்கலாம். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61392).

11612

கிழக்கில் வெளுக்காத வழக்கு. அக்கரையூர் மு.றூகா. அக்கரைப்பற்று: அகில இலங்கை இளைஞர் மன்றம், பெரிய பள்ளிவாசல் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1991. (சென்னை 600001: தாஜ் பிரஸ்,53, நயினியப்பன் வீதி).

120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x12.5 சமீ.

பாட்டிகளுடன் ஒரு பேட்டி, ஜோடி மாற்றம், இன்னொரு யுத்த காண்டம், கவிதை மொட்டுக்கள், பொதுவுடமை ஆகிய ஐந்து பிரிவுகளின்கீழ் இக்கவிஞரின் இருபத்தியொரு புதுக்கவிதைகள் இந்நூலில் மலர்ந்துள்ளன. இவரது கவிதைகள் புயல், புரட்சி, கனல், தீ என்று உணர்வுக் காட்சிகளாக விரிகின்றன. "இவ்விளைஞனின் மனக்குமுறல்கள் சமுதாயம் பற்றியவை. அந்தச் சுவாலை தரும் இதமான சூட்டில் வெளிவரும் இக்கவிதைகளின் ஆன்ம உயிரின் உள்ளோட்டங்களை உருதுக் கவிஞர் மிர்சா காலிபின் கவிதைகளில் தென்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வு பாவங்களையும், வங்கக் கவிஞன் தாகூரின் கவிதைகள் தரும் உயிரோட்டங்களையும் தரிசிக்கமுடிகின்றது" என்கிறார் இந்நூலுக்கான அணிந்துரையை வழங்கிய கவிஞர் அ.ஸ.அப்துஸ் ஸமது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11120).

11613

குந்திசேத்திரத்தின் குரல்: நெடுங்கவிதைத் தொகுப்பு. மு.பொன்னம்பலம். தெகிவளை: மு.பொன்னம்பலம், 53/3, ரெம்பள் ரோட், கலுபோவில, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxiv, 272 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-97257-2-5.

இந்நூலில் தமிழ் மக்களின் தேசிய இனப் போராட்டத்தினோடு சம்பந்தப்பட்ட கவிதைகளும் உள்ளன. "ஆக்காத்திலிருந்தெழும் ஆண்டாள்" என்னும் கவிதை, காந்தியப் போராட்டத்தின்மூலம் விடுதலை காண வெளிக்கிட்ட ஒரு கூட்டத்தின் கையாலாகாத் தனத்தை அம்பலப்படுத்துகின்றது. அதே வேளை "குந்திசேத்திரத்தின் குரல்" என்ற கவிதை பழைய தலைமுறையினரின் பொய்மையைக் கண்டு வெகுண்டெழுந்து அதே விடுதலைக்காக ஆயுதம் தூக்கிய இளந்தலைமுறையினரின் பலத்தையும் பலவீனத்தையும் விமர்சித்து நிற்கின்றது. எம்.கே.முருகானந்தன், பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆகியோரது மு.பொ.வின் படைப்புலகம் பற்றிய கட்டுரைகளுடன் தொடங்கும் இந்நூலில் ஔவையும் ஐன்ஸ்ரீனும், எழுச்சியும் வீழ்ச்சியும், மதிப்பீடு, ஆக்காத்திலிருந்தெழும் ஆண்டாள், குந்திஷேத்திரத்தின் குரல், புதுயுக தாட்சாயினி புராணம், துயரி, சொற்கள், பேரியல்பின் சிற்றொலிகள், காலம் என்னும் பேரன்னை, கலை இலக்கியப் புரட்சிப் பிரகடனம், பிரபஞ்சக் கும்மி ஆகிய 12 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

11614

குவியல்: பதினைந்து புதிய கவிதைகள். எம்.பி.செல்லவேல். மட்டக்களப்பு: சாயி எடியுகேஷனல் பப்ளிக்கேஷன்ஸ், ஸ்ரீமுருக பவனம், நொச்சிமுனை, கல்லடி-உப்போடை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1997. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(8), 56 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 17.5x12 சமீ.

இந்நூலில் ஆசிரியர் எழுதிய குவியல், தாய்மை, பூக்கள், காடுகள், காதல், வானம், மழை, ஓ சுற்றுப்புறச் சூழலே, ஓடிப்போனவர்களே, ஓ புலம்பெயர்ந்தவர்களே, அக்கினிப் பூக்கள், மலைகள், பசி, எயிட்ஸ், கனவு ஆகிய தலைப்புக்களில் அமைந்த பதினைந்து கவிதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30568).

11615

குறுந்தொகை. வ.ஐ.ச.ஜெயபாலன். சென்னை 600041: க்ரியா, புதிய இல. 2, பழைய இல. 25, 17ஆவது கிழக்குத் தெரு, காமராஜர் நகர், திருவான்மியூர், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2013. (சென்னை 600017: சுதர்சன் கிராப்பிக்ஸ்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

184 பக்கம், விலை: இந்திய ரூபா 170., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-82394-06-8.

இலங்கையிலேயே நெடுந்தீவிலே பிறந்து வன்னிக் கிராமத்திலே வளர்ந்த கவிஞர் ஜெயபாலன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியல் சிறப்புப் பட்டதாரி ஆவார். பல்கலைக்கழக மாணவனாக இருக்கும் காலத்தில் மாணவர் அவைத் தலைவருக்கான போட்டியிலே வெற்றிபெற்று மாணவர் அவைத் தலைவராகிச் சிறப்பாகப் பணியாற்றியவர். ஜெயபாலனின் கவிதைகள் இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினர் வெளியிட்ட தமிழ்ப் பாடப் புத்தகங்களிலும், கவிஞர் வைரமுத்து தொகுத்த "எல்லா நதியிலும் என் ஓடம்" என்னும் கவிதைத் தொகுதியிலும் பிற தொகுப்புகளிலும் இடம்பெற்றுள்ளன. ஜெயபாலன் நல்ல கவிஞன் மாத்திரமல்ல சிறந்த ஆய்வாளரும் கூட அவ்வப்போது நல்ல கதைகளும் எழுதியுள்ளார். பல்பரிமாண ஆளுமை கொண்ட ஜெயபாலனின் 25 ஆண்டுக்காலக் கவிதைகளின் தேர்ந்த தொகுப்பாக குறுந்தொகை வெளிவந்துள்ளது. தமிழகத்தில் 2016 எஸ்ஆர் எம் பல்கலைக்கழகத்தின் சார்பில் வழங்கப்படும் "தமிழ்ப் பேராய விருதுகளில்" விபுலானந்தர் படைப்பிலக்கிய விருதைக் "குறுந்தொகை" நூலுக்காக வ.ஐ.ச.ஜெயபாலன் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

11616

சட்டைப் பைக்குள் சிறகு. ராஜகவி றாஹில். (இயற்பெயர்: அப்துல் கரீம் றாஹில்). நிந்தவூர் 05: ஆர்.கே.மீடியா வெளியீடு, 318, புதிய நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2014. (மாவனல்லை: பாஸ்ட் கிராபிக்ஸ் பிரின்டர்ஸ்).

74 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x13.5 சமீ.

கவிஞர் றாஹில் நம் கண்களுக்குப் புலப்படாத விசித்திரமானதொரு உலகில் சஞ்சரித்து தனது கவிக்கண்களுக்கு மாத்திரம் தெரியும் அழகுகளையும் வசீகரங் களையும் தனக்குள் ஓவியமாக வரைந்து அழகிய தமிழில் அவற்றைக் கவிதைகளாக எமக்குப் படைத்திருக்கிறார். அப்துல் கரீம் றாஹில், (20.04.1962 -) திகாமடுல்லயைச் சேர்ந்த எழுத்தாளர், கவிஞர், பத்திரிகை ஆசிரியர், பாடலாசிரியர், அறிவிப்பாளர், நடிகர் என்று பல்பரிமாணங்களில் எம்மிடையே உலாவருபவர். இவரது தந்தை அப்துல் கரீம் தாய் ஆஷியத்தும்மா. இவர் நிந்ததாசன் என்னும் புனைபெயரில் சிறுகதைகள், கட்டுரைகள், நாவல்கள், திரைக்கதை, நாடகங்கள் ஆகியவற்றை எழுதியுள்ளார். இவர் தமிழ்நாடு சந்தப் பாவேந்தர் விருது, ஆசிரியர்தின விருது, ரத்னதீப பல்துறைக்கான விருது, சாமசிறி கவிவாணன் விருது, பிரசாதினி பிரணாமய விருது என்பவற்றைப் பெற்றுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 249521).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11617

சபதம். தெல்தொட்டை ஹாஜா ரிஹான். குருணாகலை: தெல்தொட்டை ஹாஜா ரிஹான், மாற்றீட்டுக்கான அல் இர்பான் ஊடக மையம், இர்பானியா அரபு, இஸ்லாமிய கலாபீடம், கெகுணகொல்ல, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2014. (குருணாகலை: யுனிக் பிரின்டர்ஸ்).

ix, 82 பக்கம், விலை: ரூபா 170., அளவு: 20.5x13.5 சமீ.

இர்பானியா கலாபீடத்தின் மூன்றாம் வருட மாணவனின் கவிதைத் தொகுப்பு. மறந்து வாழ், கசப்பின் சுவை, போராட்டம், உன்னை அறி, நம்பி வாழ், இன்னும் அதே ஓட்டைகள், தாய்மை, தாய் மகன் உறவு, என் ஜீவன், சோகத் தாயின் குமுறல், ஓய்வெடுக்கும் நேரமெது, எப்பொழுது புது விடிவு காண்பீர், யுத்தம், ஒரு வினா, எங்கே உண்டு, மடமை ஏனோ, விழித்திடு சமூகமே, ஒரு கோசம், முள் தேசத்தில் பூத்த ரோஜா, மாறிலியின் மாற்றங்கள், ஏகத்துவத்துக்காக, புரட்சியின் ஓசை, மனித இயக்கம், உன்னோடு மீண்டும், தேடிய காற்று, விரட்டலா, நாடு கடந்த குமரியே, கனவுகள், தொலைத்தே விட்டேன், என் இதயம், பாதையைத் தெரி, ஓரக்கண் பார்வை, மடமைக் கூட்டம், நினைவுகள், அனைத்துமே அறிவு, வெளிக்கொணர்ந்தாயே நீ, இயல் கவிஞன், யதார்த்த இயந்திரம், துணி நடையெடு, வசந்தத்திற்காய், எங்கே முதல் மாற்றம், நெஞ்சே எழு, இதயங்களின் ஏக்கமாய் இன்று, உன்னை நோக்கி, கானல் நீராய் உலகம், இம்மை, விதைத்திடு விளைச்சலுக்காய், பரீட்சைகள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 48 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60616).

11618

சாத்தான் வழிந்தோடும் சொற்கள்(கவிதைகள்). ஏ.கே.முஜாரத். கிண்ணியா: எறும்புகள் பதிப்பகம், 1வது பதிப்பு, 2015. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

xii, 36 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-53613-2-3.

சாத்தான் வழிந்தோடும் சொற்களில் பேய்களும் பிசாசுகளும் சாத்தான்களுமாய் மனிதர்கள் நிரம்பி வழிகின்றார்கள். உம்மா, வாப்பா, அப்பா, உம்மம்மா, சின்னப்பா, மகன் என உறவுகள் உறவாடுகின்றன. எறும்பு, வண்ணத்துப்பூச்சி, பொட்டுப்பூச்சி, பூரான், மட்டைத்தேள், கறையான் என அ/றிணைகள் உயிரோடித் திரிகின்றன. வெயில், மழை, காற்று, புயலென இயற்கையின் பெருந்தகிப்பும் நிகழ்கின்றன. மொத்தத்தில் அந்நியப்படாத சொற்களால் திளைத்து அறிவும் உணர்வும் சமப்படும் கவிதைகளோடு இத்தொகுதியில் இக்கவிஞர் வெளிப்படுகின்றார். கவிஞர் ஏ.கே.முஜாரத் (1979) கிண்ணியா, பிரதான வீதியைச் சேர்ந்தவர். பிறிமா ஆலையில் பணியாற்றும் இவர் 1998இல் எழுத்துலகில் பிரவேசித்தவர். பூக்களால் ஒரு புகைப்படம், றிசானாவும் எதுவும் பேசா தவாத்மி சுவர்களும் ஆகிய கவிதை நூல்களை முன்னர் வெளியிட்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11619

சாம்பற் பொழுதுகளில் மீளெழுகைக் காலம் (கவிதைத் தொகுப்பு). விஜிதா ரகுநாதன். பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஆனி 2015. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

x, 74 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-29-9.

இத்தொகுதியில் பல்வேறு பாடுபொருள்களைத் தாங்கிய ஐம்பதுக்கும் மேற்பட்ட கவிதைகளைக் காணமுடிகின்றது. தன்னைச் சூழ நடைபெறுகின்ற விடயங்களால் பாதிக்கப்பட்ட இவரது சிந்தனையின் வெளிப்பாடாக இவை அமைகின்றன. போர், போர் சார்ந்த அவலங்கள், சமூகக் கொடுமைகள் தொடர்பான கவிதைகளில் விஜிதாவின் படைப்பாற்றலில் ஒருவித முதிர்ச்சி நிலையை அவதானிக்க முடிவதாக அணிந்துரையில் பேராசிரியர் கி.விசாகரூபன் குறிப்பிடுகின்றார். இது 46ஆவது ஜீவநதி வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61482).

11620

சாவுகளால் பிரபலமான ஊர். தர்மினி. சென்னை 600 005: கருப்புப் பிரதிகள், பி.55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்சு சாலை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2010. (சென்னை600 005: ஜோதி என்டர்பிரைஸஸ்).

64 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5x14 சமீ.

வீடுகள் பாதுகாப்பற்ற மரணக்கிடங்குகள் என படிமங்களைக் கையாள நேர்ந்த ஈழதேசத்திலிருந்து அகதிச் சுமையோடு புலம்பெயர்ந்தோடிக்கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் பெருமூச்சையும் வழித்தடங்களையும் கவிதைகளாய் நம்முன் வைக்கிறார் தர்மினி. யாழ்ப்பாண மாவட்டத்தில் அல்லைப்பிட்டிக் கிராமத்தைச் சேர்ந்த இவர் புலம்பெயர்ந்து பிரான்சில் வாழ்ந்து வருகிறார். தூமை, எதிர் ஆகிய இணையத் தளங்களின் ஆசிரியர்களுள் ஒருவர். இவரது முதலாவது கவிதைத் தொகுப்பு இதுவாகும்.

11621

சித்திரக் கவித் திரட்டு: ஈழமும் தமிழும் 6. ஞானம் பாலச்சந்திரன். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46வது ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 2016. (மஹரகம: தரஞ்ஜி பிரின்ட்ஸ்,506, ஹைலெவல் வீதி, நாவின்ன).

xlviii, 974 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 1500., அளவு: 21.5x15.5 சமீ., ISBN: 978-955-8354-66-7.

ஈழத்துத் தமிழறிஞர்கள் சித்திரக் கவிக்கு வழங்கிய பாரிய பங்களிப்பு வெளிக்கொணரப்படாத இன்றைய நிலையில் அத்தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நூல் ஈழத்துப் புலவர்களின் சித்திரக் கவிகளையும், சித்திரக்கவி நூல்களையும் திரட்டித் தந்துள்ளது. ஈழத்துச் சித்திரக்கவி இலக்கியங்களை நிலைநிறுத்துவதற்கான தளத்தையும், அச்சித்திரக்கவிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கம் செலுத்தும் புறக்காரணிகளையும் உள்வாங்கி சித்திரக்கவியின் ஆணிவேர் பிடித்து, அவற்றின் பருமனை அளந்து, கிளைவரையான வியாபகத்தைக் கண்டு, அதன் வழியாக தமிழில் சித்திரக்கவியின் விரிந்த வரலாற்றையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது. அத்துடன் சித்திரக் கவிகளுக்கான இலக்கணத்தை விளக்கி, அவ்விலக்கணத்தில் சீரற்ற பகுதிகளைச் சீர்செய்து சித்திரக்கவிகளுக்கான இலக்கண நூலாகவும் இந்நூல் அமைகின்றது. இந்நூல் 80க்கும் மேற்பட்ட சித்திரக்கவி வகைகள் மற்றும் அவற்றுள் உள்ளடங்கும் 60க்கும் மேற்பட்ட உப பிரிவுகளுக்கிடையே விரிவும் தெளிவும் நிறைந்த அறிவுசார் உரையாடலையும் நிகழ்த்துகின்றது. தமிழ்ச் சூழலில் சித்திரக்கவிகளின் வரலாறு, தனித்துவம், அவற்றைப் பாடிய நூற்றுக்கும் மேற்பட்ட புலவர்களின் விபரங்கள், இருநூறுக்கும் மேற்பட்ட அரும்பத விளக்கங்கள், முந்நூறுக்கும் மேற்பட்ட மேற்கோள் பாடல்கள் மற்றும் சித்திரக்கவிக்குரிய பல்வண்ண உருவத்தளப் படங்கள் முதலியவற்றை உள்ளடக்கி, ஆயிரம் பக்கங்களுக்கும் மேலாக இந்நூல் விரிகின்றது.

11622

சிதறுண்ட காலக் கடிகாரம். சித்தாந்தன், சி.ரமேஷ், மருதம் கேதீஸ் (தொகுப்பாசிரியர்கள்). பருத்தித்துறை: அமரர் திருமதி தங்கம்மா சரவணை நினைவு வெளியீடு, புலோலி தென்மேற்கு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2011. (யாழ்ப்பாணம்: அன்ரா டிஜிட்டல் பிரின்டர்ஸ், இல. 356, கஸ்தூரியார் வீதி).

(6), 50 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ.

24.07.2011 அன்று அமரத்துவம் அடைந்துவிட்ட திருமதி தங்கம்மா சரவணையின் 31ஆம் நாள் நினைவு வெளியீடாக இக்கவிதைத் தொகுப்பு 23.8.2011 அன்று வெளியிடப்பட்டுள்ளது. 2000க்குப் பின் எழுந்த கவிதைகள் இவை. இதில் பங்களித்துள்ள கவிஞர்கள் பலரும் 1990களிலிருந்து அல்லது அதற்குப் பின்னர் எழுதத் தொடங்கியவர்கள். இத்தொகுதியிலுள்ள கவிதைகளில் அநேகமானவை யுத்தத்தின் வலியை, அது ஏற்படுத்தியிருக்கின்ற வடுக்களையே பேசுகின்றன. இன்னும் மனித மனதுகளுக்குள் படர்ந்திருக்கும் மென் உணர்வுகளின் தடங்களையும், கனவுகள், ஏக்கங்களையும் பேசுகின்றன. யுத்தம் மக்களின் வாழ்வாதாரத்தைச் சிதைத்திருக்கின்றது. மக்களை அலைவுறச் செய்திருக்கின்றது. கடந்த காலம் பற்றிய மீள் வாசிப்புக்கானதொரு எத்தன முயற்சியாகவே இத்தொகுப்பு தொகுக்கப்பட்டுள்ளது.

11623

சிலோன் விஜயேந்திரன் கவிதைகள். சிலோன் விஜயேந்திரன். சென்னை 14: பிரகாஷ் பிரசுரம், 26, டாக்டர் பெசன்ட் ரோடு, ஐஸ் ஹவுஸ், 1வது பதிப்பு, டிசம்பர் 1989. (சென்னை 5: ஸ்ரீ கோமதி அச்சகம்).

100 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 17.5x12.5 சமீ.

நடிப்புத் துறையிலும், நவரசக் கலையிலும் தடம் பதித்த சிலோன் விஜயேந்திரனின் கவிதைத்துறைப் பங்களிப்பு இந்நூலில் பதிவாகின்றது. இவரது முதலாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைநூல் யாழ்ப்பாணத்தில் 1968இல் வெளிவந்தது. 1971இல் பிரேம தியானம் என்ற புதுக்கவிதைச் சித்திரம் வெளியானது. 1985இல் நேசக்குயில் என்ற கவிதைத் தொகுதி தமிழகத்தில் வெளிவந்தது. அதன் தொடர்ச்சியாக 1989இல் இக்கவிதைத் தொகுப்பு வெளிந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27190).

11624

சிறகுகள். ஜீவகவி, து.ரா.நாதன், கே.ஈஸ்வரலிங்கம், பி.கவிமோகன்ராஜ். கொழும்பு 14: சரசவி இளைஞர் கழகம், 103/B, பாபா புள்ளை வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1991. (கொழும்பு 14: பெர்ணாண்டோ அச்சகம், 79, செயின்ட் ஜோசப் வீதி).

(4), 46 பக்கம், விலை: ரூபா 47.50, அளவு: 20x14 சமீ.

இந்நூல்வழியாக நான்கு தென்னிலங்கைக் கவிஞர்கள் ஒன்றிணைந்து தத்தமது கவிதைகளைத் தொகுப்பாக்கி வெளியிட்டிருக்கிறார்கள். இவர்கள் சமகாலச் சிந்தனைகளை இலக்கியவானில் சிறகடித்துப்பறக்கவிட்டுள்ளார்கள். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21691).

11625

சின்னச் சின்ன தூறல்கள். நடா சிவராஜா (புனைபெயர்: தமிழ்க் கிறுக்கன்). கோயம்புத்தூர்: தகிதா பதிப்பகம், 4/833, தீபம் பூங்கா, கே.வடமதுரை, கோவை 641017, 1வது பதிப்பு, ஜுன் 2012. (கோயம்புத்தூர்: 641012: ஐடியாஸ் டிசைனிங் அன்ட் பிரிண்டிங்).

xxviii, 68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

யாழ்ப்பாணத்தில் பிறந்து பிரித்தானியாவில் வாழ்ந்துவரும் "தமிழ்க் கிறுக்கன்" கவிஞர் நடா சிவராஜா எழுதிய கவிதைத் தொகுதி. இவருடைய பாடுகளம் தாய்நிலமும் புகலிடமுமாக விரிகின்றது. சிறுவயதில் தனது தாய்மண்ணில் தான் கண்ட, அனுபவித்த காட்சிகளையும் சம்பவங்களையும் இவர் கவிதை களாக்கியிருக்கிறார். புலம்பெயர்ந்து லண்டன் வந்தபின்பு புகலிடத்தில் நடக்கும் விசயங்கள், மனதை உறுத்திய காட்சிகள் எல்லாம் இவரது ஆழ்மனத்தின் உணர்ச்சி ஊற்றுக்களாகக் கொப்பளிக்கின்றன. பல பாடல்களில் கவிஞர் வாழ்ந்த மண்ணின் மணம் வீசுகின்றன. இவர் ஊரின் பெரியகுளம் பற்றிய கவிதையை ரசிக்க முடிகின்றது. தனது நாட்டின், தனது தாய்மண்ணின் தற்போதைய நிலை கண்டு ஆதங்கப்படுகின்றார். இவரின் பள்ளிக் காலத்து நினைவுகளை "பள்ளியில் துள்ளிய காலம்" என்ற கவிதையில் அழகாகக் காட்சிப்படுத்துகின்றார். அந்த ஆங்கில ஆசிரியையின் இடை, அந்த வேலியோரத்து காஞ்சோண்டி, அடுத்து கமலாவின் மகள், பின்பு கரும்பலகையில் காதலியின் பெயரோடு குறியிட்டு காதல் சமன் செய்தது என்று தாராளமாகக் கவிவரிகளைச் சேர்த்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11626

சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள்: தொகுதி 4 (கவிதைகள்). சுவாமி விபுலாநந்தர் (மூலம்), வ.சிவசுப்பிரமணியம், சா.இ.கமலநாதன் (பதிப்பாசிரியர்கள்). மட்டக்களப்பு: சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை, 1வது பதிப்பு ஏப்ரல் 1999. (மட்டக்களப்பு: சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).

x, 165 பக்கம், தகடு, விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

1914 முதல் 1947 வரையிலான பல்வேறு காலப்பகுதிகளில் அடிகளாரினால் எழுதப்பட்ட 32 கவிதைகளும் மூன்று பின்னிணைப்புகளும் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. தமிழ்மொழியில் எழுதப்பட்ட 28 பாடல்களும் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட 4 பாடல்களும் இவற்றில் அடங்குகின்றன. கணேச தோத்திர பஞ்சகம், மாணிக்கப் பிள்ளையார் இரட்டைமணி மாலை, சுப்பிரமணிய சுவாமி இரட்டைமணி மாலை, குன்றெறிந்த குமரவேளைப் பாடிய இரட்டைமணி மாலை, ஏநேய காவியம், ஞானபாஸ்கரோதய சங்க முதலாம் ஆண்டு நிறைவின்போது உவந்தளித்த இசைத்தமிழ்-தத்தம் நிலையில் தாம் பெரியவரே, குருதேவர் வாக்கியம், பூஞ்சோலை காவலன், ஈசனுவக்கும் மலர், தேவி வணக்கம், விவேகானந்த பஞ்சகம், மகாலக்ஷ்மி ஸ்தோத்திரம், குரு சரண ஸ்தோத்திரம், கோயில், மலர்மாலை, தமிழ்நாட்டு நவமணிகள், ஸ்ரீராமகிருஷ்ணதேவரின் திவ்விய சரிதம் (பதிகம்), இமாசல யாத்திரை, தில்லிமாநகர்த்த திருவமர் மார்பன் திருக்கோயிற் காட்சி, நீரர மகளிர் இன்னிசைப் பாடல், அர்ச்சனை மலர், கங்கையில் எழுதியிட்ட ஓலை, பூதங்களைத் தொழுது பூதநாதனை வழிபடல், உலக வாழ்க்கையிலிருப்போர் பிரபத்தியினால் நற்கதியடையும் உபாயம், பேரையூர் அம்பாள் குளம் பொய்யாத விநாயகர் திருவடி பரவிய தேவபாணி, யாழ்நூல் நிறைவுபெற்றது பொருளாகத் திருக்கொள்ளம் பூதூர் அழகிய நாச்சியார் சேவடி பரவிய முன்னிலைப் பரவல், நாவலர் மெய்க்கீர்த்தி மாலை, வங்கத்துதித்த செங்கதிர்வேந்தரின் உபகுப்தர் The Ideal of Brahmanhood, A Song Offering, The Sacred Hymn of Awakening, In Praise of the divine Name ஆகிய கவிதைகள் இந்நூலில் தேடிச் சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18530).

11627

தமிழ்த்தாய் பள்ளியெழுச்சி. க.தா.செல்வராஜகோபால் (புனைபெயர்: ஈழத்துப் பூராடனார்). உ.இ.ஜீ.செலிரா, அன்புமணி இரா.நாகலிங்கம், இர.ந.வீரப்பன், ஆ.நடராசன், முத்து வயிரமணி, தெ.ஜெயம் (பதிப்புத் தொகுப்பாசிரியர்கள்). கனடா: ஜீவா பதிப்பகம், தொரன்ரோ, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, ஆடி 1990. (கனடா: ஜீவா பதிப்பகம், றிப்ளக்ஸ் அச்சகம், 1365 Midway Blvd 24, Mississauga L5T 2J5).

x, (20) பக்கம், விலை: கனேடிய டொலர் 3., அளவு: 21x14 சமீ.

தமிழ்மொழியின் பக்தி இலக்கியத்தில் பள்ளியெழுச்சி என்பதன் பொருள் துயில்எழுதல் ஆகும். துயிலெழுப்பும் பொருண்மையில் பாடப்பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றிலக்கியம் பள்ளியெழுச்சி எனப்படும். அரசன் தூங்கி விழித்து எழுகையில் அரசனைப் புகழ்ந்து பாடும் பாடலைத் "துயிலெடை நிலை" என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். அரண்மனைகளில் பாடிவந்த துயிலெடை நிலை தெய்வம் உறையும் கோயில்களில் பாடப்படுவதாயிற்று. அப்பொழுது துயிலெடை நிலை என்ற பெயர் மாறித் திருப்பள்ளியெழுச்சி என்று புதுப்பெயர் பெற்றது. அப்பொழுது துயிலெடைநிலை என்ற பெயரும் மாறித் திருப்பள்ளியெழுச்சி என்ற புதுப்பெயரும் அமைந்துவிட்டது. பள்ளியெழுச்சி என்னும் சிற்றிலக்கியவகை பக்தி இலக்கிய காலத்திலேயே தோன்றியிருந்தபொழுதும், பாட்டியல் நூல்கள் எதுவும் பள்ளி யெழுச்சிக்கு இலக்கணங்களை வரையறுத்துக் கூறவில்லை. மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சியைத் தொடர்ந்து, தொண்டரடிப் பொடியாழ்வாரும் திருப்பள்ளியெழுச்சி பாடியிருக்கின்றார். இவ்வகையில் பாரதியார் பாடிய பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி, கவிக்குஞ்சர பாரதி பாடிய கீர்த்தனை திருப்பள்ளியெழுச்சி, சிவராமப்பிள்ளை பாடிய இந்தியத்தாய் திருப்பள்ளியெழுச்சி, மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை பாடிய பொதுப்பள்ளியெழுச்சி, ராயசொக்கலிங்கம் பாடிய காந்தி திருப்பள்ளியெழுச்சி, ஆ.சிவலிங்கனார் பாடிய தமிழ்த்தாய் திருப்பள்ளியெழுச்சி முதலான பல பள்ளியெழுச்சி நூல்கள் தமிழில் தோன்றியிருக்கின்றன. இவ்வகையில் ஈழத்துப் பூராடனாரின் தமிழ்த்தாய் பள்ளியெழுச்சியும் அமைகின்றது. பாவேந்தர் பாரதிதாசனின் நூற்றாண்டு நினைவாக இச் சிறுநூல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11313).

11628

தலைசிறந்த தமிழர் தலைவர் தொண்டமான்: புதுக் கவிதையில் ஒரு புகழ்மாலை. கலாவிஸ்வநாதன். கொழும்பு: ஆர்.யோகராஜன், மலையக கவிஞர் சங்கம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1993. (அச்சக விபரம் தரப்படவில்லை)

24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

இரத்தினபுரியிலிருந்து "குயில்வீணை" என்ற சிறுகவிதைத் தொகுப்புடன் எழுபதுகளில் இலக்கியத்துறையில் காலடி பதித்தவர் கலாவிஸ்வநாதன். பின்னாளில் மலையகத்தின் முன்னணிக் கவிஞர்களுள் ஒருவராகத் தன்னை இனம்காட்டிக்கொண்டவர். கவிப்பேரரசு கண்ணதாசன் மன்ற அமைப்பாளராக இலக்கிய உலகில் அறிமுகமான இவர் வலம்புரி கவிதாவட்டத்தின் மத்தியகுழு உறுப்பினராகவும் மலையகக் கவிஞர் சங்கத்தினது உறுப்பினராகவும், சப்பிரகமுவ சாகித்திய சம்மேளனத்தினது காப்பாளராகவும் சேவையாற்றுபவர். மலையக அரசியல்வாதியான சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் 81ஆவது பிறந்த தினத்தையொட்டி 30.8.1993இல் அவரது புகழ்பாடும் இந்நூல் வெளியிடப்பட்டது. சௌமியமூர்த்தி தொண்டமான் (ஆகஸ்டு 30, 1913 - அக்டோபர் 30, 1999) இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களது முக்கிய அரசியல் தலைவர்களில் ஒருவராவார். 86 வது வயதில் இவர் இறக்கும் போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவராகவும் இலங்கை அரசின் அமைச்சரவையில் வயது கூடிய அமைச்சராகவும் காணப்பட்டார். இவர் தொடர்ந்து 21 வருடங்கள் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தில் அமைச்சராகப் பதவி வகித்திருந்தார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10276).

11629

தவறுகள் தொடர்கின்றன. மைதிலி தயாபரன். வவுனியா: கிருஷ்ணிகா வெளியீட்டகம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2015. (வவுனியா: வாணி கணினிப் பதிப்பகம், இல. 79, கந்தசாமி கோவில் வீதி).

(6), 7-79 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 18x12 சமீ., ISBN: 978-955-41614-6-7.

இலக்கிய உலகில் தனது ஆறாவது நூலாகவும், இரண்டாவது கவிதைத் தொகுப்பாகவும் வழங்கியுள்ள ஆசிரியரின் புதுவகைக் கவிதைத் தொகுதி இது. யதார்த்தமான ஒரு சில விடயங்களை சிந்தனைக்கு எடுத்துக்கொள்ளும் விதமாக மூன்று வரிகளை மட்டும் கொண்ட கவிதைகள் அடங்கிய இத்தொகுதியில் நூற்று எண்பத்து நான்கு கவிதைகள் அடங்கியுள்ளன. பிறந்தநாள் முதல் சராசரி ஆயுட்காலம் ஆகிய அறுபத்தைந்து ஆண்டுகள் வரை அறியாமல் செய்துகொள்ளும் ஒரு சில விடயங்களைச் சிந்தனைக்குரிய கவிதைகளாகத் தந்துள்ளார் ஆசிரியர். சிந்திக்க வைக்கும் சிறு கவிதைகள் அடங்கிய சிறந்த கவிதைத் தொகுதி இதுவாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 249457).

11630

தளிர்களின் சுமைகள் (கவிதைகள்). சுமதி குகதாசன். கொழும்பு 6: இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம், 18, 6/1, கொலிங்வுட் பிளேஸ், 1வது பதிப்பு, ஜனவரி 2012. (கொழும்பு 6: ஆர்.எஸ்.ரி. என்டர்பிரைஸஸ், 114, டபிள்யு ஏ. சில்வா மாவத்தை).

(20), 21-93 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 17.5x12 சமீ., ISBN: 978-955-1810-18-4.

மாணவம், சிவப்பு, விழிப்பு, பயன், உண்மை, தெளிவு, தடை, தேடல், யதார்த்தம், தயாராயிரு, பாதுகாப்பு, ஆட்சி, தளிர்களின் சுமைகள், பட்டம், தண்டனை, விருத்தி, வாழ்வு, பாரபட்சம், சிந்தனை, சமநிலை, தரிசனம், அறிவு, அற்புதம், வேண்டாம், துன்பம், நியாயம், வளர்ப்பு, முன்னேற்றம், வேடிக்கை, நிம்மதி, வலி, சீர்மை, வேற்றுமை வேண்டாமே, பித்து, ஆத்மாவின் அனுபவம், குடி, துணிவு, தன்னம்பிக்கை, சுதந்திரம், தில்லு முல்லு, அகதிகள், மேன்மை ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 42 கவிதைகள் இத்தொகுபபில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 51380).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11631

தாளில் பறக்கும் தும்பி. ஜமீல் (இயற்பெயர்: அப்துல் றகுமான் அப்துல் ஜமீல்). மருதமுனை: புதுப்புனைவு இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஜுன் 2015. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன்).

(14), 70 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-7733-00-5.

மிக எளிதில் நொறுக்கப்படக்கூடிய விளிம்புநிலையில் உள்ள பெண்கள், சிறுவர்கள் மற்றும் குழந்தைகளின் தேவைகள், பிரச்சினைகள், குறித்துச் சிந்திக்கும் இக்கவிஞர் அவற்றையே தன் பாடுபொருளாகக் கொண்டுள்ளார். கவிஞர் ஜமீல் நீண்டகாலமாக சிறுவர்கள் தொடர்பில் அதீத அக்கறை செலுத்துபவராக பல்கலைக்கழக ஆய்வாளர்களாலும் விமர்சகர்களாலும் கவனத்திற் கொள்ளப்படுபவராக இருந்துவருகிறார். தாளில் பறக்கும் தும்பியில் சிறுவர்களினதும் விருப்பு, வெறுப்புக்கள், முறையிடுதல்கள், குதூகலிப்புகள், துயர் பகிர்வுகள், கனவுலகம், கழிவிரக்கம், காருண்யம், கற்பனை உத்திகள், வகுப்பறைச் செயலூக்கங்கள், வெளிநடத்தைப் பிறழ்வுகள், உளவியல் சிக்கல்கள், நுணுக்கமான பார்வை அல்லது அவதானம், பிரிவின் நீட்சி, ஏங்கித் தவிப்புறுதல், குழந்தைகளுக்கும் இயற்கைக்கும் இடையிலான நெருங்கிய உறவு, போன்றவை செப்பமான கட்டுக்களுள்ள கவிதை மொழியில் வடிக்கப்பட்டுள்ளன.

11632

துணிச்சற்காரன்-கவிதைகள். நெடுந்தீவு நேதாமோகன் (இயற்பெயர்: செ. மோகன்ராஜ்). பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஜனவரி 2015. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ மாருதி பிரின்டர்ஸ், 555, நாவலர் வீதி).

xiv, 78 பக்கம், விலை: ரூபா 200.00, அளவு: 19.5x13.5சமீ., ISBN: 978-955-4676-18-3.

போரின் பின்னதான அவலங்களை, தமிழ் மக்களின் பிரச்சினைகளை வாசகர்கள் மனதில் பதியவைக்கும் வகையிலான கவிதைகள் இவை. வீச்சான, கட்டிறுக்கமான தெளிவான சொற்பிரயோகம் இக்கவிதைகளின் சிறப்பம்சமாகின்றது. நேதாமோகன் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது ஆழ் நிலைப்பட்ட வாசிப்புக்கும் தேடலுக்கும் மொழியழகு படுத்தப்பெற்ற சிறந்த கவிதைகளின் தொகுப்பாகி வெளிவந்திருக்கிறது இந்தக் கவிதை நூல். சமுதாய அவலங்களையும், சமுதாயத்தில் விளைந்து விட்ட சிறுமைத்தனங்களையும், சாமான்யனின் காட்சிக்குப் புலப்படாத மனித மாண்பற்ற கோரங்களையும் அனுபவித்து வருந்தியதால் விசுவரூபம் எடுத்த மொழியின் வண்ண வடிவங்களே கவிதைகளாகி இந்நூலை இறுக்கமாக்கியுள்ளன. இது கவிஞரது முதலாவது கவிதைத் தொகுப்பாகும். வாழ்க்கையின் திரும்பும் திசைகள் யாவற்றையும் பார்த்துணர்ந்து வடித்த கவிதைகளின் தொகுப்பாக இது விளங்குகிறது. உயிர்த் துடிப்பும் உணர்வுப் பெருக்கும் விரியும் இக்கவிதைகளின் வண்ணங்களால் துணிச்சற்காரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புறுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61495).

11633

தெய்வ தரிசனம்: கவிதைத் தொகுதி. இராகி (இயற்பெயர்: இரா.கிருஷ்ணபிள்ளை). காரைதீவு (கிழக்கு மாகாணம்): இந்து சமய விருத்திச் சங்கம், 1வது பதிப்பு, மார்ச் 2016. (சாய்ந்தமருது: றோயல் அச்சகம்).

iv, 78 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14 சமீ.

காரைதீவை வாழ்விடமாகவும், பாண்டிருப்பைப் பிறப்பிடமாகவும் கொண்ட கவிஞரும் எழுத்தாளருமான ஓய்வுநிலை அதிபர் கலாபூசணம் இராமக்குட்டி கிருஸ்ணபிள்ளை ஒரு கலைப்பட்டதாரி ஆசிரியராகப் பணியைத் தொடங்கியவர். இராகியின் முதல் நூல் உறவுகள் என்ற தலைப்பில் 2008இல் வெளியாகியது. 50 ஆண்டுகால இலக்கியப் பரிச்சயம் மிக்க இவரது முதல் சிறுகதை பாண்டியூர் இராகி என்ற புனைபெயரில் சரியா தப்பா என்ற தலைப்பில் 1964இல் சுதந்திரனில் வெளிவந்தது. இந்நூலில் இராகியின் தேர்ந்த 19 பக்திக் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இவை மனம் கவரும் முருகன், முக்தி தரும் முதல்வன், கண்ணகி வெண்பா, நலம் தரும் நாயகன், வாழ்வும் வீழ்வும், விலை பொகாதே, பொறுமை, சோம்பல், நன்றி, ஆசை, குடிக்காதே, அடக்கம், இறைவன் செயல், கதிரவன், அறிவு, பணம், பசி, அன்னை, நிம்மதி ஆகிய 19 தலைப்புகளில் இந்நூலிலுள்ள கவிதைகள் எழுதப்பட்டள்ளன.(இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 250632).

11634

தொட்டுவிடும் தூரத்தில்: கவிதைத் தொகுப்பு. இணுவையூர் சக்திதாசன். யாழ்ப்பாணம்: எஸ்.விஜய், தொலைநோக்கி வெளியீடு, 1வது பதிப்பு, ஜுலை 2016. (யாழ்ப்பாணம்: விஜய அச்சுப் பதிப்பகம்).

xxvi, 108 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 978-955-43349-0-8.

யாழ்ப்பாணம், இணுவிலைச் சேர்ந்த சக்திதாசன் தற்போது டென்மார்க்கில் புலம்பெயர்ந்து வாழ்கிறார். இவரது நான்காவது கவிதைத் தொகுதி இது. இவரது 66 புதுக் கவிதைகளைக் கொண்டது. புலம்பெயர் வாழ்வியலின் ஏக்கங்களைச் சுமந்த கவிதைகளாக பெரும்பாலான கவிதைகள் இருக்கின்றன. தாயகத்தின் நினைவுகளை இவை சுமந்து கனக்கின்றன.

11635

தொலைத்து விட்டோம் எத்தனையோ? திருக்கோவில் யோகா யோகேந்திரன். அம்பாறை: யோகா யோகேந்திரன், யோக வாசா, திருக்கோவில், 1வது பதிப்பு, 2015. (அக்கரைப்பற்று: மல்ட்டி அச்சகம்).

xii, 100 பக்கம், விலை: ரூபா 200, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-41546-2-9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோவில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு தமிழர்கள் வாழும் கிராமம். அக்கரைப்பற்று கிராமத்தில் இருந்து 8 மைல் தொலைவில் இது அமைந்துள்ளது. இங்கிருந்து இலக்கிய உலகிற்கு அறிமுகமானவர் யோகா. தினகரன் பாலர் கழகத்தின் வழியாகத் தன் குழந்தைப் பிராயத்திலேயே எழுதத் தொடங்கியவர். 70களில் அதிகமான கதைகளை தினகரன், ராதா, சிந்தாமணி போன்ற பத்திரிகைகளுக்கு எழுதியபின் ஓய்ந்திருந்தவர். அரசாங்க எழுதுவினைஞராகவும், ஆசிரியையாகவும் பணிபுரிந்து சுமார் 20 ஆண்டுகளின் பின் 1998இல் இவரது மீள்வரவு, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் சிறுகதைப் போட்டியின்போது நேர்ந்தது. மீண்டும் வீச்சுடன் எழுதத்தொடங்கிய இவரது கவிதைகளின் தொகுப்பு இது. வாழும் ஊரின் சிறப்புக்கள், வளம்மிக்க அந்தநாள் நினைவுகள், பழமைகள், புதுமைகள், இளமைக்காலத்து நினைவுகள், வறுமையின் கொடுமைகள், நோயின்றி நாம் வாழ்வதற்காய் வழிகாட்டும் நெறிமுறைகள், போர்க்கால அவலங்கள், புத்திமதி கூறுகின்ற புதுமைக் கருத்துக்கள், சிந்தனையைக் கிளறும் சிறப்பான தகவல்கள் எனப் பலவற்றையும் உள்ளடக்கி இக்கவிதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61355).

11636

நடந்தபடிதேடுவோம்:கவிதைத் தொகுப்பு. எஸ்.பெருமாள். யாழ்ப்பாணம்: எஸ். பெருமாள், ஈழநாடு பத்திரிகை முன்னாள் ஆசிரியர், 13A -1/3, A9 வீதி,அரியாலை, 1வது பதிப்பு, மார்கழி 2016. (யாழ்ப்பாணம்: ஜெயஸ்ரீ அச்சகம், 34, பிரவுண் வீதி).

ix, 65 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x13 சமீ., ISBN: 978-955-7286-00-6.

வீரகேசரி, ஈழநாடு பத்திரிகைகளில் ஆசிரியபீடத்தில் பணியாற்றிய எஸ்.பெருமாள், 50 வருடங்களுக்கு மேல் பத்திரிகைப்பணியில் ஈடுபட்டவர். பின்னர் சில காலம் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றிய இவர் பின்னர் யாழ்ப்பாணத்தில் வெளிவரும் உதயன் பத்திரிகையில் பணியாற்றினார். உதயனில் காலக்கிரமத்தில் இவர் எழுதிய கவிதைகள் இந்நூலில் பிரசுரமாகியுள்ளன. 27 தலைப்புக்களில் இத்தொகுப்பிற் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. கவிஞரின் சமய நம்பிக்கை, சமூக எதிர்பார்ப்பு முதலானவற்றோடு உளவியலும் மொழியியலும் சங்க மித்திருப்பதைப் பல கவிதைகளில் காணமுடிகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61517).

11637

நந்தவனச் சுகந்தம். க.பேரின்பதாசன். யாழ்ப்பாணம்: கந்த பேரின்பம் க. பேரின்பதாசன், மஞ்சவனப்பதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில், இணை வெளியீடு, மன்னார்: மன்னார் தமிழ்ச் சங்கம், 1வது பதிப்பு, 2015. (மன்னார்: ஸ்கை அச்சகம்).

xxx, 149 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 20.5x14.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராகவும், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றியவர் இந்நூலாசிரியர். ஓர் உண்மைக் கவிஞனுக்குரிய உணர்வு வெளிப்பாட்டை இவருடைய கவிதைகளில் காணமுடிகின்றது. கோபம், ஆதங்கம், மகிழ்ச்சி, இயற்கை வனப்பில் இதயம் பறிகொடுக்கும் நிலை, இயற்கையைப் பேணவேண்டும் என்ற இதயபூர்வமான ஆவல், அரசின் அநியாயங்களைச் சாடும் கோபம், வாழ்க்கைக்குத் தேவையான தத்துவங்கள் என பல்துறைசார்ந்த கவிதைகளை இவர் படைத்திருக்கிறார். சில இடங்களில் வசனநடைக் "கவிதைகளாக" அமைந்துவிடுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. பொதுவான பாடல்கள் (19), சமயப் பாடல்கள் (இந்து சமயப் பாடல்கள் (13), கிறிஸ்தவ சமயப் பாடல்கள் (7), இஸ்லாமியப் பாடல்கள் (2)), நெஞ்சில் நிறைந்தவை (5), அறிவுரைகள் (21), தனிப்பாடல்கள் (6), யுத்த அநர்த்தம் (11), காதல் (4), நகைச்சுவை(10), ஆகிய தலைப்புகளில் இவர் தனது 98 கவிதைகளையும் பிரித்துத் தந்துள்ளார். இறுதியில் திருவிளையாடல் என்ற தலைப்பில் ஒரு நாடகத்தையும் இணைத்துள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 249068).

11638

நறுக்: ஹைக்கூ கவிதைகள். மொழிவரதன் (இயற்பெயர்: க.மகாலிங்கம்). கொட்டகலை: கொட்டகலை தமிழ்ச்சங்கம், 34/20, மொழி அகம், கணபதிபுரம், கொட்டக்கலை, 1வது பதிப்பு, மார்ச் 2016. (ஹட்டன்: யுனிவர்சல் பிரின்டர்ஸ்).

(10), 11-62 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-0936-01-4.

இத்தொகுப்பில் உள்ள 51 ஹைக்கூ கவிதைகளில் பெரும்பாலானவை அரசியல், மனிதாபிமானம் மற்றும் இயற்கை பற்றியே பேசுகின்றன. இதில் இடம்பெறும் மல்லிகை சி.குமாரின் கருத்தோவியங்கள் கவிதைகளின் தொனிப்பொருளை மேலும் தெளிவாக்குகின்றன. ஆங்காங்கே மலையக மண்ணின் வாசம் வீசுகின்ற கவிதைகளும் உள்ளன. ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளரான மொழிவரதன் பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கொட்டகலையை வசிப்பிடமாகக் கொண்டு அங்கு கொட்டகலை தமிழ்ச்சங்கத்தினை இயக்கிவருகின்றார். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61247).

11639

நாவலர் பிள்ளைத்தமிழ்: மூலமும் உரையும். மு.கந்தையா. காரைநகர்: காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம், 1வது பதிப்பு, தை 1979. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).

xxxiv, 158 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12 சமீ.

பிள்ளைத்தமிழ் என்பது தமிழ் இலக்கியத்தில் வழங்கும் பிரபந்த நூல் வகைகளுள் ஒன்று. புலவர்கள் தாம் விரும்பிய தெய்வங்கள், சமயா சாரியர்கள், புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமக்கள், ஆதீனகர்த்தர், அரசர், உபகாரிகள், அவர் அவர்கட்கு உகந்தவர்கள், ஆகியோரைக் குழந்தையாக உருவகித்து, கற்பனை பல அமையப் பாடப்படுவது பிள்ளைத்தமிழாகும். ஏழாலைக் கவிஞர் மு.கந்தையா அவர்கள் நல்லை நகர் நாவலரைப் பிள்ளையாகப் பாவித்து இயற்றிய பிள்ளைத் தமிழ் இலக்கியம் இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21566).

11640

நான்(கவிதைகள்). கவிஞர் அபூபக்கர் (இயற்பெயர்: A.M.அபூபக்கர்). காத்தான்குடி 2: முனீரா பப்ளிக்கேஷன்ஸ், 86, ஓல்ட் ரோட், 1வது பதிப்பு, ஏப்ரல் 1980. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில்).

60 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 18x13 சமீ.

கவிஞர் அபூபக்கரின் ஆன்மீகக் கவித்துவச் சிந்தனையில் உதித்த கருத்துக்கள் அழகிய கவிதைகளாகியுள்ளன. கவிதைகளின் கருப்பொருள் பற்றி நுழைவாயிலில் அவர் பின்வருமாறு கூறிவரவேற்கிறார். "நான் யார்? நான் ஒரு மனிதன். என்னுள் எத்துணையோ இரகசியங்கள் மண்ணிலே புதையுண்ட மணிகளாக அடங்கிக் கிடக்கின்றன. நான் யார்? இந்தக் கேள்வியை மீண்டும் மீண்டும் என்னுள்ளே நானே கேட்டுக் கொள்கிறேன். கேள்வியின் உசாவுதலில் உண்மைகள் உதயமாகின்றன. புதைந்துவிட்ட இரகசியங்கள் மண்ணிலிருந்து கிளம்பும் நீரூற்றாய் வெளியாகின்றன. ஹிராக் குகையிலே நுழைந்த ஒளி வெள்ளம் என்னை மூழ்கடிக்கிறது. என்னுள்ளே ஒரு உலகத்தைக் காண்கிறேன். சூரியன் சந்திரன் உடுக்கணங்கள் கோள்கள் மலைகள் புரியாத பல உலகங்கள். யாவும் என்னுள்ளே இருக்கக் காண்கின்றேன். என்னைப் படைத்து ஆளும் இறைவனையும் என்னுள்ளே காண்கின்றேன்." (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3168).

11641

நான் அவளுக்கு ஒரு கடலைப் பரிசளித்தேன் (கவிதைத் தொகுப்பு). த.அஜந்தகுமார். பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, மார்கழி 2016. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

xii, 60 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-4676-55-8.

புதிய தரிசனம் என்ற சிற்றிதழின் ஆசிரியராகப் பணியாற்றும் த.அஜந்தகுமார் முன்னதாக ஒரு சோம்பேறியின் கடல், தனித்துத் தெரியும் திசை, அப்பாவின் சித்திரங்கள், படைப்பின் கதவுகள் ஆகிய நூல்களின் ஆசிரியர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முது தத்துவமாணிப் பட்டதாரி. கரவெட்டி பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றுகின்றார். இக்கவிதைத் தொகுதி 23.2.2017 அன்று கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் குப்பிளான் ஐ. சண்முகன் அவர்களின் தலைமையில் வெளியிட்டுவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61488).

11642

நிகரி (கவிதைகள்). மஜீத். அக்கரைப்பற்று: மஜீத், 1வது பதிப்பு, 2017. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன் ஒப்செட் பிரின்டர்ஸ்).

36 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 10x14.5 சமீ.

கிழக்கிலங்கைக் கவிஞர் மஜீத்தின் கவிதைகளுக்கு நிகரான ஏ.எம்.பாசித் அல் நாசர் அவர்களின் கண்கவர் இயற்கை ஓலியங்களுடன் இக்கையடக்க புதுக்கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

11643

நீ (கவிதைத் தொகுப்பு). கவிஞர் அபூபக்கர் (இயற்பெயர்: A.M.அபூபக்கர்). காத்தான்குடி 2: முனீரா பப்ளிக்கேஷன்ஸ், 86, ஓல்ட் ரோட், 1வது பதிப்பு, அக்டோபர் 1981. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில்).

72 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 18.5x12.5 சமீ.

கவிஞரின் நான்காவது கவிதைத் தொகுப்பு. இக்கவிதைகள் யாவும் நாளைய சமுதாயத்தில் தோன்றப்போகும் மனிதனுக்காக இயற்றப்பட்டவை என்கிறார் இக் கவிஞர். நாளைவரும் மனிதனின் உணர்ச்சிகளைத் தூண்டி அவனை நாளைய உலகின் ஜீவ நாயகனாக ஆக்குவதற்காக எழுதப்பட்டவை. அல்லாஹ் அல்லாஹ், மாண்ட கவி பாடுகிறான், செல்வ மகனே, தாய்நாடு விளங்க, வேட்கை, சவ்லால் இளம்பிறையே, நீ, பெண்ணே, இளைஞரே எழுக, மேற்கின் போக்கு, ஏ மானிடனே, பனித்துளியும் சூரியனும், எல்லாம் உமதே, போராட்டம், தோல்வி, தாய்மை, புதிய இல்லம், மகனே கேள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 18 கவிதைகள் இவை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3167).

11644

நெஞ்சினிலே (கவிதைகள்). ஏ.எம்.கஸ்புள்ளா. கிண்ணியா 2: செய்ப் பதிப்பகம், கட்டையாறு வீதி, சின்னக்கிண்ணியா 02, 1வது பதிப்பு, ஏப்ரல் 2015. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

88 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-4840-00-3.

கட்டையாற்றை வசிப்பிடமாகவும் றஹுமானியா நகரை பிறப்பிடமாகவும் கொண்டுள்ள அப்துல் மனாபு கஸ்புள்ளா, இளமைக் காலத்திலேயே "அண்ணல்" என்னும் இலக்கிய ஏட்டின் ஆசிரியராக இருந்து இலக்கியப் பங்களிப்புச் செய்தவர். இவர் எழுதி ஈழத்து ஊடகங்களில் அவ்வப்போது வெளிவந்த கவிதைகளுள் தேர்ந்த 62 கவிதைகளை இத்தொகுப்பில் தந்துள்ளார். கவிதைகள் இலகு தமிழில் அழகு தருகின்றன. அவற்றில் இருண்மையோ இறுக்கமோ காணாது காதல், கடமை, சமயம், சமூகம் என்று ஊடுருவிச் செல்கின்றன. கவிதைகள் மரபிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்கவிதையிலும் காணப்பட்டாலும் சிறுவர் பாடலாகவும் கிராமியப் பாடலாகவும் கலவைசெய்த நூலாகப் பரிணமிக்கின்றது.

11645

பச்சை இரத்தம் நீந்தும் காடு: கவிதைகள். முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல். மருதமுனை 3: எம்.எம்.மிஹ்ழார், ஆயிஷா வெளியீட்டகம், 520/1, மதூர் மௌலானா வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2017. (மருதமுனை: அப்னா பிறின்டர்ஸ்).

xx, 105 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-42405-3-7.

முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல் தனது ஆரம்பக் கல்வியை பெரியநீலாவணை புலவர்மணி சரிபுத்தீன் வித்தியாலயத்தில் கற்று உயர்தரத்தை மருதமுனை அல் மனார் மகா வித்தியாலயத்தில் பூர்த்திசெய்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வியாபார நிர்வாகமாணிப்பட்டம் பெற்றவர். இவரது கவிதைகள், நினைவேக்கம் (பால்யகால நினைவுகள்), உலக அரசியல் (நியாயங்களைத் தேடி, போர்க்காடு), குடும்ப பாசம் (அவள் வளர்ந்துவிட்டாள்), சமூக விமர்சனம் (மெல்லச் சாகும் உயிர்கள், முறைப்பாடு, எமது மண், பரிணாமம், பொன்னாடை, முகப்புத்தகம், யாசகன்) என்ற சில அம்சங்களைத் தொட்டுச் சென்றாலும் அவருடைய கவிதை வெளியில் நிழலாகப் பின்தொடர்வது காதலின் தகிப்புத்தன்மையாகும். இதுவே இவரை அஜந்தா சித்திரங்களில் ஒருத்தியைப் பொருத்திப் பார்க்கவைக்கின்றது. ஒருத்தியின் புருவங்களில் மழையைக் காண்கின்றது. பெண்கள் தேவ கன்னிகளாகத் தெரிகின்றார்கள். நௌபல் எழுதிய நான்காவது கவிதைத் தொகுப்பு இது.

11646

பயணிகள் கவனத்திற்கு. நெடுந்தீவு முகிலன். தெகிவளை: காயத்ரி பப்ளிக்கேஷன், த.பெ.எண் 64, தெகிவளை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2011. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை).

104 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-955-8741-48-1.

ஏழு கவிதைத் தொகுதிகளை வெளியிட்ட நெடுந்தீவு முகிலனின் எட்டாவது தொகுதியாக இந்நூல் வெளிவந்துள்ளது. பயணங்களின்போது தான் அனுபவித்தவற்றை சுவைகுன்றாது புதுக் கவிதைகளில் வடித்திருக்கிறார். தான் மேற்கொண்ட பயணத்தின்போது ஏற்படும் பிரச்சினைகள் தான் அனுபவித்த சிற்சில சந்தோஷங்கள், பொதுவாக பயணிகளின் கவனயீனங்கள், சமூக அக்கறையின்மை என்பன இவரது கவிதைகளின் களங்களாகின்றன. கவிதைகளுக்கு கட்புலக் காட்சிகளாக உள்ளூர் பஸ்வண்டிப் பயணப் புகைப்படங்களையே பயன்படுத்தியிருப்பது கவிதைகளின் உயிரோட்டத்தைக் கூட்டுவதாயுள்ளது.

11647

பாலைவன உதிரிகள். வே.குமாரவேல். கொழும்பு 13: வே.குமாரவேல், 75/2, கல்பொத்த வீதி, 1வது பதிப்பு, ஜூலை 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(8), 76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19 x14 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் கவிஞர் குமாரவேல் எழுதிய 76 கவிதைகள் வேர்கள், என் இதயத்தில் இவர்கள், இனிமை, பெண், பாலைவன உதிரிகள், அரசியலை நோக்கினேன், வாழ்க்கையின் வழியில் ஆகிய ஏழு பிரிவுகளில் தொகுக்கப்பட்டுள்ளன. வேர்கள் என்ற முதலாவது பிரிவில் தமிழ், தெய்வம், தாய், தந்தை, காதல் உணர்வு, நட்பு, குடும்பம், குழந்தை, தாயும் தாரமும், சிவம் சக்தி ஆகிய 10 கவிதைகள் உள்ளன. என் இதயத்தில் இவர்கள் என்ற பிரிவில் கொடுத்துச் சிவந்தவன், திருவள்ளுவரும் குறளும், சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி, கண்ணதாசன் ஆகிய 5 கவிதைகள் உள்ளன. இனிமை என்ற பிரிவில் கம்பன் கண்டது கற்பனையோ, கவி கொடுக்கும் காதலி, ஈழமலைநாடு, கானக இன்பம், பாலைவனப் பசுந்தரை, இசைக் குயில், இசை, இனிமையெனும் மொழி ஆகிய 8 கவிதைகள் உள்ளன. பெண் என்ற பிரிவில் புதுமைப்பெண், சீதனம், கற்பு, ஆகிய 3 கவிதைகள் உள்ளன. பாலைவன உதிரிகள் என்ற ஐந்தாவது பிரிவில் சூரியனே, கடல் கடந்த வாழ்க்கை, சீதனம் தேடி, நாட்டுக்கு நாடு, அவள் வளர்த்த பூனை, அவள் செய்த முடிவு, அவள் முகம் பார்ப்பேனோ, தேவை சில தமிழ் வார்த்தைகள் ஆகிய 8 கவிதைகள் உள்ளன. அரசியலை நோக்கினேன் என்ற பிரிவில் அரசியல், வழி அமைப்போர், அரசியல் தகுதி ஆகிய 3 கவிதைகள் உள்ளன. வாழ்க்கையின் வழியில் என்ற ஏழாவது (இறுதி) பிரிவில் சொல், பாடங்கள், வறுமை, எது தியாகம், கரு சிதைவு, நானும் நாமும், வேர், கண்தானம், தனிமை, தர்மம், அனுபவம், மது, விஞ்ஞானம், சக்தி உனக்குத் தேவை என இன்னோரன்ன 39 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18209).

11648

பிரபஞ்ச சுருதி. குப்பிழான் ஐ.சண்முகன். பருத்தித்துறை: சித்தம் அழகியார், ஞானாலயம், 117, விநாயக முதலியார் வீதி, 1வது பதிப்பு, ஐப்பசி 2014. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டேர்ஸ், இல. 681, காங்கேசன்துறை வீதி).

x, 62 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-7650-00-5.

ஐ. சண்முகலிங்கம் (01.08.1946) குப்பிழான் ஐ. சண்முகம் என்ற பெயரில் எழுதும் ஈழத்து எழுத்தாளர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைப்பட்டம் பெற்ற இவர் ஓர் ஆசிரியர். சிறுகதையாசிரியராக கவனம் பெற்ற சண்முகன் இசை, சினிமா, ஓவியம் போன்றவற்றிலும் ஈடுபாடுடையவர். அலை சஞ்சிகையின் ஆரம்பகால ஆசிரியர் குழுவில் இடம்பெற்றவர். இந்நூல் இவர் தன் இளமைக்காலத்தில் எழுதிய அறுபதுக்கும் அதிகமான கவிதைகளில் தேர்ந்த 30 கவிதைகளை உள்ளடக்கியது. கலைக்கோதை, கண்ணன், கம்பன் படைத்த இலக்கியம், கவிதை பிறந்த கதை, துயில், பாரதியார், பூம்புகாரில் ஒரு நாள், செந்தியரை வாழ்த்துகின்றோம், தாதியாம் தெய்வமகள், இனிது இனிது இளமை இனிது, நேயக்கன்னி, நெஞ்சிலே தைத்த நெருஞ்சி, ஒரு சோகக் கவிதை, மாலை, காவியேன் கட்டவேண்டும், அழகு வாய்ந்த யாழ்ப்பாணம், பொங்கிடும் மங்களம், வள்ளுவம், வேலை தேடும் வேலை, இன்றைய ஈழத்தில் பாரதி இருந்தால், பேராதனை முருகன் ஆற்றுப்படை, நீண்ட மூச்சு, காதல் தத்துவம், வாழ்க்கை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுவில் ஓர் உலகம், கூத்து, பிரபஞ்ச சுருதி, வீர வியட்நாமிற்கு, நெல்லு விளைந்ததடி, சிறிசுகளின் பிரகடனம் ஆகிய தலைப்புகளில் இந்த 30 கவிதைகளும் இடம்பெறுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60809).

11649

பிரபாகரன். காசி. ஆனந்தன். தஞ்சாவூர் 613 006: உலகத் தமிழர் பேரமைப்பு அறக்கட்டளை, முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம், விளார்சாலை, 1வது பதிப்பு, நவம்பர் 2014. (சென்னை: அச்சக விபரம் தரப்படவில்லை).

32 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 18x12 சமீ.

இந்நூல் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் மணிவிழாவையொட்டி அவரது போர்வாழ்வினை அறுபது வெண்பாக்கள் வடிவில் இந்நூலில் தந்திருக்கின்றார். முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில், உலகத் தமிழர் பேரமைப்பு அறக்கட்டளையினரால் இந்நூல் வெளியிடப்பட்டது.

11650

பிரபாகரன் நெருப்பின் பிறப்பு. காசி. ஆனந்தன். கேளம்பாக்கம் 603103: காசி ஆனந்தன் குடில், 4/202, ஈசுவரன் கோவில் தெரு, தையூர், 1வது பதிப்பு, ஜனவரி 2015. (சென்னை 600005: பாரதி அச்சகம்).

58 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 14x21.5 சமீ.

எரிமலைப் பிறப்பாக தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனை உருவகிக்கும் கவிஞர் காசி.ஆனந்தன், அவரை, தமிழீழ விடுதலை தேடிய தலைவன், சிங்கள இனவெறியர் கண்டஞ்சும் சினவேங்கை, அறம் வாழப் பொங்கிய மறம், போராளிகளுக்கு வழகாட்டும் தலைவன்-தலைவர்களுக்கு வழிகாட்டும் போராளி, முப்படை கண்ட முதல் தமிழன் எனவிழித்து, அவரது போர்வாழ்வினை நூறு வெண்பாக்கள் வடிவில் இந்நூலில் தந்திருக்கின்றார்.

11651

பூர்வீகம்: லாவன்னா லத்தீப் கவிதைகள். லாவன்னா லத்தீப். அக்கரைப்பற்று: அதாஉல்லா பவுண்டேசன், 1வது பதிப்பு, 2016. (அக்கரைப்பற்று: நியு செலெக்ஷன் அச்சகம்).

xix, 103 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-43538-0-0.

குரல் வளம் மிக்க பாடகராகவும் இசைக்கலைஞராகவும் வாய்மொழிக் கவிஞராகவும் அக்கரைப்பற்றில் அறியப்பட்டிருப்பவர் கவிஞர் லாவன்னா லத்தீப். அரை நூற்றாண்டுக்கு மேலான கலை இலக்கிய அனுபவம் இவருடையது. பத்திரிகைகளுக்கு அதிகம் எழுதாமல் நூல் வெளியிடாமல் இருந்த காரணத்தாலோ என்னவோ இலக்கிய உலகில் பரவலாக இவர் பேசப்படவில்லை. முன்னாள் கௌரவ அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா அவர்களை தலைவராகக் கொண்டியங்குகின்ற அதாஉல்லா பவுண்டேசன் இந்நூலை 14-09-2016ல் அக்கரைப்பற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டு வைத்திருந்தது. இத்தொகுப்பு தன்னுணர்வுக் கவிதைகளையும் ஆன்மீக கவிதைகளையும் உள்ளடக்கியிருக்கின்றன. சில்லிக்கொடி ஆற்றோரம் கவிதைப்பூ ஜில்லென்று பூத்ததையும், தாலி போட்ட ஆறு தனக்கு வேலிபோடாது கவிதை தந்ததையும் பொத்தானை வயற்காடு சத்தான கவிதை ஈந்ததையும் சிறுநீத்தைக் காணிகளில் நேர்த்தியாய் கவிதை முத்துக்கள் விளைந்ததையும் கோளாவில் தெரு வீதி கோணாமல் கவிதை தந்ததையும் மண்வாசனைக் கவிதைகளாக மகிழ்வோடு கூறுகின்றார்.

11652

பேசாதவை பேசியவை: மரபுக்கவிதைகள். செல்லத்தம்பி சிறீக்கந்தராசா. லண்டன்: லண்டன் தமிழ் இசை மன்றம், 66, Westrow Gardens, Ilford, Essex, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xvi, 100 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

கவிஞர் சிறீக்கந்தராசா இந்த நூலில் இருபத்துநான்கு விலங்குகளைப் பேசவைத்திருக்கிறார். லண்டனில் வெளிவந்த வடலி மாத இதழில் 24 இதழ்களில் மாதத்திற்கொன்றாக, சங்க இலக்கியங்களில் சிறப்பித்தும் உவமையாகவும் கூறப்பட்டிருந்த பறவகள், பிராணிகள், மிருகங்கள் போன்றவற்றை இனங்காட்டிப் பேசவைத்துத் தமிழ் இலக்கிய உணர்வினை வாசகரிடையே ஏற்படுத்தும் மரபுக் கவிதைகளை எழுதிவந்திருந்தார். ஆனை சொன்னது, பூனை சொன்னது, மயில் சொன்னது என்றவாறாகத் தலைப்பிட்டு இக்கவிதைகள் வடலி இதழ்களில் இடம்பெற்றிருந்தன. அன்னம், ஆந்தை, ஆமை, ஆனை, எலி, எறும்பு, காகம், குயில், கொக்கு, தேனீ, நத்தை, நண்டு, நரி, நாய், பன்றி, பாம்பு, புலி, பூனை, பேய், மயில், மான், முதலை, முயல், வவ்வால் ஆகியவற்றின் பார்வையில் தத்தமது சங்க இலக்கியத்து உவமைகளையும், விபரிப்புகளையும் லண்டன்வாழ் தமிழருக்கு இலக்கிய நயத்துடன் அக்கவிதைகள் வழங்கியிருந்தன. அவை அனைத்தும் தொகுக்கப்பெற்று இன்று நூலுருவில் விரிந்த வாசகர் பரப்பை நாடிச்சென்றுள்ளது.

11653

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் காதலியாற்றுப்படை. க.கணபதிப்பிள்ளை. கரவெட்டி: அமரர் திரு.முருகேசு வேலுப்பிள்ளை அவர்களின் நினைவுமலர், பூம்புகார், கரவெட்டி கிழக்கு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

48 பக்கம், புகைப்படம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

பழைய தமிழ்ச்செய்யுளாலே புதுமையான பொருளைப்பாடுவதில் கைதேர்ந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை, ஆற்றுப்படை என்னும் பழைய இலக்கிய வடிவத்தைக் கையாண்டு யாழ்ப்பாண மண்மணம் கமழும் இலக்கியமாக 1940இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப் பதிப்பித்து வெளியிட்டிருந்தார். அந்நூலின் மீள்பதிப்பாக அமரர் திரு. முருகேசு வேலுப்பிள்ளை அவர்களின் நினைவுமலராக 16.10.2005இல் வெளியிடப்படுகின்றது. இந்நூல் யாழ்ப்பாணத்து ஊர்களின் புவியியலமைப்பு, மக்களின் வாழ்வியல், குறிப்பாக வடமராட்சிப் பிரதேச சமூக பண்பாட்டுக்கூறுகள் மிகத் தெளிவாக இச்செய்யுள் நூலில் கலைநுணுக்கத்தோடு வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளன. பருத்தித்துறையிலிருக்கும் காதலனுடைய ஊருக்கு யாழ்ப்பாணத்துக் காதலியை ஆற்றுப்படுத்துவதாகக் காதலியாற்றுப்படை அமைகின்றது. இவ்விரு ஊர்களுக்கிடையே உள்ள சிற்றூர்கள் சிறப்பித்துப் பாடப்படுவதுடன், இவ்வூர்களினூடாகச் செல்லும் காதலி பல நிகழ்ச்சிகளையும் காட்சிகளையும் கண்டு செல்வதாகக் கற்பனைசெய்து, அந்நிகழ்வுகளும் காட்சிகளும் இக்கவிதைநூலில் விரித்துரைக்கப்படுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36910).

11654

பொன்மலர்கள்.ஆ.பொன்னையா. அல்வாய்: ஆ.பொன்னையா, பாரதி, அல்வாய் மேற்கு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1976. (யாழ்ப்பாணம்: கவின் அச்சகம், 122, நாவலர் வீதி).

(8), 92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12 சமீ.

வடமராட்சிக் கவிஞர் ஆ.பொன்னையா அவர்கள் இயற்றிய கவிதைகளின் தொகுப்பு இது. ஆனந்தத் தேன், தமிழ்த் தேன், இயற்கைத் தேன், நன்மணித் தேன், கற்பனைத் தேன் ஆகிய பிரிவுகளில் இவை வகுத்துத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2472).

11655

பொன்விழாப் போற்றிசை 1942-1992. செல்லத்துரை குணரத்தினம். கொழும்பு: கொழும்புத் தமிழ்ச் சங்கம், இல. 7, 57ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 1996. (கொழும்பு 6: கார்த்திகேயன் பிறைவேற் லிமிட்டெட், 501/2, காலி வீதி, வெள்ளவத்தை).

(96) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

கொழும்புத் தமிழ்ச்சங்கம் தனது பொன்விழாவை 1992இல் கண்டதையொட்டி ஆசிரியரால் இயற்றப்பட்ட போற்றிசைக் கவிதைகள். இந்நூலின் மூலம் கொழும்புத் தமிழ்ச்சங்க வளர்ச்சிக்கு உதவிய அறிஞர்களையும் தமக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்களையும் தமிழுலகிற்கு அறிமுகம் செய்துமகிழ்கிறார். இலக்கியச் செம்மல் செ.குணரத்தினம் இலங்கை அரசின் முன்னாள் பிரதேச அபிவிருத்தி அமைச்சுச் செயலாளராகத் தன் அரசபணியில் இருந்து ஓய்வுபெற்றவர். 1990 முதல் பொன்விழாக் காலத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் சேவையாற்றியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22397).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11656

பொன்விளை பூமி: தேசிய ஒற்றுமைக் கவிதைகள். எஸ்.எச்.நிஃமத். கொழும்பு 10: இரத்தினம் வெளியீட்டகம், 1வது பதிப்பு, மே 1994. (கொழும்பு 10: இரத்தினம் அச்சகம், 60ஏ, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை).

xii, 68 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 17 x12 சமீ.

மன்னார், எருக்கலம்பிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவர் எஸ்.எச்.நிஃமத். மன்னாரில் 90களில் இடம்பெயர்ந்த 75000 வடபகுதி முஸ்லீம்களில் இவரும் ஒருவர். தனது இதயக் குமுறலாகவும், வலிநிவாரணியாகவும் இக்கவிதைத் தொகுதியை வெளியிட்டிருக்கிறார். இலங்கையின் தேசிய ஒற்றுமை பற்றிய ஆழமான புரிந்துணர்வு கொண்ட சில கவிதைகளில் அழகியல் உணர்வும், ஆர்ப்பாட்டமற்ற அங்கதச் சுவையும் நெக்குருகவைக்கும் கவிவரிகளும் கவிதைகளை மனதில் பதிவுசெய்கின்றன. மன்னார் பிரதேசத்து மக்களின் மனங்களில் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கும் உணர்வுகள் மேலும் சில கவிதைகளில் விம்மி வெடித்திருக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14505).

11657

போர்க்காலமும் ஊர்க்கோலமும்: கவிதைத் தொகுப்பு. புதுக்குடியிருப்பு ஜெயம் ஜெகன். புதுக்குடியிருப்பு: புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், 1வது பதிப்பு, ஜுன் 2015. (யாழ்ப்பாணம்: நோபிள் பிறின்ரேர்ஸ், இல. 817, ஆஸ்பத்திரி வீதி).

xvi, 80 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-7897-00-4.

இடப்பெயர்வின் காட்சிகளை வெளிக்காட்டும் அட்டைப் படத்துடன், செங்கை ஆழியானின் அணிந்துரையுடன், ஏன் சொல்லவில்லை, இயேசு பாலகா எங்கள் ஊரில் ஒருமுறை பிறப்பாயா?, போர்க்காலமும் ஊர்க்கோலமும், கண்டபடி குண்டடி, இனியும் இடர்பட இதயமில்லையே, பிஞ்சோலையும் செஞ்சோலையும், போன்ற சில நீண்ட கவிதைகளுடன் பல குறுங்கவிதைகளையும் கொண்டதாக இலக்கிய வரம்புகளுக்குள் கட்டுப்படாமல், தம் உணர்வுகளுக்கு முக்கியத்துவ மளித்து, எதுகை மோனையுடன் இயற்றப்பெற்ற கவிதைகளைக் கொண்டதாக இத்தொகுப்பு அமைந்துள்ளது. வன்னிமக்களின் போர்க்கால அனுபவங்களை இக்கவிதைகள் இனம்காட்டுகின்றன. ஒவ்வொரு கவிதையும் ஒரு சம்பவத்தின் பதிவாகின்றது.

11658

மண்ணிற் புதைந்த வரலாறு (கவிதைகள்). முல்லை வீரக்குட்டி. கிழக்கு மாகாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 1வது பதிப்பு, 2014. (அக்கரைப்பற்று: சிட்டி பொயின்ட் அச்சகம்).

100 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-4628-06-9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயில் பிரதேசத்தில், தம்பிலுவில் கிராமத்தில் வசிக்கும் கலாபூஷணம் கவிஞர் முல்லை வீரக்குட்டி கவிதை, சிறுகதை, விமர்சனம் ஆகிய துறைகளில் ஈடுபாட்டுடன் இயங்கி வருபவர். 32 கவிதைகள் அடங்கிய தொகுதியாக இவரது இந்த முதலாவது நூல் வெளிவந்துள்ளது. கவிதைகளில் பல ஒற்றுமையைச் சீர்செய்யத் தூண்டுவனவாகவும் மனிதநேயம் கொண்டவையாகவும், இனவாதத்தை இடித்துரைப்பதாகவும், உள்ளத்தில் தூய்மை ஒளியை ஏற்றுவனவாகவும் அமைந்துள்ளன. யுத்தகாலப் பகுதியில் நடந்தது எவையென்ற உண்மை எமக்குத் தெரிந்த போதிலும் உயிருக்குப் பயந்தே அதை நாம் மறைக்கிறோம் என்பதை "நாங்கள் /உயிர்வாழ்தல்/எனும் ஆசையொன்றால்/உண்மை என்ற வாந்தியை/ மீண்டும்/உள்ளே தள்ளினோம்." என்ற வரிகளில் வடிக்கும் இக்கவிஞர், போர்க்காலச் சூழலால் உருவத்திலும் மாறிப்போன வன்னி மண்ணை வன்னிமகள் என்ற கவிதையில் வலிமிகுந்த வரிகளில் விபரிக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 57577).

11659

மரண வலிகள். அலெக்ஸ் பரந்தாமன். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 2014. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

vi, 70 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-4676-19-0.

இறுதிப் போரின்போது, யுத்தச் சூழலில் வாழ்ந்திருந்த கவிஞர் அலெக்ஸ் பரந்தாமன், போரின் வலிகளை தனக்கேயுரிய பாணியில் கவிதை வரிகளினூடாக வாசகரிடம் கொண்டு சேர்க்கிறார். அவரது கவிதைகளில் வெளிப்படுத்தப்படும் காட்சிகள் அனைத்துமே உண்மையான சம்பவங்கள். இறுதி யுத்தத்தின்போது தமிழன் அடைந்த துயரங்களின் ஒரு பகுதியை வெளி உலகத்திற்கு பறைசாற்றி நியாயம் கேட்டு நிற்கின்றது. ஜீவநதியின் வெளியீட்டுத் தொடரில் நாற்பதாவது நூலாக இது வெளிவந்துள்ளது. "எம்மைவிட்டுக் கடந்துபோன போரின் உச்சத்துள் நிகழ்ந்த அவல தரிசிப்பில் எனக்குள் எழுந்த மனக்கொதிப்பின் வெளிப்பாடுகளே இத்தொகுப்புக்குள் குந்தியிருக்கும் கவிதைகளாகும்" என்று தனதுரையில் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 249648).

11660

மரணத்தில்மலர்ந்த மலர்கள். மனோஷா (இயற்பெயர்: எஸ்.சசிரேகா). யாழ்ப்பாணம்: மறுயுகம் வெளியீடு, இல. 42, சேர் பொன் இராமநாதன் வீதி, 1வது பதிப்பு, ஜூலை 2015. (யாழ்ப்பாணம்: ஜெயஸ்ரீ பிரிண்டர்ஸ், 34 பிரவுண் வீதி).

(2), 38 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 20x11.5 சமீ.

ஆயுதப் போருக்குப் பின்னரும் முன்னருமான, இன்னொரு வகையில் சொல்வதானால் ஆயுதப்போராட்டத்தின் தோல்விக்கு முன்னரும் பின்னருமான ஈழத்தமிழ்ச் சனங்களின் அடிமைவாழ்வின் ஏக்கங்களையும் வெறுமைகளையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுகளையும், அடிமைப்பட்ட சனங்களின் இதயத்தில் எழும் மென்மையான காதல் உணர்வுகளையும் இக்கவிதை வரிகள் அழகாகப் பதிவுசெய்கின்றன. இயல்பாக மனதுள் பிரவகித்துவரும் மனித உணர்வுகளை இக்கவிஞர் இறுக்கமான வரிகளில் சொல்லிச் செல்கின்றார். கவிதை எழுத வேண்டும் என்பதற்காக இவற்றைத் தான் எழுதவில்லை என்று கூறும் இவ்விளம் கவிஞர், தனது வாழ்வியல் சூழலில் தன்னைப் பாதித்த விடயங்களால் மனதில் பதிந்துவிட்ட கரு(த்து)க்களை அவ்வப்போது பத்திரிகைகளில் பிரசவித்துள்ளார். அநீதிக்கு மசிந்துகொடுக்காத, கொடுமைகளைக் கண்டு குறுகிப் போகாத இதயம் கொண்ட எளிமையான கவிஞர் ஒருவரை இத்தொகுப்பு நமக்கு அடையாளம் காட்டியுள்ளது. 1984 முதல் 2015 வரை வெளியான அத்தகைய படைப்புகளின் தொகுப்பே இந்நூலாகும்.

11661

மரணம் வரும் வரைக்கும். ஒலுவில் அமுதன். (இயற்பெயர்: A.அலாவுதீன்). அக்கரைப்பற்று 5: A.அலாவுதீன், 67, புதுப்பள்ளி வீதி, 1வது பதிப்பு, 1999. (அக்கரைப்பற்று: செலெக்ஷன் ஒப்செட் பிரின்டர்ஸ்).

(8), 72 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18.5x12 சமீ.

ஆதம்லெவ்வை அலாவுதீன் (1956.02.27) அம்பாறை, பொத்துவிலைச் சேர்ந்த எழுத்தாளர். இவர் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை, கல்முனை சாஹிராக் கல்லூரி, ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி கற்றார். இவர் ஒலுவில் அமுதன் என்னும் புனைபெயரில் கிட்டத்தட்ட 30 சிறுகதைகளையும், 120 கவிதைகளையும், 40 கட்டுரைகளையும், 4 நாவல்களையும், 6 மெல்லிசைப் பாடல்களையும், 4 வானொலி நாடகங்களையும் எழுதியுள்ளார். இவரது முதலாவது கவிதை 1976 பெப்ரவரியில் "நடிப்பு" எனும் தலைப்பில் தினகரனில் பிரசுரமானது. மனக்கோலம் என்ற தொகுப்பைத் தொடர்ந்து வெளிவரும் இரண்டாவது கவிதைத் தொகுப்பு "மரணம் வரும் வரைக்கும்" என்பதாகும். கலையாத மேகங்கள் என்ற சிறுகதைத் தொகுதியையும், நாம் ஒன்று நினைக்க, கரையைத் தொடாத அலைகள் போன்ற நாவல்களையும், மனங்களிலே நிறங்கள், கூடில்லாத குருவிகள் ஆகிய சிறுகதைகளையும் இவர் எழுதியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21071).

11662

மரணமுறும் கனவுகள். யாழினி ஜோதிலிங்கம். தமிழ்நாடு: அணங்கு பெண்ணிய பதிப்பகம், 3, முருகன் கோவில் தெரு, கணுவாப்பேட்டை, வில்லியனூர், புதுச்சேரி 605110, 1வது பதிப்பு, டிசம்பர் 2015. (சிவகாசி: மாறன் இம்பெக்ஸ்).

(9), 10-108 பக்கம், விலை: இந்திய ரூபா 90., அளவு: 21.5x14 சமீ.

நிவேதா என்னும் புனைபெயருடன் தனது பதின்மங்களில் எழுதத் தொடங்கிய யாழினியின் முதலாவது தொகுப்பு இது. யாழ்ப்பாணத்தில் பிறந்து, கொழும்பில் வளர்ந்து, தற்போது ரொறன்டோவை வதிவிடமாகக் கொண்டவர். இத்தொகுப்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான கவிதைகள் 2006-2008 காலகட்டத்தில் எழுதப்பட்டவை. "ரேகுப்தி" என்னும் வலைப் பதிவில் இவரது ஆரம்பகால படைப்புக்கள் வெளியாகின. இவரது எழுத்து அரசியல்-பாலின வன்முறை, உடல் மற்றும் மொழிசார் அரசியலை அடிப்படையாகக் கொண்டவை. யாழினியின் கவிதை மொழி நெருக்குறும் இனத்துயரின் வலிகளுக்கும் மண்ணின் தீராத நினைவுகளுக்கும் புலம்பெயர்நிலத்திலும் உருவம்தரும் வலிமைமிக்கது. துயர்களும் பிரிவுகளும்கூட முடிவுக்கானவை அல்ல என்பதைச் சொல்லிச் செல்லும் தொன்மையும் முதிர்ச்சியும் படிந்த குரலூடாக வரலாற்றின் முகத்தில் கீறும் முட்களாகச் சில கவிதைகள் அமைகின்றன. இன, பாலினக் காயங்களைக் கடக்கவும் மீறவும் வாழவும் முயலும் கவிதைகள் இவை.

11663

மரணித்த மனிதம்: கவிதைத் தொகுப்பு. முல்லைப் பார்த்தா (இயற்பெயர்: கனகரட்ணம் பார்ததீபன். கனடா: படைப்பாளிகள் உலகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2016. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172, மில் வீதி).

xvi, 64 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 220., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-43216-0-1.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையில் மூன்றாம் வருட மாணவனாகப் பயிலும் முல்லைப் பார்த்தாவின் முதலாவது கவிதைத் தொகுப்பு. இலகுநடையில் எளிமையான புதுக்கவிதை வடிவில் எழுதப்பெற்ற 63 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. செங்குயில் சிறகொடிந்தாள் என்ற தலைப்பில் புங்குடுதீவில் மே 13, 2015இல் கூட்டுப் பாலியல் வன்கொடுமையால் கொல்லப்பட்ட வித்தியா என்ற சிறுமி பற்றிய முதலாவது கவிதையில் தொடங்கி, சுடுதிப்போர், மடிதந்த தாய், மலர்வாடைக் கன்னி, மனிதவுரிமை, கரிஷ்ணவியின் கதறல், அன்றொருநாள் முள்ளியில், கந்தகத் துகள்கள், மாண்ட அவ்வுயிர்கள், வெந்த கடலை, உடும்புண்டால், அரசடிப் பிள்ளையார், தலைசாய்க்கிறேன் அவ்வுயிர்களுக்கே, கந்தகக் காற்று, செஞ்சோலைச் சிறார்கள், துயரம், ஏமாற்றம், இசைத்த குயில்கள், கொடுஞ்சீனன் அரசு, சட்டமென்னடா சரித்திரமென்னடா, மகளிர் தினம், எரியுண்ட என் அப்பன் சுடுசாம்பல் என பல்வேறு தலைப்புகளில் இவ்வுணர்வுக் கவிதைகள் விரிகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61514).

11664

மருதன் அஞ்சலோட்டம். க.சோமசுந்தரப் புலவர். கொழும்பு: கொழும்புத்துறையூர் வே.க.ப.நாதன், பொய்கையகம், மக்கலம் வீதி, கோட்டை, 1வது பதிப்பு, 1953. (மதுரை: எக்செல்ஸியர் பவர் பிரஸ்).

(11), 80 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18x12.5 சமீ.

தினகரன் ஆசிரியர் வே.க.ப.நாதன் எழுதிய சோமசுந்தரப் புலவர் பற்றிய வரலாறு முதல் 44 பக்கங்களிலும் இடம்பெற்றுள்ளது. பிறப்பு, கல்விப் பயிற்சி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுளியற்றல், ஆசிரியராதல், குருவருட்பேறு, மணவினையும் பெரியோர் நட்பும், தெய்வ வழிபாடும் நூல்களும், புலவர்ப் பட்டமும் உயர்நிலைக் கல்வியும், பொற்கிழி பெறுதல் ஆகிய ஒன்பது அத்தியாயங்களில் புலவரின் வாழ்க்கை வரலாறு எழுதப்பட்டுள்ளது. 45ஆம் பக்கம் முதல் 80ம் பக்கம் வரை சோமசுந்தரப் புலவர் எழுதிய மருதன் அஞ்சலோட்டம் என்ற செய்யுள் நடையிலமைந்த உரை இடம்பெற்றுள்ளது. இன்றுபோல அந்நாட்களிலும் போட்டிக்காகவும், பட்டத்திற்காகவும் மருதன் (மரதன்) ஓட்டப் போட்டியாளர்கள் போல ஓடியோடிக் கவிதை புனையும் கவிஞர்களையும் பாவலர்களையும் எள்ளிநகையாடும் கவிஞர், பட்டமும் அங்கீகாரமும் நல்ல புலவனை/படைப்பாளியை நாடி வரவேண்டுமே யன்றி தன்நம்பிக்கைகொண்ட ஒரு புலவன் பட்டங்களுக்கும் பரிசுகளுக்கும் பின்னால் ஓடக்கூடாது என்று வலியுறுத்துகின்றார். இந்நூலின் மேலட்டையில் "மருதன் அஞ்சலோட்டமும் புலவர் வரலாறும்" என்று அச்சிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2397).

11665

மல்லிகைப் பந்தல்: கவிதை வசனம். க.தா.செல்வராஜகோபால் (புனைபெயர்: ஈழத்துப் பூராடனார்). எட்வேட் இதயச் சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா L5C 2T7: ஜீவா பதிப்பகம், 215 ஸ்ரெயின்ரன் டிரைவ், மிஸிஸாகா, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, ஜூலை 1988. (கனடா L5C 2T7: ரிப்ளெக்ஸ் அச்சகம், 215 ஸ்ரெயின்ரன் டிரைவ், மிஸிஸாகா, ஒன்ராரியோ).

(8), 160 பக்கம், விலை: கனேடிய டொலர் 10., அளவு: 21x14 சமீ.

இயேசு புராணம், தமிழழகி, ஈழத்துப் போர்ப்பரணி எனப் பல்வேறு நூல்களையும் வழங்கிய ஈழத்துப் பூராடனார் எழுதிய கவிதைகளின் தொகுப்பு இது. மல்லிகைப் பந்தல், இரவின் விழிப்பு, விடியாத பகல்கள், பரதத்தின் பாவை, கை கண்டேன் கையே கண்டேன், ஏனிந்தப் பதட்டம், கண்டுகொண்டேன், அத்தான் என்ற முத்தான சொல், எனக்கொரு தமிழச்சி, காதல் ஒருவனைக் கைப்பிடித்தே, ஒருமனப் பட்டாற் திருமணம், அம்மன் சடங்கு, ஒப்பந்த உறுதிப்பாடு, குடி புகுந்தோம், மானானாள், மீனானாள், வானம்பாடியானாள், தேனானாள், தென்றலானாள், வானானாள், வாழ்கின்றேன் ஆகிய 21 தலைப்புகளில் இந் நூல் கவிதைகளை உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13266).

11666

மழுங்கடிக்கப்பட்ட அடையாளங்களும். மனோகரி (இயற்பெயர்: செல்வமனோகரி சிவானந்தன்). கொழும்பு: Mans Inc. Sri Lanka, 1வது பதிப்பு, 2013. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன்).

xiv, 110 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-1482-02-2.

கவிஞர்கள் சோ.பத்மநாதன், அனார் ஆகியோரின் உரைகளுடன் கூடிய மனோகரியின் கவிதைகளின் தேர்ந்த தொகுப்பு இது. இடைவெளிகள், எதார்த்தம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடகள், முகம், கடல், பிணக்கு, பெண்ணியம், இனியும் ஓடு, பொசுக்கு, அப்பட்டம், யாத்திரை, பிளவு, சிறகுகள், பிரிவு, ஜலப்பிரளயம், சகி, பழங்கணக்கு, இரணம், வியர்த்தம், பிரவாகம், வேற்றுக்கூடுகள், ஸ்நேகம், சா, மனவேர்கள், சிதறடித்தல்கள், பொய், புறக்கணிப்பு, மெருகு, தேய்வு, ஒரு நதியின் பயணம், வேலிக்குள் பயிர், மரண கீதம், கடைசித் தொலைவு, காற்று, பாழ், சந்தோஷ வேதனை, ஒரு மரணத்தை எதிர்பார்த்து, இரண்டாயிரத்துச் சொச்சங்களில், ஏதிலிகள், காவு கொடுத்தவர்கள், நதி, மலை, தீர்வுகளல்ல, அலைகளினூடு அலைதல்களல்ல, மௌனச் சிதை, இறுதிப் பரிசு, தெளிந்த நதி, ஒரு மனிதம் தேடி, இன்னுமொரு கங்கை, காட்டு மரம், நிலமகள், வதம், போராட்டம், கேவலரானோம், கடல் வருகுது, கூடு-1, கூடு-2, நிகும்பலை யாகம், ஒப்பந்தங்கள், ஆதாம் காலத்திற்கே, மாற்றீடுகள், மயானப் பார்வை, கானங்கள் குயில்களுக்குத் தான் ஆகிய 63 தேர்ந்த கவிதைகளும் ஒன்று போலவே இருக்கும் வெவ்வேறு நதிகள் என்ற தலைப்பில் அனார் எழுதிய உரையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234912).

11667

மழைக்காலக் குறிப்புகள். வேலணையூர் தாஸ் (இயற்பெயர்: கந்தையா சோதிதாசன்). யாழ்ப்பாணம்: யாழ். இலக்கியக் குவியம், இல. 37, 2ம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2014. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். கிராபிக்ஸ், இல. 54, இராஜேந்திரா வீதி).

xvi, 76 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x13.5 சமீ.

என் நிலம் தொடக்கம் கடலில் தொழிலொடு போனீரே என்பது வரை 59 கவிதைப்பூக்கள் இத்தொகுப்பில் மணம்வீசுகின்றன. ஒவ்வொரு கவிதையும் எமது வாழ்வியலை எளிமையான மொழிநடையில் மிக அழகாகவும் நேர்த்தியாகவும் எடுத்தியம்புகின்றன. இவற்றில், தமிழரின் இந்நிலை பாடுக கவியே, கதை கெட்டு தூங்க என் கண்மணி, நிமிர்க யாழகமே, கடலில் தொழிலொடு போனீரே ஆகிய இறுதி நான்கும் இசைப்பாடல்களாக உள்ளன. சித்த மருத்தவரான வேலணையூர் தாஸ், தமிழ் ஆசிரியராக முன்னர் பணியாற்றியவர். தமிழகத்தில் புலம்பெயர்ந்து வாழ்ந்தவேளையில், சித்த மருத்துவத்துறையில் தேர்ந்து, தாயகம் திரும்பியதும் அத்துறையையே தொடர்ந்தவர். இலக்கிய ஈடுபாட்டினால், யாழ்.இலக்கியக் குவியம் என்ற இலக்கிய அமைப்பினை உருவாக்கி வழிநடத்தி ஆரோக்கியமான இளம் இலக்கியவாதிகளுக்கு களம் அமைத்துக் கொடுத்தும் வருகிறார். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 57641).

11668

மழைமேகம்: கவிதைத் தொகுதி. சிலாவத்துறை ஏ.ஆர்.அஸீம். மன்னார்: ஹமீத்-அல் ஹுசைனி இலக்கிய மன்றம், சிலாவத்துறை, 1வது பதிப்பு, மார்ச் 2000. (கொழும்பு: டொப் பிரிண்ட்ஸ்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 50., அளவு: 21x15 சமீ.

இலங்கை முஸ்லீம் சமூகத்தில் சிறந்த மேடைப்பேச்சாளராக அறியப்பெற்ற சமூகஜோதி எம்.ஏ.ரபீக் அவர்களின் கனிஷ்ட புதல்வரான ஏ.ஆர்.அஸீம் எழுதிய கவிதைத் தொகுதி இது. அல் ஹிதாயா மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி பெற்றவர். ஹமீத் அல் ஹுசைனி கல்லூரியில் இடைநிலை வகுப்பில் கற்றுத்தேர்ந்தவர். 1999ஆம் ஆண்டு றோயல் கல்லூரியால் நடத்தப்பட்ட தமிழ்த்தின விழாவில் இடம்பெற்ற கவிதைப் போட்டியில் மத்திய பிரிவில் முதற்பரிசை வென்றவர். மாணவப் பருவத்திலேயே இக்கவிதைத் தொகுதியை வெளிக்கொண்டுவந்து ஈழத்து இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்திருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30221).

11669

மழையும் சிறையும்:புதுக்கவிதைத் தொகுதி. மருதூர் ஏ.ஹஸன். கல்முனை: மருதூர்ப் பணிமனை, 408, மாவடி வீதி, சாய்ந்தமருது 01, 1வது பதிப்பு, 1993. (சாய்ந்தமருது: நேஷனல் அச்சகம்).

98 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 17.5x13 சமீ.

மருதூர் ஏ.ஹஸனின் புதுக்கவிதைத் தொகுதி. இலக்கியக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களான மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத், மருதூர் அலிக்கான், ஏ. எம். கான், ஏ. பீர்முஹம்மது, ஏ. அக்பர் அலி, ஆகியோரின் உடன் பிறப்பு இவர். சாய்ந்த மருதுவைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் கிராம சேவை உறுப்பினர் ஐ. அலியார், அசனார் உதுமாநாச்சி தம்பதியினரின் புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 43577).

11670

மனக்கண்: கவிதைத் தொகுப்பு. எஸ்.சிவா (இயற்பெயர்: சுப்பிரமணியம் சிவதர்ஷினி). வவுனியா: வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, 1வது பதிப்பு, 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).

52 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 19.5x14 சமீ.

வவுனியா தேசியகல்வியியற் கல்லூரியின் உணவும் தொழில்நுட்பமும் பாடப் பிரிவைச் சேர்ந்த செல்வி சு.சிவதர்ஷனி அவர்களின் முதலாவது கவிதைத் தொகுப்பு இது. மரபை உள்வாங்கிய காலத்தின் தேவையுணர்ந்த சிவதர்ஷினியின் கவிதைகள், உணர்ச்சிகள், ஓசைகளை விட கருத்தாலும் மொழியாலும் வல்லமை பெற்று மிளிர்கின்றன. எளிமையும் நடைமுறைகளும் நிரம்பிக் கிடக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11671

மனக்காடு: கவிதைகள். மேரா (இயற்பெயர்: த.மேகராசா). பட்டிப்பளை: பட்டிப்பளை பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம், 1வது பதிப்பு, ஜுன் 2012. (கொழும்பு 12: லோயல் பிரின்டர்ஸ், 125, புதிய சோனகத் தெரு).

xiii, 52 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-53621-1-5.

ஆசிரியத்துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற நூலாசிரியர் மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச் சோலையில், அரசடித் தீவைச் சேர்ந்தவர். தமிழ்மொழியில் சிறப்புப்பட்டம் பெற்றவர். மட்டக்களப்பு, கல்லடி வேலூரில் வசிப்பவர். ஈழப்பித்தன், அரசையூரான், அரசையூர் மேரா, மாரிமகன் ஆகிய புனைபெயர்களில் இலக்கிய வலம் வந்தவர். ஏற்கெனவே வெளிவந்த கலங்கிய வானம் (2005), காலத்தின் காயங்கள் (2007) ஆகிய நூல்களை அடுத்து மூன்றாவதாக வெளிவரும் கவிதைத் தொகுதி இது. 33 கவிதைகளை உள்ளடக்கியுள்ளது. வாழ்க்கையின் எதிர்பார்ப்புகளும், நம்பிக்கைகளும், ஆசைகளும், நிராசைகளும், விரக்தியும் மாறி மாறி இவரது கவிதைகளில் ஒலிக்கின்றன. சில கவிதைகளில் போராட்டங்களும் சவால்களும் நிறைந்த வாழ்வை எதிர்கொள்வதும் அவற்றிலிருந்து மீண்டு வருவதற்கான முனைப்பையும் காட்டும் போக்குகளும் உள்ளன. தன் கவிதைகளில் அரசியல்வாதிகளைச்சாடி திரைமறைவு விடயங்களை வீதிக்குக் கொண்டுவருகிறார். போர்க்கள நிகழ்வுகளின் நிஜங்களை சில கவிதைகள் பதிவுசெய்கின்றன. மனிதநேயம் கொண்ட இக்கவிஞனின் பார்வை சமூக அழிவுகளைக்கண்டு சீற்றம் கொள்கின்றது. ஏமாற்றுவோர், ஏளனம் செய்வோரை எள்ளிநகையாடுகின்றது.

11672

மனவனத்தில் நந்தவனம். ராஜகவி றாஹில். (இயற்பெயர்: ஏ.சீ.றாஹில், தொகுப்பாசிரியர்). நிந்தவூர் 05: ஆர்.கே.மீடியா வெளியீடு, 318, புதிய நகர், 1வது பதிப்பு, ஜுலை 2009. (அக்கரைப்பற்று: நியூ செலக்ஷன் பிரின்டர்ஸ்).

(2), 150 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 17x12 சமீ.

ஈழத்துத் தமிழ்க் கவிதைத் துறையில் ஈடுபாடுள்ளவர்களின் கவிதைகளைத் தேர்ந்து தனி நூலுருவில் வெளிக்கொண்டுவந்திருக்கிறார். இவ்விளம் கவிஞர்களின் கைவண்ணத்தில் மலர்ந்துள்ள இத்தொகுப்பின் கவிவரிகள் எதிர்காலக் கவிஞர்கள் பலரை எமக்கு இனம்காட்டுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 51152).

11673

மனவெளியின் பிரதி. நாச்சியாதீவு பர்வீன். கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2013. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

xxvi, 112 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-30-4153-1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த நாச்சியாதீவு பர்வீனின் இரண்டாவது கவிதைத் தொகுதி இது. 39 கவிதைகளை உள்ளடக்கியது. தலப்புக்கேற்ப மனித மனவோட்டங்களை அப்படியே பிரதிபலித்திருக்கும் கவிதைகள் இவை. வாழ்வியல் அனுபவத்தினூடாக சமூக அவலங்களோடு அரசியலையும் மூடத்தனங்களையும் வெளிப்படுத்தியுள்ளதன் மூலம் கவிஞர் மிகத்தரமான கவிதைத் தொகுப்பொன்றினை எமக்கு வழங்கியுள்ளார். வெறும் இயற்கை ரசிப்போடு நின்றுவிடாமல், இவரது கவிதைகள் இயற்கைக்குள் கமூகத்தைப் பிரதிபலிக்க முனைகின்றன. இதனைக் குறிப்பாக, நிலவு இராச்சியம், இரவுத் திருடன், பட்டாம்பூச்சியின் பறத்தல் பற்றி, போன்ற கவிதைகளினூடாகக் காணமுடிகின்றது.

11674

மனோவின் மனக் குறும்புப் பா (புதுக் கவிதை). அல்பேட் இதய மனோகர். (இயற்பெயர்: செல்வராசகோபால் பசுபதி). கனடா: நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், ரொரன்ரோ, 1வது பதிப்பு, நொவம்பர் 1992. (கனடா: றிப்ளெக்ஸ் அச்சகம், 1108, Bay Street, Toronto, Ontario, M5S 2W9).

60 பக்கம், புகைப்படங்கள், விலை: கனடிய டாலர் 2.50, விலை: ரூபா 21.5x14 சமீ.

மட்டக்களப்பு தோற்றாத் தீவில் பிறந்து வளர்ந்து தற்போது கனடாவில் வாழும் ஈழத்துப் பூராடனாரின் (செல்வராசகோபால்) குடும்பத்தவரான பசுபதி அவர்கள் தமிழில் எழுதிய குறும்புக் கவிதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. இக்கவிதைகள் அவ்வப்போது புலத்தின் பத்திரிகைகளில் இடம்பெற்றுள்ளன. பத்துக் கற்பனையும் பஞ்சமாபாதகமும் பறந்து போயிற்று, என்று தொடங்கி, I mind my own Business, வயிற்றுக்காகத் தலை வளர்த்த வாலிபம், நாம் இருவர் நமக்கிருவர், இனவாதமல்ல இரத்தவாதமே வேண்டும், இது வெற்றியா தோல்வியா, ஒன்று செய்தால் என்ன, போச்சுடா போச்சு, மரணத்தின் இரு விழிகள், சாயமேற்றிக்கொள்ளும் மாயைகள், அதை அறியாதிருக்கட்டும் அப்போதாவது தருமம் நிலைக்கட்டும், வதைக்காமல் இருந்தாலே போதும் என இன்னோரன்ன தலைப்புகளில் இவர் இக்கவிதைகளை எழுதியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13517).

11675

மஜீத் கவிதைகள்: சொந்தமற்றுப்போன மண்ணைப்பற்றிய சித்திரமொழி. மஜீத். பொள்ளாச்சி 642 002: எதிர் வெளியீடு, 96, நியூ ஸ்கீம் ரோடு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2012. (சென்னை: ஜோதி எண்டர்பிரைசஸ்).

204 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21.5x14 சமீ.

மஜீத் எழுதிய கவிதைகளின் மொத்தத் தொகுப்பாக இந்நூல் மலர்ந்துள்ளது. வாழ்வின் மீதான எளிய பாடல்கள், ஒரு இலையின் மரணம், சுள்ளிக்காடும் செம்பொடையனும், புலி பாய்ந்தபோது இரவுகள் கோடையில் அலைந்தன ஆகிய நான்கு கவிதைத் தொகுதிகளையும் நூலுருவில் வெளிவராத சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளையும் இந்நூல் முழுமையாக உள்ளடக்குகின்றது. அக்கரைப்பற்றை வாழ்விடமாகக்கொண்ட கவிஞர் மஜீத் தற்போது கொழும்பில் வாழ்கிறார். தனது பண்பாட்டுப் படிமங்களை சின்னஞ்சிறு கதைகளாகவும், சக மனிதர்களின் வாழ்வியலாகவும் எடுத்துரைப்பதில் தனி நுணுக்கங்கள் பெற்றவர். தமிழில் காதலைப் பாடுவதில் மஜீதைப் போன்ற தனித்துவம் நவீன தமிழ்க் கவிதைப் பரப்பில் அரிதானதாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 53003).

11676

மாதோட்டம்: கவிதைத் தொகுப்பு. கலைஞர் குழந்தை (இயற்பெயர்: செ.செபமாலை). நானாட்டான்: நானாட்டான் பிரதேச கலாச்சாரப் பேரவை, 1வது பதிப்பு, நவம்பர் 2000. (மட்டக்களப்பு: புனித வளனார் அச்சகம்).

xi, 51 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 19x13.5 சமீ.

சுமார் நாற்பது ஆண்டுகள் ஆசிரியப் பணியோடு கலை இலக்கியப் பணியும் ஆற்றியவர் கவிஞர் குழந்தை. நாட்டுக்கூத்துக் கலையில் அவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. அவ்வாறே இடைக்கிடையே தன் கவிதைகளாலும் மக்களைக் கவர்ந்து வந்தவர். அவரது கவிதைகளின் தேர்ந்த தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இதில் இறையாசீர் அளித்திடுவீர், தரணியாம் மாதோட்டம் தன்னில் உண்டு, நாம் இலங்கையர்கள், பாரதி இன்றிருந்தால், நாமும் நமது நாடும், மாண்புமிகு மாதோட்டம், வீதியில் அலைந்து வாழ்வோர் வெற்றியும் பெறுவாராக, மறைவளர்க்கும் மருதமடு, எழிலுறும் எனது கிராமம், மாதோட்ட மாநாட்டின் மாண்புரைக்கும் அம்மானை, ஆசிரியர்கள் நாட்டின் கண்கள், கண்ணீராற் காத்தோம் கருகத் திருவுளமோ, மாண்புறு மாதோட்டம், உயர்வோடு மலரவேண்டும் ஆகிய தலைப்புகளில் இக்கவிதைகள் எழுதப்பட்டு பல்வேறு ஊடகங்களிலும் பிரசுரமானவை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22145).

11677

மாம்பழக் கொச்சி (கவிதைகள்) முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல். மருதமுனை 3: எம்.எம்.மிஹ்ழார், ஆயிஷா வெளியீட்டகம், 520/1, மசூர் மௌலானா வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2013. (மருதமுனை: அப்னா பிறின்டர்ஸ்).

80 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-54169-7-9.

ஆசிரியரின் முதலாவது கவிதைத் தொகுதி. மருதமுனைக் கிராமத்தைச் சேர்ந்த நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வியாபார நிர்வாகமாணி சிறப்புப்பட்டம் பெற்றவர். பட்டதாரி ஆசிரியராக மருதமுனை கமு/அல்மனார் மத்திய கல்லூரி, ஷம்ஸ் மத்திய கல்லூரி போன்ற பாடசாலைகளில் சிறிதுகாலம் பணியாற்றியவர். இலங்கை நிர்வாக சேவைக்குள் உள்வாங்கப்பட்டு அட்டாளைச்சேனை, பொத்துவில், ஓட்டமாவடி பிரதேச செயலகங்களில் பணியாற்றிய பின்னர், கல்முனை பிரதேச செயலாளராகப் பணியாற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில் இந்நூல் வெளிவந்தது. மருதமுனையில் 126 வருடங்கள் வாழ்ந்து மறைந்த மீராலெவ்வை இப்றாலெவ்வை என்பவரின் மனைவியே இக்கவிஞரின் தந்தையின் தாயாராவார். அப்பெண்மணியின் அழகைக் குறித்து மாம்பழக்கொச்சி என ஊரார் அழைத்ததை நினைவுகூர்ந்து தனது 53 கவிதைகளைக்கொண்ட இக்கவிதைத் தொகுதிக்கும் அப்பெயரையே வைத்து அழகு பார்த்துள்ளார்.

11678

மாவை சின்னக்குட்டிப் புலவரின் தண்டிகைக் கனகராயன் பள்ளு. மாவைச் சின்னக்குட்டிப் புலவர் (மூலம்), தண்டிகை கனகசபாபதிப்பிள்ளை (அரும்பதவுரை). கருகம்பனை: அமரர் திருமதி பூரணபாக்கியம் சங்கர் நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2009. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

xiv, 67 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12.5 சமீ.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் இறுதிக்கட்டத்தில் வலிகாமப் பகுதியில் அதிகார முதலியாகத் தெல்லிப்பழையில் இருந்த தண்டிகைக் கனகராய முதலியாரைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு அவரால் ஆதரிக்கப்பட்டவரான மாவை சின்னக்குட்டிப் புலவரால் இயற்றப்பட்டது தண்டிகைக் கனகராயன் பள்ளுப் பிரபந்தமாகும். கி.பி.1792 ஆண்டளவில் இயற்றப்பட்ட இந்த இலக்கியம் 1932இல் தெல்லிப்பழை வ.குமாரசுவாமி அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு சென்னையில் முதலில் பதிப்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் சே.வெ.ஜம்புலிங்கம்பிள்ளை அவர்களால் இப்பதிப்பு 1932இல் வெளியிடப்பட்டது. இந்நூலுக்கான அரும்பதவுரை, குறிப்பு என்பவற்றை சென்னைப் போலிஸ் இன்ஸ்பெக்டராயிருந்து இளைப்பாறிய யாழ்ப்பாணம்-தெல்லிப்பழை-தண்டிகைக் கனகசபாபதிப்பிள்ளை எழுதியுள்ளார். யாழ்ப்பாணக் குடியேற்ற ஆராய்ச்சி முதலிய குறிப்புகளை யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க உபதலைவர்களுள் ஒருவரும் இலங்கை சுப்றீம் கோர்ட் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான தெல்லிப்பழை வ.குமாரசுவாமி அவர்கள் எழுதியுள்ளார். இந்நூலின் பின்னைய பதிப்பொன்று நவம்பர் 1983இல் ஆசிரியர் ஆ.ஞானசுந்தரம் அவர்களின் நினைவு வெளியீடாக காங்கேசன்துறை, மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலய தமிழ் மன்றத்தினால் வெளியிடப் பட்டிருந்தது. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 413). கருகம்பனையூர் அமரர் திருமதி பூரணபாக்கியம் சங்கர் நினைவு வெளியீடாக இம்மூன்றாவது பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. தண்டிகைக் கனகராய முதலியாரின் வழித்தோன்றலான கருகம்பனை வேலாயுதம் அவர்களின் மகளே அமரர் திருமதி பூரணபாக்கியம் சங்கர் ஆவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48169).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11679

மிதக்கும் கனவுகள் (கவிதைகள்). முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல். மருதமுனை: ஆயிஷா வெளியீட்டகம், 520, மசூர்மௌலானா வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2015. (மருதமுனை: அப்னா பிரின்ட்).

xiv, 71 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-42405-1-3.

மருதமுனைக் கிராமத்தைச் சேர்ந்த நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வியாபார நிர்வாகமாணி சிறப்புப்பட்டம் பெற்றவர். பட்டதாரி ஆசிரியராக மருதமுனை கமு/அல்மனார் மத்திய கல்லூரி, ஷம்ஸ் மத்திய கல்லூரி போன்ற பாடசாலைகளில் சிறிதுகாலம் பணியாற்றியவர். இலங்கை நிர்வாக சேவைக்குள் உள்வாங்கப்பட்டு அட்டாளைச்சேனை, பொத்துவில், ஓட்டமாவடி பிரதேச செயலகங்களில் பணியாற்றிய பின்னர், கல்முனை பிரதேச செயலாளராகப் பணியாற்றுகின்றார். மாம்பழக் கொச்சி என்ற தனது கவிதைத் தொகுதியையடுத்து வெளிவரும் நௌபலின் இரண்டாவது தொகுப்பு. 45 கவிதைகளைக் கொண்ட இத் தொகுதியிலுள்ள கவிதைகள் சிசுவின் உயிர்ப்பு, நிலவுக்குப் பதில் நீ, சூரியன் அழுத நாள், தூவானம், மௌனம் கலைகிறது, மகரந்த மணிகள், சாயங்கள் பூசியவர்கள், கவிதைகளின் பதிவு, முகமூடி உலகம், புழுதிக் குளிப்பு, ஒலிப்பேழை, போலியான நாட்டுப்பற்று, கனவுகளால் நெசவு, அரச சேவை இவர்கள், மீண்டும் அவள், சுவரில் முகங்கள், மிதக்கும் கனவுகள், வாக்குறுதிகள், நீ, பசுமை படர் நாட்கள், பூமிப்பெண், மூத்தம்மா, வெற்றுக்கோஷங்கள், வனத்தின் அழகு, மீன்களின் அறுவடை, தலைப்புப் போடுங்கள், வாசித்த கவிதை, ஆகாயத்தோட்டம், கனவுத் தொழிற்சாலை, மழைவெள்ளம், கனவில் நீந்தும், எறும்புகள், மாலைக்கருக்கலில், வட்டா, யாக்கையின் புன்முறுவல், மழை, திருமணம், விதைகள், இன்னுமொரு மாம்பழக் கொச்சி, காத்திருக்கும் இவர்கள், எம் தலைமைகள், கவிதைகள், மாயக்கண்ணாடி, தூது, ஏதிலிகள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன.

11680

முகங்கள்(கவிதைத் தொகுப்பு). அன்புடீன் (இயற்பெயர்: ப.மு.கலந்தர் லெவ்வை). அக்கரைப்பற்று 4: அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி, கிழக்குப் பிராந்தியம், 1வது பதிப்பு, ஜனவரி 1988. (அக்கரைப்பற்று: பாத்திமா மின் அச்சகம், அஞ்சலக வீதி).

(23), 24-124 பக்கம், விலை: ரூபா 24., அளவு: 18.5x13 சமீ.

கவிஞர் அன்புடீனின் 12ஆவது கவிதைத் தொகுதி. 1970க்குப் பின்னரான காலகட்டத்தில் பத்திரிகைளுக்கு எழுதியவையும் வானொலியில் ஒலிபரப்பப்பட்டவையுமான 31 கவிதைகள் இவை. தளிருடலை நெளியாதே, சாவதா நாம் வாழ்வதா, அலைகள், சின்ன மலர் சிரிக்கிறது, உன்னிடம் ஒரு வினா, உரிமையும் உடமையும், புதிதாய் எழுந்த இரவி, மானுடம் எங்கே, நிழல்கள், இலந்தைப் பழத்துப் புழுக்கள், சாவை வென்ற சரிதை, ஒரு தபால்காரனின் ஏக்கம், மையித்து வீடு, ஒழுக்கு, செங்கப்படை வயலை நோக்கி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவிக்கு ஒரு மடல், ஈனநிலை கண்டு, செய்திக்குள் செய்"தீ ", ஓணான்கள், ஜனநாயகம், கௌரவம், நுளம்புகளே, சிலந்திகள், ஒரு ஏழைத் தாயின் வீரத் தாலாட்டு, இந்த யுகத்தின் இருள்கள் இறக்க, பொதுமைப் பூக்கள், புதியதொரு வீடு, புதுமை, நிலவு சுடுகிறது, வெள்ளை மாளிகையில் பூத்த கறுப்பு மலர், புலரும் ஒரு புதுப்பொழுது ஆகிய தலைப்புகளில் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13751).

11681

முகவரி தொலைந்த முகங்கள்: கவிதைத் தொகுதி. ஜீவகவி (இயற்பெயர்: ஏ. அமிர்தலிங்கம்). தொகுப்பாசிரியர். கொழும்பு 14: போட்டோ லியா, 82, ஸ்டேடியம் கம, 1வது பதிப்பு, ஐப்பசி 2000. (கொழும்பு 10: மிலக்ஸ் கிராப்பிக்ஸ், 204/12 தெமட்டகொட வீதி).

68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x11 சமீ.

தமது உள்ளக் குமுறல்களை இத்தொகுப்பின் வழியாகச் சில இளம்கவிஞர்கள் இறக்கிவைக்க முயன்றுள்ளனர். கவிஞர் ஜீவகவியின் தொகுப்பில் இவை தனி நூலாகப் பிரசுரம் கண்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29047).

11682

முகாரி பாடும் முகங்கள். வல்வை மு.ஆ.சுமன். வல்வெட்டித்துறை: கலை கலாசார இலக்கிய மன்றம், 1வது பதிப்பு, 2014. (அல்வாய்: மதுரன் கிறாபிக்ஸ் அன்ட் ஒப்செட் பிரின்டேர்ஸ்).

60 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 19.5x11 சமீ.

எங்கள் பாரம்பரியம், கலாசாரம், ஆகியவற்றை சுமந்துசெல்லும் நோக்குடன் படைக்கப்பட்ட இந்தக் கவிதைத் தொகுதியில் ஜப்பானிய ஹைக்கூ பாணிக் கவிதைகளும் உள்ளடங்கியுள்ளன. சோக உணர்வே கவிதைகளின் அடிநாதமாக அமைந்துள்ளது. சுமனின் மூன்றாவது கவிதைத் தொகுதி இது. நெடுநாட்கள் தன் ஊரைப் பிரிந்து கப்பலில் வேலைவாய்ப்புப்பெற்று வாழ்ந்த ஒருவனின் பிரிவுத்துயர் கடலோடி வாழ்வு என்ற கவிதையில் சுயசரிதமாகவே புலப்படுகின்றது. இவ்வாறே நாய்க் கனவு, இயற்கை நிழல், ஒரு பறவையின் கனவு, வெற்றியை நோக்கிய ஒரு பயணம் போன்ற கவிதைகளும் கவிஞனின் சிந்தனையின் பல்பரிமாணங்களை எடுத்துக்காட்டுகின்றன.

11683

முட்கம்பித் தீவு. சி.சிவசேகரம். கொழும்பு 6: தேசிய கலை இலக்கியப் பேரவை, 571/15, காலி வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2010. (கொழும்பு: வேர்ள்ட் விஷன் கிராப்பிக்ஸ்).

80 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-8637-29-6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலுள்ள கவிதைகளின் அழுத்தம் முள்ளிவாய்க்கால் அவலங்களின் பின்னைய அண்மைய ஈழத்து நிகழ்வுகளின் மீதானது. இத்தொகுதியிலள்ள கவிதைகள் சில தமிழ்ச் சமூக எல்லைக்கு வெளியே சென்று அக நிலைமைகளைப் புறவுலகுடன் உறவு படுத்துவன. மரபுசார்ந்த சில கவிதைகளுக்கும் மேலாக நாட்டார் சந்தங்களும் பயன்பட்டுள்ளன. சி. சிவசேகரம் ஈழத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர். கவிதைகள், விமர்சனங்கள், அரசியற் கட்டுரைகள் மற்றும் கவிதை மொழிபெயர்ப்புக்கள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளார். இவர் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றிவருகின்றார். மேலும் எந்திரவியல் பிரிவின் தலைவராகவும் பதவிவகிக்கிறார். 2002 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு ஆளுனர் விருது இவருக்கு வழங்கப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50983).

11684

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் நான்மணிமாலை. வை.க.சிற்றம்பலம். யாழ்ப்பாணம்: சிற்றம்பலம் சிவானந்தராஜா, இந்துக் கல்லூரி வீதி, செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு, 1வது பதிப்பு, மே 2015. (பண்டத்தரிப்பு: வானவில் பிறின்டேர்ஸ், மாதகல் வீதி).

32 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x14.5 சமீ.

இணுவிலைச் சேர்ந்த கலாபூஷணம் புலவர்மணி திரு. வை.க.சிற்றம்பலம் அவர்கள் 100 வயதைக் கடந்த நிலையில் நாற்பதுக்கும் மேற்பட்ட பல்வகைப் பிரபந்தங்களைப் பாடியுள்ளார். 2.11.2015இல் தனது 101ஆவது அகவையில் மறைந்தார். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினரால் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாவையொட்டி 1992இல் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பெற்ற கவிதைப் போட்டியில் இவர் இயற்றிய சுவாமி விபுலானந்த அடிகளார் நான்மணிமாலை என்ற படைப்பு முதலாம் பரிசைப் பெற்றது. அதன் நூல்வடிவம் இது. திரு. வை.க.சிற்றம்பலம் அவர்களுக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கம் "தமிழ்நிதி" என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கும் நிகழ்வின் நினைவாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

11685

முதல் வசந்தம்: கவிதைத் தொகுப்பு. காயத்திரி முத்துராசா. வவுனியா: செல்வி காயத்திரி முத்துராசா, இல. 50/3, குருமண்காடு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (வவுனியா: ஜெனிக்கா கிறாபிக்).

100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

ஒரு இளம்பெண்ணின் உள்ளத்தில் உறைந்துகிடந்து வெளிவரத்துடிக்கும் உணர்வுகளின் வெளிப்பாடாக இவ்விளம் படைப்பாளியின் கன்னிக் கவிதைகள் அமைகின்றன. அருவி என்ற பெயரில் அறியப்பெற்ற செல்வி காயத்திரி முத்துராசா தன் இளமைக்காலம் முதல் எழுதிவைத்திருந்த கவிதைகளை இங்கு நூலுருவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியிருக்கிறார். இவர் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் மாணவ ஆசிரியையாவார்.

11686

முதன் முதலாக. கஸ்தூரி கனகலிங்கம். யாழ்ப்பாணம்: செல்வி கஸ்தூரி கனகலிங்கம், தேசிய கல்வியியல் கல்லூரி, 1வது பதிப்பு, ஜூலை 2005. (யாழ்ப்பாணம்: திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்).

(8), 60 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 20.5x14 சமீ.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி மாணவ ஆசிரியர் ஒருவரின் கன்னிக் கவிதைகள் இவை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38898).

11687

முதன் முதலாய்: கவிதைகள். கு.வீரா. கிளிநொச்சி: சி.சேரலாதன், பொறுப்பாளர், நிதர்சனம், தர்மேந்திரா கலையகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (கிளிநொச்சி: நிலா பதிப்பகம், புகையிரதப் பாதை வீதி).

(14), 126 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 90., அளவு: 21x14 சமீ.

கவிஞர் பாடலாசிரியர், நடிகர் என பல திறமைகளை கொண்ட முன்னாள் ஈழ விடுதலைப் போராளியான கு.வீரா தமிழீழ தேசிய தொலைக்காட்சியின் நிலவரம் என்ற அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சியின் மூலமும் பிரபல்யம் பெற்றிருந்தார். யுத்தத்தின் பின்னர் தடுப்பு முகாம் புனர்வாழ்வு என பல தடைகளையும் துன்பங்களையும் கடந்து வந்த கவிஞர் வீரா தற்போதும் தனது இரு கவிதை தொகுதி நூல்களை "கண்ணடிக்கும்காலம்", "இரண்டாவது உயிர்" ஆகிய தலைப்புகளில் 2015இல் வெளியிட்டிருந்தார். அவரது நிதர்சனம் பணிக்காலத்தில் வெளியிடப்பட்ட முதலாவது நூலாக "முதன் முதலாய்" என்ற நூல் அமைந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33059).

11688

முறையீடு: கவிதைகள். கவிஞர் அபூபக்கர் (இயற்பெயர்: A.M.அபூபக்கர்). காத்தான்குடி 2: முனீரா பப்ளிக்கேஷன்ஸ், 86, பழைய வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1983. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில் வடக்கு).

62 பக்கம், தகடுகள், விலை: ரூபா 5., அளவு: 17.5x12.5 சமீ.

கவிதாஞ்சலி (1977), நான் (1980), நீ (1981), நம்பிக்கை மணிகள் (1982) ஆகிய கவிதைகளைத் தொடர்ந்து வெளிவரும் இக்கவிதைத் தொகுதியில் கவிஞர் அபூபக்கரின் நீண்ட கவிதைகள் இரண்டு உள்ளன. கவிஞரின் மத அனுபவத்தை வெளிக்கொணரும் கவிதைகளாகக் கருதப்படும் மதச்சார்புக் கவிதைகள் இவை. "அவர் தனது மதப்பாரம்பரியத்தினுள்ளே தனது உணர்ச்சி முழுமையைக் காண விரும்புகிறாரென்பதும், அந்த மத இலட்சிய நிறைவிலேயே தமது நிறைவினையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணவிழைகின்றார் என்பதும் (இக்கவிதைகளிலிருந்து) தெளிவாகின்றது" என்று இந்நூலுக்கு விரிவான அணிந்துரை வழங்கியுள்ள பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17242).

11689

மூக்குத்திப்பூ: ஈழவாணி கவிதைகள். ஈழவாணி. (இயற்பெயர்: வாணி ஜெயா தீபன்). சென்னை 600094: பூவரசி பப்ளிக்கேஷன்ஸ், 20/2 சக்காரியா காலனி, 1வது தெரு, சூளைமேடு, 1வது பதிப்பு, ஜனவரி 2016. (சென்னை 600094: பூவரசி பப்ளிக்கேஷன்ஸ், 20/2 சக்காரியா காலனி, 1வது தெரு, சூளைமேடு).

(18), 19-120 பக்கம், ஓவியங்கள், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-81322-37-6.

ஈழவாணி இலங்கையில் வவுனியாவில் பிறந்தவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொண்டவர். தேடல், செந்தணல் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். தற்பொழுது புலம்பெயர்ந்து மலேசியாவிலும், இந்தியாவிலுமாக வசித்து வருபவர். பூவரசி என்ற பெயரில் இணையத்தளமொன்றை நடத்தும் இவர், அதே பெயரில் அரையாண்டு இதழொன்றையும் வெளியிட்டு வருகிறார். ஈழவாணியின் கவிதைத் தொகுப்புக்கு கவிஞர் மு.பொ. அவர்கள் முன்வைத்துள்ள விரிவான விமர்சனமொன்றையும் இந்நூலின் நுழைவாயிலில் காண முடிகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60757).

11690

மூடமறுக்கும் விழிகளும் துடிக்கும் இதயமும்:கவிதைகள். மருதூர் ஏ.மஜீத். கல்முனை: மருதூர் வெளியீட்டுப் பணிமனை, 436 பழைய சந்தை வீதி, சாய்ந்தமருது 03, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2009. (கொழும்பு 10: யூ.டீ.எச். கொம்பியூபிரின்ட், 51/42, முகைதீன் மஸ்ஜித் வீதி).

124 பக்கம், விலை: ரூபா 285., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-1058-04-3.

இத்தொகுப்பில் பல்வேறு முக்கியஸ்தர்கள் தொடர்பான இரங்கலும், பிரமுகர்கள், நிறுவனங்கள் தொடர்பான வாழ்த்துமாக முப்பத்தொன்பது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இந்நூலிலுள்ள கவிதைகள் குறித்தும் அவை எழுந்த நோக்கம் குறித்தும் ஆசிரியர் குறிப்புரைகளும் வழங்கியிருக்கிறார். தனது குருநாதர் கலாநிதி எஸ்.தனஞ்செயராஜசிங்கம், தந்தையார் ஐ.அலியார், சங்.சகோதரி சிசிலியா மேரி, எழுத்தாளர் பெனடிக்ற் பாலன், எம்.எச்.எம். அஷ்ரப், றிஸ்வி சின்னலெப்பை, அ.ஸ.அப்துஸ் ஸமது, சங்.அப்துல் ரஷீத் தங்கள், கர்பாலா யுத்தத்தில் ஹுஸைன் அவர்களின் குதிரை, அன்னையார் அலியார் உதமானாச்சி, மாணவன் நற்பிட்டிமுனை பழீல், நண்பர் அல்ஹாஜ் வீ. அப்துல் கபூர், பாவலர் பஸீல் காரியப்பர், அருட்கொடை நபி (ஸல்) அவர்கள், முஹம்மது நபி (ஸல்) ஆகியவர்களின் பேரில் பாடிய இரங்கற் கவிதைகளை முதலாம் பிரிவிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி சு.வித்தியானந்தன், மருதமுனை அல்-மனார் மகா வித்தியாலயம், சம்மாந்துறை மகா வித்தியாலயம், கல்முனை ஸாஹிரா கல்லூரி, பிரதமர் ஆர். பிரேமதாசா, எம்.எம்.மயோன் முஸ்தபா, கல்முனை பாத்திமா கல்லூரி அதிபர் எஸ்.ஜே. மத்யூ, பிரதி அமைச்சர் எம்.ஏ.அப்துல் மஜீத், தினகரன் ஆசிரியர் எஸ். சிவகுருநாதன், வர்த்தக அமைச்சர் ஏ.ஆர். மன்சூர், அன்னை தெரேசா, டாக்டர் முருகேசம்பிள்ளை, ஜனாதிபதி ஆர். பிரேமதாச, கலாநிதி. ம.மு. உவைஸ், அமைச்சர்கள் எ.எச்.எம். அஸ்வர், எம்.எச்.எம்.அஷ்ரப், ஏ.எச்.எம்.பௌஸி, ஏ.எல்.எம். அத்தாவுல்லா, ரவூப் ஹக்கீம், செனெட்டர் மசூர் மௌலானா, கலாநிதி காலிதீன், நாடாளுமன்ற உறப்பினர் றஜாப்டீன் மற்றும் கிழக்கின் இன ஒற்றுமை பற்றி, என ஆசிரியர் வழங்கிய வாழ்த்துக் கவிதைகள் இரண்டாவது பிரிவிலும் உள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54728).

11691

மூவருலா. கலாரசிகன் (அபிராம்), த.தனுஸ், வ.மு.அஸ்லம். வவனியா: தமிழ் மன்றம், தேசிய கல்வியியற் கல்லூரி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

52 பக்கம், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15சமீ.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களான கலாரசிகன் (அபிராம்), த.தனுஸ், வ.மு.அஸ்லம் ஆகியோரின் கவிதைகளின் தொகுப்பு இது. அடக்குமுறையும் அறியாமையும் வறுமையும் அகன்ற பேதமற்ற ஒரு சமுதாயத்தைக் காண மக்களுக்குத் தேவையான சிந்தனைகளையும் உணர்வுகளையும் வழங்கவல்ல ஒரு கருவியாக கவிதையை இளைஞர்களான இவர்கள் தம் கைகளில் ஏந்தியுள்ளனர்.

11692

மெல்லிசைத் தூறல்கள் (பாடல்கள்). தியத்தலாவ எச்.எப்.ரிஸ்னா. கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2015. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

88 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-30-6389-2.

இதில் 36 பாடல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலுக்கான அணிந்துரையை பேராசிரியர் துரை மனோகரன் அவர்களும், வாழ்த்துரையை திருமதி. ரதி தேவசுந்தரம் அவர்களும் நூலின் பின்னட்டைக் குறிப்பை கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலன் அவர்களும் வழங்கியிருக்கின்றார்கள். ஆன்மீகப் பாடல்கள், சமூகப் பாடல்கள், காதல் பாடல்கள், கானா பாடல்கள் என எல்லா துறைகளிலிருமிருந்தும் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. சமூகம் காதலென சகல பக்கங்களையும் தொட்டுக்காட்டும் வரிகளில் சுவையமுது வழிந்தோடுகின்றது. 36 பாடல்களில் "பாதைகள் புதிது" எனும் பாடல் இசையமைப்பாளரும் பாடகருமான ஜனாப் டோனி ஹசன் அவர்களால் 2011ல் இசையமைத்து ஹஜ் பெருநாளன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடப்பட்டுள்ளது. "மக்காவில் பிறந்த மாணிக்கமே" எனும் பாடல் பாடகரும் இசையமைப்பாளருமான கலைக்கமால் அவர்களால் 2014ல் இசையமைத்து பாடப்பட்டது. இந்நூல் கவிஞரின் ஒன்பதாவது நூல் வெளியீடாகும்.

11693

மை: 35 கவிஞைகளின் கவிதைத் தொகுப்பு. சுவிஸ் ரஞ்சி, தேவா-ஜேர்மனி (தொகுப்பாசிரியர்கள்). கோயம்புத்தூர் 641 015: ஊடறு வெளியீடு, விடியல் பதிப்பகம், 11, பெரியார் நகர், மசக்களிபாளையம் வடக்கு, 1வது பதிப்பு, ஜுன் 2007. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).

128 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 22x17 சமீ.

ஆழியாள், அனார், புதிய மாதவி, மதனி, லீனா மணிமேகலை, வேதா இலங்காதிலகம், சுகந்தி சுதர்சன், மோனிகா, பாமா, நளாயினி தாமரைச்செல்வன், பஹீமா ஜஹான், விஜயலட்சுமி, சுல்பிகா, திலகபாமா, சாரங்கா தயாநந்தன், எஸ்.இஸ்மாலிகா, பாமதி பிரதீப், கமலா வாசுகி, நவஜோதி, குட்டிரேவதி, தர்மினி, மலரா, பெண்ணியா, குமுதினி தங்கராஜா, கற்பகம் யசொதர, உதயச்செல்வி, சத்தியா சத்தியதாஸ், அரங்கமல்லிகா, சுகிர்தராணி, தில்லை, மரியா என்டனீற்றா, சமீலா யூசுப் அலி, சலனி, மாதுமை, வைகைச் செல்வி ஆகிய பெண்கவிஞர்களின் கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றள்ளன. மை கவிதைத்தொகுதி பெண்ணியச் சிந்தனைகளை பெண் எழுத்துக்களோடு பதிவு செய்ய முனைந்துள்ளது. இத்தொகுதியில் உள்ளடங்கிய கவிதைகள் வரையறைகளை கடக்கத் துடிக்கும் பிரவாகமாக மிளிர்கின்றன. எமது சமுதாய அலகுகளின் அனைத்து மூலைகளிலும் பெண்கள் ஒடுக்கப்படுகின்றனர். இவ்வொடுக்குமுறை ஒரு நூற்றாண்டுக்குள் திடீரென எழுந்ததல்ல பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னிருந்து ஆண்மேலாதிக்கச் சிந்தனைகளால் திட்டமிட்டு கட்டமைக்கப்பட்டவை. இவை கலாச்சாரத்தின் அடித்தளத்தில் உறுதியாக ஊன்றப்பட்டவை. "மை" தொகுதியின் கவிதைகள் முழுமொத்த பெண் சமூக விடுதலைக்கோஷங்களை கையிலெடுத்த பெரும் பரப்பில் ஆங்காங்கு நின்று தன் இயலுமையின் எல்லைவரை முன்வைக்கின்றன. பெரும்பாலான கவிதைகள் ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான மாற்றுக் கலாச்சாரத்தை கட்டமைக்கும் பணிக்கு உழைக்க வந்திருக்கின்றன. வெவ்வேறு நாடுகளில் பல்வேறு காரணங்களுக்காக புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ப்பெண்களின் ஒருமித்த சிந்தனைகளை ஒன்றாய் வாசிக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளமை "மை" யின் அடர்த்தியை அதிகமாய் உணரத் தூண்டுகிறது. தமிழ்க்கவிதையுலகில் பெண் எழுத்துக்கான வரிசையில் "மை"க்கு நீண்ட கால இடமுண்டு. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45406).

11694

மௌன மொழிகள். யாழரசு (இயற்பெயர்: தவராசா தர்ஸன்). வவுனியா: தமிழ்ப் பண்ணை, 1வது பதிப்பு, ஜனவரி 2013. (வவுனியா: சுபாஸ் அச்சகம், இல. 214, புகையிரத நிலைய வீதி).

xi, 52 பக்கம், விலை: ரூபா 220., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-44115-0-0.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் யாழரசு இக் கவிதை நூலில், தான் சார்ந்த சமூகத்தின் வாழ்வியல் யதார்த்தத்தை தேர்ந்த கவி வரிகளால் பதிவுசெய்திருக்கிறார். இந்தியாவின் காந்திக் கிராமத்தின் கிராமியப் பல்கலைக்கழகத்தில் தனது இளமானிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்ட யாழரசு சமூக சேவைகளில் ஈடுபாடும் மனிதாபிமானச் செயற்பாடுகளில் அவாவும் கொண்டவர். சமூக மாற்றத்திற்கான விழிப்புணர்வு அவசியமானதும் அவசரமானதும் என்பதை இன்றைய காலவோட்டத்தினூடே ஆழமாகப் புரிந்துகொண்டவர். தன் கவிதைகளிலும் அதனைப் பதிவுசெய்துள்ளார். மௌனமொழிகள் என்ற கவிதை முதல் தயாராகிறேன் பாரம் சுமக்க என்ற கவிதை வரையிலான 36 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

11695

மௌனமான இரவில் விழும் பழம். நீ.பீ.அருளானந்தம். கல்கிசை (மவுண்ட் லவீனியா): திருமகள் பதிப்பகம், 7, லில்லியன் அவென்யூ, 1வது பதிப்பு, ஆவணி 2014. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

xiv, 118 பக்கம், ஓவியங்கள், விலை: ரூபா 400., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1055-12-7.

மனிதவாழ்வில் பார்த்து, கேட்டு, இரசித்து, வியந்துபோன விடயங்களை உணர்வுகளாய் கவிதை என்னும் படிமம் மூலம் இந்நூலில் வழங்கியிருக்கிறார். உயிர்ப்புமிக்க இக்கவிதைகள் பழமை மரபுமுறையிலிருந்து விலகி புதிய பாணியில் எழுந்தவை. இறுக்கமற்ற எளிய நடையில் எதுகை மோனையுடன் கூடியதாக இவை படைக்கப்பட்டுள்ளன.

11696

யாருக்கும் இல்லாத பாலை. லதா (இயற்பெயர்: கே.கனகலதா). சென்னை 600041: க்ரியா, புதிய எண்2. பழைய எண் 25, 17ஆவது கிழக்குத் தெரு, திருவான்மியூர், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2016. (சென்னை 600017: சுதர்சன் கிராப்பிக்ஸ்).

95 பக்கம், விலை: இந்திய ரூபா 110., அளவு: 18x10.5 சமீ., ISBN: 978-93-82394-21-1.

இலங்கையில் பிறந்த கனகலதா, சிறுவயதிலேயே சிங்கப்பூரில் குடியேறியவர். 1990 முதல் சிங்கப்பூர் தேசிய நாளிதழான தமிழ் முரசுவில் துணை ஆசிரியராகப் பணியாற்றுகிறார். இந்திய சிங்கப்பூர் தொகுப்புகள் பலவற்றில் இவரது ஆக்க இலக்கியப் படைப்புகள் இடம்பெற்றுள்ளன. சமகாலத் தமிழ் இலக்கிய உலகில் ஒரு முக்கியமான ஆளுமை இவர். கவிஞர், சிறுகதை ஆசிரியர், பத்திரிகையாளர் என்ற வகையில் கடந்த கால்நூற்றாண்டு காலமாக இயங்கிவருபவர். தீவெளி (கவிதைகள், 2003), பாம்புக் காட்டில் ஒரு தாழை (கவிதைகள், 2004), நான் கொலை செய்யும் பெண்கள் (சிறுகதைகள், 2008), The Goddess in the Living Room (சிறுகதைகள், 2014) ஆகியவை இவரது பிற நூல்கள். "இத்தொகுப்பிலுள்ள பெரும்பாலான கவிதைகளில் பொருள்மயக்கின் அழகியலைக் காணமுடிகின்றது. கவிதைகளில் வெளிப்படையான பொருளைத் தேடும் வாசகர்களுக்கு இது ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவாலாக அமையலாம். லதாவின் கவிதைகள் வாசகரின் பங்குபற்றலையும் நுண்மதியையும் அதிகம் வேண்டி நிற்பவை. ஏமாற்றும் எளிமைக்குள் மர்மங்களைப் புதைத்துவைத்திருக்கும் கவிதைகள் இவை. மென் உணர்வின் சுகந்தமும், தனிமையின் நெருடலும், முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் வலியும், வன்முறைக்கு எதிரான குரலும் செறிவான படிமங்களின் ஊடாக இக்கவிதைகளில் வெளிப்படுகின்றன." (பின்னுரையில் எம்.ஏ.நுஃமான்). (பின்னட்டையில் ISBN: 978-93-82394-22-8 எனக் குறிக்கப்பட்டுள்ளது.)

11697

வண்ண எண்ணங்கள். முகில்வாணன். மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64 கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, 2015. (மட்டக்களப்பு: ஓ.கே.பாக்கியநாதன் அறிஞர் சோலை).

143 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-7654-05-8.

முகில்வாணன் அவர்களின் சிந்தனை, சொல், செயல் அனைத்தும் தான் பிறந்த மண்ணையும் பேசும் மொழியையும் பேணும் நாகரீகம் போன்றவற்றையும் மாத்திரம் மையப்படுத்தியதாக அல்லாமல், காலமாற்றத்தைக் கருத்திற்கொண்டு பல்வேறு களங்களில் நின்று பாடும் கவிதைகளாக அமைகின்றன. தியாகிகள், விஞ்ஞானிகளால் மனித இனத்தின் விடிவிற்காகக் கண்டறியப்பட்ட சாதனங்கள் பலவும் அறிவிலிகளின் சுயநலத்திற்காக அஞ்ஞானத்துறைகளில் பயன்படுத்தப்பட்டு மனித இனத்தை இருளிலேயே தள்ளிவைத்திருந்து, தெய்வ அருளினாலே தாங்கள் வாழ எண்ணும் சோம்பேறிகளுக்கு விடுக்கும் எச்சரிக்கையாகவும் சில கவிதைகள் அமைந்துள்ளன. முகில்வாணன் (முகில்வாணன் இராசையா, மட்டக்களப்பு, இலங்கை) ஈழத்து தமிழ் கவிஞர். சில காலம் ஜெர்மனியில் வாழ்ந்தவர். இவர் தென் இந்தியாவில் இறையியல் டிப்ளோமா பட்டம் பெற்றவர். திருமறை போதகராகப் பணிபுரிகின்றார்.

11698

வண்ணத்துப் பூச்சியாகி பறந்த கதைக்குரிய காலம். றியாஸ் குரானா. அக்கரைப்பற்று 6: றிஸ்மியா ஜஹான், இயல்பு பதிப்பகம், 228, 5/6, பொது வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (அக்கரைப்பற்று: புதிய செலெக்ஷன் அச்சகம்).

64 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x14 சமீ.

றியாஸ் குரானாவின் இரண்டாவது படைப்பு. இங்கு ஒரு இளைஞனின் வாழ்வியல் அசைவுகள் நுட்பமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. தான் சார்ந்த சமூகத்திற்கு இழைக்கப்பட்ட துயர்களை, துரோகத்தை மாத்திரமன்றி காதலையும் அடி ஆழத்து உணர்வுகளுடன் சொல்லில் வடித்திருக்கிறார். இரத்தமும் சதையுமாய் வாழ்ந்த, உணர்ச்சிகளுள் தோய்ந்தெழுந்த ஒரு இளைஞனின் வாழ்வும் மனப் போராட்டமும் கலந்த ஒன்றாக இக்கவிதைகள் அமைகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50658).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11699

வழித் தடம். கா.கந்தையா. கொழும்பு 11: க.கணேசரத்தினம், 72, 3ஆவது மாடி, CCSMC, 1வது பதிப்பு, டிசம்பர் 1993. (Colombo11: Lanka Asia Print (Pvt) Ltd., S-26, 3rd Floor, Central Super Market).

(2), 62 பக்கம், புகைப்படம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12 சமீ.

அமரர் கா.கந்தையாவின் கவிதைகளின் தொகுப்பு இது. பக்தியுள்ளம் கொண்ட ஒரு கவிஞனை இக்கவிதைகளில் தரிசிக்க முடிகின்றது. முழுமையை நோக்கி, இரவுபகலற்ற அந்தப் பரம இலக்கை நோக்கி அவர் செய்த யாத்திரையின் ஒவ்வொரு கணங்களையும் இக்கவிதைகளில் தரிசிக்கமுடிகின்றது. இக்கவிஞரின் நடையில் அவ்வப்போது துள்ளல், வேகம், தளர்வு, எல்லாமே காணப்படுகின்றன. வழியில் அவரது பாதங்களை வருடிய பசும்புல்லின் இதமான மென்மை, சுடுமணலின் வெம்மை, தைத்து அழவைத்த முட்களின் கூர்மை, காயப்படுத்தி ரணமாக்கிய கண்ணாடித் துண்டுகளின் கோரம் இவை அனைத்தும் நமது கண்களையும் உணர்ச்சிப் பெருக்கால் கலங்கவைக்கின்றன. புங்குடுதீவைச் சேர்ந்த அமரர் காசிப்பிள்ளை கந்தையா (17.8.1918-03.11.1993) அவர்களின் நினைவாக அவர் எழுதிவைத்த கவிதைகளைத் தாங்கியதாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22275).

11700

வழித்துணை. செ.சிவசுப்பிரமணியம். யாழ்ப்பாணம்: ஆசுகவி செல்லத்துரை சிவசுப்பிரமணியம், மூளாய், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: சாய்ராம் பிறின்டர்ஸ், சங்கானை).

v, 224 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

குப்பி விளக்கின் வெளிச்சத்தில் மனிதத்தைத் தேடும் தனது முயற்சிக்கு வழித்துணையாக அழைக்கிறார் இக்கவிஞர். மனிதத்தை மதித்து நடக்கின்ற மிகப்பெரிய இலக்கை அடைவதற்கு வழித்துணையாக இறைவனால் உணர்த்தப்பட்ட சில விடயங்களை நீண்ட காலமாக மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான கரும்பலகைகளில் எழுதிவைத்து கோவில் பக்தர்களின் மனதில் கருத்துக்களைத் தூவிவந்தவர் சுப்புறு மாஸ்டர் என்று அன்பாக அழைக்கப்பட்ட செ.சிவசுப்பிரமணியம். அவ்வாறு அவரால் எழுதப்பட்ட 2800க்கும் அதிகமான செய்யுள்களில் தேர்ந்த 1111 பாடல்களைத் தொகுத்து இந்நூலில் வெளியிட்டுள்ளார். ஒவ்வொன்றும் 111 செய்யுள்கள் கொண்ட 10 அத்தியாயங்களில் இவை இடம்பெற்றுள்ளன. மேலதிகமாக ஒரு செய்யுள் இணைத்து மொத்தம் 1111 செய்யுள்களாக்கியுள்ளார். இவர் சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியின் வசதிக் கட்டண ஆசிரியராகச் சிலகாலம் பணியாற்றிய பின்னர் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் இணைந்து சிலகாலம் பணியாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் ஸ்ரீலங்கா டெலிகொம் ஸ்தாபனத்தில் இணைந்து நீண்டகாலம் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிவந்துள்ளார்.

11701

வாத்து. சோலைக்கிளி. கனடா: காலம், 16 Hampstead Court, Markam, ONT L3R 3S7, 1வது பதிப்பு, ஜூலை 2007. (சென்னை 600 005: மணி ஆப்செட், 112, பெல்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி).

215 பக்கம், விலை: இந்திய ரூபா 125.00, அளவு: 21.5x13 சமீ.

தன் தனித்துவமான கவிதைப் படிமங்களால் ஈழத்து இலக்கிய கவிஞர்களில் தனித்துவமான இடத்தைப் பெற்றிருப்பவர் சோலைக்கிளி. பூவுலகின் நாயகர்களாகவும் உரிமையாளர்களாகவும் மனிதர்களே விளங்கவேண்டும் என்ற மானுட முதன்மைவாதத்தை நுட்பமாகவும் நளினமாகவும் கவித்துவப் பெருக்கோடு கேள்விக்குள்ளாக்கும் நவீன கவி சோலைக்கிளி. கிழக்கிலங்கையின் வாழ்வும் வளமும் வலியும் அவரது கவிதா உலகத்திற்கு எம்மை வழிநடத்தும் இயற்கை வழிகளாகின்றன. நவீனத்துவமும் விசித்திரமும் நூதனமும் கவிதையும் கற்பனைக்கும் அப்பாற்பட்ட படிமங்களோடு இணைவது சோலைக்கிளியின் சிறப்பு. இன்றைய போராட்டம் மனித நாகரீகத்தை கேள்விக்குள்ளாக்குகின்ற சூழலைத் தன் நுட்பமான பார்வையால் இங்கு கவிதையாக்கியுள்ளார். இது இவரது எட்டாவது கவிதைத் தொகுதி. இவரது முன்னைய தொகுதிகளான எட்டாவது நரகம், காகம் கலைத்த கனவு, ஆணிவேர் அறுந்த நான், பாம்பு நரம்பு மனிதன், பனியில் மொழி எழுதி, என்ன செப்பங்கா நீ ஆகிய நூல்களிலிருந்து தேர்ந்தவையும் பிரசுரமாகாத 18 புதிய கவிதைகளும் இத்தொகுதியில் இடம் பெற்றிருக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 42226).

11702

வாழ்த்தும் வணக்கமும்: கவிதைகள். வீணைமைந்தன் (இயற்பெயர்: கே.ரி. சண்முகராஜா). கனடா: வீணைக்கொடி வெளியீட்டகம், 425, Boulvard Hymam, Dollard-Des-Ormeaux (Quebec), H9B 1M1, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2015. (யாழ்ப்பாணம்: நோபிள் பிறின்ரேர்ஸ், இல. 817, ஆஸ்பத்திரி வீதி).

x, 11-88 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-42202-1-8.

அருள்மிகு திருமுருகன் பாடல்கள், மணவினை வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வணக்கம் செய்வோம் ஆகிய ஐந்து பிரிவுக்குள் அடக்கப்பெற்ற ஆசிரியரின் கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. கனடாவில் வாழும் ஈழத்தவரான வீணைமைந்தன் அவ்வப்போது தேவை கருதிப் புனைந்த கவிதைகள் இவை. ஆன்மீகத் துறையிலும் கலைத் துறையிலும் பிற சமூகப் பணிகளிலும் ஈடுபடும் பெரியோரின் பாராட்டு நிகழ்வுகளில் பாடப்பெற்றவையும், திருமண வைபவங்களில் மனையறம் சிறக்கப் பாடப்பெற்ற மங்கல வாழ்த்துக்களையும், தான் மதிக்கும் தலைவர்களின் மறைவையொட்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளில் பாடப்பெற்ற இரங்கற் பாடல்களையும், ஆலயங்கள் மீதும் கடவுளர் மீதும் பாடப்பெற்ற பக்திப்பாடல்களையும் உள்ளடக்கிய இத்தொகுப்பு, பல்வேறு வகைப்பட்ட உணர்வுகளையும் சித்திரிக்கின்றன.

11703

வாழ்வு விடியும்: கவிதைத் தொகுப்பு. நிலா தமிழின்தாசன். (இயற்பெயர்: மிக்கேல் அருள்மொழிராசா). மட்டக்களப்பு: எம்.அருள்மொழிராஜா, கல்லடி வீதி, களுதாவளை-01, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xix, 68 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 18x12 சமீ., ISBN: 978-955-54839-1-9.

நிலா தமிழின்தாசன் திருக்கோணமலையின் நிலாவெளியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மட்டக்களப்பு, களுதாவளையில் வாழ்ந்துவருபவர். 1976 முதல் கவிதைத் துறையில் ஈடுபட்டுவருகின்றார். கவிதை என்பது கவிஞனின் ஆத்மாவின் இராகம் என்பதை இக்கவிதைகளினூடு தெளிவாக வெளிப்படுத்துகின்றார். இத்தொகுப்பில் வாழ்வு விடியும், சமாதானம் செழிக்க வேண்டும், பாயட்டும் ஒளி வெள்ளம், முத்தமிடு நீயவளின் தாளை, பெண்ணென்ன சடப்பொருளா?, நிலவுகள் தேயலாமா?, வரமான தாய்ப்பாலே தரமாகும், காலை உயிர்ப்பழகு, தந்தை தெய்வம், இதுதான் உண்மை போன்ற தலைப்புகளில் வடிக்கப்பெற்ற ஆசிரியரின் 60 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

11704

வாழ்வுதனைத் தேடி. மு.ஆ.சுமன். வல்வெட்டித்துறை: மு.ஆனந்தராசா, சுகந்தினி வாசம், ஏ.ஜீ.ஏ. ஒழுங்கை, நெடியகாடு, 1வது பதிப்பு, புரட்டாதி 2008. (அல்வாய்: மதுரன் கிறாபிக்ஸ் அன்ட் ஒப்செட் பிரின்டேர்ஸ்).

(4), viii, 40 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ.

வலம்புரி நாழிதழில் தன் முதற் கவிதையைப் படைத்து வழங்கிய, யாழ். சிதம்பராக் கல்லூரியின் தரம் 13 கலைப்பிரிவில் கல்வி கற்கும் இளம் கவிஞர் மு.ஆனந்தராசா சுமனின் கன்னிக் கவிதைகளின் தொகுப்பு இது. கவிஞனின் எண்ணங்களினதும் சிந்தனைகளினதும் உணர்வுகளினதும் வெளிப்பாடாக இவை அமைகின்றன.

11705

வான் அலைகளில் தேன் துளிகள். என்.எம்.நூர்தீன். கொழும்பு 2: இளம்பிறை இசை மன்றம், A 58, சேர் ஹென்ரி டி மெல் மாவத்தை, 1வது பதிப்பு, மார்ச் 2001. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B புளூமென்டால் வீதி).

xix, 121 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-97374-0-6.

1948ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை வானொலியிலும் தொலைக்காட்சியிலும் வர்த்தக இசைத் தட்டுகளிலும் இடம்பெற்ற இசைக்கோ மூஷிக் நூரி அல்ஹாஜ் என்.எம்.நூர்தீன் அவர்கள் தாமே யாத்து, தாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையமைத்து, மெட்டமைத்துப் பாடியுள்ள இஸ்லாமிய கீதங்களும் பொதுப் பாடல்களும் கொண்ட தேர்ந்த தொகுப்பு இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29196).

11706

வான்மதி கவிதைகள்.ஷமீலா இஸ்மத். கொழும்பு 2: சஹ்லா பதிப்பகம், இல.68, கியூ வீதி, கொம்பனித் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 2015. (அச்சக விபரம் தரப்படவில்லை).

48 பக்கம், ஓவியங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-7945-00-8.

இக்கவிதைத் தொகுதி மூன்று பிரிவுகளைக் கொண்டது. முதலாவதாக வரும் மணிக்கவிதைகள் என்ற பிரிவில் 28 கவிதைகள் அடங்கியுள்ளன. அடுத்துள்ள மக்கள் கவிதைகள் என்ற பிரிவில் 17 கவிதைகளும், மூன்றாவதாகவுள்ள மார்க்கக் கவிதைகள் என்ற பிரிவில் இஸ்லாமிய வாழ்வியல் தொடர்பான 15 கவிதைகளுமாக மொத்தம் 60 கவிதைகள் இந்நூலில் அடங்கியுள்ளன. இலக்கிய ஈடுபாடு என்பதற்கு அப்பால், சமூக அரசியல் நிலவரங்களைப் பற்றிய தமது கருத்துக்களையும் எழுத்தில் பதிக்கவேண்டும் என்ற நோக்கில் இக்கவிதைகளை ஆசிரியர் வழங்கியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60904).

11707

வானத்தின் அமைதி குலைகிறது. வல்வைக் கமல் (இயற்பெயர்: சக்திவேல் கமலகாந்தன்). கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46வது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2015. (யாழ்ப்பாணம்: குரு பிறின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

(4), 66 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 19x12 சமீ., ISBN: 978-955-8354-57-7.

ஈழப்போராட்டம் கருக்கொண்ட பின்னர் பிறந்த ஓர் இளைஞன் போரினால் எத்தகைய உளைச்சல்களுக்கு உட்படுகிறான் என்பதைப் பாடுபொருளாகக் கொண்ட கவிதைத்தொகுதி இது. போராட்டத்தின் விளைவுகளால் அலைந்துழல் வாழ்வுக்கு ஆளான ஒரு தலைமுறையின் உணர்வுகள் இக்கவிதைகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. போரின் கொடுமையினால் பல இழப்புகளைச் சந்தித்து இடம்பெயர்ந்து வன்னியில் வாழ்ந்த காலத்திலும் நலன்புரி முகாம்களிலும் கவிஞர் பட்ட துன்ப துயரங்களின் சாட்சியாக இத்தொகுதியில் உள்ள கவிதைகளில் பல காணப்படுகின்றன. போரினால் அன்று வானத்தின் அமைதி குலைந்தது. போர் முடிந்த பின்னரும் இடப்பெயர்வு, அகதி வாழ்வு, ஊனம், காணாமல் போனோர், போர் வடுக்கள் போன்றவற்றால் வானத்தின் அமைதி குலைந்துள்ளது என்று கவிதை வரிகளில் தனது ஏக்கத்தைப் பதிவுசெய்துள்ளார். (ஞானம் பதிப்பக வெளியீட்டு இலக்கம் 36ஆக வெளிவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11708

விகடகவியின் கவிதைகள். மு.திருநாவுக்கரசு (புனைபெயர்: விகடகவி). யாழ்ப்பாணம்: முத்தையா திருநாவுக்கரசு, இல 127/7ஏ, கோவில் வீதி, 1வது பதிப்பு, 2012. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், இல. 430, காங்கேசன்துறை வீதி).

xviii, 218 பக்கம், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-54268-0-0.

உதயன்-சஞ்சீவி பத்திரிகைகளின் வாயிலாக "விகடகவி" என அறிமுகமான அளவெட்டியூர் மு.திருநாவுக்கரசு, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர். மன்னார், யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றியவர். தனது இளம் பராயத்தில் தமிழரசுக் கட்சி மேடைகளில் அரசியல் பிரச்சாரங்களில் ஈடுபட்டவர். இவர் எழுதி உதயனில் பிரசுரமாகிய கவிதைகளின் தொகுப்பு இந்நூலாகும். தனது 75ஆவது அகவையில் 09.11.2014 அன்று கொழும்பில் அமரத்துவமடைந்தார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 51347).

11709

விட்டு விடுதலை காண்: கவிதைத் தொகுதி. மன்னார் அமுதன் (இயற்பெயர்: ஜோசப் அமுதன் டானியல்). மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இல. 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, 2009. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட், ஸ்டேஷன் வீதி).

99 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-8715-56-7.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் பிரியா பிரசுரத் தொடரில் 51ஆவது நூலாக வெளியிடப்பட்டது. 47 கவிதைகள் கொண்ட இத்தொகுப்பில், கவித்துவ வீச்சும் உணர்ச்சி வெளிப்பாடும் கருத்தாழமும் கொண்ட கவிதைகள் பல இடம்பெற்றுள்ளன. வீரத்தையும் விவேகத்தையும் பாடும் கவிஞர் அழகியலையும் அழகாய்ப் பாடுகின்றார். காதலும், கனிரசமும், தாய்மையின் சிறப்பும் இவர் கவிதா வரிகளில் நர்த்தனமிடுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 49961).

11710

விடியலுக்கான விலாசங்கள்: போர்க்காலக் கவிதைகள். காத்தான்குடி பௌஸ். பாணந்துறை: காத்தான்குடி பௌஸ், 23/6, ஸைனி மன்ஸில், வத்தல்பொல, 1வது பதிப்பு, மார்ச் 2014. (பாணந்துறை: V4U அச்சக இல்லம், 6/1, சுற்றுவட்ட வீதி, ஹேனமுல்லை, பாணந்துறை).

108 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 18x12.5 சமீ.

முஸ்லிம்களின் போர்க்காலக் கவிதைகள் பற்றிய பல்வேறு விபரங்களை, இத்தொகுப்பின் 47 கவிதைகளின் வாயிலாக ஆசிரியர் இந்நூலில் வழங்கியுள்ளார். தாயகத்திலும் உலக அரங்கிலும் நடைபெறும் யுத்த நிகழ்வுகளின் அநீதிகள், சமூக அநீதிகள், குறிப்பாக இஸ்லாமிய உலகில் நடைபெறும் போர்க்கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறைகள் அநீதிகள் பற்றி இக்கவிதைகள் பேசுகின்றன. தாய்க்குலமே என்ற முதல் கவிதை பாலஸ்தீனிய தாய்மார்களுக்கு எதிராக சியோனிஸ்டுகளின் அட்டூழியம் பற்றிச் சொல்கிறது. தொடரும் கவிதைகளான திருடர்கள், கடலை நோக்கி, காந்தியின் இறப்புக்கு கண்ணீர் விடும் மலர்த்தட்டு, சுவனத்து ஷுஹதாக்கள், வரலாற்றின் முகவரிகள், முஸ்லிம்களாய் நாங்கள், சுபஹின் அதான், ஆயிரமாம் ஆண்டின் அறிவுரை, எலக்ஷன் ஸ்பெஷல், காலக்கவிஞனின் பேனா, கல்லறை கானங்கள், அமெரிக்காவிலிருந்து ஆப்கான் வரை, செக் பொயின்ட், கணனி வேண்டும், முத்தையா முரளி, அறிவாய் கேள், மன அளவு மதிப்பீடு, பிட்டு வாங்கிய குட்டு, புஸ் புஷ் புஸ், நோக்கம் நுணுக்கம், நோன்புப் பெருநாள், கொக்கா கோலா, ஒற்றுமைப் பெருநாள், கரைச்சலோ கரைச்சல், இனந்தெரியாதோன் மலிந்த இலங்கை, முஸ்லிம்களின் இனப் பிரச்சினை, நவயுக நடப்புக்கள், அமைதிப் பெருநாள், ஊரைப் பார்ப்போமா?, சதாம் ஒரு வீரன், உம்மத்தின் கண்ணீர், எங்கள் ஷுஹதாக்களின் இனிய நாள், விடை தா பெருநாளே, எழுச்சிகொள்ளும் இன்பநாள், எதிர்காலம் இஸ்லாத்திற்கே, சமாதானப் பெருநாள், முடிவுகள், கிழக்கு மக்களை கிண்டல் செய்யாதீர், பாபரி மஸ்ஜித்தும் பாரதத் தூக்கமும், அக்கினிக்குள் அல்குர் ஆன், கண்ணுறங்கலாம் கல்புறங்கலாமா? முஸ்லிம் எம் பீக்கள் முஸாபஹா செய்வார்களா? மழை முடிந்ததும் பொழுதும் விடிந்தது, மறக்க முடியாத மண்டேலா, எனத் தொடர்ந்து சமாதானத் தந்தை மண்டேலா என்ற இறுதிக் கவிதை வரையில் இக்கவிதைத் தொகுப்பில் பல்வேறு சமூக-அரசியல் கருத்துக்களையும் தனது ஆதங்கங்களையும் விரிந்த பார்வையுடன் இக்கவிஞர் பதிவுசெய்திருக்கிறார்.

11711

விடியலைத் தேடி: ஓர் ஈழத் தமிழனின் கனவு - கவிதைகள். முருகேசு மயில்வாகனன். கனடா: முருகேசு மயில்வாகனன், இல. 701, 240 வெலஸ்லி வீதி கிழக்கு, ரொரன்ரொ, ஒன்ராரியோ, M4X IG5, 1வது பதிப்பு, 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(2), 54 பக்கம், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

கொடிகாமம் அல்லாரையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கை வதிவிடமாகவும் கொண்டிருந்த நூலாசிரியர் 1958இல் இலங்கை அரசாங்கத்தில் தட்டெழுத்தாளராகப் பணியாற்றியவர். 1992இல் ஓய்வுபெற்ற பின்னர் புலம்பெயர்ந்து கனடாவில் குடியேறிய வேளையில் பண்டிதர் சங்கரப்பிள்ளை குமரேசையா அவர்களிடம் மரபுக் கவிதைகள் படைக்கக் கற்றறிந்தவர். தான் படைத்த கவிதைகளை இந்நூலுருவில் பதிவுசெய்து வழங்கியிருக்கிறார். இவரது ஆசானான மதுரைத் தமிழ்ப் பண்டிதர் திரு. சங்கரப்பிள்ளை குமரேசையா இந்நூலுக்கான மதிப்புரையையும் வழங்கியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47738, 60763).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11712

விடைக்குள் வராத வினாக்கள். தர்காநகர் ஸபா (இயற்பெயர்: தாஜ்தீன் முஹம்மட் ஸபா). தர்க்காநகர் 12090: படிப்பு வட்டம், இல. 9 டாக்டர் செய்க் பாஸி மாவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 1999. (பேருவளை: மாஸ் கிரப்பிக்ஸ் மீடியா, 63, பள்ளிவாசல் வீதி).

xvii, 77 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 18.5x12.5 சமீ.

தர்கா நகர் ஸபா என ஊரின் பெயரோடு தன்னை இணைத்துக் கொண்டு எழுதும் தாஜ்தீன் முஹம்மட் ஸபா, தர்கா நகரைச் சேர்ந்த, யூஸூப் மரிக்கார் தாஜ்தீன், அப்துல் கபூர் மரிக்கார் ஸித்தி ஸாஹிதியா தம்பதிகளின் மூத்த மகனாவார். 1973ம் ஆண்டு இலங்கை வங்கியில் இலிகிதராக பணியில் சேர்ந்த இவர் சுமார் 39 வருட காலமாக இலங்கை வங்கியில் வேலை பார்த்தார். தொழில்சார் ரீதியில் சிறந்ததொரு வங்கியியலாளரான இவர், இலங்கை வங்கியின் சென்னை கிளையில் பணியாற்றியவர். இலங்கை மத்திய வங்கியின் கட்டுப்பாட்டில் இயங்கும் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் சிரேஷ்ட அங்கத்துவராகவும், லண்டனில் இயங்கும் சர்வதேச தொழில்சார் முகாமையாளர் நிறுவனத்தின் அங்கத்தவருமானவர். தர்கா நகர் ஸாஹிரா கல்லூரியில் ஆரம்பக் கல்வியை பெற்ற இவர் க.பொ.த உயர்தரம் வரை இக்கல்லூரியிலேயே கற்றவர். கல்லூரியின் தமிழ் மற்றும் இஸ்லாமிய மன்றங்களின் தலைவர் மற்றும் செயலாளர் பதவிகளை வகித்த இவர் பாடசாலைக் காலத்திலேயே எழுத்துத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்தார். தினகரன் பத்திரிகை இவரின் கதை, கட்டுரை மற்றும் கவிதைகளை ஏற்றுப் பிரசுரித்து இவருக்கு களமமைத்துக் கொடுத்தது. 1970 ஆம் ஆண்டுகளில் இவரது ஆக்கங்கள் பொது ஊடகங்களில் வெளிவந்தன. 2002ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய, தமிழ் இலக்கிய மாநாட்டில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய பங்களிப்புக்காக இவரைப் பாராட்டி விருது வழங்கப்பட்டது. கவிஞர் தர்காநகர் ஸபாவின் கால்நூற்றாண்டு காலத்தின் கவியாக்கங்களைத் திரட்டிப் பதிவுக்குள்ளாக்கும் முயற்சியே இந்நூலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27226).

11713

விந்தையாய் விரியுதடி. ஆணி (இயற்பெயர்: ஆனந்த கு.ராமநாதன்). சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 ஜக்கரியா காலனி, முதல் தெரு, சூளைமேடு, 1வது பதிப்பு, டிசம்பர் 2012. (சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 ஜக்கரியா காலனி, முதல் தெரு, சூளைமேடு).

112 பக்கம், ஓவியங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-93-81322-09-3.

விந்தையாய் விரியுதடி என்ற இக்கவிதைத் தொகுப்பில் காதல் கவிதைகள், கடவுள்சார்ந்த கவிதைகள், ஈழத்தின் மண்சார்ந்த கவிதைகள் ஆகியன பல்வேறு கருத்தியல்கொண்ட மரபுக் கவிதைகளாக, சந்தங்களில் அமைந்து படிப்பவர்க்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழின்பத்தை வழங்கும்வகையில் தரப்பட்டுள்ளன. தன் இளமைக்காலத்தில் எழுதிவைத்தவையும் பிரசுரமானவையுமான கவிதைகளை விரிந்த தமிழகம் உள்ளிட்ட வாசகர் பரப்புக்கு விருந்தாக்கியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60760).

11714

விபுலானந்தர் பாவியம். செ.குணரெத்தினம் (மூலம்), ஈழத்துப் பூராடனார் (பதிப்பாசிரியர்). கனடா: நிழல் வெளியீடு, சீவன் பதிப்பகம், தொரன்ரோ, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1991. (கனடா: ஜீவா பதிப்பகம், றிப்ளக்ஸ் அச்சகம். 1183 பொரஸ்ட்வுட் டிரைவ், மிஸிஸ்சாகா, ஒன்ராரியோ L5C 1H6).

x, 26 பக்கம், விலை: கனேடிய டொலர் 5., அளவு: 20.5x13 சமீ.

மட்டக்களப்பு அமிர்தகழிவாழ் இலக்கியமணி கவிஞர் செ.குணரெத்தினம் அவர்களால் சுவாமி விபுலாநந்தர் பற்றிப் பாடப்பெற்ற பாவியம். மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு நினைவுவிழாச் சபையினரின் ஆதரவில் கனடா டொரண்டோ றிப்ளக்ஸ் அச்சகத்தினரின் அன்பளிப்பாக இந்நூல் விநியோகிக்கப் பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11132).

11715

விபுலானந்தர் மீட்சிப் பத்து. புலவர்மணி ஏ.பெரியதம்பிப் பிள்ளை. (மூலம், பொழிப்புரை, உரை), எப்.எக்ஸ்.சி.நடராசா (குறிப்புரை). மட்டக்களப்பு: புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம், 127, மத்திய வீதி, 3வது பதிப்பு, வைகாசி 1990, 1வது பதிப்பு, 1950, 2வது பதிப்பு, 1960. (மட்டக்களப்பு: சென்.ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).

(6), 18 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 24x18 சமீ.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் வேளையில் விபுலானந்த அடிகளார் சன்னி வாத சுரத்தினால் பீடிக்கப்பட்டிருந்தார். அவ்வேளை அதிலிருந்து நீங்கிக் குணம் பெறுகவென்று பன்னிருசீர் ஆசிரியவிருத்தத்தில் புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை பாடியதே இந்த மீட்சிப்பத்து. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14752).

11716

விலக்கப்பட்ட தாள்கள்: ஈழவாணி கவிதைகள். ஈழவாணி. சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 ஜக்கரியா காலனி, முதல் தெரு, சூளைமேடு, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 ஜக்கரியா காலனி, முதல் தெரு, சூளைமேடு).

72 பக்கம், ஓவியங்கள், விலை: இந்திய ரூபா 80., அளவு: 21x14 சமீ., ISBN: 978-93-81322-30-7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்புக்கள் அற்ற கவிதைத் தொகுதியாக இந்நூல் வெளிவந்துள்ளது. மனித உணர்வுகளை மொழியாக்கியுள்ள ஆசிரியர் அதனூடாகச் சிறந்த கவித்துவமுள்ள ஆக்கங்களை வழங்கியுள்ளார். எளிமையான மொழிநடையுடனும் சிறிய சிறிய சொற்களின் கோர்ப்புகளுடனும் இக்கவிதைகள் அழகிய வர்ணனைகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61288).

11717

விலங்கிடப்பட்டிருந்த நாட்கள். ஜிஃப்ரி ஹாஸன். வாழைச்சேனை-5: காகம், மஹ்மூட் ஆலிம் வீதி, 1வது பதிப்பு, 2013. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட், ஸ்டேஷன் வீதி).

72 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-955-4644-10-6.

இந்த கவிதைப் புத்தகத்தில் நாற்பது கவிதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தான் வாழும் சூழலையும் தான் பட்ட துயர்களையும் உணர்வூர்வமாக எழுத்துக்களாக்கிய இவர், போர்க்காலச்சூழலிலும் அதன் பின்னரான காலப்பகுதிகளையும் தனது எழுதுக்களூடாக ஆவணமாக்கி தந்துள்ளதுடன் கவிதைத் துறையில் தனக்கெனவொரு தனி இடத்தைத் தக்க வைத்திருக்கிறார். காகம் பதிப்பகம் இலங்கையின் வாழைச்சேனையைத் தளமாகக் கொண்டு இயங்கும் புத்தகப் பதிப்பு நிறுவனமாகும். எழுத்தாளர் ஏ. பி. எம். இத்ரீஸ், தனது சகோதரர்களின் உதவியுடன் 1998 ஆம் ஆண்டு இதனைத் தொடங்கினார். ஏபிஎம் மீடியா எனும் நிறுவனத்தின் துணை நிறுவனமாக இப்பதிப்பகம் செயற்பட்டு வருகிறது. ஜிஃப்ரி ஹாஸன் (1983) போரினால் முற்றிலும் சிதைக்கப்பட்ட பாலைநகர் என்ற சிறிய கிராமமொன்றில் பிறந்தவர். போரின் எல்லாவிதமான அடையாளங்களுக்கும் இன்றுவரை அழியாத சாட்சியாக நிற்கும் கிராமத்தில் அன்றாடம் நடந்தேறும் நிகழ்வுகளின் தாக்கம் இவரது எழுத்துக்கள். பாலைநகர் ஜிஃப்ரி என்ற பெயரில் கவிதைகள் எழுதத் தொடங்கி தற்போது ஜிஃப்ரிஹாஸன் என்ற பெயரில் எழுதி வருகிறார். குறிப்பிடத்தக்க சிறுகதைகளையும் கவிதைகளையும் இலக்கிய மதிப்பீடுகளையும் எழுதியுள்ளார். சமூகவியல் துறையில் பட்டம்பெற்று தற்போது ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54401).

11718

வீழ்ச்சிக் கும்மி. தாமரைத்தீவான் (இயற்பெயர்: சோ.இராசேந்திரம்). திருக்கோணமலை: கலைப்பிரியன் வெளியீடு, 1வது பதிப்பு, ஜூலை 2010. (திருக்கோணமலை: அஸ்ட்ரா பதிப்பகம்).

26 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 20x14 சமீ.

தமிழரின் பழம்பெரும் வரலாற்றையும், இலங்கையில் ஏற்பட்ட யுத்தம், பேச்சுவார்த்தை, அரசியல் நிலை, அழிவு, விலையேற்றம், இன அழிப்பு எனப் பல விடயங்களைக் கருப்பொருளாகக் கொண்ட நூறு பாடல்களைக் கொண்ட கவிதை நூல். "கும்மியடிக்கவும் கூடிப் படிக்கவும் கூழைக் கருத்தை விழுத்திடவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மொழி கொண்டொரு தேடல் புரிந்தனன் சிந்தைக்கெடாவிடில் வீழ்ந்திடுமே" என்று ஆசிரியர் தனது கவிதை யாப்பின் நோக்கத்தை விளக்குகின்றார். இன்றைய ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் அரசியல் பிரச்சினைகளையும், அவர்கள் முகம்கொடுக்கவேண்டியுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளையும் தன் கவிதைகளில் தெளிவாகச் சொல்கிறார். இது ஒரு வரலாற்று இலக்கியப்பதிவு.

11719

வெள்ளையில் ஒரு புள்ளி: சிறு கவிதைகள். தாஸிம் அஹமது. கொழும்பு 12: கவின் கமல், கமல் பிரதர்ஸ் பப்ளிகேஷன்ஸ், 75/45, அப்துல் ஹமீது வீதி, 1வது பதிப்பு, மே 1982. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(16), 32 பக்கம், விலை: ரூபா 57.50, அளவு: 18.5x13 சமீ.

1951இல் பிறந்த கல்முனைக் கவிஞர் தாஸிம் அஹமது அவர்களால் 1974ம் ஆண்டுகளில் எழுதப்பட்ட இக்கவிதைகள் தனித்தனிக் கருப்பொருள்களில் அமைந்தவை. வெள்ளையில் ஒரு புள்ளி, தியாகம், சவர்க்காரம், கண்ணாடி, நிறைகுடம், புத்தகப் பூச்சி, உணர்ச்சி, சிலை, பற்பேதம், நுளம்பு, இருள், முந்திரிக் கொட்டைகளே, முத்திரை, சாத்திரம்?, முதல் மாணாக்கர், வௌவால்களே, மரபுக் கவிதை/புதுக் கவிதை, சோதனை, பனி, விழிப்புணர்ச்சி, நப்பாசை, தீண்டா நெருப்பு, முனிவன், மாலை, சுயநலம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21627).

11720

வெறிச்சோடும் மனங்கள். வெ.துஷ்யந்தன். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, ஜுன் 2010. (பருத்தித்துறை: சதாபொன்ஸ் நிறுவனம்).

xvii, 47 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

ஜீவநதியின் நான்காவது வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூல் வடமராட்சி, அல்வாயைச் சேர்ந்த இளங்கவிஞன் வெற்றிவேல் துஷ்யந்தனின் கன்னிப் படைப்பாகும். ஜீவநதி சஞ்சிகையின் துணை ஆசிரியரான இவர் 2005இல் வலம்புரி நாளிதழில் தன் முதலாவது கவிதை பிரசுரமாகக் கண்டவர். "நிதுசி" என்ற புனைபெயரிலும் பின்னாளில் எழுதிவருபவர். 2005-2010 காலகட்டத்தில் தான் எழுதிய கவிதைகளில் தேர்ந்த 25 கவிதைகளை இந்நூலில் வழங்கியுள்ளார். நாம் வாழும் சூழல், போரின் வலி, காதல் ஆகியவற்றைப் பாடுபொருளாகக் கொண்டிருக்கிறார். அநீதிகளைக் கண்டு துடிக்கும் கோபாவேசம் இவரது கவிதைகளில் ஆங்காங்கே வெளிப்படுத்தப்படுகின்றது. நூலாசிரியர் வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இசை நாடகக் கலையில் ஈடுபாடு கொண்டவர். இது இவரது முதலாவது நூல். கடந்த 5 ஆண்டுகளாக இவர் எழுதிய கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சமகால நிகழ்வுகள், காதல் உணர்வுகள், சமூக முரண்பாடுகள், போரின் எச்சங்கள் என்பன இக்கவிதைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொனிப் பொருள்களாகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 53361).

11721

வேரின் பிரசவங்கள்.சி.கிருஷ்ணபிரியன். ஹல்கிறனோயா: புதிய மலையகம், 50/9, இராகலை பசார், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2011. (கொழும்பு 11: World Vision Graphics).

(2), 126 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ.

மலையக எழுச்சிப் போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி வாழ்ந்தவர் தோழர் சிவசூரிய நாராயணசாமி. நாராணயன் என்று நண்பர்களால் அறியப்பட்ட அவரது மறைவின் முதலாம் ஆண்டு 12.8.2011இல் நினைவுகூரப்பெற்றது. அத்தருணம் அவரது மூத்த மகனான கிருஷ்ணபிரியனின் கவிதைகளைத் தொகுத்து வெளியிடும் பணியில் நினைவுக்குழு செயற்பட்டுள்ளது. அவ்வகையில் இந்நூல் சிறப்பாக வெளிவந்துள்ளது. உள்நாட்டுப்போர் உக்கிரமாக நடந்துகொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் இக்கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. இவை கவிஞரின் உலக நோக்கு, போராட்ட அனுபவங்கள், சிறை அனுபவங்கள், போர்ச் சூழல் இவரிடம் ஏற்படுத்திய அதிர்வுகள், ஆதங்கங்கள், கோபங்கள் என்பவற்றின் வெளிப்பாடு களாகவே பெரும்பாலும் அமைகின்றன. அரச ஒடுக்குமுறையின் காரணமாக இவர் 14.2.2007இல் கைதுசெய்யப்பட்டு அனுபவித்த சிறைக்கொடுமையின் இடையிலும் இவர்கொண்ட தளராத மன உறுதி என்பவற்றையும் நமக்குக் கூறுகின்றன. போராட்ட அழகியல் எவ்வாறானது என்பதை கவிஞர் கிருஷ்ணபிரியன் இக்கவிதைகளில் காட்டிச் சென்றுள்ளார்.

11722

வேருக்காய் விசும்பும் பூக்கள்: கவிதைத் தொகுப்பு. அபிதவன். கோயமுத்தூர்: ஈழத் தோழர்கள், நேரு கலை மற்றும்அறிவியல் கல்லூரி, 1வது பதிப்பு, மார்ச் 2010. (கோயமத்தூர் 12: ஜெயின் அச்சகம், 5, 6-குறுக்கு வீதி, காந்திபுரம்).

88 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 20x14 சமீ.

ஈழத்தமிழரின் சோகங்களையும் வலிகளையும் அழகாய் பிரதிபலித்த இந்நூலை எழுதியவர் ஈழ மாணவர் அபிதவன். கோவை நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இறுதியாண்டு பயின்று வருகிறார். நல்ல தமிழில் அழகாய் நேர்த்தியாகவும் தன் முதல் பதிவை பதித்துள்ள அபிதவனின் இக்கவிதை தொகுதியின் வெளியீட்டு விழா 14-3-2010 அன்று தமிழகத்தில், கோவை பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது. கண்கெட்ட பிறகு, வலிது எது? கல்லறை தழுவும் கைகள், தீக்குச்சி அல்ல, இளைப்பாற மறுக்கும் இருப்பு, முள் விளைச்சல், வெற்றி வரை விழித்திரு, கார்த்திகை இரவுகள், காவியப் பெண்மைகள், மரணத்தை மறுதலிக்கும் மழலை, கேளாதிருங்கள்-வாளாதிருங்கள், வடக்கிற்கு வசந்தம், குவேனியின் குயில்களும் விஜயனின் காக்கைகளும், கனமானதொரு காத்திருப்பு, உரத்துச் சொல்லுங்கள், எல்லைகள் ஏன்? பிரிவையும் பிரிவோம் இனி, காகிதப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்களின் கனமான காத்திருப்பு, நான் அழுது அம்மா சிரித்து, தோழமை சினந்த பொழுது, வீடுவந்து சேரும் இந்த வேளாண்மை, அசோக வனத்திலிருந்து அயோத்யாவுக்கு, எனக்கும் ஓர் காதலி, மனமெல்லாம் பொன்னானால் மண்ணெல்லாம் விண்ணாகும், தனிக்காரணத் தகுதி ஆகிய தலைப்புகளில் 25 கவிதைகள் இந்நூலில் இடம்பெறுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50296).

11723

வேலி: கவிதைத் தொகுப்பு. வி.ஜெகநாதன். திருக்கோணமலை: கீழைத்தென்றல் கலாமன்றம், 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (கொழும்பு: கீதா பப்ளிக்கேஷன்ஸ்).

xv, 98 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 20x14 சமீ.

கீழைத்தென்றல் கலாமன்றத்தின் மூன்றாவது வெளியீடாக இக்கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது. கவிதைவழியே சொல்லமுனையும் விடயம் குறித்த தெளிவும், கருத்தாழமும், கருத்தாடலும், அவற்றை வெளிப்படுத்தும் உத்திகளும் இப் படைப்பாளியிடம் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்காட்டிநிற்கின்றன. நூலின் அட்டைப்பட ஓவியத்தை திருக்கோணமலை அருள்பாஸ்கரனும், கவிதைகளுக்குப் பொருத்தமான உருவகச் சித்திரங்களை செல்வன் யூட்சன் அவர்களும் திட்டியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32168).

11724

வேனில் விழா. சோ.இளமுருகனார். யாழ்ப்பாணம்: செ.யோ.இளையதம்பி, அமைச்சர், இலக்கியக்கழகம், புலவரகம், நவாலி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம், 351, காங்கேசன்துறை வீதி).

vi, 30 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

அங்கத இலக்கிய நூலான வேனில் விழா நவாலிக் கிழார் பண்டிதர் சோ.இளமுருகனாரின் சமூகம் சார்ந்த அங்கத இலக்கியப் பாக்களைக் கொண்டது. இத்தகைய பாக்களை முன்னரும் பாடியுள்ளார். அரங்கேற்று வைபவம்- சுத்தானந்த அடிகளார் எழுதிய தமிழுணர்ச்சி என்ற நூலில் தமிழ்மொழி பற்றிக் குறிப்பிட்டிருந்த கருத்துக்கு மறுப்புத் தெரிவித்து எழுதப்பட்டதாகும். தேவி திருமணம்- ஐக்கிய தேசியக் கட்சியினர் தமிழ் இனத்திற்குச் செய்த இன்னல்களை விபரித்துக் கூறுவதாகும். கலைச்சொல் வைபவம்- இலங்கை அரசு நிறுவியிருந்த கலைச்சொல்லாக்கக் குழுவின் இயலாமையையும் அறிவுக் குறைபாட்டையும் எள்ளிநகையாடுகின்றது. வெள்ளணி விழா- தமிழுணர்ந்த புலவர்க்கு அதனை உணராத மடையர்கள் சிலர் சேர்ந்து பட்டம் வழங்கிப் பாராட்டும் பேதமையைப் பற்றிக் கூறுகின்றது. வானப்பாடி வைபவம்- இலங்கை வானொலியின் "தேடியோ சில்லோன்" தனி மாண்பு பற்றிப் புகல்வது. இவ்வாறே இந்நூலின் வேனில் விழா எனப்படும் "பிழா விழா" பற்றிப் புலவர் அங்கதச் சுவைபட விளக்குகின்றார். "சித்திரை வைகாசி ஆனி ஆடி மாதங்களிலே பனையடிதோறும் சிறுகுடில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவிப் பிழாக்கொடியெடுத்து வேனில்விழா அயரத் தொடங்கினர்" என்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10737).

11725

ஜன்னல் ஓரத்து நிலா. த.ரூபன். திருச்சி 620003: இனிய நந்தவனம் பதிப்பகம், எண் 17, பாய்க்கார தெரு, உறையூர், 1வது பதிப்பு, ஜூலை 2015. (சென்னை: சாய் தென்றல் பிரின்டர்ஸ்).

(15), 128 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 80., அளவு: 21.5x14 சமீ.

ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து மலேசிய மண்ணில் பொருளாதாரத் தேடலுக்காக வாழ்வியலை அமைத்துக்கொண்ட இக்கவிஞரின் மனதில் தான் பிறந்த மண்ணின் மணம் மாறாமல் இருப்பதைக் கவிதைகளில் காண்கின்றார். ஈழம் குறித்த கவலை, தாய் மகன் உறவு, காதல் அனுபவம், உழைப்பு, கல்வி, விவசாயம், பெண்கள் முன்னேற்றம் எனப் பல கருத்தாடல்களை இக்கவிதைகளில் முன்வைப்பதுடன் இக்கவிஞர் தன்னைப் பாதித்த நிகழ்வுக் குறிப்புகளையும், சமகால சமூக அவலங்களையும், தான் பார்த்து வியந்த, உணர்ந்த சம்பவங்களையும் அனுபவங்களையும் தன் கவிதைகளுக்கான பாடுபொருளாகக் காண்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 249076).

மேலும் பார்க்க: 11267, 11268

894.8(11) மொழிபெயர்ப்புக் கவிதைகள்

11726

இன ஐக்கியம்: கவிதைகள். தெனகம சிரிவர்தன (பதிப்பாசிரியர்). மாத்தறை: மக்கள் சமாதான இலக்கிய மன்றம், 52B, தர்மரத்ன மாவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 1996. (மஹரகம: தரஞ்சீ பிரின்டர்ஸ், ஹைலெவல் வீதி, நாவின்ன).

(12), 80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-9430-04-1.

எழுத்தாளர் தெனகம சிரிவர்தன மக்கள் சமாதான இலக்கிய மன்றத்தின் செயலாளராக இருந்த வேளையில், அம்மன்றத்தின் ஆதரவில் நடத்தப்பெற்ற கவிதைப் போட்டிக்கு அனுப்பிவைக்கப்பட்ட இன ஐக்கியம் தொடர்பான கவிதைகளின் தொகுப்பு. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14794).

11727

உக்ரேனிய அறிஞர் இவன் ஃபிராங்கோ கவிதைகள். இவன் ஃபிராங்கோ (மூலம்), கே.கணேஷ் (தமிழாக்கம்). சென்னை 600024: இளவழகன் பதிப்பகம், 4, இரண்டாவது தெரு, ஆண்டவர் நகர், கோடம்பாக்கம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1994. (சென்னை 5: கண்ணப்பா ஆர்ட் பிரின்டர்ஸ்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8), 9-48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12.5 சமீ.

உக்ரேனிய கவிஞரான இவன் ஃபிராங்கோ (1856-1916) எழுதிய கவிதைகளின் தமிழாக்கம். இதில் (The Fortune Teller) *குறத்தி சொன்ன குறி,* (The Spirit of revolt) *எழுச்சியின் இயல்பு,* (From the Prison Dock) *கைதிக் கூண்டில் இருந்து,* (To Comrades from Prison) *சிறை சென்றுவந்த தோழர்களுக்கு,* (Decree against Famine) *பஞ்சத்தைப் போக்கிய விந்தை,* (Reflections of a Turning Point) *திருப்புமுனையின் நிழல்கள்,* (A Parable about Foolishness) *பறவையின் அறிவுரை,* (Emigrants) *குடிபெயர்வோர்,* (What is in you) *உன்னுள்ளே உள்ளது,* (Songs of Distress) *துயரப் பாடல்கள்,* (Welcome Spring) *வசந்தமே வருக,* (Thunder Storms) *இடி இடிக்குது,* (Thoughts Children) *எண்ணக் குழந்தைகள்,* (My beloved Ukraine) *என் அன்புமிகு உக்ரேன்,* (The World is asleep) *உலகம் உறங்குகிறது,* (Forty years) *நாற்பது ஆண்டுகள்,* (Why be silent?) *மௌனம் ஏன்,* (The Path makers) *நடைபாதை அமைப்போர் ஆகிய கவிதைகள் இத்தொகுப்பில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21167).*

11728

உக்ரேனிய மகாகவி தராஸ் ஷெவ்சேன்கோ கவிதைகள். *தராஸ் ஷெவ்சேன்கோ (மூலம்), கே.கணேஷ் (தமிழாக்கம்). சென்னை 600098: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டெட், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், 1வது பதிப்பு, ஜூலை 1993. (சென்னை 600014: பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 142, ஜானிஜான்கான் ரோடு).*

183 பக்கம், விலை: இந்திய ரூபா 33., அளவு: 18x12 சமீ., ISBN*: 81-234-0173-6.*

உக்ரேனிய மகாகவி தராஸ் ஷெவ்சேன்கோ எழுதிய 33 கவிதைகளின் தமிழாக்கம் இது. மோகினி மாயை, கதெரினா, நெட்டிலிங்கம், என் எண்ணங்களே, வாயாடிப்பாணன், நீரில் மூழ்கிய நங்கை, ஒரு வேடிக்கையான கனவு, பணிப்பெண், காக்கஸஸ், காலம் கழிகிறது, இறுதி வேண்டுகோள், அக்கறை இல்லை, குடிசையின் பின்னால், ஆண்டுகள் பதின்மூன்று அப்பொழுது, அந்நியமாம் நாட்டினிலே, மீண்டும் வருக கவிதை பாட, ஜார்கள், இவ்வுலகச் சொர்க்கத்தில், இளைய தலைமுறை, ஆண்டைகளே, இறைவனிடம் கேட்பவை, கவிதைத் தேவி, புகழ், விதி, ஒரு கனவு, உடல்நலக் குறைவு எனக்கில்லை, நாட்டிற்காய், ஓ இறைவா, வேண்டுதல் 1, வேண்டுதல் 2, உழைக்கின்ற உள்ளங்கள், ஆர்க்கிமிடீஸ் கலீலியோ, நாளும் நகர்கிறது, காலமும் வந்தது, ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31399).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8(2) தமிழ் நாடகங்கள்

11729

கவியின் காதல்: நாடகங்கள். வீணைமைந்தன் (இயற்பெயர்: கே.ரி.சண்முகராஜா). கனடா: வீணைக்கொடி வெளியீட்டகம், 425, Boulvard Hymam, Dollard-Des-Ormeaux (Quebec), H9B 1M1, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2015. (யாழ்ப்பாணம்: நோபிள் பிறின்ரேர்ஸ், இல. 817, ஆஸ்பத்திரி வீதி).

xvi, 88 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x12 சமீ., ISBN: 978-955-42202-0-1.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் ஆசிரியரின் வானொலி, மேடை நாடகங்களின் தொகுப்பு. வீரன் வாஞ்சிநாதன், கவியின் காதல், காதல் ஜோதி, என்று தணியும் இந்த சுதந்திர தாகம், பார்த்திபன் கனவு, இராஜ தண்டனை ஆகிய ஆறு நாடகங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. வீரன் வாஞ்சிநாதன், மண்ணுக்காகத் தன் இன்னுயிர் ஈந்த போராளிகளைப் பற்றியது. கவியின் காதல், வரலாற்றுக் காதலர்களான அம்பிகாபதி-அமராவதி ஆகியோரின் காதல் வாழ்வின் கடைசி அத்தியாயத்தைச் சொல்கின்றது. காதல் ஜோதி, சக்கரவர்த்தி அக்பரின் ஆணவத்திற்குப் பலியான அனார்கலீ-சலீம் காதல்ஜோடியின் வாழ்வின் சில பக்கங்கள் பற்றியது. என்று தணியும் இந்த சுதந்திர தாகம், போராட்டக் கருவை மையமாகக் கொண்ட மற்றொரு நாடகம். பார்த்திபன் கனவு, பாசத்துக்கு மட்டும் தான் பெண் என்ற சமூகப் பார்வையிலிருந்து விலகி போர்ப் பாசறைக்கும் வீரப்பெண் தேவை என்ற கருத்தினை வலியுறுத்துகின்றது. இறுதி நாடகமான இராஜ தண்டனை, சக்கரவர்த்தி அசோகனின் வரலாற்றைச் சொல்கின்றது. மானிப்பாயில் பிறந்த கே.ரி.சண்முகராஜா, சங்கானையில் வளர்ந்து, காங்கேசன் துறையில் தன் கல்வியைப் பெற்றவர். தற்போது கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்.

11730

சாகுந்தல நாடகம். மறைமலை அடிகள். வல்வெட்டித்துறை: ஜனனி வெளியீட்டகம், புது வளவு, பொலிகண்டி, மீள் பதிப்பு, 2012, 5வது பதிப்பு, 1957. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

128 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x15 சமீ.

நன்னூல் கூறும் நல்லாசிரியர்க்குரிய மலைப்பண்பு அனைத்தையும் கொண்டவர் மறைமலையடிகள். அளக்க முடியாத பரந்த பல்துறை அறிவு, அவற்றால் விளைந்த பெருமிதம், அசைக்க முடியாத தமிழ்ப் பற்று, தமிழ்த் தேர்ச்சி, கண்டோரைக் கவரும் தோற்றம், வறுமையிலும் செம்மை, தோண்டத் தோண்டக் குறையா அறிவு வளம், இவற்றின் மொத்த உருவே மறைமலையடிகள். மறைமலை அடிகள் நாடகவடிவில் இயற்றிய சாகுந்தலை-துஷியந்தன் கதையே இதுவாகும். அத்தினாபுர மன்னன் துஷ்யந்தன் இந்நாடகத்தின் தலைவனாவான். அவனுடன் துறவோர் தலைவன்-கண்ணுவர், சகுந்தலையின் வளர்ப்புத் தந்தையும் மாரிசர் எனப் பெயர்பெற்றவருமான காசியபர், துஷ்யந்தன் உடனுறைவோனான விதூஷகன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துஷ்யந்தனின் அன்னையின் செய்தி கொண்டுவருவோனான கரபகன், துஷ்யந்தனின் புதல்வன் பரதன் எனப்பலர் இந்நாடக பாத்திரங்களாவர்.

11731

நவீன கோவலன் சரித்திரம். வி.நடராஜக் கவிராயர். கொழும்பு: சரஸ்வதி புத்தகசாலை, 175, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, (ஆண்டு விபரம், அச்சக விபரம் தரப்படவில்லை).

64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

T.P.ராஜலெட்சுமி, K.B.சுந்தராம்பாள், S.G.கிட்டப்பா, S.V.சுப்பையா பாகவதர், P.S.வேல்நாயர், ஆரியகான K.S.அனந்த நாராயண ஐயர், P.S.கோவிந்தன் இவர்கள் பாடி நடித்துவந்த "நவீன கோவலன் சரித்திரம்" என்ற நாடகத்தின் நூல்வடிவம் இது. நவீன நாடக ரஞ்சிதமலர் தொடரில் இரண்டாவது நூல். காவிரிப்பூம் பட்டினம், திருக்கடையூர், பாண்டிநாடு ஆகியவை நாடகத்தின் நிகழிடங்களாகும். மாச்சோட்டான் செட்டியாரின் மகன் கோவலன், மாணாக்கன் செட்டியார் மகள் கண்ணகி, திருக்கடையூர் தாசியான மாதவி ஆகியோர் பிரதான பாத்திரங்களாவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21800).

11732

மங்கையராய்ப் பிறப்பதற்கே: மேடை நாடகங்கள் நான்கின் தொகுப்பு. வெ.தவராஜா. மட்டக்களப்பு: அனாமிகா, இல. 48, பெய்லி முதலாம் குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, பெப்ரவரி 1997. (சென்னை 14: வே.கருணாநிதி, பார்க்கர் கம்பியூட்டர்ஸ்).

48 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x14 சமீ.

நித்தமும் அமாவாசை, தந்தை சொல்மிக்க மந்திரமில்லை, மங்கையராய்ப் பிறப்பதற்கே, நிகரென ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட பெண்ணியச் சிந்தனைகள் சார்ந்த இரு நாடகங்கள் உள்ளிட்ட நான்கு நாடகங்களை இந் நூல் உள்ளடக்கியது. வெ.தவராஜா ஆரையம்பதி மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேசச் செயலாளராக, இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23030).

11733

முத்துக்குமாரன் நாடகங்கள். எஸ்.முத்துக்குமாரன். மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64 கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, 2012. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

156 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-8715-90-1.

மட்டக்களப்பு துறைநீலாவணையில் 14/3/1939இல் பிறந்து கல்லடியை வதிவிடமாகக் கொண்டவர் கலாபூஷணம் சாமித்தம்பி முத்துக்குமாரன். பதிவாளர்நாயகம் திணைக்களத்தில் உதவிப் பதிவாளர் நாயகமாக பதவிவகித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998இல் ஓய்வுபெற்றவர். மகாபாரதம், நளவெண்பா, பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம், கம்சரம்மானை, குறுந்தொகை போன்ற இலக்கியக் காட்சிகளிலிருந்து கருவெடுத்துப் பல வானொலி நாடகங்களை உருவாக்கித்தந்தவர். இவரது பக்தி இலக்கிய நாடகநூலாக இது வெளிவந்துள்ளது. இதிலுள்ள நான்கு நாடகங்களும் ஸ்ரீ மகா விஷ்ணுவையும் அவரது அவதாரமான ஸ்ரீ கிருஷ்ண பகவானையும் போற்றிப் பணியும் நாடகங்களாக அமைந்துள்ளன. தனது ஆழ்ந்த சமய அறிவு, நம்பிக்கைகளின் பயனாக பயனுள்ள பல சமயக் கருத்துக்களையும் தத்துவங்களையும் இந்த நாடகங்களில் பதிவுசெய்துள்ளார். எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 75ஆவது வெளியீடாக இது அமைந்துள்ளது.

11734

விடியலின் கீதம்: நாடகங்கள். P.A.C.ஆனந்தராஜா. வவுனியா: மனோ சாந்தி வெளியீடு, ஹொரவபொத்தான வீதி, இறம்பைக்குளம், 1வது பதிப்பு, டிசம்பர் 2012. (வவுனியா: அகரம் பிரின்டர்ஸ், 54, கந்தசாமி கோவில் வீதி).

70 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-1862-01-5.

இந்நூலில் தேடுதல், விடியலின் கீதம், ஜெரூசல யாத்திரை, இதயத்தில் இடம், உயிர்த்த உள்ளங்கள் ஆகிய ஐந்து நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் ஆசிரியராகவும் பலாலி மற்றும் பெரியவிளான் அரசினர் பாடசாலைகளில் அதிபராகவும் பணியாற்றிய நூலாசிரியர் P.A.C. ஆனந்தராஜா, விஞ்ஞானப் பட்டதாரியும், உளவளத்துணை பயிற்சியாளருமாவார். அரங்கியல் செயற்பாடுகளில் ஈடுபாடு காட்டிவந்த இவர் யாழ்ப்பாணம் சாந்தியகத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றியவர். உள்ளகப் புலப்பெயர்வின் காரணமாக வவுனியாவில் குடியேறிய இவர் உளவளத்துணையிலும் அரங்கியல்துறையிலும் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றார். இந்நூலில் உள்ள நாடகங்களின் கதைக்கருக்கள் சமூகத்தில் உளவியல் மாற்றத்தை வேண்டி நிற்கின்றன. "தேடுதல்" என்ற கதை, ஒரு மனிதனின் தேடுதல் வேட்கையின் அவசியத்தை சிறுவர்களிடையே பதியம் வைப்பதாக அமைகின்றது. "விடியலின் கீதம்", விடியலின் கீதத்தைப் பாடும் பாவத்திலிருந்து மன்னிக்கப்பெற்ற பெண் தன் இயேசு நாயகரைத் தேடியலையும் தாகத்தைப் பிரதிபலிக்கின்றது. விடியலின் கீதம் இழப்பில் மூழ்கிய மரிய மக்தலேனா அன்பின் களிப்பில் பாடியாடுவதைக் காணலாம். "ஜெரூசல யாத்திரை" இயேசுவின் பிறப்பின் பொருளைப் புரிந்துகொள்ள எடுக்கப்படும் பயணமாகும். நத்தார் விழாவும் யேசுவின் பிறப்பும் வியாபார விழாவாகியுள்ள இன்றைய நிலையில் உண்மையான அர்த்தத்தை அப்பாவும் பிள்ளைகளும் கண்டறிவதாக முடிவுறுகின்றது. "இதயத்தில் இடம்" என்ற நாடகம் இதயத்தில் அன்புக்கு இடமளிக்காமல் பணத்தாசை பிடித்தலையும் ஒரு விடுதியாளரையும் அவரிடம் பணியாற்றும் ஏழைப் பணியாளனையும் சுற்றிப் பின்னப்பட்ட கதையாகும். "உயிர்த்த உள்ளங்கள்" என்ற நாடகக்கதை கிறீஸ்துவின் உயிர்ப்பு விழாவில் (ஈஸ்டர்) சிறுபிள்ளைத் தனமாகச் சண்டையிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்களையும் அவர்களுக்கு மன்னிப்பைத் தேடிப் பாடம் புகட்டும் சின்னஞ்சிறிசுகளையும் சுற்றிப் பின்னப்பட்டது.

11735

விடிவு: நாடகம். ஜெக்கியா ஜுனைதீன். றாகமை: ஷாமிலா பதிப்பகம், 216/10-B, Mangala Mawatte, Magammana, Pulinathalarama Road, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 13: விக்ரம் பிரின்டர்ஸ்).

xx, 36 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-96265-8-2.

போலியோ நோயினால் அங்கவீனமான "காமில்" என்ற சிறுவனின் கதாபாத்திரத்தையும், அச்சக உரிமையாளரான அமரதுங்கவின் கண்பார்வையற்ற மகளான "மாலனி" என்ற பாத்திரத்தையும் சுற்றிப் பின்னப்பட்ட கதையம்சம் கொண்ட நாடகம். இலங்கைச் சமூகத்தில் மாற்றுத் திறனாளிகளையிட்ட விழிப்புணர்வினை இந்நாடகம் ஏற்படுத்துகின்றது. முன்னர் 1989இல் இவர் எழுதிய "ஷாமிலாவின் இதய ராகம்" 2001 வரை நான்கு பதிப்புகளைக் கண்டது. இவரது நாடக நூல்களான தீர்வும் தீர்ப்பும், எனது வானொலி நாடகங்கள் ஆகியவை பெரிதும் பேசப்பட்டவை.

894.8(21) மொழிபெயர்ப்பு நாடகங்கள்

11736

அயிசியலிசின் நான்கு நாடகங்கள்: முதலாவது தொகுதி. அயிசியலிஸ் (கிரேக்க மூலம்), ஈழத்துப் பூராடனார் (தமிழாக்கம்), எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா: ஜீவா பதிப்பகம், 1108 Bay Street, Toronto, Ontario M5S 2W9, 1வது பதிப்பு, ஆவணி 1990. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், 1365 Midway Blvd, Unit No.24, மிஸிஸாகா L5C 2J5, ஒன்ராரியோ).

xiv, 133 பக்கம், விலை: கனேடிய டொலர் 25., அளவு: 21x13.5 சமீ.

ஆதிக் கிரேக்க காவியத் தொடரில் முதலாவது தொகுதியாக வெளிவந்துள்ள இந்த மொழிபெயர்ப்பு நாடகத் தொகுதியில் கிரேக்கக் கவிஞரான அயிசியலிசின் நான்கு நாடகங்களின் தமிழாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இவை மன்றாடும் மாதர்கள், பாரசீகர், தீபிசிற்கெதிரான எழுவர், கட்டுண்ட பிரமத்தியூஸ் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11314).

11737

அயிசியலிசின் முத்தொடர் நாடகங்கள்: பகுதி இரண்டு. அயிசியலிஸ் (கிரேக்க மூலம்), ஈழத்துப் பூராடனார் (தமிழாக்கம்), எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா: ஜீவா பதிப்பகம், 1108 Bay Street, Toronto, Ontario M5S 2W9, 1வது பதிப்பு, வைகாசி 1990. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், 1365 Midway Blvd, Unit No.24, மிஸிஸாகா L5C 2J5, ஒன்ராரியோ).

xx, 132 பக்கம், விலை: கனேடிய டொலர் 25., அளவு: 21x13.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக் கிரேக்க நாடகத் தொடரில் இரண்டாவது தொகுதியாக வெளிவந்துள்ள இந்த மொழிபெயர்ப்புத் தொகுதியில் கிரெக்கக் கவிஞரான அயிசியலிசின் மூன்று நாடகங்களின் தமிழாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. அகாமெமேனோன், விடுதலைத் தாகிகள் ஒறஸ்றிஸ், ஆவியின் மூர்க்கம் அல்லது எமண்டியஸ் ஆகிய தலைப்புகளில் இம்மூன்று நாடகங்களும் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11315).

11738

அரிஸ்றபானின் நாடகங்கள்: பகுதி ஒன்று. அரிஸ்றபான் (கிரேக்க மூலம்), ஈழத்துப் பூராடனார் (தமிழாக்கம்), எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா: ஜீவா பதிப்பகம், 1108 Bay Street, Toronto, Ontario M5S 2W9, 1வது பதிப்பு, சித்திரை 1991. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், 1108 Bay Street, Toronto, Ontario M5S 2W9).

xx, 178 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

அச்சாரியனஸ், இராசசபை வீரர்கள், முகில்கள் ஆகிய மூன்று கிரேக்க நாடகங்களின் தமிழாக்கங்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. மேலும் இந்நூல் ஆதி கிரேக்க நாடகத் தொடரில் வெளிவந்த பத்தாவது நூலாகும். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12624).

11739

ஒரு பாவையின் வீடு. ஹென்றிக் இப்சன் (ஆங்கில மூலம்), குழந்தை ம. சண்முகலிங்கம் (தமிழாக்கம்), க.திலகநாதன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xii, 154 பக்கம், விலை: ரூபா 325., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-659-507-9.

A Doll's House என்ற இந்நாடகநூல் Henrik Ibsen என்ற நோர்வேஜிய நாடகாசிரியர் 1879இல் டேனிஷ் மொழியில் Et dukkehjem என்ற மூலத்தலைப்பில் எழுதி டென்மார்க்கில் கோபன்ஹேகன் நகரில் 21.12.1879 இல் முதலில் மேடையேற்றம் கண்ட நாடகத்தின் தமிழ்ப்பிரதியாகும். ஆணாதிக்க சமூகத்தில் பெண்களின் இயலாமையை இந்நாடகம் அழுத்தமாகப் பதிவுசெய்திருந்தது. இந்நூல் இப்சனின் A Doll's House என்ற அந்நாடகத்தின் ஆங்கில வழித் தமிழாக்கம் மாத்திரமல்ல. ஹென்றிக் இப்சன் (1828-1906) பற்றிய வாழ்க்கை வரலாற்றை முதலிலும், இப்சனின் ஒரு பாவையின் வீடு என்ற நாடகத்தின் அறிமுகத்தை இரண்டாவதாகவும் பதிவுசெய்திருக்கின்றது. மூன்றாவதாக தமிழாக்கம் செய்யப்பட்ட மேற்படி நாடகம் பிரசுரமாகியுள்ளது. பின்னிணைப்பாக நா.சுந்தரலிங்கம் அவர்களின் "மெய்மை நாடகங்கள்- பண்பும் பயனும்" என்ற தலைப்பிலான கட்டுரையும் இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11740

கிரேக்க நாடகாசிரியர் யூரிப்பைடசின் நாடகங்கள்: இரண்டாவது பகுதி. *யூரிப்பைடஸ் (கிரேக்க மூலம்), ஈழத்துப் பூராடனார் (தமிழாக்கம்), எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா: ஜீவா பதிப்பகம், 1108* Bay Street, Toronto, Ontario M5S 2W9, *1வது பதிப்பு, கார்த்திகை 1990. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், 1365* Midway Blvd, Unit No.24, *மிஸிஸாகா* L5C 2J5, *ஒன்ராரியோ*).

xvi, *190 பக்கம், விலை: கனேடிய டொலர் 20., அளவு: 21*x*13.5 சமீ.*

ஆதி கிரேக்க நாடகத் தொடர் வரிசையில் ஆறாவது தொகுதியாக இந்நூல் வெளிவந்துள்ளது. கி.மு.480களில் பிறந்த யூரிப்பைடஸ் எழுதிய நான்கு கிரேக்க நாடகங்களின் தமிழாக்கம். அந்திராமாச்சி, ஹெராக்கில்ஸின் மக்கள், அடைக்கல மாதர்கள், திறஜானிய மாதர்கள் ஆகிய நான்கு தலைப்புகளில் இவை இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11319).

11741

சொப்கொக்கில்சின் நான்கு நாடகங்கள்: இரண்டாம் பகுதி. *சொப்கொக்கில்ஸ் (கிரேக்க மூலம்), ஈழத்துப் பூராடனார் (தமிழாக்கம்), எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா: ஜீவா பதிப்பகம், 1108* Bay Street, Toronto, Ontario M5S 2W9, *1வது பதிப்பு, ஆவணி 1990. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், 1365* Midway Blvd, Unit No.24, *மிஸிஸாகா* L5C 2J5, *ஒன்ராரியோ*).

xxviii, *203 பக்கம், புகைப்படம், விலை: கனேடிய டொலர் 20., அளவு: 21*x*13.5 சமீ.*

ஆதிக் கிரேக்கக் காவியத் தொடரில் நான்காவதாக வெளிவந்துள்ள இந்த மொழிபெயர்ப்புத் தொகுதியில் கிரேக்கக் கவிஞரான சொப்கொக்கில்சின் நான்கு நாடகங்களின் தமிழாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. ஈழத்துப் பூராடனார் என அழைக்கப்படும் க. தா. செல்வராசகோபால் (13 டிசம்பர், 1928 - 21 டிசம்பர் 2010) ஈழத்துப் பன்முகத் தமிழறிஞர். இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல் களை எழுதியும் பதிப்பித்தும் உள்ளார். புலம் பெயர்ந்து கனடாவில் வாழ்ந்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11317).

11742

சொப்ஹொக்கில்சின் ஈடிப்பசு: முதலாவது பகுதி. *ஈழத்துப்பூராடனார் (தமிழாக்கம்), எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா: ஜீவா பதிப்பகம், 1108* Bay Street, Toronto, Ontario M5S 2W9, *1வது பதிப்பு, ஆவணி 1990. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், 1365* Midway Blvd, Unit No.24, *மிஸிஸாகா* L5C 2J5, *ஒன்ராரியோ*).

xxxvi, x, *158 பக்கம், விலை: கனேடிய டொலர் 20., அளவு: 20.5*x*13.5 சமீ.*

மன்னன் ஈடிப்பசு உலகின் தலைசிறந்த துன்பியல் நாடக ஆசிரியர் நால்வருள் ஒருவரான சொபக்கிளிசுவினால் எழுதப்பட்டது. தீபசு நாட்டின் அரசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலயசுவிற்கும் அவன் மனைவி யோகதாவிற்கும் மகன் ஈடிப்பசு. இவன் பிறந்த பொழுது இவன் தன் தந்தையைக் கொன்று தாயை மணமுடிப்பான் எனத் தெய்வ வாக்கு எழுகிறது. அதற்கு அஞ்சிய இலயசு குழந்தையின் காலிற் குத்திக் கயிற்றினால் வரிந்து கட்டி, இடையன் ஒருவனிடம் கொடுத்துக் காட்டு மலையில் அதனைக் கொன்றுவிடுமாறு பணிக்கிறான். ஆனால் இடையனோ குழந்தையைக் கொல்லாது கொரிந்து என்னும் நகரத்துக்குக் கொண்டு சென்று அந்நகர மன்னனிடம் கொடுக்கிறான். அக்குழந்தை வளர்ந்து பெரியவனாகித் "தான் யார்? எங்குப் பிறந்தவன்?" என்ற உண்மையைத் தெரியாது பல கொலைகளைச் செய்து ஈற்றிலே தீபசு நாட்டிற்கே வருகிறான். தெய்வீகச் செய்தி உண்மையாகின்றது. அவன் தன் தந்தையைக் (அவர் யார் என அறியாத நிலையிற்) கொன்று தாயாகிய யோகதாவை மணந்து பதினைந்தாண்டுகள் இன்பமாகப் பிள்ளைச் செல்வமும் பெற்று வாழ்கின்றான். "இவற்றிற்குக் காரணம் இலயசைக் கொன்றவனே: அவன் தண்டிக்கப்படாமையே" எனத் தெய்வக்குறி கூறுகிறது. அக்கொலையாளி யார் என்ற தேடலிலே ஈடிப்பசு ஈடுபட்டுத் தானே அக்கொலையாளி என்பதை ஈற்றில் அறிந்து கொள்கிறான். உலகிலே என்றுமே நிகழாத மாபெருங் கொடுமைக்கு விதி தன்னைக் கருவியாக்கியதை உணர்ந்த ஈடிப்பசு தன் கண்களைத்தானே குத்திக் கொண்டு காடுகளிலே அலைந்து திரிந்து ஈற்றில் இறக்கிறான். உணர்ச்சிக் கிளர்வுகளையும் எதிர்பார்ப்புக்களையும் மிகுதியாகக் கொண்ட பல சம்பவங்கள் மன்னன் ஈடிப்பசு நாடகக் கதையிலே அமைந்துள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11316).

11743

வில்லியம் சேக்ஸ்பியரின் 'யூலியஸ் சீசர்" (அவலச்சுவை நாடகம்). வில்லியம் சேக்ஸ்பியர் (மூலம்), இ.முருகையன் (தமிழாக்கம்), த.கலாமணி, கயிலைநாதன் திலகநாதன் (பதிப்பாசிரியர்கள்). வல்வெட்டித்துறை: ஜனனி வெளியீட்டகம், புதுவளவு, பொலிகண்டி, 1வது பதிப்பு, 2012. (கொழும்பு 6: குமரன் அச்சகம், 39, 36ஆவது ஒழுங்கை).

152 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ.

ஆங்கில நாடக மேதை வில்லியம் ஷேக்ஸ்பியரின் புகழ் பெற்ற ஜூலியஸ் சீசர் (கிபி 1599) நாடகத்தின் கதாநாயகனாகவும், கிரிகோரியன் நாட்காட்டியை சீரமைத்து தற்காலத்தில் பயன்பாட்டில் இருக்கும் நாட்காட்டியை உருவாக்கியவராகவும் சீசர் அறியப் பெறுகிறார். இவருடைய சிந்தனையில் உருவான அடிமைகள் விளையாட்டு அரங்கம் மிகவும் புகழ் பெற்றது. சீசர் கிரேக்க வரலாற்றில் பெரும் வீரராகவும், போரின் பொழுது கருணை காட்டாதவராகவும், இலக்கியவாதி மற்றும் சீர்திருத்தவாதியாகவும் அறியப் பெறுகிறார். ஜூலியஸ் சீசர் (Gaius Julius Caesar) (ஜூலை 12 அல்லது ஜூலை 13, கி. மு. 100 - மார்ச் 15, கி. மு. 44) ரோமானிய இராணுவ மற்றும் அரசியற் தலைவர் ஆவார். உலக வரலாற்றின் குறிப்பிடத்தக்க தலைவர்களுள் இவரும் ஒருவராவார். இலத்தீன் உரைநடை இலக்கியம் படைத்த எழுத்தாளருமாவார். ரோமைக் குடியரசின் வீழ்ச்சிக்கும் ரோமைப் பேரரசின் எழுச்சிக்கும் வித்திட்ட நிகழ்வுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியப் பங்கேற்றவர். கிமு 60 ஆம் ஆண்டில், சீசர், கிராசசு, பாம்பெ என்ற மூவரும் முதல் மூவராட்சியை ஏற்படுத்தினர் இந்த அரசியல் கூட்டணி பல ஆண்டுகளுக்கு உரோமானிய அரசியலில் தாக்கத்தை விளைவித்தது. இவர்களது திட்டங்களை செனட்டின் பழமைவாத ஆளுங்கட்சியினர் எதிர்த்தனர். கிமு 51இல் சீசர் கவுலில் பெற்ற வெற்றிகள், உரோமின் ஆட்சியை ஆங்கிலக் கால்வாய் மற்றும் ரைன் ஆறு வரை நீட்டியது. இவை இரண்டையும் கடந்த முதல் உரோமை படைத்தலைவராக சீசர் ரைன் ஆற்றின் மீது பாலத்தைக் கட்டினார் பிரித்தானியா மீதான முதல் ஊடுருவலை மேற்கொண்டார். கிமு 53இல் கார்கெ போரில் கிராசசின் இறப்பிற்குப் பின்னர் பாம்பெ செனட்டுடன் ஒத்துழைக்கத் துவங்கினார். தனது படைத்துறை சாதனைகளால் செல்வாக்குப் பெற்றிருந்த சீசர் பாம்பெயை எதிர்த்து நின்றார். கவுலில் போர் முடிவுற்றபோது செனட் சீசரை பதவி விலகி ரோமிற்குத் திரும்பப் பணித்தது. இதனை ஏற்க மறுத்த சீசர் கிமு 49 இல் ரூபிகான் ஆற்றைக் கடந்து ரோமானியப் படைகளுடன் கடந்து வந்து இத்தாலியை அடைந்தார். இதனால் விளைந்த உள்நாட்டுப் போரில் வென்ற சீசர் எதிர்ப்பற்ற சர்வாதிகாரியாக மாறினார். புதிய யூலியன் நாட்காட்டியை உருவாக்கினார். குடியரசின் அதிகாரங்களை மையப்படுத்தினார். எக்காலத்திற்கும் சர்வாதிகாரி என அறிவித்தார். கிமு44 இல், புரூட்டசின் தலைமையிலான செனட் உறுப்பினர்கள் சீசரைக் கொலை செய்தனர். சீசரின் வளர்ப்பு மகனான ஒக்டோவியசு, பின்னாட்களில் அகஸ்ட்டஸ், உள்நாட்டுப் போர்களில் வென்று ஆட்சியமைத்தார். இவரது ஆட்சியில் ரோமைப் பேரரசு உருவாகத் தொடங்கியது. ஷேக்ஸ்பியரின் புகழ் பெற்ற ஜூலியஸ் சீசர் நாடகம் இங்கு தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. அமரர் இ.முருகையனின் மறைவின் பின்னர் நூலுருவாகியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 56227).

894.8(3) தமிழ்க்கவிதை/இசை நாடகங்கள்-காவியங்கள்

11744

அறுவடை: குறுங்காவியம். கலையார்வன் (இயற்பெயர்: குருசுமுத்து இராயப்பு). யாழ்ப்பாணம்: ஜெயந்த் சென்டர், 165 வேம்படி வீதி, 1வது பதிப்பு, மார்கழி 2014. (பண்டத்தரிப்பு: யே.எஸ்.பிரிண்டர்ஸ்).

(16), 184 பக்கம், வரைபடங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-0197-04-0.

கலையார்வனின் பதினேழாவது நூலாக வெளிவரும் குறுங்காவியம் இது. 10.06.1986-22.10.1987 காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தின் நெய்தல் மண்ணான குருநகர்ப் பிரதேசத்தில் இலங்கை மற்றும் இந்திய இராணுவத்தால் அப்பாவி மக்கள் பலியெடுக்கப்பட்ட ஐந்து சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்டதாக இக்காவியம் வடிக்கப்பட்டுள்ளது. மண்டைதீவு முனைக் கடலில் கரைவலைத் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அந்தப் பிரதேச மீனவர்களில் 31 பேர் கொல்லப்பட்ட நிகழ்வு, பள்ளிக்குடா அகதிகளில் நோயாளர்களை யாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலைக்குக் கொண்டுவரும் வழியில் முகத்துவாரக் கடற்பகுதியில் படகுடன் மூழ்கடிக்கப்பட்ட ஐவர் கொலை நிகழ்வு நிகழ்வு, வீடுகளில் பாதுகாப்பின்றி அருகாமையிலுள்ள புனித பத்திரிசியார் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்தவர்களில் நால்வரைக் கொலைசெய்த நிகழ்வு, அதே தினம் புனித பத்திரிசியார் கல்லூரியில் விமானக் குண்டுத் தாக்குதலுக்குள்ளானவர்களை வைத்தியசாலைக்கு வாகனத்தில் எடுத்துச் சென்ற வேளை வைத்தியசாலைக்கு முன்பாகவே 11பேர் கொல்லப்பட்ட நிகழ்வு, அராலியிலிருந்து தீவகம் நோக்கி வள்ளங்களில் இடம்பெயர்ந்து சென்ற நாளில் கொல்லப்பட்ட 15 பேர் பற்றிய நிகழ்வு எனப் போர்க்காலக் கொடுமைகளையும் அவலங்களையும் நெடுங்கவிதையாக இந்நூலில் நெஞ்சம் உருகப் பதிவுசெய்திருக்கிறார். வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சு 24.10.2015இல் கிளிநொச்சியில் நடாத்திய வடக்கு மாகாண இலக்கியப் பெருவிழாவில் 2014இல் வடமாகாணத்தில் வெளிவந்த சிறந்த மரபுக்கவிதை நூலுக்கான பரிசை வென்ற நூல். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 251127).

11745

எல்லம் எங்கள் தாயகம்: இளைஞர் இலக்கியம். திமிலைத் துமிலன் (இயற்பெயர்: சின்னையா கிருஷ்ணபிள்ளை). மட்டக்களப்பு: கவிமணி வெளியீட்டுக் குழு, முத்தமிழ் மன்றம், அரசினர் ஆசிரியர் கலாசாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1988. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ விக்னேஸ்வரா அச்சகம், 150, நாவலர் வீதி).

(8), 101 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x14 சமீ.

ஒரு நெடுங்கதைப் பாடலாக மலர்ந்துள்ள இக்காவியம் 27.12.1963 முதல் 01.05.1964 வரையிலான காலப்பகுதியில் ஆக்கப்பட்டது. லெமூரியாக் கண்டம் பற்றிய வரலாற்றுச் செய்திகளை ஆதாரமாகக்கொண்டு புனையப்பட்ட இந் நெடுங்கவிதையில் சாந்தி என்ற சிறுமி லெமூரியாக் கண்டத்தின் பழம்பதியான எல்லத்தின் தலைவன் எல்லாளனின் புதல்வி எழிலியைச் சந்தித்து நட்புக் கொள்கிறாள். அவர்களின் உரையாடலின் வாயிலாக எல்லமும் ஈழமும் கொண்ட தொடர்பாடுகள் விரிகின்றன. இக்கதையில் வரும் எல்லாளனுக்கும் துட்டகைமுனுவுடன் சண்டையிட்ட எல்லாளனுக்கும் தொடர்பேதுமில்லை. மட்டக்களப்பு திமிலைத்தீவைச் சேர்ந்த திமிலைத் துமிலன், நீரர மகளிர், கொய்யாக்கனிகள், நெஞ்சம் மலராதோ?, அழகுமுல்லை, மஞ்சு நீ மழைமுகில் அல்ல, முத்தொள்ளாயிரம், அணில்வால், யாப்பும் அணியும், தமிழ் இலக்கியம் கற்பித்தல், திமிலைத்துமிலன் கவிதைகள்- காதல், திமிலைத்துமிலன் கவிதைகள் -சமூகம், பாவலர் ஆகலாம், கருமணியிற் பாவாய், ஈழத்துக் கல்விமரபில் எண்ணெய்ச்சிந்து ஆகிய நூல்களின் ஆசிரியர். சென்னை குழந்தை எழுத்தாளர் சங்கம் நடாத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசில் பெற்ற இவர், தொடர்ந்து பல்வேறு இலக்கிய வடிவங்களிலும் பரிசில்களைப் பெற்றவர். தனது இலக்கிய சாதனைக்காக ஆளுநர் விருது, கலைக்கழக விருது, கலாபூசணம், கவிமணி, தமிழ் ஒளி, கவியரசு, கவிகுலபாஸ்கரன் ஆகிய விருதுகளையும் பெற்றவர். 2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் மாதம் 30ம் திகதி கிழக்குப் பல்கலைக் கழகம் இவருக்கு "கலாநிதிப் பட்டம்" வழங்கி கௌரவித்ததுடன், கனடியத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் 11.09.2009ம் திகதி நிகழ்த்திய இவரது பவள விழாவிலே "செந்தமிழ்க் கவிமணி" என்ற பட்டம் வழங்கி கௌரவித்தது. இவர் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றுப் பட்டம் பெற்று அங்கேயே நீண்ட காலம் விரிவுரையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர். ஈழத்துச் சஞ்சிகைகள் பலவற்றில் "கிருஷ்ணா" என்ற பெயரில் எண்ணற்ற ஓவியங்களையும் வரைந்துள்ளார். வீரகேசரியில் 1950 களில் தாரா என் தங்கை என்ற கவிதைச் சித்திரத் தொடர்கதையையும் இவர் வரைந்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39074).

11746

எழினி(திருமண நினைவு வெளியீடு). சிவங் கருணாலய பாண்டியனார். தமிழ்நாடு: சா.பழ.மு.சா.பனையப்பச் செட்டியார், நெற்குப்பை, 1வது பதிப்பு, 1950. (தமிழ்நாடு: கல்யாண் அச்சுக்கூடம்,திருச்சிராப்பள்ளி).

(6), 96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

தலைஏழு வள்ளல்களுள் ஒருவனும் ஔவையார், பரணர், பெரஞ்சித்திரனார், பொன்முடியார் முதலிய நல்லிசைப் புலவர்கள் பலரால் பாடப்பெற்ற பாட்டுடைத் தலைவனும் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவனுமாகிய அதியமானொடு மானஞ்சியென வழங்கும் "எழினி" என்பவனின் வரலாற்றை விளக்கிப் புனையப்பெற்ற கட்டுரைச் செய்யுள் இதுவாகும். எழினி மரபு, எழினி மாண்பு, எழினியிற் கிழத்தியார், எழினி சேயெழினி என நான்கு அத்தியாயங்களில் இந் நூல் வடிக்கப்பெற்றுள்ளது. விஜய ஆண்டு ஆனித்திங்கள் 28ஆம் நாள் (12.07.1953) அன்று பனையப்பன்-சரசுவதி திருமண அன்பளிப்பாக விருந்தினருக்கு வழங்கப்பட்ட நூல் இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2661).

11747

காவியச் சலங்கைகள். ந. சிவநாதன். சென்னை 600017: இரத்தினம் பதிப்பகம், 11-2 இராமசாமித் தெரு, தி.நகர், 1வது பதிப்பு, 2012. (சென்னை 33: ஜெயபாலு பிரிண்டர்ஸ், எண் 115, கோடம்பாக்கம் ரோடு, மேட்டுப்பாளையம்).

368 பக்கம், விலை: இந்திய ரூபா 275., அளவு: 21.5x14.5 சமீ.

இதிகாச புராண காலச் சம்பவங்களை வைத்து புலவர் சிவநாதனால் எழுதப்பட்ட ஏழு நாட்டிய நாடகப் பிரதிகளின் தொகுப்பு இது. மகாபாரதத்தில் திரௌபதையின் கதை பாஞ்சாலி சபதம் என்ற பெயரிலும், பீஷ்மரின் வரலாறு நதிமகன் என்ற பெயரிலும், குசேலர்-கிருஷ்ணரின் அன்புகொள் நட்பு எங்கிருந்தோ வந்தான் என்ற தலைப்பிலும், சகுந்தலை - துஷ்யந்தன் வரலாற்றை எடுத்துக்கூறும் காவியத்தை குருமகளும் கோமகனும் என்ற தலைப்பிலும், அம்பிகாபதி-அமராவதி காதலை கவிமகனும் கோமகளும் என்ற தலைப்பிலும் கண்ணகி நீதி கேட்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றை சிலம்புத் தீ என்ற பெயரிலும், சத்தியம் தவறாத அரிச்சந்திரனின் வரலாற்றைச் சத்திய ஆரம் என்ற பெயருடனும் நாட்டிய நாடகப் பிரதிகளாக எழுதியுள்ளார். கதைகளுக்குரிய இலக்கியக் கருவைத் தேர்ந்தெடுத்து அதற்கு நாடக வடிவம் கொடுத்து காட்சி அமைப்புகளை உருவாக்கியிருக்கும் முறை அவரது ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்துகின்றது. எளிமையான கவிநடை, சந்தம் மற்றும் அளபெடைக்கான சொல்வளம், எதுகை, மோனை என்பவற்றை பொருத்தமாகவும் அழகாகவும் கையாண்டுள்ளார்.

11748

சங்கமம். மருத மைந்தன் (இயற்பெயர்: M.S.S.ஹமீத்). காத்தான்குடி: நவ இலக்கிய மன்றம், 1வது பதிப்பு, 1996. (சென்னை 600001: மில்லத் பிரிண்டர்ஸ், 16, அப்பு மேஸ்திரி தெரு).

95 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 17.5x12 சமீ.

காத்தான்குடிக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் மருத மைந்தன். இவரது இஸ்லாமிய வீரக் காதல் காவியமாக "சங்கமம்" அமைகின்றது. துருக்கிநாட்டு சுல்தான் அலப் அர்ஸலாவின் போர் நிகழ்ச்சி இக்காவியத்தின் களமாகின்றது. பாஹிம்கான், பிலோமினா, ஜேகப், மார்க்கிரட் போன்ற கற்பனைப் பாத்திரங்கள் இக்காவியத்துக்கு மெருகூட்டுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28154).

11749

சபதங்கள் (பாஞ்சாலி சபதம், காதல் நெஞ்சங்கள்). த.சிதம்பரப்பிள்ளை, வி.ஜெகநாதன். திருக்கோணமலை: கீழைத்தென்றல் கலாமன்றம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2000. (கொழும்பு: கீதா பப்ளிக்கேஷன்ஸ்).

iv, 49 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18.5x13 சமீ.

இந்நூல் இரண்டு ஆக்கங்களைக் கொண்டது. இரண்டும் ஏதோ ஒரு வகையில் "சபதமிடுதல்" என்ற விடயத்தில் ஒன்றுபடுகின்றன. முதலாவது த.சிதம்பரப்பிள்ளை எழுதிய பாஞ்சாலி சபதம் என்ற நாட்டுக்கூத்து. இரண்டாவது காதல் நெஞ்சங்கள் என்ற தலைப்பில் வி.ஜெகநாதன் எழுதிய கவிதா நாடகம். முன்னையது முதல் 13 பக்கங்களையும் இரண்டாவது 14 -49 வரையிலான பக்கங்களையும் கொண்டமைந்துள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29023).

11750

சாதி வலயங்களுள் வாக்கு வங்கிகள்: குறுங்காவியம். வி.ஜெகநாதன் (புனைபெயர்: நக்கீரன்). உரும்பிராய்: வி.ஜெகநாதன், 1வது பதிப்பு, 2016. (யாழ்ப்பாணம்: ஜெயஸ்ரீ அச்சகம், 34, பிரவுண் வீதி).

xix, 43 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x12.5 சமீ., ISBN: 978-955-43879-0-4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் வி.ஜெகநாதன் எப்போதும் ஒடுக்கப்பட்டவர்கள், நலிவுற்றவர்கள், வழியவர்களுக்காகக் குரல்கொடுக்கும் சமூகப்போராளி. தனது சமூக அனுபவங்களை கவிதையாகவும் கட்டுரையாகவும், இசைப்பாடலாகவும், நாடகமாகவும் வெளிக் கொண்டுவருவதில் ஆற்றல் பெற்றவர். ஆதிக்க சக்திகளால் நாசூக்காக ஒதுக்கப்படுகின்ற, அவர்கள் அறியாததுபோல பாசாங்கு செய்யப்படுகின்ற, ஊடகங்களினால் நிரந்தர இருட்டடிப்புச் செய்யப்படுகின்ற திண்டாமையின் கனதியை அவர் தமது கவிநடையில் காவியமாக்கித் தந்துள்ளார். இந்தக் குறுங்காவியம் கட்சி அரசியல் சார்ந்ததல்ல. சமூக அரசியல், பொருளாதார, பண்பாடு, சாதியம் என அனைத்தையும் சார்ந்தது. இந்நூல் வடக்கு மாகாண அரசின் கல்வி, பண்பாட்டுத்துறை, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

11751

சாவித்திரி (காவியம்). சி.திருமலர்ப் பாக்கியம். மட்டக்களப்பு: அன்பு வெளியீடு, 18. நல்லையா வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம்).

58 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 19.5x14.5 சமீ.

இறை வணக்கம், அசுவபதியின் ஆட்சிச் சிறப்பு, அரசி மாளதேவியின் பண்பு, சாவித்திரியின் பிறப்பு, முனிவரின் ஆச்சிரமம் சூழல், இல்லற தர்மம், முனிவரின் அறிவுரைகள், சத்தியவான் அறிமுகம், பெற்றோர் விபரம் அறிதல், திருமணப் பேச்சு, திருமணக் கோலம், சத்தியவான் சாவித்திரி இல்லறம், சாவித்திரியின் துயர், காட்டு வளம், சத்தியவான் உயிரிழத்தல், இயமனின் அறிவுரை, சாவித்திரியின் சம்வாதம், இயமனிடம் சாவித்திரி வரம் பெறல், உயிர்த்தெழுந்த சத்தியவான், சத்தியவான் சாவித்திரியைப் போற்றுதல், பெற்றோர் கவலை, அரசுரிமை ஏற்றல், பெற்றோரின் வாழ்த்து ஆகிய 23 அத்தியாயங்களில் இக்காவியம் விரிவாக எழுதப்பட்டுள்ளது. வித்துவான் எப்.எக்ஸ்.சி.நடராசா, கோவிந்தசாமி ஆகியோரின் அணிந்துரையும், பேராசிரியர் அப்துல் ரகுமானின் சிறப்புரையும், மகாவித்துவான் வீ.சீ.கந்தையா, நவாலியூர் சோ.நடராசன் ஆகியோரின் வாழ்த்துக் கவிதைகளும் இந்நூலுக்கு மெருகூட்டுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29035).

11752

தமிழழகி: காப்பியம் செம்யுளும் குறிப்பரைகளும். காண்டம் ஒன்று.தமிழகக் காண்டம். க.தா.செல்வராஜகோபால் (புனைபெயர்: ஈழத்துப் பூராடனார்). எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா L5V 1S6: ஜீவா பதிப்பகம், இல. 3, 1292 Sherwood Mills Bloved, மிஸிஸாகா, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, 1988. (கனடா L5C 2T7: ரிப்ளெக்ஸ் அச்சகம், 215 ஸ்ரெயின்ரன் டிரைவ், மிஸிஸாகா, ஒன்ராரியோ).

xxxii, 350 பக்கம், விலை: கனேடிய டொலர் 50., அளவு: 22x14.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துப் பூராடனார் என அழைக்கப்படும் க. தா. செல்வராசகோபால் (13 டிசம்பர், 1928 - 21 டிசம்பர் 2010) ஈழத்துப் பன்முகத் தமிழறிஞர். இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியும் பதிப்பித்தும் உள்ளார். புலம் பெயர்ந்து கனடாவில் வாழ்ந்தவர். பன்னிரண்டாயிரம் பாடல்கள், 2070 பக்கங்கள், ஒன்பது காண்டங்கள் கொண்ட காவியம் படைக்கவேண்டும், அது 81 படலங்களாகவும், 567 அங்கங்களாகவும் விளங்கவேண்டும் என்ற திட்டமிடலுடன் உருவான தமிழழகி காப்பியத்தின் முதலாம் காண்டம் இந்த நூலாகும். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13262).

11753

தமிழழகி: காப்பியம் செய்யுளும் குறிப்புரைகளும்: இரண்டாங் காண்டம். க.தா. செல்வராஜகோபால் (புனைபெயர்: ஈழத்துப் பூராடனார்), திருமதி பி.ப.செல்வராசகோபால் (குறிப்புரை), எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா M5S 2W9: ஜீவா பதிப்பகம், ரிப்ளக்ஸ் அச்சகம், 1108, வே வீதி, தொரன்ரோ, 1வது பதிப்பு, வைகாசி 1989. (கனடா M5S 2W9: ஜீவா பதிப்பகம், ரிப்ளக்ஸ் அச்சகம், 1108, வே வீதி, தொரன்ரோ).

xxiv, 774 பக்கம், விலை: கனேடிய டொலர் 50., அளவு: 21.5x13.5 சமீ.

ஈழத்துப் பூராடனார் என அழைக்கப்படும் க. தா. செல்வராசகோபால் (13 டிசம்பர், 1928 - 21 டிசம்பர் 2010) ஈழத்துப் பன்முகத் தமிழறிஞர். இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியும் பதிப்பித்தும் உள்ளார். புலம் பெயர்ந்து கனடாவில் வாழ்ந்தவர். பன்னிரண்டாயிரம் பாடல்கள், 2070 பக்கங்கள், ஒன்பது காண்டங்கள் கொண்ட காவியம் படைக்கவேண்டும், அது 81 படலங்களாகவும், 567 அங்கங்களாகவும் விளங்கவேண்டும் என்ற திட்டமிடலுடன் உருவான தமிழழகி காப்பியத்தின் இரண்டாம் காண்டம் இந்த நூலாகும். மொழி உற்பத்திப் படலம், திராவிடமொழி உற்பத்திப் படலம், மொழியிலக்கணப் படலம், சங்கத் தமிழ்ப் படலம், பிரதேச மொழிக் கிளைப் படலம், ஆரிய மொழி நுழைவுப் படலம், கிளைமொழிப் படலம், கல்வெட்டுத் தமிழ்ப் படலம், தனித்தமிழ்ப் படலம் ஆகிய எட்டுப் படலங்களில் அடங்கியுள்ள செய்யுள்களால் இரண்டாம் பாகம் அமைந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூ லகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12946).

11754

தமிழழகி: நான்காவது காண்டம் (செய்யுளும் குறிப்புகளும்). க.தா.செல்வராஜகோபால் (புனைபெயர்: ஈழத்துப் பூராடனார்). எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா L5V 1S6: Tamil Cinema Encyclopaedia Publications, ஜீவா பதிப்பகம், இல. 3, 1292 Sherwood Mills Bloved, மிஸிஸாகா, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, ஜனவரி 2006. (கனடா L5C 2T7: ரிப்ளெக்ஸ் அச்சகம், 215 ஸ்ரெயின்ரன் டிரைவ், மிஸிஸாகா, ஒன்ராரியோ).

xiv, பக்கம் 1235-1500, விலை: கனேடிய டொலர் 60., அளவு: 22x14.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துப் பூராடனார் என அழைக்கப்படும் க. தா. செல்வராசகோபால் (13 டிசம்பர், 1928 - 21 டிசம்பர் 2010) ஈழத்துப் பன்முகத் தமிழறிஞர். இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியும் பதிப்பித்தும் உள்ளார். புலம் பெயர்ந்து கனடாவில் வாழ்ந்தவர். பன்னிரண்டாயிரம் பாடல்கள், 2070 பக்கங்கள், ஒன்பது காண்டங்கள் கொண்ட காவியம் படைக்கவேண்டும், அது 81 படலங்களாகவும், 567 அங்கங்களாகவும் விளங்கவேண்டும் என்ற திட்டமிடலுடன் உருவான தமிழழகி காப்பியத்தின் நான்காம் காண்டம் இந்த நூலாகும். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39002).

11755

பாரத அம்மானை. சா.இ.கமலநாதன். (பதிப்பாசிரியர்). கொழும்பு 4: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(2), L, 356 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22.5x14.5 சமீ.

இலக்கியக் கலாநிதி சா.இ.கமலநாதன் அவர்கள் மட்டக்களப்பின் இலக்கியப் பாரம்பரியத்தை வெளிப்படுத்தி நிற்கும் மகாபாரதக் கதையான "பாரத அம்மானை" ஏட்டுப் பிரதிகளைக் கண்டெடுத்து அதனை ஆய்வு செய்து நூல்வடிவில் உருவாக்கித் தந்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28987).

11756

பூதத்தம்பி (இசை நாடகம்). காரை.செ.சுந்தரம்பிள்ளை. சுன்னாகம்: நடிகமணி வைரமுத்துவின் குடும்பத்தினர், உடுவில் கிழக்கு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2000. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

44 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களின் துணைவியார் திருமதி இரத்தினம் அம்மையார் (05-11-1928-13.08.2000) அவர்களின் நினைவாக 11.09.2000 அன்று வெளியிடப்பட்ட நூல். பூதத்தம்பி நாடகம் ஒல்லாந்தர் ஆட்சியின்போது யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஒரு வரலாற்று நாயகனின் கதையைக் கூறுகின்றது. யாழ்ப்பாணத்துக்குப் பொறுப்பாயிருந்த ஒல்லாந்த அட்மிறல் அந்தோனி என்பவனின் கீழ் யாழ்ப்பாணப் பிரதம அமைச்சராகவிருந்த அந்திராசியின் உதவி அமைச்சராகப் பணியாற்றியவர். பூதத்தம்பியின் மனைவி அழகவல்லியின்மீது கொண்ட காமம் காரணமாக எழுந்த பல சம்பவங்களினால், பூதத்தம்பியும் அழகவல்லியும் அந்திராசியால் பழிவாங்கப்படுகின்றார்கள். இந்நாடகம் முதன்முறையாக நடிகமணி வி.வி.வைரமுத்துவினால் இசை நாடகமாக 1966ஆம் ஆண்டு காங்கேசன்துறையில் மேடையேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11757

மட்டக்களப்புக் காவியம். வாகரைவாணன் (இயற்பெயர்: சந்தியாப்பிள்ளை அரியரெத்தினம்). மட்டக்களப்பு: வள்ளல் பேதுருப்பிள்ளை உடையார் நினைவகம், உடையார் சதுக்கம், வாகரை, 1வது பதிப்பு, நவம்பர் 1999. (மட்டக்களப்பு: ஜெஸ்காம் ஒப்செட் அச்சகம்).

vi, 45 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 20x14.5 சமீ.

மட்டக்களப்பில் பலம்வாய்ந்த இராச பரம்பரைகள் உருவாகாத காரணத்தால் மட்டக்களப்பு மண்ணின் வரலாறு பொலிவு பெறவில்லை என்பர் தமிழறிஞர். அந்த மண்ணில் காவியம் எதுவும் தோன்றவில்லை என்ற குறைபாட்டை நீக்கும் வகையில் இக்காவியத்தை வாகரைவாணன் 1999இல் ஆக்கியிருந்தார். அவ்வேளையில் வடக்கு கிழக்கு மாகாண விருதினை 1999இல் இந்நூல் பெற்றிருந்தது. மட்டக்களப்பு வரலாற்றின் ஒரு பழைய நிகழ்வினை மையப்படுத்தி அதனைச் சுற்றியுள்ள மட்டக்களப்பு மக்களின் பாரம்பரியம், கலை, பண்பாடு போன்ற அம்சங்களைப் பின்னிப் பிணைந்ததாக இக்காவியம் அமைந்துள்ளது. பாயிரம், தாயே தமிழே, மண்ணும் மணமும், நனி எழில் நகரம், புதுமனைப் புகுவிழா, நாச்சியாரின் நல்லரசு, பொங்கலோ பொங்கல், எங்கும் தமிழ் எதிலும் தமிழ், இந்திய மண்ணில் இருந்து, முருகயர்ந்து வந்த முதுவாய் வேல், திருமணத் திருவிழா, வண்ணமலர்ப் பந்தலிலே, நீலவான் நிலவிலே, தாமரை பூத்த தடாகத்திலே, அனுராதபுரத்திலே, மக்கள் மங்கலங்கள், கண்ணகி விழா, நாச்சியார் பார்த்த நாட்டுக்கூத்து, மருதம் மணக்கின்றது, கொக்கட்டியிலே ஒரு கோயில், மங்களம் சுப மங்களம் ஆகிய இயல்களால் ஆக்கப்பட்டுள்ளது. சிறந்த நல்ல கவிதைகளால் ஆன சுவைமிக்கதொரு காவியம் இது. வாகரைவாணன் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் ஓய்வுபெற்ற தமிழாசிரியராவார். சந்தியாப்பிள்ளை அரியரெத்தினம் எனும் முழுப்பெயரை இயற்பெயராய்க் கொண்டவர் தமிழ்நிதி வாகரைவாணன். இவர் "சுதந்திரன்" துணை ஆசிரியராகவும், கொழும்பு -10, பண்டாரநாயக்கா மாவத்தையில் அமைந்திருந்த சுதந்திரன் அச்சகம் வெளியிட்ட "சுடர்" மாதாந்த சஞ்சிகையின் துணை ஆசிரியராகவும் விளங்கியவர். மட்டக்களப்பிலிருந்து 1998-2008 காலப்பகுதியில் சுமார் பத்து வருடங்கள் வெளிவந்த "போது" எனும் மாதாந்தச் சிற்றிதழின் ஆசிரியரும் கூட. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19213).

11758

முல்லைக்காடு: மூவர் காவியம். ஜீவா-யாழ்ப்பாணன். பருத்தித்துறை: கலாபவனம், மேலைப்புலோலி, 1வது பதிப்பு, தை 1957. (பருத்தித்துறை: கலாபவனம்).

(16), 96 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 1.50, அளவு: 18.5x12.5 சமீ.

ஜீவா-யாழ்ப்பாணன் இருவரதும் கவிதை அஞ்சல்களுடன் தொடங்கி ஜீவா (பரிமளா இராஜதுரை), வி.கி.இரா (ராஜபாரதி), யாழ்ப்பாணன் (வே.சிவக்கொழுந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோரின் அஞ்சல் ஓட்டக் கவிதைகளுடன் இணையும் மூவர் காவியம் இது. முதலாம் பிரிவான முதற்கூடலில் ஜீவா (பரிமளா இராஜதுரை), யாழ்ப்பாணன் (வே.சிவக்கொழுந்து) ஆகியோருக்கிடையேயான பதினொரு கவிதை அஞ்சல் முதற்கூடல் என்ற தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் கூடலில் கொழும்பு நகர்ப் புதினம் (ஜீவா), அமர இலக்கியங்கள் சொல்லவேண்டும் (ஜீவா), கவிதையின் பிறப்பு (யாழ்ப்பாணன்), தங்கையின் தீராத ஆசை (ஜீவா), அண்ணா உதவுவான் (யாழ்ப்பாணன்), அண்ணாவின் குரல் கேட்டேன் (ஜீவா), இன்கவி கேளீர்- வானொலிப் பேச்சு (யாழ்ப்பாணன்), நண்பன் உரையாடுகிறான் (வி.கி.இரா), அண்ணாவின் உபகரிப்புகள் (யாழ்ப்பாணன்), தங்கையின் போதனைகள் (ஜீவா), வங்கமும் வற்றுதலுண்டோ? (யாழ்ப்பாணன்), குயில்கூவி அழைக்கிறது (ஜீவா), யாழ் ஒலிக்க மறுக்கிறது (யாழ்ப்பாணன்), உளத்துடிப்பு (யாழ்ப்பாணன்), நெடுமலர்க் கரம் என்செய்யும்? (யாழ்ப்பாணன்), என் உயிர் அண்ணா (ஜீவா), ஓம் சக்தி எல்லாமீவாய் (யாழ்ப்பாணன்), மங்களம் (யாழ்ப்பாணன்) ஆகிய கவிதைகள் இடம்பெறுகின்றன. மூன்றாம் கூடல் கவிதைப் புனலாக எழுகின்றது. இதில் தேவிதுதி (யாழ்ப்பாணன்), சக்தியின் இருப்பிடம் (யாழ்ப்பாணன்), எம் தமிழ் (வி.கி.இரா), கவிதைப் பாசம் (பரிமளா இரா), உள்ளமிசைக்குது காவியம் (வி.கி.இரா), அவள் (யாழ்ப்பாணன்), வேதனைதான் வேதனமோ? (பரிமளா இரா), நாமும் பிறந்தோமடி(வி.கி.இரா), மட்டக்களப்பு (வி.கி.இரா), பாதரசம் பிறந்த கதை(பரிமளா இரா), கடற்கரை குடிசை வாயிலில் (யாழ்ப்பாணன்), படகோட்டியின் தீபாவளி (வி.கி.இரா), காதல் போச்சோ-நீரர மகளிர் (வி.கி.இரா), எங்கு காண்பாயடி(வி.கி.இரா), வீரத் தாலாட்டு (பரிமளா இரா), கதிர்காமம் சென்று வருவாய் (யாழ்ப்பாணன்), குடிசையில் சுவர்க்கம் (யாழ்ப்பாணன்), புதுமைப் பெண் (யாழ்ப்பாணன்) ஆகிய கவிதைகள் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2433).

11759

யாரோ ஒருத்தியின் டையரி: குறுங்காவியம்: பாகம் 1. மஜீத். அக்கரைப்பற்று: மஜீத், 1வது பதிப்பு, 2017. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன் ஓப்செட் பிரின்டர்ஸ்).

(4), 60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

தொடரறுமுறையில் எழுதப்பட்ட பொத்துவில் கவிஞர் மஜீதின் குறுங்காவியம். ஏறுவெயில் கவிதைகள், வாழ்வின் மீதான எளிய பாடல்கள், சுள்ளிக்காடும் செம்பொடையனும், ஒரு இலையின் மரணம் (கவிதைகள்), மஜீத் கவிதைகள், கதை ஆண்டி(குறநாவல்), மஜீதின் உயிர் பிழியும் கவிதைகள், முள்ளிவாய்க்காலும் நிலம் பெருக்கெடுத்த சவக்குழிகளும், ஆகிய நூல்களைத் தொடர்ந்து இவ்வசன காவியம் எழுதப்பட்டுள்ளது. கவிஞர் மஜித் அவர்கள் நோயினால் பாதிப்படைந்துள்ள நிலையிலும் தொடர்ந்து தான் சொல்லச் சொல்ல தன் மனைவியினதும் மகளினதும் உதவியுடன் நூலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11760

யாரோ ஒருத்தியின் டையரி: குறுங்காவியம்: பாகம் 3. மஜீத். அக்கரைப்பற்று: மஜீத், 1வது பதிப்பு, 2017. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன் ஒப்செட் பிரின்டர்ஸ்).

(4), 24 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14.5 சமீ.

தொடரறுமுறையில் எழுதப்பட்ட பொத்துவில் கவிஞர் மஜீதின் குறுங்காவியம். ஏறுவெயில் கவிதைகள், வாழ்வின் மீதான எளிய பாடல்கள், சுள்ளிக்காடும் செம்பொடையனும், ஒரு இலையின் மரணம் (கவிதைகள்), மஜீத் கவிதைகள், கதை ஆண்டி(குறநாவல்), மஜீதின் உயிர் பிழியும் கவிதைகள், முள்ளிவாய்க்காலும் நிலம் பெருக்கெடுத்த சவக்குழிகளும், ஆகிய நூல்களைத் தொடர்ந்து மூன்று பாகங்களாக இவ்வசன காவியம் எழுதப்பட்டுள்ளது. கவிஞர் மஜித் அவர்கள் நோயினால் பாதிப்படைந்துள்ள நிலையிலும் தொடர்ந்து தான் சொல்லச் சொல்ல தன் மனைவியினதும் மகளினதும் உதவியுடன் இம்மூன்றாம் பாகமும் நூலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

894.8(31) மொழிபெயர்ப்பு இசை நாடகங்கள்-காவியங்கள்

11761

உமர்கையாமின் ருபாய்யாத். உமர் கையாம் (மூலம்), அப்துல் காதர் லெப்பை (தமிழாக்கம்). பண்டாரவளை: மணிக்குரல் பதிப்பகம், 6, வெலிமடை வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1965. (பதுளை: மொடர்ன் அச்சகம், 146, லோவர் வீதி).

86 பக்கம், விலை: ரூபா 65., அளவு: 18.5x13 சமீ.

புகழ்பெற்ற தத்துவ ஞானியும் கணித மேதையும் கவிஞருமான பாரசீகப் பெரும்புலவர் உமர்கையாம் இயற்றிய ஆழ்ந்த தத்துவ நூல் ருபாய்யாத். பதினோறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரசீகக் கவிஞரான உமர்கையாம், ஈரான் நாட்டை ஆண்ட மாலிக்ஷா என்ற சுல்தானின் அரசவை அறிஞராகப் பணிபுரிந்தவர். இவர் ஒரு ஜோதிடருமாவார். ஒரு ஆண்டிற்கு 365 நாட்கள் என்று அறிவித்த கணித மேதை இவரேயென்றும் கூறுவர். அவரது அற்புத நூலே இந்த ருபாய்யாத். இந்நூலை தமிழாக்கம் செய்த கவிஞர் அப்துல் காதர் லெப்பை (1913-1984) கிழக்கிலங்கையின் காத்தான்குடிக் கிராமத்தைத் தாயகமாகக் கொண்டவர். சிறந்த சிந்தனையாளரும், கவிஞருமான இவர், ஒரு ஆசிரியராகப் பணியாற்றியவர். இலங்கையின் கல்வித்துறையினரால் பெரிதும் போற்றப்பட்டவர். இது இவருக்கு சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுத்தந்த நூலாகும். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19777).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11762

மகாகவி ஹோமரின் ஒடிஸ்சி மகா காவியம். ஹோமர் (கிரேக்க மூலம்), ஈழத்துப் பூராடனார் (தமிழாக்கம்), எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா: ஜீவா பதிப்பகம், 1108 Bay Street, Toronto, Ontario M5S 2W9, 1வது பதிப்பு, சித்திரை 1990. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், 1365 Midway Blvd, Unit No.24, மிஸிஸாகா L5C 2J5, ஒன்ராரியோ).

Lv, 460 பக்கம், புகைப்படம், விலை: கனேடிய டொலர் 45., அளவு: 21.5x13.5 சமீ.

ஒடிசி, இலியட் இரண்டும் ஹோமர் என்னும் கிரேக்கப் புலவரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் பண்டை கிரேக்க இதிகாசங்கள் ஆகும். இவை கி.மு 900 ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இக்கவிதைக் காவியம் ஒடிசஸ் என்னும் மாவீரன் டிரோஜான் போரின் முடிவில் இத்தாக்காவில் உள்ள தன் வீட்டிற்குப் பயணப்படும் பத்தாண்டு கால வழிப்பயணத்தை விவரிக்கிறது. டிரோஜான் போர் இலியட்டில் விவரிக்கப்பட்டுள்ளது. இதே நேரத்தில் அவனது மனைவி பெனிலோப் தன்னை பல மனிதர்களிடமிருந்து காத்துக் கொள்ள வேண்டியுள்ளது. அவனது மகன் டெலிமாச்சோசும் அவனைத் தேடுகிறான். வருகின்ற வழியில் ஒடிசசும் அவனது வீரர்களும் பல ஆபத்தான இடங்களையும் அச்சுறுத்தும் மிருகங்கள், அரக்கர்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இக்கதையில் வரும் ஒற்றைக்கண் அரக்கர்கள் (கைக்ளோப்கள்) ஆங்கில இலக்கியத்தில் மிகவும் பரவலாக அறியப்பட்டவர்கள். இந்த நூலின் பின்னணியிலேயே நீண்ட பயணத்தைக் குறிக்கும் ஆங்கில சொல் "ஒடிஸ்ஸி" உருவானது. ஆங்கில வழியில் அமைந்த இந்தக் கிரேக்க காவியத்தை ஈழத்துப்பூராடனார் தமிழில் காவியமாக்கியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11222).

11763

ஹோமர் மகாகவியின் இலியட். ஹோமர் (கிரேக்க மூலம்), ஈழத்துப் பூராடனார் (தமிழாக்கம்), எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா: ஜீவா பதிப்பகம், 1108 Bay Street, Toronto, Ontario M5S 2W9, 1வது பதிப்பு, வைகாசி 1990. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், 1365 Midway Blvd, Unit No.24, மிஸிஸாகா L5C 2J5, ஒன்ராரியோ).

Lv, 544 பக்கம், புகைப்படம், விலை: கனேடிய டொலர் 80., அளவு: 21x13.5 சமீ.

பண்டைக் கிரேக்க இதிகாசங்கள் இரண்டில் ஒன்று ஒடிசி (Odyssey)யாகும். மற்றையது இலியட் என்பதாகும். இலியட், ஹோமர் என்னும் கிரேக்கப் புலவரால் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. இதில் உள்ள பாடல்களில் வாய்வழி மரபுகளுக்கான சான்றுகள் ஆங்காங்கே காணப்படுவதால் இது ஒன்றுக்கு மேற்பட்டோரால் ஆக்கப்பட்டிருக்கக் கூடும் எனவும் கருதப்படுகின்றது. இன்று வழக்கிலுள்ள பழங்காலக் கிரேக்க இலக்கியங்களில் இதுவே பழையது. கிரேக்க மொழியில் எழுதப்பட்ட முன்னொடி இலக்கியங்களில் இதுவும் ஒன்று. இதிலுள்ள பாடல்கள், கிரேக்கர்களால் இலியன் அல்லது திராய் (Troy) எனப்பட்ட நகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றுகை இடப்பட்ட, டிரோஜான் போரின் பத்தாம் மற்றும் இறுதி ஆண்டுகளின் நிகழ்வுகளைக் கூறுகின்றது. இதன் கரு கிரேக்கப் போர் வீரனான ஆக்கிலீசையும், மைசீனி அரசன் அகமெம்னான் மீது அவனுக்கு இருந்த கோபத்தையும் பற்றியது. இலியட் 15,693 பாடல் வரிகளைக் கொண்டது. பிற்காலத்தில் இது 24 பாகங்களாகப் பிரிக்கப்பட்டது. ஸ்பார்ட்டாவின் அரசனான மெநிலாஸின் மனைவியான ஹெலனை திராய் நாட்டு இளவரசனான பாரிஸ் கவர்ந்து கொண்டு தனது நாட்டிற்கு வந்துவிடுகிறான். கிரேக்கர்களின் பெரும் படை ட்ராய் நகரத்தை முற்றுகையிடுகிறது. இதனிடையே கிரேக்க இராணுவம் முழுவதிலும் பிளேக் நோயை ஏற்படுகிறது. பிளேக் நீங்கிய பின்னர் கிரேக்க படைகள் முன்னேறு கின்றன. போர் தீவிரமாக நடைபெறுகிறது. ட்ரோயின் தளபதியான ஹெக்டர் அஜக்ஸுடன் மற்போர் புரிந்து தோற்கடிக்கிறான். அதன் பின்னர், ஒரு இரவு போரில் கிரேக்கர்களின் கப்பல்களை நிறுத்தி வைத்திருக்கும் இடத்தை தாக்குகிறான். பெட்ராகிளஸ் போரில் ஆக்கிலியசின் படைவீரர்களுடன் போருக்கு செல்கிறான். அவர் டிராஜன்கள் திடீர் தாக்குதலை முறியடிகிறார். மேலும், ட்ரோஜன் செர்போடோனை கொல்கிறான். இறுதியாக, அவன் ஹெக்டரால் கொல்லப்பட்டான். போர் அவனது உடலைச் சுற்றித் தொடர்ந்து நடைபெறுகிறது. ஆக்கிலீஸ் ஹெக்டோருடன் கடும்போரிட்டு அவனைக் கொல்கிறான். அவன் உடலைத் தனது ரதத்தில் கட்டி இழுத்து வருகிறான். அதன் பின்னர், பெட்ராகிளஸின் ஆவி அவன் கனவில் வந்து தனது உடலை எரிக்குமாறு வலி யுறுத்தியது. அதன் பின்னர், அவன் உடல் எரிக்கப்பட்டது. இரவில் யாருக்கும் தெரியாமல் பிரியம் மன்னர் அக்கீலியசிடம் வந்து தனது மகனது உடலைத் தருமாறு கெஞ்சி வாங்கிக் கொண்டு சென்று அவன் உடலுக்கு எரியூட்டுகிறான். இலியட் கதையை அழகு தமிழில் ஈழத்துப் பூராடனார் காவியமாக்கித் தந்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11221).

894.8(4) தமிழ்ச் சிறுகதைகள்

11764

அகனின் விழிப்புக் கதைகள். நா.வை.குமரிவேந்தன் (இயற்பெயர்: மகேந்திரராசா). வவுனியா: நா.வை.குமரிவேந்தன், குமரித் தமிழ்ப் பணிமன்றம், 16/2, மருத்துவமனை சுற்றுவட்ட வீதி, குடியிருப்பு, 1வது பதிப்பு, கார்த்திகை 2012. (கிளிநொச்சி: வேழன் பதிப்பகம், கனகபுரம் வீதி).

xii, 152 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x13.5 சமீ.

வாழ்வில் ஒளி, அத்தி, விடுதலை, எழுச்சி, மக்களே போல்வர், ஊழையும், எங்கள் பகைவர், இனமீட்சி, தமிழ் வேந்தர், ஒழுங்குமீறல், விரிகோணம், செந்தமிழும் நாப்பழக்கம், பழியஞ்சி, தமிழ் நெஞ்சம், தேவர் அனைவர், தமிழம்மா வாழ்க, ஈகை, என்று மடியும், நாம் தமிழர், தமிழ் வாழ்க, ஏமாப்பு, அன்பு இலதனை, சிறந்தது பயிற்றல், ஏரினும் நன்றால், ஐயோ, உருவுகண்டு, மரபும் பிறிதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைம்முடி வேய்ம்பர், ஊழ்ப்பாடு, வாரி, மெய்ப்பொருள் காண்பது, பொங்கல் கோலம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 32 செந்தமிழ்க் கதைகளும் கதைகள் போன்ற கட்டுரைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

11765

அழுத்தும் நிஜங்கள்: சிறுகதைத் தொகுப்பு. நடராசா இராமநாதன். முல்லைத்தீவு: பிரதேச செயலகம், புதுக்குடியிப்பு, 1வது பதிப்பு, டிசம்பர் 2015. (வவுனியா: மல்ரிவிஷன் அச்சுக் கலையகம், 2ம் குறுக்குத்தெரு).

xiv, 91 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4247-10-9.

வெளியில் தெரியா பிம்பம், அன்புள்ள மக்களே, மழை, வெள்ளைப்பூனை, நஞ்சு, வலி, அழுத்தும் நிஜங்கள், காடு விளைஞ்சென்ன மச்சான், சபதம், குஞ்சியப்பு, இறுதிவரை, கிராமத்துப் பெரியம்மா வீடு, வேண்டுகை, சத்தியம் ஆகிய தலைப்புகளில் ஆசிரியர் எழுதிய 14 சிறுகதைகளின் தொகுப்பு. உடையார்கட்டைச் சேர்ந்த கலாபூஷணம் நடராசா இராமநாதன், இயல் இசை நாடகம் என்ற முத்துறைகளிலும் முத்திரை பதித்தவர். அவரது ஐம்பதாண்டு இலக்கிய அறுவடையின் தேர்ந்த தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.

11766

ஆயன்னையம்மாதாய்: சிறுகதைகள். அல். அஸுமத். வெல்லம்பிட்டிய: அல். அஸுமத், இல.50, கோத்தமி மாவத்தை, வெலேவத்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 2012. (கொழும்பு 15: டலன்ட் பிரின்டெக், 20/4, மாதம்பிட்டி வீதி).

(8), 9-212 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-52134-3-1.

ஆசிரியரின் இரண்டாவது சிறுகதைத் தொகுதி இது. 1980க்குப் பின்னர் எழுதப்பட்டவை. மழலைச் சவால், புறமுதுகுகள், தாயாண்மை, தாயிற் சிறந்தொரு பிரசவமில்லை, அயன்னையம்மாதாய், நிலத்தாய், ஒரே ஒரு பெயர், பஞ்சத்து ஆண்டி, நட்பு, சைவப் பிள்ளை, சகுனம், துறக்கம்-இடைக்கம்-இறக்கம், நம்ம ஆளு நாட்ட ஆண்டாலும், சோமண்ணன், பிடுங்கல் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 15 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கலாபூஷணம் அல் அஸுமத் புகழ்மிக்க ஈழத்துக் கவிஞர். 1942.11.22 இல் பிறந்த இவரது இயற்பெயர் பொன்னையா வேலாயுதம். தந்தையார் கேரளத்தின் நெய்யாற்றின் கரையைச் சேர்ந்தவரும், கே.வீ.ராமன் நாயர் என்ற இயற்பெயரைக் கொண்டவருமான கே.வீ.பொன்னையா. இவரது தாய் மரியாயி. அல்-அஸுமத்தின் இயற்பெயர் வேலாயுதம். காயல்பட்டினத்தில் தமிழ்நாடு இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம் நடத்திய 13வது உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் "தமிழ் மாமணி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மூன்று இலங்கையருள் இவரும் ஒருவர். இவரின் பூவின் காதல் என்ற முதல் சிறுகதையும், முதல் கவிதையும் வீரகேசரியில் வெளிவந்தன. மாத்தளையான், விருச்சிகன், சாத்தன், அபூமுனாஃப், புல்வெட்டித்துறைப் புலவர் ஆகிய புனைபெயர்களில் கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள், விமர்சனங்கள், குறுங்காவியங்கள் எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலராப் பொழுதுகள் (குறுங்காவியம்), மலைக்குயில் (கவிதைகள்), அல் அஸுமத் கவிதைகள் (கவிதைகள் 1987), வெள்ளை மரம் (சிறுகதைகள் 2001), குரல் வழிக் கவிதைகள் (கவிதைகள் 2009), பிலால்: ஒரு கறுப்பின அடிமையின் விடுதலை வரலாறு (மொழிப்பெயர்ப்பு 2010), அறுவடைக் கனவுகள் (நாவல் 2010), ஆயன்னையம்மாதாய் (சிறுகதைகள் 2012) ஆகியவை இவரது நூல்கள். யாழ்ப்பாண இலக்கிய வட்டத்தின் மிகச்சிறந்த கவிதை நூலுக்கான விருது, தேசிய அரச சாஹித்திய விருது, சிரித்திரன் சுந்தர் நினைவு விருது, முஸ்லிம் எழுத்தாளர் தேசியக் கவுன்சில் விருது, தமிழியல் விருது ஆகிய விருதுகளையும் இலக்கியச் சாகரம், கவித் தாரகை ஆகிய பட்டங்களையும் இவர் பெற்றுள்ளார்.

11767

ஆறாத காயங்கள்: சிறுகதைத் தொகுப்பு. குந்தவை (இயற்பெயர்: இ.சடாட்சர தேவி). தொண்டைமானாறு: செல்லையா ஐயர் கலாசார மண்டபம், 1வது பதிப்பு, சித்திரை 2016. (பருத்தித்துறை: தமிழ்ப் பூங்கா, பிரதான வீதி, நெல்லியடி).

vii, (4), 68 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x15 சமீ.

தொண்டைமானாறைச் சேர்ந்த இ.சடாட்சரதேவி (குந்தவை), 1963இல் ஆனந்தவிகடனில் வெளிவந்த சிறுமை கண்டு பொங்குவாய் என்ற முத்திரைக் கதையுடன் எழுத்துலகுக்கு அறிமுகமான ஈழத்துப் படைப்பாளி. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப்பட்டம் பெற்றவர். புத்தளத்திலும், யாழ்ப்பாணத்திலும் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இறுதியாக யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் பணியாற்றி ஓய்வுபெற்றவர். இவரது முதற் சிறுகதைத் தொகுப்பு யோகம் இருக்கிறது என்ற தலைப்பில் 2002இல் மித்ர வெளியீடாகப் பிரசுரமானது. 2008இல் வட மாகாண ஆளுநர் விருதினைப் பெற்றுக்கொண்டவர். தமிழகத்திலும் இலங்கையிலும் இவர் எழுதிப் பிரசுரமான ஒன்பது கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. காலிழப்பும் பின்பும், இரும்பிடை நீர், கோழிக்கறி, நீட்சி, புழுக்கம், ஊழியமும் ஊதியமும், ஆநிரைகள், நாடும் நம்மக்களும், பாதுகை ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 249461).

11768

எம்.ஜீ.ஆர். கொலை வழக்கு: சிறுகதைகள்.ஷோபாசக்தி. சென்னை 600 005: கருப்புப் பிரதிகள், பி.55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்சு சாலை, 4வது பதிப்பு, பெப்ரவரி 2016, 1வது பதிப்பு, மார்ச் 2009. (சென்னை600 005: ஜோதி என்டர்பிரைஸஸ்).

152 பக்கம், விலை: இந்திய ரூபா 130., அளவு: 21.5x14 சமீ.

ஷோபாசக்தி எழுதிப் பிரசுரமான பத்துக் கதைகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. Cross Fire, F இயக்கம், குண்டு டயானா, எம்.ஜி.ஆர். கொலைவழக்கு, பரபாஸ், ரம்ழான், தமிழ், வெள்ளிக்கிழமை, திரு.முடுலிங்க, விலங்குப் பண்ணை ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்புகளில் வெளிவந்த இக்கதைகள் காலம், உயிர்மை, தீராநதி, எதுவரை, புதுவிசை, அநிச்ச, இன்மை, பவளமல்லி, தமிழினி ஆகிய இதழ்களில் முன்னதாக வெளிவந்தன. கால் நூற்றாண்டிற்கும் மேலாக நிகழ்த்தப்பட்டு வரும் இனப்படுகொலைகளும் இடையுறாப் போரும் மனித உளவியல் மீது படிமங்களாக, இன்னொரு மனித உயிரை நீக்கி இன்பம் கொள்கிற பேரவலங்களாக மாறிவிடுகிற பிரச்சினைப்பாடுகளை, மனப்பிறழ்வுகளை தந்துவிடக்கூடிய அனுபவங்களைப் படைப்பின் கண்ணிகளாக மாற்றி தப்பித்துச் செல்பவை ஷோபாசக்தியின் இச்சிறுகதைகள். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61432).

11769

ஏழு கடல் கன்னிகள்: சிறுகதைகள். தமயந்தி சைமன். நோர்வே: உயிர்மெய் பதிப்பகம், Kaptein Likes vegen 9A, 6006 Aalesund, 1வது பதிப்பு, ஜூலை 2016. (தமிழ்நாடு: James Arts Crafts, 872F, Kamak By-Pass Road, Sivakasi 626 189, விருதுநகர்).

120 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14 சமீ.

இது ஏழு கதைகள் கொண்ட தொகுதி. ஒவ்வொரு கதையும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிலச் சூழலை கதையின் தளமாகக் கொண்டு இயங்குகிறது. ஒரு சம்பவத்தை காட்சியாக விரித்து வைத்து விட்டு வாசகனை வேறொரு நினைவுச் சுழல் வழியாக அழைத்துச் செல்லும் உத்திகளால் கதைகள் தனது பாதையை வடிவமைக்கின்றன. புலம்பெயர்ந்து வாழும் சூழலில் ஆரம்பிக்கும் காட்சிகள் தாயக நிலப்பரப்பில் கரைந்து அழிவதும் தாயகத்தில் ஆரம்பிக்கும் காட்சிகள் புலம்பெயர்ந்து மேற்கில் மறைவதுமான கதை ஒழுங்கு ஒன்றில் புனைவுத் தந்திரங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. பெரும்பாலும் இந்தக் கதைகளின் வசன அடுக்குகளுக்குள் மானுட நேயத்தின் சிதறல்கள் கதையின் போக்கை திசை திருப்பி விடாதபடி சிக்க வைக்கப்பட்டிருக்கின்றன. தற்கால வாழ்விற்குள் ஒன்றித்து இழையோட முடியாமல் விலகல் தன்மையுடன் பழைய வாழ்க்கை மீதான ஏக்கங்களையும் போர் சிதைத்துப் போட்ட மனிதர்களையும் பின்தொடர்வதே இந்தக் கதைகளின் முக்கிய பணியாக இருக்கிறது. பெரும்பாலும் இதில் இடம்பெறுகின்ற கதை மாந்தர்கள் கடலோரத்தை அண்டியவர்களாகவும் மீனவ சமூகமாகவும் இருக்கிறார்கள். எளிய வாழ்க்கை முறையைக் கொண்ட இந்த மனிதர்களை கடந்த கால போர்ச்சூழல் எப்படியெல்லாம் சீரழிக்கிறதென்பது வெவ்வேறு கோணங்களின் பல்வேறு தர்க்கங்களின் வழியே ஒவ்வொரு கதைகளிலும் எடுத்தாளப்படுகிறது. கடந்த கால தமிழ் அரசியலை வடிவமைத்த இலட்சியகரமான போர் நியாயங்கள் அனைத்தும் எளிய மக்களின் இயல்பான பார்வைகளுக்கூடாக நீர்த்துப்போகும் செயல்களை இந்தப் பிரதியில் உள்ள கதைத்திட்டங்கள் மேற்கொள்கின்றன. நலிவடைந்த கிராமிய மாந்தர்களை போராளிக் குழுக்கள் கையாண்ட விதம் பிரதியில் பல இடங்களில் விசனமாகவும் முன்வைக்கப்படுகிறது. தமது நிலைப்பாடுகளோடு உடன்பட மறுத்த சிறிய கிராமம் ஒன்றின் மக்கள் கூட்டத்தை புலிகள் இயக்கத்தினர் பழி வாங்கிய விதம் பற்றி ஒரு கதையில் வருகிறது. ஏழாற்றுக் கன்னிகள் என்ற கதையில் தந்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனும் கடலில் மீன் பிடிக்கும்போது பெரிய சுறா மாட்டிக் கொள்ள மகன் சந்தோசப்படுகிறான். ஆனால் அந்த மீனைப் பார்த்த தந்தை மகனைப் பார்த்து அது சாக முன்னம் கடல்ல விடு என்கிறார். அதற்கு அவர் சொல்லும் காரணம் அது குட்டித்தாச்சி மீன். ஆறேழு குட்டிகள் இருக்கும் என்கிறார். இதன் மூலம் ஒரு சமூகத்தின் உயிர்கள் மீதான கரிசனை ஆழமாக உணர்த்தப்படுகிறது. இவ்வகையில் இந்நூலில் உள்ள கிற்றார் பாடகன், ஏழாற்றுக் கன்னிகள், நாச்சிக்குடா, அப்பு, தொள்ளாயிரம் சரிகளும் இரண்டாயிரத்துக்கும் அதிகமான காயங்களும், மண்டா, எட்டாம் பிரசங்கம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கதைகள் இடம்பெற்றுள்ளன.

11770

கடவுளின் கைபேசி எண். இ.சு.முரளிதரன். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, சித்திரை 2014. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

(4), viii, 68 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-15-2.

இது ஆசிரியரின் முதலாவது சிறுகதைத் தொகுதி. பின்னவீனத்துவப் பாணி, தொன்மப் பயன்பாடு, யதார்த்த நோக்கு ஆகிய மூன்று வகையான முறைகளிலும் இச்சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன. 33ஆவது ஜீவநதி பிரசுரமாக வெளிவந்துள்ளது. இதில் துன்பியல் நாயகன், மீசை முறுக்கிய மின்மினிகள், கடவுளின் கைபேசி எண், கவந்தம், பாடக்குறிப்பு, கழிவொயில், AB+ குருதியும் நீல நரியும், சிறுத்தொண்டரின் சேவைநலன் பாராட்டு, டுள்ளா, கைமாற்றத் தகாத காசோலை, பகிர்வு, வேண்டுதல் ஆகிய 12 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பிடித்துள்ளன. கதைகளின் தலைப்புக்கள் ஆழ்ந்த அர்த்தபுஷ்டியுடன் கூடியதாக தேர்ந்து வழங்கப்பட்டுள்ளன. பல சிறுகதைகள் தொன்மங்களை அடியொற்றியனவாக உருவாகியுள்ளன. துன்பியல் நாயகன், கவந்தம், கைமாற்றத்தகாத காசோலை, பகிர்வு என்பன உதாரணங்களாகும். இவற்றுள் முதல் மூன்று சிறுகதைகளும் ஈழத்தின் சமகால அரசியல் நிகழ்வுகளைச் சுவையோடும் ஈர்ப்போடும் பேசுகின்றன. பகிர்வு- ஈழத்து முரண்பாட்டுச் சிக்கலை அனைவரும் அறிந்த விநாயகர்-முருகன் மாம்பழக் கதையோடு மிக இயல்பாக இணைத்திருப்பதை அவதானிக்கமுடிகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236672).

11771

காலநதியின் கற்குழிவு: யாழ்ப்பாணம் வாழ் 40 எழுத்தாளர்களின் சிறுகதைகள். த.கலாமணி, இ.சு.முரளிதரன், அ.பௌநந்தி, க.பரணீதரன் (தொகுப்பாசிரியர்). பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, புரட்டாதி 2014. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

vi, 322 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20.5x14 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 40 எழுத்தாளர்களது சிறுகதைகளின் தொகுப்பு இது. தெணியான் (மனிதத்தின் மரண ஓலம்), குப்பிளான் ஐ.சண்மகன் (தரு), செங்கை ஆழியான் (கீரிமலைக் குளியலும் கூவில் கள்ளும்), யோகேஸ்வரி சிவப்பிரகாசம் (கண்ணுக்குத் தெரியாமல்), குந்தவை (ஆநிரைகள்), இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் (காணாமல் போனவன்), த.கலாமணி (நீர்மை), க. சட்டநாதன்(அரும்பு), க.தணிகாசலம் (தடை), கொற்றை பி.கிருஷ்ணானந்தன் (அம்மாக்களின் ஆத்மா), கே.ஆர்.டேவிட் (மொனிற்றர் தெரிவு), நெடுந்தீவு மகேஷ் (தேடல்கள்), வல்வை ந.அநந்தராஜ் (பிச்சைக்காரர்கள்), கண.மகேஸ்வரன் (அவஸ்தை), வட அல்வை கே.சின்னராஜன் (தண்ணீர்), மு.அநாதரட்சகன் (ஆறா அவலம்), ம.ஆனந்தராணி (மீண்டும் வசந்தம்), சி.கதிர்காமநாதன் (முகாம்), ந.சத்தியபாலன் (முளை), பா.தனபாலன் (அப்பா வேணும்), இ.இராஜேஸ்கண்ணன் (பாடகனின் மரணம்), ச.இராகவன் (வாமன அவதாரம்), தாட்சாயணி (நர்மதாவின் கடிதங்கள்), கருணைரவி (வனயாகம்), யோ.கர்ணன் (இலியானா), இ.சு.முரளிதரன் (கவந்தம்), சித்தாந்தன் (அம்ருதாவின் புதிர் வட்டங்கள்), மருதம் கேதீஸ் (ஒளவை தரு முகிலி), கோகுலராகவன் (எங்கள் தெருவில்), ந.மயூரரூபன் (என்னைப் பற்றிய பிற்குறிப்பு), தானா விஷ்ணு (முடிவிலி), ஜுனியர் வரணியூரான் (தமிழ்ப் பௌத்தன்), சமரபாகு சீனா உதயகுமார் (சொத்து), கார்த்திகாயினி சுபேஷ் (இப்படியும்), தபின் (அம்மாவும் ஆட்டுக் குட்டியும்), குகபரன் (மௌனமாய்), சு.க.சிந்துதாசன் (வல்லூறுகளின் வேட்டை), அஜந்தகுமார் (மீளாமகன்), விஷ்ணுவர்த்தினி (சொந்தமில்லா பந்தங்கள்), க.பரணீதரன் (படமுடியாது இனித் துயரம்) ஆகிய படைப்பாளிகளின் ஆக்கங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61540).

11772

காவி நரகம்: சிறுகதைத் தொகுப்பு. ஏ.நஸ்புள்ளாஹ். கிண்ணியா 03, பேனா பப்ளிக்கேஷன்ஸ், பைசல் நகர், 1வது பதிப்பு, 2013. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

130 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-0932-07-8.

அழகிய பேச்சுவழக்கில், சிறந்த கள அம்சங்கள் பொருந்த உருவாக்கப்பட்டுள்ள பதின்மூன்று சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அடையாளமும் அங்கீகாரமும், முரண்பாடுகளின் சாபம் பற்றிய விமர்சனப் பார்வை, காவி நரகத்தின் கதைகள், நஸ்புள்ளாஹ்வின் கதைகளில் நான், நான் நேசிக்கின்ற சகோதர சமூகத்திற்காக ஆகிய உரைகளைத் தொடர்ந்து புத்தன் பிறந்த பூமியில், இவர்களை நடைபாதையாக உபயோகிக்காதீர்கள், முரண்களின் சாபம், கன்னத்தில் அறையும் கதை, நிலைகுலைவு, மனிதம், ஆறு கண்களால் எழுதிய மூன்று கடிதங்கள், இப்படிக்கு பூங்காற்று, காவி நரகம், வேரறுந்த விலாசங்கள், விதவைத் தேசம், சுதா சுங்கன் மீன் போல அழகு, ஓர் எழுத்தாளனின் கதை ஆகிய 13 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. புத்தன் பிறந்த பூமியில், முரண்களின் சாபம், நிலைகுலைவு, வேரறுந்த விலாசங்கள் உள்ளிட்ட எட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகள் உள்நாட்டு யுத்தத்தை மையமாகவைத்து எழுதப்பட்டவையாகவும், ஏனைய ஐந்து கதைகளும் தன் சமூகம் சார்ந்த பல்வேறு பிற சம்பவங்களை மையமாக வைத்துப் பின்னப்பட்டவையாகவும் உள்ளன. தலைப்புக் கதையான காவி நரகம்- நிறைமாதக் கர்ப்பிணியான விதவைப்பெண் குகநாயகியும் அவளது தாயும் யுத்தம் நிலவும் பிரதேசத்தில் வாழும்போது படும் அவஸ்தைகளை விபரிக்கின்றது. கதாசிரியர் கவிஞராகவும் இருப்பதால், சிறுகதைகளில் இடையிடையே கவிதைநடை ஊடுருவியிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. கவிஞர் ஏ.நஸ்புள்ளாஹ் கிழக்கிலங்கையில் கிண்ணியாவில் பிறந்தவர். க. பொ.த.உயர்தரக் கல்விகற்ற இவர் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மானி வாசிப்பாளராகக் கடமையாற்றுகிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61296).

11773

கானல் வசந்தங்கள் (சிறுகதைகள்). பைந்தமிழ்க் குமரன் (இயற்பெயர்: ஜே.டேவிட்). திருக்கோணமலை: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, 2015. (திருக்கோணமலை: சண் பிரின்டர்ஸ், 224, மத்திய வீதி).

xv, 140 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-4628-19-9.

பைந்தமிழ்க் குமரனின் சிறுகதைகள் தன்னையும் தான் வாழும் சூழலையும் தன் தொழில் அனுபவங்களையும் தன் கலாசாரத்தையும் சித்திரிப்பவையாக அமைகின்றன. வறுமையின் கொடுமை, வாழ்வியல் சூழலின் புதிய அனுபவங்கள், தொழில் அனுபவத்தின் காயங்கள், இனப்போராட்டச் சூழலின் வடுக்கள் என்றமையும் இவரின் கதைகள் தினக்குரல், தினகரன், தொண்டன், வெட்டாப்பு போன்றவற்றில் முன்னர் வெளியிடப்பட்டவை. சூனியப் பள்ளிகள், மண்டைபுரம், எக்ஸ்.வை, ஒரு அதிபரின் டயறியிலிருந்து, இரத்த நிலம், காகிதத் தோணிகள், ஒரு தரிசிப்பின் முடிவில், தொடக்கு, நாளைய இன்றில், காயங்கள், பாவம் அவள், யாசகம், கனவுகள் உதிர்ந்தபோது, சீர்திருத்தவாதி, அம்மா, இந்த நாடகம் எந்த மேடையில், விருது வாங்கல்லயோ விருது, புலராத பொழுதுகள், கருணையம்மா, கண்ணீர்த்துளிகள், விதிப்பறவை, எதற்காக ஆகிய தலைப்புகளில் 22 சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

11774

கீறல்: சிறுகதைகளின் தொகுப்பு. மலரன்னை (இயற்பெயர்: அற்புதராணி காசிலிங்கம்). மாங்குளம்: மலரன்னை வெளியீடு, மலராலயம், கொல்லர் புளியங்குளம், 1வது பதிப்பு, மார்கழி 2016. (யாழ்ப்பாணம்: ஆரு கிறின்டேர்ஸ், 453, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு).

ix, 179 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-43209-2-5.

கச்சாயில் இரத்தினம் என்னும் பழம்பெரும் எழுத்தாளரின் புதல்வியான மலரன்னை எழுதிய 23 சிறுகதைகளின் தொகுப்பு இது. இது இவரது இரண்டாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைத் தொகுப்பு. வலம்புரி, சங்குநாதம், செவ்வரத்தை, தமிழ்மிரர், காக்கைச் சிறகினிலே போன்ற ஊடகங்களில் 2016இல் பிரசுரமானவை. விடியலின் சாயல், பிரதிதானம், அனுதாபம், கீறல், அவள், கானக்குயில், வாசல் இல்லாத வேலி, பட்டால்தான் தெரியும், ஜெயித்தவன், மாறியது நெஞ்சம், பாரியின் வாரிசு, ஏக்கங்களின் பெருமூச்சு, இதமான நெருடல், பேசும் ஊமைகள், உன்னால் முடியும், கண்ணீரின் சங்கமம், போதை தெளிந்தது, வேரில் துளிர்த்தல், செய்யும் தொழிலே தெய்வம், மண்வாசனை, வினையமும் விளைவும், சத்திய முடிச்சு அவிழ்ந்தது, நிலைமாறும் உலகம் ஆகிய தலைப்புகளில் இவை பிரசுரமாகியுள்ளன.

11775

கோப்பாய் சிவம் சிறுகதைகள். பா.சிவானந்தசர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீநகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2016. (யாழ்ப்பாணம்: குரு பிரிண்டர்ஸ், 39/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

xxxii, 240 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-4078-00-0.

கோப்பாய் சிவம் 1985இல் நியாயமான போராட்டங்கள் என்ற சிறுகதைத் தொகுப்பையும், 2004இல் தார்மீகக் கோபங்கள் என்ற சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டிருந்தார். இது அவரது மூன்றாவது சிறுகதைத் தொகுப்பு. கடந்த 50 ஆண்டுகளில் இவர் எழுதிய பல்வேறு ரகச் சிறுகதைகளில் தேர்ந்த 35 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலானவை மூன்று தசாப்த காலத்திற்கு முன்னர் எழுதப்பட்டவை. பண்பு (குறுங்கதை), கணிப்பு, சிதைந்த கூடு, ஒரு மரண ஊர்வலம் புறப்படப் போகின்றது, அவனும் இவரும், நியாயமான போராட்டங்கள், நிழல்களும் நிஜங்களும், ஏக்கங்கள், தோல்வியிலும் அவனுக்கு ஒரு பெருமை, வாழை அழுத கண்ணீர், இழப்பின் பெருமைகள், ஓர் இதயம் கர்த்தரினால் மன்னிக்கப்படுகின்றது. உதயம், பொய்மையும் வாய்மையிடத்த, பிள்ளைத்தமிழ், முற்றுப்பெறாத இராகங்கள், மௌனங்கள் உடைகின்றன, இழப்பு, அன்னை சிரித்தாள், குழந்தை, தார்மீகக் கோபங்கள், இரசனைகள், எனக்குரிய இடம், பாவத்தின் பங்காளிகள், அரங்கேறாத ஆசைகள், தந்தை மகற்காற்றும் உதவி, அழகு, பைத்தியம் பிடித்த சில மனிதர்களும் பைத்தியமாக்கப்பட்ட ஒரு பெண்ணும், என் அப்பாவின் மனைவியின் தம்பி என் கணவனென்றால், அம்மாவுக்கு உண்மை புரிந்துவிட்டது, கூனல், மூன்றிற்குப் பிறகு, ஓஹோ அதுவா சங்கதி (நகைச்சுவைக் கதை), சங்கீதச் சமர் (நகைச்சுவைக் கதை), அதிர்ஷ்டம் (குறுங்கதை) ஆகிய கதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. பின்னிணைப்பாக ஆசிரியரின் முன்னைய நூல்களுக்கான விமர்சனங்களும், ஆசிரியரின் பிற நூல்களின் நீண்ட பட்டியலும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61072).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11776

சிவகுமாரன் கதைகள். கே.எஸ்.சிவகுமாரன் (நூலாசிரியர்), க.தா.செல்வராசகோபால் (பதிப்பாசிரியர்). களுவாஞ்சிக்குடி: ஜீவா பதிப்பகம், பிரதான பாதை, தேற்றாதீவு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1984. (மட்டக்களப்பு: மனோகரா அச்சகம்).

(18), 58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

பாரதி நூற்றாண்டு வெளியீடாக 1982 இல் வெளிவரவிருந்த இத்தொகுப்பு தவிர்க்க முடியாத காரணங்களினல் 1984 ஓகஸ்ட்டில் வெளியாகிறது. "சித்திரகுப்தன்" "விலோஜனி" ஆகியனவும் இவருடைய புனைபெயர்களாகும். 1959 முதல் 1965 வரையிலான ஆறு வருடங்களில் பிரசுரமான சில கதைகளின் தொகுப்பு இது. இக் கதைகளில் பெரும்பாலானவை உத்தி பிரயோகத்திற்காக, பத்திரிகை ரகக் கதைகள் வார்ப்பில் எழுதப்பட்டவை. சில கதைகள், உளவியல் சார்ந்தவை பெரும்பாலான கதைகள், கொழும்புவாழ் மேல்தட்டுப் பாத்திரங்களைத் தீட்டுபவை. இக்கதைகள் சிலவற்றில் சிங்களத் கதாநாயர்கள் வருகிருர்கள். கதைகள் சிலவற்றில் எழுத்தாளர்களே முக்கிய பங்கெடுத்தனர். கற்பனையாகி எழுதப்பட்ட இக்கதைகள் நகர்ப் புற வாழ்க்கையை - அதுவும் கொழும்பு வாழ்க்கையின் சில அம்சங்களே சித்திரிப்பவை. சுவாரஸ்சியமாக அமையவேண்டும் என்பதற்காக எழுதப்பட்டவை இக்கதைகள். "கொடகே" வாழ்நாள் சாதனையாளர் (2012)இற்கான கௌரவ சாஹித்திய விருதினைப் பெற்ற கே. எஸ் சிவகுமாரன் அவர்களின் ஆரம்பகாலப் படைப்புகளான சிறுகதைத் தொகுதி. ஒரு விமர்சகராக, திறனாய்வாளராக, பத்தி எழுத்தாளராக, மொழிபெயர்ப்பாளராகத்தான் வெளியுலகிற்கு அறியப்பட்டிருக்கிறார். பெரும்பாலான இவரது கதைகள் உளவியல் சார்ந்திருக்கும். பேராதனைப் பல்கலைக்கழக ஆங்கிலப் பட்டதாரியான இவர் தமது வாழ்நாளில் பெரும்பகுதியை இலக்கியத்திற்கும் கல்வித்துறைக்கும் அர்ப்பணித்திருப்பவர். இலங்கை வானொலி, த ஐலண்ட், வீரகேசரி, முதலான ஊடகங்களிலும் பணியாற்றியவர். தற்போதும் டெயிலிநியூசில் இவரது பத்தி எழுத்துக்களை பார்க்கலாம். இலங்கை வங்கி உட்பட பல வர்த்தக ஸ்தாபனங்களிலும் இவர் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றியிருக்கிறார். இலங்கை வானொலியின் தமிழ் வர்த்தகசேவையில் பகுதிநேர அறிவிப்பாளராகவும் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் மொழிபெயர்ப்பாளராகவும் செய்திப்பிரிவில் துணை ஆசிரியராகவும் சேவையாற்றிய கே.எஸ். சிவகுமாரன் இலங்கையில் அமெரிக்கத்தூதரக தகவல் பிரிவிலும் சிறிதுகாலம் பணியாற்றியிருக்கிறார். நவமணி இதழின் ஸ்தாபக ஆசிரியரும் இவரே. கொழும்பில் மூன்று சர்வதேசப்பாடசாலைகளிலும் அமெரிக்கா, மாலைதீவு, ஓமான் ஆகிய நாடு களிலுள்ள பாடசாலைகளிலும் ஆங்கில ஆசிரியராக பணியாற்றிய அனுபவம் இவருக்குண்டு. இந்தியாவில் நடந்த பல சர்வதேச திரைப்பட விழாக்களிலும் பங்குபற்றியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31591).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11777

சுவரோவியச் சுந்தரி: சிறுகதைத் தொகுப்பு-முதலாவது பதிப்பு. ஈழத்துப் பூராடனார் (மூலம்), எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா M5S 2W9: ஜீவா பதிப்பகம், ரிப்ளக்ஸ் அச்சகம், 1108, பே வீதி, தொரன்ரோ, 1வது பதிப்பு, ஆடி 1993. (கனடா M5S 2W9: ஜீவா பதிப்பகம், ரிப்ளக்ஸ் அச்சகம், 1108, வே வீதி, தொரன்ரோ).

(8), 160 பக்கம், விலை: கனேடிய டொலர் 10., அளவு: 21.5x14 சமீ.

ஈழத்துப் பூராடனார் - க.தா.செல்வராசகோபால் அவர்கள் இயற்றிய 15 சிறுகதைகளின் தொகுப்பு. நாணயம், உறவுகள் உறங்குவதில்லை, தீர்ப்பு, தலைக்குனிவு, மொந்தன் வாழை, ஒரு மாதிரியான ஆள், பிள்ளைமனம், பழையபாணி புதிய கருத்து, நிக்காஹ், பங்குப் பலாமரம், இனப்பகை, சிதம்பரி, சுவரோவியச் சுந்தரி, கற்புக் கனல், நிர்வாணம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12944).

11778

சொந்த மண்ணின் அந்நியர் (சிறுகதைகள்). இரா.சடகோபன். பத்தரமுல்லை: சட்டத்தரணி இரா.சடகோபன், 17B, ரிச்சர்ட் டி சொய்சா ஊடகவியலாளர் வீடமைப்புத் திட்டம், 1வது பதிப்பு, டிசம்பர் 2015. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர். இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

269 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 18x12.5 சமீ., ISBN: 978-955-42706-0-2.

மலையகப் படைப்பாளி சட்டத்தரணி இரா.சடகோபனின் முதலாவது கவிதைத் தொகுப்பு 1998இல் வசந்தங்களும் வசீகரங்களும் என்ற தலைப்பில் வெளிவந்தது. அக்காலத்தில் எழுதப்பட்ட சொந்தமண்ணின் அந்நியர் என்ற சிறுகதை 1998ஆம் ஆண்டு துரைவி-தினகரன் இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றது. அதுவே இத்தொகுப்பின் தலைப்புக் கதையாகியுள்ளது. அக்கதையுடன், நேர்கோடுகள் வளைவதில்லை, சொல்லாமலே, உன்னைக் கொன்றவர்கள் யார், சூடேறும் பாறைகள், சொந்த மண்ணின் அந்நியர், நெஞ்சினலைகள், செவப்பு கலருல ஒரு காரு, தேன்மொழி அல்லது இளம்பரிதி, கருஞ்ஜுலை, புன்னகை மறைந்த அந்த நாளில், கரிச்சான் குருவி, இன்னும் எத்தனை நாள், செல்லி அல்லது மணிராசு, கரையைத் தொடாத ஓடங்கள், சூரியன் சாட்சியாக ஆகிய 15 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

11779

தகவம் பரிசுக் கதைகள் - தொகுதி 3. தகவம். கொழும்பு 6: தகவம் கதைஞர் வட்டம், 40, லில்லி அவென்யூ, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, மார்ச் 2016. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ்).

xvi, 298 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-3939-00-5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 2009-2013 வரையிலான ஐந்தாண்டுக் காலப்பகுதியில் வெளிவந்து, தகவம் அமைப்பினரின் சிறுகதை மதிப்பீட்டில் முதற் பரிசினையும் சிறப்புப் பரிசினையும் பெற்ற சிறுகதைகளை உள்ளடக்கியதாக இத்தொகுப்பு வெளிவந்துள்ளது. இந்நூலில் 18 ஈழத்துச் சிறுகதைப் படைப்பாளிகளின் அறிமுகக் குறிப்புகளுடன் அவர்கள் எழுதிய 26 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்குரிய சிறுகதைகளின் செல்நெறிகளைக் கண்டறியும் உரைகல்லாக இத்தொகுப்பு அமைகின்றது. தாமரைச்செல்வி (கசிந்துருகி கண்ணீர் மல்கி), யோகேஸ்வரி சிவப்பிரகாசம் (மரண அறிவித்தல்), புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் (தாச்சிச் சட்டி), வி.ஜீவகுமாரன் (கிராமத்துப் பெரிய வீட்டுக்காரி, நாணயம், மாங்கல்யம் தந்துதானே, நானும் எனதும், பிள்ளைபிடிகாரரும் பணக்கார அகதிகளும் அண்ணாவாகிய நானும், இடைவெளி), ச.முருகானந்தன் (சுடலை ஞானம்), கே.ஆர்.டேவிட் (முதலாவது அத்தியாயம் நிறைவுபெறுகிறது, மண் போறணை), சுதர்ம மகாராஜன் (குளம்), பதுளை சேனாதிராஜா (கோணல் சித்திரங்கள்), கெக்கிறாவ ஸஹானா (அங்கும் இங்கும்), க.சட்டநாதன் (சடங்கு), பவானி சிவகுமாரன் (நிழல் கொஞ்சம் தா, மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்), மருதம் கேதீஸ் (ஔவைதரு முகிலி), சந்திரகாந்தா முருகானந்தன் (உண்மை வலி), தாட்சாயணி (பொய்மையும் வாய்மையிடத்து, உள்ளேதான் உள்ளாயோ), எம்.எஸ்.அமானுல்லா (ஒரு பெண்ணின் கதை), தேவமுகுந்தன் (மாறுதல்), சித்தாந்தன் (நூறாயிரம் நுண்டுளைகளால் பொறிக்கப்பட்ட பெயர்), கே.எஸ்.சுதாகர் (இரு வேறு பார்வைகள்) ஆகியோரின் தேர்ந்த கதைகள் இத்தொகுப்பில் தெரிவாகியுள்ளன.

11780

தஜ்ஜாலின் சொர்க்கம். லறீனா அப்துல் ஹக். கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2016. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

xxxv, 191 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-30-6744-9.

ஒரே ஒரு கனவுகூட மிஞ்சவில்லை, பொம்புள, கறுப்பி, எனக்கான வெளி, எழுதப்படாத கவிதை, மனச்சருகு, ஸெய்நம்பு நாச்சி, தஜ்ஜாலின் சொர்க்கம், ஆத்தா, புளியமரத்துப் பேய்கள் ஆகிய 10 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. லறீனா அப்துல் ஹக் மாத்தளையை பிறப்பிடமாகக் கொண்டவர். கவிதை, சிறுகதை, நாவல், ஆய்வுக்கட்டுரைகள் என இதுவரை 12 இற்கும் அதிகமான நூல்களை வெளியிட்டுள்ளார். 2002 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியில் BA சிறப்பு பட்டத்தினை பூர்த்தி செய்த இவர் பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ் மொழித்துறை, மொழி பெயர்ப்புக் கற்கைத்துறையிலும் விரிவுரையாளராகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. "சிங்கள தமிழ் ஆக்க இலக்கிய மொழி பெயர்ப்புப் பிரச்சினைகள்" தொடர்பில் ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பித்து தனது முதுதத்துவமாணி பட்டத்தை (M.Phil) நிறைவு செய்தவர். இவருடைய அன்னை பௌசுல் ஹினாயா என்பவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை பர்வீன் என்ற புனைப்பெயரில் பத்திரிகைகளில் 30 இற்கும் அதிகமான தொடர் கதைகளை எழுதியுள்ளார். இவருடைய தந்தை சிங்கள சினிமாத்துறையின் பிரபல இசையமைப்பாளராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61088).

11781

தீர்வு தேடும் நியாயங்கள்: சிறுகதைத் தொகுதி. கண.மகேஸ்வரன். பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, மார்கழி 2016. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

x, 94 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-56-5.

இந்நூலில் கண.மகேஸ்வரன் எழுதிய அப்பாச்சி, ஆதிக்கம், அதிர்வுகள், ஆக்கிரமிப்பு, அவஸ்தை, தருணம், தீர்வு தேடும் நியாயங்கள், வேளை வந்த வேளை, காலச் சிதறல்கள், தனிக்குடித்தனம், மண்ணும் மனையும், அந்திமம் ஆகிய பன்னிரு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் ஜீவநதி வெளியீட்டுத் தொடரில் 68ஆவது நூலாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61493).

11782

தெணியானின் ஜீவநதிச் சிறுகதைகள். தெணியான் (இயற்பெயர்: கந்தையா நடேசன்). பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய்,1வது பதிப்பு, டிசம்பர் 2012. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

vi, 98 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-4676-01-5.

எழுத்தாளர் தெணியான் அவர்கள் ஜீவநதி சஞ்சிகையில் எழுதி வெளியிட்ட ஆண்ட பரம்பரை, வெளுக்காத மனங்கள், திவ்விய வஸ்திரம், மோப்பம் பிடிக்கும், வாழ்வதற்காகத்தான், தாய்மாமன், மறுபக்கம், வாய்ப்பிறப்பு, காக்கும் தெய்வங்கள், பாதுகாப்பு ஆகிய பத்துச் சிறுகதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. தெணியான் என்ற புனைபெயரால் அறியப்படும் கந்தையா நடேசன் (பிறப்பு: சனவரி 6, 1942) ஈழத்தின் குறிப்பிடத்தக்க முற்போக்கு எழுத்தாளர்களில் ஒருவர். யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையில் பொலிகண்டி என்ற ஊரைச் சேர்ந்தவர். ஆசிரியராகப் பணியாற்றிய தெணியான் விவேகியில் "பிணைப்பு'' என்ற சிறுகதையுடன் ஆரம்பித்து ஏறக்குறைய 120 இற்கும் மேற்பட்ட சிறுகதைகளை இதுவரை எழுதியிருக்கிறார். மேலும் இவர் கவிதை, வானொலி நாடகங்களும் எழுதியுள்ளார். தினக்குரலில் நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில் பேராசிரியர் கா. சிவத்தம்பி என்ற 19 அத்தியாயங்கள் கொண்ட தொடரை அண்மையில் எழுதியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 230741).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11783

தொடுவானம் தொலைதூரம்: சிறுகதைத் தொகுதி. சு.சிவராசா. யாழ்ப்பாணம்: சு.சிவராசா, நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், 1வது பதிப்பு, 2016. (யாழ்ப்பாணம்: கரிகணன் பதிப்பகம், 681, காங்கேசன்துறை வீதி).

xviii, 89 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955- 43441-0-5.

நாவற்குழியைச் சேர்ந்த புராணகலாவித்தகர், கலாபூஷணம் சு.சிவராசா அவர்களின் சிறுகதைகளின் தொகுப்பு இது. இவர் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் துணை நிலைச் செயலாளராகப் பணியாற்றுகின்றார். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல்துறை ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தராகப் பதவி வகித்தவர். துர்அதிர்ஷ்டவசமாக தனது இளம்பிராயத்தில் கண்பார்வையை இழந்தவர். கைதடி நபில்ட் பாடசாலையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இந்நூலில் காலம் வந்தால் வாழ்வு வரும், அவர்கள் பேருந்துக்காகக் காத்திருக்கிறார்கள், இதுவும் ஒரு சமூகக் கதை, சொல்லித் தெரிவதில்லை, சாத்தியது மனக்கதவு, தெளிவுபெற்ற மதியினாய், புத்தகம் சொன்ன புத்திமதி, ஒரு புதிய தரிசனம், காதல் கவிதை சுகமானது, அவளுக்கும் வானம் வசப்படும், வாய்ப்புள்ள போதே கழுத்தை நீட்டிவிடு, அம்மன் கோயில் திருவிழா, ஒரு வெள்ளைப் பிரம்பின் கதை, வாடகை வீடு, கனவு மெய்ப்பட வேண்டும் ஆகிய 15 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அனைத்தும் சமூகத்தில் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வியல் பற்றிப் பேசுவதாக உள்ளன.

11784

தோற்றுப்போனவளின் வாக்குமூலம். அலெக்ஸ் பரந்தாமன். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, மார்ச் 2016. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

xiv, (2), 66 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-4676-38-1.

வறுமைக்கோட்டில் வாழும் மக்களினதும் நடுத்தர வர்க்கத்தினரினதும் வாழ்க்கை ஓட்டங்கள் இங்கு சிறுகதைகளாகியுள்ளன. அனைத்துக் கதைகளும் யதார்த்தமான வாழ்க்கையின் அல்லல்களின் விம்பங்களாக விழுந்து தெறிக்கின்றன. இக்கதைகளின் பகைப்புலங்கள், போர்க்கால உணர்வுகள் மற்றும் பெண்களின் கண்ணீருக்கும் மனக் குமுறல்களுக்கும் பின்னால் மறைந்திருக்கும் முகத்திரைகளைக் கிழிக்க ஆசிரியர் எத்தனித்துள்ளார். இயல்பான போர்க்கால வாழ்க்கையைக் கடந்து வந்த எவருக்கும் இக்கதைகளில் எங்கோ ஒரு பாத்திரப்படைப்பு தனக்கானதாக இருந்திருக்கும். முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவரும் ஊடகத்துறையில் ஒப்புநோக்குநராகப் பணியாற்றுபவருமான பரந்தாமனின் இந்நூல், ஜீவநதியின் 58ஆவது பிரசுரமாக வெளிவந்துள்ளது. பாதை மாறிய பாதங்கள், மனப் புழுக்கங்கள், பொன்னாத்தை, வேண்டுதலும் வேண்டாமையும், மனச் சிதைவுகள், ஊனப்பார்வைகள், இறங்கு முகங்கள், நெருப்புத் தின்னிகள், கவிதையும் கத்தரிக்காயும், தோற்றுப் போனவளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குமூலம் ஆகிய 10 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 249277).

11785

நவரச கதா மஞ்சரி: இவை இனிய கற்பிதக் கதைகள். வல்வை வே.சின்னையா. சிங்கப்பூர்: வல்வை.வே.சின்னையா, 1வது பதிப்பு, 1930. (சிங்கப்பூர்: அசோகா அச்சு இயந்திரசாலை).

(8), 102 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x13.5 சமீ.

இனிய கற்பிதக் கதைகள் என்ற உப தலைப்புடன் அன்பின் பெருமையையும், வீரத்தின் மாண்பையும், மெய்மையின் உயர்வையும், ஒழுக்கத்தின் சிறப்பையும், பொய்மையின் இழிவையும், விளக்கும் ஐந்து கதைகளை உள்ளடக்கிய சிறுகதைத் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இவரது கதைகள், நீதிநெறிகளை மக்கள் மனதில் பதியம்வைக்கும் நோக்குடன் அவற்றை ஆக்க இலக்கியங்களினூடாக "கற்பனா சரித்திரங்களாக" நீதிநெறிச் செய்யுள்களை இடையிடையே சேர்த்து இக்கதைகளை ஆக்கியிருக்கிறார். ஐந்து கதைகளுக்கும் தலைப்பு இடப்பட்டிருக்க வில்லை. முதலாவது கதை, இரண்டாவது கதை என்றவாறாகத் தலைப்பிடப் பட்டுள்ளன. மேலும் இரண்டாவது கதைக்கு உபதலைப்பாக "சந்திரசேகரன் தனது சினேகிதனோடு சம்பாஷித்த சம்பாஷணை" என்ற வரிகள் காணப்படுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து சென்று சிங்கப்பூரில் தொழில்நிமித்தம் வாழ்ந்திருந்த வல்வை வே சின்னையா, சிங்கப்பூரின் தமிழ்ச் சிறுகதை முன்னேடியாகக் கருதப்படுகின்றார். 1936இல் இவர் தமிழணங்கு அல்லது இளநகைச் சிறுமி என்றொரு கதையையும் நூலுருவாக்கியிருக்கிறார்.

11786

நிலவே என்னிடம் மயங்காதே. ராஜி வல்லிபுரநாதன். நியூசிலாந்து: ராஜி வல்லிபுரநாதன், 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxii, 161 பக்கம், ஓவியங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் திருமதி ராஜி வல்லிபுரநாதன். அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழ்பவர். இவரது முதலாவது சிறுகதையான வாழவைத்த தெய்வம் கலைச்செல்வி மாத இதழில் வதனி என்ற புனைபெயரில் வெளிவந்தது. ஜேர்மனியிலிருந்து வெளிவந்த இந்து மகேஷின் பூவரசு சஞ்சிகையிலும் நியுசிலாந்தின் ஒக்லாந்தின் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தமிழ் மஞ்சரி செய்திப் பத்திரிகையிலும் இவரது சில ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன. பன்னாட்டு தமிழ் ஊடகங்களிலும் இவர் எழுதிய சிறுகதைப் படைப்புக்களின் தொகுப்பாக இந் நூல் வெளிவந்துள்ளது. தமிழர்களின் வாழ்வில் ஏற்படும் அன்றாட சமுதாயப் பிரச்சினைகளே இவரது கதைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவாக உள்ளன. தமிழரின் குறுகிய மனப்பான்மையும் அதனால் ஏற்படும் சிக்கல்களும் பெரும்பாலான கதைகளின் பேசுபொருளாகின்றன. கதைகளின் முடிவுகள் பெரும்பாலும் அறவாழ்வையும் நீதியையும் வலியுறுத்துகின்றன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61249).

11787

நீரில் கிழித்த கோடுகள்: சிறுகதைத் தொகுதி. கே.ஆர்.டேவிட். பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஜூலை 2015. (நெல்லியடி: பரணி அச்சகம்).

xii, 148 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-30-5.

மூத்த எழுத்தாளர் கே.ஆர்.டேவிட் அவர்களின் ஒன்பதாவது நூல். மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் ஆசிரியர் எழுதிய 12 கதைகளின் தொகுப்பு இது. அவரது ஆரம்பகாலக் கதைகளுக்கும் சமகாலத்தில் அவரால் எழுதப்பட்டு வரும் கதைகளுக்கும் இடையே கருத்தியல் ரீதியாகவும், வளர்ச்சிநிலையிலும் வித்தியாசங்கள் இருப்பதை இச்சிறுகதைத் தொகுதி வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது. இத்தொகுப்பின் கதைகள் ஏதோவொரு வகையில் சமுதாய இன்னல்களையும் தனிமனித துயரங்களையும் கலாபூர்வமாக வெளிப்படுத்துகின்றன. இவற்றில் பல வறுமைக்கோட்டின் கீழுள்ள மக்களின் சோகங்களைக் கருவாகக் கொண்டமைந்தவை. பல கதைகள் மனிதனது பசித் தேவையை முன்னிலைப் படுத்துகின்றன. வயிறு நிறையச் சோறு சாப்பிடுவம், ஒரு சோறு, ஊமைக் காயம், அவர்களுக்கென்று, வீதி ஓரத்து மரநிழல், முரண்பாட்டின் பிரசவங்கள், ஒரு தாயின் ஆசை, குறிசுடப்பட்டவர்கள், காலம் ஒரு தூரிகை, அனுபவங்கள் சாவதில்லை, கொதிநீர் குளிர்வதில்லை, நீரில் கிழித்த கோடுகள் ஆகிய 12 தலைப்புகளில் இக்கதைகள் இடம்பெற்றுள்ளன. இது 49ஆவது ஜீவநதி பிரசுரம்.

11788

பறிகொடுத்த பின்பும் வாழத் துடிப்பவர்கள். பொலிகை ஜெயா. அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, மார்ச் 2016. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

xii, (2), 112 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-4676-40-4.

சுவிட்சர்லாந்தில் புலம்பெயர்ந்து வாழும் பொலிகை ஜெயா (P.Jeyakkody,Flur weg 12, 2504. Biel/Bienne, Switzerland) எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு. 57ஆவது ஜீவநதி வெளியீடாக ளெிவந்துள்ளது. விடிவை நோக்கிய பயணத்தில் வலிதாங்கிய வடுக்கள், வேற்றாரின் கோரத் தாண்டவம், மகிழ்ச்சியின் எல்லை வானம் வரை, பறிகொடுத்த பின்பும் வாழத் துடிப்பவர்கள், தூரதேச தொலைபேசி அழைப்பு, காலத்தால் செய்த நன்றி, எதிர்பார்ப்புக்கள், வாய்க்கு எட்டா மீன் குழம்பு, மண்ணின் மீது நேசம், சுதந்திர சீரழிவு ஆகிய 10 சிறுகதைகள் இந்நூலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 249283).

11789

பாஞ்சான். நீர்வை பொன்னையன். கொழும்பு 6: இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம், 18, 6/1 கொலிங்வுட் பிளேஸ், 1வது பதிப்பு, ஜூன் 2016. (கொழும்பு 6: R.S.T.Enterprises, 114, W.A.சில்வா மாவத்தை).

130 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1810-27-6.

இந்நூலில் நீர்வை பொன்னையன் எழுதிய பதினாறு சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. பாஞ்சான், சங்கமிப்பு, காத்திருப்பு, பிணைப்பு, சிதைவு, வட்டத்திற்குள் வட்டம், பக்குவம், பச்சோந்தி, வாரிசு, கான்சர், பூமறாங், பந்தபாசம், அஸ்தமனத்தில் ஜனனம், நாய்வால், இந்திரா, அம்பியுலன்ஸ் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. இந்நூல் ஆசிரியரின் பதினொராவது சிறுகதைத் தொகுதியாகும். இந்திரா என்னும் கதை அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் கிழக்குப் பாக்கிஸ்தானிலிருந்து புலம்பெயர்ந்து வந்த அகதிகளால் நடாத்தப்பட்ட போராட்டத்தை மையமாகக்கொண்டு புனையப்பட்ட கதை. பக்குவம், பந்தபாசம் ஆகிய இரு கதைகளும் தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்த மக்களைப் பற்றியது. ஏனைய கதைகள் எமது மண்ணின் மைந்தர்கள் பற்றிய புனைவுகள். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61294).

11790

பாவு தளிர் நூவு வானம்: சிறுகதைத் தொகுப்பு. பசுந்திரா சசி (இயற்பெயர்: செட்டியூர் ப.சசிகரன்). லண்டன்: இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம், இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம், 1வது பதிப்பு, 2015. (வவுனியா: வாணி கணினிப் பதிப்பகம், இல. 85, கந்தசாமி கோவில் வீதி).

210 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-7938-02-08.

தபால் நிலா, மத்தள உரல், சின்னப்பொடி, ஆழநட்ட வாழை, சமயோசித சஞ்சாரம், வெண்நிலவுகள், ஓருயிர் ஈருடல், ஆகாய குஞ்சுகள், செவ்வந்திச் சுவடு, புத்திரபாக்கியமும் புரிந்துணர்வும், இரவல் திருமணம், குயில், ஆகவே புலன் ஆகாது ஆகிய பன்னிரு சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு. புதுமையான விடயங்களை வாசகருக்கு வழங்கவேண்டும் என்பதில் அக்கறைகொண்ட செட்டியூர் ப.சசிகரன், மாறுபட்ட சூழலில் வேறுபட்ட கதைமாந்தர்களை முன்னிறுத்தி அக்கதை மாந்தர்களின் வாழ்க்கைக் கோலங்களைக் காட்டியுள்ளார். கதைகளின் கருப்பொருள்களாக இடப்பெயர்வின் அவலங்கள், அகதி முகாம் வாழ்க்கை, இடர்ப்பாடுகள், வறுமையின் கோலங்கள் போன்றவை அமைந்துள்ளன. செட்டிகுளத்தைச் சேர்ந்த சசிகரன் தற்போது புலம்பெயர்ந்து லண்டனில் வாழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61275).

11791

பிரண்டையாறு (சிறுகதைகள்). மெலிஞ்சிமுத்தன். சென்னை 600 005: கருப்புப் பிரதிகள், பி.55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்சு சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2011. (சென்னை600 005: ஜோதி என்டர்பிரைஸஸ்).

(2), 86 பக்கம், விலை: இந்திய ரூபா 65., அளவு: 21x14 சமீ.

இந்நூலில் மெலிஞ்சிமுத்தன் எழுதிய பன்னிரண்டு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. புலம்பெயரும் சாமங்களின் கதை (கிளாலி 1993-1994), கொழுக்கட்டைக் கள்வர்கள், இல்ஹாம், பனி மூடிய நதி, மொட்டாக்கு, ராணி, பேர்த்தோக்கள் எப்போதாவது தான் வருகிறார்கள். கூட்டிச்செல்லும் குரல், அலாரக் கதவு, சிரிப்புச் சத்தம் கேட்ட கிராமம், நிழலின் குரல், நிலையெடுத்த பள்ளம் ஆகிய தலைப்புகளில் இவை இடம்பெற்றுள்ளன. ஊர்காவற்றுறைக்கும் புங்குடுதீவுக்கும் இடையிலுள்ள கடற்பரப்பில் நரையான்பிட்டி என்ற குட்டித்தீவுண்டு. மார்கழி-சித்திரை மாத காலப்பகுதியில் சைபீரிய நாரைகள் வந்து தங்கிச்செல்வதால் இப்பெயர் உருவாகியது என்பர். அங்குள்ள அந்தோனியார் ஆலயத் திருவிழாவிற்காக மெலிஞ்சிமுனைக் கிராம மக்கள் சென்று வருவார்கள். ஏழாத்துப் பிரிவெனச் சொல்லப்படும் ஏழுகடலாறுகள் அங்கு ஓடுவதைத் தீவுப்பகுதி மீனவர்கள் அனைவருமே நன்கறிவார்கள். ஏழாத்துப்பிரிவின் ஒரு கூறு பிரண்டையாறு. இந்த ஆறுகளில் கீழ்நீர்வாடு-சோநீர்வாடு என இருவகை நீரோட்டங்களுண்டு. அதைப் போல் மக்களின் வாழ்க்கையின் வலிகள் இக்கதைகளுள் உள்ளோடுகின்றன. இப்பிரதேச மீனவ மக்களிடம் பல சொற்கள், பழமொழிகள் பாவனையிலுள்ளன. அவற்றைப் பதிவு செய்யும் வகையில் இத் தொகுப்பில் அவர்களின் வாழ்வும் உலைவும் இயல்பாகப் படைக்கப்பட்டிருக்கின்றன. 1975இல் இலங்கையில் பிறந்த மெலிஞ்சிமுத்தன் கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கும் ஒருகவிஞரும் ஓவியங்களை வரைவதில்ஆர்வமுடையவரும்கூட. ஏற்கனவே "சிதையும் என்னுள்", "என் தேசக்கரையோரம்", "முட்களின் இடுக்கில்" ஆகிய கவிதைத் தொகுதிகளும் கனவுகளின் தொகுப்பென "வேருலகு", "அத்தாங்கு" என்ற நாவலும் மெலிஞ்சிமுத்தனால் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61519).

11792

புதை மணல்: சிறுகதைத் தொகுப்பு. ம.பா.மகாலிங்கசிவம். தெல்லிப்பழை: கலை இலக்கியக் கள வெளியீடு, 1வது பதிப்பு, புரட்டாதி 2015. (இணுவில்: வைரஸ் பிரின்டர்ஸ்).

xviii, 90 பக்கம், சிததிரங்கள், விலை: ரூபா 200., அளவு: 20x14.5 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழில் சிறப்புப் பட்டமும் முதுமாணிப் பட்டமும் பெற்ற ம.பா.மகாலிங்கசிவம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாலையின் விரிவுரையாளராகப் பணியாற்றிவருகிறார். நாடறிந்த பத்திரிகையாசிரியர் புலவர் ம.பார்வதிநாதசிவம் இவரது தந்தையாராவார். ம.பா. மகாலிங்கசிவம் "தமிழருவி" என்ற சஞ்சிகையில் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இத்தொகுப்பில் ஆசிரியரின் விசுவாமித்திரன், புகையிரதம் மீண்டும் வரும், புதை மணல், சிக்குன் குனியா, (அ)தர்மம், நினைவுக் குமிழிகள், ஏன்?, தூதுவன், சாணக்கியம், நீர்க்குமிழி, மூடநாரையும் கீரிப்பிள்ளையும், கானல், அபெயர்ஷேயம் ஆகிய 13 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலான சிறுகதைகள் பாடசாலைகளை மையப்படுத்தி எழுதப்பட்டவை.

11793

பூபாலி: சிறுகதைத் தொகுப்பு. செ.குணரத்தினம். மட்டக்களப்பு: செ.குணரத்தினம், அமிர்தகழி, 1வது பதிப்பு, 2015. (மட்டக்களப்பு: எவர்கிறீன் அச்சகம்).

xi, 106 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4320-31-4.

மட்டக்களப்புப் பிரதேச மக்களின் வாழ்வியலைப் பதிவுசெய்யும் சிறுகதைத் தொகுப்பு. ஆசிரியரின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு இதுவாகும். அன்றாட வாழ்வின் சிக்கல்களுக்குள்ளாகும் தருணங்களை மட்டக்களப்புப் பேச்சு வழக்கிலேயே அழகாகச் சித்திரித்துள்ளார். 1957இல் மட்டக்களப்பைப் புரட்டிப்போட்ட வெள்ள அநர்த்தத்தை நினைவூட்டுவதாக ஆற்றுவாய் என்ற கதை அமைகின்றது. இத்தொகுப்பில் யாதும் ஊரே (வீரகேசரி-2008), நினைவை விட்டகலாத நிஜங்கள் (வீரகேசரி-2010), கலா பல்கலைக்கழகம் போகிறாள் (வீரகேசரி-2010), ஒரு எழுத்தாளனின் இறுதி ஆசை (தினகரன்-2010), ஆனந்தக் கண்ணீர் (வீரகேசரி-2011), பொன்னாடை (தினகரன்-2011), கனவு மெய்ப்படல் வேண்டும் (வீரகேசரி-2012), உதயத்தைக் காணாத இதயங்கள் (தினகரன்-2012), பூபாலி (வீரகேசரி-2012), பழிக்குப் பழி (வானவில்-2012), பிறந்த மண் (சுடர் ஒளி- 2013), ஞானம் (வீரகேசரி-2015), ஆற்றுவாய் (வீரகேசரி-2015) ஆகிய 13 கதைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் யாதும் ஊரே என்ற கதை யாழ். இலக்கிய வட்டத்தின் பரிசையும், உதயத்தைக் காணாத இதயங்கள் இலங்கையர்கான் நினைவுப் போட்டிப் பரிசினையும் வென்றவையாகும்.

11794

பொழிவு: சிறுகதைகள். க.சட்டநாதன். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, மே 2016. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

(8), 169 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-42-8.

வேலணையில் ஏப்ரல் 22, 1940 இல் பிறந்த க.சட்டநாதன் ஈழத்தின் குறிப்பிடத்தக்க சிறுகதையாளர். பூரணி காலாண்டிதழின் இணையாசிரியராக இருந்தவர். ஓய்வு பெற்ற விஞ்ஞான ஆசிரியர். இவர் எழுதிய பொழிவு, நனைந்த நினைவுகள், சிறிசுகள், அழுத்தம், நாணயம், தெரிந்தும் தெரியாமலும், வெந்து தணிந்தவை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிப்பு, மீறல்கள், சடங்கு, அவரும் அவர்களும், அவள் நீரின் நிறம் ஆகிய 12 சிறுகதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. பெண்மை, காதல், அன்போடு கூடிய கணவன்-மனைவி உறவு, பாலியல், சிறுவர்களின் குழந்தைப்பருவ இன்ப நாட்கள், சாதியம் சார்ந்த விடயங்கள் எனப் பலதை உள்ளடக்கி இக்கதைகளை வடித்துள்ளார். இது ஜீவநதியின் 60ஆவது வெளியீடு. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61511).

11795

மரம் மாந்தர் மிருகம். பொ.கனகசபாபதி. கனடா: பொ.கனகசபாபதி, ரொரன்டோ, 1வது பதிப்பு. செப்டெம்பர் 2012. (கனடா: ஜே.ஜே.பிரின்டிங், ஸ்காபரோ, ஒன்ராரியோ).

252 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

கனடா "தாய்வீடு" பத்திரிகையில் ஆசிரியர் எழுதிய 25 கதைகளின் தொகுப்பு இது. கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் மரமும் மனிதரும் பிராணிகளுமாகின்றன. அவற்றின் பின்புலத்தில் இடம்பெறும் சம்பவங்களே கதைகளை சுவாரஸ்யமாக நகர்த்திச் செல்கின்றன. அனைத்துக் கதைகளும் ஆசிரியரின் சொந்த அனுபவத்தின் வெளிப்பாடுகளாகவே அமைந்துவிடுகின்றன. சம்பவங்களை விளக்கும் போது கையாளப்படும் எழுத்து நடை, இலக்கிய எடுத்துக்காட்டுகள், விஞ்ஞான விளக்கங்கள் என்பன சில சமயம் இவை கட்டுரைகளின் வரம்பைத் தொட்டுச் செல்வதாகவும் தோற்றமளிக்கின்றன. இதிலுள்ள கதைகளிற் சில தீராநதி, தினக்குரல் அகிய ஊடகங்களிலும் மீள்பிரசுரமாயின. கமுகு மரம், வாழை, கொல்லைப்பறத்துப் பலா, குப்பையடிக் கறுத்தக் கொழும்பான், தோப்புப் பனைமரம், வேலியடி வேப்பமரம், வீட்டுக் கோடியில் கறிமுருங்கை, கிணற்றடி வேலியில் செம்பருத்திப் பூ, ஊஞ்சல் ஆடிய புளியமரம், கோடியில் கறிவேப்பிலை மரம், வரிசையாய் தென்னைமரம், இலுப்பைப்பூ, விளாத்தி மரம், வேலிப் பூவரசு, கோடி மூலையில் நாவல்மரம், மாதுளம் செடிகள், அடிவளவு அன்னமுன்னா, நெல்லிமரம், கிணற்றடி ஈரப்பலா, வறைக்குதவும் அகத்தி இலை, அம்மாவின் அரிக்கன் ஆடு, மைத்துனன் வீட்டு எலி என இக்கதைகளின் பின்னணி ஏதோவொரு வகையில் ஒரு தாவரத்தையோ பிராணியையோ சார்ந்ததாக அமைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 57746).

11796

மனிதர்கள். ஆதிலட்சுமி சிவகுமார். கிளிநொச்சி: கப்டன் வானதி வெளியீட்டகம், இல.61, கனகபுரம், 1வது பதிப்பு, தை 2006. (வவுனியா: மல்ரிவிஷன் அச்சுக் கலையகம், 2ம் குறுக்குத்தெரு).

xii, 235 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 250., அளவு: 21x13.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினகரன் பத்திரிகையில் உரிமையில்லா உறவுகள் என்ற சிறுகதையுடன் எழுத்துலகப் பிரவேசம் செய்த ஆதிலட்சுமி சிறுகதைத்துறையில் மாத்திரமன்றி பிற ஆக்க இலக்கியத்துறைகளிலும் ஆழக்கால் பதித்துநிற்பவர். போரையும் சமூகத்தின் அவல வாழ்வையும் பட்டுணர்ந்து அதன் பிரதிபலிப்பாக உள்ளத்தில் பதிந்த உயிர்த்துடிப்புள்ள 31 கதைகளைத் தொகுத்து இத்தொகுதியை வெளியிட்டுள்ளார். புயலை எதிர்க்கும் பூக்கள், என் கவிதை ஆகியவற்றுக்கு அடுத்ததாக இவரது மூன்றாவது நூல் இதுவாகும். கப்டன் வானதி வெளியீட்டு வரிசையில் எட்டாவது நூல் இது. இதில் புதிய முளைகள், மனிதம், நியதிகள் மாறும், அவளின் பிள்ளைகள், மண், வெற்றுக் குரல், இப்படியும், எழுகை, இப்போது அது வெறும் சடம், இலவம் பஞ்சுகள், நிலா, தணலில் விழுகின்ற தளிர், வெள்ளைத் துணி, மனிதர்கள், அவள் வகுத்த வழி, முரண்கள், இயல்புநிலை திரும்பாதவர்கள், வீடுகள், சமாதானத்தின் வலி, வேரின் கரம், துடுப்பில்லாத ஓடங்கள், புதிய ஊரின் பழைய மனிதன், வெகுமதி, அகதி, ஒரு புரிதலின் பின், பிரச்சினை இல்லாதவர்களின் பிரச்சினைகள், புதிய மனுஷி, உயிருள்ள சாட்சியங்கள், உதிராத சருகுகள், அப்பா, அகதியின் பயணம் ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.

11797

மீண்டு(ம்) எழுவோம். கிறிஸ்டி முருகுப்பிள்ளை. திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், இல. 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஜனவரி 2012. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

xii, 78 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-53372-9-8.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எருவில் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் நூலாசிரியர். விஞ்ஞான கணித ஆசிரியராகப் பணியை ஆரம்பித்த இவர் பாடசாலை அதிபராகிப் பின்னர் கல்விப்பணிப்பாளராகப் பணியாற்றியவர். மூன்று தசாப்தங்களாக எழுதிவரும் இவரது முதலாவது கதைத் தொகுதி இதுவாகும். தொண்டன் இதழில் வெளிவந்த பதினொரு கதைகளையும், பிற ஊடகங்களில் வெளிவந்த மூன்று கதைகளையும் பிரசுரமாகாத ஒரு கதையையும் சேர்த்து மொத்தம் 15 கதைகளை இத்தொகுப்பில் இணைத்துள்ளார். தலைப்புக்கதை உளவள ஆலோசகரின் முயற்சியும் உதவும் மனப்பான்மையும் பாதிக்கப்பட்ட ஒருவரை எப்படி சமூகத்தில் மீள இணைக்க உதவுகின்றது என்பதை காட்டுகின்றது. உணர்வுகளும் உறவுகளும், ஒரு கல்லும் ஓர் உளியும், உண்மையைத் தேடி, வலிக்கும் இரணங்கள், அந்தப் பணமும் இந்த மனமும், விசுவாசம், கறுத்த உடல்களும் வெளுத்த உள்ளங்களும், உண்மையின் ஒளி, ஊமை உறவுகள், துரோகச் சுமை, சமாந்தரங்கள் சந்திக்கின்றன, அப்பா வருவாரா, இறைவன் இணைத்ததை, துஆக்களும் பிரார்த்தனைகளும், மீண்டு(ம்) எழுவோம் ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11798

மீன்கள்: தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள். தெளிவத்தை ஜோசப் (மூலம்), ஜெயமோகன் (தொகுப்பாசிரியர்). சென்னை 600005: நற்றிணை பதிப்பகம், பழைய எண் 123A, புதிய எண் 243A, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, திருவல்லிக்கேணி, 1வது பதிப்பு, டிசம்பர் 2013, (சென்னை 5: சாயி தென்றல் பிரின்டர்ஸ்).

110 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-82648-64-2.

தெளிவத்தை ஜோசப் எழுதிய மீன்கள், இருப்பியல், மனிதர்கள் நல்லவர்கள், பயணம், கத்தியின்றி ரத்தமின்றி, மழலை, அம்மா, பாவ சங்கீர்த்தனம், சிலுவை ஆகிய ஒன்பது தேர்ந்த சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இலங்கைத்தமிழ் இலக்கியச்சூழலில் முக்கியமான மலையக எழுத்தாளர்களில் ஒருவர் தெளிவத்தை ஜோசப். இலங்கை மலைநாட்டு தமிழர் பற்றிய ஆக்க இலக்கியப் படைப்புகளை எழுதும்போது அவர்களின் வட்டார மொழியை ஆடம்பரமற்ற எளிமையான மொழியில் சொல்வதுதான் அவரது வழக்கம். ஆனால் அவரது படைப்பின் அடிநாதமாக இருப்பது எந்த நாட்டு மனிதர்களுக்கும் பொருந்தும் சாதாரண மனிதர்களின் யதார்த்தமேயாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54686).

11799

மீன்களைத் தின்ற ஆறு: சிறுகதைகள். சிவனு மனோஹரன். ஹட்டன்: பெருவிரல் கலை இலக்கிய இயக்கம், 1வது பதிப்பு, மே 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).

140 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-43390-0-2.

இந்நூலில் அமராவதியின் ஆறாம் பிரசவம், மீன்களைத் தின்ற ஆறு, மட்டக்குச்சி, மண், அழுக்கு, தாராவின் சப்பாத்து, ஜென்சியும் ஜேசுமணி சித்தப்பாவும், காமன் பொட்டல், கோகிலாவும் கோணல் வகிடும், பொட்டு, கொழும்புத் தம்பி, வகுப்பறைக் காவியங்கள் ஆகிய 12 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றிருக்கின்றன. முன்னைய சிறுகதைத் தொகுப்புகளைவிட முன்னேற்றகரமாக மொழிநடையிலும், கதைசொல்லும் திறனிலும், கதைகளம், கரு என பலவற்றில் நவீன சிறுகதை தளத்தில் நின்று சிந்திக்கவும் இயங்கவும் முயன்றிருக்கும் "மீன்களைத் தின்ற ஆறு" சிறுகதை தொகுப்புக்கு "கொடகே விருது" கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. விளிம்பு நிலை மாந்தரின் விழுமியங்களை சித்திரிக்கும் சிறுகதைகள் இவை. சமூகம் பற்றிய பிரக்ஞையும் மானுடம் மேன்மையுறவேண்டும் என்ற உணர்வும் கொண்ட படைப்புக்களாக சிவனு மனோஹரனின் எழுத்துக்கள் மிளிர்கின்றன. இவை சமுதாய மாற்றத்துக்கு வேண்டிய வலிமையான இயக்க உணர்வை வாசகர் மனதில் ஏற்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11800

முகங்கள்: சிறுகதைத் தொகுப்பு. பொன்.குலேந்திரன். தமிழ்நாடு: ஓவியா பதிப்பகம், 17-13-11, ஸ்ரீராம் கட்டிடம், காந்திநகர் மெயின் சாலை, வத்தலகுண்டு-642202, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2015. (சென்னை: பாரதி அச்சகம்).

176 பக்கம், விலை: இந்திய ரூபா 180., அளவு: 22x14 சமீ., ISBN: 978-81-930722-6-4.

பொன்.குலேந்திரன் யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ். பரியோவான் கல்லூரியில் ஆரம்பக் கல்வி கற்று, கொழும்பு பல்கலைக்கழகத்தில் பௌதிகத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர். பல்வேறு அரபு, ஐரோப்பிய நாடுகளில் தொலைத்தொடர்புத் துறையில் பொறியியலாளராகப் பணியாற்றி இறுதியாக கனடாவில் டெலஸ் தொலைத்தொடர்பு தாபனத்தில் சிரேஷ்ட முகாமையாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். கனடாவில் குவியம் என்ற இணையத்தளத்தை நடத்துபவர். முகங்கள் இவரது மூன்றாவது சிறுகதைத் தொகுப்பு. இதிலுள்ள கதைகள் தான் தன் வாழ்வில் சந்தித்தவர்களையே விவரணக் கதாபாத்திரங்களாகக் கொண்டு எழுதியதுபோல நெஞ்சுக்கு நெருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளன. சந்திக்கடை சங்கரப்பிள்ளை, வைத்தியர் வைத்திலிங்கம், சண்டியன் சங்கிலி இஸ்மாயில், சின்னமேளக்காரி சிந்தாமணி, நாட்டாண்மை நாச்சிமுத்து, நாவிதர் நாகலிங்கம், பொலிஸ்காரன் பொடி அப்புஹாமி, பெட்டிசன் பெரியதம்பி, அரசாங்க அதிபர் அபயசேகர, பியூன் பிரேமதாசா, கேப்ரியல், மரக்குதிரை முகம்மது, மங்கையம்மாள், வேலி, பஞ்சிகாவத்தை புஞ்சி பெரேரா, சிவகுருநாதனின் இறுதிப் பயணம், கிளாக்கர் கிருஷ்ணபிள்ளை, காஸ் மணியம், பொறியியலாளன் சு.மகாதேவன், வேலுப்பிள்ளையின் வேள்வி, அன்வர் பின் அகமது ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 21 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கதைகளின் களங்களும் இலங்கையின் முக்கிய இடங்களான புத்தளம், கொழும்பு புறக்கோட்டை, கொழும்பு கறுவாக்காடு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நிகழ்கின்றன.

11801

முட்டைக் கோப்பி: சிறுகதைகள். திக்குவல்லை கமால். கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2010. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

144 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-30-2816-7.

திக்குவல்லை கமால் எழுதிய 17 சிறுகதைகளின் தொகுப்பு. பயணத்தின் ஆரம்பம், ஒரு குடும்பத்தின் கதை, மின்சாரக் கனவு, சந்தைக்கு வராத பண்டங்கள், வாரம் ஒரு வலம், இப்படியும் ஒரு, தவறி விழுந்த வார்த்தைகள், பிள்ளைச் செல்வம், புயலுக்குள் ஒரு பூந்தென்றல், காணாமல் போன கடாய், மனச்சுமை, சீனிக்கோவை, அகதிக்குட்டி, முட்டைக் கோப்பி, மக்கத்து மாமி, பள்ளிவாசலும் பத்து ரூபாவும், அயல்வீடுகள் ஆகிய 17 கதைகள் இத்தொகுதிக்காகத் தேர்வுசெய்யப்பட்டுள்ளன. தென்னிலங்கையைச் சேர்ந்த திக்குவல்லை கமால், ஈழத்து தமிழ் ஆக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்துறையில் குறிப்பிட்டு சொல்லக் கூடிய ஒருவர். தென்னிலங்கை முஸ்லிம்களின் வாழ்வியலை ஈழத்து இலக்கியப் பரப்பில் கொண்டு வந்த படைப்பாளிகளில் கவனத்திற்குரியவர். பல் வகையான சிங்கள இலக்கியப் படைப்புக்களை தமிழுக்கு கொண்டு வருவதில் தீவிரமாக இயங்கி கொண்டு வருபவர். முற்போக்கு இலக்கிய இயக்கத்துடன் செயற்படுபவர். இவர் மொழிபெயர்ப்பு நூல்களுக்கு பலமுறை சாகித்திய விருதுகளைப் பெற்றுக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

11802

முடியாத ஏக்கங்கள். வெற்றிச்செல்வி (இயற்பெயர்: வேலு சந்திரகலா). மன்னார்: தேனீ மாற்றுத் திறனாளிகள் அமைப்பு, 1வது பதிப்பு, டிசம்பர் 2012. (வவுனியா: மல்ரிவிஷன் அச்சுக் கலையகம், இல. 77, முதலாம் குறுக்குத் தெரு).

xix, 89 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 978-955-4661-00-4.

வாழ்வுத் தவிப்பைக் கொண்ட எழுத்துக்கள் பெரும்பாலும் உண்மைச் சம்பவங்களின் பிரதிபிம்பங்களாகவே இருக்கும் என்ற ஆசிரியரின் கருத்துக்கமைவாக இந்நூலில் சலோனி, வானதியின் தோட்டம், முடியாத ஏக்கங்கள், அவளின் பிரச்சினை, மைனாவே மைனாவே மழை வருமா, ஆறாத காயம், ஜன்னல் கனவுகள், காணாமல் போனவனின் மனைவி, மனிதமிருக்கிறது மரணிக்காமல், எதிர்பார்ப்பு, முரண், குங்கும கேள்வி ஆகிய 12 சிறுகதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதிலுள்ள சில கதைகள் முன்னர் 2012இல் வெளியான இவரது காணாமல் போனவனின் மனைவி என்ற நூலிலும் இடம்பெற்றுள்ளன. மன்னார் மாவட்டத்தில் அடம்பன் கிராமத்தில் 1974இல் பிறந்தவர் வேலு சந்திரகலா. 1991இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து இறுதி யுத்தம் வரை போராளியாகச் செயற்பட்டவர். 1993இல் வெடிவிபத்தில் தனது ஒற்றைக் கண்ணையும் ஒற்றைக் கையையும் இழந்தவர். 1997 முதல் எழுத்துத் துறையில் பிரவேசித்தவர். 1999 முதல் 2004 வரை புலிகளின் குரல் வானொலியில் அறிவிப்பாளராகவும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் செயற்பட்டவர். பெண்புலிகளின் சுதந்திரப் பறவைகள் பத்திரிகையிலும் பணியாற்றியவர். இலங்கைப் படையினரின் தடுப்பு முகாமில் இருந்த காலத்தில் எழுதப்பட்ட உயிரே உயிரே நாவல் தினமணி பத்திரிகையில் தொடராக வெளிவந்தது. அத்துடன் இறுதி நாட்களும் எனது பயணமும் என்ற முள்ளிவாய்க்கால் யுத்தகாலப் பயணக்கட்டுரை இணையங்களில் பரபரப்புடன் வாசிக்கப்பட்டது. அது பின்னர் ஈழப்போரின் இறுதி நாட்கள் என்ற பெயரில் நூலாக வெளிவந்தது. வெற்றிச் செல்வி தற்போது மாற்றாற்றல் உடையவர்களுக்காகச் செயலாற்றத் தொடங்கியிருக்கும் மன்னார் மாவட்ட தொண்டு நிறுவன அமைப்பொன்றில் பகுதிநேர கள உத்தியோகத்தராக செயற்பட்டு வருகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 53406).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11803

யாரிலிகள்: சிறுகதைத் தொகுப்பு. க.கோபாலபிள்ளை. கொழும்பு 10: எஸ். கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2014. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

136 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-30-4777-9.

ஈழத்தில் அண்மைக்கால நிகழ்வுகளையும், யாழ்ப்பாணச் சூழ்நிலையையும் மீட்டிப் பார்ப்பதாகவும் காட்சிப்படுத்துவதாகவும் இச்சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. ஈழத்தில் இராணுவத்திற்கும் விடுதலைப் போராட்ட இயக்கத்திற்கும் இடையில் மூண்ட சண்டையில் பலரின் உயிரும் வாழ்க்கையும் பறிபோன நிலையில், பெண்களின் மானமும் இன வெறியர்களுக்கு இரையான பின்னணியை கதைக்கருவாகக் கொண்டது. அத்தகைய ஒரு பாத்திரப் படைப்பாக தவறிய தாளங்கள் என்ற கதையில் செல்லம்மா உருவாக்கப்பட்டிருக்கிறார். சாதிய ஒடுக்குமுறை பற்றிப் பேசுவதாக பிரகடனம்' என்ற சிறுகதை அமைகின்றது. முதிர்ச்சியின் விளிம்பிலிருந்தும் தான் வளர்த்த மாடுகளையே தனது சொந்தங்களாகக் கருதி வாழும் ஒரு தந்தையின் பாத்திரவார்ப்பு உழைப்பு என்ற சிறுகதையில் இடம்பெறுகின்றது. பெரும்பான்மையினரான சிங்கள மக்களின் ஆட்சியில் அவர்களை அண்டி வாழ்வதில் பெருமைகொள்பவராக புதிய சுவடுகள் என்ற கதையில் சங்கரப்பிள்ளையின் பாத்திரவார்ப்பு அமைகின்றது. இன்று மதவாதிகளால் மிருக வேள்வி போராட்ட ஆயுதமாகக் கைக்கொள்ளபடும் அரசியல் சூழலில் மிருகவேள்வியின் தொடர்பாக நிகழும் மனித உயிர்ப்பலி பற்றி பலி என்ற கதை பேசுகின்றது. திருவிழா என்ற கதை, படித்துமுடித்தபின் வேலையற்றிருக்கும் இளைஞரின் நிலை பற்றியதாகவும், தனிமரம் என்ற கதை, வறுமையின் கொடுமையால் தன் மகனையே இழக்கும் தாயின் கண்ணீர் காவியமாகவும் வடிக்கப்பட்டுள்ளன. மேலும் எஞ்சிய யாரிலிகள், மிளகாய் செல்லையர், கபளீகரம் ஆகிய கதைகளும் மண்வாசனையுடனும் வாழ்க்கை அனுபவங்களுடனும் இன்னும் மறையாத வடுக்களின் வெளிப்பாடாகவும் அமைந்து தரமானதொரு சிறுகதைத் தொகுப்பாக "யாரிலிகள்" நிலைத்துள்ளது.

11804

வடக்கின் வசந்தங்கள். செ.சந்திரசேகரம். யாழ்ப்பாணம்: அபி பதிப்பகம், 196/23, தலுவில் ஒழுங்கை, நவாலி வடக்கு, மானிப்பாய், 1வது பதிப்பு, 2015. (யாழ்ப்பாணம் கங்கை பிரின்டர்ஸ், காங்கேசன்துறை வீதி).

iv, 95 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-44890-3-5.

பொருளியல் வல்லுநரான கலாநிதி செ.சந்திரசேகரம் பொருளியலுக்கு அப்பாலும் தன் ஆய்வுப்பரப்பை விரிவாக்கியவர். "தமிழ் இலக்கியங்களில் பெண்களின் குணங்கள்" பலராலும் விதந்தரைக்கப்பட்ட இவரது நூலாகும். வடக்கின் வசந்தங்கள் ஆசிரியரின் சிறுகதைத் தொகுப்பாகும். வசந்தத்தைத் தேடி, ஸாரும் அண்ணையும், ரெக்னொலொஜி, டெத் செர்ட்டிபிக்கெற், இயம வீடு, லீசிங் 7 பச்சோந்திகள், பட்டத்தின் வலிகள், வேலியும் பயிரும், அஞ்சலி ஆகிய 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவை ஆசிரியரின் அனுபவங்களின் புனைவு வடிவமாகவே காணப்படுகின்றன. வாழ்வின் உண்மைச் சம்பவங்களை சுவைபட இப் புனைவுகள் பதிவுசெய்திருக்கின்றன. (இந்நூல் இலங்கைத் தேசிய நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 1001425).

11805

வளவையின் மடியிலே. எம்.எச்.எம்.ஷம்ஸ். கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2014. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

xxvi, 27-120 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-30-5118-9.

அமரர் எம்.எச்.எம்.ஷம்ஸ் அவர்களின் மறைவின் பின்னர் அவரது மகன் வெலிகம எம்.எஸ்.பாஹிம் அவர்கள் தனது தந்தையினால் வெளியிடத் தயாராக வைக்கப்பட்டிருந்த இந்நூலை வெளியிட்டுள்ளார். இத்தொகுப்பில் எம்.எச்.எம். ஷம்ஸின் கதைகள் பற்றிய எம்.ஏ. நுஃமானின் முன்னுரையுடன் 15 கதைகள் இடம்பெற்றுள்ளன. கருத்தைக் கவர்ந்த கானம், ரெண்டாம் ஷோ, திருப்பு முனை, வளவையின் மடியில், வயிறுகள், விடுதலை, கிராமத்திலே ஒரு சுவர் சாய்கிறது, யூனிவர்சிட்டி போய்ஸ், களனியும் கல்லோயாவும் கலக்கின்ற போது, நிஹாறா நீ தனித்தவளல்ல, நிய்யத்து, நம்பிக்கைகள், சுமைகள், மனிதன் அல்லாத காரணத்தால், இரவில் விழுந்த கிணற்றில் பகலிலுமா? ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் இலங்கைத் தேசிய நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 199538).

11806

வேர் பதிக்கும் விழுதுகள்: சிறுகதைத் தொகுப்பு. மலரன்னை (இயற்பெயர்: திருமதி காசிலிங்கம் அற்புதராணி). மாங்குளம்: மலரன்னை வெளியீடு, மலராலயம், கொல்லர் புளியங்குளம், 1வது பதிப்பு, ஆவணி 2015. (யாழப்பாணம்: ஆரு பிரிண்டர்ஸ், 453, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு).

x, 130 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-43209-0-1.

சமூக விழுமியம், அன்பும் பண்பும் நிறைந்த ஒழுங்கான குடும்ப அமைப்பு, கட்டுக்கோப்பான நியதிமுறைகளுக்கமைந்த மானுட நேயம் மிகுந்த வாழ்வு என்பன அடிநாதமாக ஒலிக்கின்ற கதைக்களங்களைக் கொண்ட சிறுகதைகள் இவை. வேர் பதிக்கும் விழுதுகள், நாளைய பொழுது நலமாக, கண் கெட்ட பின், மண்ணுக்குள், முன்னெச்சரிக்கை, ஆத்ம அந்தரங்கம், கந்தப்ப வாத்தியார், காலம் வெல்லும், பகட்டுப் பசி, சுகவாழ்வு, அம்மாயி, வாழ்விலும் சாவிலும், தப்புக் கணக்கு, நெஞ்சம் மறப்பதில்லை, தாய்மைப்பேறு, ஆத்மசாந்தி ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 16 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தாய்மைப் பேறு, ஆத்மசாந்தி, நெஞ்சம் மறப்பதில்லை ஆகிய கதைகள் யுத்த வடுக்களைச் சுமந்து நிற்கின்றன. சமூகப்புரட்சி, பாசம், நேசம், நெருக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் இழப்பினால் ஏற்படும் துயரங்களை அம்மாயி, மண்ணுக்குள் ஆகிய கதைகள் சித்திரிக்கின்றன. கணவன்-மனைவி, குடும்ப அங்கத்தவர்களுக்கிடையேயான நெருக்கம் என்பவற்றை வேர் பதிக்கும் விழுதுகள், சுகவாழ்வு, வாழ்விலும் சாவிலும், ஆத்ம அந்தரங்கம் போன்ற சிறுகதைகள் பிரதிபலிக்கின்றன. ஈழத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பெண் எழுத்தாளர்களுள் ஒருவரான மலரன்னையின் சிறுகதைத் தொகுதி இது. மலரன்னை அவர்கள் மூத்த எழுத்தாளர் கச்சாயில் இரத்தினம் அவர்களின் மகள் என்பதும் எழுத்தாளர் மலரவனின் தாயார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

11807

வைகறை: சிறுகதைகள். தியத்தலாவ எச்.எஃப். ரிஸ்னா. கொழும்பு: இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம், 1வது பதிப்பு, நவம்பர் 2012.(அச்சக விபரம் தரப்படவில்லை).

114 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-52975-0-9.

இலங்கையின் இஸ்லாமிய மலையகப் பெண் படைப்பாளிகளில் தியத்தலாவை எச்.எ/ப். ரிஸ்னா குறிப்பிடத் தகுந்தவர். நூலுருவில் வெளிவரும் இவரது முதலாவது படைப்பாக இச்சிறுகதைத் தொகுதி அமைகின்றது. அழகன், பயணங்கள், காதல் கல்வெட்டு, விதி, தோல்வி, மாற்றம், வரம், உறவகள், சிதைவு, வேதனை, தவிப்பு, வாக்குறுதிகள், தொலைந்த கவிதை, கண்ணீர், சொந்தம், சிட்டுக் குருவி, தெளிந்த வானம், என்னை அறிந்த போது, கனவுகள், ஒயாத நினைவலைகள், கானல்நீர் ஆகிய 21 சிறுகதைகளை இந்நூல் அடக்கியுள்ளது. சமூகச் சீர்கேடுகள், வறுமை, அதிகாரப்போக்கு, ஆணவம், கர்வம், ஏமாற்றுதல், வஞ்சம் தீர்த்தல் போன்ற குணாதிசயங்களை பாத்திரங்களினூடாக வெளிப்படுத்தி விளைவுகளைத் தண்டனைகளாக வழங்குகின்றார். குழந்தைத் தொழிலாளர்கள், பெண்களின் அவலநிலை, சீதனக் கொடுமை, போர் அவலம், மலையகப் பிரச்சினை, போன்ற பலவற்றையும் தனது சிறுகதைகளின் பேசுபொருளாக்கியுள்ளார்.

11808

ஜீவகுமாரன் கதைகள். வி.ஜீவகுமாரன். பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஏப்ரல் 2015. (நெல்லியடி: பரணி அச்சகம்).

xiv, 130 பக்கம், ஓவியங்கள், விலை: ரூபா 300., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-4676-24-4.

ஜீவநதி சஞ்சிகையில் ஜீவகுமாரன் எழுதிய 10 சிறுகதைகளின் தொகுப்பு இது. புலம்பெயர்ந்து 29 வருடங்களாக டென்மார்க்கில் வாழும் எழுத்தாளர் ஜீவகுமாரன் தான் வாழும் சூழலில் தன்னைப் பாதித்த விடயங்களைச் சிறுகதைகளாக்கித் தந்துள்ளார். உள்நாட்டு யுத்தம் காரணமாக உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு புலம்பெயர் நாடுகளுக்குச் சென்று அகதி அந்தஸ்துப் பெற்று வாழும் எம்மவர்களின் நிலை பற்றி அவர்களின் வாழ்வியல் கோலங்கள் பற்றி அவர்கள் எதிர்கொள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டுக் கோல மாற்றங்கள் பற்றி அனேகமான கதைகள் பேசுகின்றன. இக்கதைகள் யாவும் மிகவும் எளிய இலகுவான மொழியில் வாசகனைத் தொட்டிழுக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளன. பாத்திர வார்ப்பும் கதைகளை நகர்த்திச் செல்லும் விதமும் ஜீவகுமாரனின் எழுத்துக்களின் தனித்துவம் எனலாம். இன்றைய தமிழ் எழுத்தாளர்களில் முன்னணி வகிக்கும் ஒருவராக வைத்துப் பேசப்படுவதை ஜீவகுமாரனின் இத்தொகுப்பிலுள்ள கதைகளும், ப. விஷ்ணுவர்த்தினியின் சிறப்பான அணிந்துரையும் உறுதிசெய்கின்றன.

11809

ஸ்ரீதரன் கதைகள். எஸ்.ஸ்ரீதரன். தமிழ்நாடு: காலச்சுவடு பதிப்பகம், 669 கே.பி. சாலை, நாகர்கோவில் 629001, இணை வெளியீடு, லண்டன்: தமிழியல், 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (சென்னை 600005: மணி ஒப்செட்).

395 பக்கம், ஓவியங்கள், விலை: இந்திய ரூபா 750., அளவு: 24.5x19 சமீ., ISBN: 978-93-81969-85-4.

இத்தொகுப்பில் ஸ்ரீதரனின் சிறுகதைகள், குறுநாவல்கள் என்பன தொகுக்கப் பட்டுள்ளன. பதிப்புரை, ஸ்ரீதரனின் படைப்பு மனம், ஸ்ரீதரனின் படைப்புலகம், முன்னுரை ஆகியவற்றைத் தொடர்ந்து அவரது படைப்புக்கள் இடம்பெற்றுள்ளன. மூலஸ்தானம் (தரிசனங்கள்- பொன்.இரத்தினபாலன் தொகுத்திருந்த பேராதனைப் பல்கலைக்கழகத் தொகுப்பில் மே 1973இல் இடம்பெற்றது), ராமசாமி காவியம் (அலை 21ஆவது இதழில் 1974இல் பிரசுரமானது), ஒரு பஸ்தோப்புக் குயில் பாட்டு (1975), கமலம் (1974-76 காலப்பகுதியில் எழுதப்பெற்று பிரசுரமாகாதது), காவற்காரர்கள் (அலை-25, 1976), நிர்வாணம் (கணையாழி, ஒக்டோபர்-நவம்பர் 1977), இவர்கள் வெளியே இருக்கிறார்கள் (மல்லிகை - மே 1978), ஒரு புதிய யுகத்தை நோக்கி (கணையாழி, 1979), சொர்க்கம் (திசை, ஜூன்-ஜூலை 1989), இரண்டாயிரத்து ஒன்று (நாழிகை, மார்ச் 1994), தொடர்புகள் (நியூஹாம் தமிழர் நலன்புரிச் சங்க மலர், 1996), துணை அகதி (கிழக்கும் மேற்கும், 1997), இராமாயண கலகம் (கண்ணில் தெரியுது வானம், 2001), அம்பலத்துடன் ஆறு நாட்கள் (கண்ணில் தெரியுது வானம், 2001), விஸ்வ சம்பவம் (காலம்-16, ஜூன் 2002) ஆகிய கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இறுதிப் பகுதியில் ஸ்ரீதரனின் கதைகள் பற்றிய சில விமர்சனங்களை க.சட்டநாதன், அநு.வை.நாகராஜன், மதி கந்தசாமி, ரெ.கார்த்திகேசு ஆகியோர் எழுதியிருக்கின்றனர். இத்தொகுப்பிற்கான ஓவியங்களை லண்டனிலிருந்து கே.கிருஷ்ணராஜா வரைந்துள்ளார். அமெரிக்காவின் Central State Universityயில் நீர்வள முகாமைத்துவத்தின் சர்வதேச மையத்தில், நீர்வள முகாமைத்துவத் துறையின் தலைவராகப் பணியாற்றும் இலங்கையரான பேராசிரியர் எஸ்.ஸ்ரீதரன், பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி. அமெரிக்காவின் கொலராடோ மாநிலப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்று பொறியியல் விஞ்ஞானியானவர்.

மேலும் பார்க்க: 11837, 11848

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8(41) மொழிபெயர்ப்புச் சிறுகதைகள்

11810

அவள் பெய்கிறாள்: மொழிபெயர்ப்பு மலையாளச் சிறுகதைகள். பி.கே. பாறக்கடவு (மலைாள மூலம்), அல். அஸுமத் (தமிழாக்கம்). வெல்லம்பிட்டிய: அல். அஸுமத், இல.50, கோத்தமி மாவத்தை, வெலேவத்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 2016. (கொழும்பு 14: பிரின்ட் சிட்டி).

xiv, 95 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-52134-5-5.

பி.கே.பாறக்கடவு, மலையாள இலக்கியவாதி. இவரது குறுங்கதைகள் மிகவும் பிரசித்தமானவை. அவள் பெய்யுன்னு என்ற தலைபபில் அவர் வெளியிட்ட குறுங்கதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ளஅவரது தேர்ந்த கதைகள் இலங்கையில் வாழும் கேரள வாரிசாகிய அல் அஸுமத் மூலம் தமிழுக்கு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. கலாபூஷணம் அல் அஸுமத் கேரளத்தைப் பூர்வீகமாகக் கொண்டவரும் மாத்தளையைச் சேர்ந்தவருமான பிரபல எழுத்தாளர். புகழ்மிக்க ஈழத்துக் கவிஞர். 1942.11.22 இல் பிறந்த இவரது இயற்பெயர் பொன்னையா வேலாயுதம். தந்தையார் கேரளத்தின் நெய்யாற்றின் கரையைச் சேர்ந்தவரும், கே.வீராமன் நாயர் என்ற இயற்பெயரைக் கொண்டவருமான கே.வீ.பொன்னையா. இவரது தாய் மரியாயி. 1960 - 1964 காலப்பகுதியில் எல்கடுவை அசோகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் தெகிவளை தொழில்நுட்பக் கல்லூரியின் வணிகப் பிரிவில் முகாமையாளராக 1978 வரை பணியாற்றினார்.

11811

குங்குமப்பூ. கே.ஏ.அப்பாஸ் (மூலம்), கே.கணேஷ் (தமிழாக்கம்). சென்னை 4: கண்ணகி பதிப்பகம், மயிலாப்பூர், 1வது பதிப்பு, ஜனவரி 1956. (சென்னை 14: மாருதி பிரஸ், இராயப்பேட்டை).

170 பக்கம், விலை: ரூபா 2.80, அளவு: 18x12 சமீ.

தென்னிந்திய மொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்த சிறுகதைத் தொகுதி. கே. கணேஷ் தமிழாக்கம் செய்த முதலாவது சிறுகதைத் தொகுதியாகவும் இந்நூல் அமைகின்றது. கே.ஏ.அப்பாஸ் குங்குமப்பூ, என் குடை, சிட்டுக் குருவிகள், அநாமதேய அகதி, சில்வியா, கொடி, பிரதிபிம்பம், அரிசி, பாதகமலம், ஒரு வேடிக்கை ஆகிய தலைப்புகளில் எழுதிய பத்துச் சிறுகதைகள் இவை. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31093).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11812

சமகால சிங்களச் சிறுகதைகள்: சிங்களச் சிறுகதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு. மேமன்கவி, கமல் பெரேரா, டெனிசன் பெரேரா (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு: தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, இல. 40, புத்கமுவ வீதி, ராஜகிரிய, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு: அச்சகப் பகுதி, செலசினே தொலைக்காட்சி நிறுவனம்).

(12), 13-170 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-7537-02-3.

இலங்கையில் 2010.11.25ஆம் திகதிய 1681/3 வர்த்தமானி அறிவித்தலின்கீழ் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு உருவாக்கப்பட்டது. அரச கரும மொழிகள் திணைக்களம், அரச கரும மொழிகள் ஆணைக்குழு, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் என்பன இந்த அமைச்சின் கீழ் செயற்பட்டன. இந்த அமைச்சின் விடயப் பரப்பை உள்ளடக்கக்கூடிய வகையில் போதிய நிதிவளங்கள் கிடைக்காத நிலையிலும்கூட அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிடத்தக்க வேலைத்திட்டங்களை அமுல்படுத்தினார். குறிப்பாக அரச நிறுவனங்களில் இருமொழிக் கொள்கையை அமுல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், மும்மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியது. அத்துடன் சமகாலச் சிங்கள-தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்த்து இரு சாராரிடையேயும் இலக்கியப் பரிவர்த்தனையை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் ஒரு அங்கமாகவே இச்சிறுகதைத் தொகுதி உருவாகியுள்ளது. டெனிசன் பெரேரா (தாய் வீட்டுப் புதையல்), பியசீலி விஜயமான்ன (நோனாச்சி), ஜயதிலக கமலவீர (இருண்ட வானம்), கெத்லின் ஜயவர்தன (முகமூடி நடனம்), கமல் பெரேரா (அரசன்), எரிக் இலயப் ஆரச்சி (அதிகாலை வேளையில்), கீர்த்தி வெலிசரகே (டப்பான்), யசேந்திரா ரணவக்க (சக்கரவேல்), அனுரசிரி ஹெட்டிகே (சின்ன தேவதை), நிஸ்ஸங்க விஜேமான்ன (வெட்டுக்கிளிகள்), லியனகே அமரகீர்த்தி (புதிய லெட்சுமி), பியல் காரியவசம் (மனித வட்டம்) ஆகிய 12 சிங்களப் படைப்பாளிகளின் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

11813

தங்கச் சுரங்கம்: உலகத்து சிறுகதைகள். எச்.எம்.பி.முகைதீன். தமிழ்நாடு: இலக்கியப் பண்ணை, திண்டுக்கல் ரோடு, கரூர், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1953. (தமிழ்நாடு: ஜெகதீசன் பிரஸ், கரூர்).

80 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x13 சமீ.

எச்.எம்.பி. முகைதீன் இலங்கையில் தேசாபிமானி பத்திரிகையின் துணை ஆசிரியராவார். சமாதானம், காதலியின் தியாகம், சாவின் மடியில், தன்மானம், கம்பளிக் கோட்டு, வறுமையின் பிடியில், இரு பிரயாணிகள், அரசியல் அனாதை, தாயும் மகனும், மூன்று பெண்கள், முன்கோபம், காணாமல் போன குழந்தை ஆகிய பன்னிரு கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28950).

11814

மன்னனுள்ஒரு மனிதன்.ஏ.வீ.சுரவீர (சிங்கள மூலம்), ஏ.சீ.எம்.ராஸீக், ஸமீனா ஸஹீட் (தமிழாக்கம்). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ். குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 1998. (கொழும்பு 13: பசிபிக் பிரஸ், 267, ஆட்டுப்பட்டித் தெரு).

61 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 955-20-2518-4.

இது இலங்கை வரலாற்றின் பிரபல நிகழ்வான துட்டகைமுனு-எல்லாளன் யுத்தத்தின் பின்னணியில் அமைந்ததொரு சிறுகதையாகும். 1984இல் வெளியான பவதிமிர என்ற சிறுகதைத் தொகுப்பில் இது "மினிஸ்கம ஹா ரஜகம" என்ற தலைப்பில் ஒரு சிறு கதையாக இடம்பெற்றிருந்தது. அக்கதையின் தமிழாக்கம் தனி நூலாக வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23183).

11815

மாட்டின் விக்கிரமசிங்காவின் சிறுகதைகள். மார்ட்டின் விக்கிரமசிங்க (சிங்கள மூலம்), சபா.ஜெயராசா (தமிழாக்கம்). இராஜகிரிய: சரச பிரைவேட் லிமிட்டெட், 18/3, கிரிமண்டல மாவத்தை, நாவல, 1வது பதிப்பு, 2009. (பொறலெஸ்ஹமுவ: அஜித் பிரிண்டர்ஸ், 342, பழைய கெஸ்பாவ வீதி, ரட்டனபிட்டிய).

(14), 166 பக்கம், ஓவியங்கள், விலை: ரூபா 190., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-0201-01-3.

மார்ட்டின் விக்கிரமசிங்க (29 மே 1890 - 23 ஜூலை 1976) சிறுகதை, நாவல், மற்றும் கட்டுரையாசிரியராகவும் திறனாய்வாளராகவும் பன்முகப் பரிமாணங் களைக்கொண்டு திகழ்ந்த ஓர் இலக்கியப் படைப்பாளி. சிங்கள இலக்கியம் நவீனமடைவதற்கு காலனித்துவ ஆட்சிக் காலத்திலிருந்தே உழைத்துவந்தவர். பிரித்தானிய ஆட்சி இலங்கையில் ஏற்படுத்திய பண்பாட்டுத் தாக்கங்களையும் நெருடல்களையும் இலக்கிய வீச்சுக்குள்ளே கொண்டுவருவதில் வினைத்திறனுடன் இயங்கியவர். அவரது மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான எழுத்தாக்கங்கள் சிங்கள மொழியின் நவீனப்பாட்டுக்கு விசையூட்டின. 1924ம் ஆண்டு வெளிவந்த இலங்கையின் முதலாவது யதார்த்தபூர்வமான சிங்களச் சிறுகதைத் தொகுதியான (பெண்ணொருத்தி -Geheniyak) வெளியானதிலிருந்து 30 வருடங்களுக்குள் வெளிவந்த 108 சிறுகதைகளில் தேர்ந்த பத்துக் கதைகள் இத்தொகுப்பில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. கேலி விளையாட்டு (வினோதாஸ்வாதய), திகழ் சுடுகாடு (கனத்த), காதல் (ஆதரய), அடிமைத்தளை (வஹல்லு), பணம் (சல்லி), தாய் (மவ), புத்தாண்டு பிறப்பதற்கு முன் (நரக் வூ பிட்டி பந்துண), பொத்தல் விழுந்த கோட் (இருணு கபாய), பெண் (கஹனியக்), அந்தோ அய்யாவின் விரப்பிரதாபங்கள் (பேகள்) ஆகிய தலைப்புகளில் இவை வெளிவந்து பிரபல்யம் பெற்றவை. (இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 229833).

894.8(5) தமிழ் நாவல்கள், குறுநாவல்கள்

11816

அங்கஹாரம். ஆனந்த கு.இராமநாதன் (புனைபெயர்: ஆணி). சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 ஜக்கரியா காலனி, முதல் தெரு, சூளைமேடு, 1வது பதிப்பு, பெப்ரவரி 2015. (சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 ஜக்கரியா காலனி, முதல் தெரு, சூளைமேடு).

(12),13-400 பக்கம், விலை: இந்திய ரூபா 350., அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-93-81322-41-3.

பதினைந்தாம் நூற்றாண்டு கம்போடியாவைப் பின்புலமாகக் கொண்ட இந்த சரித்திர நாவல் தமிழ் இலக்கிய உலகத்தில் முன்னர் ஒருவரும் தொடாத விடயங்களைத் தொடுகின்றது. நானூறு பக்கங்கள் கொண்ட இந்த நாவல் தமிழ் இலக்கிய உலகிலே முக்கியமான ஒரு படைப்பாகும். அறுநூறு ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆண்டு வந்த கைமர் சாம்ராச்சியத்தின் அந்திம காலத்தை மையமாகக் கொண்ட இந்த நாவல் அழிவை எதிர்நோக்கும் மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளச் செய்து கொள்ளும் பிரயத்தனங்களைச் சித்தரிக்கிறது. கைமர் இராச்சியத்தின் வீழ்ச்சிக்குக் காலநிலை மாற்றமும் ஒரு காரணியாய் இருந்திருக்கலாம் என்ற நவீன ஆராய்ச்சி முடிவுகளையும் இந்தக் கதாசிரியர் கருத்திற்கொண்டிருக்கிறார். பல இடங்களில் விறுவிறுப்பாகச் செல்லும் கதை சில இடங்களில் கொஞ்சம் கட்டுரைத் தன்மையுடன் செல்கின்றது. மகேந்திரவர்மனும் போலோமாவும் உறைந்து போன அகழிக்கு அடியில் நீந்தித் தப்பும் காட்சி அற்புதமாக விபரிக்கப்பட்டுள்ளது. காமத்துக்கு தேவைக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது என்ற விமர்சனமும் இந்நாவலுக்கு உள்ளது.

11817

அப்பால் ஒரு நிலம். குணா கவியழகன். சென்னை 51: தமிழினி, 63, நாச்சியம்மை நகர், சேலவாயல், 1வது பதிப்பு, ஜனவரி 2016. (சென்னை 14: ஆர். கே. பிரிண்ட்ஸ்).

270 பக்கம், விலை: இந்திய ரூபா 240., அளவு: 21.5x14 சமீ.

தமிழறிந்த திணைகளில் அதிகம் கண்டுகொள்ளப்படாத போர் நிலத்து மக்களின் வாழ்வுப் பாடுகளை தன் யதார்த்த நிலையில் நின்று சொல்லமுனையும் ஒரு நாவல் இது. ஈழத்தமிழரின் இன அழிப்பு உலக அரங்கின் கவனத்திற்கு வந்தமைக்கான பிரதான காரணமாக அமைந்தது அவர்களின் ஆயுதப் போராட்டமாகும். வன்னியின் முற்றுகைப் போரை விடுதலைப்புலிகள் வென்றமையே ஆயுதப்போர் அரசியற் கவனத்தைப் பெறக் காரணமாக அமைந்தது. ஈழ விடுதலைப் போராட்டத்தில் கடந்த நூற்றாண்டின் மிக நீண்ட சமராகக் கருதப்பட்ட "ஜெயசிக்குறு" நடவடிக்கையை இறுதியாக புலிகள் வென்ற வரலாற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவமான சம்பவத்திலிருந்து இந்நாவல் ஆரம்பிக்கின்றது. இச்சமரை வெல்ல முடிந்தமைக்கான காரணமாக அமைந்தது "ஓயாத அலைகள் 2" என்ற நடவடிக்கையின் மூலம் கிளிநொச்சி நகரைப் புலிகள் வெற்றிகொண்டமையேயாகும். அந்தச் சமருக்குத் தேவையான வேவு நடவடிக்கைகள் இந்நாவலினை வளர்த்துச் செல்கின்றன. இது போரை வென்ற வழியின் பின்னோக்கிய பார்வை. வன்னிப்போரின் மனித வாழ்வினை, இந்த வேவு நடவடிக்கைகளை மையமாகக் கொண்டும், வீரன், மணி போன்ற போராளிகளின் வீரம் செறிந்த பாத்திரப் படைப்பினூடாகவும் அவர்களது அன்றாட அலுவல்கள் மனஉணர்வுச் சிக்கல்கள் ஆகியவற்றின் சுவையூட்டல்களுடனும் இந்நாவலானது குணா கவியழகனால் நகர்த்திச் செல்லப்படுகின்றது. இக்கதைசொல்லி விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர். இறுதிநாட்கள் வரை வன்னியில் வாழ்ந்தவர். 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்காலுக்குப் பின்னான நாட்களில் இராணுவத் தடுப்பு முகாம் என்ற முள்வேலிக்குள் அடைபட்டிருந்தார். பின்னர் விடுதலையாகி ஐரோப்பிய நாடான ஒல்லாந்தில் அரசியல் அடைக்கலம் பெற்று வாழ்கின்றார். ஈழப்போரிலக்கியத்தின் ஒரு பரிமாணத்தைப் பதிவுசெய்யும் இந்நூல், போர்க்கால வாழ்வின் மற்றொரு பகுதி இவருக்களித்துள்ள அனுபவத்தை நஞ்சுண்ட காட்டையும், விடமேறிய கனவையும் தொடர்ந்து மற்றொரு நாவலாகக் கட்டவிழ்த்துள்ளார்.

11818

அநாதை எனப்படுவோன். மைதிலி தயாபரன். வவுனியா: கிருஷ்ணிகா வெளியீட்டகம், வேப்பங்குளம், 1வது பதிப்பு, ஜுன் 2015. (வவுனியா: வாணி கணினிப் பதிப்பகம், இல. 79, கந்தசாமி கோவில் வீதி).

(9), 146 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x13 சமீ., ISBN: 978-955-41614-4-3.

இந்த நாவல் முற்று முழுதாகச் சிறுவர்களைப் பற்றியும் அவர்களின் உரிமைகள் பற்றிய எண்ணக்கருவையும் பற்றிப் பேசுகின்றது. போரினாலும் ஏனைய காரணங்களாலும் அநாதைகளாக்கப்பட்ட, அநாதைகளாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற சிறார்களின் எதிர்காலம் பற்றிய சிந்தனையைத் தூண்டுகின்றது. அனைவருமே சம ஆற்றல்களுடன் பிறக்கிறார்கள். மொழி, மத, பால், உடல்ரீதியான வேறுபாடுகளைக்கொண்டு அவர்களை ஒரங்கட்டலாகாது. யாவரும் சம அந்தஸ்துடன் வாழவேண்டும். அதற்கு எமது சமுதாயத்தில் உள்ள பெரிய மனது படைத்தவர்கள் உதவவேண்டும் என்ற கருத்து நாவலில் இழையோடுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 249445).

11819

அலை அழித்த தமிழ். சுஜீந்தன் பரமேஸ்வரம்பிள்ளை, நீதுஜன் பாலசுப்பிரமணியம். யாழ்ப்பாணம்: அந்திவானம் பதிப்பகம், மானிப்பாய் வீதி, 1வது பதிப்பு, சித்திரை 2016. (யாழ்ப்பாணம்: தேவி பிரின்டர்ஸ், 140/1 மானிப்பாய் வீதி).

(13), 14-303 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-3954-00-8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவனான சுஜீந்தன், மொரட்டுவை பல்கலைக்கழக மாணவனான நீதுஜன் ஆகியோரின் கைவண்ணத்தில் உருவான இந்நூல் வரலாற்றுப் புகழ் மிக்க தமிழ் அரசர்களின் பெருமையையும் தமிழர் வரலாற்றையும் எடுத்துக்கூறும் கதையாகும். தமிழர் வரலாற்றை இன்றைய தலைமுறைக்கு சுவைபடக்கூறும் வரலாற்றுப் புனைகதை இதுவாகும். தமிழின் நெடுந்தொல் வரலாற்றின் முக்கிய புள்ளிகளைக் கொண்டு மறந்து வருகின்ற தடங்களைக் கற்பனை கலந்து இணைத்து, பதிய நடையில் நயம்பட ஒரு புதினமாகப் புனைந்து வழங்கியுள்ளார்கள். புனல் கடந்தொலித்த தமிழ் - இறந்த காலம் (தீந்தொடைச் சீறியாழ்ப் பாணனின் பாடல், புனல் பெயர்த்த தமிழ், அரசிழந்த தமிழ்), நீரடித் திருண்ட தமிழ் - நிகழ்காலம் (உறைபனி: வீரன் சாவும் நீரின் சாபமும், உருகுதுளி: எளியவன் வாழ்வை மறுக்கும் தண்ணீர், அருவி: சுன்னாகக் குடிநீர், ஆழி: முல்லையின் மத்தியில் நெய்தலின் கரு), கடல் கிழித்தெழுந்த தமிழ்- எதிர்காலம் (ஆழி நூலைத் தேடி யாழில் பயணம்) ஆகிய மூன்று அத்தியாயங்களில் இந்நாவல் விரிகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 250092).

11820

அனந்தியின் டயறி. பொ.கருணாகரமூர்த்தி. தமிழ்நாடு: காலச்சுவடு பதிப்பகம், 669 கே.பி.சாலை, நாகர்கோவில் 629001: 1வது பதிப்பு, ஒக்டோபர் 2014. (சென்னை 600005: மணி ஒப்செட்).

(8), 9-255 பக்கம், விலை: இந்திய ரூபா 225., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-82033-55-4.

ஜேர்மன் நாட்டில் ஒரு இலங்கைத் தமிழ்க் குடும்பம் புலம்பெயர்ச் சூழலில் தன் பாரம்பரிய வாழ்வினைக் காத்துக்கொண்டும், ஜேர்மன் சூழலின் செல்வாக்கை ஏற்றுத் தன்னை மாற்றிக்கொண்டும் வாழும் வாழ்க்கைச் சித்திரமே இந்நாவலாகும். அனந்தியைச் சூழவுள்ள சமூக வட்டங்கள் பலவாறானவை. அவளுடன் தமிழர் கல்வி நிலையத்தில் பயில்பவர்களாலானது, பெற்றோருடன் ஊடாடும் தமிழ்ச் சமூகம், ஜேர்மன் கல்லூரித் தோழர்களும் அதனுடன் பிணைந்த சூழலும், அவளது அயலும் சூழலும், அதற்கு வெளியில் விரியும் புறவுலகமும் என அவை பரந்துபட்டவை. 2012 ஜனவரி 1ம் திகதி எழுதத் தொடங்கும் டயறியை டிசம்பர் 30ம் திகதி நிறைவுசெய்யும் அனந்தி அந்த ஒரு வருட காலத்தில் தான் கண்ட, கேட்ட, உணர்ந்த செய்திகளை எழுதிவைக்கிறாள். அவையே ஒரு நாவலாக இங்கு விரிகின்றது.

11821

ஆதிரை: நாவல். சயந்தன். சென்னை 51: தமிழினி, 63, நாச்சியம்மை நகர், சேலவாயல், 1வது பதிப்பு, நவம்பர் 2015. (சென்னை 14: ஆர். கே. பிரிண்ட்ஸ்).

664 பக்கம், விலை: இந்திய ரூபா 580., அளவு: 23x14.5 சமீ., ISBN: 81-87641-47-9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011இல் வெளிவந்த ஆறாவடு- சயந்தனின் முதலாவது நாவல். ஏற்கெனவே அர்த்தம் (2003), பெயரற்றது (2013) ஆகிய இரு சிறுகதைத் தொகுதிகளையும் வழங்கியவர். ஆதிரை இவரது இரண்டாவது நாவலாகும். ஈழத்தமிழர் வரலாற்றில் விடுதலைப் போராட்டக் களத்தில் இருந்த தாய்மார்கள், பிள்ளைகளின் வாழ்க்கைச் சித்திரம் இது. ஈழத் தமிழர்களுடைய போராட்டத்தின் துயர முடிவின் காரணமாக அவர்களுடைய வாழ்வில் இனி உய்வு ஏதுமில்லை என ஆதிரை நிறுவ முற்படவில்லை. போராட்டம் அழிந்துவிட்டது. ஆகையால் இனி உங்கள் எல்லோருக்கும் சவக்குழிதான் மிச்சம் என்ற இருண்மையை அவர்களுக்கு வழங்கவும் முற்படவில்லை. மனித வாழ்வு எந்தப் பாதாளத்திலிருந்தும் மேலெழும் வேட்கையை பிறப்பிலிருந்தே கொண்டிருக்கிறது என்பதை ஆதிரையின் மாந்தர்கள் மூலம் நிறுவ முயன்றிருக்கிறார். தம் வாழ்நாள் முழுவதும் நம்பிக்கைகளைச் சேகரித்துக் கொண்டே அம்மக்கள் வருகிறார்கள். அவை அழிய அழிய சற்றும் மனம் தளராது மீளக் கட்டுகிறார்கள். முள்ளிவாய்க்கால் பேரழிவின் பின்னரும் கூட, முகத்தில் அறையும் காலத்தின் யதார்த்தத்தைப் பொறுத்துக்கொண்டு அவர்கள் தம் வாழ்வை நகர்த்தவே முற்படுகிறார்கள். அவர்கள் தமக்கான குழந்தைகளைப் பெற்றெடுப்பார்கள். அவர்கள் தம் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவார்கள். அவர்கள் தம் குழந்தைகளுக்கு ஊஞ்சல் கட்டுவார்கள், கிலுகிலுப்பைகளை வாங்கிக்கொடுப்பார்கள். ஆம், அவர்கள் வாழ்வார்கள் என்கிறார் இந்நாவலாசிரியர். ஆதிரையைப் பொறுத்தவரை போர்க்கால வரலாற்றுச் சம்பவங்களுக்குப் புறம்பாக அதிலொரு வாழ்வை சயந்தன் கட்டியமைக்க முயன்றிருக்கிறார். மனித வாழ்வின் உறவுகள், உறவுகளின் சிக்கல்கள், மனதின் அலைச்சல்கள், அந்த மனத்தின் முன்னுக்குப் பின்னான முரண்கள், தாய்மையின் விழுமியங்கள் இவ்வாறாக முட்டி மோதுகின்ற மாந்தர்களை உருவாக்கி ஆதிரையில் அலையவிட்டிருக்கிறார். ஆதிரை என்ற இந்த நாவலிலிருந்து யுத்தத்தையும் அது ஏற்படுத்திய அழிவையும் நீக்கிவிட்டாலும் கூட ஒரு வாழ்வுச் சுழி அதற்குள் எஞ்சியிருக்க வேண்டுமென்று முயற்சித்திருக்கிறார். சயந்தன் யாழ்ப்பாணம், சுழிபுரம் என்ற இடத்தில் பிறந்து போர்க்கால வாழ்வின் வழியே இடப்பெயர்வுகளைச் சந்தித்தவர். பின்னர், வன்னியிலிருந்து மீண்டு புலம்பெயர்ந்தவர். சுவிற்சர்லாந்தில் தற்போது புலம்பெயர்ந்து வாழ்கின்றார்.

11822

உயிரணை: நாவல். சாந்தி நேசக்கரம். சென்னை 600 094: பூவரசி வெளியீடு, 20/2, சக்ரியா காலனி, 1ஆவது தெரு, சூளைமேடு, 1வது பதிப்பு, மே 2016. (சென்னை 600 094: பூவரசி பதிப்பகம்).

144 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-81322-48-5.

இந்நாவல் இலங்கையின் விடுதலைப் போராட்டத்தின் பின்னணியில் ஆதித்தன் என்ற போராளியின் பார்வையில், அவனது முதலாவது கள அனுபவத்திலிருந்து தொடங்கி ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட காலம் வரையிலான போராட்ட வரலாற்றை பதிவுசெய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பிளானைப் பிறப்பிடமாகக்கொண்ட சாந்தி ஜேர்மனியில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார். "நேசக்கரம்" என்ற தன்னார்வத் தொண்டர் நலன்புரி அமைப்பொன்றினை இயக்கிவருகிறார். இவ்வமைப்பு இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காகவும் ஆதரவற்ற பெற்றோரை இழந்த சிறுவர்கள் ஆதரவற்ற பெண்களுக்கான வாழ்வாதார நம்பிக்கைகளை ஏற்படுத்தும் முகமாகவும் ஆரம்பிக்கப்பட்டது. முன்னதாக சாந்தி ரமேஷ் வவுனியன் என்ற பெயரில் இன்னொரு காத்திருப்பு, அழியாத ஞாபகங்கள், உயிர்வாசம், கண்கள் எழுதிய கவிதையின் கடைசிச்சொட்டு ஆகிய தலைப்புகளில் கவிதைத் தொகுப்புகளையும், கலையாத கனவுகள் என்ற தலைப்பில் சிறுகதைத் தொகுதியொன்றையும் வெளியிட்டுள்ளார்.

11823

ஏதனம் (நாவல்). தெணியான். கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, நவம்பர் 2016. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர். இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

x, 128 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-9396-80-2.

சாதிகள் அற்ற ஒரு சமுதாயத்தை அடுத்த தலைமுறையினருக்கு விட்டுச் செல்லவேண்டிய பொறுப்புச் சுமை எமக்குள்ளது என்ற வேட்கையை இந்நாவல் வழியாக விதைக்க முயன்றுள்ளார். தெணியானின் பெரும்பாலான படைப்புகள் போலவே இது சாதீயத்தை கருவாகக் கொண்ட ஒரு நாவல்தான். வடமராட்சி பிரதேசத்தின் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வின் பாடுகளைக் பேசும் நாவல். ஈழத் தமிழர்களான தங்களுக்குள் ஒன்றான ஒரு சமூகப் பிரிவை அடக்கி ஒடுக்குவதற்கு யாழ்ப்பாண மேல்சாதி சமூகமானது தண்ணீரை எவ்வாறு ஒரு வலுமிக்க ஆயுதமாக பயன்படுத்தியது என்பதை இந்தப் படைப்பின் மூலம் உணர வைக்கிறார் தெணியான். பாதிக்கபட்டவர்களின் ஆக்கிரோசமான எதிர்குரலாக அல்லாது சமூகத்தில் நிலவுவதை உன்னிப்பாக அவதானித்து நிதானமாகவும் அழகாகவும் ஒழுங்கு ரீதியாகவும் பதிவு செய்வு செய்துள்ளார். சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னான காலகட்டத்தில் நாவல் ஆரம்பமாகிறது. தாழ்த்தப்பட சமூகத்தில் ஏழ்மையில் வாடும் சிறுவர்களின் வாழ்க்கை சித்தரிப்புடன் களை கட்டுகிறது. தருமன் என்ற பாத்திரம் அற்புதமாக படைக்கப்பட்டு இருக்கிறது. நாவல் முடிந்த பின்னரும் மனதில் நிற்கிறான். கதையின் உண்மையான நாயகன் கால மாற்றங்களுக்கு ஏற்ப வெவ்வேறு முகங்களுடன் மேடையேறும் "ஏதனம்" தான். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61295).

11824

கடலோரக் கிராமம் (நாவல்). செ.குணரத்தினம். மட்டக்களப்பு: செ.குணரத்தினம், அமிர்தகழி, 1வது பதிப்பு, 2015. (மட்டக்களப்பு: எவர்கிறீன் அச்சகம்).

ix, 94 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4320-30-7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு பிரதேசம் சார்ந்த கிராமத்து மக்களின் வாழ்வியலைப் பின்புலமாகக் கொண்டு நாவல்களை வழங்கும் படைப்பாளிகளில் செ.குணரத்தினம் முக்கியமானவர். ஏற்கெனவே தெய்வ தரிசனம், துன்ப அலைகள், ஒரு கிராமம் தலைநிமிர்கிறது ஆகிய நாவல்களைத் தந்தவர். இந்நாவல் நாவலடிக் கிராமத்தை முக்கிய களமாகக் கொண்டு இயங்குகின்றது. வலப்புறம் வங்காள விரிகுடாவையும் இடப்புறமாக மட்டக்களப்பு வாவியையும் கொண்ட இக்கிராமத்தின் வாழ்வாதாரம் மீன்பிடித்தலாகும். கிராமத்தின் கடலாட்சி அம்மன் ஆலயம், மீன்பிடிப் பயிற்சி நிலையக் கட்டிடம், சிறிய பாடசாலை என்பன இக்கிராமத்தின் 300 குடும்பங்களின் வாழ்வின் அம்சங்கள். இக்கிராமத்தின் ததரூபமான நுணுக்கமான சித்திரிப்புகளுடன் இக்கிராமத்து மீனவ சமூகத்தின் 2004ம் ஆண்டு சுநாமிப் பேரழிவுக் காலகட்டத்தின் அன்றாட வாழ்க்கையினூடாக நாவல் விரிகின்றது.

11825

கலவங்கட்டிகள்: நாவல். ஜே.வஹாப்தீன். திருக்கோணமலை: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, நவம்பர் 2015. (திருக்கோணமலை: சண் பிரின்டர்ஸ், 224, மத்திய வீதி).

xii, 85 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-4628-14-4.

ஒலுவில் வஹாப்தீன் எழுதியுள்ள இந் நாவல், இதுவரையும் இம்மாவட்ட ஆக்க இலக்கியங்களின் வழியாக அதிகளவில் பேசாப் பொருள்களைப் பேசுகின்றது. பேசிய பொருள் பற்றியும் பேசுகின்றது. பேசாப் பொருள் என்ற விதத்தில் ஒலுவில் பிரதேசத்தில் உருவாகியுள்ள துறைமுகத்துடன் தொடர்புபட்ட பிரச்சினைகள் இந்நாவலில் ஆழமாக அலசப்படுகின்றன. அதன் உருவாக்கம் பற்றிய கனவுகள் வேறுவகையானவை. நனவில் இப்போது நிகழ்கின்றனவும் எதிர்காலத்தில் நிகழப் போகின்றனவும் வேறு வகையானவை. ஒலுவில் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள துறைமுகத்தினால் அம்மக்களும், மீனவர்களும் அடைந்துள்ள இழப்புக்கள், அவலங்கள் இந் நாவலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஒலுவில் கிராமத்தின் மீனவர் வாழ்வியலை கிராமிய வழக்காறுகளோடும், நாட்டார் பாடல்களோடும் அப் பிரதேசத்தின் மொழியில் எழுதப்பட்டதே கலவங்கட்டிகள் நாவல் ஆகும். ஆக, ஒலுவில் துறைமுகம் சார்ந்த எதிர்பார்ப்புக்கள் கலவங்கட்டிகளாகிவிட்டமை பற்றி இந்நாவல் ஆழமாக முதன்முறையாக அலசுகின்றது. மேற்கூறிய அரசியல் பொருளாதார சமூகப் பிரச்சினைகளோடு இயல்பான முறையிலும் சுவையான விதத்திலும் காதல் கதையொன்று இந்நாவலில் சொல்லப்படுகின்றது. சாதரண தொழிலாளியின் மகளுக்கும் முதலாளியின் மகனுக்குமிடையிலான காதலே இந்நாவலில் சொல்லப்படுகின்றது. தேவைக்கேற்ப பல நாட்டார் பாடல்கள் இந்நாவலில் இடம்பெற்றுள்ளன. தேசிய "பெயாவே இலக்கிய விருது" வழங்கும் அமைப்பு காலி கோட்டை ஹெரிடேஜ் விலாவில் 2017இல் நடாத்திய விருது வழங்கும் விழாவில் கவிஞர், அறிவிப்பாளர் ஜே.வஹாப்தீன் எழுதிய இந்த நாவலை சிறந்த நாவலாகத் தெரிவு செய்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் "பெயாவே விருது" வழங்கிக் கௌரவித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11826

காகித ஓடம். K.S.ஆனந்தன். கொழும்பு 14: வீரகேசரி வெளியீடு, த.பெட்டி எண் 160, எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் பிரைவேட் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1974. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் பிரைவேட் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி).

(4), 138 பக்கம், விலை: ரூபா 3.40, அளவு: 18.5x14 சமீ.

இது ஒரு குடும்பக் கதை. இன்ப வாழ்வை எதிர்நோக்கும் இரு இளம் நெஞ்சங்கள், வாழ்க்கையின் முதற்படியிலேயே சந்தேகம் என்னும் கொடிய சூறாவளியினால் தாக்கப்பட்டபோது, அவர்களின் உள்ளப் போராட்டங்களை அழகுறச் சித்திரிக்கிறது இந்நாவல். காதல் திருமணம் புரிந்த உமா-சிவசங்கர் தம்பதிகளிடையே ஏற்பட்ட சந்தேகம் குடும்பவாழ்வில் விரிசலை ஏற்படுத்துகிறது. இறுதியில் கடிதம் ஒன்றின் மூலம் தன் கணவன் பண்பானவன் என உணர்ந்து சந்தேகம் நீங்கி நிறைவு பெறுகிறாள். சந்தேகம் குடும்பவாழ்வில் ஏற்படுத்தும் பாதிப்பை நாவல் தெளிவாகப் படம்பிடிக்கின்றது. 22ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளிவந்த நூல்.

11827

குடிமைகள்:நாவல். தெணியான். சென்னை 600 005: கருப்புப் பிரதிகள், பி.55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்சு சாலை, 1வது பதிப்பு, நவம்பர் 2016. (சென்னை600 005: ஜோதி என்டர்பிரைஸஸ்).

240 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21x14 சமீ.

இலங்கை வடமராட்சியை கதைக்களனாக கொண்டியங்கும் இந்நாவல் யாவும் கற்பனை என்று கடந்து செல்லமுடியாத யதார்த்தமான சமூக அவலங்களைப் பிரதிபலிப்பதுடன் ஒரு உலைக்களனாய் நின்று தகிக்கிறது. அதே சமயம் எளிய மொழியில் சாதிய இருப்பையும், அதன் அமைப்பையும், அது பற்றிய புரிதலையும் எல்லோரிடமும் கொண்டு சேர்க்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது. முற்போக்கு சிந்தனைகள், சாதீயத்திற்கு எதிரான தீர்க்கமான குரல், பெண்களின் மன உலகின் வெவ்வேறு கோலங்கள் போன்றவற்றை தெணியான் தனது நாவலில் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61442).

11828

குதிரை வாகனம். வி.ஜீவகுமாரன். சென்னை 600109: Umi –Unique Media integrators, இல 8, ஆறாவது குறுக்கு, 8ஆவது பிரதான சாலை, வைஷ்ணவி நகர், திருமுல்லைவாயில், 1வது பதிப்பு, மார்ச் 2017. (சென்னை: மணி ஒப்செட்).

xxvi, 246 பக்கம், விலை: இந்திய ரூபா 225., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-85471-78-0.

ஈழத்தமிழரின் ஆறு தலைமுறைகளினூடாக சமூக மாற்றத்தினை மிருதுவாக வெளிப்படுத்தும் சமூக வரலாற்று ஆவணப்பதிவாக இந்நாவல் அமைந்துள்ளது. மரணத்தை அண்மித்த ஒருவனது வாழ்வு குறித்ததான சாட்சியமாக முக்காலத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிக்கும் ஒரு கதைசொல்லியின் பார்வையில் கதை சொல்லப்படுகின்றது. சொந்த ஊர் வாழ்வையும் புலம்பெயர் வாழ்வையும் களங்களாகக் கொண்டு, தமது பாரம்பரியப் பெருமைகளென்று கருதியிருந்த ஒரு வாழ்வுமுறையின் கரடுமுரடான தோல் உதிர்க்கப்படுதலும், புதிய மென்மையான தோலின் உருவாக்கமும், உதிர்ந்தும் உதிராதிருக்கும் விகாரங்களும் வாழ்வுக்கான பல்வேறு தருணங்களில் எவ்வாறு நிகழ்கின்றன என்பதை ஒரு சமூக வரலாற்றுப் பார்வையில் இந்நாவல் அலசுகின்றது. யாழ்ப்பாணத்துச் சமூக மாற்றம் தொடர்பான புதிய புரிதல்கள் குதிரை வாகனத்தின் மூலம் சாத்தியமாகின்றது. குடும்பம் கௌரவம் என்று முரண்பட்டிருக்கும் நம்மவரின் வாழ்க்கை முறை, திருவிழா நிகழ்வுகள், சாதிப் பிரிவினைகள், இனப்பிரிவினைகள், இதனால் ஏற்படும் குடும்பப் பிளவுகள், இராணுவ அடக்குமுறை, விடுதலை இயக்கங்களில் சேருதல், புலம்பெயர்தல், இளம் சந்ததியின் புலம்பெயர்ந்த வாழ்க்கையில் எத்துணை கட்டுடைப்பு உண்டோ அத்தனையையும் ஜீவகுமாரன் இந்நாவலில் பதிவுசெய்திருக்கிறார

11829

கொட்டியாபுரத்து சிங்கம்: வரலாற்றுக் குறுநாவல். சம்பூர் ஸதீஸ் (இயற்பெயர்: அருமைநாதன் சதீஸ்குமார்). திருக்கோணமலை: அ.சதீஸ்குமார், 246, முருகன் கோவில் வீதி, இலிங்கநகர், 1வது பதிப்பு, 2015. (திருக்கோணமலை: ஸ்ரீராம் பிரின்டர்ஸ்).

79 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-44703-1-6.

சம்பூர் பிரதேசத்தின் தொன்மை என்ற தனது முதலாவது நூலுடன் எழுத்துலகப் பிரவேசம் செய்துள்ள வைத்திய கலாநிதி சம்பூர் சதீசின் மற்றுமொரு நூலாக இந்த வரலாற்றுக் குறுநாவல் வெளிவந்துள்ளது. சம்பூர் மண்ணின் தொன்மையினையும் கீர்த்தியினையும் பறைசாற்றும் வகையில் சுமார் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் சம்பூர் அடங்கலான மூதூர் பிரதேசவாசிகள் இலங்கை அரசியலில் சிங்கள மன்னர்களோடு கொண்டிருந்த நட்புறவு பற்றியும் இங்கு வாழ்ந்த வீர மறவர்களின் வாழ்வியல் பற்றியும் அற்புதமான முறையில் இக்குறுநாவலில் விபரித்துச் செல்கிறார். இந்நாவலின் நாயகர்களான இளஞ்சிங்கன், வெற்றிமாறன், தாமரை போன்றோரின் தோற்றங்கள், அந்நியப் படையெடுப்பு, கண்டிப் பயணம், காதல், போர் போன்ற பல்வேறு விடயங்களையும் அன்றைய கலாச்சார பண்பாட்டுச் சூழலோடு ஆசிரியர் நகர்த்திச் செல்கிறார்.

11830

சங்கு முள்ளு: நாவல். எஸ்.ஏ.உதயன். மன்னார்: சைபர் சிற்றி, பேராலயச் சந்தி, பெற்றா, 1வது பதிப்பு, 2013. (மன்னார்: சைபர் சிற்றி, பேராலயச் சந்தி).

xii, 13-135 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-52958-2-6.

கடற்கரையில் ஒதுங்கும் அதிக முட்களை ஒரு தொகுதியாகக் கொண்டதும் சங்குவடிவத்தில் அமைந்ததுமான கடல்தாவரத்தின் முள் சங்குமுள் எனப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. இந்நாவல் யுத்த அனர்த்தத்தின் வடுக்களையும் அதன் பின்னான கலாசார மீறல்களையும் சொல்கின்றது. யுத்த நடவடிக்கையின் முறைகேடுகளையும், இருதரப்பினதும் மீறல்களையும் நாசூக்காகச் சொல்லமுனைகின்றது. அவ்வப்போது கதைப்போக்கின் சுவைகருதி நாட்டார் பாடல் வரிகளையும் சேர்த்திருப்பதும், பொருத்தமான உவமான உவமேயங்களைக் கையாள்வதும் நாவலைச் சுவைமிக்கதாக்குகின்றன. போருக்குப் பின்னரான மீள்குடியேற்றக் கிராமங்களில் தமிழ் மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளின் மூலத்தை மற்றுமொரு கோணத்தில் உதயன் சொல்லியிருக்கிறார். மன்னார், பேசாலையைச் சேர்ந்த எஸ்.ஏ.உதயன் அரங்கியல் கலை, எழுத்துக்கலை, கட்புலக்கலை என கவின்கலைகளில் கால் பரப்பி தன் பதிவுகளை ஆழமாகவும் விசாலமாகவும் இட்டுவருபவர். மண்மணம் வீசும் நாவல்களை புனைவதில் மன்னார் மண்ணில், சிறந்து ஒளிவீசுகிறார். இவர் இதுவரை 6 நாவல்களை தமிழ்கூறும் நல்லுலகிற்குத் தந்துள்ளதோடு அவற்றுக்காகப் பல விருதுகளையும் பெற்றுள்ளார். பவன சுந்தரம்பாள் தமிழியல் விருதை இருமுறையும், வடமாகாண சிறந்த நூல் எனும் விருதை நான்கு முறையும், இலங்கை இலக்கிய பேரவை விருதை ஒரு முறையும், இலங்கை அரச சாகித்திய விருதினை இரு முறையும், கொடகே தேசிய சாகித்திய விருதை ஒருமுறையும் இதுவரை பெற்று சாகித்திய நாயகனாகத் திகழ்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61276).

11831

சில மனிதர்களும் சில நியாயங்களும்: சமூகக்கதை. கரவை மு.தயாளன் (இயற்பெயர்: மு.நற்குணதயாளன்). கென்ட், பிரித்தானியா: நா.சிவானந்தசோதி, திருமுருகன் அறிவகம், 41, Haddington Road, Bromley,Kent BR1 5RG, 1வது பதிப்பு, 2016. (லண்டன்: அச்சக விபரம் தரப்படவில்லை).

208 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-0-9935325-9-7.

தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து லண்டனுக்குச் சென்று குடியேறியவர்களையும் அவர்களின் இரண்டாம் மூன்றாம் தலைமுறையினரையும் பாத்திரங்களாகக் கொண்டு இந்நாவல் புனையப்பட்டுள்ளது. மூலவேரைத் தாயகத்தில் ஊன்றியபடியே லண்டனில் வாழமுனையும் பெற்றோருக்கும், அவர்களது தமிழினம் பற்றிய புரிதலின் குறைபாடுகளின் காரணமாகத் தம் வாழ்வை முழுமையாக அந்நிய மண்ணில் பதியம் வைத்து வளர்ந்து அதையே தாயகமாகவும் தமது கலாச்சாரமாகவும் கருதிவாழும் இரண்டாம் தலைமுறையினருக்கும் இடையே எழும் மனப் போராட்டம், முரண்நிலை என்பவற்றை இந்நாவல் பிரதிபலிக்க முனைகின்றது. புலம்பெயர்ந்த சமூகத்தின் புதிய தலைமுறையினர் தமது மூத்தோரின் மரபுகளையும் கலாசாரத்தையும் அறிவுபூர்வமாக அறியாதவர்கள். அவர்கள் தாங்கள் வாழும் சமுதாயத்தின் நாகரிக நடைமுறை வாழ்க்கையுடன் இயல்பாகவே ஒன்றிப் போனவர்கள். அவர்களிடத்தில் மூத்தவர்களின் பழைமையானதும் புகலிடத்துடன் ஒன்றாததுமான தனித்துவமான கலாச்சாரத்தை எதிர்பார்க்க முடியாது. எதிர்காலத் தலைமுறையினர் மேலும் முற்றாகவே மாறித் தாம் வாழும் ஐரோப்பிய கலாச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரத்தினுள் முற்றாகவே மூழ்கித் தம் சுயத்தை இழக்கும் ஆபத்தினை இந்நாவல் முகத்திலறைந்து சொல்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61255).

11832

தடகள விளையாட்டு (நாவல்). தவபாக்கியம் கிருஷ்ணராஜா. உரும்பிராய்: திருமதி தவபாக்கியம் கிருஷ்ணராஜா, கற்புலம் வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய், 1வது பதிப்பு, 2011. (அச்சக விபரம் தரப்படவில்லை).

48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

இந்நூலின் தலைப்பும் மேலைநாட்டுத் தடகள வீராங்கனைகளின் புகைப்படங்களைத் தாங்கிய முன்/பின் அட்டைப்பட வடிவங்களும் இந்த நூலை ஒரு விளையாட்டு/உடற்பயிற்சி நூலாக அடையாளப்படுத்தும் மயக்க நிலையை தோற்றுவிக்கக்கூடும். உண்மையில் இது வாழ்க்கையில் தடைகளைக் களைந்து வெற்றி காணவிளையும் "சுகுமாரி" என்ற கதாபாத்திரத்தின் கதைகூறும் ஒரு நாவலாகும். சிறுவயதில் மண் விளையாட்டு, பாடசாலை நாட்கள், அக் காலத்தக் குறும்புகள், 1958இன் இனக்கலவரம், குருணாகல் வாழ்வு, திருமணங்கள், சிறைச்சாலை வாழ்க்கை, அன்னையின் அறுசுவை உணவு, கடமைச் சமையல், மாமியாரின் நாடகங்கள், பிள்ளைப் பாசம், கடமை உணர்வு என்று இந்நாவல் வளர்க்கப்படுகின்றது. சுகுமாரி தன் வாழ்க்கைப் போராட்டத்தின் இறுதியில் தடைகளைத் தாண்டி அடையும் வெற்றி இந்நாவலின் முடிவாகின்றது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50328).

11833

தமிழணங்கு அல்லது இளநகைச் சிறுமி. வே.சின்னையா. சிங்கப்பூர்: வே.சின்னையா, 1வது பதிப்பு, 1936. (சிங்கப்பூர்: நான்யோ அச்சியந்திரசாலை).

(4), 64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை,அளவு: 18x13.5 சமீ.

இந்நாவல் யாழ்ப்பாணம் வல்வையம்பதி வேலுப்பிள்ளை சின்னையா அவர்களால் எழுதப்பெற்று மதுரைத் தமிழ்ச் சங்கம், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கம் ஆகியவற்றின் பரீட்சகருள் ஒருவரான ஸ்ரீலஸ்ரீ சு.நவநீதகிருஷ்ண பாரதி அவர்களால் பரிசோதிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியின் தலைமைத் தமிழ்ப் போதனாசிரியருமான சு. நவநீதகிருஷ்ண பாரதி அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரையும் வழங்கிச் சிறப்பித்துள்ளார். "இது கதையின் போக்காலும், அமயத்திற் கேற்ற மேற்கோள்களின் சிறப்பாலும், விழுமிய வசனத்திறப் பாட்டாலும் நிகரற்று விளங்கா நின்றது. இதனைக் கற்றார் தமிழிலே ஆர்வமிக் குடையவராகிப் புலமை எய்துதற்கு முற்பட்டுத் தேற்றம் பெறுவர் என்பது எனது நம்பிக்கை" என்று அவர் இந்நூல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இந்நாவலின் இடையிடையே நீதிநெறிச் செய்யுள்களும், உவமை மொழிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. முதல் 40 பக்கங்களில் இந்நாவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து "நவரச கதாமஞ்சரியின் கதையிலுள்ள ஒரு பாகம்" என்ற தலைப்பின்கீழ் ஆசிரியர் 1930இல் வெளியிட்ட நவரச கதாமஞ்சரியில் இடம்பெற்ற இரண்டாவது கதை, இரண்டாவது பதிப்பாக, சில திருத்தங்களுடன் 41-52ஆம் பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. மேலும், முன்னைய நூலில் இடம்பெற்ற நான்காவது கதை, திருத்தங்களுடன் இந்நூலில் 53-64 ஆம் பக்கங்களில் "மூன்றாவது கதை" என்ற தலைப்புடன் மீள்பிரசுரமாகியிருக்கின்றது.

11834

தழும்பு: இரு நாவல்கள். மா.பாலசிங்கம். கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, 25, அவ்வல் சாவியா வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2016.

196 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-3914-02-6.

வீடு வந்த வசந்தம், தழும்பு ஆகிய இரு நாவல்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. வீடு வந்த வசந்தம், என்ற நாவல் இனப்பிரச்சினை, பேரினவாதம், போர்ச் சூழல், அரச பயங்கரவாதம், போன்றவற்றின் பின்னணியில் நகரும் கதையாகும். ஈழப்போரின் உக்கிரகாலத்தில் வடபுல மக்கள் பட்ட கஷ்டங்கள், இடப்பெயர்வு, அகதி வாழ்க்கை, குடும்பப் பிரிவு, புலப்பெயர்வு, கொழும்பு லொட்ஜ் வாழ்க்கை போன்ற பல்வேறு விடயங்கள் இந்நாவலில் பேசப்படுகின்றன. தழும்பு என்ற நாவல் சாதியம் தொடர்பானது. நாவலின் நாயகி கவிதா கொழும்பு அலுவலகமொன்றில் வேலை செய்கிறாள். சிங்களவர்கள் பெரும்பான்மையான அந்த அலுவலகத்தில் ஆரூரன் என்பவரைக் காதலிக்கநேர்கின்றது. ஆரூரன் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர். ஒரு மரமேறியை மருமகனாக எற்க முடியாதென்பதை ஆரூரனிடமே சொல்லிவைக்கும் கவிதாவின் தந்தையின் சாதிய உணர்வுகளும் ஆரூரன்-கவிதாவின் காதலும் என்னவாகின்றன என்பதை கதையில் ஆரவாரமின்றிச் சொல்கிறார் ஆசிரியர். இரு நாவல்களும் மொழிநடை, கருத்துச் செறிவு, சிறந்த கதைப் பின்னல் என்பவற்றைக் கொண்டுள்ளன. புரவலர் புத்தகப் பூங்காவின் 38ஆவது வெளியீடு. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61244).

11835

நல்லதோர் வீணை: நாவல் இலக்கியம். கேணிப்பித்தன் ச.அருளானந்தம். திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, மார்ச் 2015. (கொழும்பு 12: நிசான் பிரின்டர்ஸ், இல.64 என். பீர் சாஹிபு வீதி).

vi, 183 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-52086-9-7.

1950 முதல் 1967 வரையிலான ஒரு காலகட்டத்தை இந்நாவல் பதிவுசெய்கின்றது. சாதாரண சராசரி மனித வாழ்வு பற்றிப் பேசும் இந்நாவலில் ஆங்காங்கே சில வரலாற்றுப் பதிவுகளையும் சேர்த்துள்ளார். அன்றும் இன்றும் எமது சமூகத்தில் சுயநலமிகளின் ஆதிக்கமே வேரூன்றியிருப்பதை மேலும் இந்நாவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுசெய்கின்றது. அமரர் வ.அ.இராசரத்தினம் எழுதிய "ஒரு வெண்மணல் கிராமம் காத்துக்கிடக்கிறது" என்ற நாவலின் தொடர்ச்சியாக இந்நாவலைப் பார்க்கமுடியும் என்பது ஆசிரியரின் கருத்தாகும்.

11836

நீந்திக் கடந்த நெருப்பாறு: பாகம் 1 (நாவல்). நா.யோகேந்திரநாதன். கிளிநொச்சி: பேரிகை சமூக கலை இலக்கிய அவை, 3வது பதிப்பு, மார்ச் 2016, முன்னைய பதிப்பு விபரங்கள் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ரூபன் அச்சகம்).

xxiii, 455 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 20.5x15 சமீ.

இந்நூல் யதார்த்த பூர்வமாக போராட்டத்தை ஏற்றுக் கொண்ட மக்களின் உணர்வலைகளையும், விடுதலைப் போராட்டத்தின் பக்கம் இருக்கக் கூடிய நியாயங்கள், மக்களின் பண்பு, இடம்பெயர் அவலங்கள், போராட்டத்தின் விளைவாக ஏற்பட்ட துன்பங்கள் இவை அனைத்தையும் சித்தரிக்கின்றது. சாதாரண மானுட வாழ்வில் ஏற்படக் கூடிய அன்பு, பாசம், காதல் என்ற பல விடயங்களையும் உண்மைச் சம்பவங்களுடனும், கிராமிய வாழ்க்கை முறைகளில் காணப்படக்கூடிய சிறப்பியல்புகளையும் தொகுத்து உருவாக்கப்பட்டுள்ளது. மிக நீண்ட காலம் வானொலித் துறையில் பணியாற்றி ஒலிபரப்புத் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவரும் வானொலிப் பிரதி எழுதுதல், வானொலி நிகழ்ச்சிகள் தயாரித்தல் என பல்வேறு அனுபவங்களைக் கொண்டவரும் சிறந்த சிறுகதை எழுத்தாளர், நாவல் ஆசிரியர், அரசியல் ஆய்வுக் கட்டுரையாளர் என பல்துறைத் தேர்ச்சி பெற்றவர் திரு.நா.யோகேந்திரநாதன். போராட்ட வரலாற்றின் பல உண்மைச் சம்பவங்கள், போராட்ட செயற்பாடுகளினால் கலங்கித் துடித்த மக்களின் குமுறல்களையும், அதனோடிணைந்த இன்னும் பல செய்திகளையும் மிக அழகாக கோர்வை செய்து நாவலாக எமக்குத் தந்திருப்பது போராட்ட வரலாற்றின் நேரான முகத்தை எமக்குக் காட்டுவதாக அமைந்துள்ளது. எமது இளைஞர் யுவதிகளின் உணர்வலைகளையும் மக்கள் பால் அவர்கள் கொண்டிருந்த அதீத பாசம், பற்றுக்களையும், சுதந்திர காற்றை சுவாசிப்பதற்காக மேற்கொண்ட உச்ச முயற்சிகளையும் எமது எதிர்கால சந்ததிக்கு எடுத்துச் செல்லக் கூடிய பெறுமதி வாய்ந்த ஆவணங்களாக அமைகின்றன. இந் நூல் போராட்டங்கள் பற்றிய பதிவுகளையும் மற்றும் அதனுடன் இணைந்த நிகழ்வுகளையும் மட்டும் கோடிட்டுக்காட்டாது இந் நிகழ்வுகளுக்கும் மேலாக எமது பூர்வீகக் கிராமங்கள், இயற்கை வனப்புக்கள், அவை கொண்டிருக்கக் கூடிய சிறப்பியல்புகள் மற்றும் இப் பகுதியில் வாழ்ந்த எமது முதியவர்கள் கொண்டிருந்த அனுபவங்கள், அவர்களின் வனம் சார்ந்த அறிவுத் திறன்கள் ஆகிய பல இயற்கையோடொத்த அனுபவப் பகிர்வுகளையும் இங்கே பதிவுசெய்யப்பட்டுள்ளது. அகில இலங்கை ரீதியில் மும்மொழிகளிலும் நடத்தப்பட்ட நாவல் இலக்கியப் போட்டியில் தேசிய இலக்கிய விருது பெற்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61280).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11837

நெருப்பாற்றில் ஓர் நீலோற்பலம். க.சிவனடியான். வட்டுக்கோட்டை: க.சிவனடியான், சங்கரத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 2013. (யாழ்ப்பாணம்: திருச்செல்வி அச்சகம், தட்டா தெரு).

122 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வட்டுக்கோட்டை, சங்கரத்தையைச் சேர்ந்தவர் டாக்டர் க.சிவனடியான். என் கையெல்லாம் இரத்தம் என்ற சிறுகதைத் தொகுதியை 1993இல் வெளியிட்டவர். இவரது கதைகளில் சமூகத்தின் மீதான அக்கறையை வெளிப்படுத்தியிருக்கிறார். இத்தொகுதியில் அஞ்சலிகளும் மரணிக்கின்றன, சந்தர்ப்பங்களின் முன் எல்லோரும் சமன், சிறகொடிக்கப்பட்ட பறவைகள் சேற்றில் வீழ்கின்றன, கற்பும் பயணிக்கிறது ஆகிய நான்கு சிறுகதைகளும், நெருப்பாற்றில் ஒரு நீலோற்பலம் என்ற குறுநாவலும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60740).

11838

பயிர் மேயும் வேலிகள்: நாவல். செல்லையா குமாரசாமி. யாழ்ப்பாணம்: நாவற்குழி சித்தி விநாயகர் இளைஞர் சமூக அபிவிருத்திச் சபை- பிரித்தானியா, இலங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (யாழ்ப்பாணம்: நிலா பதிப்பகம், இல. 72. செட்டிய தெரு, கரவெட்டி).

ix, 263 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x14 சமீ.

யாழ்ப்பாணக் கிராமமொன்றில் கூட்டுப் பாலியல் வல்லறவுக்குட்படுத்தப்படுகிறாள் துளசி என்ற சிறுமி. மயக்கநிலையில் மருத்துவமனையில் இருந்த அவள் வாக்குமூலம் அளிப்பதைத் தவிர்க்க அவளைக் கொலைசெய்ய முனைகின்றனர் காமுகர்கள். அதில் தோல்விகண்டு, பணத்தால் வாயை அடைக்க முனைகின்றனர். இந்நாவல் தமிழ்ச் சமூகத்தில் நிலவும் சமூக விரோதச் செயற்பாடுகளையும் கலாச்சாரச் சீரழிவுகளையும் தெளிவாகப் பதிவுசெய்கின்றது. மானிப்பாய், வவுனியா, கொழும்பு, சென்னை என கதையின் களங்களும் பாத்திர எண்ணிக்கையும் விரிவாக இருந்த போதிலும் ஆசிரியர் மிக நுட்பமாக இவற்றை இணைத்து கதையை சுவாரஸ்யமாக நகர்த்திச் செல்கிறார். நாவற்குழி (கைதடி)யைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு செல்லையா குமாரசாமி கவிஞராக, நாடக எழுத்தாளராக, நாவலாசிரியராகப் பல்துறை விற்பன்னராக விளங்குபவர். 50களில் அல்லி என்னும் மாதச் சஞ்சிகையை நடாத்தியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 249757).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11839

பழைய வேதக்கோயில்: பாகம் 1. கந்தமுருகஞானி (இயற்பெயர்: முருகேசு ராஜவரோதயம்). யாழ்ப்பாணம்: முருகேசு ராஜவரோதயம், ஆனந்த கானம், ஆவரங்கால், புத்தூர், 1வது பதிப்பு, மார்ச் 2014. (உடுப்பிட்டி: ஆகாயம் பதிப்பகம், இமையாணன் கிழக்கு).

xviii, 135 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4900-02-8.

பழைய வேதக் கோயில் நாவலானது ஒரு குறித்த பிரதேச முன்னோடிக் குடிகளின் வாழ்க்கையை, அவர்களது பிரச்சனைகளைப் பேசுகிறது. யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப் பகுதியில் அல்வாய் கிராமத்தின் வடபகுதியில் பாழடைந்த நிலையில் காணப்படும் 200ஆண்டுப் பழமைமிக்க வேதக்கோயில் பற்றிய வரலாறே இங்கு நாவலாகப் புனைவுபெறுகின்றது. 1910இல் இவ்விடத்திலிருந்து தேவாலயம் அகற்றப்பட்டு சற்கோட்டை கடற்கரைப்பகுதியில் அமைத்ததன் பின்னர் இவ்வாலயத்துக்கு பழைய வேதக்கோயில் என்ற பெயர் வழங்கப்படலாயிற்று. போர்த்துக்கீசர் காலப்பகுதியில் நடந்த சம்பவங்களாக இந்த நாவலின் முதலாம் பாகம் அமைகின்றது. இரண்டாம் மூன்றாம் பாகங்கள் முறையே ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் கால வரலாற்றுப் புனைவாக உருவாக்கப்படவுள்ள செய்தியும் முன்னுரையில் சொல்லப்படுகின்றது. மிகக் குறைந்தளவு வரலாற்றுத் தரவுகளை வைத்துக் கொண்டு நம்பத்தன்மை வாய்ந்த புனைவை அச்சுவேலி தோப்பு அருள்நந்தி பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றும் ஆசிரியர் தனது கன்னிப் படைப்பாகப் படைத்துள்ளார். நாவலின் நம்பகத்தன்மைக்கு, அந்தப் பிரதேசம் பற்றிய புவியியல், பண்பாட்டு அம்சங்கள் தொடர்பான கதாசிரியரின் நேரடி அனுபவங்கள், நுணுக்கமான விபரிப்புகள் என்பன காரணமாகின்றன. அவரது பெற்றோர் மற்றும் உறவினர் ஊடாகப் பெற்ற வாய்மொழித் தகவல்களும் அவருக்குக் கைகொடுத்துள்ளன. அரசமரத்துக் கோயில், மரத்தின் கீழ் கற்சிலை, உரைகல், குடுவையில் திருநீறு, அரசமிலையால் தீர்த்தம் வழங்கல் போன்ற தகவல்கள் அந்த வாழ்வைப் படம் பிடிக்கின்றன. அதே போல பனைமரத்திலிருந்து கள் இறக்கல், பாளைக் கத்தி, சுரக் குடுவையில் கள்ளு, அதை அருந்துவதற்கு வடலி ஓலையில் பிளா போன்ற சித்திரிப்புகள் மண்ணின் மறைந்த வாழ்வை நாவலில் அழகாகச் சித்திரித்துக் காட்டுகின்றன. நாவலை படித்துச் செல்லும்போது, அது நிகழ்காலத்தை நினைவுறுத்திச் செல்லத் தவறவில்லை. அந்நியர் ஆட்சி, வேற்றுப் படைகளின் அட்டகாசம், இடப் பெயர்வு போன்றவை நமதுமண்ணில் நாம் அனுபவித்து உணர்ந்தவை. பல சமூகங்களின் பிரதிநிதிகள் அந்நிய நாட்டு மனிதர் போன்ற பல்வேறுபட்ட கதாபாத்திரங்கள் இருந்தபோதும், கதையை மிகவும் நடுநிலையோடும் சமூகங்களிடையே பிரிவுகளை ஏற்படுத்தாதவாறும் நல்லிணக்கம் மற்றும் சௌயன்யத்தை மேம்படுத்தும் வகையாகவும் சித்திரித்துச் சென்றுள்ளார். பள்ளர் சுடுகாடு, கூத்தாடும் பற்றை, கற்கோட்டை(சக்கோட்டை) போன்ற இடப் பெயர்கள் வந்தமைக்கான காரணங்களைக் கதையோடு கதையாக நகர்த்திச் செல்கிறார். பிரதேச வரைபடத்தைத் தந்தமை பாராட்டத்தக்கது. பல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுதல் ஆந்தை அலறுதல் போன்றவற்றை துர்க்குறியாகக் கொள்ளும் நம்பிக்கை அன்று இருந்ததை கதையில் அறிகிறோம். இன்றும் அந் நம்பிக்கைகள் இருப்பதால் அது பற்றி சொல்வதில் தவறில்லை. இருந்தபோதும் பல்லி சொல்லுதல் என்பதை மூடநம்பிக்கையாகக் கொள்ளாது அதற்கு வலுச்சேர்ப்பதுபோலக் கதை நகர்த்தப்பட்டுள்ளது. தங்குதடையின்றி நீரோட்டம் போன்ற வசன நடை மற்றும் குழப்பத்தை ஏற்படுத்தாத சம்பவக் கோர்வைகள் என்பன இதமான வாசிப்பு அனுபவத்தை வாசகருக்கு அளிக்கின்றன.

11840

பாதை மாறுகிறது. திமிலை மகாலிங்கம் (இயற்பெயர்: சின்னையா தங்கவேல்). மட்டக்களப்பு: உஷா சிவதாசன், ஆசிரியர், உதயம் வெளியீடு, 1வது பதிப்பு, ஜூலை 1991. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம், 65, லேடி மனிங் டிறைவ்).

(4), 116 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 18.5x12.5 சமீ.

உதயம் வெளியீட்டு வரிசையில் ஏழாவது நூலாக வெளிவந்துள்ளது. (ஒளி 4, கதிர் 1: ஜனவரி-ஜூலை 1991). இதில் பாதை மாறுகிறது, பொன் குஞ்சுகள் ஆகிய இரு குறு நாவல்கள் இடம்பெற்றுள்ளன. திமிலை மகாலிங்கம் (ஏப்ரல் 29, 1938 - டிசம்பர் 13, 2010) 1960களில் புகழ்பெற்ற ஒரு ஈழத்துக் கவிஞரும் எழுத்தாளருமாவார். இலக்கிய உலகில் கவிதை, கட்டுரை, நாடகம், சிறுகதை, புதினம் என அனைத்திலும் எழுதியவர். அப்போதைய மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் உறுப்பினராக இருந்தவர். "தேனமுத இலக்கிய மன்றம்" என்ற அமைப்பின் மூலம் பல நாடகங்களை அரங்கேற்றினார். சிறுவர் இலக்கியத்திலும், சில நூல்களை வெளியிட்டார். இவர் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் நீண்டகால உறுப்பினர், 1993 முதல் பிரதேச செயலகம் நடத்திய கலாசார விழா தேனகம் சிறப்பு மலர் வெளியீடு, ஆகியவற்றில் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளார். மேற்படி கலாசாரப் பேரவையினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார். 20.12.2010 இல் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் இவருக்கு "கலைச்சுடர்" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. திமிலை மகாலிங்கம் எழுதிய இரு குறுநாவல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13587).

11841

பார்த்தீனியம்: நாவல். தமிழ்நதி (இயற்பெயர்: கலைவாணி இராஜகுமாரன்). சென்னை 600005: நற்றிணை பதிப்பகம், எண் 6/84, மல்லன் பொன்னப்பன் தெரு, திருவல்லிக்கேணி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2016. (சென்னை 600005: சாயி தென்றல் அச்சகம்).

512 பக்கம், விலை: இந்திய ரூபா 490., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-82648-35-2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் தமிழ்நதி. ஈழத்துப் போரினால் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தவர். கனடாவில் வாழ்ந்த காலத்தில் கலைவாணி இராஜகுமாரன் என்ற பெயரில் சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரை எனப் பல்வேறு ஆக்க இலக்கிய வடிவங்களையும் பயன்படுத்தித் தனது படைப்புகளை வெளியிட்டவர். தற்காலிகமாக சென்னையில் வாழ்ந்து வரும் வேளையில் தமிழ்நதியின் சூரியன் தனித்தலையும் பகல் (கவிதைகள்), நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதுவது (சிறுகதைகள்), ஆகிய இரு நூல்கள் வெளிவந்துள்ளன. கானல்வரி - ஆசிரியரின் முதலாவது குறுநாவல். பார்த்தீனியம் இவரது இரண்டாவது நாவல். இந்நாவலானது ஈழப்போராட்டத்தில், பெருமளவு இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் இணைந்துகொள்ளத் தொடங்கிய 80களின் தொடக்கப்பகுதியில் இருந்து ஆரம்பித்து இந்திய இராணுவம் ஈழத்தை விட்டு வெளியேறிய காலப்பகுதியை ஒட்டியதாக நிறைவுறுகின்றது. வானதி-வசந்தன் / பரணியை பிரதான கதாபாத்திரங்களாகக் கொண்டு நகரும் இந்நாவல், 3 பிரதான தளங்களில் நகர்கின்றது. முதலாவது, வானதிக்கும் வசந்திக்கும் இடையிலான காதல் முகிழ்வதில் இருந்து வசந்தன் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து பரணியாக இந்தியாவில் ஆயுதப் பயிற்சி பெறுகின்ற காலப்பகுதிவரையில் பயணிக்கின்றது. இரண்டாவது, பரணி இலங்கை திரும்பி அரசியல் வேலைகளிலும் இயக்கப் பணிகளிலும் ஈடுபடுவது. மூன்றாவது, ஈழவிடுதலை இயக்கம் பற்றிய பற்றுறுதியும் கனவுகளும் கொண்டவனாக வசந்தன் இருந்த காலப்பகுதி. இந்திய இராணுவ வருகையும் அதனூடாக மக்கள் எதிர்கொள்ளும் வதைகளும் இயக்கங்கள் பற்றிய கனவுகளின் வீழ்ச்சியுமாக இக்காலப்பகுதி நகர்கின்றது. ஆயினும் இந்நாவலின் பிரதான பேசுபொருளாக ஈழத்தில் இந்திய இராணுவத்தின் காலப்பகுதியில் செய்யப்பட்ட கடுமையான சித்திரவதைகள், குற்றச் செயல்கள், பாலியல்ரீதியான குற்றங்கள், வன்புணர்வுகள், கொலைகள் என்பவற்றை எடுத்துரைப்பதாகவும் பதிவுசெய்வதாகவும் அமைகின்றது. 1983-1990 காலப்பகுதியில் நேர்முகமாகத் தான் கண்டதை, அனுபவித்ததை, உய்த்து உணர்ந்ததை, கேட்டறிந்ததை இங்கே ஒரு நாவலாக எழுதியிருக்கிறார்.

11842

புனித யாத்திரை. சிவ. தியாகராஜா. United Kingdom: தமிழர் தகவல் நடுவம், Bridge End Close, Kingston KT2 6PZ, இணை வெளியீடு, London SW17 7EZ: புதினம் வெளியீடு, 38 Moffat Road, 1வது பதிப்பு, ஜூலை 2016. (சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர்).

306 பக்கம், விலை: இந்திய ரூபா 300., அளவு: 25x19 சமீ., ISBN: 1-85201-027-4.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஈழமண்ணில் 1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி இடம்பெற்ற மிக மோசமான இடப்பெயர்வான வலிகாமம் இடப்பெயர்வின் அவலங்களைச் சித்திரித்துக்காட்டும் ஒரு அற்புதமான நாவல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அவல நிகழ்வுகளிடையே பயணித்த ஒரு ஈழத்தமிழ் இளைஞனின் வாழ்க்கைப் பயணத்துடன் நாவலும் சேர்ந்து பயணிக்கின்றது. ஈழத்தமிழரின் ஒரு காலகட்ட வாழ்வை சமூக உணர்வுடன் இந்நாவல் வரலாறாகப் பதிவுசெய்திருக்கின்றது. ஈழத்தமிழர்களின் மிக முக்கிய ஆளுமையான கலாநிதி சிவ தியாகராஜா அவர்கள் மருத்துவம், உளவியல், வரலாறு, மரபணுவியல், இலக்கியம் ஆகிய துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பவர். நாவல் சிறுகதை உலகிலும் தனி முத்திரை பதித்தவர். அந்த வகையில் சுமேரியரின் முதல் நாவலான கில்கமேஸ் காவியத்தை தமிழில் மொழிபெயர்த்ததிலிருந்து 10 இற்கும் மேற்பட்ட சிறந்த நாவல்களை எழுதியுள்ளார். கடந்த மூன்று வருடங்களாக புதினம் இதழில் எழுதிவந்த வாலாற்றுத் தொடரான புனித யாத்திரை தற்போது அச்சேறி நூலுருப் பெற்றிருக்கிறது.

11843

பெயரிலி: நாவல். கௌரி அனந்தன். சென்னை 600094: பூவரசி பப்ளிக்கேஷன்ஸ், 20/2 சக்காரியா காலனி, 1வது தெரு, சூளைமேடு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2016, (சென்னை 600094: பூவரசி பப்ளிக்கேஷன்ஸ், 20/2 சக்காரியா காலனி, 1வது தெரு, சூளைமேடு).

xiii, 116 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21x14 சமீ., ISBN: 978-93-81322-49-9.

"பெயரிலி" ஒரு வெகுஜன இலக்கியத்திற்கான தன்மையினையும், பல்வேறு புதிய உத்திமுறைகள் மற்றும் முற்போக்கான கருத்தியலைக் கொண்ட தீவிர இலக்கிய வகைமை எனும் இருவேறு தன்மையினையும் உள்ளடக்கியதாக அமையப்பெற்றுள்ளது. மேலும் வாழ்வியல் குறித்த மதிப்பீடுகளும் நிகழ்வுகளும், பாத்திரச் செயல்பாடுகளும் அடுத்து இன்னவாக இருக்கும் என்று வாசகனால் தீர்மானிக்க முடியாதபடியான புதிர்தன்மையை கொண்டிருப்பதும் புனைவாக்கத்தின் வெற்றியாகவே பார்க்க முடிகிறது. அழகிய ஒரு காதல் கதையை மாய எதார்த்தத் தன்மையோடு இந்நாவல் பேசியிருக்கிறது. வருண், ஜானு வழியாக நகரும் கதை நாடுவிட்டு நாடு பயணித்து இலங்கையில் மையம் கொண்டு அங்கேயே நிறைவடைகிறது. தாய்நாட்டின் மீதான விருப்பம், விவசாயத்தின் மீதான நாட்டம் எனக் கதை தமிழ்ப் பாரம்பரியத்தைத் தேடிப் பயணிக்கிறது. அதற்கு மாயாவாதமும் விறுவிறுப்பும் சிறப்பாகவே கைகொடுத்துள்ளது. ஒரு துப்பறியும் நாவலை வாசித்த அனுபவம். அடுத்த என்ன? என்னும் எதிர்பார்ப்பை ஒவ்வொரு அத்தியாயத்திற்குள் மட்டுமல்லாமல் ஒவ்வொரு அடியிலும் ஏற்படுத்தி நகரும் நாவல் அங்கங்கே ஆசிரியரின் மதிப்பீடுகளையும் விமர்சனங்களையும் விதைத்துச் செல்கிறது. உணவு தான் மனிதனை உயிர்வாழ வைக்கும். இரும்புகளால் அதைச் செய்யமுடியாது. விவசாயிதான் மானிடத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் காலக்கோட்டில் தன்னைத் தனித்துவமாகக் காட்டிச்செல்வான் என்ற கருத்தை உறுதிசெய்யும் நாவல் இது. கௌரி அனந்தன், இலங்கையில் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். தற்போது கொழும்பிலும் சிங்கப்பூரிலும் வசித்துவருகிறார். கலைத்துறையில் ஈடுபாடு கொண்ட இவர் கனவுகளைத் தேடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நாவலை நவம்பர் 2015இல் வெளியிட்டவர். இது இவரது இரண்டாவது நாவல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61297).

11844

மறையாத சூரியன்: நாவல். மலரன்னை (இயற்பெயர்: அற்புதராணி காசிலிங்கம்). மாங்குளம்: மலரன்னை வெளியீடு, மலராலயம், கொல்லர் புளியங்குளம், 1வது பதிப்பு, மார்கழி 2016. (யாழ்ப்பாணம்: ஆரு கிறின்டேர்ஸ், 453, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு).

x, 145 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-43209-1-8.

கச்சாயில் இரத்தினம் என்னும் பழம்பெரும் எழுத்தாளரின் புதல்வியான மலரன்னை தன் மகனின் வாழ்வை அவன் மறைந்து 24 ஆண்டுகளின் பின்னும் நினைவு குலையாமல் ஒரு நாவலாகப் படைத்திருக்கிறார். இது ஈழத்துப் போர் இலக்கியத்துக்கு "போர் உலா" என்ற நுலைத் தந்த மலரவன் என்ற ஈழவிடுதலைப் போராளியின் கதையே இந்நாவல். அப் போராளியின் சிறுவயது முதல் பின்னாளில் அவன் விடுதலைப்போராட்டத்தில் ஈடுபாடுகொண்டு, ஒரு போராளியாகி மாவீரனானது வரையில் அவனது வாழ்வின் பல்வேறு சம்பவங்களையும் இதய சுத்தியுடன் பாசாங்கின்றிப் பதிவுசெய்திருக்கிறார் மலரன்னை. ஒரு போராளிக் குடும்பத்தின் சமூகவியல் வாழ்வியல் ஆய்வுக்கு இந்நாவல் துணைபுரியும்.

11845

மிட்டாய் மலை இழுத்துச்செல்லும் எறும்பு (நாவல்). ராஜகவி ஏ.சீ. ராகில். தமிழ்நாடு: அகநாழிகை பதிப்பகம், 26, ஜெயராமன் தெரு, கோகுலபுரம், செங்கல்பட்டு 603001, 1வது பதிப்பு, ஜனவரி 2016. (சென்னை 5: சாயி தென்றல் பிரின்டர்ஸ்).

112 பக்கம், விலை: இந்திய ரூபா 110., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-84921-05-7.

ஈழத்தின் கிழக்கு மாகாணத்தில் நிந்தவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் ஏ.சீ. ராகில், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு தற்பொழுது சீசெல்ஸ் நாட்டில் வசிக்கிறார். இவரது முதலாவது நாவல் இது. இந்த நாவலின் கதாநாயகன் குமார் ஒரு கவிஞர்/ஆசிரியர். தற்செயலாக, கவிதையில் ஈடுபாடுகொண்ட நர்மதாவைச் சந்திக்கிறான். அவளது இலக்கிய ஈடுபாடும் அழகும் அவள்மீது அவனுக்குக் காதலை ஏற்படுத்துகின்றன. குமாரின் உறவுப் பெண்ணான பூரணி அவனை மிகவும் விரும்பிய போதும் நர்மதா மீது கொண்ட நேயத்தினால் அவளது விருப்பத்தை அவனால் ஏற்க முடியவில்லை. ஆனால் நர்மதா வேறு ஒருவனை மணம்முடிக்க வேண்டிய சூழ்நிலை குமாருக்குத் தெரிய வரவே, ஏற்கெனவே மாப்பிள்ளை பார்த்துவிட்டமையால் அவளை மணக்க விரும்பிய தனது பிந்திய முடிவை அவனால் நிறைவேற்ற முடியாமல் வருந்த நேரிட்டது. பலத்த விரக்தி நிலைக்குள்ளாகிய குமார், பின்னர் தெளிவடைந்து இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுகின்றான். இறுதியில் பூரணியை மணக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது விருப்பமும் நிறைவேறுகின்றது. இந்நாவலில் குமார், நர்மதா பூரணி இக்பால் அவர் மனைவி நபீசா, குமாரின் தாய், பூரணியின் தாய் ஆகிய கற்பனைப் பாத்திரங்களுடன் கலாநிதி துரை மனோகரன் என்னும் உண்மைப் பாத்திரமும் வருகின்றது. (பேராசிரியர் துரை மனோகரன், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவராக பணியாற்றியவர்). (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61491).

11846

மூன்றாம் முத்தம்: குறுநாவல். அரியாலையூர் மிஷாந்தி செல்வராஜா. யாழ்ப்பாணம்: நாவலர் கலாசார மண்டபம், 1வது பதிப்பு, மே 2015. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், முத்திரைச் சந்தி, நல்லூர்).

(14), 51 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ.

வடமாகாண விவசாய அமைச்சில் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றும் அரியாலையூர் மிஷாந்தி செல்வராஜாவின் முதலாவது நாவல் படைப்பு இது. விரிவான நாவலாக உருப்பெறக்கூடிய ஒரு களம் இங்கு குறுநாவலாகக் குறுகிநிற்கின்றது. யுத்த அனர்த்தம் தோற்றுவித்த வாழ்வின் அவலநிலையில் அடிபட்டுப்போன சமூகத்தின் பதச்சோறாக வள்ளியம்மை என்ற பாத்திரம் சித்திரிக்கப்படுகின்றது. வள்ளியம்மையின் மகளான வித்தியா பல ஏக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் மனதில் சுமந்துகொண்டு கல்வியே கருந்தனமென வாழ்பவள். கதையின் போக்கில் பல சுவாரஸ்யமான திடீர் திருப்பங்களின் பின், முன்னர் காணாமற்போயிருந்த வித்தியாவின் தந்தையும், அண்ணனும் எதிர்பாராதவிதமாக இவர்களுடன் இணைகின்றனர். பந்த பாசங்களில் திளைத்து வித்தியாவின் குடும்பத்தினர் மகிழ்வதாக கதை முடிகின்றது. காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் இப்படியான திடீர் திருப்பங்களின் மூலமாவது மீளக் கிடைக்க மாட்டார்களா என்று ஏங்கும் தாயக உறவுகளின் எதிர்பார்ப்பே இங்கு இக்குறுநாவலை இயக்குகின்றது.

11847

யாழிசை: நாவல். சிவ.ஆரூரன். அல்வாய்: ஆ.சிவலிங்கம், விமானப் பொறியியலாளர், நிலாவில், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, மார்ச் 2015. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், முத்திரைச் சந்தி, நல்லூர்).

(6), 400 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 978-955-97102-4-0.

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து 8 ஆண்டுகள் கடந்த நிலையில் போருக்குப் பின்னரான வாழ்க்கை மற்றும் சமூக நிலைமைகள் பற்றி பேசுகின்ற இலக்கியப் படைப்புகள் பல வெளிவந்தவண்ணமுள்ளன. அந்த வகையில், முன்னாள் போராளிகளான பெண்களின் வாழ்க்கைப் போராட்டத்தை சித்திரிக்கும் விதத்தில் யாழிசை வெளிவந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட இந்த நாவல், இலக்கிய உலகில் பலருடைய கவனத்தையும் ஈர்த்துள்ளது. இந்த நாவலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய சிவலிங்கம் ஆரூரன் ஒரு பொறியியல் பட்டதாரி. மெகசின் சிறைச்சாலையில் கடந்த 8 ஆண்டுகளாக "அரசியல்" கைதியாக தடுத்துவைக்கப்பட்டுள்ள சிவ ஆரூரனின் முதல் இலக்கிய முயற்சி இந்த நாவல். சிறைச்சாலையில் நூல் வாசிப்பு மூலம் பெற்ற இலக்கிய அறிவையும் வாழ்க்கை அனுபவத்தையும் கொண்டு அவர் இந்த நாவலை எழுதியுள்ளார். யாழிசை நாவலின் கதாநாயகி சமூகத்திலே படுகின்ற துன்பங்களையும், கஸ்டங்களையும் இந்தக் கதையின் ஊடாகக் காட்டுகின்ற நாவலாசிரியர், போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களின் இன்றைய சமூக வாழ்க்கையை குறியீடாக சித்திரித்திருக்கின்றார். 2015ஆம்ஆண்டுக்கான சிறந்த தமிழ் நாவலாகத் தேர்வுபெற்ற இந்நூல் அரச சாகித்திய மண்டல விருதினை 2016இல் பெற்றது. அதேவேளை இந்நாவலின் இரண்டாவது பதிப்பு 2017இல் குமரன் பதிப்பகத்தினரால் அச்சிடப்பெற்று அவ்வாண்டின் வாசிப்பு மாதத்தை யொட்டி இலங்கையின் முக்கிய பாடசாலை நூலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

11848

வதங்காத மலரொன்று: குறுநாவலும் ஒரு பக்கச் சிறுகதைகளும். மாத்தறை ஹஸீனா வஹாப். இராஜகிரிய: தமிழ்மன்றம் (கல்ஹின்ன), இல. 10, நாலாவது லேன், கொஸ்வத்தை வீதி, 1வது பதிப்பு, ஜூலை 1992. (சென்னை 600 034: அரோ பிரின்டர்ஸ், இல.73, வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்).

(5), 83 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 17.5x12 சமீ.

மாத்தறை ஹஸீனா வஹாப் எழுதிய வதங்காத மலரொன்று என்ற குறுநாவலும், பன்னிரு குறுங்கதைகளும் (ஒரு பக்கச் சிறுகதைகள்) இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இதிலுள்ள சிறுகதைகள் - உபாயங்கள், தீர்மானம் தீர்க்கமான தல்ல, உறங்காத உண்மை, நாடகமே உலகம், அறுவடை, பரிகாரங்கள், சந்தேகம் என்பது, ஆசைகள், வழி தெரியாதவன், விடிவை நோக்கி, பெரிய குறை, தடுமாற்றம் ஆகிய தலைப்புகளில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13590).

11849

விடியலைத் தேடி. பரம் ஜி.ஞானேஸ்வரன். லண்டன்: நாழிகை, Pannews Limited, 123 Twyford Road, Harrow, Middlesex HA2 0SJ, 1வது பதிப்பு, மார்ச் 2017. (சென்னை 14: கப்பிட்டல் இம்ப்ரஷன்).

160 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஈழப்போரினால் புலம்பெயர்வுக்குள்ளான தமிழ்மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் ஒரு குடும்பத்தை எவ்வாறெல்லாம் பாதிக்கின்றது என்பதை மிக யதார்த்தமாக விபரிக்கும் திரைக்கதைப் பிரதி இது. பொதுவான திரைக்கதைப் பிரதிகளுக்குள் அடங்காது, புதிய வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. சம்பவங்கள் காட்சிவாரியாகப் பிரிக்கப்பட்டு, கதாபாத்திரங்களின் எண்ண ஓட்டங்களும் உணர்வுகளும் இதில் விபரிக்கப் பட்டுள்ளன. அதனால் ஒரு நாவலைப் படிக்கும் உணர்வினை இத்திரைக்கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகரிடம் ஏற்படுத்துகின்றது. நூலாசிரியர் பிரித்தானியாவில் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புக் கலையை முறைப்படி கற்றவர். கனடாவில் வெகுகாலமாக ஊடகத்துறையில் முக்கிய பங்களிப்புகளை நல்கிவருபவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61626).

11850

வீசிய புயல்: நாவல். நவாலியூர் நா.செல்லத்துரை (புனைபெயர்: நவாலியூரான்), வி.பி.தனேந்திரா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: யாழ்.ராதவல்லி வெளியீடு, அரியாலை மேற்கு, 1வது பதிப்பு, சித்திரை 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(2), 128 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-44788-0-2.

கலை இலக்கியத்துறையில் 50 ஆண்டுகளுக்குமேல் அறியப்பெற்றவர் நவாலியூர் நா.செல்லத்துரை. குடும்ப வாழ்வில் உறவுகளால் வரும் சுகமும் துக்கமும் எப்படியெல்லாம் வரும், அவற்றினால் ஏற்படும் விளைவுகள், மனிதனின் மன்னிக்கும் மனப்பாங்கு போன்றவை சிறப்பாக நாவலில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. வட்டார வழக்குச் சொற்கள் ஆங்காங்கே இடம்பெறும் இந் நாவலில் நேர்த்தியானதும் இரசனைச் சிறப்பு மிக்கதுமான நடை கையாளப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234254).

11851

வீடு நெடும் தூரம். அ.இரவி. சென்னை 600106: பரிசல் புத்தக நிலையம், பழைய எண் 96, ஜெ.பிளாக், நல்வரவுத் தெரு, எம்.எம்.டீ.ஏ. காலனி, 1வது பதிப்பு, ஜுன் 2012. (சென்னை 600005: கணபதி பிராஸஸ்).

238 பக்கம், விலை: இந்திய ரூபா 160., அளவு: 21x14 சமீ.

ஈழவிடுதலைப் போராட்ட காலப் பின்புலத்தில் எழுதப்பட்ட நாவல். ஆசிரியரின் அரசியல் பயணத்தின் அனுபவப் பகிர்வாக எழுந்த புனைவு. அருணாசலம் இரவி யாழ்ப்பாணம் அளவெட்டியில் 1960இல் பிறந்தவர். மகாஜனாக் கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பயின்று இலங்கையில் பத்தாண்டுகள் ஆசிரியப் பணியாற்றியபின் பிரித்தானியாவுக்குப் புலம்பெயர்ந்தவர். புதுசு, சரிநிகர், புலம், ஒரு பேப்பர் ஆகிய இதழ்களில் ஆசிரியர்குழுவில் பணியாற்றியவர். ஐ.பீ.சீ. தமிழ் வானொலி, ரி.ரி. என். தொலைக்காட்சி ஆகிய ஊடகங்களின் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணியாற்றியவர்.

894.8(51) மொழிபெயர்ப்பு நாவல்கள், குறுநாவல்கள்

11852

அஜந்தா. கே.ஏ.அப்பாஸ் (மூலம்), கே.கணேஷ் (தமிழாக்கம்). சென்னை 17: குயிலன் பதிப்பகம், 82, பாண்டி பஜார், தியாகராய நகர், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1964. (சென்னை 14: முல்லை அச்சகம், 258, பைக்கிராப்ட் ரோடு).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54 பக்கம், விலை: இந்திய ரூபா 1.00, அளவு: 18.5x12.5 சமீ.

இந்தியப் படைப்பாளி கே.ஏ.அப்பாஸ் அவர்களின் குறுநாவலான அஜந்தா, கே.கணேஷ் அவர்களின் கைவண்ணத்தில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. முற்றுப்பெறாத குகையில் ஒலித்துக்கொண்டிருக்கும் புத்த பிக்குவின் உளியோசை, பரிபூரணத்துவத்தை நோக்கி முன்னேற மனிதன் பாடுபடவேண்டுமென்ற பெரிய நோக்கத்தைப் போதிக்கின்றது. கே. கணேஷ் (மார்ச் 2, 1920-ஜுன் 5, 2004) இலங்கையின் மலையகத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவர். கண்டியில் உள்ள அம்பிட்டி என்னும் இடத்தில் பிறந்த இவர், கண்டி புனித அந்தோனியார் கல்லூரியிலும், பின்னர் மதுரை தமிழ்ச் சங்கத்திலும், திருவையாறு ராஜா கல்லூரியிலும் கல்வி கற்றார். நவசக்தி, லோகசக்தி போன்ற தமிழக இதழ்களில் கவிதைகள் எழுதினார். 1940களில் மணிக்கொடி இதழில் இரண்டு சிறுகதைகள் எழுதியுள்ளார். வீரகேசரி, தேசாபிமானி ஆகியவற்றில் சிறுகதைகள் எழுதினார். 1940களின் பிற்பகுதியில் வீரகேசரியில் ஆசிரியர் குழுவிலும், 1950களில் சுதந்திரனில் செய்தியாசிரியராகவும் பணியாற்றினார். கணேஷ் தமிழகத்திலும் இலங்கையிலும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை ஆரம்பிப்பதில் பங்காற்றியவர். 1940களின் நடுப்பகுதியில் இலங்கை வந்த எழுத்தாளர் முல்க்ராஜ் ஆனந்த் முன்னிலையில் இலங்கை எழுத்தாளர் சங்கத்தை ஆரம்பித்தார். சுவாமி விபுலாநந்தரைத் தலைவராகக் கொண்ட இச்சங்கத்தின் செயலாளராக கணேஷ் விளங்கினார். 1946 இல் இலங்கையில் "பாரதி" என்ற முற்போக்குக் கலை இலக்கிய இதழை கே. இராமநாதனுடன் இணைந்து தொடங்கி 1948 வரை நடத்தினார். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 887).

11853

மூன்று பாத்திரங்கள் (சிங்கள நாவல்). கே.ஜயதிலக (சிங்கள மூலம்), தம்பிஐயா தேவதாஸ் (தமிழாக்கம்). சென்னை 600098: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டெட், 41-பி, சிட்கொ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், 1வது பதிப்பு, ஜுன் 1979. (சென்னை 600098: நியூ செஞ்சுரி பிரின்டர்ஸ்).

(4), 108 பக்கம், விலை: இந்திய ரூபா 4.00, அளவு: 18x12 சமீ.

27.6.1926 இல் கம்பஹா, கண்ணிமஹர கிராமத்தில் பிறந்த கே.ஜயதிலக மஹகமசேகர மஹா வித்தியாலயம் என்று அழைக்கப்படும் கிராமத்துப் பாடசாலையிலே தனது ஆரம்பக் கல்வியைப்பெற்றார். 1941 இல் நான் பாடசாலை மாணவனாக இருந்த போதே ஒரு கவிதைத் தொகுப்பை உருவாக்கி அதை 1970 ஆம் ஆண்டு வெளியிட்டார். 1959 ஆம் ஆண்டிலேயே இவரது முதல் நாவல் வெளிவந்தது. "பராஜிதயோ" (தோற்றுப் போனவர்கள்) என்ற இந்த நாவல் வெளிவந்தது. இதனை அடுத்து இவர் எழுதி 1970 இல் வெளியிட்ட "சரித்த துனக்" என்னும் நாவலே இங்கு மூன்று பாத்திரங்கள் என்ற தலைப்பில் தமிழாக்கம் கண்டுள்ளது. வாசகர்களினதும் விமர்சகர்களினதும் பெரும் வரவேற்பை பெற்ற மூலநாவல், தற்போது அதன் இருபதாவது பதிப்பையும் தாண்டிவிட்டது. (இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24482).

11854

ஹாத்திம்தாய் பாகம் 1. ஸீ.எம்.ஏ.அமீன். கலகெடிஹேன: ரேஷ்மா பதிப்பகம், 348/1, வரபலான வீதி, திஹாரிய, 2வது திருத்திய பதிப்பு, ஒக்டோபர் 2004, 1வது பதிப்பு, 1997. (கொழும்பு 11: நிசான் பிரின்டர்ஸ், 64N, பீர் சாஹிபு வீதி).

(6), 82 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 19.5x13.5 சமீ., ISBN: 955-95661-8-0.

ஹாத்திம்தாய். ஸீ.எம்.ஏ.அமீன். கலகெடிஹேன: ரேஷ்மா பதிப்பகம், 348/1, வரபலான வீதி, திஹாரிய, 1வது பதிப்பு, 1997. (கொழும்பு: க்விக் கிராப்பிக்ஸ் பிரின்ட்).

(6), 82 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 19.5x13.5 சமீ., ISBN: 955-95661-3-X.

ஹிந்தி மொழியில் வெளிவந்த ஹத்திம் தாயீ என்ற நாவலின் தழுவலாக இந் நூல் வெளிவந்துள்ளது. ஹுஸ்ன்பானு என்ற அழகிய இளநங்கை தனது ஏழு கேள்விகளுக்கும் பதில் அளிப்பவரையே மணம் முடிப்பதாகக்கூறி அக்கேள்விகளை ஒரு கற்றூணில் பொறித்து வைக்கிறாள். அவளை நாடி வந்த பலரும் அக்கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாது ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர். குவாரிஸ்ம் நாட்டு இளவரசனான முனீர்சானியும் அவர்களுள் ஒருவன். பதில் தெரியாத சோகத்தில் விரக்தியுடன் காடுகளில் அலைந்து புலம்பித் திரிந்த அவனை அங்கு வேட்டையாட வந்த யெமன் நாட்டு இளவரசன் ஹாத்திம் சந்தித்து அவனுக்கு உதவ முன்வருகிறான். அதன் படி முதலிரு கேள்விகளுக்கும் பதிலளிப்பது வரையில் இந்நூலின் முதலாம் பாகம் வளர்கிறது. இந்நூலின் இரண்டாம் பாகம் 1999இல் வெளிவந்தது. நூல்தேட்டம் பதிவிலக்கம் 7821. (இந்நூல் இலங்கைத் தேசிய நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119005).

894.8(6) பொது இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வு

11855

ஆன்மீகமும் விழுமியங்களும். இராகி (இயற்பெயர்: இரா.கிருஷ்ணபிள்ளை). காரைதீவு -2 (கிழக்கு மாகாணம்): இரா.கிருஷ்ணபிள்ளை, மலரகம், நடராஜானந்தா வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (காரைதீவு 12: நிதுஸ் ஒப்செற் அச்சகம்).

iv, 76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x15 சமீ.

இந்நூலிலுள்ள 19 கட்டுரைகளும் அறக்கருத்தை அடிப்படையாகக் கொண்ட கட்டுரைகளாகவும், மத விழுமியங்களை மலரவைக்கும் கட்டுரைகளாகவும் இடம்பெற்றுள்ளன. வாழ்க்கைக்கு வழிகாட்டும் புராணங்கள், பக்திக்கு வித்திட்ட பாவையர், மகேசனின் மனம் கவர்ந்தவர், இயற்பகையாரா சிறுத்தொண்டரா?, ஓம் உணர்த்தும் உண்மைப் பெயர், ஒன்றே குலம் ஒருவனே தேவன், பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணமும் வரலாற்றுப் பதிவுகளும், சைவம் விளக்கும் சான்றுகள், கலைமகளும் கருப்பொருள்களும், பாரதி கண்ட சக்தி, நாவலரும் விபுலாநந்தரும், தேசிய உணர்ச்சியும் கவிதைகளும், பெண்கள் அன்றும் இன்றும், போதை வஸ்துக்கள், சுனாமி தந்த வடுக்கள், தற்கால சமூக அழிவுகள், மக்கள் தொடர்பாடலும் ஊடக சுதந்திரமும், மோதலை விடுத்து எதிர்காலத்தை நோக்குவோம், அனர்த்தங்களின்போது தேசிய தலைமைத்துவத்தின் பங்கு, மனிதாபிமான விழுமியங்களும் நிறைவான மனிதர்களும் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47442).

11856

இலக்கியச் சிமிழ். நயினை கி.கிருபானந்தா. யாழ்ப்பாணம்: நயினை கி.கிருபானந்தா, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(3), 44 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17.5x12 சமீ.

கவிஞர் காரை செ.சுந்தரம்பிள்ளை அவர்களின் நினைவாக, யாழ். இலக்கிய வட்டச் செயலாளர் நயினை கி.கிருபானந்தா அவர்களால் எழுதப்பட்ட இந் நூல் பல்வேறு சுவைமிகு இலக்கியக் குறிப்புகளின் தொகுப்பாகும். தான் படித்துச் சுவைத்த இலக்கிய நூல்களின் தேர்ந்த குறிப்புகளை இங்கு படையலாகத் தந்துள்ளார். பாரதியின் காணி நிலம், குறளையும் குறுக்கியவர், தமிழன் கணக்குப்போட்டு வாழ்பவனா? உப்பிட்டவரை உள் அளவும் நினை, இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? பந்திக்கு முந்து படைக்குப் பிந்து, தமிழறிவோம், குதிரையை விட்டுவிடுவோம்-குதிரை வைத்துக்கொள்வோம், நட்பு, நிலவுக்கு ஒளிக்கலாம், பேயின் பேராசை, தையல் சொற்கேளேல் எனினும் ஔவை சொற்கேளீர், தேன் வந்து பாயுது காதினிலே, நகையினால் விளைந்த காவியங்கள், கண்டது கற்போம், கல்கண்டு, மோதிரக் கையால் ஒரு குட்டு, பிணை மானும் துணை மானும், முப்பாலில் பனை, உயர்ந்த உள்ளம் உயர்ந்த இடம், புலவர்களை பாதுகாத்த புரவலர்கள் புகழ் ஏந்தி நிற்கின்றார்கள், கள்ளர் மறவர் அகம்படியர், ஔவையார் உண்ட விருந்து, மிக மெல்லிய உள்ளம் கொண்ட பாவலர்கள், ஔவையும் உவமையும், சதுரர், நாயைக் கண்டால் கல்லைக் காணேன் கல்லைக் கண்டால் நாயைக் காணேன், தாடி வைத்திருந்தாரா திருவள்ளுவர்? கம்பரும் இளங்கோவும் தோல்வி அடைந்த இடங்கள், ஏமாங்கத நாட்டின் சிறப்பு, கம்பன் காட்டும் நாகரீகம் ஆகிய குறுந்தலைப்புகளில் ஏராளமான சுவைமிகு குறிப்புக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

11857

இலக்கியத்தில் மருத்துவக் கருத்துக்கள். இ.பாலசுந்தரம். யாழ்ப்பாணம்: நாட்டார் வழக்கியல் கழகம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1990. (யாழ்ப்பாணம்: மேர்க்குரி அச்சகம்).

85 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 24x18 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க இலக்கியத்தில் மருத்துவக் கருத்துக்கள் 1, சங்க இலக்கியத்தில் மருத்துவக் கருத்துக்கள் 2, திருக்குறளில் மருத்துவக் கருத்துக்கள், ஆசாரக் கோவையில் ஆரோக்கிய வாழ்வுப் போதனைகள், இலக்கியத்தில் மருத்துவம்: ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், திருமந்திரத்திற் கரு உற்பத்திபற்றிய கருத்துக்கள், திருமந்திரம் கூறும் யோகநெறியும் ஆரோக்கிய வாழ்வும், திருமந்திரத்தில் உடல்பற்றிய கருத்துக்கள், சித்தர் பாடல்களில் மருத்துவக் கருத்துக்கள், சோழர் சாசனத்தில் மருத்துவச் செய்திகள் ஆகிய பத்துக் கட்டுரைகளின் வழியாக இந்நூல் தமிழ் இலக்கிய நூல்களில் சொல்லப்பட்ட தமிழ் மருத்துவம் சுகநலம் சார்ந்த கருத்துக்களை எடுத்துக்கூறுகின்றது. கலாநிதி இ.பாலசுந்தரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். பின்னாளில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்துசென்று அங்கும் இலக்கிய அறிவியல் பணியாற்றிவருகின்றார்.(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11145).

11858

கட்டுரைக் களஞ்சியம். முகில்வண்ணன். (இயற்பெயர்: வேலுப்பிள்ளை சண்முகநாதன்). கல்முனை: கண்மணி பிரசுரம், நெசவுநிலைய வீதி, பாண்டிருப்பு, 1வது பதிப்பு, மார்கழி 2014. (தெகிவளை: ஏ.ஜே.பதிப்பகம்).

x, 11-209 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-54011-6-6.

"முகில்வண்ணனின் கட்டுரைக் களஞ்சியம்" என்ற அட்டைப்படத் தலைப்புடன் பிரசுரமாகியுள்ள இந்நூலில் ஆசிரியர்கள், மாணவர்களுக்குரிய வகையில் எழுதப்பட்ட 50 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. கடவுள் வணக்கம், அன்னையும் பிதாவும், தந்தை சொல், எழுத்தறிவித்தவன், மக்கள் கடன், பெற்றோர் பாவம், ஒழுக்கம், காலமறிந்து செய், போதும் என்ற மனம், கடமைப்படுதல், கோடி பெறும், ஊர்வாய், மதிப்பும் மரியாதையும், கடமையைக் கண்ணெனப் போற்றுவோம், ஒழுக்கம் வழுவா உள்ளம் வேண்டும், எல்லாம் அழிந்து போய்விடும், எல்லோருக்கும் கவலை ஒன்றே, ஆசானைக் கௌரவித்தல், மூவகை மனிதரும் நேரமும், குருவும் சீடனும், கடன் பட்டார் நெஞ்சம், பெற்ற மனம், அன்பே உலகமகா சக்தி போன்ற தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. 1985இல் எழுதப்பட்டு 1986இல் தினகரன் பத்திரிகையின் கல்வி அரங்கு என்னும் பகுதியில் தொடராக வெளிவந்தது. (இந்நூல் இலங்கைத் தேசிய நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 1001433).

11859

கட்டுரைக் கோவை: இரண்டாம் பாகம். நா.மாணிக்க இடைக்காடர். கொழும்பு 4: மங்கள வெளியீடு, 35, கின்றோஸ் அவென்யூ, 1வது பதிப்பு, ஜுன் 1990. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி).

viii, 138 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 21x14 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை நாகரிகம் எது?, மீண்டும் எலியாகுக, அக்கரைப் பச்சை, நட்புக்கும் பண்புக்கும் நல்லதோர் நாடு, சிறியதும் பெரியதும், ஊவா மாகாணத்தில் உலா வந்தேன், பிழையும் மன்னிப்பும், இந்து சமுத்திரத்தில் ஓர் இந்திர லோகம், இந்தோனேஷியாவில் இந்து கலாச்சாரம், பாடலுக்கும் ஆடலுக்கும் ஒரு பாலித்தீவு, காதல் முதலா கல்யாணம் முதலா?, துருக்கியில் முப்பது நாட்கள், முன்னேறிக்கொண்டிருக்கும் இங்கிலாந்து, மௌனத்தின் மாட்சி, உய்யும் வழி, வன்னியை வளர்த்த வணங்காமுடியோன், வடக்கிலே பனையும் தெற்கிலே பலாவும், உத்தர சிதம்பர நடராஜர் கோயில், நல்லதையே செய்யுங்கள், குருக்ஷேத்திரத்தின் பின், அந்த ரெயிலில் நானும் பிரயாணம் செய்தேன், எண்ணரிய கைவன்மையிருந்தால் எம் மண்ணிலும் சிறப்பாக வாழலாம், அம்பிகைபாகன் ஓர் அற்புத மனிதன், தானாடா விட்டாலும் சதை ஆடுகிறது, விவசாயத்துறையில் குடாநாட்டின் எதிர்காலம், நிபுணத்துவத்திற்கும் அப்பாற்பட்ட கோட்பாடுகள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 26 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10506).

11860

கதம்பக் கட்டுரைகள்: மொழி இலக்கியச் சிந்தனைகள். ஆ.வேலுப்பிள்ளை (மூலம்), முருகேசு கௌரிகாந்தன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xvii, 118 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-659-511-6.

பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்களின் நூல்கள் 1966 இலிருந்து வெளிவருகின்றன. இவர்களது நூல்களில் இடம்பெறாமல்போன கட்டுரைகளைத் தொகுத்து கதம்பக் கட்டுரைகள் நூல் வெளிவந்துள்ளது. பன்முகப்பட்ட இவரது கட்டுரைகள் அனைத்தையும் இலக்கிய ஆய்வு, புலமையோர் பணி, அறிவியல் நோக்கு, மொழி ஆய்வு ஆகிய நான்கு இயல்களின்கீழ் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இலக்கிய ஆய்வு என்ற முதற்பிரிவில் திருமாலை, காரணம்-சமாதானம்-சாட்டு, சிறுகதை-மணிக்கொடிக் குழு, புறநானூற்றுக்காலம் பொற்காலமா? திருக்குறள் ஒரு கண்டன நூல், பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்தின் தோற்றம் ஆகிய ஆறு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. புலமையோர் பணி என்ற பிரிவில் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர், அறிவு பரப்புவோனாக, ஆகிய இரண்டு கட்டுரைகளும், அறிவியல் நோக்கு என்ற பிரிவில் விஞ்ஞானமுறையில் கொள்கைகளின் தோற்றம், இலக்கியமும் இலக்கணமும் நேற்றும்-இன்றும்-நாளையும் ஆகிய இரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. மொழி ஆய்வு என்ற நான்காவது பிரிவில் தமிழில் நிறப் பெயர்கள், இலங்கைப் பூர்வகுடிகளும் சிவ வழிபாடும், மிகப் பழைய இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் மூன்று- சில குறிப்புகள், இலங்கைத் தமிழ்ச் சாசன வழக்காறுகள், ஈழநாட்டுத் தமிழும் செட்டிநாட்டுத் தமிழும், மட்டக்களப்புத் தமிழும் மலையாளமும் ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இத்தொகுப்பில் மொத்தம் 16 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11861

கருத்துரைக் கோவை. ஆ.சதாசிவம். வட்டுக்கோட்டை: ஆ.சதாசிவம், அராலி, 1வது பதிப்பு, 1959. (சென்னை 1: காக்ஸ்டன் அச்சகம், 41, சின்னத்தம்பி தெரு).

(8), 132 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 17.5x12.5 சமீ.

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் பண்டிதர் ஆ.சதாசிவம் அவர்கள் உதிரிகளாக எழுதி வெளியிட்ட பத்துத் தமிழியல் கட்டுரைகளின் தொகுப்பு. ஈழமும் தமிழும், வினோபாவின் கனவு, வானவெளிப் பயணம், ஏடுகாத்த கிழவர், எனது மேல்நாட்டனுபவம், பறம்புமலைப் பாவலன், இயற்கையின் விந்தை, வித்துவக் காய்ச்சல், தத்துவஞானி சுவைச்சர், தமிழிலக்கியமும் மக்கள் வாழ்க்கையும் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18351).

11862

சிலப்பதிகாரப் பாத்திரங்களும் கண்ணகி வழக்குரைப் பாத்திரங்களும்: ஒப்பியல் ஆய்வு. த.மேகராசா (புனைபெயர்: கவிஞர் மேரா). மட்டக்களப்பு: பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம், 1வது பதிப்பு, நவம்பர் 2015. (மட்டக்களப்பு: ஷெரோனி அச்சகம், கூழாவடி).

xi, 137 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-53621-4-6.

இந்நூலில் கண்ணகி வழக்குரையிலும் சிலப்பதிகாரத்திலும் வரும் பாத்திரப் படைப்புக்கள் ஆராயப்பட்டுள்ளன. சிலப்பதிகாரக் கதையின்படி கண்ணகி, மாதவி, கோவலன் ஆகிய மூன்று பாத்திரங்களும் முக்கியமானவை. இவை ஒப்பீட்டு நோக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய துணைப் பாத்திரங்களும் மனிதநேயப் பண்பினை அடிப்படையாகக்கொண்டு ஆராயப்பட்டுள்ளன. தமிழக காப்பியமும் ஈழத்துத் தமிழ்க் காப்பியமும், கதைப் போக்கு, கண்ணகியின் குணநலங்கள், மாதவியின் குணநலங்கள், கோவலனின் குணநலங்கள், மனிதநேயப் பாத்திரங்கள், ஆண் அதிகார பண்பாட்டு அரசியலும் இரு பெண் பாத்திரங்களும் ஆகிய ஏழு இயல்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

11863

திருக்குறள் ஆராய்ச்சி. திருக்குறள் மன்றம். கொழும்பு: திருக்குறள் மன்றம், 1வது பதிப்பு, டிசம்பர் 1955. (சென்னை 1: ஸ்ரீமகள் கம்பெனி).

222 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18x12 சமீ.

திருக்குறள் தொடர்பாக ஈழத்திலும், தமிழகத்திலும் வாழும் பதினான்கு தமிழறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இது. திருவள்ளுவர் கண்ட தமிழகம் (ஔவை சு.துரைசாமி), பெரியாரும் சிறியாரும் (அ.சதம்பரநாதச் செட்டியார்), மானம் (ச.சோமசுந்தர பாரதியார்), திருக்குறளும் சங்கநூல்களும் (க.அன்பழகன்), கள்ளும் சூதும் (செ.ரெ.இராமசாமிப் பிள்ளை), இருவேறு உலகத்து இயற்கை (சி.தேவி), ஒப்புரவு (ஞானம் இரத்தினம்), சான்றோன் யார்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞனா வீரனா? (மயிலை சீனி வேங்கடசாமி), பகைத்திறன் தெரிதல் (ஆ. கார்மேகக்கோன்), அரண் (கா.கோவிந்தன்), செம்பொருள் கண்டார் (உமை தாணு), நன்றியில் செல்வம் (அ.சே.சுந்தரராஜன்), வள்ளுவர் கண்ட நாடு (சுப.இராமநாதன்), சொல்வன்மை (ந.சேதுரகுநாதன்) ஆகிய 14 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 645).

11864

படைப்பும் படைப்பாளுமையும். சு.தவச்செல்வன். ஹட்டன்: சு.தவச்செல்வன், பெருவிரல் கலை இலக்கிய இயக்கம், இன்வெரி எஸ்டேட், டிக்கோயா, 1வது பதிப்பு, 2015. (அச்சக விபரம் தரப்படவில்லை).

176 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 22x14.5 சமீ. ISBN: 978-955-44552-2-1.

சு.தவச்செல்வனின் கட்டுரைகளின் தொகுப்பு. கொந்தளிப்பின் அரசியல் - கருணாகரன் உருவாக்குகின்ற சிவப்பு பொம்மைகள், மலையக இலக்கியம் - தெளிவும் மறைவும் தேடலும், மகா கவியும் மகா கவிதையும் - குயில் பாட்டில் பாரதியின் படைப்பாளுமை, கலையும் சமூகமும் - மலையகத்தில் பவளக்கொடி நாடக ஆற்றுகை, புதுமைப்பித்தனின் சாபவிமோசனம் - தொன்மமும் கட்டுடைப்பும், கதையும் கருத்தும் - பிரமிளா செல்வராஜாவின் கதைகளை முன்னிறுத்தி, தெளிவத்தை ஜோசப் சிறுகதைகள் - அகமும் புறமும், உடுக்கொலியும் ஒடுக்கப்பட்டோரின் குரல் வெளியும் - சிவராம் கரந்தின் "சோமன துடி" ஒரு பார்வை, பேராசிரியர் கைலாசபதி - படைப்பும் நடையும் ஒரு குறிப்புரை, மலையக இலக்கிய முன்னோடி - கோ. நடேசய்யர் ஆகிய பத்துக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

11865

பலதும் பத்தும்: கோப்பாய் சிவம் படைப்புக்கள். ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீநகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2016. (சுன்னாகம்: கஜாநந்த் பிரின்டர்ஸ், மானிப்பாய் வீதி, இணுவில்).

80 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4078-02-4.

கோப்பாய் சிவம் "பலதும் பத்தும்" பற்றி எழுதிய பத்திரிகைக் கட்டுரைகளின் தேர்ந்த தொகுப்பு. 1967இல் தனது 13ஆவது வயதில் கவிதை எழுதிப் பிரசுரமாகக் கண்டவர் இவர். தொடர்ந்த 50 ஆண்டுக் காலத்தில் சிறுகதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள், ஆன்மீகம், மேடைப்பேச்சு கவியரங்கம், பட்டிமன்றம், வானொலிப் படைப்புகள் என பல்துறைகளிலும் தன் பங்களிப்பை வழங்கியவர். உரைச் சித்திரங்களாக வானொலியில் ஒலித்த இவரது படைப்புக்கள் சிலவற்றின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. முத்திரைகள், நகை, புகழ், மரணம், நமது கல்விப் பாரம்பரியத்தின் இன்றைய நிலை, சொல்லு தமிழ் வளர்க்கும் பிள்ளைத் தமிழ், கவிதைப் போர்- பாரதி தரிசனம், தேனிலும் இனிய தேன்மொழி, ஈழத்துத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச் சஞ்சிகை வரலாற்றில் ஒரு இனிய பகுதி இளங்கீரனின் "மரகதம்", நகைச்சுவைப் பேட்டி ஆகிய தலைப்புகளில் கோப்பாய் சிவத்தின் பத்துப் படைப்பக்கள் இடம்பெற்றுள்ளன. (நூலின் மேலட்டையில் கோப்பாய் சிவம் கட்டுரைகள் என அச்சாகியுள்ளது). (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61238).

11866

மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள். அகளங்கன் (இயற்பெயர்: நா. தர்மராஜா). கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, வசந்தம் புத்தக நிலையம், இல.S44, 3வது மாடி, CCSM Complex, இணை வெளியீடு, சென்னை 600 002: சவுத் ஏஷியன் புக்ஸ், 6/1, தாயார் சாஹிபு 2வது சந்து, 1வது பதிப்பு, ஜூலை 1994. (சென்னை 600 041: சூர்யா அச்சகம்).

110 பக்கம், விலை: இந்திய ரூபா 17., அளவு: 18x12 சமீ.

பாரதியின் சுதந்திரப் பாடல்கள் பாரதியின் காலத்துக்கு மட்டுமன்றி உலகில் அடக்குமுறையும் அடிமைத்தனமும் இருக்கும்வரை உயிர்த்துடிப்புடன் வாழவல்லவை என்பதையும் உலகில் அடக்கி ஒடுக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்ட எந்த ஒரு நாடோ, இனமோ, சமூகமோ, வர்க்கமோ, விடுதலை கோரி போராடத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன என்பதையும் நூலாசிரியர் அழுத்திக் கூறியுள்ளார். இந்நூல் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையாகவும் இலகு நடையிலும் அமைந்துள்ளது. வீர சுதந்திரம் வேண்டி நின்றார்- பின்னர் வேறொன்று கொள்வாரோ, ஆயிரம் உண்டிங்கு ஜாதி, விதியே விதியே தமிழ்ச் சாதியை என் செய நினைத்தாய், போராளிகளைப் பிடிக்கும் ஆவல் ஆகிய நான்கு பகுதிகளாக இந்நூல் தேர்ந்தெடுத்த பாரதியார் சுதந்திரப் பாடல்களையும் அவற்றுக்கான விளக்க உரைகளையும் தாங்கி வெளிவந்துள்ளது.

11867

மஜீதின் பின்நவீன கதையாடல் மூன்று. மஜீத். அக்கரைப்பற்று: மஜீத், 1வது பதிப்பு, 2017. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன் ஒப்செட் பிரின்டர்ஸ்).

(4), 36 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

கிழக்கிலங்கைக் கவிஞர் மஜீத்தின் பின்வரும் மூன்று பின்நவீனத்துவ விளிம்புநிலைக் கதையாடல்களை (Minority Discourse) இந்நூல் கொண்டுள்ளது. முள்ளிவாய்க்காலும் நிலம் பெருக்கெடுத்த புதை குழிகளும்/சோனியனின் கதையின் (முஸ்லிம் தேசமும் மரணமும்) தனிமை/ நிலம் பெருக்கெடுத்த கதைகள் என்ற நூலிலிருந்து தற்செயலான சில பக்கங்கள்.

11868

மாந்தர் மாண்பு: வாழ்வியல் சிந்தனைகள். ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: கோப்பாய் சிவம் பாராட்டு விழாக் குழுவினர், ஸ்ரீநகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 1வது பதிப்பு, மார்ச் 2015. (சுன்னாகம்: கஜாநந்த் பிரின்டர்ஸ், மானிப்பாய் வீதி, இணுவில்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

viii, 120 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ.

மலரும் நினைவுகள், சக்தி பிறக்கட்டும், வாழ்க்கையின் இலட்சியம் இலட்சிய வாழ்க்கையே, ஆற்றுப்படுத்தும் அண்ணல்கள், உதவிகள் பலவிதம்-ஒவ்வொன்றும் ஒருவிதம், இரப்பவர்கள் மட்டுமா இரவலர்கள், வருவாய்க்கேற்ப வாழ்க்கையை அமைத்தல், எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்கள் தேறுதல்கள், நமது கல்விப் பாரம்பரியத்தின் இன்றைய நிலை, இது இவர்களுக்குத் தெரியாததேன், நுகர்வோரை நோக்காத வியாபாரங்கள், சமூக மனநோயாளர்கள், எத்தனை காலம்தான் ஏமாற்றுவார், கமலனும் விமலனும், தெருப்பயண ஞானம், இதய ராகங்கள், இளமை இலக்கிய நினைவுகள், தொடர்பாடல் வெற்றிபெற, சிந்தனை மேடை ஆகிய 19 தலைப்புகளில் கோப்பாய் சிவம் எழுதியுள்ள கட்டுரைகளின் தொகுப்பு. வித்யாபூஷணம், கலாபூஷணம் பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா அவர்களின் மணிவிழா மற்றும் கலாபூஷணம் விருது பெற்றமையை முன்னிட்டு 15.3.2015 அன்று இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

11869

முத்தமிழ். கனகசபாபதி நாகேஸ்வரன் (மூலம்), எஸ்.வை.ஸ்ரீதர் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக் குழு, நல்லூர், 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

x, 137 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-4745-01-8.

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழாவையொட்டி வெளியிடப்பெற்றுள்ள இந்நூல், அவர் எழுதிப் பல்வேறு ஊடகங்களிலும், மலர்களிலும் பிரசுரமான 13 தமிழ் மொழி, இலக்கியக் கட்டுரைகளை உள்ளடக்கியது. சப்பிரகமுவ பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளரும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வழிவழி அறங்காவலருமான கலாநிதி க.நாகேஸ்வரன் அவர்கள் இந்நூலில் 13 கட்டுரைகளை எழுதியுள்ளார். இக்கட்டுரைகளில் பல புதிய தகவல்களும் விளக்கங்களும் காணப்படுகின்றன. முத்தமிழ், செம்மொழி தமிழ், தமிழ் எழுத்துக் கலையின் தோற்றமும் வளர்ச்சி வரலாறும்- ஒரு மொழியியலாய்வு, செந்தமிழின் ஒலிமரபு, பரிபாடல், திருக்குறள்: தமிழருக்காக மட்டும் எழுதப்படாத முதல் தமிழ் நூல், ஒப்பற்ற அற இலக்கியம் திருக்குறள், தமிழ் இலக்கியங்களில் குறிஞ்சிக் குமரன், அப்பர் தேவாரம், இதிகாசங்கள் கூறும் விழுமியச் சிந்தனைகள், சோழ மன்னனின் ஆட்சி, தமிழ்க் கல்வியில் மொழிப் பிரயோகம், ஈழத்திலக்கியமும் சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறையும் ஆகிய 13 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

11870

முத்தமிழ்: இயல் இசை நாடகம்: சங்ககாலம் முதல். பொன்.தெய்வேந்திரன். வவுனியா: வவுனியா மாணவர் வட்டம், 1வது பதிப்பு, 2006. (வவுனியா: ஜீ.எச். அச்சகம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xiii, 162 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

முத்தமிழில் இயல், முத்தமிழ் இன்பம், முத்தமிழில் இசை, முத்தமிழில் நாடகம் தொகுப்பு ஆகிய ஐந்து இயல்களில் இந்நூல் விரித்து எழுதப்பட்டுள்ளது. வீரமும் காதலும் பிரிக்க முடியாதவாறு பிணைந்திருந்த சங்ககாலம் தொட்டு நவீன காலத்தின் தோற்றம்வரை என்றுமுள்ள தென்தமிழின் மூன்று அங்கங்களான இயல், இசை, நாடகம் என்பவற்றின் சாராம்சங்களை பகுதிகளாகப் பிரித்தும், விரித்தும் பரஸ்பர தொடர்புகளை ஒன்றின் துணை மற்றொன்றுடன் எவ்வாறு இணைகின்றன என்பதை அக்குவேறு ஆணிவேறாக ஆராய்ந்து இயைவு படுத்தியுள்ளார். இயல் பகுதியில் தொல்காப்பியர் முதல் சங்கப் புலவர்களது காவியக் காலக் குறிப்புகள் இராமாயணம் பற்றிய சிறப்புரைகள், பாரதி பற்றிய குறிப்புகள், தேவாரகாலப் பாடல்கள் போன்றன இடம்பெற்றுள்ளன. வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருதினைப் பெற்ற நூலாசிரியர் ஆசிரிய சேவையில் அரும்பணி ஆற்றியவர். இசைக்கலாமாமணி, சைவப்புலவர், கலைமாமணி, இலக்கியச் செல்வர் போன்ற பட்டங்கள் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

11871

வட அல்வை முருகேசனார் பன்முகப் பார்வை (கட்டுரைத் தொகுதி). மு.அநாதரட்சகன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: மு.இராஜவரோதயன், ஆனந்த கானம், ஆவரங்கால், புத்தூர், 1வது பதிப்பு, பெப்ரவரி 2005. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டேர்ஸ், இல. 424, காங்கேசன்துறை வீதி).

vi, 146 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

அமரர் க.முருகேசு வாத்தியார் வரலாற்றுப் பதிவுகள் (மு.அநாதரட்சகன்), தமிழீழத்தின் அம்பேத்கார் முதல்வர் முருகேசனார் (மா.க.ஈழவேந்தன்), இருள் சூழ்ந்த வேளை ஒளி தந்த விடிவெள்ளி (இ.சிவநேசன்), சமய, சமூக, இன விடுதலையின் குரல் (சுரேஸ் பிரேமச்சந்திரன்), முருகேசு மாஸ்டர் ஒரு தமிழ் வாத்தி அல்ல (புதுவை இரத்தினதுரை), யார் இந்த முருகேசு (சி.கிருஷ்ணபிள்ளை), முயற்சியினால் உயர்வுபெற்ற முன்னோடி (செ.சிவசம்பு), மனிதருள் ஒரு மாணிக்கம் (த.சின்னத்துரை தமிழரசு), எனது கிராமத்தின் முதல் உபாத்தியாயர் முதன்மை உபாத்தியாயர் (மு.செல்லப்பாக்கியம்), வட அல்வை முருகேசனாரின் வாழ்வும் பணிகளும் (சுகணா), என்னை உருவாக்கிய ஆசான் (சி.பத்மலிங்கம்) ஆகியவை உள்ளிட்ட பல்வேறு மனப்பதிவுகளினூடாக வட அல்வை முருகேசனாரின் வாழ்வும் பணிகளும் இந்நூலில் வெளிச்சமிடப்பட்டுள்ளன. மேற் குறிப்பிட்ட பிரமுகர்களுடன் க.நவம் (கனடா), சோ.பத்மநாதன், கோப்பாய் சிவம், மா.கருணாநிதி, செ.திருநாவுக்கரசு, கனகமனோகரன், நவாலியூர் நா. செல்லத்துரை, ஆழ்வார் காசிநாதர் யோகராஜா (சுவிஸ்), சி.கணேசமூர்த்தி, கவிஞர் வி.கந்தவனம் (கனடா), அ.க.த.கிருஷ்ணராசா, இ.வே.செல்வரட்ணம் (கனடா), சி.தெய்வேந்திரன், செ.சதானந்தன் ஆகியோரின் மனப்பதிவுகளும் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11872

வேரும் விழுதும். அகளங்கன் (இயற்பெயர்: நா.தர்மராஜா). மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64 கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, 2008. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

160 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 18x13 சமீ., ISBN: 978-955-8715-52-9.

அகளங்கன் எழுதிய இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு. 48ஆவது பிரியா பிரசுரமாக வெளிவந்துள்ளது. இதில் தாய்மை அது தெய்வீகம், உயிரினங்களிடமிருந்து மனிதன் கற்றவை, வீட்டுக்கு விளக்கு வைக்கும் விந்தைக் குருவி, ஔவையாரும் சமாதானத் தூதும், மாட்டு வண்டில் முதல்ஆகாய விமானம் வரை, எகலைவனின் கட்டை விரல், ஆச்சரியப்பட வைக்கும் அக்காலப் போர், காக்கைச் சிறகினிலே, கொலைக் களஞ் சென்ற இரு நிரபராதிகள், பாரதத்தில் பாஸ் நடைமுறை, பயன்படாத கல்வி, உருவறியாப் பிள்ளை அழுதது, விட்ட குறை தொட்ட குறை, படைத்தவன்மேல் கோபங்கொண்டு, தனக்குத்தானே இரங்கற்பா பாடியவர் ஆகிய சுவையான விடயத் தலைப்புகளில் அகளங்கனின் 15 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

மேலும் பார்க்க: 11313, 11604

894.8(621) இஸ்லாமியத் தமிழ், அரபுத்தமிழ் இலக்கியம்

11873

தமிழ் இலக்கியத்தில் முஸ்லிம் அடையாளம். றமீஸ் அப்துல்லா, க.இரகுபரன் (தொகுப்பாசிரியர்கள்). ஒலுவில்: மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xx, 219 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-627-115-7.

பேராசிரியர் ம.மு.உவைஸ் நினைவுக் கருத்தரங்க சிறப்பு வெளியீடாக இத்தொகுப்பு அமைகின்றது. இதில் வழியும் மொழியும் (எம்.எம்.உவைஸ்), தமிழிலக்கிய வரலாற்றில் இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் (கா.சிவத்தம்பி), தமிழில் இஸ்லாமிய இலக்கியம்: அதன் மொழியியல் தனித்துவம் (எம்.ஏ.நுஃமான்), இஸ்லாம் தந்த இலக்கியம் (மு.வரதராசன்), இசுலாம் தந்த இலக்கியம் (ச.வே.சுப்பிரமணியன்), அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ் (எ.எம்.எ.அஸீஸ்), இஸ்லாமியர் தமிழ்மொழிக்காற்றிய தொண்டு-1 (சு.வித்தியானந்தன்), இஸ்லாமியர் தமிழ்மொழிக்காற்றிய தொண்டு-2 (சு.வித்தியானந்தன்), இஸ்லாமியப் பக்திப் பாடல்கள் (சி.தில்லைநாதன்), இலங்கை இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாறு (க.இரகுபரன்), இலங்கை முஸ்லிம்களின் நவீன இலக்கியமும் இன அடையாளமும் (றமீஸ் அப்துல்லா) ஆகிய 11 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பின்னிணைப்புகளாக பேராசிரியர் ம.மு.உவைஸ் பற்றிய பல்வேறு அறிஞர்களின் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவை ஆன்ற அறிவும் அகன்ற உள்ளமும் (சி.தில்லைநாதன்), பேராசிரியர் ம.முஹம்மது உவைஸ் (கா.சிவத்தம்பி), இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வுகளும் பண்பாட்டுப் பங்களிப்பும் (எம்.எஸ்.எம்.அனஸ்), அகராதிப் பணியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் ம.மு.உவைஸ் (ராஹிலா ஷியாத்), உவைஸ் ஒர் அறிமுகம் (எஸ். எச்.எம்.ஜெமீல்) ஆகிய 5 கட்டுரைகளை பின்னிணைப்பில் காணலாம்.

894.8(63) சங்க இலக்கியங்கள் தொடர்பானவை

11874

அகநானூறு வசனம்: களிற்றியானை நிரை. ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை: ஒற்றுமை ஆபீஸ், தியாகராய நகர், 1வது பதிப்பு, 1938. (சென்னை: The Royal Printing Works).

116 பக்கம், விலை: இந்திய ரூபா 1.00., அளவு: 18.5x12.5 சமீ.

அகநானூறு சங்க காலத்தைச் சேர்ந்த எட்டுத்தொகை எனப்படும் தமிழ் நூல் தொகுப்பில் உள்ள ஒரு நூலாகும். இது ஓர் அகத்திணை சார்ந்த நூல் என்பதுடன் இதில் நானூறு பாடல்கள் அடங்கியுள்ளதால் இது அகநானூறு என வழங்கப்படுகிறது. நெடுந்தொகை என்ற பெயரும் இதற்கு உண்டு. இதில் அடங்கியுள்ள பாடல்கள் ஒரே புலவராலோ அல்லது ஒரே காலத்திலேயோ இயற்றப்பட்டவை அல்ல. இது பல்வேறு புலவர்கள் வெவ்வேறு காலங்களில் பாடிய பாடல்களின் தொகுப்பு ஆகும். எட்டுத் தொகை நூல்களுள் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய ஐந்தும் அகம் பற்றியன. இவற்றுள் அகம் என்னும் சொல்லால் குறிக்கப்படுவது அகநானூறு மட்டுமே. அகத் தொகையுள் நீண்ட பாடல்களைக் கொண்டமையால் இதனை, "நெடுந் தொகை" என்றும் கூறுவர். ந.சி.கந்தையாபிள்ளையினால் எழுதப்பட்டுள்ள இந்நூலில் முகவுரை, உரிப்பொருள் விளக்கம், களிற்றியானை நிரை, அருஞ்செய்யுட் பகுதிகள், மணிமிடை பவளம், நித்திலக் கோவை, பாயிரம் ஆகிய ஏழு இயல்கள் உள்ளன. அகநானூறு பற்றிய தெளிவான விளக்கத்தை இந்நூல் வழங்குகின்றது. (அமிழ்தம் பதிப்பக ந.சி.க. நூல் தொகுப்பில் 3வது நூலாகவும் இடம்பெற்றுள்ளது. இப்பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3384. இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 604.)

11875

அகநானூறு வசனம்: நித்திலக்கோவை. ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை: ஒற்றுமை ஆபீஸ், தியாகராய நகர், 1வது பதிப்பு, வைகாசி 1941. (சென்னை: ரோயல் பிரின்டிங் வேர்க்ஸ், மவுண்ட் ரோட்),

94 பக்கம், விலை: இந்திய ரூபா 12., அளவு: 18x12 சமீ.

அகநானூறு அகத்திணை சார்ந்த நூல் என்பதுடன் இதில் நானூறு பாடல்கள் அடங்கியுள்ளதால் இது அகநானூறு என வழங்கப்படுகிறது. இது பல்வேறு புலவர்கள் வெவ்வேறு காலங்களில் பாடிய பாடல்களின் தொகுப்பு ஆகும். இந்நூலில் அடங்கியுள்ள பாடல்கள் மிகக் குறைந்த அளவாகப் 13 அடிகளையும், கூடிய அளவு 31 அடிகளையும் கொண்டு அமைந்துள்ளன. அகத்தொகையுள் நீண்ட பாடல்களைக் கொண்டமையால் இதனை, "நெடுந்தொகை" என்றும் கூறுவர். இத் தொகையைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார் உருத்திரசன்மர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொகுப்பித்த மன்னன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியார். இத் தொகை பாடிய புலவர்கள் நூற்று நாற்பத்தைவர். அகநானூற்றுப் புலவர்கள் 146 பேர். அவர்களுள் 65 பேர் அகநானூற்றில் மட்டுமே பாடல் பாடியுள்ளார்கள். கடவுள் வாழ்த்துச் செய்யுளைத் தவிர்த்து இந்நூலில் 400 பாடல்கள் உள்ளன.இவை களிற்றியானை நிரை(1-120), மணி மிடை பவளம் (121-300), நித்திலக் கோவை (301-400) என மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ந.சி. கந்தையாபிள்ளை அவர்கள் நித்திலக்கோவையை தனியாகப் பிரித்தெடுத்து அதனை வசனநடையில் தருகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 0608).

11876

காலத்தை வென்ற காவிய மகளிர். நுணாவிலூர் கா.விசயரத்தினம். பிரித்தானியா: விஜே பப்ளிக்கேஷன், 35 Southborough Road, Bickley, Bromley, Kent BR1 2EA, 1வது பதிப்பு, 2015. (சென்னை 94: பி.வி.ஆர். ஆப்செட்).

viii, 172 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 978-0-9575862-2-2.

சங்க இலக்கியங்களில் காணப்பெற்ற பண்டைத் தமிழ் மகளிர் பற்றிய பெருமைபேசும் நூலாக இது அமைந்துள்ளது. மகாபாரத மங்கா மாண்புடை மகளிர், தொல்காப்பிய மகளிர், சிலப்பதிகாரத்தில் பவனிவரும் மகளிர், மணி மேகலையில் தோன்றும் மகளிர், சீவக சிந்தாமணியில் உலாவும் மகளிர், வளையாபதியில் வளையல் அணிந்த வனிதையர், குண்டலகேசி நூலின் கதாநாயகி குண்டலகேசி, கம்பராமாயணம் காட்டும் அரச மகளிர், பண்டைப் பாடல் பாடிய பெண்பாற் புலவர், பெண்பெருமை பேசும் சங்க இலக்கியங்கள், சங்க இலக்கியங்கள் பேசும் பெண் கூந்தற் பெருமை, ஆகிய பதினொரு ஆக்கங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 249097).

11877

சங்ககாலத் தமிழர் வாழ்வியல். நுணாவிலூர் கா.விசயரத்தினம். லண்டன்: Wijey Publication, 35, Southborough Road, Bickley, Bromley, Kent, 1வது பதிப்பு, 2016. (சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர்).

xxii, 138 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 978-0-9575862-3-9.

தமிழ் மொழிக்கு இலக்கண வரம்பை வழங்கிய முதல் நூலாக தொல்காப்பியம் கருதப்படுகின்றது. அகத்திய மாமுனிவரால் ஆக்கப்பட்ட அகத்தியம் என்ற தமிழ் இலக்கண நூலை அடியொற்றியே அவரது தலைமைச் சீடரான தொல்காப்பியரால் தொல்காப்பியம் எழுதப்பட்டது. முதலாம் தமிழ்ச்சங்கம் இருந்த பிரதேசம் கடல்கோளினால் அழிக்கப்பட்டபோது அகத்தியமும், அக்காலத்தைய தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களும் இல்லாது போயின. இந்நிலையில் இரண்டாம் தமிழ்ச்சங்க காலத்தில் எழுந்த தொல்காப்பியமே இன்று கைக்கெட்டிய முதலாவது தமிழ் இலக்கண நூலாக எம்மிடையே வாழ்கின்றது. தொல்காப்பியம் இலக்கண நூலாக வகைப்படுத்தப்பட்டபோதிலும், அதிலும் இலக்கியச் சுவை பெரிதும் காணப்படு கின்றது. இந்நூலாசிரியர் நுணாவிலூர் கா.விசயரத்தினம் அவர்கள், தொல்காப்பியத்தில் காணப்படும் இலக்கியச் சுவை பற்றியும் பிற சங்ககாலத் தமிழ் நூல்களின் சிறப்புகள் பற்றியும் இக்கட்டுரைகளில் குறிப்பிடுகின்றார். சங்ககாலத்தில் தமிழகத்தில் நிலவியிருந்த சமூக அமைப்புகள், ஒழுக்க விழுமியங்கள், தனிமனிதப் பண்புகள், கைக்கிளை, பெருந்திணை என்று ஏராளமான விடயங்கள் இந்நூலில் எளிமையான நடையில் வாசித்து வியக்கமுடிகின்றது. அறிவியல் பேசும் சங்க இலக்கியங்கள், மகளிர் மாண்பை மேம்படுத்திச் சூத்திரம் அமைத்தவர் தொல்காப்பியர், சங்க காலத் தமிழ் இலக்கியங்களில் மடலேறும் தலைவன், பண்டைத் தமிழரின் திருமணங்களும் பந்தி போசனமும், சங்க இலக்கியங்கள் காட்டும் பிரிவொழுக்க முறைகள், தலைவன் தலைவியர் உடன்போக்குக் காட்டும் சங்ககால இலக்கியங்கள், வாழ்வியல் வாய்ப்புக்கு வழி சமைத்தோர், களவழி நாற்பது விளக்கும் மறமேம்பாடு, புத்துணர்வும் புதுவாழ்வும் பேசும் புறநானூறு ஓர் ஒப்பற்ற அறிவுச் சுரங்கம், கதை கண்டே காப்பியங்கள், மக்கள் வாழ்வியல் பேசும் சீவகசிந்தாமணி, சங்க இலக்கியக் களவியற் பாடல்கள் வெளிக்கொணரும் அம்பலும் அலரும், தொல்காப்பியத் திணைகள் துறைகள் தூவும் தனிச்சிறப்பும் திகைப்பும் எனப் 13 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூலாசிரியர் நுணாவிலூர் கா.விசயரத்தினம், வடபுலத்தில் சாவகச்சேரி, நுணாவிலைப் பிறப்பிடமாகக்கொண்ட நூலாசிரியர், கணக்காய்வுத் திணைக்களத்தில் பணியாற்றி 1991இல் ஓய்வுபெற்றவர். 07.10.2017இல் லண்டனில் மறைந்த இத்தமிழறிஞர் எழுதிய இறுதி நூலாக இந் நூல் அமைந்துள்ளது.

11878

பரிபாடல் வசனம். நச.கந்தையாபிள்ளை. சென்னை: ஒற்றுமை ஆபீஸ், 1வது பதிப்பு, 1938. (மதராஸ்: த ரோயல் பிரின்டிங் வேர்க்ஸ், மவுண்ட் ரோடு).

vi, 114 பக்கம், விலை: ரூபா 1.00., அளவு: 18x11.5 சமீ.

பரிபாடல், சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகையுள் ஐந்தாவதாகவுள்ளது. பரிபாடலென்பது செய்யுள் வகையாற் பெற்றபெயராகும். சங்ககாலத்தில் வழங்கிய செய்யுட்கள் வெண்பா, அகவல், வஞ்சி, கலி என்னும் நான்கு பாக்களுமேயாகும். பரிபாடலென்பது, வெண்பா உறுப்பாகி இன்னபாவென்று உணராமல் பொதுப்பட நிற்கும் இயல்புடைய ஒருவகை இசைப்பாவாகும். இப்பாடலுக்குச் சிறுமை இருபத்தைந்து அடியும் பெருமை நானூறு அடியுமாகும். பரிபாடற் செய்யுட்களின் தொகை எழுபது. அவற்றுள் திருமாலுக்கு எட்டும் முருகவேளுக்கு முப்பத்தொன்றும் காடுகிழாளுக்கு ஒன்றும் வைகையாற்றுக்கு இருபத்தாறும் மதுரைக்கு நான்கும் உரியன. இருப்பினும் இப்பொழுது கிடைத்துள்ள திருமாலுக்குரிய பாடல்கள் ஏழு, முருகனுக்குரிய பாடல்கள் எட்டு, வைகைக்குரியவை ஒன்பது, மதுரைக்குரியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுமாக இருபத்தைந்து பாடல்களே. இவை மொத்தம் 2034 அடிகள் கொண்டவை. இந்நூலில் சங்கு, சமம், சந்தனம், சமழ்ப்பு, சனம், சரணம், சகடம், சலம் முதலிய எட்டுச் சகரமுதற்சொற்கள் வந்திருக்கின்றன. பழந்தமிழரின் பழக்கவழக்கம், கடவுட்கொள்கை, நீர்விளையாட்டு, முதலியவற்றை இந்நூல் சிறப்பாகக் கூறுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 601).

894.8(64) சமகால இலக்கிய ஆய்வுகள், கட்டுரைகள்

11879

ஆறு சிறுகதைகள் ஒரு பகுப்பாய்வு: ஈழக்கவி கட்டுரைகள். ஏ.எச்.எம்.நவாஷ். பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, கார்த்திகை 2015. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

iv, 118 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-4676-37-4.

வெலிமட, ஈழக்கவி ஏ.எச்.எம்.நவாஷ் அவர்களின் ஆறு ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்ட நூல். புதுமைப்பித்தனின் சிகரச்சாதனை "சாப விமோசனம்", வ.அ.இராசரத்தினத்தின் "தாய்" சிறுகதையின் தனித்துவம், இரு யுகமாற்றங்களை நிறுவும் ஜெயகாந்தனின் "யுகசந்தி" ஒரு விமர்சன அணுகல், என்.எஸ்.எம். ராமையாவின் "ஒரு கூடைக் கொழுந்து" ஒரு பகுப்பாய்வு, செ.கதிர்காமநாதனின் "வெறும் சோற்றுக்கே வந்தது" ஒரு அவதானிப்பு, மருதூர்க் கொத்தனின் "ஒளி" பற்றிய நுண்ணாய்வு ஆகிய ஆறு தலைப்புக்களில் இவ்வாய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு கட்டுரையிலும் அச்சிறுகதை தொடர்பான தகவல்கள் மாத்திரமன்றி சிறுகதையாசிரியர், கதைக்கான பின்புலம் என்பன வற்றையும் ஆழமாக ஆய்வுசெய்துள்ளார். இந்நூல் 54ஆவது ஜீவநதி வெளியீடாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61503).

11880

நாவல் இலக்கியம். சபா.ஜெயராசா. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

iii, 76 பக்கம், விலை: ரூபா 375., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-659-472-0.

இலக்கிய வெளியில் நிகழ்ந்த மிகப்பெரிய கண்டுபிடிப்பாக நாவல் அமைந்துள்ளது. சாமானியர்களின் பல குரல்களையும், பல கருத்தாடல்களையும், பன்முகக் கோலங்களையும் உள்ளடக்கிய அனைத்தும் தழுவிய வடிவமாக நாவல் மேலெழுந்துள்ளது. தமிழ்ச் சூழலில் தனித்தனி நாவலாசிரியர்கள் பற்றியும், தமிழ் நாவலின் வளர்ச்சி பற்றியுமே பெருமளவில் பேசப்பட்டு வந்துள்ள நிலையில் இந்நூல் நவீன திறனாய்வு நோக்கில் நாவலின் பரிமாணங்கள் பற்றியும், நாவல் வடிவத்தில் நிகழ்ந்த ஊடு தலையீடுகள் பற்றியும் 20 தலைப்புகளில் அமைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கட்டுரைகளின் வழியாக விபரிக்கின்றது. சமய நாவல்கள், வரலாற்று நாவல்கள், பெண்ணிய அறிவியல் நாவல்கள், உளவியல் நாவல்கள், துப்பறியும் நாவல்கள், திகில் நாவல்கள், எதிர் நாவல்கள், நாவலும் ஊடுநூலியமும், ஆங்கில நாவல்கள், பிரெஞ்சு நாவல்கள், ரூசிய நாவல்கள், வங்காள நாவல்கள், சிங்கள நாவல்கள், மலையாள நாவல்கள், வட்டார நாவல்கள், நாவலின் சமூகவியல், நாவலின் கலை நுட்பங்கள், சமூக நாவல்கள், நாவல்-ஒரு நெடுங்கோட்டு நோக்கு, நிறைவாக-நாவலின் உருமாற்றக் கோட்பாடு ஆகிய விரிவான தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

11881

பொருள்வெளி: ஆய்வுக் கட்டுரைகள். லறீனா அப்துல் ஹக். கெலி ஓய: லறீனா ஏ.ஹக், 1வது பதிப்பு, டிசம்பர் 2012. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

xx, 195 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 19x14 சமீ., ISBN: 978-955-98241-6-9.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளரான லறீனா அப்துல் ஹக் ஈழத்துத் தமிழ்க் கவிதைத் துறையிலும் திறனாய்வுத் துறையிலும் காத்திரமான பங்களிப்பை நல்கும் ஒரு அறிவுஜீவி. இந்தத் தொகுப்பில், ஏழு தலைப்புகளின் கீழ் அவரது ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. கலை இலக்கியங்களில் "பெண்" பற்றிய புனைவு: சில குறிப்புகள், கௌரி கிருபானந்தனின் மொழிபெயர்ப்புச் சிறுகதைகளில் வெளிப்படுத்தப்படும் பெண்ணின் விம்பம்: ஒரு பெண்ணியல் நோக்கு, ஈழத்துப் பெண் கவிஞர்களின் படைப்புகளில் பால்நிலை வெளிப்பாடு: ஒரு நோக்கு, கூண்டுப் பறவை பாடுவதேன் என நானறிவேன், போரும் கவிதையும்: மஞ்சுள வெடிவர்தனவின் மனிதத்தை நோக்கிய சகோதரத்துவக் குரல், கவிதை மொழியாக்கமும் மொழிபெயர்ப்புக் கோட்பாட்டுப் பிரச்சனைகளும்: சில அனுபவக் குறிப்புகள், மொழிபெயர்ப்புத் துறையில் இலங்கை முஸ்லிம்களின் பங்களிப்பு: சில குறிப்புகள் ஆகிய தலைப்புகளில் தன் ஆய்வை நிகழ்த்தி இருக்கிறார். (இந்நூல் இலங்கைத் தேசிய நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 192955).

11882

யாப்பியலுரை: ஆய்வுடனான ஒரு விளக்கம். அல். அஸுமத். வெல்லம்பிட்டிய: அல்.அஸுமத், இல.50, கோத்தமி மாவத்தை, வெலேவத்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 2016. (கொழும்பு 14: பிரின்ட் சிட்டி).

xxiv, 525 பக்கம், விலை: ரூபா 900., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-52134-6-2.

யாப்பிலக்கணத்தின்படி தமிழ்ப் பா இயற்றுவதற்குரிய பல்வேறு இலக்கணங் களையும் இந்நூல் ஆய்ந்துள்ளது. கவிதைகளால் தன் உணர்வுகளை, கருத்துக்களை முன்வைக்க முனையும் கவிஞர்களுக்கு இந்நூல் ஒரு கையேடாகும். புதியவர்கள் யாப்பிலக்கணத்தைத் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற நீண்டகால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்கையை ஆசிரியர் இந்நூல் வழியாகத் தீர்த்துக்கொண்டுள்ளார். இரு பாகங்களில் அமைந்த இந்நூலின் உறுப்பியல் என்ற முதற்பாகத்தில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய விடயங்கள் தனித்தனி அத்தியாயங்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பாகமாகிய செய்யுளியலில் ஆசிரியப் பாவினங்கள், வெண்பா, வெண்பாவினம், கலிப்பா, கலிப்பாவினம், வஞ்சிப்பா, வஞ்சிப் பாவினம், மருட்பா, பிற்காலத்துப் பாவினங்கள், குறும்பா ஆகியவை தனித்தனி அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61604).

11883

வரவுக் கவிதைகள் வளமுற: ஆய்வுடனான ஒரு விளக்கம். அல். அஸுமத். வெல்லம்பிட்டிய: அல்.அஸுமத், இல.50, கோத்தமி மாவத்தை, வெலேவத்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 2016. (கொழும்பு 14: பிரின்ட் சிட்டி).

(8), 206 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-52134-7-9.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையில் 1990 முதல் 1994 வரையிலான காலப்பகுதியில் அல் அஸுமத் வழங்கிய கவிதைச்சரம் நிகழ்ச்சியில் புதியவர்களும் அனுபவம் மிக்கவர்களுமாக 468 கவிஞர்கள்வரை பங்கேற்றுத் தம் கவிதைகளை வடித்திருந்தார்கள். அந்த நிகழ்ச்சியில் ஆசிரியர் வளரும் இளம் கவிஞர்களுக்கு ஆற்றிய அறிவுரைகளின் தொகுப்பே இக்கட்டுரை நூலாகும். பின்னாளில் இவை தினகரன் வாரமஞ்சரியில் தொடராகப் பிரசுரமாகியுமிருந்தன. முகம், புதுக்கவிதை எனும் பெயர் செம்மையானது தானா?, வெற்றுக் கூச்சல்கள், கவிதைச் செழுமை, தமிழ்ப் பாக்களின் தொன்மை, தமிழ்க் கவிதையின் வரலாற்றுக் குறிப்பு, கவிதை எழுத இலக்கணம் தேவையா?, படிமம் - குறியீடுகள், இயல்பு நவிற்சி, பாடுபொருளும் தலைப்பும், புதுமை, உள்வாங்குதல், சிந்தனைச் சீர்மை-அசை போடுதல், சமூகப் பிரக்ஞை, வெளிப்படுதலும் செப்பனிடுதலும், கவிதைக்குரிய மொழிநடை, படிமக் கையாள்கை, யாப்பிலிக் கவிதைகளின் அடிகள், நிறுத்தற் குறிகள், இருண்மைக் கவிதைகள், பிறமொழிக் கவிதையினங்கள், ஓசை நயம், கற்பனை, அருட்டுணர்வு ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. கலாபூஷணம் அல் அஸுமத் புகழ்மிக்க ஈழத்துக் கவிஞர். 1942.11.22 இல் பிறந்த இவரது இயற்பெயர் பொன்னையா வேலாயுதம். தந்தையார் கேரளத்தின் நெய்யாற்றின் கரையைச் சேர்ந்தவரும், கே.வீ.ராமன் நாயர் என்ற இயற்பெயரைக் கொண்டவருமான கே.வீ.பொன்னையா. இவரது தாய் மரியாயி. அல்-அஸுமத்தின் இயற்பெயர் வேலாயுதம். 1960 - 1964 காலப்பகுதியில் எல்கடுவை அசோகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் தெகிவளை தொழிநுட்பக் கல்லூரியின் வணிகப் பிரிவில் முகாமையாளராக 1978 வரை பணியாற்றினார். இவர் முஸ்லிம் கலாசார பண்பாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் அவர்களால் "கவித் தாரகை" விருது வழங்கப்பெற்றும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் கலைஞர் முன்னணியினரால் 2008 இல் "இலக்கிய சாகரம்" பட்டம் வழங்கப் பெற்றும் கௌரவிக்கப்பட்டவர். காயல்பட்டினத்தில் தமிழ்நாடு இஸ்லாமியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியக் கழகம் நடத்திய 13வது உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் "தமிழ் மாமணி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மூன்று இலங்கையருள் இவரும் ஒருவர். இவரின் பூவின் காதல் என்ற முதல் சிறுகதையும், முதல் கவிதையும் வீரகேசரியில் வெளிவந்தன. மாத்தளையான், விருச்சிகன், சாத்தன், அபூமுனாஃப், புல்வெட்டித்துறைப் புலவர் ஆகிய புனைபெயர்களில் கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள், விமர்சனங்கள், குறுங்காவியங்கள் எழுதியுள்ளார். புலராப் பொழுதுகள் (குறுங்காவியம்), மலைக்குயில் (கவிதைகள்), அல் அஸுமத் கவிதைகள் (கவிதைகள் 1987), வெள்ளை மரம் (சிறுகதைகள் 2001), குரல் வழிக் கவிதைகள் (கவிதைகள் 2009), பிலால்: ஒரு கறுப்பின அடிமையின் விடுதலை வரலாறு (மொழிப்பெயர்ப்பு 2010), அறுவடைக் கனவுகள் (நாவல் 2010), ஆயன்னையம்மாதாய் (சிறுகதைகள் 2012) ஆகியவை இவரது நூல்கள். யாழ்ப்பாண இலக்கிய வட்டத்தின் மிகச்சிறந்த கவிதை நூலுக்கான விருது, தேசிய அரச சாஹித்திய விருது, சிரித்திரன் சுந்தர் நினைவு விருது, முஸ்லிம் எழுத்தாளர் தேசியக் கவுன்சில் விருது, தமிழியல் விருது ஆகிய விருதுகளையும் இலக்கியச் சாகரம், கவித் தாரகை ஆகிய பட்டங்களையும் இவர் பெற்றுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61601).

11884

விமர்சன மீட்சிகள். பிரேமிள் (இயற்பெயர்: தருமு சிவராம்). தமிழ்நாடு: லயம் வெளியீடு, நகலூர், அந்தியூர் 638501, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1996. (சென்னை 600 005: மணி ஆப்செட், 112, பெல்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி).

46 பக்கம், விலை: இந்திய ரூபா 15.00, அளவு: 21x13 சமீ.

தருமு சிவராம் (1939-1997) என்றழைக்கப்பட்ட பிரேமிள், 20.04.1939-ல் இலங்கையில் திருக்கோணமலையில் பிறந்து வளர்ந்தவர். எழுபதுகளின் ஆரம்பத்திலேயே இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்து, பெரும்பாலான வாழ்நாளைச் சென்னையிலேயே கழித்தார். வேலூர் அருகிலுள்ள காரைக்குடியில் 6.01.1997-ல் மறைந்தார். தமது இருபதாவது வயதில், சென்னையிலிருந்து வெளிவந்த "எழுத்து" என்ற பத்திரிகையில் எழுத ஆரம்பித்த இவர், பிறகு தமிழகத்திலேயே வாழ்ந்து தம் படைப்புகளை வெளிப்படுத்தியதால், ஒரு தமிழக எழுத்தாளராகவே மதிக்கப்பட்டார். இலங்கை எழுத்துலகமும் அவ்வாறே இவரைக் கணித்து வந்துள்ளது. நவீன தமிழ் இலக்கியத்தில் பாரதிக்கும் புதுமைப்பித்தனுக்கும் பிறகு தோன்றிய ஒரு மகத்தான ஆளுமை பிரமிள் என்று தமிழகத் திறனாய்வாளர்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர். புதுக்கவிதை, விமர்சனம், சிறுகதை, நாடகம், போன்றவற்றில் இவரது படைப்பாற்றல் ஓர் உயர்ந்தபட்சத்தை எட்டியிருக்கிறது. ஓவியம், களிமண் சிற்பங்கள் செய்வதிலும் திறமைபடைத்தவர். இவரது ஆன்மீக ஈடுபாடு, இலக்கிய ஈடுபாட்டுக்கும் மேலானதாக இருந்து வந்திருக்கிறது. "படிமக் கவிஞர்" என்றும் "ஆன்மீகக் கவிஞர்" என்றும் சிறப்பிக்கப்பட்ட இவரது கவித்துவம், இரண்டாயிரமாண்டுத் தமிழ்க் கவிதை வரலாற்றில், தனித்துயர்ந்து நிற்பதாகும். பிரேமிள் அவ்வப்போது எழுதிய இலக்கியத் திறனாய்வுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகளில் சில இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17033).

11885

வீரகேசரி பிரசுர நாவல்கள்:ஒரு பொது மதிப்பீடு. நா.சுப்பிரமணியம். கொழும்பு 14: வீரகேசரி வெளியீடு, த.பெட்டி எண் 160, எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் பிரைவேட் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி, 1வது பதிப்பு, மே 1977. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் பிரைவேட் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி).

(2), 21 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

50ஆவது வீரகேசரி நூற் பிரசுர விழாவில் வெளியிடப்பட்ட அநுபந்தம். 1885-1976 காலப்பகுதியில் ஈழத்தில் நூல் வடிவில் வெளியிடப்பட்ட தமிழ் நாவல்களின் மொத்தத் தொகையின் இருபது சதவீதத்திற்கும் மேற்பட்டவை வீரகேசரி பிரசுர நாவல்களே என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். மேலும் 1977க்கு முற்பட்ட ஏழாண்டுக் காலப்பகுதியில் நூல்வடிவில் வெளிவந்த 85 நாவல்களில் 45 நாவல்கள் வீரகேசரி பிரசுரங்களாகவும், 13 நாவல்கள் வீரகேசரியின் துணை வெளியீட்டு நிறுவனமான ஜனமித்திரன் பிரசுரங்களாகவும் அமைந்துள்ளன என்ற உண்மை நாவல் வெளியீட்டுத் துறையின் ஒரு காலகட்டத்தில் வீரகேசரியின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது. இந்நூலாசிரியர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தில் துணை நூலகராகப் பணியாற்றியவர்.

மேலும் பார்க்க: 11313

894.8(7) பலவினத் தொகுப்பு

11886

உலகம் பலவிதம்: ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை 1885-1955. ம.வே. திருஞானசம்பந்தபிள்ளை (மூலம்), சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் (பதிப்பாசிரியர்). கொழும்பு: நவரத்தினம் அசோகன், தலைவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், 1வது பதிப்பு, ஆனி 2017. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டேர்ஸ், இல. 681, காங்கேசன்துறை வீதி).

687 பக்கம், விலை: ரூபா 2700., அளவு: 28x21 சமீ., ISBN: 978-955-8506-02-8.

2015இல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 125ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடியது. 125ஆவது ஆண்டு விழா வெளியீடாக 2017இல் இந்நூல் வெளிவந்துள்ளது. ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நீண்டகாலம் (1912-1947) ஆசிரியராகப் பணிபுரிந்தவர். அதேவேளையில் அன்றைய யாழ்ப்பாணத்தின் முன்னணிப் பத்திரிகையாக வலம்வந்த இந்து சாதனத்துக்கு 1912இலிருந்து உதவி ஆசிரியராகவும், 1921இலிருந்து 1951 வரை பிரதம ஆசிரியராகவும் இருந்து அதனை வழிநடத்தியவர். இத்தொகுப்பில் ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் பெரும்பாலான படைப்புகள் தொகுக்கப்பட்டுள்ளன. "ஓம் நான் சொல்லுகின்றேன்" என்ற சிறுகதையில் தொடங்கி, இந்துசாதனத்திலிருந்து அவர் ஓய்வுபெற்றவேளை எழுதிய "விடைபெற்றுக் கொள்ளுகிறேன்" ஈறாக இத்தொகுப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. அவரது எழுத்துக்கள் உலகம் பலவிதம், உலகம் பலவிதக் கதைகள், என்ற பத்திகளாகவே வெளிவந்ததால் இந்நூலுக்கும் அத்தலைப்பினை இட்டுள்ளனர். இந்நூலின் முதற்பாகத்தில் உதிரிகளாக வெளிவந்த அவரது சிறுகதைகளும், நூலாகக் கிடைக்கக்கூடியதாகவிருந்த கோபால-நேசரத்தினம் நாவலும் இடம்பெறுகின்றன. இரண்டாம் பாகத்தில் 1922இலிருந்து 1936வரை பெரும்பாலும்அரசியல், சமூகம், சமயம் தொடர்பாக எழுதப்பட்ட பத்திகளும், மூன்றாம் பாகத்தில் 1944-1946 காலப்பகுதி தொடர்நாவல்களும் நான்காம் பாகத்தில் 1947-1951 காலப்பகுதி தொடர்நாவல்களும் வருகின்றன. இத்துடன் மூன்று பின்னிணைப்புகளும் நூலின் இறுதியில் உள்ளன.

11887

ஒரு வாசகனின் வாசகங்கள் (சிறுகதைகள்-கவிதைகள்-எண்ணச் சிதறல்கள்). இளநெஞ்சன் முர்ஷிதீன். கொழும்பு 10: B.M.முர்ஷிதீன், 239, ஸ்ரீ சதர்ம மாவத்தை, மாளிகாவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1988. (கொழும்பு 12: வீனஸ் பிரின்டர்ஸ், 107/18V, பண்டாரநாயக்க மாவத்தை).

(4), 5-73 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 21x14.5 சமீ.

குர் ஆனே உன்விலை என்ன?(10.3.1985 அன்று இலங்கை இஸ்லாமிய சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற சிறுகதை), விடிந்த பொழுதில் சில விண்மீன்கள், திசைமாறிய நம்பிக்கைகள் ஆகிய சிறுகதைகளும், கிரிக்கெட் காலத்து தரிசனங்கள், முகாரி பாடும் பூபாளங்கள், ஒரு மல்லிகை இடம்பெயர்ந்தபோது (23.8.1984 காலை சேர் ராசிக் பரீத் அவர்கள் மறைந்த செய்தி கேட்டு எழுதப்பட்ட கவிதை), மூச்சுத்திணறும் ஒரு சமூகத்துக்காக ஆகிய கவிதைகளும், இளசுகள் மீட்கும் கானங்கள், புனித எண்ணங்களுக்குள் பதிய சலனங்கள் ஆகிய மெல்லிசைப் பாடல்களும், சிந்தித்தேன் சிந்தித்தேன், என்னுள் பூத்த எண்ணப் பூக்கள் ஆகிய தத்துவ முத்துக்களும், சில நேசங்களின் வாசகங்கள் (வாசகர் கடிதம்), ஒரு சமூகம் மௌனமானால் (இலக்கியக் கட்டுரை), ஒரு சின்ன அறிமுகத்தில் (நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் பற்றியது) ஆகிய பலவினப் படைப்பாக்கங்கள் இந்நூலில் மலர்க் கதம்பமாகக் கோர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20686).

11888

குருஷேத்திர இலக்கியம். என்.கே.ரகுநாதன் (பதிப்பாசிரியர்). பத்தரமுல்லை: இலங்கை தேசிய நூல் அபிவிருத்திச் சபை, கல்வி உயர்கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை, 1வது பதிப்பு, 1999. (பாதுக்க: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், 130 சீ, பாகொட வீதி, பிட்டகோட்டை).

x, 175 பக்கம், விலை: ரூபா 230., அளவு: 21x14 சமீ., ISBN: 955-602-041-1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய எழுத்தாளர்களால் படைக்கப்பட்ட சிறுகதைகள், கவிதைகளின் தொகுப்பு. 1996ஆம் ஆண்டு சர்வதேச ஆசிரிய தினத்தை முன்னிட்டு, கல்வி, உயர்கல்வி அமைச்சின் கல்வித் தொழில் அபிவிருத்தி நலன்புரிப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிரிய படைப்பாளிகளுக்கிடையேயான போட்டியின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட சிறுகதைகளுடன் ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்த மற்றும் கதைகள் பலவற்றையும் இத்தொகுப்பில் உள்ளடக்கியுள்ளனர். தமிழ் மொழிமூலப் போட்டிக்கு 1130 சிறுகதைகள் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் முதல் மூன்று இடங்களையும் வென்ற கதைகளும், மேலதிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த சிறுகதைகளும் அக்காலகட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கிடையேயான கவிதைப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் வென்ற கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31171).

11889

புத்தாக்க செருகேடு: கலை இலக்கிய ஆக்கங்களின் தொகுப்பு. ஆனந்தமயில் நித்திலவர்ணன். யாழ்ப்பாணம்: தக்ஷனா வெளியீடு, இல.10, வளாக வீதி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஜூலை 2008. (யாழ்ப்பாணம்: ஸ்மார்ட் பிரின்டர்ஸ்).

ix, 45 பக்கம், ஓவியங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 20x14.5 சமீ.

இந்நூலில் (செருகேடு- Album) ஆனந்தமயில் நித்திலவர்ணன் படைத்த சிறுகதைகளும், கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. இதிலுள்ள ஆறு சிறுகதைகள், முடிவு 1,2, ஒரு பேனாவின் கண்ணீர் வரைந்த கவிதை, எங்கும் இருக்கும் மனிதம், பதில் கடிதம், நெருப்பை சுமக்கும் இதயங்கள், முளையில் கருகும் காதல்கள் ஆகிய தலைப்புகளிலும், 12 கவிதைகள், நாம் எங்கே போகிறோம், வெகு தொலைவில் இல்லை, பிடிக்கவில்லை, சபிக்கப்பட்டவர்கள், அடி மனதின் ஆசை இதுதான், நாம் நிஜத்தில் எங்கு வாழ்கிறோம்?, வாழ்க்கைப் பாதை, பல்கலைக்கழக கல் ஆசனத்தின் விண்ணப்பம், ஓட்டோகிராப்பின் முகப்புப் பக்கம், என் எதிரிகள், காதலின் எதிரி, காதலர்களே கொஞ்சம் நில்லுங்கள் ஆகிய தலைப்புகளிலும் எழுதப்பட்டுள்ளன.

11890

முதற் கனி. ஜெயரெத்தினம் திவ்வியநாதன். கொழும்பு: ஜெயரெத்தினம் திவ்வியநாதன், 1வது பதிப்பு, நவம்பர் 2004. (கொழும்பு 11: அனுஷ் பிரின்டர்ஸ், 271/5 செட்டியார் தெரு).

vi, 93 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

ஆசிரியரின் சிறு கட்டுரைகள், கருத்துக்கள், கவிதைகள் கொண்ட பலவினத் தொகுப்பாக இந்நூல் வெளிவருகின்றது. கனி தருபவன் என்று தனது நூலுக்கான அறிமுகம் தொடங்கி, "மா" என்ற பிரிவில் மெல்லத் தமிழினி, சங்கத் தமிழில் சம்ஸ்கிருதம், அழகு தமிழில் ஆங்கிலம் கலப்பு, இனிய தமிழில் இன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாட்டின் எதிரொலி, தனித்தமிழும் தமிழின் தனித்துவமும், தாய்த் தமிழும் தாய்மண் விட்டகன்றோரும், புலம்பெயர்ந்தோர் மனம் புண்படலாமா?, பாதம் பதிக்கும் இடமெங்கும் பைந்தமிழ் விதைக்கும் தமிழர், மெல்லெனத் தமிழ் வடிவம் - சொல்லும் வகையிலும் முழு முனைப்பு, ஆகிய ஆக்கங்களைத் தொகுத்து, தொடர்ந்து வரும் "பலா" என்ற பிரிவில் தீந்தமிழும் தமிழ்த் திரைப்படங்களும், திசை மாற்றும் திரைப்படங்கள், தமிழ்த் திரைப்படத்துறை கனியிருப்பக் காய் கவரலாமோ?, மொழியை முறைப்படி மொழிவோம், "ங"ப் போல் வளை, "ங"ப் போல் வளைவோம், ஊடகங்களினூடே, அவதாரமாகுமா? சமையமா? "ப்ரியா" சரியாகுமா?, வெல்லுந் தமிழ் வெல்லும் ஆகிய படைப்புகளையும் தொகுத்துத் தந்து "வாழை" என்ற இறுதிப் பிரிவில் கவிதைகள், விடுகதைகள், கதை, சிரிப்பதற்குச் சில துணுக்குகள், சிரித்திரன் மகுடி பற்றிய சில தொகுப்புகள் என இந்நூலில் தனது பலவினப் படைப்புக்களை வாரி வழங்கிப் பகிர்ந்துகொண்டுள்ளார். ஆசிரியரின் முதலாவது நூல் இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34714).

11891

விபுலானந்தத் தேன். அருள் செல்வநாயகம். சென்னை 1: பாரி நிலையம், 59 பிராட்வே, 1வது பதிப்பு, நவம்பர் 1956. (காஞ்சீபுரம்: முத்தமிழ் அச்சகம்).

xxx, 144 பக்கம், விலை: இந்திய ரூபா 2.80., அளவு: 18.5x13 சமீ.

சைவநெறி சம்பந்தமாக ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம் இதழ்களில் 1921 முதல் அடிகளார் எழுதிய சில கவிதைகளையும் கட்டுரைகளையும் தொகுத்து விபுலாநந்த இலக்கியத்தின் இரண்டாவது தொகுதியாக இந்நூல் வெளிவந்துள்ளது. முன்னைய நூல் விபுலானந்த அமுதம் என்ற தலைப்பில் வெளிவந்திருந்தது. விபுலாநந்தத் தேன் இரு பகுதிகளாக அமைந்துள்ளது. முதற் பகுதியில் வாழ்க்கை வரலாறு, ஈசனுவக்கும் மலர், தேவி வணக்கம், தேவ பாணி, கோயில், மலர் மாலை, மஹாலக்ஷ்மி ஸ்தோத்திரம், பெருந்தேவ பாணி, விவேகாநந்த பஞ்சகம், குரு சரண ஸ்தோத்திரம், குருதேவர் வாக்கியம் ஆகிய பத்துச் செய்யுள் வடிவ ஆக்கங்களும், இரண்டாவது பகுதியில் அடிகளார் வசன நடையில் எழுதியிருந்த விநாயகக் கடவுள், நம் நாட்டின் பெருமை, வைதிக நெறி, அழுத பிள்ளை பால் குடிக்கும், தில்லைத் திருநடனம், பழந்தமிழ் நாட்டுச் சமவாய வாழ்க்கை, வரகுணதேவர் சரித்திரம், உறக்கமும் விழிப்பும், அர்த்த நாரீசுவர வடிவம், சர்வம் சக்தி மயம், வினைப்பயன் ஆகிய 11 ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2378).

மேலும் பார்க்க: 11290

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8(87) அங்கதம்/நகைச்சுவை தொகுப்பு

11892

சிரிக்கவும் சிந்திக்கவும். இணுவையூர் ஆ. இரகுபதிபாலஸ்ரீதரன். கொழும்பு 6: சுமதி பதிப்பகம், LG 4, வேலுவனராம அடுக்கு மாடி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 13: கீதா பப்ளிக்கேஷன்ஸ்).

160 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20x13.5 சமீ., ISBN: 978-955-43909-0-4.

நகைச்சுவைக் குட்டிக்கதைகளைத் தேர்ந்து தொகுத்திருக்கும் ஆசிரியர், அவற்றை நகைச்சுவைக் கதைகள், சிறுவர் நகைச்சுவைக் கதைகள், உண்மைக் கதைகள், கணவன் மனைவிக் கதைகள், மிருகங்களின் கதைகள், பைத்தியக்காரக் கதைகள், வயிற்றெரிச்சல் கதைகள், ஒரு பக்கக் கதைகள் ஆகிய தலைப்புகளின் கீழ் வகுத்துத் தந்திருக்கிறார்.

11893

நகைச்சுவைக் கதம்பம். செ.நடராசா. யாழ்ப்பாணம்: திருமதி ஆனந்தி சிவஞான சுந்தரம், ஆனந்தி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி, 1வது பதிப்பு, மார்ச் 2004. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாயி அச்சகம், காங்கேசன்துறை வீதி, இணுவில்).

(6), 104 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 19x13 சமீ.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் பதிப்பித்துள்ள இந்நூல் 80 வயதைத் தாண்டிய மூதறிஞர் செ.நடராஜா அவர்களின் நகைச்சுவை ததும்பும் கட்டுரைகளைக் கொண்டது. இந்நூல் ஆசிரியரின் அனுபவ முதிர்ச்சியால் ஏற்பட்ட பொறுப்பான சமூகப் பார்வையின் வெளிப்பாடாக இதிலுள்ள கட்டுரைகள் அமைவதைக் காணமுடிகின்றது. நமது சமூகத்தின் பலத்தையும் பலவீனத்தையும், குறை-நிறைகளையும் தனது எழுத்தில் கொண்டுவரும்போது பொறுப்புணர்வுடனும் கரிசனையுடனும் அவற்றை நகைச்சுவை உணர்வுடன் சித்திரித்துள்ளார். பிள்ளையார் பிடிக்க, மங்கையர்க்கு ஆடவரின் மீசைமீது ஆசை ஏனோ?, பெண்ணின் ஆசைகளால் பரிதவிக்கும் புருஷர்கள், மனைவியின் மதிப்பு குறைகிறது, யமதர்மராஜா றாகிங் பயிற்சி பெற்றாராம், அழகு மனைவியர் ஸ்ரைக் என இன்னோரன்ன 26 நகைச்சுவைக் கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36090).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

900 புவியியல், வரலாறுகள்

901. (1) வரலாற்றுப் பாடநூல்கள்

11894

புதுமுறைச் சரித்திரம்: ஜீ.சீ.ஈ. பகுதி 2: கி.பி.1453-கி.பி.1796:அடங்கன் 1. *ஆ.சபாரத்தினம். யாழ்ப்பாணம்: கலைவாணி புத்தக நிலையம், 3வது பதிப்பு, ஆடி 1968, 1வது பதிப்பு, 1965. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், இல. 10, பிரதான வீதி).*

xxiv, *320 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 5.75, அளவு: 21x14 சமீ.*

அரேபியாவில் இஸ்லாம் மதத்தின் தோற்றம், சிந்து நாட்டை அரேபியர் வெற்றிகொள்ளல், டெல்கி சுல்தான்களின் ஆட்சி, தக்கணத்தில் முஸ்லிம் வெற்றி, விஜய நகரப் பேரரசு, இந்து சமுத்திர நாடுகளில் முஸ்லிம் வணிக வளர்ச்சி, முஸ்லிம்களின் இலங்கை வருகை, மத்திய காலத்துக் கிழக்கு மேற்கு வாணிகம், இலங்கையின் கறுவா வாணிகம், ஐரோப்பிய மறுமலர்ச்சி, ஐபீரியக் குடாநாட்டின் வரலாறு, போர்த்துக்கேய கீழ்த்திசைப் பேரரசு, மதச் சீர்திருத்தம், ஐரோப்பிய சமயப் போர்கள், ஒல்லாந்தின் எழுச்சி, ஒல்லாந்தரின் கீழ்த்திசை வாணிகம், பிரித்தானியாவின் வரலாறு, பிரான்சின் எழுச்சி, பிரஷ்யாவின் எழுச்சி, முகலாயப் பேரரசு, ஐரோப்பிய வல்லரசுகளின் வணிக குடியேற்றப் போட்டி, ஐரோப்பாவில் நிகழ்ந்த அறிவுப் புரட்சி ஆகிய 22 அத்தியாயங்களில் கி.பி.1453-1796 காலகட்டத்திற்குரிய உலக வரலாறு விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14058).

11895

புதுமுறைச் சரித்திரம்: ஜீ.சீ.ஈ. பகுதி 2: கி.பி.1453-கி.பி.1796:அடங்கன் 2. *ஆ.சபாரத்தினம். யாழ்ப்பாணம்: கலைவாணி புத்தக நிலையம், 1வது பதிப்பு, 1967, (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், இல. 10, பிரதான வீதி).*

(22), 360 பக்கம், விலை: ரூபா 5.00, அளவு: 18.5x12.5 சமீ.

இந்நூல் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கையின் நிலை (அரசியல், ஆட்சி முறை, சமூகநிலை-சாதியாசாரம், சமயம், மொழி, பண்பாடு), கோட்டை அரசின் வீழ்ச்சி, சீதாவாக்கையின் தோற்றமும் மறைவும், யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சி, கண்டி அரசும் போர்த்துக்கேயரும், இரண்டாம் இராஜசிங்கனும் ஒல்லாந்தரும், இரு இறுதிச் சிங்கள மன்னரும் போர்த்துக்கேயரும், கண்டியில் நாயக்கர் மன்னராட்சி ஆகியவை முதலாம் பாகத்தில் விளக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பாகத்தில் அரசியல் நிர்வாகம், பொருளாதாரம் என்பவற்றுக்குரியதாகும். இதில் கரையோர மாகாணங்களில் போர்த்துக்கேய நிர்வாகம், டச்சு அரசியல் நிர்வாக முறை, டச்சுக்காரரின் வணிக முயற்சிகள், ஒல்லாந்தர் கால விவசாய வளர்ச்சி, கண்டி இராச்சிய நிர்வாக முறை, கண்டி இராச்சியத்தின் பொருளாதார நிலை ஆகியவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. மூன்றாம் பாகம், சமயம், சமூகம் தொடர்பானவை. இதில் போர்த்துக்கேயரின் சமயம் பரப்பும் முயற்சிகள், டச்சுக்காரரின் சமயம் பரப்பும் முயற்சிகள், போத்துக்கேயர் காலக் கல்வி நிலை, டச்சுக்காரர் காலக் கல்வி வளர்ச்சி ஆகியவை இடம்பெற்றுள்ளன. அனுபந்தங்களாக றோமன் டச்சுச் சட்டம், நெதர்லாந்து கிழக்கிந்திய தீவுகளின் மகா தேசாதிபதிகள், இலங்கையிற் பதவி வகித்த ஒல்லாந்த தேசாதிபதிகள், க.பொ.த.ப. பரீட்சை வினாக்கள் (1965-66) ஆகியவை காணப்படுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14059).

910.01 புவியியல் பாடநூல்கள்

11896

பூமிசாத்திர வாசகம்: நான்காம் வகுப்பு. S.F.D.சில்வா (மூலம்), மு.கணபதிப்பிள்ளை (தமிழாக்கம்). கொழும்பு: கொழும்பு அப்போத்திக்கரீஸ் கம்பெனி, குமார வீதி, கோட்டை, 1வது பதிப்பு, மே 1954. (கொழும்பு: கொழும்பு அப்போத்திக்கரீஸ் கம்பெனி, குமார வீதி, கோட்டை).

(8), 148 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x14 சமீ.

ஆரம்பப் பாடசாலைகளுக்கான பூமிசாஸ்திர வாசகம். கொழும்பு அரசினர் ஆசிரிய பயிற்சிக் கழக அதிபரான S.F.D.சில்வா அவர்கள் எழுதிய இந்நூலை இலங்கைக் கல்விப்பகுதித் தமிழ்ப் பாடநுல் மொழிபெயர்ப்பாளர் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழாக்கம் செய்திருக்கிறார். ஈரலிப்பு மண்டல வாசிகள் (தென்னை பயிரிடுவோர், றப்பர் பயிரிடுவோர்), வரண்ட சமவெளிகளில் வசிப்போர் (நெல் விளைவிப்போர், சேனைப் பயிர்ச் செய்வோர், சந்தைக் காய்கறி பயிரிடுவோர்), மலைநாட்டுவாசிகள் (ஈரலிப்புச் சரிவு-தேயிலைத் தோட்டங்கள், வரண்ட சரிவுகள்- பத்தனைப் புல்வெளிகள்), இலங்கையின் கடற்கரைப் பகுதிகள், மக்கள் வாழுமிடங்கள், கொழும்புத் துறைமுகப் பட்டினம், இந்து சமுத்திரத்தைச் சூழ்ந்த நாடுகள் ஆகிய ஏழு பாடங்களை இந்நூல் உள்ளடக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13357).

911 பிரயாண நூல்கள், வழிகாட்டிகள்

11897

கடல் கடந்த நாட்கள்: பயண அனுபவப் பதிவுகள். கலையார்வன் (இயற்பெயர்: குருசுமுத்து இராயப்பு). யாழ்ப்பாணம்: ஜெயந்த் சென்டர், 165 வேம்படி வீதி, 1வது பதிப்பு, மார்கழி 2015. (பண்டத்தரிப்பு: யே.எஸ்.பிரிண்டர்ஸ்).

xx, 420 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-0197-05-7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு காரணங்களுக்காக இலங்கையிலும், எட்டு பிறநாடுகளிலும் 1979-2014 காலகட்டத்தில் பயணித்ததால் பெற்றக்கொண்ட அனுபவங்களை நூலுருவில் தந்திருக்கிறார். ஆசிரியரின் 18ஆவது நூல் இதுவாகும். இளவயதுப் பயணங்கள் (யாழ்ப்பாண அயல் தீவுகள்), திருத்தல தரிசிப்புப் பயணம் (இந்தியா), புகலிடம் தேடிய பயணம் (பிரான்ஸ்), புகலிடக் கோரிக்கைப் பயணம் (சுவிட்சர்லாந்து), சுற்றுலா, வர்த்தக, ஒய்வுக்கான பயணங்கள்(சிங்கப்பூர், மலேசியா, நோர்வே, இத்தாலி, ஐக்கிய இராச்சியம்), உறவுகளைச் சந்திக்கும் பயணங்கள் (இலங்கை), சுற்றுலா, நூறறாண்டு விழா பயணங்கள் (இந்தியா) ஆகிய ஏழு தலைப்புகளில் இப்பயணக் கட்டுரைகள் கலாபூஷணம் கு.இராயப்புவின் விரிவான பல அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 251131).

11898

பெர்லின் நினைவுகள். பொ.கருணாகரமூர்த்தி. தமிழ்நாடு: காலச்சுவடு பதிப்பகம், 669 கே.பி.சாலை, நாகர்கோவில் 629001: 1வது பதிப்பு, மே 2014. (சென்னை 600086: கொம்பியூபிரின்ட், பிரிமியர் டிசைன் ஹவுஸ்).

407 பக்கம், விலை: இந்திய ரூபா 550., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-82033-38-7.

யாழ்ப்பாண மாவட்டத்தின் புத்தூரில் பிறந்த பொ.கருணாகரமூர்த்தி, புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரியில் கல்வி பயின்றவர். 1980இல் பெர்லினுக்குப் புலம்பெயர்ந்தவர். 1985இல் கணையாழியில் வெளிவந்த ஒரு அகதி உருவாகும் நேரம் என்னும் குறுநாவல் மூலம் பத்திரிகை வாசகர்களுக்கு அறிமுகமானவர். காருண்யன், கொன்ஃபூசியஸ், புதுவை நிலவன், அழகு முருகேசு முதலிய பெயர்களில் அவ்வப்போது கவிதைகளும் எழுதுபவர். மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக பெர்லினில் வாழ்ந்து பெற்ற அனுபவத்தினையும், விரிந்து பரந்த தனது சுய வாசிப்பு அனுபவத்தையும் கொண்டு பெர்லின் நினைவுகளை நூலுருவில் பதிவுசெய்கின்றார். இயல்பான அங்கதம் தோய்ந்த நடையுடன் கூடிய இவரது எழுத்து வாசகனுக்கு வாசிப்பில் ஈர்ப்பினை ஏற்படுத்துகின்றது. இந்நூலின் முற்பகுதியில் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்த சூழலில் தமது வாழ்வை நிலைநிறுத்திக்கொள்ளப் பட்ட கஷ்டங்களையும் பண்ண நேர்ந்த தகடுதத்தங்களையும் எள்ளலுடன் விபரிக்கும் இவர், ஆங்காங்கே பேர்லினின் அழகையும் பொலிவையும் வனப்பையும் சித்திரமாக வாசகர்முன் விரித்து வைக்கிறார். பிற்பகுதியில் தணிக்கையும் புனைவுமின்றி இவர் காட்டும் பெர்லின் இரவு வாழ்க்கையும் ஜெர்மனியரின் மனோவியலும் பழக்க வழக்கங்களும் வெளிப்படையான பாலியல் நடத்தைகளும் மூடுண்ட சமூகத்தவராகிய புகலிடத்துத் தமிழருக்குக் கலாச்சார அதிர்ச்சியை உண்டுபண்ணுவனவாகும்.

11899

மணிபல்லவம். அ.மு.பரமசிவானந்தம். சென்னை 30: தமிழ்க் கலை இல்லம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1958. (தமிழ்நாடு: முத்தமிழ் அச்சகம், காஞ்சீபுரம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 17.5x12 சமீ.

1957 கோடை விடுமுறையில் தமிழகத்தைச் சேர்ந்த அ.மு.பரமசிவானந்தம் என்னும் பெரியார் ஒரு வாரம் யாழ்ப்பாணத்திற்கு வந்து தங்கியிருந்தார். அவ்வேளை நயினாதீவுக்கும் (மணிபல்லவம்) ஒரு நாள் சென்றிருந்தார். அவரது நயினாதீவு உள்ளிட்ட யாழ்ப்பாணப் பயணக் கட்டுரையே இந்நூலின் முதற் பகுதியாகும். யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த வேளை கல்லூரி விழாவொன்றில் அவர் பேசிய கம்பராமாயணத்தை ஒட்டிய "மங்கையர் இருவர்" என்ற சொற்பொழிவு இரண்டாம் பகுதியாக இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 1315).

920.01 துறைசாரா வாழ்க்கைவரலாறுகள்

11900

யாழ்ப்பாணப் பெட்டகம்: தொகுதி 1: ஆளுமைகள். மார்க்கண்டு அருள்சந்திரன். யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பெட்டகம்-நிழலுருக் கலைக்கூடம், வன்னி நம்பிக்கை நிதியம், 1வது பதிப்பு, டிசம்பர் 2016. (யாழ்ப்பாணம்: அன்ரா பிரின்டர்ஸ்).

xiv, 324 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 1500., அளவு: 24.5x17.5 சமீ., ISBN: 978-955-41403-1-8.

யாழ்ப்பாணப் பண்பாட்டுருவாக்கத்துக்கு முன்னின்றுழைத்த 650 பெருமக்களை இனங்கண்டு அவர்களை துறைசார் பிரிவுகளுக்குள் அடக்கி இவ்வாவணத்தைத் தொகுத்திருக்கிறார். அவ்வகையில் பொதுவியல், சமயமும் தத்துவமும், சமூகமும் வரலாறும், அறிவியலும் தொழில்நுட்பமும், மொழியும் இலக்கியமும், கலையும் பொழுதுபோக்கும், ஆகிய பிரிவுகளுக்குள் அனைவரையும் அடக்கி யாழ்ப்பாணத்தின் மறைந்த ஆளுமைகளை புகைப்படங்களுடன் பதிவுசெய்துள்ளார். கிளிநொச்சி மாவட்ட கலாசார அலுவலராகப் பணியாற்றும் மா.அருள்சந்திரன் அரங்கியல் துறையில் ஈடுபாடு கொண்டவர்.

922 சமயத் தலைவர், சிந்தனையாளர்

11901

அருளாளர்கள் அறுபத்து மூவர்: சிவனடியார்கள் அருள் வரலாறு. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு. தெகிவளை: திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு, 24 சீ, எதிரிவீர அவென்யூ, 1வது பதிப்பு, ஜூலை 2016. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xxviii, 272 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 21.5x14 சமீ.

நாயன்மார் என்போர் பெரிய புராணம் எனும் நூலில் குறிப்பிடப்படும் சைவ அடியார்கள் ஆவார். நாயன்மார் எண்ணிக்கை அடிப்படையில் 63 நபர்களாவர். சுந்தரமூர்த்தியார் திருத்தொண்டத் தொகையில் அறுபது சிவனடியார்கள் பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுள்ளார். அந்த நூலினை மூலமாக கொண்டு சேக்கிழார் பெரிய புராணத்தினை இயற்றினார். எனவே திருத்தொண்டத் தொகையை எழுதிய சுந்தரமூத்தியாரையும், அவரது பெற்றோர் சடையனார் - இசை ஞானியார் ஆகிய மூவரையும் நாயன்மார்களாக இணைத்துக் கொண்டார். காலம், குலம், நாடு, இயற்பெயர் - காரணப்பெயர் என பல வகைகளில் நாயன்மார்களை வகைப்படுத்துகிறார்கள். நாயன்மார்களின் வரலாறுகளை ஆய்வு செய்யவும், அவற்றில் உள்ள சேர்க்கைகளையும், உண்மைகளையும் புரிந்து நோக்கவும் இவ்வாறான வகைப்பாடு உதவுகின்றன. நாயன்மாரில் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவ சமய குரவர் என்று அழைக்கப்படுகிறார்கள். சைவத் திருமுறைகள் என அழைக்கப்படும் 12 திருமுறைகளின் தொகுதியில் நாயன்மாரின் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. முதல் மூன்று திருமுறைகள் திருஞான சம்பந்தராலும், திருமுறைகள் 4,5,6 திருநாவுக்கரசராலும், 7ஆம் திருமுறை சுந்தரராலும் ஆக்கப்பட்ட பண்ணோடு அமைந்த இசைப்பாடல்களாகும். நாயன்மாரில் சிலரே சமய நூல்களில் புலமை உடையவர்கள். மற்றவர்கள் மிகச் சிறந்த பக்தர்கள் மட்டுமே. பலரும் பல்வேறு தொழில்கள் செய்து உயிர் வாழ்ந்தவர்கள். இறையருள் பெற பக்தி மட்டுமே போதுமானது என்பதும் எல்லோரும் இறைவன் திருவடிகளை அடையலாம் என்பதுமே இவர்கள் வாழ்க்கை தரும் பாடமாக உள்ளது. அறுபத்துமூன்று நாயன்மாரில் மூவர் பெண்கள். கி.பி. 3-4 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் நாயன்மாரில் காலத்தால் மூத்தவர். தான் பிறந்து வாழ்ந்த ஊரின் பெயராலேயே அறியப்படும் காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் புனிதவதியார் ஆகும். மதுரையை ஆண்ட கூன் பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாற நாயனார் என்ற அறியப்படுகிறார். அவர் மனைவி மங்கையர்க்கரசியார் என்பவர் நாயன்மாரில் மற்றொரு பெண் ஆவார். திருநாவலூரைச் சேர்ந்த சடையனார் என்ற நாயனாரின் மனைவி இசைஞானியார் மூன்றாவது பெண் நாயனார் ஆவார். இவர்களின் மகன் சுந்தரமூர்த்தியார் சைவக்குரவர் நால்வருள் ஒருவரும் நாயன்மாரில் ஒருவரும் ஆவார். இந்நூலில் மேற்படி 63 அருளாளர்களையும் பற்றி 86 தலைப்புகளில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60784).

11902

சந்தானாசாரியர் புராண வசனம். க.பொன்னம்பல உபாத்தியாயர். யாழ்ப்பாணம்: க.பொன்னம்பல உபாத்தியாயர், கரவெட்டி கிழக்கு, 1வது பதிப்பு, ஆவணி 1912. (யாழ்ப்பாணம் விவேகாநந்த யந்திரசாலை).

(6), 27 பக்கம், விலை: 25 சதம், அளவு: 20x13 சமீ.

சமய குரவருக்குப் பின்னர் தோன்றியவர்களுள் சைவசித்தாந்த சாத்திரங்களைத் தமிழில் இயற்றியதுடன் அவற்றைத் தமது நன்மாணாக்கர்களுக்குப் போதித்தும் தமிழ்நாட்டில் சைவசித்தாந்தம் தழைத்தோங்கச் செய்தவர்களான மெய்கண்ட சிவாச்சாரிய சுவாமிகள், அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள், மறைஞானசம்பந்த சிவாச்சாரிய சுவாமிகள், உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள் ஆகியோரின் வாழ்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றை இந்நூல் வழங்குகின்றது. க.பொன்னம்பல உபாத்தியாயர், ஸ்ரீமத் வ.குமாரசுவாமிப் புலவரின் மாணாக்கராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2926).

11903

சிவதொண்டன் மலர் 1972: சிவதொண்டன் யோகசுவாமிகளின் பிறந்ததின நூற்றாண்டு நிறைவுவிழா சிறப்பு மலர். சிவதொண்டன் சபையார். யாழ்ப்பாணம்: சிவதொண்டன் சபை, 1வது பதிப்பு, ஜுன் 1972. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், கொழும்பு: மெய்கண்டான் அச்சகம்).

பக்கம் 145-218, (4), I-XXIV, தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

தமிழ் ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தாங்கிய சிவதொண்டன் மலர் 3.6.1972இல் சிவயோக சுவாமிகளின் பிறந்ததின நினைவாக, யாழ்ப்பாணத்திலிருந்து சிவதொண்டன் நிலையத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது. அவர்களது அதிகாரபூர்வ ஏடான சிவதொண்டன் இதழின் சிறப்பிதழாகக் கருதக்கூடிய இம்மலரில் நூற்றாண்டு வாழ்த்து, கொழும்புத்துறையடிகள், சுவாமியார் ஆற்றுப்படை, சேமமோடு வாழ்வாய், வழுத்தொணா மலரடி வாழ்த்தி வாழ்வோம், சுவாமிகளின் கதிர்காம யாத்திரை, எமது குலகுரு சிவயோக சுவாமிகள், சும்மா இரு, குரு தத்துவ விளக்கம், யோகசுவாமிகளும் அடியேனும், குருநாதன் அருள்வாசக வரலாறு, திருநெறிய தமிழ், நல்லூர் செல்லப்பாச் சுவாமிகள், யோகசுவாமிகளின் திருமுறைப் பற்று, யோகசுவாமிகளோடு என் அனுபவங்கள், திருமுறையும் நற்சிந்தனையும், திருமுறைகளின் அருள்மாட்சிக்கு அற்புதச் சான்று காட்டிய அருளாளன் எங்கள் குருநாதன், அவரவர்க்கு அதுவதுவாயிருக்கின்ற தெய்வம் (ஆசிரியர் பக்கம்), நற்சிந்தனை ஆகிய தமிழ்க்கட்டுரைகளும், ஆங்கில மொழியில் எழுதப்பட்ட ஒன்பது கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 9335).

11904

சின்மயம்: பூஜ்யகுருதேவர் சுவாமி சின்மயானந்தரின்பிறந்த நூற்றாண்டு மலர்: 1916-2016. சின்மயா மிஷன். யாழ்ப்பாணம்: சின்மயா மிஷன், இல.9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், 1வது பதிப்பு, 2016. (யாழ்ப்பாணம்: மதி கலர் பிறின்டேர்ஸ், இல. 10, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

(4), 105 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ., ISBN: 978-955-4002-00-5.

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் 29.5.2016 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற யாழ். சின்மயா மிஷனின் சின்மய பிறந்த நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர். சமயப்பெரியாரின் வாழ்த்துக்களுடன் சின்மயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஷன் பற்றியும் அதன் தாபகர் பற்றியுமான வரலாற்றுக் குறிப்புக்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

11905

நயினை ஞானமுத்து: ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகள். சி.பத்மநாதன். நயினாதீவு: வே.சிவபாதமணி, சோமாஸ்கந்த ஈஸ்வரர் ஆலயம், 1வது பதிப்பு, ஜனவரி 2002. (யாழ்ப்பாணம்: பத்மாஸ், 28/1 ஓட்டுமடம் வீதி).

iv, 90 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x15 சமீ.

நயினை ஞான முத்து என்று அழைக்கப்படும் ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு இந்நூலில் கூறப்பட்டுள்ளது. சுவாமிகளின் பூர்வீகத்தையும், சுவாமிகளுடன் தொடர்புடைய சில மெய்யடியார்களைப் பற்றி ஆசிரியர் அறிந்துகொண்ட சில தகவல்களையும், சுவாமிகளைப் பற்றி சில நூல்களில் கிடைத்த தகவல்களையும் நேரில் தெரிந்தவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களையும் சேர்த்து இந்நூலை ஆக்கியுள்ளார். யோகசித்தனான நயினாதீவு சுவாமிகளால் பாடப்பட்ட சில அருட்கவிப் பாடல்களும், அவர்மேல் அன்பர்கள் பாடிய பாடல்களும் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22999).

11906

நல்லைநகர் நாவலர் சைவத்தின் காவலர். உடுவை எஸ்.தில்லை நடராஜா. கொழும்பு 4: இந்து சமய அறநெறிக் கல்விப் பிரிவு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு, 248, 1/1 காலி வீதி, 1வது பதிப்பு, 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).

88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ.

அவ்வப்போது தான் படித்த கட்டுரைகளிலிருந்து நாவலர் தொடர்பான சில வரிகள், தன் கவனத்தை ஈர்த்த கவிதைகள் மற்றும் சில நூல்களிலிருந்து சேகரித்த தகவல் குறிப்புகளோடு நாவலர் பற்றிய இந்நூலை ஆசிரியர் எழுதியுள்ளார். நாவலர் சைவாகமத்தின் காவலர், யாழ்ப்பாணத்துப் பின்னணியும் நாவலர் பிறப்பும், நாவலரும் கல்வியும், நாவலரின் கல்விப் பின்னணிகள், நாவலரின் நூலாக்கப் பணிகளும் பதிப்பாக்கப் பணிகளும், நாவலரின் சமயப் பணிகள், உரைவேந்தராகவும் பதிப்பாசிரியராகவும் நாவலர், நாவலர் சைவசமய சீர்திருத்த வாதி, சைவசமய வழிபாட்டு விளக்க நூல்கள், நாவலரின் உரைநடைத்திறன், நாவலர் காட்டும் தாயன்பு, நாவலரின் பிரசங்க ஆற்றல், தேசிய உணர்ச்சிக்கு வித்திட்டவர் நாவலர், நாவலரின் ஈழத்தமிழ் இலக்கிய முயற்சிகள், நாவலரின் தமிழக உறவுகள், நாவலரின் சிறப்புக்கள், நாவலரின் பிரபந்தத் திரட்டு, நாவலரின் அருட்பா மறுப்பு, நாவலரின் பைபிள் மொழிபெயர்ப்பு, நாவலரின் கிறிஸ்தவ கண்டன நூல்கள், நாவலர் தாள் இறைஞ்சுதும், நாவலர் பதிப்பு நூல்கள், ஆறுமுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் நூல்கள், நாவலர் தொடர்பான தகவல்கள் சில, நாவலர் நினைவு நிகழ்வுகள் சில ஆகிய 25 தலைப்புகளில் இதிலுள்ள கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

11907

பிரஹ்மஸ்ரீ ஷெய்கு நெய்னா முஹம்மது (தாளையான் சுவாமி) ஞானதேசிகர் அவர்களது சரித்திரம். சி.அருணாசலம். கொழும்பு 12: சி.அருணாசலம், தாளையான் ஆத்மார்த்த அந்தரங்கக் கூட்டத்தவர், 115 மெஸஞ்சர் வீதி, 2வது பதிப்பு, 1990, 1வது பதிப்பு, 1963.(கொழும்பு 12: தாளையான் அச்சகம், 115 மெஸெஞ்சர் வீதி).

96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிகளில் தென் இந்தியாவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் "நம்புதாளை" என்ற ஊரில் பிரஹ்மஸ்ரீ செய்குநெய்னா முஹம்மது (தாளையான் சுவாமி) அவதரித்தார். 12 ஆண்டுகள் முத்துப்பேட்டையில் நிஷ்காமிய தவமியற்றிய பின்னர் கொழும்புக்கு வந்து இங்கே நிரந்தரமாகக் குடியேறினார். அவரை "கொழும்பாண்டவர்கள்" என்று இன மத பேதம் கடந்து மக்கள் ஆன்மீக வழியில் பின்பற்றினார்கள். அடியார்கள் சமயம் கடந்த "மோன சமரஸம்" எத்தகையதென்ற அனுபூதிவாய்க்கப் பெற்றார்கள். கொழும்பில் சாதுக்களும் பக்கீர்களும் வாழ்வதற்கென "தாளையான் அச்சகத்தை" சுவாமிகள் உருவாக்கினார். அவர் 1955 ஓகஸ்ட் 3ம் திகதி கொழும்பிலேயே மகாசமாதியை அடைந்தார்கள். இரத்மலானை விமான நிலையத்திற்கு அருகாமையில் கந்தவளை என்னும் பூங்காவில் வணக்கத்துக்குரிய அவரது சமாதி உள்ளது. இந்நூல் தாளையான் சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றை பதிவுசெய்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12954).

11908

மெய்கண்டதேவர் வரலாறு. நீர்வை மணி. நீர்வேலி: ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலைச் சமூகம், 1வது பதிப்பு, நவம்பர் 2004. (யாழ்ப்பாணம்: ஷாம்பவி பதிப்பகம்).

10 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 21x15 சமீ.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ் மாவட்ட அலுவலகம் நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலையின் அனுசரணையுடன் நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலய திருநாவுக்கரசு நாயனார் குருபூசை மடத்தில் நடாத்திய சைவசித்தாந்தப் பெருவிழாவின்போது 11.11.2004 அன்று வெளியிடப்பட்ட சிறுநூல். சைவர்களால் புறச்சந்தான குரவர்கள் எனப் போற்றப்படும் நால்வருள் முதன்மையானவர் மெய்கண்டதேவர். சைவ சித்தாந்த நூல்களுள் தலையாய சிவஞான போதத்தை இயற்றியவர் இவரே. மெய்கண்ட தேவர், திருவெண்ணெய் நல்லூரில் பிறந்தவர். கிபி 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார். இவர் பரஞ்சோதி முனிவர் என்னும் பெரியாரிடம் ஞானோபதேசம் பெற்றவர். இவர் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளைத் தமிழில் வெளிக்கொணர்ந்த மாணவர் பரம்பரையை உருவாக்கியவர். இவரிடம் 49 மாணவர்கள் கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றனர். இவர்களுள் அருணந்தி சிவாச்சாரியார் தலை சிறந்தவர். இவர் தனது குருவின் சிவஞான போதத்தை அடியொற்றிச் சிவஞான சித்தியார், இருபா இருபஃது என்னும் இரு நூல்களை இயற்றினார். மெய்கண்டாரின் இன்னொரு மாணவரான மனவாசகம் கடந்தார் என்பவர் உண்மை விளக்கம் என்னும் சித்தாந்த நூலை இயற்றினார். மெய்கண்டதேவர், தனது குருவான பரஞ்சோதியார் உபதேசித்த சிவஞான சூத்திரங்களைத் தமிழில் அருளிச் செய்தார். அதற்கு அவரே வார்திகமும் அருளிச் செய்தார். அந்த நூல் சிவஞான போதம் என்று வழங்கலாயிற்று. (மெய்கண்ட சாத்திரங்களுள் முதலாவதாக விளங்கும் நூல்). அந்த நூலே பிற்காலத்தில் திரு அவதாரம் செய்தருளிய சந்தான ஆசாரியர்களின் சைவ சித்தாந்த நூல்களுக்கு ஆதாரமான நூலாக அமைந்தது. மெய்கண்டதேவர் ஐப்பசி மாத சுவாதி நட்சத்திரத்தில் முத்தியடைந்தார்.

11909

யோக சுவாமிகள் ஐம்பதாவதாண்டுக் குருபூசை மலர். எஸ்.வினாசித்தம்பி (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: எம்.திலகரத்தினம், சிவதொண்டன் நிலையம், 434, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2014. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டேர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி).

(10), 168 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21.5 சமீ.

யோகர் சுவாமிகளின் 50ஆவது ஆண்டு குருபூசை தினம் 01.04.2014 அன்று யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் அனுசரிக்கப்பட்டபோது வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இது. சிவயோக சுவாமிகள் பற்றியும், அவரது நற்சிந்தனைகள் பற்றியும் பல்வேறு அறிஞர்கள் எழுதிய 39 தமிழ் ஆக்கங்களுடன் 8 ஆங்கில ஆக்கங்களுமாக மொத்தம் 47 ஆக்கங்கள் இம்மலரை அலங்கரித்திருக்கின்றன. சிவயோக சுவாமிகள் (1872-1964) ஈழத்தில் வாழ்ந்த சைவத் துறவியும் திருக்கயிலாய பரம்பரையில் நந்திநாத சம்பிரதாயத்தில் வந்த குருபரம்பரையின் 161ஆவது சற்குருவும் ஆவார். யாழ்ப்பாணம், மாவிட்டபுரத்தில், அம்பலவாணர் - சின்னாச்சியம்மை தம்பதிக்கு, மே 29 1872இல் மகனாகப் பிறந்த யோகசுவாமிகளின் இயற்பெயர் சதாசிவம் என்பதாகும். இளம்வயதிலேயே தாயாரை இழந்த இவர் கொழும்புத்துறையில் ஒரு கத்தோலிக்கப் பாடசாலையில் ஆரம்பக்கல்வியையும் பின்னர் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் மேற்படிப்பும் கற்றார். கல்வி முடிந்ததும் இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் களஞ்சியக் காப்பாளராகப் பணியில் இணைந்து, கிளிநொச்சியில் இரணைமடுக் குளத்திட்டத்தில் பணிபுரிந்தார். 1905இல் நல்லூர்த் தேரடியில், முதன்முதலாக செல்லப்பா சுவாமியைக் கண்ட நாளிலிருந்து இவர் வாழ்க்கை திசைமாறியது. பின் ஐந்து ஆண்டுகள் அவரிடம் சீடனாக வாழ்ந்தார். கொழும்புத்துறையில் ஆச்சிரமமொன்றமைத்த அவர், நாடளாவிய யாத்திரை செல்வதும், நற்சிந்தனைகளை வழங்குவதுமாக இருந்தார். 1934 டிசம்பரில், அவரால் தொடக்கப்பட்ட சிவதொண்டன் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் 1964ஆம் ஆண்டு மாலை 3:30 மணியளவில் யோகசுவாமிகள் தனது 91வது வயதில் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் இறைபதமெய்தினார்.

11910

ஜீவனானந்தம்: ஜீவசேவையில் ஆனந்தித்த ஜீவனின் சிறப்பு மலர். மலர்க்குழு. மட்டக்களப்பு: இராமகிருஷ்ண குருகுலப் பழைய மாணவர் மன்றம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2012. (கொழும்பு 6: குமரன் அச்சகம், 39, 36வது ஒழுங்கை).

xiv, 330 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 25x17.5 சமீ.

இந்நூலில் ஆத்மஞானி சுவாமி ஜீவனானந்தர் அவர்களின் வாழ்வும் ஆன்மீகப் பணிகளும் போற்றிப் புகழப்பட்டுள்ளன. ஆசிகளும் முகவுரையும் முதற்பகுதியிலும், ஆய்வுகளும் அனுபவப் பகிர்வுகளும் இரண்டாவது பிரிவிலும், நேர்காணல்களும் நினைவுத் தூறல்களும் மூன்றாவது பிரிவிலும் நிழற்படங்களும் நினைவுச் சின்னங்களும் நான்காவது பிரிவிலும், மாணவரில்லத்து மேலாளர்களும் மன்றத்து நிர்வாகமும் ஐந்தாவது பிரிவிலும் காணப்படுகின்றன. ஆசிகளை சுவாமி சர்வ ரூபானந்தர், பேரருட்திரு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, சுவாமி கபாலீசானந்தா, சுவாமி ஆத்மகனானந்தா, சுவாமி ஞானமயானந்தா, க.கணேசு ஆகியோர் வழங்கியுள்ளனர். சுவாமி ஜீவனானந்தர் பற்றிய ஆய்வுகளையும் அனுபவப் பகிர்வுகளையும் வெல்லவூர்க் கோபால், அன்புமணி இரா. நாகலிங்கம், கு.குணநாயகம், T.வரகுணம், செல்வி வ.கணபதிப்பிள்ளை, க.தங்கேஸ்வரி, சி.பத்மநாதன், தேசகீர்த்தி மாசிலாமணி திருநாவுக்கரசு, பேராசிரியர் மா. செல்வராஜா, செல்வி வ.இளையதம்பி, அருள்ஞானேஸ்வரி சண்முகராஜா, இ.பாக்கியராஜன், காசுபதி நடராஜா, கந்தப்போடி விநாயகமூர்த்தி, பிரட்மன் வீரக்கோன், த.செல்வநாயகம், அல்ஹாஜ். எம்.எம்.மஹ்றூப் கரீம், பொ.சீனித்தம்பி, கு.தெட்சணாமூர்த்தி, பெ.சு.மணி, வே. கணபதிப்பிள்ளை, எஸ்.தில்லைநாதன், க.ஞானரெத்தினம், சிவானந்தம் சிறீதரன், ஆலாலசுந்தரம், எஸ்.எதிர்மன்ன சிங்கம், க.குருநாதர், கு.ஜதீஸ்குமார், யசோதை துஷ்யந்தராஜா, திலகவதி சின்னத்தம்பி, க.பாஸ்கரன், கோணாமலை கணேசபிள்ளை, தங்கவடிவேல், க.நமசிவாயம், திலகவதி ஹரிதாஸ், சிவானந்தராஜா, தெ.ரவீந்திரமூர்த்தி, அசிறி இந்துனில் அற்புதானந்தன், மாஸ்டர் சிவலிங்கம், எம்.சீவரத்தினம், நா. கணபதிப்பிள்ளை, வி.மலர்விழி, தருமரெத்தினம், அ.நல்லம்மா, எம். கணேசராஜா, க.மதிவண்ணன், பொ.கந்தையா, நே.துரைராசசிங்கம், ந.பரஞ்சோதி, த.செந்தூரன், சந்திரமதி தயாகரன், செல்வநாயகி, அ.கனகசூரியம், சோ.சிவலிங்கம், வே.யோகிதாஸ், வை.வீரசிங்கம், சுவாமி நீலமாதவானந்தாஜீ, தவதர்ஷினி சுரேஷ்குமார், இ.விஜயகுமார், எஸ்.ஏ.ஐ.மத்தியூ, தமயந்தி தவராஜா, மு. சோமசுந்தரம்பிள்ளை, கா.சிவலிங்கம் ஆகியோர் வழங்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

923 சமூகவியல்துறை சார்ந்தோர்

11911

சாதனையாளன் ஐ.தி.சம்பந்தன்: அகவை 80 முத்துவிழா மலர்-2016. மலர்க்குழு. லண்டன்: சுடரொளி வெளியீட்டுக் கழகம், 15, Rutland Road, London E7 8PQ, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் அச்சகம், 39, 36வது ஒழுங்கை).

vi, 76 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

யாழ்ப்பாணம், காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. ஐ.தி.சம்பந்தன் அவரது சமய, இலக்கிய, வெளியீட்டு, சமூகப் பணிகளுக்கும் அப்பால், ஒரு தொழிற்சங்கவாதியாகவும், அரசியல்வாதியாகவும் அறியப்பெற்றவர். அவரது வாழ்வும் பணிகளும் பற்றிய மலரும் நினைவுகளை அவரை அறிந்த பல பிரமுகர்களும் இங்கு பதிவுசெய்துள்ளனர். அவரது 80ஆவது பிறந்த தினத்தையொட்டி வெளியிடப்பட்டுள்ள முத்துவிழா மலர் இதுவாகும். தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டம், வலுநிலையடைதலை ஊக்கப்படுத்திய தலைவர்களுள் முக்கியமானவர் இவர். கருத்தியல், அஹிம்சாவாதம், சத்தியாக்கிரகம் என சமஉரிமை நியாயத்துவத்தை தென்னிலங்கையருக்குப் புரியவைக்கத் துணிந்து போராடியவர். தொழிற்சங்கவாதி, ஆன்மீக வளர்ச்சிப் பங்காளி எனப் பொதுநலத் தொண்டராகத் தன் வாழ்வைத் தொடர்ந்தவர். மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்காகவும் அவர்களது உரிமைக்காகவும் குரல்கொடுத்து, அவர்களுக்காகப் போராடி உறவை வலுப்படுத்த முனைந்தவர். தந்தை செல்வா, அ.அமிர்தலிங்கம், திரு திருச்செல்வம் போன்ற தலைவர்களுடன் இணைந்து இயங்கியவர். பன்முகப் பண்பாளராகத் திகழும் தமிழ்ப் பற்றாளர் என்ற பெருமைக்குரிய ஐ.தி.சம்பந்தனை கௌரவிக்கும் நோக்கில் இம்மலர் உருவாக்கப்பட்டுள்ளது. பொன். பாலசுந்தரம், சிவ.மகேசன், கனக சிவகுமாரன், வி.ஜே.போஸ், எஸ்.திருச்செல்வம் ஆகியோர் இம்மலரின் வெளியீட்டுக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

923.2 அரசியல் துறையினர்

11912

தியாக மாமலை. க.சச்சிதானந்தன். தெல்லிப்பழை: க.சச்சிதானந்தன், மாவிட்டபுரம், 1வது பதிப்பு, ஆவணி 1960. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம், 194ஏ, பண்டாரநாயக்க மாவத்தை).

vi, 84 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13 சமீ.

தமிழரசுக் கட்சித் தலைவர் வன்னியசிங்கத்தின் வரலாற்றை "தியாக மாமலை" என்ற நூலாக எழுதியுள்ளார். குமாரசாமி வன்னியசிங்கம் (13 அக்டோபர் 1911 - 17 செப்டம்பர் 1959), இலங்கைத் தமிழ் அரசியல்வாதியும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தொடக்கக்காலத் தலைவர்களில் ஒருவருமாவார். 1947 முதல் இறக்கும் வரை கோப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். அமரர் கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியசிங்கம அவர்களின் தந்தை தெல்லிப்பழையைச் சேர்ந்த வழக்கறிஞரும் தமிழறிஞருமான வி. குமாரசாமியாவார். வன்னியசிங்கம் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றார். பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் பயின்று லண்டன் பல்கலைக்கழகப் பட்டத்தை 1933 ஆம் ஆண்டில் பெற்றார். பின்னர் அவர் சட்டத்துறையில் நுழைந்து வழக்கறிஞராகி, யாழ்ப்பாணத்தில் சட்டப்பணியைத் தொடர்ந்தார். அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தினால் தொடங்கப்பட்ட இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் மூலம் இலங்கை அரசியலில் நுழைந்தார். 1947 தேர்தலில் கோப்பாய்த் தொகுதி வேட்பாளர் பி. ஜி. தம்பியப்பா தேர்தல் பரப்புரை நேரத்தில் காலமானதை அடுத்து வன்னியசிங்கம் அவருக்குப் பதிலாக தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றார். 1948 ஆம் ஆண்டில் கட்சியை விட்டு விலகி தமிழரசுக் கட்சியைச் சா. ஜே. வே. செல்வநாயகம் 1949 டிசம்பர் 18 இல் தொடங்கிய போது அக்கட்சியின் தொடக்கக் காலத் தலைவர்களில் ஒருவராக இருந்தார். இந்நூலாசிரியர் கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் (அக்டோபர் 10, 1921 - மார்ச் 21, 2008) ஈழத்துக் கவிஞரும் எழுத்தாளரும் ஆவார். சச்சிதானந்த என்ற பெயரிலும், ஆனந்தன், யாழ்ப்பாணன், பண்டிதர், சச்சி ஆகிய புனைபெயர்களிலும் எழுதியுள்ளார். மாவிட்டபுரத்தில் பிறந்த இவர் மகாவித்வான் நவநீதகிருஷ்ண பாரதியிடம் முறையாகத் தமிழ் கற்றவர். 1971 ஆம் ஆண்டில் லண்டனில் முதுகலைமாணிப் பட்டத்தையும், 2001 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார். பட்டப் படிப்பை முடித்துக் கொண்ட சச்சிதானந்தன் 1946 ஆம் ஆண்டில் நீர்கொழும்பு புனித மேரி கல்லூரியில் கணித ஆசிரியராவும், 1947-1948 காலப்பகுதியில் உடுவில் மகளிர் கல்லூரியில் கணித ஆசிரியராகவும் பணியாற்றினார். 1960 இல் யாழ்ப்பாணம் பரமேசுவரா கல்லூரியிலும், பின்னர் 1965 வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் பணியாற்றியபின் 1965 முதல் 1967 வரை அரசினர் பாடநூற் சபையில் பணியில் சேர்ந்தார். 1967 முதல் 1981 வரை பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் உளவியல் விரிவுரையாளராகவும், பின்னர் அதன் உப-அதிபராகவும் பணியாற்றினார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10741).

11913

பொன்னம்பலம் அருணாசலம்: அரசியல் ஞானி-வித்யா விற்பன்னர் சீவிய சரித்திரச் சுருக்கம். மலர்க்குழு. கொழும்பு: சேர். பொன்னம்பலம் அரணாசலம் நூற்றாண்டுவிழாச் சபை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1953. (கொழும்பு: கொழும்பு அப்போத்திக்கரீஸ் கம்பெனி, குமார வீதி, கோட்டை).

46 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

சேர் பொன்னம்பலம் அருணாசலம் (செப்டம்பர் 14 1853 -ஜனவரி 9 1924) அவர்கள் கேட் முதலியார் என அழைக்கப்பட்ட அருணாசலம் பொன்னம்பலம், செல்லாச்சி (சேர் முத்து குமாரசுவாமியின் சகோதரி) ஆகியோரின் மூன்றாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதல்வர். குமாரசாமி முதலியார், சேர். பொன். இராமநாதன் ஆகியோரின் சகோதரர். இவரது மனைவியின் பெயர்: சுவர்ணம் நமசிவாயம். பிள்ளைகள்: அருணாசலம் மகாதேவா, சிவானந்தன் அருணாசலம், அருணாசலம் இராமநாதன் ஆகியோர். சேர் பொன்னம்பலம் அருணாசலம் சட்ட நிரூபண சபையில் சேர் பொன் இராமநாதனுக்குப் பின் அங்கத்துவம் வகித்தார். அரசாங்க சேவையில் பணியாற்றும் காலத்திலேயே சுயராஜ்ய உணர்வால் உந்தப்பெற்றார். ஓய்வு பெற்ற பின் அரசியல், சமூக, கல்விப் பண்பாட்டுத் துறைகளிலே ஈடுபட்டார். 1919-ம் ஆண்டு இலங்கையருக்கு கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கோரி இலங்கைத் தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. இதனுடைய முதல் தலைவராக 1919 முதல் 1922 வரை பொன்னம்பலம் அருணாசலம் விளங்கினார். ஆனால் சேர். ஜேம்ஸ் பீரிசும், E. J.சமரவிக்கிரமவும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் அருணாசலம் உட்படத் தமிழ்த் தலைவர்கள் காங்கிரசில் இருந்து விலகி தமிழர் சீர்திருத்தக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கினர். அவரது காலத்தில் இலங்கையின் தேசியத் தலைவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டவர். தானே முன்னின்று உருவாக்கி அதன் முதற் தலைவராக இருந்து இலங்கைத் தேசியக் காங்கிரஸை தாபித்த பின் அதை விட்டு வெளியேறி சேர் பொன். அருணாசலம் அவர்கள் இலங்கைத் தமிழர் கழகத்தைத் (Ceylon Tamil League) தொடங்கினார். பொன் அருணாசலத்தின் வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாகக் கூறும் இந்நூல் அவரது பிறந்ததின நூற்றாண்டு விழாவின் போது 14 செப்டெம்பர் 1953 அன்று வெளியிடப்பட்டது.

11914

மருதமுனை முத்து மஷூர் மௌலானா:பார்வையும் சில பதிவுகளும். ஏ.எச்.எம். அஸ்வர். தெகிவளை: அஸ்மினா பதிப்பகம், இல. 4, பாதியா மாவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 2013. (தெகிவளை: ஏ.ஜே.அச்சகம், இல. 44, ஸ்டேஷன் வீதி).

xiv, 133 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-99185-2-3.

கல்முனை மாநகர மேயர், 1947இல் சோல்பரி ஆணைக்குழுவின் சிபாரிசில் உருவாக்கப்பட்ட செனற் சபையின் வாழும் ஒரேயொரு உறுப்பினர், ஜனதா பெருந்தோட்டப் பணிப்பாளர், ஹோட்டல் கூட்டுத்தாபன பிரதித் தலைவர், நிறைவேற்றுப்பணிப்பாளர் - தேசிய வீடமைப்பு அதிகார சபை, சென்னை-இந்தியத் தூதராலயத்தின் முதலாவது செயலாளர் ஆகிய பதவிகளை வகித்தவர் மருதமுனை மஷூர் மௌலானா. யேமன் நாட்டில் பிறந்த முன்னோர்களின் வழித்தோன்றலான இவர் கிழக்கிலங்கையில் மருதமுனையைப் புகலிடமாகக் கொண்டவர். கொழும்பு சட்டக்கல்லூரியில் பயின்றவர். சாஹிராக் கல்லூரியில் (பேராசிரியர்) சிவத்தம்பியின் சக மாணவர். இவரைப்பற்றிய வாழ்வும் பணிகளும் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்களால் பதிவுசெய்யப்படுகின்றது. பாராளுமன்ற உறுப்பினரான நூலாசிரியர் ஏ.எச்.எம்.அஸ்வர், பாராளுமன்றப் பேரவை உறுப்பினராகவும், முன்னாள் முஸ்லிம் இராஜாங்க அமைச்சராகவும் ஊடக ஆளாட்சி அதிகாரியாகவும் ஜனாதிபதியின் ஆலோசகராகவும் பணியாற்றியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பார்வையில் மஷுர் மௌலானா தமிழரசுக் கட்சியின் பீரங்கிப் பேச்சாளராகவும், தந்தை செல்வாவின் தத்துப் பிள்ளையாகவும், நற்றமிழின் நாயகராகவும், செல்லையா இராஜதுரையின் ஆதரவாளராகவும் இனம் காணப்படுகின்றார்.

11915

மலையகத்தின் எழுச்சித் தலைவர் பெ.சந்திரசேகரன். *எச்.எச்.விக்கிரமசிங்க (புனைபெயர்: மாத்தளை செல்வா). கொழும்பு 13: பெ.சந்திரசேகரன் நினைவுக்குழு, 39-21, அல்விஸ் பிளேஸ், 1வது பதிப்பு, ஜனவரி 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xxii, *122 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.*

*1.1.2010இல் மாரடைப்பினால் மரணமாகிய மலையகத்தின் அரசியல்வாதியான பெரியசாமி சந்திரசேகரன் பற்றிய வாழ்வும் பணிகளும் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகரான பெ.சந்திரசேகரன் மலையக மக்களின் வாழ்வின் முன்னேற்றத்துக்காகப் பெரிதும் பாடுபட்ட ஒரு சமூகப் போராளியாகக் கருதப்பட்டவர். மலையக மக்கள் முன்னணி (*Up-Country People's Front*) இலங்கையில் இயங்கிவரும் அரசியல் கட்சியும் தொழிற் சங்கமுமாகும். இது பொதுவாக இந்திய வம்சாவளி தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்திவந்துள்ளது. 1986 ஆம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரசில் ஏற்பட்ட தலைமைத்துவ சிக்கல் காரணமாக இ.தொ.கா.விலிருந்து விலகிய பெ.சந்திரசேகரன் மலையக மக்கள் முன்னணியை ஆரம்பித்தார். இறுதி வரையிலும் அவரே அதன் தலைவராகவும் இயங்கினார். இந்நூலில் மாத்தளை செல்வா அவர்கள் அமரர் சந்திரசேகரன் பற்றிய ஈழத்தின் பிரபல அரசியல்வாதிகள், புத்திஜீவிகளின் கருத்துக்களைக் கட்டுரைகளின் உருவில் பெற்றுத் தொகுத்து வழங்கியிருக்கிறார். நிமல் சிறிபால டி சில்வா, ரணில் விக்கிரமசிங்க, வாசுதேவ நாணயக்கார, டியூ குணசேகர, சி.பி.ரத்நாயக்க, கரு ஜெயசூரிய, தினேஷ் குணவர்த்தன, ரவூப் ஹக்கீம், பசில் ராஜபக்ஷ, முருகேசு சந்திரகுமார், மாவை. சோ. சேனாதிராஜா, பெருமாள் ராஜதுரை, பழனி திகாம்பரம், திஸ்ஸ வித்தாரண, சி.ஸ்ரீதரன், பிரபா கணேசன், காமினி விஜித் விஜயமுனி சொய்சா, ஜெ.ஸ்ரீரங்கா, வீ.இராதாகிருஷ்ணன், ஆர் யோகராஜன், அல்ஹஜ் ஏ.எச்.எம்.அஸ்வர், தயாசிறி ஜயசேகர ஆகிய அரசியல் பிரமுகர்களுடன், பேராசிரியர் சோ.சந்திரசேகரன், எம்.வாமதேவன், என்.எம்.அமீன், எச்.எச்.விக்கிரமசிங்க, மு.நித்தியானந்தன் (லண்டன்), சாந்தினி சந்திரசேகரன் ஆகியோரும் அமரர் பெ.சந்திரசேகரன் பற்றிய தமது நினைவுகளைப் பகிர்ந்துகொண்டுள்ளனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11916

யுகபுருஷர் தொண்டமான்: ஒரு நிருபரின் நினைவலைகள். எஸ்.டி.தியாகராஜா. குண்டசாலை: கல்வி அமைச்சகம் (தமிழ்), இந்து கலாச்சார, கைத்தொழில் வர்த்தக, வாணிப, சுற்றுலாத்துறை, மத்திய மாகாணம், பல்லேகல, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2001. (கொழும்பு 13: கே.கோவிந்தராஜ், ராணி பதிப்பகம், 23, மகா வித்தியாலய மாவத்தை).

(16), 128 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21x14 சமீ.

இலங்கை மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா மாத்தளையில் செப்டெம்பர் 15-16ஆம் திகதிகளில் நடைபெற்றவேளையில் வெளியிடப்பட்ட சிறப்புமலர். மலையத் தமிழரின் அரசியல் தலைவரான சௌமியமூர்த்தி தொண்டைமான் அவர்களின் வாழ்வும் பணிகளும் பற்றி பத்திரிகையாளர் S.T.தியாகராஜா அவர்கள் தினகரன் வாரமஞ்சரியில் 35 வாரங்களாக "நினைத்ததை முடிப்பவன்" என்ற தலைப்பில் எழுதிவந்த கட்டுரைத் தொடரின் நூலுருவே இதுவாகும். அமரர் சௌமியமூர்த்தி தொண்டைமான் (ஆகஸ்டு 30, 1913 - அக்டோபர் 30, 1999) இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களது முக்கிய அரசியல் தலைவர்களில் ஒருவராவார். 86 வது வயதில் இவர் இறக்கும் போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவராகவும் இலங்கை அரசின் அமைச்சரவையில் வயது கூடிய அமைச்சராகவும் காணப்பட்டார். இவர் தொடர்ந்து 21 வருடங்கள் இலங்கை பாராளுமன்றில் அமைச்சராகப் பதவி வகித்தார். 1924 ஆம் ஆண்டு தமது 11வது அகவையில் இலங்கை வந்த தொண்டைமான், தமது 14வது வயது தொடக்கம் கம்பளை புனித அந்திரேயர் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்றார். ஜூலை 24, 1939 இல் ஜவஹர்லால் நேருவின் கருத்துக்கேற்ப ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இந்திய காங்கிரசின் கம்பளைக் கிளையின் தலைவராக, ஆகஸ்ட் 13, 1939 இல் சௌமியமூர்த்தி தொண்டைமான் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1940 மே மாதம் இலங்கை இந்திய காங்கிரசின் தொழிற்சங்க கிளை ஆம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்ப தலைவராக சௌமியமூர்த்தி தொண்டைமான் தெரிந்தெடுக்கப்பட்டார். இந்நிகழ்வே இவரது வாழ்வின் முதலாவது பிரதான அரசியல் நிகழ்வாகும். 1945 ஆம் ஆண்டு நுவரெலியா பொதுக்குழுவில் இலங்கை இந்திய காங்கிரசினதும் அதன் தொழிற்சங்கத்தினதும் தலைவராக தெரிந்தெடுக்கப்பட்டார். 1947 இல் 95 பாராளுமன்ற அங்கத்தவர்களை தெரிவு செய்வதற்காக பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. இலங்கை இந்திய காங்கிரஸ் எட்டு தொகுதிகளுக்கு போட்டியிட்டு ஏழு இடங்களை கைப்பற்றியது. சௌமியமூர்த்தி தொண்டைமான் நுவரெலியா தொகுதியில் போட்டியிட்டு, 9386 வாக்குகள் பெற்று பாராளுமன்றத்தில் இடதுசாரி கட்சிகளோடு எதிர்க்கட்சியில் அமர்ந்தார். தொண்டைமான் இலங்கையில் முக்கிய அரசியல் சக்தியாக வளரத் தொடங்கிய போது 1948 பெப்ரவரி 4 இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. 1952 இல் இலங்கை வாழ் இந்திய மக்களுக்கு குடியுரிமை வழங்குமாறு தொண்டைமான் பேரணியொன்றையும் சத்தியாக்கிரகம் ஒன்றையும் ஆரம்பித்தார். இப்போராட்டங்கள் காரணமாக அரசு இந்தியர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியுரிமைக்கு விண்ணப்பிக்க கோரியது. 850,000 பேர் குடியுரிமைக்காக விண்ணப்பித்தனர். இலங்கை இந்திய காங்கிரசினது பெயர் இலங்கை சனநாயக காங்கிரஸ் என்றும் இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிற் சங்கத்தினது பெயர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்றும் மாற்றப்பட்டது. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் (இ.தொ.கா.) தலைவராக சௌமியமூர்த்தி 1955 முதல் 1999 இல் அவர் இறக்கும் வரையில் பதவி வகித்தார். 1978 முதல் தொடர்ந்து 21 வருடங்கள் இலங்கை பாராளுமன்றத்தில் அமைச்சராகப் பதவி வகித்தார்.

மேலும் பார்க்க: 11628

923.5 பொது நிர்வாகத்துறையினர்

11917

காசிநூல்: அமரர் திரு.தம்பிப்பிள்ளை காசிநாதன் அவர்களின் நினைவுமலர் 21.01.2017. மலர் வெளியீட்டுக் குழு. மானிப்பாய்: திருமதி தம்பிப்பிள்ளை காசிநாதன், சுதுமலை தெற்கு, 1வது பதிப்பு, ஜனவரி 2017. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டேர்ஸ், இல. 424, காங்கேசன்துறை வீதி).

126 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

அமரர் தம்பிப்பிள்ளை காசிநாதன் (4.6.1938 - 22.12.2016)அவர்களின் சிவபதப்பேறு குறித்த நினைவு மலர். திருமுறைப் பாடல்களையும், அமரர் காசிநாதன் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளையும் அஞ்சலி உரைகளையும் அவரது வாழ்வின் முக்கிய நிகழ்வுகளைப் பதிவுசெய்து வைத்திருக்கும் புகைப்படங்களையும் இம்மலர் கொண்டுள்ளது. 21.01.2017இல் நிகழ்ந்த 31ம் நாள் நிகழ்வின்போது வெளியிடப்பட்டது. வட இலங்கையின் சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1960இல் கொழும்பு கொமர்ஷியல் கம்பெனியில் இலிகிதராகப் பணியில் சேர்ந்தவர். 1965இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில் நிர்வாகத்துறையில் எழுதுவினைஞராகப் பணியாற்றத் தொடங்கினார். 1975இல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண வளாகத்திற்கு இடமாற்றம் பெற்றார். பின்னர் அங்கே உதவி நிதியாளர்(1979), உதவிப் பதிவாளர் (1980), சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (1985), பிரதிப் பதிவாளர் (1993) ஆகிய பதவிகளைப்பெற்று 1998இல் ஓய்வுபெற்றார். அதன் பின்னர் 2005இல் மீண்டும் மீள் நியமனம் பெற்று பிரதிப் பதிவாளராகச் சிலகாலம் பணியாற்றினார்.

11918

ரங்கராஜாங்கம். இ.இளங்கோவன், இ.உமாகாந்தன், என்.சிறீதேவி (பதிப் பாசிரியர்கள்). கொழும்பு: திரு. சிவகுருநாதன் ரங்கராஜா மணிவிழாக் குழு, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

viii, 194 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண தலைமைச் செயலாளர் திரு சிவகுருநாதன் ரங்கராஜா அவர்களின் பணிவிதைப்புப் படையல். இம்மணிவிழா மலர் நான்கு பகுதிகளைக் கொண்டது. முதலாவது பகுதி திரு. சிவகுருநாதன் ரங்கராஜா ஒரு பார்வை என்ற கருப்பொருளில் அவரது வரலாற்றுக் குறிப்புகளையும் தொழில்சார் விருத்திகளையும் அவரது பணிகள் பற்றிய பார்வையினையும் வழங்குகின்றது. இரண்டாம் பகுதி விழா நாயகனின் பன்முகப்பட்ட ஆளுமையை வாழ்த்தி நல்லாசி கூறியோரின் செய்தி களைக் கொண்டதாகவுள்ளது. மூன்றாம் பகுதி "சுதந்திரத்துக்குப் பிற்பட்ட இலங்கையின் பன்முகப்பட்ட பார்வை" என்ற கருப்பொருளின் கீழ் எழுதப்பெற்ற பன்முக ஆய்வுகளின் பயனுள்ள தொகுப்பாக அமைந்துள்ளது. இப்பிரிவில் நவீன முகாமைத்துவமும் நவீன நிர்வாகமும் ஆசிரியர்களின் வகிபாகமும் (மா. நடராசசுந்தரம்), சுதந்திரத்திற்குப் பின்னர் நிகழ்ந்த கல்வியின் படிமலர்ச்சி பரிமாணங்கள் (சபா.ஜெயராசா), இலங்கைப் பொருளாதார வளர்ச்சிப் போக்கும் வறுமையும் (வி.பி.சிவநாதன்), அறிவுசார் பொருளாதார முறைகளை அளவிடல்(சோ.சந்திரசேகரம்), இலங்கையில் அரச கரும மொழியாகத் தமிழ் (அ.சண்முகதாஸ்), சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் குடித்தொகைப் பண்புகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் (கா.குகபாலன்), இலங்கையில் விவசாய நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் (இரா.சிவச்சந்திரன்), இலங்கையில் தேசக் கட்டுமானமும் வரலாற்று ஐதீகங்களும் (ச.சத்தியசீலன்), கடந்த ஆறு தசாப்த இலங்கைத் தமிழ்ப் புனைகதைகளின் இலக்கிய நேர்த்தி (க.குணராசா), இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின் மொழியும் வாழ்வும்: ஓர் இலக்கியக் கண்ணோட்டம் (மனோன்மணி சண்முகதாஸ்), சுதந்திரத்துக்குப் பின்னர் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி (செ.யோகராசா), சுதந்திரத்திற்குப் பின் இலங்கைப் பெண்கள் (எம்.எஸ்.தேவகௌரி) ஆகிய பன்னிரு ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. நான்காம் பகுதி திரு. சி.ரங்கராஜா அவர்களது ஆய்வேடு களினதும் ஆன்மீகப் பார்வையையும் சுட்டும்வகையில் அமைந்த கட்டுரைகளையும் கொண்டுள்ளது. அன்றாட வாழ்வில் ஆன்மீகம், மாற்றத்தை முகாமை செய்தல், Challenges of Rehabilitation and development in the North East, Poverty related Issues in the North East Provinces ஆகிய நான்கு ஆக்கங்கள் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளன.

923.6 சமூக சேவகர்கள்

11919

ஆவணஞானி அமரர் குரும்பசிட்டி இரா.கனகரட்ணம் நினைவுப் பகிர்வு. புஷ்பா கனகரட்ணம் (தொகுப்பாசிரியர்). Ontario M1H3B7: Dr. Pushpa Kanagaratnam, Ph.D., C. Psych., Clinical Psychologist, Psychological Recovery Clinic, 2100 Ellesmere Rd, Suite 334, Scarborough, 1வது பதிப்பு, 2017. (கனடா: சில்வர் பிறின்ற் ஹவுஸ், மிசிசாகா, ஒன்றாரியோ மாகாணம்).

146 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணஞானி அமரர் குரும்பசிட்டி இரா.கனகரட்ணம் (01.08.1935-22.06.2016) அவர்களின் ஓராண்டு நினைவுதின நிகழ்வின்போது வெளியிடப்பெற்ற மலர். குடும்பத்தினரின் நினைவுரைகளையடுத்து, சங்கொலி அருணகிரியின் நேர்காணலுடன் தொடங்கும் இந்நூலின் நினைவுப் பதிகைகளை மார்க்கண்டன் ரூபவதனன், சுந்தரம் திவகலாலா, மா.க.ஈழவேந்தன், எஸ்.கஜானி, வி.கந்தவனம், தம்பித்துரை மங்களேஸ்வரி, மு.க.சு.சிவகுமாரன், குரும்பசிட்டி அசோகன், என். செல்வராஜா, சச்சி ஸ்ரீகாந்தா, கோபிநாத் ஜெயச்சந்திரன், குரும்பசிட்டி ஐங்கரன், வேல். வேலுப்பிள்ளை, வாணி சிவராஜன், வீணை மைந்தன், ந.பார்த்திபன், ரவிநந்தா, சொ.சந்திரசேகரன், வசந்தி ஆகியோர் பதிவுசெய்துள்ளனர். ஈழத் தமிழரின் நூற்றாண்டுக்கால வரலாற்றை, அதற்கான வரலாற்றுத் தரவுகளை ஆவணப்படுத்தும் ஒரு புனிதப் பணியினை, தனியொருவராக நின்று கடந்த 45 வருடங்களாக இவர் எம்மினத்துக்காகச் செய்துவந்துள்ளார். அமரர் குரும்பசிட்டி இரா.கனகரத்தினத்தின் தேடல் பணி 1956முதல் பலத்த சிரமத்தின் மத்தியில் தொடங்கியது. 1958, 1977, 1983 ஆகிய காலகட்டங்களில் இடம்பெற்ற இன வன்முறைகளின் காரணமாக அவரது சேகரிப்புகள் பாரிய அச்சுறுத்தல்களை கண்டியில் உள்ள அவரது இல்லத்தில் எதிர்கொண்டன. ஈற்றில் அவற்றை பலத்த சிரமத்தின் மத்தியில் வடபகுதிக்குக் கொண்டுவந்து, குரும்பசிட்டியில் இருந்த அவரது இல்லத்தில் வைத்துப் பாதுகாத்ததுடன், அங்கிருந்தபடியே தன் தேடல்களையும் ஆவணப்பதிவுகளை தேடித்தேடிச் சேகரித்தார். இந்திய இராணுவம் வட கிழக்கை ஆக்கிரமித்திருந்த வேளையிலும் அவருக்கு இவ்வாவணங்களால் சிக்கல்கள் ஏற்பட்டன. எந்தவொரு நிறுவன உதவியுமின்றி தனிமனித முயற்சியாக வேலை செய்யும்போது, பாரிய சந்தேகங்கள் பாதுகாப்புத் தரப்பில் ஏற்படுவதில் வியப்பேதும் இருக்கவில்லை. ஒரு தனிமனிதனாக வெற்றிகரமாக அவற்றைச் சமாளித்தவர் குரும்பசிட்டி இரா.கனகரத்தினம் அவர்கள்.

11920

மலரும் நினைவுகள்: சுயசரிதை. பொன். சந்திரசேகரி. நெடுங்கேணி: பொன். சந்திரசேகரி, பெரியகுளம், 1வது பதிப்பு, ஆவணி 2011. (வவுனியா: வாணி கணினிப் பதிப்பகம், இல. 79, கந்தசாமி கோவில் வீதி).

121 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

வன்னிப் பிரதேசத்தின் கல்வி வாய்ப்பற்ற ஒரு பிரதேசமாக அந்நாளில் இருந்த பெரியகுளம் கிராமத்தில் பிறந்து, திண்ணைப்பள்ளியில் கற்றுத் தமிழ் ஆசிரியராக நல்லூர் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சிபெற்று தமிழாசிரியராகப் பணியாற்றத் தொடங்கியவர் பொன். சந்திரசேகரி அவர்களாவார். அவரது சுயசரிதை மண்ணோடும் மக்களோடும் பின்னிப் பிணைந்தது. நெடுங்கேணி, முல்லைத்தீவுப் பகுதிகள் சம்பந்தமான பல வரலாற்றுக் குறிப்புகள் இந்நூலில் பொதிந்துள்ளன. 1977இல் பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட எக்ஸ். எம். செல்லத்தம்புவை எதிர்த்து தனது 52ஆவது வயதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயேட்சையாகப் போட்டியிட்டவர் இவர். இவரது துணிச்சலும் தமது மண்ணின் மக்களின்மேல் கொண்ட நம்பிக்கையும் பற்றும் இவரை இம்முடிவினை எடுக்கத் தூண்டியிருக்கலாம். தேர்தலில் தோல்வியுற்ற போதிலும், சமூக சேவை நிறுவனங்களில் இணைந்து உண்மைத் தொண்டாற்றி மக்களுக்கு வாழ்வாதாரம் கிடைக்க அல்லும் பகலும் உழைத்ததால் மக்களிடையே மிகுந்த செல்வாக்கை இவரால் பின்னாளில் பெற்றுக்கொள்ள முடிந்தது. தன் அயராத சேவையினால் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தை ஒரு மத்திய மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தவும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், விளைபொருள் அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றை அங்கு நிலைபெறச் செய்யவும் அயராது பாடுபட்டவர். இத்தகையதொரு சமூக சேவகரின் வாழ்வும் பணிகளும் சுயசரிதையாக இங்கு விரிகின்றது.

923.61 விடுதலைப் போராளிகள்

11921

ஆறிப்போன காயங்களின் வலி. வெற்றிச்செல்வி (இயற்பெயர்: வேலு சந்திரகலா). யாழ்ப்பாணம்: தவமணி வெளியீட்டகம், 1வது பதிப்பு, ஜுன் 2016. (யாழ்ப்பாணம்: சிவராம் பதிப்பகம்).

xiv, 182 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-41027-1-2.

முன்னாள் பெண் போராளிகளின் பம்பைமடு தடுப்பு முகாம் வாழ்வு தொடர்பான வரலாற்று நூல். இது உண்மைச் சம்பவங்களை அடுக்கடுக்காகக் கொண்ட வலி சுமந்த மனங்களின் கதையாகும். தமிழர்களின் விடுதலைப் போராட்டம் முடிந்துவிட்டதாய் உலகமே பேசிக்கொண்டிருந்த நாட்களில், உயிர் வாழ்வதற்காகப் போராடிக்கொண்டிருந்த ஒரு தொகுதித் தமிழர்களின் உணர்வுகளை இங்கே பதிவுசெய்ய ஆசிரியர் முனைந்திருக்கின்றார். மனதை உருக்கும் கருத்துக்கள், கண்களைக் கலங்க வைக்கும் சம்பவங்கள், ஒரு சில இடங்களில் சில சம்பவங்கள் மனதில் புன்னகையையும் கூட அரும்பவைக்கின்றன. பம்பைமடு வாழ்க்கையின் பல தளங்களையும் பல இயல்புகளையும் தனக்கே உரித்தான எழுத்து நடையில் மிகவும் சாதுரியமாகவும் இலகுவாகவும் 29 அத்தியாயங்களில் விவரித்துச் செல்கின்றார். வெளித்தொடர்புகள் எதுவுமற்ற நிலையில் முன்னாள் பெண் போராளிகளில் ஒரு தொகுதியினர் அடைக்கப்பட்டிருந்த, புனர்வாழ்வு நிலையம் என அரசாங்கத்தால் அழைக்கப்பட்ட பம்பைமடு தடுப்பு முகாம் வாழ்வு பற்றி இங்கே பேசப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின் ஓமந்தையில் வைத்து 19.5.2009 இல் போராளிகள் மக்களிடமிருந்து பிரிக்கப்பட்டார்கள். அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒரு தொகுதிப் பெண் போராளிகள் 21.05.2009 இல் பம்பைமடு தடைமுகாமில் அடைக்கப்பட்டார்கள். ஓமந்தையிலிருந்து பம்பைமடு தடுப்பு முகாமிற்குச் சென்று அங்கிருந்து 06.04.2010இல் வெற்றிச்செல்வி விடுதலையானது வரையான ஓராண்டு காலத்தில் நடந்தவற்றை இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுசெய்துள்ளார். ஈழப்போரின் இறுதி நாட்கள் என்ற இவரது முன்னைய நூலின் தொடர்ச்சியாக இந்நூல் அமைந்துள்ளது.

11922

தோழர் விசுவானந்ததேவன்1952-1986: நினைவு நூல். பா.பாலசூரியன். சென்னை: தோழர் விசுவானந்ததேவன் நினைவுநூல் வெளியீட்டுக்குழு, ஆய்வகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2016. (சென்னை 600005: கணபதி எண்டர்பிரைஸ்).

xii, 290 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ.

1983 ஜூலை இன வன்செயலுக்குப் பின்னர் தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைக்காக ஆயுதப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த பெரும்பாலான இயக்கங்கள் பிளவுகளைச் சந்தித்திருந்தன. அவ்வகையில் தோழர் விஸ்வானந்ததேவன் இணைந்திருந்த தமிழீழ தேசிய விடுதலை முன்னணியும் (NLFT) இரண்டாக உடைந்து, அவரது தலைமையில் 1986இல் தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி (PLFT) உருவாகியது. வடமராட்சி கரணவாய் மேற்கில் கல்லுவம் என்ற கிராமத்தில் 29.11.1952இல் பிறந்தவர் விஸ்வலிங்கம் விசுவானந்ததேவன். 1970களில் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் வளாகத்தில் பட்டம்பெற்று 1975இல் காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் பொறியியலாளராகப் பணியாற்றியவர். சில காலங்களில் தொழில்வாய்ப்பினைப் புறக்கணித்து, இளவயதிலேயே மார்க்சிய அரசியலில் முழுநேரமாக ஈடுபட்டவர். ஒக்டோபர் 1986இல் தமிழகத்தை நாடிய படகுப் பயணத்தின் போது கொல்லப்பட்டவர். இந்நூல் தோழர் விசுவானந்ததேவன் பற்றி அவரை அறிந்த 25 அரசியல் பிரமுகர்களின் கட்டுரைகளை உள்ளடக்குகின்றது. இக்கட்டுரைகளினூடாக சமகால அரசியலும், தோழர் விஸ்வாவின் வாழ்வும் பணிகளும் விரிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. தோழர் விஸ்வானந்ததேவனால் எழுதப்பட்ட சில அரசியல் கட்டுரைகளையும் இந்நூல் உள்ளடக்குகின்றது.

11923

பசிலனின் இன்னொரு போர்முகம் பால்ராஜ்: ஒரு வரலாற்றுப் பதிவு. விதானையார் (கஜன்). பிரான்ஸ்: மீடியா சென்டர், BP 18, 93701, Drancy Cedex, 1வது பதிப்பு, நவம்பர் 2016. (பாரிஸ்: Imprimerie RAS).

286 பக்கம், புகைப்படங்கள், விலை: ஸ்டேர்லிங் பவுண் 10., அளவு: 22x15.5 சமீ.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரிகேடியர் பால்ராஜ் அவர்கள் குறித்த ஒரு வரலாற்றுப் பதிவான இந்நூலின் பிரதான கட்டுரை முன்னாள் போராளியின் நினைவுப் பதிவாக ஈழமுரசு (பாரிஸ்) பத்திரிகையில் வெளிவந்த வரலாற்றுத் தொடராகும். முன்னாள் போராளியான விதானையார் (கஜன்) வழங்கிய அனுபவக் குறிப்புகளை வைத்து, சுவையான தொடராக்கியவர் ஈழமுரசு பொறுப்பாசிரியரான ஜெய்சந்தர் அவர்கள். இந்நூல் அமரர் பால்ராஜின் பிறந்த தினமும் மாவீரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமுமாகிய 27.11.2016 அன்று பாரிசில் வெளியிடப்பட்டது. இந்நூலில் வே. பிரபாகரன், பொன். தியாகம், விதானையார், பரமு மூர்த்தி, வ.கௌதமன், பழ.நெடுமாறன், கவிஞர் காசி. ஆனந்தன், கி.ஜெய்சந்தர் ஆகியோரினால் எழுதப்பட்ட பிரிகேடியர் பால்ராஜ் பற்றிய முன்னுரைக் குறிப்புகளும், இவற்றைத் தொடர்ந்து பிரதான கட்டுரைத் தொடரும், தொடர்ந்து வரும் பின்னிணைப்புகளாக பிரிகேடியர் தீபன் (மாவீரன் பால்ராஜ்), ச.பொட்டு (விடுதலை வரலாற்றில் மூடப்படாத சரித்திரம்), கேணல் சூசை (மரபுவழி இராணுவமாக உலகைப் பார்க்கவைத்த பால்ராஜ்), யோ.செ.யோகி (பிரிகேடியர் பால்ராஜ் வீரத்தின் குறியீடு) ஆகியோரின் சிறப்புக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

11924

பைலற் ஞானம்: அமரர் பாலசுப்பிரமணியம் சிவஞானதாஸ் அவர்களின் நினைவு மலர். மலர் வெளியீட்டுக் குழு. லண்டன்: ஸ்லீ வெளியீடு, 607, Whitton Avenue West, Greenford, Middlesex, UB6 0DZ, 1வது பதிப்பு, மே 2012. (லண்டன்: அச்சக விபரம் தரப்படவில்லை).

(4), 147 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

வல்வெட்டித்துறை வேம்படியைப் பிறப்பிடமாகவும் இலண்டன் மிச்சத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு பாலசுப்பிரமணியம் சிவஞானதாஸ் (பைலற் ஞானம் (28.12.1966-29.04.2012) அவர்கள் 29.04.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அவரது 31ஆம்நாள் நினைவாக வெளியிடப்பட்ட நினைவஞ்சலி மலர் இது. பைலற் ஞானம் ஈழவிடுதலைப் போராட்டக் காலத்தில் இயக்கங்களின் போராளிகளை இடம் நகர்த்துவதிலும், தமிழகப் படகுப் பயணங்களுக்கு வழிகாட்டியாகவும் செயற்பட்டவர். இதன் காரணமாகவே விடுதலைப் போராளி யான கப்டன் பண்டிதர் இவருக்கு "பைலற்" என்ற அடைமொழியை வழங்கினார். பின்னாளில் பைலற் ஞானம் என்பது இவரது இயற்பெயராகவே நிலைத்துவிட்டது. இம்மலர், அன்னாரின் பொது வாழ்வு, குடும்பவாழ்வு என்பன பற்றிய பல்வேறு பிரமுகர்களினதும் மலரும் நினைவுகளைப் பதிவுசெய்கின்றது.

(மேலும் பார்க்க) 11649,11650

923.7 கல்வியியலாளர்கள்

11925

அடிகளார் நினைவாலய மலர்: 26.06.1999. வி.ரி.சகாதேவராஜா (மலராசிரியர்). காரைதீவு (கி.மா): சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்தப் பணிமன்றம், 1வது பதிப்பு, ஜுன் 1999. (சாய்ந்தமருது 14: ஸ்டார் ஒப்செட் பிரின்டர்ஸ், 502, பிரதான சாலை).

xx, 112 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x20.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விபுலாநந்த அடிகளாருக்கு அவர் பிறந்த ஊரில் ஒரு நினைவாலயம் அமைத்து அதனைத் திறந்துவைத்த வேளை 26.6.1999 அன்று வெளியிடப்பட்ட மலர். மலர் முழுவதும் சுவாமி விபுலாநந்தரின் வாழ்வும் பணியும் பற்றிய பல்வேறு தமிழிஞர்களின் படைப்புக்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. விபுலாநந்த அடிகளாரின் சிந்தனையும் செயற்பாடும், முஸ்லிம் நேசர் சுவாமி விபுலாநந்தர், விபுலாநந்த மணிமாலை, மதங்கசூளாமணியும் சுவாமி விபுலாநந்தரும், ஆனைப்பந்தியில் விபுலாநந்தர், சுவாமியுடனான சுகானுபவங்கள், கிழக்கு வானில் மற்றொரு விடிவெள்ளி ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தஜீ, வித்துவான் வெள்ளைவாரணனார் காட்டிய விபுலாநந்தர், முத்தமிழ் முனிவரின் ஒப்பியல் நோக்கு, தமிழியல் ஆய்வுக்கு விபுலாநந்த அடிகளாரின் பங்களிப்பு என இன்னோரன்ன கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18348).

11926

சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு நினைவுமலர் 1892-1992. மலர்க்குழு. கல்முனை: இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், 1வது பதிப்பு, 1992. (மட்டக்களப்பு: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).

(14), 74 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

பிரமுகர்களின் ஆசிச் செய்தியுடனும் விபுலாநந்தரின் வாழ்வையும் அவர்தம் பணிகளையும் விதந்துரைக்கும் பல கட்டுரைகளையும் தாங்கி வெளிவந்துள்ள சிறப்பு மலர் இது. விபுலாநந்த அடிகளாரின் கல்வித் தொண்டு (புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை), மிக்க மணம்பெற மிளிர்க நன்மலரே (த.கனகரெத்தினம்), நாமும் இராமகிருஷ்ண சங்கமும்-ஒரு கண்ணோட்டம் (கே.தியாகராஜா), விபுலாநந்த அடிகளாரும் அவர்கள் காட்டிய வாழ்க்கை நெறியும் (வே. தட்சணாமூர்த்தி), சுவாமி விபுலாநந்தரும் யாழ்ப்பாணத் தொடர்பும் (கு. சோமசுந்தரம்), முத்தமிழ் வித்தகமுனி விபுலாநந்தன் (அக்கரை மாணிக்கம்), சுவாமி விபுலாநந்தரும் அவர்தம் பணிகளும் (எஸ்.பொன்னுத்துரை), சுவாமி விபுலாநந்தரின் உரைநடை (பண்டிதர் வி.ரி.செல்லத்துரை), வித்தகனைத் துதிப்போம் (கே.தயானந்தன்), விபுலாநந்தர் எனும் விடிவெள்ளி (சு.சுதேஸ்வரி), கல்முனை இராமகிருஷ்ண வித்தியாலயம் ஒரு கண்ணோட்டம் (பெ. விஜயரெத்தினம்), கல்முனையில் கலாசாலை (சபா.நாகராஜன்), ஆல்போல் பரந்து அனைவருக்கும் உதவிய கல்முனை ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயம் (க.கந்தவனப்பிள்ளை), விழாச் செயலாளரின் செய்தி (எஸ். பரமநாதன்). ஆகிய கட்டுரைகள் மலரை அலங்கரிக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22026).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11927

பேராசிரியர் மா.கருணாநிதி: கல்விச்சேவை பாராட்டு விழா மலர். உ.நவரட்ணம், கி.புண்ணியமூர்த்தி, பீ.இராமதாஸ், தெ.மதுசூதனன் (மலர்க் குழு). கொழும்பு: பேராசிரியர் மா.கருணாநிதி பாராட்டு விழாக் குழு, 1வது பதிப்பு, நவம்பர் 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xliv, 384 பக்கம், அட்டவணைகள், தகடுகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

பேராசிரியர் மா. கருணாநிதி அவர்களின் கல்வித்துறைக்கான சேவையைக் கௌரவிக்கும் வகையில் அவரது நண்பர்கள், மாணவர்களால் இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. வாழ்த்துச் செய்திகள், வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து ஈழத்தின் பிரபல கல்வியியலாளர்களால் எழுதப்பட்ட கலவித்துறையின் பல்வேறு பிரிவுகள் தொடர்பான 43 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. பேராசிரியர் மா. கருணாநிதி கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பீடத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர். அதே பீடத்தினைச் சேர்ந்த தேசியக் கல்வி ஆராய்ச்சி மதிப்பீட்டு நிலையத்தின் பணிப்பாளராகவும் விளங்குகின்றார். முகாமைத்துவக் கொள்கை ஓர் அறிமுகம் (இணை ஆசிரியர்), கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள் ஆகிய நூல்களையும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய "கல்விச் சமூகவியல்" எனும் நூல் தமிழகத்தின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2008 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் கல்வியியல், உளவியல் எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

11928

பேரார்வம்: பீடாதிபதி க.பேர்ணாட் மணிவிழா வாழ்த்து மலர் 2014. ஆசிரியர் குழு. வவுனியா: மணிவிழாக் குழு, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2014. (வவுனியா: அகரம் பிரின்டர்ஸ், 54, கந்தசாமி கோவில் வீதி).

211 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளராகவும், இணைப்பாளராகவும், பீடாதிபதியாகவும் பணியாற்றிய கயித்தான் பெர்ணாட் அவர்களின் மணிவிழாவையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர். 14.01.1954இல் பிறந்த இவர் இளவாலை, புளிவளைந்தான் கிராமத்தைச் சேர்ந்தவர். இளவாலை, யாழ். புனித ஹென்றியரசர் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், பட்டப்பின் படிப்பையும் மேற்கொண்டவர். அவுஸ்திரேலியாவின் வூலோங்கன் பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணிப்பட்டம் பெற்ற இவர் இலங்கையில் அகில இலங்கை இன நல்லுறவு ஒன்றியத்தின் சாமஸ்ரீ பட்டம், அகில இலங்கை சமாதான நீதவான் பட்டம், மன்னார் தமிழ்ச்சங்கத்தின் நான்மறைக்கோன் பட்டம் ஆகியவற்றையும் பெற்றிருந்தவர். 1982-1984 காலகட்டத்தில் உதவிக் கணக்காளராக நீர்வேலி, சேவி கண்ணாடித் தொழிற்சாலையில் தனது பணியைத் தொடங்கிய இவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.3.1984 முதல் கல்வித்துறையில் இணைந்து, பட்டதாரி வணிக ஆசிரியராக கொழும்பில், அல் குசேனியா முஸ்லிம் மகா வித்தியாலயம், விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயம், விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் பணியாற்றியவர். கல்வித்துறையில் இலங்கை அதிபர் சேவை, இலங்கை கல்வி நிர்வாக சேவை, உதவிக் கல்விப் பணிப்பாளர், விரிவுரையாளர் என வளர்ந்து 20.10.1993 முதல் வவுனியா தேசியகல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாகப் பணியாற்றி வந்தவர். இவரது சேவை நயப்பு மலராக பல்வேறு சமூக, கல்விப்புல பிரமுகர்களின் வாழ்த்துரைகளுடன் இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது.

11929

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர். அகளங்கன் (இயற்பெயர்: நா.தர்மராஜா). வவுனியா: சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை, 1வது பதிப்பு, 1992. (மட்டக்களப்பு: சென்.ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).

(2), 14 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இலங்கையின் புகழ்பூத்த தமிழ்ப் பெரியார் சுவாமி விபுலாநந்தர் பற்றிய சுருக்கமான வாழ்க்கை வரலாற்று நூல். வவுனியா கல்வித் திணைக்களத்தின் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையினால் மாணவர்களுக்காக வெளியிடப் பட்டது. இச்சபையின் தலைவராக சி.நவரத்தினராசா அவர்கள் பணியாற்றியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14744).

11930

ஸ்ரீமத் சுவாமி விபுலானந்த ஜீ. F.X.C.நடராசா, சாம்பசிவம் தவமணிதேவி, த.செல்வநாயகம். மட்டக்களப்பு: மகாவித்துவான் இல்லம், 127, மத்திய வீதி, 1வது பதிப்பு, சித்திரை 1992. (மட்டக்களப்பு: புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்).

vi, 18 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 25x17.5 சமீ.

ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தரின் வாழ்வையும் பணிகளையும் சுருங்கச் சொல்லும் ஒரு நூல். சமர்ப்பணம், என் உரை (F.X.C.நடராசா), ஆசியுரை (சுவாமி ஆத்மகனாநந்தா), அணிந்துரை (சுவாமி ஜீவானந்த மகராஜ்), துறவு நிலை, பண்டிதரை ஆட்கொண்ட அடிகளார், மதங்க சூளாமணி - 1926, யாழ் நூல், பேராசிரியர் - தமிழ்த் துறைத்தலைவர், அண்ணாமலை இலங்கை பல்கலைக்கழகங்கள், குணங்கள் இயல்புகள் தன்மைகள், விபுலானந்த சுவாமி துறவு வாழ்க்கை வரலாறு, உயர்திரு விபுலானந்த அடிகளாருக்கு: நீலமண்டல ஆசிரியப்பா, நூலாசிரியர்கள் மூவரைப் பற்றி - F.X.C.நடராசா ஆகிய உள்ளடக்கங் களைக் கொண்டதாக இந்த நூல் அமைந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13261).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

924 மொழியியலாளர்கள்

11931

கரம்பொன் தனிநாயகம். *ச.அருளானந்தம். திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, மே 2014. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.14.1 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).*

viii, *57 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 160., அளவு: 21x15 சமீ.,* ISBN: *978-955-06359-8-6.*

கரம்பொன் மண தந்த தனிநாயகம் அடிகளாரின் வாழ்வும் பணிகளும் இந் நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. வண. சேவியர் தனிநாயகம் அவர்கள் (2.8.1913-1.9.1980) ஈழத்துத் தமிழறிஞர், கல்வியாளர். தமிழ், ஆங்கிலம் உட்பட உரோம மொழி, போர்த்துகீசியம், பிரெஞ்சு முதலிய மொழிகளில் சரளமாக உரையாடவும் சொற்பொழிவாற்றவும் வல்லவர். பல ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்து அங்குள்ள நூலகங்களில் பல தமிழ்க் கையெழுத்துப்பிரதி நூல்கள், மற்றும் அச்சிடப்பெற்ற தமிழ் நூல்கள் பற்றி ஆராய்ந்து வெளிக் கொணர்ந்தார். Tamil Culture *என்னும் ஆங்கில ஆய்விதழை ஆரம்பித்து அதன் ஆசிரியராக 1951-1959 வரை இருந்தார். 1964 ஆம் ஆண்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அமைக்க அடிகோலினார். தனிநாயகம் அடிகளார் ஊர்காவற்துறையில் கரம்பொன் என்ற கிராமத்தில் நாகநாதன் ஹென்றி ஸ்ரனிசுலாசு, சிசிலியா இராசம்மா பஸ்தியாம்பிள்ளை ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். அடிகளாரது தந்தை நாகநாதன், மற்றும் அவரது தந்தைவழிப் பூட்டனார் தனிநாயக முதலி ஆகியோர் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். தனிநாயக அடிகளின் இயற்பெயர் சேவியர் நிக்கலஸ் ஸ்ரனிசுலாசு என்பதாகும். பிற்காலத்தே இவர் தமிழில் கொண்ட தீராத காதலினால் உரோமன் கத்தோலிக்க குருவாக நியமிக்கப்பட்டபோது தனது பெயரினை சேவியர் எஸ் தனிநாயகம் என்ற தமிழ்ப் பெயரினையும் சேர்த்துக் கொண்டார். தனது தொடக்கக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை 1920 முதல் 1922 வரை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் ஆங்கில வழிக் கல்வி பயின்றார். பின்னர் 1931 முதல் 1934 வரை கொழும்பில் புனித பேர்னாட் மறைப்பள்ளியில் சேர்ந்து இறையியல் கல்வி பயின்றார். இக்காலத்தில் பல்வேறு மொழிகளைக் கற்றுத் தேர்ந்து ஒரு பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார். பின்னாளில் பெரிதும் உடல் நலிவுற்ற தனிநாயகம் அடிகளார், 1980 செப்டம்பர் 1 மாலை 6.30 மணியளவில் உயிர் நீத்தார். 1981ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனிநாயக அடிகளின் தமிழ்ச் சேவையினை நினைவு கூர்ந்து பேராசிரியர் சு. வித்தியானந்தன் துணைவேந்தராகப் பணியாற்றியபோது அவருக்கு இறப்புக்குப் பின்னரான கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 239493).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

926 பிரயோக விஞ்ஞானிகள், மருத்துவர்கள்

11932

வைத்திய கலாநிதி அமரர் இளையதம்பி நன்னித்தம்பி அவர்களின் நினைவுமலர். வைத்திய கலாநிதி பொன்னுத்துரை குடும்பத்தினர். சுன்னாகம்: வைத்திய கலாநிதி பொன்னுத்துரை குடும்பத்தினர், புன்னாலைக் கட்டுவன் தெற்கு, 1வது பதிப்பு, நவம்பர் 2008. (யாழ்ப்பாணம்: கங்கை பிரின்டர்ஸ், 781, காங்கேசன்துறை வீதி, சிவலிங்கப் புளியடி).

(2), 94 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

தோத்திரப் பாக்கள், திருமுறை ஓதும் முறை, அமரர் இளையதம்பி நன்னித்தம்பி (டாக்டர் பொன்னுத்துரை) அவர்களின் வாழ்க்கைச் சரிதம் ஆகிய உள்ளடக்கங்களைக் கொண்ட சிறப்பு மலர். 18.11.2008 அன்று விநியாகிக்கப்பட்டது.

927.5 ஓவியக்கலைஞர்கள்

11933

ஓவிய மாமணி: வீ.கே (வி.கனகலிங்கம்). பொன்விழா மலர்க் குழு. கொழும்பு: தாய்நாடு பதிப்பகம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1990. (கொழும்பு 12: யுனைட்டெட் மேர்ச்சன்ட்ஸ் லிமிட்டெட், 71, பழைய சோனகத் தெரு).

(2), 32 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 19x14 சமீ.

எழுபது வயதைக்கண்ட ஈழத்தின் பிரபல ஓவியரான விசுவலிங்கம் கனகலிங்கம் அவர்களின் ஓவியவாழ்வின் பொன்விழா 19.08.1990 அன்று கொழும்பு, கொள்ளுப்பிட்டி சசக்காவ மண்டபத்தில் இடம்பெற்ற வேளை வெளியிடப்பட்ட சிறப்பு மலர். 28.09.1920இல் ஆனைக்கோட்டையில் பிறந்த இவர், ஓவிய மன்னர், வர்ணவாரிதி, ஓவியமாமணிஆகிய பட்டங்களைப் பல்வேறு அமைப்புகளின் வாயிலாகப் பெற்றவர். இம்மலரில் வேலணை வீரசிங்கம், எஸ்.டி.சிவநாயகம், யோகா பாலச்சந்திரன், அன்னலட்சுமி இராஜதுரை, ஆ.சிவநேசச் செல்வன் ஆகியோரின் மலரும் நினைவுகளைத் தாங்கிய கட்டுரைகளும், வீ.க. எழுதிய "சுமதி" என்ற சிறுகதையும், "எப்படி ஓவியரானேன்?" என்ற சுயசரிதைக் கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. "சுமதி" என்ற கதை அவர் வீரகேசரி நிறுவனத்தில் பணியாற்றியபோது லிங்கம் என்ற புனைபெயரில் எழுதப்பெற்று 19.11.1944இல் வீரகேசரி வாரமலரில் பிரசுரமாகியது. அக்காலகட்டத்தில் லிங்கம், திருவாதிரை ஆகிய பெயர்களில் இவர் பல சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகளை எழுதியிருக்கிறார். இந்நூலுக்கானஅட்டைப்பட ஓவியம் அவரது மகன் கண்ணன் அவர்களால் தீட்டப்பட்டுள்ளதுடன் இந்நூல் இலவசமாக எஸ்.பீ.சாமி அவர்களால் விநியோகிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10515).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11934

ஜோர்ஜ் கீற். அருந்ததி சபாநாதன் (பதிப்பாசிரியர்). கொழும்பு: ஜோர்ஜ் கீற் பவுண்டேஷன், 1வது பதிப்பு, 1991. (கொழும்பு 2: த யூனியன் பிரஸ் பிரைவேற் லிமிட்டெட், 169/1 யூனியன் பிளேஸ்).

42 பக்கம், ஓவியங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-9065-05-X.

இந்நூலில் ஓவியங்களுக்கிடையே உள்ள கட்டுரைகள் 1977ம் ஆண்டில் ஜோர்ஜ் கீற் வாழ்த்துக் குழுவின் வெளியீட்டில் பேராசிரியர் ஆஸ்லி அல்பேர்ட் அவர்களினால் எழுதப்பட்டவையாகும். ஜோர்ஜ் கீற் இந்த நூற்றாண்டு (1901-1993) முழுக்க வாழ்ந்த தலைசிறந்த ஈழத்து ஓவியக் கலைஞர். கீற் சிறு வயது முதல் ஓவியம் வரைவதில் ஆர்வம் காட்டி 1927இல் தீவிர ஓவியராக மாறினார். கண்டி திரித்துவக் கல்லூரியில் கல்வி கற்ற ஜோர்ஜ் கீற் தனது பத்து வயதிலேயே சிலுவையில் இயேசு எனும் சித்திரத்தை வரைந்து புகழ் பெற்றார். மல்வத்தை பீடத்தை சேர்ந்த பிக்குவான பின்னவள தீரானந்த தேரோவிடம் பௌத்த சமயக் கருத்துகளை கற்றார் .இரவீந்தரநாத் தாகுரின் நூல்கள் மூலம் இந்து சமயக் கருத்துகளை விளங்கி கொண்டார்.சம்ஸ்கிருத காவியமான கீத கோவிந்தத்தை மொழி . இந்திய இராகம் தொடர்பான விளக்கங்களை பெற்று அது தொடர்பான பல ஓவியங்களை வரைந்தார். கவி சிலுமின, முவதேவ்தாவத,போன்ற சிங்கள கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இவரது ஆக்கங்களில் மேலைத்தேய, கீழைத்தேய கலப்பு, பிக்காசோவின், தடித்த தெளிவான கோடுகளின் செல்வாக்கு போன்றவற்றை காணலாம். கிருஷ்ணன்- ராதை காதல் காட்சிகளை சித்தரிக்கும் ராகினி விராகினி, தலதா பெரகர,குயவன் வேலைத்தளம், நாயிகா, இயமனும் சாவித்ரியும், போன்றன இவரது சிறந்த ஆக்கங்களாகும். இவரது பௌத்த சமயம் சார் ஓவியங்கள் பொரளை கோதமி விகாரையில் காணப்படுகிறது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18968).

927.92 நாடகக் கலைஞர்கள்

11935

தைரியம்: கலாபூஷணம் கலைவேந்தன் அமரர் ம.பொனிபஸ் தைரியநாதனின் நினைவுமலர். மலர் வெளியீட்டுக் குழு. யாழ்ப்பாணம்: ம.பொனிபஸ் தைரியநாதன் குடும்பத்தினர், இல.82, ஓடக்கரை வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2017. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ மாருதி பதிப்பகம்).

88 பக்கம், வண்ணத் தகடுகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.

அமரர் கலாபூஷணம் கலைவேந்தன் அமரர் ம.பொனிபஸ் தைரியநாதனின் நினைவாக 16.6.2017 அன்று வெளியிடப்பட்ட சிறப்பு மலர். 05.06.1949 அன்று சுன்னாகத்தில் மரியான்-வைத்தியானம் தம்பதிகளின் மகனாகப் பிறந்த நாடகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞரான தைரியநாதன் 16.5.2017 இல் தனது 68ஆவது அகவையில் மரணமானவர். நடிகராக மாத்திரமன்றி நெறியாளராகவும், ஒப்பனையாளராகவும். சிறந்த பாடகராகவும் அரங்கியல்துறையில் பரிணமித்தவர். காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பணியாற்றிய இவர் நடிகமணி வி.வி.வைரமுத்துவுடன் இணைந்து பல நாடகங்களில் பெண்பாத்திரமேற்றுப் புகழ்பெற்றவர். நாடகத்துறையிலும் சமகாலத்தில் ஈடுபட்டுப் புகழ்பெற்றவர். இந்நூலில் அவரது நாடக வாழ்க்கை பற்றிய பல்வேறு அனுபவப் பகிர்வுகள் சக கலைஞர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

927.94 விளையாட்டு வீரர்கள், பிரமுகர்கள்

11936

பத்மநாதம்: அமரர் T.P.**பத்மநாதன் அவர்களின் ஞாபகார்த்த வெளியீடு.** மலர்க்குழு. தெல்லிப்பழை: மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய்ச் சங்கம்), இணைவெளியீடு, தெல்லிப்பழை: மகாஜனக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிதியம் (விளையாட்டு நிதி), முன்னாள் உதைபந்தாட்ட வீரர்கள், 1வது பதிப்பு, மார்ச் 2016. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டர்ஸ், திருநெல்வேலி).

36 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

மகாஜனக் கல்லூரியின் நூலகராகவும், கல்லூரி உதைபந்தாட்ட அணியினரின் பயிற்றுநருமாகப் பணியாற்றிய அமரர் T.P.பத்மநாதன் அவர்களின் நினைவுமலர். மலர்க்குழு உறுப்பினர்களாக பிரதி அதிபர் ந.பவன், பொ.இராஜகாந்தன், க. மோகன்ராம், ஆசிரியர் சி.ரமேஷ் ஆகிய நால்வரும் பணியாற்றியுள்ளனர். இம்மலரில் 17 ஆக்கங்கள் இருமொழிகளிலும் எழுதப்பட்டுள்ளன. மகாஜனாவின் அடிச்சுவட்டில் ரி.பி.பத்மநாதன், மகாஜனா உதைபந்தாட்டத்தின் பிதாமகன், மகாஜனன்களின் நெஞ்சங்களில் என்றென்றும் வாழும் T.P., அமரர் திரு. T.P.பத்மநாதனின் பெயரும் புகழும் என்றென்றும் நிலைத்திருக்கும், அமரர் திரு. T.P.பத்மாதனும் மகாஜனாவின் உதைபந்தாட்ட சாதனைகளும், காற்பந்தாட்ட இளவரசன், ரி.பியின் காலம் மகாஜனாவின் பொற்காலம், முடியாது என்பது முட்டாள்களின் அகராதி என நிறுவிய ரி.பி. ஒரு நினைவுப் பகிர்வு, ஆசானும் நானும், T.P. க்கு கல்லூரி செய்யும் நன்றிக்கடன், மனித நேயத்தின் மறுவடிவம் நீயே, சின்ன மாமா, எம் இதயங்களில் இருந்து ஆகிய தலைப்புக்களில் அமரர் T.P. பத்மநாதன் பற்றிய நினைவுப்பகிர்தல்கள் காணப்படுகின்றன. இவற்றுடன் ஆங்கில மொழிமூலமான ஐந்து ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

928 இலக்கிய அறிஞர்கள், புலவர்கள்

11937

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்: பதிவும் பகிர்வும்.கை.சரவணன், ந. மயூரரூபன், சி.நிஷாகரன், லேணையூர் சுரேஷ், முல்லைக் கமல், ரீ.ரமணன். யாழ்ப்பாணம்: எழுகலை இலக்கியப் பேரவை, 1வது பதிப்பு, ஜூலை 2015. (யாழ்ப்பாணம்: நோபிள் பிரின்டர்ஸ்).

viii, 245 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 25.5x18.5 சமீ., ISBN: 978-955-7842-00-4.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்களது நேர்காணல் இவ்வாவணத்தின் முதலாவது பதிவாக உள்ளது. கை.சரவணன், ந.மயூரரூபன், சி.நிஷாகரன், வி. பி.ஜோசப் ஆகியோர் இந்நேர்காணலை மேற்கொண்டுள்ளனர். தொடர்ந்து வரும் "வழிகாட்டியோரும் சகபாடிகளும்" என்ற பிரிவில் அ.சண்முகதாஸ், இ.பால சுந்தரம், சபா ஜெயராசா, என்.சண்முகலிங்கன், க.தேவராஜா, ம.வ.கானமயில்நாதன், பீ.எஸ்.பெருமாள், சு.செல்லத்துரை, விபி.சிவநாதன், கனகசபை நடராஜர், எஸ். திருச்செல்வம், ச.வே.பஞ்சாட்சரம், செ.யோகராசா, ஆறு திருமுருகன், கே.ஆர். டேவிட், சோ.தேவராஜா, ச.முருகானந்தன், ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன், தி.திருநந்தகுமார், ந.சண்முகப்பிரபு, வ.க.பரமநாதன், என்.கணேசலிங்கம், டேவிட் லிகோரி, சு.ராஜன், இணுவையூர் பாஸ்கர், செ.செல்வராஜா, துரை எங்கரசு, டானியல் செளந்திரன், ம.கதிர்காமநாதன், வை.கதிரமலை, ம.சந்திரபோஸ், எஸ். சீவரத்தினம், க.கமலேஸ்வரன், கோகிலா மகேந்திரன், ச.நகுலேஸ்வரன், வே.ஐ.வரதராஜா, க.சிதம்பரநாதன், ராஜநாயகம் பாரதி, ச.ராதேயன், வளவை வளவன், என்.கே.துரைசிங்கம் ஆகியோரின் மனப்பதிவுகள் இடம்பெற்றுள்ளன. தொடர்ந்துவரும் "இணைந்து வளர்ந்தவர்கள்" என்ற பிரிவில் வ.மகேஸ்வரன், எஸ்.ரகுராம், க.ஸ்ரீகணேசன், ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம், ந.லோகதயாளன், த.சிவகுமாரன், கை.சரவணன், வேலணையூர் சுரேஸ், ரி.குமரன்-ரி.அருட்குமரன், ச.கமலநந்தினி, இ.அருணகிரிவாசன், நாக சிவசிதம்பரம், செ.செல்வகுமார், ஆதிலட்சுமி சிவகுமார், சி.கதிர்காமநாதன், தி.சிதம்பரபாரதி, ந.மயூரன், முல்லைக்கமல், சி.பீஸ்மன், சிவப்பிரகாசம் ராஜ்குமார், பு.சத்தியமூர்த்தி, வி.பி.ஜோசப், தே.தவராஜசேகரம், காயத்திரி பயஸ்ராஜா, அலெக்ஸ் பரந்தாமன், ந.ஞானசூரியர், ம.சாம் பிரதீபன், சி.நிஷாகரன், க.தே.புரட்சிதாசன் ஆகியோர் தம் வாழ்வில் சிதம்பர திருச்செந்தினாதன் ஏற்படுத்திய இனிய தருணங்களை நினைவுகூர்ந்துள்ளனர். தொடர்ந்து இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய வெட்டுமுகம், என்னுடையதும் அம்மாவினுடையதும், மணல்வெளி அரங்கு ஆகிய சிறுகதைத் தொகுப்புகளுக்காக நா.சுப்பிரமணியன், கா.சிவத்தம்பி, சி.சிவசேகரம் ஆகியோர் வழங்கிய முன்னுரைகள் இடம்பெற்றுள்ளன. இறுதிப்பிரிவில் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், மனமும் மனத்தின் பாடலும் (முல்லைக்கமல்), களத்திலே வீழ்வோம் (குழல்), செய்தித்துறை ஒரு பார்வை (தவராஜா சத்தியன்), நிதர்சனத்தின் புத்திரர்கள் (கந்தையா ஸ்ரீகணேசன்),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணின் வேர்கள் (க.இரத்தினசிங்கம்) ஆகிய நூல்களுக்கு எழுதி வழங்கிய முன்னுரைகள் இடம்பெற்றுள்ளன.

11938

கணேசையர் நினைவு மலர். மலர்க் குழு. தெல்லிப்பழை: ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், குரும்பசிட்டி, 1வது பதிப்பு, 1960. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xliii, 348 பக்கம், விலை: ரூபா 7.50, அளவு: 24.5x18.5 சமீ.

மகாவித்துவான் மறைத்திரு சி.கணேசையர் அவர்கள் (க.கி.நடராஜன்), ஐயரும் புலவரும் (கு.அம்பலவாணபிள்ளை), வித்துவசிரோமணி பிரமஸ்ரீ கணேசையரின் சைவத் தொண்டுகள் (ச.குமாரசுவாமிக் குருக்கள்), ஈழநாட்டு உரையாசிரியர்கள் (மா.பீதாம்பரன்), வித்துவசிரோமணி பிரமஸ்ரீ சி.கணேசையர் அவர்கள் (ப. சிவானந்தையர்), ஈழம் வளர்த்த உரைநடை (எப்.எக்ஸ்.சி.நடராசா), ஈழநாடுஞ் சைவமும் (ச.அம்பிகைபாகன்), தொல்காப்பியம் (சி.கணபதிப்பிள்ளை), புதியன புகுதல் (தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்), இலக்கிய மதிப்பீடு (மு.வரதராசனார்), பழமையும் புதுமையும் (கா.பொ.இரத்தினம்), தொல்காப்பியர்-தொல்பெரும் மொழிநூற் புலவர் (சி.இலக்குவனார்), நல்லறமும் நற்றிணையும் (சொ. சிங்காரவேலனார்), சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு (எஸ்.தனிநாயக அடிகள்), கனாத்திறம் உரைத்தல் (இராஜரத்தினம் அம்மையார்), வாழும் வேந்தர் (சீ. நயினார் முகம்மது), சங்ககாலத்திற் காதல் (மா.இராசமாணிக்கனார்), முப்பாலும் நாற்பயனும் (வ.நடராஜன்), திருக்குறட் கடவுள் வாழ்த்து ஆராய்ச்சி (கே.ஈ.மதியாபரணம்), கம்பன் காட்டும் இல்லுக்குரிய நல்ல சூழல் (பொ. கிருஷ்ணபிள்ளை), அருந்தமிழ்ப் புலவரின் அஞ்சாப் பெருமை (வ.மு.இரத்தினேசுவர ஐயர்), காவடிச் சிந்து (அ.மா.பரிமணம்), ஓதும் மறைகளில் ஓங்காரம் (கே.எம். பாலசுப்பிரமணியம்), தமிழிலக்கிய மரபும் பக்திப் பாடல்களும் (வி.செல்வநாயகம்), சம்பந்தன் தன்னைப் பாடினான் என்றதின் ஆராய்ச்சி (ப.சோதிமுத்து), சீகாழிச் சேயும் திருமங்கை மன்னனும் (மகேஸ்வரி மகாதேவா), குமரகுருபர சுவாமிகள் (ஜே.எம்.சோமசுந்தரம்பிள்ளை), சிதம்பரம் (மு.ஞானப்பிரகாசம்), சிவாநுபூதிச் செந்நெறி (க.நவரத்தினம்), கொங்குநாட்டிற் சைவம் (ம.இராமச்சந்திரன்), சமந்தகூடம் அல்லது சிவனொளிபாதம் (கே.வீ.எஸ்.வாஸ்), மொழிபெயர்ப்புஞ் சொல்லாக்கமும் (ச.பேரின்பநாயகம்), காளிதாசன் (ச.அமிர்தாம்பிகை), இரகுவம்சம் (பொன்.முத்துக்குமாரன்), எங்குருவின் இணையடிகள் ஏத்தி வாழ்வோம் (இ.நமசிவாய தேசிகர்), ஈழத்துப் புலவர் சரிதைதனை யாத்த மூர்த்தி (ச.பொன்னுத்துரை), மங்கல வாழ்த்துப்பா (நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர்), வெள்ளணி மங்கலம் (சோ.இளமுருகனார்), தொல்-சொல்லதிகாரச் சிறப்புப் பாயிரம் (ச.கந்தையபிள்ளை), தொல்-சொல்லதிகாரச் சிறப்புப் பாயிரம் (வே. மகாலிங்கசிவம்) ஆகிய சிறப்புக் கட்டுரைகளையும் செய்யுள்களையும் கொண்ட மலர். அநுபந்தமாக சி.கணேசையர் எழுதிய செந்தமிழ்ச் தீஞ்சுவை, வாழ்த்துப்பா என்பனவும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10756).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11939

செங்கை ஆழியான் நினைவலைகள். மலர் வெளியீட்டுக் குழு. யாழ்ப்பாணம்: சாகித்ய ரத்னா கலாநிதி கந்தையா குணராசா அவர்களின் நினைவு வெளியீடு, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2016. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

92 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

சாகித்ய ரத்னா கலாநிதி கந்தையா குணராசா அவர்களின் மறைவையொட்டி, இடம்பெற்ற 31ம் நாள் அந்தியேட்டி நிகழ்வின்போது 29.03.2016 அன்று பல்வேறு பிரமுகர்களின் அஞ்சலிச் செய்திகளை உள்ளடக்கி வெளியிடப்பட்ட நினைவஞ்சலி மலர். செங்கை ஆழியான் என்ற புனைபெயரால் பரவலாக அறியப்படும் க. குணராசா (ஜனவரி 25, 1941 - பெப்ரவரி 28, 2016) ஒரு பன்னூலாசிரியராவார். புதினங்கள், சிறுகதைகள், புவியியல் நூல்கள், வரலாற்று ஆய்வுகள், தொகுப்பு முயற்சிகள் மற்றும் பதிப்புத்துறை எனப் பல துறைகளிலும் க. குணராசாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். நீலவண்ணன் என்ற பெயரிலும் ஆக்கங்கள் எழுதியுள்ளார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ் இந்துக்கல்லூரியிலும், உயர் கல்வியை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் பெற்றார். புவியியல் சிறப்புப் பட்டதாரியாக பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்தார். 1984 ஆண்டு முதுகலை மானிப் பட்டத்தையும், 1991 ஆண்டு கலாநிதிப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பெற்றார். செங்கை ஆழியானுக்கு இலக்கிய உலகு, கல்வி உலகு, நிர்வாக உலகு என மூன்று ஆளுமையாற்றல்கள் உள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61363).

11940

ஞானபீடத்தைக் கண்டேன். கலைச்செல்வன். கொழும்பு 2: இலக்கிய முற்றம், ஈ.ஜீ.02 தேசிய வீடமைப்புத் திட்டம், விதானகே மாவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 2015. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xvi, 81 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-7691-02-2.

எழுத்துலக ஜாம்பவான் ஜெயகாந்தனின் வாழ்க்கை மற்றும் அவரது எழுத்துலக அனுபவங்கள், படைப்புகளின் பரிமாணங்கள் ஆகியவை பற்றி கலைஞர் கலைச்செல்வன் மிகச் சிறப்பாக இந்நூலில் படம்பிடித்துத் தந்துள்ளார். நூலாசிரியர் ஜெயகாந்தனைச் சந்தித்த வேளையில் பெற்ற அனுபவங்களையும் அவரது படைப்புக்களில் தனக்கிருந்த ஈடுபாட்டையும் இருபத்துநான்கு வாரங்களாக தினகரன் பத்திரிகையில் கலைச்செல்வன் எழுதிய தொடர் கட்டுரையே இங்கு நூல்வடிவம் பெற்றுள்ளது. தனக்கே உரித்தான தனித்துவமான மொழிநடையில் சுவாரஸ்யம் குன்றாமல் எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11941

ஞானரதம் தி.ஞானசேகரன் பவளமலர். செல்லத்துரை சுதர்சன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: ஞானம் வெளியீடு, ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜனவரி 2017. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

xx, 472 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-8354-69-8.

22.01.2017 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற ஞானம் ஆசிரியர் திரு. ஞானசேகரன் அவர்களின் 75ஆவது அகவையின் நினைவாக ஒழுங்குசெய்யப்பட்ட பவளவிழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஈழத்து இலக்கியப் பரப்பில் நாவல்/சிறுகதை இலக்கியம், தன் வரலாறு/பயண இலக்கியம், தொகுப்பு/பதிப்புத்துறை, இதழ்/இதழியல்துறை, இலக்கியம்/சமூகச் செயற்பாடுகள் என்னும் ஐம்பெரும் அம்சங்கள் சார்ந்தும் நிகழ்ந்த முன்னெடுப்புக்கள் இப்பெருமலரில் பதிவாகியுள்ளன. இம்மலருக்கான ஆலோசனைக் குழுவில் பேராசிரியர்கள் எஸ்.சிவலிங்கராசா, சோ.சந்திரசேகரம், துரை மனோகரன், சபா.ஜெயராசா, செ.யோகராசா ஆகியோர் பணியாற்றியுள்ளனர். நா.சுப்பிரமணியன், சி.தில்லைநாதன், அ.சண்முகதாஸ், அகளங்கன், சு.ஸ்ரீகந்தராசா, எம்.ஜெயராம சர்மா, எம்.ஏ.நு/மான், சோ. சந்திரசேகரம், சபா.ஜெயராசா, துரை மனோகரன், எஸ்.சிவலிங்கராஜா, செ.யோகராசா, என்.சண்முகலிங்கன், வ.மகேஸ்வரன், க.நாகேஸ்வரன், கந்தையா ஸ்ரீகணேசன், நூலகவியலாளர் என்.செல்வராஜா, தெளிவத்தை ஜோசப், தெணியான், தமிழ்நேசன் அடிகளார், மு.பொன்னம்பலம், அன்னலட்சுமி இராஜதுரை, ஜின்னாஹ் ஷரிபுத்தீன், கே.எஸ்.சிவகுமாரன், மானாமக்கீன், பத்மா சோமகாந்தன், மா.பா.சி., மேமன்கவி, முருகபூபதி, மொழிவரதன், கே.ஆர். டேவிட், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், கே.வெள்ளைச்சாமி (குறிஞ்சிநாடன்), எம்.ஐ.நாகூர்கனி, உடுவை எஸ்.தில்லைநடராஜா, கே.விஜயன், திக்கவல்லை கமால், எஸ்.முத்துமீரான், எம்.எம்.மன்சூர், வீ.என்.சந்திரகாந்தி, எம்.கே. முருகானந்தன், ஐ.இராமசாமி, சூசை எட்வேர்ட், கேணிப்பித்தன் ச.அருளானந்தம், ச.முருகானந்தம், நவம் வெள்ளைச்சாமி, சு.சிறீஸ்கந்தராஜா, மு.சிவலிங்கம், சுதாராஜ், அ.கனகசூரியர், அந்தனி ஜீவா, இரா.அ.இராமன், உ.நிசார், மடுளுகிரிய விஜேரத்தினா, கே.பொன்னுத்துரை, வேல் அமுதன், தீரன் ஆர்.எம்.நௌஷாத், கொற்றை பி.கிருஷ்ணானந்தன், ரா.நித்தியானந்தன், எஸ்.வன்னியகுலம், நடராஜா சச்சிதானந்தன், கண. மகேஸ்வரன், வவுனியூர் இரா.உதயணன், இ.இராஜேஸ் கண்ணன், வி.ஜீவகுமாரன், சாரல் நாடன், முஸ்டீன், வைரமுத்து சிவராஜா, வேல்.நந்தகுமார், எம்.எம்.ஜெயசீலன், பொன் புத்திசிகாமணி, கே.எஸ் சுதாகர், சித்ரா சின்னராஜன், செ.சக்திதரன், தே.கஜீபன், கா.சிவத்தம்பி, க.கைலாசபதி, க.அருணாசலம், ஆர்.சிவகுருநாதன், புலோலியூர் ஆ.இரத்தினவேலோன், சமரபாகு சீனா உதயகுமார், சி.விமலன், எம்.என்.ஜஸ்மினா, எம்.வை.எப்.ரிஸ்மியா, த. அருள்விழி, பா.காயத்திரி, எம்.எஸ்.எப்.ஷப்னா, கனகரத்தினம் கனகதுர்க்கா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னராசா குருபரநாத், நவகீதா கதிரவேலு ஆகிய இலங்கை மற்றும் புலம்பெயர் தமிழ் ஆர்வலர்களும், தமிழகத்திலிருந்து ம.இரகுநாதன், இரா.காமராசு, தெ. வெற்றிச் செல்வன், கு.சின்னப்பபாரதி, கோவை ஞானி, பொன்னீலன், த. பாலுசாமி, து.ரேணுகாதேவி, கே.ஜீ.மகாதேவா, தி.மோகன்ராஜ் ஆகியோரும் இப்பெரும் தொகுப்பில் உள்ள 100 மனப்பதிவுகளையும் வழங்கியுள்ளனர்.

11942

தேசிய எழுத்தாளர் பட்டியல். தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை. கொழும்பு 7: தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இல. 14, சுதந்திர வழி, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 10: பாஸ்ட் பிரின்டெரி பிரைவேட் லிமிட்டெட், இல. 165, தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை).

viii, 149 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 24x18 சமீ., ISBN: 978-955-7544-07-6.

இலங்கையர்களான எழுத்தாளர்களின் பெயர், நிரந்தர முகவரி, அலுவலக முகவரி, தொலைபேசி இலக்கங்கள், மின்னஞ்சல் முகவரி ஆகிய தகவல்களை அகரவரிசையில் தந்துள்ளார்கள். தமிழ், முஸ்லிம், சிங்கள படைப்பாளர்களின் முகவரிகள் இப்பட்டியல் நூலில் அடங்கியுள்ளன. தமிழ் எழுத்தாளர்களில் 94 பெயர்களும், முஸ்லிம் எழுத்தாளர்களில் 46 பெயர்களும் மாத்திரமே தேசிய மட்டத்தில், தேசிய நூலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இந்நூலில் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்பெயர்களில் ஒரு சில தமிழ் எழுத்தாளர்களின் பெயர்களே பரிச்சயமான எழுத்தாளர்களாக எம்மால் இனங்காண முடிகின்றது. தமக்கான தகவல் வளமாக சர்வதேச தராதர நூல் எண் கோவையை தொகுப்பாளர்கள் பயன்படுத்தியிருந்தமையால் தமது நூல்களுக்காக ISBN இலக்கத்தினைப் பெறுவதற்கு முன்னைய ஆண்டுகளில் விண்ணப்பித்திராத தமிழ் எழுத்தாளர்களின் பெயர்கள் இப்பட்டியலில் இடம்பெற வாய்ப்பிருந்திராது.

11943

பீ.ஏ.கிருஷ்ணன்: வாழ்வும் எழுத்தும். விம்பம் அமைப்பு. லண்டன் E6 2BH: விம்பம், 4 Burges Road, இணை வெளியீடு, லண்டன்: தமிழ் மரபு அறக்கட்டளை, 1வது பதிப்பு, மே 2012. (லண்டன், அச்சக விபரம் தரப்படவில்லை).

68 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 15x21 சமீ.

நாவலாசிரியர் பீ.ஏ.கிருஷ்ணனுடன் ஒரு மாலைப் பொழுது என்ற இலக்கிய நிகழ்வு 27.5.2012 அன்று லண்டன், வெம்பிளியில் சங்கமம் உணவு விடுதியில் நடைபெற்றவேளை வெளியிடப்பட்ட சிறப்பிதழ். இம்மலரில் பல்வேறு ஏடுகளிலும் வெளியான பீ.ஏ.கிருஷ்ணனின் படைப்புகள் பற்றிய விமர்சனங்கள், நேர்காணல்களைத் தொகுத்து வழங்கியிருக்கின்றனர். இந்தியப் படைப்பாளியான பீ.ஏ.கிருஷ்ணன் புலிநகக் கொன்றை, கலங்கிய நதி ஆகிய இரண்டு நாவல்களையும் அக்கிரஹாரத்தில் பெரியார், திரும்பிச் சென்ற தருணம், என்னும் கட்டுரைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். தாய்மொழியிலும் ஆங்கிலத்திலும் எழுதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகச்சில இந்திய எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். புதுடெல்லியை இருப்பிடமாகக்கொண்ட பீ.ஏ.கிருஷ்ணன், ஆசிரியராகவும் அரச அதிகாரியாகவும் பணியாற்றியவர். சமகால இலக்கிய உலகில் மிகவும் கவனிக்கப்படும் எழுத்தாளர்களில் இவரும் ஒருவர்.

11944

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா சிறப்பு மலர். கம்பளைதாசன்(பதிப்பாசிரியர்). கொழும்பு: முத்தமிழ் மன்றம், 1வது பதிப்பு, மார்ச் 1991. (கொழும்பு: ஸ்ரீ சக்தி பிரிண்டிங் இன்டஸ்ரீஸ்).

(44) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x18 சமீ.

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞராய், பாரதிக்குப்பின் வாழ்ந்த கவிஞர்களுள் தகுதியும், சிறப்பும் மிக்கவராய்த் திகழ்ந்தவர் பாவேந்தர் பாரதிதாசன். இந்திய நாடு ஆங்கிலேயர் ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்த போது, இந்திய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு, இந்திய விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு பல பாடல்களைப் பாடியவர் இவர். பாவேந்தர் 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ஆம் தேதி புதுச்சேரியில் கனகசபை முதலியார், இலக்குமி அம்மையார் ஆகியோருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் கனக சுப்புரத்தினம் என்பதாகும். 1908இல் பாவேந்தர் சுப்பிரமணிய பாரதியாரைக் காணும் வாய்ப்பினைப் பெற்றார். பாரதியாரின் புலமையும், எளிமையும் கவிஞரைக் கவர்ந்தன. பாரதி மீது பற்று மிகக் கொண்டு தன் பெயரை பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். 1964 ஏப்ரல் மாதத்தில் திடீரென உடல் நலிவுற்றார் பாவேந்தர். 1964-ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் நாள் சென்னையில் இயற்கை எய்தினார். 1990இல் தமிழக அரசு கவிஞரின் நூல்கள் அனைத்தையும் அரசுடைமையாக்கியது. 1.11.91 முதல் இவை மக்களின் உடைமையாகும் என்றும் அரசு அறிவித்தது. ஆண்டுதோறும், ஏப்ரல் 29 ஆம் தேதி அன்று தமிழக அரசு சார்பிலும், புதுவை அரசு சார்பிலும் பாவேந்தரின் பிறந்தநாள் விழா அரசு விழா வாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. அவ்வகையில் இலங்கையில் நூற்றாண்டு விழா முயற்சியாகக் கொழும்பு முத்தமிழ் மன்றம் இம்மலரை வெளியிட்டுள்ளது. இதில் சில்லையூர் செல்வராசன் (ஈழத்தின் தனிப் புகழும் இசைத்த பாவேந்தன்), கம்பளைதாசன் (தமிழ் உணர்வூட்டுவோம் தமிழ் வளர்ப்போம்), அ.பொ. செல்லையா (பாரதியை மிஞ்சியவர்), வேலணை வீரசிங்கம் (பெரியார் அண்ணா வின் சிந்தனையைத் தூண்டியவர் பாவேந்தர்), பட்டுக்கோட்டை இராஜேந்திரம் (வள்ளுவராய் மாறிய முகலாய ஓவியம்) ஆகியோரின் கட்டுரைகளும் பாவேந்தர் வாழ்க்கைக் குறிப்பும், மு.கருணாநிதி, பாவேந்தர் ஆகியோரின் கவிதைகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10963).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11945

புலவர்மணிக் கோவை. ஈழத்துப் பூராடனார் (இயற்பெயர்: க.தா.செல்வராசகோபால்), எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). தோற்றாத் தீவு: புலவர்மணி நினைவுவிழா 1991 வெளியீடு, ஜீவா பதிப்பகம், 3வது பதிப்பு, கார்த்திகை 1991, 1வது பதிப்பு, 1983, 2வது பதிப்பு, 1989 (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், 1108 Bay Street, Toronto, Ontario M5S 2W9).

xxxx, 192 பக்கம், விலை: கனெடிய டொலர் 10., அளவு: 21x13.5 சமீ.

மட்டக்களப்பு மாநில அறிஞர் வரிசையில் தனியான ஒரு இடம் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையவர்களுக்குண்டு. அவரது தமிழ் இலக்கியப்பணியும், சமூக சமயப் பணிகளும் தேசிய நோக்குடன் மனங்கொள்ளத் தக்கன. புலவர்மணியவர்கள் தாம் வாழ்ந்த எழுபத்தொன்பது ஆண்டு காலப்பகுதியில் தமக்கெனவொரு பாரம்பரியத்தினை உருவாக்கிச்சென்றுள்ளார். கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் குருக்கள்மடம் என்ற ஊரைச்சேர்ந்த புலவர்மணி அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு புலவர்மணிக் கோவை செய்யுள்கள் இயற்றப்பட்டுள்ளது. ஈழத்துப்பூராடனார் இந்நூலின் முதற்பதிப்பை 1984இலும், பின்னர் ஈழத்துப்பூராடனார் நூற்றிரட்டில் பிரபந்தவியல் என்ற பிரிவில் இரண்டாவது மீள்பதிப்பாக 1988இலும் இந்நூலை வெளியிட்டிருந்தார். இந்த அகப்பொருட் கோவை நூலை புலவர்மணியின் நினைவுவிழா நூலாக மீண்டும் 1991இல் கார்த்திகை 2இல் புதுக்கிய மூன்றாவது பதிப்பாக வெளியிட்டுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12709).

11946

மறந்துபோகா வாழ்வின் கதை. கை.சரவணன், ந.மயூரரூபன். யாழ்ப்பாணம்: எழு கலை இலக்கியப் பேரவை, 1வது பதிப்பு, ஜூலை 2016. (சுன்னாகம்: முத்து பிறின்டர்ஸ்).

(4), 68 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x12 சமீ.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் ஈழத்துத் தமிழ்ப் படைப்பாளிகளுள் ஒருவர். அவரது துணைவியார் திருமதி இராஜநாயகி சிதம்பர திருச்செந்திநாதன் அவர்களின் மறைவினையொட்டி இந்நூலை வெளியிட்டிருக்கிறார். அமரர் இராஜநாயகி தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நிர்வாக அலுவலராகப் பணியாற்றியவர். தனது துணைவியாரின் பிரிவுத்துயரை, அவரது இல்வாழ்வின் மலரும் நினைவுகளாக வெளிப்படுத்தியிருக்கிறார். தன் காதல் துணையை சந்தித்தது, காதல்வயப்பட்டது, அலுவலகத்தில் ஒன்றாகப் பணிபுரிந்தது என வாழ்வின் இனிய நினைவுகளை இந்நூலில் மீள்பதிவுசெய்துள்ளார்.அவருடன் பணியாற்றிய தோழர்களின் பார்வையில் இந்நூல் எழுதப்பட்டிருப்பதாகத் தோன்றினாலும், வாசகருக்கு இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனே கதைசொல்லியாகத் தோற்றமளிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11947

மனசோடு பழகும் மல்லிகை ஜீவா. தெணியான். கொழும்பு: Happy Digital Centre, 1வது பதிப்பு, 2014. (அச்சக விபரம் தரப்படவில்லை).

104 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20x15 சமீ., ISBN: 978-955-7528-00-7.

தெணியானின் 88ஆவது பிறந்த தினம் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடந்தபோது வெளியிடப்பட்ட நூல். தெணியான் தினக்குரலில் 22 வாரங்களாக எழுதிய தொடரின் நூலுரு இதுவாகும். ஜீவாவுடனான சந்திப்பு, நான் மல்லிகைக்கு எழுதிய சிறுகதை, ஜீவாவின் பலம், என் திருமணத்தில் கலந்துகொண்ட ஜீவா, இலக்கிய உறவுகளைப் பேணிய ஜீவா, எனது முதல் நூல் வெளியீட்டில் ஜீவா, ஜீவா-ஜெயகாந்தன் நட்பு, மல்லிகையில் வெளியான விவாதக் கட்டுரைகள், எழுத்தாளர்களின் இணைப்புப் பாலமாக இருந்தவர் ஜீவா, ஓயாத உழைப்பும் பெருந்தன்மையும் மிக்கவர் ஜீவா, இறக்குமதியாகும் தரமற்ற சஞ்சிகைகளைத் தடைசெய்யப் பாடுபட்ட ஜீவா, யாழ். சமூகத்தின் வாழ்வியலை முழுமையாக அறிந்தவர் ஜீவா, எதையும் சிந்தித்துத் திட்டமிட்டு செயற்படுத்துபவர் ஜீவா, இலங்கையின் இலக்கிய வரலாற்றில் தனக்கென்றொரு இடம்பிடித்த ஜீவா, தன்னை அவமதித்தவர்களையும் மல்லிகையில் கௌரவித்த ஜீவா, சூழ்நிலை அறிந்து முடிவெடுக்கும் திறமையுள்ள ஜீவா, போரால் இடம்பெயர்ந்தாலும் தளராது உழைத்தவர் ஜீவா, இலக்கியவாதிகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்த ஜீவாவின் மல்லிகை, இலக்கியம் மட்டுமல்லாது உறவுகளுக்கும் மதிப்பளிக்கும் ஜீவா, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகத் தனது பிறந்தநாளைப் பயன்படுத்தும் படைப்பாளி, தனது நட்புக்குரியவர்கள் மீது அதீத அக்கறை செலுத்தபவர் ஜீவா, ஈழத்து இலக்கிய நாயகன் டொமினிக் ஜீவாவை கௌரவிக்க வேண்டியது எல்லாருடைய கடமையுமாகும் என 22 அத்தியாயங்களில் வெளிவந்துள்ள இந்நூல் இலங்கையின் தமிழ் இலக்கிய ஆளுமையொன்றைப் பற்றிய மற்றொரு இலக்கியவாதியின் அனுபவப் பகிர்வாக அமைந்துள்ளது.

11948

மணிதநேய நேசகன்: மேமன்கவி மணிவிழா மலர். மலர்க்குழு. கொழும்பு 10: கலை இலக்கிய நண்பர்கள், எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2017. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x20 சமீ.

மணிவிழா நாயகன் மேமன்கவி பற்றிய வாழ்த்துரைகளின் தொகுப்பாக இம்மலர் வெளியிடப்பெற்றுள்ளது. மேமன்கவி (Memon Kavi, அப்துல் கரீம் அப்துல் ரஸாக், ஏப்ரல் 29, 1957) வட இந்திய குஜராத் மாநிலத்தைச் சார்ந்த மேமன் சமூகத்தில் பிறந்து இலங்கைத் தமிழ்க் கலை இலக்கிய உலகில் தன்னை படைப்பாளியாக அடையாளப்படுத்திக் கொண்டவர். இலங்கையில் குடியேறிய மேமன் சமூகத்தின் மத்தியதரக் குடும்பம் ஒன்றில் இரண்டு பெண் பிள்ளைகளுக்கு அடுத்து மூத்த ஆண் மகனாகப் பிறந்தவர் அப்துல் ரசாக். மேமன்மொழி எழுத்து வடிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாது பேச்சு மொழியாக மட்டுமே இருந்தமையால், இவரது தந்தை இவரை தமிழ் மொழி மூலத்திலான பாடசாலையில் சேர்த்தார். எட்டாம் வகுப்புடன் இவர் தனது பாடசாலை கல்வியை முடித்துக் கொண்டார். மேமன் சமூகத்தினர் பொதுவாக வணிகத் துறையிலேயே ஆர்வம் காட்டுவர். ஆனாலும் இவரோ அன்றைய காலம் தொடக்கம் எழுத்தாளனாக ஆக வேண்டும் என்ற ஆர்வத்தில் பல்வகையான நூல்களைப் படித்துக் கொண்டிருந்த காரணத்தால் முறையான கல்வி மீது ஏற்பட்ட சலிப்பில் பாடசாலைக் கல்வியை இடை நடுவில் கைவிட்டார். பாடசாலை வாழ்வின் இறுதிப் பகுதியில் இவரது தமிழாசிரியரான இலங்கை வானொலி நாடக புகழ் எம். அஸ்ரப்கான் இவரது வாசிப்பு பழக்கத்திற்கு ஊக்கப்படுத்தினார். பிற்காலத்தில் திறந்த பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறை பாடநெறியை முடித்தார். இவரது முதலாவது கவிதை 1974 ஆம் ஆண்டு சுதந்திரன் இதழில் "தமிழே என் மூச்சு" எனும் தலைப்பில் வெளிவந்தது. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் ஆரம்பத்திலிருந்து தொடர்புகளைப் பேணி வருகிறார். 1990 ஆம் ஆண்டுக்கான இலங்கை சாகித்திய மண்டலப் பரிசை இவரது "நாளையை நோக்கிய இன்றில்" என்ற கவிதைத் தொகுதிக்காகப் பெற்றார். பல இதழ்களுக்கு ஆசிரியராகவும், உதவி ஆசிரியராகவும் பணியாற்றி இருக்கிறார். இவரது கவிதைகள் சில ஆங்கிலம், சிங்களம், உருசிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. கவிதை ஒன்று தேசிய கல்வி நிறுவனம் வெளியிட்டிருக்கும் ஆசிரியர் பயிற்சி பாட நூலில் இடம் பெற்று இருக்கிறது. சப்பரகமுவ பல்கலைக்கழகத்தில் கலைமாணி பாட நெறி மேற்கொண்ட மாணவர் ஒருவர் இவரது கவிதைகளைப் பற்றிய ஓர் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்துள்ளார். யுகராகங்கள் (1976, எழுத்தாளர் கூட்டுறவு பதிப்பகம்), ஹிரோசிமாவின் ஹீரோக்கள் (1982, நர்மதா பதிப்பகம், தமிழ் நாடு), இயந்திர சூரியன் (1984, நர்மதா பதிப்பகம், தமிழ் நாடு), நாளையை நோக்கிய இன்றில் (1990, நர்மதா பதிப்பகம், தமிழ் நாடு), மீண்டும் வசிப்பதற்காக (1999, மல்லிகைப் பந்தல்), உனக்கு எதிரான வன்முறை (2005, துரைவி வெளியீடு), ஒரு வாசகனின் பிரதிகள் -கட்டுரைத் தொகுப்பு (2010, கொடகே வெளியீடு), மொழி வேலி கடந்து.. -கட்டுரைத் தொகுப்பு (2013, கொடகே வெளியீடு) ஆகிய நூல்கள் இவர் படைத்த நூல்களுட் சிலவாகும்.

11949

விழிசை சிவம்-முத்து: ஜனன நூற்றாண்டு மலர். கோகிலா மகேந்திரன் (பதிப்பாசிரியர்). தெல்லிப்பழை: கலை இலக்கியக் கள வெளியீடு, 1வது பதிப்பு, டிசம்பர் 2014. (கோண்டாவில்: சாஜி பிரிண்டர்ஸ்).

x, 74 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

அமரர்களான சிவசுப்பிரமணியம் தம்பதியினரின் நூற்றாண்டு நினைவு மலராக அன்னாரின் நினைவுகளையும் படைப்புகளையும் சுமந்து இம்மலரை அவர்களது மகளான திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் அழகுறத் தொகுத்து வழங்கியிருக்கிறார். முன்னதாகத் தாயாரின் மறைவின் அந்தியேட்டி நிகழ்வின்போது "விழிமுத்து" என்ற மலரை பலரது நினைவுப் பதிதைகளின் தொகுப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டிருந்தார். சில மாதங்களின் பின்னர் தந்தையார் இறந்தவேளையில் அந்தியேட்டி மலராக "இறைமணிமாலை"என்ற மலரை அவரது பக்திப்பாடல்களின் தொகுப்பாக வெளியிட்டிருந்தார். அமரர் சிவசுப்பிரமணியம் அவர்களின் மறைவின் பத்தாண்டு நினைவின்போது, அவரது வாழ்க்கை வரலாற்றை விபரிக்கும் "விழிசைச் சிவம்" என்ற மலரை தெல்லிப்பழை இலக்கியக்களத்தினரின் உதவியுடன் வெளியிட்டிருந்தார். இப்போது அமரர்களின் ஜனன நூற்றாண்டுகளான 2014, 2015 இல் மீண்டும் இம்மலர்களை இணைத்துத் தனித்தொகுப்பாக கலை இலக்கியக்கள வெளியீடாக வெளியிட்டுள்ளார். தந்தையாரின் கவிதைகள், கட்டுரைகள், சித்திரங்கள் இம்மலரை அலங்கரிக்கின்றன. நினைவுக் கட்டுரைகளை கா.சிவபாலன், கலாபூஷணம் சு.செல்லத்துரை, சோ.பத்மநாதன் ஆகியோர் உள்ளிட்ட பலரும் வழங்கியுள்ளனர்.

954.93 இலங்கை வரலாறு

11950

சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகள் வரலாறு (இலங்கா).மகாராஜா ஸ்ரீராஜசேகரா (இயற்பெயர்: கந்தசாமி பாலசுப்பிரமணியம்). கொழும்பு 6: கந்தசாமி பாலசுப்பிரமணியம், 1வது பதிப்பு, 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).

496 பக்கம், விலை: ரூபா 800., அளவு: 20.5x14.5 சமீ.

பல்லவராசசேகரன், இராஜசேகரம் ஆகிய பெயர்களிலும் எழுதிவரும் திரு. கந்தசாமி பாலசுப்பிரமணியம் இலங்கை தமிழ் மருத்துவ ஆராய்ச்சி மன்றத்தின் தவிசாளரும், ஆராய்ச்சியாளருமாவார். தமிழ்ப் பிரதேசத்தில் சித்தா சுகாதார சேவையை 1987இல் தாபித்து 1996வரை அதனை நடத்திவந்தார். சிங்கை மன்னர் பரம்பரையில் தோன்றிய இராசசிம்மனின் வழித்தோன்றலாகிய நூலாசிரியர் தனது மூதாதையரான சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகளின் வரலாற்றினை இந்நூலில் விரிவாக ஆராய்ந்துள்ளார். திருநாடு, சிங்கைப் பேரரசர் நாகநாதர், சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகள் சிங்கநகர், சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகள் நல்லைநகர், சிங்கை மன்னர், குறுநில மன்னர்கள், கண்டி அரசர்கள், கோட்டை அரசர்கள், வெளிநாடுகளில் பல்லவர் ஆகிய ஒன்பது அத்தியாயங்களில் இந்நூல் விரிவான உசாத்துணைகளுடன் எழுதப்பட்டுள்ளது.

954.93(2) இலங்கை இனப்பிரச்சினை வரலாறு

11951

இலங்கை: இது பகைமறப்பு காலம் (சிராஜ் மஷ்ஹூருடன் ஒரு நேர்காணல்). சிராஜ் மஷ்ஹூர். அக்கரைப்பற்று: சமூக அரசியல் படிப்பகம், 117, நகரப் பள்ளிவாசல் வீதி, அக்கரைப்பற்று, 1வது பதிப்பு, மார்ச் 2017. (மஹரகம: மில்லெனியம் கிராப்பிக்ஸ்).

28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தின் அ.மார்க் அவர்களின் ஒருங்கிணைப்பில் ஜூலை 2009இல் புதுவிசை இதழுக்கு சிராஜ் மஷ்ஹூர் வழங்கிய நேர்காணலின் எழுத்து வடிவம். இலங்கையில் முஸ்லிம் மக்களது பிரச்சினைகள், சிங்கள மற்றும் தமிழ் மேலாதிக்கம், போர்க்கால அனுபவங்கள், போருக்குப் பிந்திய இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள், தலித்துகள் மற்றும் மலையக மக்களது பிரச்சினைகள், ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரல், சர்வதேச நிறுவனங்களின் ஊடுருவல், 13வது அரசியல் திருத்தம், தமிழ் -முஸ்லிம் உறவு, முஸ்லிம் தேசம், சகவாழ்வு, பகை மறப்பு போன்ற பல்வேறு பட்ட விடயங்களை இந்த நேர்காணல் அலசுகின்றது.

11952

இலங்கையில் இனமுரண்பாடும் அதிகாரப் பரவலாக்கமும்: வடக்கு கிழக்கிற்கான அதிகாரப் பகிர்வில் முஸ்லிம்களின் தனி அலகுக் கோரிக்கை. எம்.ஐ.எம். முஹியத்தீன் (ஆங்கில மூலம்), வசந்தி தயாபரன் (தமிழாக்கம்). கொழும்பு 6: சித்தி லெப்பை ஆய்வு மன்றம், 414, காலி வீதி, 1வது பதிப்பு, மே 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

46 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-7436-00-5.

அகில இலங்கை முஸ்லீம் லீக்கின் முன்னாள் இணைச் செயலாளரும், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் ஸ்தாபகச் செயலாளருமான நூலாசிரியரின் ஆங்கில உரையின் மொழிபெயர்ப்பு. 2500 வருடகால வரலாறு கொண்ட இலங்கை முஸ்லிம்களை அங்கீகரிக்கப்பட்ட தேசிய இனமாக நிறுவும் ஆசிரியர் புதிய அரசியலமைப்புச் சட்டம் தொடர்பிலும் அதிகாரப் பகிர்விலும் முஸ்லிம்களின் கோரிக்கை என்னவென்பதை முன்வைக்கிறார். இலங்கை முஸ்லிம்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம், கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களிலுள்ள தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் இன முரண்பாட்டின் பின்னணி, இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கைக்கு (ஜூலை 1987) முன்னரான வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையிலான முரண்பாடு, இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கையின் (ஜூலை 1987) பின்னரான வடக்கு கிழக்கில் தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையிலான இன முரண்பாடு, வடக்கு கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்களின் பாதுகாப்பு, டிசம்பர் 1987இல் வடக்கிலும் கிழக்கிலுமான முஸ்லிம் அகதிகள், வடக்கு கிழக்கு முஸ்லிம்களும் ஜூலை 1987 இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கையும், பரவலாக்கல் முன்மொழிவுகளும் வட-கிழக்குப் பிராந்தியத்திலுள்ள முஸ்லிம்களுக்கான தனியான அதிகாரப் பகிர்வு அலகிற்கான கோரிக்கையும், இலங்கையின் வடகிழக்குப் பிராந்தியத்திலுள்ள முஸ்லிம்களுக்கான அதிகாரப் பகிர்வு அலகு, பாண்டிச்சேரி இந்தியாவின் நிலத்தொடர்பற்ற ஒரு மாநிலம் ஆகிய 10 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11953

உரிமைக்கும் உயர்வுக்கும்: பாராளுமன்ற உரைகள் 2010-2011. முருகேசு சந்திரகுமார். கிளிநொச்சி: மகிழ், 754 கனகராசா வீதி, திருநகர் வடக்கு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2014. (கொழும்பு: ஏஜே அச்சகம், தெகிவளை)

xi, 172 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ.

தடுத்துவைக்கப்பட்டுள்ள இளைஞர்-யுவதிகளின் விடுதலை, அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குதல், வரவு செலவுத்திட்டம் பற்றிய உரை, போர் தின்ற நகரங்களின் தற்போதைய அவல நிலை, அவசரகாலச் சட்டத்திற்கான எதிர்க்குரல், வி.நவரத்தினம் பற்றிய நினைவுரை, வடக்கு மாகாணத்தின் பதவி வெற்றிடங்களை நிரப்பல், யுத்தப் பாதிப்புப் பிரதேச அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கல், நெடுஞ்சாலைப் புனரமைப்பினை துரிதமாக்க முக்கியத்துவமளித்தல், வடக்கு மாகாண சபையை அரசியல் தலைமைத்துவமுடைய சபையாக உருவாக்குதல், யாழ்ப்பாணத்தின் அச்ச நிலை, யாழில் வதந்திகள் பரப்பும் அரசியல் வேண்டாம், வன்முறையால் பாதிக்கப்படாத சமுதாயத்தைக் கட்டியெழுப்பல், செய்திப் பிரசுரிப்பில் பத்திரிகைகளின் பொறுப்புணர்வு, பாதிக்கப்பட்ட மக்களுக்கான விசேட நிதி ஒதுக்கீடு, உள்ளூராட்சி சபைகளுக்குரிய வீதிப் புனரமைப்பு, பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறை, நீர்விநியோகத்திட்டங்களின் தேவை, விவசாயிகளுக்கான உதவிகள், மீன்பிடித்துறை மேலும் வலுப்படுத்தப்படவேண்டும், வடக்கு கிழக்கில் மூடப்பட்ட தொழில் மையங்களை மீள ஆரம்பித்தல் என 26 பாராளுமன்ற உரைகள் 2010-2011 காலகட்டங்களில் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளர் மு.சந்திரகுமார் அவர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தப் பாராளுமன்ற உரைகள் அனைத்தும் திகதி வாரியாக இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

11954

83, இரத்த ஜூலை: இலங்கை இரத்த ஜூலையின் வரலாற்று பின்னணி. நாவலர் ஏ.இளஞ்செழியன். கொழும்பு 11: இளம் சோசலிச முன்னணி, 66, 1/3. முதலாம் குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, நவம்பர் 1997. (கொழும்பு 13: பிரதீப் பப்ளிக்கேஷன்ஸ், 486/33, புளுமெண்டால் வீதி).

33 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 18.5x12.5 சமீ.

அட்டன் செட்டிக் மண்டபத்தில் 22.10.1983 அன்று நடைபெற்ற இந்திய வம்சாவளி மக்கள் கூட்டணியின் பேராளர் மாநாடு கூட்டணியின் துணைத் தலைவர்களில் ஒருவரான எஸ்.செல்லையாஅவர்களின் தலைமையில் நடைபெற்றபொழுது பொதுச் செயலாளர் தோழர் ஏ.இளஞ்செழியன் சமர்ப்பித்த இந்த அறிக்கை, 15.11.1997 அன்று நூலுருவில் வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17899).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11955

கிழக்கின் சுயநிர்ணயம். எம்.ஆர்.ஸ்டாலின். கொழும்பு 12: உரையாடலுக்கும் ஆய்வுக்குமான மையம், Centre for Dialogue and Research, 141 C, 1/1, பண்டாரநாயக்க மாவத்தை, 1வது பதிப்பு, பெப்ரவரி 2017. (அச்சக விபரம் தரப்படவில்லை).

56 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x15 சமீ.

ஜேர்மனியிலுள்ள ஸ்ருட்காட் நகரில் இலங்கையர் ஜனநாயக அரங்கினரின் ஏற்பாட்டில் 11-12.11.2006ஆம் திகதிகளில் இலங்கையின் பல கட்சித் தலைவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்த அரசியல் மாநாட்டில் ஜனநாயகத்துக்கான கிழக்கிலங்கை முன்னணி சார்பில் எம்.ஆர். ஸ்ராலின் அவர்களால் கிழக்கின் சுயநிர்ணயம் என்னும் தலைப்பில் ஆற்றப்பட்ட உரையின் நூல்வடிவம் இது. கிழக்கின் சுயநிர்ணயம், கிழக்கின் புராதன வரலாறு, காலனித்துவத்தின் வருகை, மாகாண அமைப்பு முறையின் தோற்றம், முக்குவர் மற்றும் ஷரீஆ சட்டக்கோவைகள், அந்நிய ஆட்சியின் விளைவான யாழ்ப்பாணத்தின் வளர்ச்சி, சர்வசன வாக்குரிமை: தமிழ் தலைவர்களின் நிலைப்பாடு, இனவாத அரசியல், இலவசக் கல்வித்திட்ட மசோதா எதிர்ப்பு, நல்லையாவை ஒதுக்கிய யாழ்ப்பாணத்துத் தலைவர்களின் சதி, மலையக மக்களைக் காட்டிக் கொடுத்த யாழ்ப்பாணத் தலைமைகள், தமிழரசுக் கட்சி, சுயபாஷை இயக்கம், சா.ஜே.வே.செல்வநாயகம் புதிய மொந்தையில் பழைய கள்ளு, கல்வி தரப்படுத்தல்: யாழ் மேட்டுக் குடிகளின் பிரச்சினை, வட்டுக்கோட்டை, இராஜதுரைக்கு இழைக்கப்பட்ட சதியும் துரோகமும், கிழக்கு முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம், எதிர்மறை ஒற்றுமையில் உள்வாங்கப்பட்ட கிழக்கு மாகாணம், கிழக்கின் விலைகொடுப்பு, புலிகளின் கிழக்குப் பிளவும் 13ஆவது நாடாளுமன்றத் தேர்தலும், முடிவாக ஆகிய 22 இயல்களில் இந்நூல் கிழக்கிலங்கையின் சுயநிர்ணய உரிமை பற்றிய தன் நியாயங்களை முன்வைக்கின்றது.

11956

தம்பி ஜெயத்திற்கு: கடிதம் இரண்டு. காசி. ஆனந்தன். கேளம்பாக்கம் 603103: காசி ஆனந்தன் குடில், 4/202, ஈசுவரன் கோவில் தெரு, தையூர், 1வது பதிப்பு, ஜனவரி 2017. (சென்னை 600005: கிளாசிக் அச்சகம்).

158 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 18x12 சமீ.

இந்திய அமைதிகாக்கும் படையின் சுற்றிவளைப்பின்போது அதில் அகப்பட்டு விடுதலைப் புலிகள் அமைப்பின் இயக்க விதிகளுக்கமைய சயனைற் நஞ்சருந்தி 10.9.1988 இல் மடிந்தவர் சிவஜெயம் என்ற இயற்பெயர் கொண்ட மேஜர் சந்திரன். இந்நூல் வீரமரணமடைந்த போராளியான மேஜர் சந்திரனுக்கு அவரது தமையனார் காசி ஆனந்தன் எழுதிய இரண்டாவது கண்ணீர்க் கடிதமாக அமைகின்றது. இது வெறும் கடிதமாக அல்லாமல் ஒரு ஈழ விடுதலைப் போராளியின் குடும்ப வரலாறு, அவன் சார்ந்த ஒரு விடுதலைப் போராட்டத்தின் வரலாறு, என விரிகின்றது. ஈழத்தின் அறவழிப் போராட்டத்தின் முடிவில் வெடித்த புலிகளின் மறவழிப் போராட்டத்தின் தொடக்க வரலாறு இது. இந்தியாவைத் தமிழீழத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் இறுக அணைத்துத் தமிழீழ விடுதலைப் போரை முன்னெக்கவேண்டிய இன்றியமையாத் தேவையை இக்கடிதம் வலியுறுத்துகின்றது. அடக்குமுறையாளரான சிங்கள இனவெறி ஆட்சியாளர்களிடமிருந்து விடுதலைபெற்று இறையாண்மையுள்ள தமிழீழ அரசை நிறுவுவதே தமிழீழ மக்கள் எதிர்பார்க்கும் ஒற்றைத் தீர்வு என அழுத்தமாகச் சொல்கிறார் கவிஞர். (இந்நூலின் முதலாம் பாகத்துக்கான நூல் தேட்டம் பதிவு இலக்கம் 7877).

11957

தேசிய பிரச்சினை பற்றி மாக்சிசக் கண்ணோட்டத்தில் ஒரு விளக்கம். லயனல் போபகே. கொழும்பு: நியமுவா வெளியீடு, மக்கள் விடுதலை முன்னணி, இல 14, கே.சிரில் சி. பெரேரா மாவத்தை, 1வது பதிப்பு, ஜுன் 1978. (கொழும்பு 13: மேபெயார் பிரின்டர்ஸ், 33/1 மேபீல்ட் ரோட், கொட்டாஞ்சேனை).

100 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18.5x13.5 சமீ.

இந்நூல் மக்கள் விடுதலை முன்னணியின் (JVP) தற்காலிக மத்திய கமிட்டியின் அரசியற் குழு உறுப்பினர் லயனல் போபகேயினால் எழுதப்பட்டது. அவர் 12 ஆண்டு சிறைத் தண்டனை அனுபவித்துக்கொண்டு புதிய மகஸீன் சிறைச்சாலையில் இருந்தவேளை 1975இல் இதை எழுதியிருந்தார். அவ்வேளையில் சட்டவிரோத இயக்கமாகக் கருதப்பட்ட ஜே.வீ.பி. அமைப்பின் போல்ஷேவிக் என்ற கொள்கைப் பிரகடன வெளியீட்டில் இக்கட்டுரை இடம்பெற்றிருந்தது. இவ்விதழ் கையெழுத்துப் பிரதியாக அவ்வேளையில் சிறிய இரகசிய சுற்றுவட்டத்தில் விநியோகிக்கப்பட்டிருந்தது. பின்னாளில் தடை நீக்கம் செய்யப்பட்டு இவ்வமைப்பு இலங்கையின் அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட பின் போல்ஷேவிக் இதழ்களில் பிரசுரிக்கப்பட்ட முக்கிய கட்டுரைகள் அனைத்தும் விரிவாக்கம் செய்யப்பட்டு தனி நூல்களாக வெளியிடத் தீர்மானிக்கப்பட்டது. அவ்வகையில் வெளிவந்துள்ள நூல் இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10488).

11958

பொங்குதமிழ். கனகரவி (இயற்பெயர்: க.இரவீந்திரன்). வவுனியா: விண்மணி வெளியீட்டகம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2005. (வவனியா: சூரியா பதிப்பகம்).

(4), 54 பக்கம், புகைப்படங்கள், தடுகள், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ.

ஈழத்தமிழர் போராட்டத்தின் நியாயங்களை கலைநிகழ்வுகள் மூலம் உலக அரங்கில் முன்வைக்கும் நோக்குடன் பொங்கு தமிழ் நிகழ்வுகள், இலங்கை இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு இருந்த யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் 2001 இல் முதன்முறையாக நிகழ்த்தப்பட்டது. அங்கு பின்வரும் மூன்று வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டன. தன்னாட்சி உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம். அதனைத் தொடர்ந்து ஈழத்தின் பிற பகுதிகளிலும், புகலிட நாடுகளிலும் இந்த நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. பொங்கு தமிழ் உலகத் தமிழர்கள் தமது உரிமைகளுக்காகவும் இலங்கை அரசின் கொடுமைகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராகவும் தமது குரலை வெளிப்படுத்தும் ஓர் அரங்காகச் செயற்பட்டது. பல்வேறு சுதந்திரங்கள் உறுதி செய்யப்பட்ட மேற்குநாடுகளில் வெளிவரும் ஒரு குரலாகப் பரிமாணம் பெற்றது. பலர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கருத்துக்களைத் தெரிவித்தாலும், இது தமிழீழ விடுதலை புலிகளின் ஆதரவாளர்களை மட்டும் கொண்டதாக கொள்ள முடியாது. தமிழர்கள் இலங்கை அரசின் கொடுமைகளுக்கு எதிராக தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் ஒரு அரங்காகவும் இதைக் கருதலாம். பொங்கு தமிழ் நிகழ்வுகள் உயிர்த்துடிப்புடன் ஆரம்பித்த வேளையில் ஊடகவியலாளர் கனகரவி பொங்குதமிழ் நிகழ்வின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் எழுதிய கட்டுரைகள் இவை.

11959

மனிதாபிமானம் கொண்ட புதிய தலைமுறைக்காக. திருநாவுக்கரசு சிறிதரன் (தோழர் சுகு). யாழ்ப்பாணம்: ரஜனி பதிப்பகம், 707 ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2017. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டேர்ஸ், இல. 681, காங்கேசன்துறை வீதி).

xiv, 501 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20.5x14 சமீ.

இத்தொகுப்பிலுள்ள திருநாவுக்கரசு சிறிதரனின் கட்டுரைகள் தேனி இணையத் தளத்திலும், ஈ.பீ.ஆர்.எல்.எப். இணையத்தளத்திலும், கண்ணோட்டம் பத்திரிகையிலும் வெவ்வேறு காலகட்டங்களிலும் எழுதிப் பிரசுரமானவை. தார்மீக வலுவிழந்த தமிழ் அரசியல், அனுபவங்களிலிருந்து கற்போம், பலசேனா பாசிசம் தோற்கடிக்கப்படவேண்டும், அழுத்தமில்லாமல் அரசியல் மறுசீரமைப்பு நிகழாது, 1983: இருண்ட நாட்களும் நாம் செய்யவேண்டிய பணிகளும், இலங்கையில் நலிவுற்றுவரும் அறவுணர்வு, கொசொவாவும் இலங்கையும், இறுதியும் முதலுமான வடக்கு-கிழக்கு மாகாண அரசு, மீண்டும் நழுவிப்போகும் வரலாற்றுச் சந்தர்ப்பம், 2014 தெலுங்கானா-ஸ்கொட்லாந்து மற்றும் கிறிமிய அனுபவங்கள் போன்ற இன்னோரன்ன 129 தலைப்புகளில் எழுதப்பட்ட சமகால அரசியல் சிந்தனைக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

11960

மாற்று அரசியல் இயக்கமே இன்றைய தேவை: அரசியல் ஆய்வாளர் சி.அ. யோதிலிங்கத்துடன் ஒரு நேர்காணல். நந்தன் (நேர்கண்டவர்). கொழும்பு: சி.அ.யோதிலிங்கம், 1வது பதிப்பு, 2014. (அச்சக விபரம் தரப்படவில்லை).

68 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 21.5x15 சமீ.

அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கத்துடன் லண்டன் தமிழ் உலா வானொலிச் சேவைக்காக ஊடகவியலாளர் நந்தன் அவர்கள் மேற்கொண்ட நேர்காணலின் எழுத்து வடிவம் இது. (முதலமைச்சர்) சி.வி.விக்கினேஸ்வரனின் முல்லைத்தீவு விஜயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தென்னாபிரிக்க விஜயம், இந்தியத் தேர்தல் முடிவுகள், இந்தியப் பிரதமர் மோடியின் பதவியேற்பு வைபவம், ஜெனீவாவும் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானமும், பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரொனின் யாழ்ப்பாண விஜயம், உள்ளூராட்சிச் சபைகளின் வரவு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுதல், மாற்று அரசியல் இயக்கமே இன்றைய தேவை, சிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப் பிரேரணை ஆகிய விடயங்கள் இந்த நேர்காணலின் மூலம் ஆராயப்பட்டுள்ளன. சி.அ.யோதிலிங்கம், யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல்துறை பட்டதாரி. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல்துறையில் முதுமாணிப்பட்டம் பெற்றவர்.

11961

முஸ்லிம் அரசியலின் இயலாமை. எம்.எம்.எம். நூறுல்ஹக். சாய்ந்தமருது 5: மருதம் கலை இலக்கிய வட்டம், 129 B, ஒஸ்மான் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2016. (கல்முனை: அன்-நூர் பிரின்டர்ஸ்).

(19), 102 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-43179-0-1.

பதினேழு வயதில் (1981)இல் எழுத்துப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட எம்.எம்.எம். நூறுல்ஹக், ஹாதிபுல் ஹுதா (நேரிய எழுத்தாளர்) என்ற பட்டத்தினைப் பெற்றவர். மேலும் 2012இல் கிழக்கு மாகாண சபையின் சாஹித்திய விருதை விமர்சனத்துறைக்கும் தன் எழுத்துப் பணிக்கும் பெற்றவர். இந்நூலில் இவரது 14 இலங்கை முஸ்லிம்கள் தொடர்பான அரசியல் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. சமகால இலங்கை முஸ்லிம்களினின் அரசியல் பற்றியும் அது எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள், சவால்கள் பற்றியும் ஆய்வுக்குட்படுத்தி பொருத்தமான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் முன்வைக்கின்றன. முஸ்லிம்கள் சமாதானத்தின் விரோதிகள் அல்லர், தெளிவான இனத்துவ வரையறைக்குள் இலங்கை முஸ்லிம்கள், எப்படியும் பெறவேண்டிய முஸ்லிம் மாகாணம், தேசிய மாநாடு என்பது கொடிகளால் ஆகக்கூடாது கொள்கைகளால் ஆகவேண்டும், இலங்கையர் என்ற அடையாளத்திற்கு இனக் குழுமத்துவம் ஒரு தடையா? வடக்கு கிழக்கு இணைப்பு தொடங்கும் மற்றொரு பிணக்கு, கல்முனை கரையோர மாவட்டம் இலங்கையின் நிர்வாகத்திற்கு உட்பட்டதே, வடக்கு முஸ்லிம்களின் பலவந்தமான வெளியேற்றம் ஓர் இனச் சுத்திகரிப்பே, முஸ்லிம் தனியார் சட்டம் இஸ்லாத்துக்குப் புறம்பானதா? முஸ்லிம் அரசியலின் இயலாமை, இலங்கையின் ஆட்சித்துறையில் அமைச்சரவையின் வகிபாகம் என்ன? நாடாளுமன்றப் பணிகளை மறந்து நாணயத்தின் மீது சவாரி செய்யும் நமது பிரதிநிதிகள், தேசியப் பட்டியல்: சட்ட ஒழுங்கும் சாதிக்கும் தலைமைகளும், வடக்கு கிழக்கு தொடரும் ஆளுநர் முரண்பாடுகளும் முடியாமல் தடுமாறும் முதலமைச்சர்களும் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

11962

மொழியும் மனித நேயமும். எஸ்.ஜீ.புஞ்சிஹேவா (சிங்கள மூலம்), எஸ்.சிவகுருநாதன் (தமிழாக்கம்). கொழும்பு 7: மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், 24/2, 28ஆவது ஒழுங்கை, ப்ளவர் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2011. (கொழும்பு: குளோப் பிரின்டிங் வேர்க்ஸ்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13.5 சமீ., ISBN: 978-955-1655-82-2.

யுத்தம் முடிவடைந்து விட்டது. ஆனால் யுத்தம் ஏற்படுவதற்கான காரணங்கள் நிறுத்தப்படவில்லை என்பதை சிங்களப் புத்திஜீவியான நூலாசிரியர் இந்நூலின் வழியாகப் பதிவுசெய்கின்றார். மேலும், தமிழ் மொழிக்குரிய கௌரவத்தை வழங்காத எமது பழக்கதோஷம் காரணமாகவே நாம் 30 ஆண்டுக்கால துன்பியல் போரை எதிர்கொண்டோம் என்று குறிப்பிடுகிறார். மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சிங்கள மூல நூலின் தமிழாக்கம் இதுவாகும். மொழி, அதன் பண்பு, மனிதத் தன்மை அதற்கான உரிமைகள் என சுவாரஸ்யமாக மனதைத் தொடும் வண்ணம் நூலை ஆரம்பிக்கிறார். மொழி தொடர்பான சட்டங்கள், சுற்றறிக்கைகள், பற்றி இந்நூல் விபரமாகத் தெரிவிக்கிறது. சட்டம் எவ்வாறாக இருந்தபோதிலும் என்றும் அது இலங்கையில் சரியாக அமுல் செய்யப்படவில்லை என்று சாடும் ஆசிரியர், மனித உரிமைப் பிரகடனமும் மொழியும் என்ற இறுதி அத்தியாயத்தில் இனம், தொழில், மதம் சார்ந்த சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றிய ஐ. நா.சாசனம் பற்றியும், அதில் இலங்கை கையெழுத்திட்டது பற்றியும் குறிப்பிடுகிறார். யுத்தம் முடிவுக்கு வந்தாலும் எவரும் வெற்றிபெறவில்லை என்று கூறும் ஆசிரியர், மொழியை அடிப்படையாகக் கொண்டே நாம் வெற்றியை அடையவேண்டும் என்கிறார். தொடர்ந்தும் மொழிரீதியான பாகுபாடு காட்டப்பட்டால், அது மேலும் வெடிமருந்துகளைச் சேகரிக்கவே தூண்டும் என்று எச்சரிக்கிறார். மொழியும் மனிதநேயமும், ஆங்கிலேயரின் ஆட்சி, நடைமுறைப்படுத்தாமல் இருக்கும் பழக்கமும் அதன் வரலாறும், டொனமூர் அறிக்கை கண்ட அநீதியான கவனிப்பு, கண்டி உடன்படிக்கை 1815 மார்ச் 2, அடிப்படை உரிமைகள், அரசகரும மொழி கள், நீதிமன்றங்களின் மொழிகள், அரசகரும மொழியின் அமுலாக்கம், அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்குவதற்கு வெளியிடப்பட்டுள்ள சில சுற்றறிக்கை கள், அரசகரும மொழிகள் கொள்கையை செயற்படுத்துவதற்கான அமைச்சு, நீதவான் நீதிமன்றமொன்றிலிருந்து நிவாரணத்தைக் கோரல், மனித உரிமைப் பிரகடனமும் மொழியும் ஆகிய 13 இயல்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50427).

11963

வாழ்வுக்கும் விடுதலைக்கும்: பாராளுமன்றத்தில் ஆற்றப்பட்ட உரைகள் 2012-2015. முருகேசு சந்திரகுமார். கிளிநொச்சி: மகிழ், 754 கனகராசா வீதி, திருநகர் வடக்கு, 1வது பதிப்பு, ஜுன் 2015. (கொழும்பு: ஏஜே அச்சகம், தெகிவளை).

x, 293 பக்கம், புகைப்படங்கள், வண்ணத் தகடுகள், விலை: ரூபா 400., அளவு: 22x14 சமீ.

திரு.கித்துல்கொட, ராஜன் ஆகியோர் பற்றிய நினைவுரைகள், தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்வு, பொறுப்புக் கூறும் கண்ணியத்துடன் செயற்படவேண்டும், இந்திய மீனவர்களின் அத்துமீறல், லஞ்ச ஊழல் ஆணைக்குழு சீரமைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவேண்டும், வடபகுதி விவசாயிகளின் உற்பத்திக்கான சந்தை வாய்ப்பு, வடக்கின் ஆசிரியர்வளப் பங்கீடு, எனப் பல்வேறு கருத்துக்கள் இலங்கைப் பாராளுமன்றில் 45 பாராளுமன்ற உரைகள் வழியாக 2012-2015 காலகட்டங்களில் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளர் மு.சந்திரகுமார் அவர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தப் பாராளுமன்ற உரைகள் அனைத்தும் திகதி வாரியாக இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

11964

வாழ்வை மீட்கும் குரல்: பாராளுமன்ற உரைகள் 1995-1998. முருகேசு சந்திரகுமார். கிளிநொச்சி: மகிழ், 754 கனகராசா வீதி, திருநகர் வடக்கு, 1வது பதிப்பு, மே 2015. (கொழும்பு: ஏஜே அச்சகம், தெகிவளை)

x, 116 பக்கம், வண்ணத் தகடு, விலை: ரூபா 200., அளவு: 21x14 சமீ.

வடக்கு மீதான பொருளாதாரத் தடை நீக்கம், உயர்கல்வி மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி, அதிகளவு பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு வடகிழக்கின் அழிவுகளை அதிகரிக்கும், பாதுகாப்புத்துறையினர் அனைத்துத் தமிழர்களையும் சந்தேகக்கண்ணுடன் பார்க்கும் நிலை, மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பறிக்கும் செயல் தவறு, தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், வடக்கு-கிழக்கு கல்வித் துறையின் ஆளணிப் பற்றாக்குறை, வடக்கில் சிவில் அதிகாரிகளாக இராணுவத்தினரை நியமிப்பது சிவில் நிர்வாகத்தையே சிதைக்கும் செயல், வடக்கு கிழக்கு கல்வியில் விசேட கவனம் தேவை, வடக்கு கிழக்கின் புனர் நிர்மாண புனர்வாழ்வில் அதிக கவனம் தேவை, செம்மணிப் புதைகுழிகள் பற்றிய சர்வதேச அமைப்புகளின் அறிக்கை அரசினால் அலட்சியம் செய்யப்படுகின்றது, தமிழர்களின் தாயக பூமியில் திருக்கோணமலை பறிபோகும் நிலை, தமிழ்ப் பத்திரிகையாளர்களை காரணமின்றிக் கைதுசெய்வதும் தடுத்துவைப்பதும் நிறுத்தப்படவேண்டும் எனப் பல்வேறு கருத்துக்கள் இலங்கைப் பாராளுமன்றில் 13 பாராளுமன்ற உரைகள் வழியாக 1995-1998 காலகட்டங்களில் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளர் மு.சந்திரகுமார் அவர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தப் பாராளுமன்ற உரைகள் அனைத்தும் திகதி வாரியாக இந்நூலில் தொகுக்கப் பட்டுள்ளன.

954.93(3) இனங்கள், மக்கள் குழுமங்கள், இன உறவுகள்

11965

இலங்கை முஸ்லீம்களால் எதிர்கொள்ளப்படும் சவால்கள். முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல். மருதமுனை 3: எம்.எம்.மிஹ்லார், ஆயிஷா வெளியீட்டகம், 520/1, மசூர் மௌலானா வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2015. (மருதமுனை: அப்னா பிறின்டர்ஸ்).

xiii, 85 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-42405-0-6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் அரசியல், பொருளாதாரம், கல்வி, கலாச்சாரம், குடியேற்றம் மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளில் எந்நிலையில் உள்ளார்கள் என்பதையும் முஸ்லிம்களின் வாழ்வாதார நிலைகளைத் தாழ்த்துவதற்காக எந்தளவு திட்டமிடப்பட்ட சதிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் இந்த இக்கட்டி லிருந்து முஸ்லிம்கள் மீள்வதற்கான நடவடிக்கைகள் பற்றியும் இந்நூல் விரிவாகப் பேசுகின்றது. முஸ்லீம்களால் எதிர்கொள்ளப்படும் சவால்களின் வரலாற்றுப் பின்னணி, சிறுபான்மையினருக்கு எதிராக இடம்பெற்ற சம்பவங்கள், விழிப்படைய வேண்டிய முஸ்லீம்கள், முஸ்லீம்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்குதல்களும் தாக்குதல்களும், முஸ்லீம்களின் கலாசார விடயங்கள், முஸ்லிம்களின் வாழ்விடப் பிரச்சினைகள், முஸ்லிம்களின் கல்விப் பிரச்சினைகள், பள்ளிவாசல் தொடர்பான பிரச்சினைகள், முஸ்லிம்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள், முஸ்லிம்களின் மீள்குடியேற்றம், மதச்சார்புப் பிரச்சினைகள், முஸ்லிம்களின் சமூகப் பிரச்சினைகள், முஸ்லிம் முகவர்களின் செயற்பாடுகள், பொழுதுபோக்கு சாதனங் களை முஸ்லிம்கள் தவறாகப் பயன்படுத்துதல், முஸ்லிம்கள் சமூக நலன்களில் அக்கறையுற்றிருத்தல், சமூகம் சார்ந்த ஏனைய பிரச்சினைகள், முஸ்லிம் களுக்கென்றொரு ஆள்புல பிரதேசம், பிரதிநிதிகள் தெரிவில் முஸ்லிம்களின் பங்களிப்பு, காணாமல் போனோர் பற்றிய விடயங்கள், எதிர்காலத்தில் செய்யவேண்டிய நடவடிக்கைகள் ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது.

11966

இலங்கைத் தமிழர் வரலாறு: கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும் கி.மு.250-கிபி.300. சி.பத்மநாதன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 4: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1 காலி வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxxvi, 550 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 2500., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-955-9233-43-5.

பரத கண்டத்தில் நாகர் (சி.பத்மநாதன்), பிராகிருத மொழிக் கல்வெட்டுக்களில் நாகர் (சி.பத்மநாதன்), பிராகிருத மொழிக் கல்வெட்டுக்களில் தமிழ்மொழியின் செல்வாக்கு (சி.பத்மநாதன்) ஆகிய முதல் மூன்று கட்டுரைகளைத் தொடர்ந்து, மட்டக்களப்பில் நாகரின் பண்பாட்டுச் சின்னங்கள் என்ற தலைப்பின்கீழ் இலவாணை வேரத்துச் சின்னங்கள் (சி.பத்மநாதன்), பிளாக்குழி வேரம்-மணிணாகன் (சி.பத்மநாதன்), கல்லடிச்சேனை வேரம் (சி.பத்மநாதன்), பாலாமடுவில் மணிணாகன் பள்ளி (சி.பத்மநாதன்), வந்தாறுமூலையில் நாகர் (சி.பத்மநாதன்), மாவடிவேம்பு காளியம்மன் கோயிலிற் காணப்படும் வட்ட வடிவமான கற்கள் (சி.பத்மநாதன்), வந்தாறுமூலை நீர்முகப் பிள்ளையார் கோயிலின் புராதன காலத்து வரலாற்றுச் சின்னங்கள் (செ.பத்மநாதன்), மாவடிவேம்பில் 2000 வருடங்களுக்கு முற்பட்ட நாகரின் கிணறு (சி.பத்மநாதன்), வாகரைப் பிரதேசத்தில் தமிழரின் புராதன காலப் பண்பாட்டுச் சின்னங்கள் (இ.இராகுலநாயகி), படிவெட்டின மலையிலுள்ள தொல்பொருட் சின்னங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(செ.பத்மநாதன்), குடும்பிமலையில் நாகரின் வழிபாட்டுச் சின்னங்கள் (அ.சதானந்தன்), குசலான் மலைத் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் (சி.பத்மநாதன்), நாவற்குடாவில் 2000 வருடங்களுக்கு முன்பு நாகர் அமைத்த கோயில் (வ. குணபாலசிங்கம்), களுவாஞ்சிக்குடியில் மிகத் தொன்மையான தமிழரின் பண்பாட்டுச் சின்னங்கள் (சி.பத்மநாதன்), தாந்தாமலையில் நாக அரசர்களின் அரண்மனையும் கோயில்களும் (வ.குணபாலசிங்கம்), மகிழடித்தீவு கண்ணகை அம்மன் கோயில் தொல்பொருட் சின்னங்கள் (சி.பத்மநாதன்), வெல்லா வெளியிலுள்ள விவேகானந்தபுரத்தில் நாகரின் பண்பாட்டுச் சின்னங்கள் (எழில்வாணி பத்மகுமார்), வெல்லாவெளி தும்பங்கேணியிலுள்ள நாகரின் பண்பாட்டுச் சின்னங்கள் (எழில்வாணி பத்மகுமார்), வெல்லாவெளி களுமுந்தன் வெளியில் நாகரின் வழிபாட்டுச் சின்னங்கள் (சி.பத்மநாதன்), நெடியமடுவில் நாகரின் கல்வெட்டுகள் (சி.பத்மநாதன்), வந்தாறுமூலை கண்ணகியம்மன் கோயிலின் உலோகச் சின்னங்கள் (சி.பத்மநாதன்), ஆகிய கட்டுரைகள் இடம்பெறுகின்றன. தொடர்ந்து, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழரின் புராதனகாலப் பண்பாட்டுச் சின்னங்கள் என்ற தலைப்பின்கீழ், சங்கமன் கண்டியில் நாகர் (சி.பத்மநாதன்), கஞ்சிகுடிச்சாற்றில் மலையிற் குடைந்த நாகர் கோட்டங்கள் (சி.பத்மநாதன்), காரைதீவில் 2000 வருடங்களுக்கு முற்பட்ட தமிழர் பண்பாட்டுச் சின்னங்கள் (சி.பத்மநாதன்), தம்பலகாமம் பண்பாட்டுச் சின்னங்கள், கல்வெட்டுகள் (த.ஜீவராஜ்), திருகோணமலை மாவட்டத் திலுள்ள சில புராதனமான கல்வெட்டுகள் (அ.சதீஸ்குமார்), திருக்கரசையில் நாகர் அமைத்த கோயில் (சி.பத்மநாதன்), கோகர்ணத்தில் நாகர் அமைத்த ஈஸ்வரம் (சி.பத்மநாதன்) ஆகிய கட்டுரைகள் இடம்பெறுகின்றன. தொடர்ந்து, மட்டக்களப்பில் நாகரின் ஆட்சி (சி.பத்மநாதன்), வழிபாட்டு நெறிகள் (சி. பத்மநாதன்), ஆகிய கட்டுரைகளைத் தொடர்ந்து பின்னிணைப்பில் வெல்லாவெளிக் கல்வெட்டுக்கள் (சி.பத்மநாதன்), பாலாமடுவிற் கிடைத்த சுடுமண் படிமமும் கலவோடுகளும் (சி.பத்மநாதன்) ஆகிய கட்டுரைகள் காணப்படுகின்றன.

11967

இலங்கைத் தமிழரின் வரலாற்றுச் சுவடுகள். ந.நகுலசிகாமணி, ந.உமா. வல்வெட்டித்துறை: வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம், ஊரிக்காடு, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xvi, 204 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ., ISBN: 978-955-43227-0-7.

இந்நூல், ஆசிரியரின் அகாலமரணமடைந்த இரு புத்திரர்களின் (சந்திரசேகர் நகுலசிகாமணி, சௌமியன் நகுலசிகாமணி) மறைவின் பத்தாவது ஆண்டு நினைவையொட்டி, தமிழிலும் ஆங்கிலத்திலும் (Historical Anecdotes of Sri Lankan Tamils) வெளியிடப்பட்டது. இளைய தலைமுறையினர் ஈழத்தவரின் வரலாற்றை சுருக்கமாக அறிவதற்கு வசதியாக பொருத்தமான புகைப்பட ஆதாரங்களுடன் இதே தலைப்பில் சமயம், வரலாறு, இலக்கியம், சம்பவம், அரசியல் என்பவற்றை மிகச் சுருக்கமாகத் தமிழில் தொடராக எழுதி வெளியிட்டிருந்தார். இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா உதயன் பத்திரிகையில் 50 வாரங்களாகவும், 2013இல் தினக்குரல் பத்திரிகையின் ஞாயிறு பதிப்பில் சாளரம் பகுதியிலும் பிரசுரமாகியருந்தது. அத்தொடரின் அடிப்படையில் அமைந்த நூல்வடிவம் இதுவாகும். யாழ்ப்பாணத் தமிழரசின் மாட்சியும் வீழ்ச்சியும் என்பதில் தொடங்கி, வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம் ஈறாக, 100 தலைப்புகளில் இந்நூலில் தகவல்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாண அரசின் சேது நாணயங்கள், இலங்கை அரசு அன்று வெளியிட்ட தபால் தலை, திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், மடுமாதா, வற்றாப்பளை கண்ணகை அம்மன், இலங்கை முஸ்லிம்களும் தமிழும், கன்னியா வெந்நீரூற்று, கீரிமலையும் நகுலேஸ்வரப் பெருமான் ஆலயமும், வல்லிபுரக் கோயில், கண்டியை ஆண்ட கடைசி மன்னன் ஸ்ரீவிக்கிரமராசா, சங்கிலித் தோப்பிலுள்ள நல்லூர் அரச மாளிகை, திருமலைக் கோட்டை என இன்னோரன்ன தகவல்கள் புகைப்படங்களுடன் ஆவணப் படுத்தப்பட்டுள்ளன.

11968

ஈழத் தமிழரும் சிங்களவர்களும். ஷண்முகன். அவுஸ்திரேலியா: ஷண்முகன், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2014. (அவுஸ்திரேலியா: டெக் பிறஸ்).

(2), 120 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x18 சமீ.

இலங்கை பிரித்தானிய ஆட்சியில் இருந்து விடுபட்ட 1948-ம் ஆண்டிலிருந்து ஈழத்தமிழர் சார்ந்த சரித்திரச் சான்றுகளின் அழிப்பு நடவடிக்கைகள் முனைப்புப் பெற்றது மட்டுமன்றி அவர்கள் தொடர்பான வரலாற்று உண்மைகள் மறைக்கப் பட்டும் ஈழத் தமிழருக்குப் பாதகமான முறையில் திரிக்கப்பட்டும் வந்திருப்பதை வலியுறுத்தும் ஆசிரியர், 200ஆண்டுகளுக்கு முன்னர் பெருந் தோட்டங்களில் பணியாற்ற அழைத்துவரப்பட்ட இந்தியத் தமிழரின் வருகையை ஈழத்தமிழரின் உருவாக்கமாகப் புரிந்துகொள்ளும் இந்திய ஐரோப்பிய வரலாற்று மாணவர்களுக்கு, இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர் கௌதம புத்தர் இலங்கைக்கு வருகைதந்தபோது இலங்கை ஒரு பூரணமான தமிழ் நாடாகவே இருந்திருக்கிறது என்ற கருத்தை முன்வைக்கிறார். இந்நூல் ஈழத்தமிழர் வரலாறு, அனுராதபுரமும் தமிழ் மக்களும், இலங்கையின் வடமேல் மாகாணத் தமிழர்கள், இலங்கை முஸ்லிம்கள், ஈழத்தமிழரும் கேரளமும், இலங்கையும் சிங்கள மக்களும், கிரந்த லிபியும் சிங்களமும், ஈழத்தமிழரின் தற்போதைய நிலைமை, ஈழத்தமிழரின் எதிர்காலம் ஆகிய ஒன்பது இயல்களில் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 245673).

11969

கடல் கடந்த தமிழும் தமிழரும். இரத்தினம் நித்தியானந்தன். கோவை: உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, 1வது பதிப்பு, ஜூன் 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

தமிழகத்தில், கோயம்புத்தூரில் 26.6.2010 அன்று நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் வாசிக்கப்பெற்ற கட்டுரையின் நூல்வடிவம். பிரித்தானியாவுக்குப் புகலிடம்தேடிச் சென்ற ஈழத்தமிழர்களின் வாழ்க்கை முறைகளையும், அங்கு மேற்கொள்ளப்படும் தமிழர் கல்வி, கலாச்சாரம், பண்பாடு சார்ந்த செயற்பாடுகளையும் விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

11970

மதுரை எரிகிறது. நா.வை.குமரிவேந்தன் (இயற்பெயர்: மகேந்திரராசா). வவுனியா: நா.வை.குமரிவேந்தன், குமரித் தமிழ்ப் பணிமன்றம், 16/2, மருத்துவமனை சுற்றுவட்ட வீதி, குடியிருப்பு, 1வது பதிப்பு, ஆவணி 2012. (வவுனியா: வாணி கணனிப் பதிப்பகம், இல. 85, கந்தசாமி கோவில் வீதி).

100 பக்கம், விலை: ரூபா 170., அளவு: 21.5 x15 சமீ.

இந்நூல் தமிழின் தமிழரின் பெருமையைக் கூறுவதும், பகுத்தறிவுச் சிந்தனையை வளர்ப்பதுமான ஒன்பது கட்டுரைகளின் தொகுப்பாகும். ஆசிரியரின் அறிமுக வுரையான "என்னுரை"யைத் தொடர்ந்து, இயற்கை போற்று, மதுரை எரிகிறது, நிலைபேண் அபிவிருத்தியும் தமிழன் கால்வாயும், சேரநாடு கேரள நாடானது, மனித உரிமை மீறலாக சாதீயம், தமிழ் ஒருங்கு குறித்தொகுப்பியம், தமிழர் வரலாற்றில் வானியல், தமிழ் இலக்கியமும் சமூகமும், சைவமும் தமிழும் தமிழனின் இரு கண்கள் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

11971

வடக்கு முஸ்லிம்கள் எதிர்பார்ப்பது. B.A.S. சுப்யான். கொழும்பு 6: வடக்கு முஸ்லீம்களின் உரிமைக்கான அமைப்பு, NMRO, 15A, ரோகிணி வீதி, 1வது பதிப்பு, மே 1997. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல.1B, P.T.De சில்வா மாவத்தை).

iv, 24 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 20x14 சமீ.

வடக்கு முஸ்லீம்களின் உரிமைக்கான அமைப்பின் (Northern Muslims' Rights Organisation) உப தலைவரான மௌலவி பி.ஏ.எஸ்.சுப்யான் (யாகூத்தி) அவர்களின் நேர்காணல்களின் தொகுப்பு இதுவாகும். இவை முன்னர் தினகரன் வாரமஞ்சரி, சரிநிகர், அல் ஹஸனாத், யுக்திய (சிங்களம்) ஆகிய ஊடகங்களில் பிரசுரமாகியவை. வடக்கு முஸ்லிம்களின் உரிமைகள், அபிலாஷைகள் பற்றி தமிழ் முஸ்லிம் மக்கள் அறிந்துகொண்டு, நன்கு தெளிவுபெற்று நியாயமான அவ்வுரிமைகளையும் அவர்களின் அபிலாஷைகளையும் வென்றெடுப்பதற்கான போராட்டத்தில் தெளிவான சிந்தனையுடன் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும் என்ற கோரிக்கையை இந்நேர்காணல்கள் வலியுறுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11972

வடபுல முஸ்லிம்களின் மீள்குடியேற்ற சவால்கள். சுஜப் எம்.காசிம். கொழும்பு 10: சுஜப் எம்.காசிம், இஷாபா (Ishafa) பதிப்பகம், B1/G1, மாளிகாவத்தை தொடர்மாடி, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு: IMIS Creations).

(5), 93 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-7735-00-9.

1990ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் வடபுலத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் துயர வரலாற்றையும் மீள்குடியேற்றம் தொடர்பான இன்றைய யதார்த்த நிலைமையையும் இந்நூல் 34 கட்டுரைகளில் பதிவுசெய்திருக்கிறது. கால்நூற்றாண்டுக் காலமாகக் கண்ணீரும் கம்பலையுமாக காலம்தள்ளும் ஒரு சமூகக் குழுமம் தமது பிறந்தகத்திலிருந்து தூக்கி வீசப்பட்ட துயர வரலாறு உணர்வுபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை மீள்குடியேற்றப்பட்ட நடவடிக்கைகளை இந்நூல் பதிவுசெய்துள்ளதோடு மீள்குடியேற்றத்தில் அக்கறை கொண்டோருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் உள்ளது. சமீப காலமாக நாடுதழுவிய சர்ச்சையை உருவாக்கிய வில்பத்து குடியேற்ற விவகாரம் பற்றிய உண்மையை இந்நுலின் பல கட்டுரைகள் விபரிக்கின்றன. அதேவேளையில் பொதுபலசேனா என்ற பௌத்த தீவிரவாத அமைப்பின் விஷ மப் பிரச்சாரங்களையும் ஆசிரியர் கேள்விக்குள்ளாக்குகின்றார். மன்னார், விடத்தல்தீவைப் பிறப்பிடமாகக்கொண்ட சுஜப் எம். காசிம் மொரட்டுவ பல் கலைக்கழகத்தில் எந்திரவியல் டிப்ளோமா பட்டத்தைப் பெற்றவர். தற்போது தினகரன் வார மஞ்சரியின் இணை ஆசிரியராகப் பணிபுரிபவர். அவ்வப்போது தான் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக இதனை வழங்கி யுள்ளார்.

11973

வெளிநாடுகளில் தமிழர். சிவலிங்கம் சதீஷ்குமார். கொழும்பு 10: சி.சதீஷ்குமார், 175/33/L/2, சென்ட்ரல் மௌலானா கார்டன், மருதானை வீதி, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xvi, 217 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-42116-3-6.

வெளிநாடு வாழ் இந்தியர்கள், வெளிநாடுகளில் தமிழர்கள், தமிழர்களின் வெளிநாட்டுக் குடியேற்றங்கள் ஆகிய முதல் மூன்று அத்தியாயங்களின் பின்னர் ஆசிரியர் மலேசியா, சிங்கப்பூர், மொரீஷியஸ், தென்னாபிரிக்கா, பிஜி, பர்மா, தாய்லாந்து, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், கரீபியன் தீவுகள், கயானா ஜமெய்க்கா, கிரெனடா, ரீயூனியன், சீசெல்சு, ஜப்பான், சீனா, அந்தமான் நிக்கோபார் தீவுகள், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, இத்தாலி, ஹாலந்து, சுவீடன், டென்மார்க், சோவியத் ஒன்றியம், மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவற்றில் வாழும் தமிழர்கள் பற்றித் தனித்தனி இயல்களில் விபரித்திருக்கிறார். மத்திய கிழக்கு நாடுகளில் பெரும்பான்மையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் இந்தியர், வளைகுடாவில் இந்தியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்பன இறுதி இரு இயல்களில் விபரிக்கப்பட்டுள்ளன. சதீஸ்குமாரின் இந்நூல் தூர நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களின் வாழ்வியல் பற்றி ஏராளமான தகவல்களைத் தருகின்றது. தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் வாழ்கின்ற தமிழர்களின் வாழ்வியல், வெளிநாட்டுத் தமிழர்களின் வாழ்வியல், அவர்கள் தமது தனித்துவத்திற்கென மேற்கொள்கின்ற முயற்சிகள், தான் குடியேறிய நாட்டில் வாழ்கின்ற ஏனைய இனத்தவரோடு சுமுகமாக வாழ்வதற்கு பயன்படுத்துகின்ற உபாயங்கள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் பற்றிய அறிவினை இந்நூல் சுவைபட வழங்குகின்றது.

954.93(4) பிரதேச வரலாறு

11974

அனலைதீவு: வாழ்வும் வளமும் வரலாற்று நூல். பெ.துரைராஜா (பதிப்பாசிரியர்). கனடா: Publishing Committee, Life and Lustre of Analaitivu, 880, Ellesmare Road, Suite 203, Toronto, Ontario M1P 2W6, 1வது பதிப்பு, ஜுன் 2008. (Canada: R.J.Multi Litho Inc.,2708, Coventry Road, Oakville, Ontario L6H 6R1)

xviii, 398 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x21.5 சமீ.

முகவுரை, வாழ்த்துரைகள், நிர்வாகிகளின் உரைகள் என்பவற்றைத் தொடர்ந்து, அனலை ஆலயங்களும் வரலாறுகளும் என்ற பிரிவில் 25 கட்டுரைகளும், புவியியலும் மக்கள் வரலாறும் என்ற பிரிவில் 96 கட்டுரைகளும், வாழும் பெரியார் என்ற பிரிவில் அனலைதீவைச் சேர்ந்த 40 பிரமுகர்கள் பற்றிய தகவல்களும், மறைந்த பெரியார் என்ற பிரிவில் அனலைதீவில் பிறந்து மறைந்த 79 பெரியார் பற்றிய தகவல்களும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47494).

11975

ஆரையம்பதி மண்: உள்ளதும் உரியதும்- வரலாற்று நூல். ஆரையம்பதி க. சபாரெத்தினம். மட்டக்களப்பு: க.சபாரெத்தினம், செல்வா நகர், ஆரையம்பதி 2, 1வது பதிப்பு, பெப்ரவரி 2014. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).

xvi, 324 பக்கம், விலை: ரூபா 1000., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-53426-2-9.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு நகரின் தெற்கே 4 மைல் தொலைவில் அமைந்துள்ள ஓர் ஊரே ஆரையம்பதியாகும். இது கிழக்கிலங்கையில் தமிழர் செறிந்துவாழும் ஊர்களில் ஒன்றாகும். இதன் எல்லைகளாக வடக்கில் காத்தான்குடியும் கிழக்கில் வங்காள விரிகுடாக் கடலும் தெற்கில் ஜந்தாம்கட்டை - மண்முனையும் தென்கிழக்கில் பாலமுனையும் தென் மேற்கில் மாவிலங்கைத் துறை - காங்கேயனோடையும் மேற்கில் மட்டக்களப்பு வாவியும் அமைந்துள்ளன. இவற்றுக்கிடையில் மணற்பாங்கான தாழ்ந்த சமவெளியாக ஆரையம்பதி அமைந்துள்ளது. குருகுலத்தோர் தெரு, வேளாளர் தெரு, சாண்டார் (பணிக்கர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரு, செங்குந்தர் தெரு, வண்ணார் தெரு, பறையர் (சாம்பான்) தெரு, பொற்கொல்லர் தெரு, ஆகிய குலப் பெயர்கள் கொண்டழைக்கப்படும் தெருக்கள் இங்கு இருக்கின்றன. அத்துடன் அலையன் குளம், ஆனைக் குளம், வண்ணான் குளம், வம்மிக் கேணி, தோணா பால் வாத்த ஓடை ஆகியன இவ்வூருக்கு நீர்வளம் சேர்க்கின்றன. அக்காலத்தில் வீடுகளில் கொட்டுக் கிணறுகள் இருந்தன. தேத்தா மரத்தின் நடுப் பகுதியைத் தோண்டியெடுத்த பின்னர் குழல்போன்ற மரக்கொட்டினை நிலத்தில் பதிப்பார்கள் கிணற்றைப் பாதுகாக்கும் கட்டுமானம் இந்தக் "கொட்டுக்குத்தான்" இருக்கும். இத்தகைய சிறப்புப் பெற்ற ஆரையம்பதியின் பூர்வீக வரலாறு பற்றிய நூலாக இது வெளிவந்துள்ளது. பூர்வீகமும் தோற்றுவாயும், மக்கள் வாழ்வியல், மண்வாசனை மொழிவழக்கு, அரச,பொது, சமூகத் தாபனங்கள், கோயில்களும் அவற்றின் தொன்மை வரலாறுகளும், குறிப்பிடத்தக்க பெரியார்களும் மாண்புடை மக்களும், பாரம்பரிய கலாசாரமும் விழுமியங்களும், கலைகளும் விளையாட்டுக்களும், கைத்தொழில் முயற்சிகள், அயல் கிராமங்களுடனான உறவுநிலை ஆகிய பத்து அத்தியாயங்களில் இந்தப் பிரதேச வரலாற்று நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236734).

11976

ஊர் ஒன்றின் பேரறிவோம். உடப்பூர் வீரசொக்கன். புத்தளம்: உடப்பு இளந்தாரகை வட்டம், உடப்பூர், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2016. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர். இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

x, 136 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 275., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-1907-04-4.

புத்தளம் மாவட்டத்தின் தமிழ்ப் பெயர்களைக் கொண்ட 77 கிராமங்களின் விபரத்தினை இந்நூலில் ஆசிரியர் ஆவணப்படுத்தியிருக்கிறார். உடப்பூர் கிராமம், முன்னேஸ்வரம், புளிச்சாக்குளம், முந்தல், கருக்குப்பனை, தாராக்குடிவில்லு, கருங்காலிச்சோலை, கரடிப்பூவல், பொன்பரப்பி-காரைதீவு, கற்பிட்டி, தில்லையடி, மணல்தீவு, நரக்களி, கனமூலை, தோப்பு, மாம்புரி, நவநீதன்குளம், மங்கள ஒளி (மங்கள எலிய), அக்கரைவெளி, கீரியங்கள்ளி, விருதோடை, குசலை, தொடுவா(தொடுவாவ), மாயவன் ஆறு (தெதுறுஓய), முதலைப்பாளி, நுரைச்சோலை, இலந்தையடி, வண்ணாத்திவில்லு, அம்பலம், திகழி, இரணமடு (இரணவில), கொத்தாந்தீவு, முட்டிபாலக்குளம், பெரியகுளம் (மஹாவெவ), செம்புக்குழி, தலைவில்லு, மரவெல, கொக்குவில்(கொக்காவில), மாராவில், மானாவரி, பூந்தோட்டம், கீழ் பிராமணதளுவ, தீர்த்தக்கரை எனப் பல தமிழ்ப் பெயர் கொண்ட புத்தளம் மாவட்டக் கிராமங்களின் பூர்வீகப்பெயர்கள் சிங்களமயமாக்கப்படும் அவலநிலையில் இந்நூல் தமிழ்க்கிராமங்களின் பெயர்களையும் அவற்றின் சிறு வரலாற்றுத் தகவல்களையும் பதிவுசெய்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61547).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11977

காரைநகர் மான்மியம். எப்.எக்ஸ்.சி.நடராசா. மட்டக்களப்பு: எப்.எக்ஸ்.சி.நடராசா, 53, மத்திய வீதி, 1வது பதிப்பு, தை 1971. (கொழும்பு 13: இரஞ்சனா அச்சகம், 98, விவேகானந்தா மேடு).

(12), 165 பக்கம், வரைபடம், விலை: ரூபா 5., அளவு: 18x12.5 சமீ.

காரைநகர் மான்மியம். எப்.எக்ஸ்.சி.நடராசா. லண்டன்: காரை நலன்புரிச் சங்கம், இணை வெளியீடு, கனடா: காரை கலாச்சார மன்றம், 2வது பதிப்பு, ஜனவரி 2012, 1வது பதிப்பு, தை 1971. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர். இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

xvi, 170 பக்கம், விலை: ரூபா 490., அளவு: 18x12.5 சமீ.

இடவிளக்கம், இயற்கைத் தோற்றம், பழைமை, புதுமை, சமயம், கல்வி, மடங்கள், காரைநகர்ச் சபைகள், இடப்பெயர் விளக்கம், பெருமக்கள், வகையுந் தொகையும் ஆகிய பதினொரு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. காரைநகர் (Karainagar) இலங்கையின் வடக்கு மாகாணத்தில் மேற்குத் திசையில் அமைந்துள்ள ஏழு சப்த தீவுகளில் ஒன்றாகும். மற்றைய தீவுகளை விட யாழ்நகருக்கு அண்மையில் இருப்பதுதான் காரைநகர். இது நாற்புறமும் கடலினால் சூழப்பட்ட ஒரு தீவு ஆகும். இவ்வூரில் அப்பொழுது ஏராளமான காரைச்செடிகள் நின்றமையால் அப்பெயர் பெற்றது என்றும் பெயருக்குரிய காரணம் கூறப்படுகின்றது. காரைதீவு வடக்கு, மேற்கு திசைகளில் ஆழமான பாக்கு நீரிணைக் கடலாலும் கிழக்கு, தெற்குத் திசைகளில் ஆழமற்ற வற்றும் தன்மையுள்ள பரவைக் கடலாலும் சூழப்பட்டுள்ளது. பிரித்தானியரின் ஆட்சியில் (1869 இல்) அவ்வேளையில் அரசாங்க அதிபராக இருந்த துவைனம் துரையின் உதவியுடன் பொன்னாலைக் கடலுக்கூடாக கற்தெருவும், ஒன்பது பாலங்களும் அமைந்து காரைத்தீவினைக் குடாநாட்டுடன் இணைத்தனர். இவ்விணைப்புத் தெருவின் நீளம் சுமார் 3 கிலோ மீட்டர் ஆகும். இத்தரைத் தொடர்பினை அடுத்து சேர் பொன் இராமநாதனின் விதைந்துரைப்புடன் காரைதீவினை 1923ம் ஆண்டு தொடக்கம் காரைநகர் என்று பெயர் மாற்றிக் கொண்டனர். இங்கே வலந்தலை, கோவளம், தங்கோடை, கருங்காலி, பலுகாடு, களபூமி என்ற ஆறு பெருங் குறிச்சிகள் உள்ளன. காரைநகர் ஏழு கிலோ மீட்டர் நீளமும் நாலரை கிலோ மீட்டர் அகலமும் உடையது. மேற்கே உள்ள கோவளக் கடற்கரையில் கலங்கரை விளக்கமும் தெற்கே இயற்கையாக அமைந்த கப்பல் துறைமுகமும் உள்ளன. நகரின் வடக்கு பக்கமாக இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் திண்ணபுரம் சிவன் கோவில் உள்ளது. இக்கோவிலுக்கு கிழக்கு, தெற்கு திசைகளில் பசும்புல் தரைகளும் மேற்கு வடக்கு திசைகளில் தென்னஞ்சோலைகளும் அதனை அடுத்தாற் போல கசூரினா கடற்கரையும் உள்ளன. இந்நூல் காரைநகரின் சிறப்பையும் வனப்பையும் மாத்திரமல்லாது, அங்கு வாழ்ந்திருந்த பிரமுகர்கள், புலவர்கள், அங்கெழுந்த நூல்கள் என்பன வற்றையும் பதிவுசெய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11978

கோணேஸ்வரம்: கி.பி.15ஆம் நூற்றாண்டு வரை. செல்லத்துரை குணசிங்கம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு, 2016, 1வது பதிப்பு, ஜூலை 1973. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

viii, 126 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-468-3.

கோணேஸ்வரக் கோவிலின் தோற்றக்காலம் எது?, கி.பி. 3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலம், சோழராட்சிக் காலமும் அதற்குச் சிறிது பிற்பட்ட காலமும் ஆகிய மூன்று பிரதான அத்தியாயங்களில் இந்த ஆய்வு நூல் எழுதப்பட்டுள்ளது. கோணேஸ்வரக் கோயிலை மையமாகக் கொண்டு, கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட 15ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள காலப் பகுதியில் திருக்கோணமலை மாவட்டத்தில் காணப்பட்ட இந்துமதச் செல்வாக்கினையும் காலத்துக்குக் காலம் தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் நடைபெற்ற அரசியல் மாற்றங்கள், பண்பாட்டு அபிவிருத்திகள், திருக்கோணமலை மாவட்டத்தினைப் பாதித்த விதத்தினையும் எடுத்துக்கூறுகின்றது இந்நூல். இதன் அடிப்படையில் இலங்கையில் சோழராட்சி நடைபெற்ற காலத்தில் இலங்கையின் ஏனைய மாவட்டங்களைக் காட்டிலும் சோழராட்சியின் கூடுதலான பாதிப்புக் குள்ளானது திருக்கோணமலை மாவட்டமாகும் என்ற கருத்து முதன்முதலாகச் சான்றுகளுடன் இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

11979

சண்டியூர். குணரத்தினம் கோபிராஜ். யாழ்ப்பாணம்: அகில இலங்கை சேக்கிழார் மன்றம், சண்டிலிப்பாய், 1வது பதிப்பு, 2015. (யாழ்ப்பாணம்: கொம்பியூட்டர் வேர்ள்ட்).

xvi, 68 பக்கம், வரைபடங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவு தொடர்பான தகவல்களை உள்ளடக்கி சண்டியூர் என்னும் நூல் எழுதப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேசத்திற்கானதொரு அறிமுகம், அங்கு வாழ்ந்திருந்த கற்றோரும் பிரமுகர்களும், அப்பிரதேசத்தின் கல்வி வரலாறு, மற்றும் அப்பிரதேசத்தின் சிறப்புக்குரிய இடிகுண்டுக் கிணறு, வழுக்கையாறு தொடர்பான பார்வைகள், இடப்பெயர்கள், குறிச்சிப் பெயர்கள் பற்றிய வரலாறு எனப் பல்வேறு பிரதேச வரலாற்று விடயங்களை இந்நூல் உள்ளடக்குகின்றது. இவை அனைத்தும் சண்டிலிப்பாய்-ஓர் அறிமுகம் (யாழ்ப்பாணம்-விளக்கம், சண்டிலிப்பாய்-அமைவிடம், சண்டிலிப்பாய் -பெயர் விளக்கம், சமூகப் பிரிவுகள், நீர்வளம், சண்டிலிப்பாயும் அயற் கிராமங்களும்), சண்டிலிப்பாய் ஆலயங்கள் (சிவாலயங்கள், அம்மன் ஆலயங்கள், விநாயகர் ஆலயங்கள், வைரவர் ஆலயங்கள், ஐயனார் ஆலயம், வீரபத்திரர் ஆலயம், முருகன் ஆலயங்கள்), சான்றோர்களும் சண்டிலிப்பாயும் (கதிரவேலு சிறாப்பர், கம்பவாருதி ஜெயராஜ், அபிமன்யு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினோதன்), சண்டிலிப்பாய் பிரதேச பண்பாட்டுக் கோலங்கள், பின்னிணைப்பு ஆகிய ஐந்து இயல்களில் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 244261).

11980

தொலைந்துபோன வசந்த காலங்கள். வீணைமைந்தன் (இயற்பெயர்: கே.ரி. சண்முகராஜா). கனடா: வீணைக்கொடி வெளியீட்டகம், 425, Boulvard Hymam, Dollard-Des-Ormeaux (Quebec), H9B 1M1, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2015. (யாழ்ப்பாணம்: சிவராம் பதிப்பகம், 20, கல்லூரி வீதி).

xviii, 140 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-42202-2-5.

காங்கேசன்துறையிலிருந்து கனடாவுக்குப் புலம்பெயர்ந்து சென்று வாழும் ஆசிரியரின் தாயகப் பிரதேச வரலாற்றுக் கட்டுரைகளின் தொகுப்பு. டொரன்ரோவில் சூரியன் இதழிலும் பின்னர் மொன்ரியலில் இருசு இதழ்களிலும் வெளியான கட்டுரைகள் இங்கு விரிவாக்கப்பட்டு நூலுருவில் வெளிவந்துள்ளன. பிறந்த பதியினும் சிறந்ததொன்றில்லை என்னும் தலைப்பில் சூரியன் இதழில் இவர் முதலில் எழுதிய தொடரில் காங்கேசன்துறை பற்றிய வரலாற்றுப் புதினங்களையும் தன்னோடு தொடர்ந்து வந்த நினைவனுபவங்களையும் எழுதிய இவர், தொலைந்துபோன வசந்தங்கள் என அவற்றை விரிவான நெடுந்தொடராக மீண்டும் 2009 ஜூலையில் மொன்ட்ரியல் இருசு பத்திரிகையில் சுமார் எட்டு மாதங்கள் எழுதிவந்தார். இத்தொடர் கட்டுரைகளே இங்கு நூலுருவாகியுள்ளன. தனது தாயகப் பூமியாகிய வலி-வடக்கின் வாழ்வு ஈந்தளித்த வல்லமைகளும் அதனை இழந்த துயரம் தரும் வலிகளும் இந்த நூலின் பிரதான உள்ளடக்கமாகின்றது. பிள்ளைப் பருவம் முதலாக தமக்கு வாய்த்த சமூகமயமாக்கச் சூழலின் அழகிய பக்கங்களையும் சவாலான நிலைமைகளையும் இந்நூலில் அழகிய அனுபவப் பதிவுகளாக்கியிருக்கிறார். இது ஆசிரியரின் தனிப்பட்ட கதையாக-சுய அனுபவங்களாக அமைந்துவிட்டபோதிலும் ஒரு காலத்தின் கதையாகவும் பண்பாட்டின் வரலாறாகவும் விரிந்து பொருள் தருகின்றது.

11981

தொன்ம யாத்திரை: மரபை அறிதலுக்கும் கொண்டாடுதலுக்குமான இதழ்: ஊர்காவற்றுறை. யதார்த்தன், பிரிந்தா (ஆசிரியர் குழு). யாழ்ப்பாணம்: தொன்ம யாத்திரைக் குழுமம், விதை குழுமம், அக்கினிச் சிறகுகள், 1வது பதிப்பு, பங்குனி 2017. (அச்சக விபரம் தரப்படவில்லை).

20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ.

தொன்ம யாத்திரை இதழின் இரண்டாவது இதழ் ஊர்காவற்றுறை பற்றிய வரலாற்றுத் தேடலாக அமைந்துள்ளது. தீவகத்தின் மையங்களில் ஒன்றான ஊர்காவற்றுறையினை தொன்ம யாத்திரைக்கான இடமாகத் தெரிவுசெய்து அதனைப் பற்றிய ஆய்வுகளை தொன்ம யாத்திரைக் குழுமம் மேற்கொண்டுள்ளது. ஆச்சரியமும் சோகமும் நிரம்பிய வரலாற்றைக் கொண்ட இந்த நிலத்தில் நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலத்தில் அவதானிக்க வேண்டியதும் அவசரமாகக் கவனத்தைக் குவிக்க வேண்டியதுமான பிரச்சினைகளைப் பற்றிய சிறு அறிமுகம் இதுவாகும்.

11982

நயினை மான்மியம். நயினை வரகவி நாகமணிப் புலவர் (மூலம்), ப.க.மகாதேவா (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: ப.க.பரமலிங்கம், 31, அருத்துசா ஒழுங்கை, 1வது பதிப்பு, வைகாசி 2005. (கொழும்பு 6: கிரிப்ஸ்).

213 பக்கம், தகடுகள், விலை: ரூபா 300., அளவு: 21x15 சமீ.

வெளியீட்டுரை, அணிந்துரை, வாழ்த்துரை ஆகியவற்றைத் தொடர்ந்து நயினாதீவு இடப்பெயர் ஆய்வு, நூலாசிரியர் வரலாறு, புலவரைப் பற்றிய ஒரு நோக்கு, நயினை மான்மியம் (பாயிரம், ஈழமண்டலச் சருக்கம், ஸ்தல விசேடச் சருக்கம், மூர்த்தி விசேடச் சருக்கம், தீர்த்த விசேடச் சருக்கம், சேடனருச்சனைச் சருக்கம், விழாவணிச் சருக்கம், உவ வனச் சருக்கம், மகாமணிச் சருக்கம், புண்ணியராச தரிசனைச் சருக்கம்), நயினை நிரோட்ட யமக அந்தாதி, புலவர் தன் பதின்மூன்றாவது வயதில் பாடிய பாடல், வழிநடைச் சிந்து, தனிப்பாடல்கள், நயினை ஸ்ரீ நாகபூஷ ணியம்மை திருவூஞ்சல் ஆகிய விடயங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. நயினை வரகவி நாகமணிப் புலவர் நினைவாக வைகாசித் திங்கள்2005ஆம் ஆண்டு இந்நூல் வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூ லகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36733).

11983

நிலாவெளி: வரலாறும் பண்பாடும். க.கெஜரெத்தினம் (புனைபெயர்: பெரியையா). திருக்கோணமலை: நிலா வெளியீடு, கஸ்கசன் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2014. (திருக்கோணமலை: எஸ்.எஸ்.டிஜிட்டல்).

xx, 60 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20x14.5 சமீ.

திருக்கோணமலை மாவட்டத்தின் நிலாவெளி கிராமம் பற்றிய பிரதேச வரலாற்று நூல். கிராமத்தின் தோற்றம், நிலாவெளி கிராமத்தின் பழங்காலப் பெயர்களும் இடங்களும் வாழ்ந்த மக்களும், மக்களின் வாழ்வாதாரமான தொழில்களும் தொழில்முறைகளும், போக்குவரத்து, பாடசாலைகளும் கல்வி நிலையும், நிலாவெளி வரலாற்றில் பண்டைய அரச நிர்வாகம், சமய வழிபாட்டுத் தலங்களும் முற்கால வழிபாட்டு முறைகளும், திருக்கோணேஸ்வர மகோற்சவம்-கட்டுக்குளப் பற்று அன்பர்களின் 10ம்நாள் திருவிழா பற்றிய வரலாறு ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 55229).

11984

நெடுந்தீவு இலக்கியப் பாரம்பரியங்கள்-ஓர் ஆய்வு. கலைவாணி மோகன்ராஜ். நெடுந்தீவு: கலாசாரப் பேரவையும் நெடுந்தீவு பிரதேச செயலகமும், 1வது பதிப்பு கார்த்திகை 2016. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6), 102 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ.

தான் பிறந்த மண்ணாகிய நெடுந்தீவின் இலக்கிய வளங்கள், ஈழத்து இலக்கியத் தடத்தில் பிரகாசிக்க வேண்டுமென்ற ஆவலில் இவ்வாய்வை மேற்கொண்டுள்ள கலைவாணி, பல்துறை சார்ந்த இலக்கியங்களையும் இலக்கியப் படைப்பாளி களையும் விமர்சனரீதியில் அணுகியுள்ளார். இவர்களின் படைப்புக்களில் பல்வேறுபட்ட பாடுபொருள்கள் பொதிந்துள்ளன. தமிழ்மொழியின் சிறப்புக்களை வளர்ப்பதிலும் எடுத்துரைப்பதிலும் உறுதுணையாக நின்ற அறிஞர்களுள் இத்தீவின் மைந்தர்கள் அளப்பரிய சேவையாற்றியுள்ளனர். இவர்களோடு பல இளம் எழுத்தாளர்களும் இலக்கிய உலகில் பிரகாசிக்கின்றனர். இவர்களின் ஆளுமைகளும் தேடல்களும் இவ்வாய்வில் வெளிச்சமிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

11985

பாலித்தீவு: இந்துத் தொன்மங்களை நோக்கி: பயண இலக்கியம். *கானா பிரபா. அவுஸ்திரேலியா: மடத்துவாசல் பிள்ளையாரடி வெளியீடு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2015. (அவுஸ்திரேலியா: தமிழ் அவுஸ்திரேலியன், 5/128,* Pendle Way, Pendle Hill, NSW 2145*).*

106 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21x15 சமீ., ISBN*: 978-0-646-93506-5.*

உலகில் தென்கிழக்காசியா வரையில் விரிந்திருந்த சமயம் சைவ சமயமாகும். இந்தோனேசியத் தீவுகளில் ஒன்றான பாலியில் 85 சதவீதத்தினர் இந்துக்கள். இந்நூல், இந்தியா-இந்து சமயம் என்பனவற்றுக்கும், இந்தோனேஷியாவின் பாலித் தீவுக்கும் இடையிலான தொடர்பை ஆய்வுசெய்கின்றது. இதுவொரு பயணக்கட்டுரை மாத்திரமல்லாது, பாலித்தீவின் வரலாறு, சமயம், கலை, கலாச்சாரம், பண்பாடு, வாழ்வியல், பொருளாதாரம் ஆகியவற்றை கி.பி.914 முதலான வரலாற்றாதாரங்களோடு பகிர்ந்துகொள்ளும் ஒரு நூலாகவும் அமைந்துள்ளது. பாலித்தீவை ஆண்ட கேசரி வர்மன், தபேனேந்திர வர்மதேவன், சிங்கவர்மதேவன், உதயணன் போன்ற மன்னர்களின் பெயர்கள் இந்தியத் தொடர்பை உறுதிசெய்கின்றன. சிட்னியில் இருந்து பாலித்தீவுக்குப் பயணிக்கும் எம்மவர்கள் எவ்வழியாகச் செல்லவேண்டும். பணத்தைச் சிக்கனமாகச் செலவிடும் அறிவுரைகள், விமான நிலைய கட்டுப்பாடுகள், பார்க்கவேண்டிய முக்கிய இடங்கள் என்பன பற்றிய பயனுள்ள குறிப்புகளுடன் இந்நூல் வெளிவந்தள்ளது. கானா பிரபா, அவுஸ்திரேலியாவில் சிட்னியில் வாழும் ஊடகவியலாளர். மடத்துவாசல் இணையத்தளத்தினை நடத்தி வருபவர். சிட்னியில் 24 மணிநேர தமிழ் ஒலிபரப்பு நிலையமான அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஊடகவியலாளராக கடமையாற்றுகினறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11986

பிரதேச வரலாற்று மூலங்கள்: ஒரு நூல்வழித் தேடல்: தீவகம். என்.செல்வராஜா. ஜேர்மனி: புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம், என்னெப்பெட்டல், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

x, 129 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-0-9930143-5-2.

தாம் பிரிந்துவந்த மண்ணின் நினைவுகளை பிரதேச வரலாறுகளாகப் பதிவுசெய்யும் நடைமுறை புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் நீண்டகாலமாகவே இருந்து வந்துள்ளது. அதே வேளை உள்ளக இடப்பெயர்வுகளால் தாம் இழந்த மண் பற்றிய துயரப் பதிவுகளை மேற்கொண்டு வரலாறாக்கும் பணிகளும் அண்மைக்காலத்தில் தாயகத்தில் முனைப்புப்பெற்று வந்திருக்கின்றன. பிரதேச வரலாறென்பது வளர்ந்துவரும் ஒரு ஆய்வுப்பரப்பாக மாறிவிட்டதெனலாம். இன்று நமது புகலிடங்களில் உருவாக்கப்பட்டு இயங்கிவரும் கோவில்கள் கூட, தாயகத்துக் கோயில்களின் நினைவுகளைத் தாங்கியே இயங்குவதை ஆழ்ந்து அவதானிக்கமுடிகின்றது. ஆங்காங்கே உருவாக்கப்பட்டு, ஆண்டுதோறும் சந்திப்பு நிகழ்வுகளை மேற்கொண்டு கூடிப் பேசிப் பிரியும் ஊர்ச் சங்கங்கள் கூட, பிரதேச வரலாற்றின் கூறுகளாகவே அமைகின்றன. அவை அவ்வப்போது வெளியிடும் மலர்களும் அவ்வப் பிரதேசத்தின் வரலாற்றுப் படிமங்களாகவே காணப்படுகின்றன. பாடசாலை பழைய மாணவர் சங்கங்களும் இந்த வகைக்குள் அடங்குகின்றன. இன்று ஈழத்தமிழர்களால் ஆங்காங்கே பதிவுசெய்யப்பட்டுவரும் பிரதேச வரலாற்றுக் கூறுகளைத் தொகுத்துப் பகுத்துப் பார்ப்பதே ஒரு வரலாற்று ஆவணமாகி விடும். அத்தகையதொரு விரிந்த தேடலுக்குமுன்னோடியாக, தனிப்பட்டசில பிரதேச வரலாற்றுக் கூறுகளை இனம்காண ஆய்வாளர்களுக்கு உதவும் வகையில் இந்தக்கட்டுரைத் தொடர் அமைகின்றது. இத் தொடரில் குறிப்பாகத் தீவகம் பற்றி ஈழத்தில் இதுவரை எழுந்தவையும், ஆசிரியரின் பார்வைக்குக் கிட்டியவையுமான நூல்களையே பயன்படுத்தியிருக்கின்றார். ஒவ்வொரு இயலிலும் குறிப்பிடப்பட்ட நூல்களின் நூலியல் விபரம், வாசகரின் ஆய்வுத்தேடலுக்கான விரிவான வகையில் ஒவ்வொரு இயலின் இறுதியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஆசிரியரின் 46ஆவது நூலாகும்.

11987

பூந்துணர்: நறவம் 4 மலர்க் குழு. பூநகரி: பூநகரி பிரதேச கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், 1வது பதிப்பு, நவம்பர் 2014. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ மாருதி பிரின்டர்ஸ், ஆனைப்பந்தி).

xix, 161 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவை 2014இல் நடத்திய கலாசார விழாவையொட்டி வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். மலர்க்குழுவில் ச.சத்தியசீலன் (பிரதேச செயலர்),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி றஜனி நரேந்திரா (கலாசார உத்தியோகத்தர்) ஆகியோருடன் கலாசார பேரவை உறுப்பினர்களான சி.சூரியதாசன், கோ.கோகிலரதன், ஞா.போல் அன்ரன், செ.சுரேந்திரா, திருமதி சி.சிவசக்தி ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். இம்மலரில் பூநகரிப் பிரதேசப் படைப்பாளிகளின் ஆக்கங்களையும் இப் பிரதேசத்தின் தொன்மை வரலாற்று, கலாசார விழுமியங்கள் பற்றிய தகவல்களையும் தொகுத்திருக்கிறார்கள். பூநகரி வளங்களும் அபிவிருத்தியின் சவால்களும், பூநகரி தொன்மையும் பெருமையும் அடையாளப்படுத்தி நிற்கும் சோழர்கால மண்ணித்தலை சிவாலயம், போர் பாதித்த பிள்ளைகளும் பெற்றோரின் நிலைமாற்ற வகிபாகமும்-சில கொள்கைரீதியான புரிதல்கள், ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பொருத்தமான போதனாமொழி, பன்மைத்துவப் பண்பாட்டினுள் தமிழர் தம் தனித்துவங்களையும் அடையாளங்களையும் தக்கவைத்துக் கொள்ளல், அருகிவரும் பண்பாட்டில் பூநகரி வடக்கு மக்களும் வாழ்வியலும் பூநகரே உந்தன், ஈழத்தில் தமிழின் தொன்மையைப் புலப்படுத்தும் பிராமி சாசனங்கள், புனித அந்தோனியாரும் பாலைதீவும் ஒரு கோணத்தில், கண்ணகி படைப்பில் காட்சிப்படுத்தப்படும் மர்மங்கள், பாரம்பரிய வாழ்வியலில் நம்பிக்கைகள், சாணக்கியம், கவிபடி-புதுக்கலை வடி, இடைக்காலத்தில் வட இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான வணிக உறவு-தொல்லியல் நோக்கு, ஒற்றைப் பனம் தோப்பு, மனிதர்களிடம் மறைந்து போனவை, நாட்டார் வழக்காற்றும் பூநகரியும், பூநகரி பிரதேசத்தில் நெல் வேளாண்மையுடன் தொடர்புடைய சொற்கள், பூநகரிக் கோட்டை வரலாறு, பெண்ணே நீ எழுந்திரு, தனித்துவத்தில் பூநகரி, பூநகரி பிரதேச கடற்தொழில்-ஒருகண்ணோட்டம், பூநதரியில் பொம்மையாட்டம், பூநகரி பிரதேச நீர்நிலைப் பயன்பாட்டு முகாமைத்துவம், முஸ்லிம் தனியார் சட்டம், பூநகரியின் புராதன மருத்துவம், இது எப்படி இருக்கு, உண்டு பாருங்கள் பூநகரி பக்குவத்தை, கலைநகரி விருது, வாசகர்களே நீங்கள் எவ்வகையினர் ஆகிய 33 தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள் எனப் பல்வேறு படைப்புக்கள் இம்மலரில் தொகுக்கப்பட்டுள்ளன.

11988

பேசாலைச் சமூகத்தின் பண்பாட்டு வேர்கள்:1504-2004. எஸ்.ஏ.மிராண்டா. பேசாலை: பாத்திமா கழகம், சென் திரேசா வீதி, 8ஆம் வட்டாரம், 1வது பதிப்பு, ஜுன் 2006. (கொழும்பு 14: டிறான்சென்ட் பிரின்டர்ஸ்).

xxii, 302 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14 சமீ., ISBN: 955-1475-00-3.

மன்னார் தீவின் மேற்கே அமைந்துள்ள பேசாலை கிராமத்தின் விரிவான பிரதேச வரலாறு இந்நூலில் வரலாறு, தொன்மைச் சிறப்பு, மறையாட்சி, தொழில், கல்வி, கலை, கலாசார அபிவிருத்திகள் ஆகிய நான்கு பிரிவுகளாக வகுத்து ஆவணப் படுத்தப்பட்டுள்ளது. வரலாறு என்ற முதலாவது பிரிவில் மூதாதையர் வரலாறு, கடல்கடந்தார் நாடடைந்தனர், மதமாற்றமும் சங்கிலியன் சீற்றமும், ஒல்லாந்தர் ஆட்சியும் போர்த்துக்கேயர் வீழ்ச்சியும், ஒல்லாந்தர் ஆட்சியின் அஸ்தமனமும் ஆங்கிலேயர் ஆட்சியின் உதயமும் ஆகிய விபரங்கள் விளக்கப்பட்டுள்ளன. தொன்மைச் சிறப்பு என்ற இரண்டாம் பிரிவில் மூவரசர் பட்டணம், வெற்றியன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய ஆரம்பத் தோற்றமும் காலத்தில் ஏற்பட்ட மாற்றமும், நீங்காத நினைவுகள், சிங்காசனம், சேமக்காலை, மூவரசர் ஆலயம், பிரசங்க மேடை, திருச்சொரூபங்கள், திருச்சிலுவைப் பாதை ஸ்தலங்கள், உயர்வான உள்ளங்கள் உயர்ந்த ஸ்தானங்களில், திருச்சிலுவை, காவல் தூதர்கள், புனித பிரான்சிஸ்கு சவேரியார், புனித தோமையர், கிராமத்தின் பல்வேறு இடங்களில் காணப்படும் சொரூபங்கள், வெற்றி அன்னை ஆலயம், ஆலயத் திருவிழா மக்களின் பெருவிழா, தங்கத் தேர்மிசை தாய்க்கன்னி மரியாள், தனித்துவம் பேணும் கலைவடிவம் (திருப்பாடுகளின் காட்சி) ஆகிய விபரங்கள் பதிவுக்குள்ளாக்கப்பட்டுள்ளன. மூன்றாவது பிரிவான மறையாட்சி என்ற பிரிவில் கொச்சின் யாழ். மன்னார் மறைவட்ட சேவையின்கீழ் பேசாலை, யாழ். மன்னார் மறைவட்ட ஆயர்களும் சேவைகளும், பேசாலை பங்கில் பணியாற்றிய அருட்தந்தையர்களும் அளப்பரிய சேவைகளும், பேசாலையின் குருமாமணிகளும் குலத்தீபங்களும் ஆகிய விபரங்கள் விளக்கப்பட்டுள்ளன. நான்காவது பிரிவில் தொழில் வளர்ச்சியில் முதிர்ச்சி, கல்வியின் தோற்றமும் முன்னேற்றமும், கலை கலாசார அபிவிருத்தி, தேச வழமைகளும் சம்பிரதாயங்களும் ஆகிய பிரவுகளின்கீழ் விரிவான ஆவணப்பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47681).

11989

மருதமுனையின் வரலாறு. ஆ.மு.ஷரிபுத்தீன்(மூலம்), ஜின்னாஹ் ஷரிபுத்தீன் (பதிப்பாசிரியர்). மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 1வது பதிப்பு, மே 2009. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 361, ½, டாம் வீதி).

xviii, 142 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-0122-00-4.

புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்கள் எழுதிய நூல். இந்நூல் இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒரு கரையோர இசுலாமியக் கிராமமான மருதமுனையின் வரலாற்றைக் கூறுகின்றது. இது வடக்கே பெரிய நீலாவணையையும், கிழக்கே இந்துப் பெருங்கடலையும் தெற்கே பாண்டிருப்பு கிராமத்தையும் எல்லையாகக் கொண்டது. இக்கிராமம் எப்படி உருவானது? இங்கே குடியேறியோர் எப்படி, எக்காலத்தில் குடியேறினார்கள்? அவர்களுடைய நடை, உடை, பாவனைகள், அவர்களுடைய பழக்க வழக்கங்கள், அவர்கள் பேசிய மொழி, அவர்களது சுற்றாடல், நம்பிக்கைகள், பின்பற்றிய மதம், மத அடிப்படையில் இருந்த அவர்களது ஆண்-பெண் உறவுகள், அவர்களுடைய தொழில் என்று பல்வேறு தகவல்களை வழங்குகினறது. மேலும் இந்நூல் இக்கிராமத்தின் வளர்ச்சி, மக்களின் கல்வித்தரம், கல்வியில் எற்பட்ட வளர்ச்சி பற்றியும் கூறுகின்றது. இது ஒரு பிரதேசத்தின் சமூக வரலாற்றை பதிவுசெய்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54194).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11990

யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 1. வேதநாயகம் தபேந்திரன். யாழ்ப்பாணம்: சிவகாமி பதிப்பகம், தேன் தமிழ், கைதடி வடக்கு, கைதடி, 1வது பதிப்பு, ஜூலை 2014. (யாழ்ப்பாணம்: தேவி பிரின்டர்ஸ், 140/1, மானிப்பாய் வீதி).

(10), 194 பக்கம், விலை: ரூபா 390., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-41392-0-6.

ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் யாழ்ப்பாணத்து நினைவுகள் எனும் தொடரில் வெளிவந்த ஆக்கங்களில் சிலவற்றைத் தொகுத்து, இப்பாகம் வெளிவந்திருக்கின்றது. 30 வகையான தலைப்புகளின் கீழ், யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்வியல், கலாசாரம், பண்பாடு, தொழில் முறைமை போன்றவற்றை அனுபவ வாயிலாக இக்கட்டுரைகள் விளக்குகின்றன. சந்தைகளுடன் பிணைக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை முறை, நினைவுகளில் நிற்கும் தட்டிவான், சமூகக் கூட்டுறவும் யாழ்ப்பாண மக்களும், திருமணப்பந்தல் முதல் திருமண மண்டபம் வரை, சமூக எழுச்சியில் பணவரவு வைபவம், போர்க்கால அச்சுத்தொழில், கிளாலிப் படகும் தென்பகுதிப் பயணங்களும், மே தினமும் சினிமாத் தியேட்டர்களும், கப்பல்களும் பயணங்களும், விமானங்களும் எமது பயணங்களும், போர்க்காலம் கற்றுத் தந்த சொற்கள், அருகிவரும் சிறுவர் விளையாட்டுக்கள், கொம்படி ஊரியான் பாதையும் பயணங்களும், போர்க்கால வாழ்வாதாரத் தொழில்கள், அருகிவரும் கைத் தொழில்கள், கிராமிய வறுமை தணித்த அற்ஹோம் முறைமை, வாகனங்களும் வாழ்வியலும், உலக சாதனை முயற்சிகள் மீளும் நினைவுகள், யாழ்ப்பாணத்தில் ஷம்பூ இல்லாத காலம், வானொலியும் யாழ்ப்பாணத்தவரும், காலவெள்ளத்தில் கரைந்துபோன தொழிற்சாலைகள், வெற்றிலையும் எம்மவரும், சனசமூக நிலையங்களும் சமூகமும், கிணறும் வாழ்வியலும், சினிமாப்பாடல் புத்தக காலங்களில், பொப்பிசைப் பாடல் யுகத்தில், துலா மிதித்தல் காலம், இசைக் குழுக்களின் காலங்களில், துறைமுகப் பட்டினமொன்றின் கதை, சவாரிப் போட்டிக் காலங்கள் ஆகிய தலைப்புகளில் இந்நூலிலுள்ள 30 கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணம் உருவாக்கிவிட்ட பாரம்பரியக் கலாச்சாரங்கள், சின்னங்கள் என்பவை பற்றிய மீள்நினைவூட்டலாக இக்கட்டுரைகள் அமைகின்றன.

11991

வல்வையின் முதுசொம். வல்வை ந.அனந்தராஜ். பருத்தித்துறை: கலாசாரப் பேரவை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம், 1வது பதிப்பு, 2016. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டேர்ஸ், இல. 681, காங்கேசன்துறை வீதி).

xii, 143 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 550., அளவு: 24.5x18.5 சமீ., ISBN: 978-955-41846-1-9.

வல்வெட்டித்துறைப் பிரதேச வரலாற்றில் நினைவுகூரப்படவேண்டிய முதுசொம்கள் பற்றி இந்நூல் ஆராய்கின்றது. வல்வெட்டித்துறையும் நகராட்சி மன்ற வளர்ச்சியும், அருள் ஒளி பரப்பும் வல்வையின் சில ஆலயங்கள், பூம்புகாரை நினைவூட்டும் வல்வையின் இந்திரவிழா, வல்வெட்டித்துறையின் கல்வி பண்பாட்டுப் பாரம்பரியம், அறிஞர்கள் மகான்களால் வாழ்த்தப்பட்ட வல்வை நகரம், ஆழநீர் தேங்கி நிற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீருவில் புட்கரணிக் குளம், துறைமுக அபிவிருத்தியும் கடலோடிப் பாரம்பரியமும், கப்பல் ஓட்டிய தமிழர்கள், சுற்றுலாத் தலங்களும் வரலாற்று முக்கியத்துவமுள்ள கட்டடங்களும், சாதனையாளர் வரிசையில் வல்வையின் மைந்தர்கள், உயிர்காக்கும் இந்திராணி வைத்தியசாலை-1947, ஈழத்தமிழர்களின் அரசியல்வாழ்வில் வல்வையின் பங்கு, வல்வெட்டித்துறையின் சிறப்புவாய்ந்த உணவுகள், பிரதான போக்குவரத்துச் சாதனமாக இருந்த தட்டிவான்கள், வல்வையின் பாரம்பரிய கலை, பண்பாட்டு வடிவங்கள், பண்பாட்டைச் சீரழிக்கும் மதுபானசாலைகளே இல்லாத நகரம் 1994-2012, வல்வெட்டித்துறை அபிவிருத்தியும் பிரஜைகள் குழுவும், வரலாற்று ஆவணக் காப்பகம், வரலாற்றின் மறக்கமுடியாத சில நினைவுகள், வழக்கிலிருந்து அருகிவரும் முதுசொம்கள், வல்வை எழுத்தாளர்களின் நூல்கள் மற்றும் ஆய்வுநூல்கள் ஆகிய 21 தலைப்புகளில் இவ்வாவணம் தொகுக்கப்பட்டுள்ளது.

11992

வன்னிப் பிரதேச வயற் பண்பாடு. அகளங்கன் (இயற்பெயர்: நா.தர்மராஜா). மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64 கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2014. (வவுனியா: மல்ட்டி விஷன் அச்சுக் கலையகம், இல. 77, முதலாம் குறுக்குத் தெரு).

236 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 19x13 சமீ., ISBN: 978-955-8715-97-0.

வன்னி பற்றியும் வன்னி மாவட்டம் பற்றியும் அகளங்கன் எழுதிய 13 அத்தியாயங்கள் அடங்கிய தொகுப்பு இது. வரலாறும் வாழ்வும், வயற் பண்பாடு, நெற்செய்கை, குளத்து மீன்வளம், வேட்டை, கிராமிய வழிபாடு, கிராமியத் திருமண நடைமுறைகள், நாட்டார் பாடல்கள், நாட்டார் பாடல்களில் கல்விச் சிந்தனை, கிராமிய விளையாட்டுகள், பண்டிப் பள்ளும் குருவிப் பள்ளும், வவுனியா மாவட்டத்தில் கல்வி, வவனியா மாவட்டத்தில் கலை இலக்கியம் ஆகிய தலைப்புகளில் இவை அமைந்துள்ளன. வன்னியின் இன்றைய தலைமுறைக்கும் எதிர்காலச் சந்ததிக்கும் வன்னி மண்ணைச் சாராதவர்களுக்கும் வன்னியின் மூதாதையரின் வாழ்வைத் தெரிவிப்பவையாக இக்கட்டுரைகள் அமைகின்றன. வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சு 24.10.2015இல் கிளிநொச்சியில் நடாத்திய வடக்கு மாகாண இலக்கியப் பெருவிழாவில் 2014இல் வடக்கு மாகாணத்தில் வெளிவந்த சிறந்த துறைசார் நூலுக்கான பரிசை வென்ற நூல். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 243328).

11993

விதைத்ததில் விளைந்தது: வலி கிழக்கு வலம்- பாகம் 01. மாணிக்கம் ஞானலிங்கம். அச்சுவேலி: அபிராமி பதிப்பகம், அபிராமி மஹால், அச்சுவேலி தெற்கு, 1வது பதிப்பு, நவம்பர் 2014. (யாழ்ப்பாணம்: அன்றா பிறின்டேர்ஸ், 356 ஏ, லக்ஸன் பிளாசா கட்டிடம், கஸ்தூரியார் வீதி).

(2), xii, 388 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 740., அளவு: 20x14 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆகக்கூடிய மக்கள் வாழும் பிரிவாக 104.36 சதுர கிலோமீற்றர் பிரதேசத்தை உள்ளடக்கியது. 2009அம் ஆண்டு நவம்பரில் நிழ்த்தப்பட்ட குடித்தொகைக் கணக்கீட்டின்படி 23145 குடும்பங்களையும் 77407 மக்களையும் கொண்டு விளங்குவது வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகப் பிரவாகும். இப்பிரதேசம் உள்ளூராட்சி அமைப்பில் வலி கிழக்குப் பிரதேச சபையின் அச்சுவெலி உப அலவலகம், புத்தூர் உப அலுவலகம், நீர்வேலி உப அலுவலகம், கோப்பாய் உப அலுவலகம், உரும்பிராய் உப அலுவலகம் என ஐந்து உப அலுவலகங்களைக் கொண்டது. வலிகாமம் பெரும் பிரிவின் கிழக்குத் திசையில் அமைந்திருப்பதனால் வலி கிழக்குப் பிரிவு என்று அழைக்கப்படும் வலி-கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் இயங்கும் அமைப்புகளின் வரலாற்றை பதிவுசெய்யும் உசாத்துணை ஆவண நூல் இது. மருத்துவ சேவை, சேவை நிலையங்கள், கல்விக் கூடங்கள், அரச நிர்வாக அலகுகள், ஆலயங்கள், கூட்டுறவு அமைப்புகள், கிராமங்களும் சனசமூக நிலையங்களும், நிலவரைகள்ஆகிய எட்டு இயல்களின்கீழ் 82 விரிவான தகவல் பதிவுகள் இந்நூலில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 243306).

11994

வெல்லாவெளி வரலாறும் பண்பாடும். வெல்லவூர்க் கோபால் (இயற்பெயர்: சீ.கோபாலசிங்கம்). மட்டக்களப்பு: பழைய மாணவர் சங்கம், வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலயம், வெல்லாவெளி, 1வது பதிப்பு, 2012. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம்).

194 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 22x15 சமீ.

மூன்று இயல்களில் எழுதப்பட்டுள்ள இந்நூலின் முதலாவது இயலான வரலாறு என்பதன்கீழ், வெல்லாவெளி அறிமுகம், பெயர்க் காரணம், மக்கள் குடியிருப்புக்கள், வெல்லாவெளி வரலாற்றுச் சிறப்பு, வரலாற்றுத் தடயங்கள், நாதனை ஆற்றின் வளம், காலத்துக்குக் காலம் ஏற்பட்ட வெல்லாவெளி மக்களின் இடப்பெயர்வுகள், கல்வி வளர்ச்சி, அரச அலவலகங்கள் மற்றும் பிற நிறுவனங்கள், வெல்லாவெளி பொது அமைப்பகளும் கழகங்களும் ஆகிய 10 உப தலைப்புகளின் கீழ் இப்பிரதேசத்தின் வரலாறு பதிவுசெய்யப்படுகின்றது. வழிபாடும் பண்பாடும் என்ற இரண்டாம் இயலில் வழிபாடு, பண்பாடு ஆகிய தனித்தனிப் பிரிவுகளின் கீழ் அவ்வூர் மக்களின் மத வழிபாட்டு நம்பிக்கைகள் தனித்துவமான பண்பாடு என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. பண்பாட்டுச் சொந்தக்காரர்கள் என்ற இறுதி இயலில் ஊர்ப்பெரியவர்கள் (நினைவில்), ஊர்ப் பெரியவர்கள் (நிகழ்வில்), கலைஞர்கள், தொழில் அதிபர்கள், கல்வியாளர்கள், அரச-தனியார் துறை அலுவலர்களும் மற்றும் துறைசாராப் பணியாளர்களும் ஆகிய தலைப்புகளின்கீழ் ஊர்மக்களின் நினைவும் நிகழ்வும் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 53613).

மேலும் பார்க்க: 11839

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்

999 பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்

11995

அனேக வைத்யர்கள் கையாண்டுவரும் இரணவைத்யம். V.A.T. ராஜன். கொழும்பு: சரஸ்வதி புத்தகசாலை, 175 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, 1953. (சென்னை 19: கலைமகள் அச்சகம், காலாடிப்பேட்டை).

92 பக்கம், விலை: ரூபா 1.40, அளவு: 18x12.5 சமீ.

இந்நூல், படிப்போருக்கு நன்கு புலனாகும்படி எளிய நடையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. வெட்டுக்காயம், குத்துக்காயம், கண்டமாலை, பவுத்திரமூலம், கன்னப்புற்று முதலிய புற்றுரோகங்கள், அறையாப்பு முதலிய பெண்கள் ரோகங்கள், ஆறாத புண்கள், புரையோடும் இரணங்கள், கரப்பான், சொரி சிரங்கு, முதலிய சகல இரணங்களையும் குணப்படுத்தும் வழிவகைகளை இங்கு காணமுடிகின்றது. மேற்குறித்த ரணங்களை குணமாக்கவல்ல பிளாஸ்திரி, களிம்பு, லிண்டு, லோஷன், பற்றுக்கள் முதலியவற்றை இலகுவாக அனைவரும் செய்துகொள்ளும் வழிமுறைகளும் கூறப்பட்டுள்ளன. சென்னை முத்தியாலுப்பேட்டை V.A.T. ராஜன் அவர்களால் எழுதப்பெற்று கொழும்பில் பதிப்பிக்கப்பெற்றுள்ள இந்நூல் போன்று மேலும் பல நூல்கள் சரஸ்வதி புத்தகசாலை, கலாநிலையம் போன்ற இலங்கைப் பதிப்பகங்களால் ஐம்பதுகளில் வெளியிடப்பட்டுள்ளமை ஈழத்துப் பதிப்புலக வரலாற்றை ஆய்வு செய்ய முனைபவர்களுக்கு ஒரு முக்கிய செய்தியாகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 26805).

11996

செம்மாங்கனி: உலகத் தமிழ்க் கவிஞர்கள் கவிதைத் தொகுப்பு நூல். அழகாபுரி அழகுதாசன், மு.சு.மா.முத்தமிழ்ச் செல்வன், சீவல்புரி சிங்காரம், காசிதாசன் (தொகுப்பாசிரியர்கள்). திருச்சி 620001: அழகுமீனாள் பதிப்பகம், 17ஏ, இராசா குடியிருப்பு, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகச் சாலை, 1வது பதிப்பு, 1982. (திருச்சி 1: சரவணா பிரிண்டர்ஸ்).

xiv, 180 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13 சமீ.

தமிழகத்தைச் சேர்ந்த அழகாபுரி அழகுதாசன், சீவல்புரி சிங்காரம் ஆகியோரும் மலேசியாவைச் சேர்ந்த மு.சு.மா.முத்தமிழ்ச் செல்வன், காசிதாசன் ஆகியோரும் இணைந்து தொகுத்துள்ள உலகத் தமிழர் கவிதைகள். பின்வரும் ஈழத்தமிழர்களின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. செ.குணரெத்தினம், பொன் பூலோகசிங்கம், ஈழமேகம், கலிங்டன், க.அருள் சுப்பிரமணியம், வடகோவை வரதராஜன், கண்டி எம்.இராமச்சந்திரன், நீர்கொழும்பூர் பொன்னிவளவன் மு.ஹ.ஷெய்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ஸித்தீன், சி.சுப்பிரமணியம், எஸ்.முத்துமீரான், மாத்தளை வி.தங்கராஜா, யாழ். ஜெயம், கிளிநொச்சி திருச்செல்வம், துறைநீலாவணை ஜீவா ஜீவரெத்தினம், அ.ஜெயபாலன், திருக்கேதீஸ்வரம் என்.இராஜப் புஷ்பவனம், அல்வாய் ஞானப்பிரகாசம், ஆத்தியடி ஈ.ஆறுமுகம், சாரணா கையூம், வெற்றிவேல் விநாயகமூர்த்தி, பெரிய கட்டைக்காடு மாரிசால்பிள்ளை, அகளங்கன், வே.ஐயாத்துரை, கலா குமரிநாதன், இளம்பரணன், பொலிகை ச.திருப்பதி, தா.குகதாசன், வி.நடனசேகரம், தம்பிஐயா தேவதாஸ், வேம்பை ம.ஸ்ரீமுருகன், நிலா தமிழின்தாசன், இர.திருநாவுக்கரசு, லீலா வினோதன், கல்முனை நோ.இராசம்மா, நா.சிவபாதசுந்தரனார், கா.வை.இரத்தினசிங்கம், கோ.தியாகராசன், இ.விக்கினேஸ்வரன், த.கனகரத்தினம், வை.கங்கைவேணியன், ம.குலசிங்கம், மு.உ.ஷெரீப். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21990).

11997

முள்ளிவாய்க்கால்:எமது சாட்சியம். கண.குறிஞ்சி, ராஜ் இருதயா. தமிழ்நாடு: புதுமலர் பதிப்பகம், 176, வைகை வீதி, வீரப்பன் சத்திரம், ஈரோடு 638 004, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2011. (சென்னை 600083: ஸ்ரீ விக்னேஷ் பிரிண்ட்ஸ், அஷோக் நகர்).

48 பக்கம், விலை: இந்திய ரூபா 25., அளவு: 21.5 x14 சமீ.

போர்க்குற்றங்களையும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களையும் தமிழீழப் போர் நடைபெற்ற காலத்திலும் அதன் பின்னரும் இலங்கை அரசு தொடர்ந்து செய்துவருவதை 2009 மே 18, 19இற்குப் பின்னர் தமது துணிச்சலும் ஆபத்தும் மிக்க நேரடிப்பயண அனுபவங்களினூடாகக் கண்டறிந்து அதனை 2011ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஒரு நேர்காணலின் வாயிலாக தமிழகத்தைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர் கண.குறிஞ்சி அவர்களும், பேராசிரியர் ராஜ் இருதயா அவர்களும் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தியிருந்தார்கள். லண்டன், குளோபல் தமிழ் நியூஸ் நெட்வேர்க் குழுமத்தினரால் ஒலிபரப்பப்பட்ட இந்நிகழ்ச்சி, பின்னர் எழுத்துருவில் அவர்களது இணையத்தளத்திலும், தினகரன் நாழிதளிலும் வெளியிடப்பட்டது. இந்நேர்காணல்களின் முழுமையான தொகுப்பே இந் நூலாகும். லண்டன், குளோபல் தமிழ் நியூஸ் நெட்வேர்க் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் களான நடராஜா குருபரன், யமுனா ராஜேந்திரன் ஆகியோரின் முயற்சியினால் இந்நூல் தமிழகத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

11998

முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றம்: தஞ்சாவூர்-தமிழ்நாடு: படத்தொகுப்புக் கையேடு. பழ.நெடுமாறன், த.செயராமன். தமிழ்நாடு: உலகத் தமிழர் பேரமைப்பு அறக்கட்டளை, விளார் சாலை, தஞ்சாவூர் 613006, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

80 பக்கம், வண்ணப்படங்கள், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21x28 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட ஈழத்தமிழரின் நினைவாக, ஓவியர் புகழேந்தியின் கோட்டுச்சித்திர வரைபுகளின் அடிப்படையில் உருவாக்கப் பட்ட கற்சிற்பங்கள் கொண்டமைந்தது முள்ளிவாய்க்கால் நினைவு முற்றமாகும். 15.12.2010இல் தொடங்கப்பட்ட வேலைத்திட்டம் 15.10.2013 அன்று நிறைவு செய்யப்பட்டு பொதுமக்கள் பார்வைக்காகத் திறந்துவைக்கப்பட்டது. அம்மண்டபம் பற்றிய விளக்கக் குறிப்புகள் அடங்கிய வண்ணப் படங்களின் தொகுப்பாக இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது.

11999

ராஜீவ் காந்தி கொலை: மர்மங்களும் மறைக்கப்பட்ட உண்மைகளும். செ.துரைசாமி. சென்னை 600002: விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (சென்னை 600002: விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை).

229 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 115.00, அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 978-81-8476-572-4.

1991 மே 21 ம் திகதி ராஜீவ் காந்தி ஸ்ரீபெரும்புதூரில் கொலைசெய்யப்பட்டதன் பின்னர் சி.பி.ஐ மேற்கொண்ட விசாரணைகளில் உள்ள நியாயத்தன்மைகளை கேள்விக்குள்ளாக்கும் நூல். நூலாசிரியர் வழக்கறிஞர் செ.துரைசாமி, தந்தை பெரியாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு தீராவிடர் கழகத்தின் செயற் பாட்டாளரானவர். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆஜரான இவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகவும் உள்ளார். இந்நூல் 1991 மே 21இல் நடந்தது என்ன?, குற்றப் பத்திரிகை கூறுவது என்ன?, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சாட்சிகள் கூறியது என்ன?, நீதிமன்ற விசாரணை, வழக்கின் விசாரணை தாமதமானது ஏன்?, முறையற்ற குற்றச்சாட்டு, விடை தெரியாத மர்மங்கள், சட்டம் தெரியாமை, 19 குற்றவாளிகளும் பின்விளைவுகளும், நியாயமற்ற தண்டனை, மனித வெடிகுண்டு, மறைக்கப்பட்ட உண்மைகள், பெங்களூரு காவல்துறையின் புலன் விசாரணை, ரகோத்தமனின் புத்தகம், குற்றவாளி களிடமிருந்து வாக்குமூலம் எப்படி வாங்கப்பட்டது?, நீதிபதி ஜெயின் ஆணையத் தின் விசாரணை-ஓர் அறிமுகம், தவறான புலன் விசாரணை ஆகிய 17 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

12000

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் புதினங்களில் புலம்பெயர்ந்தோரின் வாழ்வியல் சிக்கல்கள். த.பிரியா. கோயம்புத்தூர் 641 029: தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, ஞானாம்பிகை ஆலை அஞ்சல், 1வது பதிப்பு, ஜூலை 2016. (கோயம்பத்தூர் 29: பிரடாக் பிரின்ட், 476 பூமாதேவி கோவில் அருகில், கவுண்டர் மில்ஸ் அஞ்சல்).

(26), 228 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ., ISBN: 978-93-80800-72-1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது முனைவர் தகுதிப் பட்டத்திற்காக, லண்டனில் வாழும் ஈழத்துப் படைப்பாளி இராஜேஸ் பாலாவின் எட்டு நாவல்களை ஆராய்ந்து அவற்றினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ள புலம்பெயர்ந்தோரின் வாழ்வியல் சிக்கல்களை ஆய்வு செய்துள்ளார் முனைவர் த.பிரியா. அவ்வகையில் ஒரு கோடை விடுமுறை, உலகமெல்லாம் வியாபாரிகள், தேம்ஸ் நதிக் கரையில், பனி பெய்யும் இரவுகள், வசந்தம் வந்து போய்விட்டது, தில்லையாற்றங்கரை, அவனும் சில வருடங்களும், நாளைய மனிதர்கள் ஆகிய எட்டு நாவல்கள் இவ்வாய்வுக்குப் பயன் படுத்தப்பட்டுள்ளன. தோற்றுவாய்/புலம்பெயர்வும் புலம்பெயர்ந்தோர் இலக்கியமும்/ பெண்-உறவு-குடும்பம் சார்ந்த சிக்கல்கள்/ இலங்கை வாழ்வுரிமைப் போராட்டங்கள்/ இங்கிலாந்து மற்றும் உலகளவில் வாழ்வியல் போராட்டங்கள்/ பண்பாட்டுப் பதிவுகளும் மாற்றங்களும்/ நிறைவுரை ஆகிய ஏழு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

முன்னைய பதிவுகள் பின்னிணைப்பு

12A01

அளவையியலும் விஞ்ஞான முறையும்: பகுதி 2. எஸ்.எஸ்.மனோகரன். சுன்னாகம்: எஸ்.எஸ்.மனோகரன், உடுவில் மகளிர் கல்லூரி, 2வது (திருத்திய) பதிப்பு, சித்திரை 1999, 1வது பதிப்பு, சித்திரை 1994. (யாழ்ப்பாணம்: கத்தோலிக்க அச்சகம், பிரதான வீதி).

(4), 116 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

சமூக விஞ்ஞானம், சமூக விஞ்ஞான ஆய்வு முறைகள், சமூக விஞ்ஞான விளக்க வகைகள், புள்ளிவிபரவியல், நிகழ்தகவு, காரண காரியம், பிரிப்பு முறை, வகையீடு, வரைவிலக்கணம், நீதிமன்ற எண்ணக்கருக்கள், சிறு கட்டுரைகள், என்பன இந் நூலில் அணுகப்பட்டுள்ள பாடத்தலைப்புகளாகும். தமிழ்மொழிமூலம் அளவை யியலும் விஞ்ஞானமுறையும் என்ற பாடத்திட்டத்தைக் கற்கும் ஜீ.சீ.ஈ உயர் வகுப்பு மாணவர்களுக்கும், ஜீ.ஏ.கியூ மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் இக்குறிப்புகள் எழுதித் தொகுக்கப்பட்டுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 8085)

12A02

அறிவுத்திற அளவெண். ஆ.செந்தில் வடிவேல். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 2வது பதிப்பு, ஏப்ரல் 2000, 1வது பதிப்பு, பெப்ரவரி 1987. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் தரப்படவில்லை).

(6), 90 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14 சமீ.

ஒருவரின் அறிவுத்திறனை உற்றறிந்து செயன்முறைப்படி மதிப்பீடு செய்து வெளிப்படுத்தும் முறையையே அறிவுத்திற அளவெண் என்கின்றோம். இந்நூல் பொதுப் பரீட்சைகளுக்குரிய பொது உளச்சார்பு- விளக்கக் குறிப்புப் பயிற்சிகளைக் கொண்டுள்ளது. எண் அறிவு, ஆங்கில நெடுங்கணக்கு தொடர்பானவை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலங்கள் தொடர்பானவை, வென் உருவம், பாய்ச்சல் பட்டி, நிகழ்தகவு ஆகிய விடயங்களுக்கான விளக்கக் குறிப்புகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. மாணவர் நலன்கருதி, பயிற்சிகளும் விடைகளும் தரப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் பொருளியல்துறையில் உதவி விரிவுரையாளராகவும் வவுனியா கச்சேரியில் திட்டமிடல் பிரிவின் உதவி இயக்குநராகவும் பணியாற்றியவர். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2002)

12A03

ஆசிரிய முகாமைத்துவம். மா.சின்னத்தம்பி. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு, 2016, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

v, 110 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-659-510-9.

ஆசிரியர்களுடைய செயற்பாடுகளை முகாமைத்துவ நோக்கில் பரிசீலனை செய்யும் இந்நூல் இரு அடிப்படைகளைக் கொண்டு அமைந்துள்ளது. ஒன்று- தமது பணிகளைப் பற்றிய ஆசிரியர்களின் சுய முகாமைத்துவப் பார்வை. மற்றையது -ஆசிரியர்களின் செயற்பாடுகள் பிறரால் கணிக்கப்படும் முகாமைத்துவ நோக்கம். பள்ளிக்கூட மட்டம், சமூக மட்டம் ஆகிய இரு மட்டங்களிலும் ஆசிரியர்களது பங்கும் பணிகளும் நூலாசிரியரின் பரிசீலனைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளன. ஆசிரிய முகாமைத்துவம், ஆசிரியரும் வாண்மைத் தகைமையும், ஆசிரியர்களின் வகிபாகமும் அந்தஸ்தும், ஆசிரியர்களும் சமூக தலைமைத்துவமும், ஆசிரியர் சவால்களும் பிரச்சினைகளும், ஆசிரியர் நெருக்கடியில் பங்காற்றுதல், ஆசிரியரும் வழிகாட்டலும், ஆசிரியருக்கான நேர முகாமைத்துவம், ஆசிரியர் வினைத்திறன், ஆசிரியர் முன்னேற்றம், புதிய திசைகளில் ஆசிரியர்கள்: ஆசிரியர்கள் மாறுதல்களுடன் இணைந்து பணியாற்றல் ஆகிய 11 இயல்களை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றியவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையின் வெள்ளிவிழா ஆண்டு (1980-2005) நினைவாக இந்நூல் முதலில் வெளியிடப்பட்டது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3234)

12A04

ஆய்வு முறையியல். சபா.ஜெயராசா. யாழ்ப்பாணம்: புக்லாப் (Book Lab), 148, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி, 3வது பதிப்பு, ஏப்ரல் 2006, 2வது பதிப்பு, 2005. முதற்பதிப்பு விபரமில்லை. (கொழும்பு 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பெட்டா வீதி).

54 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 21x14.5 சமீ.

ஆய்வு அறிமுகம், ஆய்வுப் பிரச்சினையை வரையறை செய்தல், ஆய்வு வடிவமைப்பு, ஆய்வின் அடிப்படை நெறிகள், முறையியலும் நுட்பவியலும், ஆய்வாளரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிகைக் குணவியல்புகள், ஆய்வுப் பிரச்சினைகள், கருதுகோள் (Hypothesis) ஆக்கம், வரலாற்றியல் ஆய்வு, விபரண ஆய்வு, தனியாள் ஆய்வு, சொற்றொகுதி ஆய்வு, புள்ளிவிபரவியல் ஆய்வு, களத் தகவல்கள், வினாக்கொத்துக் கருவி, பட்டியல் கருவி, பெறுமானக் குறியீட்டாக்கல், மாதிரி வடிவமைப்புகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள், நேர்காணல் கருவி, மாதிரி எடுப்புமுறை, நிகழ்தகவு முறையியல், தரவுகளை வகைப்படுத்தல், நுண்ணியம்பல் அல்லது வியாக்கியானம் செய்தல், பரிசோதனை ஆய்வு-சிறப்பு விளக்கம், விவரணப் புள்ளிவிபரவியலும் அனுமானப் புள்ளிவிபரவியலும், செயல்நிலை ஆய்வு ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (முன்னைய பதிப்பிற்கான நூல் தேட்டம் பதிவிலக்கம் 8087)

12A05

ஆரியர் ஆதிவரலாறும் பண்பாடும். வி.சிவசாமி. யாழ்ப்பாணம்: வி.சிவசாமி, விரிவுரையாளர், வடமொழித்துறை, யாழ்ப்பாண வளாகம், இலங்கைப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, வைகாசி 1976. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம்).

vi, 116 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 18x12 சமீ.

இந்நூல் இனரீதியாகவன்றி மொழி, பண்பாட்டு ரீதியிலே ஆரியர் என்போர் யார் என்பதை ஆராய்கின்றது. அவர்களின் மொழிகள், ஆதி வரலாறு, புலப்பெயர்வு, இருப்பிடங்கள் பற்றிச் சுருக்கமாகவும், இந்தியாவுக்கு அவர்களின் வருகையும், அங்கு வாழ்ந்தவர்களோடு சேர்ந்து உருவாக்கிய வேதகால நாகரிகம் பற்றிச் சற்று விரிவாகவும் புராதன வரலாறு, தொல்லியல், மொழிநூல், ஒப்பியல் மொழி நூல், சமயம் முதலியவற்றிலே துறைபோகிய ஆய்வாளர்களின் கருத்துக்களைப் பெருமளவில் தழுவியும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இவ்விடயம்பற்றித் தமிழிலே எழுதப்பட்டுள்ள முக்கியமான நூல்களுள் இதுவும் ஒன்று. இதில் ஆரியர், ஆதி இருப்பிடம், இந்தோ-ஆரிய, இந்தோ-இரானியத் தொடர்புகள், இந்தோ-ஐரோப்பிய மொழிகள், ஆரியரின் ஆதி இருப்பிடம் ஆசியாவிலா ஐரோப்பாவிலா?, ஆரியரின் புலப்பெயர்ச்சிகளும் காலமும், இந்தியாவில் ஆரியர், வேத இலக்கியம், வேதங்களின் காலமும் வரலாற்றியல்பும், வேத காலத்தில் ஆரியர் வாழ்ந்த இடங்களும் ஜனக் குழுக்களும், வேதகால அரசியல் நிலை, வேதகாலச் சமய தத்துவ நிலை, வேதகாலச் சமூக நிலை, வேதகாலப் பொருளாதார நிலை, பிற்காலம் ஆகிய 15 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பேராசிரியர் இலக்கிய கலாநிதி வி.சிவசாமி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சம்ஸ்கிருதத் துறைத் தலைவராகப் பல வருடங்கள் பணியாற்றியவர். சம்ஸ்கிருதம், வரலாறு, மட்டுமன்றித் தொல்லியல், இந்து நாகரீகம், நுண்கலைகள் முதலியவற்றிலும் ஈடுபாடுகொண்டு எழுதிவருபவர். திராவிடர் ஆதி வரலாறும் பண்பாடும் என்ற நூலைத் தொடர்ந்து இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10313. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 8210)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12A06

ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு முதற் பாகம். ஆறுமுக நாவலர் (மூலம்), த.கைலாசபிள்ளை (தொகுப்பாசிரியர்). சிதம்பரம்: ச.பொன்னுஸ்வாமி, தருமபரிபாலகர், சைவப்பிரகாச வித்தியாசாலை, 3வது பதிப்பு, மார்கழி 1954, முன்னைய பதிப்பு விபரம் தரப்படவில்லை. (சென்னை: வித்தியாநுபாலன யந்திரசாலை).

181 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18.5x13 சமீ.

(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2563. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3092).

12A07

ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு இரண்டாம் பாகம். ஆறுமுக நாவலர் (மூலம்), த.கைலாசபிள்ளை (தொகுப்பாசிரியர்). சிதம்பரம்: ச.பொன்னுஸ்வாமி, தருமபரிபாலகர், சைவப்பிரகாச வித்தியாசாலை, 3வது பதிப்பு, சித்திரை 1955, முன்னைய பதிப்பு விபரம் தரப்படவில்லை. (சென்னை: வித்தியாநுபாலன யந்திரசாலை).

(4), 164 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18.5x13 சமீ.

(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2563. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3092).

12A08

ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு முதற் பாகமும் இரண்டாம் பாகமும். ஆறுமுக நாவலர் (மூலம்), த.கைலாசபிள்ளை (தொகுப்பாசிரியர்). சிதம்பரம்: முதலியார் ஜீ.சுப்பிரமணியம், தருமபரிபாலகர். சைவப்பிரகாச வித்தியாசாலை, 2வது பதிப்பு, தை 1951. 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (சென்னை: வித்தியாநுபாலன யந்திரசாலை)

(4), 160 + 128 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 20.5x12.5சமீ.

19ம் நூற்றாண்டில் இலங்கையில் சமயப் பிரச்சார நடவடிக்கைகள் மிகுந்து காணப்பட்ட ஒரு காலகட்டத்தில் சைவசமயத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியவர் ஆறுமுக நாவலர். சைவ சமயத்தைப் பின்பற்றுபவர்கள் அறிந்திருக்க வேண்டிய பல தகவல்களை அவர்களுக்குக் கூறுவதாகவும், சமயப் பரம்பலைத் தடுப்பதற்கு மிக அத்தியாவசியமானதாக சைவ சமயம் பற்றிய தெளிவை அவர்களுக்கு எளிய வடிவில் வழங்குவதற்காகவும், அவர்களுக்கு வழங்கும் ஆலோசனையாகவும் தவறிழைக்கும் சைவசமயிகளுக்கும் மற்றோருக்கும் எதிரான கண்டனக் கணைகளாகவும் நாவலரின் பிரபந்தத் திரட்டு அமைந்துள்ளது. இவை ஆறுமுக நாவலரால் வெவ்வேறு காலகட்டங்களில், பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்டவற்றின் திரட்டு. பெரும்பான்மை வசனநடையிலும், சில செய்யுள் நடையிலும் அமையும் இத்திரட்டு, நாவலர் காலத்தில் பத்திரிகைகளிலும், தனித் துண்டுப்பிரசுரங்களாயும் வெளியிடப்பட்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு பாகங்களில் எழுதி வெளியிடப்பட்ட நூலின் இரு பாகங்களையும் இந்நூல் உள்ளடக்குகின்றது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3092. இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11058).

12A09

இலங்கை இந்தியர் வரலாறு. *சோ.சந்திரசேகரன். மதுரை 625001: வைரவன் பதிப்பகம், 16, வாணியர் 2வது தெரு, நேதாஜி ரோடு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1989. (தேவகோட்டை 623302: தெய்வம் அச்சகம், 6, வெ.ஊரணி வடக்கு).*

250 பக்கம், விலை: இந்திய ரூபா 28., அளவு: 18x13 சமீ.

இலங்கையில் உருவாக்கப்பட்ட பெருந்தோட்டங்களில் பணிபுரிய வந்த இலட்சக்கணக்கான இந்திய தொழிலாளர்களின் வரலாறு பற்றி, குறிப்பாக ஆரம்பகாலங்களில் அவர்கள் அடைந்த இன்னல்கள், எதிர்நோக்கிய தடைகள், மற்றும் பிரச்சினைகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறும் ஓர் ஆய்வு. குடிவருகைக்கான காரணங்கள், ஒப்பந்த முறை-கங்காணி முறை-துண்டு முறை, குடிவருகையும் ஆரம்பகாலப் பிரச்சினைகளும், குடியமர்வின் சில இயல்புகளும் இந்தியர் சமூகத்தின் வளர்ச்சியும், இந்தியத் தமிழர்களின் தொழிற்சங்க இயக்கத்தின் தோற்றம், இந்தியர் பிரச்சினையும் தீர்வுகளும் (1930-1963), இலங்கையின் இனப்பிரச்சினையும் இந்திய வம்சாவளித் தமிழர்களும் ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் சிரேஷ்ட விரிவுரையாளராவார். (முன்னைய பதிப்பிற்கான நூல் தேட்டம் பதிவிலக்கம் 1951. இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10942).

12A10

இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைகள் சஞ்சிகைகள். *கோப்பாய்சிவம். புத்தூர்: ப. சிவானந்த சர்மா, சிவன்கோவில் அருகாமை, ஆவரங்கால், 2வது பதிப்பு, செப்டெம்பர் 2016, 1வது பதிப்பு, ஜுன் 1985. (கிளிநொச்சி: சர்வசக்தி, குருகுலம்)*

56 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.

ஈழத்தின் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பற்றிய ஆசிரியரின் நோக்கும் 1841 முதல் 1984 வரையில் இலங்கையில் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பற்றிய சுருக்கமான விளக்கங்களுடனான பட்டியலும் இடம்பெற்றுள்ளன. இது முன்னர் கிளிநொச்சி சர்வசக்தி குருகுலத்தினரால் அச்சிட்டு வெளியிடப்பெற்றர். மீண்டும் 2016இல் ஆசிரியரின் மணிவிழா ஞாபகார்த்த நினைவாக மீண்டும் நகல் அச்சு (reprography) முறையில் மீளுருவாக்கப்பட்டுள்ளது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 0018)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12A11

ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம். நா.சுப்பிரமணியன். யாழ்ப்பாணம்: முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், 1வது பதிப்பு ஜுன் 1978. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 50, கண்டி வீதி).

xxviii, 220 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 8.50, அளவு: 19x13 சமீ.

இந்நூலில் இலங்கையில் தமிழ் நாவல் இலக்கியம் தோன்றி வளர்ந்த வகையினை வரலாற்று நோக்கிலே தொகுத்துநோக்கி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஒரு நூற்றாண்டுக்கால ஈழத்துத் தமிழ் நாவல்களை வரலாற்று நோக்கில் ஆராய்ந்து விளக்கும் இந்நூலாசிரியர் தான் இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாகத் தமிழ்த்துறையிலே முதுகலைமாணிப் பட்டத்திற்காக 1970-1972 காலகட்டத்தில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் வழிகாட்டலின்கீழ் மேற்கொண்ட ஆய்வினை விரிவான நூலாக்கியிருக்கின்றார். ஈழத்துத் தமிழ் நாவலின் தோற்றம், சமுதாய சீர்திருத்தக் காலம், எழுத்தார்வக் காலம், சமுதாய விமர்சனக் காலம், பிரதேசங்களை நோக்கி, நிறைவுரை ஆகிய ஆறு பிரதான அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ள இந்நூலின் பின்னிணைப்பாக ஈழத்துத் தமிழ் நாவல்கள் பற்றிய பட்டியலும், மேற்படி நாவல்கள் தொடர்பான ஆய்வுகள் பற்றிய மற்றொரு பட்டியலும் தரப்பட்டுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 6831. இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11269)

12A12

காசி ஆனந்தன் கவிதைகள். காசி ஆனந்தன். சென்னை: பாரதி பதிப்பகம், உஸ்மான் சாலை, 2வது பதிப்பு டிசம்பர் 1985, 1வது பதிப்பு, ஜனவரி 1982. (சென்னை 5: மிராக்கல் பிரின்டர்ஸ்) .

183 பக்கம், விலை: இந்திய ரூபா 15.00, அளவு: 17x12.5 சமீ.

இத்தொகுதி கவிஞர் காசி ஆனந்தனின் முக்கிய கவிதைகளைப் பல்வேறு பிரிவுகளுக்குள் அடக்குகின்றது. உயிர் தமிழுக்கு என்ற முதலாவது பிரிவில் தமிழ்நாட்டில் 1959ஆம் ஆண்டு முதல் 1963ம் ஆண்டு வரை தங்கியிருந்த நாட்களிலும், தமிழ் ஈழத்தில் வாழ்ந்த நீண்டகாலப் போராட்ட வாழ்வின் நடுவிலும் கவிஞர் பாடிய 57 தமிழ்மொழி-இன-நாட்டு விடுதலைப் பாடல்கள் இடம்பெறுகின்றன. களமும் கவிஞனும் என்ற இரண்டாவது பிரிவில் இலங்கையின் காவல் நிலையங்களில் அடி உதை தாங்கியும் சிறைச்சாலைகளில் கைதியாய் இருந்தும் மருத்துவமனைகளில் நோயாளியாய் வருந்தியும் கவிஞர் பாடிய 9 பெருமூச்சுப் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. மூன்றாவதான இறுதிப்பிரிவில் கவிஞரின் "தமிழன் கனவு" என்ற குறுங்காப்பியம் இடம்பெற்றுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21462. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 8513)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12A13

காத்திருத்தல்(கவிதைகள்). நவம் அரவிந்தன். ஆரையம்பதி 02: பூபாளம் வெளியீடு, பூபாளம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1995. (சென்னை 600024: ஏ.ஆர்.பிரின்ட்ஸ், 375-8, ஆர்க்காடு சாலை).

96 பக்கம், விலை: இந்திய ரூபா 21., அளவு: 18x12 சமீ.

அரவிந்தன் (30.4.1963) மட்டக்களப்பையடுத்துள்ள ஆரைப்பற்றையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 17ஆவது வயதில் எழுத்துலகில் புகுந்தவர். தினபதி, சிந்தாமணி, வீரகேசரி முதலான பத்திரிகைகள் இவருக்குக் களம் தந்தன. பின்னாளில் புலம்பெயர்ந்து ஜேர்மனியில் குடியேறியவர். பத்தாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இக்கவிதைகள் 22 வயது இளைஞனின் இளமைக் குமுறல்களாக வடிக்கப்பட்டுள்ளன. இவரது தந்தையார் ஆறுமுகம் அவர்களும், நவம் என்ற புனைபெயரில் படைப்பிலக்கிவாதியாக ஈழத்தில் அறிமுகமானவர். (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3442. இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17675).

12A14

காதல் நெஞ்சம். பி.ஆனந்தராயர் (புனைபெயர்: வேல்மாறன்). யாழ்ப்பாணம்: பி.ஆனந்தராயர், இல.9 அடப்பன் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1969. (யாழ்ப்பாணம்: ச.குமாரசுவாமி, உரிமையாளர், ஸ்ரீ சண்முகநாத அச்சகம்)

xii, (4), 180 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

பழந்தமிழ் இலக்கியத்தின் வாயிலாகத் தமிழ் மக்களின் காதல் உணர்வுகளை எடுத்துச் சொல்லும் நூல் இது. இந்நூல் களவியல், கற்பியல், ஐந்திணையியல் ஆகிய 3 பாகங்களில் எழுதப்பட்டுள்ளது. களவியலில் நானும் அவளும், காதல் குறிப்பு, காதல் போன்ற காமம், காதல் இன்பத்தின் நிறைவு, நலம் புனைந்து உரைத்தல், காதற் சிறப்பு உரைத்தல், குறைநிலா ஆகிய அத்தியாயங்களும், கற்பியலில் மணமும் பிரிவும், இலட்சியக் கனவு, தூங்காத கண்கள், பசலைக் கோலம், தனிமையின் தாக்கம், நினைந்து அவன் புலம்பல், நினைந்து அவள் புலம்பல், கனவும் நினைவும், துன்பமாலை, எண்ணத்தின் சுழற்சி, மீட்சி, நாணத்தை மறந்தேன், ஊடலும் கூடலும் ஆகிய அத்தியாயங்களும், ஐந்திணையியலில் துணை வாழ்க்கை, குறித்த இன்பம், மருதநிலக் காதல், அழிந்து உருகும் நெஞ்சம், செவிலித் தாயின் புலம்பல் ஆகிய அத்தியாயங்களும் இடம்பெற்றுள்ளன. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4725. இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10473).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12A15

கிரியாகாலத் திருமுறைகள். ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், கந்தசாமி கோவிலடி, இணுவில், சுன்னாகம், 2வது பதிப்பு, ஜனவரி 2017, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2013. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் தரப்படவில்லை).

iv, 140 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ.

ஆலயங்களில் கிரியைகளுடன் இணைந்த வகையில் பெரிதும் பயன்படுத்தப்படும் திருமுறைப் பாடல்களும் வேறு அருட்பாடல்களும் அடங்கிய தொகுப்பு இதுவாகும். இதன் முதற் பதிப்பு, 2013இல் பிரம்மஸ்ரீ பிக்ஷாடனக் குருக்கள் என்கின்ற சு.அபதோத்தாரணக் குருக்கள் அவர்களின் ஞாபகார்த்தமாக நீர்வேலி திருவருள்மிகு வாய்க்காற்றரவைப் பிள்ளையார் தேவஸ்தான ஆலய ஆதீனகர்த்தர் பிரம்மஸ்ரீ ஆ.சந்திரசேகரக் குருக்கள் அவர்களால் பார்த்திப வருடம் பங்குனி மாதம் 28ம் திகதி 11.4.2006 அன்று வெளியிடப்பட்டது. இவ்விரண்டாவது பதிப்பில், திருமுறைகளில் விநாயகர் பனுவல்கள், திருக்கதவம் திறக்கும் திருப்பாடல், திருப்பொன்னூசல், மார்கழிப் பாடல்கள் (திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி), கோளறு திருப்பதிகம், திருநீற்றுப் பதிகம், மஹோற்சவகாலத் திருமுறைகள் (தம்பத்தடியில் ஓதவேண்டிய பண்கள்), கொடிக்கவி, நவசந்திப் பண்கள், திருப்பல்லாண்டு (இரதோற்சவம்), திருப்பொன்னூசல் (தீர்த்தோற்சவம்), திருவெழுகூற்றிருக்கை, சிவபுராணம் ஆகிய ஒன்பது அத்தியாயங்களில் பக்தி இலக்கியப் பாக்கள் தொகுக்கப்பெற்றுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல் தேட்டம் பதிவிலக்கம் 8141).

12A16

? **(கேள்விக்குறி)**. எஸ்.பொன்னுத்துரை. சென்னை 600024: மித்ர வெளியீடு, 32/9 ஆற்காடு சாலை, 3வது பதிப்பு, நவம்பர் 2005, 2வது பதிப்பு, நவம்பர் 1994, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1972.(சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்).

144 பக்கம், விலை: இந்திய ரூபா 65., அளவு: 18.5x13 சமீ., ISBN: 81-89748-13-0.

கொண்டோடி சுப்பர், வீ.வியாகேச தேசிகர், வி.தியாகராச தேசிகர், பந்த தூதர், வித்துவான் பந்தசீர் பரவுவார். வித்துவச்சி பந்தசீர் பரவுவார், நச்சாதார்க்குமினியர் ஆகியோருடன் இணைந்து எஸ்.பொன்னுத்துரை 1972இல் அரசு வெளியீடாக தமிழ் இலக்கிய உலகக்கு வழங்கிய அங்கதம் இழையோடும் புனைவு இது. இப்பதிப்பு எஸ்பொவின் 50ஆவது திருமண ஆண்டு நினைவாக 18.11.2005இல் வெளியிடப்பட்டது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 816.இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46181).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12A17

சங்கக் கவிதையாக்கம்: மரபும் மாற்றமும். அம்மன்கிளி முருகதாஸ். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு, 2016, 1வது பதிப்பு, 2006. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை,).

xxvi, 354 பக்கம், விலை: இந்திய ரூபா 225., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-042-5.

சங்கப் பாடல்களின் ஆக்கமுறைமை, இப்பாடல்களினூடு காணப்பெறும் வளர்ச்சி ஆகியன பற்றியும் இவை இரண்டுக்கும் சமூக நடைமுறைகளுக்குமிடையே காணப்பட்ட ஊடாட்டம் பற்றியும் இந்நூல் ஆராய்கின்றது. சங்க இலக்கியத்தில் குறிப்பிட்ட சில நூல்கள் அவற்றின் சிறப்பியல்புகள் காரணமாக தனித்தனியே ஆராயப்படுகின்றன. அவை, சங்க இலக்கியத்துக்குள்ளேயே காணப்பட்ட கவிதையாக்க வளர்ச்சி நிலையையும், அக்கவிதை மரபிலிருந்து மெல்ல மெல்ல மாறிச்செல்லும் தன்மையையும், புதிய சிந்தனைகளுக்கு வழிவிடும் தன்மையையும் எடுத்துக்காட்டுகின்றன. அத்துடன் அகப்பாடல்களும் புறப்பாடல்களும் அவற்றின் ஆக்க முறையில் வெவ்வேறு இயல்புகளைக் கொண்டிருந்தமையையும் வெளிப்படுத்துகின்றது. இந்நூலாசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று தனது இளங்கலை முதுகலை கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழியியில்துறையில் தமிழில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றியவர். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4730)

12A18

சரசோதிமாலை. போசராசபண்டிதர் (மூலம்), சந். இரகுநாதையர், சு.நடராசையர் (பரிசோதித்தவர்). யாழ்ப்பாணம்: ச.இ.சிவராமலிங்கையர், 2வது பதிப்பு, கார்த்திகை 1909, 1வது பதிப்பு, பங்குனி 1892. (கொக்குவில்: சோதிடப்பிரகாச யந்திரசாலை).

(4), 120 பக்கம், விலை: ரூபா 2.80, அளவு: 21x14 சமீ.

சரசோதி மாலை என்பது ஒரு சோதிட நூல். இதனை இயற்றியவர் இலங்கையில் வாழ்ந்த போசராசர். இவர் 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஓர் அந்தணர். இந்த நூலை இவர் கி.பி. 1310-ல் தம்பை என்னும் ஊரில் வாழ்ந்த பராக்கிரமபாகு என்னும் அரசனின் அவையில் அரங்கேற்றினார் என்று ஒரு பாடல் குறிப்பிடுகிறது. பராக்கிரம பூபன் எனப் பாடல் குறிப்பிடும் அரசன் பராக்கிரம பாகு என்னும் பெயருடன் இலங்கையில் ஆண்ட அரசன். தம்பை என்னும் ஊர் அன்று ஈழத்திற் காணப்பட்ட தம்பதெனிய என்னும் இராசதானி என ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது. இந்த நூலில் 12 படலங்கள் உள்ளன. இதில் விவாக கால நியதி, அக்கினி, ஆதானம், நெல் விதைத்தல், மகுடன் புனைதற்குரிய திறந்த, யுத்த யாத்திரை, ஆயுர் யோகம், அபிசித்து முகூர்த்தம் போன்ற பல்வேறு விடயங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த நூலில் பராக்கிரமபாகு மன்னனைப் போற்றிய பல செய்யுள்களும் உள்ளன. சந்தான தீபிகை என்னும் சோதிட நூலை இயற்றிய யாழ்ப்பாணத்து இராமலிங்கையர் என்னும் சோதிடர் இதனையும் பதிப்பித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டுள்ளார். இது யாழ்ப்பாணம் நல்லூரைச் சார்ந்த கொக்குவில் சோதிடர் இரகுநாதையராலும், மேற்படியூர் சு.நடராசையராலும் பல பிரதிரூபங்களைக் கொண்டு பரிசோதிக்கப்பட்டது. செய்யுள் வடிவில் அடையும் சரசோதிமாலை சோடச கருமப் படலம், ஏர்மங்கலப் படலம், பலகருமப் படலம், அரசியற் படலம், யாத்திரைப் படலம், மனைசெயற் படலம், தெய்வவிரதப் படலம், குணாகுணப் படலம், சுபாசுபப் படலம், நாழிகைப் படலம், சாதகப் படலம், நட்சத்திரதெசைப் படலம் ஆகிய பன்னிரு படலங்களைக் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21788). (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 0067).

12A19

சிந்தனைச் சோலை. தெ.அ.துரையப்பாபிள்ளை. தெல்லிப்பழை: உலகப் பழைய மாணவர் சங்கக் குழு, மஹாஜனாக் கல்லூரி நூற்றாண்டுவிழா நினைவுச் சிறப்பு மலர், மஹாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை, 2வது பதிப்பு, ஜுன் 2005, 1வது பதிப்பு, ஜுன் 1960. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

xli, 267 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 18.5x12.5 சமீ.

தெல்லிப்பழை மஹாஜனக் கல்லூரியின் தாபகர் தெ.அ.துரையப்பாபிள்ளை அவர்கள் 60 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய ஆக்கங்களின் தொகுப்பாக இந் நூல் வெளிவந்துள்ளது. இத்தொகுப்பின் பின்னணியில் புலவர் நா.சிவபாதசுந்தரம், பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை, பண்டிதர் திரு.அ.ஆறுமுகம், திரு வை.பொன்னையா, திரு.சி.நாகலிங்கம், திரு.செ. கதிரேசர்பிள்ளை ஆகியோர் இயங்கியுள்ளனர். பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை அவரகளின் படைப்புக்கள் இங்கு ஏழு பிரிவுகளில் பத்திமலர், தேசியமலர், சமூகமலர், சீலமலர், உணர்வுமலர், நாடகமலர், இணைப்புமலர் ஆகிய தலைப்புகளின்கீழ் தொகுக்கப்பட்டுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 7797)

12A20

சிறிமத் பகவத் கீதை. இ.இரத்தினம் (தமிழாக்கம்). அவுஸ்திரேலியா: திருமதி ஞானம் இரத்தினம், 5/17, George Street, Burwood, NSW 2134, 1வது பதிப்பு, மார்ச் 1991. (சென்னை 600002: காந்தளகம், 834, அண்ணாசாலை).

(8), 83 பக்கம், விலை: இந்திய ரூபா 15. அளவு: 21x14 சமீ.

அமரர் இ.இரத்தினம் (17.8.1916-21.3.1981)அவர்கள் மொழிபெயர்த்த பகவத் கீதையின் தமிழ் வடிவம் இதுவாகும். யாழ்ப்பாணத்திலுள்ள இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் இரத்தினம் அவர்கள் புலவர் சிவன் கருணாலய பாண்டியனாரிடம் தமிழ் இலக்கணம், இலக்கியம், சைவ சித்தாந்தம் என்பவற்றைப் பயின்றவர். அரச கல்விச் சேவையில் மொழிபெயர்ப்புத்துறையில் பணியாற்றியவர். 1980இல் தான் நோயுற்றிருந்த வேளையில் இப்பணியைத் தொடங்கிய அவர், தன் பணி முடிவுறாமலே 1981இல் இயற்கையெய்திவிட்டார். நூலாசிரியர் பூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாது விட்ட கடைசி 34 சுலோகங்களையும் இயன்றவரை அவர் நடையில் ஆக்கி, முழு நூலையும் மூலத்துடன் ஒப்பு நோக்கி ஏற்புடைய சிறு மாற்றங்களைச் செய்து இப்பதிப்பை அவரது துணைவியார் வெளியிட்டுள்ளனர். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 0056). (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10995).

12A**21**

சைவ ஆசிரியர்களைத் தோற்றுவித்த திரு. ச.அருணாசலம் அவர்கள். *சி.கணபதிப்பிள்ளை ஐயர் (மூலம்), தி.விஸ்வலிங்கம், திருமதி வ.விஸ்வலிங்கம் (பதிப்பாசிரியர்கள்). கனடா: சைவ சித்தாந்த மன்றம்,* 1008-50, Elm Drive East, Mississauga, Ontario, L5A 3X2, *2வது பதிப்பு, ஜூலை 2015, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1971. (கனடா: விவேகா அச்சகம், கொழும்பு: கௌரி அச்சகம்).*

(3), 216 பக்கம், தகடுகள், விலை: கனேடிய டொலர் 10., அளவு: 22x15 சமீ.

காரைநகர், அமரர் ச.அருணாசல உபாத்தியாயர் பற்றிய வாழ்வும் அவரது கல்விப் பணிகளும் பற்றி இந்நூல் பதிவுசெய்கின்றது. நகரச்சிறப்பு, வம்சாவழி, மழலைப்பருவம், ஆரம்பக் கல்வி, உயர்தரக் கல்வி, ஸ்தல தரிசனம், இல்வாழ்க்கை, சிந்தனைகள், சுப்பிரமணிய வித்தியாசாலை, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வித்தியாசாலை, வியாவிற் பாடசாலை, வெளிக்கிராமங்களில் சுற்றுப்பிரயாணமூலம் இலட்சியத்தைப் பரப்புதல், காரைநகர், கீரிமலை, வண்ணார்பண்ணை, கோப்பாய் ஐக்கிய போதனா பாடசாலை, புகழ் விரும்பாதவர், இறுதி யாத்திரை ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. திருத்திய இரண்டாவது பதிப்பில் மேலதிக இணைப்புகளாக அருணாசல ஆசானுக்கு, காரைநகரில் சைவப் பாடசாலைகள், அவர்களுக்குப் பிறகு அருணாசலந்தான், நாவலருக்கு அடுத்து வைத்து நேசிக்கப்படுபவர், நம் முன்னோர் சிந்தித்தவையும், நாவலர் காலத்தின் பின் நாவலர், அருணாசல உபாத்தியாயர், இந்துபோர்ட் இராசரத்தினம், இலங்கைத்தமிழர் வாழ்வில், திரு.ச.அருணாசலம், சுப்பிரமணிய வித்தியாசாலையின் ஐம்பதாண்டு, சமயக்கல்வி மூலம் சைவத்தை வளர்த்தவர், நாவலரின் வாரிசாய் சைவத்தொண்டு, காரைநகர் அருணாசல உபாத்தியாயர், இந்துக்களின் வழிகாட்டியாகச் சைவத்தொண்டாற்றியவர், சைவ ஆசிரியர்களைத் தோற்றுவித்த மகான், முன்னாள் அதிபர் ந.சபாரத்தினம் அவர்கள் எழுதிய கட்டுரையின் குறிப்பு ஆகிய 17 நினைவுப் பதிகைகளையும் சேர்த்துள்ளனர். நூலாசிரியர் சி.கணபதிப்பிள்ளை ஐயரவர்கள் அல்வாய் வாசரும் வல்வைச் சிவகுரு வித்தியாசாலையின் முன்னாள் தலைமை ஆசிரியருமாவார். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 8860)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12A22

சைவ விரதங்களும் விழாக்களும். *ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீநகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், 3வது பதிப்பு, ஒக்டோபர் 2013, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1988. 2வது பதிப்பு, 2005. (சுன்னாகம்: கஜானந்த் பிரின்டர்ஸ், மானிப்பாய் வீதி, இணுவில்).*

180 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ.

சைவ சமயத்தவர்கள் அனுஷ்டிக்கின்ற விரதங்கள், விழாக்கள், புனித பண்டிகைகள் முதலியவற்றை விபரிக்கும் நூல். குறிப்பாக, அவை ஆரம்பித்த வகை, அனுஷ்டித்துப் பயன் பெற்றவர் விபரம், மற்றும் இவை தொடர்பான புராணக் கதைகள் முதலியனவும் இங்கு தொகுக்கப்பெற்றுள்ளன. விரதங்கள் விழாக்கள் பண்டிகைகள் பற்றிய ஓர் அறிமுக விளக்கத்தையும் சிவ விதிகளும் மரபு முறைகளும் ஆகிய இரண்டு விளக்கங்களைத் தொடந்து வரும் ஒன்பது இயல்களில், வார, திதி, நட்சத்திர விரதங்கள், விநாயக விரதங்கள், சிவ விரதங்கள், சக்தி விரதங்கள், கந்த விரதங்கள், வைரவ-வீரபத்திர விரதங்கள், வைஷ்ணவ விரதங்கள், சூரிய விரதங்களும் பிற விரதங்களும், பண்டிகை நாட்களும் பிறவும் ஆகிய தலைப்புகளின் கீழ் விளக்கமளிக்கப்பட்டுள்ளன. அனுபந்தங்களாக சிவ விரதங்களுக்குரிய மேலதிக விபரங்கள், தோஷ நிவர்த்திக்காக இல்லங்களில் நடத்தக்கூடிய சில பிரார்த்தனைகள் ஆகியன இணைக்கப்பட்டுள்ளன. நூலில் குறிப்பிடப்பட்டுள்ள விரதங்களின் பெயர்களும் அவை இடம்பெற்ற பக்க விபரங்களும் ஆரம்பத்திலேயே ஒருபட்டியலாகத் தரப்பட்டுள்ளள. *(முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 0097).*

12A23

சைவாலயக் கிரியைகள். *கோப்பாய் சிவம் (இயற்பெயர்: ப.சிவானந்த சர்மா). யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், ஸ்ரீநகரம், அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம், விரிவாக்கிய 2வது பதிப்பு, செப்டெம்பர் 2016, 1வது பதிப்பு, ஜுன் 1986, (சுன்னாகம்: கஜானந்த் பிரின்டர்ஸ், மானிப்பாய் வீதி, இணுவில்).*

204 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ.

கோயில்களில் வழிபடச் செல்பவர்கள் அங்கு நிகழும் கிரியைகளைப் பற்றித் தெரிந்துகொண்டால் வழிபாடு பெரும்பயனுள்ளதாக அமையும். இவ்வுண்மையைக் கருத்திற்கொண்டே வழிபடுபவர்களுக்குக் கிரியை பற்றிச் சிறிதளவாவது தெரியவைக்கவேண்டும் என்ற நோக்குடன் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. ஆலய வழிபாடு, சைவசித்தாந்தமும் கிரியைகளும், கிரியைகள் ஒரு சுருக்க வரலாறு, ஆலய அமைப்பும் திருவுருவங்களும், கிரியைகள் ஓர் ஆரம்ப விளக்கம், பூர்வாங்கக் கிரியைகள், சில பொதுவான கிரியைகள், கும்ப பூஜை, அக்னி கார்யம் என்பவற்றின் விளக்கம், நித்திய நைமித்திகக் கிரியைகள், மஹோற்சவம், மஹா கும்பாபிஷேகம், யாகசாலை-யாகபூஜை என்பவற்றின் சிறப்பான விளக்கம், பஞ்சகுண்ட யாகசாலை ஒரு தத்துவப் பார்வை, யாகசாலை தொடர்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கப்படங்கள், அக்னிகார்யம்-பல்வகைப்பட்ட கிரியாமுறைகள் ஆகிய 15 அத்தியாயங்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4102)

12A24

தமிழ் சமுதாயத்தில் உளநலம். தயா சோமசுந்தரம், சா.சிவயோகன். யாழ்ப்பாணம்: சாந்திகம், 8/1 கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, 3வது பதிப்பு, 2010, 1வது பதிப்பு, 2000, 2வது பதிப்பு, 2004. (Colombo: J.A.Creations).

xxii, 266 பக்கம், ஓவியங்கள், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x16 சமீ., ISBN: 978-955-0520-00-8.

ஈழத்தமிழருடைய வாழ்வில் நிகழும் இடப்பெயர்வுகள் அவர்களில் உளப் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன. சமுதாய மீள்சீராக்கல் நடவடிக்கைகளுள் உளநலத்தைப் பேணுதலும் இன்றியமையாதது. இந்தப் பின்னணியில் உருவான நூல் இது. உளச் சமூகத் தொண்டர்கள், உளநலம் விரும்பும் ஆர்வலர்கள் படித்துப் பயனடையும் வகையில் அரிய பல தகவல்களைக் கொண்டது. பல்வேறு உளநலப் பிரச்சினைகளும் அவை தோன்றுவதற்கான காரணங்களும் அவற்றிலிருந்து விடுபடும் வழிமுறைகளும் இங்கு எளிமையாகக் கூறப்பட்டுள்ளன. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்-12257). (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2078)

12A25

தாவர போசன சமையல். புஷ்பாஞ்சலி முருகேசபிள்ளை. கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202 செட்டியார் தெரு, 6வது பதிப்பு, 2005, 5வது பதிப்பு, 2000, 4வது பதிப்பு, 1996,3வது பதிப்பு, 1987, 2வது பதிப்பு, 1978, 1வது பதிப்பு 1971. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).

xviii, 664 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 890., அளவு: 21.5x14.5 சமீ. ISBN: 978-955-9409-02-6.

தனித் தாவர போசனம் உண்போருக்கு மட்டுமல்லாது, ஏனையோருக்கும், புதிதாகச் சமையல் செய்யத் தொடங்குவோருக்கும், மனையியல் கற்கும் மாணவர்களுக்கும் ஏற்றவகையில் இந்நூல் தயாரிக்கப் பெற்றது. மங்கையருக்குச் சில பயனுள்ள தரவுகள் என்ற முதலாவது பகுதியில் சமையலறையிலே தேவைப்படும் பொருட்கள், அளவைகள், குறியீடுகள், சமையலறைச் சீர், அன்ன உணவைத் தயாரிப்பதற்குச் சுலபமான முறைகள், விசேட தினங்களில் பரிமாறக்கூடிய உணவுத் தொகுப்புகள், பாரம்பரிய அன்ன உணவைப் பரிமாறும் முறை, நூறு பேருக்கு அன்ன உணவைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களின் படடியல், உணவில் அடங்கும் கூறுகள் -நிறையுணவு- உணவுப் பொருட்களிலுள்ள ஊட்டச்சத்துக்கள், சில பயனுள்ள குறிப்புகள், சமையல் பக்குவங்களின் சுருக்க விளக்கங்கள், சமையல் பொருட்களின் அகராதி, ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 தலைப்புகளில் முக்கிய விபரங்கள் தரப்பட்டுள்ளன. சமையல் பாகங்கள் என்ற இரண்டாம் பகுதியில் காலை - மாலை ஆகாரங்கள், சோறு ஆக்கும் முறைகள் - சித்திரான்னம், இடியப்ப பிரியாணி, நூடில்ஸ் வகைகள், கறி வகைகள், சுண்டல் வகைகள், சாம்பார் வகைகள் என 41 வகையான பிரிவுகளுக்குள் ஏராளமான உணவுப்பண்டங்களின் தயாரிப்பு முறைகள் விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் முன்னர் சிறீலங்கா தாவர போசன சமையல் என்ற தலைப்பிலும் சில பதிப்புகளைக் கண்டுள்ளது. (இந்நூல் கொக்குவில் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் ஆர்- 14093). (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 272, 10A13)

12A26

திண்ணபுர அந்தாதி: மூலமும் உரையும். *கார்த்திகேயப் புலவர் (மூலம்), சொ. சிங்காரவேலன் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர், 2வது பதிப்பு, ஜனவரி 1985, 1வது மூலப் பதிப்பு, இரத்தாட்சி பங்குனி 1924. (தமிழ்நாடு: ஸ்ரீ குமரகுருபரர் அச்சகம், ஸ்ரீ காசி மடம், திருப்பனந்தாள்).*

(8), 172 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

காரைநகர் கார்த்திகேயப் புலவர் செய்த அரியபல நூல்களுள் திண்ணபுர அந்தாதியும் ஒன்று. இவருடைய தந்தையார் முருகேசு ஐயரும் பெரும் புலவராக விளங்கியவர். திண்ணபுர அந்தாதி, திண்ணபுரம் எனவும், ஈழத்துச் சிதம்பரம் எனவும் அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவிலில் எழுந்தருளியிருக்கும் சௌந்த ராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் மீது பாடப்பெற்றது. அந்தாதி என்பது ஒரு பாட்டின் அந்தம் அடுத்த பாட்டின் ஆதியாக வருவது. அத்துடன் நூறாவது பாடலின் இறுதிச் சொல் முதலாம் பாடலின் முதற்சொல்லாகவும் அமைவது. இவ்வந்தாதிப் பாடல்கள் கட்டளைக் கலித்துறைப் பாக்களால் அமையப்பெறுபவை. கவிதைநயமும் பக்திச் சுவையும் கலந்த ஒரு பெரும்படையலாக திண்ணபுர அந்தாதி அமைந்துள்ளது. திண்ணபுரத்தின் இயற்கை வனப்பும், அங்கு வாழ்ந்த மக்களின் பண்பாட்டு விழுமியங்களும் பக்தி மேம்பாடும் பாடல்களில் ஆங்காங்கே பொதிந்துள்ளன. உரையாசிரியர், தமிழகத்தின் மயிலாடுதுறை தருமைஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராவார். கயிலை மா முனிவரின் அருளாசியும் திருவுருவப் படமும், நூன்முகம், திண்ணபுர அந்தாதி (மூலமும் உரையும்), உரையில் எடுத்தாளப்பட்ட நூல்கள், பாடல் முதற்குறிப்பு அகராதி, பிழையும் திருத்தமும் ஆகிய உள்ளுறைத் தலைப்புகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10228. பின்னைய கனேடிய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 10162. அப்பதிப்பில் 1வது பதிப்பு அச்சுப்பிழையாக 1984 என்றுள்ளது. திருத்தப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12A27

தியானகாலச் சிந்தனை. சிவதொண்டன் சபையார். யாழ்ப்பாணம்: சிவதொண்டன் சபை, 434, 436 காங்கேசன்துறை வீதி, 3வது பதிப்பு, 1992, 1வது பதிப்பு, 1925, இரண்டாம் பதிப்பு, 1956. (மட்டக்களப்பு: கீன் அச்சகம், 75V, முனை வீதி).

(4), 177 பக்கம், விலை: ரூபா 35., அளவு: 14.5x11.5 சமீ.

சிவதொண்டன் வெளியீட்டு வரிசையில் வெளிவந்துள்ள கையடக்கப் பிரசுரம். ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தாரால் பிரசுரிக்கப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பாகும். இது தியான காலம் என்ற தலப்புடன் 1925இல் முதற் பதிப்பைக் கண்டது. தியானம் உடல் ஆரோக்கியத்திற்காகவும், மன நலனுக்காகவும் செய்யப்படும் ஒரு மன ஒருமைப்பாட்டு பயிற்சி. தியானம், ரத்த அழுத்தத்தை குறைக்கிறது, மன அழுக்கை போக்குகிறது, என்பது தற்போது விஞ்ஞானப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இது சாதாரணமாக உலக மக்கள் பழகுகின்ற தியானமாகும். ஆன்மீக வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தில், ஆன்ம நலனுக்காக செய்யப்படும் தியானத்திற்கு உபாசனை என்று பெயர். ஆன்மீக ஒளி அல்லது ஆன்மீக ஞானம் பெறுவது தான் உபாசனையின் முக்கிய நோக்கமாகும். இந் நூல் படித்தறிந்த அல்லது கேட்டறிந்த உபதேசங்களை தியானகாலச் சிந்தனைகளாக வழங்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14745). (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5035).

12A28

திருத் திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் என்னும் ஈழத்துச் சிதம்பர புராணம்: பாட்டும் உரையும். சோ.இளமுருகனார் (மூலம்), இ.பரமேசுவரியார் (உரையாசிரியர்), க.வைத்தீசுவரக் குருக்கள் (பதிப்பாசிரியர்). காரைநகர்: ஈழத்துச் சிதம்பர தேவத்தானம், 2வது பதிப்பு, ஜனவரி 2016, 1வது பதிப்பு, 1972. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xlvi, 765 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15 சமீ.

நவாலியூர் புலவர்மணி சோ.இளமுருகனாரால் பாடப்பெற்றதே திண்ணபுரச் சுந்தரேசர் புராணம். இந்நூலில் பாயிரச் சருக்கம் (33 செய்யுள்), காரைவளச் சருக்கம் (149 செய்யுள்), திண்ணபுரச் சருக்கம் (84 செய்யுள்), தவம்புரி சருக்கம் (120 செய்யுள்), ஐயனார் கோயில்காண் சருக்கம் (70 செய்யுள்), சுந்தரேசர் கோயில்காண் சருக்கம் (60 செய்யுள்), சோமாற்கந்தச் சருக்கம் (72 செய்யுள்), திருக்கோயிற் பாதுகாவலர் சருக்கம் (17 செய்யுள்), அந்தணர் பூசைபுரி சருக்கம் (35 செய்யுள்), விழாவயர் சருக்கம் (166 செய்யுள்), ஆகிய சருக்கங்களாக மொத்தம் 806 செய்யுள்களும் அவற்றுக்கான உரையும் இடம்பெற்றுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 6085)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12A29

தொத்தொ சங்: சாளரமருகில் ஒரு சிறுமி. தெத்சுக்கோ குரொயனகி (ஜப்பானிய மூலம்), எம்.எச்.முகம்மது யாக்கூத். (தமிழாக்கம்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு, 2016, 1வது பதிப்பு, 2006. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxvi, 172 பக்கம், விலை: ரூபா 390., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-659-467-3.

தமது பிள்ளைப்பருவ நினைவுச் சுவடுகளினூடாக யப்பானிய எழுத்தாளர் திருமதி தெத்சுக்கோ குரொயானகி (Tetsuko Kuroyanagi) ஜப்பானிய மொழியில் "மதொகிவா நொ தொத்தொ சங்" என்ற தலைப்பில் எழுதி, டொரத்தி பிரிட்டன் (Dorothy Britton) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த Totto-Chan: The little Girl at the Window என்ற நூலின் தமிழாக்கம் இது. இதன் முதற் பதிப்பு 2006இல் படிப்பினை தரும் பாடசாலை என்ற தலைப்புடன் வெளிவந்தது. சுதந்திரம், விநோதம், அன்பு போன்ற பண்புகளைப் பாடசாலையினுள் வரவழைத்த வாழ்க்கை நயப்பையும் மனிதநேயத்தையும் கல்வியுடன் ஒன்றுகலக்கச் செய்யத்தக்க விதம் எது என்பதை ஒரு பாடசாலையில் சிறுமியொருத்தி பெற்ற உள்ளத்தைக் கிள்ளும் அனுபவங்களினூடாக இக்கதை விளக்குகின்றது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 10453)

12A30

நாடக தீபம்: நடிகமணி வி.வி.வைரமுத்து நினைவு வெளியீடு. காரை. செ.சுந்தரம்பிள்ளை (தொகுப்பாசிரியர்). காங்கேசன்துறை: வி.வி.வைரமுத்து நினைவுதின வெளியீடு, சாரங்கா, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1989. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).

52 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5x14 சமீ.

நடிகமணி வைரமுத்துவின் மறைவையொட்டி வெளியிடப்பட்ட இந் நூலில் அவர் பற்றி மட்டுமல்லாது, சமகால நாடக அரங்கு பற்றிய பல தகவல்களையும் உள்ளடக்கியதான பல்வேறு தமிழ் அறிஞர்களின் இரங்கலுரைகள் இடம் பெற்றுள்ளன. சு.வித்தியானந்தன், கா.சிவத்தம்பி, அ.சண்முகதாஸ், சி.மௌனகுரு, ம.சண்முகலிங்கம், குறமகள்- வள்ளிநாயகி இராமலிங்கம், சட்டத்தரணி அ. குமரகுரு, காரை.செ.சுந்தரம்பிள்ளை, வி.ரி.செல்வராசா (வசந்தகான சபா), செ.சின்னத்துரை (ஆர்மோனிய வித்துவான்), நடிகர் வி.மார்க்கண்டு, கவிஞர் வே.ஐயாத்துரை, சொ. இன்பம், ந.மகேந்திரராசா (நாடகக் கலாமன்றம்), பொ. கணேசமூர்த்தி, ஏ.ரி.பொன்னுத்துரை ஆகியோரின் நினைவுப் பதிகையுடன் ஈழநாடு (11.7.1989), உதயன் (11.7.1989), மல்லிகை (ஜூன் 1989) ஆகிய பத்திரிகைகளின் நினைவஞ்சலிகளும், உதயசூரியன் சனசமூக நிலையம், ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஆகிய அமைப்புகளின் இரங்கலுரைகளும், பின்னிணைப்பாக தினகரன் நாடக விழா மலரில் (1966) இடம்பெற்ற மயானகாண்டம் வெற்றியளித்ததேன் என்ற கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 896).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12A31

நான் காணும் உலகம்: உண்மை நிலையின் விளக்கம். தெருத்தூசியோன். (இயற்பெயர்: ராஜசிங்கம் சார்ள்ஸ் ராஜ்குமார்). தெகிவளை: கலா பதிப்பகம், 54, பிரெஸர் அவென்யூ, 2வது பதிப்பு, 2015, 1வது பதிப்பு, 1990. (வெள்ளவத்தை: எஸ்.பி.கிராபிக்ஸ், 235ஜீ, காலி வீதி).

(7), 37 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-7900-00-1.

பாவிகள் வாழும் இவ்வுலகிலே, என் ஆவி கலங்கி எழுதும் புதிய காவியம் என்ற அறிமுகத்துடன் ஆன்மீக வழிப்பட்ட தன்நிலை விளக்கமாக இந்நூலில் உள்ள உரைகள் அமைந்துள்ளன. கண்பார்வையற்றவரான இந்நூலாசிரியர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலைத்துறைப் பட்டதாரியாவார். பின்னாளில் ஆளுநர் செயலகத்தில் மொழிபெயர்ப்பாளராகவும் பணிபுரிந்தவர். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 10055)

12A32

பண்டைய தமிழகம். சி.க.சிற்றம்பலம். யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1991. (யாழ்ப்பாணம்: மஹாத்மா அச்சகம், ஏழாலை).

xx, 340 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15 சமீ.

வரலாற்றுக் கண்ணோட்டத்தில் தமிழகத்தின் பண்டைத்தமிழர் நாகரீகம் எவ்வாறு மலர்ந்தது என்பதைச் சித்திரிக்கும் நூல். பழைய கற்காலம், இடைக்கற்காலம், புதிய கற்காலம், வாழ்வும் வளமும், பெருங்கற்கால ஈமச் சின்னங்கள், அகழ்வாராய்ச்சி தரும் சான்றுகள், பெருங்கற்கால மக்களின் வாழ்வும் வளமும், பெருங்கற்கால மக்கள், வரலாற்றுக்காலம், அகழ்வாராய்ச்சிச் சான்றுகள், பிராமிக் கல்வெட்டுகளும் பண்டைய நாணயங்களும் ஆகிய பதினொரு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. விளக்கப்படங்களின் அட்டவணை, தமிழ் ஆங்கில உசாத்துணை நூல்களின் பட்டியல், சொல்லடைவு என்பன இந்நூலின் பின்னிணைப்புகளாகின்றன. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1983. இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12883)

12A33

பறாளை விநாயகர் பள்ளு. சின்னத்தம்பிப் புலவர். சுழிபுரம்: அறங்காவலர் சபை, அருள்மிகு பறாளை ஈசுர விநாயகர் திருக்கோவில், மீள்பதிப்பு, 1997, 3வது பதிப்பு, 1956, 1வது பதிப்பு, 1889, 2வது பதிப்பு, 1932, (திருக்கோணமலை: உதயம் பதிப்பகம்).

53 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: அளவு: 20.5x14.5 சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வரலாற்றுச்சிறப்புமிக்க திருத்தலங்களில் பறாளை அருள்மிகு ஈசுர விநாயகர் திருக்கோவிலும் ஒன்று. யாழ்ப்பாணத்தின் வடமேற்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்புரம், சோழியபுரம் என்னுமிரு கிராமங்கள் உள்ளன. அவற்றில் சோழியபுரமே பிற்காலத்திலே சுழிபுரம் என மருவி உள்ளதாக குறிப்பிடுவர். சுழிபுரம் கிராமத்தின் வயல் சூழ்ந்த மருத நிலப்பகுதியில் கிழக்கு நோக்கிய சந்திதியாக இலங்கையின் புராதன விநாயகர் ஆலயங்களில் ஒன்றான பறாளை விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்திற்கு வடக்கு வீதியுடன் பறாளை முருகன் ஆலயமும் அமைந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது. 16ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பெற்ற இவ்வாலயத்தின் தலபுராணம் 18ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்து நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் அவர்களால் பாடப்பெற்றது. இத் தலபுராணம் முதற் பதிப்பாக சுழிபுரம் ச.சிவப்பிரகாச பண்டிதரால் 1889இல் சென்னை நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டது. பின்னர் 2வது பதிப்பு சபாபதி நாவலரின் மருகரான அ.சிவகுருநாதன் அவர்களால் 1932இல் சென்னையில் அச்சிடப்பெற்றது. பள்ளு இலக்கிய மரபுகளை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்ட பறாளை விநாயகர் பள்ளு 130 பாடல்களால் ஆனது. பொதுவாகப் பள்ளு இலக்கியங்கள் காப்பு, கடவுள் வாழ்த்து என்பவற்றுடன் தொடங்கி பள்ளிகள் வரவு, பள்ளன் வரவு, அவர்கள் வரலாறு, நாட்டு வளப்பம் முதலிய பல உறுப்புக்களைக் கொண்டு அமையும் எனத் தமிழ் இலக்கண நூல்களிற் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கூறப்பட்டுள்ள உறுப்புக்கள் அனைத்துமே எல்லாப் பள்ளு நூல்களிலும் இருப்பதில்லை. எடுத்துக் கொண்ட பொருளுக்கு ஏற்ப இந் நூலிலும் தேவையான உறுப்புக்கள் மட்டுமே உள்ளன. பறாளை விநாயகர் பள்ளு நூலில் அமைந்துள்ள உறுப்புக்கள் பின்வருமாறு: 1) காப்புச் செய்யுள், 2) விநாயகர் துதி, 3) நடேசர் துதி, 4) சிவகாமியம்மை துதி, 5) பள்ளியர் தோற்றம், 6) பள்ளியர் வரலாறு கூறல், 7) பள்ளன் தோற்றம், 8) பள்ளியர் தத்தம் நாட்டு வளங் கூறல், 9) குலமுறை கிளத்தல், 10) குயில் கூவுதல், 11) மழை கேட்டல், 12) ஆற்றுவரத்து, 13) பண்ணைக்காரன் தோற்றம், 14) ஆண்டையை வணங்கல், 15) விதைவகை கேட்டல், 16) முறைப்பாடு, 17) பள்ளன் மூத்த பள்ளியை வேண்டல். 18) மூத்த பள்ளி ஆண்டையை வேண்டல், 19) பள்ளன் ஆண்டைக்குக் கணக்கொப்பித்தல், 21) தலைவன் பொருள்வயிற் பிரிந்துழி தலைவி வருத்தம் பாங்கி கூறல், 22) முகூர்த்தங் கேட்டல், 23) இரங்கல், 24) நற்றாயிரங்கல், 25) நாற்று நடவு, 26) அதன் விளைவு, 27) சுழிக்கரைப் புலம்பல், 28) தலைவன் பொருள்வயிற் பிரிவில் தலைவியிரங்கல், 29) தலைவியைப் புகழ்தல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34953. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5171)

12A34

பனை நூறு: மூலமும் உரையும். ச.சு.பொன்னம்பலம் (மூலம்), தமிழவேள் க.இ.க. கந்தசாமி (பதிப்பாசிரியர்). கொழும்பு: கொழும்புத் தமிழ்ச் சங்கம், இல. 7, 57ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, 2வது பதிப்பு, 2001, 1வது பதிப்பு, 1981. (கொழும்பு 13: நந்தா அச்சகம்).

(2), 64 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 75., அளவு: 21x14.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பகதருவாகிய பனை மரத்துக்குப் பல நூல்கள் இருக்கின்ற பொழுதும் நிலைக்கக்கூடிய நூலொன்றும் இல்லாமை கண்டு, இந்நூலை "பனை நூறு" என்னும் மகுடத்தோடு நூறு பாக்களால் யாத்துள்ளார். தமிழரின் கொள்கை ஆடவருக்கு வீரமும், பெண்களுக்குக் கற்புமே ஆகும். தமிழர் காதல் மணத்திலேயே நம்பிக்கை உடையவர்கள் என்பதை கோவை என்னும் இன நூல்கள் விளக்குகின்றன. கோவை என்பதை காதற் சாத்திரம் என்று கூறலாம். கோவை நூல்களைச் சாதாரணமானவர்களால் படித்தறிய முடியாதாகையால் இந்த நூலிற் காதற் கட்டங்களில் முக்கியமான சிலவற்றைக் கூறியுள்ளார். கவியின்பத்தைக் கற்றோருக்கு மாத்திரமின்றி மற்றோருக்கும் கொடுக்க வேண்டுமென்று இலகுவான தமிழில் செய்யுட்களை யாத்ததுமன்றி அவற்றினுள் அகப்பொருட் சுவையையும் வைத்துள்ளார். எடுத்துக்காட்ட விரும்புகிறவர்களுக்குச் சுலபமாகும் வகையில் இந்த நூலில் சில பாக்களின் கடைசி அடியில் கொள்கைகள் உண்மைகளை அமைத்துள்ளார். இந்நூலிற் காணப்படும் பாக்களில் அநேகமானவை இசைப் பாக்களாகும். பனை எமக்குச் செல்வத்தையும் இன்பத்தையும், பலத்தையும், ஞானத்தையும் தருகின்றது. இவற்றை இந் நூலை வாசிப்பவர்கள் நன்கு விளங்க முடியும், அறிஞர்களுக்கு இன்பத்தைப் பெருக்குவதற்காக, சில செய்யுட்களுக்கு அரிய அலங்காரங்களும் கவிஞர் அமைத்துள்ளார். தமிழ் இலக்கண மரபு தழுவி இயற்றப்பெற்ற இந்நூல் இலக்கிய நயங்கொண்டு கற்போருக்கு நல்விருந்தாக அமைகின்றது. இப்பதிப்பில் அருஞ்சொல் அகராதி, பாடல்கள் முதற்குறிப்பு அகராதி என்பனவும் இடம்பெற்றுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 441)

12A35

பாண்டவர் கதை. பிரான்சீஸ் கிங்ஸ்பரி. யாழ்ப்பாணம்: பிரான்சீஸ் கிங்ஸ்பரி, 2வது பதிப்பு, 1940, 1வது பதிப்பு, 1939. (சாவகச்சேரி: இலங்காபிமானி அச்சியந்திரசாலை).

(8), 74 பக்கம், விலை: 50 சதம், அளவு: 17.5x12 சமீ.

பாண்டவர் கதை. பிரான்சீஸ் கிங்ஸ்பரி. யாழ்ப்பாணம்: பிரான்சீஸ் கிங்ஸ்பரி, புதுக்கிய மீள்பதிப்பு, 1957, 1வது பதிப்பு, 1939, 8ஆவது பதிப்பு, 1953, புதுக்கிய பதிப்பு, 1955. (சாவகச்சேரி: இலங்காபிமானி அச்சியந்திரசாலை).

84 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 17.5x12 சமீ.

இயற்றமிழ்ப் போதகாசிரியர் கலைமாணி பிரான்சீஸ் கிங்ஸ்பரி சிறுவர் சிறுமியருக்கு எழுதிய தமிழ் வசன நூல் இதுவாகும். தமிழில் வசன நடையில் உள்ள பாரதக்கதை நூல்களிற் சில மிக விரிந்தவை. சில மிகச் சுருங்கியவை. மிக விரிக்காதும் மிகச் சுருக்காதும் மாணவர்க்குப் பயன்படுமாறு எழுதப்பட்டது இந்நூல் என்றால் அது மிகையாகாது. நூலாசிரியர் ராவ் பகதூர் சீ.டபிள்யூ. தாமோதரம்பிள்ளையின் மகனாவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2150,2151). (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5393).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12A36

பாரதச் சுருக்கம். ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, மீள்பதிப்பு, 1979, 3வது பதிப்பு, 1931, 1வது பதிப்பு, 1903. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம், இல. 310, மணிக்கூண்டு வீதி).

v, 210 பக்கம், விலை: ரூபா 10.00, அளவு: 21x14 சமீ.

இது யாழ்ப்பாணத்து மானிப்பாய் ஆ.முத்துத்தம்பிப் பிள்ளையால் செய்து, மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபகரும் பாலவநந்தம் ஜமீந்தாருமாயிருந்தவருமாகிய ஸ்ரீ ராஜ ராஜ பொ.பாண்டித்துரைத் தேவரவர்கள் திராவிட பாஷாபிமான ஞாபக சின்னமாகச் சமர்ப்பித்தது. மனித படைப்புகளில் தனியிடம் மகாபாரதத்திற்கு உண்டு. மகாபாரதமானது, கல்வி, அறிவு, அரசியல், ஒழுக்கம், ஒற்றுமை, தைரியம் எனப் பலவற்றையும் போதிக்கும் ஒரு இதிகாசமாகும். அவ்வாறானதொரு படைப்பினை நாவலர் கோட்டம் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் (ஏப்ரல் 18, 1858 - நவம்பர் 3, 1917, மானிப்பாய், யாழ்ப்பாணம்) 1903 இல் இளம் வாசகர்களுக்காக எழுதியிருந்தார். அந்நூலின் பின்னைய உப பாடநூல்வரிசைப் பதிப்பு இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10301. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 10465)

12A37

மண் வாசனை. சு.வே. (இயற்பெயர்: சு.வேலுப்பிள்ளை). யாழ்ப்பாணம்: அன்னை வெளியீட்டகம், நாவற்குழி, 1வது பதிப்பு, 1972. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

x, 153 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 18x12.5 சமீ.

மண்வாசனை, வெறி, கிழவனும் வத்தகைக் கொடிகளும், பாரிசவாதம், பூ, பாற்காவடி, அக்கினி, ஸ்ட்ரைக், புகை, தகிப்பு, தெய்வம், பெரியம்மா ஆகிய 12 சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு. சு.வே. சிறுகதை ஆசிரியர்களில் தனித்துவமானவர். பண்டிதமணி வழி யாழ்ப்பாண மண்ணிலே விளைந்த செழுமைத் தமிழைப் படைப்பிலக்கியத்தில் புகுத்திய மூலவர். பண்டித வர்க்கத்தினரைப் படைப்பிலக்கியவாதிகளாக அங்கீகாரம் பெறச் செய்த முன்னோடியும் இவராவார். மூதறிஞர் ராஜாஜி அவர்களால் உருவகக் கதைக் கலையின் பிதாமகர் என்று வாழ்த்தப்பட்டவர். (பின்னைய தமிழகப் பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3630)

12A38

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவராற்றுப்படை மூலமும் உரையும். வா.குலாம் காதிறு நாவலர் (மூல ஆசிரியர்), ம.முஹம்மது உவைஸ் (பதிப்பாசிரியர்). பாணந்துறை: இஸ்லாமிய இலக்கிய மன்றம், மர்கஸி, ஹேனமுல்லை, 2வது பதிப்பு, 1968, 1வது பதிப்பு, 1903. (கொழும்பு 10: அல்பியன் அச்சகம்)

(2), 39 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுப்படை நூல்களில் புலவராற்றுப்படை என்பதும் ஒன்று. கல்வி கேள்விகளில் புலமை மிக்கவர் புலவர். திருவள்ளுவர் புலமையை "நுண்மாண் நுழைபுலம்" என்கிறார். புலவர்களைத் "தெள்ளியர்" என்கிறார். திருவும் தெளிவும் ஓரிடத்தில் அமைவதில்லை. எனவே புலவர்கள் வறுமையில் வாடினர். வள்ளல்களைத் தேடிச் சென்றனர். தேடிச் சென்று வறுமையைப் போக்கிக்கொண்ட புலவர்கள் வறுமையில் வாடும் புலவர்களை வள்ளல்கள் வாழுமிடத்துக்கு ஆற்றுப்படுத்தினர். இப்படிப் புலவர்களை ஆற்றுப்படுத்தும் பாடலைப் புலராற்றுப்படை என்னும் துறையைச் சார்ந்தது என இலக்கண நூல்கள் கூறுகின்றன. மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவராற்றுப்படை குலாம் காதிறு நாவலர் எனும் இசுலாமியத் தமிழ்ப் புலவரால் இயற்றப்பட்ட நூல். பாண்டித்துரைத் தேவர் நிறுவிய நான்காம் தமிழ்ச் சங்கத்தில் பரிசு பெற்ற புலவர் ஒருவர், பரிசில் தேடிக்கொண்டிருக்கும் புலவரொருவரை மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு ஆற்றுப்படுத்துவதாய் இந் நூல் இயற்றப்பட்டுள்ளது. சங்ககாலத்தில் இயற்றப்பட்ட ஆற்றுப்படை நூல்களுள் வழி கூறுவோர் நடைப் பயணத்திற்கான வழியைக் கூறுவர். குலாம் காதிறு நாவலர் தான் வாழ்ந்த காலத்திற்கு ஏற்ப புகைவண்டியில் செல்லுமாறு கூறுகிறார். (இந்நூல் முன்னர் "புலவராற்றுப்படை மூலமும் உரையும் " என்ற தலைப்பில் நூல்தேட்டம் பதிவு 8749இல் இடம்பெற்றுள்ளது. இது தலைப்புத் திருத்தப் பதிவு. இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 474).

12A39

மந்திரக் கண்ணாடி: சிறுவர் கதை. உடுவை. எஸ்.தில்லை நடராஜா. கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202 செட்டியார் தெரு, 2வது பதிப்பு, ஏப்ரல் 2015, 1வது பதிப்பு ஜனவரி 1994. (கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202 செட்டியார் தெரு).

14 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 22x15 சமீ. ISBN: 978-955-9396-73-4.

1947இல் உடுப்பிட்டிக் கிராமத்தில் பிறந்த எஸ்.தில்லை நடராஜா அவர்கள் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் மாணவனாக இருந்தபோது, 1962இல் தனது 15வது வயதில் எழுதிய சிறுவர் கதை இதுவாகும். 1964இல் சுதந்திரன் வாரப் பத்திரிகையில் எட்டு வாரங்கள் தொடர்ந்து பிரசுரமானது. 1994இல் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் முதற்பதிப்பாக வெளியிடப்பட்டிருந்தது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2450)

12A40

மனக் கோலம். ஏபிரஹாம் ரி.கோவூர் (மூலம்). கொழும்பு: வீரகேசரி பிரசுரம், த.பெட்டி எண் 160, 1வது பதிப்பு, மே 1978. (கொழும்பு 14: Express Newspapers Ltd., 185, Grand Pass Road).

124 பக்கம், விலை: ரூபா 7.50, அளவு: 18.5x13.5 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி ஏபிரஹாம் ரீ.கோவூர் இலங்கையில் ஒரு சிறந்த மனோதத்துவ நிபுணர். பல நோயாளர்கள் இவரிடம் சிகிச்சைபெற்றுக் குணமாகியுள்ளனர். அவரது தொழில் அனுபவங்களைச் சுவையான 13 கதைகளில் இந்நூலில் வழங்கியிருக்கிறார். மூடத்தனங்களிலும் அறியாமையிலும் மூழ்கிக் கிடந்த எம்மவர்களை பகுத்தறிவுப் பாதையில் பயணிக்கத் தூண்டிய ஒருவராக இவர் இன்று நினைவுகூரப்படுகின்றார். ஆவியுலகத் தொடர்புகள் போன்றவற்றின் பின்னணியில் மறைந்துள்ள போலித்தனங்களை இவரது உண்மைக் கதைகள் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. ஆவியே பேசியது, நடுநிசியில் வந்த தீப்பந்தம், மர்ம மாளிகையில் நடந்தவை, பழிவாங்க வந்த கணவனின் ஆவி, அம்பிகைக்கு நடந்ததென்ன, சகோதரர்களைப் பிடித்த ஆவி, தேவதூதர்கள் அழைத்துச் சென்றனரா?, பித்த மயக்கமா ஆரூடமா? இறந்த மனைவியருடன் பேசியவர்கள், பல மொழி தெரிந்த டாக்டர், பின்னால் துரத்திவந்த கர்ப்பிணியின் பேய், அகோர பத்ரகாளி, அழகி லதாவின் கதை ஆகிய 13 உண்மைக் கதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4629)

12A41

முன்னேஸ்வர வரலாறு. பா.சிவராமகிருஷ்ண சர்மா. கொழும்பு 6: ஆலயம் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு, 2016, 1வது பதிப்பு, 1968. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xiv, 90 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-0881-20-8.

முன்னேஸ்வரர் கோவிலின் வரலாற்றை விபரிக்கும் இந்நூலில் கோயிலின் சூழலும் எல்லைகளும், இதிகாச, புராண வரலாறுகளும் கர்ணபரம்பரைக் கதைகளும், சரித்திரப் பின்னணி, முன்னேஸ்வரக் கோவிலின் சிறப்பு அம்சங்கள், பூஜைகளும் விழாக்களும், உற்சவங்கள், முன்னேஸ்வரம் கோவிலில் நடைபெற்ற முக்கிய விழாக்கள், மகா கும்பாபிஷேகம், கோவிலும் சமூகமும், கோவிலும் இசையும் ஆகிய விடயங்கள் தனித்தலைப்புகளில் விபரிக்கப்பட்டுள்ளன. இந்நூலுக்கான அணிந்துரையை ஸ்ரீமுன்னேஸ்வர தேவஸ்தான ஆதீன பரிபாலனகர்த்தா சி.பாலசுப்ரமணியக் குருக்களும், சிறப்புப் பாயிரத்தை கி.வா.ஜகந்நாதனும், ஆசியுரையை கா.கைலாசநாதக் குருக்களும் வழங்கியுள்ளனர். நூலின் பின்னிணைப்புகளாக முன்னேஸ்வரம் கோவிலில் உள்ள கல்வெட்டின் மொழிபெயர்ப்பும் இடம்பெற்றுள்ளன. (1968இல் ஸ்ரீ முன்னேஸ்வர வரலாறு என்ற தலைப்பில் வெளியாகிய முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5222)

12A42

மெய்யியல்: ஓர் அறிமுகம் 1. கனகசபை சிவானந்தமூர்த்தி, கந்தசாமி அன்ரன் டயஸ். யாழ்ப்பாணம்: அம்பாள் வெளியீட்டகம், புத்தூர், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1998. (கொழும்பு 6: அட்மிரல் கிராப்பிக்ஸ், 403 1/1, காலி வீதி).

(8), 213 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 22x14 சமீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் மெய்யியலை ஒரு பாடமாகப் பயிலும் உள்வாரி, வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்களின் ஒரு பகுதித் தேவையினையும், அளவையியலைப் பயிலும் மாணவர்களது சில தேவைகளையும் நிறைவுசெய்கிறது. மெய்யியல் ஓர் அறிமுகம் (மேலைத்தேய நோக்கில் மெய்யியல், இந்திய நோக்கில் மெய்யியல்), ஐயவாதம், இருப்புவாதம், தருக்கப் புலனறிவாதமும் அதன் பின்னிணைவுகளும், சமகால இந்திய மெய்யியல் ஒரு நோக்கு, மெய்யியல் நோக்கில் அழகியல், பன்முகப் படுத்தப்பட்ட தலைமைத்துவ அமைப்புகள்-சமூக உளவியல் நோக்கு, போதைவஸ்து ஒரு சமூக உளவியல் நோக்கு, தண்டனையும் தண்டனை பற்றிய கொள்கைகளும், அளவையியலில் வாதம், வென் வரைபடமும் வகுப்பளவையியலும் ஆகிய 11 தலைப்புகளில் இந்நூல் விரிந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21090. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் **6035**).

12A43

மோக வாசல். எஸ்.ரஞ்சகுமார். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, 3வது பதிப்பு, மே 2006, 2வது பதிப்பு, ஏப்ரல் 1995, 1வது பதிப்பு, 1989. (கொழும்பு 13: ஈகுவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பெட்டா வீதி).

viii, 151 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x12.5 சமீ.

சுருக்கும் ஊஞ்சலும், கபரக்கொயாக்கள், காலம் உனக்கொரு பாட்டெழுதும், கோசலை, அரசி, கோளறு பதிகம், மோகவாசல் ஆகிய ஏழு சிறுகதைகளின் தொகுப்பு. பேராசிரியர் சிவத்தம்பியின் பின்னுரையுடன் கூடியது. இந்நூல் கொழும்பு மீரா பதிப்பகத்தின் 51ஆவது வெளியீடாக வெளிவந்துள்ளது. ரஞ்சகுமார் இலங்கையின் முக்கியமான சிறுகதையாசிரியர்களுள் ஒருவர். 1978 அளவில் எழுதத் தொடங்கி அலை, புதுசு, திசை, சரிநிகர், வீரகேசரி ஆகிய இதழ்களில் பல்வேறு புனைபெயர்களில் சிறுகதைகளையும் விமர்சனங்களையும் எழுதியுள்ளார். இவரது முதற் சிறுகதைத் தொகுதியான மோகவாசல் 1989 இல் முதலில் வெளியானது. அதன் மூன்றாவது பதிப்பு இதுவாகும். யாழ்ப்பாணம், கரவெட்டியில் பிறந்த ரஞ்சகுமார், புலம்பெயர்ந்து ஆத்திரேலியா, சிட்னி நகரில் வாழ்ந்து வருகிறார். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 598, 4A18)

12A44

வையாபாடல். வையாபுரி ஐயர் (மூலம்), க.செ.நடராசா (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச்சங்கம். 2வது பதிப்பு, 2001, 1வது பதிப்பு, 1980. (கொழும்பு 12: சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட், 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை).

87 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலத்தில் செகராசசேகரன் அவைக்களப் புலவராக விளங்கிய வையாபுரி ஐயர் என்பவரால் யாக்கப்பட்டதே வையாபாடலாகும். இலங்கை மண்டலக் கதை என்பது இந்நூலின் இயற்பெயராகும். 105 செய்யுள்களைக் கொண்ட இந்நூல் கூறும் பொருளை விரித்து விளக்குவது யாழ்ப்பாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைபவமாலை என்னும் நூலாகும். இதன் பல்வேறு பிரதிகளைக் தேடிப்பெற்று ஒப்பு நோக்கி ஆராய்ந்து சிறந்ததோர் ஆய்வு நூலை அளித்துள்ளார் நாவற்குழியூர் நடராசன் என அனைவரும் அழைக்கும் கலாநிதி. க. செ. நடராசா அவர்கள். முகவுரை, முன்னுரை, பதிப்புரை, வையாபாடல் ஆய்வுரை, நூலாசிரியர் வரலாறு, நூலாசிரியர் காலம், இடைச்செருகல், நூற்பெயர், நூலின் நோக்கம், நூற் பொருள், வன்னியர் குடியேற்றத்தின் காலம், வன்னியரின் ஆரம்ப வரலாறு, இலங்கையில் வன்னியர், அடங்காப்பதியில் வாழ்ந்த ஆதிக்குடிகள், அடங்காப்பதிவாழ் ஆதிக்குடிகளை வன்னியர் அடக்கியமை, இந்நூல் கூறும் ஏனைய வன்னியர், அசுரரால் அழிந்த வன்னியர், வன்னியர் பற்றிய பிறநூற் குறிப்புக்கள், வரலாற்றுத் தடுமாற்றங்கள், பரராசசேகரன் வரலாறு, வன்னிநாட்டுத் தெய்வங்கள், கோணேசர் கல்வெட்டு நூல், கல்வெட்டுச் சான்று, குறியீட்டு விளக்கம், வையா பாடல், சொற்றொகை வகுப்பு, மக்கட் பெயர், குழுஉப் பெயர், இடப்பெயர், பொதுப் பெயர், தெய்வப் பெயர் என விரிவான அத்தியாயங்களிநூடாக இவ்வாய்வு விரிகின்றது. பாடபேதங்கள் அனைத்தும் நூலின் அடிக்குறிப்பில் விளக்கமாகக் கொடுக்கப்படுகின்றன. நூலின் ஆராய்ச்சி முன்னுரையானது ஈழத்தமிழர் வரலாற்றைப்பற்றி அறிய விரும்பும் அனைவருக்கும் ஒரு கருவூலமாகப் பயன்படும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23981. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 998)

12A45

ஜாதக பாஸ்கரன். வி.சபாபதி ஐயர். யாழ்ப்பாணம்: ஆர்.வெங்கடேச ஐயர், சோதிடப்பிரகாச அச்சகம், கொக்குவில், 5வது பதிப்பு, சித்திரை 1987, 4வது பதிப்பு, ஆனி 1955, 1வது பதிப்பு, 1909.(யாழ்ப்பாணம்: சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில்).

xvi, 240 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீமத் வி.சபாபதி ஐயர் அவர்களால் பல சோதிட நூல்களின் துணைகொண்டும் தனது அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டும் எழுதப்பட்டு கீலக வருடத்தில் (1909) முதற் பதிப்பினைக் கண்ட நூல் இது. இதன் இரண்டாம் பதிப்பு அவரது புத்திரர் வீ.எஸ்.ஸ்ரீபதி ஐயரினால் 1916ம் ஆண்டும், 3ம் பதிப்பு 1934ம் ஆண்டும் வெளியிடப்பட்டன. ஸ்ரீபதி ஐயர் சந்நியாச ஆச்சிரமம் பெற்று ஸ்ரீ சுமாமி ஸ்த்யானந்த ஸரஸ்வதிஜீ ஆகி விக்கிரம வருடத்தில் (1940இல்) மகாசமாதி அடைந்துவிட்டதால், அவரது புத்திரர் ஸ்ரீ ராதாகிருஷ்ணன் அவர்களிடம் பதிப்புரிமையைப் பெற்று நான்காம் பதிப்பு 1955இல் வெளிவந்தது. சோதிடத்தில் பொதுவாக அறியவேண்டியவைகளாகிய ஒவ்வொருவருடைய ஜன்ம நட்சத்திரம், உதயலக்கினம், சந்திரலக்கினம், ஆதியாயுள்ளவைகளின் பலன்களும், ஒன்பது கிரகங்களும் பன்னிரண்டு இராசிகள் தோறும் சஞ்சரித்தலால் வரும் நூற்றெட்டு விதமாகும் ஸ்தான பலன்களும், மகாதெசை ஒன்பதாலும் வரும் எண்பத்தொரு புத்திகளின் பலன்களும், காலசக்கர புத்திகளின் பேதமான இருநூற்றுப் பதினாறுவித புத்திகளின் பலன்களும், அஷ்டகவர்க்க பலன்களும், கிரகநிலைகளைக்கொண்டு அறியும் இராசயோக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய யோகங்களின் பலன்களும், மேலும் விசேஷ பலன்களை அறிவதற்கு வேண்டிய கிரகங்களின் சமயநிலை, அங்கநிலை, கிரியாகமனம், அவஸ்தை, கதி முதலியவைகளையும் இன்னோரன்ன ஜாதக கணிப்பீட்டு முறைகளையும் இந் நூல் விபரமாகத் தருகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23430). (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5081)

12A46

ஜாதகக் கதைகள்: சிறுவர்க்கான பிறமொழிக் கதைகள். த.கனகரத்தினம். சென்னை: 600098: தாமரை பப்ளிக்கேஷன்ஸ், 41 B, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (சென்னை: NCBH Computers).

viii, 52 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21.5x18.5 சமீ.

பன்மொழிப்புலவர் மயிலங்கூடல் த.கனகரத்தினம் அவர்கள் சிறுவர்களுக்காக மொழிபெயர்த்த சாதகக் கதைகள் இவை. அனைத்தையும் விலங்குகளோடு சம்பந்தப்பட்ட கதைகளாகத் தொகுத்திருக்கிறார். வயதுசென்றவர்க்கு மரியாதை, பாசாங்கு, கீழ்ப்படிவின் அறம், எங்கே அந்த இரத்தினக்கல், நன்றிக் கடன், ஒற்றமையின்மையின் தீமை, பேராசை பெருநட்டம், ஒற்றுமையின் பலம், குசஜாதகக் கதை, சுருங்கை வழி ஆகிய கதைகள் இதில் அடங்கியுள்ளன. ஜாதகக் கதைகள் பற்றி அவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையொன்றும் 11ஆவது அத்தியாயத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்நூல் "சிறுவர்க்காய பிறமொழிக் கதைகள்: ஜாதகக் கதைகள்" என்ற தலைப்பில் இலங்கையில் கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடாக செப்டெம்பர் 1987இல் முன்னர் வெளியிடப்பட்டுள்ளது. பன்மொழிப் புலவர் மயிலங்கூடல் த. கனகரத்தினம் இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மொழி வல்லுநர்களுள் குறிப்பிடத் தக்கவர். தமிழ், சிங்களம், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம், இந்தி, மலையாளம் ஆகிய மொழிகளில் புலமை பெற்ற இவர் எழுதிய "செந்தமிழ் வளம் பெற வழிகள்" எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2009 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் மொழியியல் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது. கல்வி வெளியீட்டுத் திணைக் களத்தில் பாடநூல் எழுத்தாளராகவும், பதிப்பாசிரியராகவும் பணியாற்றியவர். பண்டிதமணியின் மாணாக்கரான இவர் தமிழாசிரியர் பட்டமும் பெற்றவர். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 10440)

12A47

ஹிந்துஸ்தானி, மேற்கத்திய செந்நெறி இசைமரபுகள்: ஓர் அறிமுகம். மீரா வில்லவராயர். மொரட்டுவை: மீரா வில்லவராயர், 21B 2/1 சொய்சாபுர மாடித்தொடர், 3வது (திருத்திய) பதிப்பு, 2011, 2வது பதிப்பு, செப்டெம்பர் 2002, 1வது பதிப்பு, 1997. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

112 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 175. அளவு: 21x14.5 சமீ. (ISBN: 955 97848 0 3).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வானொலியில் பாடகராக விளங்கும் மீரா வில்லவராயர், தேசிய கல்வி நிறுவகத்தின் கர்நாடக சங்கீதத்துறையில் பிரதம செயற்றிட்ட அதிகாரியாகப் பணியாற்றியவர். இந்நூல் 1997இல் ஹிந்துஸ்தானி, மேற்கத்திய இசை-ஓர் அறிமுகம் என்ற பெயரில் வெளியிடப்பட்டது. இந்தத் திருத்திய பதிப்பு இந்திய சங்கீதம், ஹிந்துஸ்தானி இசையின் இராகங்கள், உருப்படி வகைகள், வாத்தியக் கருவிகள், வாக்கேயகாரர், கர்நாடக ஹிந்துஸ்தானி சங்கீதங்களுக்கிடையிலான ஒற்றுமை வேற்றுமை, ஹிந்துஸ்தானி சங்கீத லிபி முறை, கர்நாடக சங்கீதத்தில் ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் செல்வாக்கு, ஐரோப்பிய சங்கீத லிபி முறை, வாத்தியக் கருவிகள், வாக்கேயகாரர், மேலைத்தேய இசையில் வழங்கும் பதவிளக்கம், ஐரோப்பிய-கர்நாடக சங்கீதங்கள் ஓர் ஒப்பு நோக்கு ஆகிய பல விடயங்களை உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 68797. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1324)

நூல்தேட்டத்தின் பன்னிரண்டாம் தொகுதி முற்றிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு வழிகாட்டி

அக்கினிக் குஞ்சு. 11568

அகநானூறு வசனம்: களிற்றியானை நிரை. 11874

அகநானூறு வசனம்: நித்திலக்கோவை. 11875

அகனின் விழிப்புக் கதைகள். 11764

அக்ஷர கணிதம்: ஆறாம் ஏழாம் எட்டாம் வகுப்புகளுக்கு ஏற்றது. 11413

அங்கஹாரம். 11816

அசேதன இரசாயன வினாத் தொகுப்பு-1 (பண்பறி அசேதன இரசாயனவியல்). 11421

அடிகளார் நினைவாலய மலர்: 26.06.1999. 11925

அடிப்படை பயிற்சிகள்: பொது இரசாயனம். 11422

அணியிலக்கணம். 11397

அணுக்கட்டமைப்பும் ஆவர்த்தன இயல்புகளும். 11423

அது எங்கட காலம்: நனவிடைதோய்தல் தொகுப்பு. 11275

அநாதை எனப்படுவோன். 11818

அப்பால் ஒரு நிலம். 11817

அபிராமி நவநீதம். 11183

அம்பிகையின் அருள்வடிவங்கள். 11114

அமரர் திருமதி புவனேஸ்வரி லோகநாதன் அவர்களின் சிவபதப்பேறு குறித்த 31ம் நாள் நினைவுமலர்.(வீட்டுத் தோட்டமும் சுற்றாடல் பாதுகாப்பும்). 11449

அமுதம்: அமுதுவின் கவிதைகள் (முதலாம் பகுதி). 11569

அமுதுக் கலசம். 11570

அமைதிப் பூங்கா: சிறுவர் நாடகங்கள். 11501

அயிசியலிசின் நான்கு நாடகங்கள்: முதலாவது தொகுதி. 11736

அயிசியலிசின் முத்தொடர் நாடகங்கள்: பகுதி இரண்டு. 11737

அரச நிதி நடைமுறைகள்: பொது நிதி முகாமை. 11464

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம். 11456

அரசியல் விஞ்ஞானம்: கட்டமைப்பு வினாக்களும் விடைக் குறிப்புகளும். 11296

அரசியல் விஞ்ஞானம்: பல்தேர்வு வினா-விடைகள். 11297

அரியவும் பெரியவும்: பெரியபுராணச் சிந்தனைகள்: 1ம் பாகம். 11115

அரிஸ்றபானின் நாடகங்கள்: பகுதி ஒன்று. 11738

அருணந்தி சிவாச்சாரியாரின் சிவஞான சித்தியார் (சுபக்கம்). 11082

அருள்மிகு அன்னை துர்க்காதேவி வழிபாடு. 11116

அருள்மிகு பறாளை ஈசுரவிநாயகர் திருக்கோவில் திருக்குடமுழுக்கு மலர். 11170

அருளாளர்கள் அறுபத்து மூவர்: சிவனடியார்கள் அருள் வரலாறு. 11901

அல்லது யேசுவில் அறையப்பட்ட சிலுவை. 11571

அல்வாய் அரசடி விநாயகர் பக்திப் பாடல்கள். 11184

அலை அழித்த தமிழ். 11819

அவள் பெய்கிறாள்: மொழிபெயர்ப்பு மலையாளச் சிறுகதைகள். 11810

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தும் நிஜங்கள்: சிறுகதைத் தொகுப்பு. 11765
அளவையியல்-குறியீட்டு அளவையியல் பாகம் 3. 11061
அளவையியல்-சிறுகுறிப்பும் உய்த்தறிவு அளவையியலும் தற்கால அணுகு முறையும். 11062
அளவையியல்-போலிகள். 11063
அளவையியலும் விஞ்ஞானமுறையும். 11064
அளவையியலும் விஞ்ஞானமுறையும்-1. 11065
அளவையியலும் விஞ்ஞான முறையும்-2: 11066
அளவையியலும் விஞ்ஞான முறையும்: பகுதி 2. 12A01
அளவையியலும் விஞ்ஞானமுறையும்: பகுதி 2: பின்னிணைப்பு. 11067
அற்றைத் திங்கள். 11572
அறிவுத்திற அளவெண். 12A02
அறிவுரை மாலை. 11533
அறுபதில் அறுபது சக எண்பதில். 11076
அறுபது சில்லரைக் கோர்வை. 11185
அறுவடை: குறுங்காவியம். 11744
அன்றாட வாழ்வில் அனைவருக்கும் உளவியல் - முதலாம் பாகம். 11045
அன்ன யாவினும்: கவிதைகள். 11573
அனந்தியின் டயறி. 11820
அனலைதீவு: வாழ்வும் வளமும் வரலாற்று நூல். 11974
அனுமன் கட்டிய கோவில்: இரம்பொடை ஸ்ரீ பக்த அனுமன் கோவில். 11148
அனேக வைத்யர்கள் கையாண்டுவரும் இரணவைத்யம். 11995
அஜந்தா. 11852
ஆங்கிலம் மூலம் தமிழ் 11401
ஆசிரிய முகாமைத்துவம். 12A03
ஆசிரிய வாண்மைத் தேர்ச்சி. 11338
ஆசிரியம்: தூண்டி -1, துலங்கல் -1: 1995. 11355
ஆசிரியர் அதிகாரக் கோவை (தமிழ்): சுதந்திரத்திற்கு முற்பட்ட காலம். 11011
ஆசிரியர் கல்வியும் மாணவர் திறன்களும். 11339
ஆசிரியர் கைந்நூல்: ஆண்டு 4: 1987. 11340
ஆணுக்குப் பெண் அடிமையா? ஒரு தேடல். 11574
ஆதாமின் அப்பிள். 11575
ஆதிகளின் புதைகுழிகளிலிருந்து. 11576
ஆதிரை: நாவல். 11821
ஆய்வு முறையியல். 12A04
ஆயன்னையம்மாதாய்: சிறுகதைகள். 11766
ஆராய்ச்சிமணி: நீதி தவறாத நிருபன். 11526
ஆராரோ கண்ணா: சிறுவர் பாடல்கள். 11493
ஆரியர் ஆதிவரலாறும் பண்பாடும். 12A05
ஆரையம்பதி மண்: உள்ளதும் உரியதும்-வரலாற்று நூல். 11975
ஆரோக்கிய உடலும் உணவும். 11455
ஆவணஞானி அமரர் குரும்பசிட்டி இரா. கனகரட்ணம் நினைவுப் பகிர்வு. 11919
ஆழ்மனதின் அனுபவங்கள். 11083
ஆளுமைக் கொள்கைகள். 11046
ஆறாத காயங்கள்: சிறுகதைத் தொகுப்பு. 11767
ஆறிப்போன காயங்களின் வலி. 11921
ஆறு சிறுகதைகள் ஒரு பகுப்பாய்வு: ஈழக்கவி கட்டுரைகள். 11879
ஆறுமுக நாவலர் கவித்திரட்டு. 11577
ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு முதற் பாகம். 12A06
ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு இரண்டாம் பாகம். 12A07
ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு முதற் பாகமும் இரண்டாம் பாகமும். 12A08
ஆன்மீக மங்கலம் அறுபது. 11371
ஆன்மீகமும் விழுமியங்களும். 11855
ஆஸ்துமா என்றால் என்ன?. 11438
இசை நாடக கூத்துப் பாடல்கள். 11378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைப் பாமாலை. 11578
இணுவில் அரசோலை கற்பனை விநாயகர் திருப்பொன்னூஞ்சல். 11186
இணுவில் சிவகாமியம்மன் பேரில் பாடிய இடர்களை பதிகமும் திரு வருக்க மாலையும். 11187
இணுவில் திருவருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் 2009. 11171
இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம்: ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி அன்னலட்சுமி சின்னராசா ஞாபகார்த்த படிப்பகம் கட்டட திறப்புவிழா சிறப்பு மலர் 2014. 11015
இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம்: திரு- திருமதி இராசையா-இராசம்மா ஞாபகார்த்த தகவல் தொழில்நுட்ப மையம் கட்டட திறப்புவிழா சிறப்பு மலர் 24-08-2013. 11016
இணுவை சிவகாமியம்மை திருச்சப்பற வெள்ளோட்ட விழா சிறப்புமலர். 11172
இணுவையம்பதி அருள்மிகு சிவகாமியம்மை திருவிரட்டைமணிமாலையும் திருப்பள்ளியெழுச்சியும். 11188
இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்: பதிவும் பகிர்வும். 11937
இந்த காலைப் பொழுது (கவிதைகள்). 11579
இந்து சமய சாரம்: சிறுவர்க்கான சமயக் கட்டுரைகள். 11141
இந்து தருமம் 1959-1960. 11168
இந்து தருமம் 1990-1991. 11169
இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி இரண்டு : உ-ஔ. 11117
இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி மூன்று: க. 11118
இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி நான்கு: கா-கௌ. 11119
இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி ஐந்து: ச,சா. 11120
இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி ஆறு: சி-சௌ. 11121
இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி ஏழு: ஞா-தி. 11122
இமைப்பொழுது. 11580
இரகுவம்மிச மூலமும் புத்துரையும். 11530
இரகுவம்மிசம்: அயனெழுச்சிப் படலம் மூலமும் உரையும். 11534
இரசாயன அவத்தைச் சமநிலை: ஏ.எல். புதிய பாடத்திட்டம் 2013. 11424
இரசாயனக் கணிப்புகள். 11425
இரசாயனம். 11426
இரண்டாவது சுனாமி. 11276
இராமன் கதை. 11510
இராமோதந்தம். 11535
இருள் மிதக்கும் பொய்கை. 11581
இல்லற மங்கலம்: பூர்வக் கிரியைகள். 11372
இலக்கிய மஞ்சரி : ஆறாம் புத்தகம். 11536
இலக்கியச் சிமிழ். 11856
இலக்கியத்தில் மருத்துவக் கருத்துக்கள். 11857
இலங்கை: இது பகைமறப்பு காலம். 11951
இலங்கை இந்தியர் வரலாறு. 12A09
இலங்கை சமூக மீட்டெழுச்சிக்கான கட்டமைப்பு. 11337
இலங்கை சினிமாவின் ஆரம்பம். 11476
இலங்கை முஸ்லீம்களால் எதிர்கொள்ளப் படும் சவால்கள். 11965
இலங்கைக் கோயில் திருப்பதிகங்கள். 11189
இலங்கைத் தமிழர் வரலாறு: கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும் கி.மு.250-கிபி.300. 11966
இலங்கைத் தமிழரின் வரலாற்றுச் சுவடுகள்.11967
இலங்கையில் இனமுரண்பாடும் அதிகாரப் பரவலாக்கமும். 11952

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் சிறுவர் பராமரிப்பும் அபிவிருத்தியும். 11335
இலங்கையில் தமிழ் மொழி உரிமைகள். 11300
இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைகள் சஞ்சிகைகள். 12A10
இலங்கையில் நாடற்றவர் வீடற்றவர் பிரச்சனை. 11303
இலங்கையில் வரிவிதிப்பு: கோட்பாடும் நடைமுறையும். 11330
இலங்கையின் கிரிக்கட் வரலாறும் புத்துயிர்ப்பும். 11481
இலங்கையின் பின்காலனித்துவ அரசு. 11298
இளசுகளின் உலகம்: கவிதைகள். 11582
இளம் நினைவுகள். 11583
இறந்தபின் எங்கள் நிலை: வினா-விடை. 11049
இன்னும் விடியவில்லை: கவிதைத் தொகுப்பு. 11584
இன ஐக்கியம்: கவிதைகள். 11726
இனப்பெருக்க சுகாதாரம்: பொதுவான தகவல்கள். 11445
இனவெறித்தீ சுட்டெரித்த பொக்கிஷம். 11017
இஸ்லாமியச் சட்டவியல்: ஒரு சர்வதேசப் பார்வை. 11323
ஈமானியப் பேரொளிகள். 11263
ஈழத் தமிழர் மரபான இசையும் நடனமும். 11379
ஈழத் தமிழரும் சிங்களவர்களும். 11968
ஈழத்துக் கருகம்பனையூர் அருள்மிகு நாக இராச இராசேஸ்வரி சதகம். 11190
ஈழத்துச் செட்டிபாளையம் இ.வ.கணபதிப் பிள்ளைப் புலவரின் நூற்றிரட்டு முதலாம் பகுதி. 11191
ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம். 12A11
ஈழநாடு: ஒரு ஆலமரத்தின் கதை. 11031
உக்ரேனிய அறிஞர் இவன் ஃபிராங்கோ கவிதைகள். 11727
உக்ரேனிய மகாகவி தராஸ் ஷெவ்சேன்கோ கவிதைகள். 11728
உங்கள் வாழ்நாள் பலனை நீங்களே அறிந்துகொள்ளுங்கள். 11101
உடல்: உலகத் தமிழ் நாடகவிழா 2016 சிறப்பிதழ். 11470
உடைந்த மழையில் நனைந்த பட்டாம்பூச்சி. 11585
உத்தியோகபூர்வ வொலிபோல் விதி முறைகள். 11482
உம்பா (சிறுவர் கதை). 11511
உமர்கையாமின் ருபாய்யாத். 11761
உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த திருவருட்பயன் 11084
உய்த்தறி மலர் 1. 11356
உய்த்தறி மலர் 2. 11357
உயர்தர மாணவர் பௌதிகவியல் வழிகாட்டி. 11419
உயர்தரக் கணக்கியல். 11461
உயிர் வலித்த கணம். 11586
உயிரணை: நாவல். 11822
உரிமைக்கும் உயர்வுக்கும்: பாராளுமன்ற உரைகள் 2010-2011. 11953
உலகம் பலவிதம்: ம.வே.திருஞானசம்பந்த பிள்ளை 1885-1955. 11886
உள்ளூர் ஆளுகையின்புதிய பரிமாணங்களும் வாய்ப்புக்களும். 11325
உளம் மகிழ: உள சமூக கட்டுரைத் தொகுப்பு. 11058
உன்னால் முடியும்: கவிதைத்தொகுதி. 11587
ஊர் ஒன்றின் பேரறிவோம். 11976
ஊர்ப்பெயர் உட்பொருள் விளக்கம். 11588
எங்கள் கதிர்காமம். 11192
எண் சோதிட மறுமலர்ச்சி. 11102
83, இரத்த ஜூலை: இலங்கை இரத்த ஜூலையின் வரலாற்று பின்னணி. 11954
எதிரொலியும் மறையந்தாதியும். 11264

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தக் கிழமையில் பிறந்தீர்கள்? என்ன அதிர்ஷ்டம் பெறுவீர்கள்? 11103
எம்.ஜி.ஆர். கொலை வழக்கு: சிறுகதைகள். 11768
எரிந்த சிறகுகள் (கவிதைகள்). 11589
எல்லம் எங்கள் தாயகம்: இளைஞர் இலக்கியம். 11745
எழினி(திருமண நினைவு வெளியீடு). 11746
என் கவிதைக்கு மனசென்று பெயர். 11590
என் நோக்கில் இஸ்லாம். 11265
என் பாட்டில் நான்: கோப்பாய் சிவம் கவிதைகளும் பாடல்களும். 11591
என் பாடல் (கவிதைகள்). 11592
எஸ்-பி தொகுப்பு இரசாயனம் (S-P Block Chemistry). 11427
ஏகலைவன்: தென்மோடிக் கூத்து. 11380
ஏகாதசிப் புராணம். 11193
ஏதனம் (நாவல்). 11823
ஏவாளின் புன்னகை: கவிதைகள். 11593
ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி பேரில் திருவூஞ்சல். 11194
ஏழு கடல் கன்னிகள்: சிறுகதைகள். 11769
ஏறுவெயில் (கவிதைத் தொகுதி). 11594
ஏனிந்த தேவாசுர யுத்தம்-கவிதைகள். 11595
ஒரு பாவையின் வீடு. 11739
ஒரு வாசகனின் வாசகங்கள். 11887
ஒளிக்கீற்று: கவிதைகள். 11596
ஓலை: கவிதைத் தொகுப்பு. 11597
ஓவிய மாமணி: வீ.கே (வி.கனகலிங்கம்). 11933
ஔவையின் மனுதத்துவம். 11077
க.பொ.த.(உ/த) மாணவர்களுக்கான சடப் பொருளியல் சுருக்கக் குறிப்பு: செய்முறையுடன் கடந்தகால வினாக்களும். 11420
க.பொ.த.உயர்தரம்: இணைந்த கணிதம் (தூய கணிதப் பகுதி) அட்சர கணிதம்-பகுதி 2. 11414
க.பொ.த.உயர்தரம்: பிரயோக கணிதம்: இயக்கவியல் பகுதி 1. 11418
கங்கை பொங்குது: அருட்கவிதை முத்துக் குவியல். 11195
கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளிச் செய்த கந்தபுராணம்: யுத்த காண்டம் சூரபதுமன் வதைப்படலம் 11196
கச்சியப்ப சுவாமிகள் அருளிச்செய்த கந்த புராணம் யுத்த காண்டம்: சூரபன்மன் வதைப்படலம். 11197
கட்டுடைக்கும் பெண்: பெண் படைப்புகளின் தொகுப்பு. 11290
கட்டுரைக் களஞ்சியம். 11858
கட்டுரைக் கோவை: இரண்டாம் பாகம். 11859
கடல் கடந்த தமிழும் தமிழரும். 11969
கடல் கடந்த நாட்கள்: பயண அனுபவப் பதிவுகள். 11897
கடல் தேடும் நதி: கவிதைத் தொகுதி. 11598
கடலோரக் கிராமம் (நாவல்). 11824
கடவுளின் கைபேசி எண். 11770
கடைசிப் பயணச் சீட்டும் வேறு கதைகளும். 11508
கண்ணகி வெண்பா. 11599
கணக்கியல் பங்குடைமைப் பயிற்சிகள்: க.பொ.த. உயர்தரம். 11462
கணக்குப் பதிவியல். 11463
கணிதம் ஆண்டு 9-பகுதி 1. 11415
கணிதம் 9-1. 11416
கணிதம் 10-2. 11417
கணினி வழிகாட்டி: 1. 11006
கணினி வழிகாட்டி: 2. 11007
கணினி வழிகாட்டி: 3. 11008
கணினி வழிகாட்டி: 4. 11009
கணேசையர் நினைவு மலர். 11938
கத்தோலிக்கமும் கவிஞரும்: ஞானக் களஞ்சியம் 1. 11110
கதம்பக் கட்டுரைகள்: மொழி இலக்கியச் சிந்தனைகள். 11860

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமத்து கந்தன் பாமாலை. 11198
கதிர்காமப் பிரபந்தங்கள். 11199
கந்தபுராண வசனகாவியம். 11123
கந்தபுராணக் கவியமுதம் 11200
கந்தபுராணச் சிந்தனைகள். 11201
கந்தபுராணச் சிந்தனைகள். 11202
கந்தபுராணம்: வள்ளியம்மை திருமணப் படலம். 11203
கந்தர் அநுபூதி. 11204
கந்தர் சஷ்டி கவசம். 11205
கந்தர் மாவை வெண்பா. 11206
கந்தரநுபூதி மூலமும் உரையும். 11207
கம்பர் கவிதைக் கோவை: முதலாம் பாகம். 11537
கம்பர் கவிதைக் கோவை: மூன்றாம் பாகம் (யுத்தகாண்டம்). 11538
கம்பராமாயணம் பாலகாண்டம்: மிதிலைக் காட்சிப் படலம். 11539
கம்பராமாயணம் யுத்த காண்டம் கும்ப கர்ணன் வதைப்படலம் செய்யுள் 1-171. 11540
கம்பராமாயணம் யுத்தகாண்டம் கும்ப கருணன் வதைப்படலம் செய்யுள் 1-171. 11541
கம்பராமாயணம் யுத்தகாண்டம் கும்பகருணன் வதைப்படலம் செய்யுள் 1-171. 11542
கரம்பொன் தனிநாயகம். 11931
கருத்துரைக் கோவை. 11861
கரும்பின் ஓலை. 11402
கரை எழில் 2012. 11558
கரை எழில் 2013. 11559
கரை எழில் 2016. 11560
கல்வி, அறிவியல்சார் வரலாற்றுப் பதிவுகள். 11001
கல்வி உலகினருக்கான தகவல் களஞ்சியம். 11341
கல்விச் சமூகவியலும் நவீன செல்நெறிகளும். 11342
கல்வியியல் கட்டுரைகள். 11343
கலவங்கட்டிகள்: நாவல். 11825
கலாசுரபி: வித்தக விநாயகர் ஆலய நூதன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகச் சிறப்பு மலர். 11173
கவிதாசன் பதில்கள். 11600
கவிதை மலர்கள். 11601
கவிதைக் கன்னி (யாழ்ப்பாணன் கவிதைகள்) 11602
கவிதைச் சரம். 11603
கவிதையும் கவிஞனும்: கட்டுரைகளும் கவிதைகளும். 11604
கவியின் காதல்: நாடகங்கள். 11729
கவின் தமிழ் 2012: வடமாகாண தமிழ்மொழித் தினச் சிறப்பு மலர். 11561
கற்போத மஞ்சரி. 11124
கற்றலின் அளவீடும் மதிப்பீடும். 11344
கன்னங்குடா உழுதொழிற் பள்ளு (பள்ளுப் பிரபந்தம்). 11381
கன்னி மொட்டுக்கள்: கவிதைகளின் தொகுப்பு. 11605
கனகலிங்கம் மாமாவும் பரிமளா ஆன்ரியும்: கவிதைகளின் சங்கமம். 11606
கனகைவிநாயகர் பிள்ளைத்தமிழ் (மூலமும் உரையும்). 11208
கனவுக் கதவுகள்: கவித்துளிகள். 11607
கனவுங் கவிதையும்: தனிப்பாடற் றொகுதி. 11608
காகித ஓடம். 11826
காச நோய்: பிரயோக மனித உரிமை அணுகுதல். 11439
காசி ஆனந்தன் கவிதைகள். 12A12
காசி நூல்: அமரர் திரு.தம்பிப்பிள்ளை காசிநாதன் அவர்களின் நினைவுமலர் 21.01.2017. 11917
காத்திருத்தல்(கவிதைகள்). 12A13
காதல் நெஞ்சம். 12A14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலியுடன் பேசுதல்: காதல் கவிதைகளின் சங்கமம். 11609
காமிகாகமம் கூறும் அக்கினி வழிபாடு: 11085
கார்வான் கீதம். 11610
காரை ஒளி: காரைநகர் சிவன்கோவில் (ஈழத்துச் சிதம்பரம்) மகா கும்பாபிஷேக மலர் 1998. 11174
காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் 1990. 11175
காரைநகர் மணற்காடு அருள்மிகு கும்ப நாயகி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்: 2ம் நாள் உற்சவ விசேட மலர் 2003. 11176
காரைநகர் மான்மியம். 11977
காலத்தை வென்ற காவிய மகளிர். 11876
காலநதியின் கற்குழிவு.11771
காலம் தந்த வலிகள் 11611
காலியாக்கப்பட்ட நாற்காலியில் அமர்ந் திருக்கும் புலி: 11041
காவி நரகம். 11772
காவியச் சலங்கைகள். 11747
காற்றில் செதுக்கிய கருவூலங்கள்: தூதர் வழித் தூய மொழி. 11266
கானல் வசந்தங்கள். 11773
காஷ்மீர சைவமும் சைவசித்தாந்தமும். 11086
கிராமிய பூபாளம் 2016: சிறப்பு மலர். 11028
கிராமிய பூபாளம் 2017: சிறப்பு மலர். 11029
கிரியாகாலத் திருமுறைகள். 12A15
கிரேக்க நாடகாசிரியர் யூரிப்பைடசின் நாடகங்கள்: இரண்டாவது பகுதி. 11740
கிழக்கில் வெளுக்காத வழக்கு. 11612
கிழக்கிலங்கை மக்களின் எழுதா இலக்கியங்கள். 11382
கிழக்கின் சுயநிர்ணயம். 11955
கீர்த்தனாமிர்த சாகரம். 11467
கீறல்: சிறுகதைகளின் தொகுப்பு. 11774
குங்குமப்பூ. 11811
குடிமைகள்:நாவல். 11827
குடியியலும் அரசாங்கமும்: இரண்டாம் பாகம். 11299
குடும்ப வாழ்வின் உளவியல்: 11051
குண்டுமீனும் குட்டிமீனும். 11512
குதிரை வாகனம். 11828
குந்திசேத்திரத்தின் குரல்: நெடுங்கவிதைத் தொகுப்பு. 11613
குருஷேத்திர இலக்கியம். 11888
குவியல்: பதினைந்து புதிய கவிதைகள். 11614
குழந்தை உளவியல்: விருத்தி நிலைகளும் பெற்றோர் பங்கும். 11048
குழந்தைகளுக்கான புதிய சுற்றாடற் கல்வி: ஆண்டு 4. 11278
குழந்தைகளுக்கான மழலைச் செல்வம்: 11403
குழந்தைகளுக்கு ஈசாப் நீதிக் கதைகள். 11503
குறள்சார்ந்த புதிய சிந்தனைகள். 11277
குறியீட்டு அளவையியல். 11068
குறுந்தொகை. 11615
? (கேள்விக்குறி). 12A16
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்) பிரபந்தத் திரட்டு iv நான்காம் பாகம். 11209
கொக்கூர் புதுக்கோவில் பிரபந்தத் திரட்டு (முதலாம் பாகம்). 11210
கொக்கூர்ப் புதுக்கோவில் பிரபந்தத் திரட்டு-2 (இரண்டாம் பாகம்). 11211
கொட்டியாபுரத்து சிங்கம்: வரலாற்றுக் குறுநாவல். 11829
கொழும்பு கொட்டாஞ்சேனை அருள்மிகு வரதராஜ விநாயகர் சதகம். 11212
கொழும்பு செட்டியார்தெரு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் திருவூஞ்சல் பதிகம். 11213

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு வெள்ளவத்தை சம்மாங் கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் திருப்பள்ளியெழுச்சி - தோத்திரப் பாமாலை. 11214
கொழும்புத் தமிழ்ச்சங்கம்: 62,63வது ஆண்டு அறிக்கைகள் (2003-2005). 11030
கோணேஸ்வரம்: கி.பி.15ஆம் நூற்றாண்டு வரை. 11978
கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் பவளவிழா மலர் 1926-2001. 11363
கோப்பாய் சிவம் சிறுகதைகள். 11775
கோயிற் புராணம். 11215
கோவலனார் கதை. 11531
சக்திப்ரதாயினி அர்ச்சனை மலர்கள் 11216
சகலாகம சங்க்ரஹ மஹோத்ஸவ விதி. 11125
சங்க காலத் தமிழர் வாழ்வியல். 11877
சங்க வரலாறும் சைவப்புலவர் அறிமுகமும். 11487
சங்கக் கவிதையாக்கம்: மரபும் மாற்றமும். 12A17
சங்கம் முதல் சமகாலம் வரை: தேர்ந்த கவிதைகளின் தொகுப்பு. 11543
சங்கமம். 11748
சங்கீர்த்தன மலர். 11217
சங்கு முள்ளு: நாவல். 11830
சட்டைப் பைக்குள் சிறகு. 11616
சண்டியூர். 11979
சண்முக கதம்பம்: முருக வழிபாடு பற்றிய வரலாறும் தகவல்களும். 11126
சத்திய விஞ்ஞானம். 11042
சந்தானாசாரியர் புராண வசனம். 11902
சபதங்கள் (பாஞ்சாலி சபதம், காதல் நெஞ்சங்கள்). 11749
சபதம். 11617
சமகால சிங்களச் சிறுகதைகள்: சிங்களச் சிறுகதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு. 11812
சமய உளவியல். 11047
சமயம்-சில சிந்தனைகள் (ஆய்வுரைத் தொகுப்பு). 11109
சர்வஞானோத்தர ஆகம ஞானபாத வசனம். 11087
சரசோதிமாலை. 12A18
சாகர சரிதம். 11527
சாகுந்தல நாடகம். 11730
சாணக்கிய நீதிவெண்பா. 11078
சாத்தான் வழிந்தோடும் சொற்கள் (கவிதைகள்). 11618
சாதனையாளன் ஐ.தி.சம்பந்தன்: அகவை 80 முத்துவிழா மலர்-2016. 11911
சாதி வலயங்களுள் வாக்கு வங்கிகள்: குறுங்காவியம். 11750
சாதிச் சமூக வரலாற்றில் வர்க்கப் போராட்டம். 11294
சாம்பற் பொழுதுகளில் மீளெழுகைக் காலம்.11619
சாவித்திரி (காவியம்). 11751
சாவுகளால் பிரபலமான ஊர். 11620
சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகள் வரலாறு (இலங்கா). 11950
சித்தாந்த ஞானக் களஞ்சியம். 11088
சித்திரக் கவித் திரட்டு: ஈழமும் தமிழும் 6. 11621
சிதம்பர சுப்பிரமணியன் பன்னீராண்டு நினைவு மலர். 11177
சிதறுண்ட காலக் கடிகாரம். 11622
சிந்தனை எண்ணங்களும் அவற்றின் விளக்கங்களும். 11052
சிந்தனைச் சோலை. 12A19
சிரிக்கவும் சிந்திக்கவும். 11892
சில மனிதர்களும் சில நியாயங்களும். 11831
சிலப்பதிகாரப் பாத்திரங்களும் கண்ணகி வழக்குரைப் பாத்திரங்களும்: ஒப்பியல் ஆய்வு. 11862
சிலோன் விஜயேந்திரன் கவிதைகள். 11623
சிவகுமாரன் கதைகள். 11776
சிவசங்கர பண்டிதம். 11127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானசித்தித் தெளிவு: திருவிளங்க தேசிகர் பொழிப்புரைத் தொகுப்பு. *11089*

சிவஞானபோத வசனாலங்கார தீபம். *11090*

சிவதொண்டன் மலர் 1972: சிவதொண்டன் யோகசுவாமிகளின் பிறந்ததின நூற்றாண்டு நிறைவுவிழா சிறப்பு மலர். *11903*

சிவநெறிப் பிரகாசம். *11091*

சிவராத்திரி புராணம். *11218*

சிவாச்சாரியாரும் சிவாக்கினியும். *11219*

சிவாலய சேவை: ஏன்? எப்படி? *11128*

சிவானந்த ரசனாவளீ:சம்ஸ்கிருத ஆக்க முயற்சிகள். *11528*

சிவானந்த விஜயம்: இந்துவாக வாழ்வோம். *11220*

சிறகுகள். *11624*

சிறிமத் பகவத் கீதை. 12A20

சிறுவர் கதைக் கொத்து: பாலர் தமிழ். *11504*

சிறுவர் கலை இலக்கியங்கள். *11491*

சிறுவர் பாதுகாப்பு. *11059*

சிறுவர் பாதுகாப்புச் சட்டம். *11324*

சின்மயம்: பூஜ்யகுருதேவர் சுவாமி சின்ம யானந்தரின்பிறந்த நூற்றாண்டு மலர்: 1916-2016. *11904*

சின்னச் சின்ன தூறல்கள். *11625*

சீகாளத்திப் புராணம் உரையுடன். *11221*

சுகம் தரும் உணவும் சுகமான வாழ்வும். *11446*

சுகவாழ்க்கை: பாகம் 4. *11436*

சுகாதார சேவை வழங்குநருக்கும் பெறு நருக்குமான குடும்பத் திட்டமிடல் கைநூல். *11437*

சுதந்திர இலங்கையில் தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சி. *11345*

சுதேச மருத்துவ மூலிகைக் கையகராதி: மூலிகை அரும்பத அகராதி. *11447*

சுவரோவியச் சுந்தரி: சிறுகதைத் தொகுப்பு. *11777*

சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு நினைவு மலர் 1892-1992. *11926*

சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள்: தொகுதி 4 (கவிதைகள்). *11626*

சுற்றுலாப் பொருளியலுக்கு ஓர் அறிமுகம். *11319*

செங்கலடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வரலாற்றுப் பதிகம். *11149*

செங்கை ஆழியான் நினைவலைகள். *11939*

செத்துப் பிழைத்த சின்னச்சாமி. *11517*

செந்தமிழ்த் தேன். *11544*

செம்மாங்கனி: உலகத் தமிழ்க் கவிஞர்கள் கவிதைத் தொகுப்பு நூல். *11996*

செய்தி சேகரித்தலும் அறிவித்தலும். *11032*

செய்தித்துறை: செய்தித்துறைக்கு ஓர் அறிமுகம். *11033*

சேசெல்சு அருள்மிகு நவசக்தி விநாயகர் பாமாலை. *11223*

சேதன இரசாயனவியல். *11428*

சைவ ஆசிரியர்களைத் தோற்றுவித்த திரு. ச.அருணாசலம் அவர்கள். 12A21

சைவ சமய போதினி: நான்காம் வகுப்பு. *11142*

சைவ சமய வழிபாடும் விரதங்களும். *11129*

சைவ சித்தாந்தச் சம்புடம். *11092*

சைவ சித்தாந்தம் கைநூல். *11093*

சைவ நாற்பாதங்கள் காட்டும் ஆலய வழிபாடு. *11130*

சைவ நெறி: ஏழாம் வகுப்பு. *11143*

சைவ நெறி: எட்டாம் வகுப்பு. *11144*

சைவ நெறி தரம் 11: G.C.E. O/L. *11145*

சைவ போதினி மேற்பிரிவு 1 *11146*

சைவ விரதங்களும் விழாக்களும். 12A22

சைவத் திருமுறைகள் காட்டும் அறநெறி, ஆன்மீக விழுமியங்கள் சில. *11222*

சைவாலயக் கிரியைகள். 12A23

சொந்த மண்ணின் அந்நியர் (சிறுகதைகள்). *11778*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொப்கொக்கில்சின் நான்கு நாடகங்கள்: இரண்டாம் பகுதி. 11741
சொப்ஹொக்கில்சின் ஈடிப்பசு: முதலாவது பகுதி. 11742
ஞானபீடத்தைக் கண்டேன். 11940
ஞானம் 200ஆவது இதழ்: ஈழத்துத் தமிழ் நவீன இலக்கிய வெளி: புரிதலும் பகிர்தலும் - நேர்காணல்கள். 11562
ஞானரதம் தி.ஞானசேகரன் பவளமலர். 11941
தகவம் பரிசுக் கதைகள் - தொகுதி 3. 11779
தங்கக் கடையல்(சிறுவர் கவிதைத் தொகுதி). 11494
தங்கச் சுரங்கம்: உலகத்து சிறுகதைகள். 11813
தஞ்சைவாணன்கோவை மூலமும் உரையும். 11532
தடகள விளையாட்டு (நாவல்). 11832
தணிக்கை தகர்க்கும் தனிக்கை: ஆசிரியத் தலையங்கத் தொகுப்பு. 11043
தம்பி ஜெயத்திற்கு: கடிதம் இரண்டு. 11956
தமிழ் அமைப்புற்ற வரலாறு. 11396
தமிழ் அரச ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள். 11316
தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின் நாடகமும் பதிவுகளும். 11471
தமிழ் ஆரம் 2014. 11358
தமிழ் இசை. 11468
தமிழ் இலக்கணம்: வினா-விடை: தொகுதி 2. 11404
தமிழ் இலக்கியத்தில் முஸ்லிம் அடையாளம். 11873
தமிழ் ஏழாந்தரம். 11405
தமிழ் சமுதாயத்தில் உளநலம். 12A24
தமிழ்: தரம் 13. 11406
தமிழ் நாட்டார் வழக்காற்றியல். 11376
தமிழ் மொழிப் பயிற்சியுந் தேர்ச்சியும்: முதற் புத்தகம். 11407
தமிழ்த் தாய் பள்ளியெழுச்சி. 11627
தமிழ்த் திருமணம். 11373
தமிழ்த் திரைப்படக் களஞ்சியம்: தொகுதி இரண்டு. 11477
தமிழ்த் திரைப்படக் களஞ்சியம்: தொகுதி பதினொன்று. 11478
தமிழணங்கு அல்லது இளநகைச் சிறுமி. 11833
தமிழமுதம்: கொழும்பு வலய தமிழ்மொழித் தினச் சிறப்பு மலர் 2005. 11563
தமிழர் இலக்கிய இலக்கணம்: ஓர் அறிமுகம். 11398
தமிழர் தகவல்: 26ஆவது ஆண்டு மலர்-2017. 11026
தமிழழகி: காப்பியம்:காண்டம் ஒன்று. தமிழகக் காண்டம். 11752
தமிழழகி: காப்பியம்:இரண்டாங் காண்டம். 11753
தமிழழகி: நான்காவது காண்டம் 11754
தமிழிலக்கியம்: மூலமும் உரையும்(செய்யுட்பாகம்). 11545
தமிழோசை 1986. 11359
தமிழோசை 1987. 11360
தர்மத்தில் பூத்த மலர்கள் (தோபியாஸ்): தென்மோடி நாட்டுக்கூத்து. 11383
தர்மம் அறிந்து வாழவேண்டும். 11131
தலைசிறந்த தமிழர் தலைவர் தொண்டமான். 11628
தவளை: உடலமைப்பியல், இழையவியல், முளையவியல் ஆகியன பற்றிய ஓர் ஆரம்ப நூல். 11434
தவறுகள் தொடர்கின்றன. 11629
தழும்பு: இரு நாவல்கள். 11834
தளிர்களின் சுமைகள். 11630
தஜ்ஜாலின் சொர்க்கம். 11780
தாவர போசன சமையல். 12A25
தாளில் பறக்கும் தும்பி. 11631

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணபுர அந்தாதி: மூலமும் உரையும். 12A26
தியாக மாமலை. 11912
தியான சாதனம். 11057
தியானகாலச் சிந்தனை. 12A27
திரிதலிலிருந்து தெரிதல்: பண்பாட்டு உரையாடல். 11377
திரு ஏஹாந்த அருள் சுடர். 11224
திருக்குறள்: அறத்துப்பால்-இல்லறவியல்: 1-10 அதிகாரங்கள். 11546
திருக்குறள்: அறத்துப்பால்-இல்லறவியல்: இறுதிப் பத்து (15-24) அதிகாரம். 11547
திருக்குறள் ஆராய்ச்சி. 11863
திருக்குறள்: ஒழிபியல் மூலமும் உரையும். 11548
திருக்குறள்: பொருட்பால்-ஒழிபியல்: மாதிரி விடைகளுடன். 11549
திருக்கேதீச்சர மான்மியம் 2: பொற்பொளிர் காண்டம். 11150
திருக்கோணமாமலை பத்திரகாளி அம்மன் பதிகம்-கலிவெண்பா. 11225
திருச்செந்தூர். 11151
திருச்செந்தூர்ச் சிலேடை வெண்பா 11226
திருச்செந்தூர்ப் புராணம். 11152
திருத் திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் என்னும் ஈழத்துச் சிதம்பர புராணம்: பாட்டும் உரையும். 12A28
திருத்தொண்டர் புராண வரலாறு என்னும் சேக்கிழார் நாயனார் புராணம். 11132
திருத்தொண்டர் புராணம் என்று வழங்குகின்ற பெரியபுராணம். 11133
திருத்தொண்டர் புராணம்: திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் புராணம்: 11147
திருத்தொண்டர் பெரிய புராணம். 11227
திருமணப் பொருத்த விதிகள். 11104
திருமந்திரம் சில முத்துக்கள். 11228
திருவாசகத் தேன்மலர். 11153
திருவாதவூரடிகள் புராணம். 11229
திருவாதவூரடிகள் புராணம்: பொருளுடன். 11230
திருவாதிரை மலர் 1964. 11178
தீர்வு தேடும் நியாயங்கள்: சிறுகதைத் தொகுதி. 11781
துணிச்சற்காரன்-கவிதைகள். 11632
துணிந்து நில். 11495
தூயி தசமப் பகுப்புத் திட்டம்: 23ஆம் பதிப்புக்கான கைந்நூல். 11018
தூவி தசாம்சப் பகுப்பாய்வு. 11019
தெணியானின் ஜீவநதிச் சிறுகதைகள். 11782
தெய்வ தரிசனம். 11633
தெய்வீகத் தேனமுதம். 11231
தெரியத் தெரியத் தெரியாமை தெரியும் - 1. 11002
தேசிய எழுத்தாளர் பட்டியல். 11942
தேசிய பிரச்சினை பற்றி மாக்சிசக் கண்ணோட்டத்தில் ஒரு விளக்கம். 11957
தேம்ஸ் நதிக்கரையின் பூவரசம் பூக்கள். 11472
தேர்ந்த தமிழ்ச் சிறுகதைகள் (க.பொ.த. உயர்தர வகுப்புக்குரியது). 11550
தேவி திருமுகம். 11232
தைரியம்: கலாபூஷணம் கலைவேந்தன் அமரர் ம.பொனிபஸ் தைரியநாதனின் நினைவுமலர். 11935
தொகைசார் பகுப்பாய்வில் கருதுகோள் சோதனைகள் 11295
தொட்டுவிடும் தூரத்தில். 11634
தொடுவானம் தொலைதூரம்: சிறுகதைத் தொகுதி. 11783
தொத்தொ சங்: சாளரமருகில் ஒரு சிறுமி. 12A29
தொல்காப்பியம் பொருளதிகாரம்: முதற் பாகம். 11399
தொலைத்து விட்டோம் எத்தனையோ? 11635
தொலைந்துபோன வசந்த காலங்கள். 11980

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வுக் கையேடு. 11440
தொன்ம யாத்திரை: மரபை அறிதலுக்கும் கொண்டாடுதலுக்குமான இதழ்: ஊர்காவற்றுறை. 11981
தோத்திரத் திரட்டு. 11233
தோழர் விசுவானந்ததேவன் 1952-1986: நினைவு நூல். 11922
தோற்றுப்போனவளின் வாக்குமூலம். 11784
நகுலகிரிப் புராணம். 11154
நகைச்சுவைக் கதம்பம். 11893
நடந்தபடிதேடுவோம்:கவிதைத் தொகுப்பு. 11636
நந்தவனச் சுகந்தம். 11637
நபிகள் பெருமானார் (ஸல்). 11267
நம் மொழியுரிமைகள்: தனிநாயக அடிகளாரின் கருத்து. 11301
நம்பிக்கை மணிகள். 11268
நமக்கான சினிமா. 11479
நயினாதீவு நாகம்மாள்: ஒரு தொகுப்பு நூல். 11155
நயினை ஞானமுத்து: ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகள். 11905
நயினை நாகபூசணி அம்மன் நான் மணிமாலை. 11234
நயினை மான்மியம். 11982
நயினை முருகன் பிள்ளைத் தமிழ். 11235
நல்ல நல்ல கதைகள். 11505
நல்லதோர் வீணை: நாவல் இலக்கியம். 11835
நல்லூர் நாடகத் திருவிழா 2015: கட்டுரைகள், நாடக எழுத்துருக்கள். 11473
நல்லூர் முருகன் இணைமணி மாலை. 11236
நல்லைநகர் நாவலர் சைவத்தின் காவலர். 11906
நவரச கதா மஞ்சரி: இவை இனிய கற்பிதக் கதைகள். 11785
நவீன அளவையியல்: அளவையியலும் விஞ்ஞான முறையும் பாகம் 1. 11069
நவீன கல்விப் பிரயோகங்கள். 11346
நவீன கோவலன் சரித்திரம். 11731
நவீனத்துவத்தின் தோல்வி. 11304
நளவெண்பா (கதை). 11551
நளவெண்பா: கலிநீங்கு காண்டம். 11552
நறுக்: ஹைக்கூ கவிதைகள். 11638
நாகம் பூசித்த நயினை ஸ்ரீ நாகபூஷணி. 11156
நாடக தீபம்: நடிகமணி வி.வி.வைரமுத்து நினைவு வெளியீடு. 12A30
நாயகமே பூமிக்கு வாருங்கள்: நெடுங்கவிதை. 11269
நாவல் இலக்கியம். 11880
நாவலர் நூற்றாண்டு மலர், 1979. 11157
நாவலர் பிள்ளைத்தமிழ்: மூலமும் உரையும். 11639
நான்(கவிதைகள்). 11640
நான் அவளுக்கு ஒரு கடலைப் பரிசளித்தேன். 11641
நான் காணும் உலகம்: உண்மை நிலையின் விளக்கம். 12A31
நானிலம் இதழ் 1: 11361
நிகரி (கவிதைகள்). 11642
நித்திய கருமவிதி. 11134
நித்திய கருமவிதி சைவ அநுட்டானவிதி. 11135
நிலவே என்னிடம் மயங்காதே. 11786
நிலாவெளி: வரலாறும் பண்பாடும். 11983
நிவேதினி: பெண்நிலைவாத சஞ்சிகை. 11293
நிழலின் பின்னே மனிதன். 11053
நீ: கவிதைத் தொகுப்பு. 11643
நீதிமுரசு 1990. 11322
நீந்திக் கடந்த நெருப்பாறு: பாகம் 1 (நாவல்). 11836
நீர்கொழும்பு-தலாதுவை ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் திருவூஞ்சற் பாமாலையும் பக்திப் பதிகமும். 11237
நீரில் கிழித்த கோடுகள்: சிறுகதைத் தொகுதி. 11787
நூல் ஒன்றை ஒழுங்குபடுத்தும் முறை. 11012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்தேட்டம் தொகுதி 11. 11013
நூலக மரத் தளபாடங்கள். 11020
நெஞ்சினிலே (கவிதைகள்). 11644
நெடுந்தீவு இலக்கியப் பாரம்பரியங்கள்-ஓர் ஆய்வு. 11984
நெருப்பாற்றில் ஓர் நீலோற்பலம். 11837
நெல்லிக்காட்டு வீரர்கள். 11518
நேர்கொண்ட பாவை. 11291
ப்ரஸ்ன்ன ஜோதிடம்: கிருஷ்ணமூர்த்தி பத்ததி. 11105
பக்திப் பாமாலை. 11238
பக்திரசம் கனிந்த கீர்த்தனாமலர்: முதலாம் பாகம். 11239
பச்சை இரத்தம் நீந்தும் காடு: கவிதைகள். 11645
பசிலனின் இன்னொரு போர்முகம் பால்ராஜ்: ஒரு வரலாற்றுப் பதிவு. 11923
பஞ்சாமிர்தம்: சிறுவர்களுக்கான ஐந்து இசை நாடகங்களின் தொகுப்பு. 11502
படித்து மகிழ பயன்மிகு பத்துக் கதைகள். 11506
படைப்பும் படைப்பாளுமையும். 11864
பண்டைய தமிழகம். 12A32
பத்தாண்டு நிறைவுவிழா மலர்: 1990-2000. 11021
பத்மநாதம்: அமரர் T.P.பத்மநாதன் அவர்களின் ஞாபகார்த்த வெளியீடு. 11936
பயணிகள் கவனத்திற்கு. 11646
பயிர் மேயும் வேலிகள்: நாவல். 11838
பரதநாட்டியக் கச்சேரி முறைமை. 11469
பரிபாடல் வசனம். 11878
பலதும் பத்தும்: கோப்பாய் சிவம் படைப்புக்கள். 11865
பழமொழிப் பொக்கிஷம். 11394
பழி தீர்த்த பயங்கர ஆவி. 11519
பழைய வேதக்கோயில்: பாகம் 1. 11839
பறாளை விநாயகர் பள்ளு. 12A33
பறிகொடுத்த பின்பும் வாழத் துடிப்பவர்கள். 11788
பன்முக நோக்கில் பதினொராம் திருமுறை. 11240
பனை நூறு: மூலமும் உரையும். 12A34
பாஞ்சான். 11789
பாடசாலையும் கலைத்திட்டமும். 11347
பாண்டவர் கதை. 12A35
பாதை மாறுகிறது. 11840
பார்த்தீனியம்: நாவல். 11841
பாரத அம்மானை. 11755
பாரதச் சுருக்கம். 12A36
பாரதம்: உத்தியோக பருவம் கிருட்டிணன் றூது சருக்கம்: பொழிப்புரையுடன். 11553
பாரதி: 1948-1950: மண்டூரிலிருந்து வெளி வந்த பாரதி சஞ்சிகைத் தொகுப்பு. 11024
பாரிசவாதம் தவிர்ப்போம். 11441
பால எண் ஜோதிடம்: பெயர் மாற்றம்: தொடர் 2. 11106
பாலர் செந்தமிழ் பாட்டமுதம். 11496
பாலித்தீவு: இந்துத் தொன்மங்களை நோக்கி: பயண இலக்கியம். 11985
பாலியலும் இஸ்லாமும். 11270
பாலைவன உதிரிகள். 11647
பாலைவனமாதல். 11336
பாவு தளிர் தூவு வானம்: சிறுகதைத் தொகுப்பு. 11790
பி.ஏ.கிருஷ்ணன்: வாழ்வும் எழுத்தும். 11943
பிரண்டையாறு (சிறுகதைகள்). 11791
பிரதேச செயலகங்களினால் வழங்கப்படும் சேவைகள்: பொதுமக்களுக்கு அவசியமான ஒரு வழிகாட்டி. 11326
பிரதேச வரலாற்று மூலங்கள்: ஒரு நூல்வழித் தேடல்: தீவகம். 11986
பிரபஞ்ச சுருதி. 11648
பிரபந்தமாலை: ஆய்வரங்கச் சிறப்புமலர் -2016. 11241

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபாகரன் 60. 11649
பிரபாகரன் நெருப்பின் பிறப்பு. 11650
பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியம். 11094
பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியம்: முதலாம் பாகம். 11095
பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியம்: இரண்டாம் பாகம். 11096
பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியம்: மூன்றாம் பாகம். 11097
பிரவாதம் தொகுதி 1:ஜனவரி-ஜுன் 2002. 11281
பிரவாதம் தொகுதி 2: ஜுலை-டிசம்பர் 2002. 11282
பிரவாதம் தொகுதி 3: ஜனவரி-ஜுன் 2003. 11283
பிரவாதம் தொகுதி 4: ஜுலை 2005. 11284
பிரஹ்மஸ்ரீ தாளையான் சற்குருநாதன் தோத்திரமும் உரையும். 11242
பிரஹ்மஸ்ரீ ஷெய்கு நெய்னா முஹம்மது (தாளையான் சுவாமி) ஞானதேசிகர் அவர்களது சரித்திரம். 11907
பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் பங்கு. 11348
பிறப்புரிமையியல். 11433
புகழேந்திப் புலவர் இயற்றிய நளவெண்பா: கலிதொடர் காண்டம், கலி நீங்கு காண்டம் (மூலமும் உரையும்). 11554
புங்குடுதீவு அருள்மிகு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயம் மகா கும்பாபிஷேக மலர் 30.03.2005. 11179
புங்குடுதீவு கிழக்கு, இத்தியடிப்புலம் அருள்மிகு நாச்சிமார் தேவஸ்தான புனராவர்த்தன மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர் 2010. 11180
புசல்லாவை நயப்பனைத் தோட்டம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவூஞ்சற் பாமாலையும் பக்திப் பாடல்களும். 11243
புத்தாக்க செருகேடு: கலை இலக்கிய ஆக்கங்களின் தொகுப்பு. 11889
புதிய சமூகக் கல்வி 10-1. 11279
புதிய பாடத்திட்டம் க.பொ.த.உயர்தரம் தரம் 12: தமிழ். 11408
புதிய புத்திப் பயிற்சிமாலை. 11003
புதிய விஞ்ஞானம்: ஆண்டு 9 பகுதி 2. 11411
புதிய விஞ்ஞானம்: ஆண்டு 11. 11412
புதியதோர் உலகம் காணப் புறப்பாடு. புறப்படுகை நியாயந்தான். முட்டுக் கட்டைகள் நீங்குமா? 11079
புதுமுறைச் சரித்திரம்: ஜீ.சீ.ஈ. பகுதி 2: கி.பி.1453-கி.பி.1796:அடங்கன் 1. 11894
புதுமுறைச் சரித்திரம்: ஜீ.சீ.ஈ. பகுதி 2: கி.பி.1453-கி.பி.1796:அடங்கன் 2. 11895
புதுமை இலக்கியம்: தேசிய ஒருமைப்பாட்டு எழுத்தாளர் மாநாட்டு மலர், 1975. 11564
புதை மணல்: சிறுகதைத் தொகுப்பு. 11792
புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா சிறப்பு மலர். 11944
புலம்பெயர் நாடக எழுத்துருக்கள். 11474
புலவர்மணிக் கோவை. 11945
புலனாய்வு அறிக்கையிடல். 11034
புளியம்பொக்கணைத் தலபுராணம்: உரையுடன். 11158
புற்று நோய்: பல உடல் உறுப்புகளைப் பாதிக்கும் ஒரு நோய். 11442
புனித யாத்திரை. 11842
பூதத்தம்பி (இசை நாடகம்). 11756
பூந்துணர்: நறவம் 4 11987
பூபாலி: சிறுகதைத் தொகுப்பு. 11793
பூமிசாத்திர வாசகம்: நான்காம் வகுப்பு. 11896
பூமியின் மையத்திற்கு ஒரு பயணம். 11520
பூர்வீகம்: லாவன்னா லத்தீப் கவிதைகள். 11651

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரிலி: நாவல். *11843*

பெர்லின் நினைவுகள். *11898*

பெரியதும் சிறியதும். *11136*

பெருமூளை வாதம்: விசேட தேவையுள்ள பிள்ளைகளின் பெற்றோர்களிற்கான கைநூல். *11443*

பேசாதவை பேசியவை: மரபுக்கவிதைகள். *11652*

பேசாலைச் சமூகத்தின் பண்பாட்டு வேர்கள்:1504-2004. *11988*

பேசும் பேனா. *11513*

பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி. *11349*

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் காதலியாற்றுப்படை. *11653*

பேராசிரியர் மா.கருணாநிதி: கல்விச்சேவை பாராட்டு விழா மலர். *11927*

பேராதனை குறிஞ்சிக் குமரன். *11159*

பேரார்வம்: பீடாதிபதி க.பேர்ணாட் மணிவிழா வாழ்த்து மலர் 2014. *11928*

பைலற் ஞானம்: அமரர் பாலசுப்பிரமணியம் சிவஞானதாஸ் அவர்களின் நினைவு மலர். *11924*

பொங்குதமிழ். *11958*

பொடுபொடுத்த மழைத்தூத்தல்: கிழக் கிலங்கை நாட்டார் காதல் பாடல்கள். *11384*

பொது அறிவு: வெற்றிக் கனி. *11004*

பொது அறிவுக் கலசம் 1000:அறிந்ததும் அறியாததும். *11005*

பொது சன தொடர்புத் துறையில் மொழியும் அதன் நடையும். *11035*

பொது சன தொடர்புத் துறையின் வளர்ச்சியும் அமைப்பும். *11036*

பொது நிருவாக தாபன வேலைகளுக்கான வழிகாட்டல். *11327*

பொது நூலகங்களுக்கான நியமங்கள். *11022*

பொதுமக்கள் மற்றும் அரசாங்க உத்தி யோகத்தர்கள் அறிந்திருக்க வேண்டிய சட்டங்கள். *11320*

பொருள்வெளி: ஆய்வுக் கட்டுரைகள். *11881*

பொருளாதார அபிவிருத்தி: சிங்கப்பூரும் இலங்கையும் அரசியற் பொருளாதார ஒப்பியல் நோக்கு. *11305*

பொருளாதார அபிவிருத்திச் செல்வழி: இலங்கையின் அனுபவத்தை ஆதார மாகக்கொண்ட ஓர் உசாவல். *11306*

பொருளாதார சிந்தனை வரலாறு. *11307*

பொருளாதார முறைமைகள் G.C.E. A/L. *11308*

பொருளியல்: சந்தை அமைப்புக்கள்: காரணிச் சந்தை: வினா-விடை. *11309*

பொருளியல்: பகுதி 1: பொருளாதார மொன்றின் அறிமுகம். *11310*

பொருளியல்: பகுதி 2: பொருளாதாரக் கொள்கை வேலையின்மை. *11311*

பொருளியல் மாதிரி வினாத்தாள்கள்: மிக விரிவான விடைகளுடன். *11312*

பொழிவு: சிறுகதைகள். *11794*

பொற்காலத் தமிழ் இலக்கணம்: முதல் மூன்று பாரங்கட்கு உரியது. *11409*

பொன்தாமரைக் குளம். *11521*

பொன்மலர்கள். *11654*

பொன்மொழிகள் 1000. *11080*

பொன்விழாப் போற்றிசை 1942-1992. *11655*

பொன்விளை பூமி: தேசிய ஒற்றுமைக் கவிதைகள். *11656*

பொன்னம்பலம் அருணாசலம்: அரசியல் ஞானி-வித்யா விற்பன்னர் சீவிய சரித்திரச் சுருக்கம். *11913*

போர்க்காலமும் ஊர்க்கோலமும்: கவிதைத் தொகுப்பு. *11657*

போராட்டம் தொடர்கின்றது: ஸ்ரீலங்கா தோட்டத் தொழிற்சங்கங்களும் பெண்களும். *11317*

போற்றி அருளுக. *11244*

பௌத்தமும் நிர்வாணமும் *11111*

பௌதிக இரசாயனம்: கரைசல்கள். *11429*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌதிக இரசாயனம்: உயர்தரத்துக்கும் புலமைப் பரிசில் தரத்துக்கும் உரியது. 11430
மக்காப் பயணம். 11271
மகரந்தச் சிதறல்: லண்டன்வாழ் தமிழ்ப் பெண்களின் நேர்காணல். 11292
மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள். 11866
மகாகவி ஹோமரின் ஒடிஸ்சி மகா காவியம். 11762
மகாபாரதம்: கிருட்டிணன் தூதுச் சருக்கம் உரையுடன். 11555
மகாபாரதம்: சபாபருவம்: இராசசூயச் சருக்கம். 11556
மகாபாரதம்: சூது போர்ச் சருக்கம். 11557
மகாமாரித் தேவி திவ்விய கரணி. 11245
மகாவித்துவான் F.X.C.நடராசா: ஆக்கங்கள்-தேர்ந்த நூல்விபரப் பட்டியல். 11014
மங்கையராய்ப் பிறப்பதற்கே: மேடை நாடகங்கள் நான்கின் தொகுப்பு. 11732
மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு. 11385
மட்டக்களப்புக் காவியம். 11757
மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள். 11289
மண் வாசனை. 12A37
மண்டூர்ப் பிள்ளைத்தமிழ். 11246
மண்ணிற் புதைந்த வரலாறு (கவிதைகள்). 11658
மணம் வீசும் மணிச்சொற்கள்: தொகுதி 2. 11272
மணிபல்லவம். 11899
மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா 1995 சிறப்பு மலர். 11565
மதமும் மார்க்சியமும் தமிழ்ப் பண்பாட்டுப் பார்வை. 11318
மதுரை எரிகிறது. 11970
மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவராற்றுப் படை மூலமும் உரையும். 12A38
மதுவும் அடிமை நிலையும். 11332
மந்திரக் கண்ணாடி: சிறுவர் கதை. 12A39
மயூரகிரி புராணம். 11160
மர்மத் தளபதி: புனித செபஸ்தியார் நாட்டுக்கூத்து. 11386
மரண வலிகள். 11659
மரணத்தில்மலர்ந்த மலர்கள். 11660
மரணத்தின் பின். 11050
மரணத்தின் பின் அல்லது போகுமா றெங்ஙனே வருமாறேதோ. 11374
மரணம்-இழப்பு-மலர்தல்: 11060
மரணம் வரும் வரைக்கும். 11661
மரணமூறும் கனவுகள். 11662
மரணித்த மனிதம்: கவிதைத் தொகுப்பு. 11663
மரபுவழி நாடகங்கள் (வடமோடி நாட்டுக்கூத்துக்கள்). 11387
மரம் மாந்தர் மிருகம். 11795
மரமனிதன். 11514
மருத்துவ நோக்கில் சித்தர்களும் தத்துவ சிந்தனைகளும். 11448
மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் வரலாறு: 11364
மருதமுனை முத்து மஷூர் மௌலானா: பார்வையும் சில பதிவுகளும். 11914
மருதமுனையின் வரலாறு. 11989
மருதன் அஞ்சலோட்டம். 11664
மல்லிகை: 45ஆவது ஆண்டு மலர். 11566
மல்லிகைப் பந்தல்: கவிதை வசனம். 11665
மலரும் நினைவுகள்: சுயசரிதை. 11920
மலைப்பூட்டும் மருத்துவ அறிவியலை அறிந்துகொள்வோம். 11435
மலையகத்தின் எழுச்சித் தலைவர் பெ. சந்திரசேகரன். 11915
மலையகம்: சமத்துவ அபிவிருத்தியை நோக்கி. 11313
மழலைச் சிமிழ். 11362
மழலைச் செல்வங்கள். 11525
மழலைத் தமிழ் அமுதம்: நினைவிற்கு ஓரிதழ். 11497

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழுங்கடிக்கப்பட்ட அடையாளங்களும். 11666
மழைக்காலக் குறிப்புகள். 11667
மழைமேகம்: கவிதைத் தொகுதி. 11668
மழையும் சிறையும்:புதுக்கவிதைத் தொகுதி. 11669
மறக்க முடியாத வில்லன்கள். 11480
மறதி நோய்(Dementia). 11444
மறந்துபோகா வாழ்வின் கதை. 11946
மறுமலர்ச்சி இதழ்களின் தொகுப்பு 1946-1948. 11025
மறைஞானம் நல்கும் சிவஞான போதம். 11098
மறையாத சூரியன்: நாவல். 11844
மன்னனுள் ஒரு மனிதன். 11814
மனக்கண்: கவிதைத் தொகுப்பு. 11670
மனக்காடு: கவிதைகள். 11671
மனக்கோலம். 12A40
மனசோடு பழகும் மல்லிகை ஜீவா. 11947
மனதில் நின்றவையும் தெளிந்தவையும். 11054
மனதைக் கவர்ந்த கண்ணன். 11247
மனதைக் கவரும் மழலைப் பாடல்கள். 11498
மனவனத்தில் நந்தவனம். 11672
மனவெளியின் பிரதி. 11673
மனிதநேய நேசகன்: மேமன்கவி மணிவிழா மலர். 11948
மனிதர்கள். 11796
மனிதவள முகாமைத்துவம். 11457
மனிதவளத்தை முகாமை செய்வது எப்படி?. 11458
மனிதன் புனிதனாக. 11055
மனிதாபிமானம் கொண்ட புதிய தலைமுறைக்காக. 11959
மனை ஒளி 2008: மனைப்பொருளியல் தின விழா சிறப்பு மலர். 11453
மனைப் பொருளியல்: தரம் 10. 11454
மனோவின் மனக் குறும்புப் பா (புதுக் கவிதை). 11674
மஜீத் கவிதைகள்: சொந்தமற்றுப்போன மண்ணைப்பற்றிய சித்திரமொழி. 11675
மஜீதின் பின்நவீன கதையாடல் மூன்று. 11867
மாட்டின் விக்கிரமசிங்காவின் சிறுகதைகள். 11815
மாணவர் சூழல் வாசகம்: ஐந்தாம் வகுப்பு. 11280
மாணவர் மனதிற்கு. 11350
மாணவர்களுக்கு மணிக்கவிதைகள். 11499
மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம். 11248
மாதா பிதா குரு தெய்வம். 11056
மாதோட்டம்: கவிதைத் தொகுப்பு. 11676
மாந்தர் மாண்பு: வாழ்வியல் சிந்தனைகள். 11868
மாம்பழக் கொச்சி (கவிதைகள்) 11677
மாமன் மகனே: மலைநாட்டு மக்கள் பாடல்கள். 11388
மார்க்கத்தின் மணித்துளிகள். 11273
மாவை சின்னக்குட்டிப் புலவரின் தண்டிகைக் கனகராயன் பள்ளு. 11678
மாவைப் பிள்ளைத் தமிழ். 11249
மாற்றம் காணும் கல்வி உலகுடன் இணைதல். 11351
மாற்று அரசியல் இயக்கமே இன்றைய தேவை: 11960
மானிப்பாய் மருதடி விநாயகர் சதகமாலை. 11250
மிட்டாய் மலை இழுத்துச்செல்லும் எறும்பு (நாவல்). 11845
மிதக்கும் கனவுகள் (கவிதைகள்). 11679
மின் கணனித் தமிழ் அச்சமைப்பில் உருவான நிழல் எனும் முதல் தமிழ்ப் பத்திரிகையின் வரலாறு. 11037

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்கணனித் தமிழ் நெறியாள்கையும் இதயம் சகோதரர்களின் பங்களிப்பும். 11010
மின்ரோநெற் என்ற வொலிபோல். 11483
மீண்டு(ம்) எழுவோம். 11797
மீன்கள்: தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள். 11798
மீன்களைத் தின்ற ஆறு: சிறுகதைகள். 11799
முகங்கள்(கவிதைத் தொகுப்பு). 11680
முகங்கள்: சிறுகதைத் தொகுப்பு. 11800
முகவரி தொலைந்த முகங்கள்: கவிதைத் தொகுதி. 11681
முகாமைத்துவ நடைமுறைகள். 11459
முகாமைத்துவத்திற்கு ஓர் அறிமுகம். 11460
முகாரி பாடும் முகங்கள். 11682
முச்சங்கம். 11488
முட்கம்பித் தீவு. 11683
முட்டைக் கோப்பி: சிறுகதைகள். 11801
முடிமன்னர் பதிகம். 11161
முடியாத ஏக்கங்கள். 11802
முத்தமிழ். 11869
முத்தமிழ்: இயல் இசை நாடகம்: சங்ககாலம் முதல். 11870
முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் நான்மணிமாலை. 11684
முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர். 11929
முத்தமிழ் விழா சிறப்பு மலர் 1995. 11567
முத்துக்குமாரன் நாடகங்கள். 11733
முதல் வசந்தம்: கவிதைத் தொகுப்பு. 11685
முதற் கனி. 11890
முதன் முதலாக. 11686
முதன் முதலாய்: கவிதைகள். 11687
முருகவேள். 11251
முல்லைக்காடு: மூவர் காவியம். 11758
முள்ளிவாய்க்கால்:எமது சாட்சியம். 11997
முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றம்: தஞ்சாவூர்-தமிழ்நாடு: படத்தொகுப்புக் கையேடு. 11998
முறையீடு: கவிதைகள். 11688
முன்பள்ளிக் கல்வி: கலைத்திட்டமும் வழிகாட்டலும். 11352
முன்னேஸ்வர வரலாறு. 12A41
முன்னைச் சிங்கள ஓவியம். 11466
முனியன் முரளிகானன். 11515
முஸ்லிம் அரசியலின் இயலாமை. 11961
முஸ்லிம்கள் வளர்த்த அழகியற்கலைகள். 11465
மூக்குத்திப்பூ: ஈழவாணி கவிதைகள். 11689
மூடமறுக்கும் விழிகளும் துடிக்கும் இதயமும்:கவிதைகள். 11690
மூதுரை. 11081
மூவருலா. 11691
மூன்றாம் முத்தம்: குறுநாவல். 11846
மூன்று பாத்திரங்கள். 11853
மெய்கண்டதேவர் வரலாறு. 11908
மெய்ப்பொருள் நிலை. 11044
மெய்யியல்: ஓர் அறிமுகம் 1. 12A42
மெய்வல்லுநர் விளையாட்டுக்கள். 11484
மெல்லிசைத் தூறல்கள். 11692
மை: 35 கவிஞைகளின் கவிதைத் தொகுப்பு. 11693
மொழிதல்: ஆய்விதழ் 1. 11285
மொழிதல்: ஆய்விதழ் 2: எண் 1. 11286
மொழிதல்: ஆய்விதழ் 2: எண் 2. 11287
மொழிதல்:ஆய்விதழ் 3: எண் 1. 11288
மொழியும் மனித நேயமும். 11962
மோகவாசல். 12A43
மௌன மொழிகள். 11694
மௌனமான இரவில் விழும் பழம். 11695
யாப்பருங்கலக் காரிகை குமாரசுவாமிப் புலவர் உரை. 11400
யாப்பியலுரை: ஆய்வுடனான ஒரு விளக்கம். 11882

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரிலிகள்: சிறுகதைத் தொகுப்பு. 11803
யாருக்கும் இல்லாத பாலை. 11696
யாரோ ஒருத்தியின் டையரி: குறுங்காவியம்: பாகம் 1. 11759
யாரோ ஒருத்தியின் டையரி: குறுங்காவியம்: பாகம் 3. 11760
யாழ் தமிழரும் இந்துமத வழிபாடுகளும். 11137
யாழ்ப்பாண நாடகப் பாரம்பரியத்தில் பெண் கலைஞர்கள். 11475
யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 1. 11990
யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகள்(1900-1915). 11038
யாழ்ப்பாணத்து நல்லைத் திருவருக்க மாலையும் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த சரவணைத் திருப்பள்ளம் புல யமகவந்தாதியும். 11252
யாழ்ப்பாணத்து நீர்வேலிச் சங்கரபண்டிதர் சற்பிரசங்கம். 11138
யாழ்ப்பாணப் பெட்டகம்: தொகுதி 1: ஆளுமைகள். 11900
யாழ்ப்பாணப் பெட்டகம்: தொகுதி 2: வணக்கஸ்தலங்கள். 11162
யாழிசை: நாவல். 11847
யுகபுருஷர் தொண்டமான்: ஒரு நிருபரின் நினைவலைகள். 11916
யோக சுவாமிகள் ஐம்பதாவதாண்டுக் குருபூசை மலர். 11909
ரங்கராஜாங்கம். 11918
ரண் கெகுறு: சிறுவர் கலைக் களஞ்சியம். 11492
ராகுலுக்கு ஒரு புது வண்டி. 11516
ராஜயானை வனம். 11522
ராஜீவ் காந்தி கொலை: மர்மங்களும் மறைக்கப்பட்ட உண்மைகளும். 11999
ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் புதினங்களில் புலம்பெயர்ந்தோரின் வாழ்வியல் சிக்கல்கள். 12000
வகவப் பதிவுகள்: வலம்புரி கவிதா வட்டத்தின் நிகழ்வுகளின் சுவடுகள். 11489
வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பத்திரகாளி சமேத வீரபத்திரர் பாமாலை. 11253
வட அல்வை முருகேசனார் பன்முகப் பார்வை 11871
வட இலங்கைத் தமிழர் பொருளாதாரத்தின் வரலாற்று அடிப்படைகள்: 17ஆம் நூற்றாண்டிலிருந்து 20ஆம் நூற்றாண்டு வரை. 11314
வட மாகாண பொதுச் சேவையின் பதவிகளுக்கான வழிகாட்டி நூல்-2013. 11328
வடக்கின் வசந்தங்கள். 11804
வடக்கு மாகாண பொதுச்சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை வழிகாட்டி. 11329
வடக்கு முஸ்லிம்கள் எதிர்பார்ப்பது. 11971
வடபுல முஸ்லிம்களின் மீள்குடியேற்ற சவால்கள். 11972
வடமராட்சியில் நாட்டுக்கூத்துகள். 11389
வண்ண எண்ணங்கள். 11697
வண்ணக் கனவு: சிறுவர் பாடல். 11500
வண்ணத்துப் பூச்சியாகி பறந்த கதைக்குரிய காலம். 11698
வண்ணை வைத்தீசர் ஒருதுறைக்கோவை (நாணிக்கண் புதைத்தல்). 11254
வண்ணையந்தாதி, வண்ணைநகரூஞ்சல், சிங்கைநகரந்தாதி, சித்திரக் கவிகள். 11255
வணிகப் புள்ளிவிபரவியல்: உயர்தர வகுப்பிற்குரியது: பாகம் 1. 11367
வதங்காத மலரொன்று: குறுநாவலும் ஒரு பக்கச் சிறுகதைகளும். 11848
வர்த்தகமும் கணக்கியலும்: 9ஆம் தரம்: இரண்டாம் பகுதி. 11368

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகமும் கணக்கியலும்: 10ஆம் தரம்: முதலாம் பகுதி. 11369
வர்த்தகமும் கணக்கியலும்: ஆண்டு 11. 11370
வரதரின் பலகுறிப்பு 1964-65. 11027
வரதரின் பலகுறிப்பு 1971. 11027
வரவுக் கவிதைகள் வளமுற: ஆய்வுடனான ஒரு விளக்கம். 11883
வல்லிபுரத்திற் கோயில்கொண்டெழுந் தருளியிருக்கும் ஸ்ரீமாயவப் பெருமானின் மும்மணிமாலையும் போற்றிவிருத்தமும். 11256
வல்வையின் முதுசொம். 11991
வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் AROD 21 வருட நிறுவனத்தின் வரலாறு மற்றும் செயற்பாட்டு மலர் 2011. 11333
வவுனியா-இயங்கராவூர்பதி ஸ்ரீ விக்னேஸ்வரர் கண்ணகை அம்பிகை, வீரபத்திரக் கடவுள் நரசிங்கமூர்த்தி ஆலய வரலாறு. 11163
வழித் தடம். 11699
வழித்துணை. 11700
வழிபாடும் பிரார்த்தனையும். 11139
வளவையின் மடியிலே. 11805
வன்னிப் பிரதேச வயற் பண்பாடு. 11992
வாத்து. 11701
வாய்மொழி இலக்கியம் (நாட்டுப் பாடல்கள்). 11390
வாயுக்களின் விந்தை. 11431
வாழ்த்தும் வணக்கமும்: கவிதைகள். 11702
வாழ்வு விடியும்: கவிதைத் தொகுப்பு. 11703
வாழ்வுக்கும் விடுதலைக்கும்: பாராளுமன்றத்தில் ஆற்றப்பட்ட உரைகள் 2012-2015. 11963
வாழ்வுதனைத் தேடி. 11704
வாழ்வை மீட்கும் குரல்: பாராளுமன்ற உரைகள் 1995-1998. 11964
வான் அலைகளில் தேன் துளிகள். 11705
வான்மதி கவிதைகள். 11706
வானத்தின் அமைதி குலைகிறது. 11707
விகடகவியின் கவிதைகள். 11708
விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும். 11353
விசையுறு பந்தினைப்போல்(கட்டுரைகள்). 11485
விஞ்ஞானமுறை: அளவையியலும் விஞ்ஞான முறையும் பாகம் 2. 11070
விஞ்ஞான முறை: பாகம் 1. 11071
விஞ்ஞான முறை: பாகம் 2. 11072
விஞ்ஞானத்தின் விந்தைகள். 11410
விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புக்களும். 11073
விஞ்ஞானிகளும் விஞ்ஞான முறையியலாளர்களும். 11074
விட்டு விடுதலை காண்: கவிதைத் தொகுதி. 11709
விடியலின் கீதம்: நாடகங்கள். 11734
விடியலுக்கான விலாசங்கள்: போர்க்காலக் கவிதைகள். 11710
விடியலைத் தேடி. 11849
விடியலைத் தேடி: ஓர் ஈழத் தமிழனின் கனவு - கவிதைகள். 11711
விடிவு: நாடகம். 11735
விடைக்குள் வராத வினாக்கள். 11712
விதைத்ததில் விளைந்தது: வலி கிழக்கு வலம்- பாகம் 01. 11993
விந்தையாய் விரியுதடி. 11713
விநாயகப்ரபாவம். 11257
விபுலவாணி: வாணிவிழாச் சிறப்பு மலர் 2001. 11365
விபுலானந்தத் தேன். 11891
விபுலானந்தர் பாவியம். 11714
விபுலானந்தர் மீட்சிப் பத்து. 11715
விமர்சன மீட்சிகள். 11884
வில்லியம் சேக்ஸ்பியரின் "யூலியஸ் சீசர்" அவலச்சுவை நாடகம். 11743
வில்ஹணீயம். 11529

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலக்கப்பட்ட தாள்கள்: ஈழவாணி கவிதைகள். 11716
விலங்கிடப்பட்டிருந்த நாட்கள். 11717
விவசாயத் தொகுப்பு. 11450
விவித்த பதாவலி: சம்ஸ்கிருத வகைச்சொல் விளக்கச் சொற்களஞ்சியம். 11395
விவேக சூடாமணியின் சாரம். 11099
விவேக வாஹினி: இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமய பாடசாலையின் பொன்விழா மலர்: 1952-2002. 11164
விழி: இதழ் 2-2016. 11334
விழிசை சிவம்-முத்து: ஜனன நூற்றாண்டு மலர். 11949
வினா-விடை 4: ஏ.எல்.பொருளியல். 11315
விஷ்ணு புத்திரர் வெடியரசன் வரலாறு: வெளியீட்டு விழாச் சிறப்பு மலர். 11490
வீசிய புயல்: நாவல். 11850
வீட்டுத் தோட்டமும் சுற்றாடல் பாதுகாப்பும். 11451
வீடு நெடும் தூரம். 11851
வீரகேசரி அன்று முதல் இன்று வரை: 1930-2010. 11039
வீரகேசரி பிரசுர நாவல்கள்:ஒரு பொது மதிப்பீடு. 11885
வீரபத்திரக் கடவுள். 11140
வீரபாண்டிய கட்டப்பொம்மன் (நாட்டுக் கூத்து). 11391
வீழ்ச்சிக் கும்மி. 11718
வெகுசன ஊடகவியல் ஓர் அறிமுகம். 11040
வெசாக் சிரிசர 1997. 11112
வெசாக் சிரிசர 1998. 11113
வெப்பவியக்கவியல். 11432
வெல்லாவெளி வரலாறும் பண்பாடும். 11994
வெள்ளையில் ஒரு புள்ளி: சிறு கவிதைகள். 11719
வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோர்களுக்கான சட்டம். 11321
வெளிநாடுகளில் தமிழர். 11973
வெற்றிகரமான கதை: மன உறுதியுடன் விடாமுயற்சிகொண்டது. 11331
வெற்றிகரமான வகுப்பறைக் கற்பித்தல்: பாடத்தைத் திட்டமிடல். 11354
வெற்றியின் பங்காளிகள். 11523
வெறிச்சோடும் மனங்கள். 11720
வென் வரைபடங்கள். 11075
வேடன் கண்ணப்பன்: நாட்டுக்கூத்து. 11392
வேதநூல். 11100
வேர் பதிக்கும் விழுதுகள்: சிறுகதைத் தொகுப்பு. 11806
வேரின் பிரசவங்கள். 11721
வேருக்காய் விசும்பும் பூக்கள்: கவிதைத் தொகுப்பு. 11722
வேரும் விழுதும். 11872
வேலணை மேற்கு சங்கத்தார்கேணி ஆதி வைரவப் பெருமானின் வைரவப் பிரசாதம். 11258
வேலி: கவிதைத் தொகுப்பு. 11723
வேழம் படுத்த வீராங்கனை (நாட்டுக்கூத்து). 11393
வேளாண்மை விளக்கம். 11452
வேனில் விழா. 11724
வைகறை: சிறுகதைகள். 11807
வைத்திய கலாநிதி அமரர் இளையதம்பி நன்னித்தம்பி அவர்களின் நினைவு மலர். 11932
வைதீக அபரக்கிரியா சங்கிரகம் (ஆசௌச விளக்கமும்). 11375
வையாபாடல். 12A44
வொலிபோல்: கரப்பந்தாட்டம். 11486
றோயல் வெள்ளி மலர் 1990-2015. 11366
ஜன்னல் ஓரத்து நிலா. 11725
ஜனநாயகமும் மனித உரிமைகளும்: கட்டுரைத் தொகுப்பு. 11302

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாதக பாஸ்கரன். 12A45
ஜாதகக் கதைகள்: சிறுவர்க்கான பிறமொழிக் கதைகள். 12A46
ஜீவகுமாரன் கதைகள். 11808
ஜீவனானந்தம்: ஜீவசேவையில் ஆனந்தித்த ஜீவனின் சிறப்பு மலர். 11910
ஜோதிடமும் வானியலும். 11107
ஜோர்ஜ் கீற். 11934
ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்: வெள்ளிவிழா மலர்: 1991-2016. 11181
ஸ்ரீ சர்வார்த்த சித்திவிநாயகர் தேவஸ்தானம்: மகா கும்பாபிஷேக மலர் 1993. 11182
ஷஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம்: ஆன்ம ஞான விழா சிறப்புமலர் 1981. 11165
ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம்: சிறப்புமலர் 1978. 11166
ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் அந்தாதி மாலை. 11259
ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் திருவூஞ்சற் பாமாலையும் பக்திப் பதிகமும். 11260
ஸ்ரீ மாமாங்க விநாயகர் பதிகம். 11261
ஸ்ரீ ராமகான சபா: இலங்கை பிராமணர் சங்கம் 1939-2014. பவள விழா மலர். 11167
ஸ்ரீ லங்கா தேசிய நூலகம்: ஞாபகார்த்த மலர் 1990. 11023
ஸ்ரீ லலிதா சகஸ்திரநாமம்:அன்னையின் அருட்பேராயிரம். 11262
ஸ்ரீதரன் கதைகள். 11809
ஸ்ரீமத் சுவாமி விபுலானந்த ஜீ. 11930
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் பால பாடக் கதைகள். 11507
ஸுலைமான் அரசரின் வைரச் சுரங்கம். 11524
ஷரந்தீபிலிருந்து மஹ்மூத் ஸமி அல் பரூதி. 11274
ஷேக்ஸ்பியர் நாடகங்களிலிருந்து கதைகள்: தொகுதி 1. 11509
ஹாத்திம்தாய் பாகம் 1. 11854
ஹிந்து மதம், பௌத்தம், இஸ்லாம்: ஓர் ஒப்பீட்டாய்வு. 11108
ஹிந்துஸ்தானி, மேற்கத்திய செந்நெறி இசைமரபுகள்: ஓர் அறிமுகம். 12A47
ஹோமர் மகாகவியின் இலியட். 11763

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் வழிகாட்டி

அகளங்கன் 11551,11578,11866,11872, 11929,11992

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் 11487

அங்கஸ், L.H. 11430

அடைக்கலமுத்து, அமுதசாகரன் **பார்க்க** இளவாலை அமுது

அண்ணாமலை, பெ. 11541

அநாதரட்சகன், மு. 11871

அப்துல்லா, றமீஸ் 11873

அப்பாச்சாமி, கா. 11154

அப்பாஸ், கே.ஏ. 11811,11852

அப்புக்குட்டி, க. 11490

அப்புத்துரை, சி. 11212,11497

அபிதவன். 11722

அபூபக்கர், A.M. 11268,11269,11270,11640,11643,11688

அம்பலவாணர், மறவன்புலோ செல்லம் 11502

அமரசிரி, M.S.U. 11023

அமிர்தசாகரர் 11400

அமிர்தநாயகம், பா. 11496

அமிர்தலிங்கம், ஏ. (ஜீவகவி) 11624,11681

அமிர்தலிங்கம், கோ. 11330

அமிர்தலிங்கம், சதாசிவம் 11346

அமீன், ஸீ.எம்.ஏ. 11108,11465,11524,11854

அயிசியலிஸ் 11736-37

அரசகேசரி 11530,11534

அரசரத்தினம், சி. 11314

அரவிந்தன், நவம் 12A13

அரியநாயகம், எம். 11470

அரியரெத்தினம், சந்தியாப்பிள்ளை **பார்க்க** வாகரைவாணன்

அரிஸ்றபான் 11738

அருணகிரிநாதர் 11207

அருணாசலம், சரோஜினிதேவி 11517

அருணாசலம், சி. 11907

அருணேசர் **பார்க்க** மாத்தளை அருணேசர்

அருமைநாதன், இ. 11456

அருள்குமரன், எஸ்.ரி. 11378

அருள்சந்திரன், மார்க்கண்டு 11162,11475,11900

அருள்நந்தி, வைத்திலிங்கம் 11433

அருள்நாயகம், சி.ஏ. 11470

அருள்மொழி, செ. 11344

அருள்மொழிச் செல்வன்,சு. 11133

அருள்மொழிராசா, மிக்கேல் **பார்க்க** நிலா தமிழின்தாசன்.

அருளானந்தம், எஸ். 11017

அருளானந்தம் ச. 11835,11931

அருளானந்தம், நீ.பீ. 11695

அருளானந்தம், ஸ்ரீகாந்தலட்சுமி. 11018

அரூஸ், ரா.ப. 11350

அல் அஸூமத் 11603,11766,11810,11882-83

அலாவுதீன், A. **பார்க்க** ஒலுவில் அமுதன்

அலியார், யூ.எல். 11582

அலியார், பௌஸியா 11582

அழகாபுரி அழகுதாசன். 11996

அன்புடீன் 11680

அனந்தராஜ், வல்வை ந. 11991

அனர்த்த முகாமைத்துவ நிலையம், 11337

அனார் 11384

அஜந்தகுமார், த. 11641

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்கர், ஏ.எம். 11579
அஸ்லம், வ.மு. 11691
அஸ்றப், யூசுப் எம். 11408
அஸ்ஹரீ, ஷேக் ஹஸன் 11055
அஸீம், சிலாவத்துறை ஏ.ஆர். 11668
அஸீஸ், பீ.ரீ. 11495
அஹமது, தாஸிம் 11719
ஆணி **பார்க்க** ராமநாதன், ஆனந்த கு.
ஆத்மநாத சர்மா, க.வை. 11262
ஆரணி. 11500
ஆரூரன், சிவ. 11847
ஆறுமுக நாவலர் 11133,11134,11215, 11227,11507,12A06,12A07,12A08
ஆறுமுகத் தம்பிரான் 11132
ஆனந்தராயர், பி. **பார்க்க** வேல்மாறன்.
ஆனந்தராஜா, P.A.C. 11734
ஆனந்தன், K.S. 11826
இக்பால், எம்.எச்.எப்.பலீலா 11422,11432
இணுவில் திருநெறிய தமிழ்மறைக் கழகம் 11171
இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம், 11015-16
இத்ரீஸ், A.P.M. 11304
இதயச்சந்திரா, எட்வேட் 11010,11665, 11736-38,11740-42,11752,11754,11762-63,11777,11945
இதயமனோகர், அல்பேட் 11674
இதயராஜ்,செ.ஜோர்ஜ் 11010,11477-78
இதயஜீவகருணா, உவெஸ்லி 11010
இப்சன், ஹென்றிக் 11739
இரகுநாதன், குணேஸ்வரி 11408
இரகுநாதையர், சந். 12A18
இரகுபதிபாலஸ்ரீதரன், இணுவையூர் ஆ. 11892
இரகுபரன்,க. 11118-22,11240-41,11873
இரகுவரன், பா. 11389
இரங்கராஜா, சிவகுருநாதன் 11325
இரத்தினப்பிரகாசம், செ. 11209-11
இரத்தினம், இ. 11042,11251,12A20
இரத்தினம், ஞானகலாம்பிகை 11466
இரவி, அ. 11851
இரவீந்திரன், அருணாசலம் 11459,11464
இரவீந்திரன், ந. 11294,11318
இரவீந்திரன், வீ. 11362
இராகி. 11633,11855
இராசநாயகம், சு. 11544,11549
இராசநாயகம், ஜெயலக்சுமி 11001
இராசமாணிக்கம். மா. 11409
இராசேந்திரம், சோ. **பார்க்க** தாமரைத்தீவான்
இராமகிருஷ்ண குருகுலப் பழைய மாணவர் மன்றம், 11910
இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், கல்முனை 11926
இராமகிருஷ்ண மிஷன் 11164
இராமதாஸ், பீ. 11927
இராமநாதன், நடராசா 11765
இராமநாதன், பொன். 11448
இராயப்பு, குருசுமுத்து **பார்க்க** கலையார்வன்
இராஜகுமாரன், கலைவாணி **பார்க்க** தமிழ்நதி
இராஜகுலவீரசிங்கம், கே.ரி. 11461
இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 11564
இலங்கைத் தேசிய நூலகம். 11020
இளங்கம்பன் 11503
இளங்கோ 11406
இளங்கோ, சுபாலினி 11433
இளங்கோ, புலவர் 11550
இளங்கோவன், இ. 11918
இளங்கோவன், வி.ரி. 11596
இளஞ்செழியன், நாவலர் ஏ. 11954
இளநெஞ்சன் முர்ஷிதீன். 11887
இளநெஞ்சன் முர்ஷிதீன் மேலும் **பார்க்க** முர்ஷிதீன், B.M.
இளமுருகனார், சோ. 11724,12A28
இளவாலை அமுது (இயற்பெயர்:). 11569

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைபிள்ளை, வே. 11373
இன்பமோகன், வ. 11285-88
இஸ்மத், ஷமீலா 11706
ஈழக் கவி **பார்க்க** நவாஷ், ஏ.எச்.எம்.
ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், 11938
ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம். 11153
ஈழத்துப் பூராடனார் **பார்க்க** செல்வராசகோபால் க.தா.
ஈழவாணி. 11689,11716
ஈஸ்வரலிங்கம், கே. 11624
ஈஸ்வரன், தெ. 11148
உதயகுமார், சமரபாகு சீனா 11606,11609
உதயன், எஸ்.ஏ. 11830
உமர் கையாம் 11761
உமா, ந. 11967
உமாகாந்தன், இ. 11918
உமாசங்கர், பி. 11328
உமாபதி சிவாசாரியார், கொற்றவன்குடி 11084,11132,11215
உமாமகேஸ்வரி, உதயகுமார் 11469
உயன்கொட, ஜயதேவ 11298
உவைஸ், அல்லாமா ம. முஹம்மது 11271,12A38
ஊரெழு வேலன் **பார்க்க** வடிவேலையா, சபா.
எஸ்.சிவா **பார்க்க** சிவதர்ஷினி, சுப்பிரமணியம்
ஏரம்பமூர்த்தி, ஏ.கே. 11467
ஏழாலை இலக்கிய கலாநிதி, பண்டிதமணி மு.கந்தையா நூல்வெளியீட்டுக் கழகம், 11088
ஐயாத்துரை, ஜனனி 11358
ஒலுவில் அமுதன். 11661
ஔவையார் 11081
கங்கை வேணியன், வை. **பார்க்க** வேலணை வேணியன
கச்சியப்ப சுவாமிகள் 11196,11197,11200
கடவுண் மாமுனிவர் 11229-30
கணபதிப்பிள்ளை, இ.வ. 11191
கணபதிப்பிள்ளை, ஓ.11392
கணபதிப்பிள்ளை, க. 11208,11226,11653
கணபதிப்பிள்ளை, குடாரப்பூர் வைத்தியர் செல்லப்பா 11158
கணபதிப்பிள்ளை ஐயர், சி. 12A21
கணபதிப்பிள்ளை, சி. 11116,11245
கணபதிப்பிள்ளை, மு. 11896
கணபதிப்பிள்ளை, வ. 11529
கணேசநாதன், சொ. 11168
கணேசலிங்கம், கார்த்திகேசு 11414,11418
கணேசலிங்கம், வீ.கே. 11442,11444
கணேசலிங்கன், செ. 11277
கணேசையர், சி. 11399,11530,11534,11557
கணேஷ், கே. 11727,11728,11811,11852
கணேஷமூர்த்தி மு. 11306
கதிரவேலு, சு.சி. 11235
கதிரித்தம்பி, சர்வேஸ்வரி 11607
கந்தசாமி, தமிழவேள் க.இ. 11147,11548, 12A34
கந்தசாமி, பரதன் 11381,11382
கந்தசாமி, மேனகா விஜயலட்சுமி 11317
கந்தமுருகஞானி 11839
கந்தையா, ஆறுமுகம் 11639
கந்தையா, இரா. 11141
கந்தையா, கா. 11699
கந்தையா, சி.ஆ. 11225
கந்தையா, மு. 11115,11128,11132,11150,11249,11374
கந்தையாபிள்ளை, ந.சி. 11050,11488,11533, 11874-75,11878
கம்பளைதாசன் 11944
கமலகாந்தன், சக்திவேல் **பார்க்க** வல்வைக் கமல்
கமலநாதன், சா.இ. 11626,11755
கமால்தீன், எஸ்.எம். 11022
கரவை மு.தயாளன் 11831

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரீம், ஏ.யூ.முஹம்மது அப்துல் 11267
கரீம்தீன், ஜெ.டீ. 11342
கருணாகரமூர்த்தி. பொ. 11820,11898
கருணாகரர், அ. 11419
கருணாகரன், வே. 11308-09,11315
கல்வி வெளியீட்டுத் திணைக்களம். 11279, 11368,11369,11370,11405,11411-12,11415-16
கலாமணி, த. 11339,11351,11595,11743,11771
கலாரசிகன் (அபிராம்). 11691
கலாவிஸ்வநாதன். 11628
கலீல், எம்.ஐ.எம். 11336
கலைச்செல்வன். 11940
கலைஞர் குழந்தை **பார்க்க** செபமாலை, செ.
கலையார்வன் 11744,11897
கவிமோகன்ராஜ், பி. 11624
கவியழகன், குணா 11817
கற்சுறா. 11571
கனகசபாபதி, பொ. 11795
கனகசபாபதி ஐயர், வே. 11257,11608
கனகசபாபதிப்பிள்ளை, செ. 11091
கனகசபாபதிப்பிள்ளை, தண்டிகை 11678
கனகசபை, பொன்.அ. 11242
கனகரட்ணம், புஷ்பா 11919
கனகரத்தினம், த. 11112-13,12A46
கனகரவி. 11958
கனகலதா, கே. **பார்க்க** லதா
கனகலிங்கம், கஸ்தூரி 11686
கனகலிங்கம், ஹேமலதா 11512
கனிவுமதி. 11568
கஜன். 11923
கஸ்புள்ளா, ஏ.எம். 11644
காசி. ஆனந்தன். 11649-50,11956,12A12
காசிதாசன் 11996
காசிம், ஏ.சி.ஹில்மி **பார்க்க** புரோட்வே-ஹில்மி
காசிம், சுஜப் எம். 11972
காசிலிங்கம், அற்புதராணி **பார்க்க** மலரன்னை
காசினி 11290
காத்தான்குடி பௌஸ் (ஷர்கி), மௌலவி 11273,11710
காதிறு நாவலர், வா.குலாம் 12A38
கார்த்திகேசு சுவாமிகள். 11077
கார்த்திகேசு யோகி, க. 11207
கார்த்திகேயப் புலவர் 12A26
காராளபிள்ளை, வே. 11138
காளிதாசன் **பார்க்க** வீரகத்தி, க.
கானா பிரபா. 11275,11985
கிங்ஸ்பரி, பிரான்சீஸ் 12A35
கிருபானந்தவாரி 11200
கிருபானந்தா. நயினை கி. 11856
கிருஷ்ணகுமார், சு.11362
கிருஷ்ணகுமார், சோமேசசுந்தரி 11038,11886
கிருஷ்ணசாமி, பி. 11166
கிருஷ்ணபிரியன், சி. 11721
கிருஷ்ணபிள்ளை, இரா. **பார்க்க** இராகி
கிருஷ்ணபிள்ளை, கே.கே. 11239
கிருஷ்ணபிள்ளை, சின்னையா **பார்க்க** திமிலைத் துமிலன்
கிருஷ்ணமூர்த்தி, கே.எஸ்.11105
கிருஷ்ணராஜா, தவபாக்கியம் 11832
கிளிநொச்சி கலாசாரப் பேரவை, 11558-60
கிளிநொச்சி மகா வித்தியாலயம், 11356,11357
கிளிநொச்சி றோயல் கல்வி நிலையம், 11366
கு.வி.பதிப்பகம். 11278
குகதாசன், சுமதி 11630
குடாஹெட்டி, இந்திக 11492
குணசிங்கம், ஏ.எஸ். 11182
குணசிங்கம், செல்லத்துரை 11978
குணசேகரம், கே.வி. 11101
குணநாதன், ஓ.கே. 11511,11514
குணரத்தினம், செல்லத்துரை 11655
குணரெத்தினம், செ. 11714,11793,11824
குந்தவை 11767

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரகுருபரநாதன், இ. 11222
குமரன், எஸ்.ரி. 11378
குமரிவேந்தன், நா.வை. 11398,11764,11970
குமாரசாமி, க.இ. 11137
குமாரசாமி, கணபதிப்பிள்ளை 11158
குமாரசாமி, செல்லையா 11838
குமாரசாமி, மா. 11206
குமாரசாமி சர்மா, இ. 11159
குமாரசுவாமிப் புலவர், அ. 11078,11400,11535
குமாரசூரியப் பிள்ளை, உடுப்பிட்டி ம. 11218
குமாரவேல், வே. 11647
குரானா, றியாஸ் 11698
குருப்பு, ராஜா 11112-13
குரும்பசிட்டி சன்மார்க்க சபை. 11142
குரொயனகி, தெத்சுக்கோ 12A29
குலரத்தினம், க.சி. 11135,11280
குலேந்திரன், பொன். 11800
குறிஞ்சி, கண. 11997
குறிஞ்சிவாணன், 11584
கெங்காதரன், நவநீதகிருஷ்ணன் 11457
கெங்காதரானந்தஜீ, சுவாமி 11100
கெஜரெத்தினம், க. 11983
கேசவதாசன், க. 11061-63,11065,11071-72,11075
கேசவன், சிவகுருநாதன் 11543
கேணிப்பித்தன் **பார்க்க** அருளானந்தம் ச.
கேதீஸ்வரன், ம. 11172
கைலாசபதி, க. 11157
கைலாசபிள்ளை, த. 12A06,12A07,12A08
கொழும்பு வலயக் கல்விக் காரியாலயம், 11563
கொழும்பு விவேகானந்த சபை. 11146
கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலயம், 11365
கொழும்புத் தமிழ்ச் சங்கம். 11030
கோகுலன், வி. 11437
கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம். 11363
கோப்பாய் சிவம் **பார்க்க** சிவானந்த சர்மா, ப.
கோபாலகிருஷ்ணன், ப. 11175
கோபாலசிங்கம், சீ. **பார்க்க** வெல்லவூர்க் கோபால்
கோபாலபிள்ளை, க. 11803
கோபிராஜ், குணரத்தினம் 11979
கோவூர், ஏபிரஹாம் ரி. 12A40
கோவைக்கிழார் **பார்க்க** குமாரசாமி, க.இ.
கௌதமன், எஸ். 11408
கௌரிஅனந்தன். 11843
கௌரிகாந்தன், முருகேசு 11860
கௌரிதாசன், அம்பலவாணர் 11592
சக்தி சாந்தன், 11381-82
சக்திதாசன், இணுவையூர் 11634
சகாதேவராஜா, வி.ரி. 11925
சகாயசீலன், இ. 11111
சங்கர பண்டிதர் 11138
சங்கராச்சாரிய சுவாமிகள் 11099
சச்சிதானந்தம், சதாசிவம் 11002
சச்சிதானந்தன், க. 11912
சசிகரன், செட்டியூர் ப. **பார்க்க** பசுந்திரா சசி
சசிகாந்த், எஸ். 11437
சசிரேகா, எஸ். **பார்க்க** மனோஷா
சசிவதனி, தவம் 11319
சட்டநாதன், க. 11794
சடகோபன், இரா. 11778
சடாட்சரதேவி, இ. **பார்க்க** குந்தவை
சண்முகநாதன், வேலுப்பிள்ளை **பார்க்க** முகில்வண்ணன்.
சண்முகநாதன், ஹாயத்திரி 11358
சண்முகம், நாக. 11205
சண்முகராசா, இ. 11079
சண்முகராஜா, கே.ரி. **பார்க்க** வீணைமைந்தன்
சண்முகலிங்கம், க. 11298,11314,11376

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகலிங்கம், குழந்தை ம. 11739
சண்முகன், குப்பிழான் ஐ. 11648
சத்தியதாஸ், கீதாஞ்சலி 11443
சதாசிவ ஐயர், தி. 11385,11407
சதாசிவ பண்டிதர், சி.ந. 11255
சதாசிவம், ஆ. 11861
சதாசிவம், ப. 11163
சதீஸ்குமார், அருமைநாதன் **பார்க்க** சம்பூர் ஸதீஸ்
சதீஷ்குமார், சிவலிங்கம் 11973
சந்திரகலா, வேலு **பார்க்க** வெற்றிச்செல்வி
சந்திரகுமார், முருகேசு 11953,11963-64
சந்திரசேகர சர்மா,இர. 11059
சந்திரசேகரம், சி. 11285-88
சந்திரசேகரம், சின்னத்தம்பி 11024
சந்திரசேகரம், செ. 11804
சந்திரசேகரம், செல்வரத்தினம் 11305,11307, 11319
சந்திரசேகரம், சோ. 11343,12A09
சந்திரசேகரி, பொன். 11920
சபாநாதன், அருந்ததி 11934
சபாபதி ஐயர், வி. 12A45
சபாரத்தின முதலியார், ச. 11547
சபாரத்தினம், ஆ. 11894 11895
சபாரெத்தினம், ஆரையம்பதி க. 11975
சம்பந்தமூர்த்தி, T.A. 11204
சம்பந்தன். 11510,11539
சம்பந்தன், ஐ.தி. 11316
சம்பூர் ஸதீஸ் 11829
சமூக விஞ்ஞானிகள் சங்கம், 11281-84
சயந்தன். 11821
சயந்தன், எஸ். 11445
சர்மா, ஸ்ரீ அ.க. 11426
சரவணமுத்தன், அ. 11261
சரவணன், கை. 11937,11946
சரஸ்வதி புத்தகசாலை. 11185
சலாஹுத்தீன், எம்.ஐ. 11327
சலாஹுத்தீன், றிஸ்வான் எம். 11421,11423, 11428-29
சவுந்தரசண்முகநாதன், முருகேசு 11253
சாணக்கியர் 11078
சாந்தன், ஐயாத்துரை 11520
சாம்பசிவ சர்மா, இராஜ. சிவ. 11541
சாமி, பி.கே. 11103
சாமிநாதையர், உ.வே. 11530
சிங்காரவேலன், சொ. 12A26
சித்தாந்தன் 11622
சிதம்பரப்பிள்ளை, ச. 11413
சிதம்பரப்பிள்ளை, த. 11749
சிரிவர்தன, தெனகம 11726
சில்வா, S.F.D. 11896
சிவகுமார், ஆதிலட்சுமி 11796
சிவகுமார், தம்பிராசா 11353
சிவகுமாரன், கே.எஸ். 11776
சிவகுருநாதன், எஸ். 11962
சிவசாமி, வி. 12A05
சிவதர்ஷினி, சுப்பிரமணியம் 11670
சிவயோகன், சா. 12A24
சிவரெத்தினம், சு. 11285-88
சிவலீலன், மாதவி 11580
சிவனடியான், க. 11837
சிவானந்தமூர்த்தி, கனகசபை 12A42
சிவானந்தன், செல்வமனோகரி **பார்க்க** மனோகரி
சிந்துஜா, க. 11011
சிவக்கொழுந்து, வே. **பார்க்க** யாழ்ப்பாணன்
சிவங்கருணாலய பாண்டியனார், புலவர் 11042,11746
சிவசண்முகராஜா, சே. 11447
சிவசுப்பிரமணியம், சரோஜினிதேவி 11223
சிவசுப்பிரமணியம், செ. 11700
சிவசுப்பிரமணியம், வ. 11626
சிவசேகரம், சி. 11683
சிவதொண்டன் சபை. 11087,11903,12A27
சிவநாதன், ந. 11747

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பிரகாச சுவாமிகள். 11221
சிவப்பிரகாச பண்டிதர், ச. 11152
சிவப்பிரகாசம், நம.11588
சிவபாதசுந்தரக் குருக்கள், க. 11140
சிவபாலசுந்தரன், அ. **பார்க்க** ஆரணி
சிவமலர், சு. 11587
சிவயோகலிங்கம், வேலுப்பிள்ளை 11335
சிவராசசிங்கம், நாகேசு 11155
சிவராசசிங்கம், வ. 11197,11208
சிவராசா, சி. 11462
சிவராசா, சு. 11783
சிவராம், தருமு 11884
சிவராஜா, நடா 11625
சிவராமகிருஷ்ண சர்மா, பா. 12A41
சிவராமலிங்கம், யாமினி 11216
சிவலிங்கம், மூ. 11525
சிவனேசன், சின்னையா 11410
சிவானந்த சர்மா, ப. 11025,11107,11114, 11220,11125,11126,11139,11371-72,11375,11395,11528,11591,11775,11865,11868, 12A10,12A15,12A22,12A23
சிற்றம்பலம், க. 11178
சிற்றம்பலம், சி.க. 12A32
சிற்றம்பலம், வை.க. 11186,11187,11188, 11236,11684
சிறிதரன், திருநாவுக்கரசு (தோழர் சுகு). 11959
சிறீக்கந்தராசா, செல்லத்தம்பி 11401,11652
சிறீதேவி, என். 11918
சின்மயா மிஷன். 11904
சின்னத்தம்பி, மா. 12A03
சின்னத்தம்பிப் புலவர். 12A33
சின்னையா, சி. 11192
சின்னையா, வல்வை வே. 11785,11833
சீவல்புரி சிங்காரம். 11996
சுடரொளி வெளியீட்டுக் கழகம் 11911
சுத்தானந்த பாரதியார், கவியோகி 11057
சுதர்சன், செல்லத்துரை 11025,11941
சுதாகரன், பேபி 11498
சுந்தரதாஸ், ச. 11480
சுந்தரம்பிள்ளை, காரை.செ. 11756,12ய30
சுந்தரராஜன், அ.சே. 11537-38,11554
சுந்தரலிங்கம், நா. 11417
சுந்தரானந்தம், நா. 11163
சுப்பிரமணிய சாஸ்திரிகள், ச. 11193
சுப்பிரமணியம், கே.கே 11176
சுப்பிரமணியம், ச. 11196,11213
சுப்பிரமணியம், நா. 11885
சுப்பிரமணியன், நா. 12A11
சுப்பையபிள்ளை, ந. 11542,11545,11556
சுப்யான், B.A.S. 11971
சுமந்திரன், மதியாபரணன் 11322
சுமன், பாஸ்கரன் 11377
சுமன், வல்வை மு.ஆ. 11682,11704
சுரவீர, ஏ.வீ. 11814
சுரேந்திரன், ஆர். 11512
சுரேஸ்குமார், சு. 11431
சுரேஷ்குமார், எஸ். 11424
சுஜந்தன், கே. 11437
சுஜீவா, என். 11445
சூரியன், மு.க. 11161
செங்கதிர்ச்செல்வன், பொ. 11359
செந்திநாதையர், காசிவாசி 11090,11094-97
செந்தில் வடிவேல், ஆ. 12A02
செபமாலை, செ. 11387,11676
செயராமன், த. 11998
செல்லத்துரை, அரியான்பொய்கை கை. 11393
செல்லத்துரை, க.ம. 11224
செல்லத்துரை, சு. 11049,11507
செல்லத்துரை, நவாலியூர் நா. 11850
செல்லப்பா, நா. 11098
செல்லவேல், எம்.பி. 11614
செல்லையா, மா.சே. 11531
செல்வநாதன், L.L. 11102

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வநாயகம், அருள் 11891
செல்வநாயகம், த. 11930
செல்வமனோகரன், தி. 11082,11086,11127
செல்வரத்தினம், மயிலு 11425
செல்வராசகோபால் க.தா. 11010,11037,11191, 11233,11261,11381-82, 11527,11627, 11665, 11714,11736-38,11740-42,11752-54,11762-63,11776-77,11945
செல்வராசகோபால் பசுபதி **பார்க்க** இதயமனோகர், அல்பேட்
செல்வராசகோபால், பி.ப. 11753
செல்வராஜா, அரியாலையூர் மிஷாந்தி 11846
செல்வராஜா, என். 11013,11031,11986
செல்வராஜா, தனுஜா 11433
செலிரா, உ.இ.ஜீ. 11627
சேக்கிழார் 11227
சேக்ஸ்பியர், வில்லியம் 11743
சேர். பொன்னம்பலம் அருணாசலம் நூற்றாண்டுவிழாச் சபை 11913
சொக்கப்ப நாவலர் 11532
சொக்கலிங்கம், க. 11546
சொக்கன் **பார்க்க** சொக்கலிங்கம், க.
சொப்கொக்கில்ஸ் 11741
சொர்ணலிங்கம், செ. 11219
சோதிதாசன், கந்தையா **பார்க்க** வேலணையூர் தாஸ்
சோமகாந்தன், நா.11027
சோமசுந்தரப் புலவர், க. 11664
சோமசுந்தரம், தயா 12A24
சோமாஸ்கந்தக் குருக்கள், நா. 11056
சோலைக்கிளி. 11701
ஞானசேகர ஐயர், ஞானலக்ஷ்மி 11167
ஞானசேகரன், தி. 11562
ஞானப்பிரகாசம், க.த. 11110
ஞானப்பிரகாசமுனிவர், திருநெல்வேலி 11082
ஞானப்பிரகாசர். 11396
ஞானலிங்கம், மாணிக்கம் 11993
ஞானா சிவசுப்பிரமணியம், 11168
ஞானேஸ்வரன், பரம் ஜி. 11849
டயஸ், கந்தசாமி அன்ரன் 12A42
டயஸ், சிட்னி மாகஸ் 11522
டானியல், ஜோசப் அமுதன் **பார்க்க** மன்னார் அமுதன்
டி சில்வா, பிரேமகுமார 11276
டி சில்வா, மகேஷா 11324
டேவிட், கே.ஆர். 11787
டேவிட், ஜே. **பார்க்க** பைந்தமிழ்க் குமரன்
த சில்வா, ஸ்ரீ சார்ள்ஸ் 11081
தகவம் கதைஞர் வட்டம் 11779
தங்கவேல், சின்னையா **பார்க்க** திமிலை மகாலிங்கம்
தங்கேஸ்வரி, க. 11381-82
தந்திரதேவா. சுவாமி 11217
தபேந்திரன், வேதநாயகம் 11990
தம்பிலுவில் ஜெகா. 11584
தம்பையா, சி.கா. 11540
தமயந்தி. 11380
தமயந்தி சைமன். 11769
தமிழ்க் கிறுக்கன் **பார்க்க** சிவராஜா, நடா
தமிழ்நதி 11841
தமிழ்மாறன், வி.ரி. 11302
தயாபரன், மைதிலி 11629,11818
தயாபரன், வசந்தி 11952
தர்காநகர் ஸபா **பார்க்க** ஸபா, தாஜ்தீன் முஹம்மட்
தர்மராஜா, நா. **பார்க்க** அகளங்கன்
தர்மலிங்கம், தி. 11561
தர்மினி. 11581,11620
தர்ஸன், தவராசா **பார்க்க** யாழரசு
தருமலிங்கம், ந. 11237,11243
தருமலிங்கம், நீர்கொழும்பு ந.11259,11260
தருமலிங்கம், பெரியதம்பிப்பிள்ளை 11149
தவச்செல்வன். சு. 11864
தவசிதன், பொன்னுத்துரை 11420
தவசேகர், தளையசிங்கம் 11329

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவமணிதேவி, சாம்பசிவம் 11014,11930
தவரத்தினம், திருச்செல்வம் 11341
தவராஜா, வெ. 11732
தற்பரன், ஜெகநாதன் 11059
தனபாலசிங்கம், எஸ்.ஆர். 11604
தனபாலசிங்கன், செ. 11177,11202,11244
தனபாலன், பாலசுப்பிரமணியம் 11338
தனிநாயக அடிகள். 11301
தனுஸ், த. 11691
தனேந்திரா, வி.பி. 11850
தாமரைத்தீவான் 11718
திக்குவல்லை கமால் 11522-23,11801
திமிலை மகாலிங்கம் 11840
திமிலைத் துமிலன் 11745
தியாகராசா, மு. 11203
தியாகராஜா, எஸ்.டி.11916
தியாகராஜா. சிவ. 11842
திருக்குறள் மன்றம். 11863
திருச்சந்திரன், செல்வி 11293
திருச்செல்வம், எஸ். 11026
திருஞானசம்பந்தபிள்ளை, ம.வே. 11160,11547,11552,11553,11556,11886
திருநாவுக்கரசு, சிவசிதம்பரம் 11250
திருநாவுக்கரசு, செ. 11408
திருநாவுக்கரசு, மு. 11708
திருநீலகண்டன், இந்திரா 11258
திருப்பரங்குன்றன், சுந்தரம்பிள்ளை 11184
திருமலர்ப் பாக்கியம், சி. 11751
திருவிளங்க தேசிகர் 11089
தில்லை நடராஜா, உடுவை எஸ். 11505,11513, 11906,12A39
தில்லைநாதப் புலவர், சரவணையூர் ஆ. 11252
தில்லைநாதன், சாமித்தம்பி 11289
தில்லையம்பலம், தே. 11425
திலகநாதன், க. 11739
திலகநாதன், கயிலைநாதன் 11743
திவ்வியநாதன், ஜெயரெத்தினம் 11890
திறந்த பல்கலைக்கழகம். 11032-33,11035-36
துரை, கி.செ. 11402
துரைசாமி, செ. 11999
துரைசிங்கம், த. 11404
துரையப்பாபிள்ளை, தெ.அ. 12A19
துரைரட்ணம், க. 11518
துரைராசா, தம்பு. 11238
துரைராஜரெட்ணம் க. 11005
துரைராஜா, பெ. 11974
துஷ்யந்தன், வெ. 11720
துஷ்யந்தி, பீ. 11437
தெணியான் 11782,11823,11827,11947
தெய்வநாயகம், சீ. 11119-22
தெய்வீகன், ப. 11041
தெய்வேந்திரன், பொன். 11870
தெருத்தூசியோன். 12A31
தெளிவத்தை ஜோசப் 11798
தேசிய கல்வியியற் கல்லூரி 11173
தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா 11928
தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை. 11012,11942
தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையம். 11021
தேவதாஸ், தம்பிஐயா 11179,11476,11853
தேவராசன், சி.ந. 11463
தேவராசா, வை.செ. 11248
தேவராய சுவாமிகள் 11205
தேவராஜா, வீ. 11039
தேவா-ஜேர்மனி 11693
தேவானந்த், தேவநாயகம் 11473
தேவேந்திரன், த.ம. 11483-84,11486
தொழிலாளர் தேசிய சங்கம். 11303
தோகையார் 11084
நக்கீரன் **பார்க்க** ஜெகநாதன், வி.
நக்கீரன் மகள். 11572
நகுலசிகாமணி, ந. 11967
நடராசா, எப்.எக்ஸ்.சி. 11715,11930,11977
நடராசா, க.செ. 12A44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசா, செ. 11893
நடராசா, மட்டுவில் ஆ. 11201,11627
நடராசையர், சு. 12A18
நடராஜக் கவிராயர், வி. 11731
நடராஜன், வ. 11536
நடராஜா, சந்திரா 11189
நடேசன், கந்தையா **பார்க்க** தெணியான்
நந்தன் 11960
நமசிவாயம்பிள்ளை, இ. 11588
நல்லலிங்கம், சந்தனா 11199,11601
நவமோகன், வே. 11004 11006-09,11080
நவரட்ணம், உ. 11927
நவரத்தினம், K.N. 11102
நவாலியூரான் **பார்க்க** செல்லத்துரை, நவாலியூர் நா
நவாஷ், ஏ.எச்.எம். 11593,11879
நற்குணதயாளன், மு. **பார்க்க** கரவை மு. தயாளன்
நஸ்புள்ளாஹ், ஏ. 11575,11772
நாகமணிப் புலவர், நயினை வரகவி 11982
நாகலிங்கம், அன்புமணி இரா. 11191,11233, 11261,11381-82,11627
நாகேந்திரம் கருணாநிதி. 11093,11129,11228
நாகேஸ்வரன், கனகசபாபதி 11869
நாச்சியாதீவு பர்வீன். 11673
நாதன், து.ரா. 11624
நாவலர் அச்சுக்கூடம். 11003
நாவுக்கரசன், சாந்தி 11118
நித்தியானந்தன், இரத்தினம் 11151,11969
நித்திலவர்ணன், ஆனந்தமயில் 11349,11889
நிதானிதாசன் 11605
நியூத், எச்.ஜீ. 11434
நிலா தமிழின்தாசன். 11703
நிழல் எட்வேட் சந்திரா 11477,11478
நி/மத், எஸ்.எச். 11656
நிஷாகரன், சி. 11937
நிஹால்குமார 11519
நீர்வை பொன்னையன். 11789
நீர்வை மணி. 11908
நீலகண்டர், ஞானப்பிரகாசர் 11152
நுஃமான், எம்.ஏ. 11281-84,
நூர்தீன், என்.எம். 11705
நூலகச் சங்கங்களின் சர்வதேச சம்மேளனம் 11022
நூறுல்ஹக், எம்.எம்.எம். 11263,11961
நெடுந்தீவு நேதாமோகன் 11632
நெடுந்தீவு முகிலன். 11646
நெடுமாறன், பழ. 11998
நேசக்கரம், சாந்தி 11822
நேசையா, தேவநேசன் 11300
நௌபர், முபஷ்ஷிரா 11590
நௌபல், முகம்மதுத்தம்பி முகம்மது 11320,11326,11364,11645,11677,11679, 11965
பசுந்திரா சசி 11790
பஞ்சலிங்கம், சு. 11490
பஞ்சாட்சர சர்மா, ச. 11395
பஞ்சாட்சரக் குருக்கள், சிவ. 11256
பஞ்சாட்சரம், ச.வே. 11234
பண்டா, நிமல் 11518
பண்ணாமத்துக் கவிராயர் 11274
பத்மநாதன், சி. 11117-22,11905,11966
பத்மநாதன், செ. 11456
பரணீதரன், க. 11771
பரந்தாமன், அலெக்ஸ் 11659,11784
பரமசிவானந்தம், அ.மு. 11899
பரமநாதன், இணுவையூர் வ.க. 11611
பரமநாதன், சி. 11417
பரமேசுவரியார், இ. 12A28
பரமேஸ்வரம்பிள்ளை, சுஜீந்தன் 11819
பார்த்தீபன், கனகரட்ணம் **பார்க்க** முல்லைப் பார்த்தா
பாரூக், சய்யத் முகமத் **பார்க்க** பண்ணாமத்துக் கவிராயர்
பாலகிருஷ்ணன், சிவனேஸ்வரி 11231
பாலச்சந்திர சிவாச்சாரியார், க. 11085

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலச்சந்திரன், ஞானம் 11621
பாலசிங்கம், மா. 11834
பாலசுகுமார். 11379
பாலசுந்தரம், இ. 11857
பாலசுப்பிரமணியம், கந்தசாமி 11950
பாலசுப்பிரமணியம், நீதுஜன் 11819
பாலசூரியன். பா. 11922
பாலேந்திரா, க. 11471
பாறக்கடவு, பி.கே. 11810
பாஸ்கரன், சரோஜினி 11083
/பிராங்கோ, இவன் 11727
பிரபாகரன், ஆர். 11039
பிரான்சிஸ், பெ. 11355
பிரிந்தா 11981
பிரியதர்ஷன், P.U.C. 11482
பிரியா, த. 12000
பிரேமிள் **பார்க்க** சிவராம், தருமு
பிரைட் புக் சென்டர். 11481
புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம் 11028-29
புஞ்சிஹேவா, எஸ்.ஜீ. 11962
புண்ணியமூர்த்தி, கி. 11927
புரோட்வே-ஹில்மி 11605
புவிராஜ்,வே. 11597
புஷ்பராஜ், சிவலிங்கம் 11297
பூநகரி பிரதேச கலாசாரப் பேரவை, 11987
பெண்கள் கைத்தொழில் வர்த்தக சபை 11450
பெரியதம்பிப் பிள்ளை. புலவர்மணி ஏ. 11715
பெருமாள், எஸ். 11636
பெரேரா, எஸ்.ஜேசுராஜன் 11445
பெரேரா, கமல் 11521,11812
பெரேரா, டெனிசன் 11812
பேரம்பலம், வே. 11452
பேரின்பதாசன், க. 11637
பேரின்பநாதன், ஆ. 11332,11348
பைந்தமிழ்க் குமரன் 11773
பொய்யாமொழிப் புலவர் 11532
பொலிகை ஜெயா. 11788
பொன்னம்பல உபாத்தியாயர், க. 11902
பொன்னம்பலபிள்ளை, ந.ச. 11160
பொன்னம்பலம், ச.சு. 12A34
பொன்னம்பலம், மு. 11613
பொன்னுத்துரை, எஸ். 12A16
பொன்னையா, ஆ. 11654
பொன்னையா, ஐயம்பிள்ளை 11194
பொன்னையா, நா. 11174
போசராசபண்டிதர் 12A18
போபகே, லயனல் 11957
பௌசர், எம்.ஏ.எம். 11296
பௌநந்தி, அ. 11771
மகாதேவா, இ. 11106
மகாதேவா, ப.க. 11982
மகாராஜா ஸ்ரீராஜசேகரா **பார்க்க** பாலசுப்பிரமணியம், கந்தசாமி
மகாலிங்கம், க. **பார்க்க** மொழிவரதன்.
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் 11936
மகேசன், நா. 11515
மகேந்திரராசா **பார்க்க** குமரிவேந்தன், நா.வை.
மகேந்திரராஜா, எம்.என். 11104
மகேந்திரன், கோகிலா 11059,11291,11949
மகேந்திரன், மாரி 11479
மகேஸ்வரன், கண. 11781
மகேஸ்வரன், வ. 11136
மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை, 11567
மதன், ஏ.பீ. **பார்க்க** மதனவாசன், ப.
மதனவாசன், ப. 11043
மதுசூதனன், தெ. 11927
மயில்வாகனம், அ. 11509
மயில்வாகனம், இரா. 11092,11232
மயில்வாகனன், முருகேசு 11711

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயூரரூபன், ந. 11937,11946
மர்ஜான். ஏ.எச்.எம். 11427
மரியாம்பிள்ளை, ரூபன் 11034
மருதபிள்ளை, சி. 11230
மருதம் கேதீஸ் 11622
மருதமைந்தன் 11570,11748
மலரன்னை 11774,11806,11844
மறைமலை அடிகள். 11730
மன்னார் அமுதன். 11573,11709
மனோகரன். எஸ்.எஸ். 11067,11069-70,12A01
மனோகரன், சிவனு 11799
மனோகரி 11666
மனோஷா 11660
மஜீத். 11594,11642,11675,11759-60,11867
மஜீத், மருதூர் ஏ. 11690
மஷ்ஹூர், சிராஜ் 11951
மாசிலாமணி, சொர்ணவதி 11143,11144
மாணிக்க இடைக்காடர். நா. 11859
மாணிக்கவாசகர் சுவாமிகள் 11248
மாத்தளை அருணேசர் 11105
மாத்தளை செல்வா 11915
மார்க்கண்டேய ரிஷி தாஸ். 11131
மாவைச் சின்னக்குட்டிப் புலவர் 11678
மாஷல், ஏ. மில்னிஸ் 11434
மிக்கோர்சிங்கம், நீ. 11391
மித்ரரத்ன, டபிள்யூ.ஜீ. 11331
மிராண்டா, எஸ்.ஏ. 11386,11988
மின்ஹாஜ், எச்.எம். 11272
மீராபாரதி. 11060
முகில்வண்ணன். 11858
முகில்வாணன். 11574,11697
முகைதீன், எச்.எம்.பி. 11813
முகைதீன், றிஸ்வான் சேகு 11492
முத்தமிழ்ச் செல்வன், மு.சு.மா. 11996
முத்தரசன், திருநாவுக்கரசு 11066
முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, கு. 11577
முத்துக்குமாரன், எஸ். 11733
முத்துக்குமாரன், பொன். 11544
முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ. 12A36
முத்துராசா, காயத்திரி 11685
முத்தையா, க. 11490
முத்தையா, நா. 11053
முதாகே, விமலதாஸ 11523
முர்ஷிதீன், B.M. 11887
முரளிதரன், இ.சு. 11770-71
முரளீதரன், இ. 11438
முருகதாஸ், அம்மன்கிளி 12A17
முருகவேள், சிற்றம்பலம் 11019,11194
முருகானந்தன், எம்.கே. 11435
முருகுப்பிள்ளை, ஆ.சி. 11052
முருகுப்பிள்ளை, கிறிஸ்டி 11797
முருகேசபிள்ளை, புஷ்பாஞ்சலி 12A25
முருகையன், இ. 11743
முல்லைக் கமல், 11937
முல்லைப் பார்த்தா 11663
முனிதாச, குமாரதுங்க 11517
முஜாரத், ஏ.கே. 11618
முஸ்தபா, ஏ.எம்.முகமட் 11319
முஹம்மத், வெலிகம ரிம்ஸா 11589
முஹியத்தீன், எம்.ஐ.எம். 11952
மெலிஞ்சிமுத்தன். 11791
மேகராசா, த. 11671, 11862
மேகலா. 11290
மேமன் கவி. 11489,11576,11812
மேரா **பார்க்க** மேகராசா, த.
மொழிவரதன். 11638
மொழிவாணன். 11600
மோகன்ராஜ், கலைவாணி 11984
மோகன்ராஜ், செ. **பார்க்க** நெடுந்தீவு நேதாமோகன்
மோர்கன், லோரன்ஸ் 11527
யசோதா, ப. 11118
யதார்த்தன். 11981
யதீஸ்கர், எஸ். 11445
யமுனானந்தா, சி. 11439
யாக்கூத், எம்.எச்.முகம்மது 12A29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பிரதேசக் கலைமன்றம், 11390
யாழ்ப்பாணன். 11602
யாழரசு. 11694
யுகபாலசிங்கம், வே. 11068
யுனெஸ்கோ 11508
யூரிப்பைடஸ் 11740
யேசுதாசன், ம. 11383
யோகராஜா, ஏ.ஜி. 11446,11474
யோகேந்திரநாதன், நா. 11836
யோகேந்திரன், திருக்கோவில் யோகா 11499, 11635
யோசப் பாலா, செ. 11058
ரகுநாதன், என்.கே. 11888
ரகுநாதன், விஜிதா 11619
ரகுராகவன், க. 11460
ரஞ்சகுமார், எஸ். 12A43
ரஞ்சி, சுவிஸ் 11290,11693
ரணதுங்க, அருண பண்டார 11422,11428-29, 11432
ரமணன், ரீ. 11937
ரமேஷ், சி. 11622
ரவி, மு. 11169
ரவீந்திரகுமாரன், ந. 11306
ரவீந்திரராஜா, வி. 11453
ரவீந்திரன், க. **பார்க்க** கனகரவி. 11958
ரவீந்திரன், மோகனவதனி 11334
ரஸாக், இம்தியாஸ் எம். **பார்க்க** நிதானிதாசன்
ரஹ்மதுல்லாஹ், நுஸ்ரி 11598
ராமநாதன், ஆனந்த கு. 11713,11816
ராமலிங்கம், என். 11492
ராமேஸ்வரன், சோ. 11506
ராஜ் இருதயா. 11997
ராஜ்குமார், யோ.யோண்சன் 11501
ராஜ்குமார், ராஜசிங்கம் சார்ள்ஸ் **பார்க்க** தெருத்தூசியோன்
ராஜகவி றாஹில் **பார்க்க** றாஹில், அப்துல் கரீம்.
ராஜவரோதயம், முருகேசு **பார்க்க** கந்தமுருகஞானி
ராஜன், கே. **பார்க்க** துரைராஜரெட்ணம் க.
ராஜன், V.A.T. 11995
ராஸீக், ஏ.சீ.எம். 11814
ரிஸ்னா, தியத்தலாவ எச்.எப். 11807,11692
ரிஹான், தெல்தொட்டை ஹாஜா. 11617
ரூபன், த. 11725
ரோய், எம். 11367
லதா 11696
லாவன்னா லத்தீப். 11651
லியனகே, சுதந்த 11427
லிலந்திகுமாரி. 11321
லுணுகலை ஸ்ரீ 11266
லெப்பை, அப்துல் காதர் 11264,11610,11761
லெவ்வை, ப.மு.கலந்தர் **பார்க்க** அன்புடீன்
லோகநாதன், புவனேஸ்வரி 11449,11451
லோகேஸ்வரன், சு. 11408
வச்சிரவேல் முதலியார், க. 11090
வடமாகாண சுகாதார அமைச்சு 11440
வட மாகாணக் கல்வித் திணைக்களம், 11561
வடிவேலையா, சபா. 11076
வயிரமணி, முத்து 11627
வரதராச பண்டிதர், சுன்னாகம் காசி அ. 11193,11218
வரதராசன், தி.ச. 11027,11544
வரதராஜா, க.பே. 11198
வல்லிபுரநாதன், ராஜி 11786
வல்வைக் கமல். 11707
வன்னியூர் செந்தூரன். 11586
வஹாப், மாத்தறை ஹஸீனா 11848
வஹாப்தீன், ஜே. 11825
வாகரைவாணன் 11109,11757
வாகீசமூர்த்தி, ந. 11508
வாணி ஜெயா தீபன் **பார்க்க** ஈழவாணி.
வாமதேவன், எம். 11313
விக்கிரமசிங்க, எச்.எச். **பார்க்க** மாத்தளை செல்வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரமசிங்க, மார்ட்டின் 11815
விக்னேஸ்வரன், ஆறுமுகம் 11064
விகடகவி **பார்க்க** திருநாவுக்கரசு, மு.
விசயகுமார், க. 11317
விசயரத்தினம், நுணாவிலூர் கா. 11876-77
விசலாட்சி, சி. 11130
விசாகப் பெருமாளையர். 11397
விசுவநாதன், அ. 11299
விசுவலிங்கம், வி. 11246
வித்தியானந்தன், சு. 11265
விதானையார் **பார்க்க** கஜன்.
விநாசித்தம்பிப் புலவர்,சீ. 11123,11214
விநாயகசர்மா, கவிரத்ன 11527
விபுலாநந்தர், சுவாமி 11626
விபுலானந்த அடிகளார் 11233
விம்பம் அமைப்பு. 11943
விமலன், சின்னராஜா 11485
விமலேந்திரன், லோ. 11455
வில்லவராயர், மீரா 12A47
வில்லிபுத்தூராழ்வார் 11553,11555-57
வினாசித்தம்பி, எஸ். 11909
வினுஷியா, கியூ. 11437
விஜயகரன், க. 11361
விஜயச்சந்திர, ரி. 11333
விஜயசேகரா, நந்ததேவ 11466
விஜயரெட்ணம், ஆர்.ஏ.கே. 11247
விஜயலக்சுமி, ச. 11073
விஜயலாதன், விஜயகுமார் 11334
விஜயேந்திரன், சிலோன் 11623
விஜேந்திரன், ஏ. 11458
விஜேந்திரன், நிலோஜினி 11454
விஜேரத்ன, மடுளுகிரியே 11521
விஸ்வலிங்கம், தி. 12A21
விஸ்வலிங்கம், திருமதி வ. 12A21
வீணைமைந்தன் 11702,11729,11980
வீரக்குட்டி, முல்லை 11584,11658
வீரகத்தி, க. 11183,11190,11494
வீரசொக்கன், உடப்பூர் 11976
வீரப்பன், இர.ந. 11627
வீரமன்த்ரி, C.G. 11323
வீரா, கு. 11687
வெல்லவூர்க் கோபால் 11994
வெற்றிச்செல்வி 11802,11921
வென்றிமாலைக் கவிராயர் 11152
வேதாந்த சுப்பிரமணிய பிள்ளை 11160
வேர்ன், ஜுல் 11520
வேல்நாயகம், கா. 11599
வேல்மாறன். 12A14
வேல்முருகு, சே. 11044
வேலணை வேணியன். 11195
வேலணையூர் சுரேஷ். 11937
வேலணையூர் தாஸ் 11667
வேலாயுதபிள்ளை, செ. 11211
வேலுப்பிள்ளை, ஆ. 11860
வேலுப்பிள்ளை, சு. 12A37
வேலுப்பிள்ளை, ஸி.வி. 11388
வேற்பிள்ளை, ம.க. 11229
வைத்தியநாதன், வசந்தா 11119
வைத்தியலிங்க பிள்ளை, வண்ணைநகர் ஸ்ரீ க. 11124,11254
வைத்தீசுவரக் குருக்கள், க. 11178,12A28
வைத்தீஸ்வரன், கா. 11436,11441
வையாபுரி ஐயர் 12A44
றஞ்சி சுவிஸ், **பார்க்க** ரஞ்சி சுவிஸ்
றாஹில், அப்துல் கரீம். 11585,11616, 11672,11845
றூகா, அக்கரையூர் மு. 11612
ஜஃபார், ப.கா. பக்கீர் 11295,11354
ஜமீல், அப்துல் றகுமான் அப்துல் 11631
ஜயதிலக, கே. 11853
ஜீவகவி **பார்க்க** அமிர்தலிங்கம், ஏ.
ஜீவகுமாரன், வி. 11808,11828
ஜீவா, அந்தனி 11565
ஜீவா, எஸ்.எம். 11394
ஜீவா, டொமினிக் 11566
ஜீவா-யாழ்ப்பாணன். 11758

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுனைதீன், ஜெக்கியா 11735
ஜெகநாதன், நிதர்சனா 11583
ஜெகநாதன், வி. 11723,11749-50
ஜெகானந்தகுரு, இராஜேஸ்வரி 11901
ஜெயக்குமார், யூடி 11059
ஜெயசிங், தேவதாசன் 11519
ஜெயசுதர்சன், இ. 11074
ஜெயபாலன், வ.ஐ.ச. 11615
ஜெயம், தெ. 11627
ஜெயம் ஜெகன், புதுக்குடியிருப்பு 11657
ஜெயமோகன் 11798
ஜெயராசா, சபா. 11047,11345,11347,11491, 11815,11880,12A04
ஜெனிபர், வீ. 11445
ஜோகரட்ணம், நவஜோதி 11292
ஜோசப், தெளிவத்தை **பார்க்க** தெளிவத்தை ஜோசப்
ஜோசப் பாலா **பார்க்க** யோசப் பாலா, செ.
ஜோதிலிங்கம், யாழினி 11662
ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம் 11165,11166
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அறங்காவலர் சபை. 11156
ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியார் 11094-97
ஸ்ரீ பிருந்திரன், ஸ்ரீதயாளன் 11040
ஸ்ரீ ராஜசேகரா மகாராஜா **பார்க்க** பாலசுப்பிரமணியம், கந்தசாமி
ஸ்ரீதயாளன், எம்.எஸ். 11526
ஸ்ரீதர், எஸ்.வை. 11869
ஸ்ரீதரன், இராசையா 11403,11504
ஸ்ரீதரன், எஸ். 11809
ஸ்ரீந்திரன், என்.பீ. 11145
ஸ்ரீபிரசாந்தன் 11240
ஸ்ரீராம், எஸ். 11054,11310-12
ஸ்டாலின், எம்.ஆர். 11955
ஸ்ரலின், இராசேந்திரம் 11046
ஸபா, தாஜ்தீன் முஹம்மட் 11712
ஸனீர், அப்த்-அல்-ஜப்பார் முஹம்மத் 11323
ஸஹீட், ஸமீனா 11814
ஸெய்ன், றவூப் 11048,11051,11304
ஷண்முகன். 11968
ஷபீக், சி.எம். 11011
ஷம்ஸ், எம்.எச்.எம். 11805
ஷரிபுத்தீன், அ.ஜின்னாஹ் 11516,11989
ஷரிபுத்தீன், ஆ.மு. 11266,11989
ஷிப்லி, M.P.M.M. 11340
ஷெவ்சேன்கோ, தராஸ் 11728
ஷோபாசக்தி. 11768
ஹக், லறீனா அப்துல் 11780,11881
ஹக்கார்ட், எச்.ரைடர் 11524
ஹமீட், எம்.எஸ்.எஸ். **பார்க்க** மருதமைந்தன்
ஹரன், தேவகுமாரி 11241
ஹஸன், எம்.எச்.எம். 11045,11352
ஹஸன், ஐதுரூஸ் ஏ. 11493
ஹஸன், மருதூர் ஏ. 11669
ஹாஸன், ஜிஃப்ரி 11717
ஹுசைன், என். நஜ்முல் 11489
ஹோமர் 11762-63

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org